முன்னுரை

சாமுவேல் தீர்க்கதரிசியின் பிறப்பு, அவருடைய குழந்தைப் பருவம், அவருடைய ஜீவியம், ஆளுகை ஆகியவையெல்லாம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சாமுவேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில், அவருடைய ஜீவிய வரலாறு எழுதப்பட்டிருப்பதுபோலவே, சவுல், தாவீது ஆகிய ராஜாக்களின் ஜீவியவரலாறுகளும் எழுதப்பட்டிருக்கிறது. சாமுவேல் தீர்க்கதரிசி இவ்விரண்டு பேரையும் ராஜாக்களாக அபிஷேகம்பண்ணினார்.

இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட பழைய வேதாகமத்தில், இந்தப் புஸ்தகம் சாமுவேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம் என்று அழைக்கப்படாமல், 1,2 இராஜாக்களின் புஸ்தகம் என்று அழைக்கப்பட்டது. இராஜாக்களின் புஸ்தகம், 3,4 இராஜாக்களின் புஸ்தகம் என்று அழைக்கப்பட்டது.

செப்துவஜிந்த் பதிப்பில், சாமுவேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம், முதலாம், இரண்டாம் இராஜ்யங்களின் புஸ்தகம் என்று அழைக்கப்படுகிறது.

சாமுவேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில், ஏலி, சாமுவேல் ஆகிய இரண்டு நியாயாதிபதிகளின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் இஸ்ரவேல் தேசத்தில் எழும்பின கடைசி நியாயாதிபதிகள். இவர்கள் மற்ற நியாயாபதிகளைப் போல யுத்தமனுஷரல்ல. இவர்கள் ஆசாரியர்கள்.

இஸ்ரவேல் தேசத்தின் முதல் இரண்டு இராஜாக்களாகிய சவுலையும், தாவீதையும் சாமுவேல் தீர்க்கதரிசி இராஜாக்களாக அபிஷேகம்பண்ணினார். இவர்கள் இராஜாக்களின் சரித்திரத்தை ஆரம்பித்து வைக்கிறார்கள்.

சாமுவேலின் முதலாம் புஸ்தகத்தில் ஏலியினுடைய வீழ்ச்சியும் சாமுவேல் தீர்க்கதரிசியின் எழுச்சியும், நல்ல ஆளுகையும் எழுதப்பட்டிருக்கிறது (1சாமு 1-8 ஆகிய அதிகாரங்கள்).

சாமுவேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரியாமல் தன்னுடைய ஊழியத்திலிருந்து ஓய்வு பெறுகிறார். சவுல் இராஜாவாகிறார். சவுலின் நிர்வாகம் சீராகயில்லை (1சாமு 9-15 ஆகிய அதிகாரங்கள்).

சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார். தாவீதுக்கும் சவுலுக்கும் நடுவே போராட்டமுண்டாகிறது. முடிவில் சவுல் அழிந்துபோகிறார். தாவீது சிங்காசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிகிறார் (1சாமு 16-31 ஆகிய அதிகாரங்கள்).

1 அதிகாரம்

சாமுவேல் தீர்க்கதரிசி பிறப்பதற்கு முன்பாகவே, அவருடைய சரித்திரத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர் ஜெபத்தினால் பிறந்த பிள்ளையாயிருக்கிறார். அன்னாள் சாமுவேலின் தாயார். சாமுவேலின் பிறப்பைக் குறித்து, ஒரு தேவதூதன், சாமுவேலின் தாயாருக்கு முன்னறிவிக்கிறார். சாமுவேலின் தாயார் தனக்கு ஒரு குமாரன் பிறக்கவேண்டுமென்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறாள். இந்த அதிகாரத்தில் அன்னாளைப்பற்றிய சம்பவங்கள் அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது.

அன்னாளின் துக்கங்களும் மனக்கிலேசங்களும். அன்னாளுக்கு பிள்ளை இல்லை. எல்க்கானா அன்னாளின் புருஷன். அவருக்கு பெனின்னாள் என்று மற்றொரு மனைவியும் இருக்கிறாள். பெனின்னாள் தன் வார்த்தைகளினால் அன்னாளை வேதனைப்படுத்துகிறாள். எல்க்கானா அன்னாள்மீது அன்பாயிருக்கிறார் (1சாமு 1:1-8).

அன்னாள் கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய வேதனைகளைச் சொல்லி ஜெபிக்கிறாள். ஆசாரியனாகிய ஏலி அன்னாள் ஜெபம்பண்ணுவதை தடைபண்ணுவதற்கு முயற்சி பண்ணினார். அதன் பின்பு ஏலி அன்னாளை உற்சாகப்படுத்துகிறார் (1சாமு 1:9-19).

சாமுவேலின் பிறப்பு (1சாமு 1:19-23). அன்னாள் சாமுவேலை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறாள் (1சாமு 1:24-28).

எல்க்கானா
1சாமு 1:1-8

1சாமு 1:1. எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற சோப்பீம் என்னப்பட்ட ராமதாயீம் ஊரானாகிய ஒரு மனுஷன் இருந்தான்; அவனுக்கு எல்க்கானா என்று பேர்; அவன் எப்பிராயீமியனாகிய சூப்புக்குப் பிறந்த தோகுவின் குமாரனாகிய எலிகூவின் மகனான எரோகாமின் புத்திரன்.

1சாமு 1:2. அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள்; ஒருத்திபேர் அன்னாள், மற்றவள்பேர் பெனின்னாள்; பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள்; அன்னாளுக்கோ பிள்ளை இல்லை.

1சாமு 1:3. அந்த மனுஷன் சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்துகொள்ளவும் அவருக்குப் பலியிடவும் வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து போய்வருவான்; அங்கே கர்த்தரின் ஆசாரியரான ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும் பினேகாசும் இருந்தார்கள்.

1சாமு 1:4. அங்கே எல்க்கானா பலியிடும் நாளிலே, அவன் தன் மனைவியாகிய பெனின்னாளுக்கும், அவளுடைய எல்லாக் குமாரருக்கும் குமாரத்திகளுக்கும், பங்குபோட்டுக் கொடுப்பான்.

1சாமு 1:5. அன்னாளைச் சிநேகித்தபடியினால், அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பான்; கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார்.

1சாமு 1:6. கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்.

1சாமு 1:7. அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்தில், அவன் வருஷந்தோறும் அந்தப்பிரகாரமாய்ச் செய்வான்; இவள் அவளை மனமடிவாக்குவாள்; அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள்.

1சாமு 1:8. அவள் புருஷனாகிய எல்க்கானா அவளைப் பார்த்து: அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? பத்து குமாரரைப்பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்றான்.

சாமுவேல் தீர்க்கதரிசியின் குடும்பத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய தகப்பனாரின் பெயர் எல்க்கானா. இவர் ஒரு லேவியர். இவர் கோகாத்தியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

"கோகாத்தியரின் குமாரரில் ஏமான் என்னும் பாடகன்; இவன் யோவேலின் குமாரன்; இவன் சாமுவேலின் குமாரன். இவன் எல்க்கானாவின் குமாரன்; இவன் யெரொகாமின் குமாரன்; இவன் எலியேலின் குமாரன்; இவன் தோவாகின் குமாரன்" (நாளா 6:33,34).

சாமுவேலின் முன்னோர்களில் ஒருவராகிய சூப் என்பவர் எப்பிராயீமர். இவர் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரைச் சேர்ந்தவர். அது எப்பிராத்தா என்று அழைக்கப்படுகிறது. யூதாவிலுள்ள எப்பிராயீம் ஊரைச் சேர்ந்தவர்கள் "எப்பிராத்தியர்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

"அந்த மனுஷனுடைய பேர் எலிமெலேக்கு, அவன் மனைவியின் பேர் நகோமி, அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப்தேசத்திற்குப் போய், அங்கே இருந்துவிட்டார்கள்" (ரூத் 1:2).

"எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற சோப்பீம் என்னப்பட்ட ராமதாயீம் ஊரானாகிய ஒரு மனுஷன் இருந்தான்; அவனுக்கு எல்க்கானா என்று பேர்; அவன் எப்பிராயீமியனாகிய சூப்புக்குப் பிறந்த தோகுவின் குமாரனாகிய எலிகூவின் மகனான எரோகாமின் புத்திரன்" (1சாமு 1:1) என்று சாமுவேலின் முன்னோர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

யூதாவிலுள்ள எப்பிராயீம் ஊரிலே, சாமுவேலின் முன்னோர்களான லேவியர்கள், இங்கு முதன் முதலாக குடியேறினார்கள். அதன் பின்பு, காலப்போக்கில், லேவியரில் ஒரு பிரிவினர், எப்பிராயீம் மலைத்தேசத்திற்கு குடியேறிப்போனார்கள். சாமுவேலின் தகப்பனாராகிய எல்க்கானா. லேவியரின் இந்தக் குடும்பத்திலிருந்து வந்தவர். இவர் ராமத்தாயீம் அல்லது ராமா என்னும் ஊரைச் சேர்ந்தவர்.

ராமத்தாயீம் என்னும் பேருக்கு, "இரட்டை ராமா" என்று பொருள். ராமாத்தாயீமில் இரண்டு ஊர்கள் உள்ளன. ஒன்று எப்பிராயீம் மலைத்தேசத்திற்கு மேலே இருக்கிற ராமா என்னும் ஊர், மற்றொன்று இந்த மலைத்தேசத்திற்கு கீழேயிருக்கிற ராமா என்னும் ஊர்.

எல்க்கானாவின் குடும்பத்தார் கர்த்தரிடத்தில் பயபக்தியோடிருக்கிறார்கள். இஸ்ரவேலின் எல்லா குடும்பத்தாருமே கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கவேண்டும். அதிலும் விசேஷமாய் லேவியரின் குடும்பத்தார் கர்த்தரிடத்தில் மிகுந்த பயபக்தியோடிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தாங்கள் குடியிருக்கும் பகுதியிலுள்ள மற்ற குடும்பத்தாருக்கு, முன்மாதிரியாக ஜீவிக்கவேண்டும்.

எல்க்கானா சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்துகொள்ளவும் அவருக்குப் பலியிடவும் வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து போய்வருவார் (1சாமு 1:3). சாமுவேல் தீர்க்கதரிசியே, கர்த்தரை "சேனைகளின் கர்த்தர்" என்று முதன்முதலாக அழைத்தவர். இஸ்ரவேலின் ஆறுதலுக்காக சாமுவேல் கர்த்தரை இவ்வாறு அழைக்கிறார்.

சாமுவேலின் காலத்திலே சத்துருக்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக பலத்திருந்தார்கள். அவர்கள் அநேகராயிருந்தார்கள். இஸ்ரவேலரோ பலவீனராய் ஒடுங்கிப்போயிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கர்த்தரைப்பற்றித் தியானிக்கும்போது, அவரை சேனைகளின் கர்த்தராக தியானிக்கவேண்டும். பரலோகத்திலும் பூமியிலுமுள்ள எல்லா சேனைகளுக்கும் கர்த்தரே அதிபதியாயிருக்கிறார் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

எல்க்கானா ஒரு லேவியர். அவர் ராமதாயீம் என்னும் கிராமப்பகுதியைச் சேர்ந்தவர். இவருடைய காலத்திலே கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் சீலோவிலே இருக்கிறது. ஆனால் எல்க்கானாவுக்கு சீலோவிலே குடியிருப்பதற்கு வாசஸ்தலம் இல்லை. இவர் ஆசரிப்புக்கூடாரத்திலே, தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற லேவியருடைய ஊழியத்தை செய்வதற்கு, ராமதாயீமிலிருந்து சீலோவுக்குப் போய்வருவது வழக்கம்.

எல்க்கானா சீலோவுக்குப் போகும்போது, ஒரு ஆசாரியரைப்போலவோ, லேவியரைப்போலவோ, ஆசரிப்புக்கூடாரத்திலே ஊழியம் செய்கிற ஊழியக்காரரைப்போலவோ போகமாட்டார். இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஜனங்கள் சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திற்கு எப்படி போவார்களோ அப்படியே எல்க்கானாவும் போவார். எல்க்கானா சீலோவுக்குப்போவதைப் பார்த்து, ராமதாயீம் ஊரிலுள்ள மற்ற ஜனங்களும் உற்சாகமடைந்து, அவர்களும் சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திற்குப் போவார்கள்.

எல்க்கானா ராமத்தாயீம் ஊரிலுள்ள இஸ்ரவேலர் எல்லோருக்கும் நல்ல முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் ஜீவிக்கிறார். இவருடைய காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, கர்த்தருக்குப் பயப்படும் பயம் குறைந்துபோயிற்று. ஜனங்கள் கர்த்தரை விட்டு வெகுவாய் விலகிப்போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காலத்தில் எல்க்கானா கர்த்தருக்கு உண்மையுள்ளவராய் ஜீவிக்கிறார்.

எல்க்கானா சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்துகொள்ளவும் அவருக்குப் பலியிடவும் வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து போய்வருகிறார்; அங்கே கர்த்தரின் ஆசாரியரான ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும் பினெகாசும் இருக்கிறார்கள் (1சாமு 1:3).

ஏலியின் இரண்டு குமாரரும் துன்மார்க்கர். அவர்கள் சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை அசுத்தப்படுத்துகிறார்கள். அவர்கள் இருவரிடத்திலும் கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. ஆனாலும் எல்க்கானா வருஷந்தோறும் கர்த்தரைப் பணிந்துகொள்ளவும், கர்த்தருக்கு பலியிடவும் சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திற்குப் போய்வருகிறார். ஆசாரியர்கள் தங்களுடைய ஆவிக்குரிய கடமைகளை பொறுப்பாய்ச் செய்யவில்லையென்றாலும், எல்க்கானா, தன்னுடைய ஆவிக்குரிய கடமைகளை நேர்த்தியாய்ச் செய்கிறார்.

எல்க்கானாவிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கிறது. அவர் ஆவிக்குரிய காரியங்களில் பயபக்தியோடு ஈடுபடுகிறார். ஆனால் அவருடைய குடும்பத்தில் பிரிவினையும் குழப்பமும் இருக்கிறது. எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள்; ஒருத்திபேர் அன்னாள், மற்றவள்பேர் பெனின்னாள்; பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள்; அன்னாளுக்கோ பிள்ளை இல்லை (1சாமு 1:2).

எல்க்கானாவின் இரண்டு மனைவிகளே அவருடைய குடும்பத்தில் ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகளுக்கும், குழப்பங்களுக்கும் அடிப்படை காரணம். எல்க்கானா கர்த்தர் நியமித்திருக்கிற விவாக பிரமாணத்தைமீறி, இரண்டு மனைவிகளை திருமணம் செய்திருக்கிறார்.

"இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?" (மத் 19:5)

"அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயகடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" (மத் 19:8).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், ஒரு புருஷனுக்கு ஒரு மனைவி மாத்திரமே இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார். ஒரு குடும்பத்தில், ஒரு புருஷனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பதை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை.

"ஆதி முதல் அப்படியிருக்கவில்லை" என்று நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவும் சொல்லுகிறார். ஒரு குடும்பத்தில், ஒரு புருஷனுக்கு ஒரு மனைவி என்று இருக்கும்போது, அந்தக் குடும்பத்தில் சந்தோஷமும், சமாதானமும் இருக்கும். ஆபிரகாம் குடும்பத்திலும், யாக்கோபின் குடும்பத்திலும், அவர்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருந்ததினால், அவர்களுடைய குடும்பத்திலே பிரச்சனைகள் உண்டாயிற்று. அவர்களுக்கு பிரச்சனைகள் உண்டானதுபோலவே, இப்போது, எல்க்கானாவின் குடும்பத்திலும் பிரச்சனைகள் உண்டாயிற்று.

எல்க்கானாவின் இரண்டு மனைவிகளும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாயில்லை. அவர்களிடத்தில் கருத்து வேற்றுமைகளும், சண்டை சச்சரவுகளும் காணப்படுகிறது. கர்த்தர் இவ்விருவரையும் ஒன்றுபோல் ஆசீர்வதியாமல், வித்தியாசமாய் ஆசீர்வதித்திருக்கிறார். பெனின்னாளுக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். அன்னாளுக்கோ பிள்ளைகள் இல்லை.

பெனின்னாள் லேயாளைப்போல அநேக பிள்ளைகளை பெற்றெடுத்திருக்கிறாள். பெனின்னாள் எல்க்கானாவுக்கு இரண்டாவது மனைவியாகயிருந்தாலும், அவளுக்கு பிள்ளைகள் இருப்பதினால், அவள் குடும்பத்திலே சந்தோஷமாயிருக்கிறாள்.

அன்னாளோ ராகேலைப்போல பிள்ளையற்றவளாயிருக்கிறாள். ஆனாலும் அவள் தன்னுடைய கணவனுக்கு மிகவும் பிரியமானவளாயிருக்கிறாள். பெனின்னாள் அன்னாளை துக்கப்படும்படியாக மிகவும் விசனப்படுத்துவாள். அவள் அன்னாளை மனமடிவாக்குவாள். கர்த்தர் பெனின்னாளின் கர்ப்பத்தை ஆசீர்வதித்திருக்கிறார். ஆனாலும் எல்க்கானா அன்னாள்மீது அன்பாயிருப்பதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அன்னாளுக்கு பிள்ளைகள் இல்லை. அவள் வருத்தத்திலிருக்கிறாள். அன்னாளுடைய சக்களத்தியாகிய பெனின்னாளும், அன்னாள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துகிறாள். இதனால் அன்னாளின் துக்கம் அதிகமாகிறது. பெனின்னாள் அன்னாளை மனமடிவாக்குகிறாள். இதனால் அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருக்கிறாள்.

எல்க்கானாவின் குடும்பத்திலே, இரண்டு மனைவிகளின் பிரச்சனைகளினால், குழப்பமுண்டாயிற்று. அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்துவது எல்க்கானாவுக்கு மிகவும் கடினமாயிருக்கிறது.

எல்க்கானாவின் குடும்பத்திலே குழப்பங்களும், பிரச்சனைகளும் இருந்தாலும், அவர் கர்த்தருடைய ஆராதனையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். குடும்பத்தில் எல்க்கானாவின் இரண்டு மனைவிகளும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டாலும், எல்க்கானாவோ சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்துகொள்ளவும், அவருக்கு பலியிடவும், வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து போய் வருகிறார்.

எல்க்கானா சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திற்குப்போகும்போது அவர் தனியாகப் போகாமல், தன்னோடுகூட, தன்னுடைய இரண்டு மனைவிகளையும், தன்னுடைய பிள்ளைகளையும், சீலோவுக்கு அழைத்துக்கொண்டு போகிறார். பெனின்னாளும் அன்னாளும் குடும்பக்காரியங்களில் ஒற்றுமையாயிராமல் பிரிந்திருந்தாலும், கர்த்தரை ஆராதிப்பதில் ஒற்றுமையாயிருக்கிறார்கள்.

குடும்பத்திலே பிரச்சனைகள் இருக்கலாம். குழப்பங்கள் இருக்கலாம். குடும்பப் பிரச்சனைகள் கர்த்தருடைய ஆராதனைக்கு தடையாயிருக்கக்கூடாது. குழப்பங்கள் கர்த்தரை ஆராதிப்பதை நிறுத்திவிடக்கூடாது. குடும்பத்தில் பிரச்சனைகள் இருந்தாலும், குடும்பமாய் கர்த்தரை ஆராதிப்பது தொடர்ந்து நடைபெறவேண்டும்.

பெனின்னாள் அன்னாளை துக்கப்படுத்தினாலும், விசனப்படுத்தினாலும், மனமடிவாக்கினாலும், எல்க்கானா அன்னாளைப் பிரியப்படுத்துவதற்கும், சமாதானப்படுத்துவதற்கும் முயற்சிபண்ணுகிறார்.

சீலோவிலே எல்க்கானா பலியிடும் நாளிலே, அவர் தன் மனைவியாகிய பெனின்னாளுக்கும், அவளுடைய எல்லாக் குமாரருக்கும் குமாரத்திகளுக்கும், பலியிட்டதைப் பங்குபோட்டுக் கொடுப்பார். அன்னாளைச் சிநேகித்தபடியினால், அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பார் (1சாமு 1:4,5). அன்னாளுடைய துக்கம் நீங்கவேண்டும் என்பதும், அவள் ஆறுதலும் சந்தோஷமும் அடையவேண்டும் என்பதும் எல்க்கானாவின் விருப்பம்.

எல்க்கானா, சீலோவிலே சேனைகளின் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே நடைபெறும் எல்லா பண்டிகைகளுக்கும், தன்னுடைய முழுக்குடும்பத்தாரோடும் போவது வழக்கம். தன்னுடைய குடும்பத்திலே சமாதானம் நிரம்பியிருக்கவேண்டும் என்பதற்காக, எல்க்கானா சீலோவிலே கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்துவார்.

அன்னாள் மிகவும் துக்கப்பட்டு, வேதனைப்பட்டு, விசனப்பட்டு மனமடிவடிவாயிருப்பதினால், அவளுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்லவேண்டும் என்பது எல்க்கானாவுக்கு தெரிந்திருக்கிறது. எல்க்கானா தான் கர்த்தருக்கு செலுத்திய சமாதான பலிகளை, தன்னுடைய இரண்டு மனைவிகளுக்கும் பங்கு கொடுப்பது வழக்கம். அப்போது எல்க்கானா அன்னாளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுப்பார். அவர் அன்னாளை அதிகமாய் சிநேகித்தபடியினால், அவர் அவளுக்கு அதிகமான சலுகைகளை காண்பிக்கிறார்.

எல்க்கானாவைப்போலவே, நாமும், நம்முடைய சிநேகிதர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், அதிகமான பங்குகளை கொடுத்து, நம்முடைய சிநேகத்தை உறுதிபண்ணவேண்டும். அவர்களுக்காக ஜெபம்பண்ணுவதில் நாம் அதிக நேரம் செலவு செய்து, நம்முடைய நேரத்தில் அதிகமான பங்கை அவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

பெனின்னாளோ குடும்பத்திலே குழப்பத்தை உண்டுபண்ணுகிறவளாயிருக்கிறாள். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் விஷமத்தனமாயிருக்கிறது. அன்னாளுடைய வேதனைகளை எவ்வாறு கூட்டுவது என்பதும், அவளுடைய துக்கத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பதும் பெனின்னாளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. பெனின்னாளின் வாயிலிருந்து சமாதான வார்த்தைகள் புறப்பட்டு வராமல், குழப்பதை ஏற்படுத்தும் வார்த்தைகளும், பிரச்சனைகளை ஏற்படுத்தும் வார்த்தைகளும் புறப்பட்டு வருகிறது.

எல்க்கானா அன்னாளை சிநேகிப்பதும் பெனின்னாளுக்கு பிடிக்கவில்லை. எல்க்கானா தன்மீது மாத்திரமே சிநேகமாயிருக்கவேண்டும் என்று பெனின்னாள் எதிர்பார்க்கிறாள். எல்க்கானா அன்னாள்மீது சிநேகமாயிருப்பதைப் பார்த்து, பெனின்னாள் அன்னாள்மீது பொறாமைப்படுகிறாள்.

கர்த்தரோ அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். கர்த்தர் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துகிறாள் (1சாமு 1:5,6).

பெனின்னாளுக்கு அன்னாளை எப்போது விசனப்படுத்த வேண்டும் என்பதும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு போகும் சமயத்தில், பெனின்னாள், அன்னாளை மிகவும் விசனப்படுத்துகிறாள். ஒருவேளை எல்க்கானாவின் வீட்டிலே, பெனின்னாளும் அன்னாளும் ஒன்றாய்க் கூடியிராமல் தனித்தனியாக இருந்திருக்கலாம். அவர்கள் குடும்பமாக கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும்போதுதான், அவர்கள் இருவரும் ஒன்றாய்க் கூடியிருப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

எல்க்கானா கர்த்தருடைய ஆலயத்திலே, அன்னாளுக்கு இரட்டிப்பான பங்கைக் கொடுத்து, தன்னுடைய சிநேகத்தை வெளிப்படுத்துகிறார். பெனின்னாள் அதைப் பார்த்து, அன்னாள்மீது பொறாமைப்பட்டு, கர்த்தருடைய ஆலயத்திலே அவளை மனமடிவாக்குகிறாள். எல்க்கானா அன்னாளுக்கு இரட்டிப்பான பங்கைக்கொடுத்தாலும், அன்னாளோ அதை சாப்பிடாமல் அழுதுகொண்டிருக்கிறாள்.

அன்னாள் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பது எல்க்கானாவின் விருப்பம். ஆனால் பெனின்னாளோ, அன்னாள் துக்கமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறாள். அன்னாள் துக்கப்படுவதற்கும், விசனப்படுவதற்கும், மனமடிவடைவதற்கும் என்னென்ன காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமோ, அவையெல்லாவற்றையும் பெனின்னாள் யோசித்து செய்கிறாள்.

பெனின்னாள் தன்னை விசனப் படுத்துவதையும், மனமடியப்பண்ணுவதையும் அன்னாளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அன்னாள் தன்னுடைய துக்கத்தையும், வேதனையையும் வெளிப்படுத்தும் வண்ணமாக, சாப்பிடாமல் அழுதுகொண்டிருக்கிறாள்.

இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு ஏராளமான துக்கங்களும், வேதனைகளும் பிரச்சனைகளும் வரலாம். நாம் கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிட்டு, அவருடைய சமுகத்திலே இளைப்பாறுதலடையவேண்டும். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதே நமக்கு பெலன். அன்னாள் கர்த்தருடைய ஆலயத்திலே அழுகிறாள். அங்கே அவள் எல்க்கானாவுக்கு முன்பாக அழாமல், கர்த்தருடைய சமுகத்திலே அழுவதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

அன்னாளைப்போலவே இக்காலத்தில் அநேக விசுவாசிகளுக்கு துக்கங்களும் பிரச்சனைகளும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல் தங்களுடைய துக்கங்களையும், தங்களைத் துக்கப்படுத்துகிறவர்களையும் நோக்கிப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்காமல், இந்த உலகத்திற்குள் துக்கமாயிருப்பார்கள்.

உலகப்பிரகாரமான துக்கங்களையும், வேதனைகளையும் அதிகமாய் அனுபவிக்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே சத்துருக்களாகிவிடுவார்கள். கர்த்தர் மூலமாய் வரும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள முடியாதபடிக்கு, அவர்கள் தங்களுக்குத் தாங்களே தடைகளாயிருப்பார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருக்கிறாள். அவள் புருஷனாகிய எல்க்கானா அவளைப் பார்த்து: "அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? பத்து குமாரரைப்பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா" (1சாமு 1:8) என்று கேட்கிறார். விவாகத்தில் இணைந்திருக்கிற புருஷனும் மனைவியும் ஒரே மாம்சமாய் இணைந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய ஆவியும் ஒன்றாய் இணைந்திருக்கிறது. புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர், தங்களுடைய துக்கங்களையும், சந்தோஷங்களையும் பகிர்ந்துகொள்ளவேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும். ஒருவர் வருத்தப்படும்போது, மற்றொருவர் அந்த வருத்தத்தை நீக்குவதற்கு உதவிசெய்யவேண்டும்.

எல்க்கானா தன்னால் முடிந்த வரையிலும் முயற்சி செய்து, அன்னாளுடைய துக்கத்தைப் போக்குவதற்கு பிரயாசப்படுகிறார். அன்னாளுக்கு பிள்ளை இல்லை. அவளுடைய கர்ப்பம் அடைக்கப்பட்டிருக்கிறது. அன்னாள் அதை நினைத்து மிகவும் வேதனைப்படுகிறாள். அன்னாளின் வருத்தத்தைப் போக்கும் வண்ணமாக எல்க்கானா அவளிடம், "பத்து குமாரரைப்பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா" என்று ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு சிலுவைகளும் இருக்கிறது. ஆறுதல்களும் இருக்கிறது. நம்முடைய சிலுவைகளையே நினைத்துக்கொண்டிருந்தால், நமக்கு ஒருபோதும் ஆறுதல் உண்டாகாது. வாழ்க்கையின் துக்கங்களையே அதிகமாக தியானிப்போமென்றால், கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆறுதல்களை தியானிக்க நமக்கு நேரம் இருக்காது.

இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு துக்கங்களும், வேதனைகளும் உண்டு. அதே வேளையில் நமக்கு கர்த்தருக்குள் சமாதானமும் ஆறுதலும் உண்டு. நாம் துக்கப்படும்போது சமாதானத்தையும், நாம் சந்தோஷமாயிருக்கும்போது, துக்கத்தையும் நினைத்துப் பார்க்கவேண்டும். துக்கத்தையும் சந்தோஷத்தையும் சமமாய்ப் பாவிக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய சித்தமில்லாமல் நம்முடைய ஜீவியத்தில் ஒன்றும் நடக்கப்போவதில்லை. கர்த்தர் நம்மீது அன்பாயிருக்கும்போது, நம்முடைய சந்தோஷத்திற்கு நாம் சத்துருவாயிருக்கக்கூடாது.

அன்னாளின் ஜெபம்
1சாமு 1:9-18

1சாமு 1:9. சீலோவிலே அவர்கள் புசித்துக் குடித்தபின்பு, அன்னாள் எழுந்திருந்தாள்; ஆசாரியனாகிய ஏலி கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே ஒரு ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருந்தான்.

1சாமு 1:10. அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி:

1சாமு 1:11. சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திபடுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்.

1சாமு 1:12. அவள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணுகிற போது, ஏலி அவள் வாயைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

1சாமு 1:13. அன்னாள் தன் இருதயத்திலேபேசினாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை; ஆகையால் அவள் வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைத்து,

1சாமு 1:14. அவளை நோக்கி: நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னைவிட்டு விலக்கு என்றான்.

1சாமு 1:15. அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்.

1சாமு 1:16. உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்; மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றாள்.

1சாமு 1:17. அதற்கு ஏலி சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக என்றான்.

1சாமு 1:18. அப்பொழுது அவள்: உம்முடைய அடியாளுக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்கக்கடவது என்றாள்; பின்பு அந்த ஸ்திரீ புறப்பட்டுப்போய், போஜனஞ்செய்தாள்; அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து, எல்க்கானா அவளை மென்மையாகக் கடிந்துகொள்கிறார். இதன் மூலமாக அன்னாளின் மனதில் ஒரு மாற்றமுண்டாயிற்று. அவள் எல்க்கானாவுக்கு முன்பாக அழுவதை நிறுத்திவிட்டு, கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ண ஆரம்பிக்கிறாள்.

சீலோவிலே, எல்க்கானாவும், அவருடைய இரண்டு மனைவிகளும், பிள்ளைகளும் புசித்து குடிக்கிறார்கள். அதன்பின்பு அன்னாள் எழுந்திருந்து, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக மனங்கசந்து மிகவும் அழுகிறாள். கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறாள் (1சாமு 1:9).

பெனின்னாள் அன்னாளை விசனப்படுத்தி, மனமடிவாக்கின போது, அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்தாள். எல்க்கானா அன்னாளை மென்மையாகக் கடிந்துகொண்ட பின்பு, அன்னாள் அழுவதை நிறுத்திவிட்டு, அவர்களோடுகூட புசிக்கிறாள். பானம்பண்ணுகிறாள். அன்னாளின் துக்கம் சற்று குறைகிறது.

நம்முடைய போஜனங்களை நாம் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது போல, நம்முடைய உணர்ச்சிகளையும் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். போஜனம் பண்ணாமல் உபவாசம்பண்ணுவதுபோல, துக்கப்படாமல் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவும் முயற்சிபண்ணவேண்டும். இவை இரண்டுமே சுயவெறுப்பினால் வருபவை. நம்மை நாமே வெறுத்தால்தான் உபவாசம்பண்ண முடியும். நம்முடைய சுயஉணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினால்தான், நம்மால் துக்கத்திலும் ஆறுதல் பெற முடியும்.

அன்னாள் போஜனம் பண்ணின பின்பு கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணுகிறாள். அவள் இதுவரையிலும் எல்க்கானாவுக்கு முன்பாக அழுதுகொண்டிருந்தாள். இப்போதோ கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக மனங்கசந்து மிகவும் அழுகிறாள்.

நம்முடைய துக்கங்களையும், பாரங்களையும் நம்முடைய தோள்கள்மீது சுமந்துகொண்டிருப்பதற்கு பதிலாக, அவற்றை கர்த்தருடைய பாதத்திலே இறக்கி வைத்துவிட்டு, நாம் இளைப்பாறுதல் பெறவேண்டும். நாம் கர்த்தருக்கு முன்பாக மனங்கசந்து, மிகவும் அழுது, நம்முடைய பாரங்களை கர்த்தர்மீது வைத்துவிடவேண்டும்.

அன்னாள் கர்த்தருடைய சமுகத்திலே சாதாரணமாய் ஜெபிப்பதைவிட, இப்போது மிகவும் விசேஷமாய் ஜெபிக்கிறாள். சாதாரண நாட்களைவிட, இப்போது அன்னாளுடைய துக்கம் மிகவும் அதிகமாயிருக்கிறது. அவளுக்கு கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், ஆறுதலும் அதிகமாய்த் தேவைப்படுகிறது. கர்த்தருடைய கிருபாசனத்தற்கு முன்பாக, அன்னாள் தன்னுடைய பாரங்களையெல்லாம் கண்ணீரோடு இறக்கி வைக்கிறாள்.

எல்க்கானாவும், அவருடைய குடும்பத்தாரும் இப்போது கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே இருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை இந்த ஸ்தலத்தில் சந்திப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய ஆலயம், அவருடைய பிள்ளைகள் அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணும், ஜெபவீடாயிருக்கிறது.

எல்க்கானா தன்னுடைய குடும்பத்தோடு சேர்ந்து இப்போது கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்தியிருக்கிறார். கர்த்தர் எல்க்கானாவின் குடும்பத்திலே சமாதானத்தை கட்டளையிடுகிறார்.

அன்னாள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறாள். நாம் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ண வருவதற்கு முன்பாக, நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் நம்மீது ஜெபத்தின் ஆவியை ஊற்றும்போது, நம்முடைய ஜெபம் ஜீவனுள்ளதாயிருக்கும்.

அன்னாளின் மனதிலே துக்கமும், மனமடிவும், விசனமும் நிரம்பியிருக்கிறது. அன்னாளின் துக்கம் அவளை கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு, வழிநடத்துகிறது. அன்னாளின் ஆத்துமா மனங்கசந்து வேதனைப்படுகிறது. அவளுடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக அழுகிறது. இவையெல்லாம் சேர்ந்து, அன்னாளை கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ண வழிநடத்துகிறது.

அன்னாளைப்போல நம்முடைய ஜீவியத்திலும் துக்கமும் வேதனையும் இருக்கலாம். நம்முடைய துக்கங்களும் வேதனைகளும், நம்மை கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு வழிநடத்தவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் வியாகுலத்தோடு பிதாவை நோக்கி ஜெபம்பண்ணினார்.

"அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக் 22:44).

அன்னாள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவளுடைய ஜெபத்தில் கண்ணீரும் கலந்திருக்கிறது. அவளுடைய ஜெபம் உலர்ந்த ஜெபமல்ல. அன்னாள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக மனங்கசந்து மிகவும் அழுகிறாள்.

அன்னாள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, தன்னுடைய தேவையை தெளிவாக சொல்லுகிறாள். மிகவும் சுருக்கமாகவும், பணிவாகவும் ஜெபம்பண்ணுகிறாள். கர்த்தர் தன்னுடைய சிறுமையைக் கண்ணோக்கி பார்க்கவேண்டும் என்பதும், தனக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுக்கவேண்டும் என்பதும் அன்னாளுடைய ஜெபமாகும்.

அன்னாள் கர்த்தருக்கு ஒரு பொருத்தனையும் பண்ணுகிறாள். அன்னாள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, "சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திபடுவதில்லை" (1சாமு 1:11) என்று ஒரு பொருத்தனை பண்ணுகிறாள்.

எல்க்கானா ஒரு லேவியன். அன்னாளுக்கு பிறக்கப்போகும் மகனும் லேவியனாகவே இருப்பான். லேவியர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப் பட்டவர்கள். அன்னாளோ, கர்த்தர் தனக்கு கொடுக்கும் ஆண்பிள்ளையை, நசரேய விரதத்தின் பிரகாரம் வளர்ப்பதாக வாக்குப்பண்ணுகிறாள். சாமுவேல் பிறப்பதற்கு முன்பாகவே கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பிரதிஷ்டைபண்ணப் பட்டிருக்கிறார்.

அன்னாளைப்போலவே நாமும் கர்த்தரிடத்தில் பொருத்தனைபண்ணி கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற் காகவும், அவருடைய சமுகத்தில் கெஞ்சி மன்றாடும்போது, நம்முடைய ஆத்துமாவை கர்த்தருடைய சமுகத்திலே பொருத்தனையினால் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மிடத்தில் ஒரு தகுதியுமில்லை. கர்த்தருடைய கிருபையை எந்த மனுஷனாலும் கிரயம் செலுத்தி, விலைக்கு வாங்க முடியாது. கர்த்தர் தம்முடைய கிருபையை நமக்கு இலவச ஈவாகக் கொடுக்கிறார். ஆனாலும் கர்த்தருடைய கிருபைக்காக நாம் அவரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, பொருத்தனையோடு ஜெபிப்பது மிகவும் நல்லது. பொருத்தனையின் ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும். கர்த்தர் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் நமக்குக் காண்பிப்பார் என்னும் விசுவாசத்தோடு, நம்முடைய பொருத்தனையின் கடமைகளை நாம் நிறைவேற்றவேண்டும்.

அன்னாள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, மிகுந்த சத்தமிட்டு ஜெபம்பண்ணவில்லை. அன்னாள் தன் இருதயத்திலே பேசுகிறாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைகிறது, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை (1சாமு 1:13).

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். அன்னாள் தன்னுடைய இருதயத்திலே கர்த்தரோடு பேசினாலும், கர்த்தர் தன்னுடைய இருதயத்தை அறிந்திருக்கிறார் என்று அன்னாள் விசுவாசிக்கிறாள். நம்முடைய வாயிலிருந்து வார்த்தைகள் பிறவாவதற்கு முன்பே, கர்த்தர் நம்முடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்திருக்கிறார். நம்முடைய நினைவுகளே கர்த்தருக்கு வார்த்தைகளாயிருக்கிறது.

அன்னாள் கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணும்போது, ஏலி அங்கே பிரதான ஆசாரியராயிருக்கிறார். ஆசாரியனாகிய ஏலி கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே ஒரு ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார். அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணுகிறபோது, ஏலி அவள் வாயைக் கவனித்துக்கொண்டிருக்கிறார் (1சாமு 1:12).

அன்னாள் ஜெபம்பண்ணும்போது அவள் உதடுகள் மாத்திரம் அசைகிறது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணுகிறாள். ஏலி அன்னாளின் வாயை கவனித்து, அவள் வெறித்திருக்கிறாள் என்று நினைக்கிறார் (1சாமு 1:13).

ஏலி சீலோவிலுள்ள தேவாலயத்திலே பிரதான ஆசாரியராகவும், இஸ்ரவேல் தேசத்திற்கு நியாயாதிபதியாகவும் ஊழியம் செய்கிறார். அவர் கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையில், ஒரு ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார். அங்கிருந்து தேவாலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவங்களையும் கவனித்து பார்த்துக்கொண்டிருக்கிறார்.

சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரம், "கர்த்தருடைய ஆலயம்" (1சாமு 1:9) என்று அழைக்கப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரம் சீலோவிலே உறுதியாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தில் நடைபெறுகிற எல்லா ஆராதனைகளும், இந்த ஆசரிப்புக்கூடாரத்தில் நடைபெறுகிறது. ஆகையினால் இந்த பரிசுத்தஸ்தலம் "கர்த்தருடைய ஆலயம்" என்று அழைக்கப்படுகிறது.

ஏலி கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே ஒரு ஆசனத்தின்மேல் உட்கார்ந்து, ஜனங்களுடைய வழக்குகளை விசாரித்துக்கொண்டிருக்கிறார். ஆராதனை சம்பந்தமான கட்டளைகளை ஆசாரியருக்கும், லேவியருக்கும் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தருடைய ஆலயத்திலே, ஏலி அமர்ந்திருக்கும் ஆசனம், அவருக்கென்று பிரத்தியேகமான இடத்திலே வைக்கப்பட்டிருக்கலாம்.

ஏலி தன்னுடைய ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கும்போது, அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணுகிறாள். ஏலி அவள் வாயை கவனித்துக்கொண்டிருக்கிறார். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைகிறது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. ஆகையினால் அவள் குடித்து வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைக்கிறார்.

ஏலி அன்னாளை நோக்கி, "நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னைவிட்டு விலக்கு" (1சாமு 1:14) என்று சொல்லுகிறார். அன்னாள் ஜெபம்பண்ணுவது, ஏலியின் பார்வைக்கு குடித்து வெறித்திருப்பதுபோல் தெரிகிறது.

பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் ஒருமனப்பட்டு ஜெபம்பண்ணியபோது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது வந்து இறங்கினார். அவர்களெல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள். அதைப் பார்த்து, அந்த ஊரிலுள்ள ஜனங்கள், "அவர்கள் குடித்து வெறித்திருக்கிறார்கள்" என்று நினைத்தார்கள்.

"மற்றவர்களோ: இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம்பண்ணினார்கள்" (அப் 2:13).

ஏலி பிரதான ஆசாரியராக ஊழியம் செய்கிற இந்தக் காலத்திலே, இஸ்ரவேல் தேசம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. ஜனங்கள் மத்தியிலே கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. புருஷர் மதுபானம்பண்ணி, குடித்து வெறித்திருப்பதுபோல, ஸ்திரீகளும் குடித்து வெறித்திருக்கிறார்கள். வீடுகளிலும், வீதிகளிலும் குடித்து வெறித்திருக்கிறவர்கள், கர்த்தருடைய ஆலயத்தின் சந்நிதியிலும் குடித்து வெறித்திருக்கிறார்கள். இது ஒரு விநோதமான சம்பவமோ அல்லது புதுமையான சம்பவமோ அல்ல. ஏலி இதற்கு முன்பு, கர்த்தருடைய சந்நிதியிலே, குடித்து வெறித்திருக்கிற பல ஸ்திரீகளைப் பார்த்திருக்கவேண்டும். ஆகையினால் அன்னாளும் குடித்து வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே பாவமும் அக்கிரமமும் பரவலாய்க் காணப்படுகிறது. எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பாவம் கொள்ளைநோயைப்போல பரவியிருக்கிறது. தேசத்திலே கொள்ளைநோய் பரவியிருக்கும்போது, அது தொற்றுநோயைப்போல எல்லோருக்கும் பரவியிருக்குமோ என்னும் சந்தேகம் வருகிறது.

இஸ்ரவேல் தேசத்திலே ஸ்திரீகளும் குடித்து வெறித்திருப்பது பரவலாக காணப்படுகிறது. ஆகையினால் அன்னாளும் குடித்து வெறித்திருப்பாளோ என்று ஏலி சந்தேகப்படுகிறார்.

பெனின்னாள் அன்னாளைத் துக்கப்படுத்தி, விசனப்படுத்தி, மனமடிவாக்கின போது, அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்தாள். அப்போது எல்க்கானா, "அன்னாளே, ஏன் அழுகிறாய், ஏன் சாப்பிடாதிருக்கிறாய், ஏன் சஞ்சலப்படுகிறாய்" (1சாமு 1:8) என்று மென்மையாகக் கடிந்துகொண்டார். ஏலியோ, அன்னாள் அதிகமாகப் புசித்து, குடித்து வெறித்திருக்கிறாள் என்று நினைத்து, அவளைக் கடிந்துகொள்கிறார்.

அன்னாள், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு, மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறாள். ஏலி அன்னாளை காரணமில்லாமல் குற்றப்படுத்தினாலும், அன்னாள் கோபப்படவில்லை.

அன்னாள் தன்னை வெகுவாகத் தாழ்த்தி, ஏலிக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறாள். "அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் திராட்சரமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்" (1சாமு 1:15) என்று சொல்லுகிறாள்.

ஏலி தன்மீது சொன்ன குற்றச்சாட்டை அன்னாள், "அப்படியல்ல" என்று சொல்லி மறுக்கிறாள். மேலும் அன்னாள் தன்னுடைய நிலமையையும் ஏலிக்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறாள். "உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்; மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன்" (1சாமு 1:16) என்று சொல்லுகிறாள்.

அன்னாள் தன்னுடைய மனக்கிலேசத்தையும், விசாரத்தையும் ஏலிக்கு சொல்லுகிறாள். ஆகையினால் அவள் சாதாரணமாக ஜெபம்பண்ணுகிறவளைப்போல ஜெபிக்காமல், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறாள். ஜெபம்பண்ணும்போது அன்னாள் தன்னுடைய இருதயத்திலே பேசுகிறாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைகிறது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை.

ஏலி அன்னாளை ஆரம்பத்தில் கடிந்துகொண்டாலும், அவளுடைய உண்மை நிலமையை அறிந்துகொண்டபின்பு, அவளை ஆசீர்வதிக்கிறார். ஏலி அன்னாளிடம், "சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக" (1சாமு 1:17) என்று ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

ஏலி அன்னாளை ஆரம்பத்தில் கடிந்துகொண்டார். இப்போதோ அன்னாளுடைய ஜெபத்திற்கு ஆதரவாகப் பேசுகிறார். அன்னாளுடைய மனதிலே கள்ளம் கபடமில்லை. அவள் குடித்து வெறித்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அன்னாள் மனக்கிலேசத்திலும், துக்கத்திலும், விசனத்திலும் இருக்கிறாள். மனமடிவாயிருக்கிறாள். ஏலி அன்னாளைப் பார்த்து, "சமாதானத்துடனே போ" என்று ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, அவளை அனுப்பி வைக்கிறார்.

அன்னாளின் துக்கமும், மனக்கிலேசமும் அவளை விட்டு நீங்கிப்போயிற்று. ஏலியின் வார்த்தைகள் அன்னாளுக்கு மிகுந்த மனஆறுதலைக் கொடுக்கிறது. அன்னாள் ஏலியிடம், "உம்முடைய அடியாளுக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்கக்கடவது" (1சாமு 1:18) என்று சொல்லுகிறாள். பின்பு அன்னாள் புறப்பட்டுப்போய், போஜனஞ்செய்கிறாள்; அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

எல்க்கானா ஏற்கெனவே கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்தியிருக்கிறார். எல்க்கானா அன்னாளை சிநேகித்தபடியினால் அவளுக்கு, சமாதான பலியிலே, இரட்டிப்பான பங்கு கொடுத்திருக்கிறார். ஆனால் அன்னாளோ மனமடிவாயிருந்தபடியினால், சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்தாள். இப்போதோ அன்னாளின் அழுகை நின்றுபோயிற்று. அவள் எல்க்கானா கொடுத்த சமாதானபலியின் பங்கிலே போஜனம் செய்கிறாள். அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

அன்னாளின் இருதயத்தில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவள் தன்னுடைய இருதயத்தை கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றிவிட்டாள். அவள் கர்த்தரை நோக்கி மனங்கசந்து, மிகவும் அழுது விண்ணப்பம்பண்ணினாள். கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்று அன்னாள் நம்பிக்கையோடிருக்கிறாள். ஏலியும் அன்னாளிடம், "நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக" என்று ஆறுதலான வார்த்தைகளை கர்த்தருடைய நாமத்தினால் சொன்னார்.

அன்னாள் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணிய பின்பு, அவளுடைய துக்கம் சந்தோஷமாக மாறிற்று. ஜெபத்தின் மூலமாக அன்னாளுடைய பாரம் குறைந்துபோயிற்று. அன்னாள் தன்னுடைய இருதயத்தில் வருத்தப்பட்டு பாரம் சுமந்தாள். இப்போதோ, அவள் தன் பாரத்தை கர்த்தர்மீது இறக்கி வைத்துவிட்டாள். ஜெபத்தினால் ஜெயமுண்டாகும்.

சாமுவேல்
1சாமு 1:19-28

1சாமு 1:19. அவர்கள் அதிகாலையில் எழுந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, ராமாவிலிருக்கிற தங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போனார்கள்; எல்க்கானா தன் மனைவியாகிய அன்னாளை அறிந்தான்; கர்த்தர் அவளை நினைந்தருளினார்.

1சாமு 1:20. சிலநாள் சென்றபின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள்.

1சாமு 1:21. எல்க்கானா என்பவன் கர்த்தருக்கு வருஷாந்தரம் செலுத்தும் பலியையும் தன் பொருத்தனையையும் செலுத்தும்படியாக, தன் வீட்டார் அனைவரோடுங்கூடப் போனான்.

1சாமு 1:22. அன்னாள் கூடப்போகவில்லை; அவள்: பிள்ளை பால்மறந்தபின்பு, அவன் கர்த்தரின் சந்நிதியிலே காணப்படவும், அங்கே எப்பொழுதும் இருக்கவும், நான் அவனைக் கொண்டுபோய் விடுவேன் என்று தன் புருஷனிடத்தில் சொன்னாள்.

1சாமு 1:23. அப்பொழுது அவள் புருஷனாகிய எல்க்கானா அவளை நோக்கி: நீ உன் இஷ்டப்படி செய்து, அவனைப் பால்மறக்கப்பண்ணுமட்டும் இரு; கர்த்தர் தம்முடைய வார்த்தையைமாத்திரம் நிறைவேற்றுவாராக என்றான்; அப்படியே அந்த ஸ்திரீ தன் பிள்ளையைப் பால்மறக்கப்பண்ணுமட்டும் அதற்கு முலைகொடுத்தாள்.

1சாமு 1:24. அவள் அவனைப் பால்மறக்கப் பண்ணினபின்பு, மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்துக் கொண்டு, அவனையும் கூட்டிக்கொண்டு, சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனாள்; பிள்ளை இன்னும் குழந்தையாயிருந்தது.

1சாமு 1:25. அவர்கள் ஒரு காளையைப் பலியிட்டு, பிள்ளையை ஏலியினிடத்தில் கொண்டுவந்து விட்டார்கள்.

1சாமு 1:26. அப்பொழுது அவள்: என் ஆண்டவனே, இங்கே உம்மண்டையிலே நின்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணின ஸ்திரீ நான்தான் என்று என் ஆண்டவனாகிய உம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.

1சாமு 1:27. இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம்பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார்.

1சாமு 1:28. ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக் கொடுக்கிறேன் என்றாள்; அவன் அங்கே கர்த்தரைப் பணிந்து கொண்டான்.

எல்க்கானாவும் அவருடைய குடும்பத்தாரும் அதிகாலையில் எழுந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, ராமாவிலிருக்கிற தங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போகிறார்கள். அவர்கள் சீலோவிலிருந்து ராமாவுக்கு பிரயாணம்பண்ணவேண்டும். எல்க்கானாவின் இரண்டு மனைவிகளும், அவருடைய பிள்ளைகளும், குடும்பமாக தங்கள் வீட்டிற்கு திரும்பிப்போகிறார்கள்.

எல்க்கானா தன் குடும்பத்தாரோடு கர்த்தரைப் பணிந்துகொண்டார். ஆகையினால் அவர்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பிப்போகையில், அவர்களுக்குள் குழப்பமோ, வருத்தமோ, மனமடிவோ, கருத்து வேறுபாடுகளோ உண்டாகவில்லை. நாம் ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக, கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணிவிட்டு, அதை ஆரம்பிக்கவேண்டும். அப்போது கர்த்தருடைய கிருபையும், வழிநடத்துதலும் நமக்கு கிடைக்கும்.

எல்க்கானா தன் மனைவியாகிய அன்னாளை அறிகிறார்; கர்த்தர் அன்னாளை நினைந்தருளுகிறார். சிலநாள் சென்றபின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுகிறாள். அன்னாள், "கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன்" என்று சொல்லி, அவருக்கு "சாமுவேல்" என்று பேரிடுகிறாள் (1சாமு 1:19,20).

சாமுவேல் என்னும் பெயர் "இஸ்மவேல்" என்னும் பெயரின் பொருளோடு தொடர்புடையது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இஸ்மவேல் என்னும் பெயருக்கு "கர்த்தருக்கென்று கேட்டபடியினால்" என்று பொருள். சாமுவேல் என்னும் பெயருக்கும் இதுவே பொருள். கர்த்தர் தாய்மார்களின் ஜெபங்களைக் கேட்டு, அவர்களுக்கு கிருபையாகப் பதில் கொடுக்கிறார்.

அன்னாள் கர்த்தரிடத்தில் ஒரு குமாரனைக் கேட்டாள். கர்த்தர் அன்னாளின் விண்ணப்பத்தை அங்கீகரித்து, அவளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார். கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அன்னாளின் ஜெபத்திற்கு பதில் கிடைத்திருக்கிறது. கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற நன்மைக்காக, அன்னாள் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

"கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன். அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன்" (சங் 116:1,2).

அன்னாள் தனக்கு ஒரு குமாரனை கர்த்தரிடத்தில் கேட்டாள். கர்த்தர் தனக்கு கொடுத்த அந்தக் குமாரனை, அன்னாள் கர்த்தருக்கே அர்ப்பணித்துவிடுகிறாள். நம்முடைய ஜெபத்திலும், நாம் கர்த்தரிடத்தில் அநேக காரியங்களைக் கேட்கிறோம். நாம் கர்த்தரிடத்தில் கேட்டதைப் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தருடைய மகாபெரிதான கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும், நாம் கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கவேண்டும்.

அன்னாள் தன் குமாரனாகிய சாமுவேலுக்கு, தாய்ப்பால் கொடுத்து, அவரை போஷித்து பராமரித்து வளர்க்கிறாள். அன்னாள் சாமுவேல்மீது அன்பாயிருக்கிறாள். சாமுவேல் கர்த்தருக்கு பரிசுத்தமாக பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறவர். இதன் நிமித்தமாக அன்னாள் சாமுவேலை போஷித்து பராமரிப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகிறாள்.

அன்னாளுக்கு சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணுவது, மிகவும் பிரியமானது. எல்க்கானா கர்த்தருக்கு வருஷாந்தரம் செலுத்தும் பலியையும் தன் பொருத்தனையையும் செலுத்தும்படியாக, தன் வீட்டார் அனைவரோடுங்கூட சீலோவுக்குப் போகிறார். ஆனால் அன்னாள் அவர்களோடே கூடப்போகவில்லை (1சாமு 1:21).

எல்க்கானாவும், பெனின்னாளும், அவர்களுடைய பிள்ளைகளும் சீலோவுக்கு போகும்போது, அன்னாளோ ராமாவிலுள்ள தன்னுடைய வீட்டிலேயே இருந்துவிடவேண்டும் என்று தீர்மானிக்கிறாள். அன்னாள் கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கிறாள். சாமுவேலை வளர்ப்பது கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியம் என்று நினைத்து, அன்னாள் சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகாமல், ராமாவிலுள்ள தன்னுடைய வீட்டிலேயே தங்கியிருக்கிறாள்.

அன்னாளும் தன்னோடுகூட சீலோவுக்கு வரவேண்டும் என்று எல்க்கானா அவளை அழைக்கிறார். ஆனால் அன்னாளோ எல்க்கானாவிடம், "பிள்ளை பால்மறந்தபின்பு, அவன் கர்த்தரின் சந்நிதியிலே காணப்படவும், அங்கே எப்பொழுதும் இருக்கவும், நான் அவனைக் கொண்டுபோய் விடுவேன்" (1சாமு 1:22) என்று சொல்லுகிறாள்.

சபை ஊழியத்தில், ஒரு சிலர் ஞாயிறு பள்ளிகளையும், சிறுவர் ஊழியங்களையும் கவனிக்கிறார்கள். அவர்களால் சபையில் நடைபெறும் துதி ஆராதனையில் பங்குபெற முடிவதில்லை. அவர்களால் பிரசங்கச் செய்திகளையும் கேட்க முடிவதில்லை. அவர்கள் சபையில் நடைபெறும் வேறொரு ஊழியத்தில் பங்குபெறுவதினால், சபையின் பொதுவான ஊழியத்தில் பங்குபெற முடியாமல் போகிறது.

யூதமார்க்கத்திலே, ஒவ்வொரு வருஷமும் யூதர்கள் மூன்று முக்கியமான பண்டிகைகளை ஆசரிப்பது வழக்கம். அந்தப் பண்டிகை நாளின்போது, இஸ்ரவேலின் புருஷர்கள் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திற்கு கட்டாயம் போகவேண்டும். அன்னாளும் இதற்கு முன்பு எல்க்கானாவோடு, சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குப்போவது வழக்கம். ஆனால் அவள் இந்த முறை எல்க்கானாவோடுகூட சீலோவுக்குப்போகவில்லை.

அன்னாள் சாமுவேலை வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்துகிறாள். கர்த்தருக்கு பலிசெலுத்துவதைவிட, அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதும், தன்னுடைய பொருத்தனையை நிறைவேற்றுவதுமே அன்னாளுக்கு முக்கியமானதாயிருக்கிறது.

சபையிலே, சிறுபிள்ளைகள் மத்தியிலே, ஞாயிறு வேதாகம பள்ளி ஊழியத்தை செய்கிறவர்கள், அன்னாளின் சரித்திரத்தை தியானித்துப் பார்த்து ஆறுதல் பெறவேண்டும். இவர்கள் சபை ஆராதனையில் பங்குபெறாவிட்டாலும், இவர்களும் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறார்கள். கர்த்தர் இவர்களுடைய ஊழியங்களை அங்கீகரித்து, இவர்களை ஆசீர்வதிப்பார்.

சாமுவேல் பால் மறக்கும் வரையிலும், அன்னாள் அவரை சீலோவிலுள்ள கர்த்தருடைய சந்நிதிக்கு அழைத்துப்போவதில்லை என்று தீர்மானித்திருக்கிறாள். சாமுவேல் பால் மறந்த பின்போ, அவரை கர்த்தரின் சந்நிதியிலே காணப்படவும், அங்கே எப்பொழுதும் இருக்கவும், அவரை கொண்டுபோய் விடவேண்டும் என்று அன்னாள் தீர்மானித்திருக்கிறாள். சாமுவேலை சீலோவுக்கு அழைத்துக்கொண்டுபோய், கர்த்தருடைய ஆலயத்தைக் காண்பிப்பதற்காக அல்ல, அவரை கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு போய்விடுவதற்காக, போகவேண்டும் என்று அன்னாள் தீர்மானித்திருக்கிறாள்.

அன்னாளின் வார்த்தைகளை எல்க்கானாவும் அங்கீகரிக்கிறார். அன்னாளின் புருஷனாகிய எல்க்கானா அவளை நோக்கி: "நீ உன் இஷ்டப்படி செய்து, அவனைப் பால்மறக்கப்பண்ணுமட்டும் இரு; கர்த்தர் தம்முடைய வார்த்தையைமாத்திரம் நிறைவேற்றுவாராக" என்று சொல்லுகிறார்; அப்படியே அன்னாள் தன் பிள்ளையைப் பால்மறக்கப்பண்ணுமட்டும் அதற்கு முலைகொடுக்கிறாள் (1சாமு 1:23).

அன்னாள் சாமுவேலை பால்மறக்கப் பண்ணினபின்பு, மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்துக் கொண்டு, சாமுவேலையும் கூட்டிக்கொண்டு, சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறாள்; சாமுவேல் என்னும் பிள்ளை இன்னும் குழந்தையாயிருக்கிறது (1சாமு 1:24).

இஸ்ரவேல் தேசத்திலே, ஸ்திரீகள் தங்கள் பிள்ளைகளுக்கு மூன்று வருஷங்களுக்கு தாய்ப்பால் கொடுப்பது வழக்கம். அதன் பின்பு பிள்ளையை பால் மறக்கப்பண்ணுவார்கள். சாமுவேல் பிறந்து மூன்று வருஷத்திற்கு பின்பு, அன்னாள் சாமுவேலை சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குக் கூட்டிக்கொண்டு போயிருக்கவேண்டும்.

"பால் மறக்கப்பண்ணின பின்பு" என்னும் வாக்கியத்திற்கு, "பிள்ளைகளுடைய குழந்தைபருவமும், சிறுபிள்ளைத்தனமும் முடிந்த பின்பு" என்றும் வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள். பொதுவாக பிள்ளைகள் எட்டு அல்லது பத்து வயதில், தங்கள் சிறுபிள்ளைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வளர்ச்சி பெறுவார்கள்.

அன்னாள் சாமுவேலை கர்த்தருடைய ஆலயத்திற்குக்கூட்டிக்கொண்டு போனபோது, சாமுவேல் இன்னும் குழந்தையாகவே இருக்கிறார். அன்னாள் கர்த்தருடைய ஆலயத்திற்கு சாமுவேலை மாத்திரம் கூட்டிக்கொண்டு போகாமல், தன்னோடுகூட மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு போகிறாள். இவற்றை கர்த்தருக்கு போஜனபலியாக செலுத்த கொண்டுபோகிறாள்.

சாமுவேலின் ஒவ்வொரு வயதிற்கு தக்க பிரகாரம், ஒவ்வொரு காளையைப் பலியிடும் வண்ணமாக, அன்னாள் மூன்று காளைகளை கொண்டு போகிறாள். ஒருவேளை அன்னாள் கர்த்தருடைய ஆலயத்திலே மூன்றுவிதமான பலிகளாகிய, சர்வாங்கதகனபலி, பாவநிவாரணபலி, சமாதானபலி ஆகிய பலிகளை செலுத்தியிருக்கவேண்டும். ஒவ்வொரு பலியிலும் ஒவ்வொரு காளையை பலிசெலுத்தும் வண்ணமாக, அவள் மூன்று காளைகளை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டுபோயிருக்கவேண்டும்.

கர்த்தர் அன்னாளின் விண்ணப்பத்தைக் கேட்டு, அவளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தனக்கு செய்த நன்மையை நினைவுகூர்ந்து, அவரை நன்றியோடு துதிப்பதற்கும், அவருக்கு பலிகளை செலுத்தி அவரை ஆராதிப்பதற்கும், அன்னாள் மூன்று காளைகளைக் கொண்டுபோகிறாள்.

அன்னாள் மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும், கர்த்தருடைய ஆலயத்திலே பிரதான ஆசாரியராக ஊழியம் செய்கிற ஏலியினிடத்தில் கொண்டு வந்து கொடுக்கிறாள். அன்னாள் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபித்தபோது, ஏலி அவளுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னார்.

அன்னாள் சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து, ஏலியைப் பார்த்து, "என் ஆண்டவனே, இங்கே உம்மண்டையிலே நின்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணின ஸ்திரீ நான்தான் என்று என் ஆண்டவனாகிய உம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 1:26) என்று சொல்லுகிறாள்.

அன்னாள் சாமுவேலுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினாள். அவள் கர்த்தரிடத்தில் கேட்ட அவளுடைய விண்ணப்பத்தின்படி, கர்த்தர் அவளுக்கு கட்டளையிட்டிருக்கிறார் (1சாமு 1:27). எல்க்கானாவும் அன்னாளும் ஒரு காளையைப் பலியிட்டு, சாமுவேலை ஏலியினிடத்தில் கொண்டுவந்து விடுகிறார்கள் (1சாமு 1:25).

அன்னாள் ஏலியிடம், கர்த்தர் தன்னுடைய விண்ணப்பத்தின்படி தனக்கு கட்டளையிட்டதை விரிவாக எடுத்துச் சொல்லுகிறாள். "ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன்" (1சாமு 1:28) என்று அன்னாள் ஏலியிடம் சொல்லுகிறாள்.

எல்க்கானாவும் அன்னாளும் சாமுவேலை ஏலியினிடத்தில் கொண்டு வந்து விடுகிறார்கள். சாமுவேல் கர்த்தருடைய ஆலயத்திலே, கர்த்தரைப் பணிந்துகொள்கிறார். சாமுவேல் உயிரோடிருக்கும் நாளெல்லாம், அவர் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்.

நாம் கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டதையே, அவருக்கு காணிக்கையாகக் கொடுக்கிறோம். கர்த்தர் நமக்குக் கொடுக்காமல், நம்மால் எதையும் அவருக்குகொடுக்க முடியாது.

"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்; பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது; நிலைத்திருப்போம் என்னும் நம்பிக்கையில்லை. எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, நாங்கள் சவதரித்திருக்கிற இந்தப் பொருள்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது; எல்லாம் உம்முடையது" (1நாளா 29:14-16).

சாமுவேல் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறார். தன்னுடைய பெற்றோர் எதிர்பார்த்ததற்கும் அதிகமாக சாமுவேல் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார். அன்னாளும் எல்க்கானாவும் சாமுவேலை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தபோது, சாமுவேல் அங்கே கர்த்தரைப் பணிந்துகொள்கிறார். சாமுவேல் இன்னும் குழந்தையாகயிருந்தாலும், அவர் கர்த்தரைப் பணிந்துகொள்கிறார்.

நம்முடைய குடும்பத்தில், நம்முடைய பிள்ளைகள் சிறுபிள்ளைகளாகயிருக்கும்போதே, அவர்களுக்கு கர்த்தரைப் பணிந்துகொள்ள கற்றுக்கொடுக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகளை கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு வளர்க்கவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்குப் பயந்து வளர்க்கவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். சிறுபிள்ளைகள் கர்த்தருக்குள் வளருவதற்கு உதவிசெய்வார். பரிசுத்த ஆவியானவர் அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்.

2 அதிகாரம்

கர்த்தர் அன்னாளுக்கு சாமுவேலைக் கொடுத்திருக்கிறார். அன்னாள் தான் பெற்ற ஆசீர்வாதத்திற்காக கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள் (1சாமு 2:1-10). ஏலியின் ஆசீர்வாதத்தோடு எல்க்கானாவும், அவருடைய குடும்பத்தாரும் தங்கள் வீட்டிற்குத் திரும்பிப்போகிறார்கள் (1சாமு 2:11,20). அன்னாள் மேலும் மூன்று குமாரரையும் இரண்டு குமாரத்திகளையும் பெறுகிறாள் (1சாமு 2:21).

சாமுவேல் கர்த்தருக்கு பணிவிடை செய்து கொண்டிருக்கிறார். அவர் பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொள்கிறார் (1சாமு 2:11,18,21,26). அன்னாள் வருஷந்தோறும் சாமுவேலுக்கு ஒரு சின்ன சட்டையை தைத்துக்கொண்டு வருகிறாள் (1சாமு 2:19).

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள் (1சாமு 2:12-17,22). ஏலி தன்னுடைய இரண்டு குமாரரையும் மென்மையாகக் கடிந்துகொள்கிறார் (1சாமு 2:23-25). கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாக ஏலியின் குடும்பத்திற்கு விரோதமான செய்தியைச் சொல்லுகிறார் (1சாமு 2:27-36).

அன்னாளின் துதிப்பாடல் 1சாமு 2:1-10

1சாமு 2:1. அப்பொழுது அன்னாள் ஜெபம் பண்ணி: என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது; என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது; என் பகைஞரின்மேல் என் வாய் திறந்திருக்கிறது; உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப் படுகிறேன்.

1சாமு 2:2. கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை.

1சாமு 2:3. இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள்; அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ?

1சாமு 2:4. பலவான்களின் வில் முறிந்தது; தள்ளாடினவர்களோ பலத்தினால் இடைகட்டப்பட்டார்கள்.

1சாமு 2:5. திருப்தியாயிருந்தவர்கள் அப்பத்துக்காக கூலிவேலை செய்கிறார்கள்; பசியாயிருந்தவர்களோ இனிப் பசியாயிரார்கள்; மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள்; அநேகம் பிள்ளைகளைப் பெற்றவளோ பலட்சயப்பட்டாள்.

1சாமு 2:6. கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்; அவரே பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர்.

1சாமு 2:7. கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும், உயர்த்துகிறவருமானவர்.

1சாமு 2:8. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்; பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்; அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்.

1சாமு 2:9. அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்; துன்மார்க்கர் இருளிலே மௌனமாவார்கள்; பெலத்தினால் ஒருவனும் மேற்கொள்வதில்லை.

1சாமு 2:10. கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப் படுவார்கள்; வானத்திலிருந்து அவர்கள்மேல் முழங்குவார்; கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்த்து, தாம் ஏற்படுத்தின ராஜாவுக்குப் பெலன் அளித்து, தாம் அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார் என்று துதித்தாள்.

அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள். அன்னாள் ஜெபத்தின் ஆவியினாலும், தீர்க்கதரிசனத்தின் ஆவியினாலும் நிரம்பியிருக்கிறாள். கர்த்தர் அன்னாளுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பித்திருக்கிறார். அன்னாள் கர்த்தருடைய கிருபையை நன்றியுள்ள இருதயத்தோடு ஏற்றுக்கொள்கிறாள். அன்னாளின் உதட்டில் கர்த்தரைத் துதிக்கும் துதியின் வார்த்தைகள் புறப்பட்டு வருகிறது.

கர்த்தர் நமக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தரைத் துதிப்பது நம்முடைய கடமை. அவரை துதிப்பதற்கு நாம் கடன்பட்டிருக்கிறோம். நாம் கர்த்தரைத் துதிக்கவில்லையென்றால், அவருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறோம். நாம் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய கடனை திரும்ப செலுத்தாமலிருப்பது நமக்கு அநீதியாயிருக்கும்.

அன்னாள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினாள். கர்த்தர் தம்முடைய தயவினால் தனக்கு ஒரு குமாரனைக் கொடுக்கவேண்டுமென்று அன்னாள் பணிவோடு விண்ணப்பம்பண்ணினாள். கர்த்தர் அன்னாளின் ஜெபத்திற்கு செவிகொடுத்து, அவளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார். கர்த்தர் தனக்கு செய்த நன்மைக்காக அவரை நன்றியோடு துதிப்பது தன்னுடைய கடமை என்றும், கர்த்தரைத் துதிப்பதற்கு தான் கடன்பட்டிருப்பதாகவும் நினைத்து, அன்னாள் கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதித்துப் பாடுகிறாள்.

அன்னாள் கர்த்தரைத் துதித்து பாடும் துதிப்பாடல், "அன்னாளின் ஜெபம்" என்று அழைக்கப்படுகிறது. அன்னாள் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறாள். கர்த்தரைத் துதிப்பது நம்முடைய ஜெபத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். அன்னாள் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபித்தபோது, அவள் தன் இருதயத்திலே பேசினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை (1சாமு 1:13).

அன்னாள் இப்போது கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள். இப்போது அவளுடைய துதிப்பாடலின் வார்த்தைகள் கேட்கப்படுகிறது. அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, அவள் பாடுகிற துதியின் கீதத்தை, அங்கே இருக்கிறவர்கள் எல்லோரும் தங்கள் செவிகளால் கேட்கிறார்கள்.

அன்னாள் ஜெபித்தபோது அவள் தன் இருதயத்திலே பேசினாள். கர்த்தருடைய சமுகத்தில் மனங்கசந்து மிகவும் அழுதாள். அவளுடைய வாயிலிருந்து வார்த்தைகள் புறப்பட்டு வரவில்லை. அன்னாள் பெருமூச்சு விட்டு ஜெபம்பண்ணினாள். இப்போதோ அவள் கர்த்தரைத் துதிக்கிறாள். அவளுடைய உதடுகள் திறக்கிறது. அவளுடைய வாயிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் துதியின் வார்த்தைகள் வெளிவருகிறது.

அன்னாள் கர்த்தரைத் துதித்துப்பாடும் துதியின் கீதத்திலிருந்து நாம் சில ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுக்கொள்ளலாம். அன்னாளுடைய இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது. கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளை நினைத்து அன்னாள் அவரை நன்றியோடு துதிக்கிறாள். அவள் கர்த்தருக்குள் வெற்றி பெற்றிருக்கிறாள். கர்த்தர் அவளுக்கு பெரிய காரியங்களை செய்திருக்கிறார்.

அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள். தன் குமாரனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள். சாமுவேல் மெய்யாகவே அன்னாளுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். அன்னாளோ தன்னுடைய துதிப்பாடலில் சாமுவேலைப்பற்றி அதிகமாய்ச் சொல்லாமல், கர்த்தரைப்பற்றிய மகத்துவமான காரியங்களையே அதிகமாகச் சொல்லி அவரைத் துதித்துப்பாடுகிறாள்.

கர்த்தர் தமது கிருபையினாலும் இரக்கத்தினாலும் அன்னாளுக்கு சாமுவேலைக் கொடுத்திருக்கிறார். தனக்கு ஒரு குமாரன் பிறந்திருப்பது அன்னாளுக்கு சந்தோஷமான காரியம். ஆனாலும் அன்னாளுடைய இருதயம் சாமுவேலுக்காக அதிகமாய் சந்தோஷப்படாமல், கர்த்தருக்குள் அதிகமாய் களிகூருகிறது.

கர்த்தர் தனக்கு கொடுத்த ஈவை அன்னாள் நோக்கிப் பார்க்கவில்லை. அவள் சாமுவேலைப் பார்க்காமல், சாமுவேலை தனக்கு கிருபையாகக் கொடுத்த கர்த்தரை நோக்கிப் பார்க்கிறாள். தனக்கு கிருபை கொடுத்த கர்த்தரைத் துதிக்கிறாள். அன்னாளின் துதிப்பாடல் விசுவாசிகளாகிய நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியாகயிருக்கிறது.

கர்த்தர் நமக்கு அநேக நன்மைகளை தருகிறார். பல சமயங்களில் நாம் கர்த்தர் கொடுக்கும் ஈவையும் ஆசீர்வாதத்தையும் நோக்கிப் பார்க்கிறோம். ஆசீர்வாதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆனால் இந்த ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுத்த கர்த்தரை மறந்துவிடுகிறோம். ஆசீர்வாதத்தை விட, நமக்கு அந்த ஆசீர்வாதத்தைக் கொடுத்த கர்த்தரே முக்கியமானவர். அவரே நம்முடைய துதிகளுக்கு பாத்திரர். "உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன்" என்று அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள்.

அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, "கர்த்தரைப்போல பரிசுத்தமுள்ளவர் இல்லை" என்று சொல்லுகிறாள். கர்த்தரிடத்தில் கறை திறை எதுவுமில்லை. அவர் பரிசுத்தத்தில் பரிபூரணமானவர்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். "உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை" என்றும், "எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை" என்றும் அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அன்னாள் கர்த்தரைத் துதித்துப்பாடும்போது, "கர்த்தர் ஞானமுள்ள தேவன்" என்று சொல்லுகிறாள். அவரே தம்முடைய ஞானத்தினால் சர்வத்தையும் நியாயம் விசாரிக்கிறவர். "அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ" என்று அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள்.

அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, அவள் தன்னைத்தானே கர்த்தருக்குள் ஆறுதல் படுத்திக்கொள்கிறாள். நாம் கர்த்தரை மகிமைப்படுத்தும்போது, நம்முடைய ஆத்துமாவிலே, நமக்கு அமைதியும், இளைப்பாறுதலும் உண்டாகும். நமக்கு ஆறுதலும் தேறுதலும் உண்டாகும்.

அன்னாள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறாள். அவளுடைய சந்தோஷம் பரிசுத்தமானது. "என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது" என்று அன்னாள் நன்றியோடு சொல்லுகிறாள். அன்னாளின் இருதயம் அவளுடைய குமாரனாகிய சாமுவேலின் நிமித்தம் அதிகமாக களிகூரவில்லை. ஆனால் அவளுடைய இருதயம் கர்த்தருக்குள் அதிகமாய்க் களிகூருகிறது.

அன்னாளுக்கு கர்த்தருக்குள் ஜெயம் கிடைத்திருக்கிறது. இது பரிசுத்தமான ஜெயம். அன்னாள் தன்னுடைய ஜெயத்தைப்பற்றிச் சொல்லும்போது, "என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது" என்று சொல்லுகிறாள். அன்னாளுக்கு ஒரு குமாரன் பிறந்திருப்பதினால், அவளுடைய அவமானம் அவளை விட்டு நீங்கிற்று. அவளை பிள்ளை பெறாத மலடி என்று இனிமேல் யாரும் சொல்லமுடியாது.

கர்த்தர் அன்னாளுக்கு கிருபையாக சாமுவேலைக் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு பிள்ளை கர்த்தருடைய கிருபையினால் அன்னாளின் வயிற்றில் பிறந்திருப்பது, அன்னாளுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். இதனால் அவளுடைய குடும்பத்தார் மத்தியிலும், உற்றார் உறவினர் மத்தியிலும், அன்னாளின் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது.

"என் கொம்பு உயர்ந்திருக்கிறது" என்னும் வாக்கியத்திற்கு, "என்னுடைய துதிகள் அதிகரித்திருக்கிறது" என்று பொருள். கர்த்தர் அன்னாளை ஆசீர்வதித்திருக்கிறார். அவளுடைய இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது.

"என் பகைஞரின் மேல் என் வாய் திறந்திருக்கிறது" என்று அன்னாள் சொல்லுகிறாள். அன்னாளுக்கு இதுவரையிலும் பிள்ளையில்லாததினால், அவளுடைய சக்களத்தியும், உற்றார் உறவினர்களும் அவளை வார்த்தையினால் வேதனைப்படுத்தினார்கள். இப்போதோ கர்த்தர் அன்னாளை ஆசீர்வதித்திருக்கிறார். தன்னை நிந்தித்தவர்களை அன்னாளால் இப்போது எதிர்த்து நிற்க முடிகிறது. அன்னாள் தன்னுடைய வாயை விரிவாய்த் திறந்து, தனக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளையும், நிந்தையான வார்த்தைகளையும் பேசினவர்களுக்கு பதில் சொல்லுகிறாள்.

அன்னாளை இதுவரையிலும் நிந்தித்தவர்கள், இனிமேல் அவளை நிந்திக்கக்கூடாது. அன்னாளுக்கு விரோதமாக எழும்பினவர்கள் இனிமேல் தூஷண வார்த்தைகளைப் பேசாமல் அமைதியாயிருக்கவேண்டும். அன்னாளுக்கு சத்துருவாகயிருக்கிறவர்கள் கர்த்தருக்கு சத்துருக்களாகயிருக்கிறார்கள். அன்னாளை நிந்திக்கிறவர்கள் கர்த்தரை நிந்திக்கிறார்கள். ஆகையினால், "இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள்; அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்" *(1சாமு 2:3)* என்று அன்னாள், தன்னை நிந்திக்கிறவர்களைப் பார்த்து சொல்லுகிறாள்.

அன்னாள் கர்த்தரை நம்புகிறாள். அவள் கர்த்தருடைய ஞானத்தையும், அவருடைய தெய்வீக பராமரிப்பையும் நம்புகிறாள். கர்த்தருடைய உதவியில்லாமல், மனுபுத்திரரால் ஒன்றையும் செய்ய முடியாது. மனுஷன் எவ்வளவுதான் முயற்சி பண்ணினாலும், கர்த்தருடைய சித்தமே வாய்க்கும். தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமே ஒவ்வொரு காரியமும் நடைபெறும். "கர்த்தர் ஞானமுள்ள தேவன், அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ" என்று அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக கிருபையினால் பலவீனருக்கு பலத்தைக் கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் பலமுள்ளவர்களை பலவீனராக்குகிறார். "பலவான்களின் வில் முறிந்தது; தள்ளாடினவர்களோ பலத்தினால் இடைகட்டப்பட்டார்கள்" *(1சாமு 2:4)* என்று அன்னாள் சொல்லுகிறாள்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் பலவான்களுடைய வில் முறிந்துபோயிற்று. அவர்களிடத்தில் இப்போது ஆயுதமில்லை. இதற்கு முன்பு பலவான்கள், தங்களுடைய வில்லை, தங்கள் இஷ்டப்படி பயன்படுத்தினார்கள். தாங்கள் விரும்பியதை செய்தார்கள். இப்போதோ அவர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் செயலிழந்து தவிக்கிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தை ஜீவனும் பெலனுமுள்ளது. கர்த்தர் ஒரு வார்த்தை சொன்னால் போதும், அப்போது பலவீனனும் பலமடைவான். பலவீனத்தினால் தள்ளாடி கீழே விழுகிறவன், கர்த்தருடைய வார்த்தையினால் பெலமுள்ளவனாய் எழுந்து நிற்பான். "தள்ளாடினவர்களோ பலத்தினால் இடைக்கட்டப்பட்டார்கள்" என்று அன்னாள் சொல்லுகிறாள்.

பலவீனர்களால் நேராக நடக்க முடியாது. அவர்கள் தள்ளாடுவார்கள். அவர்கள் தள்ளாடாமல் நேராக நிற்கவேண்டுமென்றால், அவர்களுக்கு ஆதரவு தேவை. அவர்களை இடைக்கட்டவேண்டும். ஒரு சிலர் தங்கள் சரீர பலவீனத்தில் தள்ளாடுவார்கள். வேறு சிலரோ தங்களுடைய சிந்தையிலும் மனதிலும் உண்டாயிருக்கிற பலவீனத்தினால் தள்ளாடுவார்கள். கர்த்தர் தள்ளாடினவர்களை தம்முடைய பலத்தினால் இடைக்கட்டுகிறார். அப்போது அவர்கள் பெலமுள்ளவர்களாக எழுந்து நிற்கிறார்கள். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக பெரிய காரியங்களை செய்கிறார்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக ஐசுவரியவான்கள் திடீரென்று தரித்திரராகிறார்கள். கர்த்தருடைய சித்தத்தினாலேயே தரித்திரராயிருக்கிறவர்கள் திடீரென்று ஐசுவரியவான்களாகிறார்கள். இவையெல்லாவற்றையும் கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக செய்கிறார்.

"ஐசுவரியவனாக வேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே; இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்" *(நீதி 23:4,5)*.

ஐசுவரியவான்களில் சிலர் கர்த்தரை நம்பாமல் தங்கள் ஐசுவரியத்தையே நம்புகிறார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தருக்குள் களிகூராமல், தங்கள் ஐசுவரியத்திற்குள் களிகூர முயற்சி பண்ணுகிறது. அவர்களால் ஐசுவரியத்தில் உண்மையான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஐசுவரியத்தை நம்புகிறவர்கள் ஏமாந்து போவார்கள்.

ஐசுவரியவான்களாகயிருந்து திடீரென்று தரித்திரராகிறவர்களுக்கு மிகுந்த வேதனை உண்டாகும். அவர்களுடைய துக்கம் இரட்டிப்பாயிருக்கும். ஐசுவரிவான்களிடத்தில், ஐசுவரியம் மிகுதியாயிருக்கும்போது, அவர்கள் திருப்தியாய் சாப்பிடுவார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, அவர்கள் தரித்திரராகும்போது, அவர்களுக்கு போதுமான அளவு போஜனம் கிடைக்காது. அப்படிப்பட்டவர்கள் அரையும் குறையுமாக சாப்பிட்டு பசியும் பட்டினியுமாகயிருப்பார்கள். "திருப்தியாயிருந்தவர்கள் அப்பத்திற்காக கூலி வேலை செய்கிறார்கள்" என்று அன்னாள் சொல்லுகிறாள்.

கர்த்தருடைய தெய்வீக கிருபையினால், தரித்திரராயிருந்தவர்கள், ஐசுவரியவான்களாகிறார்கள். அவர்கள் தரித்திரத்திலிருந்தபோது பசியாயிருந்திருப்பார்கள். "பசியாயிருந்தவர்களோ இனி பசியாயிரார்கள்" என்று அன்னாள் சொல்லுகிறாள். தங்கள் அப்பத்திற்காக, இவர்கள் இதுவரையிலும் கூலி வேலை செய்திருப்பார்கள். இனிமேல் இவர்கள் ஒருவேலையும் செய்யாமல் திருப்தியாய்ப் புசிப்பார்கள்.

அன்னாள் இந்த வாக்கியத்தில் திருப்தியாயிருந்தவர்களையும், பசியாயிருந்தவர்களையும் பற்றி சொல்லுகிறாள். இவர்கள் இருவரும் வெவ்வேறு நபர்கள் அல்ல என்றும், ஒரே நபர் தான் என்றும் வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள். ஐசுவரியவானாயிருந்தவன் திடீரென்று ஏழையாகிறான். ஏழையாயிருந்தவன் மறுபடியும் திடீரென்று ஐசுவரியவானாகிறான்.

கர்த்தர் ஐசுவரியவானை தரித்திரனாக்குகிறார். சிறிது காலம் சென்றபின்பு கர்த்தர் அவனை மறுபடியும் ஐசுவரியவானாக்குகிறார். யோபுவின் சரித்திரத்தில் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றது. யோபு முதலில் ஐசுவரியவானாயிருந்தார். அதன் பின்பு அவர் தரித்திரனானார். அதன் பின்பு அவர் மறுபடியும் ஐசுவரியவானானார்.

ஐசுவரியவான்களாயிருக்கிறவர்கள் மனப்பெருமையோடிருக்கக்கூடாது. ஐசுவரியமே தங்களுக்கு பாதுகாப்பு என்று நினைக்கக்கூடாது. கர்த்தரால் மனுஷருடைய ஐசுவரியத்தை நீக்கிப்போட முடியும். தரித்திரனாயிருக்கிறவனும், தன்னுடைய தரித்திரத்தை நினைத்து வேதனைப்படக்கூடாது. கர்த்தரால் அவனுடைய தரித்திரத்தை விலக்கி, அவனுக்கு ஐசுவரியத்தைக் கொடுக்க முடியும். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம், ஒவ்வொரு மனுஷனுக்கும் ஐசுவரியத்தையும், தரித்திரத்தையும் கட்டளையிடுகிறார்.

சில குடும்பங்களில் பிள்ளைகள் இல்லாமல் வெறுமையாயிருக்கும். ஸ்திரீகள் பிள்ளைபெறாத மலடிகளாயிருப்பார்கள். கர்த்தரோ தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் மலடியாயிருக்கிறவர்களை பிள்ளைத்தாச்சிகளாய் மாற்றுகிறார்.

"பசியாயிருந்தவர்களோ இனிப் பசியாயிரார்கள்; மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள்" *(1சாமு 2:5)* என்று அன்னாள் சொல்லுகிறாள். அன்னாள் இந்த வாக்கியத்தை சொல்லும்போது, தன்னுடைய சொந்த அனுபவத்தையே சொல்லுகிறாள். அன்னாளுக்கு இப்போது ஒரே ஒரு குமாரன் மாத்திரமே பிறந்திருக்கிறான். அன்னாள் மலடியாயிருந்தவள். இப்போது ஒரு பிள்ளை பெற்றிருக்கிறாள். ஆனால் அன்னாள் "மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள்" என்று சொல்லுகிறாள்.

அன்னாள் சாமுவேலை நசரேயனாக பிரதிஷ்டைபண்ணியிருக்கிறாள். சாமுவேல் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார். அவர் கர்த்தருடைய சந்நிதியிலே, கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார். கர்த்தருக்காக ஊழியம் செய்கிற பிள்ளைகள், ஏழு பிள்ளைகளுக்கு சமம் என்னும் பொருளில், "மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள்" என்று அன்னாள் சொல்லுகிறாள்.

அன்னாள் இவ்வாறு சொல்லுவது, அவளுடைய விசுவாச வார்த்தையாகவும் இருக்கலாம். தனக்கு இப்போது ஒரே ஒரு குமாரன் மாத்திரம் பிறந்திருந்தாலும், கர்த்தர் தனக்கு இன்னும் அநேக புத்திர பாக்கியங்களை கொடுப்பார் என்று அன்னாள் விசுவாசிக்கிறாள். தன்னுடைய விசுவாசம் வீணாய்ப்போகாது என்றும், தனக்கு ஏமாற்றமுண்டாகாது என்றும் அன்னாள் நினைக்கிறாள். அன்னாள் விசுவாசித்ததுபோலவே, கர்த்தர் அன்னாளை கடாட்சித்தார். அவர் கர்ப்பந்தரித்து, மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள் (1சாமு 2:21).

அன்னாளிடத்தில் ஒரே ஒரு குமாரன் மாத்திரமே இருந்தாலும், அவள் அதிகமான பிள்ளைகளுக்காக கர்த்தரிடத்தில் விசுவாசித்தாள். அவளுடைய விசுவாசம் வீணாய்ப்போகவில்லை. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவரே நம்முடைய ஜீவனுக்கும் மரணத்திற்கும் அதிபதியாயிருக்கிறார். கர்த்தர் "கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்" (1சாமு 2:6) என்று அன்னாள் சொல்லுகிறாள். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. கர்த்தரால் செய்ய முடியாத கடினமான காரியம் என்று எதுவுமில்லை. கர்த்தரால் மரித்தவரையும் பிழைக்க வைக்க முடியும். அவரால் உலர்ந்த எலும்புகளையும் உயிரோடு எழுப்ப முடியும்.

அன்னாள் கர்த்தருடைய வல்லமையைப்பற்றிச் சொல்லும்போது, "அவரே பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர்" என்று சொல்லுகிறாள்.

கர்த்தரே நம்மை உயர்த்துகிறவர். அவரே நம்மைத் தாழ்த்துகிறவர். "கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிற வருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும், உயர்த்துகிறவருமானவர்" (1சாமு 2:7) என்று அன்னாள் கர்த்தரைப்பற்றி புகழ்ந்து பாடுகிறாள்.

கர்த்தர் பெருமையுள்ளவர்களைத் தாழ்த்துகிறார். அவர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

"பெருமையுள்ளவனையெல்லாம் கவனித்து, அவனைப் பணியப்பண்ணி, துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே மிதித்துவிடு. நீ அவர்களை ஏகமாய்ப் புழுதியிலே புதைத்து, அவர்கள் முகங்களை அந்தரங்கத்திலே கட்டிப்போடு" (யோபு 40:12,13).

கர்த்தர் சிறியவர்களை பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக் 4:10). யோசேப்பு, தானியேல், மோசே, தாவீது ஆகியோர் ஆரம்பத்தில் சாதாரண நிலமையிலிருந்தார்கள். கர்த்தர் யோசேப்பை சிறைச்சாலையிலிருந்து அரண்மனைக்கு உயர்த்தினார். மோசேயும், தாவீதும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கைகளில் ஆடுகளை மேய்க்கும் கோலும் தடியும் இருந்தது. கர்த்தரோ அவர்களுடைய கைகளில் தேசத்தை ஆளுகை செய்யும் செங்கோலைக் கொடுத்தார்.

அன்னாள் கர்த்தரைப்பற்றி துதித்துப் பாடும்போது, கர்த்தருடைய மகத்தான கிரியைகளைப்பற்றியும் சொல்லுகிறாள். கர்த்தருடைய கிரியைகளெல்லாம் அற்புதமானவை. அவை நம்முடைய புத்திக்கு எட்டாத அதிசயமாயிருக்கிறது. "பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்; அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்" (1சாமு 2:8) என்று அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள்.

"பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்" என்னும் வாக்கியத்தை வாசிக்கும்போது, கர்த்தருடைய சர்வவல்லமையை நாம் அறிந்துகொள்கிறோம். கர்த்தரால் மாத்திரமே பூமிக்கு அஸ்திபாரத்தைப் போட முடியும். அந்த அஸ்திபாரத்தின்மீது சர்வவல்லமையுள்ள கர்த்தரால் மாத்திரமே பூச்சக்கரத்தை வைக்கமுடியும்.

கர்த்தர் சர்வசிருஷ்டிகராயிருக்கிறார். அவரே சர்வசிருஷ்டிகளையும் தாங்கி நிற்கிறார். கர்த்தர் தம்முடைய வாயின் வார்த்தையினால் பூமியையும் வானத்தையும் சிருஷ்டித்தார். கர்த்தருடைய வார்த்தை சர்வவல்லமையுள்ளது. கர்த்தர் தம்முடைய வாயின் வார்த்தையினால், அஸ்திபாரங்களை உண்டுபண்ணி, அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்திருக்கிறார்.

கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள். அந்த அஸ்திபாரங்களின்மீது பூச்சக்கரத்தை வைத்த கர்த்தரால், நம்முடைய குடும்பங்களிலும், ராஜ்யங்களிலும் பெரிய காரியங்களை செய்ய முடியும். கர்த்தருடைய கிரியைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. அது நம்முடைய புத்திக்கும் எதிர்பார்ப்புக்கும் அப்பாற்பட்டது. "அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" *(யோபு 26:7).*

"பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள், அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்" என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய வியாக்கியானமும் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய சர்வவல்லமைக்கு முன்பாக எந்த வல்லமையாலும் எதிர்த்து நிற்கமுடியாது. கர்த்தருடைய ஆளுகை சர்வஆளுகையாகயிருக்கிறது. அவருடைய ஆளுகைக்கு விரோதமாய் எந்த அதிகாரத்தாலும் எதிர்த்து நிற்கவும் முடியாது. கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவும் முடியாது.

இந்தப் பூமியிலே பிரபுக்களும், ராஜாக்களும், பெரிய தலைவர்களும் இருக்கிறார்கள். தேசத்தை ஆளுகை செய்கிற அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே பூமியின் அஸ்திபாரங்களைப்போலவும், பூமிக்கு தூண்களைப் போலவும் இருக்கிறார்கள்.

"பூமியானது அதின் எல்லாக் குடிகளோடும் கரைந்துபோகிறது; அதின் தூண்களை நான் நிலைநிறுத்துகிறேன்" *(சங் 75:3).*

இந்த உலகத்தில் நடைபெறுகிற ஒவ்வொரு காரியமும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. இந்தப் பூமியிலுள்ள ராஜ்யங்களை ராஜாக்கள் ஆளுகை செய்தாலும், கர்த்தரே அந்த ராஜாக்களை ஆளுகை செய்கிறவர். தேவனாகிய கர்த்தர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தவாகவும் இருக்கிறார்.

"ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்; பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்; அவர் மகா உன்னதமானவர்" *(சங் 47:9).*

பூமியின் ராஜாக்களும், பிரபுக்களும், அதிகாரிகளும் கர்த்தரிடத்திலிருந்தே தங்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் அவர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய விருப்பத்தின் பிரகாரம் ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச் செய்கிறார். சிங்காசனங்களில் வீற்றிருக்கிறவர்களை கீழே தள்ளிவிடுகிறார். கர்த்தருடைய சர்வவல்லமைக்கு விரோதமாக எந்த மனுஷனாலும் எதிர்த்து நிற்க முடியாது. கர்த்தர் ஒரு காரியத்தை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக செய்யும்போது, அவரைப் பார்த்து, "நீர் ஏன் அதை அப்படி செய்கிறீர்" என்று ஒருவராலும் கேள்வி கேட்கமுடியாது.

கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். அவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை கர்த்தர் தமது கிருபையினால் பாதுகாப்பார். அவர்களை உயர்த்துவார். கர்த்தருக்கு உண்மையுள்ளவர்கள் அவரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சத்துருவாயிருக்கிறவர்கள் கர்த்தருக்கும் சத்துருவாயிருப்பார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் சத்துருக்களை அழித்துப்போடுவார்.

கர்த்தர் அன்னாளுக்கு தமது கிருபையை வெளிப்படுத்தியிருக்கிறார். அவளுக்கு சந்தோஷமான ஜெயத்தைக் கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவருடைய கிருபையும் இரக்கமும் என்றும் மாறுவதில்லை. அன்னாள் கர்த்தருடைய கிருபையை பரிபூரணமாய் அனுபவித்திருக்கிறாள். கர்த்தர் தனக்கு செய்யப்போகும் நன்மைகளை அன்னாள் விசுவாசத்தோடும், சந்தோஷத்தோடும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

அன்னாள் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, அவளுடைய வாயிலிருந்து தீர்க்கதரிசன வார்த்தைகள் புறப்பட்டு வருகிறது. கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறவர்கள், கர்த்தர் செய்யப்போகும் கிருபையுள்ள காரியங்களை தீர்க்கதரிசனமாய் வெளிப்படுத்துவார்கள்.

அன்னாள் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள், அவளுடைய குமாரனாகிய சாமுவேலோடு தொடர்புடையதாயிருக்கிறது. சாமுவேல் இஸ்ரவேல் தேசத்தை நியாயம் விசாரித்து, அதை ஆளுகை செய்வார். தாவீதை அபிஷேகம்பண்ணும் பொறுப்பு சாமுவேலுக்கு கொடுக்கப்படும்.

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் மிகவும் சிறிய தேசமாயிருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருந் தார்கள். அற்பமான ஆரம்பத்தை ஒருவரும் அசட்டைபண்ணக்கூடாது. நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் சிறியவர்களாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை பெரியவர்களாக மாற்றுவார். இப்போது சொற்ப எண்ணிக்கையிலுள்ள இஸ்ரவேல் ஜனங்கள், சீக்கிரத்தில் திரளாய்ப் பலுகிப் பெருகுவார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நியாயப்பிரமாணத்தையும் கட்டளைகளையும் கொடுப்பார். இஸ்ரவேல் ஜனத்தார் அண்டை தேசங்களிலுள்ள ஜாதிகளுக்கு கர்த்தருடைய பிரமாணங்களை வெளிப்படுத்துவார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதி ஜனத்தை ஆளுகை செய்வார்கள். இஸ்ரவேல் தேசத்திலே மிகப்பெரிய மாற்றமுண்டாகும். இந்த மாற்றம் சாமுவேலின் பிறப்பில் ஆரம்பமாயிற்று. இஸ்ரவேல் தேசத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் விடிவெள்ளியைப்போல சாமுவேல் உதித்திருக்கிறார்.

அன்னாள் இங்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிற வாக்கியங்கள் சாமுவேலின் ஆளுகையைக் குறிப்பதோடு, அதையும் தாண்டி, அது கிறிஸ்துவின் ராஜ்யத்தையும் குறிப்பிடுகிறது. மேசியாவின் ராஜ்யம் கிருபையின் ராஜ்யமாகும். அன்னாள் இதுவரையிலும் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பைப்பற்றியும், அவருடைய ஆளுகையைப்பற்றியும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னாள்.

பரிசுத்த வேதாகமத்தில் அன்னாளே முதன் முதலாக "மேசியா" என்னும் பெயரை பயன்படுத்துகிறாள். மேசியா என்னும் பெயருக்கு "தாம் அபிஷேகம் பண்ணினவர்" (1சாமு 2:10) என்று பொருள். அன்னாள் கர்த்தரைத் துதிக்கும்போது "கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்த்து, தாம் ஏற்படுத்தின ராஜாவுக்குப் பெலன் அளித்து, தாம் அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார்" (1சாமு 2:10) என்று அன்னாள் துதிக்கிறாள்.

அன்னாள் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசன வாக்கியத்திற்கு யூதமார்க்கத்து ரபீமார்களும், கிறிஸ்தவ மார்க்கத்து வேதபண்டிதர்களும் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அன்னாள் இங்கு சாமுவேலைப்பற்றியும், தாவீதைப்பற்றியும் சொன்னாலும், அவள் சொல்லுகிற தீர்க்கதரிசனம் தாவீதையும் தாண்டி, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்படுகிறது.

அன்னாள் மகிமையுள்ள காரியங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறாள். அவள் மத்தியஸ்தரின் ராஜ்யத்தைப்பற்றி பேசுகிறாள். நமக்கு முழுநிச்சயமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மேசியாவின் ராஜ்யத்தைப்பற்றியும் அன்னாள் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறாள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை பாதுகாப்பார். பராமரிப்பார். கர்த்தருடைய கரம் அவருடைய பிள்ளைகளோடு கூடயிருக்கும். "அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்" (1சாமு 2:9). கர்த்தர் அவர்களுடைய பாதங்களைக் காப்பார் என்றால், அவர் நிச்சயமாகவே அவர்களுடைய சிரசையும், இருதயங்களையும் காப்பார்.

கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களின் பாதங்களைக் காக்கும்போது, அவர்கள் காலூன்றி நிற்கிற ஸ்தலங்களையும் பாதுகாப்பார். அவர்கள் நிற்கிற இடம் சறுக்கலான இடமாகயிராமல், அது உறுதியான இடமாயிருக்கும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் போக்கையும் வரத்தையும் உறுதிப்படுத்துவார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும். அவருடைய கிருபையும் இரக்கமும் அவருடைய பிள்ளைகளை சூழ்ந்துகொள்ளும். கர்த்தருடைய பிள்ளைகள் இருளிலே இடறி விழமாட்டார்கள். அவர்களுடைய நடைகள் உறுதியாயிருக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக எழும்புகிற எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். அவருடைய பிள்ளைகளை எந்த சத்துருக்களாலும், எந்த அந்தகார வல்லமைகளாலும் மேற்கொள்ள முடியாது. கர்த்தருடைய பிள்ளைகளை சத்துருவின் வல்லமையினால் அழிக்க முடியாது. சத்துருக்கள் எல்லோரும் முறிந்துபோவார்கள். அவர்கள் அழிந்து கீழே விழுவார்கள். "துன்மார்க்கர் இருளிலே மௌனமாவார்கள். பெலத்தினால் ஒருவனும் மேற்கொள்வதில்லை" (1சாமு 2:9).

மேசியாவின் ராஜ்யம் இஸ்ரவேல் தேசத்திலே சிறிய அளவில் ஸ்தாபிக்கப்பட்டாலும், அது பூமி முழுவதற்கும் விஸ்தாரமாகப் பரவும். "கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்ப்பார்". தாவீது பல தேசங்கள்மீது யுத்தம்பண்ணி, அவற்றை தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார். அவர் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தார்.

பூமியின் கடையாந்தரங்களை ஆளுகை செய்யும் அதிகாரம் மேசியாவுக்கு வாக்குத்தத்தமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" *(சங் 2:8)*.

மேசியாவின் அதிகாரமும், வல்லமையும், மகிமையும் மேலும் மேலும் அதிகரிக்கும். "தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு கர்த்தர் பெலன் அளிப்பார்" மேசியா கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவார். அவர் இந்தப் பூமியின் கடையாந்தரங்களை, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நியாயந்தீர்ப்பார். கர்த்தர் இதற்கான பெலனையும் அதிகாரத்தையும் தம்முடைய ராஜாவுக்கு அளிப்பார்.

"என் கை அவனோடே உறுதியாயிருக்கும்; என் புயமும் அவனைப் பலப்படுத்தும்" *(சங் 89:21)*. "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" *(லூக் 22:43)*.

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பலப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் அநேக பாடுகளின் வழியாக மனத்தாழ்மையோடு கடந்து செல்வதற்கு பிதாவானவர் அவரைப் பலப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் உயர்த்தப்படும்போது பிதாவானவர் அவருடைய கரத்தை உயர்த்துகிறார். "வழியிலே அவர் நதியில் குடிப்பார்; ஆகையால் அவர் தமது தலையை எடுப்பார்" *(சங் 110:7)*.

"கர்த்தர் தாம் அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார்". பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவின் வல்லமையையும், மகிமையையும் உயர்த்துவார். "நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்" *(சங் 89:27)*.

ஏலியின் குடும்பம்
1சாமு 2:11-26

1சாமு 2:11. பின்பு எல்க்கானா ராமாவிலிருக்கிற தன் வீட்டுக்குப் போனான்; அந்தப் பிள்ளையோ, ஆசாரியனாகிய ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான்.

1சாமு 2:12. ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை.

1சாமு 2:13. அந்த ஆசாரியர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்றுகூறுள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து,

1சாமு 2:14. அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள்.

1சாமு 2:15. கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சிகொடு; பச்சை இறைச்சியே அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான்.

1சாமு 2:16. அதற்கு அந்த மனுஷன்: இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன்: அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக் கொள்ளுவேன் என்பான்.

1சாமு 2:17. ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள்.

1சாமு 2:18. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான்.

1சாமு 2:19. அவனுடைய தாய் வருஷந்தோறும் செலுத்தும் பலியைச் செலுத்துகிறதற்காக, தன் புருஷனோடேகூட வருகிறபோதெல்லாம், அவனுக்கு ஒரு சின்னச் சட்டையைத் தைத்துக் கொண்டு வருவாள்.

1சாமு 2:20. ஏலி எல்க்கானாவையும் அவன் மனைவியையும் ஆசீர்வதித்து: இந்த ஸ்திரீ கர்த்தருக்கொன்று ஒப்புக் கொடுத்ததற்குப் பதிலாகக் கர்த்தர் உனக்கு அவளாலே சந்தானம் கட்டளையிடுவாராக என்றான்; அவர்கள் தங்கள் ஸ்தானத்திற்குத் திரும்பப்போய்விட்டார்கள்.

1சாமு 2:21. அப்படியே கர்த்தர் அன்னாளைக் கடாட்சித்தார்; அவள் கர்ப்பந்தரித்து மூன்று குமாரரையும் இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள்; சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய சந்நிதியில் வளர்ந்தான்.

1சாமு 2:22. ஏலி மிகுந்த கிழவனாயிருந்தான்; அவன் தன் குமாரர் இஸ்ரவேலுக்கெல்லாம் செய்கிற எல்லாவற்றையும், அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூட்டங்கூடுகிற ஸ்திரீகளோடே சயனிக்கிறதையும் கேள்விப்பட்டு,

1சாமு 2:23. அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது என்ன? இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் பொல்லாத நடக்கைகளைச் சொல்லக்கேட்கிறேன்.

1சாமு 2:24. என் குமாரரே, வேண்டாம்; நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே.

1சாமு 2:25. மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள்; ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்வானேயாகில், அவனுக்காக விண்ணப்பஞ் செய்யத்தக்கவன் யார் என்றான்; அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போனார்கள்; அவர்களைச் சங்கரிக்கக் கர்த்தர் சித்தமாயிருந்தார்.

1சாமு 2:26. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான்.

இந்த வசனப்பகுதியில் எல்க்கானாவினுடைய குடும்பத்தாரின் நற்குணமும், ஏலியினுடைய குடும்பத்தாரின் தீயகுணமும் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் எல்க்கானாவையும் அவருடைய குடும்பத்தையும் ஆசீர்வதிக்கிறார். அவர்களுடைய முன்னிலைமையைவிட, பின்னிலைமை மிகவும் ஆசீர்வாதமாயிருக்கிறது.

ஏலி எல்க்கானாவையும் அவன் மனைவியையும் ஆசீர்வதிக்கிறார். சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்கிறார். எல்க்கானாவும் அன்னாளும், வருஷந்தோறும் சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலே பலியைச் செலுத்துவதற்காக வருவது வழக்கம். அப்போது அவர்கள் தங்கள் குமாரனாகிய சாமுவேலையும் பார்த்து, அவருக்கு ஒரு சின்ன சட்டையை கொண்டு வந்து கொடுப்பார்கள்.

ஏலி எல்க்கானாவையும் அன்னாளையும் ஆசீர்வதிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து தங்கள் ஸ்தானத்திற்கு திரும்பிப் போகிறார்கள். அன்னாள் தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய சாமுவேலை கர்த்தருக்காக அர்ப்பணித்திருக்கிறாள். அவளுடைய தியாகம் பெரியது. அன்னாளுக்கு ஏராளமான பிள்ளைகள் இருந்து, அந்தப் பிள்ளைகளில் ஒன்றை கர்த்தருக்கு அர்ப்பணிந்திருந்தால், அது பெரிய தியாகமாகயிருக்காது. ஆனால் அன்னாளோ, தனக்கு இருக்கிற ஒரே பேறான குமாரனையே கர்த்தருக்கு அர்ப்பணித்திருக்கிறாள்.

அன்னாளுடைய தியாகம் ஏலிக்கும் தெரிகிறது. ஏலி எல்க்கானாவையும் அன்னாளையும் கர்த்தருடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கிறார். "இந்த ஸ்திரீ கர்த்தருக்கொன்று ஒப்புக் கொடுத்ததற்குப் பதிலாகக் கர்த்தர் உனக்கு அவளாலே சந்தானம் கட்டளையிடுவாராக" (1சாமு 2:20) என்று ஏலி அன்னாளுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து தேவாலயத்திலிருந்தபோது, ஒரு ஏழை விதவை, தன்னிடத்திலிருந்ததையெல்லாம் காணிக்கைப்பெட்டியில் போட்டாள். இயேசுகிறிஸ்து அவளுடைய தியாகத்தைப் புகழ்ந்து பேசினார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, இஸ்ரவேலின் முற்பிதாவாகிய ஆபிரகாம், தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கை, கர்த்தருக்கு பலிசெலுத்த முன் வந்தார். கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை திரளாக பெருகச் செய்வதாக வாக்குப்பண்ணினார்.

"நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (ஆதி 22:16-18).

ஆபிரகாமைப்போலவே அன்னாளும், தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய சாமுவேலை கர்த்தருக்கென்று ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறாள். கர்த்தர் அன்னாளின் கர்ப்பத்தை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். அவள் கர்ப்பந்தரித்து மூன்று குமாரரையும் இரண்டு குமாரத்திகளையும் பெறுகிறாள் (1சாமு 2:21).

ஏலி எல்க்கானாவையும், அன்னாளையும் சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலே ஆசீர்வதிக்கிறார். அதன் பின்பு அவர்கள் தங்கள் ஸ்தானத்திற்கு திரும்பிப் போகிறார்கள். அவர்கள் இருவரும் தங்கள் ஊராகிய ராமாவிலுருந்து, கர்த்தருடைய ஆலயம் இருக்கிற சீலோவுக்கு பலிசெலுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். பலிகளை செலுத்தின பின்பு அவர்கள் ராமாவுக்குத் திரும்பிப்போகிறார்கள்.

அவர்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பிப்போனார்கள் என்று இரண்டு சம்பவங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "பின்பு எல்க்கானா ராமாவிருக்கிற தன் வீட்டிற்குப்போனான்" (1சாமு 2:11). "அவர்கள் தங்கள் ஸ்தானத்திற்கு திரும்பிப் போய்விட்டார்கள்" (1சாமு 2:20).

எல்க்கானாவும் அன்னாளும் வருஷந்தோறும் செலுத்தும் பலியை செலுத்துவதற்காக, அவர்கள் சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வருவது வழக்கம் (1சாமு 2:19). தங்கள் குமாரனாகிய சாமுவேல் கர்த்தருக்கு முன்பாக பணிவிடை செய்வதினால், தாங்கள் தேவாலயத்திற்கு வரவேண்டியதில்லை என்றோ, ஒவ்வொரு வருஷமும் அங்கே வந்து கர்த்தருக்கு வருஷாந்தர பலியை செலுத்த வேண்டியதில்லை என்றோ எல்க்கானா நினைக்கவில்லை. சாமுவேல் கர்த்தருக்கு முன்பாக பணிவிடை செய்தாலும் அவருடைய பெற்றோர் வருஷந்தோறும் பலி செலுத்துவதற்காக சீலோவிலுள்ள தேவாலயத்திற்கு வருகிறார்கள்.

ராமாவுக்கும் சீலோவுக்கும் இடையே பத்து மைல் தூரம் மாத்திரமே உள்ளது. ஆகையினால் சாமுவேலின் பெற்றோர் வருஷத்திற்கு ஒரு தரம் தான் அவரைப் பார்க்க வந்தார்கள் என்று சொல்ல முடியாது. தங்களுடைய பிள்ளையை எப்பொழுதெல்லாம் பார்க்கவேண்டுமென்று விரும்பினார்களோ, அப்பொழுதெல்லாம் எல்க்கானாவும் அன்னாளும் சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது.

ஆனாலும் இந்த வசனப்பகுதியில், அவர்கள் வருஷந்தோறும் கர்த்தருக்கு பலியிட வந்த சம்பவம் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்னாள் தன் புருஷன் எல்க்கானானோடு, சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்போதெல்லாம், சாமுவேலுக்கு ஒரு சின்ன சட்டையை தைத்துக்கொண்டு வருவாள்.

சாமுவேல் கர்த்தருக்கு முன்பாக பணிவிடை செய்து கொண்டிருக்கிறார். அவர் உண்மையும் உத்தமுமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார். சாமுவேலின் ஊழியத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"அந்தப் பிள்ளையோ, ஆசாரியனாகிய ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தான்" (1சாமு 2:11). "சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான்" (1சாமு 2:18).

சாமுவேல் ஏலிக்கு உதவியாக கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருக்கிறார். தேவாலயத்தின் விளக்கை ஏற்றுவது, தூபக்கரண்டிகளைப் பிடிப்பது, தேவாலயத்தின் கதவுகளைத் திறப்பது, அடைப்பது போன்ற வேலைகளில் சாமுவேல் ஏலிக்கு உதவியாகயிருக்கிறார். சாமுவேல் ஏலிக்கு உதவிசெய்தாலும், அவர் செய்கிற வேலை கர்த்தருக்கு செய்யும் பணிவிடை வேலையாகவே இருக்கிறது.

சாமுவேல் கர்த்தருக்கு பணிவிடை செய்வதினால், கர்த்தர் அவரை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். இந்த வசனப்பகுதியில், இரண்டு இடங்களில், கர்த்தர் சாமுவேலை ஆசீர்வதிக்கிற சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. "சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய சந்நிதியில் வளர்ந்தான்" (1சாமு 2:21). "சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான்" (1சாமு 2:26).

சாமுவேல் சரீர பெலத்திலும், வளர்த்தியிலும், ஆவிக்குரிய பெலத்திலும் வளர்ச்சி பெறுகிறார். அவர் ஞானத்திலும் அறிவிலும் விருத்தியடைகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் ஞானத்திலும் அறிவிலும் விருத்தியடைந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" *(லூக் 2:52)*.

ஏலியின் குடும்பத்திலோ சகலமும் மோசமாயிருக்கிறது. அவருடைய குடும்பத்தில் தீயகாரியங்கள் நடைபெறுகிறது. ஏலி கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்து வருகிறார். அவர் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே அமர்ந்திருக்கிறார். ஆனாலும் அவருடைய குடும்பத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லை. ஒரு சிலர் சபைக்கு அருகாமையிலிருப்பார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை விட்டுத் தூரமாய் விலகிப்போயிருப்பார்கள்.

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை *(1சாமு 2:12)*. ஏலியின் இரண்டு குமாரராகிய ஒப்னியும், பினகாசும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்தாலும், அவர்கள் கர்த்தரை அறியவில்லை.

ஏலி ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார். அவர் அங்கே இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார். ஏலியின் குமாரர்கள் இருவரும் ஊழிய ஸ்தானத்திலிருக்கிறார்கள். நியாயவிசாரணை நடைபெறுகிற ஸ்தலத்திலே தங்கியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இருவரும் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள்.

ஏலியின் குமாரருக்கு இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் மதிப்பும், மரியாதையும் இருந்திருக்கும். ஏலியின் செல்வாக்கு மூலமாக, அவருடைய பிள்ளைகளும் செல்வாக்காயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஏலியினுடைய அதிகாரத்தின் ஒரு பகுதி அவருடைய பிள்ளைகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும். இவர்கள் சாதாரண ஜனங்களைவிட, கர்த்தருடைய பிரமாணங்களை அதிகமாகப்படித்திருப்பார்கள். இவையெல்லாம் அவர்களுக்கு நற்குணத்தைக் கொடுப்பதற்கு பதிலாக, தீயகுணத்தையே கொடுத்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய மக்களாயிராமல் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகாராதனையும், கர்த்தருக்கு விரோதமாய் துன்மார்க்கமாகயிருப்பதும் அதிகரித்திருக்கிறது. கர்த்தருடைய பார்வையிலே விக்கிரகாராதனை பெரிய பாவமா அல்லது துன்மார்க்கமான ஜீவியம் பெரிய பாவமா என்று தீர்மானிப்பது சிரமம். ஆனாலும் ஆசாரியருடைய பிள்ளைகள் துன்மார்க்கமாய் ஜீவிப்பது கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாயிருக்கிறது.

ஏலியின் குமாரர்கள் இரண்டு பேரும் கர்த்தருக்கு படைக்கப்படும் பலிகளைத் தீட்டுப்படுத்துகிறார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் தங்களுடைய சுயஆதாயத்தைத் தேடக்கூடாது. கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதே அவர்களுடைய ஊழியமாயிருக்கவேண்டும். ஆனால் ஏலியின் குமாரர் இருவரும் தங்களுடைய சுகபோக ஜீவியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தருக்கு செலுத்தப்படும் பலிகளை தாங்கள் திருப்தியாய்ப் புசிக்கவேண்டும் என்று பேராசைப்படுகிறார்கள்.

கர்த்தருக்காக பலிசெலுத்துகிறவர்கள், தங்கள் பலிகளை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரும்போது, ஏலியின் குமாரர் அவற்றை தங்களுக்கென்று வாங்கிக்கொள்வார்கள்.

"அந்த ஆசாரியர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்றுகூறுள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள்" *(1சாமு 2:13,14)*.

ஏலியின் குமாரர் இவ்வாறு செய்வது, கர்த்தருக்கு செலுத்தப்படும் பலியை கொள்ளையிடுவதற்கு சமம். கர்த்தர் ஆசாரியருக்கென்று பலியில் ஒரு பங்கை நியமித்திருக்கிறார். அசைவாட்டப்படும் மார்க்கண்டத்தில் ஆசாரியருக்கும் லேவியருக்கும் ஒரு பங்குள்ளது.

"இஸ்ரவேல் புத்திரரின் சமாதான பலிகளில் அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப்படைக்கும் முன்னந்தொடையையும் நான் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குள் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன் என்று சொல் என்றார்" *(லேவி 7:34)*.

ஆனால் லேவியின் புத்திரரோ தங்களுக்கு கொடுக்கப்படும் பங்கில் திருப்தியடையவில்லை. தங்களுக்கு அதிகபங்கு வேண்டுமென்று பேராசைப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலிசெலுத்தும்போது, கர்த்தர் அந்தப் பலியை அங்கீகரிப்பதற்கு முன்பாகவே, ஏலியின் புத்திரர், அந்தப் பலியை தங்களுக்கென்று எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உரிமையில் தலையிடுகிறார்கள்.

"அப்பொழுது ஏசாயா: தாவீதின் வம்சத்தாரே, கேளுங்கள்; நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்தப் பார்க்கிறீர்களோ?" *(ஏசா 7:13)*.

"கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சிகொடு; பச்சை இறைச்சியே அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன்: இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன்: அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக் கொள்ளுவேன் என்பான்" *(1சாமு 2:15,16)*.

ஏலியின் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக பாவம் செய்கிறார்கள். அவர்கள் வாலிபர்கள். தங்கள் தகப்பனாராகிய ஏலிக்கு உதவியாக, அவர்கள் இருவரும் கர்த்தருக்கு பணிவிடை செய்யவேண்டும். ஆனால் ஏலியின் புத்திரரோ, கர்த்தருக்கு பணிவிடை செய்யாமல், கர்த்தருக்கு செலுத்தப்படும் பலியை களவாடுகிறார்கள்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருக்கிறது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணுகிறார்கள் *(1சாமு 2:17)*.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே ஏலியின் புத்திரர் பாவம் செய்தாலும், சாமுவேலோ, ஆசாரியனாகிய ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருக்கிறார். ஏலியின் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியிலே பாவம் செய்கிறார்கள். சாமுவேலோ கர்த்தருடைய சந்நிதியிலே பணிவிடை செய்கிறார். ஏலியின் புத்திரருடைய அக்கிரமமான செய்கைகளைப் பார்த்து, இஸ்ரவேல் மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணுகிறார்கள். ஆனாலும் அவர்கள் ஏலி, சாமுவேல் ஆகியோரின் ஊழியத்தைப் பார்த்து, கர்த்தருடைய ஆலயத்திற்கு பலிகளை செலுத்துவதற்காக தொடர்ந்து வருகிறார்கள்.

ஏலி மிகுந்த கிழவனாயிருக்கிறார்; அவருடைய குமாரர் இருவரும் இஸ்ரவேலுக்கெல்லாம் தீங்கு செய்கிறார்கள். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூட்டங்கூடுகிற ஸ்திரீகளோடே சயனிக்கிறார்கள் *(1சாமு 2:22)*.

ஏலி தன்னுடைய குமாரர் இருவரும் செய்கிற பாவங்களையும் அக்கிரமங்களையும் கேள்விப்படுகிறார். அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமாய் ஏலி அவர்களைக் கடிந்துகொள்கிறார். ஆனால் ஏலியோ மிகுந்த கிழவனாயிருக்கிறார். அவரால் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை வேலைகளை ஊக்கமாய்ச் செய்ய முடியவில்லை. ஏலி தன்னுடைய ஊழியப்பொறுப்புக்களை தன் குமாரரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

தங்களுடைய கையில் ஊழியப்பொறுப்பு வந்தவுடன், ஏலியின் குமாரர் இருவரும் அதிகமாய் துன்மார்க்கம் பண்ணுகிறார்கள். தாங்கள் செய்ய ஆசைப்படுகிற எல்லாவற்றையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே செய்கிறார்கள். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே கூட்டங்கூடுகிற ஸ்திரீகளோடே சயனிக்கிறார்கள். அவர்களுடைய துன்மார்க்கமான இந்த கிரியையை ஏலி கேள்விப்பட்டு, அவர் தன்னுடைய இரண்டு குமாரரையும் கடிந்துகொள்கிறார்.

ஏலி தன்னுடைய குமாரரைக் கடிந்துகொள்வது நியாயமானது. அது நீதியானது. அவர் தன்னுடைய பிள்ளைகளிடம் யதார்த்தமாய்ப் பேசுகிறார். ஏலி தன்னுடைய குமாரரை நோக்கி, "நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களை செய்கிறது என்ன" (1சாமு 2:23) என்று கேட்கிறார். ஏலி சொல்லுவதை அவருடைய குமாரர்களால் மறுக்க முடியாது. அவர் ஒளிவுமறைவில்லாமல், தெளிவாகவும் வெளிப்படையாகவும் பேசுகிறார். ஏலி தன் பிள்ளைகளைப்பற்றி கேள்விப்பட்டதை அவர்களிடத்தில் சொல்லுகிறார். "இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் பொல்லாத நடக்கைகளை சொல்லக்கேட்கிறேன்" என்று ஏலி தன் குமாரரிடம் மனவேதனையோடு சொல்லுகிறார்.

ஏலியின் குமாரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரியதாயிருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். ஏலியின் குமாரருக்கு, தங்கள் பாவத்தின் விளைவு எப்படியிருக்கும் என்பது தெரியவில்லை. ஏலியின் குமாரரும் பாவம் செய்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களையும் பாவம் செய்ய வழிநடத்துகிறார்கள். "கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்கு காரணமாயிருக்கிறீர்களே" (1சாமு 2:24) என்று ஏலி தன் குமாரரிடத்தில் சொல்லுகிறார்.

ஏலியின் குமாரர் தாங்கள் பாவம் செய்வதோடு, மற்றவர்களையும் பாவத்திலே வழிநடத்துகிறார்கள். ஏலி தன் குமாரரிடத்தில், "என் குமாரரே, வேண்டாம், நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல" என்று சொல்லுகிறார். அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாய், அவர்களுக்கு வரப்போகும் தண்டனைகளையும் ஏலி அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

"மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள்; ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்வானேயாகில், அவனுக்காக விண்ணப்பஞ்செய்யத்தக்கவன் யார்" (1சாமு 2:25) என்று ஏலி தன் குமாரரிடத்தில் கேட்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போகிறார்கள்; அவர்களைச் சங்கரிக்கக் கர்த்தர் சித்தமாயிருக்கிறார்.

ஏலியின் குடும்பத்தார் செய்கிற அக்கிரமம் மிகவும் பெரியதாயிருக்கிறது. அந்த அக்கிரமத்தை பலியினாலாவது, காணிக்கையினாலாவது நிவிர்த்தி பண்ண முடியாது என்று கர்த்தரும் ஏலியின் குடும்பத்தைக் குறித்து ஆணையிட்டிருக்கிறார் (1சாமு 3:14).

ஏலி தன் குமாரரை மென்மையாகக் கடிந்துகொள்கிறார். அவர் தன்னுடைய குமாரருக்கு விரோதமாக கடினமான வார்த்தைகளைப் பேசவேண்டும். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரியதாயிருப்பதினால், ஏலி தன்னுடைய குமாரரை கடின வார்த்தைகளினால் கடிந்துகொள்ளவேண்டும். ஆனால் ஏலியோ தன் குமாரருக்கு விரோதமாக கடின வார்த்தைகளைப் பேசாமல், மென்மையான வார்த்தைகளையே பேசுகிறார்.

ஏலி தன் குமாரரை கடினமாய் கடிந்துகொள்ளாததினால், அவர்கள் இருவரும் தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பவில்லை. அவர்கள் தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமல் போகிறார்கள். ஏலி சொல்லுவது அவர்களுடைய இருதயத்தை உணர்த்தவில்லை. ஏலி மென்மையாகப் பேசுவது, அவருடைய குமாரரின் இருதயத்தைக் கடினப்படுத்துகிறது. ஏலி தன்னுடைய குமாரருக்கு விரோதமாக சரியான வார்த்தைகளையே பேசுகிறார். ஆனால் அந்த வார்த்தைகளை அவர் எப்படி பேசவேண்டுமோ அப்படி பேசவில்லை. தன் குமாரரிடத்தில் அவர் கடினமாய்ப் பேசாமல், மென்மையாகப் பேசுகிறார்.

கர்த்தர் ஏலியின் குமாரரை சங்கரிக்க சித்தமாயிருக்கிறார். ஏலியின் குமாரரும் தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமல், தங்களுடைய பாவங்களிலும் அக்கிரமங்களிலும் தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். ஏலி இஸ்ரவேலுக்கு நியாயாதிபதியாயிருந்தாலும், அவருடைய குமாரர் இருவரும் ஏலியின் சொல்லைக் கேட்கவில்லை.

இந்த வசனப்பகுதியில் சாமுவேலின் ஊழியத்தைப்பற்றி மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொள்கிறார் (1சாமு 2:26).

தேவனுடைய கிருபை அவருக்கே சொந்தமானது. அவர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தமக்கு இஷ்டமானவர்களுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். ஏலி பிரதான ஆசாரியனாகயிருந்தாலும், கர்த்தர் ஏலியின் குமாரருக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்த மறுத்துவிடுகிறார். சாமுவேல் ராமா என்னும் ஒரு கிராமப்பகுதியிலிருந்து வந்திருக்கிற, சாதாரண லேவியனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவராகயிருந்தாலும், கர்த்தர் சாமுவேலுக்கு தம்முடைய கிருபையைக் காண்பிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை 1சாமு 2:27-36

1சாமு 2:27. தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியினிடத்தில் வந்து: கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், உன் பிதாவின் வீட்டார் எகிப்திலே பார்வோனின் வீட்டில் இருக்கையில், நான் என்னை அவர்களுக்கு வெளிப்படுத்தி,

1சாமு 2:28. என் பலிபீடத்தின்மேல் பலியிடவும், தூபங்காட்டவும், என் சமுகத்தில் ஏபோத்தைத் தரிக்கவும், இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் அவனை எனக்கு ஆசாரியனாகத் தெரிந்து கொண்டு, உன் பிதாவின் வீட்டாருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய தகனபலி களையெல்லாம் கொடுக்கவில்லையா?

1சாமு 2:29. என் வாசஸ்தலத்திலே செலுத்தும்படி, நான் கட்டளையிட்ட என் பலியையும், என் காணிக்கையையும், நீங்கள் உதைப்பானேன்? என் ஜனமாகிய இஸ்ரவேலின் காணிக்கைகளிலெல்லாம் பிரதானமானவைகளைக்கொண்டு உங்களைக் கொழுக்கப்பண்ணும்படிக்கு, நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன் என்கிறார்.

1சாமு 2:30. ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லி யிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக; என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

1சாமு 2:31. உன் வீட்டில் ஒரு கிழவனும் இராதபடிக்கு உன் புயத்தையும் உன் பிதாவின் வீட்டாருடைய புயத்தையும் நான் தறித்துப்போடும் நாட்கள் வரும்.

1சாமு 2:32. இஸ்ரவேலுக்குச் செய்யப்படும் சகல நன்மைக்கும் மாறாக என் வாசஸ்தலத்திலே உபத்திரவத்தைக் காண்பாய்; ஒருபோதும் உன் வீட்டில் ஒரு கிழவனும் இருப்பதில்லை.

1சாமு 2:33. என் பலிபீடத்தில் சேவிக்க, நான் உன் சந்நிதியில் நிர்மூலமாக்காதவர்களோ, உன் கண்களைப் பூத்துப்போகப்பண்ணவும், உன் ஆத்துமாவை வேதனைப் படுத்தவும் வைக்கப்படுவார்கள்; உன் வம்சத்திலுள்ள யாவரும் வாலவயதிலே சாவார்கள்.

1சாமு 2:34. ஒப்னி பினெகாஸ் என்னும் உன் இரண்டு குமாரரின்மேல் வருவதே உனக்கு அடையாளமாயிருக்கும்; அவர்கள் இருவரும் ஒரேநாளில் சாவார்கள்.

1சாமு 2:35. நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்; அவன் என்னால் அபிஷேகம்பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான்.

1சாமு 2:36. அப்பொழுது உன் வீட்டாரில் மீதியாயிருப்பவன் எவனும் ஒரு வெள்ளிப் பணத்துக்காகவும் ஒரு அப்பத்துணிக்கைக்காகவும் அவனிடத்தில் வந்து பணிந்து: நான் கொஞ்சம் அப்பம் சாப்பிட யாதொரு ஆசாரிய ஊழியத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ளும் என்று கெஞ்சுவான் என்று சொல்லுகிறார் என்றான்.

ஏலி தன்னுடைய குமாரரை மென்மையாகக் கடிந்துகொள்கிறார். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரியதாயிருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று ஏலி தன் குமாரரை எச்சரிக்கவில்லை. அவர் தன்னுடைய இரண்டு குமாரரையும் கடினமான வார்த்தைகளினால் கண்டிக்கவில்லை. ஆகையினால் ஏலியையும், அவருடைய குடும்பத்தாரையும் கண்டிப்பதற்கு கர்த்தர் தம்முடைய மனுஷன் ஒருவரை அனுப்புகிறார்.

தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியினிடத்தில் வந்து கர்த்தர் உரைக்கிற வார்த்தையை அவருக்கு சொல்லுகிறார். தேவனுடைய மனுஷன் ஏலியின் குமாரரிடத்தில் வராமல் ஏலியினிடத்தில் வருகிறார். ஏலி தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், அவ்வாறு அவர் மனந்திரும்பும்போது அவரை இரட்சிக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. ஏலியின் குமாரர்களையோ சங்கரிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது *(1சாமு 2:25)*.

கர்த்தர் ஏலியின் முற்பிதாவின் வீட்டாருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் அநேக நன்மைகளை செய்திருக்கிறார். எகிப்து தேசத்திலே கர்த்தர் ஆரோனுக்கு தம்மை வெளிப்படுத்தினார்.

"கர்த்தர் ஆரோனை நோக்கி: நீ வனாந்தரத்தில் மோசேக்கு எதிர்கொண்டுபோ என்றார். அவன் போய், தேவபர்வதத்தில் அவனைச் சந்தித்து, அவனை முத்தஞ்செய்தான்" *(யாத் 4:27)*.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். அப்போது கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இரக்கம் காண்பித்தார். ஆரோனுடைய குடும்பத்தாருக்கு விசேஷித்த கிருபைகளையும், சிலாக்கியங்களையும் வெளிப்படுத்தினார். கர்த்தர் தம்முடைய தூதன் மூலமாய், ஏலியின் முற்பிதாவின் வீட்டாருக்கு செய்த நன்மைகளை அவருக்கு நினைவுபடுத்துகிறார்.

தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியினிடத்தில் வந்து: "கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், உன் பிதாவின் வீட்டார் எகிப்திலே பார்வோனின் வீட்டில் இருக்கையில், நான் என்னை அவர்களுக்கு வெளிப்படுத்தி, என் பலி பீடத்தின்மேல் பலியிடவும், தூபங்காட்டவும், என் சமுகத்தில் ஏபோத்தைத் தரிக்கவும், இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் அவனை எனக்கு ஆசாரியனாகத் தெரிந்து கொண்டு, உன் பிதாவின் வீட்டாருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய தகனபலிகளையெல்லாம் கொடுக்கவில்லையா?" *(1சாமு 2:27,28)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆரோனை தம்முடைய ஆசாரிய ஊழியத்திற்காக தெரிந்துகொள்கிறார். ஆரோனையும், அவருடைய குடும்பத்தாரையும் தமக்கு ஆசாரியராகத் தெரிந்துகொண்டு அவர்களை உயர்த்துகிறார். இதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரரின் குடும்பங்களிலே, ஆசாரியரின் குடும்பங்கள் விசேஷித்ததாகவும், மேன்மை பெற்றதாகவும் இருக்கிறது.

கர்த்தர் ஆரோனை தம்முடைய ஆசாரியனாகத் தெரிந்துகொண்டு, அவருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய தகனபலிகளையெல்லாம் கொடுத்தார். ஆசாரிய ஊழியம் ஆரோனின் குடும்பத்தாருக்குரியது. ஆரோனின் வீட்டார் எல்லோருமே கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஏலி ஆரோனுடைய குடும்பத்திலே வந்தவராகயிருந்தாலும், ஏலியின் புத்திரர் இருவரும் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஆசாரிய குடும்பத்திலே பிறந்தவர்களாகயிருந்தாலும், அவர்கள் துன்மார்க்கராயும், பாவிகளாயும் இருக்கிறார்கள். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியில் பெரியதாயிருக்கிறது.

ஏலியின் குமாரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், தேவனுடைய மனுஷன் அந்தப் பாவத்தை, ஏலியின் குமாரரிடத்தில் விசாரியாமல், ஏலியினிடத்தில் நேரடியாக விசாரிக்கிறார். "என் வாசஸ்தலத்திலே செலுத்தும்படி நான் கட்டளையிட்ட என் பலியையும், என் காணிக்கையையும், நீங்கள் உதைப்பானேன்? என் ஜனமாகிய இஸ்ரவேலின் காணிக்கைகளிலெல்லாம் பிரதானமானவைகளைக்கொண்டு உங்களைக் கொழுக்கப்பண்ணும்படிக்கு, நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்" (1சாமு 2:29) என்று கர்த்தர் தம்முடைய தூதன் மூலமாய் ஏலியினிடத்தில் கேட்கிறார்.

ஏலியின் குமாரர் கர்த்தருடைய பலியையும், அவருடைய காணிக்கையையும் தீட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள் கர்த்தரை அறியாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய காணிக்கையையும் பலியையும் உதைக்கிறார்கள்.

ஏலி தன் குமாரருடைய பாவங்களின் நிமித்தமாய் அவர்களை கடினமாய்த் தண்டியாமல், மென்மையாய்த் தண்டிக்கிறார். ஏலி தன் குமாரருக்கு, கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். தண்டனை பெரிதாயிருக்கவேண்டும். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியிலே பெரிதாயிருப்பதினால், அவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையும் பெரிதாயிருக்கவேண்டும். ஆனால் ஏலியோ கர்த்தரைப் பார்க்கிலும், தன் குமாரரை மதிக்கிறார்.

கர்த்தருக்கு செலுத்தப்படும் பலியை ஏலியின் குமாரர் களவாடுகிறார்கள். அந்த திருட்டிலே ஏலியின் குடும்பத்தார் எல்லோருக்குமே பங்கு இருக்கிறது. ஜனங்கள் கர்த்தருக்குப் பலிசெலுத்தும்போது, ஏலியின் குமாரர் பொரிக்கும்படியாக பச்சை இறைச்சியை எடுத்துக்கொள்கிறார்கள். இந்த இறைச்சியை ஏலியும் புசித்திருக்கவேண்டும். ஏலியின் குமாரர் பலியையும் காணிக்கையையும் திருடியதை, ஏலியும் அனுபவித்திருக்கவேண்டும்.

ஏலியின் குமாரர் பலியாக செலுத்தப்படும் மாம்சத்தை திருடிக்கொள்வதை ஏலி விரும்பவில்லை. அவர்களை மென்மையாகக் கண்டிக்கிறார். அதே வேளையில், ஏலி, தன்னுடைய குமாரர் திருடின மாம்சத்தை புசித்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஏலியின் குமாரரைப்போலவே, ஏலியும் கொழுப்பை தகனிக்கிறதற்கு முன்பே, அதன் பச்சை இறைச்சியை எடுத்து பொரித்து புசித்திருக்கவேண்டும். ஏலியின் குமாரர் பச்சை இறைச்சியை அல்லாமல் அவித்ததை ஜனங்களின் கையிலிருந்து வாங்குவதில்லை. அந்தப் பச்சை இறைச்சியில் ஏலியும் பங்குபெற்றிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இதனால் தேவனுடைய மனுஷன் ஏலியினிடத்தில் நேரடியாக வந்து கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார்.

ஏலியின் குமாரர் செய்த பாவங்களினிமித்தமாக, ஆசாரிய ஊழியம் ஏலியின் குடும்பத்தாரிடமிருந்து, எடுத்துக்கொள்ளப்படும். தேவனுடைய மனுஷன் ஏலியிடம், "உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக; என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்" (1சாமு 2:30) என்று கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார்.

ஆரோனின் இளைய குமாரனாகிய இத்தாமாரின் வம்சத்திலே ஏலியின் குடும்பத்தார் வந்திருக்கிறார்கள். கர்த்தர் ஏலியிடம், "உன் வீட்டாரும், உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள்" என்று நிச்சயமாய் சொல்லியிருந்தார்.

கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக பிரதான ஆசாரியருடைய ஊழியம் எலெயாசாரின் குடும்பத்தாரிடமிருந்து, இத்தாமாரின் குடும்பத்தாருக்கு கடந்து வந்திருக்கிறது. கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால் ஏலியும், ஆசரிப்புக்கூடாரத்திலே பிரதான ஆசாரியராய் ஊழியம் செய்கிறார்.

கர்த்தருக்கு பிரதான ஆசாரியராயிருக்கிறவர், கர்த்தருடைய சந்நிதியிலே என்றென்றைக்கும் நடக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாயும், பரிசுத்தமாயும் செய்யவேண்டும். "என் சந்நிதியில் நடந்துகொள்வார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "என் சமுகத்திற்கு முன்பாக பரிசுத்தமாய் பணிவிடை செய்வார்கள்" என்பது பொருளாகும்.

கர்த்தர் ஆரோனின் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். இந்த உடன்படிக்கைக்கு, ஆரோனின் குடும்பத்தார் கர்த்தருடைய சந்நிதியிலே உண்மையுள்ளவர்களாயும், பரிசுத்தமுள்ளவர்களாயும் நடந்துகொள்ளவேண்டும் என்பது முக்கியமான நிபந்தனையாகும்.

"ஆபிராம் தொண்ணூற்றென்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வல்லமையுள்ள தேவன்: நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப் பண்ணுவேன் என்றார்" (ஆதி 17:1,2).

ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள், கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக பரிசுத்தமாய் நடந்து கொள்ளவில்லையென்றால், ஆசாரிய ஊழியம் அவர்களிடத்திலிருந்துபறித்துக்கொள்ளப்படும். அவர்கள் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள். தம்மை கனம்பண்ணுகிறவர்களை மாத்திரமே கர்த்தர் கனம்பண்ணுவார். கர்த்தரை அசட்டைபண்ணுகிறவர்களோ கனஈனப்படுவார்கள்.

"நீர் என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்" (சங் 41:12).

கர்த்தர் ஏலியிடம், "உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக" (1சாமு 2:30) என்று சொல்லுகிறார். ஏலி கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார். ஆகையினால் கர்த்தருடைய ஆசீர்வாதமும் உடன்படிக்கையும் ஏலியைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறது.

ஏலி கர்த்தருடைய சந்நிதியிலே எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடக்கவில்லை. ஆகையினால் கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையின் பிரகாரம் அவரை எப்படி ஆசீர்வதிக்கவேண்டுமோ, அப்படி ஆசீர்வதிக்கவில்லை. ஏலியையும், அவருடைய குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பது, "இனி எனக்கு தூரமாயிருப்பதாக" என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார்.

கர்த்தருடைய வார்த்தையும் கிரியையும் நீதியுள்ளது. அவர் சத்தியமுள்ள தேவன். கர்த்தர் காரணமில்லாமல் யாரையும் தண்டிக்கிறவரல்ல. கர்த்தர் ஏலியிடம் கடினமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். ஏலிக்கு கர்த்தருடைய ஆளுகையும், அவருடைய பிரமாணமும், உடன்படிக்கையும், உடன்படிக்கையின் நிபந்தனைகளும் தெரிந்திருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய நீதியின் பிரகாரமாக கிரியை நடப்பிக்கிறவர்.

கர்த்தர் காயீனுக்கு சொன்ன வார்த்தை, எல்லா மனுஷருக்கும் பொதுவானது. "நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்" (ஆதி 4:7).

"என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்" (1சாமு 2:30) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென்றால், நாம் கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். நம்முடைய சுயசித்தத்தையும், சுயவிருப்பத்தையும் நாடாமல், கர்த்தருடைய விருப்பத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றுவதையே நாம் நாடவேண்டும்.

நாம் கர்த்தரைப் பின்பற்றும்போது, நம்மை நாமே வெறுத்து, நம்முடைய சிலுவையை சுமக்க நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள், தங்களுக்கு விருப்பமான பாதைகளில் செல்லாமல், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்ல ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும், அவருடைய வாக்குத்தத்தையும் சார்ந்து ஜீவிக்கும்போது, கர்த்தருடைய வாக்குத்தத்தம் நம்முடைய ஜீவியத்திலே சித்திக்கும். நம்முடைய ஜீவியத்திலே நாம் கர்த்தரைக் கனம்பண்ணும்போது, கர்த்தரும் நம்மைக் கனம்பண்ணுவார்.

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா 12:26).

தேவனுடைய மனுஷன் ஏலியின் குடும்பத்தார்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பை இந்த வசனப்பகுதியில் வெளிப்படுத்துகிறார். "உன் வீட்டில் ஒரு கிழவனும் இராதபடிக்கு உன் புயத்தையும் உன் பிதாவின் வீட்டாருடைய புயத்தையும் நான் தறித்துப்போடும் நாட்கள் வரும்" (1சாமு 2:31) என்று தேவதூதன் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை ஏலிக்கு அறிவிக்கிறார்.

ஏலி இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதியாகவும், கர்த்தருடைய ஆலயத்திலே பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார். கர்த்தர் ஏலிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் அதிகாரத்தைக் கொடுத்து அவர்களை உயர்த்தியிருக்கிறார். தாம் ஏலியின் குடும்பத்தாருக்கு கொடுத்த அதிகாரத்தை, அவர்களிடத்திலிருந்து பறித்துக்கொள்ளப்போவதாக கர்த்தர் சொல்லுகிறார். "உன் புயத்தையும், உன் பிதாவின் வீட்டாருடைய புயத்தையும் நான் தறித்துப்போடும் நாட்கள் வரும்" என்று கர்த்தர் ஏலியினிடத்தில் சொல்லுகிறார்.

ஏலியின் குடும்பத்தார் இனிமேல் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே பிரதான ஆசாரியராக ஊழியம் செய்யமாட்டார்கள். அவர்களுடைய ஆயுசுகாலமும் குறைந்துபோகும். கர்த்தர் இந்த நியாயத்தீர்ப்பை ஏலிக்கு இரண்டு தரம் சொல்லுகிறார். "உன் வீட்டில் ஒரு கிழவனும் இராத நாட்கள் வரும்" (1சாமு 2:31) என்றும், "ஒருபோதும் உன் வீட்டில் ஒரு கிழவனும் இருப்பதில்லை" (1சாமு 2:32) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஏலியும் அவருடைய குடும்பத்தாரும் கர்த்தருடைய வாசஸ்தலத்திலே இனிமேல் நன்மைகளை காணமாட்டார்கள். கர்த்தர் ஏலியிடம், "இஸ்ரவேலுக்குச் செய்யப்படும் சகல நன்மைக்கும் மாறாக என் வாசஸ்தலத்திலே உபத்திரவத்தைக் காண்பாய்" (1சாமு 2:32) என்று சொல்லுகிறார்.

ஏலியும் அவருடைய குடும்பத்தாரும் இதுவரையிலும் அனுபவித்து வந்த எல்லா ஆசீர்வாதங்களும் அவர்களைவிட்டு நீங்கிப்போகும். அவர்கள் இனிமேல் கர்த்தருடைய பலிபீடத்திலே சேவிக்கமாட்டார்கள். அவர்களுடைய கண்கள் பூத்துப்போகும். அவர்களுடைய ஆத்துமா வேதனைப்படும்.

கர்த்தர் ஏலிக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்புக்களை தொடர்ந்து சொல்லுகிறார். "என் பலிபீடத்தில் சேவிக்க, நான் உன் சந்நிதியில் நிர்மூலமாக்காதவர்களோ, உன் கண்களைப் பூத்துப்போகப்பண்ணவும், உன் ஆத்துமாவை வேதனைப்படுத்தவும் வைக்கப்படுவார்கள்; உன் வம்சத்திலுள்ள யாவரும் வாலவயதிலே சாவார்கள்" (1சாமு 2:33) என்று கர்த்தர் ஏலியிடம் சொல்லுகிறார்.

ஏலியும் அவருடைய குடும்பத்தாரும் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே இதுவரையிலும் அநேக நன்மைகளை அனுபவித்து வருகிறார்கள். கர்த்தருடைய பலிபீடத்திலே செலுத்தப்படும் பலிகளிலும் காணிக்கைகளிலும் ஏலியின் குடும்பத்தாருக்கு பங்கு வருகிறது. கர்த்தருடைய ஆலயத்தின் ஐசுவரியத்தையும், செழிப்பையும் ஏலியும் அவருடைய குடும்பத்தாரும் அனுபவித்து வருகிறார்கள்.

ஏலியும் அவருடைய குடும்பத்தாரும், கர்த்தருடைய வாசஸ்தலத்திலே இனிமேல் நன்மையைக் காணமாட்டார்கள். நன்மைக்குப் பதிலாக உபத்திரவத்தைக் காண்பார்கள். "உபத்திரவம்" என்னும் வார்த்தைக்கு "சத்துரு" என்றும் பொருள் சொல்லலாம். கர்த்தர் இங்கு சொல்லுகிற வார்த்தை, பெலிஸ்தியர் இஸ்ரவேல் தேசத்தாரோடு யுத்தம்பண்ணியபோது நிறைவேறிற்று.

"எபிரெயர் பட்டயங்களையாகிலும் ஈட்டிகளையாகிலும் உண்டுபண்ணாதபடிக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று பெலிஸ்தர் சொல்லியிருந்தபடியால், இஸ்ரவேல் தேசத்தில் எங்கும் ஒரு கொல்லன் அகப்படவில்லை" (1சாமு 13:19).

கர்த்தருடைய சாபம் ஏலியின்மீதும், அவருடைய வம்சத்தின்மீதும் வந்து பலிக்கிறது. கர்த்தர் ஏலியிடம், "உன் வம்சத்திலுள்ள யாவரும் வாலவயதிலே சாவார்கள்" (1சாமு 2:33) என்று சொல்லுகிறார். ஏலியின் குடும்பத்தாருக்கு சரீர ஆரோக்கியம் இருக்காது. அவர்களுக்கு பூரண ஆயுசும் இருக்காது. அவர்கள் ஜீவிக்கிற நாளெல்லாம், தங்கள் குடும்பத்திற்கு பாரமாயிருப்பார்கள். அவர்கள் மூலமாய் குடும்பத்திற்கு சந்தோஷமுண்டாகாது. அவர்களால் வேதனையும், வியாகுலமும் உண்டாகும்.

செத்துப்போன பிள்ளைக்காக அந்தப் பிள்ளையின் குடும்பத்தார் துக்கங்கொண்டாடுவார்கள். அதற்காக வேதனைப்படுவார்கள். வருத்தப்படுவார்கள். அதே வேளையில் ஒரு பிள்ளை உயிரோடிருக்கும்போது, அது கெட்ட பிள்ளையாகவும், துன்மார்க்கமான பிள்ளையாகவும் ஜீவிக்கும்போது, அந்தப் பிள்ளையின் மூலமாய் வரும் துக்கமும், வேதனையும், வருத்தமும் மிகவும் அதிகமாயிருக்கும்.

ஏலியும் அவருடைய குடும்பத்தாரும், இப்போது இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே உயர்ந்த அந்தஸ்திலே இருக்கிறார்கள். அவர்கள் ஐசுவரியமும், அதிகாரமும் மிகுந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஐசுவரியம் தரித்திரரமாய் மாறிப்போகும். அவர்களுடைய செல்வாக்கு அவர்களைவிட்டு நீங்கிப்போகும். கர்த்தர் ஏலியின்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லும்போது, ஏலியின் வீட்டார், இனிமேல் வரப்போகிற காலத்திலே அனுபவிக்கப்போகிற தரித்திரத்தையும், வேதனைகளையும், துக்கங்களையும் இங்கே வெளிப்படுத்துகிறார்.

"அப்பொழுது உன் வீட்டாரில் மீதியாயிருப்பவன் எவனும் ஒரு வெள்ளிப் பணத்துக்காகவும் ஒரு அப்பத்துணிக்கைக்காகவும் அவனிடத்தில் வந்து பணிந்து: நான் கொஞ்சம் அப்பம் சாப்பிட யாதொரு ஆசாரிய ஊழியத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ளும் என்று கெஞ்சுவான்" (1சாமு 2:36) என்று கர்த்தர், தம்முடைய தூதன் மூலமாய், ஏலிக்கு சொல்லுகிறார்.

ஏலியின் வீட்டாரில் மீதமாயிருக்கிறவர்கள் தரித்திரராயிருப்பார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் சந்தோஷம் இருக்காது. அவர்களுக்கு போதுமான போஜனம் கிடைக்காது. அவர்கள் அப்பத்தாழ்ச்சியினால் வேதனைப்படுவார்கள். பட்டினி கிடப்பார்கள்.

ஏலியின் குடும்பத்தில் மீதமாயிருக்கிறவர்கள் கொஞ்சம் அப்பத்திற்காக மற்றவர்களிடம் பிச்சை எடுப்பார்கள். "கொஞ்ச அப்பம்" என்னும் வார்த்தைக்கு "ஒரு அப்பத்துணிக்கை" என்று பொருள். ஏலியின் புத்திரர் பேராசை பிடித்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலியிடப்படும் போஜனபலிகளை இச்சித்து புசித்தார்கள். இதனால் அவர்களுடைய சந்ததிக்கு போஜனம் கிடைக்காமல் போகிறது.

விசுவாசிகளாகிய நாம் போதும் என்கிற திருப்தியோடிருக்கவேண்டும். நாம் போஜனப்பிரியராயிருக்கக்கூடாது. பெருந்தீனி உண்ணக்கூடாது. நமக்கு முன்பாக திரளான போஜனம் இருக்கும்போது, நமக்குரிய போஜனத்தை மாத்திரம் நாம் புசிக்கவேண்டும். பிறருக்குரியதை இச்சிக்கக்கூடாது. பிறருக்குரியதை இச்சிக்கிறவர்கள் தரித்திரராவார்கள்.

ஏலி ஆசாரிய வம்சத்தைச் சேர்ந்தவராகயிருந்தாலும், அவருடைய வீட்டாரில் மீதியாயிருக்கிறவர்களுக்கு ஆசாரிய ஊழியம் செய்யும் சிலாக்கியம் கிடைக்காது. அவர்கள் யாதொரு ஆசாரிய ஊழியத்தையும் செய்ய ஆயத்தமாயிருப்பார்கள். ஆசாரிய ஊழியத்திற்கு தங்களை சேர்த்துக்கொள்ளுமாறு பிறரிடத்தில் கெஞ்சி நிற்பார்கள். கெட்ட குமாரன் தன் தகப்பனிடம் திரும்பி வந்து, தன்னை அவருடைய வேலைக்காரரில் ஒருவனாக சேர்த்துக்கொள்ளுமாறு கெஞ்சினதுபோல, லேவியின் குடும்பத்தாரும் கெஞ்சுவார்கள்.

லேவியின் புத்திரருக்கு அதிகாரமும் ஐசுவரியமும் அதிகமாயிருந்தபோது, அவர்கள் அதை தவறான வழியில் பயன்படுத்தினார்கள். ஆகையினால் அவர்களிடத்திலிருந்து அதிகாரமும் ஐசுவரியமும் விலகிப்போயிற்று. அவர்களுக்கு இப்போது தாராளமும் செழிம்பும் இல்லை. அவர்களுக்கு தரித்திரமும் வறுமையும் உண்டாயிற்று.

அபியத்தார் ஏலியின் வம்சத்தில் வந்தவர். அவர் சாலொமோனுக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினார். சாலொமோன் அபியத்தாரை தேவாலயத்தில் ஆசாரிய ஊழியத்திலிருந்து தள்ளி வைத்துவிட்டார்.

"ராஜா: ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு; நீ மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தும், நீ என் தகப்பனாகிய தாவீதுக்கு முன்பாகக் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியைச் சுமந்தபடியினாலும், என் தகப்பன் அநுபவித்த உபத்திரவத்தையெல்லாம் நீ கூட அநுபவித்தபடியினாலும், இன்றைய தினம் நான் உன்னைக் கொலைசெய்யமாட்டேன் என்றான். அப்படியே கர்த்தர் சீலோவிலே ஏலியின் வீட்டாரைக்குறித்துச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாக, சாலொமோன் அபியத்தாரைக் கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப்போட்டான்" (1இராஜா 2:26,27).

கர்த்தர் ஏலியின் குமாரர்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "ஓப்னி பினெகாஸ் என்னும் உன் இரண்டு குமாரரின்மேல் வருவதே உனக்கு அடையாளமாயிருக்கும்; அவர்கள் இருவரும் ஒரேநாளில் சாவார்கள்" (1சாமு 2:34) என்று கர்த்தர் சொல்லுகிறார். தன்னுடைய குமாரர் இருவரும் மரித்துப்போகிற செய்தியை ஏலி தன்னுடைய செவிகளால் கேட்பார். பிள்ளைகளின் மரண செய்தியைக் கேட்பது பெற்றோருக்கு மிகுந்த வேதனையாயிருக்கும். ஆனால் ஏலியின் குமாரர் மரித்துப்போவது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு ஏலியின் குடும்பத்தின்மீது வந்திருக்கிறது என்பதற்கு இது ஏலிக்கு அடையாளமாயிருக்கும்.

ஏலியின் குடும்பத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. கர்த்தர் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்புகளை எச்சரிப்பாகச் சொல்லும்போது, இஸ்ரவேலுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வாக்குப்பண்ணுகிறார். "நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணுவேன்" (1சாமு 2:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்கியம் சாதோக்கின் மூலமாய் நிறைவேறுகிறது. சாதோக்கு எலெயாசாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர். சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில், அபியத்தாருக்கு பதிலாக, சாதோக்கு பிரதான ஆசாரியனாக நியமிக்கப்படுகிறார். சாதோக்கு உண்மையுள்ள ஆசாரியன்.

கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள், அவருக்கு உண்மையுள்ளவர்களாய் ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருடைய உள்ளத்திற்கும் அவருடைய சித்தத்திற்கும் ஏற்றபடி ஊழியம் செய்யவேண்டும். ஊழியக்காரர் கர்த்தருக்கு உண்மையுள்ளவராய் இல்லையென்றால், கர்த்தர் தமக்கு உண்மையான வேறொரு ஊழியக்காரரை எழுப்புவார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. ஊழியத்தை செய்வதற்கு ஒருவரும் இல்லை என்னும் காரணத்தினால், கர்த்தருடைய ஊழியம் ஒருபோதும் நின்றுபோவதில்லை.

கர்த்தர் ஏலியின் குடும்பத்தாருக்கு பதிலாக, வேறொருவரை ஆசாரியராக எழும்பப்பண்ணுவார். கர்த்தர் அவரைப்பற்றி ஏலியிடம் சொல்லும்போது, "நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்; அவன் என்னால் அபிஷேகம்பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான்" (1சாமு 2:35) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசன வாக்கியம், இயேசுகிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தில் பரிபூரணமாய் நிறைவேறிற்று.

3 அதிகாரம்

சாமுவேல் லேவியருடைய குடும்பத்தில் பிறந்தவர். அவர் கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியனாகிய ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருக்கிறார். அவர் இதுவரையிலும் ஒரு பிள்ளையாண்டானாக சணல்நூல் ஏபோத்தை தரித்தவராய் கர்த்தருக்கு முன்பாக பணிவிடை செய்து கொண்டிருக்கிறார். இந்த அதிகாரத்தில் சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசியாக ஊழியம் செய்கிறார். கர்த்தர் தாமே சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் சாமுவேலுக்கு தம்மை முதன் முதலாக வெளிப்படுத்துகிற சம்பவம் (1சாமு 3:1-10). கர்த்தர் சாமுவேல் மூலமாய் ஏலிக்கு சொல்லும் செய்தி (1சாமு 3:11-14). கர்த்தர் தனக்கு சொன்ன செய்தியை சாமுவேல் ஏலிக்கு சொல்லுகிறார். ஏலி கர்த்தருடைய நீதிக்கு கீழ்ப்படிகிறார் (1சாமு 3:15-18). சாமுவேல் இஸ்ரவேல் தேசத்திலே ஒரு தீர்க்கதரிசியாக ஸ்தாபிக்கப்படுகிறார் (1சாமு 3:19-21).

சாமுவேலே, சாமுவேலே!
1சாமு 3:1-10

1சாமு 3:1. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான்; அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது; பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை.

1சாமு 3:2. ஒருநாள் ஏலி தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக் கொண்டிருந்தான்; அவன் பார்க்கக்கூடாதபடிக்கு அவனுடைய கண்கள் இருளடைந்திருந்தது.

1சாமு 3:3. தேவனுடைய பெட்டி இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் தேவனுடைய விளக்கு அணைந்துபோகுமுன்னே சாமுவேலும் படுத்துக்கொண்டிருந்தான்.

1சாமு 3:4. அப்பொழுது கர்த்தர், சாமுவேலைக் கூப்பிட்டார். அதற்கு அவன்: இதோ, இருக்கிறேன் என்று சொல்லி,

1சாமு 3:5. ஏலியினிடத்தில் ஓடி, இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான். அதற்கு அவன்: நான் கூப்பிடவில்லை, திரும்பிப்போய்ப் படுத்துக்கொள் என்றான்; அவன் போய்ப் படுத்துக்கொண்டான்.

1சாமு 3:6. மறுபடியும் கர்த்தர் சாமுவேலே என்று கூப்பிட்டார்; அப்பொழுது சாமுவேல் எழுந்திருந்து ஏலியினிடத்தில் போய்: இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான். அதற்கு அவன்: என் மகனே, நான் உன்னைக் கூப்பிடவில்லை, திரும்பிப்போய் படுத்துக் கொள் என்றான்.

1சாமு 3:7. சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான்; கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு இன்னும் வெளிப்படவில்லை.

1சாமு 3:8. கர்த்தர் மறுபடியும் மூன்றாம்விசை: சாமுவேலே என்று கூப்பிட்டார். அவன் எழுந்திருந்து ஏலியினிடத்தில் போய், இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான். அப்பொழுது கர்த்தர் பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறார் என்று ஏலி அறிந்து,

1சாமு 3:9. சாமுவேலை நோக்கி: நீ போய்ப் படுத்துக்கொள்; உன்னைக் கூப்பிட்டால், அப்பொழுது நீ: கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்றான்; சாமுவேல் போய், தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக் கொண்டான்.

1சாமு 3:10. அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல்: சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்றான்.

சாமுவேல் ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருக்கிறார். அவர் சோம்பேறியாயிராமல் சுறுசுறுப்பாக கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிறார். ஏலியின் குமாரர் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். சாமுவேலோ கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார். கர்த்தர் சாமுவேலை ஆசீர்வதிக்கிறார். ஏலியின்மீதும், அவருடைய குடும்பத்தார்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது.

ஏலியின் குமாரர் கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு செலுத்தும் பலியையும் காணிக்கையையும், ஏலியின் குமாரர் தங்களுக்கென்று இச்சித்து எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குரியதை திருடுகிறார்கள். சாமுவேலோ கர்த்தருக்கு பணிவிடை செய்கிறார்.

ஏலியின் குமாரர் அவருடைய ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. சாமுவேலோ ஏலியின் குமாரரை கவனித்துக்கொண்டிருக்கிறார். சாமுவேல் அவர்களுடைய வழியில் நடவாமல், கர்த்தருடைய வழியில் நடக்கிறார்.

ஏலியின் புத்திரர், அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவுமில்லை. கர்த்தருடைய ஆலய ஊழியத்திலே அவர்கள் இருவரும் ஏலிக்கு உதவி செய்யவுமில்லை. சாமுவேலோ ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்துகொண்டிருக்கிறார். சாமுவேல் ஏலியின் நேரடி மேற்பார்வையின் கீழும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமும் கர்த்தருக்கு பணிவிடை செய்கிறார். கீழ்ப்படிய கற்றுக்கொள்கிறவர்களே, பிறரை ஆளுகை செய்வதற்கு தகுதியானவர்கள்.

சாமுவேலின் நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருக்கிறது. அக்காலத்தில் பிரத்தியட்சமான தரிசனம் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. தீர்க்கதரிசனமும் வெளிப்படுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட காலத்தில் கர்த்தர் சாமுவேலை அழைக்கிறார். சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய தரிசனம் சாமுவேலுக்கு அதிசயமாயும் ஆச்சரியமாயும் இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேலை ஒருபோதும் மறக்கவில்லை. சாமுவேலின் நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தாலும், கர்த்தர் மறுபடியுமாய் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்துகிறார். இக்காலத்தில் பிரத்தியட்சமான தரிசனம் இல்லாதிருந்தும், கர்த்தர் சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார்.

ஏலி சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலே ஆசாரியராக ஊழியம் செய்கிறார். இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் பரிசுத்தமில்லாமல் அசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில்கூட பரிசுத்தமில்லை. ஏலியின் குமாரர் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கூட்டங்கூடுகிற ஸ்திரீகளோடே சயனிக்கிறார்கள் (1சாமு 2:22). இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் கர்த்தருக்கு விரோதமான பாவம் நிரம்பியிருக்கிறது. அவர்கள் தங்கள் பாவத்தினாலும், துன்மார்க்கத்தினாலும் கர்த்தரை கோபப்படுத்துகிறார்கள். தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை கர்த்தர் கனம்பண்ணுவார். கர்த்தரை அசட்டைபண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது பிரியமாயில்லை. கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். தம்முடைய கோபத்திற்கு அடையாளமாக, கர்த்தர் இஸ்ரவேலிலே தம்முடைய தீர்க்கதரிசன ஆவியை அகற்றிப்போடுகிறார். ஆகையினால் இக்காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருக்கிறது. பிரத்தியட்சமான தரிசனமும் ஒருவருக்கும் கிடைக்கவில்லை.

கர்த்தர் விசேஷித்த வழியிலே தம்மை சாமுவேலுக்கு வெளிப்படுத்துகிறார். ஏலி தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு வயதாயிற்று. அவர் வயது முதிர்ந்தவராயிருக்கிறார். ஏலியின் கண்பார்வை தெளிவாகயில்லை. அவர் பார்க்கக்கூடாதபடிக்கு அவருடைய கண்கள் இருளடைந்திருக்கிறது (1சாமு 3:2).

சாமுவேல் ஏலியின் அறைக்கு அருகாமையில் படுத்துக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய ஆலயத்திலே தேவனுடைய பெட்டி இருக்கிறது. ஆலயத்திலே தேவனுடைய விளக்கு அணைந்துபோகும் முன்னே சாமுவேலும் அங்கே படுத்துக்கொண்டிருக்கிறார் (1சாமு 3:3). சாமுவேல் ஏலிக்கு அருகாமையில் படுத்திருப்பதினால், இரவு வேளையிலும் சாமுவேலால் லேவிக்கு உதவி செய்ய முடியும். ஏலி எப்பொழுது கூப்பிட்டாலும், சாமுவேல் அவருக்கு உதவி செய்ய ஆயத்தமாக, அவருக்கு அருகாமையிலேயே படுத்திருக்கிறார்.

ஏலியின் இரண்டு குமாரரும் பேலியாயின் மக்களாயிருக்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியில் பெரிதாயிருக்கிறது. ஏலியும் தன் குமாரருக்கு புத்திமதிகளையும் ஆலோசனைகளையும் சொல்லிப் பார்த்தார். ஆனால் அவர்களோ தங்கள் தகப்பனாரின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கவில்லை. ஏலியின் இருதயத்திலே தன்னுடைய குமாரரைப்பற்றிய கவலை அதிகமாயிருக்கிறது. ஏலியின் பிள்ளைகள் இருவரும், அவருக்கு துக்கத்தைக் கொடுக்கிறார்கள்.

ஏலி தன்னுடைய பிள்ளைகளை நினைத்து துக்கப்படும்போது, பிள்ளையாண்டானாகிய சாமுவேல் அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறார். ஏலி தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக்கொள்ளும்போது, சாமுவேலும், கர்த்தருடைய ஆலயத்தில், தேவனுடைய விளக்கு அணைந்துபோகும் முன்னே படுத்துக்கொள்கிறார்.

அப்பொழுது கர்த்தர் சாமுவேலைக் கூப்பிடுகிறார். கர்த்தர் சாமுவேலை அவருடைய பெயரைச் சொல்லி கூப்பிடுகிறார். சாமுவேலுக்கு இன்னும் கர்த்தரைப்பற்றித் தெரியவில்லை. தன்னை கர்த்தர் கூப்பிடுகிறார் என்பதும் சாமுவேலுக்கு புரியவில்லை. கர்த்தர் தன்னை பெயர் சொல்லி கூப்பிடும்போது, ஏலி தன்னைக் கூப்பிடுகிறார் என்று சாமுவேல் நினைக்கிறார்.

கர்த்தர் சாமுவேலைக் கூப்பிடுகிறார். சாமுவேலோ, "இதோ இருக்கிறேன்" என்று சொல்லி ஏலியினிடத்தில் ஓடுகிறார். சாமுவேல் ஏலியினிடத்தில் ஓடி, "இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே" என்று சொல்லுகிறார். அதற்கு ஏலி, "நான் கூப்பிடவில்லை, திரும்பிப்போய் படுத்துக்கொள்" என்று சொல்லுகிறார். சாமுவேலும் திரும்பிப்போய் படுத்துக்கொள்கிறார் (1சாமு 3:5).

சாமுவேல் தேவனுடைய பெட்டி இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் படுத்துக்கொண்டிருந்தாலும், அவர் நித்திரை பிரியராயிருக்கவில்லை. ஏலி தன்னைக் கூப்பிடும்போது, அவருக்கு உதவிசெய்ய எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார். பகல்வேளையாகயிருந்தாலும், இரவு வேளையாகயிருந்தாலும், சாமுவேல் ஏலிக்கு உதவியும் ஒத்தாசையும் பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். சாமுவேல் கர்த்தருக்கு பணிவிடை செய்தாலும், அவர் ஏலிக்கு முன்பாகவே பணிவிடை செய்கிறார்.

கர்த்தர் சாமுவேலைக் கூப்பிட்டாலும், சாமுவேல் தூங்கிக்கொண்டிராமல், "இதோ இருக்கிறேன்" என்று உற்சாகமாய்ச் சொல்லுகிறார். தன்னைக் கூப்பிடுவது கர்த்தர் என்று சாமுவேலைக்குத் தெரியவில்லை. ஏலி தன்னைக் கூப்பிடுகிறார் என்று நினைத்து, சாமுவேல் அவருக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சாமுவேலைப்போல சுறுசுறுப்பாய் இருக்கவேண்டும். கர்த்தருக்கு உற்சாகமாய் ஊழியம் செய்யவேண்டும். ஊழியக்காரர்கள் நித்திரை பிரியராயிருக்கக்கூடாது. அவர்கள் சோம்பேறிகளாகவும் இருக்கக்கூடாது. நம்மைவிட வயதில் மூத்தவர்கள், நம்மைக் கூப்பிடும்போது, நாம் அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். பெரியவர்களுக்கு கீழ்ப்படியவேண்டும். அவர்களிடத்தில் அன்பாகவும், கனிவாகவும் பேசவேண்டும். நம்முடைய வார்த்தையில் பணிவு இருக்கவேண்டும். கிரியையில் அன்பும் கரிசனையும் இருக்கவேண்டும்.

கர்த்தர் சாமுவேலைக் கூப்பிடும்போது தன்னை கர்த்தர் கூப்பிடுகிறார் என்பது சாமுவேலுக்கு தெரியவில்லை. இதற்கு முன்பு கர்த்தர் சாமுவேலைக் கூப்பிட்டதுமில்லை. அது மாத்திரமல்ல. அந்நாட்களில் கர்த்தருடைய வசனமும் அபூர்வமாயிருக்கிறது. பிரத்தியட்சமான தரிசனமும் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. ஆகையினால் கர்த்தர் தன்னைக் கூப்பிடுவார் என்று சாமுவேலும் எதிர்பார்க்கவில்லை.

சாமுவேலைப்போலவே, விசுவாசிகளாகிய நாமும், பல சமயங்களில் தவறு செய்துவிடுகிறோம். நாம் தவறு செய்கிறோம் என்பது தெரியாமலேயே தவறு செய்து விடுகிறோம். கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாய் நம்மைக் கூப்பிடுகிறார். கர்த்தர் நம்மைக் கூப்பிடும்போது, பிரசங்கியார் நம்மைக் கூப்பிடுவதாக நினைக்கிறோம். கர்த்தர் நம்மை அழைக்கும்போது, ஊழியக்காரரோ அல்லது போதகரோ நம்மை அழைப்பதாக நினைக்கிறோம்.

நம்மை அழைக்கிறவர் கர்த்தர் என்பது நமக்கு தெரிவதில்லை. கர்த்தர் நம்மை அழைக்கும்போது, ஊழியக்காரர் நம்மை அழைப்பதாக நினைத்து, அந்த ஊழியக்காரரிடத்திலே பேசுவதுபோல பேசிக்கொண்டிருக்கிறோம்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக பராமரிப்புக்களின் மூலமாய் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார். நாமோ கர்த்தர் பயன்படுத்தும் கருவிகளை மாத்திரம் பார்க்கிறோம். அந்தக் கருவிகளை இயக்கும் கர்த்தரை பார்க்க தவறி விடுகிறோம்.

சாமுவேல் ஏலியினிடத்தில் ஓடி, "இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே" என்று சொல்லுகிறார். அதற்கு ஏலி, "நான் கூப்பிடவில்லை, திரும்பிப்போய் படுத்துக்கொள்" என்று சொல்லுகிறார். சாமுவேலும் ஏலியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, போய் படுத்துக்கொள்கிறார்.

மறுபடியும் கர்த்தர் "சாமுவேலே" என்று கூப்பிடுகிறார். சாமுவேலோ, முதல் தரம் கர்த்தர் தன்னைக் கூப்பிட்டபோது செய்த தப்பிதத்தை மறுபடியுமாய் செய்கிறார். சாமுவேல் இரண்டாந்தரமும், மூன்றாந்தரமும், கர்த்தர் தன்னைக் கூப்பிடுகிறார் என்பதை அறியாமல், அவர் ஏலியினிடத்தில் போய், "இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே" என்று சொல்லுகிறார்.

"மறுபடியும் கர்த்தர் சாமுவேலே என்று கூப்பிட்டார்; அப்பொழுது சாமுவேல் எழுந்திருந்து ஏலியினிடத்தில் போய்: இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான்" (1சாமு 3:6).

"கர்த்தர் மறுபடியும் மூன்றாம்விசை: சாமுவேலே என்று கூப்பிட்டார். அவன் எழுந்திருந்து ஏலியினிடத்தில் போய், இதோ, இருக்கிறேன்; என்னைக் கூப்பிட்டீரே என்றான்" (1சாமு 3:8).

கர்த்தர் முதல் விசை சாமுவேலைக் கூப்பிட்டபோது, அவர் "இதோ இருக்கிறேன்" என்று சொல்லி ஏலியினிடத்தில் ஓடுகிறார். சாமுவேல் கர்த்தரிடத்தில் வரவில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் சாமுவேலை மறுபடியும் கூப்பிடுகிறார். கர்த்தர் மறுபடியும் மூன்றாம் விசையும் சாமுவேலைக் கூப்பிடுகிறார்.

சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை அவருக்கு இன்னும் வெளிப்படவில்லை. கர்த்தர் தன்னைக் கூப்பிடுகிறார் என்பது சாமுவேலுக்கு தெரியவில்லை.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் இருதயங்களில் சாட்சி கொடுக்கிறார். ஆனால் நாமோ பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைப் புரிந்துகொள்ளாமல், அவர் கொடுக்கும் ஆறுதலை இழந்துவிடுகிறோம்.

பரிசுத்த ஆவியானவர் பாவிகளுடைய மனச்சாட்சியோடு பேசுகிறார். ஆனால் அவர்களோ தங்களுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு செவிகொடுப்பதில்லை. தங்கள் பாவங்களைப்பற்றிய குற்றவுணர்வு அவர்களுக்கு ஏற்படுவதில்லை. இதனால் அவர்கள் இரட்சிக்கப்படும் வாய்ப்பை இழந்துபோகிறார்கள்.

கர்த்தர் ஒவ்வொரு முறையும் சாமுவேலைக் கூப்பிட்டபோது, அவர் ஏலியினிடத்தில் ஓடிப்போகிறார். ஏலி தான் தன்னைக் கூப்பிட்டார் என்று சாமுவேல் நினைக்கிறார். "என்னைக் கூப்பிட்டீரே" என்று சாமுவேல் இரண்டாம் முறையும், மூன்றாம் முறையும் ஏலியினிடத்தில் உறுதியாய் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில், ஏலியும் சாமுவேலும் மாத்திரமே தங்கியிருக்கிறார்கள். ஏலியைத் தவிர தன்னை வேறு யாரும் கூப்பிடமாட்டார்கள் என்று சாமுவேல் நினைத்துக்கொண்டிருக்கிறார்.

சாமுவேல் ஒவ்வொரு முறையும் ஏலியினிடத்தில் போய், "என்னைக் கூப்பிட்டீரே" என்று சொன்னபோது, தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலும் அங்கே கிரியை செய்கிறது. சாமுவேல் மூன்று விசையும் ஏலியினிடத்தில் போய் நிற்கும்போது, மூன்றாம் விசை, "கர்த்தர் பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறார்" என்று ஏலி அறிந்துகொள்கிறார்.

கர்த்தர் ஏலியைக் கூப்பிடாமல் சாமுவேலைக் கூப்பிடுகிறார். இது ஏலியின் மனதிற்கு மிகவும் கஷ்டமாகவும் வேதனையாகவும் இருந்திருக்கும். ஏற்கெனவே தேவனுடைய மனுஷன் ஏலியினிடத்தில் வந்து, அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் வரப்போகிற தேவனுடைய நியாயத்தீர்ப்பை சொல்லியிருக்கிறார். ஏலியின் குடும்பத்தார் தாழ்ந்துபோகிறார்கள். ஏலியின் மனதில் அதைப்பற்றிய கவலை இருக்கிறது.

கர்த்தர் இப்போது ஏலியைத் தெரிந்துகொள்ளாமல், சாமுவேலைத் தெரிந்துகொள்கிறார். கர்த்தர் ஏதாவது சொல்லவேண்டுமென்றால், அவர் சாமுவேலிடத்தில் சொல்லாமல், தன்னிடத்தில் சொல்லுவார் என்று ஏலி எதிர்பார்த்தார். ஆனால் ஏலி எதிர்பார்த்த பிரகாரம், கர்த்தர் ஏலிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கர்த்தர் சாமுவேலைத் தெரிந்துகொள்கிறார்.

ஏலி கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தர் சாமுவேலைக் கூப்பிடுகிறார் என்பதை அறிந்தும், அவர் தன்னுடைய வருத்தத்தையோ, வேதனையையோ சாமுவேலுக்கு வெளிப்படுத்தவில்லை. ஏலி சாமுவேலை நோக்கி, "நீ போய்ப் படுத்துக்கொள்; உன்னைக் கூப்பிட்டால், அப்பொழுது நீ: கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்று சொல்" (1சாமு 3:9) என்று சொல்லுகிறார்; சாமுவேல் போய், தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக் கொள்கிறார்.

கர்த்தர் சாமுவேலைக் கூப்பிடுகிறார் என்பதை ஏலி அறிந்துகொள்கிறார். கர்த்தர் சாமுவேலை மறுபடியும் கூப்பிடுவார் என்று ஏலி எதிர்பார்க்கிறார். அப்போது சாமுவேல் கர்த்தரிடத்தில் எப்படி பேசவேண்டும், என்ன சொல்லவேண்டும் என்று ஏலி அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார். கர்த்தர் சாமுவேலை மறுபடியும் கூப்பிடும்போது, "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று சாமுவேல் சொல்லவேண்டும்.

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க ஆயத்தமாயிருந்தால், கர்த்தர் நம்மோடு நிச்சயமாய்ப் பேசுவார்.

"கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக" (சங் 85:8).

"நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலைகொண்டிருந்து, அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னைக் கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன்" (ஆப 2:1).

நாம் பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தருடைய வார்த்தையைத் தியானிக்கும்போதும், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பிரசங்கம்பண்ணுவதை கவனித்துக் கேட்கும்போதும், கர்த்தர் நம்மோடுகூட பேசுகிறார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அவருக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் நம்மோடு பேசும்போது, "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று நாமும் சொல்லவேண்டும்.

கர்த்தர் நான்காம் விசையும் சாமுவேலோடு பேசுகிறார். "அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்றான்" (1சாமு 3:10).

கர்த்தர் இதற்கு முன்பு மூன்றுவிசை சாமுவேலோடு பேசியதற்கும், இப்போது பேசியதற்கும் வித்தியாசமுள்ளது. இதற்கு முன்பு கர்த்தர் "சாமுவேலே" என்று கூப்பிட்டார். இப்போதோ "கர்த்தர் வந்து நிற்கிறார்". கர்த்தருடைய தெய்வீக மகிமை சாமுவேலுக்கு பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் தனக்கு முன்பாக வந்து நிற்பதை சாமுவேல் தன்னுடைய கண்களால் பார்க்கலாம். ஏலி தன்னைக் கூப்பிடவில்லை என்பதையும் கர்த்தரே தன்னைக் கூப்பிடுகிறார் என்பதையும் சாமுவேல் புரிந்துகொள்ளலாம்.

கர்த்தர் இதற்கு முன்பு மூன்றுவிசை, "சாமுவேலே" என்று கூப்பிட்டார். இப்போதோ "சாமுவேலே, சாமுவேலே" என்று சாமுவேலின் பெயரை இரண்டுதரம் சொல்லி கூப்பிடுகிறார். சாமுவேலின் பெயரைச் சொல்லுவது கர்த்தருக்குப் பிரியமாயிருக்கிறது. சாமுவேலின் பெயரை மாத்திரமல்ல, தம்மை விசுவாசிக்கிற தம்முடைய பிள்ளைகள் எல்லோருடைய பெயரையும் சொல்லுவது கர்த்தருக்கு மிகவும் பிரியமாயும், இன்பமாயும் இருக்கிறது.

கர்த்தர் சாமுவேலை நோக்கிக் கூப்பிட்டபோது, சாமுவேல் பிரதியுத்தரமாக "சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று சொல்லுகிறார். ஏலி சாமுவேலிடம், "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று சொல்லச் சொன்னார். ஆனால் சாமுவேலோ, "கர்த்தாவே சொல்லும்" என்று சொல்லாமல், "சொல்லும்" என்று மாத்திரமே சொல்லுகிறார்.

கர்த்தர் இதற்கு முன்பு சாமுவேலைக் கூப்பிட்டபோது, சாமுவேல் எழுந்திருந்து, ஏலியினிடத்தில் ஓடிப்போய், "இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே" என்று சொன்னார். சாமுவேல் இப்போது முன்பு செய்ததுபோல, எழுந்திருந்து ஏலியினிடத்தில் ஓடிப்போய், "இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே" என்று சொல்லவில்லை.

சாமுவேல் தன்னுடைய ஸ்தானத்தில் படுத்துக்கொண்டிருக்கிறார். கர்த்தர் வந்து நின்று, முன்பு போல, "சாமுவேலே சாமுவேலே" என்று கூப்பிடுகிறார். சாமுவேல் எழுந்திருந்து ஓடிப்போகாமல், படுத்துக்கொண்டே, "சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று சொல்லுகிறார். சாமுவேல் தன் படுக்கையில் படுத்திருந்தாலும், அவர் கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்கிறார்.

நம்முடைய ஆவி குழப்பமில்லாமல் அமைதியாயிருக்கும்போதுதான், கர்த்தருடைய வார்த்தைகளைத் தெளிவாய்க் கேட்கும். நாம் கர்த்தருக்குள் அமைதியாயிருக்கும்போது, தேவனுடைய தெய்வீக வெளிப்பாடுகளை பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்போம். கர்த்தர் பேசும்போது நாம் மௌனமாயிருக்கவேண்டும். நாம் இருக்கும் சூழ்நிலையும் அமைதியான சூழ்நிலையாயிருக்கவேண்டும்.

சாமுவேல் கர்த்தரிடத்தில் "சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று மாத்திரமே சொல்லுகிறார். ஏலி தனக்கு சொல்லிக் கொடுத்த பிரகாரமாக, "கர்த்தாவே சொல்லும்" என்று சொல்லவில்லை. "கர்த்தாவே" என்னும் வார்த்தையை விட்டுவிடுகிறார். ஒருவேளை இப்போது தன்னோடு பேசுவது கர்த்தர்தான் என்னும் நிச்சயம் சாமுவேலுக்கு இன்னும் ஏற்படாமலிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

ஏலியின் குடும்பம்
1சாமு 3:11-18

1சாமு 3:11. கர்த்தர் சாமுவேலை நோக்கி: இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்; அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்.

1சாமு 3:12. நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன்மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன்; அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன்.

1சாமு 3:13. அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்.

1சாமு 3:14. அதினிமித்தம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று ஏலியின் குடும்பத்தைக்குறித்து ஆணையிட்டிருக்கிறேன் என்றார்.

1சாமு 3:15. சாமுவேல் விடியற்காலமட்டும் படுத்திருந்து, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்தான்; சாமுவேல் ஏலிக்கு அந்தத் தரிசனத்தை அறிவிக்கப் பயந்தான்.

1சாமு 3:16. ஏலியோ: சாமுவேலே, என் மகனே என்று சாமுவேலைக் கூப்பிட்டான். அவன்: இதோ, இருக்கிறேன் என்றான்.

1சாமு 3:17. அப்பொழுது அவன்: கர்த்தர் உன்னிடத்தில் சொன்ன காரியம் என்ன? எனக்கு அதை மறைக்கவேண்டாம்; அவர் உன்னிடத்தில் சொன்ன சகல காரியத்திலும் யாதொன்றை எனக்கு மறைத்தாயானால், தேவன் உனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்வாராக என்றான்.

1சாமு 3:18. அப்பொழுது சாமுவேல் ஒன்றையும் அவனுக்கு மறைக்காமல், அந்தக் காரியங்களையெல்லாம் அவனுக்கு அறிவித்தான். அதற்கு அவன்: அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றான்.

கர்த்தர் சாமுவேலிடம் ஏலியின் குடும்பத்தாரைப்பற்றிய செய்தியைச் சொல்லுகிறார். செய்தி மிகவும் சுருக்கமாகயிருக்கிறது. தேவனுடைய மனுஷன் ஏலியோடு பேசியபோது அதிகமான செய்திகளை விரிவாகச் சொன்னார் (1சாமு 2:27). இப்போதோ கர்த்தர் சாமுவேலிடம் ஏலியின் குடும்பத்தைப்பற்றிய செய்தியை சுருக்கமாகச் சொல்லுகிறார். இந்தச் செய்தி சந்தோஷமான செய்தியல்ல. இது மிகவும் துக்கமான செய்தி.

தேவனுடைய மனுஷன் ஏலியிடம் ஏற்கெனவே சொன்ன செய்தியை, கர்த்தர் சாமுவேலிடம் உறுதிபண்ணுகிறார். ஏலியின் குடும்பத்தின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்பதை கர்த்தர் இங்கு உறுதிப்படுத்துகிறார்.

ஏலியின் புத்திரர் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக பெரிதாயிருக்கிறது. அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனாருக்கு தெரியாமல் இரகசியமாய்ப் பாவம் செய்யவில்லை. எல்லோருக்கும் தெரியும் வண்ணமாக, வெளிப்படையாகவே பாவம் செய்கிறார்கள். ஏலியின் குமாரர், தங்கள் பாவங்களினிமித்தமாக, தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறார்கள். இதை ஏலியும் அறிந்திருக்கிறார் (1சாமு 3:13).

தேவனுடைய மனுஷன் ஏலியிடம், அவருடைய இரண்டு குமாரரின் பாவங்களைப்பற்றி ஏற்கெனவே சொன்னார். ஏலியின் மனச்சாட்சியும் தன்னுடைய பிள்ளைகளின் பாவங்களைக் குறித்து அவரை எச்சரித்தது. ஏலியோ தன்னுடைய குமாரரின் பாவங்களை அறிந்திருந்தும், அவர்களை அடக்கவில்லை. இது ஏலியினிடத்தில் காணப்படும் பாவமாயிருக்கிறது.

கர்த்தர் ஏலியின் குடும்பத்திற்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்யப்போவதாக, ஏலிக்கு ஏற்கெனவே அறிவித்திருக்கிறார் (1சாமு 3:13). "அதினிமித்தம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று ஏலியின் குடும்பத்தைக்குறித்து ஆணை யிட்டிருக்கிறேன்" (1சாமு 3:14) என்று கர்த்தர் ஏலியின் பாவத்தைப்பற்றியும், அவருடைய குடும்பத்தார்மீது வரப்போகிற நியாயத்தீர்ப்பைப்பற்றியும் கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லுகிற நியாயத்தீர்ப்பு ஏலியின் குடும்பத்தின்மீது வரும்போது, அது இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் ஆச்சரியமாகவும், பயங்கரமாகவும் இருக்கும்.

கர்த்தர் சாமுவேலை நோக்கி: "இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்; அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்" (1சாமு 2:11) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஒவ்வொருவரும், ஏலியின் குடும்பத்தார்மீது வரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். ஏலியின் குமாரர் இருவரும் கொல்லப்படுவதை கேள்விப்பட்டு அவர்கள் அதிர்ச்சியடைவார்கள். ஏலி மல்லாக்க கீழே விழுந்து, தன் பிடரி முறிந்து மரித்துப்போவதைக் கேள்விப்பட்டு இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் பயமடைவார்கள்.

ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை (1சாமு 3:14). ஏலியின் குடும்பத்தார் செய்கிற அக்கிரமம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் மோசமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பலிகளையும் காணிக்கை களையும் கர்த்தருக்கு செலுத்துவார்கள். ஆனால் ஏலியின் குடும்பத்தாருடைய அக்கிரமமோ மிகவும் பெரியது. அவர்கள் தங்கள் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு எத்தனை பலிகளை செலுத்தினாலும், எவ்வளவு காணிக்கைகளைக் கொடுத்தாலும் அவர்களுடைய பாவம் ஒருபோதும் நிவிர்த்தியாவதில்லை.

பழைய ஏற்பாட்டு பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பலிகள் குறைபாடுள்ளது. அது மனுஷருடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுவதற்கு பெலனற்றது. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தில் சொல்லப்பட்ட பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினாலும், நிவிர்த்தியாகாத பாவங்களும் இருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களைப் போக்குவதற்கு, தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். பாவத்தின் சம்பளம் மரணம். நம்முடைய பாவம் எவ்வளவு பெரியதாயிருந்தாலும், அது எவ்வளவு அதிகமானதாயிருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் இரத்தம், நம்முடைய பாவங்களிலிருந்தும், சாபங்களிலிருந்தும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று விசுவாசிக்கும்போது, நம்முடைய பாவங்கள் நிவிர்த்தியாகிறது. பாவத்தின் சம்பளமாகிய நித்திய மரணத்திலிருந்து, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால், நாம் மீட்கப்படுகிறோம்.

சாமுவேல் விடியற்காலமட்டும் படுத்திருந்து, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறக்கிறார்; சாமுவேல் ஏலிக்கு அந்தத் தரிசனத்தை அறிவிக்கப் பயப்படுகிறார் (1சாமு 3:15). கர்த்தர் தனக்கு சொன்ன செய்தியை சாமுவேல் தன்னுடைய மனதிற்குள் வைத்துக்கொள்கிறார். அவர் விடியற்காலத்தில் தன் நித்திரையைவிட்டு எழும்பியபோது, அவருடைய மனதில் கர்த்தர் ஏலியின் குடும்பத்தைப்பற்றிய செய்தி நிரம்பியிருக்கிறது. சாமுவேலின் மனது ஒருவேளை கலக்கமடைந்திருக்கலாம்.

ஆனாலும் சாமுவேல் விடியற்காலத்தில் எழுந்திருந்து, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறக்கிறார். எப்போதும் போல கர்த்தருக்கு பணிவிடை செய்கிறார். சாமுவேல் ஒவ்வொரு நாளும் காலையிலே, ஆசரிப்புக்கூடாரத்தின் கதவுகளைத் திறப்பது வழக்கம். அதுபோலவே இன்றும் அவர் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறக்கிறார்.

கர்த்தர் சாமுவேலை உயர்த்துகிறார். சாமுவேலோ கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். கர்த்தர் சாமுவேலுக்கு முன்பாக வந்து நின்று, அவருடைய பெயரைச் சொல்லி கூப்பிட்டு, ஏலியின் குடும்பத்தாரைப்பற்றிய செய்திகளை வெளிப்படுத்தியிருந்தாலும், சாமுவேலின் மனதில் பெருமையில்லை. கர்த்தர் ஏலியிடம் பேசாமல், தன்னோடு பேசியதினால், தான் ஏலியைவிட பெரியவர் என்றோ, முக்கியமானவர் என்றோ சாமுவேல் தன்னைப்பற்றி பெருமையாய் நினைக்கவில்லை. அவர் எப்போதும் போல, ஏலிக்கு முன்பாக, கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிறார். விடியற்காலத்தில் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறக்கிறார்.

கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ தம்முடைய கிருபையைக் கொடுக்கிறார். சாமுவேல் தாழ்மையுள்ளவர். அவருக்கு கர்த்தருடைய கிருபை கிடைத்திருக்கிறது. சாமுவேலின் காலத்தில், அவருடைய வயதிலிருக்கிற எல்லா பிள்ளையாண்டான்களைவிட, கர்த்தர் சாமுவேலை அதிகமாய் உயர்த்துகிறார். அவரை அதிகமாய்க் கனப்படுத்துகிறார். தம்மைக் கனப்படுத்துகிறவர்களை கர்த்தரும் கனப்படுத்துவார்.

கர்த்தர் தனக்கு முக்கியத்துவம் கொடுத்து, தன்னைக் கனப்படுத்தியதினால், சாமுவேல் பெருமைப்படவில்லை. அவர் எப்போதும்போல, மிகுந்த மனத்தாழ்மையோடு, கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிறார். கர்த்தர் சாமுவேலுக்கு ஏலியின் குடும்பத்தைப்பற்றிய செய்தியைச் சொன்னார். சாமுவேலோ ஏலிக்கு அந்த தரிசனத்தை அறிவிக்க பயப்படுகிறார்.

ஏலி வயது முதிர்ந்தவர். கர்த்தர் ஏலியின் குடும்பத்தைப்பற்றி சந்தோஷமான செய்தி எதுவும் சொல்லவில்லை. கர்த்தர் சொன்ன செய்தி மிகவும் துக்கமான செய்தி. ஏலி இந்தச் செய்தியைக் கேட்டால் மிகவும் வருத்தப்படுவார். அவருடைய மனது மிகவும் வேதனைப்படும் என்று நினைத்து சாமுவேல் அந்தத் தரிசனத்தை ஏலிக்கு அறிவிக்கப் பயப்படுகிறார்.

சாமுவேல் கர்த்தருடைய வார்த்தையை ஏலிக்கு அறிவிக்கப் பயப்படுகிறார். ஆனாலும் கர்த்தர் சாமுவேலோடு பேசியிருக்கிறார் என்பது ஏலிக்கு நன்றாய்த் தெரிகிறது. கர்த்தர் சாமுவேலை கூப்பிட்டபோது, அவர் மூன்றுதரம் ஏலியினிடத்தில் ஓடிப்போய், "இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே" என்று சொன்னார். கர்த்தர் பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறார் என்பதை ஏலி அறிந்துகொள்கிறார்.

கர்த்தர் சாமுவேலுக்கு சொன்ன செய்தியை தானும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பி, ஏலி சாமுவேலைக் கூப்பிடுகிறார். "சாமுவேலே, என் மகனே" என்று சாமுவேலைக் கூப்பிடுகிறார். சாமுவேல் "இதோ, இருக்கிறேன்" என்று சொல்லுகிறார் *(1சாமு 3:16)*.

ஏலி சாமுவேலிடம், "கர்த்தர் உன்னிடத்தில் சொன்ன காரியம் என்ன? எனக்கு அதை மறைக்கவேண்டாம்; அவர் உன்னிடத்தில் சொன்ன சகல காரியத்திலும் யாதொன்றை எனக்கு மறைத்தாயானால், தேவன் உனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்வாராக" *(1சாமு 3:17)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சாமுவேலிடம் தன்னைப்பற்றியும், தன்னுடைய குடும்பத்தைப்பற்றியும் பேசியதற்கு வாய்ப்புள்ளது என்பது ஏலிக்கு நன்றாகத் தெரியும். கர்த்தர் சொன்ன செய்தி தனக்கு நல்ல செய்தியாக இருக்காது என்றும், அது தனக்கும் தன் குடும்பத்திற்கும் தீயசெய்தியாகவே இருக்கும் என்றும் ஏலி எதிர்பார்க்கிறார். தேவனுடைய மனுஷன் ஏற்கெனவே ஏலியிடம் அவருடைய குடும்பத்திற்கு விரோதமாக கர்த்தருடைய செய்தியைச் சொல்லியிருக்கிறார்.

கர்த்தரிடத்திலிருந்து தன்னுடைய குடும்பத்தைப்பற்றி சாமுவேலுக்கு செய்தி வந்திருக்கிறது என்பது ஏலிக்கு தெரிந்திருக்கிறது. ஆனால் அந்த செய்தியின் விவரம் அவருக்கு தெரியவில்லை. அந்தச் செய்தியை தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் ஏலியின் மனதிலிருக்கிறது. ஏலி கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர். ஆனால் அவர் தன்னுடைய பிள்ளைகளை வளர்க்க வேண்டிய பிரகாரமாக வளர்க்கவில்லை. இதுவே அவருடைய பாவம்.

கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்கிறவர்கள் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ள விரும்புவார்கள். ஏலி கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர். கர்த்தருடைய சித்தம் தனக்கு ஆதரவாகயிருந்தாலும் அல்லது அது தனக்கு விரோதமாகயிருந்தாலும், அதை அறிந்துகொள்ளவேண்டுமென்று ஏலி விரும்புகிறார். சாமுவேல் சிறு பிள்ளையாண்டானாகயிருந்தாலும், அவர் மூலமாக, கர்த்தருடைய செய்தியை அறிந்துகொள்ள, ஏலி தயங்கவில்லை. ஏலியின் மனதிலும் பெருமையில்லை.

அப்பொழுது சாமுவேல் ஒன்றையும் ஏலிக்கு மறைக்காமல், அந்தக் காரியங்களையெல்லாம் ஏலிக்கு அறிவிக்கிறார் (1சாமு 3:18). ஏலியும் கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தருடைய செய்தியை அங்கீரிக்கிறார். ஏலி சாமுவேலின் பக்தியைக் குறித்து விவாதம்பண்ணவில்லை. கர்த்தர் அவரோடு பேசியதை சந்தேகப்படவில்லை. தனக்கும், தன்னுடைய குடும்பத்திற்கும் விரோதமாக சொல்லப்பட்ட நியாயத்தீர்ப்புக்கு ஏலி எதிர்த்து நிற்கவில்லை. ஏலி தன்னுடைய பிள்ளைகளின் துன்மார்க்கத்தை அறிந்திருக்கிறார்.

கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினதை சாமுவேல் ஏலிக்கு சொன்னபோது, ஏலி, "அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" (1சாமு 3:18) என்று சொல்லி, கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தர் நீதியுள்ளவர். அவரிடத்தில் அநீதி இருக்காது. கர்த்தர் தம்முடைய சிருஷ்டிகளுக்கு ஒருபோதும் தீங்கு செய்கிறவரல்ல. அவர் எப்போதுமே தம்முடைய பார்வைக்கு நலமானதையே செய்கிறவர். ஏலி கர்த்தருடைய வார்த்தைக்கு எதிர்த்து பேசவில்லை.

சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி 1சாமு 3:19-21

1சாமு 3:19. சாமுவேல் வளர்ந்தான்; கர்த்தர் அவனுடனேகூட இருந்தார்; அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போக விடவில்லை.

1சாமு 3:20. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது.

1சாமு 3:21. கர்த்தர் பின்னும் சீலோவிலே தரிசனம் தந்தருளினார்; கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்.

கர்த்தர் சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவருக்கு கர்த்தருடைய தரிசனமும், வெளிப்பாடுகளும் அதிகமாய் கிடைக்கிறது. சாமுவேலுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைக்கிறது. சாமுவேல் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். கர்த்தரும் சாமுவேலை கனம்பண்ணி உயர்த்துகிறார்.

"சாமுவேல் வளர்ந்தான்; கர்த்தர் அவனுடனேகூட இருந்தார்; அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போக விடவில்லை" (நியா 3:19).

கர்த்தர் சாமுவேலுக்கு தம்மைப்பற்றிய அதிகமான வெளிப்பாடுகளைக் கொடுக்கிறார். கர்த்தர் பின்னும் சீலோவிலே சாமுவேலுக்கு தரிசனம் தந்தருளுகிறார். கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார் (1சாமு 3:21).

சாமுவேல் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். சாமுவேல் மூலமாய் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளெல்லாம் நிறைவேறுகிறது. கர்த்தர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போக விடவில்லை. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். சாமுவேல் மூலமாய் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வாக்கியங்களெல்லாம், ஏற்ற காலங்களிலே நிறைவேறுகிறது.

சாமுவேல் சரீர பிரகாரமாக வளர்ச்சி பெறுகிறார். அவர் தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளர்ச்சி பெறுகிறார். தன்னுடைய காலத்திலிருந்த ஜனங்களுக்கு சாமுவேல் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார். அவர் கர்த்தருக்கு பிரியமுள்ளவராகவும், பிரயோஜனமுள்ளவராகவும் இருக்கிறார். சாமுவேல் சிறு பிள்ளையாக இருக்கும்போதே நற்குணங்களோடு இருந்தவர். அவர் இப்போது வளர்ந்து பெரியவரான பின்பு, நற்கிரியைகளை செய்கிறார். நற்குணங்களில் வளர்க்கப்பட்ட பிள்ளைகள், பிற்காலங்களில் நற்கிரியைகளை செய்வார்கள்.

4 அதிகாரம்

கர்த்தர் ஏலியின் குடும்பத்தாருக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்புகளை சொல்லுகிறார். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுகிறது. இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்கும் இடையே யுத்தமுண்டாயிற்று. இந்த யுத்தத்தில் இஸ்ரவேலர் தோற்றுப்போகிறார்கள் (1சாமு 4:1,2).

இஸ்ரவேல் புத்திரர் யுத்தக்களத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வருகிறார்கள். ஏலியின் புத்திரராகிய ஓப்னியும் பினெகாசும் உடன்படிக்கைப் பெட்டியை தங்கள் தோள்கள்மேல் சுமந்துகொண்டு, யுத்தக்களத்திற்கு வந்திருக்கலாம் (1சாமு 4:3,4). கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது இஸ்ரவேலர் எல்லாரும் ஆர்ப்பரிக்கிறார்கள் (1சாமு 4:5).

இஸ்ரவேலர் ஆர்ப்பரிப்பதை பெலிஸ்தர் கேட்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி யுத்தகளத்திலே இருப்பதை பெலிஸ்தர் பார்க்கிறார்கள். இதனால் பெலிஸ்தருக்கு பயமுண்டாயிற்று. பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக சாதாரணமாய் யுத்தம்பண்ணாமல், மிகவும் தீவிரமாய் யுத்தம்பண்ணுகிறார்கள் (1சாமு 4:6-9).

யுத்தத்திலே இஸ்ரவேலர் தோற்றுப்போகிறார்கள். பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கைப்பற்றுகிறார்கள் (1சாமு 4:10,11). இந்தச் செய்தி சீலோவிலுள்ள ஜனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

சீலோவிலுள்ளவர்கள் கலங்குகிறார்கள். ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று (1சாமு 4:12,13). தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டுப்போயிற்று என்னும் செய்தியைக் கேட்டு, ஏலி பிடரி முறிந்து செத்துப்போகிறார் (1சாமு 4:14-18). இந்த துக்க செய்தியைக் கேட்டு பினெகாசின் மனைவி, கர்ப்பவேதனைப்பட்டு பிரசவித்து, செத்துப்போகிறாள் (1சாமு 4:19-22).

பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தம் 1சாமு 4:1-9

1சாமு 4:1. சாமுவேலின் வார்த்தை இஸ்ரவேலுக்கெல்லாம் வந்தது. இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தஞ் செய்யப்புறப்பட்டு, எபெனேசருக்குச் சமீபத்தில் பாளயமிறங்கினார்கள்; பெலிஸ்தரோ ஆப்பெக்கிலே பாளயமிறங்கியிருந்தார்கள்.

1சாமு 4:2. பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாய் அணிவகுத்து நின்றார்கள்; யுத்தம் அதிகரித்து, இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டார்கள்; அவர்கள் சேனையில் போர்க்களத்திலே ஏறக்குறைய நாலாயிரம்பேர் வெட்டுண்டுபோனார்கள்.

1சாமு 4:3. ஜனங்கள் திரும்பப் பாளயத்துக்கு வந்தபோது, இஸ்ரவேலின் மூப்பரானவர்கள், இன்று கர்த்தர் பெலிஸ்தருக்கு முன்பாக நம்மை முறிய அடித்ததென்ன? சீலோவிலிருக்கிற கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவருவோம்; அது நம்மை நம்முடைய பகைஞரின் கைக்கு விலக்கி ரட்சிக்கும்படி, நம்முடைய நடுவிலே வரவேண்டியது என்றார்கள்.

1சாமு 4:4. அப்படியே கேருபீன்களின் மத்தியிலே வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துவர, ஜனங்கள் சீலோவுக்குச் சொல்லியனுப்பினார்கள்; அங்கே ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும் பினெகாசும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியண்டையில் இருந்தார்கள்.

1சாமு 4:5. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது, இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள்.

1சாமு 4:6. அவர்கள் ஆர்ப்பரிக்கிற சத்தத்தைப் பெலிஸ்தர் கேட்டபோது: எபிரெயருடைய பாளயத்தில் இந்த மகா ஆர்ப்பரிப்பின் சத்தம் என்ன என்றார்கள்; பின்பு கர்த்தரின் பெட்டி பாளயத்தில் வந்தது என்று அறிந்து கொண்டார்கள்.

1சாமு 4:7. தேவன் பாளயத்தில் வந்தார் என்று சொல்லப்பட்டபடியினால், பெலிஸ்தர் பயந்து, ஐயோ, நமக்கு மோசம் வந்தது; இதற்குமுன் ஒருபோதும் இப்படி நடக்கவில்லையே.

1சாமு 4:8. ஐயோ, அந்தமகத்துவமான தேவர்களின் கைக்கு நம்மைத் தப்புவிப்பவர் யார்? எகிப்தியரைச் சகலவித வாதைகளினாலும் வனாந்தரத்திலே அடித்த தேவர்கள் இவர்கள்தானே.

1சாமு 4:9. பெலிஸ்தரே, திடங்கொண்டு புருஷரைப்போல நடந்துகொள்ளுங்கள்; எபிரெயர் உங்களுக்கு அடிமைகளாயிருந்ததுபோல, நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு, புருஷராயிருந்து, யுத்தம்பண்ணுங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.

இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம் செய்ய புறப்படுகிறார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேலரை ஒடுக்குகிறார்கள். அவர்களை அடக்கி ஆளுகை செய்கிறார்கள். பெலிஸ்தரின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்வதற்காக, இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் யுத்தம்பண்ணப் போகும்போது, தங்களுடைய சுயபலத்தையோ அல்லது சுயபராக்கிரமத்தையோ நம்பி யுத்தம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய பலத்தினால் யுத்தம்பண்ணவேண்டும். கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இஸ்ரவேலர் யுத்தக்களத்திற்கு புறப்பட்டுப்போவதற்கு முன்பாக, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தங்களுடைய இருதயங்களை கர்த்தருக்குள் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். பயபக்தியோடு யுத்தம்பண்ண ஆரம்பித்தால் தான், முடிவிலே ஜெயம் கிடைக்கும்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணாமலேயே, பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம் செய்ய புறப்பட்டுப்போகிறார்கள். அவர்கள் எபெனேசருக்குச் சமீபத்தில் பாளயமிறங்கியிருக்கிறார்கள்; பெலிஸ்தரோ ஆப்பெக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமான இந்த யுத்தத்தில் இஸ்ரவேலருக்கு தோல்வி உண்டாயிற்று. பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாய் அணிவகுத்து நிற்கிறார்கள்; யுத்தம் அதிகரித்து, இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்கள்; இஸ்ரவேலருடைய சேனையில் போர்க்களத்திலே ஏறக்குறைய நாலாயிரம்பேர் வெட்டுண்டுபோகிறார்கள்.

பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாய், அவர்கள்மீது கர்த்தருடைய சாபம் வந்து தங்குகிறது. அவர்களுடைய பாளயத்தில் பரிசுத்தமில்லை. அங்கு அசுத்தம் இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தண்டிக்கவேண்டும் என்று சித்தங்கொள்கிறார். இதனால் பெலிஸ்தருக்கு அநுகூலம் உண்டாகிறது. கர்த்தர் இஸ்ரவேலரைத் தண்டிப்பதற்கு, பெலிஸ்தரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார்.

இஸ்ரவேலருடைய சேனையில், ஏறக்குறைய நாலாயிரம் பேர் போர்க்களத்திலே வெட்டுண்டு செத்துப் போகிறார்கள். இஸ்ரவேலருக்கு அதிகமான உயிரிழப்பு ஏற்படுகிறது. அவர்களால் பெலிஸ்தருக்கு விரோதமாய் எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாளயத்திற்கு திரும்ப வருகிறார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே, தங்களுக்கு ஏற்பட்ட தோல்வியை இஸ்ரவேல் புத்திரரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இஸ்ரவேலின் மூப்பரானவர்கள், "இன்று கர்த்தர் பெலிஸ்தருக்கு முன்பாக நம்மை முறிய அடித்ததென்ன?" என்று சொல்லி கர்த்தரோடு வழக்காடுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக கிரியை செய்திருக்கிறார். கர்த்தரே பெலிஸ்தருக்கு விரோதமாகத் தங்களை முறியடித்திருக்கிறார் என்று இஸ்ரவேலின்மூப்பரானவர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், அவர்களுடைய மூப்பர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துணிந்து வழக்காடுகிறார்கள். கர்த்தரே தங்களை முறியடித்தார் என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு ஆதரவாகயிருக்காமல், தங்களுக்கு விரோதமாக இருப்பதினால், இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர்மீது கோபப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அப்போது தாங்கள் மாத்திரம் போகாமல், தங்களோடுகூட சீலோவிலிருக்கிற கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் கொண்டுபோகவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். "அது நம்மை நம்முடைய பகைஞரின் கைக்கு விலக்கி ரட்சிக்கும்படி, நம்முடைய நடுவிலே வரவேண்டியது" (1சாமு 4:3) என்று இஸ்ரவேலின் மூப்பனானவர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி, சீலோவிலே கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்திலே ஏலி பிரதான ஆசாரியராயிருக்கிறார். ஏலியின் இரண்டு குமாரரும் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் மூப்பரானவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை யுத்தக்களத்திற்கு தூக்கிகொண்டு போகவேண்டும் என்று தீர்மானம்பண்ணியபோது, ஏலியால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஏலி ஒருவேளை இஸ்ரவேலின் மூப்பரானவர்களுக்கு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை யுத்தக்களத்திற்கு கொண்டுபோக அனுமதி கொடுத்திருக்கலாம். உடன்படிக்கைப் பெட்டியோடு அவர் தன்னுடைய இரண்டு குமாரரையும் யுத்தக்களத்திற்கு அனுப்பியிருக்கலாம். ஏலியின் குமாரரான ஒப்னியும் பினெகாசும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, தங்கள் தோள்கள்மேல் சுமந்து, இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிற எபினெசருக்கு கொண்டு வந்திருக்கலாம்.

அப்படியே கேருபீன்களின் மத்தியிலே வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துவர, ஜனங்கள் சீலோவுக்குச் சொல்லியனுப்புகிறார்கள்; அங்கே ஏலியின் இரண்டு குமாரராகிய ஒப்னியும் பினெகாசும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியண்டையில் இருக்கிறார்கள் (1சாமு 4:4).

ஏலியின் குமாரர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை பாளயத்திற்கு கொண்டு வருகிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது, இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிடுகிறார்கள் (1சாமு 4:5).

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி தங்களுக்கு அற்புதம் செய்யும் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்புகிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியானது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

கர்த்தருடைய பெட்டிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதை பரிசுத்தமாக கனம்பண்ணினால், கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் தங்களுக்கு கிடைக்கும் என்று இஸ்ரவேலர் எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருடைய பெட்டி யுத்தக்களத்திலே தங்களோடு கூடயிருந்தால், சர்வவல்லமையுள்ள தேவன் தங்களுக்கு ஆதரவாக, பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணுவார் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

கர்த்தரே சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியானது அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். நாம் அடையாளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இக்காலத்தில் அநேகர் கர்த்தருக்கும், மெய்யான ஆராதனைக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், சடங்காச்சாரங்களுக்கும், பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை பொருத்தவரையில், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியானது, அவர்களுக்கு ஒரு விக்கிரகத்தைப் போலிருக்கிறது. அவர்கள் உடன்படிக்கைப் பெட்டியை நோக்கிப் பார்க்கும்போது, அதை கர்த்தருடைய சாயலாகப் பார்க்கிறார்கள். விக்கிரகாராதனைக்காரர் விக்கிரகங்களைப் பார்க்கும்போது, அதை தங்களுடைய தெய்வங்களின் சாயலாகப் பார்ப்பதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார், உடன்படிக்கைப் பெட்டியை கர்த்தருடைய சுரூபமாகப் பார்க்கிறார்கள். புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆராதிக்கிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி யுத்தக்களத்திலே தங்களோடு கூடயிருந்தால், அது தங்களை தங்களுடைய பகைஞரின் கைக்கு விலக்கி இரட்சிக்கும் என்பது இஸ்ரவேலருடைய நம்பிக்கை. ஏற்கெனவே நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேலர் தோற்றுப்போனார்கள். அந்த யுத்தத்தில் இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டார்கள். இஸ்ரவேலருடைய சேனையில், ஏறக்குறைய நாலாயிரம்பேர், போர்க்களத்திலே வெட்டுண்டு போனார்கள். கர்த்தரே தங்களை பெலிஸ்தருக்கு முன்பாக முறியடித்தார் என்று இஸ்ரவேலின் மூப்பரானவர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, போர்க்களத்திலே, தங்களுக்கு நடுவிலே இருந்தால், அந்தப் பெட்டி தங்களை, பெலிஸ்தரின் கைக்கு விலக்கி இரட்சிக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்புகிறார்கள். உடன்படிக்கைப் பெட்டி தங்கள் மத்தியிலே இருக்கும்போது, தங்களுக்கு முன்பாக பெலிஸ்தர் முறியடிக்கப்படுவார்கள் என்றும் இஸ்ரவேலர் நினைக்கிறார்கள்.

கர்த்தருடைய பிரசன்னம் இல்லையென்றால், உடன்படிக்கைப் பெட்டி என்பது ஒரு சாதாரண பெட்டிதான். வித்து இல்லாத தோல் ஒன்றுக்கும் உதவாது. ஜீவன் வித்தில்தான் இருக்கிறது. தோல் அந்த வித்தை மூடியிருக்கிற ஒரு உபகரணம். வித்தை விதைக்காமல், தோலை விதைத்தால் ஒன்றும் முளைக்காது.

போர்க்களத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே இருக்கவேண்டும். கர்த்தரே அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக அவர்களுக்கு, வெற்றியைக் கட்டளையிடுவார். இஸ்ரவேல் ஜனத்தார் நடுவிலே கர்த்தர் வாசம்பண்ணாமல், அவருடைய பெட்டி மாத்திரம் இருப்பதினால், அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லை.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய மதியீனமான கிரியைகளினால், கர்த்தரைக் கனம்பண்ணாமல், அவரைக் கனஈனம்பண்ணுகிறார்கள். ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும் பினெகாசும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி அண்டையிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் இருவரையும் சங்கரிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதங்களை எதிர்பார்ப்பதற்கு பதிலாக, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியிடமிருந்து ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின்மீது உறுதியான நம்பிக்கை இருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது, இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிடுகிறார்கள் (1சாமு 4:5). பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே தங்களுக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் நம்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆர்ப்பரிக்கிற சத்தத்தைப் பெலிஸ்தர் கேட்டபோது: "எபிரெயருடைய பாளயத்தில் இந்த மகா ஆர்ப்பரிப்பின் சத்தம் என்ன" என்று தங்களுக்குள்ளே கேட்டுக்கொள்கிறார்கள். பின்பு கர்த்தரின் பெட்டி பாளயத்தில் வந்தது என்று அறிந்து கொள்கிறார்கள் (1சாமு 4:6).

இஸ்ரவேலர் எல்லோரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய் சத்தமிட்டதைக் கேட்டபோது, பெலிஸ்தர் மத்தியிலே குழப்பமுண்டாயிற்று. இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் அருகருகே பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேலர் எபினேசருக்கு சமீபத்தில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். பெலிஸ்தரோ ஆப்பெக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேலரின் பாளயத்தில் உண்டான ஆர்ப்பரிப்பின் சத்தம் பெலிஸ்தரின் பாளயத்தில் கேட்கிறது.

இஸ்ரவேலரின் பாளயத்தில், கர்த்தரின் பெட்டி வந்திருக்கிறது என்பதை அறிந்து, பெலிஸ்தர் பயப்படுகிறார்கள். கர்த்தரின் பெட்டி பாளயத்தில் வந்திருப்பதைப் பார்த்து, தேவன் பாளயத்திலே வந்திருக்கிறார் என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும், அவருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கும் பயப்படுகிறார்கள்.

பெலிஸ்தர் பயந்து, "ஐயோ, நமக்கு மோசம் வந்தது; இதற்குமுன் ஒருபோதும் இப்படி நடக்கவில்லையே. ஐயோ, அந்தமகத்துவமான தேவர்களின் கைக்கு நம்மைத் தப்புவிப்பவர் யார்? எகிப்தியரைச் சகலவித வாதைகளினாலும் வனாந்தரத்திலே அடித்த தேவர்கள் இவர்கள்தானே" (1சாமு 4:7,8) என்று பயத்தினால் அலறுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாளயத்திலே, இதற்கு முன்பு கர்த்தருடைய பெட்டி வரவில்லை. இப்போது கர்த்தருடைய பெட்டி அங்கே வந்திருப்பதினால், அவர்களுடைய தேவன் பாளயத்தில் வந்திருக்கிறார் என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். ஆகையினால், தங்களுக்கு ஐயோ என்றும், தங்களுக்கு மோசம் வந்தது என்றும் பெலிஸ்தர் பயத்தினால் அலறுகிறார்கள்.

பெலிஸ்தருக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியம் சரியாகத் தெரியாது. கர்த்தருடைய பெட்டி பாளயத்திற்கு வருவதற்கு முன்பாக, கர்த்தர் அந்தப் பாளயத்திலே இல்லை என்றும், அவர் அங்கே வரவில்லை என்றும் பெலிஸ்தர் நினைக்கிறார்கள். கர்த்தர் சர்வவியாபகர். கர்த்தருடைய பெட்டி பாளயத்திலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், கர்த்தர் அங்கே இருக்கிறார்.

பெலிஸ்தர் கர்த்தரைப்பற்றி அறியாதவர்களாயிருப்பதுபோலவே, இஸ்ரவேலரும் கர்த்தரைப்பற்றி அறியாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்தில் வந்ததினால், கர்த்தர் தங்களோடு கூடயிருக்கிறார் என்று நினைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய் சத்தமிடுகிறார்கள். கர்த்தருடைய பெட்டி பாளயத்திலே வருவதற்கு முன்பாக, கர்த்தர் தங்களோடு கூடயில்லை என்று இஸ்ரவேல் ஜனங்கள் நினைக்கிறார்கள்.

பெலிஸ்தருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய பழைய சரித்திரம் ஓரளவு தெரிந்திருக்கிறது. அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றியும் ஓரளவு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்தியரைச் சகலவித வாதைகளினாலும் வனாந்தரத்திலே அடித்த தேவர்கள் இவர்கள்தானே" (1சாமு 4:8) என்று சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தருக்கு இஸ்ரவேலருடைய சரித்திரம் ஓரளவுக்கு தெரிந்திருக்கிறது. ஆனால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய தெய்வத்துவமும், மகத்துவமும் அவர்களுக்கு தெரியவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது செய்யப்பட்டது. இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தபோது, எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு உடன்படிக்கைப் பெட்டி இல்லை.

கர்த்தர் எகிப்தியரை சகலவித வாதைகளினால் வாதித்தார். அந்த வாதைகள் அவர்களுக்கு உண்டானபோது, எகிப்து தேசத்திலே உடன்படிக்கைப் பெட்டி இல்லை. கர்த்தர் எகிப்தியரை எகிப்து தேசத்திலே வாதைகளினால் அடித்தார். கர்த்தர் எகிப்தியரை வனாந்தரத்திலே வாதைகளினால் அடிக்கவில்லை. பெலிஸ்தர் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை "தேவர்கள் இவர்கள்தானே" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே என்னும் சத்தியம் பெலிஸ்தருக்கு தெரியவில்லை.

பெலிஸ்தர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி அரையும் குறையுமாக கேள்விப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் கேள்விப்பட்ட செய்திகளை வைத்து, பாளயத்திலே உடன்படிக்கைப் பெட்டியைப் பார்த்து, அவர்கள் பயத்தினாலே அலறுகிறார்கள்.

பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வந்ததை அறிந்துகொண்டு பயப்பட்டாலும், அவர்கள் இஸ்ரவேலரைப் பார்த்து பயந்து தோற்று ஓடிப்போகவில்லை. பெலிஸ்தர் ஒருவரையொருவர் திடப்படுத்துகிறார்கள்.

"பெலிஸ்தரே, திடங்கொண்டு புருஷரைப்போல நடந்துகொள்ளுங்கள்; எபிரெயர் உங்களுக்கு அடிமைகளாயிருந்ததுபோல, நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு, புருஷராயிருந்து, யுத்தம்பண்ணுங்கள்" (1சாமு 4:9) என்று பெலிஸ்தர் தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள். இஸ்ரவேலுக்கு விரோதமாக சாதாரணமாக யுத்தம்பண்ணாமல், தீவிரமாக யுத்தம்பண்ணவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது 1சாமு 4:10,11

1சாமு 4:10. அப்பொழுது பெலிஸ்தர் யுத்தம் பண்ணினார்கள்; இஸ்ரவேலர் முறிந்து, அவரவர்தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப் போனார்கள்; மகா பெரிய சங்காரம் உண்டாயிற்று; இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் விழுந்தார்கள்.

1சாமு 4:11. தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது; ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும் பினெகாசும் மாண்டார்கள்.

இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்கும் இடையே மறுபடியும் யுத்தமுண்டாயிற்று. இந்த யுத்தத்தின் விவரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

பெலிஸ்தர் யுத்தம் பண்ணுகிறார்கள்; இஸ்ரவேலர் முறிந்து, அவரவர்தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப் போகிறார்கள்; மகா பெரிய சங்காரம் உண்டாயிற்று; இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் விழுகிறார்கள் (1சாமு 4:10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஜனங்களாயிருக்கிறார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேலரை ஒடுக்குகிறார்கள். இதன் நிமித்தமாகவே இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலர் பக்கத்திலே நியாயம் இருக்கிறது. அவர்கள் தங்களுக்கு விடுதலை வேண்டும் என்று யுத்தம்பண்ணுகிறார்கள். ஆனாலும் இஸ்ரவேலருக்கு இந்த யுத்தத்தில் ஜெயம் கிடைக்கவில்லை. அவர்கள் பெலிஸ்தருக்கு முன்பாக நிற்க முடியாமல் தோற்று ஓடிப்போகிறார்கள்.

இஸ்ரவேலர் தங்கள் கன்மலையாகிய கர்த்தரை நம்புகிறார்கள். கர்த்தரோ அவர்களை பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். இஸ்ரவேலர் நியாயத்திற்காக யுத்தம்பண்ணினாலும், அவர்களுக்கு தோல்வியே உண்டாயிற்று. பல சமயங்களில் நீதிக்காக போராடுகிறவர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை. துன்மார்க்கர் பலவான்களாயிருந்து, நீதிமான்களை மேற்கொள்கிறார்கள்.

இந்த யுத்தத்தில் தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் உறுதியாய் நம்பினார்கள். இஸ்ரவேலர் மிகவும் உற்சாகமாயும், தைரியமாயும் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் இஸ்ரவேலருடைய பாளயத்திலிருந்தது. ஆனால் அந்தப் பெட்டி இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுக்கவில்லை. அது இஸ்ரவேல் புத்திரரின் பலத்தையும் பராக்கிரமத்தையும் அதிகரிக்கச் செய்யவில்லை. இஸ்ரவேலரின் பாளயத்தில் ஆகானைப்போன்றவர்கள் இருக்கும்போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேலருக்கு ஒரு நன்மையும் செய்யாது.

பெலிஸ்தர் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைப் பிடித்துக்கொள்கிறார்கள். ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும், பினெகாசும் யுத்தக்களத்திலே மாண்டுபோகிறார்கள் (1சாமு 4:11).

ஆசாரியர்கள் யுத்தத்திலே சங்காரமாகிறார்கள். ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். ஓப்னியும் பினெகாசும் செத்துப்போனது இஸ்ரவேல் புத்திரருக்கு பெரிய இழப்பு இல்லை. ஆனாலும் இது ஏலியின் குடும்பத்தின்மீது வந்த கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. கர்த்தர் சொன்ன வாக்கியம் நிறைவேறுகிறது

"ஓப்னி பினெகாஸ் என்னும் உன் இரண்டு குமாரரின்மேல் வருவதே உனக்கு அடையாளமாயிருக்கும்; அவர்கள் இருவரும் ஒரேநாளில் சாவார்கள்" (1சாமு 2:34).

தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிறபோது, இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள். பெலிஸ்தரோ கர்த்தருடைய பெட்டியையே பிடித்துக்கொள்கிறார்கள்.

தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது இஸ்ரவேல் புத்திரர்மீது வந்த நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாய்க் கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். ஆனாலும் தாங்கள் இஸ்ரவேல் புத்திரராயிருப்பதினால், கர்த்தர் தங்களைப் பாதுகாப்பார் என்று நினைக்கிறார்கள். இது அவர்களுடைய மதியீனம்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வழியில் நடக்கவேண்டும். தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை மாத்திரமே கர்த்தர் கனம்பண்ணுவார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரைக் கனம்பண்ணாமல் அவரை அசட்டைபண்ணுகிறார்கள். ஆனாலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி தங்களைப் பாதுகாக்கும் என்றும், யுத்தத்திலே அது தங்களுக்கு ஜெயத்தைக் கொடுக்கும் என்றும் நம்புகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விட்டு விலகிப்போய்விடுகிறார். அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விட்டார். இப்போது அவர்கள் மத்தியிலே உடன்படிக்கைப் பெட்டி மாத்திரமே இருக்கிறது. கர்த்தர் அவர்களோடு கூடயில்லையென்றால், உடன்படிக்கைப் பெட்டி என்பது சாதாரண பெட்டியாகவே இருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கும் பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ஏலியின் மரணம்
1சாமு 4:12-18

1சாமு 4:12. பென்யமீன் கோத்திரத்தானாகிய ஒருவன் படையிலிருந்து ஓடி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் தலையின்மேல் புழுதியை வாரிப் போட்டுக் கொண்டு, அன்றையதினமே சீலோவுக்கு வந்தான்.

1சாமு 4:13. அவன் வந்தபோது: ஏலி ஒரு ஆசனத்தின்மேல் உட்கார்ந்து வழியைப் பார்த்துக் கொண்டிருந்தான். தேவனுடைய பெட்டிக்காக அவன் இருதயம் தத்தளித்துக்கொண்டிருந்தது. ஊரிலே செய்தியை அறிவிக்க அந்த மனுஷன் வந்தபோது, ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று.

1சாமு 4:14. புலம்புகிற இந்தச் சத்தத்தை ஏலி கேட்டபோது: இந்த அமளியின் இரைச்சல் என்ன என்று கேட்டான்; அப்பொழுது அந்த மனுஷன் தீவிரித்து வந்து, ஏலிக்கு அறிவித்தான்.

1சாமு 4:15. ஏலி தொண்ணூற்றெட்டு வயதுள்ளவனாயிருந்தான்; அவன் பார்க்கக்கூடாதபடிக்கு, அவன் கண்கள் மங்கலாயிருந்தது.

1சாமு 4:16. அந்த மனுஷன் ஏலியைப் பார்த்து: படையிலிருந்து வந்தவன் நான்தான்; இன்றுதான் படையிலிருந்து ஓடிவந்தேன் என்றான். அப்பொழுது அவன்: என் மகனே, நடந்த காரியம் என்ன என்று கேட்டான்.

1சாமு 4:17. செய்தி கொண்டுவந்தவன் பிரதியுத்தரமாக: இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள்; ஜனங்களுக்குள்ளே பெரிய சங்காரம் உண்டாயிற்று; உம்முடைய குமாரராகிய ஓப்னி பினெகாஸ் என்னும் இருவரும் இறந்துபோனார்கள்; தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று என்றான்.

1சாமு 4:18. அவன் தேவனுடைய பெட்டியைக் குறித்துச் சொன்னவுடனே, ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுந்தான்; அவன் கிழவனும் ஸ்தூலித்தவனுமாயிருந்தபடியால், அவன் பிடரி முறிந்து செத்துப் போனான். அவன் இஸ்ரவேலை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தான்.

பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினார்கள்; இஸ்ரவேலர் முறிந்து, அவரவர்தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப் போனார்கள்; மகா பெரிய சங்காரம் உண்டாயிற்று; இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் விழுந்தார்கள். இந்தச் செய்தி சீலோவிலுள்ள இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

பென்யமீன் கோத்திரத்தானாகிய ஒருவன் படையிலிருந்து ஓடி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் தலையின்மேல் புழுதியை வாரிப் போட்டுக் கொண்டு, அன்றையதினமே சீலோவுக்கு வந்து, இஸ்ரவேல் புத்திரர் சங்காரமான செய்தியை சொல்லுகிறான் (1சாமு 4:12). நற்செய்தியைவிட துர்ச்செய்தி வேகமாய்ப் பரவும்.

செய்தியை சொன்னவன் பென்யமீன் கோத்திரத்தான். இந்த மனுஷன் இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுலாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான். தன் தலையின்மேல் புழுதியை வாரிப்போட்டுக்கொள்கிறான். இவை இரண்டும் துக்கத்திற்கும் வேதனைக்கும் அடையாளம்.

பென்யமீன் கோத்திரத்தானாகிய இந்த மனுஷன், பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடைபெறுகிற களத்திலிருந்து சீலோவுக்கு ஓடி வருகிறான். இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் சங்காரமான அதே நாளிலே, அவன் படையிலிருந்து சீலோவுக்கு வருகிறான்.

அவன் வந்தபோது, ஏலி ஒரு ஆசனத்தின்மேல் உட்கார்ந்து வழியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பெட்டிக்காக ஏலியின் இருதயம் தத்தளித்துக்கொண்டிருக்கிறது (1சாமு 4:13). படையிலிருந்து ஓடி வந்தவன், யுத்தத்தின் செய்தியை ஏலியிடம் சொல்லாமல், ஏலியைக் கடந்துபோய், ஊரில் உள்ளவர்களிடம் சொல்லுகிறான். அந்த மனுஷன் ஊரிலே யுத்தச் செய்தியை சொன்னபோது, ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று.

கர்த்தர் சாமுவேலை நோக்கி: "இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்; அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்" (1சாமு 3:11) என்று சொன்ன வாக்கியம் இங்கு நிறைவேறுகிறது. அவர்களுடைய இருதயம் தத்தளிக்கிறது. அவர்களுடைய முகங்களெல்லாம் துக்கமடைகிறது. ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று.

சீலோவுக்கு மிகப்பெரிய இழப்பு உண்டாயிற்று. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தது. அந்தப் பெட்டியை பெலிஸ்தர் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். பிற்காலத்தில், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, பெலிஸ்தரின் கையிலிருந்து விடுவிக்கப்பட்டது. ஆனாலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி மறுபடியும் சீலோவுக்குத் திரும்பி வரவில்லை. இது சீலோவுக்கும், சீலோ ஊராருக்கும் மிகப்பெரிய இழப்பாயிற்று.

பிற்காலத்தில், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. அது எருசலேமிலேயே தங்கியிருந்தது. எரேமியா தீர்க்கதரிசி சீலோவிலுள்ள உடன்படிக்கைப் பெட்டியைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

"நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள். நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி வந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவுகொடாமலும் போனபடியினால், என் நாமம் தரிக்கப்பட்டதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறதுமான இந்த ஆலயத்துக்கும், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன்" (எரே 7:12-14).

சீலோ ஊரெங்கும் புலம்பல் உண்டாயிற்று. ஏலி ஒரு ஆசனத்தில்மேல் உட்கார்ந்து வழியிலே பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் ஊரெங்கும் உண்டான புலம்புகிற இந்த சத்தத்தைக் கேட்கிறார். "இந்த அமளியின் இரைச்சல் என்ன" என்று ஏலி கேட்கிறார். அப்போது பென்யமீன் கோத்திரத்தானாகிய அந்த மனுஷன், தீவிரித்து வந்து, ஏலிக்கு, யுத்தக்களத்திலே நடைபெற்ற சம்பவங்களை அறிவிக்கிறான்.

ஏலிக்கு முதிர்வயதாயிற்று. அவர் கிழவனாயிருக்கிறார். அவருடைய கண் பார்வையும் சரியாகத் தெரியவில்லை. அவருடைய சரீரம் ஸ்தூலித்த சரீரமாயிருக்கிறது. ஊரெங்கும் புலம்புகிற இந்த சத்தத்தைக் கேட்டு, ஏலியின் இருதயம் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. யுத்தத்தில் என்ன நடைபெற்றதோ என்று ஏலி பயப்படுகிறார்.

ஏலி நல்ல சரீர ஆரோக்கியத்திலிருந்த போது, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே, தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்திருப்பது வழக்கம். இப்போதோ அவர் பாதை அருகே, வழியிலே ஒரு ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் வழியை பார்த்துக்கொண்டிருக்கிறார். யுத்தக்களத்தில் நடைபெற்ற சம்பவத்தை விசாரித்து அறிந்துகொள்வதற்காக, அவர் தத்தளிக்கும் இருதயத்தோடும், பயத்தோடும் காத்துக்கொண்டிருக்கிறார். தேவனுடைய பெட்டிக்காக ஏலியின் இருதயம் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

தனக்கும் தன் குடும்பத்திற்கும் அழிவு வரும் என்பது ஏலிக்குத் தெரியும். தேவனுடைய மனுஷன் இந்தத் துர்ச்செய்தியை ஏலிக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கிறார். சாமுவேல் மூலமாகவும் ஏலி கர்த்தருடைய செய்தியை அறிந்திருக்கிறார்.

ஏலி தொண்ணூற்றெட்டு வயதுள்ளவளவராயிருக்கிறார்; ஏலி இஸ்ரவேலை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தார். அவர் பார்க்கக்கூடாதபடிக்கு, அவருடைய கண்கள் மங்கலாயிருக்கிறது. ஊரெங்கும் புலம்புகிற இந்த சத்தத்தை ஏலி கேட்டபோது, படையிலிருந்து வந்த அந்த மனுஷன் ஏலியைப் பார்த்து, "படையிலிருந்து வந்தவன் நான்தான்; இன்றுதான் படையிலிருந்து ஓடிவந்தேன்" என்று சொல்லுகிறான். அப்பொழுது ஏலி அவனிடம், "என் மகனே, நடந்த காரியம் என்ன" (1சாமு 4:16) என்று கேட்கிறார்.

ஏலி ஒரு கெட்ட செய்தியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். தேவனுடைய மனுஷன் ஏலியிடம் "இஸ்ரவேலுக்குச் செய்யப்படும் சகல நன்மைக்கும் மாறாக என் வாசஸ்தலத்திலே உபத்திரவத்தைக் காண்பாய்" (1சாமு 2:32) என்று சொல்லியிருந்தார். தேவனுடைய மனுஷன் சொன்ன செய்தி ஏலியின் இருதயத்தில் பதிந்திருக்கிறது. தேவனுடைய மனுஷன் சொன்ன பிரகாரமாக, ஏலி கர்த்தருடைய வாசஸ்தலத்திலே, ஒரு சத்துருவாகிய உபத்திரவத்தை எதிர்பார்க்கிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி யுத்தக்களத்திற்கு போவதற்கு முன்பாக அது ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தது. ஏலி அங்கே பிரதான ஆசாரியனாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் சீலோவிலிருக்கிற உடன்படிக்கைப் பெட்டியை யுத்தக்களத்திற்கு கொண்டுபோகவேண்டும் என்று சொன்னபோது, ஏலி அவர்களுடைய விண்ணப்பத்தை மறுத்திருக்கவேண்டும். தன்னுடைய அதிகாரத்தை அவர் சரியான முறையில் பயன்படுத்தி கர்த்தருடைய பெட்டியை பாதுகாத்திருக்கவேண்டும். ஆனால் ஏலி தன்னுடைய கடமையை செய்ய தவறிவிட்டார். ஆகையினால் தேவனுடைய பெட்டிக்காக ஏலியின் இருதயம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

விசுவாசிகள் தங்களுடைய சொந்தக் காரியங்களைவிட, கர்த்தருடைய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். உலகப்பிரகாரமான காரியங்கள் நம்முடைய இருதயத்திற்கு அருகாமையிலிருப்பதற்கு பதிலாக, ஆவிக்குரிய காரியங்களே நம்முடைய இருதயத்திற்கு அருகாமை யிலிருக்கவேண்டும். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. நாம் கர்த்தரைவிட எந்த மனுஷரையோ அல்லது எந்த பொருளையோ அதிகமாய் நேசிக்கக்கூடாது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாதுகாப்பாகயில்லை யென்றால் நமக்கும் பாதுகாப்பு இல்லை.

ஏலி பார்க்கக்கூடாதபடிக்கு அவருடைய கண்கள் மங்கலாயிருக்கிறது. ஆனாலும் அவருடைய செவிகள் தெளிவாகக் கேட்கிறது. ஊரெங்கும் புலம்புகிற சத்தத்தை ஏலி கேட்கிறார். அவர்கள் கண்ணீர் சிந்துவதை ஏலியால் பார்க்க முடியவில்லை. ஆனாலும் ஊரெங்கும் புலம்பல் உண்டாவதை அவரால் கேட்கமுடிகிறது. இது புலம்பலின் சத்தம் என்பதை ஏலி அறிந்துகொள்கிறார்.

அப்பொழுது, செய்தி கொண்டுவந்தவன் ஏலிக்கு பிரதியுத்தரமாக: "இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள்; ஜனங்களுக்குள்ளே பெரிய சங்காரம் உண்டாயிற்று; உம்முடைய குமாரராகிய ஓப்னி பினெகாஸ் என்னும் இருவரும் இறந்துபோனார்கள்; தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று" (1சாமு 4:17) என்று சொல்லுகிறான்.

பெலிஸ்தரோடு நடைபெற்ற யுத்தத்திலே இஸ்ரவேலர் முறிந்து, அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனது ஒரு சோகசம்பவம். இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் விழுந்து மகாபெரிய சங்காரம் உண்டானது அதைவிட சோகமான சம்பவம். ஏலியின் குமாரராகிய ஓப்னியும் பினெகாசும் இறந்துபோன செய்தி ஏலிக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாகயிருந்திருக்கும். ஏலி இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறார். இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்து ஓடிப்போன செய்தியைக் கேட்டு ஏலி வேதனைப்படுகிறார்.

ஏலியின் புத்திரர் இருவரும் பேலியாளின் மக்களாயிருந்தாலும், ஒரு தகப்பன் என்னும் ஸ்தானத்தில், ஏலி தன் இரண்டு குமாரர்மீதும் அன்பாயிருக்கிறார். தேவனுடைய மனுஷன் ஏலியினிடத்தில், "ஒருபோதும் உன் வீட்டில் ஒரு கிழவனும் இருப்பதில்லை" என்றும், "உன் வம்சத்திலுள்ள யாவரும் வாலவயதிலே சாவார்கள்" என்றும், "ஓப்னி பினெகாஸ் என்னும் உன் இரண்டு குமாரரின்மேல் வருவதே உனக்கு அடையாளமாயிருக்கும், அவர்கள் இருவரும் ஒரேநாளில் சாவார்கள்" (1சாமு 2:32-34) என்றும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை சத்தியமானது என்று ஏலிக்கு தெரியும். ஆனாலும் ஏலி தன்னுடைய இரண்டு குமாரரும் இறந்துபோனார்கள் என்னும் செய்தியைக் கேட்டு அதிகமாய்க் கலங்கவில்லை. "தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று" என்னும் செய்தி ஏலிக்கு பேரதிர்ச்சியாகயிருக்கிறது. படையிலிருந்து ஓடி வந்தவன், தேவனுடைய பெட்டியைக் குறித்துச் சொன்னவுடனே, ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுகிறார்; அவர் கிழவரும் ஸ்தூலித்தவருமாயிருந்தபடியால், அவர் பிடரி முறிந்து செத்துப் போகிறார் (1சாமு 4:18).

தன்னுடைய குமாரன் அப்சலோம் மரித்துப்போனபோது தாவீது மனங்கசந்து அழுதார். ஏலியோ, தன்னுடைய குமாரர் இருவரும் செத்துப்போன செய்தியைக் கேட்டு அழவில்லை. அதற்குப் பதிலாக அவர் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு என்ன ஆயிற்று என்பதை அறிந்துகொள்வதில் ஆர்வம் காண்பிக்கிறார். தன்னிடத்தில் செய்தியை சொல்லுகிற மனுஷனை ஏலி சந்தேகப்படவில்லை. அவன் ஒரு இஸ்ரவேலன். அவன் யுத்தத்தில் நடந்த சம்பவத்தை ஏலிக்கு சொல்லுகிறான்.

செய்தி கொண்டு வந்தவன் ஏலியிடம், "இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள்; ஜனங்களுக்குள்ளே பெரிய சங்காரம் உண்டாயிற்று; உம்முடைய குமாரராகிய ஓப்னி பினெகாஸ் என்னும் இருவரும் இறந்துபோனார்கள்" என்று சொல்லிவிட்டு, "ஆனாலும், தேவனுடைய பெட்டி பாதுகாப்பாயிருக்கிறது, நாங்கள் அந்தப் பெட்டியை சீலோவுக்கு பத்திரமாக திரும்ப கொண்டு வந்திருக்கிறோம்" என்று சொல்லியிருந்திருப்பானென்றால், ஏலி சந்தோஷப்பட்டிருப்பார். அதிர்ச்சியினால் செத்துப்போயிருக்கமாட்டார். யுத்தத்திலே ஏராளமானோர் செத்துப்போனாலும், தன்னுடைய இரண்டு குமாரரும் அங்கே செத்துப்போனாலும், கர்த்தருடைய பெட்டி பாதுகாப்பாக இருக்கிறது என்பதை கேள்விப்பட்டு ஏலி ஆறுதலடைந்திருப்பார். ஆனால் யுத்தத்தில் அப்படிப்பட்ட சம்பவம் நடைபெறவில்லை.

படையிலிருந்து செய்தி கொண்டு வந்தவன், யுத்தத்தில் நடந்த ஒவ்வொரு காரியமாகச் சொல்லிவிட்டு கடைசியில் "தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று" என்று சொல்லுகிறான். இந்தச் செய்தி ஏலியின் இருதயத்தை நொறுக்கிப்போடுகிறது. இந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுகிறார். அவர் பிடரி முறிந்து செத்துப்போகிறார். முதலாவதாக ஏலியின் இருதயம் உடைகிறது. அதன் பின்பு அவருடைய பிடரி முறிந்துபோகிறது.

ஏலியின் குமாரர் இருவரும் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய மதியீனத்தினிமித்தமாயும், துன்மார்க்கத்தினிமித்தமாயும் ஏலிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் அழிவு உண்டாயிற்று. கர்த்தருடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று. தன்னுடைய குமாரன் இருவரும் இறந்துபோன செய்தியை கேட்டு, ஏலி அதிர்ச்சியினால் செத்துப்போகவில்லை. தேவனுடைய பெட்டி பிடிபட்டுப்போயிற்று என்னும் செய்தியைக் கேட்டவுடனேயே அவர் அதிர்ச்சியினால் செத்துப்போகிறார்.

ஏலி தன்னுடைய குமாரரை ஒழுக்கமாய் வளர்த்திருந்தால், அவர்களை கண்டித்து திருத்தியிருந்தால், அவருக்கும், அவருடைய குடும்பத்திற்கும் இப்படிப்பட்ட சோகம் வந்திருக்காது. கர்த்தருடைய கோபமான நியாயத்தீர்ப்பும் ஏலியின் குடும்பத்தார்மீது வந்திருக்காது. பிள்ளைகள் மூலமாய் பெற்றோருக்கு ஆசீர்வாதம் வருவதற்கு வாய்ப்பிருப்பதுபோலவே, சாபமும் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. சந்தோஷம் வருவதற்கு வாய்ப்பிருப்பதுபோலவே, துக்கம் வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

பினெகாசின் மனைவி
1சாமு 4:19-22

1சாமு 4:19. பினெகாசின் மனைவியாகிய அவன் மருமகள் நிறைகர்ப்பிணியாயிருந்தாள்; அவள் தேவனுடைய பெட்டி பிடிபட்ட செய்தியையும், தன் மாமனும் தன் புருஷனும் இறந்து போனதையும் கேள்விப்பட்டபோது, அவள் கர்ப்பவேதனைப்பட்டு குனிந்து பிரசவித்தாள்.

1சாமு 4:20. அவள் சாகப்போகிற நேரத்தில் அவளண்டையிலே நின்ற ஸ்திரீகள்: நீ பயப்படாதே, ஆண்பிள்ளையைப் பெற்றாய் என்றார்கள்; அவளோ அதற்கு ஒன்றும் சொல்லவுமில்லை, அதின்மேல் சிந்தைவைக்கவுமில்லை.

1சாமு 4:21. தேவனுடைய பெட்டி பிடிபட்டு, அவனுடைய மாமனும் அவனுடைய புருஷனும் இறந்துபோனபடியினால், அவள்: மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று என்று சொல்லி, அந்தப் பிள்ளைக்கு இக்கபோத் என்று பேரிட்டாள்.

1சாமு 4:22. தேவனுடைய பெட்டி பிடிபட்டுப் போனபடியினால், மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப்போயிற்று என்றாள்.

ஏலியின் குடும்பத்தில் மற்றொரு சோகசம்பவம் நடைபெறுகிறது. பினெகாசின் மனைவியாகிய ஏலியின் மருமகள் நிறைகர்ப்பிணியாயிருக்கிறாள்; அவள் தேவனுடைய பெட்டி பிடிபட்ட செய்தியையும், தன் மாமனும் தன் புருஷனும் இறந்து போன செய்தியை கேள்விப்பட்டபோது, அவள் கர்ப்பவேதனைப்பட்டு குனிந்து பிரசவிக்கிறாள் (1சாமு 4:19).

பினெகாசின் மனைவி நற்குணமுள்ளவள். அவள் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறாள். தன் மாமனாராகிய ஏலியின்மீதும், தன் புருஷன் பினெகாசின்மீதும் அவள் அன்பாயிருக்கிறாள். தன் மாமனும் தன் புருஷனும் இறந்துபோன செய்தி அவளுக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. தேவனுடைய பெட்டி பிடிப்பட்ட செய்தி இதைவிட பெரிய வேதனையை அவளுக்குக் கொடுக்கிறது. அந்த வேதனையை அவளால் தாங்க முடியவில்லை.

அவள் இப்போது நிறைமாத கர்ப்பிணியாயிருக்கிறாள். கர்ப்ப வேதனையும், தன் குடும்பத்தில் ஏற்பட்ட வேதனையும், தேவனுடைய பெட்டி பிடிப்பட்ட வேதனையும் மொத்தமாய் சேர்ந்து பினெகாசின் மனைவியை வேதனைப்பட வைக்கிறது. அந்த வேதனைகளை தாங்க முடியாமல் அவள் கர்ப்ப வேதனைப்பட்டு குனிந்து பிரசவிக்கிறாள்.

பினெகாசின் மனைவிக்கு பிள்ளையைப் பெற்றெடுப்பதற்கு சரீர பெலம் இருக்கிறது. ஆனாலும் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பேரிழப்புகளை நினைத்து, அவள் மிகவும் வேதனைப்படுகிறாள். அவளுடைய குடும்பத்தார் செத்துப்போனார்கள். தேவனுடைய பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று. பினெகாசின் மனைவியும் செத்துப்போகிறாள்.

அவள் சாகப்போகிற நேரத்தில் அவளண்டையிலே நின்ற ஸ்திரீகள்: "நீ பயப்படாதே, ஆண்பிள்ளையைப் பெற்றாய்" என்று சொல்லுகிறார்கள்; அவளோ அதற்கு ஒன்றும் சொல்லவுமில்லை, அதின்மேல் சிந்தைவைக்கவுமில்லை (1சாமு 4:20).

பினெகாசின் மனைவி இரக்ககுணமுள்ளவள். தன்னுடைய மாமனும் தன்னுடைய புருஷனும் இறந்து போன செய்தியைக் கேட்டு அவள் மிகவும் வேதனைப்படுகிறாள். அவள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறாள். தேவனுடைய பெட்டி பிடிப்பட்ட செய்தியைக் கேட்டு, "மகிமை இஸ்ரவேலைவிட்டு போயிற்று" என்று சொல்லுகிறாள்.

பினெகாசின் மனைவி ஒரு ஆண்பிள்ளையை பெற்றெடுக்கிறாள். இதுவே அவளுடைய முதல் பிள்ளையாயிருக்கவேண்டும். ஆனால் அவளோ அந்தப் பிள்ளையின்மேல் சிந்தை வைக்கவில்லை. அவள் செத்துப்போகிறாள். அவள் பெற்ற முதல் பிள்ளையே, அவளுடைய கடைசி பிள்ளையாயிற்று.

தேவனுடைய பெட்டி பிடிபட்டுப்போனாலும், பினெகாசின் மனைவி ஆண்பிள்ளையை பெற்றெடுத்ததினால், அவள் அதை நினைத்து சந்தோஷப்பட்டிருக்கலாம். ஆனால் அவளுக்கு தான் பெற்ற பிள்ளையின் மூலமாய் சந்தோஷமுண்டாகவில்லை. உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டுப்போயிற்று என்னும் வேதனையே அவளுடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கிறது.

பினெகாசின் மனைவிக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்திருக்கிறது. இஸ்ரவேலிலுள்ள சீலோவிலே, பினெகாசின் மனைவியின் மூலமாய் புதிதாக ஒரு ஆண்பிள்ளை பிறந்திருக்கிறது. ஆனால் தேவனுடைய பெட்டியோ சீலோவிலிருந்து போய்விட்டது. அது பெலிஸ்தருடைய தேசத்திலே சிறைப்பிடிக்கப்பட்டது போலிருக்கிறது. "தேவனுடைய பெட்டி பிடிபட்டுப் போனபடியினால், மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப்போயிற்று" (1சாமு 4:22) என்று பினெகாசின் மனைவி வேதனையோடு சொல்லுகிறாள்.

தேவனுடைய பெட்டி பிடிபட்டுப்போனபடியினால் இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் துக்கமுண்டாயிற்று. கர்த்தருடைய பெட்டியே இஸ்ரவேலுக்கு மகிமை. தேவனுடைய பெட்டி பிடிபட்டுப்போனபடியினால் மகிமை இஸ்ரவேலை விட்டுப்போயிற்று என்று சொல்லி, பினெகாசின் மனைவி, தான் பெற்றெடுத்த பிள்ளைக்கு, "இக்கபோத்" என்று பேரிடுகிறாள்.

"இக்கபோத்" என்னும் பேருக்கு, "மகிமை எங்கே" அல்லது "மகிமை இல்லை" என்று பொருள். பினெகாசின் மனைவி சாகும்போது, தன் மகனுக்கு, இக்கபோத் என்று பேரிட்டு, அதற்கான அர்த்தத்தையும் சொல்லுகிறாள். கர்த்தர் போய்விட்டால் மகிமையும் போய்விடும். எல்லா நன்மைகளும் போய்விடும்.

5 அதிகாரம்

பெலிஸ்தரோடு நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேலருக்கு தோல்வி உண்டாயிற்று. பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தங்களுடைய தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய பெட்டியை திரும்பவும் தங்கள் தேசத்திற்கு மீட்டுக்கொண்டு வர எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. கர்த்தருடைய பெட்டி போனால் போகட்டும் என்று அசட்டையாயிருந்துவிடுகிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேலின் மகிமைக்கு அடையாளம். தேவனுடைய பெட்டி பிடிபட்டுப்போன படியினால், மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப்போயிற்று என்று இக்கபோத்தின் மனைவி சொன்னாள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களைவிட்டு விலகிப்போன கர்த்தருடைய மகிமையைப்பற்றி சிறிதும் கவலைப்படவில்லை.

கர்த்தர் எரிச்சலுள்ள தேவன். அவர் தம்முடைய மகிமையை யாரோடும் பகிர்ந்து கொள்ளமாட்டார். தம்முடைய மகிமையை எப்படி காத்துக்கொள்ளவேண்டும் என்று கர்த்தருக்கு தெரியும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பெட்டியை மீட்பதற்கு ஒன்றும் செய்யாமல் அசட்டையாயிருக்கும்போது, கர்த்தர் தம்முடைய மகிமையை நிலை நிறுத்துவதற்கு கிரியை செய்ய ஆரம்பிக்கிறார்.

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து அதை தாகோனின் கோவிலிலே கொண்டு வந்து வைக்கிறார்கள் (1சாமு 5:1,2). தாகோன் பெலிஸ்தரின் தெய்வம். இஸ்ரவேலரோடு நடைபெற்ற யுத்தத்திலே, தங்கள் தெய்வமாகிய தாகோனே, தங்களுக்கு வெற்றியைக் கொடுத்தது என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். இதற்காக கர்த்தருடைய பெட்டியை தாகோனண்டையில் வைத்து, தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள் (1சாமு 5:3-5).

கர்த்தர் பெலிஸ்தரை வாதிக்கிறார். கர்த்தருடைய கை பெலிஸ்தர்மேல் பாரமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களை மூலவியாதியினால் வாதிக்கிறார் (1சாமு 5:6,7). முதலாவதாக அஸ்தோத் ஊரிலுள்ள பெலிஸ்தருக்கு வாதை வருகிறது. அதன் பின்பு அந்த வாதை காத் ஊராருக்கும் வருகிறது (1சாமு 5:8,9). முடிவாக எக்ரோன் ஊராருக்கும் மூல வியாதி வருகிறது. பெலிஸ்தர் எல்லோரும் தேவனுடைய பெட்டியை அதின் ஸ்தானத்திற்கு திரும்ப அனுப்பிவிட வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

தாகோனின் கோவில் 1சாமு 5:1-5

1சாமு 5:1. பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, அதை எபெனேசரிலிருந்து அஸ்தோத்திற்குக் கொண்டு போனார்கள்.

1சாமு 5:2. பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, தாகோனின் கோவிலிலே கொண்டுவந்து, தாகோனண்டையிலே வைத்தார்கள்.

1சாமு 5:3. அஸ்தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது; அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து, அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்தினார்கள்.

1சாமு 5:4. அவர்கள் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடந்தது; தாகோனுக்கு உடல்மாத்திரம் மீதியாயிருந்தது.

1சாமு 5:5. ஆதலால் இந்நாள்வரைக்கும் தாகோனின் பூஜாசாரிகளும் தாகோனின் கோவிலுக்குள் பிரவேசிக்கிற யாவரும் அஸ்தோத்திலிருக்கிற தாகோனுடைய வாசற்படியை மிதிக்கிறதில்லை.

இஸ்ரவேலரோடு நடைபெற்ற யுத்தத்தில் பெலிஸ்தருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. பெலிஸ்தர் தங்கள் வெற்றியை சந்தோஷமாகக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பெட்டியையும் பிடித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேலரின் பாளயத்தில் வந்தபோது, பெலிஸ்தர் பயந்தார்கள் (1சாமு 4:7). ஆனால் இப்போதோ அவர்கள் கர்த்தருடைய பெட்டியை பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். தேவனுடைய பெட்டியை சிறைப்பிடித்துவிட்டோம் என்று நினைத்து பெலிஸ்தர் சந்தோஷப்படுகிறார்கள்.

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, அதை எபெனேசரிலிருந்து அஸ்தோத்திற்குக் கொண்டு போகிறார்கள். பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, தாகோனின் கோவிலிலே கொண்டுவந்து, தாகோனண்டையிலே வைக்கிறார்கள் (1சாமு 5:1,2).

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை உடைத்துப்போடவில்லை. அதை அசுத்தப்படுத்தவில்லை. அதை மிகவும் கவனமாக தூக்கிக்கொண்டு வருகிறார்கள். தேவனுடைய பெட்டி இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த இடமாகிய எபினேசரில் இருந்தது. பெலிஸ்தரோ அந்தப் பெட்டியை எபினேசரிலிருந்து அஸ்தோத்திற்கு கொண்டு போகிறார்கள்.

பெலிஸ்தருக்கு ஐந்து பிரதான பட்டணங்கள் இருக்கிறது. அவற்றில் அஸ்தோத்தும் ஒன்றும். அஸ்தோத்திலே பெலிஸ்தரின் தெய்வமாகிய தாகோனுக்கு ஒரு கோவில் இருக்கிறது. பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை பிடித்து, தாகோனின் கோவிலிலே கொண்டு வந்து, அதை தாகோனண்டையில் வைக்கிறார்கள்.

பெலிஸ்தர் தாகோனைக் கனம்பண்ணுகிறார்கள். தேவனுடைய பெட்டியை தாகோனின் கோவிலிலே கொண்டு வந்து வைப்பதினால், தாங்கள் தாகோனுக்கு பரிசுத்தமான காரியத்தை செய்வதாக நினைக்கிறார்கள். இதன் மூலமாக தாங்கள் தாகோனைக் கனம்பண்ணி, அதற்கு மரியாதை செலுத்துவதாகவும் நினைக்கிறார்கள்.

புறஜாதி ஜனங்கள் அநேக விக்கிரகங்களை ஆராதிப்பார்கள். அவர்களிடத்தில் பல தெய்வங்களை ஆராதிக்கும் வழக்கம் இருக்கும். அவர்களுடைய விக்கிரகங்களும் பல தெய்வ வணக்கத்தைப்பற்றி ஒன்றும் நினைப்பதில்லை. புறஜாதியார் பொதுவாக தங்கள் தெய்வங்களை மாற்றமாட்டார்கள். ஆனால் தெய்வங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வார்கள். புதிய தெய்வங்களையும் தங்களுடைய கோவிலிலே கொண்டு வந்து வைத்து, அதையும் ஆராதிப்பார்கள்.

பெலிஸ்தருக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிய சத்தியம் தெரியாது. கர்த்தர் பரிசுத்தர். அவர் எரிச்சலுள்ள தேவன். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே. கர்த்தரைத் தவிர வேறு தெய்வம் ஒன்றுமில்லை. கர்த்தர் தம்முடைய மகிமையை வேறு எந்த புறஜாதி தெய்வத்தோடும் பகிர்ந்து கொள்ளமாட்டார். ஆனால் பெலிஸ்தரோ கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தாகோனண்டையில் வைத்து, தாகோனையும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் ஆராதிக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

கர்த்தரை தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் கர்த்தரை மாத்திரம் ஆராதிக்கவேண்டும். கர்த்தரை ஆராதிக்கும் போது, அந்நிய தெய்வங்களையும் சேர்த்து ஆராதிப்பதை கர்த்தர் அங்கீகரிப்பதில்லை. அது கர்த்தருடைய ஆராதனையுமல்ல.

பெலிஸ்தருக்கு இஸ்ரவேல் புத்திரர்மீது நடைபெற்ற யுத்தத்திலே வெற்றி கிடைத்திருக்கிறது. தங்கள் தெய்வமாகிய தாகோனை இந்த வெற்றிக்கு காரணம் என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். அவர்கள் தாகோனைக் கனம்பண்ண விரும்புகிறார்கள். இதற்காக இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த எபினேசரிலிருந்து, தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை, அஸ்தோத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். தங்களுக்கு யுத்தத்திலே கிடைத்த வெற்றிக்கு அடையாளச்சின்னமாக, தேவனுடைய பெட்டியை தாகோனண்டையிலே காணிக்கையாகப் படைக்கிறார்கள். கர்த்தரைவிட தாகோனே பெரியவர் என்று நினைத்து பெலிஸ்தர் தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையைப் புறக்கணித்து, அதை மீறிவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். உடன்படிக்கைப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேலரோ கர்த்தரை விட்டு விலகிப்போனதினால், அவர்களுக்கு உடன்படிக்கைப் பெட்டியின் முக்கியத்துவம் தெரியவில்லை.

கர்த்தரும், அவருடைய உடன்படிக்கைப் பெட்டியும் ஒன்றல்ல. உடன்படிக்கைப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இதை பரிசுத்தமான அடையாளம் என்று சொல்லலாம். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. அவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்தமுமில்லை. அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு பரிசுத்த அடையாளமாயிருக்கும், உடன்படிக்கைப் பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தரையும் கனம்பண்ணவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைக் கனம்பண்ணாததினால், கர்த்தருடைய மகிமை ஒருபோதும் குறைந்துபோகப் போவதில்லை. அவர் எப்போதும் மகிமையுள்ளவர். கர்த்தர் சர்வவல்லமையும், சர்வமகிமையும் உள்ள தேவன். மனுஷர் கர்த்தரைக் கனம்பண்ணினாலும், கனம்பண்ணாவிட்டாலும், கர்த்தர் கனமும் மகிமையுமுள்ளவராகவே இருக்கிறார்.

பெலிஸ்தர் கர்த்தரைக் கனம்பண்ணமாட்டார்கள். அவர்கள் புறஜாதி ஜனங்கள். அவர்கள் தாகோனைக் கனம்பண்ணுகிறார்கள். கர்த்தரைவிட தாகோனே கனமுள்ளவர் என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். கர்த்தரோ தம்மை கனவீனம்பண்ணுகிற பெலிஸ்தர் மத்தியிலே, தம்முடைய கனத்தையும், மகிமையையும் வெளிப்படுத்த விரும்புகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலரைத் தண்டித்தார். இஸ்ரவேலருக்கு பெலிஸ்தரோடு நடைபெற்ற யுத்தத்தில் தோல்வி உண்டாயிற்று. இஸ்ரவேலர் சீலோவிலிருந்த கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, யுத்தகளமாகிய எபனேசருக்கு கொண்டு வந்தார்கள். ஆனால் இஸ்ரவேலர் கர்த்தரைக் கனம்பண்ணவில்லை. கர்த்தருடைய பெட்டியை பாதுகாக்கவில்லை. கர்த்தருடைய பெட்டியை எபனேசரிலேயே விட்டுவிட்டு, தங்களுடைய ஜீவனை காப்பாற்றிக்கொள்வதற்காக தப்பித்து ஓடிப்போய்விட்டார்கள். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை பெலிஸ்தருடைய கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேலரையும் தண்டிக்கிறார். பெலிஸ்தரையும் தண்டிக்கிறார். இஸ்ரவேலர் கர்த்தரைக் கனம்பண்ணவில்லை. பெலிஸ்தர் கர்த்தரை கனவீனம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கை பெலிஸ்தர்மேல் பாரமாயிருக்கிறது.

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, தாகோனின் கோவிலிலே கொண்டுவந்து, தாகோனண்டையிலே வைக்கிறார்கள். அஸ்தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடக்கிறது; அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து, அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்துகிறார்கள் *(1சாமு 5:2,3).*

பெலிஸ்தர் மறுநாள் காலமே எழுந்திருந்து, தாகோனின் கோவிலிலே, தாகோனை ஆராதிப்பதற்காக வருகிறார்கள். இஸ்ரவேலருக்கு விரோதமான யுத்தத்திலே, தாகோன் தங்களுக்கு வெற்றியைக் கொடுத்தார் என்று நினைத்து, தாகோனை சந்தோஷமாய் ஆராதிக்க வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய சந்தோஷம் நிலைக்கவில்லை. தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து கிடக்கிறது.

"துன்மார்க்கனின் கெம்பீரம் குறுகினது என்பதையும், மாயக்காரனின் சந்தோஷம் ஒரு நிமிஷமாத்திரம் நிற்கும் என்பதையும், அவர் மனுஷனைப் பூமியில் வைத்த ஆதிகாலமுதல் இப்படியிருக்கிறது என்பதையும் நீர் அறியீரோ?" *(யோபு 20:4,5).*

தாகோன் ஒரு விக்கிரகம். தரையிலே முகங்குப்புற விழுந்துகிடக்கிற தாகோனை, மறுபடியும் அதன் ஸ்தானத்திலே தூக்கி நிறுத்துவது மிகவும் கஷ்டமான வேலை. இதை அதிக கவனத்தோடு செய்யவேண்டும். விக்கிரகங்களை செய்வதும், அதை அதன் ஸ்தானத்தில் ஸ்தாபிப்பதும் மிகவும் கடினமான வேலை என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார்.

"சித்திரவேலைக்காரன் தட்டானையும், சுத்தியாலே மெல்லிய தகடு தட்டுகிறவன் அடைகல்லின்மேல் அடிக்கிறவனையும் உற்சாகப்படுத்தி, இசைக்கிறதற்கான பக்குவமென்று சொல்லி, அது அசையாதபடிக்கு அவன் ஆணிகளால் அதை இறுக்குகிறான்" *(ஏசா 41:7)*.

"பையிலிருக்கிற பொன்னைக்கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலிபொருத்திக்கொள்ளுகிறார்கள்; அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்; அதை வணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள். அதைத் தோளின்மேல் எடுத்து, அதைச்சுமந்து, அதை அதின் ஸ்தானத்திலே வைக்கிறார்கள்; அங்கே அது நிற்கும்; தன் இடத்தைவிட்டு அசையாது; ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறுஉத்தரவு கொடுக்கிறதுமில்லை, அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை" *(ஏசா 46:6,7)*.

தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து கிடக்கிறது. பெலிஸ்தர் தாகோனை எடுத்து, அதை அதின் ஸ்தானத்தில் திரும்பவும் நிறுத்துகிறார்கள். மிகவும் கஷ்டப்பட்டு இந்த வேலையை செய்கிறார்கள்.

தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்ததுபோல, சாத்தானுடைய ராஜ்யமும், இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்துகிடக்கும். சத்தியத்திற்கு முன்பாக பொய் கீழே விழுந்து கிடக்கும். தெய்வபக்திக்கு முன்பாக அவபக்தி கீழே விழுந்து கிடக்கும். விசுவாசமுள்ளவர்களின் இருதயத்தில் காணப்படுகிற கிருபைக்கு முன்பாக துன்மார்க்கரின் அநீதியும் அக்கிரமமும் கீழே விழுந்து கிடக்கும்.

சில சமயங்களில் கர்த்தருடைய உபதேசம் கீழே விழுந்து கிடப்பதுபோல தெரிகிறது. ஊழியக்காரர்கள் சோர்வடைந்து, ஊழியத்தை விட்டு விடுகிற நிலமைக்கு வந்துவிடுகிறார்கள். சத்தியம் ஜெயிக்குமா என்னும் சந்தேகம் வந்துவிடுகிறது. நம்முடைய விசுவாசமும் குறைந்துபோகிறது. கர்த்தருடைய உபதேசம் கீழே விழுந்தாலும் அது மறுபடியும் எழுந்திருக்கும். விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், சில சமயங்களில் தோல்வி ஏற்பட்டாலும், முடிவிலே நமக்கு வெற்றி கிடைக்கும். நாம் ஆராதிக்கிற கர்த்தர் ஜெயக்கிறிஸ்துவாயிருக்கிறார். அவர் நமக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

அஸ்தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்திருந்து தாகோனின் கோவிலுக்குள் வருகிறார்கள். அவர்களோடு கூட தாகோனின் பூஜாசாரிகளும் வருகிறார்கள். தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து கிடப்பதை அவர்கள் பார்க்கிறார்கள். தாகோனை அதன் ஸ்தானத்தில் திரும்ப நிறுத்த வேண்டும் என்று தீர்மானித்து, அவசரம் அவசரமாக தூக்கி நிறுத்துகிறார்கள்.

பெலிஸ்தரே தாகோனை செய்தார்கள். அந்தத் தாகோனால் நிற்ககூட முடியவில்லை. அது கீழே விழுந்து கிடக்கிறது. கீழே விழுந்து கிடக்கிற தாகோனால், தானாகவே மறுபடியும் தன்னுடைய ஸ்தானத்தில் திரும்ப எழுந்து நிற்கமுடியவில்லை. மனுஷர் அதை அதன் ஸ்தானத்தில் திரும்ப நிறுத்த வேண்டியதாயிருக்கிறது. பெலிஸ்தரின் தெய்வத்திற்கு மனுஷருடைய உதவி தேவைப்படுகிறது. தாகோனுக்கு ஜீவனுமில்லை பெலனுமில்லை. ஆனாலும் இந்த தாகோன்தான், தங்களுக்கு இஸ்ரவேல் புத்திரர்மீது ஜெயத்தைக் கொடுத்தது என்று பெலிஸ்தர் நம்புகிறார்கள்.

தாகோனால் பெலிஸ்தருக்கு உதவிசெய்ய முடியாது. தாகோனுக்கு பெலிஸ்தரின் உதவி தேவைப்படுகிறது. தரையிலே முகங்குப்புற விழுந்துகிடக்கிற தாகோனை, பெலிஸ்தர் அதன் ஸ்தானத்தில் திரும்ப நிறுத்தவில்லையென்றால், அது நிரந்தரமாக கீழே விழுந்து கிடக்கும்.

தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து கிடக்கிறது. ஆனால் பெலிஸ்தரோ கர்த்தருடைய பெட்டியைப் பிடித்துவிட்டதாக பெருமைப்படுகிறார்கள். தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள். தன்னால் நிற்க முடியாத தாகோனால், கர்த்தருக்கு விரோதமாய் எதிர்த்து நிற்க முடியாது.

தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்தாலும், அதுவே தங்களுடைய தெய்வம் என்று பெலிஸ்தர் இன்னும் நம்புகிறார்கள். ஆகையினால் அவர்கள் தங்கள் தெய்வத்தை அதன் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்துகிறார்கள்.

பெலிஸ்தர்கள் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடக்கிறது; தாகோனுக்கு உடல்மாத்திரம் மீதியாயிருக்கிறது (1சாமு 5:4).

தாகோன் இரண்டாம் நாளும் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து கிடக்கிறது. இந்த முறை தாகோனுக்கு அதிக சேதமுண்டாயிற்று. தாகோனின் தலையும், அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைப்பட்டுக் கிடக்கிறது. தாகோனுக்கு உடல் மாத்திரம் மீதியாயிருக்கிறது.

தாகோன் இரண்டு பகுதியாக செய்யப்பட்டிருக்கிறது. அதன் மேலே உள்ள பகுதி மனுஷரூபத்திலும், கீழே உள்ள பகுதி மீனின் ரூபத்திலும் இருக்கிறது. தாகோனுக்கு மனுஷனுக்கு இருப்பதுபோல தலையும் கைகளும் இருக்கிறது. தாகோனுக்கு மீனுக்கு இருப்பதுபோல வால் இருக்கிறது. அதற்கு கால் இல்லை. இப்போது தாகோனின் மனுஷ பகுதி வாசற்படியின்மேல் உடைபட்டு கிடக்கிறது. தாகோனின் மீன் பகுதி மாத்திரம் உடையாமல் அப்படியே இருக்கிறது.

பெலிஸ்தரே தகோனே செய்திருக்கிறார்கள். தங்களுடைய சுயகற்பனையின் பிரகாரம், தாகோனுக்கு மனுஷரூபத்தையும் மீன் ரூபத்தையும் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மனுஷரூபமும் மீன் ரூபமும் வெவ்வேறாக பிரிந்து கிடக்கிறது. மனுஷனால் ஒட்ட வைக்கப்பட்டது நிலைத்திருக்கவில்லை.

பெலிஸ்தர் தாகோனை பார்வைக்கு அழகான ரூபத்தோடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த தாகோனுக்கு ஜீவனுமில்லை பெலனுமில்லை. தாகோனால் தன்னுடைய ஸ்தானத்தில் நிற்கக்கூட முடியவில்லை. அப்படிப்பட்ட தாகோனை பெலிஸ்தர் தங்கள் தெய்வமாக நம்புகிறார்கள்.

தாகோனுடைய தலையும் அதன் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டு கிடக்கிறது. தலையில் மூளையிருக்கும். தாகோனுடைய தலை உடைந்துபோனதினால், தாகோனுக்கு புத்தியுமில்லை அறிவுமில்லை ஞானமுமில்லை, மூளையுமில்லை. தாகோனுடைய இரண்டு கைகளும் உடைந்துகிடக்கிறது. கைகள் பலத்திற்கும் வல்லமைக்கும் அடையாளம். தாகோனின் கைகள் உடைந்துபோனபடியினால் தாகோனுக்கு வல்லமையுமில்லை, பெலனுமில்லை.

தன்னை ஆராதிக்கிறவர்களுக்கு தாகோனால் ஒரு உதவியும் செய்ய முடியாது. ஞானமில்லாத தாகோனால் பெலிஸ்தருக்கு ஞானமுள்ள ஆலோசனைகளைச் சொல்ல முடியாது. கைகளில்லாத தாகோனால், தன்னை ஆராதிக்கிற பெலிஸ்தருக்கு உதவி செய்யவும் முடியாது. பெலிஸ்தர் மாயையை நம்புகிறார்கள்.

தாகோனின் தலையும் அதன் இரண்டு கால்களும் வாசற்படியின்மேல் உடைபட்டு கிடந்ததினால், பெலிஸ்தர் அந்த வாசற்படியை ஒரு பரிசுத்தமான ஸ்தலமாகவும், ஒரு புனிதமான பொருளாகவும் நினைக்கிறார்கள்.

ஆதலால் இந்நாள்வரைக்கும் தாகோனின் பூஜாசாரிகளும் தாகோனின் கோவிலுக்குள் பிரவேசிக்கிற யாவரும் அஸ்தோத்திலிருக்கிற தாகோனுடைய வாசற்படியை மிதிக்கிறதில்லை (1சாமு 5:5).

செப்பனியா தாகோனை ஆராதிக்கிறவர்களின் மதியீனத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

"நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேரையும், வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும், கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்" (செப் 1:4-6).

பெலிஸ்தர் தாகோனையும் ஆராதிக்கிறார்கள். தாகோனின் தலையை உடைத்த வாசற்படியையும் ஆராதிக்கிறார்கள். தாகோனுக்கு ஞானமில்லாததுபோல, அதை ஆராதிக்கிற பெலிஸ்தருக்கும் ஞானமில்லை. அவர்கள் வாசற்படியில் உடைபட்டுக் கிடக்கிற தாகோனையும் புறக்கணிக்கவேண்டும். தாகோனின் தலையை உடைத்த வாசற்படியையும் புறக்கணிக்கவேண்டும். ஆனால் பெலிஸ்தரோ எதையும் ஆராதிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனக்கண்கள் குருடாயிருக்கிறது.

மூலவியாதி
1சாமு 5:6-12

1சாமு 5:6. அஸ்தோத் ஊராரைப் பாழாக்கும்படிக்கு கர்த்தருடைய கை அவர்கள் மேல் பாரமாயிருந்தது; அவர் அஸ்தோத்தின் ஜனங்களையும், அதின் எல்லைகளுக்குள் இருக்கிறவர்களையும் மூலவியாதியினால் வாதித்தார்.

1சாமு 5:7. இப்படி நடந்ததை அஸ்தோத்தின் ஜனங்கள் கண்டபோது: இஸ்ரவேலின் தேவனுடைய கை நமது மேலும், நம்முடைய தேவனாகிய தாகோனின்மேலும் கடினமாயிருக்கிறபடியால், அவருடைய பெட்டி நம்மிடத்தில் இருக்கலாகாது என்று சொல்லி;

1சாமு 5:8. பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் அழைப்பித்து, தங்களண்டையிலே கூடிவரச்செய்து: இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள்: இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை காத் பட்டணமட்டும் எடுத்துச் சுற்றிக்கொண்டு போகவேண்டும் என்றார்கள்; அப்படியே இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை எடுத்துச் சுற்றிக் கொண்டுபோனார்கள்.

1சாமு 5:9. அதை எடுத்துச் சுற்றிக்கொண்டு போனபின்பு, கர்த்தருடைய கை அந்தப் பட்டணத்தின்மேல் மகா உக்கிரமாக இறங்கிற்று; அந்தப் பட்டணத்தின் மனுஷருக்குள், சிறியவர் துவக்கிப் பெரியவர்மட்டும், மூலவியாதியை உண்டாக்கி, அவர்களை வாதித்தார்.

1சாமு 5:10. அதினால் அவர்கள் தேவனுடைய பெட்டியை எக்ரோனுக்கு அனுப்பினார்கள்; தேவனுடைய பெட்டி எக்ரோனுக்கு வருகிறபோது, எக்ரோன் ஊரார்: எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோட, இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை எடுத்து, எங்களண்டைக்குச் சுற்றிக் கொண்டு வந்தார்கள் என்று கூக்குரலிட்டார்கள்.

1சாமு 5:11. அவர்கள் பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் கூடிவரும்படி அழைத்து: இஸ்ரவேலின் தேவன் எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோடாதபடிக்கு, அவருடைய பெட்டியை அதின் ஸ்தானத்திற்குத் திரும்ப அனுப்பிவிடுங்கள் என்றார்கள்; அந்தப் பட்டணமெங்கும் சாவு மும்முரமாயிருந்தது; தேவனுடைய கை அங்கே மகா பாரமாயிருந்தது.

1சாமு 5:12. யுசத்துப்போகா திருந்தவர்கள் மூலவியாதியினால் வாதிக்கப்பட்டதினால், அந்தப் பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று.

தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்துகிடப்பதை பெலிஸ்தரும், அவர்களுடைய பூஜாசாரிகளும் பார்க்கிறார்கள். இது மாத்திரமல்ல, தாகோனின் தலையும், அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டு கிடப்பதையும், தாகோனுக்கு உடல் மாத்திரம் மீதியாயிருப்பதையும் பெலிஸ்தர் பார்க்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, தாகோன் தெய்வமல்ல என்பதையும், அது மனுஷருடைய கைகளால் செய்யப்பட்ட விக்கிரகம் என்பதையும், அதற்கு ஜீவனுமில்லை, பெலனுமில்லை என்பதையும் பெலிஸ்தர் புரிந்துகொள்ளவேண்டும்.

தாகோன் பரிதாபமாக கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்து, பெலிஸ்தர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவேண்டும். தங்களுடைய விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பவேண்டும். பெலிஸ்தர் ஒருவேளை கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருந்தால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வந்திருக்காது. கர்த்தர் தமது தயவையும் கிருபையையும், இரக்கத்தையும் பெலிஸ்தருக்கு காண்பித்திருப்பார்.

பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைப் பிடித்து, அதை தாகோனின் கோவிலிலே கொண்டு வந்து, தாகோனண்டையில் வைத்து, கர்த்தரைக் கனவீனம்பண்ணினார்கள். ஆனாலும் அவர்கள் தங்களைத் தாழ்த்தி, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருந்தால், கர்த்தர் அவர்களுடைய பாவங்களையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் மன்னித்திருப்பார். ஆனால் பெலிஸ்தரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. தாகோனை ஆராதிக்கும் விக்கிரகாராதனையில் உறுதியாயிருக்கிறார்கள்.

பெலிஸ்தருடைய பாவங்களினிமித்தமாக, அஸ்தோத் ஊராரைப் பாழாக்கும்படிக்கு கர்த்தருடைய கை அவர்கள் மேல் பாரமாயிருக்கிறது; கர்த்தர் அஸ்தோத்தின் ஜனங்களையும், அதின் எல்லைகளுக்குள் இருக்கிறவர்களையும் மூலவியாதியினால் வாதிக்கிறார் (1சாமு 5:6).

பெலிஸ்தருடைய மற்றொரு பட்டணமாகிய காத் பட்டணத்தின்மேல், கர்த்தருடைய கை மகா உக்கிரமாக இறங்கிற்று (1சாமு 5:9). பெலிஸ்தரின் மற்றொரு பட்டணமாகிய எக்ரோன் எங்கும் சாவு மும்முரமாயிருக்கிறது. தேவனுடைய கை அங்கே மகாபாரமாயிருக்கிறது (1சாமு 5:11).

கர்த்தர் பெலிஸ்தரை சங்காரம் பண்ணுகிறார். செத்துப்போகாதிருந்தவர்கள் மூலவியாதியினால் வாதிக்கப்பட்டதினால், அந்தப் பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று (1சாமு 5:12).

பெலிஸ்தருடைய தேசமெங்கும் கொள்ளை நோய் உண்டாயிற்று. கர்த்தர் அஸ்தோத் ஊரின் எல்லைக்குள் இருக்கிறவர்கள் எல்லோரையும் மூலவியாதியினால் வாதிக்கிறார் (1சாமு 5:6). காத் பட்டணத்தின் மனுஷருக்குள், கர்த்தர் சிறியவர் துவக்கிப் பெரியவர்மட்டும், மூலவியாதியை உண்டாக்கி, அவர்களை வாதிக்கிறார் (1சாமு 5:9). மூலவியாதியினால் உண்டான வேதனை மிகவும் அதிகமாயிருக்கிறது. இதனால் பெலிஸ்தருடைய கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று.

மூலவியாதி பெலிஸ்தருடைய பிறப்பு உறுப்பில் வந்திருக்கிறது. இந்த வேதனையை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தங்களுக்கு மூலவியாதியும், அதன் மூலமாய் மிகுந்த வேதனையும் உண்டானபோது, அவர்கள் தாகோனை நோக்கிக் கூப்பிடாமல், பரலோகத்தின் தேவனை நோக்கி கூக்குரலிடுகிறார்கள். மூலவியாதி வேதனையையும் கொடுக்கிறது. அந்த வியாதியினால் அவர்களுக்கு அவமானமும் உண்டாகிறது.

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை பிடித்து தாகோனின் கோவிலிலே கொண்டு, தாகோன் அண்டையில் வைத்தார்கள். அவர்கள் தங்கள் இருதயத்தில் பெருமைப்பட்டு, கர்த்தரை கனவீனம்பண்ணினார்கள். கர்த்தரோ அவர்களுடைய பெருமைகளை அழித்துப்போடுகிறார். அவர்களுடைய மனமேட்டிமையை அவர்களைவிட்டு நீக்கிப்போடுகிறார். கர்த்தர் பெலிஸ்தரை தாழ்த்துகிறார். தம்முடைய உடன்படிக்கைப் பெட்டியை கனவீனம் பண்ணின பெலிஸ்தரை, கர்த்தர் மூலவியாதியினால் வாதிக்கிறார்.

மூலவியாதி பெலிஸ்தருடைய தேசம் முழுவதும் கொள்ளைநோயைப்போல பரவுகிறது. அஸ்தோத்தின் ஜனங்கள் எல்லோருக்கும், அதன் எல்லைகளுக்குள் இருக்கிற யாவருக்கும் மூலவியாதி வந்திருக்கிறது. பெலிஸ்தருக்கு இதற்கு முன்பு இப்படிப்பட்ட வியாதி வந்ததில்லை. இது ஒரு புதிய வியாதி. இந்த வியாதியில் வேதனையும் அதிகமாயிருக்கிறது.

அஸ்தோத் ஊராரை பாழாக்கும்படிக்கு கர்த்தருடைய கை பெலிஸ்தர்மேல் பாரமாயிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனுடைய கரம் தங்கள்மேலும், தங்கள் தேவனாகிய தாகோனின் மேலும் கடினமாயிருக்கிறது என்பதை பெலிஸ்தரும் அறிந்திருக்கிறார்கள்.

இப்படி நடந்ததை அஸ்தோத்தின் ஜனங்கள் கண்டபோது: "இஸ்ரவேலின் தேவனுடைய கை நமது மேலும், நம்முடைய தேவனாகிய தாகோனின்மேலும் கடினமாயிருக்கிறபடியால், அவருடைய பெட்டி நம்மிடத்தில் இருக்கலாகாது" (1சாமு 5:7) என்று சொல்லுகிறார்கள்.

அஸ்தோத்தின் மனுஷர் மூலவியாதியினால் வேதனைப்படும்போது, கர்த்தருடைய சர்வவல்லமையையும், அவருடைய அதிகாரத்தையும், அவருடைய மகிமையையும் புரிந்துகொள்கிறார்கள். கர்த்தரே தங்களை ஆளுகை செய்கிறார் என்பதையும் பெலிஸ்தர் அறிந்துகொள்கிறார்கள். ஆனாலும் பெலிஸ்தர் தாகோனை ஆராதிப்பதை விட்டு விட்டு, கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை. பெலிஸ்தர் இஸ்ரவேலின் தேவனுக்கும் பயப்படுகிறார்கள். தாகோனையும் ஆராதிக்கிறார்கள். கர்த்தரோ அஸ்தோத் ஊரார் அனைவரையும் பாழாக்குகிறார். கர்த்தருடைய கை பெலிஸ்தர்மேல் பாரமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய வல்லமையான கரத்தினால், பெலிஸ்தருடைய எலும்பையும் மாம்சத்தையும் தொடுகிறார்.

பெலிஸ்தர் தங்கள் சரீரத்தில் வேதனைகளை அனுபவித்தாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப ஆயத்தமாயில்லை. அவர்கள் கர்த்தருடைய முகத்திற்கு நேராக, அவரை சபிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தரோடு சமாதானமாயிருப்பதற்கு பதிலாக, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி தங்களிடத்தில் இருக்கலாது என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனுடைய கை தங்கள்மேலும், தங்கள் தேவனாகிய தாகோன் மேலும் கடினமாயிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிற, அவருடைய பெட்டியை தங்களை விட்டு அகற்றிப்போடவேண்டுமென்று பெலிஸ்தர் தீர்மானம்பண்ணுகிறார்கள். கர்த்தரை தங்களைவிட்டுத் துரத்திவிட்டால் தங்களுக்கு ஒரு தீங்கும் வராது என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள்.

மனுஷருடைய இருதயம் மாம்ச பிரகாரமாக சிந்திக்கிறது. பெலிஸ்தர் இப்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். இந்த வேதனையின் மத்தியில், அவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, மனந்திரும்ப வேண்டும். கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டும். அவரோடு உடன்படிக்கை பண்ணவேண்டும். கர்த்தருக்கு சத்துருவாயிராமல் அவருக்கு சிநேகிதராயிருக்கவேண்டும்.

ஆனால் பெலிஸ்தரோ, தங்கள் வேதனைகளுக்கு மத்தியில் மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டால், கர்த்தருடைய கை தங்கள்மீது கடினமாயிருக்காது என்று நினைக்கிறார்கள். அஸ்தோத் ஊரிலுள்ள பெலிஸ்தர் எல்லோரும் ஒன்றாய்க்கூடி, "தேவனுடைய பெட்டி நம்மிடத்தில் இருக்கலாகாது" என்று சொல்லுகிறார்கள்.

தேவனுடைய பெட்டி இப்போது தாகோனின் கோவிலிலே, தாகோனண்டையிலிருக்கிறது. அந்தப் பெட்டியை அந்த இடத்திலிருந்து எடுத்து, வேறு இடத்திற்கு மாற்றி வைக்கவேண்டும் என்று பெலிஸ்தர் தீர்மானிக்கிறார்கள். எங்கு கொண்டு போவது என்று அவர்களுக்கு தெரியவில்லை. கர்த்தருடைய பெட்டியை காத் பட்டணத்திற்கு கொண்டு போகலாம் என்று பெலிஸ்தர் தீர்மானிக்கிறார்கள்.

அஸ்தோத் ஊரார் பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் அழைப்பித்து, தங்களண்டையிலே கூடிவரச்செய்து: "இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை நாம் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்கிறார்கள். அவர்கள்: "இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை காத் பட்டணமட்டும் எடுத்துச் சுற்றிக்கொண்டு போகவேண்டும்" என்று சொல்லுகிறார்கள்; அப்படியே இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை எடுத்துச் சுற்றிக் கொண்டுபோகிறார்கள் (1சாமு 5:8).

கர்த்தருடைய பெட்டி, அஸ்தோத் ஊரிலே, தாகோனின் கோவிலிலே இருப்பதினால் தங்களுக்கு தீங்கு வந்திருக்கிறது என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். தாகோனின் கோவிலிலிருந்து தூரமான ஒரு இடத்தில் கர்த்தருடைய பெட்டியை வைத்துவிட்டால், கர்த்தருடைய கை தங்கள்மேல் கடினமாயிராது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

கர்த்தர் அஸ்தோத்தின் ஜனங்களையும், அதன் எல்லைக்குள் இருக்கிறவர்களையும் மூலவியாதியினால் வாதிக்கிறார். இந்த வேதனையை அவர்களால் தாங்க முடியவில்லை. இந்த சூழ்நிலையில், கர்த்தருடைய பெட்டியை இஸ்ரவேல் தேசத்தாரிடம் திருப்பி கொடுத்துவிடவேண்டுமென்று பெலிஸ்தர் நினைக்கவில்லை. அதற்கு பதிலாக கர்த்தருடைய பெட்டி அஸ்தோத்திலுள்ள தாகோனின் கோவிலிலே இருக்கக்கூடாது என்றும், அந்தப் பெட்டியை காத் பட்டணம் மட்டும் எடுத்து சுற்றிக்கொண்டு போகவேண்டும் என்றும் நினைக்கிறார்கள். தேவனுடைய பெட்டியை இஸ்ரவேல் புத்திரருக்கு திருப்பிக்கொடுக்காமல், அதை தாங்களே வைத்துக்கொள்ளவேண்டும் என்பது பெலிஸ்தரின் விருப்பம்.

காத் பெலிஸ்தருடைய பிரதான பட்டணங்களில் ஒன்று. இந்தப் பட்டணத்தில் ராட்சதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பலசாலிகள். காத் பட்டணத்திலுள்ள ராட்சதர்களை மூலவியாதி தாக்காது என்றும், மூலவியாதியினால் காத் பட்டணத்து பலசாலிகளுக்கு ஒரு தீங்கும், வேதனையும் வராது என்றும் பெலிஸ்தர் நினைக்கிறார்கள்.

கர்த்தருடைய கை பெலிஸ்தருக்கு விரோதமாகயிருக்கும்போது, தங்களுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ, பெலிஸ்தரால் கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்க முடியாது. காத் பட்டணத்தாரின் பலமோ அல்லது அவர்களுடைய ராட்சத உருவமோ மூலவியாதிக்கு தப்பிக்க உதவி செய்யும் அரணாயிருக்காது. பெலிஸ்தர் இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை காத் பட்டணம் மட்டும்எடுத்து சுற்றிக்கொண்டு போகிறார்கள்.

பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியை எடுத்துச் சுற்றிக்கொண்டு போனபின்பு, கர்த்தருடைய கை காத் பட்டணத்தின்மேல் மகா உக்கிரமாக இறங்கிற்று; காத் பட்டணத்தின் மனுஷருக்குள், கர்த்தர் சிறியவர் துவக்கிப் பெரியவர்மட்டும், மூலவியாதியை உண்டாக்கி, அவர்களை வாதிக்கிறார் (1சாமு 5:9).

காத் பட்டணத்திலுள்ள சிறியவர்களையும் ராட்சதர்களையும் கர்த்தர் மூலவியாதியினால் வாதிக்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்புகளுக்கு முன்பாக சிறியவர் பெரியவர் என்னும் வித்தியாசமில்லை. பலமுள்ளவர் பலவீனர் என்னும் வேறுபாடு இல்லை. சாதாரண ஜனங்கள், ராட்சத ஜனங்கள் என்னும் வித்தியாசமுமில்லை. கர்த்தர் காத் பட்டணத்திலுள்ள எல்லோரையும் மூலவியாதியினால் வாதிக்கிறார்.

அஸ்தோத் ஊராரைப்போலவே, காத் பட்டணத்தாரும் தேவனுடைய பெட்டி தங்கள் ஊரில் இருக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதினால் அவர்கள் தேவனுடைய பெட்டியை எக்ரோனுக்கு அனுப்புகிறார்கள்; தேவனுடைய பெட்டி எக்ரோனுக்கு வருகிறபோது, எக்ரோன் ஊரார்: "எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோட, இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை எடுத்து, எங்களண்டைக்குச் சுற்றிக் கொண்டு வந்தார்கள்" (1சாமு 5:10) என்று கூக்குரலிடுகிறார்கள்.

கர்த்தருடைய பெட்டி காத் பட்டணத்திலிருந்து எக்ரோன் பட்டணத்திற்கு அனுப்பப்படுகிறது. பெலிஸ்தரின் அதிபதிகள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து, கர்த்தருடைய பெட்டியை, காத் பட்டணத்திலிருந்து எக்ரோனுக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள். ஆகையினால் எக்ரோன் பட்டணத்தாரால் பெலிஸ்தரின் அதிபதிகளுடைய கட்டளைக்கு எதிர்த்து நிற்க முடியாது.

ஆனாலும் எக்ரோன் ஊரார் தங்கள் வேதனைகளையும் பயத்தையும் கூக்குரலிட்டு சொல்லுகிறார்கள். "எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோட, இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை எடுத்து, எங்களண்டைக்குச் சுற்றிக் கொண்டு வந்தார்கள்" (1சாமு 5:10) என்று கூக்குரலிடுகிறார்கள்.

எக்ரோன் ஊரார் பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் கூடிவரும்படி அழைத்து: "இஸ்ரவேலின் தேவன் எங்களையும் எங்கள் ஜனங்களையும் கொன்றுபோடாதபடிக்கு, அவருடைய பெட்டியை அதின் ஸ்தானத்திற்குத் திரும்ப அனுப்பிவிடுங்கள்" (1சாமு 5:11) என்று சொல்லுகிறார்கள்.

தங்களுக்கு மூலவியாதியும், மரணமும் வந்துவிடும் என்று பயந்து, எக்ரோன் ஊரார் பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் கூடிவரும்படி அழைக்கிறார்கள். கர்த்தருடைய பெட்டியை, இஸ்ரவேல் தேசத்திலுள்ள அதின் ஸ்தானத்திற்கு திரும்ப அனுப்பிவிடுங்கள் என்று எக்ரோன் ஊரார் சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தரின் அதிபதிகளும், பெலிஸ்தரும் ஒன்றாய்க் கூடிவந்திருக்கும் போது, தேவனுடைய கை அங்கே, அவர்கள்மேல் மகாபாரமாயிருக்கிறது. எக்ரோன் பட்டணமெங்கும் சாவு மும்முரமாயிருக்கிறது. பெலிஸ்தர் தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கு தப்பிப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்போ பெலிஸ்தரின் எல்லா பட்டணங்களுக்கும் பரவுகிறது. பட்டணமெங்கும் சாவு மும்முரமாயிருப்பதினால், பெலிஸ்தரில் அநேகர் செத்துப்போகிறார்கள்.

செத்துப்போகாதிருந்தவர்கள் மூலவியாதியினால் வாதிக்கப்படுகிறார்கள். எக்ரோன் பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று (1சாமு 5:12). பெலிஸ்தரால் கூக்குரலிடமாத்திரமே முடிகிறது. அவர்கள் நம்புகிற தாகோன் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு அவர்களுக்கு உதவி செய்ய வரவில்லை. தாகோனின் தலையோ வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடக்கிறது. அதன் காதுகள் சிதறிப்போயிருக்கிறது. விக்கிரகங்களுக்கு காதுகள் இருந்தாலும் அவை கேட்காது. பெலிஸ்தர் மாயையான விக்கிரகங்களை நம்பி மடிந்துபோகிறார்கள்.

6 அதிகாரம்

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வருகிறது. பெலிஸ்தருடைய பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் கர்த்தருடைய பெட்டியை அதின் ஸ்தானத்திற்கு அனுப்பிவிடவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார்கள். பெட்டியை வெறுமையாய் அனுப்பாமல்குற்றநிவாரண காணிக்கையையும் சேர்த்து அனுப்பவேண்டுமென்று சொல்லுகிறார்கள் (1சாமு 6:1-11).

பெலிஸ்தர் இஸ்ரவேலின் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, அவர்கள் இஸ்ரவேலின் தேவனுக்கு விலையுயர்ந்த வெகுமதிகளை அனுப்புகிறார்கள் (1சாமு 6:3-5). பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை இஸ்ரவேல் தேசத்திற்கு அனுப்பினாலும், அந்தப் பெட்டி தங்கள் தேசத்திற்கு மறுபடியும் திரும்பி வரவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள். உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற வண்டில், பெத்ஷிமேசுக்குப் போகாமல், தங்கள் தேசத்திற்கு திரும்பி வரவும் வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்கிறார்கள் (1சாமு 6:8,9).

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டியைக் கண்டு மிகவும் சந்தோஷப் படுகிறார்கள். அவர்கள் அன்றையதினம் கர்த்தருக்கு சர்வாங்க தகனங்களை செலுத்தி பலிகளையிடுகிறார்கள் (1சாமு 6:12-18). பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்தபடியினால், கர்த்தர் அவர்களை அடிக்கிறார் (1சாமு 6:19-21).

கர்த்தருடைய பெட்டி 1சாமு 6:1-9

1சாமு 6:1. கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தரின் தேசத்தில் ஏழுமாதம் இருந்தது.

1சாமு 6:2. பின்பு பெலிஸ்தர் பூஜாசாரிகளையும் குறிசொல்லுகிறவர்களையும் அழைப்பித்து: கர்த்தருடைய பெட்டியைப் பற்றி நாங்கள் என்னசெய்யவேண்டும்? அதை நாங்கள் எவ்விதமாய் அதின் ஸ்தானத்திற்கு அனுப்பிவிடலாம் என்று எங்களுக்குச் சொல்லுங்கள் என்றார்கள்.

1சாமு 6:3. அதற்கு அவர்கள்: இஸ்ரவேலின் தேவனுடைய பெட்டியை நீங்கள் அனுப்பினால் அதை வெறுமையாய் அனுப்பாமல், குற்றநிவாரண காணிக்கையை எவ்விதத்திலும் அவருக்குச் செலுத்தவேண்டும்; அப்பொழுது நீங்கள் சொஸ்தமடைகிறதும் அல்லாமல், அவருடைய கை உங்களை விடாதிருந்த முகாந்தரம் இன்னது என்றும் உங்களுக்குத் தெரியவரும் என்றார்கள்.

1சாமு 6:4. அதற்கு அவர்கள்: குற்றநிவாரண காணிக்கையாக நாங்கள் அவருக்கு என்னத்தைச் செலுத்தவேண்டுமென்று கேட்டதற்கு, அவர்கள்: உங்களெல்லாருக்கும் உங்கள் அதிபதிகளுக்கும் ஒரே வாதையுண்டானபடியால், பெலிஸ்தருடைய அதிபதிகளின் இலக்கத்திற்குச் சரியாக மூலவியாதியின் சாயலானபடி செய்த ஐந்து பொன் சுரூபங்களும், பொன்னால் செய்த ஐந்து சுண்டெலிகளும் செலுத்தவேண்டும்.

1சாமு 6:5. ஆகையால் உங்கள் மூலவியாதியின் சாயலான சுரூபங்களையும், உங்கள் தேசத்தைக் கெடுத்துப்போட்ட சுண்டெலிகளின் சாயலான சுரூபங்களையும் நீங்கள் உண்டுபண்ணி, இஸ்ரவேலின் தேவனுக்கு மகிமையைச் செலுத்துங்கள்; அப்பொழுது ஒருவேளை உங்கள் மேலும், உங்கள் தேவர்கள்மேலும், உங்கள் தேசத்தின்மேலும் இறங்கியிருக்கிற அவருடைய கை உங்களை விட்டு விலகும்.

1சாமு 6:6. எகிப்தியரும் பார்வோனும் தங்கள் இருதயத்தைக் கடினப் படுத்தினது போல, நீங்கள் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவானேன்? அவர்களை அவர் தீங்காய் வாதித்தபின்பு, ஜனங்களை அவர்கள் அனுப்பிவிட்டதும், அவர்கள் போய்விட்டதும் இல்லையோ?

1சாமு 6:7. இப்போதும் நீங்கள் ஒரு புதுவண்டில் செய்து, நுகம் பூட்டாதிருக்கிற இரண்டு கறவைப்பசுக்களைப் பிடித்து, அவைகளை வண்டிலிலே கட்டி, அவைகளின் கன்றுக்குட்டிகளை அவைகளுக்குப் பின்னாகப் போகவிடாமல், வீட்டிலே கொண்டுவந்து விட்டு,

1சாமு 6:8. பின்பு கர்த்தருடைய பெட்டியை எடுத்து, அதை வண்டிலின்மேல் வைத்து, நீங்கள் குற்றநிவாரணகாணிக்கையாக அவருக்குச் செலுத்தும் பொன்னுருப்படிகளை அதின் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டியிலே வைத்து, அதை அனுப்பிவிடுங்கள்.

1சாமு 6:9. அப்பொழுது பாருங்கள்; அது தன் எல்லைக்குப் போகிறவழியாய் பெத்ஷிமேசுக்குப் போனால், இந்தப் பெரிய தீங்கை நமக்குச் செய்தவர் அவர்தாமே என்று அறியலாம்; போகாதிருந்தால், அவருடைய கை நம்மைத் தொடாமல், அது தற்செயலாய் நமக்கு நேரிட்டது என்று அறிந்துகொள்ளலாம் என்றார்கள்.

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, அதை தாகோனின் கோவில் கொண்டு வந்து வைக்கிறார்கள். தாகோனின் கோவில் அஸ்தோத் ஊரிலிருக்கிறது. கர்த்தர் அஸ்தோத் ஊராரை மூலவியாதியினால் வாதிக்கிறார். பெலிஸ்தரின் அதிபதிகள் தேவனுடைய பெட்டியை காத் பட்டணத்திற்கு அனுப்புகிறார்கள். கர்த்தர் காத் பட்டணத்தாருக்கும் மூலவியாதியை உண்டாக்கி அவர்களை வாதிக்கிறார்.

அதன்பின்பு கர்த்தருடைய பெட்டி எக்ரோனுக்கு வருகிறது. எக்ரோன் பட்டணமெங்கும் சாவு மும்முரமாயிருக்கிறது. தேவனுடைய கை அங்கே மகாபாரமாயிருக்கிறது. எக்ரோன் பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று. கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தரின் தேசத்தில் ஏழுமாதம் இருக்கிறது (1சாமு 6:1).

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்த நாளிலிருந்து, பெட்டி அவர்கள் தேசத்திலிருந்த ஏழுமாத காலம் வரையிலும், கர்த்தர் பெலிஸ்தரை மூலவியாதியினால் வாதிக்கிறார். கர்த்தருடைய கரம் பெலிஸ்தர்மேல் கடினமாயிருக்கிறது. கர்த்தருடைய பெட்டி தங்கள் தேசத்திலிருப்பதினால், தங்களுக்கு சாபம் வந்திருப்பதாக பெலிஸ்தர் நினைக்கிறார்கள்.

தேவனுடைய பெட்டி பெலிஸ்தருடைய தேசத்திலே இருந்த ஏழுமாத காலம் வரையிலும், இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய பெட்டி இல்லை. கர்த்தருடைய பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் தேசத்தார் மத்தியிலே, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு விசேஷித்த அடையாளமான, அவருடைய பெட்டி, ஏழுமாத காலமாக, அங்கே இல்லாமல் போயிற்று.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு இந்த ஏழுமாத காலம் ஒரு சோகமான காலம். அவர்கள் துக்கத்தோடும் வேதனையோடும் இருக்கிறார்கள். கர்த்தருடைய பெட்டி எந்த ஸ்தலத்தில் இருக்கிறதோ அந்த ஸ்தலமே இஸ்ரவேல் புத்திரருக்கு பரிசுத்த ஸ்தலம். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் வாசம்பண்ணுகிறார். சீலோவிலே கர்த்தருடைய பெட்டி இருந்தது. அது இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலாயிருந்தது. அவர்கள் விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து அவரைத் தொழுதுகொண்டார்கள்.

இப்போதோ கர்த்தருடைய பெட்டி இஸ்ரவேல் தேசத்தில் இல்லை. அங்கே கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமில்லை. அதனால் இஸ்ரவேல் புத்திரர் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் சர்வவியாபகர். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, உடன்படிக்கைப் பெட்டியின் பிரமாணம் கொடுக்கப்படவில்லை. எங்கே இரண்டுபேர் மூன்றுபேர் கர்த்தருடைய நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் கர்த்தர் இருக்கிறார். உடன்படிக்கைப் பெட்டி தூரத்திலே இருந்தாலும், கர்த்தர் நமக்கு சமீபமாயிருக்கிறார். தம்மை நோக்கி கூப்பிடுகிற அனைவருக்கும் கர்த்தர் சமீபமாயிருப்பது நமக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம்.

இஸ்ரவேல் தேசத்திலே, கர்த்தருடைய பெட்டி ஏழுமாதமாக இல்லாமலிருந்தது, கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தண்டனையாயிருக்கிறது. இந்த ஏழுமாத காலமும் கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தருடைய தேசத்திலிருக்கிறது. பெலிஸ்தருடைய தேசத்திலே கர்த்தருடைய பெட்டி இருப்பதினால், கர்த்தர் பெலிஸ்தரைத் தண்டிக்கிறார். அவர்களை மூலவியாதியினால் வாதிக்கிறார். தம்முடைய பெட்டியை பெலிஸ்தர் சீக்கிரமாக இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்ப அனுப்பிவிடவேண்டும் என்று, கர்த்தர் பெலிஸ்தரை மூலவியாதியினால் வாதிக்கிறார். தேவனுடைய கை ஏழுமாத காலமாக பெலிஸ்தருடைய தேசத்தில் மகாபாரமாயிருக்கிறது.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து பாவத்திலே ஜீவித்தால், அவர்களுடைய வேதனை அதிகரிக்கும். எவ்வளவு காலத்திற்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்களோ, அவ்வளவு காலத்திற்கும் அவர்கள் வேதனைகளை அனுபவிப்பார்கள். பெலிஸ்தர் ஏழுமாதமாக கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை இஸ்ரவேல் தேசத்திற்கு அனுப்பாமல், தங்கள் தேசத்திலேயே வைத்திருந்து, வாதைகளை அனுபவித்தார்கள்.

பெலிஸ்தரால் வாதைகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் மூலவியாதியினால் வாதிக்கப்பட்டு வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று. கர்த்தருடைய பெட்டியை அதின் ஸ்தானத்திற்கு திரும்பவும் அனுப்பிவிடலாம் என்று பெலிஸ்தர் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

"கர்த்தருடைய பெட்டியைப் பற்றி நாங்கள் என்னசெய்யவேண்டும்? அதை நாங்கள் எவ்விதமாய் அதின் ஸ்தானத்திற்கு அனுப்பிவிடலாம்" (1சாமு 6:2) என்று பெலிஸ்தருக்கு தெரியவில்லை. இதைப்பற்றி விசாரித்து அறிந்துகொள்வதற்காக பெலிஸ்தர் பூஜாசாரிகளையும், குறிசொல்லுகிறவர்களையும் அழைப்பிக்கிறார்கள்.

"கர்த்தருடைய பெட்டியை நாங்கள் எவ்விதமாய் அதின் ஸ்தானத்திற்கு அனுப்பிவிடலாம் என்று எங்களுக்குச் சொல்லுங்கள்" (1சாமு 6:2) என்று பெலிஸ்தர் பூஜாசாரிகளிடமும் குறிசொல்லுகிறவர்களிடமும் கேட்கிறார்கள். பூஜாசாரிகளுக்கு குற்றநிவாரண காணிக்கையைப்பற்றித் தெரிந்திருக்கிறது. அவர்கள் ஆராதனை முறைமைகளை அறிந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் பொதுவான ஞானமும், அறிவும், புத்தியும் இருக்கிறது. ஆகையினால் பெலிஸ்தர் அவர்களிடம், "கர்த்தருடைய பெட்டியைப்பற்றி நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று ஆலோசனை கேட்கிறார்கள்.

பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் பெலிஸ்தருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். அவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு எதுவுமில்லை. அவர்கள் எல்லோருமே ஒருமித்த கருத்தில் பேசுகிறார்கள். கர்த்தருடைய பெட்டியை அதன் ஸ்தானத்திற்கு அனுப்பிவிடவேண்டும் என்பது அவர்களுடைய ஆலோசனை. தங்களுடைய யோசனையை உறுதிபண்ணுவதற்கு, அவர்கள் எகிப்தியரையும் பார்வோனையும் எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார்கள்.

"எகிப்தியரும் பார்வோனும் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினது போல, நீங்கள் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவானேன்? அவர்களை அவர் தீங்காய் வாதித்தபின்பு, ஜனங்களை அவர்கள் அனுப்பிவிட்டதும், அவர்கள் போய்விட்டதும் இல்லையோ?" (1சாமு 6:6) என்று பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் பெலிஸ்தரிடத்தில் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய பெட்டியை பெலிஸ்தர் அதன் ஸ்தானத்திற்கு திரும்ப அனுப்பும்போது, அதை வெறுமையாக அனுப்பக்கூடாது என்றும், குற்றநிவாரண காணிக்கையை எவ்விதத்திலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் பெலிஸ்தருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள் (1சாமு 6:3). இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் என்பதும் அவர் எரிச்சலுள்ள தேவன் என்பதும் பூஜாசாரிகளுக்கு தெரிந்திருக்கிறது.

கர்த்தர் யாருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறாரோ, அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் வரும்போது வெறும் கையோடு வராமல், குற்றநிவாரண காணிக்கையோடு வரவேண்டும். பெலிஸ்தர் எல்லோரும் இப்போது மூலவியாதியினால் வாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வியாதியைக் குணப்படுத்துவதற்கு பெலிஸ்தருடைய தேசத்திலே மருந்தோ தைலமோ இல்லை.

பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியை, அதன் ஸ்தானத்திற்கு திருப்பி அனுப்பும்போது, கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையை செலுத்த வேண்டும். "அப்பொழுது நீங்கள் சொஸ்தமடைகிறதும் அல்லாமல், அவருடைய கை உங்களை விடாதிருந்த முகாந்தரம் இன்னது என்றும் உங்களுக்குத் தெரியவரும்" (1சாமு 6:3) என்று பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் பெலிஸ்தருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தர் கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையை செலுத்தினால் மாத்திரமே, தங்களுடைய மூலவியாதியின் வேதனையிலிருந்து அவர்களால் குணமடைய முடியும். வேறு வழியில் குணமடைவதற்கு வாய்ப்பில்லை. கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவதினாலோ அல்லது பலியை செலுத்துவதினாலோ தங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது என்று நினைத்தால், பெலிஸ்தருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

பெலிஸ்தர் கர்த்தருக்கு வெறும் காணிக்கையை செலுத்தக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையை செலுத்தவேண்டும். தங்களுடைய பாவங்களினிமித்தமும், அக்கிரமங்களினிமித்தமும் கர்த்தர் தங்களை தண்டித்திருக்கிறார் என்பதை அவர்கள் அங்கீகரிக்கவேண்டும். தங்களுடைய குற்றங்களை நிவிர்த்திபண்ணுவதற்காக, பெலிஸ்தர் கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையை செலுத்தவேண்டும்.

கர்த்தருக்கு எப்படிப்பட்ட குற்றநிவாரண காணிக்கையை செலுத்தவேண்டும் என்று பெலிஸ்தருக்கு தெரியவில்லை. அவர்கள் பூஜாசாரிகளிடம், "குற்றநிவாரண காணிக்கையாக நாங்கள் அவருக்கு என்னத்தைச் செலுத்தவேண்டும்" (1சாமு 6:4) என்று கேட்கிறார்கள்.

பூஜாசாரிகளும், குறிசொல்லுகிறவர்களும், அவர்களுக்கு பிரதியுத்தரமாக "உங்களெல்லாருக்கும் உங்கள் அதிபதிகளுக்கும் ஒரே வாதையுண்டானபடியால், பெலிஸ்தருடைய அதிபதிகளின் இலக்கத்திற்குச் சரியாக மூலவியாதியின் சாயலானபடி செய்த ஐந்து பொன் சுரூபங்களும், பொன்னால் செய்த ஐந்து சுண்டெலிகளும் செலுத்தவேண்டும்" (1சாமு 6:4) என்று சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தர் மூலவியாதியின் சாயலானபடி செய்த சுரூபங்களை கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையாக செலுத்தவேண்டும். பெலிஸ்தர்கள் இப்போது மூலவியாதியினால் வாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிறப்பு உறுப்புக்களில் புண்கள் உண்டாயிருக்கிறது. அவர்களுடைய சரீரம் முழுவதும் வீக்கம் கண்டிருக்கிறது. கர்த்தர் அவர்களை வாதிக்கிறார். அவர்களுக்கு வந்திருக்கிற மூலவியாதியை அவர்களால் வெளியே காண்பிக்க முடியாது. அவர்களுடைய பிறப்பு உறுப்பில் புண்கள் ஏற்பட்டிருப்பதினால், அதை நினைத்து வெட்கப்படுகிறார்கள். பெலிஸ்தர் கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவத்தையும் அக்கிரமத்தையும் நினைத்து வேதனைப்படவேண்டும், வெட்கப்படவேண்டும் என்பதற்காக கர்த்தர் அவர்களை மூலவியாதியினால் வாதித்திருக்கிறார்.

"தம்முடைய சத்துருக்களைப் பின்புறமாக அடித்து, அவர்களுக்கு நித்திய நிந்தையை வரப்பண்ணினார்" (சங் 78:66).

பெலிஸ்தர் கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையாக பொன்னால் செய்த சுண்டெலிகளையும் செலுத்தவேண்டும். சுண்டெலிகள் பெலிஸ்தருடைய தேசத்தை பாழாக்கிப்போடுகிறது. சுண்டெலி மிகச்சிறிய பிராணி. பெலிஸ்தரோ தங்களை மிகப்பெரியவர்கள் என்று நினைத்து பெருமைப்பட்டார்கள். கர்த்தரோ இருதயத்தில் பெருமையுள்ள பெலிஸ்தரை, சுண்டெலியைப்போல சாதாரண பிராணியினால் வாதிக்கிறார். அவர்களை வேதனைப்படுத்தி தாழ்த்துகிறார். ஒரு சிறிய பிராணி பெலிஸ்தரை வேதனைப்படுத்துகிறது. பெலிஸ்தருடைய தேசம் முழுவதும் சுண்டெலியினால் வாதை உண்டாயிற்று.

பெலிஸ்தர் மூலவியாதியின் சாயலான சுரூபங்களையும், சுண்டெலிகளையும் பொன்னால் செய்யவேண்டும். பொன் விலையுயர்ந்த உலோகம். அதிக கிரயம் கொடுத்து பொன்னை வாங்கவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து சமாதானத்தை வாங்குவதற்கு, பெலிஸ்தர் அதிக கிரயத்தை கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. தங்களுடைய வேதனையும், வாதையும் நீங்குவதற்கு பெலிஸ்தர் எந்தக் கிரயத்தையும் செலுத்த ஆயத்தமாயிருக்கிறார்கள்.

பெலிஸ்தர் கர்த்தருக்கு எத்தனை பொன்சுரூபங்களையும், எத்தனை பொன்சுண்டெலிகளையும் குற்றநிவாரண காணிக்கையாக செலுத்தவேண்டும் என்றும் பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் சொல்லுகிறார்கள். அவர்கள் பெலிஸ்தருடைய அதிபதிகளின் இலக்கத்திற்குச் சரியாக மூலவியாதியின் சாயலானபடி செய்த ஐந்து பொன் சுரூபங்களும், பொன்னால் செய்த ஐந்து சுண்டெலிகளும் செலுத்தவேண்டும் (1சாமு 6:4).

பெலிஸ்தர் கர்த்தருக்கு, இந்த குற்றநிவாரண காணிக்கையை செலுத்தும்போது, அவர்கள் தங்கள் மூலவியாதி நீங்கி சொஸ்தமடைவார்கள். அது மட்டுமல்லாமல் கர்த்தருடைய கை அவர்களை விடாதிருந்த முகாந்தரம் இன்னது என்று அவர்களுக்கு தெரியவரும் (1சாமு 6:3).

பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை அதன் ஸ்தானத்திற்கு திருப்பி அனுப்பவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையை செலுத்தவேண்டும். பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியை பிடித்து, அதை தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்ததால்தான், கர்த்தருடைய கை அவர்களை விடாதிருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியவரும்.

பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைப் பிடித்துக்கொண்டதினால் அவர்களுக்கு மூலவியாதி வந்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய பெட்டியை அதன் ஸ்தானத்திற்கு திருப்பி அனுப்பிவிட்டால், அவர்களுடைய மூலவியாதி சொஸ்தமாகும்.

கர்த்தருடைய கரம் பெலிஸ்தர்மேல் கடினமாய் வந்திருக்கிறது என்பது பெலிஸ்தருக்கு இன்னும் நிச்சயமாய்த் தெரியவில்லை. கர்த்தருடைய கோபத்தினால் தான் தங்களுக்கு மூலவியாதி வந்திருக்கிறது என்பதை உறுதிபண்ணுவதற்கு, பெலிஸ்தர் மேலும் ஒரு காரியத்தை செய்யலாம் என்று, பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் ஆலோசனை சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைப் பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்தார்கள். அவர்கள் அந்தப் பெட்டியை அதன் ஸ்தானத்திற்கு திருப்பி அனுப்பும்போது, அந்தப் பெட்டிக்குரிய மரியாதையையும், கனத்தையும் கொடுத்து அனுப்பவேண்டும். அதை சாதாரணமாக அனுப்பாமல் ஒரு புது வண்டில் செய்து, அதன்மீது ஏற்றி அனுப்பவேண்டும். அந்த வண்டியை நுகம் பூட்டாதிருக்கிற இரண்டு கறவை பசுக்கள் இழுத்துக்கொண்டு போகவேண்டும் (1சாமு 6:7).

கறவை பசுக்களை வண்டியை இழுப்பதற்கு யாரும் பயன்படுத்தமாட்டார்கள். காளை மாடுகளைத்தான் வண்டிகளை இழுப்பதற்கு பயன்படுத்துவார்கள். கறவை பசுக்கள் வீட்டிலிருக்கும். பசு மாட்டிற்கு வண்டிகளை இழுத்து பழக்கம் இருக்காது. பூஜாசாரிகளோ, நுகம் பூட்டாதிருக்கிற, இரண்டு கறவை பசுக்களைப் பிடித்து, அவைகளை புதுவண்டிலிலே கட்டி, அந்த வண்டிலின்மீது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

வண்டியை ஒருவரும் ஓட்டிக்கொண்டு போகக்கூடாது. "கர்த்தருடைய பெட்டியை எடுத்து, அதை வண்டிலின்மேல் வைத்து, நீங்கள் குற்றநிவாரணகாணிக்கையாக அவருக்குச் செலுத்தும் பொன்னுருப்படிகளை அதின் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டியிலே வைத்து, அதை அனுப்பிவிடுங்கள்" (1சாமு 6:8) என்று பூஜாசாரிகள் பெலிஸ்தருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

வண்டியில் பூட்டப்பட்டிருப்பது கறவை பசுக்கள். அவைகளின் கன்றுக்குட்டிகளும், கறவை பசுக்களுக்கு பின்னால் போகக்கூடாது. அந்தக் கன்றுக்குட்டிகளை வீட்டிலே கொண்டு வந்து விட்டுவிடவேண்டும். கறவை பசுக்கள் தானாகவே வண்டியை இழுத்துக்கொண்டு போகவேண்டும்.

பூஜாசாரிகளும், குறிசொல்லுகிறவர்களும் சொல்லுகிற ஆலோசனை இயற்கைக்கு முரணாகயிருக்கிறது. கன்றுக்குட்டிகள் வீட்டிலிருக்கும்போது, கறவை பசுக்கள் எங்கும் போகாது. அது தன் கன்றுக்குட்டிகளுக்கு பால்கொடுக்க, அவை இருக்கும் வீட்டிற்கே திரும்பி வந்துவிடும். கறவை பசுக்களும் நுகம் பூட்டாதிருக்கிறது. அந்தப் பசுக்களுக்கு வண்டிகளை இழுத்து பழக்கமில்லை. கர்த்தர் அற்புதம் செய்தால் மாத்திரமே இந்த இரண்டு கறவை பசுக்களும், தாங்கள் கட்டப்பட்டிருக்கிற வண்டியை, இழுத்துக்கொண்டுபோகும்.

கறவை பசுமாடுகள் வண்டிலை இழுத்துக்கொண்டு போகாமல், தங்கள் கன்றுக்குட்டிகள் விடப்பட்டிருக்கிற வீட்டிற்குத் திரும்பிப்போகும் என்று எல்லோரும் பொதுவாக எதிர்பாப்பார்கள். கர்த்தருடைய கரம் கறவை பசுமாடுகளை வழிநடத்தும்போது, அவை கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும். கர்த்தர் அந்தக் கறவை பசுமாடுகளை எங்கே வழிநடத்துகிறரோ, அங்கே, அவை உடன்படிக்கைப் பெட்டியுள்ள வண்டிலை இழுத்துக்கொண்டு போகும்.

கர்த்தருடைய தெய்வீக வல்லமை கிரியை செய்தால் மாத்திரமே கறவை பசுமாடுகள் அந்த வண்டியை இஸ்ரவேல் தேசத்திற்கு இழுத்துக்கொண்டு போகும். அந்த வண்டில் பெத்ஷிமேசிற்குப் போகவேண்டுமென்று பூஜாசாரிகள் சொல்லுகிறார்கள். "அது தன் எல்லைக்குப் போகிறவழியாய் பெத்ஷிமேசுக்குப் போனால், இந்தப் பெரிய தீங்கை நமக்குச் செய்தவர் அவர்தாமே என்று அறியலாம்; போகாதிருந்தால், அவருடைய கை நம்மைத் தொடாமல், அது தற்செயலாய் நமக்கு நேரிட்டது என்று அறிந்துகொள்ளலாம்" (1சாமு 6:9) என்று பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் ஆலோசனை சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தருக்கு வந்திருக்கிற மூலவியாதி கர்த்தருடைய கோபத்தினால் வந்திருக்கிறதா அல்லது தற்செயலாய் வந்திருக்கிறதா என்பதை அறிந்துகொள்வதற்காக, பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் பெலிஸ்தருக்கு இந்த ஆலோசனைகளை சொல்லுகிறார்கள்.

பெத்ஷிமேஸ்
1சாமு 6:10-18

1சாமு 6:10. அந்த மனுஷர் அப்படியே செய்து, இரண்டு கறவைப் பசுக்களைக் கொண்டு வந்து, அவைகளை வண்டிலிலே கட்டி, அவைகளின் கன்றுக்குட்டிகளை வீட்டிலே அடைத்துவைத்து,

1சாமு 6:11. கர்த்தருடைய பெட்டியையும், பொன்னால் செய்த சுண்டெலிகளும் தங்கள் மூலவியாதியின் சாயலான சுரூபங்களும் வைத்திருக்கிற சிறிய பெட்டியையும், அந்த வண்டிலின்மேல் வைத்தார்கள்.

1சாமு 6:12. அப்பொழுது அந்தப் பசுக்கள் பெத்ஷிமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப் போய், வலது இடது பக்கமாய் விலகாமல், பெரும்பாதையான நேர்வழியாகக் கூப்பிட்டுக் கொண்டே நடந்தது; பெலிஸ்தரின் அதிபதிகள் பெத்ஷிமேசின் எல்லைமட்டும் அவைகளின் பிறகே போனார்கள்.

1சாமு 6:13. பெத்ஷிமேசின் மனுஷர் பள்ளத்தாக்கிலே கோதுமை அறுப்பு அறுத்துக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, பெட்டியைக் கண்டு, அதைக் கண்டதினால் சந்தோஷப்பட்டார்கள்.

1சாமு 6:14. அந்த வண்டில் பெத்ஷிமேஸ் ஊரானாகிய யோசுவாவின் வயலில் வந்து, அங்கே நின்றது; அங்கே ஒரு பெரிய கல்லிருந்தது; அப்பொழுது வண்டிலின் மரங்களைப் பிளந்து, பசுக்களைக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாகச் செலுத்தினார்கள்.

1சாமு 6:15. லேவியர் கர்த்தருடைய பெட்டியையும், அதனோடிருந்த பொன்னுருப்படிகளுள்ள சிறிய பெட்டியையும் இறக்கி, அந்தப் பெரிய கல்லின்மேல் வைத்தார்கள்; பெத்ஷிமேசின் மனுஷர், அன்றையதினம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனங்களைச் செலுத்திப் பலிகளை இட்டார்கள்.

1சாமு 6:16. பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும் இவைகளைக்கண்டு, அன்றையதினம் எக்ரோனுக்குத் திரும்பிப்போனார்கள்.

1சாமு 6:17. பெலிஸ்தர் குற்றநிவாரணத்திற்காக, கர்த்தருக்குச் செலுத்தின மூலவியாதியின் சாயலான பொன் சுரூபங்களாவன, அஸ்தோத்திற்காக ஒன்று, காசாவுக்காக ஒன்று, அஸ்கலோனுக்காக ஒன்று, காத்துக்காக ஒன்று, எக்ரோனுக்காக ஒன்று.

1சாமு 6:18. பொன்னால் செய்த சுண்டெலிகளோவென்றால், அரணான பட்டணங்கள் துவக்கி நாட்டிலுள்ள கிராமங்கள்மட்டும், கர்த்தருடைய பெட்டியை வைத்த பெரிய கல் இருக்கிற ஆபேல்மட்டும், ஐந்து அதிபதிகளுக்கும் ஆதீனமாயிருக்கிற பெலிஸ்தருடைய சகல ஊர்களின் இலக்கத்திற்குச் சரியாயிருந்தது. அந்தக் கல் இந்நாள் வரைக்கும் பெத்ஷிமேஸ் ஊரானாகிய யோசுவாவின் வயலில் இருக்கிறது.

பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை அனுப்பிவிடுகிறார்கள். இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணியபோது பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை பிடித்துக்கொண்டு சந்தோஷப்பட்டார்கள். பெட்டியை பிடித்தபோது சந்தோஷப்பட்டதுபோலவே, இப்போது அதை அனுப்பிவிடும்போதும் சந்தோஷப்படுகிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தங்கள் தேசத்தைவிட்டு அனுப்பிவிடுவதற்காக பெலிஸ்தர் இஸ்ரவேலரிடமிருந்து மீட்பின் கிரயத்தையோ, பணத்தையோ பெற்றுக்கொள்ளவில்லை. மீட்பின் கிரயத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை இலவசமாக அனுப்புகிறார்கள். அதை அனுப்பும்போது வெறுமையாய் அனுப்பாமல் பொன்னால் செய்த சுண்டெலிகளையும், தங்கள் மூலவியாதியின் சாயலான சுரூபங்களும் வைத்திருக்கிற சிறிய பெட்டியையும் சேர்த்து அனுப்புகிறார்கள்.

பெலிஸ்தர் உடன்படிக்கைப் பெட்டியை பிடித்துக்கொண்டபோது, அதை மாத்திரம் பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்தார்கள். இப்போது அந்தப் பெட்டியை திருப்பி அனுப்பும்போதோ, அந்தப் பெட்டியோடு பொன்னையும் சேர்த்து அனுப்புகிறார்கள். எகிப்து தேசத்திலே இஸ்ரவேலர் அடிமைகளாயிருந்தார்கள். எகிப்தியர் இஸ்ரவேலரை தங்கள் தேசத்தைவிட்டு விடுவித்து அனுப்பியபோது அவர்களுக்கு பொன் உடமைகளையும், வெள்ளி உடமைகளையும் கொடுத்து அனுப்பினார்கள். அதுபோலவே பெலிஸ்தர் இப்போது உடன்படிக்கைப் பெட்டியோடு பொன்னையும் சேர்த்து அனுப்புகிறார்கள்.

பெலிஸ்தர், பூஜாசாரிகளும் குறிசொல்லுகிறவர்களும் சொன்னபடியே செய்து, இரண்டு கறவைப் பசுக்களைக் கொண்டு வந்து, அவைகளை வண்டிலிலே கட்டி அவைகளின் கன்றுக்குட்டிகளை வீட்டிலே அடைத்துவைத்து, கர்த்தருடைய பெட்டியையும், பொன்னால் செய்த சுண்டெலிகளும் தங்கள் மூலவியாதியின் சாயலான சுரூபங்களும் வைத்திருக்கிற சிறிய பெட்டியையும், அந்த வண்டிலின்மேல் வைக்கிறார்கள் (1சாமு 6:10,11).

அப்பொழுது அந்தப் பசுக்கள் பெத்ஷிமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப் போய், வலது இடது பக்கமாய் விலகாமல், பெரும்பாதையான நேர்வழியாகக் கூப்பிட்டுக் கொண்டே நடக்கிறது; பெலிஸ்தரின் அதிபதிகள் பெத்ஷிமேசின் எல்லைமட்டும் அவைகளின் பிறகே போகிறார்கள் (1சாமு 6:12).

பெத்ஷிமேஸ் பட்டணம் பெலிஸ்தரின் எல்லையில், இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறது. இது ஆசாரியருடைய பட்டணம். அந்தப் பசுக்கள் பெத்ஷிமேசுக்கு போகிற வழியிலே செவ்வையாய்ப் போயிற்று. அது வலது இடதுபுறம் விலகவில்லை. அவ்விரண்டு கறவைப் பசுக்களும் பெத்ஷிமேசுக்குப்போகிற பெரும்பாதையான நேர்வழியாக கூப்பிட்டுக்கொண்டே போகிறது. இந்த சம்பவம் தேவனுடைய வல்லமையினால் நடைபெறுகிற அற்புதமாகும்.

கர்த்தர் தம்முடைய வல்லமையினால் கறவைப் பசுக்களையும் ஆளுகை செய்து, அவற்றை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக வழிநடத்துகிறார். வண்டியில் கட்டப்பட்டிருக்கிற இரண்டு பசுக்களும் நுகம் பூட்டப்படாதவை. அவற்றிற்கு இதுவரையிலும் வண்டியை இழுத்து பழக்கமில்லை. அவற்றின் கழுத்தின்மீது இதுவரையிலும் நுகம் சுமத்தப்படவில்லை. ஆனாலும் அவ்விரண்டு கறவைப் பசுக்களும் வண்டியை இழுத்துக்கொண்டு பெத்ஷிமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப் போகிறது.

பெத்ஷிமேஸ் பட்டணம் பெலிஸ்தருடைய தேசத்திலிருந்து எட்டு அல்லது பத்து மைல் தூரத்திலுள்ளது. இவ்விரண்டு கறவைப் பசுக்களும் இதற்கு முன்பு பெத்ஷிமேசுக்குப் போனதில்லை. அந்தப் பட்டணத்திற்கு எப்படி போகவேண்டும் என்னும் வழியும் இந்தப் பசுக்களுக்கு தெரியாது. ஆனாலும் இவ்விரண்டு கறவைப் பசுக்களும் வலது இடது பக்கமாய் விலகாமல், பெரும்பாதையான நேர்வழியாக, பெத்ஷிமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப்போகிறது.

கறவைப் பசுக்களின் கன்றுக்குட்டிகள் பெலிஸ்தருடைய தேசத்திலே ஒரு வீட்டிலிருக்கிறது. இந்தப் பசுக்களோ தங்கள் கன்றுக்குட்டிகளுக்கு பால் கொடுக்கவேண்டும் என்று நினைத்து, பெலிஸ்தருடைய தேசத்திற்கு திரும்பிப்போகவில்லை. அவை இரண்டும் பெத்ஷிமேசிற்குப்போகிற வழியிலே செவ்வையாய்ப் போகிறது.

பெத்ஷிமேசின் மனுஷர் பள்ளத்தாக்கிலே கோதுமை அறுப்பு அறுத்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, பெட்டியைக் கண்டு, அதைக் கண்டதினால் சந்தோஷப்படுகிறார்கள் (1சாமு 6:13).

பெத்ஷிமேசின் மனுஷர் தங்களுடைய உலகப்பிரகாரமான வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். பள்ளத்தாக்கிலே கோதுமை அறுப்பு அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழுமாதங்களாக கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேல் தேசத்திலே இல்லை. அது பெலிஸ்தருடைய தேசத்தில் ஏழுமாதங்களாயிருந்தது. பெத்ஷிமேசின் மனுஷருக்கோ கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைப்பற்றிய கவலையுமில்லை. அதைத் தேடவேண்டுமே என்னும் எண்ணமுமில்லை.

கர்த்தர் தாமே, தமக்கு ஏற்றவேளையில், தம்முடைய சித்தத்தின் பிரகாரம், தம்முடைய தெய்வீக வல்லமையினால், தம்முடைய உடன்படிக்கைப் பெட்டியை, இஸ்ரவேல் தேசத்திற்கு கொண்டு வருகிறார்.

சத்துரு பல சமயங்களில் கர்த்தருடைய சபைக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தமக்கு ஏற்ற வேளையிலே, தம்முடைய சபையை, அதன் சத்துருக்களின் கைகளிலிருந்து விலக்கி மீட்டுக்கொள்கிறார். ஒருவேளை சபையின் விசுவாசிகள் ஜெபம்பண்ணாவிட்டாலும், ஊழியம் செய்யாவிட்டாலும், சத்துருவின் கையிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்று முயற்சி பண்ணாவிட்டாலும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், அவருக்கேற்ற வேளையிலே, சபைக்கு அதன் சத்துருக்களிடமிருந்து விடுதலை உண்டாகிறது.

கர்த்தருடைய கரம் அவருடைய சித்தத்தின் பிரகாரம் கிரியை செய்யும். கர்த்தர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற வண்டிலை இழுத்துக்கொண்டு போகிற கறவைப் பசுக்களை வழிநடத்துகிறார். கர்த்தருடைய வல்லமையுள்ள கரமே அந்தப் பசுக்களை பெத்ஷிமேஸ் ஊரானாகிய யோசுவாவின் வயலுக்கு வழிநடத்துகிறது. அந்த வண்டில் யோசுவாவின் வயலிலே வந்து அங்கே நிற்கிறது.

யோசுவாவின் வயலிலே ஒரு பெரிய கல் இருக்கிறது. இந்தக் கல்லின்மீது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைப்பதற்கு மிகவும் வசதியாகயிருக்கிறது. ஒருவேளை யோசுவாவின் வயலிலிருக்கிற பெரிய கல்லின் நிமித்தமாக, அந்த வண்டில் அவருடைய வயலில் வந்து நின்றிருக்கலாம். இந்தப் பெரிய கல்லைப்பற்றி 1சாமு 6:14,15,18 ஆகிய மூன்று வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

பெத்ஷிமேசின் மனுஷர் பள்ளத்தாக்கிலே கோதுமை அறுப்பு அறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள். உடன்படிக்கைப் பெட்டியைத் தேடவேண்டும் என்னும் பக்தி வைராக்கியம் அவர்களிடத்தில் இல்லை. பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை அவர்களிடத்தில் மீட்டுக்கொள்ளவேண்டும் என்னும் தைரியமும் பெத்ஷிமேசின் மனுஷரிடத்தில் இல்லை. பெலிஸ்தரிடத்திலிருந்து பெட்டியை மீட்டுக்கொள்வதற்கு, மீட்பின் கிரயத்தை செலுத்தும் ஐசுவரியமும் அவர்களிடத்தில் இல்லை.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் பொன்னால் செய்த சுண்டெலிகளும், மூலவியாதியின் சாயலான சுரூபங்களும் வைத்திருக்கிற சிறிய பெட்டியும் அந்த வண்டிலோடுகூட பெத்ஷிமேஸ் ஊருக்கு வருகிறது. பெத்ஷிமேசின் மனுஷர் அந்த வண்டியிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள்.

அந்த வண்டில் பெத்ஷிமேஸ் ஊரானாகிய யோசுவாவின் வயலில் வந்து, அங்கே நிற்கிறது; அங்கே ஒரு பெரிய கல்லிருக்கிறது; அப்பொழுது வண்டிலின் மரங்களைப் பிளந்து, பசுக்களைக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாகச் செலுத்துகிறார்கள் (1சாமு 6:14).

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்தி கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். வண்டிலின் மரங்களே, பசுக்களை சர்வாங்க தகனமாக செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கறவைப் பசுக்களை கர்த்தருக்கு சர்வாங்க தகனமாக செலுத்தவேண்டும் என்னும் நோக்கத்தில் பெலிஸ்தர் இவற்றை உடன்படிக்கைப் பெட்டியோடு அனுப்பியிருக்கலாம்.

பெலிஸ்தர் கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையை செலுத்தவேண்டுமென்று பூஜாசாரிகளும், குறிசொல்லுகிறவர்களும், பெலிஸ்தருக்கு ஏற்கெனவே ஆலோசனையாகச் சொல்லியிருந்தார்கள். பெலிஸ்தர் அதன் பிரகாரமாக, புது வண்டில் செய்து, நுகம் பூட்டாதிருக்கிற இரண்டு கறவைப் பசுக்களைப் பிடித்து, அவைகளை வண்டிலிலே கட்டி, அந்த வண்டிலின்மேல் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் பொன்னால் செய்த சுண்டெலிகளையும், மூலவியாதியின் சாயலான சுரூபங்களும் வைத்திருக்கிற சிறிய பெட்டியையும் வைத்து அனுப்புகிறார்கள். இவையெல்லாமே கர்த்தருக்கு குற்றநிவாரண காணிக்கையாக செலுத்தப்படுகிறது.

லேவியர் கர்த்தருடைய பெட்டியையும், அதனோடிருந்த பொன்னுருப்படிகளுள்ள சிறிய பெட்டியையும் இறக்கி, அந்தப் பெரிய கல்லின்மேல் வைக்கிறார்கள்; பெத்ஷிமேசின் மனுஷர், அன்றையதினம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனங்களைச் செலுத்திப் பலிகளை இடுகிறார்கள் (1சாமு 6:15).

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, இதற்கு முன்பு சீலோவிலே, கர்த்தருடைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போதோ அது யோசுவாவின் வயலில், ஒரு பெரிய கல்லின்மேல், வெட்டவெளியிலே வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே இருந்த பெட்டி இப்போது, வயல் வெளியில் ஒரு பெரிய கல்லின்மேல் இருக்கிறது. இந்த இடம் சாதாரணமான இடம்தான். ஆனாலும் தாகோனுடைய கோவிலிலே கர்த்தருடைய பெட்டி இருப்பதற்கு பதிலாக, யோசுவாவின் வயலிலே, ஒரு பெரிய கல்லின்மேல் கர்த்தருடைய பெட்டி இருப்பது மிகவும் மேன்மையாயிருக்கிறது. தேவனுடைய பெட்டி பெலிஸ்தருடைய கையிலிராமல் இப்போது இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறது.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பெரிய கல்லின்மேல் வைக்கப்பட்டபோது, பெத்ஷிமேசின் மனுஷர் அன்றையதினம் கர்த்தருக்கு சர்வாங்க தகனங்களை செலுத்தி, பலிகளை இடுகிறார்கள். அவர்கள் வண்டிலின் மரங்களைப் பிளந்து, பசுக்களை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளாக செலுத்துகிறார்கள். உடன்படிக்கைப் பெட்டியும் இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வந்திருக்கிறது. கர்த்தருடைய பெட்டியை மறுபடியும், யாரும் இஸ்ரவேல் தேசத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகமாட்டார்கள் என்பதற்கு இந்த சம்பவம் அடையாளமாயும், நம்பிக்கையாயும் இருக்கிறது.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி யோசுவாவின் வயலிலிருக்கிற பெரிய கல்லின்மேல் வைக்கப்படுகிறது. இந்தப் பெட்டி உறுதியான அஸ்திபாரத்தின்மீது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சபையும் கிறிஸ்துவாகிய கன்மலையின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனங்களை செலுத்தி பலிகளை இடுகிறார்கள். யோசுவாவின் நிலத்திலிருக்கிற பெரிய கல், பலிபீடத்திற்கு அடையாளமாயிருக்கிறது. இந்த பெரிய கல்லானது பூமியின்மீது இயற்கையாகவே ஏற்படுத்தப்பட்ட ஒரு பலிபீடம் போலிருக்கிறது. லேவியர் கர்த்தருடைய பெட்டியை அந்தப் பெரிய கல்லின்மீது வைக்கிறார்கள்.

கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிராகரமாகவே உடன்படிக்கைப் பெட்டி பெத்ஷிமேசிற்கு வந்திருக்கிறது. கர்த்தருக்கு சித்தமான காலம் வரையிலும், தேவனுடைய பெட்டி பெத்ஷிமேசிலே தங்கியிருக்கும். பெத்ஷிமேஸ் யூதாகோத்திரத்தாரின் சுதந்தரத்திலுள்ள பட்டணம். இந்தப் பட்டணம் ஆரோனின் குமாரருக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது லேவியரின் பட்டணமாகும்.

"ஆயினையும் அதின் வெளிநிலங்களையும், யுத்தாவையும் அதின் வெளிநிலங்களையும், பெத்ஷிமேசையும் அதின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்; அந்த இரண்டு கோத்திரங்களிலிருக்கிற பட்டணங்கள் ஒன்பது" (யோசு 21:16).

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் அவருடைய உடன்படிக்கைப் பெட்டி ஆசாரியரின் பட்டணமாகிய பெத்ஷிமேசிற்கு வந்திருக்கிறது. பெத்ஷிமேசிற்கு கர்த்தருடைய பெட்டி வந்து சேர்ந்தவுடன், லேவியர் அந்தப் பெட்டியை பெரிய கல்லின்மேல் வைக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனங்களை செலுத்தி பலிகளை இடுகிறார்கள்.

நுகம் பூட்டாதிருக்கிற இரண்டு கறவைப் பசுக்களும் வண்டிலை இழுத்துக்கொண்டு போகும்போது, பெலிஸ்தரின் அதிபதிகள், பெத்ஷிமேசின் எல்லை மட்டும், அவைகளின் பிறகே போனார்கள். யோசுவாவின் வயலிலிருந்து பெரிய கல்லின்மீது கர்த்தருடைய பெட்டி வைக்கப்பட்டதையும், அவர்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும் செலுத்தியதையும், பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும் கண்டு, அன்றையதினமே எக்ரோனுக்கு திரும்பிப்போகிறார்கள்.

பெலிஸ்தரின் அதிபதிகள் பெத்ஷிமேசிலே கர்த்தருடைய மகிமையைக் கண்டார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பக்தி வைராக்கியத்தைப் பார்த்தார்கள். ஆனாலும் அவர்களுடைய மனதிலே கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகவில்லை. அவர்கள் மறுபடியும் எக்ரோனுக்கு திரும்பிப்போய், அங்கே தங்கள் விக்கிரகமாகிய தாகோனை ஆராதிக்கப்போகிறார்கள்.

பெலிஸ்தர் குற்றநிவாரணத்திற்காக கர்த்தருக்கு செலுத்தின பலியின் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "பெலிஸ்தர் குற்றநிவாரணத்திற்காக, கர்த்தருக்குச் செலுத்தின மூலவியாதியின் சாயலான பொன் சுரூபங்களாவன, அஸ்தோத்திற்காக ஒன்று, காசாவுக்காக ஒன்று, அஸ்கலோனுக்காக ஒன்று, காத்துக்காக ஒன்று, எக்ரோனுக்காக ஒன்று (1சாமு 6:17).

"பொன்னால் செய்த சுண்டெலிகளோவென்றால், அரணான பட்டணங்கள் துவக்கி நாட்டிலுள்ள கிராமங்கள்மட்டும், கர்த்தருடைய பெட்டியை வைத்த பெரிய கல் இருக்கிற ஆபேல்மட்டும், ஐந்து அதிபதிகளுக்கும் ஆதீனமாயிருக்கிற பெலிஸ்தருடைய சகல ஊர்களின் இலக்கத்திற்குச் சரியாயிருந்தது. அந்தக் கல் இந்நாள்வரைக்கும் பெத்ஷிமேஸ் ஊரானாகிய யோசுவாவின் வயலில் இருக்கிறது" (1சாமு 6:18).

கீரியாத்யாரீம்
1சாமு 6:19-21

1சாமு 6:19. ஆனாலும் பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்தபடியினால், கர்த்தர் ஜனங்களில் ஐம்பதினாயிரத்து எழுபதுபேரை அடித்தார்; அப்பொழுது கர்த்தர் ஜனங்களைப் பெரிய சங்காரமாக அடித்ததினிமித்தம், ஜனங்கள் துக்கித்துக்கொண்டிருந்தார்கள்.

1சாமு 6:20. இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்? பெட்டி நம்மிடத்திலிருந்து யாரிடத்துக்குப் போகும் என்று பெத்ஷிமேசின் மனுஷர் சொல்லி,

1சாமு 6:21. கீரியாத்யாரீமின் குடிகளுக்கு ஆட்களை அனுப்பி: பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப அனுப்பினார்கள்; நீங்கள் வந்து, அதை உங்களிடத்துக்கு எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லச்சொன்னார்கள்.

பெத்ஷிமேசிலே கர்த்தருடைய பெட்டி இருக்கிறது. ஆனால் பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்க்கிறார்கள். கர்த்தர் தடைபண்ணியிருப்பதை தெரிந்துகொள்ளவேண்டும் என்று முயற்சி பண்ணக்கூடாது. கர்த்தர் தடைபண்ணியிருக்கிற ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் ஆர்வத்தில் அநேகர் அழிந்துபோயிருக்கிறார்கள். கர்த்தருடைய பெட்டிக்குள் பார்ப்பது மிகப்பெரிய பாவம்.

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டியை ஒரு சாதாரண பெட்டியாக நினைக்கிறார்கள். அது ஒரு கல்லின்மீது வைக்கப்பட்டிருப்பதினால், தங்கள் வீடுகளிலுள்ள ஒரு பெட்டியைப்போல, அதுவும் சாதாரணமான பெட்டி என்று நினைக்கிறார்கள். கர்த்தருடைய பெட்டியானது அவருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அடையாளம். கர்த்தருடைய பெட்டி இப்போது அவருடைய ஆலயத்தில் இல்லாமல் யோசுவாவின் நிலத்திலுள்ள பெரிய கல்லின்மீது இருக்கிறது. அது வெட்டவெளியிலே சாதாரணமான ஸ்தலத்தில் இருக்கிறது. பெட்டி வைக்கப்பட்டிருக்கிற இடம் சாதாரண கல்லாகயிருந்தாலும், அந்தப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம்.

பெட்டி ஏழுமாதத்திற்கு பின்பு இப்போதுதான் இஸ்ரவேல் தேசத்திற்கு வந்திருக்கிறது. இதுவரையிலும் கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தருடைய தேசத்திலே பிடித்து வைக்கப்பட்டிருந்தது. பெலிஸ்தரிடமிருந்து திரும்பி வந்திருக்கிற பெட்டிக்குள்ளே என்ன இருக்குமோ என்று பார்க்கவேண்டும் என்னும் எண்ணம் பெத்ஷிமேசின் மனுஷருக்கு உண்டாயிற்று. கர்த்தருடைய பெட்டியும் பெலிஸ்தருடைய தேசத்திலே ஒரே ஊரில் இராமல், ஒவ்வொரு ஊராக சுற்றி வந்தது.

கர்த்தருடைய ஆளுகை சில சமயங்களில் சாதாரணமானதாகயிருக்கலாம். அவருடைய தெய்வீக பராமரிப்புக்களும், வழிநடத்துதல்களும், அதிக விசேஷமானதாகயில்லாமல், மிகவும் சாதாரணமானதாக இருக்கலாம். கர்த்தருடைய பராமரிப்புக்களும் வழிநடத்துதல்களும் சாதாரணமானதாகயிருந்தாலும் கர்த்தர் விசேஷமானவராகவே இருக்கிறார். கர்த்தருடைய கிரியைகள் சிறியதாகயிருந்தாலும், கர்த்தர் பெரியவராகவே இருக்கிறார்.

பெத்ஷிமேசின் மனுஷரால் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் வெளிப்பகுதியை பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியும். ஆனால் அவர்களோ அந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது என்பதையும், அது எப்படி இருக்கிறது என்பதையும் பார்க்க ஆசைப்படுகிறார்கள். அவர்களுடைய பார்வையில் கர்த்தருடைய பெட்டி மகிமையற்றதாகவும், கம்பீரமற்றதாகவும் தெரிந்திருக்கலாம். அது அவர்களுக்கு சாதாரண பெட்டிபோல தெரிந்திருக்கலாம்.

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்தபடியினால், கர்த்தர் ஜனங்களில் ஐம்பதினாயிரத்து எழுபதுபேரை அடிக்கிறார். (1சாமு 6:19) "ஐம்பதினாயிரத்து எழுபதுபேர்" என்னும் வாக்கியத்திற்கு, "ஐம்பதினாயிரத்தில் எழுபதுபேர்" என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தர் எழுபது பேரை மாத்திரமே அடித்தார் என்பது இவர்களுடைய விளக்கம்.

அப்பொழுது கர்த்தர் ஜனங்களைப் பெரிய சங்காரமாக அடித்ததினிமித்தம், ஜனங்கள் துக்கித்துக்கொண்டிருக்கிறார்கள் (1சாமு 6:19). பெத்ஷிமேசின் மனுஷருக்கு கர்த்தரைக் குறித்து பயமும் நடுக்கமும் உண்டாயிற்று. அவர்கள் "இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்?" (1சாமு 6:20) என்று கேட்கிறார்கள்.

பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக, அவரை ஆராதிப்பதற்காக நாம் நிற்கலாம். இது கூடாத காரியமல்ல. கர்த்தர் நம்முடைய ஆராதனையை அங்கீகரிப்பார்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாக, கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில், தைரியமாகக் கிட்டிச்சேரும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாய், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, நாம் ஜெபத்திலே போகலாம். ஜெபத்திலே நிற்கலாம்.

ஆனால் நாம் கர்த்தருக்கு முன்பாக அவரோடு வழக்காடுவதற்கோ, விவாதம்பண்ணுவதற்கோ நிற்கமுடியாது. தமக்கு விரோதமாக எதிர்த்து நிற்க கர்த்தர் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை.

பெத்ஷிமேசிற்கு கர்த்தருடைய பெட்டி வந்தபோது, அந்த ஊர் மனுஷர் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். இப்போதோ கர்த்தருடைய பெட்டி தங்களைவிட்டுப் போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். "பெட்டி நம்மிடத்திலிருந்து யாரிடத்திற்குப் போகும்" (1சாமு 6:20) என்று பெத்ஷிமேசின் மனுஷர் சொல்லுகிறார்கள்.

பெத்ஷிமேசின் மனுஷர் கீரியாத்யாரீமின் குடிகளுக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். "பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப அனுப்பினார்கள்; நீங்கள் வந்து, அதை உங்களிடத்துக்கு எடுத்துக்கொண்டு போங்கள்" (1சாமு 6:21) என்று பெத்ஷிமேசின் மனுஷர் கீரியாத்யாரீமின் குடிகளுக்கு சொல்லச்சொல்லுகிறார்கள்.

கீரியாத்யாரீம் பெத்ஷிமேசிலிருந்து சற்று தூரத்திலுள்ள ஒரு பட்டணம். கீரியாத்யாரீமின் குடிகள் பெத்ஷிமேசிற்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை அவர்களுடைய ஊருக்கு எடுத்துக்கொண்டு போகுமாறு சொல்லுகிறார்கள்.

கீரியாத்யாரீம் பெத்ஷிமேசிற்கும் சீலோவுக்கும் இடையிலே உள்ள பட்டணம். பெத்ஷிமேசின் மனுஷர் கீரியாத்யாரீமுக்கு கர்த்தருடைய பெட்டியை அனுப்பும்போது, சீலோவின் மனுஷர் அங்கே வந்து அந்தப் பெட்டியை, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு கொண்டு போவார்கள் என்று பெத்ஷிமேசின் மனுஷர் நினைத்திருக்கலாம். அல்லது கர்த்தருடைய சித்தம் வேறுவிதமாகவும் இருக்கலாம்.

கர்த்தருடைய பெட்டி ஒவ்வொரு ஊராகப்போய்க்கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பெட்டி தங்களுடைய ஊரிலிருக்கவேண்டுமென்று ஒருவரும் விரும்பவில்லை. இஸ்ரவேலிலே ராஜா இல்லை. அவனவன் தன்னுடைய மனதிற்கு பிரியமானதை செய்துகொண்டிருக்கிறான். கர்த்தருக்கும், அவருடைய ஊழியத்திற்கும், அவருடைய ஆராதனைக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், ஒவ்வொருவரும் தங்களுடைய சுயகாரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

7 அதிகாரம்

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி கீரியாத்யாரீமிலே பல வருஷங்களாயிருக்கிறது (1சாமு 7:1,2). சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நியாயம் விசாரிக்கிறார். கர்த்தர் சாமுவேலை நியாயாபதியாக எழுப்பியிருக்கிறார். சாமுவேலே இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதி.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சாமுவேல் அவர்களுடைய இருதயத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாவதற்கு ஊழியம் செய்கிறார் (1சாமு 7:3,4). சாமுவேலின் காலத்தில் மார்க்க உபதேசங்கள் மறுபடியும் புத்துயிர் பெறுகிறது (1சாமு 7:5,6).

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள் (1சாமு 7:7-9). சாமுவேல் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் இஸ்ரவேலருக்கு பெலிஸ்தர்மீது ஜெயம் கொடுக்கிறார் (1சாமு 7:10,11).

கர்த்தர் இஸ்ரவேலருக்கு கொடுத்த ஜெயத்திற்கு அடையாளமாக, சாமுவேல் ஒரு கல்லை ஞாபகசின்னமாக நிறுத்துகிறார் (1சாமு 7:12). பெலிஸ்தர் தாழ்த்தப்படுகிறார்கள் (1சாமு 7:13,14). சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறார் (1சாமு 7:15-17).

கர்த்தருடைய பெட்டி 1சாமு 7:1,2

1சாமு 7:1. அப்படியே கீரியாத்யாரீமின் மனுஷர் வந்து, கர்த்தருடைய பெட்டியை எடுத்து, மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்து, கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படிக்கு, அவன் குமாரனாகிய எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்தினார்கள்.

1சாமு 7:2. பெட்டி கீரியாத்யாரீமிலே அநேகநாள் தங்கியிருந்தது; இருபது வருஷம் அங்கேயே இருந்து; இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாரும் கர்த்தரை நினைத்து, புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

கர்த்தருடைய பெட்டி பெத்ஷிமேசிலே, யோசுவாவின் நிலத்திலுள்ள ஒரு பெரிய கல்லின்மேல் வைக்கப்பட்டிருந்தது. தங்கள் மத்தியிலே கர்த்தருடைய பெட்டி இருப்பதை பெத்ஷிமேசின் மனுஷர் விரும்பவில்லை.

பெத்ஷிமேசின் மனுஷர் கீரியாத்யாரீமின் குடிகளுக்கு ஆட்களை அனுப்பி: பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப அனுப்பினார்கள்; நீங்கள் வந்து, அதை உங்களிடத்துக்கு எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லச்சொன்னார்கள் (1சாமு 6:21).

அப்படியே கீரியாத்யாரீமின் மனுஷர் வந்து, கர்த்தருடைய பெட்டியை எடுத்து, மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்து, கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படிக்கு, அவன் குமாரனாகிய எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்துகிறார்கள் (1சாமு 7:1).

இந்த சம்பவத்திற்கு பின்பு கர்த்தருடைய பெட்டியைப்பற்றி அதிகமாய்ச் சொல்லப்படவில்லை. சவுல் தேவனுடைய பெட்டியை கொண்டுவருமாறு சொல்லுகிறார்.

"அப்பொழுது சவுல் அகியாவை நோக்கி: தேவனுடைய பெட்டியைக் கொண்டுவா என்றான்; தேவனுடைய பெட்டி அந்நாட்களில் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இருந்தது" (1சாமு 14:18).

அதன் பின்பு, நாற்பது வருஷம் கழித்து தாவீது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வருகிறார்.

"கேருபீன்களின் நடுவே வாசம் பண்ணுகிற கர்த்தராகிய தேவனுடைய நாமம் தொழுதுகொள்ளப்படுகிற அவருடைய பெட்டியை யூதாவிலிருக்கிற கீரியாத்யாரீமுக்கடுத்த பாலாவிலிருந்து கொண்டுவரும்படிக்கு, அவனும் இஸ்ரவேலர் அனைவரும் அவ்விடத்திற்குப் போனார்கள்" (1நாளா 13:6).

கர்த்தருடைய பெட்டி இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இருப்பது அவர்களுக்கு பெரிய ஆசீர்வாதம். பெத்ஷிமேசின் மனுஷருக்கும் அந்த ஆசீர்வாதம் கிடைத்திருக்கும். ஆனால் அவர்களோ தங்கள் மதியீனத்தினால், கர்த்தருடைய பெட்டியை கீரியாத்யாரீமுக்கு கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை இழந்துபோகிறார்கள்.

கீரியாத்யாரீமின் மனுஷரோ, கர்த்தருடைய பெட்டியை பெத்ஷிமேசிலிருந்து சந்தோஷமாய் தங்கள் ஊருக்கு எடுத்துக்கொண்டு வருகிறார்கள். பெத்ஷிமேஸ் ஊர் கீரியாத்யாரீமுக்கு அருகாமையிலிருக்கிறது. கர்த்தருடைய பெட்டி தங்கள் ஊரை விட்டுப்போனதற்காக பெத்ஷிமேசின் மனுஷர் சந்தோஷப்படுகிறார்கள்.

பெத்ஷிமேசின் மனுஷர் பள்ளத்தாக்கிலே கோதுமை அறுப்பு அறுத்துக்கொண்டிருந்த போது தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தார்கள். அப்போது இரண்டு கறவைப் பசுக்களும் கர்த்தருடைய பெட்டி இருக்கிற வண்டிலை பெத்ஷிமேஸ் ஊருக்கு நேராக இழுத்துக்கொண்டு வந்தது. அப்போது பெத்ஷிமேசின் ஊரார் கர்த்தருடைய பெட்டியைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள் (1சாமு 6:13).

ஆனால் பெத்ஷிமேசின் மனுஷர் இப்போது, கர்த்தருடைய பெட்டி தங்கள் ஊரைவிட்டுப்போனதற்காக சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தருடைய பெட்டி தங்கள் ஊருக்கு வந்தபோது, பெத்ஷிமேசின் ஊராருக்கு ஏற்பட்ட சந்தோஷத்தைவிட, அந்த பெட்டி அவர்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டுபோனபோது, அவர்கள் அதிகமாய் சந்தோஷப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பெட்டி பெத்ஷிமேஸ் ஊராருக்கு மத்தியிலிருப்பது அவர்களுக்கு ஆசீர்வாதம். ஆனால் பெத்ஷிமேசின் மனுஷரோ கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கும் உடன்படிக்கைப் பெட்டியை பரிசுத்தம்பண்ணவில்லை. பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்த படியினால் கர்த்தர் அவர்களை அடித்தார் (1சாமு 6:19). தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பெத்ஷிமேஸ் மனுஷர்மீது வந்ததற்கு, அவர்களுடைய பாவமும், மீறுதலுமே காரணம். ஆனால் பெத்ஷிமேசின் மனுஷரோ, தாங்கள் அனுபவிக்கும் வேதனைக்கு, தங்கள்மீது குற்றம் சொல்லாமல், கர்த்தருடைய பெட்டியின்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

கீரியாத்யாரீமின் மனுஷர் கர்த்தருடைய பெட்டியை எடுத்து, மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைக்கிறார்கள். ஒருவேளை கீரியாத்யாரீமிலுள்ள வீடுகளில், அபினதாபின் வீடு பெரிய வீடாகயிருந்திருக்கலாம். அவருடைய வீடு ஒரு பெரிய மேட்டின்மீது கட்டப்பட்டிருக்கலாம். கர்த்தருடைய பெட்டி உயர்வான ஸ்தலத்தில் வைக்கப்படவேண்டும் என்று தீர்மானித்து, கீரியாத்யாரீமின் மனுஷர், கர்த்தருடைய பெட்டியை, மேட்டின் மேல் இருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டு வந்து வைக்கிறார்கள்.

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டியை யாருடைய வீட்டிலும் கொண்டு வந்து வைக்கவில்லை. அதை வெட்ட வெளியிலே வைத்தார்கள். யோசுவாவின் நிலத்திலுள்ள ஒரு பெரிய கல்லின்மேல் கர்த்தருடைய பெட்டியை வைத்தார்கள். வெட்ட வெளியிலிருந்த கர்த்தருடைய பெட்டி இப்போது, ஒரு வீட்டிற்குள் வைக்கப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு, ஒரு நல்ல வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவார். ஒரு சிலர் கர்த்தருடைய பெட்டிக்கு இடம் கொடுக்கவில்லையென்றாலும், வேறு சிலர் அந்தப் பெட்டிக்கு இடம் கொடுக்கும் வண்ணமாக, கர்த்தர் அவர்களுடைய இருதயத்தில் ஏவுவார். அவர்கள் கர்த்தருடைய பெட்டியை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பார்கள்.

கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள, மகாபரிசுத்த ஸ்தலத்தில் இருக்க வேண்டிய உடன்படிக்கைப் பெட்டி, இப்போது கீரியாத்யாரீமிலே, அபினதாபின் வீட்டிலே இருக்கிறது. கர்த்தருடைய பெட்டி ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தாலும், ஒரு சாதாரண வீட்டிலிருந்தாலும், அந்தப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாள மாகவே இருக்கிறது. கர்த்தருடைய பெட்டி ஒரு சாதாரண வீட்டிலிருந்தாலும், அவருடைய மகிமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை.

கீரியாத்யாரீமின் மனுஷர் கர்த்தருடைய பெட்டியை காக்கும்படி ஒருவனை நியமிக்கிறார்கள். அவர்கள் அபினதாபின் குமாரனாகிய எலெயாசாரை, கர்த்தருடைய பெட்டியை காக்கும்படி பரிசுத்தப்படுத்துகிறார்கள். அவர்கள் தகப்பனாரை பரிசுத்தம் பண்ணாமல், அவருடைய குமாரனை பரிசுத்தம் பண்ணுகிறார்கள். அபினதாப் வயது முதிர்ந்த கிழவனாயிருக்கிறார். அவரால் கர்த்தருடைய பெட்டியை காக்க முடியாது. கர்த்தருக்கு பணிவிடை செய்ய முடியாது. ஆகையினால் கீரியாத்யாரீமின் மனுஷர் வாலிபனான எலெயாசாரை, கர்த்தருடைய பெட்டியை காக்கும்படி பரிசுத்தம் பண்ணுகிறார்கள்.

எலெயாசாருக்கு முக்கியமான ஊழியப்பொறுப்பு கொடுக்கப்படுகிறது. அவர் கர்த்தருடைய பெட்டியை காவல் காக்கவேண்டும். பெலிஸ்தர் அபினதாபின் வீட்டிற்கு வந்து, கர்த்தருடைய பெட்டியை தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடாதவாறு, எலெயாசார் பெட்டியை பாதுகாப்பாக காக்கவேண்டும்.

பெத்ஷிமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்து சங்காரமானார்கள். அவர்களைப்போல கீரியாத்யாரீமின் மனுஷரும், கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்து சங்காரமாகாதபடி, எலெயாசார் ஜனங்களை எச்சரிக்கவேண்டும். கீரியாத்யாரீமின் மனுஷர் யாரும் கர்த்தருடைய பெட்டியை தொட்டுவிடாதவாறு, எலெயாசார் அதைப் பாதுகாக்கவேண்டும்.

கர்த்தருடைய பெட்டி அபினதாபின் வீட்டிலே ஒரு அறையில் வைக்கப்பட்டிருக்கிறது. எலெயாசார் அந்த அறையை சுத்தம்பண்ண வேண்டும். கர்த்தருடைய பெட்டி அவருடைய பரிசுத்தமான பிரசன்னத்திற்கு அடையாளம். கர்த்தர் பரிசுத்தர். அவருடைய பெட்டியும் பரிசுத்தமான இடத்திலிருக்கவேண்டும். கர்த்தருடைய பெட்டி வைக்கப்பட்டிருக்கும் அறையிலே வேறு பொருட்களைப்போட்டு, அதை சாமான்கள் வைக்கும் அறையைப்போல பயன்படுத்திவிடக்கூடாது. அந்த அறையிலே குப்பைகளைப் போட்டு குவித்துவிடக்கூடாது. அந்த அறை முழுவதும் சுத்தமாயிருக்கவேண்டும். அதை சுத்தப்படுத்துவது எலெயாசாரின் ஊழியம்.

எலெயாசார் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவரல்ல. இவர் ஆரோனின் வம்சத்தில் பிறந்தவருமல்ல. இவர் கீரியாத்யாரீம் ஊரிலே உள்ள இஸ்ரவேலரில், கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறவர். கர்த்தருடைய பெட்டி, அபினதாபின் வீட்டிலிருக்கும்போது, பக்தியுள்ள இஸ்ரவேலர், உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக, கர்த்தரை ஆராதிக்க வருவார்கள். அப்போது அபினதாப் அங்கே இருந்து, ஆராதனையில் உதவி செய்யவேண்டும். இதற்காகவே கீரியாத்யாரீமின் மனுஷர் அபினதாபின் குமாரனாகிய எலெயாசாரை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார்கள்.

மோசேயின் பிரமாணத்தின்படி ஆரோனின் குடும்பத்தாரும், லேவியரும் மாத்திரமே கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியும். கர்த்தருடைய பெட்டியை காக்கும்படி எலெயாசாரை பரிசுத்தப்படுத்தியிருப்பது, மோசேயின் பிரமாணத்திற்கு விரோதமானது. ஆனாலும், இங்கேயுள்ள சூழ்நிலையில், ஊழியத்திற்கு பரிசுத்தப்படுத்தியிருப்பது தவறான காரியமோ, கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிற காரியமோ அல்ல. கர்த்தர் எலெயாசாரின் ஊழியத்தை அங்கீகரிக்கிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி மறுபடியும் சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்படவேண்டும். ஆனால் கர்த்தருடைய பெட்டி சீலோவுக்குப்போகாமல், கீரியாத்யாரீமிலேயே பல வருஷமாயிருக்கிறது. கர்த்தர் சீலோவை நியாயந்தீர்க்கிறார். சீலோ அழிந்துபோகிறது.

"நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள். நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி வந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவுகொடாமலும் போனபடியினால், என் நாமம் தரிக்கப்பட்டதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறதுமான இந்த ஆலயத்துக்கும், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன்" (எரே 7:12-14).

கீரியாத்யாரீம் சீலோவுக்கு அருகாமையிலிருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கீரியாத்யாரீமிலிருந்து, சீலோவுக்கு கொண்டுபோகவேண்டுமென்றால், ஜனங்கள் மனப்பூர்வமாய் ஒத்துழைத்து, கர்த்தருடைய பெட்டியை சீலோவுக்கு கொண்டு போகவேண்டும். ஆனால் இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாரை வழிநடத்துவதற்கு ஆவிக்குரிய தலைவர் ஒருவருமில்லை. சீலோவிலே ஆசாரியராயிருந்த ஏலியும் மரித்துப்போனார். அவருடைய இரண்டு குமாரரும் யுத்தத்திலே ஒரே நாளில் செத்துப்போனார்கள். அதன்பின்பு சாமுவேலின் ஊழியத்தைப்பற்றியும், சிறிதுகாலத்திற்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. இஸ்ரவேல் ஜனங்களை ஆவிக்குரிய காரியங்களில் வழிநடத்துவதற்கு ஒருவருமில்லை.

கர்த்தருடைய பெட்டி கீரியாத்யாரீமிலே அநேகநாள் தங்கியிருக்கிறது; இருபது வருஷம் அங்கேயே இருக்கிறது; இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாரும் கர்த்தரை நினைத்து, புலம்பிக்கொண்டிருக்கிறார்கள் (1சாமு 7:2). கர்த்தருடைய பெட்டியானது, நாற்பது வருஷங்களாக, கர்த்தருடைய ஆலயத்தில் ஸ்தாபிக்கப்படாமல், ஆலயத்திற்கு வெளியிலே இருக்கிறது.

இக்காலத்தில் சாமுவேல் இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் ஊழியம் செய்கிறார். அவர் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரையும் நியாயம் விசாரித்து ஆளுகை செய்கிறார். ஆனாலும் கர்த்தருடைய பெட்டியை, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டு வர, சாமுவேல் ஒரு முயற்சியும் மேற்கொண்டதாக தெரியவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை, அவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்தமுமில்லை என்பதற்கு இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, அதற்குரிய பரிசுத்த ஸ்தலத்தில் வைக்காமல், கர்த்தருடைய ஊழியத்தைப் புறக்கணித்துவிடுகிறார்கள். இதன் நிமித்தமாக கர்த்தர் இஸ்ரவேலரைத் தண்டிக்கிறார்.

இஸ்ரவேல் குடும்பத்தார் எல்லோரும், இருபது வருஷங்களாக, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை நினைத்துப் பார்க்கவே இல்லை. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே அவருடைய பெட்டி ஸ்தாபிக்கப்படவேண்டும் என்னும் உணர்வும் அவர்களிடத்தில் இல்லை. இருபது வருஷங்களுக்கு பின்பு, இஸ்ரவேல் குடும்பத்தார் எல்லோரும் கர்த்தரை நினைத்து புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, அதன் பரிசுத்த ஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்படாமலிருக்கிறதே என்று வேதனைப்படுகிறார்கள்.

செப்துவஜிந்த் பதிப்பில், "இஸ்ரவேல் குடும்பத்தார் எல்லோரும், இருபது வருஷங்களாக, கர்த்தரை நினைத்து புலம்பிக்கொண்டிருந்தார்கள்" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் அவருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்படவில்லை. கர்த்தருடைய பெட்டி அவருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அடையாளம். ஆசரிப்புக்கூடாரத்தில், கர்த்தருடைய பெட்டி இல்லாததினால், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமும் இல்லாதிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்திலே பலிபீடம் இருக்கிறது. ஆனால் உடன்படிக்கைப் பெட்டி இல்லை. இஸ்ரவேல் புத்திரர் பாவநிவாரண நாளை எவ்வாறு அனுசரிக்கவேண்டுமோ, அவ்வாறு அவர்களால் அனுசரிக்க முடியவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார், சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்து, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான உடன்படிக்கைப் பெட்டி இல்லாமலேயே, சடங்காச்சாரமான ஆராதனைகளை செய்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய ஆராதனையை ஏற்றுக்கொண்டாரா என்பதுகூட தெரியாமல், இஸ்ரவேல் ஜனத்தார் புறம்பான சடங்காச்சாரங்களை செய்து அதிலே திருப்தியடைகிறார்கள்.

சீலோவிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இல்லாதது, இஸ்ரவேல் குடும்பத்தாருக்கு, ஆரம்பத்தில் பெரிய குறையாக தெரியவில்லை. ஆனால் சில வருஷங்கள் சென்ற பின்பு, இஸ்ரவேல் குடும்பத்தார் உடன்படிக்கைப் பெட்டியின் முக்கியத்துவத்தை உணருகிறார்கள். இஸ்ரவேல் குடும்பத்தார் எல்லோரும் கர்த்தரை நினைத்து புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒருவேளை சாமுவேலின் பிரசங்கத்தினால் இஸ்ரவேல் ஜனங்களுடைய இருதயம் தொடப்பட்டிருக்கலாம். கர்த்தருடைய ஆவியானவர் அவர்களுடைய மனதில் வல்லமையாய்க் கிரியை செய்திருக்கலாம். இஸ்ரவேல் தேசத்தார் எல்லோருமே தங்கள் பாவங்களை உணர்ந்து, கர்த்தருடைய சமுகத்திலே பாவமன்னிப்புக்காக அழுது புலம்புகிறார்கள். இஸ்ரவேல் தேசம் எங்கும், இஸ்ரவேல் குடும்பத்தாருடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படுகிறது. அவர்களுடைய இருதயத்திலே உண்மையான மனந்திரும்புதல் உண்டாயிற்று. அவர்கள் கர்த்தரை நோக்கி புலம்பும்போது, தங்களுடைய பாவங்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும், மீறுதல்களுக்காகவும், கர்த்தருடைய சமுகத்திலே மன்னிப்பு கேட்கிறார்கள்.

தங்களுக்கு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி மறுபடியும் தேவைப்படுகிறது என்பதை இஸ்ரவேல் குடும்பத்தார் உணருகிறார்கள். அவர்கள் அதற்காக கர்த்தருக்கு முன்பாக அழுது புலம்புகிறார்கள். சீலோவிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இருந்தது. அப்போது இஸ்ரவேல் புத்திரர், ஆசரிப்புக்கூடாரத்தில் ஜெபம்பண்ணி, கர்த்தருக்கு ஆராதனை செய்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் குறித்து, தங்கள் இருதயத்தில் பெருமைப்பட்டார்கள். இப்போதோ அவர்களுடைய பெருமை அவர்களைவிட்டு நீங்கிற்று. அவர்களுடைய மனதிலே தாழ்மை உண்டாயிற்று. இஸ்ரவேல் குடும்பத்தார் எல்லோரும், கர்த்தருடைய சமுகத்திலே, அவருடைய உடன்படிக்கைப் பெட்டியை நினைத்து, அழுது புலம்புகிறார்கள்.

சாமுவேல்
1சாமு 7:3-6

1சாமு 7:3. அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நோக்கி: நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்; அப்பொழுது அவர் உங்களைப் பெலிஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கிவிடுவார் என்றான்.

1சாமு 7:4. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்தையும் விலக்கிவிட்டு, கர்த்தர் ஒருவருக்கே ஆராதனைசெய்தார்கள்.

1சாமு 7:5. பின்பு சாமுவேல்: நான் உங்களுக்காகக் கர்த்தரை மன்றாடும்படிக்கு, இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே கூட்டுங்கள் என்றான்.

1சாமு 7:6. அவர்கள் அப்படியே மிஸ்பாவிலே கூடிவந்து தண்ணீர்மொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றி, அன்றையதினம் உபவாசம்பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம் என்று அங்கே சொன்னார்கள்; மிஸ்பாவிலே சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்துக்கொண்டிருந்தான்.

இதுவரையிலும் சாமுவேல் எங்கே இருந்தார் என்றோ அல்லது அவர் என்ன செய்துகொண்டிருந்தார் என்றோ தெரியவில்லை. இந்த வசனப்பகுதியில் சாமுவேலைப்பற்றி மறுபடியுமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் சாமுவேல் செய்த ஊழியத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படாவிட்டாலும், அவருடைய ஊழியத்தின் மூலமாய், இஸ்ரவேல் குடும்பத்தார் மத்தியிலே ஆவிக்குரிய மாற்றம் உண்டாயிருக்கிறது. அவருடைய ஊழியப்பிரயாசங்களின் கனிகள் இஸ்ரவேல் மக்கள் மத்தியிலே பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது.

இஸ்ரவேல் குடும்பத்தார் எல்லோரும் கர்த்தரை நினைத்து புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் பாவத்தினால் குத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் குற்றவுணர்வோடிருக்கிறார்கள். இரும்பு சூடாகயிருக்குபோதே அதை வளைக்கவேண்டும். இஸ்ரவேல் குடும்பத்தார் புலம்பிக்கொண்டிருக்கும்போது, சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்துகிறார்.

சாமுவேல் ஒவ்வொரு ஊராகச் சென்று கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார். "இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே கூட்டுங்கள்" (1சாமு 7:5) என்று சாமுவேல் சொல்லுகிறார். இதுவரையிலும் சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களை ஓரிடத்தில் கூடிவரச் செய்யாமல், அவரே ஒவ்வொரு ஊராக போய் அங்கே அங்கே கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணினார். சாமுவேல் எங்கே போனாலும், அங்கே இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கம்பண்ணுவது வழக்கம்.

சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நோக்கி: "நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்யுங்கள்" (1சாமு 7:3) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள், அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் பாகால்களையும், அந்நிய தேவர்களையும், அஸ்தரோத்தையும் ஆராதிக்கிறார்கள். அஸ்தரோத் புறஜாதியாரின் பெண்தெய்வமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டுமென்றால் அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும். அவர்கள் இதுவரையிலும் ஆராதித்து வருகிற பாகால்களையும், அந்நிய தேவர்களையும், அஸ்தரோத்தையும் தங்கள் நடுவிலிருந்து நீக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, விக்கிரகாராதனையை விட்டு விலகிவரவேண்டும்.

சாமுவேல் இந்த வசனப்பகுதியில் அஸ்தரோத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லுகிறார். அஸ்தரோத் ஒரு பெண் தெய்வம். இஸ்ரவேல் ஜனத்தார் அஸ்தரோத் விக்கிரகத்தை அதிகமாய் நேசிக்கிறார்கள். இஸ்ரவேலின் பாவம் அதிகமாயிருக்கிறது. அவர்கள் பாவம் செய்வதற்கு பிரியப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, தங்களுடைய பாவத்தை விட்டும் விலகி வரவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் திரும்பும்போது அவர்கள் தங்களுடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக்கவேண்டும். கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்யவேண்டும். அவர்களுடைய இருதயங்களில் விக்கிரகங்களுக்கு இடம் இருக்கக்கூடாது. கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும் என்னும் பக்தி வைராக்கியம் அவர்களிடத்தில் காணப்படவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதிக்கும்போது, அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். மற்ற அந்நிய தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது. கர்த்தரையும் ஆராதிக்கலாம். அந்நிய தெய்வங்களையும் ஆராதிக்கலாம் என்று தங்களுக்குத் தாங்களே சமாதானமும், சமரசமும் செய்து கொள்ளக்கூடாது. கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்யாமல், கர்த்தருக்கும், விக்கிரகத்திற்கும் ஆராதனை செய்வது மெய்யான ஆராதனையல்ல. கர்த்தரை தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் குடும்பத்தார் தங்கள் இருதயத்தை கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யும்போது, கர்த்தர் அவர்களை பெலிஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கிவிடுவார் (1சாமு 7:3). இதுவே சாமுவேலின் பிரசங்கச் செய்தி. இந்தச் செய்தியின் மூலமாய் இஸ்ரவேல் குடும்பத்தார் மத்தியில் நல்ல விளைவுகள் உண்டாயிற்று. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். தங்களிடத்திலுள்ள விக்கிரகங்களை அகற்றிப்போடுகிறார்கள். பாகால்களையும், அந்நிய தேவர்களையும், அஸ்தரோத்தையும் தங்கள் நடுவிலிருந்து விலக்கி வைத்துவிடுகிறார்கள். அவற்றை அழித்துப்போடுகிறார்கள்.

சாமுவேலின் பிரசங்கச் செய்தி இஸ்ரவேல் ஜனத்தாரின் இருதயத்தைத் தொடுகிறது. இஸ்ரவேல் புத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்தையும் விலக்கிவிட்டு, கர்த்தர் ஒருவருக்கே ஆராதனைசெய்கிறார்கள் (1சாமு 7:4). இஸ்ரவேல் கர்த்தரை ஆராதிப்பது மாத்திரமல்ல, விக்கிரகங்களையும் அழித்துப் போடுகிறார்கள். விக்கிரகங்களையும் பலிபீடங்களையும் நொறுக்கிப்போடுகிறார்கள்.

சாமுவேல் இஸ்ரவேலருக்காக கர்த்தரை மன்றாடும்படிக்கு விரும்புகிறார். அதற்காக இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே கூட்டுமாறு சொல்லுகிறார் (1சாமு 7:5).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்யவேண்டும். அவர்கள் அவரை மாத்திரமே சேவிக்கவேண்டும். சாமுவேல் இஸ்ரவேலர் எல்லோரையும் மிஸ்பாவிலே கூட்டுங்கள் என்று சொல்லுகிறார். ஒருவேளை அவர் இஸ்ரவேலில் மூப்பராயிருக்கிறவர்களை மிஸ்பாவிலே கூட்டியிருக்கலாம் (1சாமு 7:5). சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்காக மிஸ்பாவிலே ஜெபம்பண்ணுவதாக சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய நாமத்தினாலே கூடிவரும்போது, கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்காகவும், அவரிடத்தில் ஜெபிப்பதற்காகவும் கூடிவருகிறோம். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க நம்முடைய இருதயத்தைத் திறந்துகொடுக்கவேண்டும். கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும். நாம் வசனத்தைக் கேட்பதற்காகவும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்காகவுமே, அவருடைய நாமத்தினாலே கூடிவந்திருக்கிறோமேயல்லாமல், வேறு எந்த காரணத்திற்காகவும் கூடிவரவில்லை. சபை கூடுவதை அசட்டைபண்ணி விட்டுவிடக்கூடாது. சாமுவேல் சொன்ன பிரகாரம் அவர் மிஸ்பாவிலே இஸ்ரவேலுக்காக கர்த்தரை மன்றாடுகிறார்.

இஸ்ரவேலர் எல்லோரும், சாமுவேல் சொன்ன பிரகாரம் மிஸ்பாவிலே கூடிவருகிறார்கள். அவர்கள் சாமுவேலின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கூடிவருகிறார்கள். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம்.

இஸ்ரவேலர் எல்லோரும் மிஸ்பாவிலே கூடிவந்து தண்ணீர் மொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றுகிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியதற்கு அடையாளமாகவும், தங்களை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்துவதற்கு அடையாளமாகவும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் தண்ணீர் ஊற்றுகிறார்கள். தண்ணீரை தரையிலே ஊற்றினால், அது தரையிலே ஓடும். அந்தத் தண்ணீரை மறுபடியுமாக கூட்டி அள்ளிச் சேர்க்கமுடியாது.

"நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக்கூடாதபடிக்கு, தரையிலே சுவறுகிற தண்ணீரைப்போல் இருக்கிறோம்; தேவன் ஜீவனை எடுத்துக்கொள்ளாமல், துரத்துண்டவன் முற்றிலும் தம்மை விட்டு விலக்கப்படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார்" (2சாமு 14:14).

"இஸ்ரவேலர் கர்த்தருக்கு முன்பாக மனந்திரும்பி தங்களுடைய இருதயத்தை கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றுகிறார்கள்" என்று வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் தண்ணீர் மொண்டு ஊற்றி, அன்றையதினம் உபவாசம்பண்ணி, "கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்" என்று சொல்லி ஜெபம்பண்ணு கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் கெஞ்சி மன்றாடி ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலர் எல்லோரும் மிஸ்பாவிலே கூடிவந்து ஏகோபித்து, ஒருமனப்பட்டு ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களைவிட்டு விலகி வருகிறார்கள். தங்களுக்கென்று எந்தப் பாவத்தையும் சொந்தமாக வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரை கெஞ்சம்கூட மீதியில்லாமல், மொத்தமாக ஊற்றிவிடுவதுபோல, இஸ்ரவேல் புத்திரர், தங்களுக்கென்று எந்தப் பாவத்தையும் தங்கள் இருதயத்தில் வைத்துக்கொள்ளாமல், எல்லா பாவங்களையும் தங்களைவிட்டு நீக்கிப்போடுகிறார்கள்.

"இஸ்ரவேலர் தண்ணீர் மொண்டு கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றுவது" என்பது அவர்களுடைய சந்தோஷத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தங்களுக்கு கிடைக்கும் என்று விசுவாசித்து இஸ்ரவேலர் கர்த்தருக்குள் சந்தோஷப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகி வரும்போது, கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு கிடைக்குமென்று சாமுவேலும் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே உபவாசம்பண்ணி ஜெபம்பண்ணுகிறார்கள். தங்களுடைய ஆத்துமாவை ஒடுக்குகிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு உண்மையாகவே மனந்திரும்பியிருக்கிறார்கள் என்பதற்கு, அவர்களுடைய உபவாசம் அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவத்தை மறைத்து வைக்கவில்லை. பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ கர்த்தரிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இஸ்ரவேல் புத்திரர் உபவாசம்பண்ணி, "கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்" என்று சொல்லி தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார்கள். கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய் தங்கள்மீது அவமானத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இக்காலத்தில் சாமுவேல் மிஸ்பாவிலே இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்துக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்பதை, சாமுவேல் கர்த்தருடைய நாமத்தினால் அவர்களுக்கு உறுதிபண்ணுகிறார். அவர்கள் மெய்யாகவே தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். கர்த்தரோடு ஒப்புரவாகியிருக்கிறார்கள். கர்த்தரும் அவர்களோடு ஒப்புரவாகியிருக்கிறார்.

சாமுவேல் இதுவரையிலும் கர்த்தருடைய தீர்க்கதரிசியாய் ஊழியம் செய்து வந்தார். இப்போதோ அவர் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்துக்கொண்டிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் பாவத்தை விட்டு விலகி வந்திருக்கிறார்கள். அவர்கள் மறுபடியும் பாவம் செய்து விடக்கூடாது. தாங்கள் விட்டு விலகி வந்த பாவங்களை, அவர்கள் மறுபடியும் பற்றிக்கொள்ளக்கூடாது. சாமுவேல் மிஸ்பாவிலே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறார். பாவம் செய்கிறவர்களைக் கடிந்துகொள்கிறார்.

பெலிஸ்தர்
1சாமு 7:7-12

1சாமு 7:7. இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக எதிர்த்து வந்தார்கள்; அதை இஸ்ரவேல் புத்திரர் கேட்டு, பெலிஸ்தரினிமித்தம் பயப்பட்டு,

1சாமு 7:8. சாமுவேலை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படிக்கு, எங்களுக்காக அவரை நோக்கி ஓயாமல் வேண்டிக்கொள்ளும் என்றார்கள்.

1சாமு 7:9. அப்பொழுது சாமுவேல் பால்குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாகச்செலுத்தி, இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான்; கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார்.

1சாமு 7:10. சாமுவேல் சர்வாங்க தகனபலியைச் செலுத்துகையில், பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண நெருங்கினார்கள்; கர்த்தர் மகா பெரிய இடிமுழக்கங்களைப் பெலிஸ்தர்மேல் அந்நாளிலே முழங்கப்பண்ணி, அவர்களைக் கலங்கடித்ததினால், அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாகப்பட்டு விழுந்தார்கள்.

1சாமு 7:11. அப்பொழுது இஸ்ரவேலர் மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோய், பெத்காரீம் பள்ளத்தாக்குமட்டும் அவர்களை முறிய அடித்தார்கள்.

1சாமு 7:12. அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார் என்று சொல்லி, அதற்கு எபெனேசர் என்று பேரிட்டான்.

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் உபவாசம்பண்ணி ஜெபம்பண்ணுகிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததை பெலிஸ்தர் கேள்விப்படுகிறார்கள். இஸ்ரவேலர் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம் பண்ணுவதற்கு கூடிவந்திருக்கிறார்கள் என்பது பெலிஸ்தருக்கு தெரியவில்லை. அவர்கள் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண கூடிவந்திருக்கிறார்கள் என்று பெலிஸ்தர் சந்தேகப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக எதிர்த்து வருகிறார்கள் (1சாமு 7:7).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவது நல்ல காரியம். உபவாசம்பண்ணுவது மிகவும் நல்லது. ஆனால் சில சமயங்களில் நன்மையான காரியங்களை செய்யும்போது, அங்கே தீமையான விளைவுகள் உண்டாகிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தி உபவாசம்பண்ணி ஜெபம்பண்ணுவதற்காக மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு பெலிஸ்தர் மூலமாய் தீங்கு வருகிறது.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்களுடைய ஜீவியத்தை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, சாத்தான் அவர்களுக்கு விரோதமாக கிரியை செய்ய ஆரம்பிக்கிறான். மனந் திரும்பின பாவிகளின் இருதயங்கள் புதுப்பிக்கப்படும்போது, சத்துரு அவர்களுக்கு பல வேதனைகளையும் சோதனைகளையும் கொடுக்கிறான். சாத்தான் புதிய விசுவாசி களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று அவர்களை சோர்வடையச் செய்கிறான்.

சாத்தானின் தந்திரம் பலிக்காது. கிறிஸ்துவானவர் பிசாசானவனை ஜெயித்திருக்கிறார். கர்த்தர் தீமையிலிருந்து நன்மையை உண்டாக்குகிறவர். சாத்தானோ நன்மையை தீமையாக மாற்றுகிறவன். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருடைய சமுகத்திலே உபவாசம்பண்ணி ஜெபிக்கும்போது, அவர்களுக்கு பெலிஸ்தர் மூலமாய் அச்சுறுத்தல் வருகிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு இப்படிப்பட்ட சூழ்நிலையில், இது வரையிலும் ஒரு பிரச்சனையும் வந்ததில்லை.

பொதுவாக இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வார்கள். கர்த்தர் அவர்களை சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுப்பார். சத்துருக்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவார்கள். யுத்தத்திலே இஸ்ரவேலர் தோற்றுபோவார்கள். இப்படிப்பட்ட சம்பவமே இஸ்ரவேலருக்கு இதுவரையிலும் வந்திருக்கிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களை தண்டிப்பார்.

இப்போதோ இஸ்ரவேலர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். ஆனால் பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். இஸ்ரவேலர் இப்போது யுத்தம்பண்ண ஆயத்தமாயில்லை. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் உபவாசம்பண்ணி ஜெபிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய இருதயங்களை கர்த்தருக்குள் புதுப்பிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியும், ஆவிக்குரிய ஆயத்தமும் ஏற்படுகிறது. யுத்த ஆயத்தம் ஒன்றும் நடைபெறவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள்.

பெலிஸ்தரின் அதிபதிகள் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவதை இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்பட்டு, பெலிஸ்தர் நிமித்தம் மிகவும் பயப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் மிஸ்பாவிலே இருக்கிறார்கள். சாமுவேலும் மிஸ்பாவிலிருக்கிறார். அவர்கள் சாமுவேலை நெருக்கமாகப் பற்றிக்கொள்கிறார்கள். சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்கு, கர்த்தருக்கு கீழே, நல்ல சிநேகிதராயிருக்கிறார். அவர்களுக்கு துன்பமும், இடுக்கமும் பிரச்சனையும் வரும்போது, சாமுவேல் அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்.

சாமுவேல் ஒரு யுத்தவீரரல்ல. அவர் ஒரு பராக்கிரமசாலியுமல்ல. அவர் சரீர பலமுள்ளவரா என்பதும் தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலிடம் தங்களுக்காக யுத்தம்பண்ணுமாறு கேட்கவில்லை. சாமுவேல் தங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும் என்றே கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலை நோக்கி: "நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படிக்கு, எங்களுக்காக அவரை நோக்கி ஓயாமல் வேண்டிக்கொள்ளும்" (1சாமு 7:8) என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் யுத்த ஆயுதம் எதுவுமில்லை. அவர்கள் யுத்தம்பண்ணவும் ஆயத்தமாயில்லை. அவர்கள் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண மிஸ்பாவிலே கூடிவரவில்லை. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் ஜெபம்பண்ணவும், உபவாசம்பண்ணவும் அங்கே கூடிவந்திருக்கிறார்கள். ஜெபமும் கண்ணீருமே இஸ்ரவேல் புத்திரரின் ஆயுதமாயிருக்கிறது.

விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் போராட்டம் உண்டு. கர்த்தர் நமக்கு உலகப்பிரகாரமான ஆயுதங்களைக் கொடுக்கவில்லை. நம்முடைய ஜெபமும் கண்ணீருமே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பலமான ஆயுதம். நாம் குதிரைகள்மீதோ அல்லது இரதங்கள் மீதோ ஏறிப்போய் யுத்தம்பண்ண வேண்டியதில்லை. நாம் கர்த்தருடைய சந்நிதியில், நம்முடைய முழங்காலில் நின்று, சத்துருவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும்.

சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்கிறார். அப்பொழுது சாமுவேல் பால்குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்தி, இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்கிறார்; கர்த்தர் அவருக்கு மறுமொழி அருளிச்செய்கிறார் (1சாமு 7:9).

சாமுவேல் கர்த்தரை வேண்டிக்கொள்ளாமல், சர்வாங்க தகனபலியை மாத்திரம் செலுத்தியிருந்தால், அதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. அதுபோலவே அவர் சர்வாங்க தகனபலியை செலுத்தாமல், கர்த்தரை வேண்டிக்கொள்ள மாத்திரம் செய்திருந்தாலும், அதனாலும் பிரயோஜன முண்டாகாது. கர்த்தரை வேண்டிக் கொள்வதும், சர்வாங்க தகனபலியை செலுத்துவதும் சேர்ந்து நடைபெறவேண்டும். இவ்விரண்டும் ஒன்றாய்ச் சேரும்போது கர்த்தர் நமக்கு மறுமொழி அருளிச்செய்வார்.

நாம் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணும்போது, இயேசுகிறிஸ்துவினுடைய பலியின்மீது விசுவாசம் வைத்து ஜெபிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து நமக்காக தம்மையே பலியாக செலுத்தியிருக்கிறார்.

சாமுவேல் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகிறார். கர்த்தரை மகிமைப்படுத்துவதற்காகவே சர்வாங்க தகனபலி செலுத்தப்படுகிறது. அவர் பால்குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியை பிடித்து, அதை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். சாமுவேல் எத்தனை ஆட்டுக்குட்டிகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார் என்பது முக்கியமல்ல. கர்த்தர் திரளான எண்ணிக்கையில் பிரியப்படுகிறவரல்ல. அந்த ஆட்டுக்குட்டியை அவர் எப்படிப்பட்ட இருதயத்தோடு, எப்படிப்பட்ட மனதோடு செலுத்துகிறார் என்பதையே கர்த்தர் பார்க்கிறார்.

சாமுவேல் ஒரு ஆசாரியரல்ல. அவர் ஒரு லேவியர். சாமுவேல் ஒரு தீர்க்கதரிசி. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்தான் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துவார்கள். ஆனால் இங்கோ லேவியரும், தீர்க்கதரிசியுமாகிய சாமுவேல் கர்த்தருக்கு பலி செலுத்துகிறார். இது ஒரு விசேஷமான சூழ்நிலை. கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம், சாமுவேல் கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார். கர்த்தர் சாமுவேல் செலுத்தின சர்வாங்க தகனபலியை அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் சாமுவேலுக்கு மறுமொழி அருளிச் செய்கிறார். கர்த்தர் சாமுவேலின் ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். சாமுவேல் என்னும் பெயருக்கு "தேவனிடத்தில் கேட்கப்பட்டவர்" என்று பொருள். சாமுவேல் தேவனிடத்தில் கேட்கிறார். தேவன் அவர் கேட்டதை அவருக்கு கொடுக்கிறார். கர்த்தர் சாமுவேலின் ஜெபத்தைக் கனம்பண்ணுகிறார்.

சாமுவேல் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகையில், பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண நெருங்குகிறார்கள். அவர் ஜெபம்பண்ணும்போது யுத்தம் ஆரம்பமாயிற்று. கர்த்தர் மகா பெரிய இடிமுழக்கங்களைப் பெலிஸ்தர்மேல் அந்நாளிலே முழங்கப்பண்ணி, அவர்களைக் கலங்கடித்ததினால், அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாகப்பட்டு விழுகிறார்கள் (1சாமு 7:10). பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண நெருங்கினாலும், சாமுவேல் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணுகிறார். அவர் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்.

இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் இதற்கு முன்பு யுத்தம்பண்ணினார்கள். அப்போது ஏலியின் குமாரர் இருவரும் தங்கள் தோள்கள்மீது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை பாளயத்திலே சுமந்து கொண்டு நின்றார்கள். இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை நம்பினார்கள். பெட்டி தங்களோடு கூடயிருப்பதினால், யுத்தத்திலே தங்களுக்கு ஜெயம் கிடைக்கும் என்று இஸ்ரவேலர் பெருமையோடு நினைத்தார்கள். ஆனால் இஸ்ரவேலருக்கு தோல்வி உண்டாயிற்று.

இப்போதோ கர்த்தருடைய பெட்டி இங்கே இல்லை. சாமுவேல் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகிறார். தன்னைத் தாழ்த்துகிறார். விசுவாசத்தோடு ஜெபிக்கிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசி தன்னைத் தாழ்த்தி, உண்மையான இருதயத்தோடு ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவருடைய ஜெபத்தைக் கேட்டு, பெலிஸ்தரைக் கலங்கப்பண்ணுகிறார். இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

அப்பொழுது இஸ்ரவேலர் மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோய், பெத்காரீம் பள்ளத்தாக்குமட்டும் அவர்களை முறிய அடிக்கிறார்கள் (1சாமு 7:11).

யுத்தத்திலே இஸ்ரவேலருக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது. இது கர்த்தரால் உண்டான ஜெயம். சாமுவேல் கர்த்தரைக் கனம்பண்ணுவதற்காகவும், இஸ்ரவேலரை உற்சாகப்படுத்துவதற்காகவும், யுத்தத்தில் கிடைத்த ஜெயத்திற்கு அடையாளமாக, ஒரு கல்லை நிறுத்துகிறார்.

அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார் என்று சொல்லி, அதற்கு எபெனேசர் என்று பேரிடுகிறார் (1சாமு 7:12).

எபெனேசர் என்னும் பேருக்கு "உதவியின் கல்" என்று பொருள் சொல்லலாம். இருபது வருஷங்களுக்கு முன்பு இஸ்ரவேல் புத்திரர் எபெனேசர் என்னும் இதே இடத்தில் பாளயமிறங்கியிருந்தார்கள். ஆனால் அப்போது பெலிஸ்தர் இஸ்ரவேலரை முறியடித்தார்கள்.

"சாமுவேலின் வார்த்தை இஸ்ரவேலுக்கெல்லாம் வந்தது. இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தஞ் செய்யப்புறப்பட்டு, எபெனேசருக்குச் சமீபத்தில் பாளயமிறங்கினார்கள்" (1சாமு 4:1).

அப்போது இஸ்ரவேலர் எபெனேசருக்கு சமீபமாயிருந்தார்கள். இப்போதோ எபெனேசர் அவர்கள் மத்தியிலிருக்கிறது. சாமுவேல் ஒரு கல்லை நிறுத்தி, "இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்" என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் இதுவரையிலும் செய்த நன்மைகளை நினைத்து சாமுவேல் அவரை நன்றியோடு துதிக்கிறார். இனிமேல் வரப்போகிற காலத்தில் கர்த்தர் தங்களுக்கு உதவிசெய்வாரா என்னும் சந்தேகம் சாமுவேலின் மனதில் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் சகல காரியங்களும் நன்மையாய் நடைபெற்றிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேலருக்கு இனிமேலும் என்ன செய்வார் என்பது அவர்களுக்கு தெரியவில்லை. ஆனாலும் கர்த்தர் இதுவரையிலும் தங்களுக்கு செய்த உதவிக்கு, இஸ்ரவேலர் கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறார்கள்.

"ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று, நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிகூறி வருகிறேன்" *(அப் 26:22).*

கர்த்தருக்கு ஒரு பலிபீடம்
1சாமு 7:13-17

1சாமு 7:13. இந்தப்பிரகாரம் பெலிஸ்தர் அப்புறம் இஸ்ரவேலின் எல்லையிலே வராதபடிக்குத் தாழ்த்தப்பட்டார்கள்; சாமுவேலின் நாளெல்லாம் கர்த்தருடைய கை பெலிஸ்தருக்கு விரோதமாய் இருந்தது.

1சாமு 7:14. பெலிஸ்தர் இஸ்ரவேல் கையிலிருந்து பிடித்திருந்த எக்ரோன் துவக்கிக் காத்மட்டுமுள்ள பட்டணங்களும் இஸ்ரவேலுக்குத் திரும்பக் கிடைத்தது; அவைகளையும் அவைகளின் எல்லைகளையும் இஸ்ரவேலர் பெலிஸ்தர் கையிலே இராதபடிக்கு, விடுவித்துக் கொண்டார்கள்; இஸ்ரவேலுக்கும் எமோரியருக்கும் சமாதானம் உண்டாயிருந்தது.

1சாமு 7:15. சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

1சாமு 7:16. அவன் வருஷாவருஷம் புறப்பட்டு, பெத்தேலையும் கில்காலையும் மிஸ்பாவையும் சுற்றிப்போய், அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம்விசாரித்த பின்பு,

1சாமு 7:17. அவன் ராமாவுக்குத் திரும்பிவருவான், அவனுடையவீடு அங்கே இருந்தது; அங்கே இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, அவ்விடத்தில் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

சாமுவேலின் நாட்களிலே இஸ்ரவேல் புத்திரர் பஸ்கா பண்டிகையை விசேஷமாய் ஆசரிக்கிறார்கள். சீலோ அழிந்துபோயிற்று. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி சீலோவில் இல்லை. அது வேறு இடத்திலிருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேலர் பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

சாமுவேலின் நாட்களிலே இஸ்ரவேல் தேசத்தில் அமைதி நிலவிற்று. பெலிஸ்தர் அப்புறம் இஸ்ரவேலின் எல்லையிலே வராதபடிக்குத் தாழ்த்தப்பட்டார்கள்; சாமுவேலின் நாளெல்லாம் கர்த்தருடைய கை பெலிஸ்தருக்கு விரோதமாய் இருந்தது *(1சாமு 7:13).*

சாமுவேல் இஸ்ரவேலைப் பாதுகாக்கிறார். சத்துருக்களின் கைகளிலிருந்து மீட்டுக்கொள்கிறார். கிதியோனின் கையிலிருந்த பட்டயத்தைப்போல, சாமுவேலின் கையில் பட்டயம் இல்லை. சிம்சோனின் பலத்த புயத்தைப்போல சாமுவேலுக்கு பலத்த புயமில்லை. சாமுவேல் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். ஜெபத்தின் வல்லமையினால் இஸ்ரவேலருக்கு ஜெயமுண்டாயிற்று. சாமுவேல் பட்டயத்தினால் யுத்தம்பண்ணவில்லை. அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி மன்றாடுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாவதற்கு ஊழியம் செய்கிறார்.

ஒரு தேசம் பாதுகாப்பாயிருக்க வேண்டுமென்றால், அந்த தேசத்தில் அமைதி நிலவவேண்டுமென்றால், ஜனங்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டும். பயபக்தியும், கீழ்ப்படிதலும் சமாதானத்திற்கு ஆதாரம்.

பெலிஸ்தர் இஸ்ரவேல் கையிலிருந்து பிடித்திருந்த எக்ரோன் துவக்கிக் காத்மட்டுமுள்ள பட்டணங்களும் இஸ்ரவேலுக்குத் திரும்பக் கிடைக்கிறது; அவைகளையும் அவைகளின் எல்லைகளையும் இஸ்ரவேலர் பெலிஸ்தர் கையிலே இராதபடிக்கு, விடுவித்துக்கொள்கிறார்கள்; இஸ்ரவேலுக்கும் எமோரியருக்கும் சமாதானம் உண்டாயிருக்கிறது (1சாமு 7:14).

பெலிஸ்தர் இஸ்ரவேல் கையிலிருந்து எக்ரோன் துவக்கி காத் மட்டுமுள்ள பட்டணங்களை பலவந்தமாகப் பிடித்துக்கொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரரோ பெலிஸ்தர் தங்கள் கையிலிருந்து பிடித்திருந்த இந்தப் பட்டணங்களை அவர்களிடமிருந்து திரும்ப பெற்றுக்கொள்கிறார்கள். எமோரியர் கானான் தேசத்தைச் சேர்ந்தவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எமோரியரோடு சமாதானமாயிருக்கிறார்கள்.

சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறார். அவர் வருஷாவருஷம் புறப்பட்டு, பெத்தேலையும் கில்காலையும் மிஸ்பாவையும் சுற்றிப்போய், அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம்விசாரிக்கிறார் (1சாமு 7:15,16).

சவுல் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பும், சாமுவேல் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறார். "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" (1சாமு 12:23) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

சாமுவேல் பெத்தேல், கில்கால், மிஸ்பா ஆகிய ஸ்தலங்களில் நியாயம் விசாரிக்கிறார். இவையெல்லாம் பென்யமீன் கோத்திரத்தாரின் பட்டணங்கள். சாமுவேலின் வீடு ராமாவிலிருக்கிறது. இது அவருடைய தகப்பனாராகிய எல்க்கானாவின் வீடு.

சாமுவேல் வருஷாவருஷம் புறப்பட்டு, பெத்தேலையும் கில்காலையும் மிஸ்பாவையும் சுற்றிப்போய், அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம்விசாரித்த பின்பு, அவர் ராமாவுக்குத் திரும்பிவருவார். சாமுவேல் அங்கே இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறார்.

சாமுவேல் ராமாவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். இந்தப் பலிபீடம் நோப் அல்லது கிபியோனிலே உள்ள பலிபீடத்திற்கு போட்டியாக கட்டப்படவில்லை. தன்னுடைய முற்பிதாக்கள் செய்த பிரகாரமாக, சாமுவேலும் தான் வாசம்பண்ணுகிற ஊரிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். இந்தப் பலிபீடத்தை சாமுவேலின் குடும்பத்தார் பயன்படுத்துவார்கள். இஸ்ரவேல் தேசத்திற்கு நன்மை உண்டாக சாமுவேல் ராமாவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்.

8 அதிகாரம்

இஸ்ரவேல் தேசத்திலே பொதுவாக நல்ல நாட்கள் தொடர்ந்து நீடிப்பதில்லை. அவர்கள் சிறிது காலம் நன்றாயிருப்பார்கள். அதன் பின்பு அவர்களுக்கு பிரச்சனைகள் வந்துவிடும். அவர்களுடைய பிரச்சனைகளுக்கு அவர்களே காரணம்.

சாமுவேலுக்கு முதிர்வயதாயிற்று (1சாமு 8:1). சாமுவேலின் குமாரரோ பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டுகிறார்கள் (1சாமு 8:2,3). இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதிகளின் ஆளுகையில் திருப்தியில்லை. ஆளுகையில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலிடம் கேட்கிறார்கள் (1சாமு 8:4,5). சாமுவேல் இதுபற்றி கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார் (1சாமு 8:6). இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்ல வேண்டிய பிரதியுத்தரத்தை கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார் (1சாமு 8:7,8).

ஆளுகையில் மாற்றம் ஏற்படும்போது, அதினால் ஏற்படும் பின்விளைவுகளையும் சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவுபடுத்தவேண்டும். இஸ்ரவேலருக்கு என்னென்ன பிரச்சனைகளெல்லாம் வரும் என்பதையும் சாமுவேல் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் (1சாமு 8:9-18).

இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டுமென்று பிடிவாதமாய்ச் சொல்லுகிறார்கள் (1சாமு 8:19,20). இஸ்ரவேல் புத்திரரை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்து என்று கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார் (1சாமு 8:21,22).

சாமுவேலின் குமாரர்
1சாமு 8:1-3

1சாமு 8:1. சாமுவேல் முதிர்வயதானபோது, தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைத்தான்.

1சாமு 8:2. அவனுடைய மூத்தகுமாரனுக்குப் பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர் அபியா; அவர்கள் பெயெர் செபாவிலே நியாயாதிபதிகளாயிருந்தார்கள்.

1சாமு 8:3. ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள்.

இஸ்ரவேலிலே இரண்டு சோகசம்பவங்கள் நடைபெறுகிறது. தேசத்திலே சோகமான காரியங்கள் நடைபெறுவது புதுமையல்ல. தேசத்தார் எல்லோரும் எப்போதும் சந்தோஷமாயிருப்பதில்லை. ஜனங்களுக்கு சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வரும்.

சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறார். ஆனால் அவருக்கு முதிர்வயதாயிற்று. இதற்கு முன்பு அவர் வருஷாவருஷம், பெத்தேலையும், கில்காலையும், மிஸ்பாவையும் சுற்றிப்போய், அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார். இப்போது சாமுவேலுக்கு முதிர்வயதானபடியினால், அவரால் முன்புபோல பிரயாணம் பண்ண முடியவில்லை. அவர் இதுவரையிலும் இஸ்ரவேலை நியாயம் விசாரித்ததுபோல, இப்போது நியாயம் விசாரிக்க முடியவில்லை.

ஒருவேளை சாமுவேலுக்கு இப்போது அறுபது வயதிருக்கலாம். இது அதிகமான முதிர்வயது என்று சொல்லமுடியாது. சாமுவேல் முதிர்வயதாகயிருந்தாலும், அவர் இன்னும் இஸ்ரவேல் புத்திரர்மீது அக்கரையும் கரிசனையும் உள்ளவராகவே இருக்கிறார். அவர் பிள்ளையாண்டானாகயிருந்தபோது, ஏலிக்கு முன்பாக கர்த்தருக்கு பணிவிடை செய்ததுபோலவே, இப்போதும் கர்த்தருக்குப் பணிவிடை செய்கிறார். சாமுவேலின் வயது மாறினாலும், அவருடைய நற்குணம் மாறவில்லை. பயபக்தி மாறவில்லை.

முதலாவது பழுத்த பழம் சீக்கிரத்தில் அழுகிப்போகும். சாமுவேல் தன்னுடைய வாலிபநாட்களில், வாலிபத்தின் கனியை இஸ்ரவேல் தேசத்தின் நன்மைகாகவே செலவுபண்ணினார். அவருடைய ஜீவனும் பெலனும் இஸ்ரவேல் புத்திரருக்காகவே இதுவரையிலும் பிரயோஜனப்பட்டது. இப்போது சாமுவேலுக்கு முதிர்வயதாயிற்று.

சாமுவேல் இன்னும் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கிறார். சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார் (1சாமு 7:14). தனக்கு முதிர்வயதானதினால், சாமுவேல் தன்னுடைய ஊழியத்தை நிறுத்திவிடவில்லை. இஸ்ரவேலை நியாயம் விசாரியாமல் ஒய்வெடுக்கவேண்டும் என்றும் தீர்மானம்பண்ணவில்லை.

சாமுவேல் முதிர்வயதானபோது, தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைக்கிறார். அவருடைய மூத்தகுமாரனுக்குப் பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர் அபியா; அவர்கள் பெயெர்செபாவிலே நியாயாதிபதிகளாயிருக்கிறார்கள் (1சாமு 8:1,2).

சாமுவேலின் குமாரர் இரண்டுபேரும் நல்லவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் சாமுவேலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்தார்கள். பிள்ளைகள் இரண்டுபேரும், தகப்பனாரின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் இருந்த வரையிலும், அவர்கள் இருவரும் கர்த்தருக்கு பயந்து நல்லவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் சாமுவேலின் வழியைவிட்டு விலகிப்போகவில்லை.

சாமுவேல் தன்னுடைய குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாய் வைக்கிறார். அவர்கள் தன்னுடைய பிள்ளைகள் என்னும் காரணத்திற்காக, சாமுவேல் அவர்களை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைக்கவில்லை. அவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு விசேஷித்த சலுகைகள் எதையும் காண்பிக்கவில்லை. அவர்கள் இருவரும் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்க தகுதியானவர்கள் என்பதை அறிந்து, சாமுவேல் தன்னுடைய குமாரர் இருவரையும் இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாய் வைக்கிறார்.

ஆனால் சாமுவேலின் குமாரரோ, அவருடைய வழிகளில் நடக்கவில்லை. அவர்கள் பொருளாசைக்கு சாய்கிறார்கள். பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டுகிறார்கள் (1சாமு 8:3).

சாமுவேலின் குணாதிசயமும், அவருடைய பிள்ளைகளின் குணாதிசயமும் வித்தியாசமாயிருக்கிறது. சாமுவேல் நல்லவர். அவருடைய குமாரரோ பொருளாசையுள்ளவர்கள். பரிதானம் வாங்குகிறவர்கள். பிள்ளைகள் பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும். பிள்ளைகள் மூலமாய் பெற்றோருக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்க வேண்டும். ஆனால் சாமுவேலுக்கோ தன்னுடைய பிள்ளைகள் மூலமாய் அவமதிப்பும் அவமரியாதையும் உண்டாயிற்று.

சாமுவேல் தன்னுடைய குமாரர் இருவரையும் இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாய் வைத்து, அவர்களை வெவ்வேறு பட்டணங்களில் அமர்த்துகிறார். அவர்கள் இருவரும் தூரத்திலுள்ள ஊர்களில் இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்கிறார்கள். அவர்கள் இப்போது சாமுவேலின் மேற்பார்வையில் இல்லை. அவர்கள் இஸ்ரவேலரை தனியாக நியாயம் விசாரிக்கிறார்கள். தங்கள் இஷ்டப்படி நியாயம் விசாரிக்கிறார்கள்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் நேரடி மேற்பார்வையின் கீழிருக்கும்போது நல்லவர்களாகவே இருக்கிறார்கள். தங்கள் பெற்றோரை விட்டுப் பிரிந்து தனியாகப் போகும்போது, ஒரு சில பிள்ளைகள் கெட்டுப்போகிறார்கள். பணமும் அதிகாரமும் தங்கள் கைகளில் வந்தவுடன் பிள்ளைகள் அவற்றை துஷ்பிரயோகம்பண்ணுகிறார்கள்.

மதிப்பும், மரியாதையும், ஐசுவரியமும், செல்வாக்கும் மனுஷருடைய மனதை மாற்றுகிறது. வாழ்க்கையிலே அந்தஸ்துக்கள் உயரும்போது, அநேகர் நல்லவர்களாக இருப்பதற்கு பதிலாக, துன்மார்க்கராய் மாறுகிறார்கள்.

சாமுவேலின் இரண்டு குமாரரும், ஏலியின் இரண்டு குமாரரைப்போல துன்மார்க்கரல்ல. ஏலியின் குமாரரிடத்தில் காணப்பட்ட கெட்ட குணங்கள் சாமுவேலின் குமாரரிடத்தில் காணப்படவில்லை. ஆனாலும் சாமுவேலின் குமாரர் பொருளாசைக்கு சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டுகிறார்கள்.

சாமுவேலின் குமாரர் இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்கும்போது, கர்த்தருடைய கட்டளையையும், நியாயப்பிரமாணத்தையும் நோக்கிப் பார்க்காமல், பணத்தையும், பரிதானத்தையும் நோக்கிப் பார்க்கிறார்கள். யார் அதிகமாக பரிதானம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு சொல்லிவிடுகிறார்கள். சாமுவேலின் குமாரருக்கு நியாயத்தைப்பற்றி அக்கரையில்லை. நியாயம் யார் பக்கம் இருக்கிறது என்பதை பார்ப்பதற்கு பதிலாக, பரிதானம் யார் பக்கம் இருக்கிறது என்பதையே பார்க்கிறார்கள்.

ராஜா
1சாமு 8:4-22

1சாமு 8:4. அப்பொழுது இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி, ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வந்து:

1சாமு 8:5. இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை; ஆகையால் சகலஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்றார்கள்.

1சாமு 8:6. எங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது; ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்.

1சாமு 8:7. அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக்கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்.

1சாமு 8:8. நான் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதல் இந்நாள்மட்டும் அவர்கள் என்னைவிட்டு, வேறே தேவர்களைச் சேவித்துவந்த தங்கள் எல்லாச் செய்கைகளின்படியும் செய்ததுபோல, அவர்கள் உனக்கும் செய்கிறார்கள்.

1சாமு 8:9. இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள்; ஆனாலும் உன் அபிப்பிராயத்தைக் காட்டும்படி அவர்களை ஆளும் ராஜாவின் காரியம் இன்னது என்று அவர்களுக்குத் திடசாட்சியாய்த் தெரியப்படுத்து என்றார்.

1சாமு 8:10. அப்பொழுது சாமுவேல், ஒரு ராஜா வேண்டும் என்று தன்னிடத்தில் கேட்ட ஜனங்களுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் சொல்லி:

1சாமு 8:11. உங்களை ஆளும் ராஜாவின் காரியம் என்னவென்றால், தன் ரதத்திற்கு முன் ஓடும்படி அவன் உங்கள் குமாரரை எடுத்து, தன் ரதசாரதிகளாகவும் தன் குதிரைவீரராகவும் வைத்துக்கொள்ளுவான்.

1சாமு 8:12. ஆயிரம்பேருக்கும், ஐம்பதுபேருக்கும் தலைவராகவும், தன் நிலத்தை உழுகிறவர்களாகவும், தன் விளைச்சலை அறுக்கிறவர்களாகவும், தன் யுத்த ஆயுதங்களையும் தன் ரதங்களின் பணிமுட்டுகளையும் பண்ணுகிறவர்களாகவும், அவர்களை வைத்துக்கொள்ளுவான்.

1சாமு 8:13. உங்கள் குமாரத்திகளைப் பரிமளதைலம் செய்கிறவர்களாகவும், சமையல்பண்ணுகிறவர்களாகவும், அப்பம் சுடுகிறவர்களாகவும் வைத்துக்கொள்ளுவான்.

1சாமு 8:14. உங்கள் வயல்களிலும், உங்கள் திராட்சத்தோட்டங்களிலும், உங்கள் ஒலிவத்தோப்புகளிலும், நல்லவைகளை எடுத்துக்கொண்டு, தன் ஊழியக்காரருக்குக் கொடுப்பான்.

1சாமு 8:15. உங்கள் தானியத்திலும் உங்கள் திராட்சப்பலனிலும் தசமபாகம் வாங்கி, தன் பிரதானிகளுக்கும் தன் சேவகர்களுக்கும் கொடுப்பான்.

1சாமு 8:16. உங்கள் வேலைக்காரரையும், உங்கள் வேலைக்காரிகளையும், உங்களில் திறமையான வாலிபரையும், உங்கள் கழுதைகளையும் எடுத்து தன்னுடைய வேலைக்கு வைத்துக்கொள்ளுவான்.

1சாமு 8:17. உங்கள் ஆடுகளிலே பத்தில் ஒன்று எடுத்துக்கொள்ளுவான்; நீங்கள் அவனுக்கு வேலையாட்களாவீர்கள்.

1சாமு 8:18. நீங்கள் தெரிந்துகொண்ட உங்கள் ராஜாவினிமித்தம் அந்நாளிலே முறையிடுவீர்கள்; ஆனாலும் கர்த்தர் அந்நாளிலே உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டார் என்றான்.

1சாமு 8:19. ஜனங்கள் சாமுவேலின் சொல்லைக் கேட்க மனதில்லாமல்: அப்படியல்ல, எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும்.

1சாமு 8:20. சகல ஜாதிகளையும்போல நாங்களும் இருப்போம்; எங்கள் ராஜா எங்களை நியாயம் விசாரித்து, எங்களுக்கு முன்பாகப் புறப்பட்டு, எங்கள் யுத்தங்களை நடத்தவேண்டும் என்றார்கள்.

1சாமு 8:21. சாமுவேல் ஜனங்களின் வார்த்தைகளையெல்லாம் கேட்டு, அவைகளைக் கர்த்தரிடத்தில் தெரியப்படுத்தினான்.

1சாமு 8:22. கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ அவர்கள் சொல்லைக் கேட்டு, அவர்களை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்து என்றார்; அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களைப்பார்த்து: அவரவர் தங்கள் ஊர்களுக்குப் போகலாம் என்றான்.

இக்காலத்தில் இஸ்ரவேலின் ஆளுகையில் மிகப்பெரிய மாற்றமுண்டாகிறது. கர்த்தர் நியாயாதிபதிகள் மூலமாய் இதுவரையிலும் இஸ்ரவேலை ஆளுகை செய்கிறார். இது கர்த்தருடைய ஆளுகை. இஸ்ரவேல் புத்திரரோ தங்களை ஒரு ராஜா ஆளுகை செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் இதுவரையிலும் கர்த்தருடைய ஆளுகை இருந்தது. இனிமேல் ராஜாவின் ஆளுகை வரப்போகிறது.

இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வருகிறார்கள். அவர்களுக்கு சாமுவேலின் குமாரர் பொருளாசைக்கு சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டுவது பிடிக்கவில்லை. அவர்கள் சாமுவேலின் குமாரர்மீது குற்றம் சொல்லுவதற்காகவும், தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்பதற்காகவும், இஸ்ரவேலின் மூப்பரானவர்கள் சாமுவேலினிடத்தில் வருகிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர் சாமுவேலிடம், "இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை; ஆகையால் சகலஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும்" (1சாமு 8:5) என்று கேட்கிறார்கள்.

அவர்கள் சாமுவேலிடம் இரண்டு காரியங்களை சொல்லுகிறார்கள். அவையாவன: 1. நீர் முதிர்வயதுள்ளவரானீர் 2. உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை. சாமுவேலுக்கு முதிர்வயதாயிற்று என்பது உண்மைதான். வயது அதிகரிக்கும்போது ஞானமும் அனுபவமும் அதிகரிக்கும். அது இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் நல்லது. வயதான சாமுவேலால், இஸ்ரவேலரை அதிக ஞானத்தோடு நியாயம் விசாரிக்க முடியும்.

சாமுவேலின் குமாரர் அவருடைய வழிகளில் நடக்கவில்லை என்பதும் உண்மைதான். சாமுவேலும் இதை நினைத்து துக்கப்படுகிறார். இஸ்ரவேலின் மூப்பர், சாமுவேலின் குமாரரைபற்றி குறை சொல்லும்போது, அவர்கள் சாமுவேல்மீது குற்றம் ஒன்றும் சொல்லவில்லை.

சாமுவேல் ஏலியைப்போல தப்புசெய்யவில்லை. ஏலி தன் குமாரரை கடினமாக கண்டிக்கவில்லை. தன் குமாரருக்கு விரோதமாக குற்றச்சாட்டுக்கள் எழும்பினாலும், ஏலி தன் பிள்ளைகளை எப்படி நடத்தவேண்டுமோ அப்படி நடத்தவில்லை. சாமுவேலோ தன் குமாரர்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்கிறார். சாமுவேல் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறவர். அவர் நீதிக்கும் நியாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறவர்.

இஸ்ரவேலின் மூப்பர் சாமுவேலைப்பற்றியும், அவருடைய குமாரரைப்பற்றியும் குற்றம் சொல்லிவிட்டு, தங்கள் மனதிலுள்ள விருப்பத்தையும் அவரிடத்தில் சொல்லுகிறார்கள். "ஆகையால் சகலஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும்" (1சாமு 8:5) என்று இஸ்ரவேலின் மூப்பர் சாமுவேலினிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலுக்கு விரோதமாக கலகம்பண்ணவில்லை. தாங்களாகவே ஒரு ராஜாவை தங்களுக்கு ஏற்படுத்திக்கொள்ளவுமில்லை. "தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும்" என்று அவர்கள் சாமுவேலினிடத்தில் கேட்கிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர்கள் கர்த்தருக்கு விரோதமாக யோசிக்கிறார்கள். அவர்கள் சொல்லுவது கர்த்தருக்கு பிரியமான காரியமல்ல. இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறதற்கு சாமுவேலைப்போல ஒரு நியாயாதிபதியே போதுமானவர். ஆனால் இஸ்ரவேலின் மூப்பரோ, தங்களை ஒரு ராஜா நியாயம் விசாரிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

ராஜா வெளிப்பார்வைக்கு கெம்பீரமாயிருப்பார். அவர் ராஜவஸ்திரம் தரித்திருப்பார். சாமுவேலோ சணல்நூல் ஏபோத்தை தரித்துமிகவும் எளிமையாயிருக்கிறார். இஸ்ரவேலின் மூப்பர் ஆடம்பரத்திற்கும், அலங்காரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மற்ற தேசங்களை ராஜாக்கள் ஆளுகை செய்கிறார்கள். இஸ்ரவேலையோ கர்த்தரே ராஜாதி ராஜாவாகயிருந்து ஆளுகை செய்கிறார்.

சாமுவேல் தீர்க்கதரிசி பார்வைக்கு எளிமையாயிருக்கிறார். அவர் சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு, கர்த்தருடைய செய்தியை இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார். இஸ்ரவேலை நீதியாய் நியாயம் விசாரிக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சாமுவேலைப் பிடிக்கவில்லை. தங்கள் நியாயாதிபதி, மற்ற தேசத்து ராஜாக்களைப்போல கெம்பீரமாகவும், ஆடம்பரமான வஸ்திரம் தரித்தவராகவும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள்.

எங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்படுகிறது; ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார் (1சாமு 8:6).

இஸ்ரவேலரின் மூப்பர் கேட்கிற காரியம் சாமுவேலின் இருதயத்தை உடைத்துப்போடுகிறது. அவர்களுடைய விருப்பம் சாமுவேலுக்கு ஆச்சரியமாயும் இருக்கிறது. அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்கு தகாததாய் காணப்படுகிறது. அவர்கள் சாதாரணமாகப் பேசினாலும், அவர்களுடைய வார்த்தை கர்த்தருக்கும் அவருடைய மகிமைக்கும் விரோதமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் மூப்பர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, சாமுவேல் கர்த்தருடைய சமுகத்தில் முழங்கால் படியிட்டு, அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்ரவேலின் மூப்பர் தன்னிடத்தில் ராஜாவைப்பற்றி சொன்னவுடன், சாமுவேல் அவர்களுக்கு உடனே பிரதியுத்தரம் சொல்லிவிடவில்லை. அவர்கள் சொன்னதைப்பற்றி யோசித்துப் பார்க்கிறார். அது பற்றி கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு, அதன் பிரகாரம் செயல்படவேண்டுமென்று சாமுவேல் தீர்மானம்பண்ணுகிறார்.

தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று இஸ்ரவேலர் சொன்ன வார்த்தை சாமுவேலுக்கு தாகாததாய் காணப்படுகிறது. சாமுவேலின் மனதில் குழப்பமும் வருத்தமும் உண்டாயிற்று. இஸ்ரவேலர் தன்னைத் தள்ளிவிட்டார்களோ என்று சாமுவேல் நினைக்கிறார். கர்த்தர் சாமுவேலுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இஸ்ரவேலரின் தீர்மானம் புதுமையானதல்ல. அவர்கள் பல சமயங்களில் கர்த்தருடைய சித்தத்தை மீறி நடந்திருக்கிறார்கள்.

கர்த்தர் சாமுவேலிடம், "அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்" (1சாமு 8:7) என்று சொல்லுகிறார். இஸ்ரவேலர் கர்த்தரையே தள்ளும்போது, சாமுவேலைத் தள்ளுவது சாதாரண காரியம். ஜனங்கள் இயேசுகிறிஸ்துவை வேதனைப்படுத்தும்போது, அவர்கள் நிச்சயமாய் நம்மையும் வேதனைப்படுத்துவார்கள். நமக்கு வரும் பாடுகளையும், பிரச்சனைகளையும், வேதனைகளையும் நாம் தாங்கிக்கொள்ள பழகவேண்டும். நம்முடைய விசுவாசத்தை பொறுமையினால் காத்துக்கொள்ளவில்லை.

சாமுவேல் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்து வருகிறார். ஜனங்களுக்கு தன்னுடைய நியாயவிசாரிப்பிலும், ஆளுகையிலும் திருப்தி ஏற்படவில்லை என்று சாமுவேல் நினைக்கக்கூடாது. அவர்கள் சாமுவேலின் ஆளுகையை குறித்து சலித்துப்போகவில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் கர்த்தருடைய ஆளுகையைக் குறித்தே சலித்துப்போயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே இதுவரையிலும் கர்த்தருடைய ஆளுகை நடைபெறுகிறது. இது தேவனுடைய தெய்வீக ஆளுகை. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்க நியாயாதிபதிகளை எழுப்புகிறார். கர்த்தரே அவர்களை ஊழியத்திற்கு அழைக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கும் ஊழியத்திற்கு தம்முடைய நியாயாதிபதிகளை, அபிஷேகம்பண்ணுகிறார். அவர்களை பிரதிஷ்டைபண்ணுகிறார். இஸ்ரவேல் தேசத்தின் ஒவ்வொரு காரியமும், கர்த்தருடைய விசேஷித்த வழிநடத்துதலின் பிரகாரம் நடைபெறுகிறது. இஸ்ரவேல் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலும் கர்த்தருடைய சித்தம் நிறைவேறுகிறது.

இப்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று சாமுவேலிடம் கேட்கிறார்கள். அவர்கள் சாமுவேலைத் தள்ளிவிடுகிறார்கள். ராஜாவின்மீது பிரியமாயிருக்கிறார்கள். யாரை ராஜாவாக ஏற்படுத்த வேண்டும் என்பது இஸ்ரவேலருக்கு தெரியவில்லை. அந்த வேலையையும் சாமுவேலே செய்யவேண்டுமென்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களுடைய கோரிக்கையும், மனப்பாங்கும் சாமுவேலுக்கு புதுமையாயிருக்கிறது. ஆனால் சாமுவேல் அவர்களுடைய விநோதமான மனப்பாங்கை நினைத்து வேதனைப்படக்கூடாது. ஆச்சரியப்படக்கூடாது. இஸ்ரவேல் ஜனங்கள் எப்போதுமே கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக சிந்திப்பார்கள். அவருடைய திட்டத்திற்கு விரோதமாக செயல்படுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ண கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார். ஆனால் அவர்களோ மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்த்து நின்றார்கள். அவர்களுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள்.

"நான் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதல் இந்நாள்மட்டும் அவர்கள் என்னைவிட்டு, வேறே தேவர்களைச் சேவித்துவந்தார்கள்" (1சாமு 8:8) என்று கர்த்தர் சாமுவேலுக்கு இஸ்ரவேல் புத்திரரின் மாறுபாடான குணங்களைப்பற்றிச் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் எல்லாச் செய்கைகளின்படியும் செய்ததுபோல, இப்போது அவர்கள் சாமுவேலுக்கும் செய்கிறார்கள்.

சாமுவேல் அவசரப்பட்டு தீர்மானம்பண்ணிவிடக்கூடாது. "அவர்கள் உன்னிடத்தில் சொல்லுவது எல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக்கேள்" (1சாமு 8:7) என்று கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார். சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்கு, தன்னுடைய சுயபுத்தியின் பிரகாரம் பிரதியுத்தரம் சொல்லக்கூடாது. அவர்கள் கோரிக்கைக்கு என்ன பதில் சொல்லவேண்டுமென்று கர்த்தரே சாமுவேலுக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் சாமுவேலுக்கு இரகசியத்தை வெளிப்படுத்தவில்லையென்றால், சாமுவேலால் இஸ்ரவேல் ஜனங்களை சமாளிக்க முடியாது. சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் சாமுவேலுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

கர்த்தர் சாமுவேலிடம், "அவர்கள் சொல்லைக் கேள்" (1சாமு 8:7) என்று சொல்லுகிறார். சாமுவேல் இஸ்ரவேலர் சொல்லுவதைக் கேட்பது கர்த்தருடைய பார்வையில், முக்கியமானதாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் இந்த வாக்கியத்தை மறுபடியும் ஒரு விசை சொல்லுகிறார் (1சாமு 8:1).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குத் தாங்களே தீங்கு வரவழைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கோலால் தங்களையே அடித்துக்கொள்கிறார்கள். தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று இஸ்ரவேலருக்கு சாமுவேலிடம் கேட்கத் தெரிகிறது. ஆனால் அவர்களுக்கு ராஜாவின் காரியம் என்ன என்பது தெரியவில்லை.

அவர்களை ஒரு ராஜா நியாயம் விசாரித்தால், தேசத்தின் ஆளுகை எப்படியிருக்கும் என்பதை இஸ்ரவேலர் புரிந்துகொள்ளவேண்டும். ராஜாவின் ஆளுகைக்கும் சாமுவேலின் ஆளுகைக்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இஸ்ரவேலருக்கு ஒரு ராஜா ஏற்படுத்தப்பட்டால், அவர்களுக்கு என்னென்ன காரியங்களெல்லாம் சம்பவிக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

இஸ்ரவேலை நியாயம் விசாரிக்க, சாமுவேல் ஒரு ராஜாவை ஏற்படுத்தினால், அது அவர்களுக்கு தீங்காகவே லபிக்கும். அவர்கள் வரப்போகிற ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். ராஜாவின் மூலமாய் தீமையே அல்லாமல், அவர்களுக்கு நன்மை உண்டாகாது. சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தீங்கு வரக்கூடாது என்று நினைக்கிறார்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, "சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும்" (1சாமு 8:5) என்று சாமுவேலிடம் சொல்லுகிறார்கள். அவர்கள் சாமுவேலுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் கலகம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு விசேஷமான தேசம். கர்த்தர் இஸ்ரவேலரை தம்முடைய ஜனமாக தெரிந்துகொண்டார். ஆனால் அவர்களோ சகல ஜாதிகளையும்போல இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இஸ்ரவேலருக்கு கர்த்தர் மாத்திரமே தேவனாயிருக்கிறார். சகல ஜாதிகளுக்கும் விக்கிரகங்கள் தெய்வமாயிருக்கிறது.

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, அந்நிய தெய்வங்கள் தங்களை ஆளுகை செய்யவேண்டும் என்றும், தங்களை நியாயம் விசாரிக்கவேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள். இஸ்ரவேலின் ராஜா புறஜாதியாரின் ராஜாவைப்போல இருக்கவேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம்.

கர்த்தர் சாமுவேலிடம், "இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள்; ஆனாலும் உன் அபிப்பிராயத்தைக் காட்டும்படி அவர்களை ஆளும் ராஜாவின் காரியம் இன்னது என்று அவர்களுக்குத் திடசாட்சியாய்த் தெரியப்படுத்து" (1சாமு 8:9) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய மனவிருப்பத்தின் பிரகாரம், அவர்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினால், அவர்கள் அந்த ராஜாவையும் விரும்பமாட்டார்கள். வெகுசீக்கிரத்தில் அவர்கள் அந்த ராஜாவை வெறுப்பார்கள். ஆகையினால் ராஜாவை ஏற்படுத்துவதற்கு முன்பாகவே, அவர்கள் மனந்திரும்பி, கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய ஆளுகைக்கும் தங்களை மறுபடியுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். தாமதம் ஏற்படுவதற்கு முன்பாகவே அவர்கள் தங்களை தப்பிதத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

சாமுவேல் கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசி. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளையெல்லாம், சாமுவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார். சாமுவேல், ஒரு ராஜா வேண்டும் என்று தன்னிடத்தில் கேட்ட ஜனங்களுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் சொல்லுகிறார் (1சாமு 8:10).

இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலை தள்ளிவிடுகிறார்கள். ஆனாலும் சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரைத் தள்ளிவிடவில்லை. தங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்பது, ஆராதிப்பதற்கு தங்களுக்கு அந்நிய தெய்வங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்பதற்கு சமம். இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலை விரும்பாமல், சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி ஒரு ராஜாவை விரும்புகிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தெய்வங்களை ஆராதிக்க பிரியப்படுகிறார்கள்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜாவின் காரியத்தைப்பற்றி விவரிக்கிறார். "உங்களை ஆளும் ராஜாவின் காரியம் என்னவென்றால், தன் ரதத்திற்கு முன் ஓடும்படி அவன் உங்கள் குமாரரை எடுத்து, தன் ரதசாரதிகளாகவும் தன் குதிரைவீரராகவும் வைத்துக்கொள்ளுவான்" (1சாமு 8:11) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார். இதுவே ராஜாவின் பொதுவான சுபாவம்.

சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிற புறஜாதி ராஜாக்கள், ஜனங்களை அடக்கி ஒடுக்குகிறார்கள். ராஜாக்களுக்கு ஏராளமான வேலையாட்கள் இருக்கவேண்டும். ஆகையினால் ராஜா இஸ்ரவேல் புத்திரரின் குமாரரை தனக்கு வேலைக்காரராக வைத்துக்கொள்வான் (1சாமு 8:11).

ராஜா இஸ்ரவேல் புத்திரரை ஆயிரம்பேருக்கும், ஐம்பதுபேருக்கும் தலைவராகவும், தன் நிலத்தை உழுகிறவர்களாகவும், தன் விளைச்சலை அறுக்கிறவர்களாகவும், தன் யுத்த ஆயுதங்களையும் தன் ரதங்களின் பணிமுட்டுகளையும் பண்ணுகிறவர்களாகவும், அவர்களை வைத்துக்கொள்ளுவான் (1சாமு 8:12).

இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்க ஒரு ராஜா ஏற்படுத்தப்பட்டால், இஸ்ரவேலருக்கு இனிமேல் வேலைக்காரர் யாரும் இருக்கமாட்டார்கள். அவன், "உங்கள் வேலைக்காரரையும், உங்கள் வேலைக்காரிகளையும், உங்களில் திறமையான வாலிபரையும், உங்கள் கழுதைகளையும் எடுத்து தன்னுடைய வேலைக்கு வைத்துக்கொள்ளுவான்" (1சாமு 8:16) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

ராஜா போஜனப்பிரியனாயிருப்பான். பெருந்தீனி உண்பான். இஸ்ரவேல் புத்திரரின் குமாரர்களும் குமாரத்திகளும் ராஜாவுக்கு பணிவிடைக்காரராயிருப்பார்கள். ராஜாவின் ஆடம்பரத்திற்கும், அலங்காரத்திற்கும் அவர்கள் வேலை செய்வார்கள். "உங்கள் குமாரத்திகளைப் பரிமளதைலம் செய்கிறவர்களாகவும், சமையல்பண்ணுகிறவர்களாகவும், அப்பம் சுடுகிறவர்களாகவும் வைத்துக்கொள்ளுவான்" (1சாமு 8:13) என்று சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாவின் காரியத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

ராஜாவுக்கு பெரிய சேனையிருக்கவேண்டும். அவனைப் பாதுகாப்பதற்கு மெய்க்காப்பாளர்கள் இருக்கவேண்டும். அரண்மனையையும் கோட்டையையும் பாதுகாப்பதற்கு போர்ச்சேவகர்கள் இருக்கவேண்டும். ராஜா இஸ்ரவேல் ஜனங்களை இதுபோன்ற வேலைகளுக்காக பயன்படுத்துவான்.

இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பதற்கு, ஒரு ராஜா ஏற்படுத்தப்பட்டால், அந்த ராஜா தேசத்தின் விளைச்சலையெல்லாம் தனக்கென்று வைத்துக்கொள்வான். அவன் ஜனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னுடைய வேலைக்காரருக்கு முக்கியத்துவம் கொடுப்பான். "உங்கள் வயல்களிலும், உங்கள் திராட்சத்தோட்டங்களிலும், உங்கள் ஒலிவத்தோப்புகளிலும், நல்லவைகளை எடுத்துக்கொண்டு, தன் ஊழியக்காரருக்குக் கொடுப்பான். உங்கள் தானியத்திலும் உங்கள் திராட்சப்பலனிலும் தசமபாகம் வாங்கி, தன் பிரதானிகளுக்கும் தன் சேவகர்களுக்கும் கொடுப்பான்" (1சாமு 8:14,15) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜாவின் காரியத்தைபற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலை நியாயம் விசாரிக்க ஒரு ராஜா ஏற்படுத்தப்பட்டால், இஸ்ரவேல் ஜனங்களுக்கு தானியமும் இருக்காது. திராட்சரசமும் இருக்காது. ஆடுமாடுகளும் இருக்காது. ராஜா ஆடுகளிலே பத்தில் ஒன்று எடுத்துக்கொள்ளுவான்; இஸ்ரவேலர் அவனுக்கு வேலையாட்களாவார்கள் (1சாமு 8:17).

இஸ்ரவேல் தேசத்தார் விரும்புகிற ராஜா அவர்களுக்கு நன்மை செய்யமாட்டான். தீமையே செய்வான். இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜாவினிமித்தம் கஷ்டங்களும், வேதனைகளும், பாடுகளும் உண்டாகும். தாங்கள் தெரிந்துகொண்ட தங்கள் ராஜாவினிமித்தம் அந்நாளிலே அவர்கள் கர்த்தரிடத்தில் முறையிடுவார்கள். ஆனாலும் கர்த்தர் அந்நாளிலே அவர்களுக்கு செவிகொடுக்கமாட்டார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை தள்ளிவிட்டார்கள். கர்த்தரும் அவர்களை தள்ளிவிட்டார்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். ஆனால் ஜனங்கள் சாமுவேலின் சொல்லைக்கேட்க மனதில்லாதிருக்கிறார்கள். "எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும்" என்று இஸ்ரவேலர் தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளையும், சாமுவேல் சொல்லுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேல் ஜனங்கள் கேட்பதற்கு ஆயத்தமாயில்லை. தாங்கள் சொல்லும் வார்த்தைகளை சாமுவேலும் கர்த்தரும் கேட்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

தாங்கள் தெரிந்துகொண்ட ராஜாவினிமித்தம் தங்களுக்கு தீங்கு வந்தாலும், தங்களுடைய பின்சந்ததியாருக்கு தீங்கு வந்தாலும், தங்களுக்கு பல வேதனைகளும் கஷ்டங்களும் வந்தாலும், தங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலின் வார்த்தைகளைக் கேட்கக்கூடாதபடிக்கு தங்களுடைய செவிகளை அடைத்துக்கொள்கிறார்கள். ராஜாவின் மூலமாய் தங்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் எல்லாம் வரும் என்பதை காணக்கூடாதபடி, தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். இஸ்ரவேலர் செவிகள் இருந்தும் செவிடர்களாயும், கண்கள் இருந்தும் குருடர்களாயும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரால் கர்த்தருடைய வேளை வரும் வரையிலும் பொறுமையாகக் காத்திருக்க முடியவில்லை. ஏற்ற வேளை வரும்போது, இஸ்ரவேலுக்கு ஒரு ராஜாவைக் கொடுப்பதாக கர்த்தர் ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் அவர்களோ அதுவரையிலும் பொறுக்க மனதில்லாமல், இப்பொழுதே தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று பிடிவாதமாய்ச் சொல்லுகிறார்கள்.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைச் சுதந்தரித்துக்கொண்டு, அதில் குடியேறினபின், நீ: என்னைச் சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளையும் போல, நானும் எனக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்பாயானால்; உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்பவனையே உனக்கு ராஜாவாக வைக்கக்கடவாய்; உன் சகோதரருக்குள்ளிருக்கிற ஒருவனையே உன்மேல் ராஜாவாக ஏற்படுத்தக்கடவாய்; உன் சகோதரன் அல்லாத அந்நியனை ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது" (உபா 17:14,15).

இஸ்ரவேல் ஜனத்தார் பத்து அல்லது பன்னிரண்டு வருஷங்கள் பொறுமையோடு காத்திருந்தால், அவர்களுக்கு தாவீது ராஜாவாக கிடைத்திருப்பார். தாவீது கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்களுக்கு ஒரு ராஜா இப்பொழுதே வேண்டும் என்று அவசரப்படுகிறார்கள். சவுல் அவர்களுக்கு ராஜாவாய்க் கொடுக்கப்படுகிறார். சவுலின் மூலமாய் இஸ்ரவேலருக்கு அநேக தீங்குகளும், பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. இஸ்ரவேலர் சவுலின் மூலமாய் வந்த பிரச்சனைகளை தவிர்த்திருக்க வேண்டுமென்றால்,அவர்கள் கர்த்தருக்கேற்ற காலம் வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

ஜனங்கள் சாமுவேலின் சொல்லைக் கேட்க மனதில்லாமல்: "அப்படியல்ல, எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும். சகல ஜாதிகளையும்போல நாங்களும் இருப்போம்; எங்கள் ராஜா எங்களை நியாயம் விசாரித்து, எங்களுக்கு முன்பாகப் புறப்பட்டு, எங்கள் யுத்தங்களை நடத்தவேண்டும்" (1சாமு 8:19,20) என்று பிடிவாதமாய்ச் சொல்லுகிறார்கள்.

சாமுவேல் ஜனங்களின் வார்த்தைகளையெல்லாம் கேட்டு, அவைகளைக் கர்த்தரிடத்தில் தெரியப்படுத்துகிறார் (1சாமு 8:21). சாமுவேல் கர்த்தரிடத்தில் பயபக்தியோடு பேசுகிறார். அவர் கர்த்தருடைய சமுகத்திலே பரிசுத்தமான ஐக்கியத்திலிருக்கிறார். தம்மிடத்தில் பயபக்தியாகவும், பரிசுத்தமாகவும் பேசும் ஜனங்களின் வார்த்தைகளை கர்த்தர் செவிகொடுத்து கேட்கிறார். சாமுவேல் ஒரு சிநேகிதரிடம் பேசுவதுபோல, கர்த்தரிடத்தில் பேசுகிறார். சாமுவேல் ஜனங்களின் வார்த்தைகளையெல்லாம் கர்த்தருக்கு தெரியப்படுத்துகிறார்.

கர்த்தர் சாமுவேலுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். "நீ அவர்கள் சொல்லைக்கேட்டு, அவர்களை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்து" என்று கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுடைய இருதயத்தின் ஆசைகளுக்கு அவர்களை ஒப்புக்கொடுக்கிறார். சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களையெல்லாம், அவர்களுடைய சொந்த ஊருக்கு அனுப்புகிறார். "அவரவர் தங்கள் ஊர்களுக்குப் போகலாம்" (1சாமு 8:22) என்று சாமுவேல் தன்னிடத்தில் கூடிவந்திருக்கிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார்.

சாமுவேல் சகலவற்றையும் கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "இஸ்ரவேலரை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்து" என்று கர்த்தர் சொல்லுகிறார். இனிமேல் இஸ்ரவேலருக்கோ, சாமுவேலுக்கோ பேசுவதற்கு ஒன்றுமில்லை. கர்த்தர் யாரை ராஜாவாக ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறாரோ, அவரை சாமுவேல் ராஜாவாக ஏற்படுத்தவேண்டும். இந்த விஷயத்தில் இஸ்ரவேல் ஜனங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையினால் சாமுவேல் ஜனங்களை அவரவர்களுடைய சொந்த ஊர்களுக்கு அனுப்புகிறார்.

9 அதிகாரம்

பிரபுக்கள் ஜனங்களை ஆளுகை செய்ய ஆசைப்படுகிறார்கள். மனுஷருடைய பேராசையினிமித்தமாகவே பல ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரவேலிலே வித்தியாசமான சூழ்நிலை காணப்படுகிறது. ஒரு ராஜா தங்களை ஆளுகை செய்யவேண்டுமென்று ஜனங்கள் விரும்புகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில், இஸ்ரவேலுக்கு ஒரு ராஜாவைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார் (உபா 17:15). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தை தங்களுக்கு வரும் என்று பொறுமையோடு காத்திருக்கிறார்கள்.

இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய வழிநடத்துதலின் பிரகாரம் சாமுவேல், சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்.

சவுலின் முன்னோர்கள் (1சாமு 9:1,2). சாமுவேல் இதற்கு முன்பு சவுலைப் பார்த்ததில்லை. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலினால் சவுல் சாமுவேலை சந்திக்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக, சாமுவேலும் சவுலை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறார் (1சாமு 9:15,16).

சவுல் தன்னுடைய தகப்பனாரின் காணாமல்போன கழுதைகளைத் தேடிப்போகிறார் (1சாமு 9:3-5). சவுலோடுகூட ஒரு வேலைக்காரனும் போகிறான். வேலைக்காரனுடைய ஆலோசனையின்படி அவர்கள் சாமுவேலிடத்தில், விசாரிக்கப் போகிறார்கள் (1சாமு 9:6-10). தண்ணீர் எடுக்க வந்த பெண்கள் சவுலை சாமுவேலிடம் வழிநடத்துகிறார்கள் (1சாமு 9:11-14).

கர்த்தர் சாமுவேலுக்கு சவுலைப்பற்றிய காரியங்களை வெளிப்படுத்துகிறார் (1சாமு 9:17). சாமுவேல் சவுலுக்கு மரியாதை கொடுத்து மேன்மைப்படுத்துகிறார் (1சாமு 9:27).

பென்யமீன் கோத்திரத்தான் 1சாமு 9:1,2

1சாமு 9:1. பென்யமீன் கோத்திரத்தாரில் கீஸ் என்னும் பேருள்ள மகா பராக்கிரமசாலியான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய அபியாவின் மகனான பெகோராத்திற்குப் பிறந்த சேரோரின் புத்திரனாகிய அபீயேலின் குமாரன்.

1சாமு 9:2. அவனுக்குச் சவுல் என்னும் பேருள்ள சவுந்திரியமான வாலிபனாகிய ஒரு குமாரன் இருந்தான்; இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்திரியவான் இல்லை; எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான்.

சவுலின் குடும்ப சரித்திரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, பவுல் என்று அழைக்கப்பட்ட சவுலும் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

"இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன்" (ரோம 11:1).

"நான் எட்டாம் நாளில், விருத்த சேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்" (பிலி 3:5).

பென்யமீன் கோத்திரத்தார் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் வீரமும் கண்ணியமும் மிகுந்தவர்கள். பவுலின் தகப்பனாருடைய பெயர் கீஸ் என்பதாகும். இவர் மகாபராக்கிரமசாலியான மனுஷன். இவரிடத்தில் சரீர பலம் இருப்பதுபோலவே, இவர் ஆவிக்குரிய காரியங்களிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறார். இவர் ஒரு ஐசுவரியவான்.

"பென்யமீன் கோத்திரத்தாரில் கீஸ் என்னும் பேருள்ள மகா பராக்கிரமசாலியான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய அபியாவின் மகனான பெகோராத்திற்குப் பிறந்த சேரோரின் புத்திரனாகிய அபீயேலின் குமாரன். அவனுக்குச் சவுல் என்னும் பேருள்ள சவுந்திரியமான வாலிபனாகிய ஒரு குமாரன் இருந்தான்" (1சாமு 9:1,2) என்று சவுலின் குடும்பத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

சவுலின் ஞானத்தைப்பற்றியோ, அவருடைய பக்தியைப்பற்றியோ, அவருடைய கல்வியறிவைப்பற்றியோ இங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. சவுல் என்னென்ன காரியங்களில் சிறந்தவர் என்பதோ, அவர் எதையெல்லாம் சாதித்திருக்கிறார் என்பதோ சொல்லப்படவில்லை. அவருடைய சரீர வளர்த்தியைப்பற்றியும், அவருடைய சவுந்தரியத்தைப்பற்றியும் மாத்திரமே இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"கீசுக்குச் சவுல் என்னும் பேருள்ள சவுந்திரியமான வாலிபனாகிய ஒரு குமாரன் இருந்தான்; இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்திரியவான் இல்லை; எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான்" (1சாமு 9:2).

சவுல் சரீர அழகுள்ளவர். அவருடைய முகம் களையாகயிருக்கிறது. அவர் பார்ப்பதற்கு கம்பீரமாயிருக்கிறார். சவுலின் தகப்பனாராகிய கீஸ் மகாபராக்கிரமசாலியாயிருப்பதுபோல சவுலும் மகாபராக்கிரமசாலியாயிருக்கிறார். இஸ்ரவேலர் எல்லோரிலும் சவுலே சவுந்தரியவான். அவரே வளர்த்தியானவர். எல்லா ஜனங்களும் சவுலின் தோளுக்கு கீழே இருக்கிறார்கள். சவுல் அவ்வளவு உயரமாயிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கேற்ற மனுஷனை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்தெடுக்கவேண்டும் என்று சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் மனுஷனுடைய உயரத்தைப் பார்க்கமாட்டார். அவனுடைய கம்பீரமான தோற்றத்தைப் பார்க்கமாட்டார். அவனுடைய சவுந்தரியமான முகக்களையையும் பார்க்கமாட்டார். அவனுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்ப்பார்.

"கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1சாமு 16:7).

"ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான்; அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுமுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது கர்த்தர்: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார்" (1சாமு 16:12).

கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கேற்ற மனுஷனை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்தெடுக்கவில்லை. அவர் ஜனங்களுடைய விருப்பத்திற்கேற்ற மனுஷனையும், அவர்களுடைய இருதயத்திற்கேற்ற மனுஷனையும் இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்தெடுக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரும், மற்ற ஜாதிகளிலிருப்பதைப்போல, தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் விரும்புகிற பிரகாரம் கர்த்தர் சவுந்தரியமுள்ளவனையும், அதிக உயரமுள்ளவனையும் அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்துகிறார். சவுலிடத்தில் வேறு நற்குணங்கள் எதுவும் இல்லாவிட்டாலும், அவர் பார்வைக்கு சவுந்தரியவானாகவும், மற்ற எல்லாரையும்விட உயரமானவராகவும் இருக்கிறார்.

சவுல்
1சாமு 9:3-10

1சாமு 9:3. சவுலின் தகப்பனாகிய கீசுடைய கழுதைகள் காணாமற்போயிற்று; ஆகையால் கீஸ் தன் குமாரனாகிய சவுலை நோக்கி: நீ வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு, கழுதைகளைத் தேட, புறப்பட்டுப்போ என்றான்.

1சாமு 9:4. அப்படியே அவன் எப்பிராயீம் மலைகளையும் சலீஷாநாட்டையும் கடந்துபோனான்; அங்கே அவைகளைக் காணாமல் சாலீம் நாட்டைக்கடந்தார்கள். அங்கேயும் காணவில்லை; பென்யமீன் நாட்டை உருவக்கடந்தும் அவைகளைக் காணவில்லை.

1சாமு 9:5. அவர்கள் சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது, சவுல் தன்னோடிருந்த வேலைக்காரனை நோக்கி: என் தகப்பன், கழுதைகளின்மேலுள்ள கவலையைவிட்டு, நமக்காகக் கவலைப்படாதபடிக்குத் திரும்பிப்போவோம் வா என்றான்.

1சாமு 9:6. அதற்கு அவன்: இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒரு வேளை அவர் நாம் போகவேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்.

1சாமு 9:7. அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து: நாம் போனாலும் அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்துபோயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டுபோகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான்.

1சாமு 9:8. அந்த வேலைக்காரன் பின்னும் சவுலைப் பார்த்து: இதோ, என் கையில் இன்னும் கால்சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான்.

1சாமு 9:9. முற்காலத்தில் இஸ்ரவேலில் யாதொருவர் தேவனிடத்தில் விசாரிக்கப்போனால், ஞானதிஷ்டிக்காரனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்பார்கள்; இந்நாளிலே தீர்க்கதரிசி என்னப்படுகிறவன் முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்னப்படுவான்.

1சாமு 9:10. அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனை நோக்கி: நல்லகாரியம் சொன்னாய், போவோம் வா என்றான்; அப்படியே தேவனுடைய மனுஷன் இருந்த அந்தப் பட்டணத்திற்குப் போனார்கள்.

சவுலின் ஆரம்பம் அற்பமானதாயிருக்கிறது. சாதாரண நிலமையிலிருந்து சவுல் உன்னதமாக நிலமைக்கு உயர்த்தப்படுகிறார். சவுல் இதற்கு முன்பு உயர்ந்த பதவி வகித்ததில்லை. இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகவேண்டும் என்னும் விருப்பமும் அவருடைய மனதிலே தோன்றவில்லை. சவுல் இதுவரையிலும் வீரதீர செயல்கள் எதையும் செய்ததாக சொல்லப்படவில்லை. பென்யமீன் கோத்திரத்தில் சவுல் ஒரு முக்கியமான மனுஷருமல்ல. அவர் மிகவும் சாதாரணமானவர்.

ஒரு சிறிய சம்பவத்திலிருந்து பெரிய காரியம் நடைபெறுகிறது. சரித்திரம் சிறிய காரியங்களில் ஆரம்பிக்கும். பெரிய காரியங்களில் முடிவு பெறும். சவுலின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவருடைய ஆரம்பம் அற்பமானதாயிருக்கிறது. ஆனால் சவுலோ இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக முடிசூட்டப்படுகிறார்.

சவுலைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிற ஆரம்ப வாக்கியங்கள், சவுலை ஒரு சாதாரண மனுஷராகவே விவரிக்கிறது. அவருடைய விசேஷித்த குணத்தைப்பற்றி ஆரம்பத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

கீசின் கழுதைகள் காணாமல் போயிற்று. சவுல் அந்தக் கழுதைகளை தேடிக் கண்டுபிடிப்பதற்கு அனுப்பப்படுகிறார். இதுவே சவுலுடைய சரித்திரத்தின் ஆரம்பம். கீஸ் சவுலை தனியாக அனுப்பாமல், தன்னுடைய வேலைக்காரில் ஒருவனை சவுலோடு கூட அனுப்புகிறார். சவுல் மாத்திரம் தனியாகப் போனால், அவரால் கழுதைகளைக் கண்டுபிடிக்க முடியாது என்று கீஸ் நினைத்திருக்கலாம். காணாமல்போன கழுதைகளைக் கண்டுபிடிப்பதற்காக இவ்விரண்டு பேரும் அனுப்பப்படுகிறார்கள்.

சவுலும், அவருடைய வேலைக்காரரும் கழுதைகளைத் தேட புறப்பட்டுப்போகிறார்கள். கீஸ் அவர்களுக்கு ஏறிப்போக குதிரைகளைக் கொடுக்கவில்லை. அவர்கள் இரதங்களில் ஏறியும் போகவில்லை. சவுலும் வேலைக்காரனும் கால்நடையாக நடந்தே போகிறார்கள். காணாமல்போன கழுதைகளைத் தேடி கண்டுபிடிப்பதற்காக போகிறார்கள்.

சவுலும், அவருடைய வேலைக்காரனும் எப்பிராயீம் மலைகளையும் சலீஷாநாட்டையும் கடந்துபோகிறார்கள்; அங்கே அவைகளைக் காணாமல் சாலீம் நாட்டைக் கடக்கிறார்கள். அங்கேயும் காணவில்லை; பென்யமீன் நாட்டை உருவக்கடந்தும் அவைகளைக் காணவில்லை (1சாமு 9:4).

அவர்களால் காணாமல்போன கழுதையை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களுடைய பிரயாணமும், அலைச்சலும் வீணாய்ப்போனதுபோல தோன்றுகிறது. எந்த வேலையாக போனார்களோ, அந்த வேலையை அவர்களால் முடிக்க முடியவில்லை. சவுலால் கழுதைகளை கண்டுபிடிக்க முடியவிட்டாலும், அவர் ராஜ்யபாரத்தைக் கண்டுபிடிக்கிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு தான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுவோம் என்று சவுல் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை.

சவுலும் அவருடைய வேலைக்காரரும் காணால்போன கழுதைகளை தேடி அலைகிறார்கள். அவர்களால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கழுதைகளை கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், தன்னுடைய தகப்பனிடத்தில் திரும்பிப்போய்விடலாம் என்று சவுல் நினைக்கிறார்.

அவர்கள் சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது, சவுல் தன்னோடிருந்த வேலைக்காரனை நோக்கி: "என் தகப்பன், கழுதைகளின்மேலுள்ள கவலையைவிட்டு, நமக்காகக் கவலைப்படாதபடிக்குத் திரும்பிப்போவோம் வா" (1சாமு 9:5) என்று சொல்லுகிறார்.

கீஸ் சவுலின்மீது அன்பாயிருக்கிறார். கழுதைகள் காணாமல்போனாலும் பரவாயில்லை. தன்னுடைய மகன் சவுல் காணாமல்போய்விடக்கூடாது என்று கீஸ் நினைப்பார். சவுலுக்கு தன்னுடைய தகப்பனாரின் மனமும், அன்பும், பாசமும் தெரிந்திருக்கிறது.

சவுலும் அவருடைய வேலைக்காரரும் ராமா பட்டணத்திற்கு வந்திருக்கிறார்கள். ராமா சாமுவேலின் ஊர். சாமுவேல் ராமாவில் தங்கியிருந்து இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிக்கிறார். காணாமல்போன கழுதைகளைப்பற்றி சாமுவேலிடம் விசாரிக்கலாம் என்று சவுலின் வேலைக்காரர் சொல்லுகிறார்.

சவுலின் வேலைக்காரர், சவுலிடம் "இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒருவேளை அவர் நாம் போகவேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார்" (1சாமு 9:6) என்று சொல்லுகிறார்.

சாமுவேல் தேவனுடைய மனுஷன். அவர் ஒரு தீர்க்கதரிசி. அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும். அவர் பெரியவர். காணாமல்போன கழுதைகளைக் குறித்து சாமுவேலிடம் விசாரித்தால், அந்தக் கழுதைகள் எங்கே இருக்கிறது என்று சாமுவேல் அவர்களுக்கு தெரியப்படுத்துவார். சவுலின் வேலைக்காரர் சாமுவேலைப்பற்றி உயர்வாய்ப் பேசுகிறார்.

தாங்கள் போகவேண்டிய வழியை சாமுவேலிடம் கேட்டு தெரிந்துகொள்ளலாம் என்று சவுலும் அவருடைய வேலைக்காரரும் தீர்மானிக்கிறார்கள். சவுலின் வேலைக்காரர் சாமுவேலைப்பற்றிச் சொல்லும்போது, "ஒருவேளை அவர் நாம் போகவேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார்" என்று சொல்லுகிறார்.

தீர்க்கதரிசிகளிடத்தில் போகிறவர்கள், பொதுவாக தங்களுடைய சுகத்தையும், ஐசுவரியத்தையும், நன்மைகளையும் பற்றி விசாரிப்பார்கள். தாங்கள் போகவேண்டிய வழியை கேட்கவேண்டுமென்று நினைக்க மாட்டார்கள். வேறு சிலரோ, தீர்க்கதரிசிகளிடத்தில் போய், தங்களுக்கு பணம் வேண்டும், வீடு வேண்டும் என்று உலகப்பிரகாரமான காரியங்களை கேட்பார்கள். தங்கள் ஆத்துமா இரட்சிக்கப் படவேண்டும் என்று கேட்கமாட்டார்கள். தங்களுடைய ஆவிக்குரிய கடமைகளை பற்றி விசாரிக்கமாட்டார்கள்.

கர்த்தருடைய மனுஷனுக்கு காணாமல்போன கழுதைகளை எங்கே, எப்படி கண்டுபிடிக்கவேண்டும் என்பதும் தெரியும். நம்முடைய இழந்துபோன ஆத்துமாக்களை எப்படி இரட்சித்துக் கொள்வது என்பதும் தெரியும். நாம் கர்த்தருடைய மனுஷனிடத்தில் விசாரிக்கும் போது, காணாமல்போன கழுதைகளைப்பற்றி விசாரிக்கவேண்டுமா அல்லது காணாமல் போன நம்முடைய ஆத்துமாக்களைப்பற்றி விசாரிக்கவேண்டுமா என்பதை நாமே தீர்மானம்பண்ணவேண்டும். காணாமல்போன கழுதைகளைக் கண்டுபிடிப்பதைவிட, நம்முடைய ஆத்துமா இரட்சிப்படுவதே நமக்கு மிகப்பெரிய ஆதாயம்.

தேவனுடைய மனுஷனை வெறுங்கையினால் போய் பார்க்கக்கூடாது என்று சவுல் நினைக்கிறார். அவருக்கு ஏதாவது காணிக்கை கொண்டுபோக வேண்டும் என்று விரும்புகிறார்.

சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து: "நாம் போனாலும் அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்துபோயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே" (1சாமு 9:7) என்று சொல்லுகிறார்.

"நீ உன் கையிலே பத்து அப்பங்களையும், பணியாரங்களையும், ஒரு கலசம் தேனையும் எடுத்துக்கொண்டு அவனிடத்துக்குப் போ; பிள்ளைக்குச் சம்பவிக்கப் போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான் என்றான்" (1இராஜா 14:3).

சவுலின் கையில் அப்பம் இல்லை. அவரிடத்திலிருந்த தின்பண்டங்கள் எல்லாம் செலவழிந்து போயிற்று. அவர்களிடத்தில் அப்பம் இல்லாவிட்டாலும் வேலைக்காரன் கையில் கொஞ்சம் பணம் இருக்கிறது. அந்த வேலைக்காரன் பின்னும் சவுலைப் பார்த்து: "இதோ, என் கையில் இன்னும் கால்சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன்" (1சாமு 9:8) என்று சொல்லுகிறான்.

அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனை நோக்கி: "நல்லகாரியம் சொன்னாய், போவோம் வா" என்கிறார்; அப்படியே, சவுலும் அவருடைய வேலைக்காரரும் தேவனுடைய மனுஷன் இருந்த அந்தப் பட்டணத்திற்குப் போகிறார்கள் (1சாமு 9:10).

சவுல் சாமுவேலிடத்தில் விசாரிக்கப் போகும்போது, அவரை தீர்க்கதரிசியாகப் பாவிக்காமல், ஞானதிருஷ்டிக்காரனாக பாவிக்கிறார். ஞானதிருஷ்டிக்காரனுக்கு கால் சேக்கல் வெள்ளியை காணிக்கையாகக் கொடுத்தால் போதுமானது.

இக்காலத்தில் அநேகர் குறைந்த செலவில் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்கள். மற்றவர்கள் ஊழியத்திற்கு அதிகமாக செலவு பண்ணட்டும் என்றும், ஆனால் தாங்களோ ஊழியத்திற்கு கொஞ்சமாகவே காணிக்கை கொடுப்போம் என்றும் சொல்லுகிறார்கள்.

"முற்காலத்தில் இஸ்ரவேலில் யாதொருவர் தேவனிடத்தில் விசாரிக்கப் போனால், ஞானதிஷ்டிக்காரனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்பார்கள்; இந்நாளிலே தீர்க்கதரிசி என்னப்படுகிறவன் முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்னப்படுவான்" (1சாமு 9:9).

தீர்க்கதரிசியாகயிருக்கிறவர் முதலாவதாக ஞானதிருஷ்டிக்காரராயும் இருக்கவேண்டும். தேவனுடைய காரியங்களை மற்றவர்களுக்கு எடுத்து சொல்லுகிறவர்கள், தங்களுடைய சொந்தக் காரியங்களையும் அறிந்திருக்கவேண்டும்.

சாமுவேல்
1சாமு 9:11-17

1சாமு 9:11. அவர்கள் பட்டணத்து மேட்டின் வழியாய் ஏறுகிறபோது, தண்ணீர் எடுக்கவந்த பெண்களைக் கண்டு: ஞானதிஷ்டிக்காரன் இங்கே இருக்கிறாரா என்று அவர்களைக் கேட்டார்கள்.

1சாமு 9:12. அதற்கு அவர்கள்: இருக்கிறார், இதோ, உங்களுக்கு எதிரே இருக்கிறார்; தீவிரமாய்ப் போங்கள்; இன்றைக்கு ஜனங்கள் மேடையில் பலியிடுகிறபடியினால், இன்றையதினம் பட்டணத்திற்கு வந்தார்.

1சாமு 9:13. நீங்கள் பட்டணத்திற்குள் பிரவேசித்தவுடனே, அவர் மேடையின் மேல் போஜனம் பண்ணப்போகிறதற்கு முன்னே அவரைக் காண்பீர்கள்; அவர் வருமட்டும் ஜனங்கள் போஜனம் பண்ணமாட்டார்கள்; பலியிட்டதை அவர் ஆசீர்வதிப்பார்; பின்பு அழைக்கப்பட்டவர்கள் போஜனம்பண்ணுவார்கள்; உடனே போங்கள்; இந்நேரத்திலே அவரைக் கண்டுகொள்ளலாம் என்றார்கள்.

1சாமு 9:14. அவர்கள் பட்டணத்திற்குப் போய், பட்டணத்தின் நடுவே சேர்ந்தபோது, இதோ, சாமுவேல் மேடையின் மேல் ஏறிப்போகிறதற்காக, அவர்களுக்கு எதிரே புறப்பட்டுவந்தான்.

1சாமு 9:15. சவுல் வர ஒருநாளுக்கு முன்னே கர்த்தர் சாமுவேலின் காதுகேட்க:

1சாமு 9:16. நாளை இந்நேரத்திற்குப் பென்யமீன் நாட்டானாகிய ஒரு மனுஷனை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணக்கடவாய்; அவன் என் ஜனத்தைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பான்; என் ஜனத்தின் முறையிடுதல் என்னிடத்தில் வந்து எட்டினபடியினால், நான் அவர்களைக் கடாட்சித்தேன் என்று வெளிப்படுத்தியிருந்தார்.

1சாமு 9:17. சாமுவேல் சவுலைக் கண்டபோது, கர்த்தர் அவனிடத்தில்: இதோ, நான் உனக்குச் சொல்லியிருந்த மனுஷன் இவனே; இவன்தான் என் ஜனத்தை ஆளுவான் என்றார்.

சவுல் கிபியா ஊரைச் சேர்ந்தவர். சாமுவேல் ராமா ஊரைச் சேர்ந்தவர். இவ்விரண்டு ஊர்களுக்கும் நடுவிலே சுமார் இருபது மைல் தூரமுள்ளது. மிஸ்பா ராமாவுக்கு அருகிலுள்ளது. சாமுவேல் மிஸ்பாவிலிருந்து இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பது வழக்கம்.

சவுலும் அவருடைய வேலைக்காரரும் சாமுவேலின் ஊராகிய ராமாவுக்குப் போகிறார்கள். அவர்கள் பட்டணத்து மேட்டின் வழியாய் ஏறுகிறபோது தண்ணீர் எடுக்க வந்த பெண்களை கண்டு, அவர்களிடத்தில் சாமுவேலைப்பற்றி விசாரிக்கிறார்கள். "ஞானதிஷ்டிக்காரன் இங்கே இருக்கிறாரா" (1சாமு 9:11) என்று அவர்களை கேட்கிறார்கள்.

ராமா ஊரிலிருக்கிற கன்னிப்பெண்களுக்கும் சாமுவேலின் ஊழியத்தைப்பற்றித் தெரிந்திருக்கிறது. சவுல் ராமாவுக்கு வந்திருக்கிற அந்த நாளிலே, ஜனங்கள் மேடையிலே பலியிடுகிறார்கள். சாமுவேல் ராமாவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டியிருக்கிறார் (1சாமு 7:17). ஜனங்கள் இந்த பலிபீடத்தில் கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார்கள்.

ஜனங்கள் ராமாவிலே, மேடையிலே பலியிடுகிற நாளிலே, சாமுவேல் ராமாவுக்கு வருவது வழக்கம். அவர் பலியிட்டதை ஆசீர்வதிப்பார். மேடையின்மேல் போஜனம்பண்ணப்போகிறதற்கு முன்பே சாமுவேல் அங்கே வந்துவிடுவார். சாமுவேல் அங்கே வருமட்டும் ஜனங்கள் போஜனம்பண்ணமாட்டார்கள். அவர் பலியிட்டதை ஆசீர்வதித்த பின்பு, அழைக்கப்பட்டவர்கள் போஜனம் பண்ணுவார்கள்.

இந்த சம்பவம் தண்ணீர் எடுக்க வந்த பெண்களுக்கும் தெரிந்திருக்கிறது. அந்தப் பெண்கள் சவுலிடம் இந்தச்செய்தியை சொல்லுகிறார்கள். "உடனே போங்கள், இந்நேரத்திலே அவரைக் கண்டுகொள்ளலாம்" (1சாமு 9:13) என்று அந்தப் பெண்கள் சவுலுக்கு சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் ராமாவிலே கர்த்தருக்கு பலியிடுகிறார்கள். அவர்கள் பலியிட்டதை அன்பின் விருந்தாக போஜனம் பண்ணுகிறார்கள். அவர்கள் அங்கே பலியிட கூடிவந்திருக்கிறார்கள். ராமாவிலே கர்த்தருக்கு ஆராதனை நடைபெறுகிறது. பலிகளை செலுத்தும்போது, சாமுவேல் அந்தப் பலிகளை ஆசீர்வதிக்கவேண்டும். ஆசீர்வதிப்பதற்கு முன்பு பலியும் செலுத்தமாட்டார்கள். பலிசெலுத்தியதை புசிக்கவுமாட்டார்கள்.

தண்ணீர் எடுக்க வந்த பெண்கள் சொன்ன பிரகாரமாக சவுலும் அவருடைய வேலைக்காரரும் பட்டணத்திற்குப் போகிறார்கள். அவர்கள் பட்டணத்தின் நடுவே சேர்ந்தபோது, இதோ, சாமுவேல் மேடையின்மேல் ஏறிப்போகிறதற்காக, அவர்களுக்கு எதிரே புறப்பட்டு வருகிறார் (1சாமு 9:14).

ராமாவிலுள்ள மேடை அந்தப் பட்டணத்திற்கு ஒரு ஜெபஆலயம் போல இருக்கிறது. கர்த்தர் சாமுவேலுக்கு ஏற்கெனவே சவுலைப்பற்றி வெளிப்படுத்தி யிருக்கிறார். சாமுவேல் ஒரு ஞானதிஷ்டிக் காரர். ஆகையினால் தன்னுடைய ஜீவியத்திலும், மற்றவர்களுடைய ஜீவியத்திலும் என்ன நடைபெறும் என்பதை அவர் ஏற்கெனவே அறிந்து வைத்திருக்கிறார்.

சவுல் வர ஒருநாளுக்கு முன்னே கர்த்தர் சாமுவேலின் காதுகேட்க: "நாளை இந்நேரத்திற்குப் பென்யமீன் நாட்டானாகிய ஒரு மனுஷனை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணக்கடவாய்; அவன் என் ஜனத்தைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பான்; என் ஜனத்தின் முறையிடுதல் என்னிடத்தில் வந்து எட்டினபடியினால், நான் அவர்களைக் கடாட்சித்தேன்" (1சாமு 9:15,16) என்று வெளிப்படுத்தியிருந்தார்.

தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலிடம் கேட்டார்கள். கர்த்தர் சவுலை அவர்களுக்கு ராஜாவாக கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் சாமுவேலின் காது கேட்க, பேசுகிறார். சாமுவேலிடம் இரகசியம் பேசுவதுபோல பேசுகிறார். கர்த்தர் பேசுவது சாமுவேலின் மனதில் படுகிறது. ஒருவேளை கர்த்தர் மெல்லிய சத்தத்தினால் சாமுவேலிடம் பேசியிருக்கலாம்.

"கர்த்தர் சாமுவேலின் காது கேட்க வெளிப்படுத்தியிருந்தார்" என்னும் வாக்கியமானது மூலஎபிரெய பாஷையிலே, "கர்த்தர் சாமுவேலின் காதைத் திறந்தார்" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஒரு ஆத்துமாவுக்கு தம்மை வெளிப்படுத்தும்போது, அவர் அந்த நபரின் காதை "எப்பத்தா" என்று சொல்லி திறக்கிறார். எப்பத்தா என்னும் வார்த்தைக்கு "திறக்கப்படுவாயாக" என்று அர்த்தம்.

"மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்" (2கொரி 3:15,16).

தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலிடம் கேட்டது கர்த்தருக்கும் விசனமாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவர்களுக்கு சவுலை ராஜாவாக ஏற்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து மிகுந்த கரிசனையோடும், அன்போடும் பேசுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றி குறிப்பிடும்போதெல்லாம், "என் ஜனம்" என்று அன்போடு சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்தாலும், கர்த்தருடைய பிரமாணங்களுக்கு மீறுகிறவர்களாயிருந்தாலும், கர்த்தரை விட்டு விலகிப்போகிறவர்களாயிருந்தாலும், கர்த்தர் அவர்களை "என் ஜனம்" என்று அன்போடு அழைக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு சவுலை அதிபதியாக நியமிக்கிறார். "அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணக்கடவாய்" என்று கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக ஜெபம்பண்ணினாலும், கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். "என் ஜனத்தின் முறையிடுதல் என்னிடத்தில் வந்து எட்டினபடியினால், நான் அவர்களை கடாட்சித்தேன்" என்று கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார்.

சவுல் நடுவாசலிலே சாமுவேலிடத்தில் வந்து: "ஞானதிஷ்டிக்காரன் வீடு எங்கே, சொல்லும்" என்று கேட்கிறார் (1சாமு 9:18). சாமுவேல் சவுலைக் கண்டபோது, கர்த்தர் சாமுவேலினிடத்தில்: "இதோ, நான் உனக்குச் சொல்லியிருந்த மனுஷன் இவனே; இவன்தான் என் ஜனத்தை ஆளுவான்" (1சாமு 9:17) என்று சாமுவேலின் காது கேட்க சொல்லுகிறார்.

கர்த்தர் சாமுவேலுக்கு சவுலைப்பற்றி பிரத்தியட்சமான வார்த்தைகளைப் பேசுகிறார். சாமுவேலுக்கு சவுலைப் பார்த்தவுடன் திருப்தி உண்டாயிற்று. கர்த்தர் சாமுவேலிடம் "இவனே, இவன்தான், என் ஜனத்தை ஆளுவான்" என்று மிகவும் தெளிவாக சவுலைப்பற்றிச் சொல்லுகிறார்.

சாமுவேலும் சவுலும்
1சாமு 9:18-27

1சாமு 9:18. சவுல் நடுவாசலிலே சாமுவேலிடத்தில் வந்து: ஞானதிஷ்டிக்காரன் வீடு எங்கே, சொல்லும் என்று கேட்டான்.

1சாமு 9:19. சாமுவேல் சவுலுக்குப் பிரதியுத்தரமாக: ஞானதிஷ்டிக்காரன் நான்தான்; நீ எனக்கு முன்னே மேடையின்மேல் ஏறிப்போ; நீங்கள் இன்றைக்கு என்னோடே போஜனம் பண்ணவேண்டும்; நாளைக்காலமே நான் உன் இருதயத்தில் உள்ளது எல்லாவற்றையும் உனக்கு அறிவித்து, உன்னை அனுப்பிவிடுவேன்.

1சாமு 9:20. மூன்று நாளைக்கு முன்னே காணமற்போன கழுதைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்; அவைகள் அகப்பட்டது; இதெல்லாம் சகல இஸ்ரவலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? உன்னையும் உன் வீட்டார் அனைவரையும் அல்லவா? என்றான்.

1சாமு 9:21. அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக: நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களி லெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன் என்றான்.

1சாமு 9:22. சாமுவேல் சவுலையும் அவன் வேலைக்காரனையும் போஜனசாலைக்குள் அழைத்துக் கொண்டுபோய், அவர்களை அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே தலைமையான இடத்திலே வைத்தான்; அழைக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய முப்பதுபேராயிருந்தார்கள்.

1சாமு 9:23. பின்பு சாமுவேல் சமையற்காரனைப் பார்த்து: நான் உன் கையிலே ஒரு பங்கைக் கொடுத்துவைத்தேனே, அதைக் கொண்டுவந்து வை என்றான்.

1சாமு 9:24. அப்பொழுது சமையற்காரன், ஒரு முன்னந்தொடையையும், அதனோடிருந்ததையும் எடுத்துக் கொண்டு வந்து, அதை சவுலுக்கு முன் வைத்தான்; அப்பொழுது சாமுவேல்: இதோ, இது உனக்கென்று வைக்கப்பட்டது, இதை உனக்கு முன்பாக வைத்துச் சாப்பிடு; நான் ஜனங்களை விருந்துக்கு அழைத்ததுமுதல், இதுவரைக்கும் இது உனக்காக வைக்கப்பட்டிருந்தது என்றான்; அப்படியே சவுல் அன்றையதினம் சாமுவேலோடே சாப்பிட்டான்.

1சாமு 9:25. அவர்கள் மேடையிலிருந்து பட்டணத்திற்கு இறங்கிவந்தபின்பு, அவன் மேல்வீட்டிலே சவுலோடே பேசிக்கொண்டிருந்தான்.

1சாமு 9:26. அவர்கள் அதிகாலமே கிழக்கு வெளுக்கிற நேரத்தில் எழுந்திருந்தபோது, சாமுவேல் சவுலை மேல்வீட்டின்மேல் அழைத்து: நான் உன்னை அனுப்பிவிடும்படிக்கு ஆயத்தப்படு என்றான்; சவுல் ஆயத்தப்பட்டபோது, அவனும் சாமுவேலும் இருவருமாக வெளியே புறப்பட்டார்கள்.

1சாமு 9:27. அவர்கள் பட்டணத்தின் கடைசி மட்டும் இறங்கிவந்தபோது, சாமுவேல் சவுலைப் பார்த்து: வேலைக்காரனை நமக்கு முன்னே நடந்துபோகச் சொல் என்றான்; அப்படியே அவன் நடந்து போனான்; இப்பொழுது நான் தேவனுடைய வார்த்தையை உனக்குத்தெரிவிக்கும்படிக்கு, நீ சற்றே தரித்துநில் என்றான்.

கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம் சாமுவேலும் சவுலும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். அவர்கள் இருவரும் நடுவாசலிலும், போஜனம்பண்ணும் இடத்திலும், வீட்டின் மாடியில் தனியாகவும் கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம் சந்தித்துக் கொள்கிறார்கள்.

சவுல் சாமுவேலைத் தேடி பட்டணத்தின் வழியாக வருகிறார். அந்த இடத்திற்கு சாமுவேலும் வருகிறார். "ஞானதிஷ்டிக்காரன் வீடு எங்கே சொல்லும்" என்று சவுல் சாமுவேலிடமே கேட்கிறார். சாமுவேலே அந்த ஞானதிஷ்டிக்காரர். கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம், சவுல் சாமுவேலிடம், சாமுவேலைப்பற்றிக் கேட்கிறார். சாமுவேல் சவுலுக்கு பிரதியுத்தரமாக, "ஞானதிஷ்டிக்காரன் நான்தான்" என்று சொல்லுகிறார் (1சாமு 9:18,19).

சவுல் சாமுவேலை அறிந்துகொள்வதற்கு முன்பாக, சாமுவேல் சவுலைப்பற்றி அறிந்திருக்கிறார். சாமுவேல் சவுலைக் கண்டபோது, கர்த்தர் சாமுவேலினிடத்தில்: "இதோ, நான் உனக்குச் சொல்லியிருந்த மனுஷன் இவனே; இவன்தான் என் ஜனத்தை ஆளுவான்" (1சாமு 9:17) என்று சாமுவேலின் காது கேட்க சொல்லியிருக்கிறார்.

சாமுவேல் சவுலிடம், "நீ எனக்கு முன்னே மேடையின்மேல் ஏறிப்போ; நீங்கள் இன்றைக்கு என்னோடே போஜனம்பண்ணவேண்டும்; நாளைக்காலமே நான் உன் இருதயத்தில் உள்ளது எல்லாவற்றையும் உனக்கு அறிவித்து, உன்னை அனுப்பிவிடுவேன்" (1சாமு 9:19) என்று சொல்லுகிறார்.

காணாமல்போன கழுதைகளைத் தேடி கண்டுபிடிக்கவேண்டும் என்னும் எண்ணம் மாத்திரமே சவுலின் மனதிலிருக்கிறது. சாமுவேலோ சவுல் தன்னோடேகூட இன்று போஜனம்பண்ணவேண்டும் என்றும், நாளையதினம் காணாமல்போன கழுதையைப்பற்றி அறிவித்து, அவரை அனுப்பிவிடுவதாகவும் சொல்லுகிறார். சாமுவேலின் மனதில் சவுலைக்குறித்து கர்த்தர் சொன்ன காரியங்கள் மனதில் இருக்கிறது.

சவுலும் தன்னோடுகூட மேடையின்மேல் ஏறி வரவேண்டும் என்றும், அங்கே மேடையின்மேல் போஜனம்பண்ணப் போகிறவர்களோடு சவுலும் போஜனம்பண்ணவேண்டும் என்றும் சாமுவேல் பலியிட்டதை ஆசீர்வதிக்கும்போது சவுலும் அவரோடுகூட இருக்கவேண்டும் என்றும் சாமுவேல் எதிர்பார்க்கிறார்.

சவுலின் மனதில் காணாமல்போன கழுதைகளைப்பற்றிய எண்ணமே நிரம்பியிருக்கிறது. சாமுவேலுக்கும் சவுலின் மனதிலுள்ள எண்ணம் தெரிந்திருக்கிறது. சாமுவேல் சவுலிடம் "மூன்று நாளைக்கு முன்னே காணமற்போன கழுதைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்; அவைகள் அகப்பட்டது" (1சாமு 9:20) என்று சொல்லுகிறார். சாமுவேலின் வார்த்தைகளைக் கேட்டபோது சவுலுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

சாமுவேல் காணாமல்போன கழுதைகளைப்பற்றி வெளிப்படுத்தியதினால், அவர் மெய்யாகவே ஒரு ஞானதிஷ்டிக்காரர் என்றும், அவர் மெய்யாகவே ஒரு தீர்க்கதரிசி என்றும் சவுலுக்கு தெரியவருகிறது. சவுல் காணாமல்போன தன்னுடைய கழுதைகள் அகப்பட்டது என்னும் வார்த்தையைக் கேட்டு சந்தோஷப்படுகிறார். சாமுவேலின் ஞானதிஷ்டியான வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்படுகிறார்.

அப்போது சாமுவேல், "இதெல்லாம் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? உன்னையும் உன் வீட்டார் அனைவரையும் அல்லவா?" (1சாமு 9:20) என்று ஒரு புதிய செய்தியையும் சொல்லுகிறார். தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள். அவர்கள் விரும்புகிற ராஜா சவுல் தான் என்பதை சாமுவேல் தெளிவுபடுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரால் சவுலைப்போல ஒரு தகுதியான மனுஷரைப் பார்க்க முடியாது. சகல இஸ்ரவேலின் அபேட்சையும் சவுலையே நாடுகிறது. சவுலையும் அவர் வீட்டார் அனைவரையும் நாடுகிறது.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு சவுலே தகுதியான ராஜா என்றும், அவரே அவர்கள் விரும்புகிற ராஜா என்றும் சொன்னபோது, சவுல் அதைக் கேட்டு பெருமைப்படவில்லை. அவர் சாமுவேலுக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார்.

அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக: "நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன்" (1சாமு 9:21) என்று சொல்லுகிறார்.

சவுல் சவுந்தரியமுள்ள வாலிபன். இஸ்ரவேலிலுள்ள எல்லோரையும்விட அவர் உயரமாயிருக்கிறார். ஆகையினால் சவுலே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பிரியமான ராஜாவாயிருப்பார் என்று சாமுவேல் நினைக்கிறார். ஆனால் சவுலோ தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா" என்று மிகுந்த மனத்தாழ்மையோடு சொல்லுகிறார். பென்யமீன் கோத்திரத்திலுள்ள குடும்பங்களில் சவுலின் குடும்பம் சாதாரணமான அற்பமான குடும்பம். சவுல் விசேஷித்த குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல. அவருடைய குடும்பத்தார் கனமுள்ளவர்களுமல்ல.

சாமுவேல் சவுலுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொன்ன பின்பு, சவுல் தன்னைப்பற்றிச் சொன்ன காரியங்களை சாமுவேல் தன் மனதில் வைத்துக்கொள்கிறார். சவுலின் வார்த்தைகளுக்கு சாமுவேல் வேறு பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. சில சமயங்களில், நாம் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு அறிவிக்கும்போது, கர்த்தர் சொன்னதை மாத்திரம் சொல்லவேண்டும். அதிகப்படியான வார்த்தைகளைப் பேசக்கூடாது. சுருக்கமாகப் பேசுவது மிகவும் நல்லது.

சாமுவேல் சவுலையும் அவருடைய வேலைக்காரனையும் போஜனசாலைக்குள் அழைத்துக்கொண்டுபோய், அவர்களை அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே தலைமையான இடத்திலே வைக்கிறார்; அழைக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய முப்பதுபேராயிருக்கிறார்கள் (1சாமு 9:22).

அழைக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய முப்பது பேராயிருந்தாலும், சாமுவேல் சவுலுக்கு, முப்பது பேர் மத்தியிலே விசேஷித்த மதிப்பையும், மரியாதையையும், அந்தஸ்தையும் காண்பிக்கிறார். இனிமேல் நடைபெறப்போகிற சம்பவங்களுக்கு, சாமுவேல், சவுலையும் இஸ்ரவேலின் மூப்பர்களையும் ஆயத்தம்பண்ணுகிறார். அழைக்கப்பட்டவர்களுக்கு முன்பாக சாமுவேல் சவுலை உயர்த்தி கனம்பண்ணுகிறார்.

சாமுவேல் சவுலை தலைமையான இடத்தில் வைக்கிறார். சவுலுக்கு விசேஷித்த போஜனத்தைக் கொடுக்கிறார். பின்பு சாமுவேல் சமையற்காரனைப் பார்த்து: "நான் உன் கையிலே ஒரு பங்கைக் கொடுத்துவைத்தேனே, அதைக் கொண்டுவந்து வை" என்கிறார். அப்பொழுது சமையற்காரன், ஒரு முன்னந்தொடையையும், அதனோடிருந்ததையும் எடுத்துக்கொண்டு வந்து, அதை சவுலுக்கு முன் வைக்கிறான்; அப்பொழுது சாமுவேல்: "இதோ, இது உனக்கென்று வைக்கப்பட்டது, இதை உனக்கு முன்பாக வைத்துச் சாப்பிடு; நான் ஜனங்களை விருந்துக்கு அழைத்ததுமுதல், இதுவரைக்கும் இது உனக்காக வைக்கப்பட்டிருந்தது" என்று சவுலுக்கு சொல்லுகிறார்; அப்படியே சவுல் அன்றையதினம் சாமுவேலோடே சாப்பிடுகிறார் (1சாமு 9:23,24).

சமாதான பலியின் வலது முன்னந்தொடை ஆசாரியருக்கு கொடுக்கப்படும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தின்படி முன்னந்தொடையைப் பெற்றுக்கொள்வார்கள்.

"உங்கள் சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையை ஏறெடுத்துப் படைக்கும் பலியாகப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொடுப்பீர்களாக" *(லேவி 7:32).*

சமாதானபலியின் இடது முன்னந்தொடை, போஜனபந்தியிலே, ஆசாரியருக்கு அடுத்தபடியாக, உயர்ந்த ஸ்தானத்தில் அமர்ந்திருக்கிறவருக்கு கொடுக்கப்படும். ஆனால் சாமுவேலோ இங்கு, தன்னுடைய பங்காகிய வலது முன்னந்தொடையை, சவுலுக்கு கொடுக்கிறார். சாமுவேல் தன்னுடைய ஊழிய ஸ்தானத்தையே சவுலுக்கு விட்டுக்கொடுக்கிறார் என்பதற்கு இது அடையாளம். சாமுவேல் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கும் ஊழியத்திலிருந்து ஓய்வுபெறுகிறார். அவர்களை நியாயம் விசாரிக்கும் ஊழியப்பொறுப்பை சாமுவேல் சவுலுக்குக் கொடுக்கிறார்.

அவர்கள் மேடையிலிருந்து பட்டணத்திற்கு இறங்கிவந்தபின்பு, சாமுவேல் மேல்வீட்டிலே சவுலோடே பேசிக்கொண்டிருக்கிறார் *(1சாமு 9:25).* சாமுவேலும் சவுலும் மாலைவேளையில் தனியாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் இருவரும் மறுபடியுமாக அதிகாலையிலும் பேசுகிறார்கள். அவர்கள் அதிகாலமே கிழக்கு வெளுக்கிற நேரத்தில் எழுந்திருந்தபோது, சாமுவேல் சவுலை மேல்வீட்டின்மேல் அழைத்து: "நான் உன்னை அனுப்பிவிடும்படிக்கு ஆயத்தப்படு" என்று சொல்லுகிறார்; சவுல் ஆயத்தப்பட்டபோது, சவுலும் சாமுவேலும் இருவருமாக வெளியே புறப்படுகிறார்கள் *(1சாமு 9:26).*

அவர்கள் பட்டணத்தின் கடைசி மட்டும் இறங்கிவந்தபோது, சாமுவேல் சவுலைப் பார்த்து: "வேலைக்காரனை நமக்கு முன்னே நடந்துபோகச் சொல்" என்று சொல்லுகிறார்; அப்படியே அவன் நடந்து போகிறான்; "இப்பொழுது நான் தேவனுடைய வார்த்தையை உனக்குத் தெரிவிக்கும்படிக்கு, நீ சற்றே தரித்துநில்" *(1சாமு 9:27)* என்று சாமுவேல் சவுலுக்கு சொல்லுகிறார்.

சாமுவேலும் சவுலும் தனியாக இருந்தபோது, தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் சொன்னதையும், சவுலை இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணவேண்டுமென்று கர்த்தர் சொன்னதையும், சாமுவேல் சவுலுக்கு சொல்லியிருக்கவேண்டும். இதன்பின்பு சாமுவேல் சவுலை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்.

10 அதிகாரம்

சாமுவேல் சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார் (1சாமு 10:1). சாமுவேல் சவுலுக்கு சொல்லும் அடையாளங்கள் (1சாமு 10:2-6). சாமுவேல் சவுலுக்கு சொல்லும் போதனைகள் (1சாமு 10:7-8). சாமுவேல் சொன்ன அடையாளங்கள் நிறைவேறுகிறது. சவுலின் மனதில் திருப்தி உண்டாகிறது (1சாமு 10:9-13).

சவுல் தன் தகப்பனாருடைய வீட்டிற்கு திரும்பி வருகிறார் (1சாமு 10:14-16). சாமுவேல் சீட்டுப்போட்டு இஸ்ரவேலுக்கு ராஜாவைத் தெரிந்தெடுக்கிறார். சீட்டு சவுலின் பேரில் விழுகிறது. சாமுவேல் சவுலை ராஜாவாய் பிரதிஷ்டைபண்ணுகிறார் (1சாமு 10:17-25). சவுல் கிபியாவிலிருக்கிற தன் வீட்டிற்கு திரும்பிப்போகிறார் (1சாமு 10:26,27).

அடையாளங்கள்
1சாமு 10:1-8

1சாமு 10:1. அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின் மேல் வார்த்து, அவனை முத்தஞ்செய்து: கர்த்தர் உன்னை தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா?

1சாமு 10:2. நீ இன்றைக்கு என்னைவிட்டுப் போகிறபோது, பென்யமீன் எல்லையாகிய செல்சாகில் ராகேலின் கல்லறையண்டையில் இரண்டு மனுஷரைக் காண்பாய்; அவர்கள் உன்னைப் பார்த்து: நீ தேடப்போன கழுதைகள் அகப்பட்டது; இதோ, உன் தகப்பன் கழுதைகளின் மேலிருந்த கவலையை விட்டு, உங்களுக்காக விசாரப்பட்டு, என் மகனுக்காக என்னசெய்வேன்? என்கிறான் என்று சொல்லுவார்கள்.

1சாமு 10:3. நீ அவ்விடத்தை விட்டு அப்புறம் கடந்துபோய், தாபோரிலுள்ள சமபூமியில் சேரும்போது, தேவனைப் பணியும்படி பெத்தேலுக்குப் போகிற மூன்று மனுஷர் அங்கே உன்னைக் கண்டு சந்திப்பார்கள்; ஒருவன் மூன்று ஆட்டுக்குட்டிகளையும், இன்னொருவன் மூன்று அப்பங்களையும், வேறொருவன் திராட்சரசமுள்ள ஒரு துருத்தியையும் கொண்டுவந்து,

1சாமு 10:4. உன்னுடைய சுகசெய்தியை விசாரித்து, உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள்; அவைகளை நீ அவர்கள் கையிலே வாங்கவேண்டும்.

1சாமு 10:5. பின்பு பெலிஸ்தரின் தாணையம் இருக்கிற தேவனுடைய மலைக்குப் போவாய்; அங்கே நீ பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், மேடையிலிருந்து இறங்கிவருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்ப்படுவாய்; அவர்களுக்கு முன்பாகத் தம்புரும் மேளமும் நாகசுரமும் சுரமண்டலமும் போகும்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.

1சாமு 10:6. அப்பொழுது கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார்; நீ அவர்களோடே கூடத் தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய்.

1சாமு 10:7. இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும்போது, சமயத்துக்கு ஏற்றபடி நீ செய்; தேவன் உன்னோடே இருக்கிறார்.

1சாமு 10:8. நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப்போ; சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலி களையும் செலுத்தும்படிக்கு, நான் உன்னிடத்தில் வருவேன்; நான் உன்னிடத்தில் வந்து, நீ செய்யவேண்டியதை உனக்கு அறிவிக்குமட்டும், ஏழுநாள் காத்திரு என்றான்.

சாமுவேல் சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார். சாமுவேல் தீர்க்கதரிசியின் ஊழியத்தை செய்கிறார். கர்த்தர் சவுலைக்குறித்து தனக்கு வெளிப்படுத்தின வார்த்தைகளை, சாமுவேல் சவுலுக்கு சொல்லுகிறார்.

சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, சவுலின் தலையின்மேல் வார்த்து, சவுலை முத்தம் செய்கிறார். சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் மொத்தமாய் அழைத்து வந்து, அவர்களுக்கு முன்பாக, அவர் சவுலை அபிஷேகம்பண்ணவில்லை. சாமுவேல் சவுலை தனிமையில் அபிஷேகம்பண்ணுகிறார். தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக இந்த அபிஷேகம் நடைபெறுகிறது. வெளிப்படையான சடங்காச்சாரம் எதுவும் இல்லாவிட்டாலும், சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்.

சாமுவேல் சவுலை அபிஷேகம்பண்ணி, "கர்த்தர் உன்னை தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா?" (1சாமு 10:1) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்.

சாமுவேல் சவுலை அபிஷேகம்பண்ணி, அவரை முத்தம் செய்கிறார். கர்த்தர் சவுலை ராஜாவாக தெரிந்தெடுத்திருப்பதை சாமுவேலும் அங்கீகரிக்கிறார். இதற்கு அடையாளமாகவே சாமுவேல் சவுலை முத்தம் செய்கிறார். சவுல் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுவதினால், சாமுவேலின் மகிமை குறையும். அவருடைய குடும்பத்தின் மேன்மையும் குறையும். சாமுவேலின் அதிகாரமும் குறைந்துபோகும். ஆனாலும் சாமுவேல் சவுலை மனப்பூர்வமாக அபிஷேகம்பண்ணுகிறார்.

சாமுவேல் சவுலின் ராஜ்யபாரத்திற்கு கீழ்ப்படிவதை உறுதிபண்ணும் வண்ணமாக, சாமுவேல் சவுலை முத்தம் செய்கிறார். சாமுவேல் சவுலுக்கு ஆதரவாகயிருப்பார். சாமுவேல் சவுலை முத்தம் செய்யும்போது, அவரை பொதுவான ஒரு ராஜாவாக அங்கீகரிப்பது மாத்திரமல்ல, சாமுவேல் சவுலை தன்னுடைய ராஜாவாகவும் அங்கீரிக்கிறார்.

"குமாரன் கோபங்கொள்ளமாலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங் 2:12).

சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணும்போது, அவருக்கு கர்த்தருடைய வார்த்தைகளையும் நினைவுபடுத்துகிறார். சவுல் எப்படிப்பட்ட ராஜ்யத்தை ஆளுகை செய்யவேண்டும் என்பதை சாமுவேல் அவருக்கு தெளிவுபடுத்துகிறார். சவுல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தலைவராகவும், யுத்தத்திலே தளபதியாகவும் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்.

சவுல் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருப்பதினால், அவருக்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது அதிகமான பொறுப்புக்கள் கொடுக்கப்படுகிறது. அவர் தேசத்தை ஆளுகை செய்யும்போது கடினமாய் உழைக்கவேண்டும். சவுல் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாகயிருப்பதினால், அவருக்கு ஏராளமான ஆபத்துக்கள் வருவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளது.

மனுஷருடைய சித்தத்தினாலோ, தன்னுடைய சுயவிருப்பத்தினாலோ, சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணவில்லை. கர்த்தரே சவுலை அபிஷேகம்பண்ணியிருக்கிறார். ஆகையினால் சவுல் இஸ்ரவேல் தேசத்தை கர்த்தருடைய நாமத்தினால் ஆளுகை செய்யவேண்டும். அவர் கர்த்தருக்காக ஆளுகை செய்யவேண்டும். சவுல் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யவேண்டும். தன்னுடைய ஆளுகையில் கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதில் சவுல் கருத்தாயும், கவனமாயும் இருக்கவேண்டும்.

கர்த்தர் சவுலை தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய சுதந்தரமாயிருக்கிறார்கள். சவுல் அவர்களை பாதுகாக்கவேண்டும். பராமரிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாரின் நன்மைகளுக்காகவும், சவுகரியங்களுக்காகவும் பாடுபடவேண்டும். சவுலின் ஒவ்வொரு நடபடிகளும் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மையைக் கொடுக்கவேண்டும். சவுல் உண்மையுள்ள, நல்ல உக்கிராணக்காரனாயிருந்து, கர்த்தருக்காக, கர்த்தருடைய ஜனத்தை ஆளுகை செய்யவேண்டும்.

சாமுவேல் தன்னை அபிஷேகம்பண்ணுவதை, சவுல் எதிர்பார்க்கவில்லை. சவுலுக்கு எல்லாமே புதிதாயும் ஆச்சரியமாயும் இருக்கிறது. சவுலின் மனதில் தெளிவு உண்டாகவேண்டும். குழப்பங்கள் நீங்கவேண்டும். இதன் நிமித்தமாக, சாமுவேல் ஒரு சில அடையாளங்களைச் சொல்லுகிறார். இந்த அடையாளங்கள் எல்லாம் அன்றைய தினத்திலேயே நடைபெறும் என்று உறுதியும் பண்ணுகிறார். சாமுவேல் சொன்ன அடையாளங்கள் எல்லாம் அன்றையதினமே நேரிட்டது (1சாமு 10:9).

சாமுவேல் சொல்லுகிற அடையாளங்களெல்லாம் நிறைவேறும்போது, அவர் கர்த்தருடைய வார்த்தையைப் பேசுகிறார் என்னும் நிச்சயம் சவுலின் மனதில் உண்டாகும். கர்த்தருடைய வார்த்தைகளை உறுதிபண்ணும் வண்ணமாகவே இந்த அடையாளங்கள் இங்கு சொல்லப்படுகிறது.

சாமுவேல் சவுலுக்கு முதலாவது அடையாளத்தை சொல்லுகிறார். "நீ இன்றைக்கு என்னைவிட்டுப் போகிறபோது, பென்யமீன் எல்லையாகிய செல்சாகில் ராகேலின் கல்லறையண்டையில் இரண்டு மனுஷரைக் காண்பாய்; அவர்கள் உன்னைப் பார்த்து: நீ தேடப்போன கழுதைகள் அகப்பட்டது; இதோ, உன் தகப்பன் கழுதைகளின்மேலிருந்த கவலையை விட்டு, உங்களுக்காக விசாரப்பட்டு, என் மகனுக்காக என்னசெய்வேன்? என்கிறான் என்று சொல்லுவார்கள்" (1சாமு 10:2). இது முதலாவது அடையாளம்.

சாமுவேல் சொல்லுகிற இரண்டு மனுஷரையும் சவுல் ராகேலின் கல்லறையண்டையில் காண்பார். சவுல் தன் தகப்பனுடைய கழுதைகளைத் தேடிப்போனார். அந்தக் கழுதைகள் அகப்பட்டது என்று இரண்டு மனுஷரும் சொல்லுவார்கள்.

இரண்டாவது அடையாளம் மூன்று மனுஷர் மூலமாய் உண்டாகும். "நீ அவ்விடத்தை விட்டு அப்புறம் கடந்துபோய், தாபோரிலுள்ள சமபூமியில் சேரும்போது, தேவனைப் பணியும்படி பெத்தேலுக்குப் போகிற மூன்று மனுஷர் அங்கே உன்னைக் கண்டு சந்திப்பார்கள்; ஒருவன் மூன்று ஆட்டுக்குட்டிகளையும், இன்னொருவன் மூன்று அப்பங்களையும், வேறொருவன் திராட்சரசமுள்ள ஒரு துருத்தியையும் கொண்டுவந்து, உன்னுடைய சுகசெய்தியை விசாரித்து, உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள்" (1சாமு 10:3,4). இது இரண்டாவது அடையாளம்.

சாமுவேல் இரண்டாவது அடையாளத்தைச் சொல்லிவிட்டு, அவர்கள் "உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள்; அவைகளை நீ அவர்கள் கையிலே வாங்கவேண்டும்" (1சாமு 10:4) என்றும் சொல்லுகிறார்.

மூன்று மனுஷரும் தேவனை பணியும்படி பெத்தேலுக்குப் போகிறார்கள். பெத்தேல் உயரமான ஸ்தலம். அது ஒரு ஆராதனை ஸ்தலம். பெத்தேலிலே கர்த்தருக்கு பலிசெலுத்துவதற்காக இம்மூன்று மனுஷரும் அங்கே போகிறார்கள். அவர்கள் மூன்று ஆட்டுக்குட்டிகளையும், மூன்று அப்பங்களையும், திராட்சரசமுள்ள ஒரு துருத்தியையும், கர்த்தருக்கு பலிசெலுத்துவதற்காக கொண்டு போகிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு போஜனபலியும், பானபலியும் செலுத்தப்போகிறார்கள்.

மூன்று மனுஷரும் கர்த்தருக்கு பலிசெலுத்துவதற்காகப் போனாலும், அவர்கள் தங்களிடத்திலுள்ள மூன்று அப்பங்களில் இரண்டு அப்பங்களை சவுலிடத்தில் கொடுப்பார்கள். அந்த அப்பங்களை சவுலும் அவர்களுடைய கையிலிருந்து வாங்கிக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்கள் அதிபதிக்கு இந்த அப்பங்களை காணிக்கையாக செலுத்துகிறார்கள்.

சவுல் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு, மனுஷர் கையிலிருந்து வாங்கும் முதலாவது காணிக்கை இவ்விரண்டு அப்பங்களாகும். அந்த மூன்று மனுஷர்களுக்கு சவுலைப்பற்றியும் தெரியாது. தாங்கள் என்ன செய்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. இதை ஏன் செய்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆனாலும் அவர்கள் சவுலின் சுகசெய்தியை விசாரித்து, இரண்டு அப்பங்களை சவுலுக்கு கொடுக்கிறார்கள். கர்த்தரே அவர்களுடைய மனதில், சவுலுக்கு இரண்டு அப்பங்களைக் கொடுக்கவேண்டுமென்று ஏவியிருக்கிறார். இதுவும் சவுலுக்கு ஒரு அடையாளமாய்ச் சொல்லப்படுகிறது.

சாமுவேல் சவுலுக்கு இரண்டு அடையாளங்களை சொன்ன பின்பு, மூன்றாவது அடையாளத்தையும் சொல்லுகிறார். இது மிகவும் முக்கியமான அடையாளமாகும். "பின்பு பெலிஸ்தரின் தாணையம் இருக்கிற தேவனுடைய மலைக்குப் போவாய்; அங்கே நீ பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், மேடையிலிருந்து இறங்கிவருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்ப்படுவாய்; அவர்களுக்கு முன்பாகத் தம்புரும் மேளமும் நாகசுரமும் சுரமண்டலமும் போகும்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார்; நீ அவர்களோடே கூடத் தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய்" (1சாமு 10:5,6). இது மூன்றாவது அடையாளம்.

சவுல் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தை சந்திப்பார். கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மேல் இறங்குவார். சவுலும் அவர்களோடு தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவார் என்பது மூன்றாவது அடையாளம்.

ஆவியானவர் நம்முடைய ஜீவியத்தில் தம்முடைய தெய்வீக பராமரிப்புக்களைக் கொடுக்கிறார். நம்மை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக அற்புதமாய் வழிநடத்துகிறார். இவையெல்லாம் நம்முடைய விசுவாசத்தை உறுதிபடுத்தும். ஆனாலும், நம்முடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்கு, கர்த்தர் மேலும் ஒரு உபாயத்தைப் பயன்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய ஆவியானவர் மூலமாய் நமக்குள்ளே கிரியை நடப்பிக்கிறார். நாம் இதை உணர்ந்துகொள்ளும்போது நம்முடைய விசுவாசம் உறுதிபண்ணப்படுகிறது. தேவனுடைய பராமரிப்புக்களைவிட, கர்த்தருடைய ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் பேசுவதே, நம்முடைய விசுவாசத்தை உறுதிபண்ணும் மேன்மையான உபாயம்.

சவுல் தேவனுடைய மலைக்குப்போவார் என்று சாமுவேல் சொல்லுகிறார். சவுல் தீர்க்கதரிசனம் சொல்லுகிற சம்பவம் தேவனுடைய மலையில் நடைபெறுகிறது. இங்கே பெலிஸ்தரின் தாணயம் இருக்கிறது. பெலிஸ்தருடைய இராணுவ வீரர்கள் தேவனுடைய மலையிலே முகாமிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தரை தங்கள் தேசத்திலிருந்து துரத்தியிருக்கிறார்கள். ஆனால் பெலிஸ்தரோ மறுபடியுமாய், இஸ்ரவேல் தேசத்திற்குள் பிரவேசித்து, அங்கே பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

பெலிஸ்தரின் தாணயம் இஸ்ரவேல் தேசத்திலிருப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரைத் தண்டிப்பதற்காக கர்த்தர் பெலிஸ்தரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நாம் கர்த்தருக்கு விரோதமாய்க் கிரியை செய்யும்போது, நம்மை கண்டித்து உணர்த்துவதற்கும், நம்மை தண்டிப்பதற்கும், கர்த்தர் ஒரு சில மனுஷரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்தி, நம்மைத் தண்டிக்கிறார்.

பெலிஸ்தரின் தாணயம் இருக்கிற இடம் "தேவனுடைய மலை" என்று அழைக்கப்படுகிறது. இங்கே தீர்க்கதரிசிகளின் புத்திரர் தங்கியிருக்கிறார்கள். பெலிஸ்தரின் தாணயம் இந்த மலையிலிருந்தாலும், தீர்க்கதரிசிகளின் புத்திரரும் இந்த மலையிலேயே இருக்கிறார்கள். இவர்கள் தீர்க்கதரிசிகளின் பாடசாலையில் தங்கியிருந்து, ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். பெலிஸ்தரின் தாணயம் இந்த மலையிலிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு தடையாகவோ, எதிர்ப்பாகவோ இல்லை.

பெலிஸ்தரின் தாணயத்திலுள்ள யுத்தவீரர்களும், தீர்க்கதரிசிகளின் புத்திரரும் ஒரே ஸ்தலத்திலே சமாதானமாக தங்கியிருக்கிறார்கள். அவர்கள் அருகருகே இருந்தாலும், பெலிஸ்தர்கள் தீர்க்கதரிசிகளின் ஊழியத்தை தடைபண்ணவில்லை. தீர்க்கதரிசிகள் கர்த்தரை ஆராதிப்பதையும் பெலிஸ்தர்கள் தடுத்து நிறுத்தவில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும் பெலிஸ்தரோடு சமாதானமாகவே ஜீவிக்கிறார்கள்.

தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் மேடையிலிருந்து இறங்கி வருவதை சவுல் பார்ப்பார். அவர்களுக்கு முன்பாக தம்புரும், மேளமும், நாகசுரமும், சுரமண்டலமும் போகும். அப்போது தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். சவுல் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தாரைப் பார்த்து, அவர்களோடு கூட சேர்ந்துகொள்வார்.

இந்த தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தையும், வேதத்தையும் கற்றுக்கொள்வதற்காக, கூடியிருக்கிறவர்கள். இவர்கள் ஆவிக்குரிய வேதபாடசாலையில் மாணாக்கர்களைப்போல இருக்கிறார்கள். இவர்கள் வேதத்தின் இரகசியங்களைக் கற்று தேர்ந்து, தங்களுடைய உற்றார் உறவினருக்கும், அயலகத்தாருக்கும், சத்தியத்தை உபதேசம் பண்ணுவார்கள்.

தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் கர்த்தரை துதிப்பார்கள். சாதாரண ஜனங்களைவிட இவர்கள் தேவனிடத்தில் அதிக பக்தியுள்ளவர்களாயிருப்பார்கள். இவர்கள் இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும், பக்திமார்க்கத்திலும் வழிநடத்துவார்கள்.

சாமுவேல் இஸ்ரவேலின் நியாயாதிபதியாகயிருந்து, தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு இஸ்ரவேல் தேசத்திலே வேதபாடசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார். சாமுவேல் இந்த வேதபாடசாலையிலே, தீர்க்கதரிசிகளின் புத்திரரையெல்லாம் கூட்டிச்சேர்த்து, அவர்களுக்கு வேதத்தின் இரகசியங்களையும், மோசேயின் பிரமாணங்களையும் கற்றுக்கொடுக்கிறார். சாமுவேல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. சாமுவேலிடத்தில் ஆவிக்குரிய நற்குணங்கள் அநேகம் இருந்தாலும், இஸ்ரவேல் ஜனங்கள் அவரை தள்ளிவிடுகிறார்கள். தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் தேவனுடைய மலையிலே, உயர்ந்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். இவர்கள் பலிகளை செலுத்திவிட்டு, சங்கீதப்பாடல்களைப் பாடிக்கொண்டே, மேடையிலிருந்து கீழே இறங்கி வருகிறார்கள். அப்போது சவுல் தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்ப்படுகிறார். தானும் அவர்களோடு சேர்ந்துகொள்ளவேண்டும் என்னும் எண்ணம் சவுலின் இருதயத்தில் உண்டாயிற்று. கர்த்தருடைய ஆவியானவரே சவுலுக்கு இப்படிப்பட்ட விருப்பத்தைக் கொடுக்கிறார்.

தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மேல் இறங்குகிறார். சவுலும் அவர்களோடேகூட தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அப்பொழுது சவுல் வேறு மனுஷனாகிறார். சவுல் இதுவரையிலும் தன்னுடைய சுயபலத்தினாலும், சுயபராக்கிரமத்தினாலும் ஒவ்வொரு காரியத்தையும் செய்தார். இப்போதோ அவர் வேறு மனுஷனாகிறார். கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மேல் இறங்கியிருப்பதினால், சவுல் ஆவிக்குரிய மனுஷனாகிறார்.

சாமுவேல் சவுலுக்கு இந்த மூன்று அடையாளங்களையும் சொன்ன பின்பு, "இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும்போது, சமயத்துக்கு ஏற்றபடி நீ செய்; தேவன் உன்னோடே இருக்கிறார்" (1சாமு 10:7) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம் சவுல் இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யவேண்டும்.

சவுலுக்கு இந்த அடையாளங்கள் ஏற்படும்போது, அவர் சமயத்திற்கேற்றபடி ஒவ்வொரு காரியத்தையும் செய்யலாம். அவருடைய சொந்த புத்தியும் ஞானமும், அவரை எப்படி வழிநடத்துகிறதோ, அந்தப் பிரகாரம் அவர் ஒவ்வொரு காரியத்தையும் செய்யலாம். சவுல் சமயத்திற்கேற்றபடி புத்தியுள்ளவராய் நடந்துகொள்ளவேண்டும்.

அதேவேளையில், விசேஷித்த காரியங்களில், சவுல் சாமுவேலின் ஆலோசனைகளைக் கேட்டு, அதற்கு கீழ்ப்படிந்து கிரியை நடப்பிக்கவேண்டும்.

கர்த்தருடைய வழிநடத்தலோடு, சாமுவேலின் ஆலோசனைகளும் சவுலுக்கு தேவைப்படுகிறது. சாமுவேல் சவுலுக்கு இந்த அடையாளங்களை சொன்ன பின்பு, "நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப்போ; சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தும்படிக்கு, நான் உன்னிடத்தில் வருவேன்; நான் உன்னிடத்தில் வந்து, நீ செய்யவேண்டியதை உனக்கு அறிவிக்குமட்டும், ஏழுநாள் காத்திரு" (1சாமு 10:8) என்று சொல்லுகிறார்.

சவுல் சாமுவேலுக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப்போகவேண்டும். அங்கே சவுல் செய்ய வேண்டியதை சாமுவேல் அவருக்கு அறிவிப்பார். ஆனாலும் சாமுவேல் வருவதற்காக சவுல் அங்கே ஏழுநாட்கள் காத்திருக்கவேண்டும். சவுல் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தாலும், அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசிக்காக காத்திருக்கவேண்டும்.

சாதாரண காரியங்களிலே சவுல் சமயத்திற்கேற்றபடி நடந்துகொள்ளலாம். ஆனால் விசேஷித்த காரியங்களில், சவுல், சாமுவேலின் ஆலோசனையின் பிரகாரமாகவே நடந்துகொள்ளவேண்டும். சாமுவேலுக்காக காத்திருப்பது சவுலுக்கு எளிதான காரியமாயில்லை. இந்த விஷயத்தில் சவுல் தோற்றுப்போகிறார்.

"அவன் தனக்குச் சாமுவேல் குறித்த காலத்தின்படி ஏழுநாள்மட்டும் காத்திருந்தான்; சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை, ஜனங்கள் அவனை விட்டுச் சிதறிப்போனார்கள். அப்பொழுது சவுல்: சர்வாங்கதகனபலியையும் சமாதான பலிகளையும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, சர்வாங்கதகனபலியைச் செலுத்தினான். அவன் சர்வாங்க தகனபலியிட்டு முடிகிறபோது, இதோ, சாமுவேல் வந்தான்; சவுல் அவனைச் சந்தித்து வந்தனஞ் செய்ய அவனுக்கு எதிர்கொண்டுபோனான். நீர் செய்தது என்ன என்று சாமுவேல் கேட்டதற்கு, சவுல்: ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான்" (1சாமு 13:8-12).

சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? 1சாமு 10:9-16

1சாமு 10:9. அவன் சாமுவேலை விட்டுப் போகும்படி திரும்பினபோது, தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார்; அந்த அடையாளங்கள் எல்லாம் அன்றையதினமே நேரிட்டது.

1சாமு 10:10. அவர்கள் அந்த மலைக்கு வந்தபோது, இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது; அப்பொழுது தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னான்.

1சாமு 10:11. அதற்குமுன்னே அவனை அறிந்தவர்கள் எல்லாரும் அவன் தீர்க்கதரிசிகளோடிருந்து, தீர்க்கதரிசனம் சொல்லுகிறதைக் கண்டபோது: கீசின் குமாரனுக்கு வந்தது என்ன? சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? என்று அந்த ஜனங்கள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

1சாமு 10:12. அதற்கு அங்கே இருக்கிறவர்களில் ஒருவன்: இவர்களுக்குத் தகப்பன் யார் என்றான்; ஆதலால் சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? என்பது பழமொழியாயிற்று.

1சாமு 10:13. அவன் தீர்க்கதரிசனம் சொல்லி முடிந்தபின்பு, மேடையின்மேல் வந்தான்.

1சாமு 10:14. அப்பொழுது சவுலுடைய சிறிய தகப்பன்: நீங்கள் எங்கே போனீர்கள் என்று அவனையும் அவன் வேலைக்காரனையும் கேட்டான். அதற்கு அவன்: நாங்கள் கழுதைகளைத் தேடப்போய், அவைகளை எங்குங் காணாதபடியினால், சாமுவேலிடத்துக்குப் போனோம் என்றான்.

1சாமு 10:15. அப்பொழுது சவுலின் சிறியதகப்பன்: சாமுவேல் உங்களுக்குச் சொன்னது என்ன? அதைச் சொல் என்றான்.

1சாமு 10:16. சவுல் தன் சிறியதகப்பனைப் பார்த்து: கழுதைகள் அகப்பட்டது என்று எங்களுக்குத் தீர்மானமாய்ச் சொன்னார் என்றான்; ஆனாலும் ராஜ்யபாரத்தைப்பற்றிச் சாமுவேல் சொன்னதை அவனுக்கு அறிவிக்கவில்லை.

சவுல் சாமுவேலை விட்டுப்போகும்படி திரும்புகிறார். அப்போது தேவன் சவுலுக்கு வேறே இருதயத்தைக் கொடுக்கிறார். சாமுவேல் சவுலை அபிஷேகம்பண்ணினார். சவுலின் விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்காக, சாமுவேல் அவருக்கு மூன்று அடையாளங்களைச் சொன்னார். அந்த அடையாளங்களெல்லாம் அன்றைய தினமே நிறைவேறுகிறது.

சாமுவேல் சொன்ன பிரகாரம், ஒவ்வொரு அடையாளமும் நிறைவேறும்போது, சவுலின் மனதிலே உற்சாகமுண்டாகிறது. அவருடைய விசுவாசம் உறுதியாகிறது. தம்முடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கு, கர்த்தரும் சவுலுக்கு விசேஷித்த வழியிலே உதவி செய்கிறார். கர்த்தர் சவுலுக்கு வேறே இருதயத்தைக் கொடுக்கிறார். சவுலின் இருதயம் கொழுந்துவிட்டு எரிவதற்கு கர்த்தர் புதிய அக்கினியை அனுப்புகிறார்.

சவுலோ தன் தகப்பனாருடைய காணாமல்போன கழுதைகளைத் தேடிப்போனார். அவருடைய மனதிலே அந்த கழுதைகளைப்பற்றிய எண்ணமே நிரம்பியிருந்தது. இப்போதோ கர்த்தர் அவருக்கு வேறே இருதயத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் சவுல் இப்போது கழுதைகளைப்பற்றி நினைக்கவில்லை. பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது பற்றியும், இஸ்ரவேல் புத்திரருடைய குறைகளை நிவிர்த்தி பண்ணுவது பற்றியும் சவுல் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்.

கர்த்தர் சவுலுக்கு புதிய இருதயத்தைக் கொடுத்தபோது, அவருடைய இருதயத்தின் சிந்தனைகளும் புதிதாயிற்று. இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்வதற்கு தேவையான கட்டளைகளையும், பிரமாணங்களையும் பற்றி சவுல் யோசிக்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே எவ்வாறு நீதியை நிலைநாட்டுவது, வழக்குகளை எவ்வாறு நீதியாய் விசாரிப்பது என்பது பற்றி சவுல் சிந்தித்துக்கொண்டிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரை அந்நியருடைய கைகளிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது சம்மந்தமாகவும் சவுல் சிந்தித்து திட்டமிடுகிறார்.

கர்த்தர் சவுலுக்கு புதிய இருதயத்தைக் கொடுத்தபோது, அவருடைய மனதிலே இதுபோன்ற புதிய சிந்தனைகள் உருவாயிற்று. பழைய சிந்தனைகளெல்லாம் அவரை விட்டு நீங்கிப்போயிற்று. சவுல் இதுவரையிலும் விவசாய வேலை செய்தவர். அவருடைய இருதயம் ஒரு விவசாயியின் இருதயமாகவே இருந்தது. அவர் இதுவரையிலும் ஒரு விவசாயிக்கு ஏற்ற பிரகாரமாக சிந்தித்துக்கொண்டிருந்தார். எவ்வாறு நிலத்தை உழுவது, எவ்வாறு நிலத்தை பண்படுத்துவது, எவ்வாறு விதை விதைப்பது, எவ்வாறு நீர்ப்பாய்ச்சுவது, எவ்வாறு அறுவடை செய்வது என்பதுபோன்ற சிந்தனைகளே இதுவரையிலும் அவருடைய மனதில் இருந்தது.

இப்போது கர்த்தர் சவுலை தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். அவரை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக உயர்த்தியிருக்கிறார். சவுல் இனிமேல் ஒரு விவசாயியியைப்போல சிந்திக்கக்கூடாது. அவர் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவைப்போல சிந்திக்கவேண்டும். இஸ்ரவேல் தேசத்தின் படைத்தளபதியைப்போல சிந்தித்து செயல்படவேண்டும். கர்த்தர் ஒருவரை தம்முடைய ஊழியத்திற்கு அழைக்கும்போது, அந்த ஊழியத்தை செய்வதற்கு அவரை தகுதிப்படுத்துகிறார்.

சவுலும், அவருடைய வேலைக்காரரும் பெலிஸ்தரின் தாணயம் இருக்கிற தேவனுடைய மலைக்கு வருகிறார்கள். அப்போது, "இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது; அப்பொழுது தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னான்" (1சாமு 10:10).

சவுல் கிபியாவுக்கு அல்லது கேபாவுக்கு போயிருக்கவேண்டும். கேபா என்னும் பெயருக்கு "மலை" என்று பொருள். சாமுவேல் சவுலுக்கு சொன்ன பிரகாரம், அவர் அந்த பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், மேடையிலிருந்து இறங்கி வருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்ப்படுகிறார். அப்போது கர்த்தருடைய ஆவியானவர் சவுலின் மேல் இறங்குகிறார். தேவனுடைய ஆவியானவர் சவுலின்மீது பலமாகவும், திடீரென்றும் இறங்குகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மீது இறங்கி வந்து வாசம்பண்ணவில்லை. ஆவியானவர் சவுலின்மீது திடீரென்று வந்து இறங்குகிறார். ஆவியானவர் சிறிது நேரம் மாத்திரம் சவுலின்மேல் இறங்குகிறார். இதனால் சவுலின்மீது புதிய வல்லமை வந்து இறங்குகிறது. அவருக்கு புதிய அனுபவம் உண்டாயிற்று. தேவனுடைய ஆவியானவர் சவுலின்மேல் இறங்கினபோது, சவுலும் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தோடே சேர்ந்துகொள்கிறார். சவுலும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

சவுல் யாருக்கும் தெரியாமல், இரகசியமாய்த் தீர்க்கதரிசனம் சொல்லவில்லை. அவர் எல்லோருக்கும் தெரியும் வண்ணமாக, எல்லோருடைய காதுகளும் கேட்கும் வண்ணமாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். சவுல் தீர்க்கதரிசனம் சொல்லுகிறதை எல்லோரும் பார்க்கிறார்கள்.

அதற்குமுன்னே சவுலை அறிந்தவர்கள் எல்லாரும் சவுல் தீர்க்கதரிசிகளோடிருந்து, தீர்க்கதரிசனம் சொல்லுகிறதைக் கண்டபோது: "கீசின் குமாரனுக்கு வந்தது என்ன? சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ?" என்று அந்த ஜனங்கள் ஒருவரோடொருவர் சொல்லிக் கொள்கிறார்கள் (1சாமு 10:11).

சவுலை அறிந்தவர்கள் அவருடைய உற்றார் உறவினராகவோ அல்லது அவருடைய ஊராராகவோ இருப்பதற்கு வாய்ப்புள்ளது. தீர்க்கதரிசிகளின் புத்திரரோடு சவுலை பார்ப்பதும், சவுல் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லுவதை கேட்பதும் அவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஜனங்கள் சவுலை ராஜாவாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களை ஆயத்தம்பண்ணுகிறார்.

அவர்கள் சவுலைப் பார்த்து, "கீசின் குமாரனுக்கு வந்தது என்ன" என்று கேட்கிறார்கள். தீர்க்கதரிசிகளின் புத்திரர் சவுலின் ஊருக்கு அருகாமையிலேயே இருக்கிறார்கள். இங்கே சவுலின் தகப்பனாகிய கீசின் வீடு இருக்கிறது. ஆனாலும் சவுல் இதுவரையிலும் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தோடு சேர்ந்திருந்ததில்லை. சவுல் இதற்கு முன் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னதுமில்லை.

தேவனுடைய ஆவியானவர் சவுலின்மீது இறங்கினதால், சவுலும் தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். இதைப் பார்த்தபோது சவுலை இதற்கு முன்னே அறிந்தவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே பவுல் என்ற சவுல் விசுவாசிகளைத் துன்பப்படுத்தினார். கர்த்தர் சவுலை சந்தித்தார். அவரை இரட்சித்தார். அவருடைய பெயரை பவுல் என்று மாற்றினார். பவுல் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார். ஒரு காலத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நின்றவர், இப்போது கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதைப் பார்த்து, ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா என்றான்" (அப் 9:21).

கர்த்தர் ஒருவருக்கு வேறே இருதயத்தைக் கொடுக்கும்போது, அவருடைய சுபாவத்தில் மாற்றமுண்டாகும். கர்த்தர் கொடுக்கும் வேறே இருதயம், அந்த நபருடைய சுபாவங்களில் வெளிப்படும். கர்த்தர் கொடுக்கும் வேறே இருதயத்தை, வெளிப்படுத்தாமல் மறைவாக வைத்திருக்க முடியாது.

சவுலை அறிந்தவர்கள் "கீசின் குமாரனுக்கு வந்தது என்ன? சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ?" என்று பொதுவாக சொல்லிக்கொள்கிறார்கள். அப்போது அவர்களில் அங்கே இருக்கிறவர்களில் ஒருவன், மிகுந்த ஞானத்தோடு, "இவர்களுக்கு தகப்பன் யார்" (1சாமு 10:12) என்று கேட்கிறார்.

"தகப்பன்" என்னும் வார்த்தைக்கு, "போதகர்" அல்லது "ஆசிரியர்" என்று பொருள். தீர்க்கதரிசிகள் எல்லோருக்கும் கர்த்தரே ஆசிரியராகயிருக்கிறார். கர்த்தரே அவர்கள் எல்லோருக்கும் கற்றுக்கொடுக்கிறார். தீர்க்கதரிசிகள் தங்கள் சுயமாய்ப் பேசுவதில்லை. கர்த்தர் கொடுக்கும் வார்த்தைகளைப் பேசுகிறார்கள். தீர்க்கதரிசன வரம் கர்த்தரிடத்திலிருந்தே வந்திருக்கிறது.

கர்த்தருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை. கர்த்தரே தீர்க்கதரிசிகளின் புத்திரரை தீர்க்கதரிசனம் சொல்ல வைக்கிறார். கர்த்தரே அவர்களுக்கு தகப்பனாயிருக்கிறார். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. கர்த்தர் சவுலையும் தீர்க்கதரிசியாக மாற்றியிருக்கிறார். ஆகையினால் சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவராயிருக்கிறார். தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் தீர்க்கதரிசனம் சொல்லுவதுபோல சவுலும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

"இவர்களுக்கு தகப்பன் யார்" என்று அங்கே இருக்கிறவர்களில் ஒருவன் சொல்லும்போது, அவன் சாமுவேலை மனதில் நினைத்தே இந்த வாக்கியத்தை சொல்லியிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் எல்லோருக்கும் சாமுவேலே தகப்பனாயிருக்கிறார். சாமுவேலே அவர்களுடைய போதகராகவும், ஆசிரியராகவும் இருக்கிறார்.

"சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ" என்னும் வாக்கியம் இஸ்ரவேல் தேசத்திலே பழமொழியாயிற்று. ஒரு மோசமான மனுஷன் நன்மையான காரியத்தை செய்யும்போது, இஸ்ரவேல் ஜனத்தார், இந்த வாக்கியத்தை பழமொழியாகச் சொல்லுவது வழக்கம். ஒரு மோசமான மனுஷன் நல்லவர்களுடைய கூட்டத்தில் சேர்ந்திருக்கும்போதும், அவர்கள் இந்த வாக்கியத்தை பழமொழியாக சொல்லுவார்கள்.

சாமுவேல், ஒருவருக்கும் தெரியாமல், தைலக்குப்பியை எடுத்து, சவுலுடைய தலையின்மேல் வார்த்து, அவரை முத்தம் செய்து, சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். இது யாருக்கும் தெரியாமல் மறைவாகவும், இரகசியமாகவும் நடைபெற்ற சம்பவம் (1சாமு 10:1). இப்போதோ சவுல் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குள்ளே, தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். இது ஒருவருக்கும் தெரியாமல் மறைவாக நடைபெறவில்லை. இந்த சம்பவம் பிரத்தியட்சமாக, வெளிப்படையாக எல்லோருக்கும் முன்பாக நடைபெறுகிறது.

சவுல் தீர்க்கதரிசனம் சொல்லி முடிந்த பின்பு மேடையின்மேல் வருகிறார். கர்த்தர் தனக்குக் கொடுத்த கிருபைகளுக்காகவும், இரக்கங்களுக்காகவும், அவருக்கு நன்றிசொல்லுவதற்காக சவுல் மேடையின்மேல் வருகிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தன்னிடத்தில் தொடர்ந்து தங்கியிருக்கவேண்டும் என்று ஜெபம்பண்ணுவதற்காகவும், சவுல் மேடையின்மேல் வருகிறார் (1சாமு 10:13)

அப்பொழுது சவுலுடைய சிறிய தகப்பன்: "நீங்கள் எங்கே போனீர்கள்" என்று சவுலையும், சவுலின் வேலைக்காரனையும் கேட்கிறார். அதற்கு சவுல்: "நாங்கள் கழுதைகளைத் தேடப்போய், அவைகளை எங்குங் காணாதபடியினால், சாமுவேலிடத்துக்குப் போனோம்" (1சாமு 10:14) என்று சொல்லுகிறார்.

சவுல் தன்னுடைய அனுபவங்களெல்லாவற்றையும், தன்னுடைய சிறிய தகப்பனிடத்தில் வெளிப்படுத்தவில்லை. சொல்லவேண்டியதை சொல்லுகிறார். மறைக்க வேண்டியதை மறைக்கிறார். சவுலின் சிறிய தகப்பன், சவுலை மேடையின்மேல் வந்து பார்த்தாரா அல்லது சவுல் மேடையின் மேல் ஜெபம்பண்ணிவிட்டு, கீழே இறங்கி வரும்போது பார்த்தாரா என்று தெரியவில்லை. ஆனாலும் அவர் சவுலைப் பார்த்தவுடன், "நீங்கள் எங்கே போனீர்கள்" என்று விசாரிக்க ஆரம்பித்துவிடுகிறார்.

சவுல் சாமுவேலினிடத்திற்குப்போனது மறைவான இரகசியமல்ல. இந்த சம்பவம் சவுலோடுகூட இருக்கிற வேலைக்காரனுக்கும் தெரியும். ஆகையினால் சவுல் "சாமுவேலிடத்திற்குப்போனோம்" என்று சொல்லுகிறார்.

சவுலின் சிறிய தகப்பனுக்கு சாமுவேலைப்பற்றி தெரிந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. சாமுவேல் சவுலுக்கு என்ன சொல்லியிருப்பார் என்பதை அறிந்துகொள்வதில் அவருடைய சிறிய தகப்பன் ஆவலாயிருக்கிறார். அப்பொழுது சவுலின் சிறியதகப்பன்: "சாமுவேல் உங்களுக்குச் சொன்னது என்ன? அதைச் சொல்" (1சாமு 10:15) என்று கேட்கிறார்.

சவுலும் தன்னுடைய சிறிய தகப்பனுக்கு பதில் சொல்லுகிறார். கழுதைகளைப்பற்றிய விவரத்தை மாத்திரம் சொல்லுகிறார். ராஜ்யபாரத்தைப்பற்றி சவுல் ஒன்றும் சொல்லவில்லை.

சவுல் தன் சிறிய தகப்பனைப் பார்த்து: "கழுதைகள் அகப்பட்டது என்று எங்களுக்குத் தீர்மானமாய்ச் சொன்னார்" (1சாமு 10:16) என்று சொல்லுகிறார்; ஆனாலும் ராஜ்யபாரத்தைப்பற்றிச் சாமுவேல் சொன்னதை சவுல் தன் சிறிய தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.

சவுல் ராஜ்யபாரத்தைப்பற்றி அறிவிக்காமலிருப்பது, சவுலின் மனத்தாழ்மைக்கும், அவருடைய புத்திக்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது. ஒரு வேளை சவுல் ராஜ்யபாரத்தைப்பற்றி சொல்லியிருந்தால், அவருடைய சிறிய தகப்பன் சவுலின்மீது பொறாமைப்பட்டிருப்பார். சவுலின் சிறிய தகப்பன், சவுலுக்கு பொறாமையினால் என்னென்ன தீங்குகளெல்லாம் செய்வார் என்பது சவுலுக்குத் தெரியாது. தேவையில்லாத பிரச்சனைகளை வரவழைத்துக் கொள்ளக்கூடாது என்று தீர்மானித்து, சவுல் தன்னுடைய சிறிய தகப்பனுக்கு, சாமுவேல் ராஜ்யபாரத்தைப்பற்றி சொன்னது ஒன்றையும் அறிவிக்கவில்லை.

ராஜா வாழ்க
1சாமு 10:17-27

1சாமு 10:17. சாமுவேல் ஜனங்களை மிஸ்பாவிலே கர்த்தரிடத்தில் வரவழைத்து,

1சாமு 10:18. இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்களை எகிப்தியர் கைக்கும், உங்களை இறுகப்பிடித்த எல்லா ராஜ்யத்தாரின் கைக்கும் நீங்கலாக்கிவிட்டேன்.

1சாமு 10:19. நீங்களோ உங்களுடைய எல்லாத் தீங்குகளுக்கும் நெருக்கங்களுக்கும் உங்களை நீங்கலாக்கி ரட்சித்த உங்கள் தேவனை இந்நாளிலே புறக்கணித்து, ஒரு ராஜாவை எங்கள்மேல் ஏற்படுத்தும் என்று அவரிடத்தில் கேட்டுக்கொண்டீர்கள்; இப்பொழுது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் வம்சங்களின்படியேயும், ஆயிரங்களான உங்கள் சேர்வைகளின்படியேயும், வந்து நில்லுங்கள் என்றான்.

1சாமு 10:20. சாமுவேல் இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சேரப்பண்ணினபின்பு பென்யமீன் கோத்திரத்தின்மேல் சீட்டு விழுந்தது.

1சாமு 10:21. அவன் பென்யமீன் கோத்திரத்தை அதினுடைய குடும்பங்களின் படியே சேரப் பண்ணினபின்பு, மாத்திரி குடும்பத்தின்மேலும், அதிலே கீசின் குமாரனாகிய சவுலின்மேலும், சீட்டு விழுந்தது; அவனைத் தேடினபோது, அவன் அகப்படவில்லை.

1சாமு 10:22. அவன் இனி இங்கே வருவானோ என்று அவர்கள் திரும்பக் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது: இதோ, அவன் தளவாடங்களிருக்கிற இடத்திலே ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்று கர்த்தர் சொன்னார்.

1சாமு 10:23. அப்பொழுது அவர்கள் ஓடி, அங்கேயிருந்து அவனை அழைத்துக்கொண்டுவந்தார்கள்; அவன் ஜனங்கள் நடுவே வந்து நின்றபோது, எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான்.

1சாமு 10:24. அப்பொழுது சாமுவேல் எல்லா ஜனங்களையும் நோக்கி: கர்த்தர் தெரிந்து கொண்டவனைப் பாருங்கள், சமஸ்தஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமானமானவன் இல்லையே என்றான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து: ராஜா வாழ்க என்றார்கள்.

1சாமு 10:25. சாமுவேல் ராஜாங்கத்தின் முறைமையை ஜனங்களுக்குத் தெரிவித்து, அதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, கர்த்தருடைய சந்நிதியில் வைத்து, ஜனங்களையெல்லாம் அவரவர் வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

1சாமு 10:26. சவுலும் கிபியாவிலிருக்கிற தன் வீட்டுக்குப் போனான்; இராணுவத்தில் தேவன் எவர்கள் மனதை ஏவினாரோ, அவர்களும் அவனோடேகூடப் போனார்கள்.

1சாமு 10:27. ஆனாலும் பேலியாளின் மக்கள்: இவனா நம்மை ரட்சிக்கப்போகிறவன் என்று சொல்லி, அவனுக்குக் காணிக்கை கொண்டுவராமல் அவனை அசட்டைபண்ணினார்கள். அவனோ காதுகேளாதவன்போல இருந்தான்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களை மிஸ்பாவிலே கூட்டிச் சேர்க்கிறார். அவர்களை கர்த்தருடைய சமுகத்திலே வரவழைக்கிறார். கர்த்தர் சவுலை தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். தங்களை நியாயம் விசாரிப்பதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலிடம் கேட்டார்கள். சாமுவேல் இதுபற்றி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். கர்த்தர் சவுலை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகக் கொடுத்திருக்கிறார்.

சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக சிங்காசனத்தில் அமரச்செய்யவேண்டும். இதை ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய்ச் செய்யமுடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் வரவழைத்து, அவர்களுக்கு முன்பாக சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ண வேண்டும். இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும், இஸ்ரவேலிலே மூப்பரானவர்களும் மிஸ்பாவுக்கு வரவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, மிஸ்பாவிலே கர்த்தருடைய சமுகத்தில் கூடிவருகிறார்கள். அவர்கள் மத்தியில் கர்த்தருடைய விசேஷித்த பிரசன்னமும் இருக்கிறது. சாமுவேல் ஜனங்களை மிஸ்பாவிலே "கர்த்தரிடத்தில்" வரவழைத்தார் சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் கிரியை செய்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் நியாயாதிபதியின் ஆளுகையையும், தீர்க்கதரிசியின் ஆளுகையையும் தள்ளிவிட்டார்கள். தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டார்கள். இதன் நிமித்தமாக சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களைக் கடிந்துகொள்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய தெய்வீக ஆளுகையில் சந்தோஷமாயிருந்தார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். கர்த்தர் அவர்களை எகிப்தியர் கைக்கும், அவர்களை இறுகப்பிடித்த எல்லா ராஜ்யத்தாரின் கைக்கும் நீங்கலாக்கிவிட்டார் (1சாமு 10:18).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்தபோது, அவர்களை அந்நிய ஜாதியாரால் ஒடுக்க முடியவில்லை. அவர்களை இறுகப்பிடித்த எல்லா கைகளுக்கும், கர்த்தர் தம்முடைய ஜனத்தை நீங்கலாக்கி விடுவித்தார். இதற்குமேல் அவர்களுக்கு வேறு ஒன்றும் தேவையில்லை. ஆனால் கர்த்தருடைய ஜனங்களோ தேவனுடைய தெய்வீக ஆளுகையிலே திருப்தியாயில்லை.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரின் மதியீனத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். "நீங்களோ உங்களுடைய எல்லாத் தீங்குகளுக்கும் நெருக்கங்களுக்கும் உங்களை நீங்கலாக்கி ரட்சித்த உங்கள் தேவனை இந்நாளிலே புறக்கணித்து, ஒரு ராஜாவை எங்கள்மேல் ஏற்படுத்தும் என்று அவரிடத்தில் கேட்டுக்கொண்டீர்கள்" (1சாமு 10:19) என்று சாமுவேல் மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிற இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலை புறக்கணிக்கவில்லை. அவர்கள் தேவனையே புறக்கணித்திருக்கிறார்கள். தம்மைப் புறக்கணிக்கிறவர்களை கர்த்தரும் புறக்கணித்துவிடுவார். தம்மை கனம்பண்ணுகிறவர்களை கர்த்தர் கனம்பண்ணுவார். தம்மை அசட்டைபண்ணுகிறவர்களை கர்த்தர் கனஈனம்பண்ணுவார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரும் தம்முடைய நீதியினால் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் "ஒரு ராஜாவை எங்கள்மேல் ஏற்படுத்தும்" என்று கர்த்தரிடத்தில் கேட்டார்கள். கர்த்தரும் அவர்களுடைய இருதய கடினத்தினிமித்தம், அவர்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த சித்தமாயிருக்கிறார். இஸ்ரவேலின் ராஜாவை சீட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சாமுவேல் சொல்லுகிறார். இது கர்த்தருடைய தீர்மானம்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களிடம், "இப்பொழுது கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் வம்சங்களின்படியேயும், ஆயிரங்களான உங்கள் சேர்வைகளின்படியேயும், வந்து நில்லுங்கள்" (1சாமு 10:19) என்று சொல்லுகிறார். அதன்பின்பு சாமுவேல் இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சேரப்பண்ணுகிறார். அவர்கள் பேரில் சீட்டுப்போடுகிறார்.

அப்பொழுது பென்யமீன் கோத்திரத்தின்மேல் சீட்டு விழுகிறது. சாமுவேல் பென்யமீன் கோத்திரத்தை அதினுடைய குடும்பங்களின்படியே சேரப் பண்ணினபின்பு, மாத்திரி குடும்பத்தின்மேலும், அதிலே கீசின் குமாரனாகிய சவுலின்மேலும், சீட்டு விழுகிறது (1சாமு 10:21).

இவ்வாறு சீட்டுப்போட்டு தேர்ந்தெடுப்பது கர்த்தருக்கு பிரியமானது என்றும், இதுவே கர்த்தருடைய சித்தம் என்றும் இஸ்ரவேல் ஜனங்கள் ஏற்கெனவே அறிந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சவுலே ராஜாவாயிருப்பார் என்பதை கர்த்தர் சாமுவேலுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். அதை இஸ்ரவேல் ஜனங்களுக்கு தெரியப்படுத்தும் வண்ணமாக, சாமுவேல் சீட்டுப்போடுகிறார். சீட்டு கீசின் குமாரனாகிய சவுலின்மேல் விழுகிறது. தங்கள்மீது சவுல் ராஜாவாயிருக்கவேண்டும் என்பதை இஸ்ரவேல் ஜனத்தாரும் அங்கீகரிக்கிறார்கள்.

கர்த்தருடைய சித்தத்திற்கு ஒருவரும் எதிர்த்து நிற்கவில்லை. சவுலுக்கு விரோதமாக ஒருவரும் பேசவில்லை. சவுலின் பேரில் சீட்டு விழுந்தவுடன், சவுல் அந்த இடத்திலே வந்து நிற்பார் என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சவுலோ அங்கே வரவில்லை. ஜனங்கள் சவுலைத் தேடுகிறார்கள். ஆனால் சவுலோ அகப்படவில்லை.

சவுல் இங்கே வருவாரா அல்லது வரமாட்டாரா என்பதையும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு, "இதோ அவன் தளவாடங்கள் இருக்கிற இடத்திலே ஒளித்துக்கொண்டிருக்கிறான்" (1சாமு 10:22) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களுடைய கைகளில் அகப்படாமல், தன்னை ஒளித்துக்கொண்டால், அவர்களால் தன்னைக் கண்டுபிடிக்க முடியாது என்றும், அப்போது அவர்கள் தன்னை ராஜாவாக்கமாட்டார்கள் என்றும் அவர்கள் மேலும் ஒரு சீட்டைப்போட்டு, தனக்குப் பதிலாக வேறு யாராவது ஒருவரை ராஜாவாகத் தெரிந்தெடுப்பார்கள் என்றும் சவுல் எதிர்பார்க்கிறார். சவுலுக்கு ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லை. அவருக்கு இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்க விருப்பமில்லை.

சவுல் தன்னுடைய பலவீனத்தையே நினைத்துக்கொண்டிருக்கிறார். தான் சாதாரணமானவர் என்றும், இஸ்ரவேலின் ராஜாவாயிருப்பதற்கு தனக்கு தகுதியில்லை என்றும் சவுல் நினைக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிப்பதும், அவர்களை ஆளுகை செய்வதும் மிகப்பெரிய பொறுப்பு என்றும், அந்தப் பொறுப்பை நேர்த்தியாய் நிறைவேற்றுவதற்கு தான் எவ்வளவேனும் பாத்திரவானல்ல என்றும் சவுல் தன்னைப்பற்றி மிகவும் தாழ்மையாய் நினைக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு தான் ராஜாவானால், தன்னுடைய உற்றார் உறவினர் எல்லோரும், தன்மீது பொறாமைப்படுவார்கள் என்று சவுல் யோசிக்கிறார். தேவையில்லாத போட்டிகளையும், பொறாமைகளையும் தவிர்த்து விடுவது நல்லது என்று சவுல் விரும்புகிறார்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் மிஸ்பாவிலே கர்த்தரிடத்தில் வரவழைத்து, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று கேட்டதற்காக, சாமுவேல் அவர்களை கடிந்துகொள்கிறார். அவர்கள் தங்கள் தேவனைப் புறக்கணித்துவிட்டு, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள் என்பதை, சவுல் இப்போது சாமுவேல் மூலமாய் அறிந்துகொள்கிறார். ஜனங்கள் பாவம் செய்திருக்கிறார்கள். தான் ராஜாவாகயிருப்பதற்கு சம்மதித்தால், ஜனங்களுடைய பாவங்களில் தனக்கும் பங்கு வரும் என்று சவுல் பயப்படுகிறார்.

இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் தாழ்ந்த நிலமையிலிருக்கிறார்கள். பெலிஸ்தியரும், அம்மோனியரும் இஸ்ரவேலரை ஒடுக்குகிறார்கள். இந்த சூழ்நிலையில் சவுல் இஸ்ரவேலுக்கு ராஜாவானால், அவர் யுத்தங்களை முன்னின்று நடத்த வேண்டியது வரும். பல சோதனைகளை சந்திக்க வேண்டியது வரும். சவுலுக்கு கஷ்டங்களும் நஷ்டங்களும் வர வாய்ப்புள்ளது. இவற்றை தைரியமாய்ச் சந்திப்பதற்கு சவுல் ஆயத்தமாயில்லை. ஆகையினால் சவுல் யாருடைய கண்களிலும் படாமல், தளவாடங்கள் இருக்கிற இடத்திலே தன்னை ஒளித்துக்கொள்கிறார்.

கர்த்தர் சர்வஞானமும், சர்வவியாபகமுமுள்ளவர். கர்த்தருக்கு தெரியாத இரகசியம் எதுவுமில்லை. கர்த்தருடைய கண்களுக்கு மறைவாக நம்மால் எங்கும் ஓடி ஒளிந்துகொள்ளமுடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் சவுலைத் தேடி, அவர் அகப்படாமல் போனபோது, ஜனங்கள் கர்த்தரிடத்திலே திரும்பவும் விசாரிக்கிறார்கள். "சவுல் இனி இங்கே வருவாரா" என்று கேட்கிறார்கள். ஜனங்கள் மேலும் மேலும் சீட்டுப்போட்டு, கர்த்தரிடத்தில் விசாரித்துக் கேட்பதற்கு தயங்கவில்லை.

சவுல் எங்கே இருக்கிறார் என்பதை கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார். "இதோ, அவன் தளவாடங்களிருக்கிற இடத்திலே ஒளித்துக் கொண்டிருக்கிறான்" (1சாமு 10:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது ஜனங்கள் தளவாடங்கள் இருக்கிற இடத்திற்கு ஓடுகிறார்கள். அங்கே சவுலைக் கண்டு, அவரை ஜனங்கள் இருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

சவுல் ஜனங்கள் நடுவே வந்து நின்றபோது, எல்லா ஜனங்களும் அவருடைய தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவராயிருக்கிறார் (1சாமு 10:23). சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக சவுலை காண்பிக்கிறார்.

அப்பொழுது சாமுவேல் எல்லா ஜனங்களையும் நோக்கி: "கர்த்தர் தெரிந்து கொண்டவனைப் பாருங்கள், சமஸ்தஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமானமானவன் இல்லையே" (1சாமு 10:24) என்று சொல்லுகிறார்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து: "ராஜா வாழ்க" என்கிறார்கள்.

சவுலை உயரமான இடத்தில் நிறுத்துவதற்கு பெரிய ஆசனமோ, அல்லது பெரிய மேடையோ தேவைப்படவில்லை. சவுல் எல்லோரையும்விட உயரமாயிருக்கிறார். எல்லா ஜனங்களும் சவுலின் தோளுக்கு கீழாயிருக்கிறார்கள். சாமுவேல் சவுலைப்பற்றி உயர்வாகப் பேசுகிறார். சமஸ்த ஜனங்களுக்குள்ளும் சவுலுக்கு சமானமானவர் ஒருவருமில்லை என்று சாமுவேல் தெளிவாக சொல்லுகிறார்.

சவுல் கெம்பீர தோற்றமுள்ளவர். சவுந்தரியமான ரூபமுள்ளவர். ஒரு ராஜாவுக்கு இருக்கவேண்டிய கெம்பீரமான தோற்றமும், உயரமும், அழகும் சவுலிடம் இருக்கிறது. அப்படிப்பட்ட சவுலை கர்த்தர் அவர்களுக்கு ராஜாவாக தெரிந்துகொண்டார். சவுலைப் பார்த்தவுடனேயே, ஜனங்கள் அவரை தங்களுடைய ராஜாவாக அங்கீகரிக்கிறார்கள். சவுலை எல்லோருக்கும் பிடித்திருக்கிறது. அவர்களெல்லோரும் ஆர்ப்பரிக்கிறார்கள். "ராஜா வாழ்க" என்று சொல்லுகிறார்கள்.

சாமுவேல் ராஜாங்கத்தின் முறையை ஜனங்களுக்குத் தெரிவித்து, அதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, கர்த்தருடைய சந்நிதியில் வைத்து, ஜனங்களையெல்லாம் அவரவர் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார் (1சாமு 10:25).

சாமுவேல் ராஜாவின் கடமைகளையும், ஜனங்களுடைய கடமைகளையும் எல்லோருக்கும் விரிவாகச் சொல்லுகிறார். ஒருவருடைய உரிமையில் மற்றவர் தலையிடக்கூடாது. இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்வதற்கு ராஜாங்க பிரமாணம் வேண்டும். சாமுவேல் ராஜாங்கத்தின் முறையை ஜனங்களுக்கு தெரிவிக்கிறார். தங்கள் செவிகளினால் கேட்டதை ஜனங்கள் மறந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது. சாமுவேல் ராஜாங்கத்தின் முறைமைகளையெல்லாம் ஒரு புஸ்தத்தில் எழுதி, அதை கர்த்தருடைய சந்நிதியில் வைக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களுக்குள்ளே ஒருமனமும் ஒற்றுமையும் காணப்படவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தருக்கு பிரியமானவர்கள். புறஜாதி ஜனங்கள் மத்தியிலே, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டும். சாமுவேல் ராஜாங்கத்தின் முறையை ஜனங்களுக்குத் தெரிவித்து, அதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, கர்த்தருடைய சந்நிதியில் வைத்த பின்பு, ஜனங்களையெல்லாம் அவரவர் வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார்.

சவுலும் கிபியாவிலிருக்கிற தன் வீட்டிற்குப்போகிறார். சவுலின் மனதில் ராஜ்யபாரத்தைக் குறித்த பெருமையில்லை. அவருடைய மனதிலே ஆணவமும் இல்லை. சவுல் கிபியாவுக்குப் போகிறார். அங்கே அவருக்கு அரண்மனையோ, சிங்காசனமோ இல்லை. அவருக்கு ராஜசபையும் இல்லை. ஆனாலும் சவுல் கிபியாவிலிருக்கிற தன்னுடைய வீட்டிற்குப்போகிறார்.

சவுலின் தகப்பனாராகிய கீஸ் கிபியா ஊரைச் சேர்ந்தவர். சவுல் ராஜாவாகும்போது, கிபியா பட்டணத்தை ராஜதானி பட்டணமாக உயர்த்தவேண்டும் என்னும் விருப்பம் அவருடைய மனதில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இஸ்ரவேல் தேசத்தில் பல பட்டணங்கள் இருந்தாலும், கிபியாவே சவுலின் சொந்த பட்டணம். சொந்த பட்டணத்திற்கு ஒரு நன்மையும் செய்யாமல், மற்ற பட்டணங்களுக்கு நன்மைகளுக்கு மேல் நன்மை செய்தால், சவுலின் உற்றார் உறவினருக்கு சவுலின்மீது வெறுப்பு வரும். ஆகையினால் ஜனங்களெல்லாம் அவரவர் வீடுகளுக்குப்போகும்போது சவுலும் கிபியாவிலிருக்கிற தன்னுடைய வீட்டிற்குப்போகிறார்.

கர்த்தர் சவுலை இஸ்ரவேலருக்கு ராஜாவாக்கியிருக்கிறார். இஸ்ரவேலரில் அநேகர் சவுலை தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்கிறார்கள். இராணுவத்தில் தேவன் எவர்கள் மனதை ஏவினாரோ, அவர்களும் அவரோடேகூடப் போகிறார்கள் (1சாமு 10:26). இவர்கள் சவுலுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

சவுல் கிபியாவுக்குப் போகும்போது இவர்கள் அவருடைய மெய்க்காப்பாளராக அவரோடு கூடப்போகிறார்கள். சவுல் இஸ்ரவேல் ஜனத்தாரை ராஜ்யபாரம்பண்ணுவதற்கு, கர்த்தர் இவர்களுடைய இருதயங்களைத் தொட்டிருக்கிறார். சவுலுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு உதவியாயிருக்குமாறு, கர்த்தர் இவர்களுடைய மனதை ஏவியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். இவர்கள் எந்த நுகத்தையும் தங்கள்மீது ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லா காலங்களிலும் இவர்களைப்போன்ற பேலியாளின் மக்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பிரபஞ்சத்தில் ஊழியம் செய்தபோது அவருக்கு கீழ்ப்படியாத மனுஷர் சிலர் இருக்கத்தான் செய்தார்கள். பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பரிசுத்தமான சீயோன் மலையிலே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஸ்தாபித்தார். விசுவாசிகள் கர்த்தரை தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள். அவரை விசுவாசியாத பேலியாளின் மக்களோ, அவருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்.

சவுலின் காலத்திலும், பேலியாளின் மக்களாயிருந்தவர்கள், அவருடைய ராஜ்யபாரத்தை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் சவுலுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். "இவனா நம்மை ரட்சிக்கப்போகிறவன்" என்று சொல்லி, அவருக்குக் காணிக்கை கொண்டுவராமல் அவரை அசட்டைபண்ணினார்கள்" (1சாமு 10:27).

பேலியாளின் மக்கள் சவுலுக்கு விரோதமாக ஏளனமாய்ப் பேசினாலும், அவர்களுடைய தூஷணவார்த்தைகள், சவுலின் ராஜாங்கத்தைப் பாதிக்கவில்லை. சவுல் அமைதி காக்கிறார். நீடிய பொறுமையோடிருக்கிறார். அவர்கள் சவுலுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசினாலும், அந்த வார்த்தைகள் சவுலின் மனதைப் பாதிக்கவில்லை. சவுல் அவர்களுடைய வார்த்தைகளுக்கு, காது கேளாதவர்போல் இருந்துவிடுகிறார்.

11 அதிகாரம்

கீலேயாத்திலிருக்கிற யாபேஸ் யோர்தானுக்கு அப்புறத்திலிருக்கிறது. அம்மோனியர் யாபேசை முற்றிக்கைப்போடுகிறார்கள் (1சாமு 11:1-3). யாபேசின் மனுஷரை அம்மோனியருடைய கைகளிலிருந்து விடுவிக்க சவுல் ஆயத்தமாயிருக்கிறார் (1சாமு 11:4-10). இஸ்ரவேல் புத்திரர் அம்மோனியரை முறியடிக்கிறார்கள் (1சாமு 11:11).

சவுல் தன்னை எதிர்த்தவர்களை தண்டிக்காமல் விட்டுவிடுகிறார் (1சாமு 11:12,13). இஸ்ரவேல் ஜனங்கள் கில்காலுக்குப்போய், சவுலை கர்த்தருடைய சந்நிதியில் ராஜாவாக ஏற்படுத்துகிறார்கள் (1சாமு 11:14,15).

நாகாஸ் என்னும் அம்மோனியன் 1சாமு 11:1-4

1சாமு 11:1. அக்காலத்தில் நாகாஸ் என்னும் அம்மோனியன் வந்து, கீலேயாத்திலிருக்கிற யாபேசை முற்றிக்கைபோட்டான்; அப்பொழுது யாபேசின் மனுஷர் எல்லாரும் நாகாசை நோக்கி: எங்களோடே உடன்படிக்கைபண்ணும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.

1சாமு 11:2. அதற்கு அம்மோனியனாகிய நாகாஸ்: நான் உங்கள் ஒவ்வொருவருடைய வலதுகண்ணையும் பிடுங்கி, இதினாலே இஸ்ரவேல் எல்லாவற்றின்மேலும் நிந்தைவரப்பண்ணுவதே நான் உங்களோடே பண்ணும் உடன்படிக்கை என்றான்.

1சாமு 11:3. அதற்கு யாபேசின் மூப்பர்கள்: நாங்கள் இஸ்ரவேல் நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பும்படி, ஏழுநாள் எங்களுக்குத் தவணைகொடும், எங்களை ரட்சிப்பார் இல்லாவிட்டால், அப்பொழுது உம்மிடத்தில் வருவோம் என்றார்கள்.

1சாமு 11:4. அந்த ஸ்தானாபதிகள் சவுலின் ஊராகிய கிபியாவிலே வந்து, ஜனங்களின் காதுகேட்க அந்தச் செய்திகளைச் சொன்னார்கள்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் சத்தமிட்டு அழுதார்கள்.

அம்மோனியர்கள் லோத்தின் வம்சத்தில் வந்தவர்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு அருகாமையில் குடியிருக்கிறார்கள். அம்மோன் புத்திரருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நீண்டகாலமாக சமாதானம் இருக்கிறது.

"கர்த்தர் என்னை நோக்கி: நீ ஆர் பட்டணம் இருக்கிற மோவாபின் எல்லையை இன்றைக்குக் கடந்து, அம்மோன் புத்திரருக்கு எதிராகச் சேரப்போகிறாய்; நீ அவர்களை வருத்தப்படுத்தவும் அவர்களோடே போர்செய்யவும் வேண்டாம்; அம்மோன் புத்திரரின் தேசத்தில் ஒன்றும் உனக்குச் சுதந்தரமாகக் கொடேன்; அதை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்" (உபா 2:17-19).

ஆனால் சவுலின் காலத்தில் அம்மோனியர்கள் இஸ்ரவேல் புத்திரரை நெருக்குகிறார்கள். கீலேயாத்திலிருக்கிற யாபேஸ் யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிறது. நியாயாதிபதிகளின் காலத்தில் கீலேயாத்தின் மனுஷர் இஸ்ரவேல் புத்திரரோடு சேர்ந்து, கிபியாவின் மனுஷருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் அவர்களை தங்கள் பட்டயத்தினால் சங்காரம்பண்ணினார்கள்.

"ஜனங்கள் இலக்கம்பார்க்கப்பட்டபோது, கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவரும் இருந்ததில்லை. உடனே சபையார் பலவான்களில் பன்னீராயிரம்பேரை அங்கே அழைத்து: நீங்கள் போய், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை ஸ்திரீகளோடும் பிள்ளைகளோடும் பட்டயக்கருக்கினால் வெட்டுங்கள். சகல ஆண்பிள்ளைகளையும், புருஷரை அறிந்த சகல பெண்பிள்ளைகளையும் சங்கரிக்கக்கடவீர்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினார்கள்" (நியா 21:9-11).

இஸ்ரவேலரின் பட்டயத்திற்கு தப்பின கீலேயாத்தின் மனுஷர், பிற்காலத்திலே, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு சமாதானமாயிருந்தார்கள். ஆனாலும் சவுலின் காலத்தில், கீலேயாத்திலிருக்கிற யாபேசின் மனுஷருக்கு நாகாஸ் என்னும் அம்மோனியன் மூலமாய் ஆபத்து உண்டாயிற்று. நாகாஸ் யாபேசை முற்றிக்கைப்போடுகிறான்.

"அதன்பின்பு, அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் மரித்து, அவன் குமாரன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" (1நாளா 19:1) என்று நாகாசைப்பற்றி இஸ்ரவேலின் நாளாகம புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இக்காலத்தில் கீலேயாத்திலிருக்கிற யாபேசின் மனுஷர் மிகவும் தாழ்ந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஆள்பலமுமில்லை. ஆயுதபலமுமில்லை. அவர்களால் அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவும் முடியவில்லை. யாபேசின் மனுஷர் கோழைகளாயிருக்கிறார்கள். அவர்கள் அம்மோனியரிடம் சரணடைந்து, அவர்களை சேவிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அப்பொழுது யாபேசின் மனுஷர் எல்லாரும் நாகாசை நோக்கி: "எங்களோடே உடன்படிக்கைபண்ணும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம்" (1சாமு 11:1) என்று சொல்லுகிறார்கள்.

அம்மோனியனாகிய நாகாசோ, யாபேசின் மனுஷர் தங்களிடத்தில் சரணடைவதையோ, தங்களை சேவிப்பதையோ விரும்பவில்லை. அவர்களோடு உடன்படிக்கை பண்ணவும் ஆயத்தமாயில்லை. நாகாஸ் அவர்களுக்கு வேதனைகளை உண்டுபண்ணவேண்டும் என்றும், அவர்களை வதைக்கவேண்டும் என்றும் விரும்புகிறான்.

"உம்மை சேவிப்போம்" என்று சொல்லுகிற யாபேசின் மனுஷரிடத்தில், அம்மோனியனாகிய நாகாஸ், "நான் உங்கள் ஒவ்வொருவருடைய வலதுகண்ணையும் பிடுங்கி, இதினாலே இஸ்ரவேல் எல்லாவற்றின்மேலும் நிந்தைவரப்பண்ணுவதே நான் உங்களோடே பண்ணும் உடன்படிக்கை" (1சாமு 11:2) என்று சொல்லுகிறான்.

நாகாஸ் யாபேசின் மனுஷரைக் கொல்லாமல், அவர்களை தன்னுடைய வேலையாட்களாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் எல்லோருடைய வலதுகண்ணையும் பிடுங்கப்போவதாக சொல்லுகிறான். கீலேயாத்தியர் பலமில்லாதவர்களாகயிருந்தாலும், தங்களுடைய சுதந்தரத்திலே விடுதலையோடு குடியிருக்கிறார்கள். தங்கள் நிலங்களில் விவசாயம் செய்து போஜனம் பண்ணுகிறார்கள். அம்மோனியரோ அவர்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாக ஒடுக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

நாகாஸ் யாபேசின் மனுஷருக்கு தீராத வேதனையையும், சரீர அவயவத்தில் இழப்பையும் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கிறான். இதற்காக யாபேசின் மனுஷர் ஒவ்வொருவருடைய வலது கண்ணையும் பிடுங்கி, அதினால் இஸ்ரவேல் எல்லாவற்றின்மேலும் நிந்தையை வரப்பண்ணவேண்டுமென்று நாகாஸ் விரும்புகிறான்.

ஒருவனுடைய வலது கண் பிடுங்கப்பட்டால் அவனால் யுத்தம்பண்ண முடியாது. அக்காலத்தில் யுத்தம் பண்ணுகிறவர்கள், தங்கள் இடதுகையிலே, கேடகத்தைப் பிடித்துக்கொண்டு, தங்கள் இடது கண்ணை பாதுகாப்பாக மூடிக்கொள்வார்கள். தங்களுடைய வலதுகண்ணால் மாத்திரம் பார்த்து யுத்தம்பண்ணுவார்கள். அவர்களுடைய வலது கண்ணும் பிடுங்கப்பட்டால், அவர்களால் யுத்தம்பண்ண முடியாது. அவர்கள் குருடராகவே இருப்பார்கள்.

அம்மோனியர் யாபேசை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். அவர்களை மிகவும் நெருக்குகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில்தான் யாபேசின் மனுஷருடைய வலதுகண்களை பிடுங்கப்போவதாக நாகாஸ் சொல்லுகிறான். யாபேசின் மூப்பர்களும் நாகாசிடம் தங்களுக்கு ஏழுநாள் தவணை கொடுக்குமாறு கெஞ்சுகிறார்கள்.

அதற்கு யாபேசின் மூப்பர்கள், நாகாசிடம், "நாங்கள் இஸ்ரவேல் நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பும்படி, ஏழுநாள் எங்களுக்குத் தவணைகொடும், எங்களை ரட்சிப்பார் இல்லாவிட்டால், அப்பொழுது உம்மிடத்தில் வருவோம்" (1சாமு 11:3) என்று சொல்லுகிறார்கள்.

ஏழுநாளைக்குள்ளே யாபேசின் மனுஷரால் தனக்கு விரோதமாக இஸ்ரவேல் ஜனங்களை பெரிய சேனையாய்த் திரட்ட முடியாது என்று நாகாஸ் நினைக்கிறான். நாகாஸ் தன் படைபலத்தை நம்புகிறான். இஸ்ரவேலர் எல்லோருமே கோழைகள் என்றும், அவர்கள் தனக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரமாட்டார்கள் என்றும் இறுமாப்பாய் நினைக்கிறான். ஏழுநாளைக்குள்ளே யாபேசின் மனுஷருக்கு ஒரு அனுகூலமும் உண்டாகாது என்று நினைத்து, அவர்கள் கேட்ட பிரகாரம், அவர்களுக்கு ஏழுநாள் தவணை கொடுக்கிறான்.

இஸ்ரவேல் எல்லாவற்றின் மேலும் நிந்தை வரப்பண்ணுவதே நாகாசின் விருப்பம். இந்த ஏழுநாட்களுக்குள் இஸ்ரவேல் ஜனங்கள் யாபேசின் மனுஷரை இரட்சிக்கவில்லையென்றால், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்குமே மிகப்பெரிய நிந்தை உண்டாகும். நாகாசின் வெற்றி மகாபிரதானமான வெற்றியாயிருக்கும்.

நாகாஸ் தன்னுடைய ஆணவத்தினாலும், அகம்பாவத்தினாலும், இஸ்ரவேலர் எல்லோருக்கும் நிந்தை உண்டுபண்ணவேண்டும் என்னும் பேராசையினாலும், யாபேசின் மனுஷருக்கு ஏழுநாள் தவணை கொடுக்கிறான். யாபேசின் மனுஷர் இஸ்ரவேலின் ஒவ்வொரு ஊருக்கும் போய்விட்டு வந்தால், தங்களுக்கு காலஅவகாசம் கிடைக்கும் என்றும், அக்காலத்தில் தங்களுடைய படைப்பலத்தை ஸ்திரப்படுத்தி, யாபேசின் மனுஷரையும், அவர்களுக்கு உதவியாக வரும் இஸ்ரவேல் ஜனத்தாரையும் சங்காரம்பண்ணலாம் என்றும் நாகாஸ் திட்டமிடுகிறான்.

யாபேசின் மனுஷர் இஸ்ரவேல் நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்புகிறார்கள். நாகாஸ் என்னும் அம்மோனியன் மூலமாய் தங்களுக்கு வந்திருக்கும் மிகப்பெரிய ஆபத்தைப்பற்றி யாபேசின் ஸ்தானாபதிகள், இஸ்ரவேலிலுள்ள எல்லா ஊர்களுக்கும் போய் சொல்ல வேண்டும் என்பது யாபேசின் மூப்பர்களுடைய திட்டம். ஆனால் அவர்களோ சவுலின் ஊராகிய கிபியாவுக்கு நேரடியாக வருகிறார்கள்.

யாபேசின் அந்த ஸ்தானாபதிகள் சவுலின் ஊராகிய கிபியாவிலே வந்து, ஜனங்களின் காதுகேட்க அந்தச் செய்திகளைச் சொல்லுகிறார்கள்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் சத்தமிட்டு அழுகிறார்கள் (1சாமு 11:4).

யாபேசின் ஸ்தானாபதிகள் சவுலின் ஊராகிய கிபியாவுக்கு வந்தபோது, கிபியாவிலே சவுல் இல்லை. அவர்களோ தாங்கள் சொல்ல வந்த செய்தியை கிபியா ஊர் மனுஷருக்கு சொல்லுகிறார்கள். இந்தச் செய்தியைக் கேட்டு கிபியாவின் ஜனங்கள் எல்லோரும் சத்தமிட்டு அழுகிறார்கள்.

சவுல்
1சாமு 11:5-11

1சாமு 11:5. இதோ, சவுல் மாடுகளின் பின்னாலே வயலிலிருந்து வந்து, ஜனங்கள் அழுகிற முகாந்தரம் என்ன என்று கேட்டான்; யாபேசின் மனுஷர் சொல்லிய செய்திகளை அவனுக்குத் தெரிவித்தார்கள்.

1சாமு 11:6. சவுல் இந்தச் செய்திகளைக் கேட்டவுடனே, தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால் அவன் மிகவும் கோபம் மூண்டவனாகி,

1சாமு 11:7. ஓரிணைமாட்டைப் பிடித்து, துண்டித்து, அந்த ஸ்தானாபதிகள் கையிலே கொடுத்து, இஸ்ரவேலின் நாடுகளுக்கெல்லாம் அனுப்பி: சவுலின் பின்னாலேயும், சாமுவேலின் பின்னாலேயும் புறப்படாதவன் எவனோ, அவனுடைய மாடுகளுக்கு இப்படிச் செய்யப்படும் என்று சொல்லியனுப்பினான்; அப்பொழுது கர்த்தரால் உண்டான பயங்கரம் ஜனத்தின்மேல் வந்ததினால், ஒருமனப்பட்டுப் புறப்பட்டு வந்தார்கள்.

1சாமு 11:8. அவர்களைப் பேசேக்கிலே இலக்கம் பார்த்தான்; இஸ்ரவேல் புத்திரரில் மூன்றுலட்சம்பேரும், யூதா மனுஷரில் முப்பதினாயிரம்பேரும் இருந்தார்கள்.

1சாமு 11:9. வந்த ஸ்தானாபதிகளை அவர்கள் நோக்கி: நாளைக்கு வெயில் ஏறுகிறதற்கு முன்னே உங்களுக்கு ரட்சிப்புக் கிடைக்கும் என்று கீலேயாத்திலிருக்கிற யாபேசின் மனுஷருக்குச் சொல்லுங்கள் என்றார்கள்; ஸ்தானாபதிகள் வந்து யாபேசின் மனுஷரிடத்தில் அதை அறிவித்தார்கள்; அதற்கு அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

1சாமு 11:10. பின்பு யாபேசின் மனுஷர்: நாளைக்கு உங்களிடத்தில் வருவோம், அப்பொழுது உங்கள் இஷ்டப்படியெல்லாம் எங்களுக்குச் செய்யுங்கள் என்றார்கள்.

1சாமு 11:11. மறுநாளிலே சவுல் ஜனங்களை மூன்று படையாக வகுத்து, கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் பாளயத்திற்குள் வந்து வெயில் ஏறும்வரைக்கும் அம்மோனியரை முறிய அடித்தான்; தப்பினவர்களில் இரண்டுபேராகிலும் சேர்ந்து ஓடிப்போகாதபடி எல்லாரும் சிதறிப்போனார்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மேல் இறங்கியிருக்கிறார். அவர் இப்போது வேறு மனுஷனாயிருக்கிறார். சவுலின் இருதயத்தில் மனத்தாழ்மையிருக்கிறது. அவர் இஸ்ரவேல் ஜனத்தாரின் நன்மைக்காகவும், பாதுகாப்புக்காகவும் வைராக்கியமாயிருக்கிறார். அவர் தன்னுடைய உற்றார் உறவினர்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறார். தன்னுடைய அதிகாரத்தையும் வல்லமையையும் தேவைப்படும்போது பயன்படுத்துவதற்கு சவுல் இப்போது ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மீது வந்து இறங்கியிருப்பதினால், சவுலின் குணாதிசயங்கள் மாறியிருக்கிறது. அவர் இப்போது ஒவ்வொரு காரியத்தையும் மிகுந்த ஞானத்தோடும் புத்தியோடும் செய்கிறார். தன்னுடைய வல்லமையிலும், தன்னுடைய தீர்மானத்திலும் சவுல் நம்பிக்கையோடும் உறுதியோடும் இருக்கிறார். எந்தக் காரியத்தை செய்யவேண்டும் என்று ஆரம்பிக்கிறாரோ, அந்தக் காரியத்தை முன்னின்று செய்கிறார். விடாமுயற்சியோடு செய்கிறார். ஒவ்வொரு காரியத்திலும் சவுல் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்கிறார்.

சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். ஜனங்களும் சவுலை தங்களுடைய ராஜாவாக அங்கீரித்திருக்கிறார்கள். ஆனாலும் தன்னுடைய குடும்ப வேலைகளைப் பார்ப்பதையோ, வயல் வெளியில் வேலை செய்வதையோ, தன்னுடைய மாடுகளின் பின்னால் போவதையோ சவுல் இழிவாக நினைக்கவில்லை. இஸ்ரவேல் தேசத்திற்கு தான் ராஜாவாகயிருப்பதினால், இப்படிப்பட்ட சாதாரண வேலைகளைச் செய்வது தன்னுடைய அந்தஸ்துக்கு தகுதியானதல்ல என்று சவுல் நினைக்கவில்லை.

சவுல் ராஜாவாய் அபிஷேகம்பண்ணப்படுவதற்கு முன்பாக என்ன வேலைகளை செய்தாரோ, அந்த வேலைகளை இப்போது தொடர்ந்து செய்கிறார். காலைவேளையில் வயல்வெளியிலே மாடுகளுக்குப் பின்னாலே போகிறார். சவுல் பகல் முழுவதும் தன்னுடைய வயலில் வேலை செய்கிறார். மாலை வேளையிலே தன்னுடைய வேலையாட்களோடு மாடுகளின் பின்னாலே வயலிலிருந்து வருகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், அப்போஸ்தலர் பவுல், ஒருவருக்கும் பாரமாயிராமல், தன்னுடைய கைகளினால் கூடாரம் பின்னுகிற வேலைகளை செய்து, கர்த்தருடைய ஊழியத்தை செய்தார். பவுலைப்போலவே, பழைய ஏற்பாட்டுக்காலத்து சவுலும், தன்னுடைய நிலத்திலே வேலை செய்து போஜனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாயிருக்கிறார்.

சவுல் ராஜாவாயிருந்தாலும், தன்னுடைய குடும்பத்தின் காரியங்களை பொறுப்போடு கவனிக்கவேண்டும் என்று வேலை செய்கிறார். வேலை செய்யாமல், சவுலால் தன்னையும் தன் குடும்பத்தையும் பராமரிக்கமுடியாது. சவுலால் தன் வீட்டாரைப் போஷிக்க முடியாது.

சவுல் தன் உற்றார் உறவினர்மீது மிகவும் அன்பாயும் கரிசனையாயும் இருக்கிறார். சாயங்கால வேளையிலே சவுல் வயல்வெளியிலிருந்து தன் வீட்டிற்கு திரும்பி வரும்போது, கிபியாவிலிருக்கிற தன்னுடைய ஊரார் சத்தமிட்டு அழுகிறார்கள். அவர்களுடைய அழுகையின் சத்தத்தை சவுல் கேட்கிறார். சவுல் அவர்களிடம், "ஜனங்கள் அழுகிற முகாந்தரம் என்ன" என்று கேட்கிறார் (1சாமு 11:5). யாபேசின் மனுஷர் தங்களுக்கு சொன்ன செய்தியை, கிபியாவின் மனுஷர் சவுலுக்கு தெரிவிக்கிறார்கள்.

சவுலின் இருதயத்தில் தன்னுடைய ஊரார்மீது மிகுந்த கரிசனை இருக்கிறது. அவர்கள் அழுவதைப் பார்த்து சவுலும் மனவேதனைப்படுகிறார். அவர்களுடைய துக்கத்தையும், வேதனையையும், அழுகையையும் தன்னால் நிறுத்த முடியுமென்றால், சவுல் அவர்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார். தன்னால் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடைய அழுகையை நிறுத்த முடியவில்லையென்றால், சவுல் அவர்களோடு கூட சேர்ந்து அழுவதற்கும் ஆயத்தமாயிருக்கிறார். சவுலின் இருதயத்தில் ஒரு நல்ல தலைவருக்குரிய சுபாவம் காணப்படுகிறது.

சவுல் இஸ்ரவேலுக்கு ராஜாவாய் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார். இஸ்ரவேலின் பாதுகாப்பையும், மேன்மையையும் குறித்து அவரிடத்தில் வைராக்கியம் இருக்கிறது. அம்மோனியர் கீலேயாத்திலுள்ள யாபேசின் மனுஷருக்கு தீங்கு செய்கிறார்கள். சவுல் இந்தச் செய்திகளைக் கேட்டவுடனே, தேவனுடைய ஆவியானவர் அவர்மேல் இறங்குகிறார். ஆகையினால் சவுல் மிகவும் கோபமூண்டவராகிறார்.

சவுலுக்கு அம்மோனியர்மீது கோபமுண்டாயிற்று. அவர்கள் கீலேயாத்திலிருக்கிற யாபேசை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் எல்லாவற்றின்மேலும் நிந்தையை வரப்பண்ணவேண்டுமென்று நாகாஸ் என்னும் அம்மோனியன் தீர்மானமாயிருக்கிறான். இதனால் அம்மோனியர்மீது சவுல் கோபமூண்டவராயிருக்கிறார்.

சவுலுக்கு கீலேயாத்திலிருக்கிற யாபேசின் மனுஷர்மீதும் கோபமுண்டாயிற்று. அவர்கள் அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாத கோழைகளாயிருக்கிறார்கள். யாபேசின் மூப்பர்கள் அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணாமல் அவர்களிடத்தில் ஏழுநாள் தவணை கேட்டிருக்கிறார்கள். யாபேசின் மனுஷர் பெலமில்லாதவர்களாயும், தைரியமில்லாதவர்களாயும், கோழைகளாயும் இருக்கிறார்கள். இதனால் சவுலுக்கு யாபேசின் மனுஷர்மேலும் கோபமுண்டாயிற்று.

சவுல் இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜாவாய் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யும் அதிகாரமும் வல்லமையும் சவுலுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சவுல் இஸ்ரவேல் ஜனங்கள்மீது கரிசனையோடிருக்கிறார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு சவுலின் பலமும் பராமக்கிரமமும் தெரியவேண்டும்.

சவுலுக்கு வயல் வெளியிலே மாடுகளை ஓட்டவும் தெரியும். வயல் நிலத்திலே வேலை செய்கிறவர்களை நிர்வாகம்பண்ணவும் தெரியும். ஜனங்களை ஒன்று சேர்த்து, அந்நிய தேசத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவும் தெரியும். சவுல் அம்மோனியரைப்பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அவர்கள்மீது மிகவும் கோபப்படுகிறார்.

சவுல் ஓரிணைமாட்டைப் பிடித்து, துண்டித்து, அந்த ஸ்தானாபதிகள் கையிலே கொடுத்து, இஸ்ரவேலின் நாடுகளுக்கெல்லாம் அனுப்பி: "சவுலின் பின்னாலேயும், சாமுவேலின் பின்னாலேயும் புறப்படாதவன் எவனோ, அவனுடைய மாடுகளுக்கு இப்படிச் செய்யப்படும்" (1சாமு 11:7) என்று சொல்லியனுப்புகிறார்.

சவுல் சொன்ன செய்தி இஸ்ரவேலின் நாடுகளுக்கெல்லாம் அனுப்பப்படுகிறது. அப்பொழுது கர்த்தரால் உண்டான பயங்கரம் ஜனத்தின்மேல் வந்ததினால், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லாரும் ஒருமனப்பட்டுப் புறப்பட்டு வருகிறார்கள்.

சவுல் அவர்களைப் பேசேக்கிலே இலக்கம் பார்க்கிறார்; இஸ்ரவேல் புத்திரரில் மூன்றுலட்சம்பேரும், யூதா மனுஷரில் முப்பதினாயிரம்பேரும் இருக்கிறார்கள் (1சாமு 11:8).

சவுல் இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தாலும், இஸ்ரவேலில் தீர்க்கதரிசியாயிருக்கிற சாமுவேலுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுக்கிறார். சவுல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு செய்தி சொல்லி அனுப்பும்போது, "சவுலின் பின்னாலேயும், சாமுவேலின் பின்னாலேயும் ஜனங்கள் புறப்பட்டு வரவேண்டும்" என்று கட்டளை கொடுக்கிறார். ராஜாவாகிய சவுல், தீர்க்கதரிசியாகிய சாமுவேலுக்கு உரிய முக்கியத்துவத்தையும், உரிய மரியாதையையும் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வரவேண்டும். அவர்கள் விரும்பினால் வரலாம், விரும்பாவிட்டால் வரவேண்டியதில்லை என்று சவுல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லவில்லை. தன்னுடைய கட்டளைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும் என்று சவுல் எதிர்பார்க்கிறார்.

தன்னுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாத ஜனங்களுக்கு தண்டனை கொடுக்கப்போவதாகவும் சவுல் எச்சரிக்கிறார். சவுல் ஒரு இணை மாட்டைப்பிடித்து, அதை துண்டிக்கிறார். தனக்கும், சாமுவேலுக்கும் பின்னாலே புறப்படாதவன் எவனோ, அவனுடைய மாடுகளுக்கு இப்படி செய்யப்படும் என்று சவுல் சொல்லியனுப்புகிறார்.

சவுல் தண்டனை கொடுத்தாலும், அதிலும் அவர் மனுஷநேயத்தோடு நடந்துகொள்கிறார். "தங்களுக்குப் பின்னாலே புறப்பட்டாதவன் எவனோ அவனுக்கு இப்படிச் செய்யப்படும்" என்று சொல்லாமல் "அவனுடைய மாடுகளுக்கு இப்படிச் செய்யப்படும்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே ஆயுதம் ஏந்தக்கூடிய யுத்தவீரர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் யுத்தம்பண்ணுவதற்கு பயிற்சி பெற்றவர்கள். ஆனால் அவர்கள் இப்போது இஸ்ரவேல் தேசம் எங்கும் சிதறிப்போயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்றாய்க்கூட்டி, அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும்.

இதுவே சவுலின் திட்டம். ஜனங்களும் சவுலின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். மேலும் கர்த்தரால் உண்டான பயங்கரம் ஜனத்தின் மேல் வருகிறது. ஆகையினால் அவர்கள் ஒருமனப்பட்டு சவுலின் பின்னால் வருகிறார்கள்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள், தங்கள் ஊழியத்தை உண்மையாய்ச் செய்வார்கள். தங்களுடைய கடமைகளை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும் என்னும் சுத்தமனச்சாட்சியோடிருப்பார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனுஷருக்குப் பயப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் மனுஷர்மீது அன்பாயிருப்பார்கள். அவர்கள் தங்களை நேசிப்பதுபோல பிறரையும் நேசிப்பார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் ராஜாவின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவார்கள்.

சவுல் மாடுகளின் பின்னாலே போய் விவசாய வேலை செய்தாலும், அவர் யுத்த தந்திரங்களிலும் வல்லவராயிருக்கிறார். அவருக்கு யுத்த வியூகங்களை வகுக்க தெரிந்திருக்கிறது. ஒரு நல்ல யுத்தவீரன், தன்னுடைய பலத்தையும் அறிந்திருப்பான், எதிரியின் பலத்தையும் அறிந்திருப்பான். சவுல் இஸ்ரவேலின் பலத்தை அறிந்துகொள்ள விரும்புகிறார்.

தன்னிடத்தில் ஒருமனப்பட்டு புறப்பட்டு வந்திருக்கிற இஸ்ரவேல் ஜனங்களை சவுல் பேசேக்கிலே இலக்கம் பார்க்கிறார். அவர்களை எவ்வாறு சேனை சேனையாக பிரித்து யுத்தக்களத்திற்கு அனுப்புவது என்று சவுல் திட்டமிடுகிறார். இஸ்ரவேல் புத்திரரில் மூன்று லட்சம் பேர் இருக்கிறார்கள். யூதாமனுஷரில் முப்பதினாயிரம் பேர் இருக்கிறார்கள். இஸ்ரவேலிலுள்ள மொத்த வீரரில் பத்தில் ஒரு பங்கு மாத்திரமே யூதாகோத்திரத்திலிருக்கிறார்கள்.

யாபேசிலிருந்து வந்த ஸ்தானாபதிகள் இன்னும் கிபியாவிலே இருக்கிறார்கள். கிபியாவின் மனுஷர் தங்களிடத்தில் வந்த ஸ்தானாபதிகளை நோக்கி: "நாளைக்கு வெயில் ஏறுகிறதற்கு முன்னே உங்களுக்கு ரட்சிப்புக் கிடைக்கும் என்று கீலேயாத்திலிருக்கிற யாபேசின் மனுஷருக்குச் சொல்லுங்கள்" (1சாமு 11:9) என்று சொல்லுகிறார்கள்;

யாபேசின் ஸ்தானாபதிகள் திரும்பி வந்து யாபேசின் மனுஷரிடத்தில் அதை அறிவிக்கிறார்கள்; அதற்கு அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.

யாபேசின் மூப்பர்கள் நாகாஸ் என்னும் அம்மோனியனிடத்தில், "நாங்கள் இஸ்ரவேல் நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பும்படி, ஏழுநாள் எங்களுக்குத் தவணைகொடும், எங்களை ரட்சிப்பார் இல்லாவிட்டால், அப்பொழுது உம்மிடத்தில் வருவோம்" (1சாமு 11:3) என்று ஏற்கெனவே சொல்லியிருந்தார்கள்.

இப்போது யாபேசின் மனுஷருக்கு சவுலின் மூலமாய் நல்ல செய்தி வந்திருக்கிறது. யாபேசின் மனுஷர் நாகாஸ் என்னும் அம்மோனியனிடம், "நாளைக்கு உங்களிடத்தில் வருவோம், அப்பொழுது உங்கள் இஷ்டப்படியெல்லாம் எங்களுக்குச் செய்யுங்கள்" (1சாமு 11:10) என்று சொல்லுகிறார்கள்.

சவுல் கர்த்தரை நம்புகிறார். தன்னுடைய வீரத்தையும் தீர்மானத்தையும் நம்புகிறார். இந்த யுத்தம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நீதியானது. இஸ்ரவேல் புத்திரர் அநியாயம் செய்யவில்லை. அம்மோனியரே யாபேசின் மனுஷருக்கு அநியாயம் செய்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் இந்த யுத்தத்திலே தங்களுக்கு வெற்றியைக் கொடுப்பார் என்று சவுல் முழுநிச்சயமாய் நம்புகிறார். அந்த நம்பிக்கையில், சவுல் யாபேசின் ஸ்தானாபதிகளிடம், "நாளைக்கு வெயில் ஏறுகிறதற்கு முன்னே உங்களுக்கு ரட்சிப்பு கிடைக்கும்" (1சாமு 11:9) என்று சொல்லுகிறார்.

யாபேசின் மனுஷர் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை செய்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். சவுலும், இஸ்ரவேல் மனுஷரும் தங்கள் கடமைகளை நிச்சயமாய் நிறைவேற்றுவார்கள். தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை தவறாமல் செய்வார்கள். அம்மோனியர் யாபேசை முற்றிக்கைப்போட்டிருந்தாலும், சவுலும் இஸ்ரவேலரும் அம்மோனியரை சூழ்ந்துகொண்டு, அம்மோனியரை முறியடிப்பார்கள்.

கர்த்தர் தங்கள் பக்கத்திலிருக்கிறார் என்று சவுல் நம்பிக்கையோடிருக்கிறார். அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டுமென்று கர்த்தரே தீர்மானித்திருக்கிறார். யாபேசின் மனுஷரைப்பற்றிய செய்தியைக் கேட்டபோது, கர்த்தருடைய ஆவியானவர் சவுலின்மேல் இறங்கினார். இந்த யுத்தத்திலே தங்களுக்கு கர்த்தர் ஜெயத்தைக் கொடுப்பார் என்று சவுல் நம்பிக்கையோடிருக்கிறார்.

யாபேசின் மனுஷர், அம்மோனியனிடம், "நாளைக்கு உங்களிடத்தில் வருவோம், அப்பொழுது உங்கள் இஷ்டப்படியெல்லாம் எங்களுக்குச் செய்யுங்கள்" (1சாமு 11:10) என்று சொன்னது, அம்மோனியருக்கு நல்ல செய்தியாயிருக்கிறது. நாளைய தினத்திலே தங்களுக்கு இஷ்டமானபடியெல்லாம் யாபேசின் மனுஷருக்கு செய்யலாம் என்று அம்மோனியர் நினைக்கிறார்கள். இந்த ஒரு வார காலத்திலே அம்மோனியரும் தங்களை பலப்படுத்தியிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரமாட்டார்கள் என்று அம்மோனியர் இறுமாப்பாய் நினைக்கிறார்கள்.

சவுல் அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார். யுத்தவியூகங்களை வகுக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் மனுஷர்மீது வந்து இறங்கும்போது, அவர்களுக்கு அனுபவமும், பயிற்சியும் இல்லாவிட்டாலும், அவர்கள் நேர்த்தியான காரியங்களையும், அற்புதமான காரியங்களையும் செய்வார்கள்.

சவுலின் சேனையிலே குதிரைகளோ ரதங்களோ இல்லை. அவர்கள் எல்லோரும் கால்நடையாய் நடக்கவேண்டிய வீரர்கள். அவர்கள் கிபியாவிலிருந்து யாபேசுக்கு சுமார் அறுபது மைல்கள் நடந்தே செல்லவேண்டும். தரையில் நடப்பது மாத்திரமல்ல, சவுலும் இஸ்ரவேல் வீரர்களும், பிரவாகித்து வருகிற யோர்தானையும் கடக்கவேண்டும்.

சவுல் இஸ்ரவேல் வீரர்களை மூன்று படையாக வகுக்கிறார். சத்துருக்கள் மீது வேகமாகப்போய் விரைந்து தாக்குவதற்கு இது உதவியாயிருக்கும். சத்துருக்களாலும் இஸ்ரவேலின் கையிலிருந்து தப்பித்து ஓடமுடியாது. சவுல் யாபேசின் மூப்பரிடத்தில், "நாளைக்கு வெயில் ஏறுகிறதற்கு முன்னே உங்களுக்கு ரட்சிப்பு கிடைக்கும்" என்று சொன்னார்.

மறுநாளிலே சவுல் ஜனங்களை மூன்று படையாக வகுத்து, கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் பாளயத்திற்குள் வந்து வெயில் ஏறும்வரைக்கும் அம்மோனியரை முறிய அடிக்கிறார்; தப்பினவர்களில் இரண்டுபேராகிலும் சேர்ந்து ஓடிப்போகாதபடி எல்லாரும் சிதறிப்போகிறார்கள் (1சாமு 11:11).

சவுல் தன்னுடைய வார்த்தையைவிட வேகமாய் செயல்படுகிறார். "நாளைக்கு வெயில் ஏறுகிறதற்கு முன்னே உங்களுக்கு ரட்சிப்பு கிடைக்கும்" என்று சவுல் சொன்னார். ஆனால் அவர் "கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்தில் பாளயத்திற்குள் வந்துவிடுகிறார்" (1சாமு 11:11). சவுலும், மூன்று படையாக வகுக்கப்பட்ட இஸ்ரவேலரும் கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்தில் பாளத்திற்குள் வருகிறார்கள். அவர்கள் வெயில் ஏறும் வரைக்கும் அம்மோனியரை முறியடிக்கிறார்கள்.

இஸ்ரவேலின் படைகள் அம்மோனியரை எல்லா பக்கங்களிலும் சுற்றி வளைத்து சூழ்ந்து கொள்கிறார்கள். அம்மோனியரால் தப்பித்து ஓட முடியவில்லை. தப்பித்து ஓடுவதற்கு அவர்களால் ஆயத்தம்பண்ணவும் முடியவில்லை. இஸ்ரவேலர் அம்மோனியரை முறியடிக்கிறார்கள். அம்மோனியரில் தப்பினவர்களில் இரண்டு பேராகிலும் சேர்ந்து ஓடிப்போகாதபடி எல்லாரும் சிதறிப்போகிறார்கள்.

"நான் உங்கள் ஒவ்வொருவருடைய வலது கண்ணையும் பிடுங்கி, இதினாலே இஸ்ரவேல் எல்லாவற்றின்மேலும் நிந்தை வரப்பண்ணுவதே நான் உங்களோடே பண்ணும் உடன்படிக்கை" (1சாமு 11:2) என்று அம்மோனியனாகிய நாகாஸ் யாபேசின் மூப்பர்களிடத்தில் சொன்னான். ஆனால் இப்போதோ அம்மோனியர் எல்லோரும் முறியடிக்கப்படுகிறார்கள். அவர்கள் தனித்தனியாக சிதறி ஓடிப்போகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த யுத்தத்திலே ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். கீலேயாத்திலிருக்கிற யாபேசின் மனுஷர் அழிவுக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். அவர்களை அழிக்க நினைத்த அம்மோனியர் மொத்தமாய் முறியடிக்கப்படுகிறார்கள்.

சாமுவேல்
1சாமு 11:12-15

1சாமு 11:12. அப்பொழுது ஜனங்கள் சாமுவேலை நோக்கி: சவுலா நமக்கு ராஜாவாயிருக்கப்போகிறவன் என்று சொன்னவர்கள் யார்? அந்த மனுஷரை நாங்கள் கொன்றுபோடும்படிக்கு ஒப்புக்கொடுங்கள் என்றார்கள்.

1சாமு 11:13. அதற்குச் சவுல்: இன்றையதினம் ஒருவரும் கொல்லப்படலாகாது; இன்று கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார் என்றான்.

1சாமு 11:14. அப்பொழுது சாமுவேல் ஜனங்களை நோக்கி: நாம் கில்காலுக்குப் போய், அங்கே ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்துவோம் வாருங்கள் என்றான்.

1சாமு 11:15. அப்படியே ஜனங்கள் எல்லாரும் கில்காலுக்குப் போய், அவ்விடத்திலே கர்த்தருடைய சந்நிதியில் சவுலை ராஜாவாக ஏற்படுத்தி, அங்கே கர்த்தருடைய சந்நிதியில் சமாதானபலிகளைச் செலுத்தி, அங்கே சவுலும் இஸ்ரவேல் மனுஷர் யாவரும் மிகவும் சந்தோஷங்கொண்டாடினார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு அம்மோனியர்மேல் ஜெயமுண்டாயிற்று. இந்த யுத்தத்தினால், இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே சவுலின் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கிறது. சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணினபோது, இஸ்ரவேலரில் பேலியாளின் மக்களாயிருந்தவர்கள், "இவனா நம்மை இரட்சிக்கப்போகிறவன் என்று சொல்லி, சவுலுக்கு காணிக்கை கொண்டு வராமல் அவனை அசட்டைபண்ணினார்கள்" (1சாமு 10:27).

சவுல் இப்போது அம்மோனியர்மீது யுத்தம்பண்ணி, அம்மோனியரை முறியடித்ததினால், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சவுலுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். அப்பொழுது ஜனங்கள் சாமுவேலை நோக்கி: "சவுலா நமக்கு ராஜாவாயிருக்கப்போகிறவன் என்று சொன்னவர்கள் யார்? அந்த மனுஷரை நாங்கள் கொன்று போடும்படிக்கு ஒப்புக்கொடுங்கள்" (சாமு 11:12) என்று சொல்லுகிறார்கள்.

ஜனங்கள் சவுலை மேன்மைப் படுத்துவதில் வைராக்கியமாயிருக்கிறார்கள். சவுலுக்கு விரோதமாய்த் தூஷணவார்த்தைகளைப் பேசியவர்களையும், சவுலை அசட்டைபண்ணினவர்களையும் தண்டிப்பதற்கு ஜனங்கள் ஒருமனதாய் முன்வருகிறார்கள்.

சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணினபோது, பேலியாளின் மக்கள், சவுலுக்கு விரோதமாகப் பேசினார்கள். அப்போது சவுலுக்கு ஆதரவாக ஒருவரும் பேசவில்லை. இப்போது சவுலுக்கு ஆதரவாய்ப் பேசும் ஜனங்களுக்கு, அப்போது வீரமில்லை. அம்மோனியர்மீது நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேலருக்கு வெற்றி கிடைத்ததினால், அவர்களுடைய இருதயத்தில் புதிய பெலனும், புதிய தெம்பும் உண்டாயிற்று. சவுலுக்கு விரோதமாகப் பேசி, அவரை அசட்டைபண்ணிவர்களை கொன்றுபோட வேண்டும் என்றும், அதற்கு குறைவான தண்டனை அவர்களுக்கு கொடுக்கப்படக்கூடாது என்றும் ஜனங்கள் தீர்மானமாயிருக்கிறார்கள்.

ஜனங்கள் இந்தக் காரியத்தை சவுலிடம் கேட்காமல், சாமுவேலிடத்தில் கேட்கிறார்கள். அவர்களுக்கு சவுல் பிரதியுத்தரம் சொல்லுகிறார். சாமுவேலின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமலேயே, சவுல் இந்தப் பிரதியுத்தரத்தை சொல்லுகிறார். அதற்குச் சவுல்: "இன்றையதினம் ஒருவரும் கொல்லப்படலாகாது; இன்று கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார்" (சாமு 11:13) என்று சொல்லுகிறார்.

இந்த நாள் வெற்றியை சந்தோஷமாய்க் கொண்டாடும் நாள். இந்த நாளிலே இஸ்ரவேலின் பேலியாளின் மக்களாயிருக்கிறவர்களைக் கொன்று, இதை துக்கநாளாக்கிவிடக்கூடாது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்குமே நன்மை செய்திருக்கிறார். ஆகையினால் ஒருவருக்கு விரோதமாக மற்றொருவர் தீங்கு செய்ய நினைக்கக்கூடாது என்று சவுல் ஆலோசனை சொல்லுகிறார். சவுலின் இந்த வாக்கியம், அவருடைய ராஜதந்திரத்தையும், அனுபவ முதிர்ச்சியையும், நற்குணத்தையும் காண்பிக்கிறது.

இன்றையதினம் கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளியிருக்கிறார். யுத்தத்திலே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது. இதனால் அவர்கள் உற்சாகமாயும், ஆவேசமாயும் இருக்கிறார்கள். அவர்கள் சவுலின்மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கர்த்தர் சவுலோடு கூடயிருக்கிறார் என்பதை அங்கீகரிக்கிறார்கள். சவுலுக்கு விரோதமாக ஒருவரும் பேசக்கூடாது என்றும், ஒருவரும் கிரியை செய்யக்கூடாது என்றும் வைராக்கியமாயிருக்கிறார்கள்.

சவுலோ இஸ்ரவேல் ஜனங்கள் தன்மீது வைத்திருக்கிற அன்புக்கு பாத்திரவானாய் நடந்துகொள்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே தன்னோடு கூடயிருந்து, தனக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று சவுல் விரும்புகிறார். சத்துருவைக்கூட சிநேகிதராக்கிக் கொள்ளவேண்டும். சத்துருக்களைக் கொன்றுபோடுவதற்கு பதிலாக, அவர்களை சிநேகிதராக்கிக்கொண்டால், அவர்கள் மூலமாய் நன்மையும் அனுகூலமும் உண்டாகும்.

சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணினபோது, பேலியாளின் மக்களாயிருந்தவர்கள், எப்போதுமே பேலியாளின் மக்களாயிருக்கப்போவதில்லை. அவர்கள் மனந்திரும்புவதற்கு சவுல் ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். இஸ்ரவேலின் மற்ற ஜனங்கள் தனக்கு ஆதரவாயிருக்கும்போது, அவர்களும் தனக்கு ஆதரவாயிருக்க வேண்டுமென்று சவுல் எதிர்பார்க்கிறார்.

அப்பொழுது சாமுவேல் ஜனங்களை நோக்கி: "நாம் கில்காலுக்குப் போய், அங்கே ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்துவோம் வாருங்கள்" (1சாமு 11:14) என்று சொல்லுகிறார். அம்மோனியருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே கர்த்தர் இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். இதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கும் வண்ணமாக, சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் கில்காலிலே கூடிவரச் செய்கிறார்.

மேலும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கில்காலுக்கு வரும்போது, அவ்விடத்திலே கர்த்தருடைய சந்நிதியில், சவுலை ராஜாவாக ஏற்படுத்தி, அவருடைய ராஜ்யபாரத்தை உறுதிபண்ணவேண்டும் என்றும் சாமுவேல் எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும், சாமுவேல் சொன்ன பிரகாரம் கில்காலுக்குப் போகிறார்கள். அவ்விடத்திலே கர்த்தருடைய சந்நிதியில் சவுலை ராஜாவாக ஏற்படுத்தி, அங்கே கர்த்தருடைய சந்நிதியில் சமாதானபலிகளைச் செலுத்துகிறார்கள். அங்கே சவுலும் இஸ்ரவேல் மனுஷர் யாவரும் மிகவும் சந்தோஷங்கொண்டாடுகிறார்கள் (1சாமு 11:15).

12 அதிகாரம்

சாமுவேல் இதுவரையிலும் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார். இப்போது அவர் அந்தப் பொறுப்பை சவுலின் கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரித்த காலத்தில், அவர் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் உண்மையுள்ளவராயிருந்திருக்கிறார். அவர் யாருக்கும் அநியாயம் செய்யவில்லை. சாமுவேல் யார் கையிலும் பரிதானம் வாங்கவில்லை (1சாமு 12:1-5).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும், அவர்களுடைய முற்பிதாக்களுக்கும் பெரிய காரியங்களை செய்திருக்கிறார் (1சாமு 12:6-13). சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் முன்வைக்கிறார் (1சாமு 12:14,15).

இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலின் வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். சாமுவேல் கர்த்தரிடத்தில் இடிமுழக்கத்திற்காகவும் மழைக்காகவும் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் சாமுவேலின் வார்த்தைகளை உறுதிபண்ணும் வண்ணமாக, இடிமுழக்கங்களையும், மழையையும் அன்றைய தினமே கட்டளையிடுகிறார் (1சாமு 12:16-19).

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்காமல், தங்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரை சேவிக்கவேண்டும். சாமுவேலும் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவார். நன்மையும் செம்மையுமான வழியை சாமுவேல் அவர்களுக்குப் போதிப்பார் (1சாமு 12:20-25).

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கில்காலிலே கர்த்தருடைய சந்நிதியில் கூடிவந்திருக்கிறார்கள். சாமுவேலின் இந்தப் பிரசங்கம், இஸ்ரவேல் ஜனத்தாரிடமிருந்து அவர் விடைபெறும் பிரசங்கமாகவும், சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணும் பிரசங்கமாகவும் இருக்கிறது.

சாமுவேலின் சாட்சி
1சாமு 12:1-5

1சாமு 12:1. அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேலர் அனைவரையும் நோக்கி: இதோ, நீங்கள் எனக்குச் சொன்னபடியெல்லாம் உங்கள் சொற்கேட்டு உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினேன்.

1சாமு 12:2. இப்போதும் இதோ, ராஜாவானவர் உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்துவருகிறார்; நானோ கிழவனும் நரைத்தவனுமானேன்; என் குமாரர் உங்களோடிருப்பார்கள்; நான் என் சிறுவயதுமுதல் இந்நாள்வரைக்கும் உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்துவந்தேன்.

1சாமு 12:3. இதோ, இருக்கிறேன்; கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம்பண்ணி வைத்தவருக்கு முன்பாகவும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ்செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக் கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள்; அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன் என்றான்.

1சாமு 12:4. அதற்கு அவர்கள்: நீர் எங்களுக்கு அநியாயஞ்செய்யவும் இல்லை; எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை; ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவும் இல்லை என்றார்கள்.

1சாமு 12:5. அதற்கு அவன்: நீங்கள் என் கையில் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை என்பதற்குக் கர்த்தர் உங்களுக்கு எதிராகச் சாட்சியாயிருக்கிறார்; அவர் அபிஷேகம் பண்ணினவரும் இன்று அதற்குச் சாட்சி என்றான்; அதற்கு அவர்கள்: அவர் சாட்சிதான் என்றார்கள்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், இதுவரையிலும் அவர்களுக்கு நடைபெற்ற சம்பவங்களையும், இப்போது நடைபெறுகிற சம்பவத்தையும் சுருக்கமாகச் சொல்லுகிறார். சாமுவேல் அவர்களுக்கு சொல்லப்போகும் செய்திக்கு முன்னுரையாக, இந்த வாக்கியங்கள் அமைந்திருக்கிறது.

சாமுவேல் தன்னுடைய ஜீவியகாலம் முழுவதும் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக ஊழியம் செய்திருக்கிறார். "நான் என் சிறுவயதுமுதல் இந்நாள் வரைக்கும் உங்களுக்கு முன்பாக சஞ்சரித்து வந்தேன்" (1சாமு 12:2) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார். ஒரு மேய்ப்பன் தன்னுடைய மந்தைகளை வழிநடத்துவதுபோல, சாமுவேல் இதுவரையிலும் இஸ்ரவேலின் ஜனங்களை வழிநடத்தி வந்திருக்கிறார்.

"இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்; கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும்" (சங் 80:1).

சாமுவேலின் வாலிப காலம் முடிவடைந்துவிட்டது. அவர் இப்போது கிழவனும், நரைத்தவருமாயிருக்கிறார். சாமுவேலுக்கு முதிர்வயதாயிற்று. சாமுவேலின் முதிர்வயதில், இஸ்ரவேல் ஜனங்கள், சாமுவேலைத் தள்ளிவிடுகிறார்கள். சாமுவேலுக்கு நன்மை செய்வதற்கு பதிலாக தீங்கு செய்கிறார்கள்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களிடம், "நானோ கிழவனும் நரைத்தவனுமானேன்; என் குமாரர் உங்களோடிருப்பார்கள்" என்று சொல்லுகிறார். சாமுவேலுக்கு முதிர்வயதானதினால், அவரால் இஸ்ரவேல் ஜனங்களை, முன்புபோல இனிமேல், நியாயம் விசாரிக்க முடியாது. ஆகையினால் அவர் தன்னுடைய பொறுப்புக்களிலிருந்து மனப்பூர்வமாய் ஓய்வுபெற விரும்புகிறார்.

சாமுவேலின் குமாரர் இஸ்ரவேல் ஜனங்களோடு கூடயிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏதாவது தீங்கு செய்திருந்தால், இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலின் புத்திரரை கூப்பிட்டு விசாரிக்கலாம்.

இஸ்ரவேல் ஜனங்கள் சொன்னபடியெல்லாம் சாமுவேல் செய்திருக்கிறார். "இதோ, நீங்கள் எனக்குச் சொன்னபடியெல்லாம் உங்கள் சொற்கேட்டு உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினேன்" (1சாமு 12:1) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

சாமுவேல் தன்னுடைய சிறுவயது முதல் இந்நாள் வரைக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக சஞ்சரித்து வந்தார். "இப்போதும் இதோ, ராஜாவானவர் உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்துவருகிறார்" என்று சாமுவேல் சவுலைப்பற்றி இஸ்ரவேலருக்கு சொல்லுகிறார்.

மற்ற தேசங்களிலிருப்பதுபோல, தங்களை நியாயம் விசாரிப்பதற்கு, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று, இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலிடத்தில் கேட்டார்கள். சாமுவேலும் அவர்களுடைய சொற்கேட்டு, அவர்களுக்கு சவுலை ராஜாவாக ஏற்படுத்தினார். இப்போது இஸ்ரவேல் தேசம் மற்ற தேசங்களைப்போல, ராஜாவினால் ஆளுகை செய்யப்படுகிறது.

இதுவரையிலும் கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்தார். இஸ்ரவேல் தேசத்திலே தேவனுடைய ஆளுகை நடைபெற்றது. இஸ்ரவேல் ஜனத்தாரோ, மற்ற ஜாதியாரைப்போல, கர்த்தருடைய தெய்வீக ஆளுகையை, விலக்கி வைத்துவிடுகிறார்கள். புறஜாதியார் கர்த்தரை ஆராதிக்கமாட்டார்கள். தாங்களும் புறஜாதியார்போல இருக்கவேண்டும் என்று நினைத்து, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை ஆராதியாமலிருந்துவிடக்கூடாது.

சாமுவேல் சிறுவயதுமுதல் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக சஞ்சரித்து வருகிறார். சாமுவேல் பல வருஷங்களாக இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரித்து வருகிறார். ஆனாலும் சாமுவேல் இதுவரையிலும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. சாமுவேல் ஜனங்களுக்கு முன்பு தன்னைப்பற்றிச் சாட்சியாகச் சொல்லுகிறார்.

"இதோ, இருக்கிறேன்; கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம்பண்ணி வைத்தவருக்கு முன்பாகவும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ்செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள்; அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன்" (1சாமு 12:3) என்று சாமுவேல் இஸ்ரவேலர் அனைவரிடத்திலும் சொல்லுகிறார்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் தன்னைப்பற்றி சாட்சியாய் அறிவிப்பதற்கு, அவருக்கு ஒரு சில நோக்கங்கள் உள்ளது. அவர்கள் சாமுவேலைத் தள்ளிவிட்டார்கள். இதனால் சாமுவேலின் மனதிலும் இருதயத்திலும் காயமுண்டாயிற்று. சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நன்மை செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ சாமுவேலுக்கு தீங்கு செய்திருக்கிறார்கள். அவரை வேதனைப்படுத்தியிருக்கிறார்கள். சாமுவேலை வருத்தப்பட வைத்திருக்கிறார்கள்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரித்த காலத்திலே, அவர் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும்உண்மையுள்ளவராயிருந்திருக்கிறார். அவர் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. சாமுவேல் தன்னுடைய பெயரைக் கெடுத்துக்கொள்ளவுமில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலைத் தள்ளிவிடுகிறார்கள். சவுல் அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். சாமுவேல் ஏதோ தவறு செய்ததினால்தான், கர்த்தரும் ஜனங்களும் அவரை தள்ளிவிட்டார்கள் என்று மனுஷர் சந்தேகப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் சாமுவேல் முதலாவதாக தன்னிடத்தில் தப்பிதம் ஒன்றுமில்லை என்பதை சாட்சியாக அறிவிக்கிறார்.

சாமுவேலுக்கு பின்பு சவுல் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கப்போகிறார். சாமுவேல் தன்னுடைய நற்குணத்தினாலும், உண்மையினாலும், உத்தமத்தினாலும் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்திருக்கிறார். தனக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்யப்போகிறவர்களுக்கு, சாமுவேல் ஒரு முன்மாதிரியை வைத்திருக்கிறார். இஸ்ரவேலை ஆளுகை செய்யப்போகிற சவுலும், சாமுவேலைப்போலவே நல்லவராயிருந்து, ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரித்த காலத்தில், அவர் யாருடைய எருதையோ அல்லது யாருடைய கழுதையையோ எடுத்துக்கொள்ளவில்லை. சாமுவேல் யாருக்கும் எருதையோ கழுதையோ அபராதமாக விதித்து அதைத் தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளவில்லை. தனக்கு உதவிசெய்கிறவர்கள் எல்லோருக்கும் சாமுவேல் சம்பளம் கொடுத்திருக்கிறார். அவர் யாருக்கும் சம்பளம் கொடுக்காமல் வஞ்சிக்கவில்லை. சாமுவேல் யாரிடத்திலும் இலவசமாக, வேலை வாங்கவில்லை.

சாமுவேல் ஒருவருக்கும் அநியாயம் செய்யவில்லை. யாருக்கும் இடுக்கண் செய்யவில்லை. அவர் யாருடைய கையிலும் பரிதானம் வாங்கவில்லை. நீதியைப் புரட்டவில்லை. ஏழைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் வஞ்சிக்கவில்லை. தான் யாரிடத்திலாவது அநியாயமாக எதையாவது பெற்றிருந்தாலோ அல்லது பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டியிருந்தாலோ, அதைத் திரும்பக் கொடுப்பதற்கு சாமுவேல் ஆயத்தமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தன்னைக் குறித்து சாட்சி சொல்லவேண்டுமென்று சாமுவேல் எதிர்பார்க்கிறார். "இதோ, இருக்கிறேன்; கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம்பண்ணி வைத்தவருக்கு முன்பாகவும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுங்கள்" (1சாமு 12:3) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

கில்காலிலே கூடியிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும், சாமுவேல் சொல்லுகிற வார்த்தைகளை கவனமாய்க் கேட்கிறார்கள். அவர்கள் சாமுவேலுக்கு பிரதியுத்தரமாக: "நீர் எங்களுக்கு அநியாயஞ்செய்யவும் இல்லை; எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை; ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவும் இல்லை" (1சாமு 12:4) என்று சொல்லுகிறார்கள்.

ஜனங்கள் சாமுவேலைக் குறித்து நற்சாட்சி சொல்லுகிறார்கள். சாமுவேல் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் உண்மையுள்ளவராயிருக்கிறார். சாமுவேல் ஜனங்களிடம் "நீங்கள் என் கையில் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை என்பதற்குக் கர்த்தர் உங்களுக்கு எதிராகச் சாட்சியாயிருக்கிறார்; அவர் அபிஷேகம் பண்ணினவரும் இன்று அதற்குச் சாட்சி" (1சாமு 12:5) என்று சொல்லுகிறார்.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார். கர்த்தர் சாமுவேலின் இருதயத்தையும் ஆராய்ந்து பார்த்து, அவரைக் குறித்து நற்சாட்சி சொல்லுகிறார். கர்த்தர் மனுஷருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் அபிஷேகம்பண்ணினவர் மனுஷருடைய கிரியைகளை ஆராய்ந்து பார்க்கிறார். ஜனங்கள் எல்லோரும் சாமுவேலுக்கு பிரதியுத்தரமாக, "அவர் சாட்சி தான்" என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர்
1சாமு 12:6-15

1சாமு 12:6. அப்புறம் சாமுவேல் ஜனங்களை நோக்கி: மோசேயையும் ஆரோனையும் ஏற்படுத்தினவரும், உங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் கர்த்தரே.

1சாமு 12:7. இப்போதும் கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் செய்துவந்த எல்லா நீதியான கிரியைகளைக்குறித்தும், நான் கர்த்தருடைய சந்நிதியில் உங்களோடே நியாயம் பேசும்படிக்கு நீங்கள் நில்லுங்கள்.

1சாமு 12:8. யாக்கோபு எகிப்திலே போயிருக்கும்போது, உங்கள் பிதாக்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள், அப்பொழுது கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார்; அவர்கள் உங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து அழைத்துவந்து, அவர்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணினார்கள்.

1சாமு 12:9. அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துபோகிறபோது, அவர் அவர்களை ஆத்சோரின் சேனாபதியாகிய சிசெராவின் கையிலும், பெலிஸ்தரின் கையிலும், மோவாபிய ராஜாவின் கையிலும் விற்றுப்போட்டார்; இவர்கள் அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினார்கள்.

1சாமு 12:10. ஆகையால் அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டு: நாங்கள் கர்த்தரை விட்டுப்பாகால்களையும் அஸ்தரோத்தையும் சேவித்ததினாலே, பாவஞ்செய்தோம்; இப்போதும் எங்கள் சத்துருக்களின் கைக்கு எங்களை நீங்கலாக்கி ரட்சியும்; இனி உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.

1சாமு 12:11. அப்பொழுது கர்த்தர் எருபாகாலையும் பேதானையும் யெப்தாவையும் சாமுவேலையும் அனுப்பி, நீங்கள் பயமில்லாமல் குடியிருக்கும்படிக்குச் சுற்றிலும் இருந்த உங்கள் சத்துருக்களின் கைக்கும் உங்களை நீங்கலாக்கி ரட்சித்தார்.

1சாமு 12:12. அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும், நீங்கள் என்னை நோக்கி: அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள்மேல் ஆளவேண்டும் என்றீர்கள்.

1சாமு 12:13. இப்போதும் நீங்கள் வேண்டும் என்று விரும்பித் தெரிந்துகொண்ட ராஜா, இதோ, இருக்கிறார்; இதோ, கர்த்தர் உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினார்.

1சாமு 12:14. நீங்கள் கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணாமல் கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தால், நீங்களும் உங்களை ஆளுகிற ராஜாவும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாயிருப்பீர்கள்.

1சாமு 12:15. நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினீர்களானால், கர்த்தருடைய கை உங்கள் பிதாக்களுக்கு விரோதமாயிருந்தது போல உங்களுக்கும் விரோதமாயிருக்கும்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் தன்னுடைய உண்மையையும், கண்ணியத்தையும் தெளிவுபடுத்துகிறார். அவர்கள் தனக்கு விரோதமாக தீங்கு செய்திருந்தாலும், சாமுவேலோ அவர்களுக்கு நன்மை செய்ய ஆயத்தமாயிருக்கிறார். அவர்களுக்கு நன்மையும் செவ்வையுமான வழியை போதிக்கிறார். அவர்கள் நடக்க வேண்டிய வழிகளை அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும், அவர்களுடைய முற்பிதாக்களுக்கும் ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். சாமுவேல் அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தை சுருக்கமாகச் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேலரின் தேவனாயிருக்கிறார். அவர் இஸ்ரவேலின்மீது அன்பாயிருந்து, அவர்கள் மத்தியிலே, மகத்துவமான கிரியைகளை நடப்பித்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரை சேவிக்கவேண்டும்.

சாமுவேல் கில்காலிலே கூடியிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தாரோடு பேசிக்கொண்டிருக்கிறார். கர்த்தர் இவர்களுக்கு அநேக நன்மைகளை செய்திருப்பது மாத்திரமல்ல, பூர்வகாலங்களிலே, இவர்களுடைய முற்பிதாக்களுக்கும், கர்த்தர் ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் அநேக நன்மைகளை அனுபவிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய முற்பிதாக்களுக்கு தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும் வெளிப்படுத்தியதினாலேயே, இவர்களுக்கு இக்காலத்தில் நன்மைகள் உண்டாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தரோ தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் பிடியிலிருந்து விடுவித்தார். கர்த்தரே மோசேயையும் ஆரோனையும் ஏற்படுத்தினவர். "உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் கர்த்தரே" (1சாமு 12:6) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், "இப்போதும் கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் செய்துவந்த எல்லா நீதியான கிரியைகளைக்குறித்தும், நான் கர்த்தருடைய சந்நிதியில் உங்களோடே நியாயம் பேசும்படிக்கு நீங்கள் நில்லுங்கள்" (1சாமு 12:7) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தார்கள். அவர்களுக்கு பார்வோனின் ஆளோட்டிகள் மூலமாய் மிகுந்த வேதனைகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று.

"யாக்கோபு எகிப்திலே போயிருக்கும்போது, உங்கள் பிதாக்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள், அப்பொழுது கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார்; அவர்கள் உங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து அழைத்துவந்து, அவர்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணினார்கள்" (1சாமு 12:8) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்ததினால், அநேக தீங்குகளை அனுபவித்தார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் அந்நிய தெய்வங்களை ஆராதித்து, கர்த்தருடைய சாபத்திற்குட் படுத்தப்பட்டார்கள். அவர்களுக்கு வேதனை களும், உபத்திரவங்களும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துபோகிறபோது, கர்த்தர் அவர்களை ஆத்சோரின் சேனாபதியாகிய சிசெராவின் கையிலும், பெலிஸ்தரின் கையிலும், மோவாபிய ராஜாவின் கையிலும் விற்றுப்போட்டார்; இவர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம் பண்ணினார்கள் (1சாமு 12:9).

இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்கள் சத்துருக்கள் மூலமாய் மிகுந்த வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்தார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினார்கள். கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தினார்கள். விக்கிரகங்களை விட்டு விலகி மறுபடியும் கர்த்தரைப்பற்றிக் கொண்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். "நாங்கள் கர்த்தரை விட்டுப் பாகால்களையும் அஸ்தரோத்தையும் சேவித்ததினாலே, பாவஞ்செய்தோம்; இப்போதும் எங்கள் சத்துருக்களின் கைக்கு எங்களை நீங்கலாக்கி ரட்சியும்; இனி உம்மைச் சேவிப்போம்" (1சாமு 12:10) என்று சொன்னார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய விண்ணப்பங்களைக் கேட்டார். அவர்களுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து கர்த்தர் அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு யுத்தத்திலே வெற்றியைக் கொடுத்தார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை ஆசீர்வதித்து அவர்களை கானான் தேசத்திலே குடியமர்த்தினார். இஸ்ரவேல் ஜனத்தார் நீண்டகாலமாக சத்துருக்கள் மூலமாய் நெருக்கங்களையும் உபத்திரவங்களையும் அனுபவித்தார்கள்.

அப்பொழுது கர்த்தர் எருபாகாலையும் பேதானையும் யெப்தாவையும் சாமுவேலையும் அனுப்பினார். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை சத்துருக்களின் கைகளுக்கு நீங்கலாக்கி இரட்சிப்பதற்காக எழுப்பப்பட்ட நியாயாதிபதிகள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை பயமில்லாமல் குடியிருக்கும்படிக்குச் சுற்றிலும் இருந்த அவர்கள் சத்துருக்களின் கைக்கும் அவர்களை நீங்கலாக்கி ரட்சித்தார் (1சாமு 12:11).

சாமுவேல் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் ஒரு சிலரை இங்கு விசேஷமாய்க் குறிப்பிட்டு சொல்லுகிறார். கிதியோன், யெப்தா ஆகியோர் இவர்களுடைய காலங்களிலே, இவர்களை சத்துருக்களின் கைகளுக்கு விலக்கி இரட்சித்தவர்கள்.

கில்காலிலே இஸ்ரவேல் ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். சாமுவேல் அவர்களுக்கு முன்பாக கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லிக்கொண்டிருக்கிறார். கர்த்தர் இந்த சந்ததியாருக்கும் அநேக நன்மைகளை செய்திருக்கிறார். சாமுவேல் மூலமாக இவர்களுக்கு ஏராளமான நன்மைகள் உண்டாயிற்று. ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள், தங்களை நியாயம் விசாரிப்பதற்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டுமென்று சாமுவேலிடம் கேட்டார்கள்.

"அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும், நீங்கள் என்னை நோக்கி: அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள்மேல் ஆளவேண்டும் என்றீர்கள். (1சாமு 12:12) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

கர்த்தரே இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்கிறார். கர்த்தர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். ஆனால் அவர்களோ, மற்ற தேசங்களிலிருப்பதுபோல, தங்களை ஆளுகை செய்வதற்கு ஒரு ராஜா வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் இதுவரையிலும் அவர்களுடைய சத்துருக்கள்மீது ஏராளமான யுத்தங்களை நடத்தியிருக்கிறார்கள். இந்த யுத்தங்களிலெல்லாம் கர்த்தரே அவர்களுக்கு, படைத்தளபதியாகயிருந்து, யுத்தங்களிலே அவர்களுக்கு ஜெயத்தை பெற்று தந்திருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், சேனைகளின் கர்த்தராகவும் இருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று சாமுவேலினிடத்தில் சொன்னார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தரைத் தவிர வேறு ஒரு ராஜா தேவையில்லை. கர்த்தரே அவர்களுக்கு ராஜாவாயிருக்கிறார். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். ஆனால் அவர்களோ சாமுவேலையும் தள்ளிவிட்டார்கள். கர்த்தரையும் தள்ளிவிட்டார்கள். ஒரு ராஜா தங்கள்மேல் ஆளவேண்டும் என்று சாமுவேலிடத்தில் பிடிவாதமாகச் சொன்னார்கள்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களிடம், "இப்போதும் நீங்கள் வேண்டும் என்று விரும்பித் தெரிந்துகொண்ட ராஜா, இதோ, இருக்கிறார்; இதோ, கர்த்தர் உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினார்" (1சாமு 12:13) என்று சொல்லுகிறார். இந்த ராஜாவை இஸ்ரவேல் ஜனங்களே தங்களுக்கு வேண்டும் என்று விரும்பி தெரிந்துகொண்டார்கள். கர்த்தர் தெரிந்துகொண்ட ராஜா அவருக்கு கனத்தையும் மகிமையையும் கொடுப்பார். இந்த ராஜாவோ இஸ்ரவேல் ஜனங்கள் விரும்பி தெரிந்துகொண்ட ராஜா. சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுடைய மதியீனத்தையும், பாவத்தையும் அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் விரும்பிய பிரகாரம் கர்த்தர் அவர்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தியிருக்கிறார். தங்களுக்கு ராஜா கொடுக்கப்பட்டிருப்பதினால், இஸ்ரவேல் ஜனத்தார் ராஜாதி ராஜாவாகிய கர்த்தரை விட்டு விலகிப்போய்விடக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய் கலகம்பண்ணக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பயந்து அவரை சேவிக்கவேண்டும். கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும். இஸ்ரவேல் ஜனங்களும், அவர்களை ஆளுகிற ராஜாவும் தங்கள் தேவனாகிய கர்த்தரை பின்பற்றுகிறவர்களாயிருக்கவேண்டும் (1சாமு 12:14).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப் பின்பற்றக்கூடாது. கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது. அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். அப்போது அவர்களுக்கும், அவர்களுடைய ராஜாவுக்கும் நன்மையும் சந்தோஷமும் உண்டாகும்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை சேவிக்கவேண்டும். கர்த்தருக்கு தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை கர்த்தரும் கனம்பண்ணுவார். தம்மை அசட்டைபண்ணுகிறவர்களை கர்த்தர் கனஈனம்பண்ணுவார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜா இருந்தாலும், அவர்களுக்கு தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலும், பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் ஒரு ராஜாவின் ஆளுகையின்கீழ் இருந்தாலும், அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் அவர்களை வழிநடத்தும் வண்ணமாக, அவர்களுக்கு முன்பாகப் போகவேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். நல்ல மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளுக்கு முன்னாகப் போவான். அவன் ஆடுகளின் பாதைகளை செவ்வைபண்ணுவான். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரோடு கூடயிருக்கும்போது, கர்த்தரும் அவர்களோடு கூடயிருப்பார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களுக்கு தீங்கு வரும். சாமுவேல் இந்த சத்தியத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார். "நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினீர்களானால், கர்த்தருடைய கை உங்கள் பிதாக்களுக்கு விரோதமாயிருந்ததுபோல உங்களுக்கும் விரோதமாயிருக்கும்" (1சாமு 12:15) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

இடிமுழக்கங்களும் மழையும்
1சாமு 12:16-19

1சாமு 12:16. இப்பொழுது கர்த்தர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யும் பெரிய காரியத்தை நின்று பாருங்கள்.

1சாமு 12:17. இன்று கோதுமை அறுப்பின் நாள் அல்லவா? நீங்கள் உங்களுக்கு ஒரு ராஜாவைக் கேட்டதினால், கர்த்தரின் பார்வைக்குச் செய்த உங்களுடைய பொல்லாப்புப் பெரியதென்று நீங்கள் கண்டு உணரும்படிக்கு, நான் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவேன்; அப்பொழுது இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிடுவார் என்று சொல்லி,

1சாமு 12:18. சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அன்றையதினமே கர்த்தர் இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிட்டார்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் கர்த்தருக்கும் சாமுவேலுக்கும் மிகவும் பயந்து;

1சாமு 12:19. சாமுவேலைப் பார்த்து: நாங்கள் சாகாதபடிக்கு உம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் உம்முடைய அடியாருக்காக விண்ணப்பம் செய்யும்; நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம் என்று ஜனங்கள் எல்லாரும் சொன்னார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று சாமுவேலிடம் கேட்டார்கள். இது அவர்களுடைய பாவம். இந்தப் பாவத்தை அவர்கள் உணரவேண்டும். மேலும் அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருக்கு பயந்து அவரை சேவிக்கவேண்டும். சாமுவேல் இவ்விரண்டு சத்தியங்களையும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உணர்த்த விரும்புகிறார்.

சவுலும், இஸ்ரவேல் மனுஷர் யாவரும் கில்காலிலே கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலிகளை செலுத்தி, அங்கே மிகவும் சந்தோஷங்கொண்டாடுகிறார்கள். தங்கள் பலிகளை கர்த்தர் அங்கீகரிப்பார் என்று விசுவாசித்து அவர்கள் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார்கள். தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டது, கர்த்தருடைய பார்வையிலே பாவமானதல்ல என்று இஸ்ரவேல் ஜனத்தார் நினைக்கிறார்கள்.

ஒரு ராஜா தங்கள்மேல் ஆளவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்டது கர்த்தருக்கு பிரியமான காரியமல்ல. கர்த்தர் சாமுவேலின் விண்ணப்பத்தைக் கேட்டு அவர்கள் மத்தியிலே இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிடுகிறார். இது கோதுமை அறுப்பின் காலம். இது மழை காலமல்ல. பொதுவாக இஸ்ரவேல் தேசத்திலே, இக்காலத்தில் இடிமுழக்கம் உண்டாகாது, மழை பெய்யாது. ஆனால் கர்த்தரோ இக்காலத்திலே இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிடுகிறார்.

இடியும் மழையும் இயற்கையில் உண்டாகக்கூடியவை. இவை சாதாரணமாக நடைபெறுகிற சம்பவம்தான். ஆனாலும் இவை சில சமயங்களில் மனுஷர்மீது பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். கர்த்தருடைய சர்வவல்லமையினால் இடிமுழக்கங்களும் மழையும் உண்டாயிற்று என்பதை சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உணர்த்த விரும்புகிறார். தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலிடம் கேட்டது ஒரு துன்மார்க்கமான காரியம் என்பதை அவர்கள் உணரவேண்டும். சாமுவேல் இதுபற்றி இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவுபடுத்துகிறார்.

"இப்பொழுது கர்த்தர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யும் பெரிய காரியத்தை நின்று பாருங்கள். இன்று கோதுமை அறுப்பின் நாள் அல்லவா? ங்கள் உங்களுக்கு ஒரு ராஜாவைக் கேட்டதினால், கர்த்தரின் பார்வைக்குச் செய்த உங்களுடைய பொல்லாப்புப் பெரியதென்று நீங்கள் கண்டு உணரும்படிக்கு, நான் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவேன்; அப்பொழுது இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிடுவார்" (1சாமு 12:16,17) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களிடம் மென்மையான தொனியில் பேசினால் அவர்கள் சாமுவேலுக்கு செவிகொடுத்து கேட்கமாட்டார்கள். கர்த்தர் பலத்த கிரியைகளை செய்தால் அதைப் பார்த்து, கர்த்தருடைய வல்லமையைப் புரிந்துகொள்வார்கள். ஆகையினால் சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், "இப்பொழுது கர்த்தர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யும் பெரிய காரியத்தை நின்று பாருங்கள்" (1சாமு 12:16) என்று சொல்லுகிறார்.

சாமுவேல் மெதுவாகப் பேசினால் அந்த சத்தம் இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயங்களுக்குப் போய் சேராது. சாமுவேலின் உபதேசங்கள் பனிமழையைப்போல மெதுவாக இறங்கும். அது அவர்களுடைய மனச்சாட்சியில் உரைக்காது. இடி முழக்கமுண்டானால், அதன் முழக்க சத்தம் அவர்களுடைய இருதயங்களில் எதிரொலிக்கும். பனிபெய்வதற்கு பதிலாக, பெருமழை பெய்தால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தையின் வேகத்தைப் புரிந்துகொள்வார்கள்.

இடிமுழக்கங்களும் பெருமழையும் கர்த்தருடைய வல்லமைக்கு அடையாளமாயிருக்கிறது. சாமுவேல் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிற மனுஷன். அவர் தன்னுடைய தேவைகளை மனுஷரிடத்தில் சொல்லுவதற்கு பதிலாக கர்த்தரிடத்தில் சொல்லுகிறவர். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது சந்தோஷமாயிருக்கிறார்கள். சவுல் அவர்களுக்கு ராஜாவாய் கிடைத்திருக்கிறார். இது கோதுமை அறுப்பின் காலமாகவும் இருக்கிறது. அவர்களுடைய களஞ்சியங்களெல்லாம் நிரம்பி வழிகிறது. தேசத்தில் செழிப்பும் தாராளமும் உண்டாயிருக்கிறது.

கர்த்தர் தங்கள்மீது பிரியமாயிருக்கிறாரென்றும், தங்கள் கிரியைகளையெல்லாம் அவர் அங்கீகரிக்கிறார் என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் நினைக்கிறார்கள். தங்களுக்கு கிடைத்திருக்கிற ராஜாவும், கோதுமை அறுவடையும் கர்த்தருடைய ஆசீர்வாதம் என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் சந்தோஷமாகயிருந்தாலும், தேசத்தில் செழிப்பை அனுபவித்தாலும், கர்த்தரால் அவர்களுடைய பாவத்தை உணர்த்த முடியும். உலகப்பிரகாரமான நன்மைகள் இஸ்ரவேல் ஜனத்தாரின் மனக்கண்களை மங்கச் செய்திருந்தாலும், கர்த்தரால் அவர்களுடைய மனக்கண்களை பிரகாசமுள்ளதாக மாற்ற முடியும். கர்த்தர் மாறாதவராகவும், மாற்றத்தை உண்டுபண்ணுகிறவராகவும் இருக்கிறார்.

சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். அது கோதுமை அறுப்பின் நாள். அன்றையதினமே கர்த்தர் இடிமுழக்கங்களையும், மழையையும் கட்டளையிடுகிறார். இது மழைகாலமல்ல. இது அறுவடை காலம். இந்தக் காலத்தில் பொதுவாக மழை பெய்யாது. ஆனால் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இடி முழக்கங்களும் மழையும் உண்டாயிற்று. அப்போது ஜனங்கள் எல்லோரும் கர்த்தருக்கும், சாமுவேலுக்கும் மிகவும் பயப்படுகிறார்கள் (1சாமு 12:18).

தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று சாமுவேலிடத்தில் கேட்டது கர்த்தருக்கு விரோதமான பாவம் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் உணருகிறார்கள். "நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம்" (1சாமு 12:19) என்று இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலிடம் சொல்லுகிறார்கள்.

சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினார். அன்றைய தினமே கர்த்தர் இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிட்டார். இதனால் தங்களுக்கு பேராபத்து உண்டாகும் என்றும், தாங்கள் செத்துப்போவோம் என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் பயப்படுகிறார்கள். சாமுவேல் தங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணினால், கர்த்தர் இடிமுழக்கங்களையும் மழையையும் நிறுத்த கட்டளையிடுவார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நம்புகிறார்கள். அவர்கள் சாமுவேலைப் பார்த்து, "நாங்கள் சாகாதபடிக்கு உம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் உம்முடைய அடியாருக்காக விண்ணப்பம் செய்யும்" (1சாமு 12:19) என்று சொல்லுகிறார்கள்.

தேவனுடைய கோபம் தங்கள்மேல் வரும்போது தாங்கள் அழிந்துபோவோம் என்னும் பயம் இஸ்ரவேல் புத்திரருக்கு வந்திருக்கிறது. கர்த்தரிடத்தில் தாங்கள் ஜெபம்பண்ணினால், கர்த்தர் தங்கள் ஜெபங்களை கேட்பாரோ, கேட்கமாட்டாரோ என்னும் சந்தேகம் இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் உண்டாயிற்று. ஆகையினால் சாமுவேல் தங்களுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டுமென்று, இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலைக் கேட்டுக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலிடத்தில் தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் தங்களுக்கு சாமுவேல் வேண்டாம் என்று அவரை தள்ளிவிட்டார்கள். இப்போதோ தங்களுக்கு சாமுவேலும் வேண்டும் என்றும், அவர் கர்த்தரிடத்தில் தங்களுக்காக விண்ணப்பம் செய்யவும் வேண்டும் என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் சொல்லுகிறார்கள்.

கர்த்தரை சேவியுங்கள் 1சாமு 12:20-25

1சாமு 12:20. அப்பொழுது சாமுவேல் ஜனங்களை நோக்கி: பயப்படாதேயுங்கள்; நீங்கள் இந்தப் பொல்லாப்பையெல்லாம் செய்தீர்கள்; ஆகிலும் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் கர்த்தரை உங்கள் முழுஇருதயத்தோடும் சேவியுங்கள்.

1சாமு 12:21. விலகிப்போகாதிருங்கள்; மற்றபடி பிரயோஜனமற்றதும் ரட்சிக்கமாட்டாததுமாயிருக்கிற வீணானவைகளைப் பின்பற்றுவீர்கள்; அவைகள் வீணானவைகளே.

1சாமு 12:22. கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்.

1சாமு 12:23. நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்.

1சாமு 12:24. நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள்; அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

1சாமு 12:25. நீங்கள் இன்னும் பொல்லாப்பைச் செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள் என்றான்.

தன்னை ஒதுக்கி தள்ளிவிட்ட இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் அழிந்துபோகவேண்டும் என்பது சாமுவேலின் விருப்பமல்ல. அவர்கள் தன்னைத் தள்ளிவிட்டாலும், கர்த்தரைப் பற்றிக்கொள்ளவேண்டும் என்று சாமுவேல் விரும்புகிறார். "நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் கர்த்தரை உங்கள் முழுஇருதயத்தோடும் சேவியுங்கள்" (1சாமு 12:20) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தன்னை வேண்டாம் என்று தள்ளிவிட்டாலும், அவர்கள் கர்த்தரைப்பற்றிக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரை சேவிக்கவேண்டும். இந்த சத்தியத்தை அவர்களுக்கு உணர்த்துவதற்காக, சாமுவேல் இந்த வசனப்பகுதியில், ஒரு சிறிய பிரசங்கச் செய்தியை சொல்லுகிறார். சாமுவேல் சொல்லுகிற செய்தி, யோசுவா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன பிரசங்கச் செய்தியைப்போல இருக்கிறது (யோசு 23,24 ஆகிய அதிகாரங்கள்).

கர்த்தர் சாமுவேலின் விண்ணப்பத்தைக் கேட்டு, அன்றைய தினமே இடிமுழக்கங்களையும் மழையையும் கட்டளையிடுகிறார். ஜனங்களெல்லோரும் கர்த்தருக்கும் சாமுவேலுக்கும் பயப்படுகிறார்கள். இந்தப் பயத்தினால் அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி ஓடிப்போய்விடவேண்டும் என்பது சாமுவேலின் நோக்கமல்ல. அவர்கள் கர்த்தரிடத்திற்கு மறுபடியும் திரும்பி வரவேண்டும் என்பதே சாமுவேலின் நோக்கம். அவர்கள் கர்த்தரிடத்தில் பயத்தோடும் பக்தியோடும் திரும்பி வரவேண்டும்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். சாமுவேல் ஜனங்களை நோக்கி: "பயப்படாதேயுங்கள்; நீங்கள் இந்தப் பொல்லாப்பையெல்லாம் செய்தீர்கள்" (1சாமு 12:20) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பொல்லாப்பினிமித்தமாக, கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். ஆனாலும் அவர்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போய்விடக்கூடாது. அவர்கள் கர்த்தரை தங்கள் முழுஇருதயத்தோடு சேவிக்கவேண்டும்.

இடிமுழக்கங்களையும், மழையையும் பார்த்து அவர்கள் பயப்படவேண்டாம். புயலுக்குப் பின் அமைதி உண்டாகும். எப்போதுமே புயல் அடித்துக்கொண்டிருக்காது. இடிமுழக்கமும் மழையும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக உண்டாயிற்று. அவை கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நின்றுபோகும். "கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்" (1சாமு 12:22) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆறுதலான செய்தியை சொல்லுகிறார்.

கர்த்தர் தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை கனம்பண்ணுவார். தம்மை அசட்டைபண்ணுகிறவர்களை கனஈனம்பண்ணுவார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். ஆனால் சாமுவேலின் காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கி, விக்கிரகங்களைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் விக்கிராராதனைக்காரர்கள். அவர்கள் கர்த்தரை சேவியாமல், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி, மேடைகளிலும், தோப்புகளிலும், விக்கிரகங்களை சேவிக்கிறார்கள்.

சாமுவேல் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனால், வீணான விக்கிரகங்களை பின்பற்றுவார்கள். "விலகிப்போகாதிருங்கள்; மற்றபடி பிரயோஜனமற்றதும் ரட்சிக்கமாட்டாதது மாயிருக்கிற வீணானவைகளைப் பின்பற்றுவீர்கள்; அவைகள் வீணானவைகளே" (1சாமு 12:21) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், விக்கிரகாராதனைக்கு விரோதமான வார்த்தைகளை எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

விக்கிரகங்கள் மாயையானவை. அவை வீணானவை. விக்கிரகங்களுக்கு ஜீவனில்லை. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், அவை தங்களுக்கு நன்மை செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு வீணாய்ப்போகும். தன்னை நம்புகிறவர்களை விக்கிரகங்கள் வஞ்சித்துவிடும். விக்கிரகங்கள் நெரிந்த நாணலைப்போலவும், கீறல் விழுந்த தொட்டிகளைப்போலவும் இருக்கிறது. அவற்றால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தார்மீது பிரியமாயும், கரிசனையாயும் இருக்கிறார். அவர்களுக்காக தொடர்ந்து ஜெபம்பண்ணுவதாகவும், அவர்களுக்கு சத்தியத்தைப் போதிப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார். "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" (1சாமு 12:23) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலைத் தள்ளிவிட்டார்கள். சாமுவேல் தங்களை ஆளக்கூடாது என்றும், ஒரு ராஜா தங்களை ஆளவேண்டும் என்றும் சொன்னார்கள். சாமுவேலோ இஸ்ரவேல் ஜனங்களை தள்ளிவிடவில்லை. அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலிடம், "நாங்கள் சாகாதபடிக்கு உம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் உம்முடைய அடியாருக்காக விண்ணப்பம்செய்யும்" (1சாமு 12:19) என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

சாமுவேலோ அவர்களுக்காக விண்ணப்பம் செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறவனாயிருப்பேன்" (1சாமு 12:23) என்று சாமுவேல் தன்னுடைய ஊழியத்தை உறுதிபண்ணுகிறார். அவர்கள் சாமுவேலிடத்தில் தங்களுக்காக விண்ணப்பம்பண்ணுமாறு மாத்திரமே கேட்டுக்கொண்டார்கள், சாமுவேலோ அவர்களுக்காக விண்ணப்பம்பண்ணுவதாக உறுதிபண்ணிவிட்டு, நன்மையும் செவ்வையுமான வழியை அவர்களுக்கு போதிப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சாமுவேலின் ஆளுகையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தங்களை நியாயம் விசாரிக்கக்கூடாது என்றும், ஒரு ராஜா தங்களை நியாயம் விசாரிக்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் ஜனங்கள் கேட்டார்கள். சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள்மீது கோபப்படவில்லை. அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தர் சொன்ன செய்தியை இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்ல சாமுவேல் எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார்.

சாமுவேல் தன்னுடைய பிரசங்கத்தின் முடிவுரையாக, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு பயந்து அவரை சேவிக்கவேண்டும் என்று ஆலோசனைசொல்லுகிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த மகத்துவமான காரியங்களையெல்லாம் அவர்கள் மறந்துவிடக்கூடாது. "நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள்; அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்" (1சாமு 12:24) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டு, கர்த்தருக்கு விரோதமாக பொல்லாப்பு செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். பொல்லாப்பை விட்டு விலகி வரவேண்டும். அவர்கள் தொடர்ந்து பொல்லாப்பு செய்தால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும். "நீங்கள் இன்னும் பொல்லாப்பைச் செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள்" (1சாமு 12:25) என்னும் எச்சரிப்பின் வாக்கியத்தோடு, சாமுவேல் தன்னுடைய பிரசங்கச் செய்தியை நிறைவு செய்கிறார்.

13 அதிகாரம்

சாமுவேல் சவுலோடு ஐக்கியமாயிருந்த காலம் வரையிலும், சகலமும் நன்மைக்கேதுவாய் நடைபெற்றது (1சாமு 11:7). ஆனால் இப்போது சவுல் இஸ்ரவேலை தனியாக ராஜ்யபாரம் பண்ணுகிறார். சாமுவேல் சவுலுக்கு துணையாகயில்லை. ஆகையினால் சவுலின் ஆட்சியில் சகலமும் தீமைக்கேதுவாக நடைபெறுகிறது. "நீங்கள் இன்னும் பொல்லாப்பைச் செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள்" (1சாமு 12:25) என்று சொன்ன சாமுவேலின் வார்த்தைகள் நிறைவேற ஆரம்பிக்கிறது.

சவுல் ராஜ்யபாரம்பண்ணி ஒரு வருஷமாயிற்று. அவர் இஸ்ரவேலை இரண்டாம் வருஷமாக அரசாளுகிறார். ஆரம்பத்தில் சவுலிடத்தில் காணப்பட்ட ஞானமும் புத்தியும், இப்போது காணப்படவில்லை. சவுல் மதியீனமாய்க் கிரியை செய்கிறார்.

சவுலின் ஆலோசனைகளில் தெளிவுமில்லை. ஞானமுமில்லை (1சாமு 13:1-3). சவுலின் காலத்தில் பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள் (1சாமு 13:4,5). சவுலின் படைவீரர்கள் அவரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள் (1சாமு 13:6,7). சவுல் தெளிவில்லாமல் குழப்பத்திலிருக்கிறார் (1சாமு 13:8-10).

சாமுவேல் சவுலைக் கடிந்துகொள்கிறார் (1சாமு 13:11-13). கர்த்தர் சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாயிராதபடிக்கு தள்ளிவிடுகிறார் (1சாமு 13:14). இஸ்ரவேல் ஜனங்களும் சவுலுக்கு ஆதரவாயில்லை. அவர்கள் கெபிகளிலும் முட்காடுகளிலும் ஒளித்துக்கொள்கிறார்கள் (1சாமு 13:6,7). சவுலோடு கூடயிருக்கிறவர்களின் எண்ணிக்கை குறைந்துபோகிறது (1சாமு 13:15,16). பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்தைக் கொள்ளையிடுகிறார்கள் (1சாமு 13:17,18). எபிரெயரிடம் யுத்த ஆயுதங்கள் இல்லை (1சாமு 13:19-23).

சவுல்
1சாமு 13:1-7

1சாமு 13:1. சவுல் ராஜ்யபாரம்பண்ணி, ஒரு வருஷமாயிற்று; அவன் இஸ்ரவேலை இரண்டாம் வருஷம் அரசாண்டபோது,

1சாமு 13:2.இஸ்ரவேலில் மூவாயிரம்பேரைத் தனக்குத் தெரிந்துகொண்டான்; அவர்களில் இரண்டாயிரம்பேர் சவுலோடேகூட மிக்மாசிலும் பெத்தேல் மலையிலும், ஆயிரம்பேர் யோனத்தானோடேகூடப் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலும் இருந்தார்கள்; மற்ற ஜனங்களை அவரவர் கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டான்.

1சாமு 13:3. யோனத்தான் கேபாவிலே தாணையம் இருந்த பெலிஸ்தரை முறிய அடித்தான்; பெலிஸ்தர் அதைக் கேள்விப்பட்டார்கள்; ஆகையினால் இதை எபிரெயர் கேட்கக்கடவர்கள் என்று சவுல் தேசமெங்கும் எக்காளம் ஊதுவித்தான்.

1சாமு13:4. தாணையம் இருந்த பெலிஸ்தரைச் சவுல் முறிய அடித்தான் என்றும், இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு அருவருப்பானார்கள் என்றும், இஸ்ரவேலெல்லாம் கேள்விப்பட்டபோது, ஜனங்கள் சவுலுக்குப் பின்செல்லும்படி கில்காலுக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

1சாமு 13:5. பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம் பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரைவீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டுவந்து, பெத்தாவேனுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள்.

1சாமு 13:6. அப்பொழுது இஸ்ரவேலர் தங்களுக்கு உண்டான இக்கட்டைக் கண்டபோது, ஜனங்கள் தங்களுக்கு உண்டான நெருக்கத்தினாலே கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக்கொண்டார்கள்.

1சாமு 13:7. எபிரெயரில் சிலர் யோர்தானையும் கடந்து, காத் நாட்டிற்கும் கீலேயாத் தேசத்திற்கும் போனார்கள்; சவுலோ இன்னும் கில்காலில் இருந்தான்; சகல ஜனங்களும் பயந்துகொண்டு அவனுக்குப் பின் சென்றார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பயப்படவுமில்லை. அவரை சேவிக்கவுமில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். இஸ்ரவேல் தேசம் இப்போது பலவீனமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலும் பலவீனமாயிருக்கிறார். சவுல் ராஜ்யபாரம்பண்ணி ஒரு வருஷமாயிற்று. அவர் இஸ்ரவேலை இரண்டாம் வருஷம் ஆட்சி செய்கிறார். அரசாட்சி சீராக நடைபெறவில்லை. சவுலின் காரியங்கள் எதுவும் நேர்த்தியாயில்லை. சகலமும் குழப்பமாயிருக்கிறது. சவுலின் ஒரு வருஷ ஆட்சிக்காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே எந்த நன்மையும் உண்டாகவில்லை. சவுல் ராஜ்யபாரம்பண்ணின முதலாவது வருஷத்தில், ஒன்றும் செய்யாமல் அமைதியாயிருந்தார். செயலிழந்து காணப்பட்டார்.

சவுல் இரண்டாம் வருஷம் ராஜ்யபாரம் பண்ணும்போது, அவருடைய மதியீனம் வெளிப்படுகிறது. சவுல் இஸ்ரவேலில் மூவாயிரம்பேரைத் தனக்குத் தெரிந்துகொள்கிறார்; அவர்களில் இரண்டாயிரம்பேர் சவுலோடேகூட மிக்மாசிலும் பெத்தேல் மலையிலும், ஆயிரம்பேர் யோனத்தானோடேகூடப் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலும் இருக்கிறார்கள்; சவுல் மற்ற ஜனங்களை அவரவர் கூடாரங்களுக்கு அனுப்பிவிடுகிறார் (1சாமு 13:2).

சவுல் மூவாயிரம்பேரை தன்னுடைய சொந்த வேலைக்கு தெரிந்துகொண்டாரா அல்லது தன்னுடைய சொந்த பாதுகாப்புக்கு தெரிந்துகொண்டாரா என்பது தெரியவில்லை. அல்லது தனக்கு கனமும், மகிமையும், மேன்மையும் உண்டாகவேண்டும் என்பதற்காக, தன்னோடு எப்போதும் கூடயிருப்பதற்கு சவுல் மூவாயிரம் பேரை தனக்குத் தெரிந்துகொண்டாரா என்பதும் தெரியவில்லை. ஒருவேளை பெலிஸ்தர் மூலமாய் இஸ்ரவேல் தேசத்திற்கு ஆபத்து வரும் என்று எதிர்பார்த்து, அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண மூவாயிரம் பேரை சவுல் தனக்கு தெரிந்துகொண்டாரா என்பதும் தெரியவில்லை.

பெலிஸ்தரின் சேனை மிகவும் பெரியது. அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டுமென்றால் மூவாயிரம் பேர் கொண்ட படைவீரர்கள் போதுமானவர்களாயிருக்கமாட்டார்கள். ஒருவேளை சவுல் தன்னுடைய படையிலே, மிகவும் விசேஷமான மூவாயிரம் பேரை மாத்திரம் தனக்கு தெரிந்துகொண்டிருக்கலாம். இந்த மூவாயிரம் பேரே தனக்கு போதும் என்று சவுல் நினைத்திருக்கலாம்.

சவுல் ஏற்கெனவே அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். அப்போது சவுலின் சேனையில் இஸ்ரவேல் புத்திரர் திரளாயிருந்தார்கள் (1சாமு 11:8-11). ஆனால் சவுல் இப்போது அவர்களில் மூவாயிரம் பேரை மாத்திரம் தெரிந்துகொண்டு, மற்ற ஜனங்களை அவரவர் கூடாரங்களுக்கு அனுப்பிவிடுகிறார்.

சவுல் தனக்குத் தெரிந்துகொண்ட மூவாயிரம் பேரில், இரண்டாயிரம்பேர் மாத்திரமே அவரோடு கூடயிருக்கிறார்கள். மற்ற ஆயிரம் பேர் சவுலின் குமாரனாகிய யோனத்தானோடேகூட, பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலிருக்கிறார்கள்.

யோனத்தான் சவுலின் கட்டளை பிரகாரம் கேபாவிலே தாணையமிருந்த பெலிஸ்தரை முறியடிக்கிறான் (1சாமு 13:3). பெலிஸ்தர் இந்தச் செய்தியைக் கேள்விப்படுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள்.

யோனத்தான் கேபாவிலே தாணையமிருந்த பெலிஸ்தரை முறியடித்த செய்தியை, இஸ்ரவேல் தேசத்திலுள்ள எல்லா ஜனங்களும் கேள்விப்படவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். இஸ்ரவேலருக்கு இந்த வசனத்தில் "எபிரெயர்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர் எபிரெய பாஷையைப் பேசுவதினால், இவர்கள் எபிரெயர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

யோனத்தான் எபிரெயரை முறியடித்த செய்தியை பெலிஸ்தர் கேள்விப்படுகிறார்கள். பெலிஸ்தரெல்லாம் ஒன்றாய்க் கூடி இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இந்தச் செய்தியை எபிரெயர் கேட்கக்கடவர்கள் என்று சவுல் இஸ்ரவேல் தேசமெங்கும் எக்காளம் ஊதுவிக்கிறார்.

தாணையம் இருந்த பெலிஸ்தரைச் சவுல் முறிய அடித்தான் என்றும், இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு அருவருப்பானார்கள் என்றும், இஸ்ரவேலெல்லாம் கேள்விப்பட்டபோது, ஜனங்கள் சவுலுக்குப் பின்செல்லும்படி கில்காலுக்கு வரவழைக்கப்படுகிறார்கள் *(1சாமு 13:4)*.

சவுல் தன்னுடைய சேனையிலுள்ள யுத்தவீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறார். ஏற்கெனவே சவுலோடுகூட ஏராளமான யுத்தவீரர்கள் இருந்தார்கள். ஆனால் சவுலோ இஸ்ரவேலிலே மூவாயிரம் பேரை மாத்திரம் தெரிந்துகொண்டு, மற்ற யுத்தவீரர்களையெல்லாம் அவரவர் கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டார். இப்போது கூடாரங்களுக்கு போன யுத்தவீரர்களை மறுபடியுமாய் தன்னுடைய சேனையில் சேர்த்துக்கொள்வதற்கு சவுல் திட்டமிடுகிறார்.

சவுலுக்கு ஆலோசனை சொல்ல சாமுவேல் அவரோடு கூடயில்லை. ஆகையினால் சவுலால் தெளிவாய்ச் சிந்திக்க முடியவில்லை. சவுல் மதியீனமான காரியங்களை செய்கிறார். தன்னுடைய படையைக் குறைக்கிறார். அதன் பின்பு அதைக் கூட்டுகிறார். சவுலுக்கு ஞானம் இருக்குமென்றால், யோனத்தான் கேபாவிலே தாணையமிருந்த பெலிஸ்தரை முறியடிப்பதற்கு முன்பாக, தன்னுடைய படைபலத்தை அதிகரிக்கச் செய்திருப்பார்.

இப்போது சவுல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கெல்லாம் எக்காளம் ஊதி செய்தி சொல்லுகிறார். எல்லா ஜனங்களும் சவுலுக்கு பின்னால் வரவேண்டும் என்னும் செய்தி அறிவிக்கப்படுகிறது. சவுல் இஸ்ரவேல் ஜனங்களை கில்காலுக்கு வரவழைக்கிறார்.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறார்கள். பெலிஸ்தரின் சேனை மிகவும் பெரிதாயிருக்கிறது. பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம் பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரைவீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டுவந்து, பெத்தாவேலுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்குகிறார்கள் *(1சாமு 13:5)*.

பெலிஸ்தர் இதற்கு முன்பு இவ்வளவு யுத்தவீரர்களோடு, இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்ததில்லை. அவர்களிடத்தில் ரதங்களும் குதிரைகளும் இருக்கிறது. யுத்தவீரர்களின் எண்ணிக்கையும் மணலத்தனையாயிருக்கிறது. பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ண வந்ததற்கு, சவுலின் மதியீனமே காரணம். சவுல் தன் குமாரன் யோனத்தானை கேபாவிலே தாணையமிருந்த பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண சென்னார். யோனத்தானும் கேபாவிலே இருந்த பெலிஸ்தரை முறியடித்தான். இதைக் கேள்விப்பட்டு, பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வருகிறார்கள்.

சவுலுக்கு கர்த்தருடைய ஆலோசனை கிடைத்திருந்தால், அவர் தன்னுடைய குமாரன் யோனத்தானை, கேபாவிலே தாணையமிருந்த பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண அனுப்பியிருக்கமாட்டார். பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதற்கு முன்பாக, சவுல் தன்னுடைய படைபலத்தையும், பெலிஸ்தருடைய படைபலத்தையும் ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும். சவுலிடத்தில் மூவாயிரம் பேர் மாத்திரமே இருக்கிறார்கள். பெலிஸ்தரிடத்திலோ கடற்கரை மணலத்தனையாய் படைவீரர்கள் இருக்கிறார்கள்.

சவுலுடைய கட்டளையின் பிரகாரமாக இஸ்ரவேல் ஜனங்கள் கில்காலிலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் பெலிஸ்தர் தங்களுக்கு விரோதமாக மிக்மாசிலே பாளயமிறங்கியிருப்பதை கேள்விப்படுகிறார்கள். பெலிஸ்தரிடத்தில் முப்பதினாயிரம் இரதங்களும், ஆறாயிரம் குதிரை வீரர்களும், கடற்கரை மணலத்தனை ஜனங்களும் இருப்பதை கேள்விப்படுகிறார்கள். பெலிஸ்தருடைய சேனையில் இவ்வளவு திரளான எண்ணிக்கையில் படைவீரர்கள் இருப்பார்கள் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் எதிர்பார்க்கவில்லை. பெலிஸ்தரின் திரளான சேனையைப் பார்த்து இஸ்ரவேலர் பயப்படுகிறார்கள். தங்களுக்கு இக்கட்டும் ஆபத்தும் உண்டாயிற்று என்பதைப் புரிந்துகொள்கிறார்கள்.

கில்காலுக்கு வரவழைக்கப்பட்ட இஸ்ரவேலர் எல்லோரும் பலசாலிகளோ அல்லது பராமக்கிரசாலிகளோ அல்ல. அவர்களுக்கு யுத்தம்பண்ண தெரியாது. அவர்களிடத்தில் திடநம்பிக்கையும் தைரியமுமில்லை. அவர்கள் பெலிஸ்தரின் திரளான சேனையைப் பற்றிக் கேள்விப்பட்டு பயத்தினால் நடுங்குகிறார்கள்.

இஸ்ரவேலர் தங்களுக்கு உண்டான இக்கட்டைக் கண்டபோது, ஜனங்கள் தங்களுக்கு உண்டான நெருக்கத்தினாலே கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக்கொள்கிறார்கள் (1சாமு 13:6).

சத்துருக்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண வேண்டிய இஸ்ரவேலர்கள், யுத்தம்பண்ணாமலேயே, பயத்தினால் தோற்று ஓடிப்போகிறார்கள். தங்களுடைய ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள காடுகளிலே போய் தங்களை ஒளித்துக்கொள்கிறார்கள்.

தாங்கள் எங்கே ஓடிப்போய் ஒளித்துக்கொண்டாலும், பெலிஸ்தர் தங்களை பின்தொடர்ந்து வந்து, தங்களை கொன்றுபோடுவார்கள் என்று பயந்து, எபிரெயரில் சிலர் யோர்தானையும் கடந்து, காத் நாட்டிற்கும் கீலேயாத் தேசத்திற்கும் போகிறார்கள் (1சாமு 13:7).

சவுலோ இன்னும் கில்காலிலே இருக்கிறார். சவுலோடு கூடயிருக்கிற ஜனங்கள் பயத்தினால் நடுங்குகிறார்கள். அவர்கள் பயந்துகொண்டு சவுலுக்கு பின்செல்கிறார்கள். சாமுவேல் கில்காலுக்கு வருவதாக சொல்லியிருந்தார். ஆனால் சாமுவேலும் அங்கே வரவில்லை. கில்காலுக்கு வந்த இஸ்ரவேல் ஜனங்களால், சவுலோடுகூட சாமுவேலைப் பார்க்க முடியவில்லை. அதனால் அவர்களுக்கு கலக்கமும், பயமும், குழப்பமும் உண்டாயிற்று.

பெலிஸ்தரோ இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணும்படி மிக்மாசிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். சாமுவேல் ஏழுநாளைக்குள்ளே கில்காலுக்கு வருவதாக சொல்லியிருந்தார். சவுலும் ஏழுநாள் மட்டும் காத்திருக்கிறார். ஆனால் சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை. ஆகையினால் இஸ்ரவேல் ஜனங்கள் சவுலை விட்டு சிதறிப்போகிறார்கள். ஏற்கெனவே பயத்திலிருக்கிறவர்களுக்கு, சாமுவேல் வராததினால் மிகுந்த பயமுண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்களில் அநேகர் பெலிஸ்தரின் திரளான சேனையைப் பார்த்து பயப்படுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரிடம் குற்றவுணர்வு காணப்படுகிறது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேலர் கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய் கலகம்பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பயப்படவுமில்லை, கர்த்தரை சேவிக்கவுமில்லை. அவர்கள் பொல்லாப்பு செய்திருக்கிறார்கள். "நீங்கள் இன்னும் பொல்லாப்பை செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள்" (1சாமு 12:25) என்று சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் சாமுவேலின் வார்த்தைகளை நினைத்து பயப்படுகிறார்கள். குற்றமுள்ள மனது மனுஷரை கோழைகளாக்கிவிடுகிறது.

தங்களுக்கு பெலிஸ்தர் மூலமாய் ஆபத்து வந்திருக்கிறது என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் புரிந்துகொள்கிறார்கள். இந்த ஆபத்திலிருந்து தப்பிப்பதற்காக, எபிரெயரில் சிலர் யோர்தானையும் கடந்து, காத் நாட்டிற்கும், கீலேயாத் நாட்டிற்கும் ஓடிப்போகிறார்கள். இதற்கு முன்பு இதே கீலேயாத்தில்தான் இஸ்ரவேலர் அம்மோனியரை முறியடித்தார்கள். இப்போது இஸ்ரவேலர் பெலிஸ்தரைப் பார்த்து பயந்து கீலேயாத்திற்கு ஓடிப்போகிறார்கள்.

சவுலோடு கூடயிருக்கிறவர்களிடத்தில் திடநம்பிக்கை இல்லை. அவர்களிடத்தில் பலமுமில்லை பராக்கிரமமுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் பயந்துகொண்டு சவுலுக்கு பின்செல்கிறார்கள். இஸ்ரவேலரில் ஏராளமானோர் ஏற்கெனவே சவுலை விட்டு தப்பித்து ஓடிப்போய்விட்டார்கள். இவர்கள் மாத்திரமே சவுலோடு கூடயிருக்கிறார்கள். இவர்களால் தப்பித்து ஓடிப்போகமுடியவில்லை. ஒருவேளை இவர்கள் எங்கும் ஓடிப்போகமுடியாதபடிக்கு, சவுல் இவர்களைத் தடைபண்ணியிருந்திருக்கலாம். இவர்கள் யுத்தவீரர்களாக இல்லை. பயத்தோடும் நடுக்கத்தோடும் இருக்கிறார்கள்.

சர்வாங்கதகனபலி
1சாமு 13:8-14

1சாமு 13:8. அவன் தனக்குச் சாமுவேல் குறித்த காலத்தின்படி ஏழுநாள்மட்டும் காத்திருந்தான்; சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை, ஜனங்கள் அவனை விட்டுச் சிதறிப்போனார்கள்.

1சாமு 13:9. அப்பொழுது சவுல்: சர்வாங்கதகனபலியையும் சமாதானபலிகளையும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, சர்வாங்கதகனபலியைச் செலுத்தினான்.

1சாமு 13:10. அவன் சர்வாங்க தகனபலியிட்டு முடிகிறபோது, இதோ, சாமுவேல் வந்தான்; சவுல் அவனைச் சந்தித்து வந்தனஞ் செய்ய அவனுக்கு எதிர்கொண்டுபோனான்.

1சாமு 13:11. நீர் செய்தது என்ன என்று சாமுவேல் கேட்டதற்கு, சவுல்: ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே,

1சாமு 13:12. கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான்.

1சாமு 13:13. சாமுவேல் சவுலைப் பார்த்து: புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார்.

1சாமு 13:14. இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்.

சாமுவேல் கில்காலுக்கு வரும் முன்னே சவுல் சர்வாங்க தகனபலியையும் சமாதான பலிகளையும் செலுத்துகிறார். சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணின போது "நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிப்போ; சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தும்படிக்கு, நான் உன்னிடத்தில் வருவேன்; நான் உன்னிடத்தில் வந்து, நீ செய்யவேண்டியதை உனக்கு அறிவிக்குமட்டும், ஏழுநாள் காத்திரு" (1சாமு 10:8) என்று சொன்னார்.

ஒருவேளை சாமுவேல் சவுலை அபிஷேகித்தபோது சொன்ன இந்த வார்த்தைகளை, அவர் வேறொரு சமயத்தில், மறுபடியும் சொல்லியிருக்கவேண்டும். சவுலோ சாமுவேல் தனக்கு சொன்ன வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவில்லை. சாமுவேல் இல்லாமலேயே தான் சர்வாங்க தகனபலியையும் சமாதான பலிகளையும் செலுத்தலாம் என்று சவுல் தீர்மானிக்கிறார்.

சாமுவேலின் ஆலோசனைகள் இல்லாமலேயே, பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகலாம் என்று சவுல் தீர்மானம்பண்ணுகிறார். தன்னால் எல்லாம் செய்ய முடியும் என்றும், தனக்கு சாமுவேலின் உதவி தேவையில்லை என்றும் சவுல் நினைத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தருடைய தீர்க்கதரிசிக்காக காத்திருப்பதினால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று சவுல் நினைக்கிறார். சாமுவேல் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதோ அல்லது அவர் தனக்கு ஆலோசனை சொல்லுவதோ பிரயோஜனமில்லாத காரியம் என்று சவுல் நினைக்கிறார்.

சாமுவேலின் மனதை தெரிந்துகொள்வதற்கு சவுல் தன்னுடைய சேவகரில் ஒருவரையும் அவரிடத்திற்கு அனுப்பவில்லை. சாமுவேல் கில்காலுக்கு வந்தபோது, சவுல் அவரை சந்தித்து வந்தனம் செய்ய அவருக்கு எதிர்கொண்டு போகிறார். தான் செய்த தப்பிதங்களுக்காக சவுல் மனம் வருந்தவில்லை. அதற்கு பதிலாக சவுல் தன்னுடைய செய்கைகளை நியாயப்படுத்தி பேசுகிறார்.

சவுல் சர்வாங்க தகனபலியிட்டு முடிகிறபோது, சாமுவேல் அங்கே வருகிறார். அப்போது சாமுவேல் சவுலிடம், "நீர் செய்தது என்ன" என்று கேட்கிறார். சவுல் சாமுவேலுக்கு பிரதியுத்தரமாக, "ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன்" *(1சாமு 13:11,12)* என்றும் சொல்லுகிறார்.

சவுல் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது, அவர் தன்னுடைய தப்பிதங்களுக்கு மனம் வருந்தியதுபோல தெரியவில்லை. சவுல் சாமுவேலைப் பார்த்தபோது, சவுல் அவரை சந்தித்து வந்தனம் செய்ய அவருக்கு எதிர்கொண்டு போகிறார். சாமுவேலைப்போலவே தன்னாலும் தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்த முடியும் என்னும் நம்பிக்கை சவுலிடத்தில் காணப்படுகிறது.

"சவுல் சாமுவேலை சந்தித்து வந்தனம் செய்ய அவருக்கு எதிர்கொண்டு போனார்" என்னும் வாக்கியத்திற்கு "சவுல் சாமுவேலை சந்தித்து, அவரை ஆசீர்வதிக்க, எதிர்கொண்டுபோனார்" என்று பொருள். சவுல் தன்னை ஒரு ஆசாரியராகவே பாவித்துக்கொள்கிறார். பலிசெலுத்துகிறவர்கள் எல்லோரும் ஆசாரியராக முடியாது.

சவுல் தப்பிதம் செய்துவிட்டு, இந்த தப்பிதத்திற்கு சாமுவேலே காரணம் என்று சொல்லுகிறார். "குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததினால்" தான் சர்வாங்க தகனபலியை செலுத்தியதாக சவுல் சாமுவேலுக்கு சொல்லுகிறார். ஜனங்கள் சிதறிப்போகிறார்கள், சாமுவேல் குறித்த நாட்களின் திட்டத்தில் வரவில்லை, பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறார்கள் ஆகிய காரணங்களை சவுல் தனக்கு சாதகமாகச் சொல்லுகிறார்.

தான் சர்வாங்க தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்தியது தன்னுடைய புத்திசாலித்தனம் என்றும், இது ஞானமுள்ள செய்கை என்றும் சவுல் நினைக்கிறார். இது மாத்திரமல்ல. சவுல் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்காகவே பலிகளை செலுத்தியிருப்பதாகச் சொல்லுகிறார். ஆகையினால் தான் பலிசெலுத்தியது, தன்னுடைய பயபக்தியினால் செய்த காரியம் என்று சவுல் விவாதம்பண்ணுகிறார்.

சவுல் தன்னை பக்தியுள்ளவர்போல் காண்பித்துக்கொள்கிறார். கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்கு முன்பாகவும், கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்துவதற்கு முன்பாகவும், தான் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை என்று சொல்லி, சவுல் தன்னுடைய பக்தியைப்பற்றிப் பேசுகிறார்.

"கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன்" (1சாமு 13:12) என்று சவுல் தான் பலிசெலுத்தியதற்கான காரணத்தை சொல்லுகிறார்.

சவுல் பலிசெலுத்தியதினால், அவருடைய மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்தவில்லை. அவர் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து, எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியை செலுத்தியிருக்கிறார்.

சவுல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், அதை மீறி பாவம் செய்திருக்கிறார். சாமுவேல் சவுலின் பாவத்திற்கான தண்டனைகளை அறிவிக்கிறார். சாமுவேல் சவுலைப் பார்த்து: "புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்" (1சாமு 13:13) என்று சொல்லுகிறார்.

சவுல் தனக்குத்தானே சத்துருவாயிருக்கிறார். ஆகையினால் அவர் புத்தியீனமான காரியத்தை செய்திருக்கிறார். கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய ஆளுகைக்கு விரோதமாகவும் சவுல் கலகம் செய்திருக்கிறார். கர்த்தர் தனக்கு விதித்த கட்டளையை சவுல் கைக்கொள்ளவில்லை. கர்த்தர் சவுலின் கீழ்ப்படிதலை சோதித்துப் பார்க்க விரும்புகிறார். ஆனால் சவுலோ கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை. பாவம் மதியீனமானது. பாவம் செய்கிறவர்கள் மதியீனமானவர்கள்.

சாமுவேல் சவுலின்மீது சாபமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். பாவத்தில் சிறிய பாவம், பெரிய பாவம் என்று வித்தியாசமில்லை. தமக்கு விரோதமாக செய்யப்படும் எல்லா பாவங்களையும் கர்த்தர் ஒரே மாதிரியாகவே பாவிக்கிறார். சவுலோ கர்த்தருடைய பரலோக ராஜ்யத்திற்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார். தன்னுடைய தேவனாகிய கர்த்தர் தனக்கு விதித்த கட்டளையை சவுல் கைக்கொள்ளாமல் போனார்.

சாமுவேல் சவுலைப் பார்த்து, "இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே" (1சாமு 13:14) என்று சொல்லுகிறார்.

சவுல் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் பொறுமையாகக் காத்திருந்தால், இந்தத் தண்டனைக்கு தப்பித்திருக்கலாம். அவர் பலிசெலுத்திவதை தவிர்த்திருக்கவேண்டும். சாமுவேல் சொன்ன பிரகாரம் அவருடைய வருகைக்காக காத்திருக்கவேண்டும். தேசத்தை ஆளுகை செய்கிறவர்களுக்கு வீரமும், வேகமும் அவசியமாயிருப்பதுபோலவே, பொறுமையும், நிதானமும், அவசியமாயிருக்கிறது. சவுல் தன்னுடைய பொறுமையை இழந்தார். அதனால் அவர் தன்னுடைய ராஜ்யபாரத்தையும் இழந்தார்.

இஸ்ரவேலரிடத்தில் ஆயுதமில்லை 1சாமு 13:15-23

1சாமு 13:15. சாமுவேல் எழுந்திருந்து, கில்காலைவிட்டு, பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவுக்குப் போனான்; சவுல் தன்னோடேகூட இருக்கிற ஜனத்தைத் தொகைபார்க்கிறபோது, ஏறக்குறைய அறுநூறுபேர் இருந்தார்கள்.

1சாமு 13:16. சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் அவர்களோடேகூட இருக்கிற ஜனங்களும் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவில் இருந்துவிட்டார்கள்; பெலிஸ்தரோ மிக்மாசிலே பாளயமிறங்கியிருந்தார்கள்.

1சாமு 13:17. கொள்ளைக்காரர் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து மூன்று படையாய்ப் புறப்பட்டுவந்தார்கள்; ஒரு படை ஒப்ராவழியாய்ச் சூவால் நாட்டிற்கு நேராகப் போயிற்று.

1சாமு 13:18. வேறொரு படை பெத்தொரோன் வழியாய்ப் போயிற்று; வேறொரு படை வனாந்தரத்தில் இருக்கிற செபோயீமின் பள்ளத்தாக்குக்கு எதிரான எல்லைவழியாய்ப் போயிற்று.

1சாமு 13:19. எபிரெயர் பட்டயங்களையாகிலும் ஈட்டிகளையாகிலும் உண்டுபண்ணாதபடிக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று பெலிஸ்தர் சொல்லியிருந்தபடியால், இஸ்ரவேல் தேசத்தில் எங்கும் ஒரு கொல்லன் அகப்படவில்லை.

1சாமு 13:20. இஸ்ரவேலர் யாவரும் அவரவர் தங்கள் கொழுவிரும்புகளையும், தங்கள் மண்வெட்டிகளையும், தங்கள் கோடரிகளையும், தங்கள் கடப்பாரைகளையும் தீட்டிக் கூர்மையாக்குகிறதற்கு, பெலிஸ்தரிடத்துக்குப் போகவேண்டியதாயிருந்தது.

1சாமு 13:21. கடப்பாரைகளையும், மண்வெட்டிகளையும், முக்கூருள்ள ஆயுதங்களையும், கோடரிகளையும், தாற்றுக்கோல்களையும் கூர்மையாக்குகிறதற்கு அரங்கள் மாத்திரம் அவர்களிடத்தில் இருந்தது.

1சாமு 13:22. யுத்தநாள் வந்தபோது, சவுலுக்கும் அவன் குமாரனாகிய யோனத்தானுக்குமேயன்றி, சவுலோடும் யோனத்தானோடும் இருக்கிற ஜனங்களில் ஒருவர் கையிலும் பட்டயமும் ஈட்டியும் இல்லாதிருந்தது.

1சாமு 13:23. பெலிஸ்தரின் பாளயம் மிக்மாசிலிருந்து போகிற வழிமட்டும் பரம்பியிருந்தது.

சாமுவேல் எழுந்திருந்து, கில்காலை விட்டு, பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவுக்குப் போகிறார். சாமுவேலின் மனதில் சந்தோஷமோ சமாதானமோ இல்லை. அவர் மிகுந்த வேதனையோடு கில்காலிலிருந்து கிபியாவுக்குப் போகிறார். பென்யமீன் நாட்டிலுள்ள கிபியா சவுலின் சொந்த ஊர். சாமுவேல் அந்த ஊருக்குப் போகிறார். சாமுவேல் சவுலை முற்றிலுமாய்க் கைவிட்டுவிடவில்லை என்பதற்கு, சாமுவேல் கிபியாவுக்குப் போவது ஒரு அடையாளம்.

சவுலும் சாமுவேலுக்குப் பின்னால் கிபியாவுக்குப் போகிறார். அங்கே தன்னுடைய படைவீரர்களை தொகை பார்க்கிறார். சவுல் தன்னோடே கூடயிருக்கிற ஜனத்தை தொகை பார்க்கிறபோது, ஏறக்குறைய அறுநூறு பேர் இருக்கிறார்கள்.

சவுலும் அவருடைய குமாரனாகிய யோனத்தானும் அவர்களோடேகூட இருக்கிற ஜனங்களும் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவில் இருந்துவிடுகிறார்கள்; பெலிஸ்தரோ மிக்மாசிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள் (1சாமு 13:16).

பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்தைக் கொள்ளையிடுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தீங்கு செய்கிறார்கள். பெலிஸ்தர் தங்களுடைய சேனையை மூன்று படையாகப் பிரித்து, இஸ்ரவேல் தேசத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கும் அவர்களை அனுப்பி, இஸ்ரவேல் தேசத்தை மொத்தமாய்க் கொள்ளையிடுகிறார்கள்.

கொள்ளைக்காரர் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து மூன்று படையாய்ப் புறப்பட்டுவருகிறார்கள்; ஒரு படை ஒப்ராவழியாய்ச் சூவால் நாட்டிற்கு நேராகப் போயிற்று. வேறொரு படை பெத்தொரோன் வழியாய்ப் போயிற்று; வேறொரு படை வனாந்தரத்தில் இருக்கிற செபோயீமின் பள்ளத்தாக்குக்கு எதிரான எல்லைவழியாய்ப் போயிற்று (1சாமு 13:17,18).

பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்தைக் கொள்ளையிட்டாலும், சவுலும் அவருடைய குமாரனாகிய யோனத்தானும் அவர்களோடேகூட இருக்கிற ஜனங்களும் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவில் இருந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தரைப் பார்த்து பயப்படுகிறார்கள். இஸ்ரவேலருடைய ஐசுவரியங்களையெல்லாம் பெலிஸ்தர் கொள்ளையிட்டு கொண்டு போய்விடுகிறார்கள். இஸ்ரவேலரின் தானியங்களெல்லாம் பெலிஸ்தரின் கையிலே இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரால் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியவில்லை. இஸ்ரவேலரிடத்தில் யுத்த ஆயுதம் எதுவுமில்லை.

எபிரெயர் பட்டயங்களையாகிலும் ஈட்டிகளையாகிலும் உண்டுபண்ணாதபடிக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று பெலிஸ்தர் சொல்லியிருந்தபடியால், இஸ்ரவேல் தேசத்தில் எங்கும் ஒரு கொல்லன் அகப்படவில்லை (1சாமு 13:19). சவுலுக்கும் அவருடைய குமாரனாகிய யோனத்தானுக்குமேயன்றி, சவுலோடும் யோனத்தானோடும் இருக்கிற ஜனங்களில் ஒருவர் கையிலும் பட்டயமும் ஈட்டியும் இல்லாதிருக்கிறது (1சாமு 13:22).

பெலிஸ்தர் மிகவும் தந்திரமாக இஸ்ரவேலரை ஒடுக்குகிறார்கள். கொல்லர் இருந்தால்தான், பட்டயங்களையும் ஈட்டிகளையும் உண்டுபண்ண முடியும். பெலிஸ்தரோ இஸ்ரவேல் தேசத்திலுள்ள கொல்லர்களையெல்லாம் கொன்றுபோட்டார்களா அல்லது அவர்களை கைது செய்து, தங்கள் தேசத்திற்கு கொண்டு போய்விட்டார்களா என்பது தெரியவில்லை. இஸ்ரவேல் தேசத்தில் ஒரு கொல்லன்கூட இல்லை.

இஸ்ரவேலர் யாவரும் அவரவர் தங்கள் கொழுவிரும்புகளையும், தங்கள் மண்வெட்டிகளையும், தங்கள் கோடரிகளையும், தங்கள் கடப்பாரைகளையும் தீட்டிக் கூர்மையாக்குகிறதற்கு, பெலிஸ்தரிடத்துக்குப் போகவேண்டியதாயிருக்கிறது (1சாமு 13:20).

இஸ்ரவேல் ஜனத்தார் விவசாய கருவிகளை செய்யவேண்டும். அதற்காக அவர்கள் பெலிஸ்தருடைய தேசத்தில் போய் அங்கே உள்ள கொல்லரிடம், விவசாய கருவிகளை செய்துகொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வருவார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் பட்டயங்களையோ ஈட்டிகளையோ செய்வதற்கு பெலிஸ்தர் அனுமதி கொடுக்கமாட்டார்கள். இஸ்ரவேலருடைய வீடுகளில் யுத்த ஆயுதங்கள் ஒன்றுமில்லை. மண்வெட்டிகளும், கடப்பாரைகளும் மாத்திரமே இருக்கிறது. விவசாய கருவிகளை செய்வதற்கும், அவற்றை தீட்டி கூர்மையாக்குவதற்கும் இஸ்ரவேலர் பெலிஸ்தரிடத்திற்குப் போகவேண்டும்.

ஆனாலும் இஸ்ரவேலர் தங்கள் கைகளில் அரங்களை வைத்திருப்பதற்கு பெலிஸ்தர் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். கடப்பாரைகளையும், மண்வெட்டிகளையும், முக்கூருள்ள ஆயுதங்களையும், கோடரிகளையும், தாற்றுக்கோல்களையும் கூர்மையாக்குகிறதற்கு அரங்கள் மாத்திரம் அவர்களிடத்தில் இருக்கிறது (1சாமு 13:21).

இஸ்ரவேல் ஜனத்தார் ஆரம்பத்திலேயே தங்களுக்கு யுத்த ஆயுதங்களை செய்திருக்கவேண்டும். தங்களுக்குத் தேவையான இராணுவ தளவாடங்களை சேகரித்து வைத்திருக்கவேண்டும். ஆனால் அவர்களுக்கு இந்த யோசனை ஒன்றும் வரவில்லை. பெலிஸ்தர் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தவுடன், எங்கே தப்பித்து ஓடுவது என்றுதான் இஸ்ரவேலர் யோசிக்கிறார்கள். சத்துருக்களுக்கு விரோதமாய் எவ்வாறு யுத்தம்பண்ணுவது என்பதுபற்றிய யோசனை அவர்களிடத்தில் இல்லை.

பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தநாள் வருகிறது. யுத்தநாள் வந்தபோது, சவுலுக்கும் அவன் குமாரனாகிய யோனத்தானுக்குமேயன்றி, சவுலோடும் யோனத்தானோடும் இருக்கிற ஜனங்களில் ஒருவர் கையிலும் பட்டயமும் ஈட்டியும் இல்லாதிருக்கிறது (1சாமு 13:22).

பெலிஸ்தரின் பாளயம் மிக்மாசிலிருந்து போகிற வழிமட்டும் பரம்பியிருக்கிறது (1சாமு 13:23). பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம் பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரைவீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டுவந்து, பெத்தாவேலுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருக்கு பயப்படாமல் போனதினால் பெலிஸ்தருக்கு பயப்படுகிறார்கள். அவர்களுடைய பாவம், அவர்களுடைய கைகளில் ஆயுதங்கள் எதுவும் இல்லாதபடிக்கு, அவர்களை உரிந்துபோடுகிறது. அவர்கள் ஒன்றுமில்லாமல் அவமானப்பட்டிருக்கிறார்கள்.

14 அதிகாரம்

யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும் பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போகிறார்கள் (1சாமு 14:1-3). யோனத்தான் கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொள்கிறான் (1சாமு 14:4-7). யோனத்தான் பெலிஸ்தரோடு தைரியமாய்ப் பேசுகிறான். கர்த்தர் பெலிஸ்தரை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று யோனத்தான் உறுதியாய் நம்புகிறான் (1சாமு 14:8-12).

யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும் பெலிஸ்தரை சங்காரம்பண்ணுகிறார்கள். பெலிஸ்தர் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து சங்காரமாகிறார்கள் (1சாமு 14:13-15). இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சவுலும், இஸ்ரவேல் புத்திரரும் பெலிஸ்தரை முறியடிக்கிறார்கள் (1சாமு 14:16-23).

பெலிஸ்தரை பழிவாங்கும் வரையிலும் ஒருவரும் போஜனம் செய்யக்கூடாது என்று சவுல் இஸ்ரவேல் புத்திரரை தடைபண்ணியிருக்கிறார். ஆனால் யோனத்தானோ ஒரு தேன்கூட்டை எடுத்து அதைத் தன் வாயிலே போட்டுக்கொள்கிறார் (1சாமு 14:24-30). இஸ்ரவேல் ஜனங்களும் மிகவும் விடாய்த்திருந்தபடியினால், உபவாசம்பண்ணாமல், ஆடுகளை இரத்தத்தோடே புசிக்கிறார்கள் (1சாமு 14:31-35).

யோனத்தான் சவுலின் கட்டளையை அறியாமல் பாவம் செய்கிறான். சவுலோ யோனத்தானுக்கு மரணதண்டனை விதிக்கிறார். யோனத்தான் சாகாதபடி இஸ்ரவேல் ஜனங்கள் அவனை தப்புவிக்கிறார்கள் (1சாமு 14:36-46).

இந்த அதிகாரத்தின் கடைசி பகுதியில் சவுல் நடத்திய யுத்தங்களைப்பற்றியும், அவருக்கு கிடைத்த வெற்றிகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது (1சாமு 14:47,48). சவுலின் குடும்பத்தார் (1சாமு 14:49-52).

யோனத்தான்
1சாமு 14:1-15

1சாமு 14:1. ஒருநாள் சவுலின் குமாரனாகிய யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: நமக்கு எதிராக அந்தப் பக்கத்தில் இருக்கிற பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போவோம் வா என்று சொன்னான்; அதை அவன் தன் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.

1சாமு 14:2. சவுல் கிபியாவின் கடைசிமுனையாகிய மிக்ரோனிலே ஒரு மாதளமரத்தின் கீழ் இருந்தான்; அவனோடேகூட இருந்த ஜனங்கள் ஏறக்குறைய அறுநூறுபேராயிருந்தார்கள்.

1சாமு 14:3. சீலோவிலே கர்த்தருடைய ஆசாரியனாயிருந்த ஏலியின் குமாரனாகிய பினெகாசுக்குப் பிறந்த இக்கபோத்தின் சகோதரனும் அகிதூபின் குமாரனுமாகிய அகியா என்பவன் ஏபோத்தைத் தரித்தவனாயிருந்தான்; யோனத்தான் போனதை ஜனங்கள் அறியாதிருந்தார்கள்.

1சாமு 14:4. யோனத்தான் பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போகப்பார்த்த வழிகளின் நடுவே, இந்தப்பக்கம் ஒரு செங்குத்தான பாறையும், அந்தப்பக்கம் ஒரு செங்குத்தான பாறையும் இருந்தது; ஒன்றுக்குப் போசேஸ் என்று பேர், மற்றொன்றுக்குச் சேனே என்று பேர்.

1சாமு 14:5. அந்தப் பாறைகளில் ஒன்று வடக்கே மிக்மாசுக்கு எதிராகவும், மற்றொன்று தெற்கே கிபியாவுக்கு எதிராகவும் இருந்தது.

1சாமு 14:6. யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்திற்குப் போவோம் வா; ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம்பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக்கொண்டாகிலும், ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றான்.

1சாமு 14:7. அப்பொழுது அவன் ஆயுததாரி அவனைப் பார்த்து: உம்முடைய இருதயத்தில் இருக்கிறபடியெல்லாம் செய்யும்; அப்படியே போம்; இதோ, உம்முடைய மனதுக்கு ஏற்றபடி நானும் உம்மோடேகூட வருகிறேன் என்றான்.

1சாமு 14:8. அதற்கு யோனத்தான்: இதோ, நாம் கடந்து, அந்த மனுஷரிடத்திற்குப் போகிறவர்கள்போல அவர்களுக்கு நம்மைக் காண்பிப்போம்.

1சாமு 14:9. நாங்கள் உங்களிடத்துக்கு வருமட்டும் நில்லுங்கள் என்று நம்மோடே சொல்வார்களானால், நாம் அவர்களிடத்துக்கு ஏறிப்போகாமல், நம்முடைய நிலையிலே நிற்போம்.

1சாமு 14:10. எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள் என்று சொல்வார்களானால், ஏறிப்போவோம்; கர்த்தர் அவர்களை நம்முடைய கையில்ஒப்புக்கொடுத்தார்; இது நமக்கு அடையாளம் என்றான்.

1சாமு 14:11. அப்படியே அவர்கள் இருவரும் பெலிஸ்தரின் தாணையத்திற்முன் தங்களைக் காண்பித்தார்கள்; அப்பொழுது பெலிஸ்தர்: இதோ, எபிரெயர் ஒளித்துக்கொண்டிருந்த வளைகளைவிட்டுப் புறப்படுகிறார்கள் என்று சொல்லி,

1சாமு 14:12. தாணையம் இருக்கிற மனுஷர் யோனத்தானையும் அவன் ஆயுததாரியையும் பார்த்து: எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள், உங்களுக்குப் புத்தி கற்பிப்போம் என்றார்கள்; அப்பொழுது யோனத்தான் தன் ஆயுததாரியை நோக்கி: என் பின்னாலே ஏறிவா; கர்த்தர் அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி,

1சாமு 14:13. யோனத்தான் தன் கைகளாலும் தன் கால்களாலும் தவழ்ந்து ஏறினான்; அவன் ஆயுததாரி அவன் பின்னாலே ஏறினான்; அப்பொழுது அவர்கள் யோனத்தானுக்கு முன்பாக மடிந்து விழுந்தார்கள்; அவன் ஆயுததாரியும் அவன் பின்னாலே வெட்டிக்கொண்டே போனான்.

1சாமு 14:14. யோனத்தானும் அவன் ஆயுததாரியும் அடித்த அந்த முந்தின அடியிலே ஏறக்குறைய இருபதுபேர் அரையேர் நிலமான விசாலத்திலே விழுந்தார்கள்.

1சாமு 14:15. அப்பொழுது பாளயத்திலும் வெளியிலும், சகல ஜனங்களிலும், பயங்கரம் உண்டாய், தாணையம் இருந்தவர்களும் கொள்ளையிடப்போன தண்டிலுள்ளவர்களுங்கூடத் திகில் அடைந்தார்கள்; பூமியும் அதிர்ந்தது; அது தேவனால் உண்டான பயங்கரமாயிருந்தது.

பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம் பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரைவீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டுவந்து, பெத்தாவேலுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள் (1சாமு 13:5). சவுல் தன்னோடே கூடயிருக்கிற ஜனத்தை தொகை பார்க்கிறபோது ஏறக்குறைய அறுநூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள் (1சாமு 13:15).

அநேகம் பேரைக்கொண்டாலும், கொஞ்சம் பேரைக்கொண்டாகிலும் இரட்சிக்க கர்த்தருக்கு தடையில்லை. கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. பெலிஸ்தர் திரளான எண்ணிக்கையிலிருந்தாலும், அவர்கள் பலசாலிகளாகவும், பராக்கிரமசாலிகளாகவும் இருந்தாலும் கர்த்தரால் அவர்களை நிர்மூலம்பண்ண முடியும்.

இஸ்ரவேலருடைய சேனையில் சொற்ப எண்ணிக்கையுள்ள மனுஷர் இருந்தாலும், அவர்கள் கோழைகளாகவும், பயப்படுகிறவர்களாகவும் இருந்தாலும், அவர்களிடத்தில் ஈட்டிகளோ, பட்டயங்களோ, வேறு யுத்த ஆயுதங்களோ இல்லாதிருந்தாலும், கர்த்தரால் இஸ்ரவேல் ஜனத்திற்கு பெலிஸ்தர்மீது ஜெயத்தைக் கொடுக்க முடியும்.

சாமுவேல் சவுலுக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, கில்காலைவிட்டு பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவுக்குப் போகிறார். சவுலும் சாமுவேலின் பின்னாலே கிபியாவுக்குப் போகிறார். சவுலும், அவருடைய குமாரனாகிய யோனத்தானும், அவர்களோடே கூடயிருக்கிற ஜனங்களும், பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலிருந்துவிடுகிறார்கள். பெலிஸ்தரோ திரளான எண்ணிக்கையில், மிக்மாசிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

சவுல் மிகவும் பலவீனமாயிருக்கிறார். அவருக்கு போதுமான உதவி கிடைக்கவில்லை. அவரால் தனக்குத்தானே உதவிசெய்து கொள்ள முடியவில்லை. பெலிஸ்தருக்கு விரோதமாக தன்னால் யுத்தம்பண்ண முடியாது என்று நினைத்து சவுல் சோர்ந்துபோயிருக்கிறார்.

சவுல் கிபியாவின் கடைசிமுனையாகிய மிக்ரோனிலே ஒரு மாதளமரத்தின்கீழ் இருக்கிறார்; அவரோடேகூட இருந்த ஜனங்கள் ஏறக்குறைய அறுநூறுபேராயிருக்கிறார்கள். சவுல் கிபியா பட்டணத்திற்கு நடுவிலே இருக்க விரும்பவில்லை. ஊருக்கு ஒதுக்கு புறமாக, கிபியாவின் கடைசி முனையாகிய மிக்ரோனிலே, ஒரு மாதளமரத்தின்கீழ் இருக்கிறார். சவுல் தனியாயில்லை. அவரோடுகூட ஏறக்குறைய அறுநூறு பேர் இருக்கிறார்கள்.

சவுல் ஆசாரியரை தங்களிடத்தில் வரச்சொல்லுகிறார். ஆசாரியன் சீலோவிலே இருக்கிறான். இவனுடைய பெயர் அகியா. சீலோவிலே கர்த்தருடைய ஆசாரியனாயிருந்த ஏலியின் குமாரனாகிய பினெகாசுக்குப் பிறந்த இக்கபோத்தின் சகோதரனும் அகிதூபின் குமாரனுமாகிய அகியா என்பவன் ஏபோத்தைத் தரித்தவனாயிருக்கிறான் (1சாமு 14:3).

சவுல் அகியாவை நோக்கி, "தேவனுடைய பெட்டியை கொண்டு வா" (1சாமு 14:18) என்று சொல்லுகிறார். ஆசாரியன் சீலோவிலே இருக்கிறான். கர்த்தருடைய பெட்டியோ கீரியாத்யாரீமிலே இருக்கிறது.

கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சாமுவேல் சவுலை விட்டுப்போய்விடுகிறார். இது சவுலுக்கு பெரிய இழப்பாயிருக்கிறது. அந்த இழப்பை சரிசெய்யவேண்டும். சாமுவேலின் ஸ்தானத்தில் யாராவது ஒருவர் கர்த்தருடைய சமுகத்திலே நிற்கவேண்டும். கர்த்தருடைய ஆசாரியனாகிய அகியா, தனக்காக கர்த்தருடைய சமுகத்திலே நிற்பான் என்று சவுல் நினைக்கிறார்.

சவுலோடு கூட இப்போது அறுநூறுபேர் மாத்திரமே இருக்கிறார்கள். இது சொற்ப எண்ணிக்கையுள்ள சேனை. பெலிஸ்தருடைய சேனையிலோ மணலத்தனை ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் குதிரைகளும் இரதங்களும் இருக்கிறது. சவுல் தன்னுடைய குறைவை நிவிர்த்தி பண்ண விரும்புகிறார். கர்த்தருடைய பெட்டி தன்னோடு கூடயிருந்தால், அது தனக்கும், இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் மிகப்பெரிய பலமாயிருக்கும் என்று சவுல் எதிர்பார்க்கிறார். அதற்காக சவுல் கீரியாத்யாரீமிலே இருக்கிற கர்த்தருடைய பெட்டியை, தன்னிடத்தில் கொண்டுவருமாறு ஆசாரியனாகிய அகியாவுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய பெட்டி பாளயத்திற்கு வருவதினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லை. ஏலியின் காலத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். அப்போது இஸ்ரவேலர் கர்த்தருடைய பெட்டியை யுத்தக்களத்திற்கு கொண்டு வந்தார்கள். பலமாய் ஆர்ப்பரித்தார்கள். ஆனாலும் அந்த யுத்தத்திலே இஸ்ரவேலர் தோற்றுப்போனார்கள். பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியை தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். இந்த சரித்திரம் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் தெரியும்.

கர்த்தருடைய உண்மையான சத்தியத்தையும், அவருடைய மெய்யான உபதேசத்தையும் பெற்றுக்கொள்ளாதவர்கள், இதுபோன்ற சடங்காச்சாரங்களுக்கும், பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கும், புறம்பான அடையாளங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். இவர்கள் சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதன் நிழலின்மீது பிரியமாயிருப்பார்கள்.

கர்த்தர் சவுலை கைவிட்டுவிட்டார். "உம்முடைய ராஜ்யபாரம் நிலைக்காது" என்று சாமுவேலும் சவுலிடத்தில் சொல்லிவிட்டார். கர்த்தரால் தள்ளிவிடப்பட்ட ஒரு ராஜா, தன் பக்கத்தில் ஒரு ஆசாரியனை வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.

சவுலின் குமாரனாகிய யோனத்தான், தன் தகப்பனைவிட தைரியமுள்ளவனாயிருக்கிறான். இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமருவதற்கு சவுலைவிட, யோனத்தானே தகுதியானவன் போல இருக்கிறான். யோனத்தானிடம் பயமில்லை. பெலிஸ்தருக்கு விரோதமாக துணிச்சலாய் எதிர்த்து நிற்கிறான். யோனத்தானுடைய தலையிலே கிரீடம் வைக்கப்படாவிட்டாலும், அவனுடைய இருதயத்தில் ராஜகிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒருநாள் சவுலின் குமாரனாகிய யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: "நமக்கு எதிராக அந்தப் பக்கத்தில் இருக்கிற பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போவோம் வா" (1சாமு 14:1) என்று சொல்லுகிறான்; அதை அவன் தன் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.

யோனத்தான் யாருக்கும் தெரியாமல் பெலிஸ்தரின் தாணையத்திற்கு போகவேண்டுமென்று தீர்மானிக்கிறான். அவன் பெலிஸ்தரின் தாணையத்திற்கு போக பார்த்த வழிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோனத்தான் பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போகப்பார்த்த வழிகளின் நடுவே, இந்தப்பக்கம் ஒரு செங்குத்தான பாறையும், அந்தப்பக்கம் ஒரு செங்குத்தான பாறையும் இருக்கிறது; ஒன்றுக்குப் போசேஸ் என்று பேர், மற்றொன்றுக்குச் சேனே என்று பேர். அந்தப் பாறைகளில் ஒன்று வடக்கே மிக்மாசுக்கு எதிராகவும், மற்றொன்று தெற்கே கிபியாவுக்கு எதிராகவும் இருக்கிறது (1சாமு 13:4,5).

பெலிஸ்தரின் தாணையம் இயற்கையான அரணுக்கு நடுவே இருக்கிறது. அவர்களுடைய தாணையத்திற்குப்போவது மிகவும் கடினம். யோனத்தானோ கடினமான சூழ்நிலைகளைப் பார்த்து சோர்ந்துபோகவில்லை. பாறைகள் செங்குத்தானதாகயிருந்தாலும், அவை கூர்மையானதாகயிருந்தாலும், யோனத்தானின் மனதிலே உறுதியிருக்கிறது. அவன் திடநம்பிக்கையோடிருக்கிறான்.

நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குள் உறுதியாயிருக்கவேண்டும். நமக்கு எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், நாம் கர்த்தருக்குள் உறுதியாய் நிலைத்திருக்கும்போது, எதிர்ப்புகளை சந்திக்க தயங்கமாட்டோம். அவற்றை சந்தோஷமாய் மேற்கொள்வோம். கர்த்தருடைய பலத்தினால் தடைகளை தகர்த்தெறிந்து இலக்கை நோக்கி முன்னேறிச் செல்வோம்.

யோனத்தானோடு கூடயிருக்கிற ஆயுததாரி ஒரு வாலிபன். யோனத்தானுடைய மனதிலே உறுதியிருக்கிறது. இதே உறுதி, அவனுடைய ஆயுததாரியின் மனதிலும் இருக்கவேண்டும். அப்போதுதான் அவனும் யோனத்தானோடுகூட சேர்ந்துபோவான். இல்லாவிட்டால் சோர்ந்துபோவான். பாதியிலேயே தன் வீட்டிற்குத் திரும்பிப்போவான்.

யோனத்தான் தன் ஆயுததாரியை திடப்படுத்துகிறான். அவனுடைய விசுவாசத்தை கர்த்தருக்குள் உறுதிபடுத்துகிறான். கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை அவனுக்குப் புரியும் வண்ணமாய்ச் சொல்லுகிறான்.

யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: "விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்திற்குப் போவோம் வா; ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம்பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக்கொண்டாகிலும், ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை" (1சாமு 14:6) என்று சொல்லுகிறான்.

யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும் தங்கள் ஜீவனை தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு, பெலிஸ்தருடைய தாணையத்திற்குப் போகிறார்கள். அவர்கள் மத்தியிலே குழப்பத்தை உண்டுபண்ணப்போகிறார்கள். யோனத்தானிடம் குழப்பமில்லை. பெலிஸ்தர் விருத்தசேதனமில்லாதவர்கள். அவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரோ விருத்தசேதனமுள்ளவர்கள். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய பாதுகாப்பிலிருக்கிறார்கள். பெலிஸ்தருக்கோ கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை.

பெலிஸ்தர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு அந்நியராயிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேலருக்கு சத்துருக்களாயிருக்கிறவர்கள், கர்த்தருக்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்களைப் பார்த்து பயப்படவேண்டியதில்லை என்று யோனத்தான் தன்னுடைய ஆயுததாரிக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

பெலிஸ்தர் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். "அநேகம் பேரைக் கொண்டாகிலும் கொஞ்சம் பேரை கொண்டாகிலும், இரட்சிக்க கர்த்தருக்கு தடையில்லை" என்று யோனத்தான் சொல்லுகிறான். கர்த்தருக்கு சித்தமான காரியம் வாய்க்கும். "ஒரு வேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்" என்று யோனத்தான் எதிர்பார்க்கிறான்.

யோனத்தானுடைய ஆயுததாரி, யோனத்தானின் ஆயுதங்களை மாத்திரம் சுமக்கவில்லை. யோனத்தானின் இருதயத்திலுள்ள விசுவாசத்தையும், வீரத்தையும் அவனுடைய ஆயுததாரி தன்னுடைய இருதயத்திலே சுமக்கிறான். யோனத்தானின் வார்த்தைகளைக் கேட்டு, அவனுடைய ஆயுததாரியின் விசுவாசம் விருத்தியடைகிறது.

அப்பொழுது யோனத்தானின் ஆயுததாரி அவனைப் பார்த்து: "உம்முடைய இருதயத்தில் இருக்கிறபடியெல்லாம் செய்யும்; அப்படியே போம்; இதோ, உம்முடைய மனதுக்கு ஏற்றபடி நானும் உம்மோடேகூட வருகிறேன்" (1சாமு 14:7) என்று விசுவாசத்தோடும், உறுதியோடும் சொல்லுகிறான்.

யோனத்தான் பராக்கிரமசாலியாயிருந்தாலும், அவன் கர்த்தரையே நம்புகிறான். "ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்" (1சாமு 14:6) என்று சொல்லுகிறான். யோனத்தானுடைய மனதிலே உறுதியும் தைரியமும் இருக்கிறது. ஆனாலும் தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலை அவன் பின்பற்ற விரும்புகிறான். தேவனுடைய கிருபையே காரியங்களை வாய்க்கப்பண்ணும்.

யோனத்தான் தன் ஆயுததாரியிடம், "இதோ, நாம் கடந்து, அந்த மனுஷரிடத்திற்குப் போகிறவர்கள்போல அவர்களுக்கு நம்மைக் காண்பிப்போம்" (1சாமு 14:8) என்று சொல்லுகிறான். யோனத்தானுடைய முகத்திலே பயமில்லை. அவன் பெலிஸ்தருக்கு முன்பாக தன்னைக் காண்பிக்க ஆயத்தமாயிருக்கிறான். யோனத்தானின் பயமில்லாத முகத்தை பெலிஸ்தர் பார்க்கவேண்டும்.

பெலிஸ்தர் மிகவும் எச்சரிப்பாகயிருந்தால், தாங்கள் முன்னேறுதலை நிறுத்திக்கொள்ளலாம் என்றும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ள என்ன செய்யவேண்டுமோ அதை செய்யலாம் என்றும் யோனத்தான் தன் ஆயுததாரிக்கு சொல்லுகிறான். "நாங்கள் உங்களிடத்துக்கு வருமட்டும் நில்லுங்கள் என்று நம்மோடே சொல்வார்களானால், நாம் அவர்களிடத்துக்கு ஏறிப்போகாமல், நம்முடைய நிலையிலே நிற்போம்" (1சாமு 14:9) என்று யோனத்தான் சொல்லுகிறான்.

யுத்தம்பண்ணுகிறவர்கள் தங்களையும் காத்துக்கொள்ளவேண்டும். சத்துருவையும் தாக்கவேண்டும். ஒருவேளை பெலிஸ்தர் தங்களோடு ஆவேசமாகவும், வீரமாகவும் பேசினால், தாங்கள் திரும்பிப்போய்விடாமல், மலையின்மேல் ஏறி, அவர்களைத் தாக்குவதற்கு ஆயத்தமாயிருப்போம் என்றும் யோனத்தான் சொல்லுகிறான்.

"எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள் என்று சொல்வார்களானால், ஏறிப்போவோம்; கர்த்தர் அவர்களை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; இது நமக்கு அடையாளம்" (1சாமு 14:10) என்று யோனத்தான் சொல்லுகிறான்.

யோனத்தான் ஒவ்வொரு வார்த்தையையும் கர்த்தரை நம்பி பேசுகிறான். கர்த்தர்மீது அவன் வைத்திருக்கிற விசுவாசம் உறுதியாயிருக்கிறது. கர்த்தரே எல்லா மனுஷருடையஇருதயங்களையும் நாவுகளையும் ஆளுகை செய்கிறவர். கர்த்தர் ஆசாரியர் மூலமாயும் பேசுவார். பெலிஸ்தர் மூலமாயும் பேசுவார். பெலிஸ்தருடைய மனதிலிருப்பதை, கர்த்தர் தனக்கு வெளிப்படுத்துவார் என்று யோனத்தான் நம்புகிறான்.

நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப்போகும்போது, கர்த்தர் நம்முடைய பாதைகளை செவ்வைப்படுத்துவார். நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார். நாம் போகவேண்டிய வழியை நமக்குக் காண்பிப்பார். யோனத்தான் கர்த்தரை நம்பி போகிறான். கர்த்தர் தன்னை வழிநடத்துவார் என்று நம்புகிறான்.

தேவனுடைய தெய்வீக கிருபையினாலேயே யோனத்தான் எதிர்பார்த்த அடையாளம் உண்டாயிற்று. அப்படியே அவர்கள் இருவரும் பெலிஸ்தரின் தாணையத்திற்முன் தங்களைக் காண்பிக்கிறார்கள்;

அப்பொழுது பெலிஸ்தர்: "இதோ, எபிரெயர் ஒளித்துக்கொண்டிருந்த வளைகளைவிட்டுப் புறப்படுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். தாணையம் இருக்கிற மனுஷர் யோனத்தானையும் அவன் ஆயுததாரியையும் பார்த்து: "எங்களிடத்துக்கு ஏறிவாருங்கள், உங்களுக்குப் புத்தி கற்பிப்போம்" என்று சொல்லுகிறார்கள் (1சாமு 14:11,12).

யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும், நடுராத்திரியிலே, பெலிஸ்தர் அயர்ந்த நித்திரையிலிருக்கும்போது, அவர்களுக்கு முன்பாக திடீரென்று போய், அவர்களை பயமுறுத்தவில்லை. அவர்கள் பகல் வேளையிலே பெலிஸ்தரின் தாணையத்திற்கு முன் தங்களைக் காண்பிக்கிறார்கள். தாணையமிருக்கிற மனுஷர் யோனத் தானையும் அவனுடைய ஆயுததாரியையும் பார்க்கிறார்கள்.

"பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம் பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரைவீரரோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டுவந்து, பெத்தாவேலுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள். அப்பொழுது இஸ்ரவேலர் தங்களுக்கு உண்டான இக்கட்டைக் கண்டபோது, ஜனங்கள் தங்களுக்கு உண்டான நெருக்கத்தினாலே கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக்கொண்டார்கள்" (1சாமு 13:5,6). இது பெலிஸ்தருக்குத் தெரியும்.

ஆனால் இப்போதோ பெலிஸ்தர் யோனத்தானையும் அவனுடைய ஆயுததாரியையும் பார்த்து, "இதோ, எபிரெயர் ஒளித்துக்கொண்டிருந்த வளைகளைவிட்டுப் புறப்படுகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

தாணையமிருக்கிற பெலிஸ்தர், யோனத்தானையும் அவனுடைய ஆயுததாரியையும் பார்த்து ஏளனம்பண்ணுகிறார்கள். "எங்களிடத்திற்கு ஏறி வாருங்கள், உங்களுக்கு புத்தி கற்பிப்போம்" (1சாமு 14:12) என்று சொல்லுகிறார்கள்.

யோனத்தான் பெலிஸ்தரின் வார்த்தையைக் கேட்டு பயப்படவில்லை. அவனுக்குள் மிகுந்த தைரியமுண்டாயிற்று. கர்த்தர் தனக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்திருக்கிறார் என்று யோனத்தான் நினைக்கிறான். தன்னோடு கூடயிருக்கிற ஆயுததாரியையும் யோனத்தான் உற்சாகப்படுத்துகிறான். அப்பொழுது யோனத்தான் தன் ஆயுததாரியை நோக்கி: "என் பின்னாலே ஏறிவா; கர்த்தர் அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுத்தார்" (1சாமு 14:12) என்று சொல்லுகிறான்.

யோனத்தானின் விசுவாசம் உறுதிபண்ணப்படுகிறது. கர்த்தர் தன்னோடு கூடயிருக்கும்போது, பெலிஸ்தரால் தனக்கு விரோதமாய் எதிர்த்து நிற்க முடியாது என்று யோனத்தான் நம்புகிறான். யோனத்தான் தன் கைகளாலும் தன் கால்களாலும் தவழ்ந்து ஏறுகிறான்; அவன் ஆயுததாரி அவன் பின்னாலே ஏறுகிறான் (1சாமு 14:13).

யோனத்தானை பாதுகாத்துக்கொள்ள அவனிடத்தில் மார்க்கவசம் எதுவுமில்லை. யோனத்தானுக்குப் பின்னாலே இஸ்ரவேலின் பெரிய சேனையும் பாதுகாப்பாய் வரவில்லை. அவனுடைய ஆயுததாரி மாத்திரம் அவனுக்குப் பின்னாலே ஏறி வருகிறான். மனுஷருடைய சிந்தனையின் பிரகாரம் இதை யோசித்துப் பார்க்கும்போது, யோனத்தான் தன்னுடைய மரணத்திற்கு முன்பாக அல்லது மரணமடைவதற்காக, தன் கைகளாலும், தன் கால்களாலும் தவழ்ந்து ஏறுவது போல தெரிகிறது. யோனத்தானுக்கு முன்பாக மரணம் அவனை வரவேற்பதற்கு காத்துக்கொண்டிருப்பதுபோல இருக்கிறது.

ஆனால் யோனத்தானும், அவனுடைய ஆயுததாரியும் பெலிஸ்தரின் பாளயத்திற்கு தனியாகப் போகவில்லை. அவர்களோடுகூட, அவர்கள் நம்பியிருக்கிற கர்த்தரும் போகிறார். யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும் பெலிஸ்தர் இருக்கிற இடத்திற்குப்போனபோது, அவர்கள் யோனத்தானுக்கு முன்பாக மடிந்து விழுகிறார்கள்; அவன் ஆயுததாரியும் அவன் பின்னாலே வெட்டிக்கொண்டே போகிறான் (1சாமு 14:13).

அவர்கள் பெலிஸ்தரில் எத்தனை பேரை வெட்டினார்கள் என்று இங்கு எண்ணிக்கை சொல்லப்படவில்லை. யோனத்தானும் அவன் ஆயுததாரியும் அடித்த அந்த முந்தின அடியிலே ஏறக்குறைய இருபதுபேர் அரையேர் நிலமான விசாலத்திலே விழுந்தார்கள் என்று பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது (1சாமு 14:14). கர்த்தருடைய வலதுகரமும், அவருடைய பலத்த புயமும் யோனத்தானுக்கு பெலிஸ்தர்மேல் வெற்றியைக் கொடுத்திருக்கிறது.

பெலிஸ்தரின் பாளயத்திலிருந்த மற்றவர்கள் திகைக்கிறார்கள். கலங்குகிறார்கள். திகிலடைகிறார்கள். அப்பொழுது பாளயத்திலும் வெளியிலும், சகல ஜனங்களிலும், பயங்கரம் உண்டாயிற்று. தாணையம் இருந்தவர்களும் கொள்ளையிடப்போன தண்டிலுள்ளவர்களுங்கூடத் திகில் அடைகிறார்கள்; பூமியும் அதிருகிறது; அது தேவனால் உண்டான பயங்கரமாயிருக்கிறது (1சாமு 14:15).

கர்த்தரே மனுஷருடைய இருதயத்தை உண்டுபண்ணினவர். இருதயத்தை உண்டு பண்ணினவரால், அந்த இருதயத்திலே திகிலையும், கலக்கத்தையும், பயத்தையும் உண்டுபண்ண முடியும். கர்த்தர் பெலிஸ்தரைக் கலங்கப்பண்ணுகிறார். அவர்கள் கலங்கும்போது கர்த்தருடைய வல்லமையினால் பூமியும் அதிருகிறது. இது பெலிஸ்தரின் கலக்கத்தை அதிகரிக்க செய்கிறது. பூமியதிர்ச்சியிலே தாங்கள் எல்லோரும் பூமிக்குள்ளே மூழ்கிப்போவோமோ என்னும் பயம் பெலிஸ்தருக்கு உண்டாயிற்று. இது மனுஷரால் உண்டான பயமல்ல. இது தேவனால் உண்டான பயங்கரம்.

கர்த்தர் இஸ்ரவேலை ரட்சிக்கிறார்
1சாமு 14:16-23

1சாமு 14:16. பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலே சவுலுக்கு இருந்த ஜாமக்காரர் பார்த்து: இதோ, அந்த ஏராளமான கூட்டம் கலைந்து, ஒருவர்மேல் ஒருவர் விழுகிறதைக் கண்டார்கள்.

1சாமு 14:17. அப்பொழுது சவுல் தன்னோடேகூட இருக்கிற ஜனங்களை நோக்கி: நம்மிடத்திலிருந்து போனவர்கள் யார் என்று இலக்கம்பாருங்கள் என்றான்; அவர்கள் இலக்கம் பார்க்கிறபோது, இதோ, யோனத்தானும் அவன் ஆயுததாரியும் அங்கே இல்லை என்று கண்டார்கள்.

1சாமு 14:18. அப்பொழுது சவுல் அகியாவை நோக்கி: தேவனுடைய பெட்டியைக் கொண்டுவா என்றான்; தேவனுடைய பெட்டி அந்நாட்களில் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இருந்தது.

1சாமு 14:19. இப்படிச் சவுல் ஆசாரியனோடே பேசுகையில், பெலிஸ்தரின் பாளயத்தில் உண்டான கலகம் வரவர அதிகரித்தது; அப்பொழுது சவுல் ஆசாரியனைப் பார்த்து: இருக்கட்டும் என்றான்.

1சாமு 14:20. சவுலும் அவனோடிருந்த ஜனங்களும் கூட்டங்கூடிப் போர்க்களத்திற்குப் போனார்கள்; ஒருவர் பட்டயம் ஒருவருக்கு விரோதமாயிருந்தபடியால் மகா அமளியுண்டாயிற்று.

1சாமு 14:21. இதற்குமுன் பெலிஸ்தருடன் கூடி அவர்களோடேகூடப் பாளயத்திலே திரிந்து வந்த எபிரெயரும், சவுலோடும் யோனத்தானோடும் இருக்கிற இஸ்ரவேலரோடே கூடிக்கொண்டார்கள்.

1சாமு 14:22. எப்பிராயீம் மலைகளில் ஒளித்துக்கொண்டிருந்த சகல இஸ்ரவேலரும் பெலிஸ்தர் முறிந்தோடுகிறதைக் கேள்விப்பட்டபோது, யுத்தத்திலே அவர்களை நெருங்கித் தொடர்ந்தார்கள்.

1சாமு 14:23. இப்படிக் கர்த்தர் அன்றையதினம் இஸ்ரவேலை ரட்சித்தார்; அந்த யுத்தம் பெத்தாவென்மட்டும் நடந்தது.

கர்த்தருடைய வல்லமையினால் பெலிஸ்தர் ஒருவர்மேல் ஒருவர் விழுகிறார்கள். சூரியனுக்கு முன்பாக பனிஉருகிப்போவதுபோல, பெலிஸ்தர் எல்லோரும் உருகிப்போகிறார்கள். பெலிஸ்தருடைய சேனையிலே ஏராளமான யுத்தவீரர்கள் இருந்தாலும், அந்த ஏராளமான கூட்டம் கரைந்துபோகிறது. அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுகிறார்கள். பெலிஸ்தரே பெலிஸ்தரைக் கொன்றுபோடுகிறார்கள். பெலிஸ்தர் மத்தியிலே ஒருவர் பட்டயம் ஒருவருக்கு விரோதமாயிருக்கிறது (1சாமு 14:20).

இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பட்டயமோ ஈட்டியோ இல்லை. பெலிஸ்தரிடம் பட்டயங்களும், ஈட்டிகளும், இரதங்களும் இருக்கிறது. அவர்களிடத்தில் குதிரை வீரர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள். பெலிஸ்தர் தங்கள் ஆயுதங்களையும், இரதங்களையும், குதிரைகளையும் நம்பினார்கள். அவர்கள் நம்பின அவர்களுடைய பட்டயங்களே அவர்களை கொன்றுபோட்டது. ஒருவர் பட்டயம் ஒருவருக்கு விரோதமாயிருந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தரைக் கொன்றதைவிட, பெலிஸ்தர் தங்களை தாங்களே கொன்றுபோட்டது மிகவும் அதிகம்.

பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலே சவுலுக்கு ஜாமக்காரர் இருக்கிறார்கள். இவர்கள் பெலிஸ்தரின் பாளயத்திலே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பெத்தாவேலுக்கு கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். பெலிஸ்தரின் பாளயத்தில் திடீரென்று, பூமியதிர்ச்சி உண்டாயிற்று. பெலிஸ்தர்கள் எல்லோரும் திகிலடைகிறார்கள். பெலிஸ்தரில் ஏராளமான கூட்டம் கலைந்து, ஒருவர்மேல் ஒருவர் விழுகிறது. இதை கிபியாவிலே, சவுலின் ஜாமக்காரர் பார்க்கிறார்கள் (1சாமு 14:16).

தாங்கள் பார்த்ததை ஜாமக்காரர் சவுலுக்கு சொல்லுகிறார்கள். பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதற்கு இதுவே சரியான வேளை என்று சவுல் யோசிக்கிறார். அப்பொழுது சவுல் தன்னோடேகூட இருக்கிற ஜனங்களை நோக்கி: "நம்மிடத்திலிருந்து போனவர்கள் யார் என்று இலக்கம்பாருங்கள்" என்று சொல்லுகிறார் (1சாமு 14:17). அவர்கள் இலக்கம் பார்க்கிறபோது, இதோ, யோனத்தானும் அவன் ஆயுததாரியும் அங்கே இல்லை என்று காண்கிறார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமாக இப்போது யுத்தம்பண்ணப்போகலாமா என்பதை சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்க விரும்புகிறார். அப்பொழுது சவுல் அகீயாவை நோக்கி: "தேவனுடைய பெட்டியைக் கொண்டுவா" (1சாமு 14:18) என்று சொல்லுகிறார்; தேவனுடைய பெட்டி அந்நாட்களில் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இருக்கிறது.

சவுல் அகியாவை நோக்கி, "தேவனுடைய பெட்டியைக் கொண்டுவா" என்று சொன்னாலும், சவுலின் மனதில் திடீரென்று மாற்றமுண்டாகிறது. தேவனுடைய பெட்டியை கொண்டு வரவேண்டாம் என்று சவுல் சொல்லிவிடுகிறார். "தேவனுடைய பெட்டியைக் கொண்டு வா" என்று சவுல் ஆசாரியனோடே பேசுகையில், பெலிஸ்தரின் பாளயத்தில் உண்டான கலகம் வரவர அதிகரிக்கிறது; அப்பொழுது சவுல் ஆசாரியனைப் பார்த்து: "இருக்கட்டும்" (1சாமு 14:19) என்று சொல்லிவிடுகிறார்.

பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனால், அது தங்களுக்கு பாதுகாப்பாயிருக்குமா என்பதை சவுல் அறிந்துகொள்ள விரும்பினார். பெலிஸ்தருடைய பாளயத்தில் குழப்பமுண்டாயிருக்கிறது. அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து செத்துப்போகிறார்கள். இந்த சூழ்நிலையில், பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனால், தங்களுக்கு பாதுகாப்பும் ஜெயமும் கிடைக்குமா என்பதை சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்க விரும்புகிறார். இதற்காக தேவனுடைய பெட்டியை கொண்டு வரச்சொன்னார்.

இக்காலத்தில் அநேகர் சவுலைப்போலவே, கர்த்தரிடத்தில் தங்கள் சொந்த நன்மைகளையும், பாதுகாப்புக்களையும் மாத்திரம் விசாரிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். தாங்கள் என்ன செய்யவேண்டும், தங்களுடைய கடமை என்ன, கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியம் என்ன என்பது பற்றி விசுவாசிகள் கர்த்தரிடத்தில் விசாரிப்பதில்லை. கர்த்தர் தங்களை உலகப்பிரகாரமாக ஆசீர்வதிப்பாரா என்று மாத்திரமே விசாரிக்கிறார்கள்.

சவுல் ஆசாரியனோடு பேசும்போது, அவருடைய ஜாமக்காரர், அவரிடத்தில் வந்து, "பெலிஸ்தரின் பாளயத்தில் உண்டான கலகம் வரவர அதிகரிக்கிறது" என்று சொல்லுகிறார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடன், சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டியதில்லை என்று முடிவு பண்ணிவிடுகிறார். தேவனுடைய பெட்டியைக் கொண்டுவரவேண்டாம் என்று சவுல் ஆசாரியனிடத்தில் சொல்லிவிடுகிறார். அந்தப் பெட்டி அங்கேயே இருக்கட்டும் என்று கட்டளை கொடுத்துவிடுகிறார்.

சவுலுக்கு கர்த்தரிடத்தில் விசாரிக்க மனமில்லை. கர்த்தர் கொடுக்கும் ஆலோசனைகளை கேட்பதற்கு பொறுமையில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தைக்காக காத்திருக்க விரும்பவில்லை. இந்த சூழ்நிலையில் கர்த்தரிடத்தில் விசாரித்து கேட்பது தேவையற்றது என்று சவுல் நினைக்கிறார்.

பெலிஸ்தரின் பாளயத்தில் உண்டான கலகம் வரவர அதிகரித்திருக்கிறது. அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து செத்துப்போகிறார்கள். சவுல் இப்போது பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனால், இஸ்ரவேலருக்கு நிச்சயம் ஜெயம் கிடைக்கும். பெலிஸ்தரால் இஸ்ரவேலருக்கு ஆபத்து உண்டாகாது. இவையெல்லாம் சவுலுக்கு தெளிவாகவும் உறுதியாகவும் தெரிந்திருக்கிறது. தனக்கு தெளிவாகத் தெரிந்திருக்கிற காரியத்தை, கர்த்தரிடத்தில் ஏன் விசாரிக்க வேண்டும் என்று சவுல் நினைக்கிறார். அதன் நிமித்தமாகவே தேவனுடைய பெட்டியை கொண்டு வரவேண்டாம், அது அங்கேயே இருக்கட்டும் என்று சவுல் சொல்லிவிடுகிறார்.

பெலிஸ்தர் இப்போது ஒருவர்மீது ஒருவர் விழுந்து செத்துக்கொண்டிருக்கிறார்கள். பெலிஸ்தரின் பாளயத்தில் உண்டான கலகமும் வரவர அதிகரிக்கிறது. இந்த சூழ்நிலையில் சவுல் காலதாமதம்பண்ணாமல், பெலிஸ்தருக்கு விரோதமாய் சீக்கிரத்தில் போனால், தனக்கு பெலிஸ்தர்மீது வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறார். கர்த்தரிடத்தில் விசாரித்து கேட்பதினால், தாமதம் ஏற்படும் என்று சவுல் நினைக்கிறார். அந்த தாமதத்தை தவிர்ப்பதற்காக சவுல் கர்த்தரிடத்தில் விசாரிப்பதையே தவிர்க்கிறார்.

சவுலோடுகூட சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனங்கள் மாத்திரமே இருக்கிறார்கள். அறுநூறு பேர் மாத்திரமே சவுலோடு கூடயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் யுத்த ஆயுதமில்லை. எக்காளங்களுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தம்பண்ணப்போகும்போது வெள்ளிப்பூரிகைகளை பெருந்தொனியாய்த் தொனிக்கவேண்டும்.

"உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்துக்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக் கடவீர்கள்; அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூரப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள்" (எண் 10:9).

ஆனால் இஸ்ரவேல் புத்திரரிடத்திலோ வெள்ளிப்பூரிகையுமில்லை. வெண்கல பூரிகையுமில்லை. அவர்கள் தங்கள் வாயினால் சத்தம் போடுகிறார்கள். "மகாஅமளி உண்டாயிற்று" (1சாமு 14:20) என்னும் வாக்கியத்திற்கு, இஸ்ரவேல் ஜனத்தார், பூரிகைகளை ஊதுவதற்கு பதிலாக, தங்கள் வாயினால் முழக்கமிட்ட போது, "மகாஅமளி உண்டாயிற்று" என்று பொருள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வாயினால் பெருந்தொனியாய் சத்தமிட்டபோது, மகாஅமளி உண்டாயிற்று. சவுலோடுகூட இதுவரையிலும் அறுநூறு பேர் மாத்திரமே இருந்தார்கள். அவர்களுடைய ஆரவாரத்தையும், மகாஅமளியையும் கேட்டு, அங்கங்கே இருக்கிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சவுலோடு சேர்ந்துகொள்கிறார்கள்.

இதற்குமுன் பெலிஸ்தருடன் கூடி அவர்களோடேகூடப் பாளயத்திலே திரிந்து வந்த எபிரெயரும், சவுலோடும் யோனத்தானோடும் இருக்கிற இஸ்ரவேலரோடே கூடிக்கொள்கிறார்கள். எப்பிராயீம் மலைகளில் ஒளித்துக் கொண்டிருந்த சகல இஸ்ரவேலரும் பெலிஸ்தர் முறிந்தோடுகிறதைக் கேள்விப்பட்ட போது, யுத்தத்திலே அவர்களை நெருங்கித் தொடருகிறார்கள் (1சாமு 14:21,22).

தன்னோடுகூட திரளான இஸ்ரவேலர் வந்து கூடுவதை சவுல் பார்க்கிறார். இனிமேல் கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டியதில்லை என்று தீர்மானிக்கிறார். பெலிஸ்தருடைய பாளயத்திலும் கலகம் அதிகரித்திருக்கிறது. சவுலோடு கூடயிருக்கிற இஸ்ரவேலரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. ஆகையினால் பெலிஸ்தருக்கு விரோதமான இந்த யுத்தத்திலே தனக்கு நிச்சயம் ஜெயம் கிடைக்கும் என்று சவுல் உறுதியாய் நினைக்கிறார்.

இந்த சூழ்நிலையில் கர்த்தரை விசாரிக்க வேண்டியதில்லை என்று நினைத்து, தேவனுடைய பெட்டியை கொண்டு வரவேண்டாம் என்றும், அது இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும் என்றும் சவுல் சொல்லிவிடுகிறார். சவுலும் அவரோடிருக்கிற ஜனங்களும் கூட்டங்கூடி போர்க்களத்திற்கு போகிறார்கள் (1சாமு 14:20).

சவுலுக்கு எதிர்பாராத உதவிகளெல்லாம் கிடைக்கிறது. இதற்குமுன் பெலிஸ்தருடன் கூடி அவர்களோடேகூடப் பாளயத்திலே திரிந்து வந்த எபிரெயரும், சவுலோடும் யோனத்தானோடும் இருக்கிற இஸ்ரவேலரோடே கூடிக்கொள்கிறார்கள் (1சாமு 14:21). இவர்கள் சவுலை விட்டு விட்டு பெலிஸ்தரோடு சேர்ந்துகொண்டவர்கள். இவர்கள் இஸ்ரவேலராயிருந்தாலும் பெலிஸ்தருக்கு ஆதரவாயிருந்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் இப்போது சவுலோடு சேர்ந்துகொள்கிறார்கள்.

பெலிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணும்படி, திரளான எண்ணிக்கையில் மிக்மாசிலே பாளயமிறங்குவதைப் பார்த்த இஸ்ரவேலர் பயந்து போய், கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும் ஒளித்துக்கொண்டார்கள். இப்போது எப்பிராயீம் மலைகளில் ஒளித்துக்கொண்டிருந்த சகல இஸ்ரவேலரும் பெலிஸ்தர் முறிந்தோடுகிறதைக் கேள்விப்பட்டபோது, யுத்தத்திலே அவர்களை நெருங்கித் தொடருகிறார்கள் (1சாமு 14:22). பயந்து நடுங்கினவர்களுக்குக்கூட இப்போது வீரம் வந்திருக்கிறது.

சவுல் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, தாங்களும் அவரோடுகூட சேர்ந்து கொள்ளவில்லையென்றால், தங்களுக்கு நிந்தையும், அவமானமும் உண்டாகும் என்று நினைத்து, இஸ்ரவேலில் அநேகர் சவுலோடுகூட சேர்ந்துகொள்கிறார்கள். இஸ்ரவேலர் எல்லோரும் கூட்டமாய்க்கூடி பெலிஸ்தருக்கு விரோதமாய் போர்களத்திற்குப் போகிறார்கள்.

இஸ்ரவேலரின் எண்ணிக்கை திரளாயிருந்தாலும், ஜெயம் கர்த்தராலே வருகிறது. கர்த்தர் அன்றையதினம் இஸ்ரவேலை இரட்சிக்கிறார். பெலிஸ்தரின் பாளயத்தில் பூமியதிர்ந்தது. அது தேவனால் உண்டான பயங்கரமாயிருந்தது. கர்த்தருடைய திட்டத்தினால், பெலிஸ்தர் ஒருவர்மேல் ஒருவர் விழுகிறார்கள். கர்த்தர் அன்றையதினம், பெலிஸ்தரோடு நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேலுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். அந்த யுத்தம் பெத்தாவேன் மட்டும் நடக்கிறது (1சாமு 14:23).

சவுல் கட்டின பலிபீடம்
1சாமு 14:24-35

1சாமு 14:24. இஸ்ரவேலர் அன்றையதினம் மிகுந்த வருத்தம் அடைந்தார்கள்: நான் என் சத்துருக்கள் கையிலே பழிவாங்கவேண்டும், சாயங்காலமட்டும் பொறுக்காமல் எவன் போஜனம் செய்கிறானோ, அவன் சபிக்கப்பட்டவன் என்று சவுல் ஜனங்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருந்தபடியால், ஜனங்களில் ஒருவரும் எவ்வளவேனும் போஜனம்பண்ணாதிருந்தார்கள்.

1சாமு 14:25. தேசத்து ஜனங்கள் எல்லாரும் ஒருகாட்டிலே வந்தார்கள்; அங்கே வெளியிலே தேன்கூடு கட்டியிருந்தது.

1சாமு 14:26. ஜனங்கள் காட்டிலே வந்தபோது, இதோ, தேன் ஒழுகிக் கொண்டிருந்தது; ஆனாலும் ஒருவனும் அதைத் தன் கையினாலே தொட்டுத் தன் வாயில் வைக்கவில்லை; ஜனங்கள் அந்த ஆணையினிமித்தம் பயப்பட்டார்கள்.

1சாமு 14:27. யோனத்தான் தன் தகப்பன் ஜனங்களுக்கு ஆணையிட்டதைக் கேள்விப்படவில்லை; அவன் தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதின் நுனியினாலே தேன்கூட்டைக் குத்தி, அதை எடுத்துத் தன் வாயிலே போட்டுக்கொண்டான்; அதினால் அவன் கண்கள் தெளிந்தது.

1சாமு 14:28. அப்பொழுது ஜனங்களில் ஒருவன்: இன்றைக்கு போஜனம் சாப்பிடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று உம்முடைய தகப்பனார் ஜனங்களுக்கு உறுதியாய் ஆணையிட்டிருக்கிறார்; ஆகையினால் ஜனங்கள் விடாய்த்திருக்கிறார்கள் என்றான்.

1சாமு 14:29. அப்பொழுது யோனத்தான்: என் தகப்பன் தேசத்தின் ஜனங்களைக் கலக்கப்படுத்தினார்; நான் இந்தத் தேனிலே கொஞ்சம் ருசிபார்த்ததினாலே, என் கண்கள் தெளிந்ததைப் பாருங்கள்.

1சாமு 14:30. இன்றையதினம் ஜனங்கள் தங்களுக்கு அகப்பட்ட தங்கள் சத்துருக்களின் கொள்ளையிலே ஏதாகிலும் புசித்திருந்தால், எத்தனை நலமாயிருக்கும்; பெலிஸ்தருக்குள் உண்டான சங்காரம் மிகவும் அதிகமாயிருக்குமே என்றான்.

1சாமு 14:31. அவர்கள் அன்றையதினம் மிக்மாசிலிருந்து ஆயலோன்மட்டும் பெலிஸ்தரை முறிய அடித்தபோது, ஜனங்கள் மிகவும் விடாய்த்திருந்தார்கள்.

1சாமு 14:32. அப்பொழுது ஜனங்கள் கொள்ளையின்மேல் பாய்ந்து, ஆடுகளையும் மாடுகளையும் கன்றுக்குட்டிகளையும் பிடித்து, தரையிலே போட்டு அடித்து, இரத்தத்தோடும் புசித்தார்கள்

1சாமு 14:33. அப்பொழுது: இதோ, இரத்தத்தோடிருக்கிறதைப் புசிக்கிறதினால் ஜனங்கள் கர்த்தருக்கு ஏலாத பாவம் செய்கிறார்கள் என்று சவுலுக்கு அறிவித்தார்கள்; அவன்: நீங்கள் துரோகம்பண்ணினீர்கள்; இப்போதே ஒரு பெரிய கல்லை என்னிடத்தில் உருட்டிக்கொண்டுவாருங்கள்.

1சாமு 14:34. நீங்கள் ஜனத்திற்குள்ளே போய், இரத்தத்தோடிருக்கிறதைச் சாப்பிடுகிறதினாலே, கர்த்தருக்கு ஏலாத பாவம் செய்யாதபடிக்கு, அவரவர் தங்கள் மாட்டையும் அவரவர் தங்கள் ஆட்டையும் என்னிடத்தில் கொண்டுவந்து, இங்கே அடித்து, பின்பு சாப்பிடவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்; ஆகையால் ஜனங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் மாடுகளை அன்று இராத்திரி தாங்களே கொண்டுவந்து, அங்கே அடித்தார்கள்.

1சாமு 14:35. பின்பு சவுல் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்; அது அவன் கர்த்தருக்குக் கட்டின முதலாவது பலிபீடம்.

இஸ்ரவேலர் பெருங்கூட்டமாய்க்கூடி பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகிறார்கள். பெலிஸ்தர் முறிந்து ஓடுகிறதை இஸ்ரவேலர் கேள்விப்பட்டு, யுத்தத்திலே அவர்களை நெருங்கி தொடருகிறார்கள். கர்த்தர் அன்றையதினம் இஸ்ரவேலரை இரட்சிக்கிறார். பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேலருக்கு ஜெயம் கிடைக்கிறது. இது கர்த்தரால் உண்டான ஜெயம். ஆனாலும் இஸ்ரவேலர் அன்றையதினம் மிகுந்த வருத்தமடைகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களில் ஒருவரும் எவ்வளவேனும் போஜனம்பண்ணாதிருக்கிறார்கள். அவர்கள் போஜனம்பண்ணக்கூடாது என்று சவுல் கட்டளையிட்டிருக்கிறார். சவுல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், "நான் என் சத்துருக்கள் கையிலே பழிவாங்கவேண்டும், சாயங்காலமட்டும் பொறுக்காமல் எவன் போஜனம் செய்கிறானோ, அவன் சபிக்கப்பட்டவன்" (1சாமு 14:24) என்று ஆணையிட்டு சொல்லியிருந்தார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் போஜனம்பண்ணாமல், வருத்தமடைந்திருக்கிறார்கள். அவர்கள் சரீரத்திலும், தங்கள் மனதிலும் சோர்ந்துபோயிருக்கிறார்கள்.

அன்றையதினம் போஜனம்பண்ணுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று சவுல் சொல்லியிருக்கிறார். சவுல் ஒரு நல்ல நோக்கத்தோடு இந்த வார்த்தையைச் சொன்னார். இஸ்ரவேலர் முறிந்து ஓடுகிற பெலிஸ்தரை பின்தொடர்ந்துபோகிறார்கள். அவர்கள் சிறிதுநேரத்தையும் வீணாகக்கூடாது. பெலிஸ்தரின் பாளயத்தில் ஒருவருமில்லை. அவர்களுடைய யுத்த தளவாடங்களும் போஜனபதார்த்தங்களும் அங்கேயே கிடக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோகும்போது, போஜனபதார்த்தங்களைப் பார்த்து, அதைப் புசிக்கவேண்டுமென்று இச்சித்து, தங்கள் நேரத்தை வீணாக்கிவிடக்கூடாது. பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோய் அவர்களை சங்காரம்பண்ணுவதில் இஸ்ரவேல் கவனம் செலுத்தவேண்டும். போஜனத்திற்கு ஆசைப்பட்டு, தங்கள் கடமையை மறந்துவிடக்கூடாது. ஆகையினால் போஜனம் பண்ணுகிறவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று சவுல் சொன்னார்.

ஆனாலும் சவுல் இந்தக் கட்டுப்பாட்டை மதியீனமாய்ச் சொன்னார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இஸ்ரவேலர் போஜனம்பண்ணாததினால், அவர்களுக்கு நேரம் கிடைத்திருக்கிறது. ஆனால் அவர்கள் தங்கள் சரீர பலத்தை இழந்துவிடுகிறார்கள். அவர்களால் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்து போகமுடியவில்லை. அவர்களுடைய சரீரத்தில் பெலமில்லை.

சவுல் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சாபத்தையும் சொல்லுகிறார். அந்த சாபத்தை ஆணையிட்டும் சொல்லுகிறார். சாபமிடுவதும், ஆணையிடுவதும் பக்திக்கு அடையாளம் என்று சவுல் நினைக்கிறார். ஆனால் இது மெய்யான பக்திக்கு அடையாளமல்ல. சவுலின் கட்டுப்பாட்டைமீறி, போஜனம்பண்ணியவர்களுக்கு சாபம் வரும் என்று இஸ்ரவேல் ஜனத்தார் பயப்படுகிறார்கள். ஏனென்றால் இந்தக் கட்டுப்பாட்டிற்கு கீழ்ப்படிவதாக, இஸ்ரவேல் புத்திரரும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

யுத்தக்களத்திலே இதுபோன்ற காரியங்களை செய்யக்கூடாது. கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். கர்த்தருடைய பெலத்தினால் சத்துருக்களை முறியடிக்கவேண்டும். போஜனம் பண்ணாமலிருந்து சோர்ந்து போய்விடக்கூடாது.

சவுல் சொன்ன கட்டுப்பாடு மதியீனமாயிருந்தாலும், இஸ்ரவேல் ஜனங்கள் அவர் சொன்ன ஆணைக்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களில் ஒருவரும் எவ்வளவேனும் போஜனம் பண்ணாதிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சரீரத்தில் வருத்தமடைந்தாலும், சோர்ந்துபோயிருந்தாலும், போஜனம் பண்ணவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் முறிந்து ஓடுகிற பெலிஸ்தரை நெருங்கி பின்தொடருகிறார்கள். இஸ்ரவேல் தேசத்து ஜனங்கள் எல்லோரும் இப்போது ஒரு காட்டில் வருகிறார்கள். கானான் தேசம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற தேசம். காட்டு வெளியிலே தேன்கூடு கட்டியிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் காட்டிலே போகும்போது, எல்லா இடங்களிலும் தேன் கூடுகளைப் பார்க்கிறார்கள். வனத்தின் விருட்சங்களில் தேன்கூடுகள் ஏராளமாயிருக்கிறது. அவற்றில் தேனும் திரளாயிருக்கிறது.

ஆனாலும் சவுல் சொன்ன சாபத்தினிமித்தம், ஒருவரும் தேனைப் புசிக்கவில்லை. ஜனங்கள் காட்டிலே வந்தபோது, இதோ, தேன் ஒழுகிக்கொண்டிருக்கிறது; ஆனாலும் ஒருவனும் அதைத் தன் கையினாலே தொட்டுத் தன் வாயில் வைக்கவில்லை; ஜனங்கள் அந்த ஆணையினிமித்தம் பயப்படுகிறார்கள் (1சாமு 14:26).

அப்பொழுது யோனத்தானும் காட்டிலே வருகிறான். யோனத்தான் தன் தகப்பன் ஜனங்களுக்கு ஆணையிட்டதைக் கேள்விப்படவில்லை; அவன் தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதின் நுனியினாலே தேன்கூட்டைக் குத்தி, அதை எடுத்துத் தன் வாயிலே போட்டுக்கொள்கிறான்; அதினால் அவன் கண்கள் தெளிவடைகிறது (1சாமு 14:27).

யோனத்தான் யாருக்கும் பயப்படவில்லை. தேனை சாப்பிடுவதில் தவறு ஒன்றும் இல்லை என்று அவன் நினைக்கிறான். தன் தப்பன் ஜனங்களுக்கு ஆணையிட்டதையும் அவன் கேள்விப்படவில்லை. ஆனாலும் யோனத்தான் தன் தகப்பன் சொன்ன சாபத்திற்கு பாத்திரவானாயிருக்கிறான். அவன் தவறு செய்திருந்தாலும் அவனுடைய கண்கள் தெளிந்திருக்கிறது.

அப்பொழுது ஜனங்களில் ஒருவன், யோனத்தான் செய்த தப்பிதத்தை அவனுக்கு தெளிவுபடுத்துகிறான். அப்பொழுது ஜனங்களில் ஒருவன்: "இன்றைக்கு போஜனம் சாப்பிடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று உம்முடைய தகப்பனார் ஜனங்களுக்கு உறுதியாய் ஆணையிட்டிருக்கிறார்; ஆகையினால் ஜனங்கள் விடாய்த்திருக்கிறார்கள்" (1சாமு 14:28) என்று சொல்லுகிறான்.

யோனத்தானுக்கு தான் செய்த தப்பிதம் புரிகிறது. அறியாமலேயே அவன் ஒரு கண்ணியில் சிக்கிக்கொள்கிறான். பல சமயங்களில் பிள்ளைகள் நல்லவர்களாகயிருந்தாலும், பெற்றோர் செய்கிற தப்பிதங்கள் பிள்ளைகளையும் பாதிக்கிறது. சவுலின் மதியீனத்தினால், யோனத்தானால் இஸ்ரவேலுக்கு ராஜாவாக முடியவில்லை. யோனத்தான் பராக்கிரமசாலியாயிருந்தாலும் அவனுடைய தலையிலே கிரீடம் சூட்டப்படவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் விடாய்த்திருக்கிறார்கள். அவர்களுடைய சரீரம் களைப்படைந்திருக்கிறது. முறிந்து ஓடுகிற பெலிஸ்தரை துரத்துவதினால் இஸ்ரவேலருக்கு களைப்பு உண்டாயிற்று. போஜனம் பண்ணாமலிருப்பதினால் அவர்களுடைய சரீர களைப்பு அதிகரித்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரின் களைப்பை நீக்குவதற்கு என்ன செய்யவேண்டும் என்று யோனத்தான் யோசித்துப் பார்க்கிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் அன்றையதினம் மிக்மாசிலிருந்து ஆயலோன்மட்டும் பெலிஸ்தரை முறிய அடித்தபோது, ஜனங்கள் மிகவும் விடாய்த்திருக்கிறார்கள் (1சாமு 14:31).

யோனத்தான் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் "என் தகப்பன் தேசத்தின் ஜனங்களைக் கலக்கப்படுத்தினார்; நான் இந்தத் தேனிலே கொஞ்சம் ருசிபார்த்ததினாலே, என் கண்கள் தெளிந்ததைப் பாருங்கள். இன்றையதினம் ஜனங்கள் தங்களுக்கு அகப்பட்ட தங்கள் சத்துருக்களின் கொள்ளையிலே ஏதாகிலும் புசித்திருந்தால், எத்தனை நலமாயிருக்கும்; பெலிஸ்தருக்குள் உண்டான சங்காரம் மிகவும் அதிகமாயிருக்குமே" (1சாமு 14:29,30) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் இதுவரையிலும் சவுல் சொன்ன ஆணைக்கு கீழ்ப்படிந்து, போஜனம்பண்ணாதிருந்தார்கள். இப்போது யோனத்தான் சொல்லுகிற ஆலோசனை ஜனங்களுக்கு பிரியமாயிருக்கிறது. அவர்கள் மறுபடியும் புசிக்க ஆரம்பிக்கிறார்கள். தேனையும் புசிக்கிறார்கள், மாம்சத்தையும் புசிக்கிறார்கள். அவர்கள் மிகுந்த பசியிலிருப்பதினால், மாம்சத்தை தீட்டாய்ப் புசிக்கிறார்கள். அப்பொழுது ஜனங்கள் கொள்ளையின்மேல் பாய்ந்து, ஆடுகளையும் மாடுகளையும் கன்றுக்குட்டிகளையும் பிடித்து, தரையிலே போட்டு அடித்து, இரத்தத்தோடும் புசிக்கிறார்கள் (1சாமு 14:32).

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவம் சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களில் சிலர், சவுலிடம், "இதோ, இரத்தத்தோடிருக்கிறதைப் புசிக்கிறதினால் ஜனங்கள் கர்த்தருக்கு ஏலாத பாவம் செய்கிறார்கள்" (1சாமு 14:33) என்று அறிவிக்கிறார்கள். சவுல் அவர்களுடைய பாவங்களை நிறுத்துவதற்கு முயற்சி பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் போஜனம்பண்ணுவதை சவுல் இப்போது தடைபண்ணவில்லை. அவர்கள் எப்படி போஜனம்பண்ணவேண்மென்று ஆலோசனை சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இரத்தத்தோடு இருக்கிறதை புசிக்கிறார்கள் என்று தன்னிடத்தில் அறிவித்த ஜனங்களிடம், "நீங்கள் துரோகம்பண்ணினீர்கள்; இப்போதே ஒரு பெரிய கல்லை என்னிடத்தில் உருட்டிக்கொண்டுவாருங்கள். நீங்கள் ஜனத்திற்குள்ளேபோய், இரத்தத்தோடிருக்கிறதைச் சாப்பிடுகிற தினாலே, கர்த்தருக்கு ஏலாத பாவம் செய்யாதபடிக்கு, அவரவர் தங்கள் மாட்டையும் அவரவர் தங்கள் ஆட்டையும் என்னிடத்தில் கொண்டுவந்து, இங்கே அடித்து, பின்பு சாப்பிடவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" (1சாமு 14:33,34) என்று சவுல் கட்டளையிடுகிறார்;

ஜனங்கள் எல்லாரும், சவுலின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவரவர் தங்கள் மாடுகளை அன்று இராத்திரி தாங்களே கொண்டுவந்து, அங்கே அடிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் துரோகம்பண்ணியிருக்கிறார்கள் என்றும் சவுல் சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, சவுல் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்.

சவுல் இஸ்ரவேல் ஜனங்களிடம், "இப்போதே ஒரு பெரிய கல்லை என்னிடத்தில் உருட்டிக்கொண்டுவாருங்கள்" (1சாமு 14:33) என்று சொல்லுகிறார். பின்பு சவுல் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்; அது அவர் கர்த்தருக்குக் கட்டின முதலாவது பலிபீடம் (1சாமு 14:35).

இஸ்ரவேல் ஜனங்கள் இதுவரையிலும், கொள்ளையின்மேல் பாய்ந்து, ஆடுகளையும் மாடுகளையும், கன்றுக்குட்டிகளையும் பிடிக்கிறார்கள். அவற்றை அவர்கள் தரையிலே போட்டு அடித்து இரத்தத்தோடு புசிக்கிறார்கள். அவர்கள் ஆடுகளையும் மாடுகளையும் தரையிலே போட்டு அடிக்கக்கூடாது என்றும், தன்னுடைய கண்களுக்கு முன்பாக ஒரு பெரிய கல்லின்மேல் அவற்றை அடித்து, இரத்தத்தை சிந்தவிட்ட பின்பு, மாம்சத்தை சாப்பிடவேண்டும் என்று சவுல் அவர்களுக்கு கட்டளைகொடுக்கிறார். சவுல் சொன்ன கட்டளையின் பிரகாரமாக, ஜனங்கள் ஆடுகளையும் மாடுகளையும் அந்தக் கல்லின்மேல் கொண்டு வந்து, அங்கே அடிக்கிறார்கள்.

சவுல் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்கிறார். ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படுவதற்கு, என்ன செய்யவேண்டும் என்று சவுல் சொன்னவுடன், அவர்கள் சவுலின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். ராஜா கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, தன்னுடைய கடமையைச் செய்யும்போது, ஜனங்களுடைய மனதிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகும். ஜனங்கள் தங்களுடைய கடமைகளை செய்ய ஆரம்பிப்பார்கள்.

சவுல் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்கட்டுகிறார். அவர் அங்கே பலிசெலுத்தியிருப்பதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பெலிஸ்தர்மீது ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த ஜெயத்திற்காக, கர்த்தருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, சவுல் இந்த பலிபீடத்தின்மேல் பலிசெலுத்தியிருக்கக்கூடும். அல்லது, இஸ்ரவேல் ஜனங்களுடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுவதற்காக, சவுல் இந்த பலிபீடத்தின்மேல் பலிசெலுத்தியிருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

சவுல் கட்டின இந்த பலிபீடமே, அவர் கர்த்தருக்கு கட்டின முதலாவது பலிபீடமாகும். சவுல் கர்த்தரை விட்டு விலகிப்போயிருந்தாலும், அவர் கர்த்தருக்கு பலிபீடங்களைக் கட்டுகிறார். சவுலைப்போலவே இன்றும் அநேகர், தெய்வபக்தியின்மீது வாஞ்சையாயும் வைராக்கியமாயும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய வல்லமையைப் புறக்கணித்துவிடுகிறார்கள். கர்த்தருக்காக பலிபீடங்களைக் கட்டுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் கர்த்தர்மீது உண்மையான பயபக்தியில்லை. ஒரு சிலர் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதில்லை.

"இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்; யூதா அரணான பட்டணங்களைப் பெருகப்பண்ணுகிறான்; ஆனாலும் நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்; அது அவைகளின் கோவில்களைப் பட்சிக்கும்" (ஓசி 8:14).

பெலிஸ்தரைத் தொடர்ந்து போகலாமா? 1சாமு 14:36-46

1சாமு 14:36. அதற்குப்பின்பு சவுல்: நாம் இந்த இராத்திரியிலே பெலிஸ்தரைத் தொடர்ந்துபோய், விடியற்கால வெளிச்சமாகுமட்டும் அவர்களைக் கொள்ளையிட்டு, அவர்களில் ஒருவரையும் மீதியாக வைக்காதிருப்போமாக என்றான். அதற்கு அவர்கள்: உம்முடைய கண்களுக்கு நலமானபடியெல்லாம் செய்யும் என்றார்கள். ஆசாரியனோ: நாம் இங்கே தேவசந்நிதியில் சேரக்கடவோம் என்றான்.

1சாமு 14:37. அப்படியே: பெலிஸ்தரைத் தொடர்ந்துபோகலாமா? அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுப்பீரா? என்று சவுல் தேவனிடத்தில் விசாரித்தான்; அவர் அந்த நாளிலே அவனுக்கு மறுஉத்தரவு அருளவில்லை.

1சாமு 14:38. அப்பொழுது சவுல்: ஜனத்தின் தலைவர்களே, நீங்கள் எல்லாரும் இங்கே சேர்ந்துவந்து, இன்று இந்தப் பாவம் எதினாலே உண்டாயிற்று என்று பார்த்தறியுங்கள்.

1சாமு 14:39. அது என் குமாரனாகிய யோனத்தானிடத்தில் காணப்பட்டாலும், அவன் சாகவே சாகவேண்டும் என்று இஸ்ரவேலை ரட்சிக்கிற கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்; சகல ஜனங்களுக்குள்ளும் ஒருவனும் அவனுக்குப் பிரதியுத்தரம் சொல்லவில்லை.

1சாமு 14:40. அதற்குப்பின் அவன் இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி: நீங்கள் அந்தப்பக்கத்திலே இருங்கள்; நானும் என் குமாரனாகிய யோனத்தானும் இந்தப்பக்கத்தில் இருப்போம் என்றான்; ஜனங்கள் சவுலைப் பார்த்து: உம்முடைய கண்களுக்கு நலமானபடி செய்யும் என்றார்கள்.

1சாமு 14:41. அப்பொழுது சவுல் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நோக்கி: நிதானமாய்க் கட்டளையிட்டு யதார்த்தத்தை விளங்கப்பண்ணும் என்றான்; அப்பொழுது யோனத்தான்மேலும் சவுலின் மேலும் சீட்டு விழுந்தது, ஜனங்களோ தப்பினார்கள்.

1சாமு 14:42. எனக்கும் என் குமாரனாகிய யோனத்தானுக்கும் சீட்டுப்போடுங்கள் என்று சவுல் சொன்னபோது, யோனத்தான்மேல் சீட்டு விழுந்தது.

1சாமு 14:43. அப்பொழுது சவுல் யோனத்தானைப் பார்த்து: நீ செய்தது என்ன? எனக்குச் சொல் என்று கேட்டான். அதற்கு யோனத்தான்: என் கையில் இருக்கிற கோலின் நுனியினாலே கொஞ்சம் தேன் எடுத்து ருசிபார்த்தேன்; அதற்காக நான் சாகவேண்டும் என்றான்.

1சாமு 14:44. அப்பொழுது சவுல்: யோனத்தானே, நீ சாகத்தான்வேண்டும்; இல்லாவிட்டால் தேவன் எனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்றான்.

1சாமு 14:45. ஜனங்களோ சவுலை நோக்கி: இஸ்ரவேலிலே இந்தப் பெரிய இரட்சிப்பைச் செய்த யோனத்தான் கொலைசெய்யப்படலாமா? அது கூடாது; அவன் தலையில் இருக்கிற ஒரு மயிரும் தரையிலே விழப்போகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறோம்; தேவன் துணைநிற்க அவன் இன்று காரியத்தை நடப்பித்தான் என்றார்கள்; அப்படியே யோனத்தான் சாகாதபடிக்கு, ஜனங்கள் அவனைத் தப்புவித்தார்கள்.

1சாமு 14:46. சவுல் பெலிஸ்தரைத் தொடராமல் திரும்பிவிட்டான்; பெலிஸ்தரும் தங்கள் ஸ்தலத்திற்குப் போய்விட்டார்கள்.

சவுல் பெலிஸ்தரைத் தொடர்ந்துபோய், அவர்களை சங்காரம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறார். பெலிஸ்தரில் ஒருவரையும் மீதியாக வைக்காமல், அவர்களெல்லோரையும் சங்காரம்பண்ணவேண்டும் என்பது சவுலின் திட்டம். இந்த திட்டத்தை இந்த இராத்திரியிலேயே நிறைவேற்ற வேண்டுமென்று சவுல் விரும்புகிறார். சவுலிடத்தில் வேகமும், பெலிஸ்தரை சங்காரம்பண்ணவேண்டும் என்னும் வேகமும் வைராக்கியமும் இருக்கிறது. ஆனால் அவரிடத்தில் விவேகமில்லை.

சவுலின் சேனையிலிருக்கிறவர்கள் எல்லோருமே விடாய்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு இராத்திரியிலே ஓய்வு கொடுக்கவேண்டும். ஆனால் சவுலோ இந்த இராத்திரியிலேயே பெலிஸ்தரைத் தொடர்ந்துபோய், விடியற்கால வெளிச்சமட்டும் அவர்களைக் கொள்ளையிட்டு, ஒருவரையும் மீதியாக வைக்காமல் சங்காரம்பண்ணவேண்டும் என்று சொல்லுகிறார். கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும் என்னும் எண்ணம்கூட சவுலிடத்தில் இல்லை.

பெலிஸ்தரை சங்காரம்பண்ண புறப்பட்டுப்போவாம் என்று சொன்னவுடன், சவுலின் சேனையிலுள்ளவர்கள் "உம்முடைய கண்களுக்கு நலமானபடியெல்லாம் செய்யும்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் தளபதியின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள்.

படைவீரர் விடாய்த்திருப்பதை ஆசாரியர்கள் புரிந்துகொள்கிறார்கள். ஆசாரியன் சவுலிடத்தில், "நான் இங்கே தேவசந்நிதியில் சேரக்கடவோம்" என்று சொல்லுகிறான். பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவதற்கு முன்பாக, கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க வேண்டும். அவருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இது ஆசாரியனின் ஆலோசனை.

பிரபுக்களுக்கும், தேசத்தின் தலைவர்களுக்கும் ஆவிக்குரிய ஆலோசனை சொல்லுவதற்கு, இதுபோன்ற ஆசாரியர்கள் தேவைப்படுகிறார்கள். தலைவர்கள் தேசத்தின் காரியங்களை தீவிரமாய் சிந்தித்துக்கொண்டிருந்தாலும், ஆசாரியர்கள் அவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களை நினைவுபடுத்தவேண்டும். ராஜாக்களும், பிரபுக்களும், தலைவர்களும் எங்கே போனாலும், அவர்கள் தங்களோடுகூட கர்த்தரையும் அழைத்துச் செல்லவேண்டும்.

ஆசாரியன் சவுலுக்கு நன்மை செய்ய விரும்பி, "நாம் இங்கே தேவசந்நிதியில் சேரக்கடவோம்" என்று சொல்லுகிறான். ஆசாரியனுடைய ஆலோசனையை சவுலும் ஏற்றுக்கொள்கிறார். சவுல் தேவசந்நிதியில் சேர்ந்து, தேவனிடத்தில் விசாரிக்கிறார்.

"பெலிஸ்தரைத் தொடர்ந்துபோகலாமா? அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுப்பீரா?" என்று சவுல் தேவனிடத்தில் விசாரிக்கிறார்; அவர் அந்த நாளிலே சவுலுக்கு தேவன் மறுஉத்தரவு அருளவில்லை (1சாமு 14:37).

கர்த்தர் சவுலின்மீது பிரியமாயில்லை. அவர் தம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்தும் வண்ணமாக, அந்த நாளிலே சவுலுக்கு மறுஉத்தரவு அருளவில்லை. கர்த்தருடைய கோபத்திற்கு காரணம் என்ன என்பதை சவுல் யோசித்துப் பார்க்கிறார். தன்னிடத்திலோ, இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திலோ ஏதாவது பாவமும் சாபமும் இருக்கவேண்டும் என்று சவுல் நினைக்கிறார். இந்தப் பாவம் எதினால் உண்டாயிற்று என்பதையும் பார்த்து அறிய விரும்புகிறார்.

அப்பொழுது சவுல் இஸ்ரவேல் ஜனத்தாரிடம்: "ஜனத்தின் தலைவர்களே, நீங்கள் எல்லாரும் இங்கே சேர்ந்துவந்து, இன்று இந்தப் பாவம் எதினாலே உண்டாயிற்று என்று பார்த்தறியுங்கள். அது என் குமாரனாகிய யோனத்தானிடத்தில் காணப்பட்டாலும், அவன் சாகவே சாகவேண்டும் என்று இஸ்ரவேலை ரட்சிக்கிற கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 14:38,39) என்று சொல்லுகிறார்.

சவுலுக்கு யோசுவாவின் காலத்திலிருந்த ஆகானின் சரித்திரம் தெரியும். தன்னுடைய சேனையிலும் ஆகானைப்போல பாவம் செய்தவன் எவனாவது இருப்பானென்றால் அவனை பார்த்தறிந்து தண்டிக்கவேண்டும் என்று சவுல் நினைக்கிறார். ஏதேன் தோட்டத்திலே, கர்த்தர் தடைபண்ணின விருட்சத்தின் கனியை, ஆதாமும் ஏவாளும் புசித்து கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தார்கள். அதுபோல கர்த்தர் தடைபண்ணினதை, தன்னுடைய சேனையிலுள்ளவர்கள் புசித்து, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருப்பார்களோ என்று சவுல் சந்தேகப்படுகிறார்.

பாவம் செய்தவனை தண்டிக்கவேண்டும் என்பதில் சவுல் தீர்மானமாயிருக்கிறார். பாவம் செய்தவன் தன் குமாரனாகிய யோனத்தானாயிருந்தாலும், அல்லது அது தானாகயிருந்தாலும் அல்லது இஸ்ரவேலரில் யாராகயிருந்தாலும் அவன் சாகவே சாகவேண்டும் என்று சவுல் இஸ்ரவேலை இரட்சிக்கிற கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார்.

சவுலின் வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கேட்கிறார்கள். ஆனாலும் சகல ஜனங்களுக்குள்ளும் ஒருவனும் அவனுக்குப் பிரதியுத்தரம் சொல்லவில்லை. இந்தப் பாவம் எதினால் உண்டாயிற்று என்பதையும், அது யாரால் உண்டாயிற்று என்பதையும் கண்டுபிடிப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் சீட்டுப்போட்டு பார்க்கிறார்கள்.

அதற்குப்பின் சவுல் இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி: "நீங்கள் அந்தப்பக்கத்திலே இருங்கள்; நானும் என் குமாரனாகிய யோனத்தானும் இந்தப்பக்கத்தில் இருப்போம்" என்று சொல்லுகிறார். ஜனங்கள் சவுலைப் பார்த்து: "உம்முடைய கண்களுக்கு நலமானபடி செய்யும்" (1சாமு 14:40) என்று சொல்லுகிறார்கள்.

அப்பொழுது சவுல் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நோக்கி: "நிதானமாய்க் கட்டளையிட்டு யதார்த்தத்தை விளங்கப்பண்ணும்" (1சாமு 14:41) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்; அப்பொழுது யோனத்தான்மேலும் சவுலின் மேலும் சீட்டு விழுகிறது, ஜனங்களோ தப்புகிறார்கள்.

பாவம் யாரிடத்தில் காணப்படுகிறது என்பதை சவுல் சீட்டுப்போட்டு பார்க்கிறார். அந்த சீட்டு யோனத்தான்மேலும் சவுலின்மேலும் விழுகிறது. இவ்விரண்டு பேரில் ஒருவர் பாவம் செய்திருக்கிறார். அந்த நபரை கண்டுபிடிக்கும் வண்ணமாக, "எனக்கும் என் குமாரனாகிய யோனத்தானுக்கும் சீட்டுப்போடுங்கள்" (1சாமு 14:42) என்று சவுல் சொல்லுகிறார். யோனத்தான்மேல் சீட்டு விழுகிறது.

யோனத்தான் தான் பாவம் செய்தான் என்பது, சீட்டுப்போட்டு பார்த்ததன் மூலமாய் உறுதிபண்ணப்படுகிறது. யோனத்தான் பாவம் செய்திருக்கமாட்டான் என்று சவுல் நினைத்தார். ஆகையினால் சவுல் அவனை தன் பக்கத்தில் வைத்திருந்து சீட்டுப்போடச்சொன்னார். ஆனால் சீட்டு யோனத்தானும் சவுலும் இருந்த பக்கத்தில் விழுகிறது.

அப்பொழுது சவுல் யோனத்தானைப் பார்த்து: "நீ செய்தது என்ன? எனக்குச் சொல்" என்று கேட்கிறார். அதற்கு யோனத்தான்: "என் கையில் இருக்கிற கோலின் நுனியினாலே கொஞ்சம் தேன் எடுத்து ருசிபார்த்தேன்; அதற்காக நான் சாகவேண்டும்" (1சாமு 14:43) என்று சொல்லுகிறான்.

யோனத்தான் தான் செய்த தப்பிதத்தை மறைக்கவில்லை. தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்கிறான். "நான் என் சத்துருக்கள் கையிலே பழிவாங்கவேண்டும், சாயங்காலமட்டும் பொறுக்காமல் எவன் போஜனம் செய்கிறானோ, அவன் சபிக்கப்பட்டவன் என்று சவுல் ஜனங்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருந்தார்" (1சாமு 14:24). ஆனால் தன் தகப்பன் ஜனங்களுக்கு ஆணையிட்டதை யோனத்தான் கேள்விப்படவில்லை (1சாமு 14:27).

யோனத்தான் பாவம் செய்திருந்தாலும், அவன் இந்தப் பாவத்தை அறியாமலேயே செய்திருக்கிறான். ஆகையினால் தனக்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கக்கூடாது என்று யோனத்தான் தன் தகப்பனாரிடம் வழக்காடியிருக்கலாம். ஆனால் யோத்தானோ வழக்காடவில்லை. "என் கையிலிருக்கிற கோலின் நுனியினால் கொஞ்சம் தேன் எடுத்து ருசிபார்த்தேன், அதற்காக நான் சாகவேண்டும்" என்று யோனத்தான் தன்னுடைய தப்பிதத்தையும், தனக்கு கொடுக்கப்படும் தண்டனையையும் அங்கீகரிக்கிறான். கர்த்தருடைய சித்தமும், தன்னுடைய தகப்பனாருடைய சித்தமும் நிறைவேறட்டும் என்று யோனத்தான் தன்னை ஒப்புக்கொடுக்கிறான்.

யோனத்தான் ஒரு பராக்கிரமசாலி. அவன் சத்துருக்களுக்கு விரோதமாய் பயமில்லாமல் தைரியமாய் யுத்தம்பண்ணக்கூடியவன். யோனத்தான் தன்னுடைய உண்மையான வீரத்தை, கீழ்ப்படிதலின் மூலமாய் நிரூபிக்கிறான். நாம் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். சத்தியத்திற்கு கீழ்ப்படியவேண்டும். இந்த நல்ல சுபாவம் யோனத்தானிடம் காணப்படுகிறது.

யோனத்தான் "நான் சாகவேண்டும்" என்று சொல்லுகிறான் தன்னுடைய பாவத்தை அங்கீகரிக்கிறான். தன்னுடைய மகனுடைய வார்த்தையைக் கேட்டு, சவுல் தண்டனையை நிறுத்தி வைக்கவில்லை. அப்பொழுது சவுல்: "யோனத்தானே, நீ சாகத்தான்வேண்டும்; இல்லாவிட்டால் தேவன் எனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" (1சாமு 14:44) என்று சொல்லுகிறார்.

சவுல் யோனத்தானுக்கு தண்டனை கொடுக்கவில்லையென்றால், தேவன் அதற்கு சரியாகவும், அதற்கு அதிகமாகவும் சவுலுக்கு செய்வார். சவுல் யோசித்துப் பார்க்காமல் அவசரப்பட்டு தீர்ப்பு சொல்லுகிறார். "பெலிஸ்தரைத் தொடர்ந்து போகலாமா, அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுத்தீரா" (1சாமு 14:37) என்று சவுல் தேவனிடத்தில் விசாரித்தார். ஆனால் இப்போதோ, சவுல் தேவனிடத்தில், "யோனத்தான் சாகவேண்டுமா" என்று விசாரிக்கவில்லை. கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணாமல் செய்கிற எல்லா காரியமும், அவசரப்பட்டு செய்கிற காரியமாகவே இருக்கும்.

யோனத்தான் சவுலின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் மீறவில்லை. அவன் கொஞ்சம் தேனை ருசிபார்த்தது மெய்தான். ஆனாலும் யோனத்தான் இந்தப் பாவத்தை துணிகரமாய்ச் செய்யவில்லை. சவுலின் ஆணையை அறியாமல் யோனத்தான் இந்த தப்பிதத்தை செய்து விட்டான். சவுல் இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, யோனத்தானை மன்னித்து, தண்டியாமல் விட்டுவிடவேண்டும்.

காலதாமதமாக கொடுக்கப்படுகிற நியாயத்தீர்ப்பு, சரியான நியாயத்தீர்ப்பாயிருக்காது. அதே வேளையில் அவசரப்பட்டு கொடுக்கப்படுகிற நியாயத்தீர்ப்பும் சரியான நியாயத்தீர்ப்பாயிருப்பதற்கு வாய்ப்பில்லை. நியாயாசனத்தில் வீற்றிருக்கிறவர்கள் வழக்குகளை நீதியாய் விசாரித்து நியாயமான தீர்ப்பு சொல்லவேண்டும். கோபத்தோடு விசாரித்து, மனக்கசப்போடு தீர்ப்பு சொல்லக்கூடாது.

சவுல் யோனத்தானிடம், "நீ சாகத்தான் வேண்டும்" என்று தன்னுடைய தீர்ப்பைச் சொல்லுகிறார். இந்த தீர்ப்பை நிறைவேற்றாவிட்டால் தன்மீது சாபம் வரும் என்றும் சவுல் ஆணையிடுகிறார். "இல்லாவிட்டால், தேவன் எனக்கு அதற்கு சரியாகவும், அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" என்று சவுல் சொல்லுகிறார்.

யோனத்தான் மரணத்திற்கு தப்பிக்கிறார். சவுல் சொன்ன பிரகாரமாக தேவனுடைய சாபம் அவர்மீது வருகிறது. நாம் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. சவுலின் நாவே அவரைக் கெடுத்துப்போடுகிறது.

"அவர்கள் தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும்; அவர்களைக் காண்கிற யாவரும் ஓடிப்போவார்கள்" (சங் 64:8).

சவுல் யோனத்தானைப் பார்த்து, "நீ சாகத்தான் வேண்டும்" என்று சொன்னபோது, அவர் தனக்குத்தானே தண்டனை கொடுத்துக்கொள்கிறார். யோனத்தான் சவுலின் குமாரன். யோனத்தான் செத்துப்போவது சவுலுக்கு பிரியமான காரியமல்ல. ஆனாலும் தன்னுடைய வார்த்தையின் பிரகாரமாக, நீதியை நிலைநிறுத்தவேண்டும் என்று சவுல் தீர்மானம்பண்ணுகிறார். யோனத்தான் சாகத்தான் வேண்டும் என்பது சவுலின் நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

சவுலின் நியாயத்தீர்ப்பு கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக சவுல் இங்கே நியாயத்தீர்ப்பு கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாகவும், யோனத்தானை காப்பாற்றுகிறார். சவுல் அவசரப்பட்டு கொடுத்த நியாயத்தீர்ப்பை கர்த்தர் அவமாக்குகிறார். சவுல் ஏற்கெனவே சாமுவேல் வருவதற்கு முன்பாக, தானாக சர்வாங்க தகனபலியை செலுத்தி பாவம் செய்தார். இப்போது கர்த்தருடைய சித்தத்தை அறியாமல், யோனத்தானுக்கு மரணதண்டனை கொடுத்து பாவம் செய்கிறார். சவுலின் பாவம் அதிகரிக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் இதுவரையிலும் சவுலின் வார்த்தைக்கு எதிர்ப்பு சொல்லாமல் கீழ்ப்படிந்தார்கள். "நாம் இந்த இராத்திரியிலே பெலிஸ்தரைத் தொடர்ந்து போவோம்" என்று சவுல் சொன்னபோது, இஸ்ரவேல் ஜனத்தார், "உம்முடைய கண்களுக்கு நலமானபடியெல்லாம் செய்யும்" (1சாமு 14:36) என்று சொன்னார்கள்.

சவுல் இஸ்ரவேல் ஜனங்களிடம், "இன்று இந்தப் பாவம் எதினாலே உண்டாயிற்று என்று பார்த்தறியும்படி சீட்டுப்போடுவோம்" என்றும், "அது என் குமாரனாகிய யோனத்தானிடத்தில் காணப்பட்டாலும் அவன் சாகவே சாகவேண்டும்" என்று சொன்னபோது, ஜனங்கள் சவுலைப் பார்த்து, "உம்முடைய கண்களுக்கு நலமானபடி செய்யும்" (1சாமு 14:40) என்று சொன்னார்கள்.

சவுல் இப்போது, "யோனத்தானே, நீ சாகத்தான் வேண்டும்" என்று சொல்லும்போது, ஜனங்கள் சவுலின் வார்த்தையை அங்கீகரிக்கவில்லை. ஜனங்களோ சவுலை நோக்கி: "இஸ்ரவேலிலே இந்தப் பெரிய இரட்சிப்பைச் செய்த யோனத்தான் கொலைசெய்யப்படலாமா? அது கூடாது; அவன் தலையில் இருக்கிற ஒரு மயிரும் தரையிலே விழப்போகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறோம்; தேவன் துணைநிற்க அவன் இன்று காரியத்தை நடப்பித்தான்" (1சாமு 14:45) என்று சொல்லுகிறார்கள்; அப்படியே யோனத்தான் சாகாதபடிக்கு, ஜனங்கள் அவனைத் தப்புவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, இதுவரையிலும் சவுலின் வார்த்தைகள் மீறக்கூடாத பிரமாணமாகவும், கட்டளையாகவும் இருந்தது. சவுல் யோனத்தானுக்கு விரோதமாகப் பேசினபோது, சவுலின் வார்த்தைகள் ஜனங்களுக்கு பிரமாணமாகவும், கட்டளையாகவும் இல்லை. அவர்கள் சவுலின் வார்த்தைகளை மீறுகிறார்கள். யோனத்தானுக்கு ஆபத்து வரும்போது, அவனைப் பாதுகாக்கவும், அந்த ஆபத்திலிருந்து அவனை விடுவிக்கவும் ஜனங்கள் தீர்மானமாயிருக்கிறார்கள்.

யோனத்தான் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறான். அவன் இஸ்ரவேலருக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறான். யோனத்தானும் அவனுடைய ஆயுததாரியும் வேறு யாருடைய துணையுமில்லாமல், தாங்களாகவே பெலிஸ்தரின் தாணையத்திற்குப்போய் அவர்களை சங்காரம்பண்ணினார்கள். அவன் தன் ஜீவனை மதியாமல், இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஜீவனை பாதுகாத்தவன்.

தங்களுக்காக தன் ஜீவனையே கொடுக்க ஆயத்தமாயிருந்த யோனத்தானுடைய ஜீவனை, காப்பற்றவேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் தீர்மானமாயிருக்கிறார்கள். சவுலின் வார்த்தையில் கர்த்தர் பிரியப்படவில்லை என்பது ஜனங்களுக்கு தெரிந்திருக்கிறது. யோனத்தான் கர்த்தருடைய கருவியாக பயன்பட்டு இஸ்ரவேலருக்கு நன்மை செய்திருக்கிறான். ஆகையினால் இஸ்ரவேல் ஜனங்கள் யோனத்தானுக்காக சவுலிடம் பேசும்போது, "தேவன் துணை நிற்க அவன் இன்று காரியத்தை நடப்பித்தான்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வார்த்தையில் உறுதியாயிருக்கிறார்கள். அவர்கள் சவுலிடம் "கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டு சொல்லுகிறோம்" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி யோனத்தானை காப்பற்றவில்லை. அவர்கள் நியாயத்தை எடுத்து சொல்லுகிறார்கள். யோனத்தான் ஏன் சாகக்கூடாது என்பதற்கு காரணங்களை சொல்லுகிறார்கள். தங்களுடைய விருப்பத்தையும் தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள். கர்த்தர் யோனத்தானை இந்த சாபத்திலிருந்து விடுவிக்கவேண்டும் என்று, இஸ்ரவேல் ஜனங்கள், யோனத்தானுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள் என்றும், அதன் நிமித்தமாகவே அவர்கள், "கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறோம்" என்றும் சொல்லுவதாக வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

யோனத்தான் தேவனுடைய காரியத்தை செய்தான். "தேவன் துணை நிற்க அவன் இன்று காரியத்தை நடப்பித்தான்". யோனத்தான் செய்த காரியம் கர்த்தருடைய காரியம். ஆகையினால் யோனத்தானின் ஜீவன் கர்த்தருடைய பார்வையில் மிகவும் விசேஷித்ததாயிருக்கிறது. யோனத்தான் கொலைசெய்யப்படக்கூடாது. அவன் தலையிலிருக்கிற ஒரு மயிரும் தரையிலே விழப்போகிறதில்லை என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்.

யோனத்தான் சாகாதபடிக்கு ஜனங்கள் அவனைத் தப்புவிக்கிறார்கள். சவுல் பெலிஸ்தரைத் தொடராமல் திரும்பிவிடுகிறான்; பெலிஸ்தரும் தங்கள் ஸ்தலத்திற்குப் போய்விடுகிறார்கள் (1சாமு 14:46). பெலிஸ்தரைத் தொடர்ந்துபோய், அவர்களை சங்காரம்பண்ணவேண்டும் என்பது சவுலின் திட்டம். ஆனால் அந்த திட்டத்தை நிறைவேற்ற முடியாதவாறு, சவுலுக்கு யோனத்தானைப்பற்றிய பிரச்சனை உண்டாயிற்று. இந்தப் பிரச்சனை முடியும்போது, சவுல் பெலிஸ்தரைப் பின்தொடரும் திட்டத்தை கைவிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பெலிஸ்தர்மீது முழுமையான வெற்றி கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்தது. சவுலின் மதியீனத்தினாலும், அவருடைய அவசர புத்தியினாலும் இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தரை சங்காரம்பண்ணும் இந்த நல்ல வாய்ப்பை இழந்துவிடுகிறார்கள்.

சவுலின் நடபடிகள்
1சாமு 14:47-52

1சாமு 14:47. இப்படிச் சவுல் இஸ்ரவேலை ஆளுகிற ராஜ்யபாரத்தைப் பெற்றுக்கொண்டு, சுற்றிலும் இருக்கிற தன்னுடைய எல்லாச் சத்துருக்களுமாகிய மோவாபியருக்கும், அம்மோன் புத்திரருக்கும், ஏதோமியருக்கும், சோபாவின் ராஜாக்களுக்கும், பெலிஸ்தருக்கும் விரோதமாக யுத்தம் பண்ணி, எவர்கள்மேல் படையெடுத்தானோ, அவர்களையெல்லாம் அடக்கினான்.

1சாமு 14:48. அவன் பலத்து, அமலேக்கியரை முறிய அடித்து, இஸ்ரவேலரைக் கொள்ளையிடுகிற யாவர் கைக்கும் அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தான்.

1சாமு 14:49. சவுலுக்கு இருந்த குமாரர்: யோனத்தான், இஸ்வி, மல்கிசூவா என்பவர்கள்; அவனுடைய இரண்டு குமாரத்திகளில், மூத்தவள் பேர் மேரப், இளையவள் பேர் மீகாள்.

1சாமு 14:50. சவுலுடைய மனைவியின் பேர் அகினோவாம், அவள் அகிமாசின் குமாரத்தி; அவனுடைய சேனாபதியின்பேர் அப்னேர், அவன் சவுலுடைய சிறியதகப்பனாகிய நேரின் குமாரன்.

1சாமு 14:51. கீஸ் சவுலின் தகப்பன்; அப்னேரின் தகப்பனாகிய நேர் ஆபியேலின் குமாரன்.

1சாமு 14:52. சவுல் இருந்த நாளெல்லாம் பெலிஸ்தரின்மேல் கடினமான யுத்தம் நடந்தது; சவுல் ஒரு பராக்கிரமசாலியையாகிலும் ஒரு பலசாலியையாகிலும் காணும்போது, அவர்கள் எல்லாரையும் தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளுவான்.

இந்த அதிகாரத்தின் முடிவுரையில் சவுலின் குடும்பத்தாரைப்பற்றியும், அவர் சத்துருக்களுக்கு விரோதமாக மேற்கொண்ட யுத்தங்களைப்பற்றியும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சவுலுக்கு இருந்த குமாரர்: யோனத்தான், இஸ்வி, மல்கிசூவா என்பவர்கள்; அவனுடைய இரண்டு குமாரத்திகளில், மூத்தவள் பேர் மேரப், இளையவள் பேர் மீகாள். சவுலுடைய மனைவியின் பேர் அகினோவாம், அவள் அகிமாசின் குமாரத்தி; அவனுடைய சேனாபதியின்பேர் அப்னேர், அவன் சவுலுடைய சிறியதகப்பனாகிய நேரின் குமாரன் *(1சாமு 14:49,50)*.

சவுலுக்கு மேலும் ஒரு மனைவி இருப்பதாகவும் வேதவசனம் சொல்லுகிறது. "ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்குப் பெற்ற அவளுடைய இரண்டு குமாரராகிய அர்மோனியையும் மேவிபோசேத்தையும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மேகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய ஆதரியேலுக்குப் பெற்ற அவளுடைய ஐந்து குமாரரையும் பிடித்து, அவர்களைக் கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தான்" *(2சாமு 21:8,9)*.

சவுல் தன்னுடைய சேனையைப் பலப்படுத்துகிறார். சவுல் ஒரு பராக்கிரமசாலியையாகிலும் ஒரு பலசாலியையாகிலும் காணும்போது, அவர்கள் எல்லாரையும் தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளுவார் *(1சாமு 14:52)*.

சாமுவேல் இஸ்ரவேலை ஆளுகை செய்யும் ராஜாவின் காரியத்தைப்பற்றி ஏற்கெனவே இவ்வாறு சொல்லியிருக்கிறார். "உங்களை ஆளும் ராஜாவின் காரியம் என்னவென்றால், தன் ரதத்திற்கு முன் ஓடும்படி அவன் உங்கள் குமாரரை எடுத்து, தன் ரதசாரதிகளாகவும் தன் குதிரைவீரராகவும் வைத்துக்கொள்ளுவான்" *(1சாமு 8:11)*. சாமுவேல் சொன்ன பிரகாரம் சவுல் திறமையுள்ள எல்லோரையும் தன்னிடமாகச் சேர்த்துக்கொள்கிறார்.

சவுல் தன்னுடைய சேனையை நல்லமுறையில் பயன்படுத்துகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக சத்துருக்கள் யுத்தம்பண்ண முடியாதவாறு, சவுல் தன் தேசத்தின் எல்லைகளையும், பாதுகாப்பையும் பலப்படுத்துகிறார்.

இப்படிச் சவுல் இஸ்ரவேலை ஆளுகிற ராஜ்யபாரத்தைப் பெற்றுக்கொண்டு, சுற்றிலும் இருக்கிற தன்னுடைய எல்லாச் சத்துருக்களுமாகிய மோவாபியருக்கும், அம்மோன் புத்திரருக்கும், ஏதோமியருக்கும், சோபாவின் ராஜாக்களுக்கும், பெலிஸ்தருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணி, எவர்கள்மேல் படையெடுத்தானோ, அவர்களையெல்லாம் அடக்குகிறார். சவுல் பலத்து, அமலேக்கியரை முறிய அடித்து, இஸ்ரவேலரைக் கொள்ளையிடுகிற யாவர் கைக்கும் அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார் (1சாமு 14:47,48).

சவுலின் காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான சத்துருக்கள் இருந்தாலும், பெலிஸ்தரே இஸ்ரவேலருக்கு பிரதான சத்துருக்களாயிருந்தார்கள். சவுல் இருந்த நாளெல்லாம் பெலிஸ்தரின்மேல் கடினமான யுத்தம் நடந்தது (1சாமு 14:52).

15 அதிகாரம்

சவுல் ராஜாவாயிராதபடிக்கு தள்ளிவிடப்படுகிறார். சவுல் அமலேக்கியரை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும் (1சாமு 15:1-3). சவுல் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தமாகிறார் (1சாமு 15:4-6). அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே சவுலுக்கு ஜெயமுண்டாயிற்று. ஆனால் அவர் அமலேக்கியரை முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை. சவுல் தேவனுடைய கட்டளைக்கு முழுவதுமாய்க் கீழ்ப்படியாமல் ஓரளவு மாத்திரமே கீழ்ப்படிகிறார்.

சாமுவேல் சவுலை சோதிக்கிறார். சாமுவேல் சவுலுக்கு நீதியான தீர்ப்பைச் சொல்லுகிறார் (1சாமு 15:10-31). சாமுவேல் ஆகாகை துண்டித்துப்போடுகிறார் (1சாமு 15:32,33). சாமுவேல் சவுலைவிட்டு நிரந்தரமாய்ப் பிரிந்துபோய்விடுகிறார் (1சாமு 15:34,35).

அமலேக்கு
1சாமு 15:1-9

1சாமு 15:1. பின்பு சாமுவேல் சவுலை நோக்கி: இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனங்கள் மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே; இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்;

1சாமு 15:2. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன்.

1சாமு 15:3. இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்.

1சாமு 15:4. அப்பொழுது சவுல்: இதை ஜனங்களுக்கு அறியப்படுத்தி, தெலாயிமிலே அவர்களைத் தொகைபார்த்தான்; அவர்கள் இரண்டு லட்சம் காலாட்களும், யூதா ஜனங்கள் பதினாயிரம்பேருமாயிருந்தார்கள்.

1சாமு 15:5. சவுல் அமலேக்குடைய பட்டணமட்டும் வந்து, பள்ளத்தாக்கிலே ஒரு பதிவிடையை வைத்தான்.

1சாமு 15:6. சவுல் கேனியரை நோக்கி: நான் அமலேக்கியரோடேகூட உங்களையும் வாரிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போங்கள்; இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது, நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயவுசெய்தீர்கள் என்றான்; அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனார்கள்.

1சாமு 15:7. அப்பொழுது சவுல்: ஆவிலாதுவக்கி எகிப்திற்கு எதிரேயிருக்கிற சூருக்குப்போகும் எல்லைமட்டும் இருந்த அமலேக்கியரை மடங்கடித்து,

1சாமு 15:8. அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான்; ஜனங்கள் யாவரையும் பட்டயக் கருக்கினாலே சங்காரம்பண்ணினான்.

1சாமு 15:9. சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நல்மான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப்போட்டான்.

சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். சவுலின் விசுவாசமும் கீழ்ப்படிதலும் இந்த அதிகாரத்தில் சோதிக்கப்படுகிறது. சாமுவேல் சவுலை நோக்கி: "இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனங்கள் மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே; இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்" (1சாமு 15:1) என்று சொல்லுகிறார்.

சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவாரா அல்லது கீழ்ப்படியமாட்டாரா என்பதை சாமுவேல் ஒரு சம்பவத்தின் மூலமாய் சோதித்துப் பார்க்கிறார். கர்த்தர் சவுலுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தரே சவுலை இஸ்ரவேலருக்கு மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் சவுலுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். சவுல் அந்த அதிகாரத்தை கர்த்தருக்கு சித்தமான வழியில் பயன்படுத்தவேண்டும்.

நம்மிடத்தில் எவ்வளவு திறமைகளும், தாலந்துகளும், பலமும் பராக்கிரமமும் இருந்தாலும் அவையெல்லாவற்றையும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து பயன்படுத்தவேண்டும். நம்முடைய சித்தத்தைவிட கர்த்தருடைய சித்தமே நமக்கு மிகவும் முக்கியமானதாயிருக்க வேண்டும். கர்த்தர் நமக்கு என்ன கட்டளை கொடுத்தாலும், நாம் அதற்கு கீழ்ப்படிய ஆயத்தாயிருக்கவேண்டும்.

சாமுவேல் சவுலிடம், "இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்" (1சாமு 15:1) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்தால்தான், அதற்கு நம்மால் கீழ்ப்படிய முடியும். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவில்லையென்றால், கர்த்தருடைய சித்தமும், விருப்பமும், திட்டமும் என்ன என்பதே நமக்கு தெரியாது. கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய விரும்புகிறவர்கள், முதலாவதாக கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்கவேண்டும்.

சாமுவேல் சவுலின் கீழ்ப்படிதலை சோதிக்க விரும்புகிறார். சவுல் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும். சவுல் பல சமயங்களில் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், தன்னுடைய சுயவிருப்பத்தை நிறைவேற்றியிருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சேனைகளின் கர்த்தராகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை சுதந்தரமாக வாக்குப்பண்ணினார். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்திலிருந்து, வனாந்தரத்தின் வழியாக கானான் தேசத்திற்கு பிரயாணம்பண்ணினார்கள். அப்போது அமலேக்கியர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நன்மை செய்யாமல் தீங்கு செய்தார்கள்.

"இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன்" (1சாமு 15:2) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அமலேக்கியருக்கு விரோதமாக கர்த்தருக்கு பூர்வகாலத்து பகையிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை சேதப்படுத்தினார்கள்.

"அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்" (யாத் 17:8). அமலேக்கியரின் பாவம் கர்த்தருடைய பார்வையில் பெரிதாயிருக்கிறது.

"எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு" (உபா 25:17,18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் அமலேக்கியரை அழிக்கும் பொறுப்பை சவுலுக்கு கட்டளையாகச் சொல்லுகிறார். "இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய்" (1சாமு 15:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சாமுவேல் கர்த்தருடைய வார்த்தையை சவுலுக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய சேனையும் பெரிதாயிருக்கிறது. அவர்கள் இப்போது அமலேக்கியரை முற்றிலுமாய் சங்காரம் பண்ணவேண்டும். அமலேக்கியருக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்துவிடவேண்டும்.

சவுல் இஸ்ரவேல் ஜனத்தாரிலே தன்னுடைய யுத்தவீரர்களை தொகை பார்த்து அவர்களை பலப்படுத்தவேண்டும். அமலேக்கியரை மடங்கடித்து அவர்களை மொத்தமாய் சங்காரம்பண்ணவேண்டும். சாமுவேல் தனக்கு சொன்ன வார்த்தைகளை சவுல் ஏற்றுக்கொள்கிறார். சவுல் சாமுவேலுக்கு உடனே கீழ்ப்படிந்து, இந்தச் செய்தியை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறியப்படுத்துகிறார்.

சவுல் இஸ்ரவேல் ஜனங்களை தெலாயிமிலே தொகைபார்க்கிறார்; அவர்கள் இரண்டு லட்சம் காலாட்களும், யூதா ஜனங்கள் பதினாயிரம்பேருமாயிருக்கிறார்கள். சவுல் அமலேக்குடைய பட்டணமட்டும் வந்து, பள்ளத்தாக்கிலே ஒரு பதிவிடையை வைக்கிறார் (1சாமு 15:4,5).

தெலாயிம் என்னும் பெயருக்கு "ஆடுகள்" என்று பொருள். சவுல் இஸ்ரவேல் ஜனங்களை ஆடுகளை எண்ணி தொகையிடுவதுபோல எண்ணி தொகையிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் பூர்வகாலத்திலே ஆடுகளை எண்ணும்போது பத்து பத்து ஆடுகளாக எண்ணுவது வழக்கம். அதுபோலவே சவுலும் இஸ்ரவேல் ஜனங்களை பத்து பத்துப்பேராக எண்ணுகிறார். சவுல் இஸ்ரவேலரை தொகை பார்த்து, அவர்களோடுகூட அமலேக்குடைய பட்டணம் வந்து, பள்ளத்தாக்கிலே ஒரு பதிவிடையை வைக்கிறார்.

அமலேக்கியரோடு கேனியரும் குடியிருக்கிறார்கள்.அமலேக்கியரை சங்காரம் பண்ணவேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை. ஆனால் அமலேக்கியரோடுகூட கேனியரும் இருக்கிறார்கள். அவர்கள் அமலேக்கியர் மத்தியிலே குடியிருக்கிறார்கள். கேனியர்கள் மோசேயின் மாமனாராகிய எத்திரோவின் வழியில் வந்தவர்கள். இவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்கள். இவர்கள் நாடோடிகளைப்போல ஒவ்வொரு இடமாக இடம் பெயர்ந்து போவார்கள். போகும் இடங்களுக்கெல்லாம் தங்கள் கூடாரங்களைப் பெயர்த்துக்கொண்டு போவார்கள்.

சவுலின் காலத்திலே கேனியரில் அநேகர், நாடோடிகளாயில்லாமல், அரணான பட்டணங்களிலே குடியிருக்கிறார்கள். அவர்கள் அமலேக்கியருக்கு மத்தியிலே, பாதுகாப்பான அரண்களுக்கு நடுவிலே குடியிருக்கிறார்கள்.

"அன்றியும் அவன் கேனியனைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: உன் வாசஸ்தலம் அரணிப்பானது; உன் கூட்டைக் கன்மலையில் கட்டினாய்" (எண் 24:21).

சவுல் அமலேக்கியரை சங்காரம்பண்ணும்போது, அவர்களோடுகூட கேனியரையும் சங்காரம்பண்ணிவிடக்கூடாது. அமலேக்கியரின் நடுவிலிருந்து கேனியரை விலகிப்போக வைக்கவேண்டும். சவுல் கேனியரை நோக்கி: "நான் அமலேக்கியரோடேகூட உங்களையும் வாரிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போங்கள்; இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது, நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயவுசெய்தீர்கள்" (1சாமு 15:6) என்று சொல்லுகிறார்; அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு, வனாந்தர வழியாக கானான் தேசத்திற்குப்போனபோது, கேனியர்கள் இஸ்ரவேலருக்கு தயவு காண்பித்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வனாந்தரத்தின் பாதைகளைப்பற்றி ஒன்றும் தெரியாது. எத்திரோவின் குடும்பத்தார் அந்தப் பாதைகளை நன்றாய் அறிந்திருந்தார்கள். இஸ்ரவேலர் வனாந்தரப் பாதையின் வழியாக கடந்துபோவதற்கு எத்திரோவும், அவருடைய குடும்பத்தாரும் அதிகமாய் உதவிசெய்தார்கள். சவுல் அவர்களுடைய உதவியை இங்கு நினைவுகூருகிறார்.

கேனியர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கண்களைப்போல இருந்தார்கள். பூர்வகாலத்தில் கேனியர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு செய்த தயவை, கர்த்தர் இங்கு நினைவுகூருகிறார். கேனியர் அமலேக்கியரோடு அழிந்துபோகாமல், அவர்களைப் பாதுகாக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களை, நீதிமான்கள், தங்கள் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் வைத்துப்போவார்கள்.

கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனபின்பு, சவுல் அமலேக்கியரை சங்காரம்பண்ணுகிறார். சவுல், ஆவிலாதுவக்கி எகிப்திற்கு எதிரேயிருக்கிற சூருக்குப்போகும் எல்லை மட்டும் இருந்த அமலேக்கியரை மடங்கடித்து, அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடிக்கிறார்; அமலேக்கின் ஜனங்கள் யாவரையும் பட்டயக் கருக்கினாலே சங்காரம்பண்ணுகிறார் (1சாமு 15:7,8).

அமலேக்கியர்கள் எல்லோரும் விக்கிரகாராதனைக்காரர்கள். தேவனுடைய கோபம் அமலேக்கியருக்கு விரோதமாக பற்றியெரிகிறது. அமலேக்கியர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு விரோதமாய் ஏராளமாக தீங்கு செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைப் பின்பற்றாமல் விக்கிரகங்களை ஆராதிப்பதற்கு, அமலேக்கியர் அவர்களுக்கு கண்ணிகளாயிருக்கிறார்கள்.

அமலேக்கியரின் முற்பிதாக்கள் செய்த பாவங்களை, கர்த்தர் இந்த சந்ததியாரிடத்தில் விசாரிக்கிறார். எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு, அமலேக்கியரின் முற்பிதாக்கள் தீங்கு செய்தார்கள். கர்த்தரோ அவர்கள் செய்த பாவங்களை, அவர்களுடைய பின்சந்ததியாரிடத்தில் விசாரிக்கிறார்.

அமலேக்கியரை சங்காரம்பண்ணுகிற விஷயத்தில், சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு முற்றிலுமாய் கீழ்ப்படியவில்லை. அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை கொன்றுபோடாமல், அவனை கைதுபண்ணி உயிரோடே வைத்திருக்கிறார். ஆகாகு தன்னைப்போல ஒரு ராஜாவாயிருப்பதினால் சவுல் அவனுக்கு இந்த சலுகையைக் காண்பித்திருக்கலாம். ஒருவேளை ஆகாகை விடுதலைபண்ணுவதற்கு, அமலேக்கியரிடமிருந்து, மிகப்பெரிய மீட்பின் கிரயத்தை பிற்காலத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று சவுல் நினைத்திருக்கலாம்.

சவுல் அமலேக்கியர் யாவரையும் பட்டயக்கருக்கினாலே சங்காரம்பண்ணுகிறார். ஆனால் அவர்களுடைய ஆடுகளையும் மாடுகளையும் உயிரோடே விட்டுவிடுகிறார். "நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய்" (1சாமு 15:3) என்பது கர்த்தருடைய கட்டளை. ஆனால் சவுலோ கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், அமலேக்கியரின் ஆடுமாடுகளை கொன்றுபோடாமல் உயிரோடே தப்பவிடுகிறார்.

சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக் குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைக்கிறார்கள். அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் சவுல் முற்றிலும் அழித்துப்போடுகிறார் (1சாமு 15:9).

சவுல் அமலேக்கியரை மடங்கடித்து, அவர்களை பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணியபோது, அமலேக்கியரில் அநேகர் தப்பித்து ஓடிவிடுகிறார்கள். ஒருவேளை அவர்கள் பக்கத்து தேசங்களுக்கு ஓடிப்போயிருக்கலாம். அவர்கள் அந்த தேசங்களுக்கு தப்பி ஓடிப்போய் உயிர் பிழைத்துக்கொள்கிறார்கள். ஆகையினால் பிற்காலங்களில், அமலேக்கியர் மறுபடியுமாய் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாய் வருகிறார்கள்.

சாமுவேலும் சவுலும்
1சாமு 15:10-23

1சாமு 15:10. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு உண்டாகி, அவர் சொன்னது:

1சாமு 15:11. நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

1சாமு 15:12. மறுநாள் அதிகாலமே சாமுவேல் சவுலைச் சந்திக்கப்போனான்; அப்பொழுது சவுல் கர்மேலுக்கு வந்து, தனக்கு ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டி, பின்பு பல இடங்களில் சென்று கில்காலுக்குப் போனான் என்று, சாமுவேலுக்கு அறிவிக்கப்பட்டது.

1சாமு 15:13. சாமுவேல் சவுலினிடத்தில் போனான்; சவுல் அவனை நோக்கி: நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான்.

1சாமு 15:14. அதற்குச் சாமுவேல்: அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான்.

1சாமு 15:15. அதற்குச் சவுல்: அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டுவந்தார்கள்; ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்; மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம் என்றான்.

1சாமு 15:16. அப்பொழுது சாமுவேல்: அந்தப் பேச்சை விடும், கர்த்தர் இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சவுலோடே சொன்னான். அவன் சொல்லும் என்றான்.

1சாமு 15:17. அப்பொழுது சாமுவேல்: நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே.

1சாமு 15:18. இப்போதும் கர்த்தர்: நீ போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித் தீருமட்டும், அவர்களோடு யுத்தம்பண்ணு என்று சொல்லி, உம்மை அந்த வழியாய் அனுப்பினார்.

1சாமு 15:19. இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்.

1சாமு 15:20. சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டுவந்து, அமலேக்கியரைச் சங்காரம்பண்ணினேன்.

1சாமு 15:21. ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்றான்.

1சாமு 15:22. அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.

1சாமு 15:23. இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.

கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு உண்டாயிற்று. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு உண்டாகி, அவர் சொன்னது: "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான்" (1சாமு 15:10,11) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சவுலை ராஜாவாயிராதபடிக்கு தள்ளிவிட வேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார். தம்முடைய மனதின் எண்ணங்களை கர்த்தர் சாமுவேலுக்கு வெளிப்படுத்துகிறார். "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாப மாயிருக்கிறது" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தாம் செய்த காரியங்களைக் குறித்து வருத்தப்படுகிறவரோ அல்லது மனந்திரும்புகிறவரோ அல்ல. அவர் மனம் மாறுகிறவருமல்ல. மனுஷர்தான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டு, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தாங்கள் செய்த தப்பிதங்களை நினைத்து மனஸ்தாபப்படவேண்டும்.

கர்த்தர் மனம்மாற ஒரு மனுஷனல்ல. "சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது" என்று கர்த்தர் சொல்லும்போது, அவர் தம்முடைய மனதை மாற்றவில்லை. அதற்கு பதிலாக அவர் தம்முடைய செய்முறையை மாற்றுகிறார். கர்த்தர் ஒருபோதும் தம்முடைய சித்தத்தை மாற்றுவதில்லை. கர்த்தருடைய சித்தம் மாறாதது. தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, கர்த்தர் தம்முடைய செய்முறைகளிலே மாற்றத்தை ஏற்படுத்துகிறார்.

மாற்றம் கர்த்தரிடத்தில் உண்டாகவில்லை. மாற்றம் சவுலிடத்தில்தான் உண்டாயிருக்கிறது. சவுல் கர்த்தரைவிட்டுத் திரும்பி, கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றாமல் போனார். சவுல் அமலேக்கியரை சங்காரம்பண்ணினாலும், அவர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவர்களை மொத்தமாய் சங்காரம்பண்ணவில்லை. அமலேக்கியரின் ஆடுமாடுகளை அழித்துப்போட மனதில்லாமல், சவுல் அவைகளைத் தப்பவிட்டிருக்கிறார். இது சவுலின் பேராசைக்கு அடையாளமாயிருக்கிறது. சவுல் தன்னுடைய கீழ்ப்படியாமையினால், கர்த்தருக்கு சத்துருவாகிறார்.

கர்த்தர் சவுலைப்பற்றிச் சொன்னபோது, சாமுவேல் மனம் நொந்துபோகிறார். அவர் இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய மனதிலே இனிமேல் சவுலுக்கு இரக்கம் இருக்காது. சவுலை ராஜாவாயிராத படிக்கு தள்ளிவிடவேண்டுமென்று கர்த்தர் தீர்மானித்திருக்கிறார். இதன் நிமித்தமாய் சாமுவேல் இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்.

கர்த்தர் பாவிகளை தம்முடைய சமுகத்தைவிட்டு வெளியேற்றி விடுகிறார். பாவிகள் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவிப்பதைப் பார்த்து, நீதிமான்கள் தங்கள் மனதிலே அவர்களுக்காக வேதனைப்படுகிறார்கள். நல்லவர்கள் தீயவர்களின் துர்க்கிரியைகளைப் பார்த்து துக்கப்படுகிறார்கள்.

பாவிகளைக் கொன்றுபோடவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமல்ல. கர்த்தர் பாவிகளின் அழிவை விரும்புவதில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தம்மிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். பாவிகளின் மரணத்தில் கர்த்தர் பிரியப்படாததுபோல, நாமும் அவர்களுடைய மரணத்தில் பிரியப்படக்கூடாது.

கர்த்தர் சாமுவேலோடு சவுலைப்பற்றி இரகசியமாய்ச் சொன்னார். கர்த்தர் தனக்கு இரகசியமாய்ச் சொன்னதை, சாமுவேல் சவுலுக்கு வெளிப்படையாக அறிவிக்கிறார். மறுநாள் அதிகாலமே சாமுவேல் சவுலைச் சந்திக்கப்போகிறார்; அப்பொழுது சவுல் கர்மேலுக்கு வந்து, தனக்கு ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டி, பின்பு பல இடங்களில் சென்று கில்காலுக்குப் போனார் என்று, சாமுவேலுக்கு அறிவிக்கப்படுகிறது (1சாமு 15:12).

சாமுவேல் சவுலைத் தேடி கில்காலுக்குப் போகிறார். சவுல் அங்கே சாமுவேல் வருவதைப் பார்த்து, அவரை நோக்கி, "நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" (1சாமு 15:13) என்று சொல்லுகிறார். சவுலைப் பார்க்கும்போது சாமுவேலின் மனதிலே சந்தோஷமில்லை. சாமுவேலின் இருதயத்தில் சவுலைக் குறித்த செய்தி பாரமாயிருக்கிறது. கர்த்தர் சவுலை ராஜாவாயிராதபடிக்கு தள்ளிவிட்டதினிமித்தமாய், சாமுவேல் சவுலுக்காக துக்கித்துக்கொண்டிருக்கிறார்.

ஆனால் சவுலோ அமலேக்கியர்மீது தனக்கு கிடைத்த வெற்றியை நினைத்து சந்தோஷமாயிருக்கிறார். அந்த வெற்றிக்கு அடையாளமாக கர்மேலிலும், மேலும் பல பட்டணங்களிலும் சவுல் தனக்கு ஜெயஸ்தம்பங்களை நாட்டுகிறார்.

கர்மேல் பட்டணம் யூதாவின் பர்வதங்களிலிருக்கிறது. சவுலோ கர்த்தரை மகிமைப்படுத்தாமல், தன்னை மகிமைப்படுத்துகிறார். கர்த்தரே அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே தனக்கு ஜெயத்தைக் கொடுத்தார் என்பதை சவுல் நினைத்துப் பார்க்கவில்லை. இந்த வெற்றி தன்னுடைய பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் உண்டாயிற்று என்று நினைத்து, சவுல் கர்மேலிலே தனக்கு ஒரு ஜெயஸ்தம்பத்தை நாட்டுகிறார்.

சவுல் கர்மேலிலிருந்து, மேலும் பல இடங்களுக்கும் போகிறார். அங்கே இருந்து கில்காலுக்குப் போகிறார். தன்னுடைய வெற்றியை எல்லா ஊர்களிலும் கொண்டாடுகிறார். சவுல் கில்காலிலே இருக்கும்போது சாமுவேல் அவரை சந்திக்கிறார். அப்போதுகூட சவுல் தன்னுடைய பாவங்களை அறிக்கைசெய்யாமல், "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" என்று சொல்லுகிறார்.

தான் கர்த்தருடைய வார்த்தைக்கு முழுவதுமாய் கீழ்ப்படிந்திருப்பதாக சவுல் நினைத்துக்கொண்டிருக்கிறார். சாமுவேலைப் பார்த்தபோது சவுலின் மனதில் சந்தோஷமுண்டாயிற்று. சவுல் சாமுவேலை நோக்கி, "நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று சொல்லுகிறார். சாமுவேலே சவுலை அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண அனுப்பினார். கர்த்தருடைய வார்த்தை சவுலுக்கு நேரடியாய் உண்டாகவில்லை. அந்த வார்த்தை சாமுவேல் மூலமாய் உண்டாயிற்று. கர்த்தர் சொன்ன பிரகாரம் தான் செய்து முடித்திருப்பதாக, சவுல் சாமுவேலிடம் பெருமையோடு சொல்லுகிறார். "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" என்று சவுல் சந்தோஷமாய்ச் சொல்லுகிறார்.

சவுலின் மனதிலே "கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை" என்னும் எண்ணம் சிறிதுமில்லை. சவுலின் மனச்சாட்சி அவருடைய கீழ்ப்படியாமையை அவருக்கு உணர்த்தவில்லை. சவுலின் மனச்சாட்சி அவருடைய கீழ்ப்படியாமையை உணர்த்தியிருக்குமென்றால், சவுல் சாமுவேலை சந்தோஷமாய் வரவேற்றிருக்கமாட்டார். "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" என்றும் சவுல் சாமுவேலிடம் சந்தோஷமாய்ச் சொல்லியிருக்கமாட்டார்.

தான் கர்த்தருடைய வார்த்தைக்கு முற்றிலுமாய் கீழ்ப்படியவில்லை என்பது சவுலுக்கு தெரிந்திருப்பதினால், சவுல் தன்னுடைய பாவத்தை இங்கே மூடி மறைக்க முயற்சி பண்ணுகிறார். பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ கர்த்தரிடத்திலிருந்து இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

தன்னுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் சாமுவேல் தன்னை கடிந்துகொள்ளக்கூடாது என்றால், தன்னை நியாயப்படுத்த வேண்டும் என்று சவுல் நினைக்கிறார். சாமுவேல் பேசுவதற்கு முன்பாகவே, சவுல் பேசுகிறார். "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" என்று சொல்லி சவுல் தன்னுடைய பாவத்தை மறைக்கிறார். சவுலைப்போலவே இக்காலத்திலும் பாவிகளில் அநேகர் கர்த்தருடைய கிருபைக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிறார்கள். தங்களை நியாயப்படுத்தினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். நம்மை நாமே நியாயப்படுத்துவதற்கு பதிலாக, நம்மை நாமே நியாயந்தீர்த்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு நம்மால் தப்பிக்க முடியும்.

சாமுவேலின் மனதில் சவுலைப்பற்றிய வேதனையும் பாரமும் மிகுந்திருக்கிறது. சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆனால் சவுல் சாமுவேலிடம், "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" என்று பொய் சொல்லுகிறார். சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை என்பதை, சாமுவேல் அவருக்கு வெளிப்படையாகவே சொல்லுகிறார்.

அதற்குச் சாமுவேல், "நீ கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினால், என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன" (1சாமு 15:14) என்று கேட்கிறார். ஆடுகளின் சத்தமும் மாடுகளின் சத்தமும் சவுலின் கீழ்ப்படியாமைக்கு விரோதமாக சாட்சி சொல்லுகிறது.

தன்னுடைய கீழ்ப்படியாமையை சாமுவேல் எடுத்து சொன்ன போதிலும், தன்னிடத்தில் தப்பிதம் எதுவுமில்லை என்றும், தான் செய்தது நீதியானது என்றும் சவுல் தன்னை நியாயப்படுத்துகிறார்.

சவுல் சாமுவேலுக்கு பிரதியுத்தரமாக, "இஸ்ரவேல் புத்திரர் அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டுவந்தார்கள்; ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்; மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம்" (1சாமு 15:15) என்று சொல்லுகிறார்.

உண்மையை மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. இஸ்ரவேல் புத்திரர் ஆடுகளையும் மாடுகளையும் மெய்யாகவே அமலேக்கியரிடத்திலிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். சவுல் இதை சொல்லும்போது, தான் இவைகளை கொண்டு வரவில்லை என்றும், இஸ்ரவேல் ஜனங்களே இவைகளைக் கொண்டு வந்தார்கள் என்றும் சொல்லுகிறார். தன்னுடைய அனுமதியில்லாமலும், தன்னுடைய உத்தரவு இல்லாமலும், இஸ்ரவேல் ஜனத்தார் அமலேக்கியரிடத்திலிருந்து ஆடுகளையும் மாடுகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சவுல் சொல்லுகிறார்.

சவுலுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் சாமுவேல் சொன்ன கர்த்தருடைய கட்டளை நன்றாய்த் தெரியும். "அமலேக்குக்கு உண்டான மாடுகளையும் ஆடுகளையும் ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய்" என்று சாமுவேல் கர்த்தருடைய கட்டளையை தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இது சவுலுக்கும் தெரியும். அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போன இஸ்ரவேலருக்கும் தெரியும்.

அமலேக்கியரின் ஆடுகளையும் மாடுகளையும் கொன்றுபோடாமல், அவைகளை உயிரோடே பிடித்துக்கொண்டு வருவது, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாத செய்கை என்பது இஸ்ரவேலர் எல்லோருக்கும் தெரியும். சவுலின் அனுமதியில்லாமல், இஸ்ரவேலர் அவைகளை உயிரோடே கொண்டுவந்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

பாவம் செய்கிறவர்கள், தாங்கள் பாவம் செய்ததாக அங்கீகரிக்கப்பதில்லை. பாவம் அவர்களுடைய வாசற்படியில் படுத்திருந்தாலும், பாவிகள் தங்கள் பாவங்களைப்பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. தங்கள் பாவங்களைக் குறித்து கவலையற்றவர்களாகவும், அக்கரை யற்றவர்களாகவும், தங்களுக்கும் தங்கள் பாவங்களுக்கும் சம்மந்தமில்லாதவர் களைப்போலவும் நடந்துகொள்வார்கள்.

பாவிகள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்யாமல், தங்களுக்குள்ளே மறைத்து வைத்திருந்தால் அவர்களுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து இரக்கம் கிடைக்காது. தங்கள் பாவங்களுக்கு தாங்களே காரணம் என்பதை அங்கீகரிக்காமல், பிறர்மீது குற்றம் சொல்ல முயற்சி பண்ணுகிறவர்கள், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பமாட்டார்கள். மற்றவர்கள் தங்களை பாவம் செய்யத் தூண்டினார்கள் என்றும், தாங்கள் அவர்களுடைய பாவங்களுக்கு பங்காளியாகிவிட்டதாகவும் காரணம் சொல்லுவார்கள்.

சவுல் கர்த்தருடைய கட்டளையைமீறி, அமலேக்கியரிடத்திலிருந்து ஆடுகளையும் மாடுகளையும் கொண்டு வந்திருந்தாலும், அவற்றை ஒரு நல்ல காரியத்திற்காகவே கொண்டு வந்திருப்பதாக சாமுவேலிடத்தில் சொல்லுகிறார். "ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்" (1சாமு 15:15) என்று சவுல் சாமுவேலிடத்தில் சாக்குபோக்குகளை சொல்லுகிறார்.

சவுல் சாமுவேலிடத்தில் பொய் சொல்லுகிறார். இந்த ஆடுகளும் மாடுகளும் தங்களுக்கு வேண்டும் என்பதற்காகவே, இஸ்ரவேலர் இவைகளை அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்தார்கள். அவர்கள் ஆடுகள் மேலும் மாடுகள் மேலும் ஆசைப்பட்டார்கள்.

ஒருவேளை சவுல் இங்கு சொல்லுவதுபோல, கர்த்தருக்கு பலியிடும்படிக்கு இவைகளைத் தப்ப வைத்திருந்தாலும், கர்த்தர் திருட்டு பொருளின்மீது பிரியப்படுகிறவரல்ல. இஸ்ரவேலின் தேவன் பரிசுத்தர். அவருக்கு பரிசுத்தமானதை மாத்திரமே பலியாகச் செலுத்தவேண்டும். கர்த்தருடைய பலிபீடமும் பரிசுத்தமானது. பரிசுத்தமான பலிபீடத்திலே, திருட்டு பொருளை பலியாகவோ காணிக்கையாகவோ செலுத்தக்கூடாது.

சவுல் சொல்லுகிற சாக்குபோக்கான காரணங்களை செவிகொடுத்து கேட்பதற்கு சாமுவேல் ஆயத்தமாயில்லை. "அந்தப் பேச்சை விடும்" என்று சாமுவேல் சவுலுக்கு தீர்மானமாய்ச் சொல்லிவிடுகிறார். சாமுவேல் கர்த்தருடைய நாமத்தினாலே சவுலுக்கு நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். சாமுவேல் சவுலிடம், "கர்த்தர் இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன்" (1சாமு 15:16) என்று சொல்லுகிறார். சவுலும், "சொல்லும்" என்று சாமுவேலிடம் சொல்லுகிறார்.

கர்த்தர் சவுலை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுவித்தார். சவுல் தன்னுடைய பார்வைக்கு சிறியவராயிருந்தபோது, அவர் இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கு தலைவரானார் (1சாமு 15:17). கர்த்தர் சாதாரணமாகயிருந்த சவுலை உயர்த்தியிருக்கிறார். கர்த்தர் நம்முடைய அந்தஸ்திலும், ஐசுவரியத்திலும் நம்மை உயர்த்தும்போது, நம்மை நாமே உயர்வாக நினைக்கக்கூடாது. நமக்குள்ளே நம்மைக் குறித்து பெருமை வந்துவிடக்கூடாது. நம்முடைய அற்பமான ஆரம்பங்களை மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும்.

கர்த்தரே தம்முடைய கிருபையினால் நம்மை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். நம்மை இந்த அளவுக்கு உயர்த்துவதற்கு, கர்த்தர் நமக்கு காண்பித்த எல்லா கிருபைகளையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் நாம் மறந்துவிடாமல் நினைவுகூர்ந்து, கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மிடத்தில் சுயபெருமையும், சுயமேட்டிமையும் காணப்படுமென்றால் அதை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும்.

கர்த்தர் சவுலை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி வைத்தார். கர்த்தருடைய ஒவ்வொரு கிரியைக்கும் ஒரு தெய்வீக காரணமுண்டு. கர்த்தர் காரணமில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. கர்த்தர் சவுலை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணிவித்து, அவரை நோக்கி, "நீ போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித் தீருமட்டும், அவர்களோடு யுத்தம்பண்ணு" *(1சாமு 15:18)* என்று சொல்லி, கர்த்தர் சவுலை அந்த வழியாய் அனுப்பினார்.

கர்த்தரே சவுலை அனுப்புகிறார். ஆகையினால் சவுலின் வேலை மிகவும் எளிதாயிருக்கும். அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேலருக்கு நிச்சயமாய் ஜெயமுண்டாகும். கர்த்தர் இந்த யுத்தத்தை, யுத்தம் என்று அழைக்காமல், இதை ஒரு யாத்திரை என்று அழைக்கிறார். கர்த்தர் சவுலை யுத்தத்திற்கு அனுப்பவதுபோல அனுப்பாமல், ஒரு பிரயாணத்திற்கு அனுப்புவதுபோல, அவரை அந்த வழியாய் அனுப்புகிறார்.

சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். தன்னுடைய சுயவிருப்பத்தை நிறைவேற்றவேண்டுமென்று சவுல் நினைக்கக்கூடாது. கர்த்தர் சொன்ன பிரகாரம் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளை சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கவேண்டும். அவர்களுக்குரிய ஆடுகளையும் மாடுகளையும் சங்காரம்பண்ணவேண்டும்.

ஆனால், சவுலோ கர்த்தருடைய சொல்லைக் கேளாமல் கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார். சாமுவேலும் சவுலிடம், "கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தது என்ன" என்று கேட்கிறார். கர்த்தர் சவுலை உயர்த்தியிருக்கிறார். அவரை ராஜாவாக அபிஷேகம்பண்ணி வைத்திருக்கிறார். அவர் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு தலைவராயிருக்கிறார். சவுலுக்கு இவ்வளவும் இருந்தும், பெலிஸ்தருடைய கொள்ளையின் மேலும் பிரியமாயிருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் சவுலுக்கு அதிகமாய்க் கிடைத்திருக்கிறது. ஆனால் சவுலோ அந்த ஆசீர்வாதங்களில் திருப்தியடையாமல், தனக்கு இன்னும் அதிகமாய் வேண்டும் என்று பேராசைப்படுகிறார்.

சவுல் அமலேக்கியருடைய கொள்ளையை, நிர்மூலம்பண்ணி கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். கர்த்தருடைய நாமமகிமைக்காக, அமலேக்கியரையும், அவர்களுடைய உடமைகளையும் சவுல் நிர்மூலம்பண்ணவேண்டும். ஆனால் சவுலோ கர்த்தருடைய நாமமகிமையை நாடாமல், தன்னுடைய சொந்த லாபத்தை நாடுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாகும். இதனால் தனக்கு ஒரு லாபமும் உண்டாகாது என்று சவுல் தன்னைப்பற்றி யோசிக்கிறார்.

சவுல் தன்னை ராஜாவாக அபிஷேகம்பண்ணிவித்த கர்த்தரைப்பற்றியும், அவருடைய கட்டளைகளைப்பற்றியும் யோசித்துப் பார்க்காமல், தன்னுடைய சொந்த நன்மைகளையும், சுயஆசைகளையும் யோசித்துப் பார்க்கிறார். இதனால் சவுல் கர்த்தருடைய சொல்லைக் கேளாமல், அமலேக்கியருடைய கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார் *(1சாமு 15:19)*.

சாமுவேல் தன்மீது எத்தனை குற்றங்களைச் சொன்னாலும், அதற்கு சாக்குபோக்கான பதில்களைச் சொல்ல சவுல் ஆயத்தமாயிருக்கிறார். சவுல் சாமுவேலை நோக்கி: "நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டுவந்து, அமலேக்கியரைச் சங்காரம்பண்ணினேன்" (1சாமு 15:20) என்று சொல்லுகிறார்.

சாமுவேல் சவுலைப் பார்த்து, "நீர் கர்த்தருடைய சொல்லைக் கேட்கவில்லை" என்று குற்றம் சொல்லுகிறார். சவுலோ, "நான் கர்த்தருடைய சொல்லைக்கேட்டேன்" என்று அவருக்கு பதில் சொல்லுகிறார். சாமுவேல் சவுலிடம், "கர்த்தர் உம்மை அந்த வழியாய் அனுப்பினார்" என்று சொல்லுகிறார். சவுலோ, "கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போனேன்" என்று சாமுவேலுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

சவுல் தன்னுடைய ஒவ்வொரு செய்கையையும் நியாயப்படுத்துகிறார். தன்னிடத்தில் ஒரு குற்றமும் இல்லை என்று சாதிக்கிறார். சவுல் தன்னுடைய பார்வைக்கு பிரியமானதை செய்திருக்கிறார். தன்னுடைய சுயபுத்தியினாலும், சுயஞானத்தினாலும் சிந்தித்துப் பார்த்து, தான் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானித்தாரோ, அதை சவுல் செய்து முடித்திருக்கிறார்.

கர்த்தரைவிட தனக்கு அதிக ஞானம் இருப்பதாக சவுல் நினைத்துக் கொண்டிருக்கிறார். அமலேக்கியரின் ஆடுமாடுகளெல்லாவற்றையும் நிர்மூலம்பண்ணுவதற்கு பதிலாக, அவற்றை உயிரோடு பிடித்து வந்து, கர்த்தருக்கு பலியிடுவது மிகவும் ஞானமான செய்கையாகயிருக்கும் என்று சவுல் நினைக்கிறார். ஆடுகளை நிர்மூலம்பண்ணுவதற்கு பதிலாக அதை கர்த்தருக்கு பலியிடலாம் என்பது சவுலின் யோசனை.

சவுல் சாமுவேலிடம் "ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள்" (1சாமு 15:21) என்று சொல்லுகிறார்.

மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் மீதியானியருடைய ஆடுமாடுகளை நிர்மூலம்பண்ணாமல், அவற்றை உயிரோடு பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் அதிலே கர்த்தருக்கும் பங்குகொடுத்தார்கள்.

"கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் செய்தார்கள். படைவீரர் கொள்ளையிட்ட பொருளில், ஆறுலட்சத்து எழுபத்தையாயிரம் ஆடுகளும்" (எண் 31:31,32)

மோசேயின் காலத்திலே இஸ்ரவேலர் மீதியானியருடைய ஆடுமாடுகளைப் பிடித்துக்கொண்டு வந்ததுபோல, தாங்கள் இப்போது அமலேக்கியரின் ஆடுமாடுகளை பிடித்துக்கொண்டு வந்திருப்பதாக சவுல் விவாதம்பண்ணுகிறார். இதில் கர்த்தருக்கும் பங்குகொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆகையினால் தாங்கள் செய்வதில் தப்பிதம் ஒன்றும் இல்லை என்று சவுல் சாமுவேலிடத்தில் விவாதம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் அமலேக்கியரின் ஆடுமாடுகளை உயிரோடு பிடித்துக்கொண்டு வராமல், அவர்களுடைய தேசத்திலேயே அவற்றை நிர்மூலம் செய்திருந்தால், அவை அங்கேயே செத்துப்போகும். அவற்றின் சரீரம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டுமிருகங்களுக்கும் இரையாகும். ஆகாயத்துப் பறவைகளும் காட்டுமிருகங்களும் அவற்றைப் புசிப்பதற்கு பதிலாக, அவற்றை நிர்மூலம்பண்ணாமல், உயிரோடு பிடித்துக்கொண்டு வந்து, கர்த்தருக்கு கில்காலிலே பலியிட்டால், கர்த்தருடைய நாமம் மகிமைப்படும் என்றும், இதுவே புத்தியுள்ள செய்கை என்றும் சவுல் சாமுவேலிடத்தில் விவாதம்பண்ணுகிறார்.

சவுல் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்புவதாக தெரியவில்லை. தன்னுடைய செய்கைகளை சவுல் நியாயப் படுத்திக்கொண்டிருக்கிறார். கர்த்தருக்கு எது பிரியமானது என்பதை சாமுவேல் சவுலுக்கு சொல்லுகிறார். கர்த்தருக்கு பலியிடுவதைவிட, அவருக்கு கீழ்ப்படிவதே உத்தமம் என்று சாமுவேல் தெளிவாக சொல்லுகிறார்.

சாமுவேல் சவுலிடம், "கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது" (1சாமு 15:22,23) என்று சொல்லுகிறார்.

நாம் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சி சுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். இதுவே கர்த்தருக்கு பிரியமானது. சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்கு பிரியமானதுதான். ஆனாலும் பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே கர்த்தருக்கு மிகவும் பிரியமானது.

நாம் கர்த்தரை ஆராதிப்பதற்காக, சடங்காச்சார பிரமாணங்களை எவ்வளவுதான் கைக்கொண்டாலும், நம்முடைய மனதிலே சுத்தமும், இருதயத்தில் கீழ்ப்படிதலும் இல்லையென்றால், நம்முடைய சடங்காச்சாரங்களும், பாரம்பரிய பழக்க வழக்கங்களும் கர்த்தருக்கு முன்பாக வீணானவையாயிருக்கும். அவற்றால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

"என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப்போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ? மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6:6-8).

"பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்" (ஓசி 6:6).

கீழ்ப்படிதல் சுத்த இருதயத்தில் உண்டாகிறது. நாம் கீழ்ப்படியாமல் போகும்போது நமக்குள்ளே பாவம் பிரவேசிக்கிறது. அந்தப் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு பலிசெலுத்துதல் தேவைப்படுகிறது. பாவம் இல்லையென்றால் பலிசெலுத்துவதும் தேவையில்லை.

கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் காளைகளையும், வெள்ளாட்டுக் கடாக்களையும் பலிசெலுத்துவதற்கு கொண்டு வருவது மிகவும் எளிது. அதேவேளையில் நம்முடைய சுயவிருப்பங்களையும், சுயசித்தங்களையும், சுயதிட்டங்களையும் கர்த்தருடைய பலிபீடத்தில் சமர்ப்பித்து, கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் நாம் கீழ்ப்படிவது மிகவும் கடினம். சாமுவேல் இந்த சத்தியத்தை உணர்ந்தவராக, "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்று சொல்லுகிறார்.

நம்முடைய சுயசித்தம் கர்த்தருடைய சித்தத்தோடு போட்டி போடக்கூடாது. நம்முடைய சித்தத்திற்கேற்ற பிரகாரம் கர்த்தர் தம்முடைய சித்தத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கவும் கூடாது. நாமே நம்முடைய சுயசித்தங்களை, கர்த்தருடைய சித்தத்திற்கேற்ற பிரகாரம் மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் கீழ்ப்படியவேண்டும்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், அவருடைய வார்த்தைக்கு விரோதமாய் கலகம்பண்ணும்போது, கர்த்தருடைய கோபம் நம்மீது வருகிறது. இதையே முரட்டாட்டம் என்றும், மீறுதல் என்றும், கடின இருதயம் என்றும் சொல்லுகிறோம். இவை விக்கிரகாராதனையை போலவும், பேய்த்தனத்தைப்போலவும் கர்த்தருக்கு விரோதமான பாவமாயிருக்கிறது.

சாமுவேல் இந்த சத்தியத்தை சவுலுக்கு தெளிவுபடுத்துகிறார். "இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது" (1சாமு 15:23) என்று சாமுவேல் சவுலுக்கு சொல்லுகிறார்.

விக்கிரகாராதனைகாரர்கள் தங்களுக்கு விக்கிரக தெய்வங்களை ஸ்தாபிக்கிறார்கள். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். இது கர்த்தருடைய கட்டளையை மீறுகிற செயல். கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்கள், விக்கிரகங்களை ஆராதிக்காவிட்டாலும், இவர்கள் உண்மையான தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள். கீழ்ப்படியாமையும் கர்த்தருக்கு விரோதமான பாவம்.

"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோம 5:19).

"மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்" (ரோம 8:6-8).

சாமுவேல் சவுலின் கீழ்ப்படியாமையை கடிந்து சொல்லிவிட்டு, அவருக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பையும் அறிவிக்கிறார். சாமுவேல் சவுலைப் பார்த்து, "நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார்" (1சாமு 15:23) என்று சொல்லுகிறார். செப்துவஜிந்த் பதிப்பில், "கர்த்தர் உம்மை ஒன்றுமில்லாமல் வெறுமையாக்கிப்போட்டார்" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் நம்மை ஆளுகை செய்வதற்கு, நாம் நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் நம்மை ஆளுகை செய்யக்கூடாது என்று நினைப்போமென்றால், நாம் மற்ற மனுஷரை ஆளுகை செய்வதற்கு தகுதியற்றவர்களாயிருப்போம். நாம் மற்றவர்களை ஆளுகை செய்யவேண்டுமென்றால், கர்த்தர் நம்மை ஆளுகை செய்வதற்கு, நம்மை நாமே முதலாவதாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

சாமுவேலின் சால்வை 1சாமு 15:24-31

1சாமு 15:24. அப்பொழுது சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன்.

1சாமு 15:25. இப்போதும் நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான்.

1சாமு 15:26. சாமுவேல் சவுலைப் பார்த்து: நான் உம்மோடேகூடத் திரும்பிவருவதில்லை; கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர்; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.

1சாமு 15:27. போகும்படி சாமுவேல் திரும்புகிறபோது, சவுல், அவன் சால்வையின் தொங்கலைப் பிடித்துக்கொண்டான், அது கிழிந்துபோயிற்று.

1சாமு 15:28. அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு; உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்

1சாமு 15:29. இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான்.

1சாமு 15:30. அதற்கு அவன்: நான் பாவஞ்செய்தேன்; இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான்.

1சாமு 15:31. அப்பொழுது சாமுவேல் திரும்பிச் சவுலுக்குப் பின்சென்றான்; சவுல் கர்த்தரைப் பணிந்துகொண்டான்.

சவுல் தன்னிடத்தில் ஒரு பாவமும் இல்லையென்று இதுவரையிலும் சாமுவேலிடத்தில் சொன்னார். சவுல் தன்னுடைய ஒவ்வொரு செய்கையையும் நியாயப்படுத்தினார். சாமுவேல் சவுலைப்பார்த்து, "கர்த்தர் உம்மை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார்" என்று சொன்னவுடன், சவுலின் மனதில் பயமுண்டாயிற்று. அப்போதுதான் அவர் தன்னுடைய பாவத்தைப்பற்றி உணர ஆரம்பிக்கிறார். ஆனாலும் சவுலின் மனதில் உண்மையான மனமாற்றமுண்டாகவில்லை.

சவுலுக்கு வரப்போகும் தண்டனையை சாமுவேல் அறிவிக்கும் வரையிலும், தன்னிடத்தில் பாவம் இருப்பதை சவுல் அங்கீகரிக்கவே இல்லை. இப்போதோ ராஜ்யபாரம் தன்னைவிட்டு நீங்கப்போகிறது என்னும் செய்தி அவருடைய இருதயத்தைத் தொடுகிறது. அவருடைய மனதில் பயமுண்டாயிற்று. இது பாவத்தைக் குறித்த பயமல்ல. இது ராஜ்யபாரம் தன்னைவிட்டு நீங்கிப்போயிற்று என்பதைக் குறித்த பயம்.

சவுல் தன்னுடைய பாவத்தை உணருகிறார். தன்னுடைய பாவத்தை மன்னிக்குமாறு சவுல் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளாமல் சாமுவேலிடத்தில் வேண்டிக்கொள்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தன்னுடைய மதிப்பையும், மரியாதையையும் சாமுவேல் ஒருவரால் மாத்திரமே உயர்த்த முடியும் என்று சவுல் நினைக்கிறார். சாமுவேல் சொன்னால் இஸ்ரவேல் ஜனங்கள் செவிகொடுத்து கேட்பார்கள். சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

சாமுவேலே சவுலை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். அதே சாமுவேல் இப்போது சவுலுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். கர்த்தர் சவுலை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார் என்னும் வார்த்தையை, சாமுவேல் சொன்னால், இஸ்ரவேல் ஜனங்கள் அதை அப்படியே நம்பிவிடுவார்கள். சவுலுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் இருக்காது.

சாமுவேலை சந்தோஷப்படுத்தினால், அவர் தனக்கு ஆதரவான வார்த்தைகளையும், சாதகமான வார்த்தைகளையும் சொல்லுவார் என்று சவுல் எதிர்பார்க்கிறார். அவருக்கு பரிதானம் கொடுக்கவும் சவுல் ஆயத்தமாயிருக்கிறார். ஆகையினால் சவுல் தன்னுடைய பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்வதற்கு பதிலாக, சாமுவேலிடத்தில் அறிக்கை செய்கிறார்.

அப்பொழுது சவுல் சாமுவேலை நோக்கி: "நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன். இப்போதும் நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும்" (1சாமு 15:24,25) என்று சொல்லுகிறார்.

சவுல் சாமுவேலை கர்த்தருடைய ஸ்தானத்திற்கு உயர்த்துகிறார். கர்த்தரால் மாத்திரமே மனுஷருடைய பாவங்களை மன்னிக்க முடியும். சவுலோ சாமுவேலைப் பார்த்து, "நீர் என் பாவத்தை மன்னியும்" என்று கேட்கிறார். சவுலுடைய பார்வையில், சாமுவேல் கர்த்தருக்கும் தனக்கும் இடையிலுள்ள மத்தியஸ்தராக தெரிகிறார். தன்னுடைய சார்பாக சாமுவேல் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும் என்று சவுல் எதிர்பார்க்கிறார்.

சவுல் சாமுவேலிடத்தில், "நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும்" (1சாமு 15:25) என்று சொல்லுகிறார். சவுல் தன்னுடைய பாவங்களை அங்கீகரித்தாலும், தான் பாவம் செய்ததற்கான காரணத்தையும் சொல்லுகிறார். "நான் ஜனங்களுக்கு பயந்து அவர்கள் சொல்லைக்கேட்டேன்" என்று சவுல் சொல்லுகிறார். இந்த சூழ்நிலையில்கூட, தன்னுடைய பாவங்களுக்கு தானே காரணம் என்பதை சவுல் இன்னும் அங்கீகரிக்கவில்லை.

சவுல் இன்னும் தன்னுடைய ராஜாசனத்தையும், மதிப்பையும், மரியாதையையும், அந்தஸ்தையுமே பார்த்துக்கொண்டிருக்கிறார். எதை இழந்தாலும் மனுஷர் மத்தியிலே தன்னுடைய அந்தஸ்தை இழந்துவிடக்கூடாது என்று சவுல் பிடிவாதமாயிருக்கிறார். ஜனங்கள் சவுலை மதிக்கவில்லையென்றால், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள். சவுலை உதாசீனம் பண்ணுவார்கள். சவுலின் கட்டளைக்கு கீழ்ப்படியமாட்டார்கள்.

சாமுவேல் தன்னோடு கூடயிருந்தால், அதுவே தன்னுடைய உயர்ந்த அந்தஸ்துக்கு அடையாளமாயிருக்குமென்று சவுல் எதிர்பார்க்கிறார். "நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு என்னோடேகூட திரும்பி வாரும்" என்று சவுல் சாமுவேலிடத்தில் சொல்லுகிறார். சாமுவேல் சவுலை விட்டு விலகிப்போய்விட்டால், ஜனங்களும் சவுலை விட்டு விலகிப்போய்விடுவார்கள்.

சவுலின் மனதில் உண்மையான மனந்திரும்புதல் இல்லை. தன்னுடைய ராஜ்யபாரத்தையும், தன்னுடைய அந்தஸ்தையும் இழந்துவிடக்கூடாது என்பதில் சவுல் மிகவும் கவனமாயிருக்கிறார். சாமுவேல் சவுலிடத்தில் ஏற்கெனவே, "நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார்" (1சாமு 15:23) என்று கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைச் சொன்னார்.

கர்த்தர் வாக்குமாறாதவர். நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பினால், நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நம்முடைய பாவங்களை மறைத்தால் நாம் வாழ்வடையமாட்டோம். சவுல் தன்னுடைய பாவங்களை மறைக்கிறார். தான் செய்த பாவங்களுக்கு ஜனங்களே காரணம் என்று சொல்லுகிறார். "நான் ஜனங்களுக்கு பயந்து அவர்கள் சொல்லைக்கேட்டேன்" (1சாமு 15:24) என்று சவுல் சொல்லுகிறார்.

கர்த்தர் சவுலின் பாவங்களை மன்னிக்கவில்லை. சாமுவேல் சவுலுக்கு விரோதமான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை இங்கு மறுபடியும் சொல்லுகிறார். "கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர்; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார்" (1சாமு 15:26) என்று சாமுவேல் சவுலுக்கு சொல்லுகிறார்.

சவுல் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்து தள்ளினார். கர்த்தர் சவுலைப் புறக்கணித்து தள்ளிவிடுகிறார். கர்த்தர் சவுலைப் புறக்கணிக்கும்போது, சாமுவேல் சவுலை ஏற்றுக்கொள்ள முடியாது. சவுல் சாமுவேலிடத்தில், "இப்போதும் நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும்" (1சாமு 15:25) என்று கூப்பிடும்போது, சாமுவேல் சவுலிடத்தில், "நான் உம்மோடேகூட திரும்பி வருவதில்லை" (1சாமு 15:26) என்று சொல்லுகிறார்.

சாமுவேல் சவுலைவிட்டுப்போகும்படி திரும்புகிறார். சாமுவேலின் சரீரத்திலே ஒரு சால்வை தொங்கிக்கொண்டிருக்கிறது. சவுலுக்கோ சாமுவேலை விட்டுவிட மனதில்லை. சவுல் சாமுவேலுடைய சால்வையின் தொங்கலைப் பிடித்துக்கொள்கிறார். அது கிழிந்துபோயிற்று (1சாமு 15:27). சாமுவேல் இந்த சம்பவத்தைக்கூட ஒரு அடையாளமாகப் பயன்படுத்தி, சவுலுக்கு விரோதமான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார்.

அப்பொழுது சாமுவேல் சவுலை நோக்கி: கர்த்தர் "இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு; உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்" (1சாமு 15:28) என்று சொல்லுகிறார். சாமுவேலின் சால்வை கிழிந்துபோனது, கர்த்தர் இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டதற்கு அடையாளமாயிருக்கிறது.

சாமுவேலின் சால்வையை சவுல் கிழித்தார். அந்த சால்வை கிழிவதற்கு சவுலே காரணம். அதுபோலவே இஸ்ரவேலின் ராஜ்யம் கிழிந்துபோவதற்கு சவுலே காரணமாயிருக்கிறார். "உம்மைப் பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழன்" என்பது தாவீதைக் குறிக்கிற வாக்கியம். பிற்காலத்தில் தாவீது சவுலின் சால்வை தொங்கலை அறுத்துக்கொள்கிறார்.

"அப்பொழுது தாவீதின் மனுஷர் அவனை நோக்கி: இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே என்றார்கள்; தாவீது எழுந்திருந்துபோய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான்" (1சாமு 24:4).

தன்னுடைய சால்வை கிழிந்துபோனதை சவுல் பார்க்கிறார். அப்போது சவுல் தன்னுடைய மனதிலே, தான் சாமுவேலுடைய சல்வையின் தொங்கலைப் பிடித்துக்கொண்டதையும், அப்போது அது கிழிந்துபோனதையும் நினைத்துப் பார்க்கிறார். அப்போது சாமுவேல் தனக்கு சொன்ன வார்த்தை இப்போது சவுலின் நினைவுக்கு வருகிறது. சவுல் தன்னுடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்ட தாவீதைப் பார்த்து "நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்" (1சாமு 24:20) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். சாமுவேல் சவுலுக்கு கர்த்தருடைய குணாதிசயங்களை எடுத்துச் சொல்லுகிறார். "இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல" (1சாமு 15:29) என்று சாமுவேல் சொல்லுகிறார்.

அதற்கு சவுல்: "நான் பாவஞ்செய்தேன்; இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடே கூடத் திரும்பிவாரும்" (1சாமு 15:20) என்று சொல்லுகிறார். அப்பொழுது சாமுவேல் திரும்பிச் சவுலுக்குப் பின்செல்கிறார்; சவுல் கர்த்தரைப் பணிந்துகொள்கிறார் (1சாமு 15:31).

ஆகாகு
1சாமு 15:32-35

1சாமு 15:32. பின்பு சாமுவேல்: அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான்; ஆகாக் சந்தோஷமாய் அவனிடத்தில் வந்து, மரணத்தின் கசப்பு அற்றுப்போனது நிச்சயம் என்றான்.

1சாமு 15:33. சாமுவேல்: உன் பட்டயம் ஸ்திரீகளைப் பிள்ளையற்றவர்களாக்கினதுபோல, ஸ்திரீகளுக்குள்ளே உன் தாயும் பிள்ளையற்றவளாவாள் என்று சொல்லி; சாமுவேல் கில்காலிலே கர்த்தருக்கு முன்பாக ஆகாகைத் துண்டித்துப்போட்டான்.

1சாமு 15:34. பின்பு சாமுவேல் ராமாவுக்குப் போனான்; சவுலோ தன் ஊராகிய கிபியாவிலிருக்கிற தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

1சாமு 15:35. சவுல் மரணமடையும் நாள்மட்டும் சாமுவேல் அப்புறம் அவனைக் கண்டு பேசவில்லை; இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி. தீர்க்கதரிசிகள் ராஜாக்களைவிடவும் பெரியவர்கள். கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியை ஆசீர்வதித்தார். கர்த்தர் எரேமியாவை ராஜாவைவிட பெரியவராக உயர்த்தினார்.

"கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்" (எரே 1:9,10).

சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், சாமுவேல் அந்த தேசத்திற்கு தீர்க்கதரிசியாயிருந்தாலும், சாமுவேலே சவுலைவிட பெரியவராயிருக்கிறார். சாமுவேல் ஆகாகை கர்த்தருக்கு முன்பாக துண்டித்துப் போடுகிறார். சவுல் அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகை தன்னிடத்தில் கொண்டு வந்து வைத்திருந்தார் (1சாமு 15:20). சவுல் ஆகாகை கொல்லவில்லை. ஒருவேளை தன்னைப்போல ஆகாகும் ஒரு ராஜாவாயிருக்கிறார் என்று நினைத்து, சவுல் அவருக்கு மரியாதை கொடுத்து, அவரைக் கொல்லாமல் விட்டிருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

ஆகாகும் சவுலைப்போல ஒரு யுத்தமனுஷன். ஆகாகு இதுவரையிலும் சவுலின் பட்டயத்திற்கு தப்பித்திருக்கிறார். ஆகாகின் பார்வையில் சவுலைவிட சாமுவேலே நல்லவராக தெரிகிறார். சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவர் யுத்தம்பண்ணுகிறவரல்ல. சாமுவேலின் கையில் பட்டயம் இருக்காது. ஆகையினால் தன் உயிருக்கு ஆபத்து இருக்காது என்று ஆகாகு நினைக்கிறான்.

சாமுவேல் இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில், "அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" (1சாமு 15:32) என்று சொல்லுகிறார். அவர்கள் ஆகாகை சாமுவேலிடத்தில் கொண்டு வருகிறார்கள். ஆகாகும் மிகவும் சந்தோஷமாய் சாமுவேலிடத்தில் வருகிறான். "மரணத்தின் கசப்பு அற்றுப்போனது நிச்சயம்" (1சாமு 15:32) என்று ஆகாகு சொல்லுகிறான். சாமுவேல் வயதில் முதிர்ந்தவர். அவர் ஒரு தீர்க்கதரிசி. அவர் சமாதானத்தின் மனுஷன். ஆகையினால் சாமுவேல் மூலமாய் தனக்கு மரணம் வராது என்று ஆகாகு நினைக்கிறான்.

சாமுவேலோ ஆகாகின் பாவங்களையும், அவனுடைய முன்னோர்களின் பாவங்களையும் அவனுக்கு முன்பாக எடுத்துச் சொல்லி, அவனை துண்டித்துப்போடுகிறார்.

சாமுவேல் ஆகாகிடம், "உன் பட்டயம் ஸ்திரீகளைப்பிள்ளையற்றவர்களாக்கினதுபோல, ஸ்திரீகளுக்குள்ளே உன் தாயும் பிள்ளையற்றவளாவாள்" என்று சொல்லுகிறார். சாமுவேல் கில்காலிலே கர்த்தருக்கு முன்பாக ஆகாகைத் துண்டித்துப்போடுகிறார் (1சாமு 15:33).

பின்பு சாமுவேல் ராமாவுக்குப் போகிறார்; சவுலோ தன் ஊராகிய கிபியாவிலிருக்கிற தன் வீட்டுக்குப் போய்விடுகிறார். சவுல் மரணமடையும் நாள்மட்டும் சாமுவேல் அப்புறம் சவுலைக் கண்டு பேசவில்லை; இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக் கொண்டிருக்கிறார் (1சாமு 15:34,35).

சவுல் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்தாலும், கர்த்தருடைய பார்வையிலே சவுல் கர்த்தரால் புறக்கணித்து தள்ளிவிடப்பட்டவராகவே இருக்கிறார். சாமுவேலும் சவுலைப் பார்க்கும்போது, அவரை ராஜாவாக பார்க்காமல், அவரை கர்த்தரால் புறக்கணித்து தள்ளிவிடப்பட்டவனாகவே பார்க்கிறார். சாமுவேல் சவுலை விட்டுவிட்டு தன்னுடைய சொந்த ஊராகிய ராமாவுக்குப் போகிறார். ஆனாலும் சாமுவேல் சவுலுக்காக துக்கித்துக்கொண்டிருக்கிறார்.

சவுல் சவுந்தரியமுள்ளவர். அவர் நல்ல யுத்தவீரர். அவருக்கு நல்ல எதிர்காலம் இருந்தது. கர்த்தர் அவரை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்தெடுத்தார். அவரை உயர்த்தினார். ஆனால் சவுலோ தனக்குத்தானே தீங்கு வரவழைத்துக் கொண்டார். சவுல் தன்னுடைய மதியீனத்தினால், தன்னைத்தானே அழித்துக்கொள்கிறார். சாமுவேல் இதை நினைத்துப் பார்த்து சவுலுக்காக துக்கித்துக்கொண்டிருக்கிறார்.

16 அதிகாரம்

தாவீதின் சரித்திரம் இந்த அதிகாரத்திலிருந்து ஆரம்பமாகிறது. பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரரில் ஒருவனை ராஜாவாக அபிஷேகம்பண்ணும் ஊழியத்தை கர்த்தர் சாமுவேலுக்கு கொடுக்கிறார் (1சாமு 16:1-5). ஈசாயின் எல்லா குமாரரையும் சாமுவேல் பார்க்கிறார். ஈசாயின் குமாரரில் எல்லாருக்கும் இளையவனான தாவீதை, சாமுவேல் அபிஷேகம்பண்ணுகிறார் (1சாமு 16:6-13).

கர்த்தருடைய ஆவியானவர் சவுலைவிட்டு நீங்குகிறார். கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி சவுலை கலங்கப்பண்ணிக்கொண்டிருக்கிறது. தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து தன் கையினால் வாசிக்கிறார். அதினால் பொல்லாத ஆவி சவுலை விட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாகிறார் (1சாமு 16:14-23).

பெத்லெகேமியனாகிய ஈசாய்
1சாமு 16:1-5

1சாமு 16:1. கர்த்தர் சாமுவேலை நோக்கி: இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்; நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக்கொண்டுவா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்துகொண்டேன் என்றார்.

1சாமு 16:2. அதற்குச் சாமுவேல்: நான் எப்படிப்போவேன்; சவுல் இதைக் கேள்விப்பட்டால், என்னைக் கொன்றுபோடுவானே என்றான்; அப்பொழுது கர்த்தர்: நீ ஒரு காளையைக் கையோடே கொண்டுபோய், கர்த்தருக்குப் பலியிடவந்தேன் என்று சொல்லி,

1சாமு 16:3. ஈசாயைப் பலிவிருந்துக்கு அழைப்பாயாக; அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்; நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம்பண்ணுவாயாக என்றார்.

1சாமு 16:4. கர்த்தர் சொன்னபடியே சாமுவேல் செய்து, பெத்லெகேமுக்குப் போனான்; அப்பொழுது அவ்வூரின் மூப்பர் தத்தளிப்போடே அவனுக்கு எதிர்கொண்டுவந்து, நீர் வருகிறது சமாதானமா என்றார்கள்.

1சாமு 16:5. அதற்கு அவன்: சமாதானந்தான்; கர்த்தருக்குப் பலியிடவந்தேன்; நீங்கள் உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொண்டு, என்னுடனேகூடப் பலிவிருந்துக்கு வாருங்கள் என்றான்; மேலும் ஈசாயையும் அவன் குமாரரையும் பரிசுத்தம்பண்ணி, அவர்களைப் பலிவிருந்துக்கு அழைத்தான்.

சாமுவேல் ராமாவுக்குப் போகிறார். இனிமேல் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே ஊழியம் செய்யக்கூடாது என்று தீர்மானித்து, சாமுவேல் ஒருவேளை ராமாவிலேயே தங்கியிருந்திருக்கவேண்டும். ஆனாலும் சாமுவேல் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு உபதேசம்பண்ணுகிறார். அவர்களுக்கு ஊழியப்பயிற்சி கொடுக்கிறார்.

"அப்பொழுது சவுல்: தாவீதைக் கொண்டுவரச் சேவகரை அனுப்பினான்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தையும், சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்கிறதையும் கண்டார்கள்; அப்பொழுது சவுலினுடைய சேவகரின்மேல் தேவனுடைய ஆவி இறங்கினதினால் அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்" (1சாமு 19:20).

இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். இதன் நிமித்தம் சாமுவேல் சவுலுக்காக துக்கித்துக்கொண்டிருக்கிறார். சாமுவேலின் துக்கம் அதிகமாயிருக்கிறது. அவர் அநேக நாட்களாக துக்கித்துக்கொண்டிருக்கிறார் போல தெரிகிறது. சாமுவேல் சவுலுக்காக இவ்வளவு துக்கப்படுவது கர்த்தருக்குப் பிரியமில்லை.

கர்த்தர் சாமுவேலை நோக்கி: "இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்" (1சாமு 16:1) என்று கேட்கிறார். கர்த்தர் சாமுவேலைக் கடிந்துகொள்கிறார். கர்த்தர் சவுலை இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளிவிட்டாலும், கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கேற்ற வேறொருவனை, இஸ்ரவேலுக்கு ராஜாவாகத் தெரிந்துகொள்கிறார்.

தங்களை விசாரிப்பதற்கு ஒரு ராஜா வேண்டுமென்று இஸ்ரவேல் ஜனங்கள் கேட்டார்கள். அவர்கள் கேட்ட பிரகாரம், கர்த்தர் அவர்களுக்கு சவுலை ராஜாவாகக் கொடுத்தார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய ராஜாவைப்பற்றிச் சொல்லும்போது, மற்ற ஜாதியாரை ஆளுகிற ராஜாவைப்போல, தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டார்கள். அந்த ராஜாவுக்கு கம்பீரமான தோற்றம் இருக்கவேண்டுமென்பது அவர்களுடைய விருப்பம். ஆனால் ராஜாவின் குணாதிசயத்தைப்பற்றி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் எதிர்பார்த்த பிரகாரமாகவே, கர்த்தர் அவர்களுக்கு சவுலை ராஜாவாகக் கொடுத்தார். ஆனால் சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. சவுலின் இருதயத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிற நற்குணம் காணப்படவில்லை. ஆகையினால் கர்த்தர் சவுலை இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளிவிட்டார்.

இப்போது கர்த்தர் இஸ்ரவேலுக்கு ஒரு புதிய ராஜாவைக் கொடுக்கிறார். இந்த ராஜாவின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற இருதயமாயிருக்கிறது. கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாய் கொடுக்கிறார். கர்த்தர் ஜனங்களுடைய விருப்பத்தின் பிரகாரம் இஸ்ரவேலுக்கு ராஜாவைத் தெரிந்தெடுக்காமல், தம்முடைய விருப்பத்தின் பிரகாரம் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாய்த் தெரிந்தெடுக்கிறார்.

கர்த்தர் சாமுவேலை நோக்கி "நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக்கொண்டுவா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்துகொண்டேன்" (1சாமு 16:1) என்று சொல்லுகிறார். சாமுவேலுக்கு ஈசாயைப்பற்றியும் தெரியாது. அவருடைய குமாரரைப்பற்றியும் தெரியாது.

கர்த்தர் சவுலை இஸ்ரவேலுக்கு ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளிவிட்டாலும், சவுலே இஸ்ரவேலுக்கு இப்போது ராஜாவாயிருக்கிறார். சவுல் ராஜாவாயிருக்கும்போது, சாமுவேல் வேறொருவரை ராஜாவாக அபிஷேகம்பண்ணினால், சவுலுக்கு சாமுவேலின்மீது கோபமுண்டாகும். சாமுவேல் சவுலைப் பார்த்து பயப்படுகிறார்.

சாமுவேல் கர்த்தரிடத்தில், "நான் எப்படிப்போவேன்; சவுல் இதைக் கேள்விப்பட்டால், என்னைக் கொன்றுபோடுவானே" (1சாமு 16:2) என்று சொல்லுகிறார். சவுலின் மனதிலே மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவர் துன்மார்க்கனாக வளர்ந்திருக்கிறார்.

சவுலின் துர்க்குணத்தைப்பற்றி சாமுவேலுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால்தான் கர்த்தர் சாமுவேலை, "பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்திற்கு உன்னை அனுப்புவேன்" என்று சொன்னவுடனேயே, "நான் எப்படி போவேன், சவுல் இதைக் கேள்விப்பட்டால், என்னைக் கொன்றுபோடுவானே" என்று சொல்லுகிறார்.

சவுல் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார். கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போகிறவர்கள், தங்களுடைய நற்குணங்களைவிட்டும் தூரமாய் விலகிப்போய்விடுவார்கள். சவுலின் துன்மார்க்கம் அதிகமாயிருக்கிறது. சாமுவேல் சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். ஆனால் சவுலோ சாமுவேலைக் கொல்லுவதற்கும் ஆயத்தமாயிருக்கிறார்.

சாமுவேல் இஸ்ரவேலுக்கு கர்த்தருடைய தீர்க்கதரிசியாயிருக்கிறார். சாமுவேலிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் மாத்திரம் இருக்கவேண்டும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஆனால் சாமுவேலோ இப்போது சவுலுக்கு பயப்படுகிறார். ஒருவேளை இக்காலத்தில், சாமுவேலின் விசுவாசம் குறைந்துபோயிருப்பதற்கும், சவுலின் துன்மார்க்கம் அதிகரித்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஆகையினால் சாமுவேலின் இருதயத்தில், எதிர்பார்த்த அளவுக்கு விசுவாசம் காணப்படவில்லை.

சவுலை பார்த்து பயப்படுகிற சாமுவேலுக்கு கர்த்தர் ஆலோசனை சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரின் நன்மைகளை விசாரிக்கிறவர். அவர்களைப் பாதுகாக்கிறவர். கர்த்தர் சாமுவேலிடத்தில், "நீ ஒரு காளையைக் கையோடே கொண்டுபோய், கர்த்தருக்குப் பலியிட வந்தேன் என்று சொல்லி, ஈசாயைப் பலிவிருந்துக்கு அழைப்பாயாக; அப்பொழுது நீ செய்யவேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்; நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம்பண்ணுவாயாக" (1சாமு 16:2,3) என்று சொல்லுகிறார்.

சாமுவேல் பெத்லெகேமுக்குப்போய், "கர்த்தருக்கு பலியிட வந்தேன்" என்று சொல்லவேண்டும். அவர் தன்னோடேகூட ஒரு காளையை கையோடே கொண்டுபோகவேண்டும். அவர் தன்னுடைய கொம்பையும் தைலத்தால் நிரப்பி கொண்டுபோகவேண்டும். சாமுவேல் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணியபோது, அவர் கர்த்தருக்கு பலிசெலுத்தினார்.

"அப்படியே ஜனங்கள் எல்லாரும் கில்காலுக்குப் போய், அவ்விடத்திலே கர்த்தருடைய சந்நிதியில் சவுலை ராஜாவாக ஏற்படுத்தி, அங்கே கர்த்தருடைய சந்நிதியில் சமாதானபலிகளைச் செலுத்தி, அங்கே சவுலும் இஸ்ரவேல் மனுஷர் யாவரும் மிகவும் சந்தோஷங்கொண்டாடினார்கள்" (1சாமு 11:15).

சாமுவேல் பெத்லெகேமுக்குப் போகும்போது, ஈசாயை பலிவிருந்துக்கு அழைக்கவேண்டும். ஒருவேளை ஈசாய் பெத்லெகேம் ஊருக்கு தலைவராகயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஈசாயோடுகூட அவருடைய குடும்பத்தாரையும் பலிவிருந்துக்கு அழைக்கவேண்டும். கர்த்தர் சாமுவேலுக்கு இதுவரையிலும் வெளிப்படுத்திவிட்டு, அதற்கு பின்பு என்ன செய்யவேண்டும் என்பதை வெளிப்படுத்தவில்லை. "அப்பொழுது நீ செய்யவேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்" (1சாமு 16:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரியமாகப் போகிறவர்கள், கர்த்தர் காண்பிக்கும் வழியிலே போகவேண்டும். கர்த்தர் நம்முடைய நடைகளை வழிநடத்துவார். நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளை, ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து, கடந்துபோகவேண்டும். கர்த்தருடைய இரகசியங்களை ஒரே வேளையில் தெரிந்துகொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாது. கர்த்தர் தம்மைப்பற்றி நமக்கு எவ்வளவு வெளிப்படுத்துகிறாரோ, அந்த வெளிப்படுத்துதலில் நாம் திருப்தியோடிருக்கவேண்டும்.

கர்த்தர் சொன்னபடியே சாமுவேல் பெத்லெகேமுக்குப் போகிறார். சாமுவேலிடத்தில் ஆடம்பரம் எதுவுமில்லை. சாமுவேலோடுகூட திரளான ஜனங்கள் போகவில்லை. சாமுவேல் ஒரு காளையை கையோட கொண்டுபோகிறார். அவர் பெத்லெகேமிலே கர்த்தருக்கு பலியிட ஆயத்தமாய்ப் போகிறார். ஒருவேளை இந்தக் காளையை வழிநடத்தி கூட்டிக்கொண்டு போவதற்கு, சாமுவேலோடுகூட ஒரு வேலைக்காரன் கூடப்போயிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

பெத்லெகேம் ஊராருக்கு சாமுவேலைப்பற்றி நன்றாய்த் தெரியும். அப்பொழுது அவ்வூரின் மூப்பர் தத்தளிப்போடே சாமுவேலுக்கு எதிர்கொண்டு வந்து, "நீர் வருகிறது சமாதானமா" (1சாமு 16:4) என்று கேட்கிறார்கள்.

சாமுவேல் தங்கள் ஊருக்கு வருவது, தேவனுடைய கோபத்திற்கு அடையாளமாயிருக்குமோ என்றும், சாமுவேல் ஒருவேளை கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை தங்கள் ஊருக்கு விரோதமாக அறிவிக்கப்போகிறாரோ என்றும் நினைத்து பெத்லெகேம் ஊரின் மூப்பர் தத்தளிக்கிறார்கள். பெத்லெகேம் ஊரார் கர்த்தருக்கு விரோதமாக பாவமும், அக்கிரமமும் செய்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் அவர்கள் சாமுவேலைப் பார்த்தவுடனேயே, "நீர் வருகிறது சாமாதானமா" என்று கேட்கிறார்கள்.

சாமுவேலும் அவர்களுக்கு சமாதானமான பிரதியுத்தரம் சொல்லுகிறார். "சாமாதானம் தான், கர்த்தருக்கு பலியிட வந்தேன்" (1சாமு 16:5) என்று சாமுவேல் அவ்வூரின் மூப்பருக்கு சொல்லுகிறார். சாமுவேலின் இருதயத்தில் அந்த ஊராருக்கு விரோதமான வார்த்தை எதுவுமில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பை சொல்லுவதற்காக சாமுவேல் அங்கு வரவில்லை. அவர் அங்கே கர்த்தருக்கு பலியிட வந்திருக்கிறார்.

சாமுவேல் பெத்லெகேமிலே கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்த வந்திருக்கிறார். பெத்லெகேம் ஊரார் கர்த்தரோடு ஒப்புரவாகி, சமாதானமாயிருக்கவேண்டும் என்பதற்காக அவர் அங்கே சமாதான பலியை செலுத்த வந்திருக்கிறார். சமாதான பலி செலுத்தும்போது, அந்த பலியின் மாம்சத்தை பலியிடுகிறவரும், அந்த ஊர் ஜனங்களும் புசிப்பது வழக்கம்.

சாமுவேல் பலிவிருந்திலே பங்குபெறுமாறு அவர்கள் எல்லோரையும் அழைக்கிறார். "நீங்கள் உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டு, என்னுடனே கூடப் பலிவிருந்துக்கு வாருங்கள்" என்று சாமுவேல் பெத்லெகேம் ஊராரை அழைக்கிறார். மேலும் ஈசாயையும் அவருடைய குமாரரையும் பரிசுத்தம்பண்ணி, அவர்களைப் பலிவிருந்துக்கு அழைக்கிறார் (1சாமு 16:5).

சாமுவேல் ஈசாயையும் அவருடைய குமாரரையும் பார்ப்பதற்காகவே பெத்லெகேமுக்கு வந்திருக்கிறார். இதற்கு முன்பு சாமுவேலுக்கும் ஈசாயிக்கும் பழக்கம் இருந்ததா என்பது தெரியவில்லை. ஈசாய் பெத்லெகேம் ஊரின் தலைவராயிருப்பதினால், அவர் சாமுவேலைத் தன்னுடைய வீட்டிலே தங்க வைத்திருக்கவேண்டும். ஈசாயின் வீட்டார், கர்த்தருக்கு பலியிடுவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்திருக்கவேண்டும்.

சாமுவேல் தன்னோடுகூட கொண்டு வந்த காளையை, எல்லோருக்கும் முன்பாக கர்த்தருக்கு பலியிடப்போகிறார். அதற்கு முன்பு அவர் ஈசாயையும் அவருடைய குமாரரையும் தனியாக பரிசுத்தம்பண்ணுகிறார். இந்த சம்பவம் ஈசாயின் வீட்டில் நடைபெற்றிருக்கவேண்டும். யோபு தன் பிள்ளைகளை பரிசுத்தப்படுத்தியதுபோல, சாமுவேல் ஈசாயின் குடும்பத்தாரை பரிசுத்தப்படுத்துகிறார்.

"யோபுவின் குமாரர், அவனவன் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான்" (யோபு 1:4,5).

சாமுவேல் ஈசாயின் வீட்டிலே, அவருடைய வீட்டாரை பரிசுத்தப்படுத்தும்போது, ஈசாயின் குமாரர் ஒவ்வொருவரையும், தனக்கு முன்பாக வரச்சொல்லியிருக்கவேண்டும். ஈசாயின் குமாரர் ஒவ்வொருவராக சாமுவேலுக்கு முன்பாக கடந்துபோகிறார்கள்.

தாவீது
1சாமு 16:6-13

1சாமு 16:6. அவர்கள் வந்தபோது, அவன் எலியாபைப் பார்த்தவுடனே: கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்படுபவன் இவன்தானாக்கும் என்றான்.

1சாமு 16:7. கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.

1சாமு 16:8. அப்பொழுது ஈசாய் அபினதாபை அழைத்து, அவனைச் சாமுவேலுக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணினான்; அவன்: இவனையும் கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லை என்றான்.

1சாமு 16:9. ஈசாய் சம்மாவையும் கடந்துபோகப்பண்ணினான்; அவன்: இவனையும் கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லை என்றான்.

1சாமு 16:10. இப்படி ஈசாய் தன் குமாரரில் ஏழுபேரை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணினான்; பின்பு சாமுவேல் ஈசாயைப் பார்த்து: கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்துகொள்ளவில்லை என்று சொல்லி,

1சாமு 16:11. உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்: இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்கமாட்டேன் என்றான்.

1சாமு 16:12. ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான்; அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுமுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது கர்த்தர்: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார்.

1சாமு 16:13. அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள்முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்.

சாமுவேல் ஈசாயையும் அவருடைய குமாரரையும் அவருடைய வீட்டிலே பரிசுத்தம்பண்ணுகிறார். ஈசாயின் குமாரர் ஒவ்வொருவராக சாமுவேலிடத்தில் வருகிறார்கள். ஈசாய்க்கு மொத்தம் எட்டு குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஏழுபேர் இப்போது ஈசாயோடுகூட அவருடைய வீட்டிலே இருக்கிறார்கள். எல்லோருக்கும் இளையவனாகிய தாவீது ஈசாயின் எட்டாவது குமாரன். இவர் வீட்டிற்கு வெளியே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்.

சாமுவேல் ஈசாயின் குமாரரை பரிசுத்தம்பண்ணும்போது, முதலாவதாக ஈசாயின் மூத்தகுமாரனாகிய எலியாப் சாமுவேலிடத்தில் வருகிறார். சாமுவேல் எலியாவைப் பார்த்தவுடனேயே, "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுவன் இவன் தானாக்கும்" (1சாமு 16:6) என்று சொல்லுகிறார். எலியாப் நல்ல சரீர வளர்ச்சியுடையவர். இவருடைய முகமும் கம்பீரமாயிருக்கிறது.

அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: "நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1சாமு 16:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு சவுலை ராஜாவாகக் கொடுத்தார். அவர்களுக்கு பிரியமான பிரகாரம், சவுல் அவர்களுக்கு ராஜாவானார். சவுல் சரீர வளர்ச்சியும், பராக்கிரமமான தேகமுமுடையவர். மனுஷர் வெளித்தோற்றத்தைப் பார்க்கிறார்கள். இப்போதோ கர்த்தர் தமக்கு பிரியமான ஒருவரை, இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்போகிறார். கர்த்தர் மனுஷர் பார்க்கிறபடி பார்ப்பதில்லை. மனுஷர் முகத்தையும் வெளித்தோற்றத்தையும் பார்ப்பார்கள். கர்த்தரோ மனுஷருடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார்.

நம்மால் மனுஷருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்க முடியாது. மனுஷரால் வெளித்தோற்றத்தை மாத்திரமே பார்க்கமுடியும். கர்த்தரோ நம்மைப் பார்க்கும்போது, நம்முடைய இருதயத்தின் எண்ணங்களையும், நம்முடைய சுபாவங்களையும் பார்க்கிறார். நம்முடைய சிந்தனைகளை அறிகிறார். நம்முடைய உள்ளான நோக்கங்களை கர்த்தர் புரிந்துகொள்கிறார்.

நாம் மனுஷருடைய வெளித்தோற்றத்தைப் பார்த்து, அவர்களை நிதானிக்கிறோம். அவர்களுடைய முகத்தைப் பார்க்கிறோம். உருவத்தைப் பார்க்கிறோம். சரீரத்தில் வளர்ச்சியைப் பார்க்கிறோம். கர்த்தரோ நம்முடைய இருதயங்களைப் பார்த்து, நம்மை நிதானித்து அறிகிறார்.

நாம் மனுஷருடைய வெளித்தோற்றத்தைப் பார்த்து, அவர்களுடைய அழகை ரசிக்கிறோம். மனுஷருக்குள்ளே எப்படிப்பட்ட சுபாவம் இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. ஒருசிலர் வெளித்தோற்றத்திலே மிகவும் அழகாகயிருப்பார்கள். ஆனால் அவர்களுக்குள்ளேயோ மாய்மாலமும், கபடும், சூதும், வஞ்சகமும் நிரம்பியிருக்கும். நம்மால் மனுஷருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, அவர்களுடைய உண்மையான சுபாவங்களை அறிந்துகொள்ள முடியாது.

ஈசாயின் மூத்த குமாரனாகிய எலியாவை பார்த்தவுடனேயே, கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்படுபவன் இவன்தான் என்று சாமுவேல் தீர்மானம் பண்ணிவிடுகிறார். ஆனால் கர்த்தரோ எலியாவின் இருதயத்தைப் பார்த்து அவனைப் புறக்கணித்துவிடுகிறார். அதன் பின்பு ஈசாயின் அடுத்த குமாரனாகிய அபினதாப் சாமுவேலுக்கு முன்பாக வருகிறான். கர்த்தர் இவனையும் தெரிந்துகொள்ளவில்லை. அதன் பின்பு ஈசாய் தன் அடுத்த குமாரனாகிய சம்மாவையும் சாமுவேலுக்கு முன்பாக கடந்து போகப்பண்ணுகிறார். கர்த்தர் இவனையும் தெரிந்துகொள்ளவில்லை.

இப்படி ஈசாய் தன் குமாரரில் ஏழுபேரையும் சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணுகிறார்; கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்துகொள்ளவில்லை பின்பு சாமுவேல் ஈசாயிடம், "உன் பிள்ளைகள் இவ்வளவுதானா" (1சாமு 16:11) என்று கேட்கிறார்.

ஈசாய் சாமுவேலிடம், "இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான்" (1சாமு 16:11) என்று சொல்லுகிறார்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: "ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்கமாட்டேன்" என்கிறார்.

தாவீது என்னும் பெயருக்கு "பிரியமானவன்" என்று பொருள். தாவீது, பிரியமான நேசகுமாரனுக்கு அடையாளமாயிருக்கிறார். ஈசாயின் குமாரர்களில் தாவீது எல்லோருக்கும் இளையவன். கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்துகொள்கிறார். ஆனால் சாமுவேல் ஈசாயின் வீட்டிலிருக்கும்போது, தாவீது அங்கே இல்லை. அவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்.

ஈசாயின் வீட்டிலே அப்போது தாவீதுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாகிய சாமுவேல் ஈசாயின் வீட்டிற்கு வந்திருக்கிறார். ஈசாயின் எல்லா குமாரரும் வீட்டிலே இருக்கிறார்கள். சாமுவேல் ஈசாயையும் அவருடைய குமாரரையும் பரிசுத்தம்பண்ணுகிறார். ஈசாயின் வீட்டில் பலிவிருந்து நடக்கப்போகிறது. இந்த சம்பவம் தாவீதுக்கு அறிவிக்கப்படவில்லை. தன்னுடைய வீட்டில் நடைபெறப்போகிற பலிவிருந்துக்கு, தாவீதுக்கு அழைப்பு இல்லை. அவர் எப்போதும்போல ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்.

தாவீது கறவலாடுகளின் பின்னாக திரிந்தார். கர்த்தரோ ஆடுகளை மேய்த்த தாவீதை, இஸ்ரவேல் ஜனங்களை மேய்ப்பதற்கு அபிஷேகம்பண்ணுகிறார். தாவீதைப்போலவே மோசேயும், தன்னுடைய மாமனாரின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். அப்போது கர்த்தர் மோசேயை சந்தித்து, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரை மீட்டு வரச்சொன்னார்.

"தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக்கொண்டு வந்தார். இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான்' *(சங் 78:70-72).*

இஸ்ரவேலுக்கு ராஜாவாக வரப்போகிற தாவீதினிடத்தில், இராணுவ வீரருக்குரிய சுபாவம் இருக்கவேண்டுமென்று பொதுவாக எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். தாவீதின் ஜீவியம் இராணுவ ஜீவியமாகயில்லை. அவருடைய ஜீவியம் ஒரு மேய்ப்பரின் ஜீவியமாயிருக்கிறது. இராணுவ ஜீவியத்தை விட மேய்ப்பரின் ஜீவியமே பரலோக ஜீவியத்திற்கேற்ற ஜீவியமாயிருக்கிறது.

ஆடுகளை மேய்க்கிற தாவீது, இஸ்ரவேல் ஜனங்களை மேய்ப்பதற்கு தகுதியுள்ளவராயிருக்கிறார். ஒரு ராஜாவின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தாவீது ஏற்றவராயிருக்கிறார்.

ஆடுகளை மேய்க்கிறவர்கள் தங்கள் மந்தையின்மீது அன்பாயும் கரிசனையாயும் இருப்பார்கள். ராஜாவும் தன்னுடைய தேசத்து ஜனத்தார்மீது அன்பாயும் கரிசனையாயும் இருக்கவேண்டும். அவர்களுக்கு ஆதரவாயிருந்து அவர்களை பராமரிக்கவேண்டும்.

சாமுவேல் இதுவரையிலும் தாவீதை பார்த்ததில்லை. கர்த்தரோ ஈசாயின் மற்ற ஏழுகுமாரரில் ஒருவனையும் தெரிந்துகொள்ளவில்லை. கர்த்தரோ இதை சாமுவேலிடத்தில் தீர்மானமாகச் சொல்லிவிடுகிறார். கர்த்தர் ஈசாயின் குமாரரில் ஒருவனை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்போகிறார் என்பது சாமுவேலுக்குத் தெரியும். ஆனால் ஈசாயின் குமாரராகிய இந்த ஏழுபேரில் ஒருவரையும் கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லையென்றால், மீதமுள்ள அந்த இளைய குமாரனைத்தான் கர்த்தர் தெரிந்துகொள்வார் என்று சாமுவேல் முழுநிச்சயத்தோடு நம்புகிறார்.

ஆகையினால் சாமுவேல் ஈசாயை நோக்கி, "ஆள் அனுப்பி அவனை அழைப்பி, அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்கமாட்டேன்" என்று சொல்லுகிறார். தாவீதின் குடும்பத்தார் பலிவிருந்துக்கு அவரை அழைக்கவில்லை. ஆனால் சாமுவேலோ தாவீது வராமல், அந்தப் பலிவிருந்தில் பங்குபெற மறுத்துவிடுகிறார். இது தேவனுடைய தெய்வீக தீர்மானமாயிருக்கிறது. மனுஷர் நம்மைப் புறக்கணித்தாலும், கர்த்தர் நம்மை தெரிந்துகொள்கிறார். நாம் மனுஷருக்கு ஆகாதவர்களாயிருந்தாலும், நாம் கர்த்தருக்கு விசேஷித்தவர்களாயிருக்கிறோம்.

ஈசாய் ஆள் அனுப்பி தாவீதை தன் வீட்டிற்கு அழைத்து வருகிறார். ஈசாயின் இளைய மகனாகிய தாவீது வீட்டிற்குள்ளே வருகிறார். தாவீதின் வஸ்திரத்தைப்பற்றி இங்கு ஒன்றுமே சொல்லப்படவில்லை. "அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமுமுள்ளவனாயிருந்தான்" *(1சாமு 16:12)* என்று தாவீதின் சரீர அழகை பற்றி மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது ஒருவேளை ஆடுமேய்க்கிற மேய்ப்பனுடைய வஸ்திரத்தை உடுத்தியிருக்கலாம். அது சாதாரண வஸ்திரம்.

ஆடு மேய்க்கிறவர்கள் வெயிலிலும், காற்றிலும் சுற்றி அலைவார்கள். அவர்களுடைய சரீரம் முழுவதும் வேர்வை நாற்றமும், ஆடுகளின் நாற்றமும் இருக்கும். ஒருவேளை தாவீது வீட்டிற்குள் வந்தபோது, தாவீதின் சரீரத்தில் ஆடுகளின் துர்நாற்றம் வீசியிருக்கலாம். ஆனால் தாவீதின் தோற்றம் அழகாயிருக்கிறது. தாவீதின் கண்களும் பார்வையும் அழகாயிருக்கிறது. தாவீதின் மேனி சிவப்பாயிருக்கிறது. மொத்தத்தில் தாவீது நல்ல ரூபமுள்ளவராயிருக்கிறார்.

தாவீதின் தோற்றம் சவுலின் தோற்றத்தைப்போல கம்பீரமாயில்லை. சவுல் நல்ல உயரமுள்ளவராயிருந்தார். தாவீதோ சிறு பையனாகயிருக்கிறார். தாவீதுக்கு தன்னுடைய சரீரத்தை அழகுபடுத்தவோ, அலங்காரம்பண்ணவோ ஒரு பொருளும் இல்லை. அவர் வெயிலிலும், காற்றிலும் சுற்றி அலைந்து, தன்னுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார். தாவீதை சுத்தம் பண்ணாமல், அழகுபடுத்தாமல், அப்படியே சாமுவேலிடத்தில் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

சாமுவேல் தாவீதைப் பார்க்கிறார். ஈசாயின் மூத்த குமாரனை பார்த்தபோது, "கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்படுபவன் இவன் தானாக்கும்" என்று சாமுவேலின் மனது சொல்லிற்று. இப்போது சாமுவேல் தாவீதைப் பார்க்கிறார். சாமுவேலின் மனதிலே தாவீதுக்கு ஆதரவான வார்த்தைகள் ஒன்றும் உண்டாகவில்லை. அப்பொழுது கர்த்தர் சாமுவேலிடம் பேசுகிறார். "இவன் தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு" (1சாமு 16:12) என்று கர்த்தர் சாமுவேலுக்கு சொல்லுகிறார். கர்த்தர் சாமுவேலிடம் இரகசியம் பேசுவதுபோல அவருடைய காதிலே பேசுகிறார். கர்த்தர் ஏற்கெனவே சாமுவேலிடம், சவுலைப்பற்றி, அவருடைய காதுகள் கேட்க பேசியிருக்கிறார்.

"சவுல் வர ஒருநாளுக்கு முன்னே கர்த்தர் சாமுவேலின் காதுகேட்க: நாளை இந்நேரத்திற்குப் பென்யமீன் நாட்டானாகிய ஒரு மனுஷனை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணக்கடவாய்; அவன் என் ஜனத்தைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பான்; என் ஜனத்தின் முறையிடுதல் என்னிடத்தில் வந்து எட்டினபடியினால், நான் அவர்களைக் கடாட்சித்தேன் என்று வெளிப்படுத்தியிருந்தார்" (1சாமு 9:15,16).

கர்த்தர் சாமுவேலிடம், "இவன் தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு" என்று சொல்லுகிறார். தேவனுடைய தெய்வீக அங்கீகாரம் இங்கே உறுதிபண்ணப்படுகிறது. தாவீது சிறு பையனாகயிருந்தாலும், ஏற்ற காலத்திலே, தாவீதுக்கு ராஜ்யபாரம் கொடுக்கப்படும்.

இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்வதற்கு தேவையான கிருபைகளையும், தாலந்துகளையும், ஞானத்தையும், புத்தியையும் கர்த்தர் ஏற்ற காலத்திலே தாவீதுக்கு கொடுப்பார். தாவீது மேசியாவுக்கு அடையாளமாயிருக்கிறார். மேசியா என்னும் பெயருக்கு "அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்று பொருள். கர்த்தர் சாமுவேலிடம், தாவீதை அபிஷேகம்பண்ணுமாறு சொல்லுகிறார்.

அபிஷேகம்பண்ணப்பட்ட தாவீதின்மேல் கர்த்தருடைய ஆவியானவர் வந்து தங்கியிருப்பார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரம் என்று தாவீதுக்கு கொடுக்கப்படாமல், அளவில்லாமல் கொடுக்கப்படும்.

சாமுவேல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். அப்பொழுது சாமுவேல், தைலக்கொம்பை எடுத்து, "அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணுகிறார்" (1சாமு 16:13). இந்த வாக்கியத்திற்கு, "சாமுவேல் தாவீதை அவருடைய சகோதரர்களிடமிருந்து தனியே பிரித்து, அபிஷேகம்பண்ணுகிறார்" என்று வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள். ஈசாயின் ஏழுகுமாரர்களிடத்திலிருந்து, தாவீது தனியாகப் பிரிக்கப்படுகிறார். சாமுவேல் தாவீதை அவருடைய சகோதரர் எல்லோருக்கும் நடுவிலே அபிஷேகம்பண்ணாமல், அவரைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய், தனிமையிலே அபிஷேகம்பண்ணுகிறார்.

தாவீது சாமுவேலின் ஆலோசனைகளைக் கேட்கவேண்டும். சாமுவேல் தாவீதை ராஜாவாய் அபிஷேகம்பண்ணியிருப்பது, தாவீதின் சகோதரருக்கு இப்போது வெளிப்படுத்தக்கூடாது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தாவீதின் சகோதரருக்கு, அவர் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டது தெரியவில்லை. தாவீதின் மூத்த சகோதரனாகிய எலியாப், தாவீதை ஒரு ஆடுமேய்க்கிறவனாகவே பாவிக்கிறார். தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார் என்னும் சத்தியம் எலியாபுக்கு தெரியவில்லை.

"அந்த மனுஷரோடே அவன் பேசிக்கொண்டிருக்கிறதை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்றான்" (1சாமு 17:28).

சாமுவேல் தாவீதை அபிஷேகம்பண்ணுகிறார். அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருக்கிறார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விடுகிறார் (1சாமு 16:13). சாமுவேல் அபிஷேகம்பண்ணப்படும்போது பெரிய சடங்காச்சாரம் எதுவும் நடைபெறவில்லை. அது ஒரு சாதாரண சம்பவமாகவே நடைபெறுகிறது. ஆனாலும் சாமுவேல் தாவீதை அபிஷேகம்பண்ணும்போது, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்திறங்கி, தம்முடைய தெய்வீக வல்லமையை தாவீதுக்குக் கொடுக்கிறார். தாவீதோடுகூட தெய்வீக வல்லமை இருக்கும் என்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அடையாளமாயிருக்கிறது.

தாவீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படும்போது உலகப்பிரகாரமான சடங்குகளினால் அவருடைய ராஜரீகம் உறுதிபண்ணப்படவில்லை. ஆனால் கர்த்தருடைய தெய்வீக வல்லமையினால், தாவீதுக்கு ராஜரீகம் உறுதிபண்ணப்படுகிறது. தாவீதின் சிரசின்மீது கிரீடம் சூட்டப்படவில்லை. அவருடைய கைகளில் செங்கோல் கொடுக்கப்படவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் தன்னை ஞானத்தினாலும், வல்லமையினாலும் நிரப்புவதை தாவீது தனக்குள்ளே உணருகிறார்.

தாவீது இதன்பின்பு சிங்கத்தையும், கரடியையும் கொன்றார் என்று வாசிக்கிறோம். அவருக்கு இசைக்கருவிகளை இசைப்பதிலும், பாடல்களை இயற்றுவதிலும் விசேஷித்த தாலந்துகள் இருந்ததையும் நாம் வாசிக்கிறோம். இவையெல்லாம் கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்திறங்கினதினால் உண்டாயிற்று. இவை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

சாமுவேல் தன்னுடைய ஊழியத்தை முடித்துவிட்டு, ராமாவுக்கு பாதுகாப்பாக போய்ச் சேருகிறார். இதன் பின்பு சாமுவேலைப்பற்றி ஒரே ஒரு வசனத்தில் மாத்திரமே வாசிக்கிறோம் (1சாமு 19:18). அதன் பின்பு சாமுவேல் மரித்துப்போன சம்பவத்தை வாசிக்கிறோம். சாமுவேலைப்பற்றி வேதவாக்கியங்களில் வேறு ஒன்றும் சொல்லப்படவில்லை. சாமுவேலின் ஊழியம் நிறைவு பெறுகிறது. சாமுவேல் தன் ஓட்டத்தை முடித்து, கர்த்தருக்குள் சமாதானமாய் மரித்துப்போகிறார்.

யூதாவின் கோத்திரத்திலே, தாவீதின் கைகளில், இஸ்ரவேலை ஆளுகிற ராஜாசனமும், செங்கோலும் கொடுக்கப்படுவதை சாமுவேலின் கண்கள் காண்கிறது. கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற மனுஷன், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுகிறார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடவில்லை.

சவுலின் வீழ்ச்சி 1சாமு 16:14-23

1சாமு 16:14. கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது.

1சாமு 16:15. அப்பொழுது சவுலின் ஊழியக்காரர் அவனை நோக்கி: இதோ, தேவனால் விடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி உம்மைக் கலங்கப்பண்ணுகிறதே.

1சாமு 16:16. சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறின ஒருவனைத்தேடும்படிக்கு, எங்கள் ஆண்டவனாகிய நீர் உமக்கு முன்பாக நிற்கிற உம்முடைய அடியாருக்குக் கட்டளையிடும்; அப்பொழுது தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி உம்மேல் இறங்குகையில், அவன் தன் கையினால் அதை வாசித்தால் உமக்குச் சவுக்கியமுண்டாகும் என்றார்கள்.

1சாமு 16:17. சவுல் தன் ஊழியக்காரரைப் பார்த்து: நன்றாய் வாசிக்கத்தக்க ஒருவனைத் தேடி, என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான்.

1சாமு 16:18. அப்பொழுது அந்த வேலைக்காரரில் ஒருவன் பிரதியுத்தரமாக: இதோ, பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன்; அவன் வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; கர்த்தர் அவனோடேகூட இருக்கிறார் என்றான்.

1சாமு 16:19. அப்பொழுது சவுல்: ஈசாயினிடத்தில் ஆட்களை அனுப்பி, ஆட்டுமந்தையில் இருக்கிற உன் குமாரனாகிய தாவீதை என்னிடத்தில் அனுப்பு என்று சொல்லச் சொன்னான்.

1சாமு 16:20. அப்பொழுது ஈசாய்: அப்பத்தையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும், ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் கழுதையின் மேல் ஏற்றி, தன் குமாரனாகிய தாவீதின் வசமாய் சவுலுக்கு அனுப்பினான்.

1சாமு 16:21. அப்படியே தாவீது சவுலிடத்தில் வந்து, அவனுக்கு முன்பாக நின்றான்; அவன் இவனை மிகவும் சிநேகித்தான்; அவனுக்கு இவன் ஆயுததாரியானான்.

1சாமு 16:22. சவுல் ஈசாயினிடத்தில் ஆள் அனுப்பி, தாவீது எனக்கு முன்பாக நிற்கட்டும்; என் கண்களில் அவனுக்குத் தயவுகிடைத்தது என்று சொல்லச்சொன்னான்.

1சாமு 16:23. அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவான்.

கர்த்தருடைய ஆவியானவர் சவுலைவிட்டு நீங்குகிறார். சவுல் தனக்குத்தானே பயங்கரமானவராயிருக்கிறார். சவுலிடத்தில் காணப்பட்ட எல்லாவிதமான நற்குணங்களும் அவரைவிட்டு நீங்கிற்று. சவுல் கர்த்தரைவிட்டு விலகிப்போனார். ஆகையினால் கர்த்தரும் சவுலைவிட்டு விலகிப்போய்விடுகிறார். சவுல் கர்த்தரை ஒதுக்கி தள்ளிவிடுகிறார். ஆகையினால் கர்த்தரும் சவுலை ஒதுக்கி தள்ளிவிடுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் சவுலைவிட்டு நீங்கிப்போனதினால், கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி சவுலை கலங்கப்பண்ணிக்கொண்டிருக்கிறது. நம்மிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானவரை நாம் வெளியேற்றிவிட்டால், நமக்குள்ளே பொல்லாத ஆவி பிரவேசிக்கும். நாம் நல்ல ஆவியானவரை வெளியேற்றினால், தீயஆவி உள்ளே வரும்.

பொல்லாத ஆவி சவுலை கலங்கப்பண்ணும்போது, அவருடைய பலம் அவரைவிட்டு நீங்கிற்று. அவரிடத்தில் தெளிந்த சிந்தனையில்லை. சவுல் எதைப் பார்த்தாலும் பயந்து நடுங்குகிறார். அவருடைய மனதில் கலக்கமுண்டாயிற்று.

தாவீது சவுலுக்கு மருத்துவராக நியமிக்கப்படுகிறார். வயல்வெளியிலும், காடுகளிலும் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிற தாவீது, தேவனுடைய சித்தத்தின் பிரகாரம், சவுலின் அரண்மனைக்கு அழைத்து வரப்படுகிறார். எந்த மருத்துவராலும் பொல்லாத ஆவியை கட்டுப்படுத்தவோ துரத்தவோ முடியாது. ஆனால் அந்தப் பொல்லாத ஆவி சவுலை கலங்கப்பண்ணுகிறது. இந்த சூழ்நிலையில் சவுலுக்கு எப்படிப்பட்ட வைத்தியம் பார்க்க வேண்டுமென்று அவருடைய ஊழியக்காரர் ஆலோசனை சொல்லுகிறார்கள்.

சவுலின் ஊழியக்காரர், சவுலிடத்தில் "சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறின ஒருவனைத்தேடும்படிக்கு, எங்கள் ஆண்டவனாகிய நீர் உமக்கு முன்பாக நிற்கிற உம்முடைய அடியாருக்குக் கட்டளையிடும்; அப்பொழுது தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி உம்மேல் இறங்குகையில், அவன் தன் கையினால் அதை வாசித்தால் உமக்குச் சவுக்கியமுண்டாகும்" (1சாமு 16:16) என்று சொல்லுகிறார்கள்.

சவுலின் ஊழியக்காரருக்கும் ஆவிக்குரிய ஆலோசனைகளை சொல்லத் தெரியவில்லை. அவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களில் தெளிந்த சிந்தனையும் ஞானமும் இருக்குமென்றால், அவர்கள் சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறின ஒருவனை தேடமாட்டார்கள். அதற்கு பதிலாக கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரை தேடிப்பார்த்து, அவர் மூலமாக சவுலுக்குத் தேவையான நல்ல ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

சவுலின் ஊழியக்காரர், சவுலிடத்தில் பொதுவான ஆலோசனையை சொல்லுகிறார்கள். சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறினவன் யார் என்பது சவுலுக்குத் தெரியாது. சவுலோ, தனக்கு ஆலோசனை சொன்ன ஊழியக்காரரைப் பார்த்து, "நன்றாய் வாசிக்கத்தக்க ஒருவனைத் தேடி, என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" (1சாமு 16:17) என்று சொல்லுகிறார்.

சவுலுக்கு அநேக ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் சவுலிடம் தாவீதைப்பற்றிச் சொல்லுகிறான். அப்பொழுது அந்த வேலைக்காரரில் ஒருவன் பிரதியுத்தரமாக: "இதோ, பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன்; அவன் வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; கர்த்தர் அவனோடேகூட இருக்கிறார்" (1சாமு 16:18) என்று சொல்லுகிறான்.

சாமுவேல் ஏற்கெனவே சவுலிடத்தில், "கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு; உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்" (1சாமு 15:28) என்று சொன்னார். சாமுவேல் இவ்வாறு சவுலுக்கு சொன்னது, சவுலின் இந்த வேலைக்காரனுக்கு தெரியாது. ஆனாலும் தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாக, சவுலின் வேலைக்காரன், தாவீதைப்பற்றி, சொல்லுகிறான்.

சாமுவேல் ஏற்கெனவே பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரன் தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். அதன் பின்பு சாமுவேல் தன்னுடைய சொந்த ஊராகிய ராமாவுக்குப் போய்விட்டார். தாவீதும் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டாலும், அதன் பின்பு அவர் எப்போதும் போல ஆடுகளை மேய்ப்பதற்காகப் போய்விடுகிறார். கர்த்தருடைய ஆவியானவரோ தாவீதின்மேல் வந்திறங்கியிருக்கிறார். தாவீது கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். அவருடைய அபிஷேகம் மறைவாயில்லை.

கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்திறங்கின பின்பு, அவருடைய ஜீவியத்தில் பிரத்தியட்சமான மாற்றங்கள் உண்டாயிற்று. இந்த மாற்றங்களை தாவீதால் மறைத்து வைக்க முடியவில்லை. தாவீதின் உற்றார் உறவினரும், சிநேகிதரும், அவருடைய ஊராரும், தாவீதின் ஜீவியத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களைப் பார்க்கிறார்கள். சவுலின் வேலைக்காரர்களில் ஒருவனும் தாவீதின் ஜீவியத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களைக் கண்டு, "தாவீது வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; கர்த்தர் அவனோடேகூட இருக்கிறார்" (1சாமு 16:18) என்று சொல்லுகிறான்.

தாவீது ஆடுகளை மேய்க்கிற சிறுவனாகயிருந்தாலும், சவுலின் வேலைக்காரன் அவனைப்பற்றி நல்ல வார்த்தைகளை சாட்சியாக அறிவிக்கிறான். தாவீதின் பெயரும் புகழும் இதுவரையிலும், அவருடைய சொந்த ஊராகிய பெத்லெகேமிலே பிரபல்யமாயிருந்தது. இப்போது தாவீதைப்பற்றிய செய்தி சவுலின் அரண்மனைக்குள்ளும் பிரவேசித்திருக்கிறது.

தாவீதைப்பற்றிய செய்தி சவுலுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. ஏனெனில் "சவுல் இருந்த நாளெல்லாம் பெலிஸ்தரின்மேல் கடினமான யுத்தம் நடந்தது; சவுல் ஒரு பராக்கிரமசாலியையாகிலும் ஒரு பலசாலியையாகிலும் காணும்போது, அவர்கள் எல்லாரையும் தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளுவான்" (1சாமு 14:52). சவுலுக்கு இப்படிப்பட்ட சுபாவம் இருப்பதினால், சவுல் தாவீதைப்பற்றி ஏற்கெனவே அறிந்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் ஒருவர்மேல் வந்திறங்கும்போது, ஆவியானவர் அவருடைய முகத்தை பிரகாசமடையச் செய்கிறார். இந்த பிரகாசம் மனுஷருடைய சுயஅலங்காரத்தினால் உண்டாவதில்லை. இது கர்த்தருடைய ஆவியானவரால் உண்டாகும்.

சவுலின் வேலைக்காரன் சவுலிடத்தில், "ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன்" என்று பொதுவாக சொன்னான். சவுலும் தாவீதைப்பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கவேண்டும். ஆகையினால் தன்னுடைய வேலைக்காரன், தன்னிடத்தில் "ஈசாயின் குமாரன் ஒருவன்" என்று சொன்னவுடனே, அவன் தாவீதுதான் என்பதும், அவன் ஆட்டு மந்தையில் இருக்கிறான் என்பதும் சவுலுக்கு தெரிந்திருக்கிறது.

அப்பொழுது சவுல்: "ஈசாயினிடத்தில் ஆட்களை அனுப்பி, ஆட்டுமந்தையில் இருக்கிற உன் குமாரனாகிய தாவீதை என்னிடத்தில் அனுப்பு" (1சாமு 16:19) என்று சொல்லச் சொல்லுகிறார். ஈசாயும் சவுலின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். ஒருவேளை ஈசாய்க்கும் ஏற்கெனவே சவுலைப்பற்றி தெரிந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது.

அப்பொழுது ஈசாய்: அப்பத்தையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும், ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் கழுதையின் மேல் ஏற்றி, தன் குமாரனாகிய தாவீதின் வசமாய் சவுலுக்கு அனுப்புகிறார் (1சாமு 16:20). ஈசாய் அக்காலத்து வழக்கத்தின் பிரகாரமாக அப்பத்தையும், திராட்சரசத்தையும் ராஜாவுக்கு காணிக்கையாக அனுப்புகிறார்.

"நீ அவ்விடத்தை விட்டு அப்புறம் கடந்துபோய், தாபோரிலுள்ள சமபூமியில் சேரும்போது, தேவனைப் பணியும்படி பெத்தேலுக்குப் போகிற மூன்று மனுஷர் அங்கே உன்னைக் கண்டு சந்திப்பார்கள்; ஒருவன் மூன்று ஆட்டுக்குட்டிகளையும், இன்னொருவன் மூன்று அப்பங்களையும், வேறொருவன் திராட்சரசமுள்ள ஒரு துருத்தியையும் கொண்டுவந்து, உன்னுடைய சுகசெய்தியை விசாரித்து, உனக்கு இரண்டு அப்பங்களைக் கொடுப்பார்கள்; அவைகளை நீ அவர்கள் கையிலே வாங்கவேண்டும்" (1சாமு 10:3,4).

ஈசாய் சவுலை தன்னுடைய ராஜாவாக அங்கீகரிக்கிறார். ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். இதற்கு அடையாளமாகவே தன் குமாரனாகிய தாவீதின் வசமாய், ராஜாவுக்கு அனுப்பவேண்டிய காணிக்கைகளை அனுப்புகிறார். தாவீது சவுலிடத்தில் வந்து, அவருக்கு முன்பாக நின்றார்; சவுல் தாவீதை மிகவும் சிநேகிக்கிறார்; சவுலுக்கு தாவீது ஆயுததாரியாகிறார் (1சாமு 16:21). மேலும் சவுல் ஈசாயினிடத்தில் ஆள் அனுப்பி, "தாவீது எனக்கு முன்பாக நிற்கட்டும்; என் கண்களில் அவனுக்குத் தயவுகிடைத்தது" (1சாமு 16:22) என்று சொல்லச் சொல்லுகிறார்.

தாவீது சுரமண்டலத்தில் வாசிக்கிற இசையே சவுலின் வியாதிக்கு மருந்தாகயிருக்கிறது. தாவீது சவுலுக்கு வைத்தியராயிருக்கிறார். இசை மனுஷனுடைய ஆவியை அமைதிப்படுத்துகிறது. நாம் சோர்ந்து போயிருக்கும்போதும், குழப்பத்திலிருக்கும் போதும் அமைதியான இசையைக் கேட்கும்போது, நமக்கு ஆறுதல் உண்டாகும். ஒரு சிலர் இசையை ரசிப்பதில்லை. வேறு சிலரோ இசைப்பிரியமாயிருப்பார்கள். அவர்களில் சவுலும் ஒருவர்.

தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பார்; அதினாலே பொல்லாத ஆவி சவுலைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவார் (1சாமு 16:24).

ஒரு இசையினால் பிசாசை துரத்த முடியாது. எந்த இசைக்கும் பிசாசின் மீது வல்லமையில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு மாத்திரமே பிசாசின்மீது வல்லமையுள்ளது. ஆனாலும் கர்த்தரைத் துதித்துப் பாடும் கீதத்தின் இசையை வாசிக்கும்போது, மனுஷருடைய மனது பிசாசுக்கு இடங்கொடுக்காமல், இசைக்கு செவிகொடுக்கும். பிசாசானவன் மனுஷருடைய மனதிற்குள் பிரவேசிக்க முடியாதபடி, பிசாசு நுழையக்கூடிய பாதைகளையெல்லாம் அடைத்துப்போடும்.

தாவீது சவுலுக்கு நன்மை செய்கிறார். அவருக்கு முன்பாக சுரமண்டலத்தை எடுத்து வாசித்து, பொல்லாத ஆவியை சவுலைவிட்டு நீங்கச் செய்கிறார். சவுல் தாவீதுக்கு நன்றியுள்ளவராயிருக்கவேண்டும். ஆனால் சவுலுக்கு தாவீதின்மீது கோபமும் பொறாமையும் உண்டாயிற்று. அந்த சூழ்நிலையில்கூட சவுலை பொல்லாத ஆவி பிடிக்கும்போது, தாவீது அவருக்கு முன்பாக சுரமண்டலத்தை வாசிக்கிறார்.

"கர்த்தரால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது; அவன் தன் வீட்டில் உட்கார்ந்து, தன் ஈட்டியைக் கையிலே பிடித்துக்கொண்டிருந்தான்; தாவீது தன் கையினாலே சுரமண்டலம் வாசித்தான். அப்பொழுது சவுல்: தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக்குத்திப்போடப் பார்த்தான்; ஆனாலும் இவன் சவுலுக்கு விலகினதினாலே, அவன் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது; தாவீதோ அன்று இராத்திரி ஓடிப்போய், தன்னைத் தப்புவித்துக்கொண்டான்" (1சாமு 19:9,10).

17 அதிகாரம்

கர்த்தர் தாவீதை மேன்மைப்படுத்த பிரியப்படுகிறார். தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற இருதயமாயிருக்கிறது. வெளிப்பிரகாரமாக பார்க்கும்போது தாவீது சவுலுக்கு வைத்தியராகயிருக்கிறார். இஸ்ரவேலின் பாளயத்தில் தாவீது ஒரு பராக்கிரமசாலியாகவும் யுத்த வீரராகவும் இருக்கிறார். தாவீது காத் ஊரானாகிய கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவனைக் கொன்றுபோடுகிறார்.

கோலியாத்தின் உருவம் இராட்சதருடைய உருவமாயிருக்கிறது. அவன் இஸ்ரவேலின் சேனையை துணிகரமாகத் தூஷிக்கிறான் (1சாமு 17:1-11). தாவீதோ சிறுவனாயிருக்கிறார். ருதவனுடைய தெய்வீக வழிநடத்துலின் பிரகாரமாக, ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிற தாவீது, இப்போது யுத்தக்களத்திற்கு வருகிறார் (1சாமு 17:12-30).

பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மீது வந்து இறங்கியிருக்கிறார். தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார் (1சாமு 17:31-39).

தாவீது கர்த்தருடைய நாமத்தினாலே கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார். தனக்குள்ளே இருக்கிற கர்த்தர் பெரியவர் என்பதை தாவீது உணருகிறார் (1சாமு 17:40-47). தாவீது கோலியாத்தின் நெற்றியிலே ஒரு கல்லை எறிந்து, அவனைக் கொன்றுபோடுகிறார். இதன் மூலமாக இஸ்ரவேலரின் சேனைக்கு பெலிஸ்தர்மீது ஜெயம் கிடைக்கிறது (1சாமு 17:48-54). சவுலின் ராஜசபையிலே தாவீது முக்கியமானவராக உயர்த்தப்படுகிறார் (1சாமு 17:55-58).

பெலிஸ்தர்
1சாமு 17:1-11

1சாமு 17:1. பெலிஸ்தர் யுத்தம்பண்ணுகிறதற்குத் தங்கள் சேனைகளைச் சேர்த்து, யூதாவிலுள்ள சோக்கோவிலே ஒருமித்துக் கூடி, சோக்கோவுக்கும் அசெக்காவுக்கும் நடுவே இருக்கிற எபேஸ்தம்மீமிலே பாளயமிறங்கினார்கள்.

1சாமு 17:2. சவுலும் இஸ்ரவேல் மனுஷரும் ஒருமித்துக் கூடி, ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கி, பெலிஸ்தருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள்.

1சாமு 17:3. பெலிஸ்தர் அந்தப்பக்கத்தில் ஒரு மலையின்மேலும், இஸ்ரவேலர் இந்தப்பக்கத்தில் ஒரு மலையின்மேலும் நின்றார்கள்; அவர்களுக்கு நடுவே பள்ளத்தாக்கு இருந்தது.

1சாமு 17:4. அப்பொழுது காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள ஒரு வீரன் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து புறப்பட்டுவந்து நடுவே நிற்பான்; அவன் உயரம் ஆறுமுழமும் ஒரு ஜாணுமாம்.

1சாமு 17:5. அவன் தன் தலையின்மேல் வெண்கலச் சீராவைப் போட்டு, ஒரு போர்க்கவசம் தரித்துக்கொண்டிருப்பான்; அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் சேக்கலான வெண்கலமாயிருக்கும்.

1சாமு 17:6. அவன் தன் கால்களிலே வெண்கலக் கவசத்தையும் தன் தோள்களின்மேல் வெண்கலக் கேடகத்தையும் தரித்திருப்பான்.

1சாமு 17:7. அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுக்காரரின் படைமரத்தின் கனதியும் அவன் ஈட்டியின் அலகு அறுநூறுசேக்கல் இரும்புமாயிருக்கும்; பரிசைபிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான்.

1சாமு 17:8. அவன் வந்துநின்று, இஸ்ரவேல் சேனைகளைப் பார்த்துச் சத்தமிட்டு, நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறது என்ன? நான் பெலிஸ்தன் அல்லவா? நீங்கள் சவுலின் சேவகர் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்துகொள்ளுங்கள், அவன் என்னிடத்தில் வரட்டும்.

1சாமு 17:9. அவன் என்னோடே யுத்தம்பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம்; நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால், நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து, எங்களைச் சேவிக்கவேண்டும் என்று சொல்லி,

1சாமு 17:10. பின்னும் அந்தப் பெலிஸ்தன்: நான் இன்றையதினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்; நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம்பண்ண ஒருவனை விடுங்கள் என்று சொல்லிக்கொண்டுவருவான்.

1சாமு 17:11. சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயப்பட்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தரை முறியடித்தார்கள். ஆனால் பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ணுகிறதற்கு எழும்பி வருகிறார்கள்.

பெலிஸ்தர் யுத்தம்பண்ணுகிறதற்குத் தங்கள் சேனைகளைச் சேர்த்து, யூதாவிலுள்ள சோக்கோவிலே ஒருமித்துக் கூடி, சோக்கோவுக்கும் அசெக்காவுக்கும் நடுவே இருக்கிற எபேஸ்தம்மீமிலே பாளயமிறங்குகிறார்கள் (1சாமு 17:1).

பெலிஸ்தர் ஒன்றாய்க்கூடி இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் ஒரு பகுதியை தங்கள் வசமாகப் பிடித்துக்கொள்கிறார்கள். ஆகையினால்தான் பெலிஸ்தரால் யூதாவிலுள்ள சோக்கோவிலே ஒருமித்து கூடிவர முடிகிறது. சோக்கோ இப்போது பெலிஸ்தர் வசமாயிருக்கிறது.

பெலிஸ்தருக்கு இஸ்ரவேல் தேசத்திலே நடைபெறுகிற ஒவ்வொரு சம்பவமும் தெரிந்திருக்கிறது. சாமுவேலுக்கும் சவுலுக்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகளை பெலிஸ்தர் கேள்விப்படுகிறார்கள். சாமுவேல் சவுலைவிட்டு விலகிப்போனதையும் பெலிஸ்தர் அறிந்திருக்கிறார்கள். சவுல் இப்போது பலவீனமாய், குழப்பத்திலிருக்கிறார் என்பதை அறிந்து, இஸ்ரவேல் ஜனத்தார்மீது இப்போது யுத்தம்பண்ணலாம் என்று பெலிஸ்தர் யோசிக்கிறார்கள்.

கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி சவுலை சில வேளைகளில் கலங்கப்பண்ணிக்கொண்டிருக்கிறது. அந்தப் பொல்லாத ஆவி சில சமயங்களில் சவுலை விட்டு நீங்கிப்போகிறது. அப்பொழுது சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமாகிறார். இந்த அதிகாரத்தில் எழுதப்பட்ட சம்பவம் நடைபெறும்போது, பொல்லாத ஆவி சவுலைவிட்டு விலகிப்போயிருக்கிறது.

"அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவான்" (1சாமு 16:23).

தாவீது சவுலுக்கு முன்பாக சுரமண்டலத்தை வாசிக்கிறார். பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள் என்னும் செய்தியை தாவீது சவுலுக்கு சொல்லியிருக்கவேண்டும். சவுல் தனக்கு வரும் ஆபத்தை யோசித்துப் பார்த்து, பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தை பெலிஸ்தரின் கைக்கு பாதுகாக்கவேண்டும் என்னும் எண்ணம் சவுலின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

சவுல் இப்போது ஓரளவு தெளிந்த சிந்தனையிலிருக்கிறார். பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண சவுல் ஆயத்தமாயிருக்கிறார். சவுலும் இஸ்ரவேல் மனுஷரும் ஒருமித்துக் கூடி, ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கி, பெலிஸ்தருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள் (1சாமு 17:2).

நாம் சோம்பேறியாயிருந்தால், சாத்தான் நமக்குள்ளே சுறுசுறுப்பாய் கிரியை செய்வான். நம்முடைய மனதிலே துக்கமும், சோர்வும் நிரம்பியிருக்கும். நாம் ஏதாவது ஒரு வேலையில் சுறுசுறுப்பாய் ஈடுபட்டால், நாம் அந்த வேலையைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்போம். சாத்தானுக்கு இடங்கொடுக்கமாட்டோம். நமக்கு துக்கமும் சோகமும் வருமென்றால், நாம் ஏதாவது ஒருவேலையை சுறுசுறுப்பாய் செய்ய ஆரம்பிக்கவேண்டும். சோம்பேறித்தனமாயிராமல் சுறுசுறுப்பாயிருப்பதே, நம்முடைய துக்கத்திற்கு நல்ல மருந்து.

சவுலும் இஸ்ரவேல் மனுஷரும் பெலிஸ்தருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். சவுல் தன்னோடுகூட தாவீதை யுத்தக்களத்திற்கு அழைத்துக்கொண்டு போகவில்லை. சவுல் தாவீதை அவருடைய வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார்.

தாவீது தன்னுடைய வீட்டிற்குப்போய், ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார். தாவீது காரியசமர்த்தர். சவுந்தரியமுள்ளவர். சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறினவர். அவர் ராஜாவின் அரண்மனையிலே சவுலுக்கு முன்பாக சுரமண்டலத்தை வாசிக்கிற வைத்தியர். ஆனாலும் தாவீது தன்னுடைய தகப்பன் வீட்டிற்குப்போகும்போது, அங்கே அவருக்கு மதிப்போ மரியாதையோ கிடைக்கவில்லை. தன்னுடைய தகப்பனாரின் ஆடுகளை மேய்க்கும் வேலை அவருக்கு கொடுக்கப்படுகிறது. தாவீது தன் வீட்டிலே தாழ்த்தப்படுகிறார்.

பெலிஸ்தர் மத்தியிலே காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பெயருள்ள ஒரு வீரன் இருக்கிறான். இவன் இஸ்ரவேலின் சேனையிலுள்ள எல்லோரையும் கலங்கப்பண்ணுகிறான். கோலியாத்தை முன்னால் நிறுத்தி, இஸ்ரவேல் தேசம் முழுவதையும் பிடித்துக்கொள்ளலாம் என்று பெலிஸ்தர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் தாங்கள் இழந்துபோன மதிப்பையும் மரியாதையையும் திரும்பவும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பெலிஸ்தர் ஆசைப்படுகிறார்கள்.

இக்காலத்தில் இஸ்ரவேலரில் சேனையிலுள்ளவர்களின் எண்ணிக்கை, பெலிஸ்தரின் சேனையிலுள்ளவர்களைவிட அதிகமாயிருக்கிறது. பெலிஸ்தரைவிட இஸ்ரவேலரே பலம் மிகுந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாமல் இதுவரையிலும் தோற்றுப்போனார்கள்.

இப்போதோ அவர்களுக்கு கோலியாத் என்னும் வீரன் கிடைத்திருக்கிறான். இவனை முன்னால் நிறுத்தி, பெலிஸ்தர் இஸ்ரவேலரை பயமுறுத்துகிறார்கள். பெலிஸ்தர் அந்தப்பக்கத்தில் ஒரு மலையின்மேலும், இஸ்ரவேலர் இந்தப்பக்கத்தில் ஒரு மலையின்மேலும் நிற்கிறார்கள்; அவர்களுக்கு நடுவே பள்ளத்தாக்கு இருக்கிறது (1சாமு 17:3).

காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள ஒரு வீரன் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து புறப்பட்டுவந்து நடுவே நிற்கிறான்; அவன் உயரம் ஆறுமுழமும் ஒரு ஜாணுமாம். அவன் தன் தலையின்மேல் வெண்கலச் சீராவைப் போட்டு, ஒரு போர்க்கவசம் தரித்துக்கொண்டிருக்கிறான்; அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் சேக்கலான வெண்கலமாயிருக்கிறது (1சாமு 17:4,5).

கோலியாத் தன் கால்களிலே வெண்கலக் கவசத்தையும் தன் தோள்களின்மேல் வெண்கலக் கேடகத்தையும் தரித்திருப்பான். அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுக்காரரின் படைமரத்தின் கனதியும் அவன் ஈட்டியின் அலகு அறுநூறுசேக்கல் இரும்புமாயிருக்கும்; பரிசைபிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான் (1சாமு 17:6,7).

கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறவர்கள் எல்லோருமே, அவனுடைய கால் உயரத்திற்குத்தான் இருப்பார்கள். அவர்கள் கோலியாத்தின் கால்களை தாக்குவதற்கு முயற்சிபண்ணுவார்கள். ஆகையினால் கோலியாத் தன் கால்களிலே வெண்கல கவசத்தை மாட்டியிருக்கிறான். கால்களுக்கு அதிகமான பாதுகாப்பு கொடுக்கிறான்.

கோலியாத் தன்னுடைய பரிசையைப் பிடித்துக்கொண்டு போகமாட்டான். அதற்கென்று ஒருவனை நியமித்திருக்கிறான். இது பெலிஸ்தரின் பாளயத்திலே கோலியாத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிற விசேஷித்த அந்தஸ்திற்கு அடையாளம். கோலியாத்திற்கு பரிசை தேவையில்லை. அவனுடைய கால்களில் வெண்கல கவசமும், அவனுடைய தோள்களின்மேல் வெண்கல கேடகமும் தரிக்கப்பட்டிருக்கிறது. கோலியாத் வெண்கலத்திற்குள்ளே புகுந்துகொண்டு தன்னைப் பாதுகாத்துக்கொள்கிறான்.

பெலிஸ்தர் கோலியாத்தை தங்கள் சேனையிலே மாவீரனாய்த் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினால், பெலிஸ்தருக்குத்தான் அதிகமான உயிர்ச்சேதமுண்டாகும். ஆகையினால் பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணுவதை தவிர்க்கிறார்கள். அவர்கள் தினந்தோறும் காலையிலும் மாலையிலும், கோலியாத்தை இஸ்ரவேலரின் சேனைக்கு முன்பாக அனுப்புகிறார்கள்.

அவன் வந்துநின்று, இஸ்ரவேல் சேனைகளைப் பார்த்துச் சத்தமிட்டு, "நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறது என்ன? நான் பெலிஸ்தன் அல்லவா? நீங்கள் சவுலின் சேவகர் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்து கொள்ளுங்கள், அவன் என்னிடத்தில் வரட்டும். அவன் என்னோடே யுத்தம்பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம்; நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால், நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து, எங்களைச் சேவிக்கவேண்டும்" என்று சொல்லுவான். (1சாமு 17:8,9).

பின்னும் அந்தப் பெலிஸ்தன்: "நான் இன்றையதினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்; நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம்பண்ண ஒருவனை விடுங்கள்" (1சாமு 17:10) என்று சொல்லிக்கொண்டுவருவான்.

பெலிஸ்தர் அந்தப்பக்கத்தில் ஒரு மலையின்மேலும், இஸ்ரவேலர் இந்தப்பக்கத்தில் ஒரு மலையின்மேலும் நிற்கிறார்கள்; அவர்களுக்கு நடுவே பள்ளத்தாக்கு இருக்கிறது. கோலியாத் இந்தப் பள்ளத்தாக்குக்கு வருவான். கோலியாத்தின் தொனி மிகவும் பெரிதாயிருக்கும். இஸ்ரவேலின் பாளயத்திலுள்ளவர்கள் எல்லோரும் கேட்கும் வண்ணமாக கோலியாத் சத்தத்தை உயர்த்திப்பேசுவான். "நாம் ஒருவரோடொருவர் யுத்தம்பண்ண ஒருவனை விடுங்கள்" என்று சொல்லுவான்.

கோலியாத் இஸ்ரவேலர்களை ஏளனமாய்ப் பார்ப்பான். அவர்களை நிந்திப்பான். தூஷிப்பான். "நான் இன்றையதினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்" என்று வெளிப்படையாகவே சொல்லுவான். கோலியாத் மிகவும் துணிகரமாகப் பேசுகிறான்.

சவுலும் இஸ்ரவேல் மனுஷரும் ஒருமித்துகூடி ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேலர் ஒருமித்து கூடியிருப்பது அவர்களுடைய மதியீனம் என்று கோலியாத் சொல்லுகிறான். "நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறது என்ன" என்று கேட்பான். "நீங்கள் ஒருவனைத் தெரிந்துகொள்ளுங்கள், அவன் என்னிடத்தில் வரட்டும்" என்று கோலியாத் இஸ்ரவேலரிடம் சொல்லுவான்.

இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் மொத்தமாக யுத்தம்பண்ண வேண்டியதில்லை. இஸ்ரவேலரில் ஒருவன் மாத்திரம் தன்னோடு யுத்தம்பண்ண வரட்டும் என்று கோலியாத் சொல்லுகிறான். இஸ்ரவேலரில் ஒருவன் கோலியாத்தைக் கொன்றுபோட்டால், பெலிஸ்தர் எல்லோரும் இஸ்ரவேலருக்கு வேலைக்காரராயிருப்பார்கள் என்றும் கோலியாத் சொல்லுகிறான். கோலியாத் தன்னோடு யுத்தம்பண்ணுகிற இஸ்ரவேலனை ஜெயித்து அவனைக் கொன்றுபோட்டால், இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு வேலைக்காரராயிருக்க வேண்டும். இதுவே கோலியாத்தின் திட்டம்.

கோலியாத் தன்னைத்தானே பெருமையாகப் பேசுகிறான். கல்தேயருடைய பாரம்பரிய கதைகளில், இந்தக் கோலியாத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்கும் யுத்தம்நடைபெற்றது. அப்போது பெலிஸ்தர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். யுத்தம் நடைபெற்றபோது, ஒப்னி, பினெகாஸ் ஆகிய இரண்டு பேரையும் கோலியாத் கொன்றுபோட்டு, கர்த்தருடைய பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான் என்று கல்தேயருடைய பாரம்பரியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயப்படுகிறார்கள் (1சாமு 17:11). இஸ்ரவேல் ஜனங்களோடு சேர்ந்து சவுலும் பயப்படுகிறார். சவுல் கலங்கி பயப்படுவதைப் பார்த்து, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருமே கலங்கி பயப்படுகிறார்கள். தலைவர் கோழையாகயிருந்தால், அவரைப் பின்பற்றுகிறவர்களும் கோழைகளாகயிருப்பார்கள்.

யுத்தம் நடைபெறும்போது, படைத்தளபதி சோர்ந்துபோனாலும், படைவீரர்கள் உற்சாகமாயிருக்கவேண்டும். அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக வீரத்தோடு யுத்தம்பண்ணவேண்டும். இஸ்ரவேலருடைய சேனையில் இப்போது யோனத்தானும் இருந்திருக்கவேண்டும். கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு இஸ்ரவேலர் எல்லேரும் கலங்கி பயப்படும்போது, யோனத்தானும் கலங்கி பயந்து சும்மாயிருக்கிறான். கர்த்தர் கோலியாத்தைக் கொல்லும் சிலாக்கியத்தை தாவீதுக்கு கொடுத்திருக்கிறார்.

தாவீது
1சாமு 17:12-30

1சாமு 17:12. தாவீது என்பவன் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஈசாய் என்னும் பேருள்ள எப்பிராத்திய மனுஷனுடைய குமாரனாயிருந்தான்; ஈசாயுக்கு எட்டுக் குமாரர் இருந்தார்கள்; இவன் சவுலின் நாட்களிலே மற்ற ஜனங்களுக்குள்ளே வயதுசென்ற கிழவனாய் மதிக்கப்பட்டான்.

1சாமு 17:13. ஈசாயினுடைய மூன்று மூத்த குமாரர் சவுலோடேகூட யுத்தத்திற்குப் போயிருந்தார்கள்; யுத்தத்திற்குப் போயிருந்த அவனுடைய மூன்று குமாரரில் மூத்தவனுக்கு எலியாப் என்றும், இரண்டாங்குமாரனுக்கு அபினதாப் என்றும், மூன்றாங்குமாரனுக்குச் சம்மா என்றும் பேர்.

1சாமு 17:14. தாவீது எல்லாருக்கும் இளையவன்; மூத்தவர்களாகிய அந்த மூன்றுபேரும் சவுலோடேகூடப் போயிருந்தார்கள்.

1சாமு 17:15. தாவீது சவுலைவிட்டுத் திரும்பிப்போய் பெத்லெகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்.

1சாமு 17:16. அந்தப் பெலிஸ்தன் காலையிலும் மாலையிலும் நாற்பதுநாள் வந்துவந்து நிற்பான்.

1சாமு 17:17. ஈசாய் தன் குமாரனாகிய தாவீதை நோக்கி: உன் சகோதரருக்கு இந்த ஒரு மரக்கால் வறுத்த பயற்றையும், இந்தப் பத்து அப்பங்களையும் எடுத்துக்கொண்டு, பாளயத்திலிருக்கிற உன் சகோதரரிடத்தில் ஓட்டமாய்ப் போய்,

1சாமு 17:18. இந்தப் பத்துப் பால்கட்டிகளை ஆயிரம்பேருக்கு அதிபதியானவனிடத்தில் கொடுத்து, உன் சகோதரர் சுகமாயிருக்கிறார்களா என்று விசாரித்து, அவர்களிடத்தில் அடையாளம் வாங்கிக்கொண்டுவா என்றான்.

1சாமு 17:19. அப்பொழுது சவுலும், அவர்களும் இஸ்ரவேலர் எல்லாரும், ஏலா பள்ளத்தாக்கிலே பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

1சாமு 17:20. தாவீது அதிகாலையில் எழுந்து, ஆடுகளைக் காவலாளி வசமாய் விட்டு, ஈசாய் தனக்குக் கற்பித்தபடியே எடுத்துக்கொண்டுபோய், இரதங்கள் இருக்கிற இடத்திலே வந்தான்; சேனைகள் அணிவகுத்து நின்று, யுத்தத்திற்கென்று ஆர்ப்பரித்தார்கள்.

1சாமு 17:21. இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் ஒருவருக்கு எதிராக ஒருவர் அணிவகுத்துக் கொண்டிருந்தார்கள்.

1சாமு 17:22. அப்பொழுது தாவீது: தான் கொண்டுவந்தவைகளை இறக்கி, ரஸ்துக்களைக் காக்கிறவன் வசமாக வைத்து விட்டு, சேனைக்குள் ஓடி, தன் சகோதரரைப் பார்த்து: சுகமாயிருக்கிறீர்களா என்று கேட்டான்.

1சாமு 17:23. அவன் இவர்களோடே பேசிக்கொண்டிருக்கையில், இதோ, காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள அந்தப் பெலிஸ்த வீரன் பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து எழும்பிவந்து நின்று, முன் சொன்ன வார்த்தைகளையே சொன்னான்; அதைத் தாவீது கேட்டான்.

1சாமு 17:24. இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள்.

1சாமு 17:25. அந்நேரத்திலே இஸ்ரவேலர்: வந்து நிற்கிற அந்த மனுஷனைக் கண்டீர்களா, இஸ்ரவேலை நிந்திக்க வந்து நிற்கிறான்; இவனைக் கொல்லுகிறவன் எவனோ, அவனை ராஜா மிகவும் ஐசுவரியவானாக்கி, அவனுக்குத் தம்முடைய குமாரத்தியைத் தந்து, அவன் தகப்பன் வீட்டாருக்கு இஸ்ரவேலிலே சர்வமானியம் கொடுப்பார் என்றார்கள்.

1சாமு 17:26. அப்பொழுது தாவீது தன்னண்டையிலே நிற்கிறவர்களைப் பார்த்து, இந்தப் பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும்; ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான்.

1சாமு 17:27. அதற்கு ஜனங்கள்: அவனைக் கொல்லுகிறவனுக்கு இன்ன இன்னபடி செய்யப்படும் என்று முன் சொன்ன வார்த்தைகளையே அவனுக்குச் சொன்னார்கள்.

1சாமு 17:28. அந்த மனுஷரோடே அவன் பேசிக்கொண்டிருக்கிறதை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யூத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்றான்.

1சாமு 17:29. அதற்குத் தாவீது: நான் இப்பொழுது செய்தது என்ன? நான் வந்ததற்கு முகாந்தரம் இல்லையா என்று சொல்லி,

1சாமு 17:30. அவனை விட்டு, வேறொருவனிடத்தில் திரும்பி, அந்தப்பிரகாரமாகவே கேட்டான்; ஜனங்கள் முன்போலவே உத்தரவு சொன்னார்கள்.

இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் நாற்பது நாட்களாக, ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள். இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் அவ்வப்போது சிறிய தாக்குதல்களை நடத்தியிருப்பார்கள். இந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கோலியாத் காலையிலும் மாலையிலும் நாற்பதுநாள் வந்துவந்து நிற்பான் (1சாமு 17:16).

கோலியாத் ஒவ்வொரு நாளும் வந்து நின்று, இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து சத்தமிடுவான். தான் ஒவ்வொரு நாளும் சொல்லுகிற வார்த்தைகளை, காலையிலும் மாலையிலும், நாற்பது நாட்களாக சொல்லிக்கொண்டு வருகிறான். இந்த நாற்பது நாட்களாக தாவீது தன்னுடைய தகப்பனின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்.

நாற்பது நாட்கள் முடியும்போது கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலினால், தாவீது இஸ்ரவேல் மனுஷர் பாளயமிறங்கியிருக்கிற ஏலா பள்ளத்தாக்குக்குப்போகிறார். இஸ்ரவேலர் எல்லோரும் இந்த நாற்பது நாளாக கோலியாத்தைப் பார்த்து பயப்படுகிறார்கள். அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு மிகவும் கலங்குகிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் தாவீதின் குடும்பத்தாரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது என்பவர் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஈசாய் என்னும் பேருள்ள எப்பிராத்திய மனுஷனுடைய குமாரனாயிருக்கிறார்; ஈசாய்க்கு எட்டுக் குமாரர் இருக்கிறார்கள்; ஈசாய் சவுலின் நாட்களிலே மற்ற ஜனங்களுக்குள்ளே வயதுசென்ற கிழவனாய் மதிக்கப்பட்டவர் (1சாமு 17:12).

ஈசாயினுடைய மூன்று மூத்த குமாரர் சவுலோடேகூட யுத்தத்திற்குப் போயிருக்கிறார்கள்; யுத்தத்திற்குப் போயிருந்த அவருடைய மூன்று குமாரரில் மூத்தவனுக்கு எலியாப் என்றும், இரண்டாங்குமாரனுக்கு அபினதாப் என்றும், மூன்றாங்குமாரனுக்குச் சம்மா என்றும் பேர். தாவீது எல்லாருக்கும் இளையவன்; மூத்தவர்களாகிய அந்த மூன்றுபேரும் சவுலோடேகூடப் போயிருக்கிறார்கள் (1சாமு 17:13,14).

தாவீது இதுவரையிலும் தன் தகப்பனாருடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலினால், தாவீதுக்கு சவுலின் அரண்மனையில் உத்தியோகம் கிடைத்திருக்கிறது. கர்த்தரால் விடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி சவுலைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருக்கிறது.

அந்த ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து தன் கையினால் வாசிக்கவேண்டும். அதினாலே பொல்லாத ஆவி சவுலைவிட்டு நீங்கும். சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமாவார். இதுவே தாவீதின் அரண்மனை உத்தியோகம். இது சாதாரண உத்தியோகம் தான். ஆனாலும் தாவீதின் மூத்த சகோதரர் மூன்றுபேரும், தாவீது அரண்மனையில் உத்தியோகம் பார்ப்பதினால் அவர்மீது பொறாமைப்படுகிறார்கள்.

ஈசாயின் மூன்று மூத்த குமாரரும் சவுலோடேகூட யுத்தத்திற்குப்போகிறார்கள். இதனால் தாவீது சவுலின் அரண்மனையிலிருந்து தன் தகப்பனுடைய ஊருக்கு திரும்பி வரவேண்டியதாயிற்று. ஊரிலே ஈசாயின் ஆடுகளை மேய்க்க பொறுப்பான ஆள் வேண்டும். தாவீதை விட்டால் அவர்களுக்கு வேறு பொறுப்பான ஆள் யாருமில்லை. தாவீது சவுலைவிட்டுத் திரும்பிப்போய் பெத்லெகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார் (1சாமு 17:15).

தாவீதின் மூத்த சகோதரர் மூன்றுபேரும், தாவீதின் மதிப்பையும் மரியாதையையும் குறைக்கவேண்டுமென்று திட்டமிடுகிறார்கள். அவர்கள் எதிர்பார்த்த பிரகாரம், தாவீது மறுபடியும் ஆடுகளை மேய்க்கப்போகிறார்.

தாவீது தானாகவே தன் தகப்பனுடைய ஊருக்கு வந்து, அவருடைய ஆடுகளை மேய்ப்பதற்கு போயிருக்கவேண்டும். ஆடு மேய்க்கும் வேலையை தாவீது கேவலமாக நினைக்கவில்லை. அதை ஒரு தாழ்மையான உத்தியோகம் என்றும் சொல்லவில்லை. தாவீது தன் வேலையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். அது ஆடுகளை மேய்க்கும் வேலையாகயிருந்தாலும் அல்லது சவுலின் அரண்மனை உத்தியோகமாகயிருந்தாலும், தாவீது தன்னுடைய வேலையை உண்மையாய்ச் செய்கிறார்.

தாவீது தன்னுடைய வேலையைப்பற்றி ஒரு சமயம் சவுலுக்கு சொல்லுகிறார். தாவீது சவுலைப்பார்த்து: "உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்" (1சாமு 17:34-36) என்று சொல்லுகிறார்.

தாவீது கடினமாய் உழைக்கக்கூடியவர். எந்த ஆபத்துக்களையும் எதிர்த்து நிற்கும் வீரமுள்ளவர். தாவீது ஒரு பராக்கிரமசாலி. அவர் ஒரு யுத்தவீரர். தாவீது காரியசமர்த்தர்.

தாவீது பெத்லெகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது ஒருநாள், ஈசாய் தன் குமாரனாகிய தாவீதை நோக்கி: "உன் சகோதரருக்கு இந்த ஒரு மரக்கால் வறுத்த பயற்றையும், இந்தப் பத்து அப்பங்களையும் எடுத்துக்கொண்டு, பாளயத்திலிருக்கிற உன் சகோதரரிடத்தில் ஓட்டமாய்ப் போய், இந்தப் பத்துப் பால்கட்டிகளை ஆயிரம்பேருக்கு அதிபதியானவனிடத்தில் கொடுத்து, உன் சகோதரர் சுகமாயிருக்கிறார்களா என்று விசாரித்து, அவர்களிடத்தில் அடையாளம் வாங்கிக்கொண்டுவா" (1சாமு 17:17,18) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் மனுஷர் ஒருமித்துகூடி ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கி யிருக்கிறார்கள். அங்கே அவர்கள் பெலிஸ்தருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள். இஸ்ரவேலரின் பாளயத்தில் தாவீதின் மூன்று மூத்த சகோதரரும் இருக்கிறார்கள். தாவீது பாளயத்திலிருக்கிற தன் சகோதரருக்கு போஜனங்களை எடுத்துக்கொண்டு போகவேண்டும். இது தாவீதின் தகப்பனாராகிய ஈசாய், அவருக்கு கொடுத்த கட்டளை. ஆயிரம்பேருக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு பத்து பால்கட்டிகளையும் எடுத்துக்கொண்டு போகவேண்டும்.

தாவீது தன்னுடைய வீட்டில் இன்னும் சிறுபிள்ளையாகவே இருக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்திறங்கியிருக்கிறார். சாமுவேல் தாவீதை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். ஆனால் தாவீதின் தகப்பனாரோ, அவரை பொதிசுமக்கிற கழுதையைப்போல பயன்படுத்துகிறார். தாவீது பாளயத்திற்கு மெதுவாக நடந்துபோகக்கூடாது. "உன் சகோதரரிடத்திற்கு ஓட்டமாய்ப்போக வேண்டும்" என்று ஈசாய் தாவீதுக்கு கட்டளை கொடுக்கிறார்.

தாவீது தன் சகோதரர் சுகமாயிருக்கிறார்களா என்பதையும் விசாரிக்கவேண்டும். பாளயத்திலே யுத்த வீரர்களுக்கு நல்ல போஜனம் கொடுப்பார்கள். ஒருவேளை சவுலின் சேனையிலுள்ள வர்களுக்கு போதுமான அளவு போஜனம் கொடுக்கப்படாமலிருக்கலாம். ஆகையினால் தன் பிள்ளைகள் சுகமாயிருக்கிறார்களா என்னும் சந்தேகம் ஈசாய்க்கு வந்திருக்கிறது.

ஈசாய் தாவீதிடத்தில் வறுத்த பயற்றையும், அப்பங்களையும், பால்கட்டிகளையும் கொடுத்தனுப்பினாலும், தாவீது இந்த வேலையை ஒழுங்காய்ச் செய்வாரா என்னும் நம்பிக்கை ஈசாய்க்கு இருந்ததாக தெரியவில்லை. தாவீது இந்தப் போஜனங்களையெல்லாம், அவருடைய சகோதரருக்கும் ஆயிரம்பேருக்கு அதிபதியானவனுக்கும் கொடுப்பாரா, அல்லது போகும் வழியில் தானே புசித்துவிடுவாரா என்னும் சந்தேகம் ஈசாய்க்கு வந்திருக்கலாம். ஆகையினால் அவர் "இந்தப் போஜனங்களை கொடுத்துவிட்டு, அவர்களிடத்தில் அடையாளம் வாங்கிக்கொண்டு வா" என்றும் தாவீதிடம் சொல்லுகிறார்.

தாவீது தன் தகப்பனாருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். தாவீது அதிகாலையில் எழுந்து, ஆடுகளைக் காவலாளி வசமாய் விட்டு, ஈசாய் தனக்குக் கற்பித்தபடியே எடுத்துக்கொண்டுபோய், இரதங்கள் இருக்கிற இடத்திலே வருகிறார்; அப்பொழுது சவுலும், அவர்களும் இஸ்ரவேலர் எல்லாரும், ஏலா பள்ளத்தாக்கிலே பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சேனைகள் அணிவகுத்து நின்று, யுத்தத்திற்கென்று ஆர்ப்பரித்தார்கள் (1சாமு 17:19,20).

கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாக தாவீது இஸ்ரவேலரின் பாளத்திற்குப்போகிறார். அதுவும் கர்த்தருக்கு சித்தமான வேளையிலே அங்கு போகிறார். இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் ஒருவருக்கு எதிராக ஒருவர் அணிவகுத்துக் கொண்டிருக்கிறார்கள் (1சாமு 17:21). அவர்கள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள்.

தாவீது பெத்லெகேமிலிருந்து ஏலா பள்ளத்தாக்குக்கு ஓடி வந்திருக்கிறார். நீண்ட தூரத்தை வேகமாக கடந்து வந்திருக்கிறார். அவருடைய முதுகில் பெரிய பாரம் சுமத்தப்பட்டிருக்கிறது. தாவீது வழியிலே சோர்ந்துபோகவில்லை. அவர் இஸ்ரவேலின் பாளயத்தில் இரதங்கள் இருக்கிற இடத்திலே வருகிறார்.

அப்பொழுது தாவீது: தான் கொண்டுவந்தவைகளை இறக்கி, ரஸ்துக்களைக் காக்கிறவன் வசமாக வைத்து விட்டு, சேனைக்குள் ஓடி, தன் சகோதரரைப் பார்த்து: "சுகமாயிருக்கிறீர்களா" என்று கேட்கிறார் (1சாமு 17:22). தாவீது இவர்களோடே பேசிக்கொண்டிருக்கையில், இதோ, காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள அந்தப் பெலிஸ்த வீரன் பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து எழும்பிவந்து நின்று, முன் சொன்ன வார்த்தைகளையே சொல்லுகிறான்; அதைத் தாவீது கேட்கிறார் (1சாமு 17:22,23).

தாவீது தன் சகோதரருக்கு மதிப்பு கொடுக்கிறார். பெலிஸ்தர்களின் சேனையிலே யுத்தவீரர்களின் எண்ணிக்கை குறைவாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண அணிவகுத்து நிற்கிறார்கள். பெலிஸ்தர் கோலியாத்தையும், அவனுடைய உருவத்தையும், அவனுடைய வார்த்தைகளையும் நம்புகிறார்கள்.

இஸ்ரவேலர் எல்லாரும் கோலியாத்தைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போகிறார்கள் (1சாமு 17:24). இஸ்ரவேலரின் இருதயம் சோர்ந்துபோயிருக்கிறது. கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண இஸ்ரவேலரில் ஒருவரும் ஆயத்தமாயில்லை. சவுலும் கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகவில்லை. சவுலின் குமாரனாகிய யோனத்தானும் கோலியாத்தை எதிர்க்கவில்லை.

சவுல் கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ணி, அவனைக் கொன்றுபோட ஒரு யோசனை பண்ணுகிறார். கோலியாத்தைக் கொன்றுபோடுகிறவனுக்கு பெரிய வெகுமதி கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இந்தச் செய்தியை சவுல் இஸ்ரவேலின் பாளயத்திலுள்ள எல்லோருக்கும் அறிவிக்கிறார்.

அந்நேரத்திலே இஸ்ரவேலர்: "வந்து நிற்கிற அந்த மனுஷனைக் கண்டீர்களா, இஸ்ரவேலை நிந்திக்க வந்து நிற்கிறான்; இவனைக் கொல்லுகிறவன் எவனோ, அவனை ராஜா மிகவும் ஐசுவரியவானாக்கி, அவனுக்குத் தம்முடைய குமாரத்தியைத் தந்து, அவன் தகப்பன் வீட்டாருக்கு இஸ்ரவேலிலே சர்வமானியம் கொடுப்பார்" (1சாமு 17:25) என்று சொல்லுகிறார்கள்.

கோலியாத் இஸ்ரவேலின் சேனையைத் தூஷித்ததையும், சவுலின் வார்த்தைகளை இஸ்ரவேலர் அறிவித்ததையும் தாவீது கேட்கிறார். தாவீதின் இருதயத்திலே இஸ்ரவேலின் தேவனைக் குறித்து பக்தி வைராக்கியமுண்டாயிற்று. கோலியாத் இஸ்ரவேலையும், இஸ்ரவேலின் தேவனையும் நிந்திக்கிறான்.

தாவீதின் இருதயத்திலே கர்த்தரைக் குறித்து பக்திவைராக்கியமுண்டாயிற்று. இஸ்ரவேலின் சேனையை நிந்திக்கிறவன் ஒரு பெலிஸ்தன். அவன் விருத்தசேதனமில்லாதவன். பெலிஸ்தன் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். கர்த்தர் பெலிஸ்தரோடு உடன்படிக்கை பண்ணவில்லை. ஆனால் விருத்தசேதனமில்லாத பெலிஸ்தன், கர்த்தருடைய சேனையை நிந்திப்பதைப் பார்த்து, தாவீதின் இருதயத்தில், கர்த்தரைக் குறித்த பக்தி வைராக்கியமுண்டாயிற்று.

கோலியாத் ஜீவனுள்ள தேவனுடைய சேனையைத் தூஷிக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிள்ளைகள். கர்த்தரே தம்முடைய ஜனத்தை பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே பயன்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்காக யுத்தம்பண்ணுகிறார்கள். கோலியாத் இஸ்ரவேலின் சேனையை நிந்தித்தாலும், அவன் இஸ்ரவேலருடைய தேவனாகிய கர்த்தரையே நிந்திக்கிறான். ஒரு பெலிஸ்தன், ஜீவனுள்ள கர்த்தரை நிந்திப்பதை கேட்கும்போது, தாவீதின் இருதயத்திலே, கர்த்தரைக் குறித்து பக்திவைராக்கியமுண்டாயிற்று. இந்த சூழ்நிலையில், சவுல் இஸ்ரவேலிலே சன்மானியம் கொடுப்பார் என்னும் செய்தியும் அறிவிக்கப்படுகிறது.

தாவீது அந்த சன்மானியத்தைப்பற்றி மறுபடியும் தெளிவுபடுத்திக்கொள்கிறார். அப்பொழுது தாவீது தன்னண்டையிலே நிற்கிறவர்களைப் பார்த்து, "இந்தப் பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும்; ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்" (1சாமு 17:26) என்று கேட்கிறார். அதற்கு ஜனங்கள், கோலியாத்தைக் கொல்லுகிறவனுக்கு இன்ன இன்னபடி செய்யப்படும் என்று முன் சொன்ன வார்த்தைகளையே தாவீதுக்குச் சொல்லுகிறார்கள் (1சாமு 17:27).

தாவீதின் மூத்த சகோதரனாகிய எலியாப், தாவீதின்மீது பொறாமைப்படுகிறான். தாவீது கர்த்தருக்குள் பக்திவைராக்கியமாயிருக்கிறார். கோலியாத் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திப்பதை தாவீது விரும்பவில்லை. கோலியாத்திற்கு விரோதமாக தானே எதிர்த்து நின்று யுத்தம்பண்ணவேண்டும் என்று தாவீது தீர்மானமாயிருக்கிறார். ஆனால் தாவீதை அவருடைய மூத்த சகோதரன் எலியாப் உற்சாகப்படுத்தவில்லை.

ஈசாயின் குமாரரில் எலியாப் மூத்த குமாரன். தாவீது இளையகுமாரன். மூத்த குமாரன் இளையகுமாரன்மீது பொறாமைப்படுகிறான். தாவீது கோலியாத்திற்கு விரோதமாக தைரியமாய்ப் பேசுகிறார். தாவீது வீரமாய்ப் பேசுவது எலியாபுக்கு பிடிக்கவில்லை. கோலியாத்திற்கு விரோதமாக எலியாபே பேசாமல் அமைதியாயிருக்கிறான். தாவீது பேசுகிற வார்த்தைகளை பேசுவதற்கு, எலியாபுக்கு துணிச்சலோ, தைரியமோ இல்லை.

தாவீது கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ணி, கோலியாத்தைக் கொன்றுபோடுவது எலியாபுக்கு பிடிக்கவில்லை. தாவீது கோலியாத்தைக் கொன்றுபோடுவதற்கு பதிலாக, கோலியாத் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் கொன்றுபோட்டாலும் பரவாயில்லை என்று எலியாப் நினைக்கிறான். இஸ்ரவேல் தேசம் அழிந்தாலும், தன்னுடைய இளைய சகோதரனாகிய தாவீது ஜெயிக்கக்கூடாது என்பது எலியாபின் விருப்பம்.

எலியாபின் பார்வையில் தாவீது சிறு பையனாகத் தெரிகிறார். தாவீது வீண் பெருமை பேசுகிறார் என்றும், தாவீதுக்கு ஒன்றும் தெரியாது என்றும், ஆடுகளை மேய்ப்பதுதான் தாவீதின் வேலை என்றும், யுத்தக்களத்திலே தாவீதுக்கு ஒரு வேலையும் இல்லை என்றும் எலியாப் நினைக்கிறான். தாவீது இஸ்ரவேல் ஜனங்களிடம் கோலியாத்திற்கு விரோதமாகப் பேசினதும், இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதுக்கு சவுல் சொன்ன சன்மானங்களைப் பற்றிப்பேசினதும் எலியாபுக்கு பிடிக்கவில்லை.

இஸ்ரவேல் மனுஷரோடே தாவீது பேசிக்கொண்டிருக்கிறதை அவருடைய மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: "நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன்" (1சாமு 17:28) என்று சொல்லுகிறார்.

எலியாப் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், தன் சகோதரன் தாவீதைப்பற்றி தரைக்குறைவாகப் பேசுகிறான். தாவீது ஆடுகளை மேய்க்கிற ஒரு சாதாரண சிறுவன் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதே எலியாபின் விருப்பம். தாவீதுக்கு தன்னுடைய ஆடுகளைக்கூட ஒழுங்காய் மேய்க்கத்தெரியாது என்று எலியாப் தாவீதுக்கு விரோதமாய்த் தூஷண வார்த்தைகளைச் சொல்லுகிறான். தாவீது கோலியாத்தின் வார்த்தைகளையும், இஸ்ரவேல் ஜனங்களின் வார்த்தைகளையும் கேட்டதுபோல, இப்போது தன் மூத்த சகோதரன் எலியாபின் வார்த்தைகளையும் கேட்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் கர்த்தருக்காக ஒரு சில காரியங்களை செய்யவேண்டுமென்று சிந்திக்கும்போதும், தீர்மானிக்கும்போதும், எலியாபைப்போல ஒரு சிலர் நமக்கு விரோதமாகப் பேசுவார்கள். இப்படிப்பட்ட பேச்சுக்களை நம்மால் தவிர்க்க முடியாது. இந்த சூழ்நிலைகளில், நமக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நமக்கு ஆதரவாயிருக்கிற கர்த்தருக்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும்.

தன்னுடைய சகோதரன் தனக்கு விரோதமாக ஏளனவார்த்தைகளையும், தூஷணவார்த்தைகளையும் பேசினாலும், தாவீது மனத்தாழ்மையோடும், பொறுமையோடும் இருக்கிறார். தாவீதின் பக்திவைராக்கியம் குறைந்துபோகவில்லை. தாவீதின் தீர்மானம் உறுதியாயிருக்கிறது. தாவீதுக்கு இப்போது அவருடைய மூத்த சகோதரன் மூலமாய் சிறிய சோதனை வந்திருக்கிறது. இந்த சோதனையை தாவீது மேற்கொள்ளவேண்டும். தாவீது தன்னுடைய நல்ல சுபாவங்களை வெளிப்படுத்தி, அதை உறுதிபண்ணவேண்டும்.

தாவீது, தனக்கு விரோதமாகப் பேசும் தன்னுடைய மூத்த சகோதரனை நோக்கி, "நான் இப்பொழுது செய்தது என்ன? நான் வந்ததற்கு முகாந்தரம் இல்லையா" (1சாமு 17:29) என்று கேட்கிறார். தாவீதின் பக்கத்தில் நியாயமான முகாந்தரம் இருக்கிறது. அது தாவீதுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையினால் தாவீது தன் மூத்த சகோதரன்மேல் கோபப்படாமல், அவனுக்கு மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். தன் சகோதரனுடைய கோபத்தை அகற்றிப்போடுகிறார்.

தாவீது அவசரப்படவில்லை. கோபப்படவில்லை. அவர் நீடியபொறுமையோடிருக்கிறார். கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி ஜெயிப்பதைவிட, தன்னுடைய மூத்த சகோதரனின் ஏளனவார்த்தைகளையும், தூஷணவார்த்தைகளையும் கேட்டு, தன்னுடைய பொறுமையைக் காத்துக்கொள்வதே, தாவீதுக்கு கிடைத்த உண்மையான வெற்றியாகும். சோதனைகளை சகித்துக்கொள்கிற மனுஷன் பாக்கியவான்.

தாவீதின் சகோதரன், அவருக்கு விரோதமாக ஏளனமான வார்த்தைகளைப் பேசினாலும், தாவீது தன்னுடைய மனதிலே சோர்ந்துபோகவில்லை. கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும் என்னும் தீர்மானத்திலிருந்து தாவீது பின்வாங்கவில்லை. தாவீதின் தீர்மானம் உறுதியாயிருக்கிறது. தன்னுடைய மூத்த சகோதரனின் ஏளனவார்த்தைகளினாலும், அவனுடைய பொறாமையான குணத்தினாலும், தாவீதின் மனதிலே ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை. கோலியாத்தை அழிக்கவேண்டும் என்பதில் தாவீது உறுதியாயிருக்கிறார்.

தாவீதின் மூத்த சகோதரனாகிய எலியாப், தாவீதுக்கு விரோதமாக ஏளனவார்த்தைகளைப் பேசும்போது, தாவீது அவனுக்கு சுருக்கமான பிரதியுத்தரம் சொல்லுகிறார். தாவீது தன் சகோதரனோடு அதிகநேரம் பேசி, தன்னுடைய நேரத்தை வீணாக்கவில்லை. தாவீது ஒரு சில வார்த்தைகளை மாத்திரம் தன் சகோதரனோடு பேசிவிட்டு, அவனைவிட்டு, வேறொருவனிடத்தில் திரும்புகிறார். நமக்கு பிரச்சனைகளைக் கொடுப்பவர்களையே பார்த்துக்கொண்டிருந்தால், நம்முடைய மனதிலே சோர்வு உண்டாகும். நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும்.

தாவீது தன் மூத்த சகோதரனிடம் அதிகநேரம் பேசி விவாதம்பண்ணாமல், வேறொருவனிடத்தில் திரும்பி, "இந்தப் பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும்" என்று ஏற்கெனவே கேட்ட பிரகாரம், இப்போதும் கேட்கிறார். ஜனங்களும் முன்போலவே உத்தரவு சொல்லுகிறார்கள் (1சாமு 17:25,30).

தாவீதும் சவுலும் 1சாமு 17:31-39

1சாமு 17:31. தாவீது சொன்ன வார்த்தைகளை அவர்கள் கேட்டு, அதைச் சவுலின் சமுகத்தில் அறிவித்தார்கள்; அப்பொழுது அவன் அவனை அழைப்பித்தான்.

1சாமு 17:32. தாவீது சவுலை நோக்கி: இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்கவேண்டியதில்லை; உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன் என்றான்.

1சாமு 17:33. அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம்பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயதுமுதல் யுத்தவீரன் என்றான்.

1சாமு 17:34. தாவீது சவுலைப்பார்த்து: உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளைமேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது.

1சாமு 17:35. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன்.

1சாமு 17:36. அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப்போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான்.

1சாமு 17:37. பின்னும் தாவீது: என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்; அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து: போ, கர்த்தர் உன்னுடனேகூட இருப்பாராக என்றான்.

1சாமு 17:38. சவுல் தாவீதுக்குத் தன் வஸ்திரங்களை உடுத்துவித்து வெண்கலமான ஒரு சீராவை அவன் தலையின்மேல் போட்டு, ஒரு கவசத்தையும் அவனுக்குத் தரிப்பித்தான்.

1சாமு 17:39. அவனுடைய பட்டயத்தை தாவீது தன் வஸ்திரங்கள்மேல் கட்டிக்கொண்டு, அதிலே அவனுக்குப் பழக்கமில்லாததினால் நடந்துபார்த்தான்; அப்பொழுது தாவீது சவுலை நோக்கி: நான் இவைகளைப் போட்டுக்கொண்டு போகக்கூடாது; இந்த அப்பியாசம் எனக்கு இல்லை என்று சொல்லி, அவைகளைக் களைந்துபோட்டு,

கோலியாத் என்னும் பெலிஸ்தனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தாவீது தன்னை ஒப்புக்கொடுக்கிறார். இஸ்ரவேலர் எல்லோரும் கோலியாத்தைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறார்கள். ஆனால் தாவீதோ கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார். "ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்" (1சாமு 17:26) என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது சொன்ன வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனங்கள் கேட்டு, அதைச் சவுலின் சமுகத்தில் அறிவிக்கிறார்கள்; அப்பொழுது சவுல் தாவீதை அழைப்பிக்கிறார். தாவீது சவுலை நோக்கி: "இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை; உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன்" (1சாமு 17:31,32) என்று சொல்லுகிறார்.

தாவீது ஆடுகளை மேய்க்கிற சிறுவன். இன்று காலையில்தான், தாவீது பெத்லெகேமிலிருந்து, இஸ்ரவேலின் பாளயத்திற்கு ஓடி வந்திருக்கிறார். தாவீது இதுவரையிலும் எந்த யுத்தக்களத்திற்கும் போய், சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினதில்லை. ஆனாலும் தாவீது தைரியமுள்ளவராகவும், பராக்கிரமசாலியாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ள எல்லோரின் தைரியத்தை விடவும், தாவீதின் தைரியம் அதிகமாயிருக்கிறது. தாவீது இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். "கோலியாத்தினிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்கவேண்டியதில்லை" என்று தாவீது இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

சவுலின் பார்வையில் தாவீது சிறு பையனாகத் தெரிகிறார். கோலியாத்திற்கு விரோதமாய் சவுலால் யுத்தம்பண்ண முடியுமா என்னும் சந்தேகம் சவுலுக்கு உண்டாயிற்று. அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: "நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம்பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயதுமுதல் யுத்தவீரன்" (1சாமு 17:33) என்று சொல்லுகிறார்.

சவுல் தாவீதின் வெளித்தோற்றத்தை மாத்திரமே பார்க்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தாவீதை நிரப்பியிருக்கிறது. அது சவுலுக்கு தெரியவில்லை. உருவத்தைப் பார்க்கும்போது, கோலியாத் தாவீதைவிட, மிகவும் பெரியவனாயிருக்கிறான். சவுலின்சந்தேகத்தை தீர்த்து வைப்பது தாவீதுக்கு முதல் வேலையாயிருக்கிறது. தாவீது சவுலிடம், தன்னுடைய அனுபவங்களை சாட்சியாய்ச் சொல்லுகிறார்.

தாவீது சவுலைப்பார்த்து: "உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்" (1சாமு 17:34-36) என்று சொல்லுகிறார்.

சவுல் சொன்ன பிரகாரம் தாவீது ஒரு இளைஞன்தான். தாவீது இதுவரையிலும் எந்த யுத்தத்திலும் பங்கு பெற்றதில்லை. கோலியாத்தோ தன் சிறுவயது முதல் யுத்தவீரனாயிருக்கிறான். தாவீதுக்கு தேவனுடைய உதவியும் ஒத்தாசையும் கிடைத்திருக்கிறது. தாவீது ஏற்கெனவே ஒரு சிங்கத்தையும், ஒரு கரடியையும் கொன்றிருக்கிறார். இந்த சிங்கமும் கரடியும் தாவீதின் மந்தையிலுள்ள ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. தன்னுடைய கைவசத்தில் ஒப்புவிக்கப்பட்ட, அந்த ஆட்டை பாதுகாக்கவேண்டும் என்பதற்காக, தாவீது சிங்கத்தையும் கரடியையும் கொன்றுபோட்டார்.

தாவீதுக்கு தேவனுடைய உதவியும் ஒத்தாசையும் கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவரின் அபிஷேகம் தாவீதின்மேல் வந்திறங்கியிருக்கிறது. சேனைகளின் கர்த்தர் தாவீதை பலப்படுத்தியிருக்கிறார். அவர் தாவீதோடு கூடவே இருக்கிறார். தாவீதின் பார்வையில், கோலியாத் தன்னுடைய ஆட்டை பிடித்துக்கொண்ட, ஒரு சிங்கத்தைப்போலவும், ஒரு கரடியைப்போலவும் இருக்கிறான். தாவீது சவுலைப்பார்த்து, "விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப்போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே" (1சாமு 17:36) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் கோலியாத்தை மகாபராக்கிரமசாலியாகவும், மிகப்பெரிய யுத்தவீரனாகவும் பார்க்கிறார்கள். தாவீதோ அவனை விருத்தசேதனமில்லாத ஒரு பெலிஸ்தனாகப் பார்க்கிறார். தாவீது கோலியாத்தை, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தவனாகப் பார்க்கிறார். ஆகையினால் தாவீது சவுலிடத்தில், "உம்முடைய அடியானாகிய நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன்" (1சாமு 17:32) என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு யுத்தக்களத்திலே யுத்தம்பண்ணின அனுபவம் இல்லை. ஆனால் தன்னுடைய வசத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆடுகளைப் பாதுகாக்கும் அனுபவம் இருக்கிறது. அந்த ஆடுகளில் ஒன்றை பிடித்துக்கொண்ட சிங்கத்தையும் கரடியையும் கொன்றுபோட்ட அனுபவம் இருக்கிறது. தாவீதின் பார்வையிலே கோலியாத், கொல்லப்பட்ட ஒரு சிங்கத்தைப்போலவும், கரடியைப்போலவும் இருக்கிறான்.

தாவீது இந்த வார்த்தைகளையெல்லாம் சுயமாய்ப் பேசாமல் பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலினால் பேசுகிறார். தாவீது கர்த்தரை நம்புகிறார். தாவீது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது, அவர் அந்த ஆடுகளை, சாதாரண மிருகங்களாகப் பார்க்கவில்லை. அந்த ஆடுகளெல்லாம் தன்னுடைய பாதுகாப்பில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற மந்தையாகப் பார்க்கிறார். அந்த மந்தையை பாதுகாத்து பராமரிக்கவேண்டியது தாவீதின் கடமை.

தன்னிடத்தில் பொறுப்பாய் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற அந்த ஆடுகளில் ஒன்றுக்கு ஒரு தீங்கு வரும்போது, அந்த ஆட்டை காப்பாற்றுவதற்காக, தாவீது துணிந்து நிற்கிறார். தாவீது தன் ஆடுகளுக்கு நல்ல மேய்ப்பராயிருக்கிறார். ஒரு நல்ல ராஜாவுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள் தாவீதுக்கும் இருக்கிறது. ஒரு தேசத்தின் ராஜா, தன் தேசத்து ஜனங்களின் நன்மைகளையும், பாதுகாப்பையும் விசாரிக்க வேண்டும்.

"கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்; அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்" (சங் 72:12-14).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு தாவீது அடையாளமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மை நல்ல மேய்ப்பராக வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் தாவீதின் குமாரன்.

"மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசா 40:11).

நல்ல மேய்ப்பர் தம்முடைய ஆடுகளை சுமக்கிறவர் மாத்திரமல்ல, தம்முடைய ஆடுகளுக்காக, தமது ஜீவனையே கொடுக்கிறவர். தாவீது தன்னுடைய மந்தையிலுள்ள ஆடுகளுக்காக, தன்னுடைய ஜீவனையை கொடுக்க ஆயத்தமாயிருந்தார். "ஒருவிசை ஒரு சிங்கமும் ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன்" (1சாமு 17:34,35) என்று தாவீது தன்னுடைய அனுபவத்தை சவுலுக்கு சொல்லுகிறார்.

தாவீது பலமுள்ளவராகவும், பராக்கிரமசாலியாகவும் இருக்கிறார். அவர் கர்த்தரை நம்புகிறார். தாவீது சவுலைப் பார்த்து, "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்" (1சாமு 17:37) என்று சொல்லுகிறார். தாவீது தன் சுயபலத்தினாலோ அல்லது தன்னுடைய சுயபராக்கிரமத்தினாலோ சிங்கத்திற்கு விரோதமாகவும், கரடிக்கு விரோதமாகவும் சண்டை போட்டு, தன் ஜீவனை தப்புவிக்கவில்லை. கர்த்தரே தாவீதை சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்தார்.

தாவீது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். தாவீதுக்கு சிங்கத்தின்மீதும் கரடியின்மீதும் ஜெயம் கிடைத்தாலும், இந்த ஜெயம் கர்த்தரால் உண்டாயிற்று என்று சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். இதுவரையிலும் தன்னைப் பாதுகாத்த கர்த்தர், இனிமேலும் பாதுகாப்பார் என்று தாவீது கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கிறார். "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்" என்று தாவீது விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

தாவீதின் விசுவாசமான வார்த்தைகளைக் கேட்டபோது, சவுலின் இருதயத்திலே இருந்த சந்தேகமெல்லாம் நீங்கிற்று. அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து: "போ, கர்த்தர் உன்னுடனேகூட இருப்பாராக" (1சாமு 17:37) என்று சொல்லுகிறார். கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண சவுல் தாவீதுக்கு அனுமதி கொடுக்கிறார்.

சவுல் தாவீதை ஒரு போர்வீரனைப்போல யுத்தத்திற்கு அனுப்புகிறார். சவுல் தாவீதுக்குத் தன் வஸ்திரங்களை உடுத்துவித்து வெண்கலமான ஒரு சீராவை அவருடைய தலையின்மேல் போட்டு, ஒரு கவசத்தையும் அவருக்குத் தரிப்பிக்கிறார் (1சாமு 17:38).

தாவீது சவுலுடைய பட்டயத்தை வஸ்திரங்கள்மேல் கட்டிக்கொள்கிறார். தாவீதுக்கு அதிலே பழக்கமில்லாததினால் நடந்துபார்க்கிறார்; அப்பொழுது தாவீது சவுலை நோக்கி: "நான் இவைகளைப் போட்டுக்கொண்டு போகக்கூடாது; இந்த அப்பியாசம் எனக்கு இல்லை" (1சாமு 17:39) என்று சொல்லி, அவைகளைக் களைந்துபோடுகிறார்.

தாவீது கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகிறார். இது சவுலின் பார்வையில் மிகப்பெரிய யுத்தமாயிருக்கிறது. ஆகையினால் சவுல் தாவீதை ஒரு பராக்கிரமசாலியைப்போல அனுப்பவேண்டுமென்று விரும்புகிறார். சவுல் தாவீதை மேன்மைப்படுத்தும் வண்ணமாய், தன்னுடைய வஸ்திரங்களையே அவருக்கு உடுத்துகிறார். தன்னுடைய சீராவை தாவீதினுடைய தலையின்மேல் போடுகிறார்.

தாவீதுக்கோ சவுலின் வஸ்திரங்கள் மிகவும் பாரமாயிருக்கிறது. சவுலின் பட்டயம் தாவீதின் வஸ்திரங்கள் மேல் கட்டப்பட்டிருக்கிறது. தாவீது பார்ப்பதற்கு மிகப்பெரிய பராக்கிரமசாலியைப்போலவும், யுத்தவீரரைப்போலவும் இருக்கிறார். ஆனால் இந்த வஸ்திரங்களிலும் ஆயுதங்களிலும் தாவீதுக்கு பழக்கமில்லை. தாவீதால் இந்த வஸ்திரங்களை அணிந்து தாவீதால் நடக்ககூட முடியவில்லை. இந்த வஸ்திரங்கள் தாவீதுக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று சவுல் நினைக்கிறார். ஆனால் இவை தாவீதுக்கு பாரமாயிருக்கிறது.

தாவீது தனக்கு பாரமானவற்றை களைந்துபோட்டு, கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நமக்கு சாத்தானுக்கு விரோதமாக யுத்தமுண்டு. நமக்கு பாரமாகயிருக்கும் எல்லாவற்றையும் களைந்துபோட்டு, நாம் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகவேண்டும்.

தாவீதும் கோலியாத்தும் 1சாமு 17:40-47

1சாமு 17:40. தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப்பையிலே போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனண்டையிலே போனான்.

1சாமு 17:41. பெலிஸ்தனும் நடந்து, தாவீதண்டைக்குக் கிட்டிவந்தான்; பரிசையைப் பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடந்தான்.

1சாமு 17:42. பெலிஸ்தன் சுற்றிப்பார்த்து: தாவீதைக் கண்டு, அவன் இளைஞனும் சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், அவனை அசட்டைபண்ணினான்.

1சாமு 17:43. பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து: நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி, அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்தான்.

1சாமு 17:44. பின்னும் அந்தப் பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து: என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான்.

1சாமு 17:45. அதற்குத் தாவீது: பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்.

1சாமு 17:46. இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்.

1சாமு 17:47. கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்.

தாவீதும் கோலியாத்தும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம்பண்ணுவதற்கு தங்களை ஆயத்தப்படுத்துகிறார்கள். கோலியாத் யுத்தம்பண்ண ஏற்கெனவே ஆயத்தமாயிருக்கிறான். அவன் கடந்த நாற்பது நாட்களாக, காலையிலும் மாலையிலும், இஸ்ரவேலருக்கு முன்பாக தன்னை காண்பித்தான். இஸ்ரவேலரின் சேனையை தூஷித்து நிந்தையான வார்த்தைகளைப் பேசினான். அவனுடைய கால்களிலே வெண்கல கவசமும், அவனுடைய தோள்களின்மேல் வெண்கல கேடகமும் தரித்திருக்கிறான். கோலியாத்தைப் பார்க்கும்போதே மிகவும் கம்பீரமாயிருக்கிறான்.

தாவீதுக்கோ யுத்த வஸ்திரங்களை உடுத்தி பழக்கமில்லை. அதிலே அவருக்கு அப்பியாசமில்லை. யுத்த வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு தாவீதால் நடக்ககூட முடியவில்லை. தாவீது இதுவரையிலும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவர். ஆடுகளை மேய்ப்பவரிடத்தில் மார்க்கவசம் இருக்காது. தலைச்சீரா இருக்காது. அவர்கள் யுத்தவீரர்களைப்போல வஸ்திரம் தரித்திருக்கமாட்டார்கள்.

தாவீது ஒரு சாதாரண மேய்ப்பரைப்போல, மேய்ப்பரின் வஸ்திரத்தைத் தரித்திருக்கிறார். தாவீதின் கைகளில் ஈட்டியோ, பட்டயமோ இல்லை. அவர் தடியை தன் கையிலே பிடித்துக்கொண்டிருக்கிறார். மேய்ப்பருக்குரிய அடைப்பப்பை அவரிடத்திலிருக்கிறது. அவருடைய கையிலே கவண் இருக்கிறது. ஆனால் அடைப்பப்பையில் போடுவதற்கு கற்கள்கூட தாவீதிடத்தில் இல்லை. தாவீது ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளை தெரிந்தெடுத்து, அவைகளை தன்னுடைய அடைப்பப்பையில் போட்டுக்கொள்கிறார். இதுவே தாவீதின் யுத்த ஆயுதம்.

தாவீதின் கைகளில் வில் இல்லை. அவருடைய முதுகில் அம்பறாத்தூணியில்லை. அவரிடத்தில் அம்புகளும் இல்லை. தாவீதிடத்தில் ஐந்து கூழாங்கல்கள் மாத்திரமே இருக்கிறது.

தாவீது தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப்பையிலே போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனண்டையிலே போகிறார். பெலிஸ்தனும் நடந்து, தாவீதண்டைக்குக் கிட்டிவருகிறான்; பரிசையைப் பிடிக்கிறவன் கோலியாத்திற்கு முன்னாக நடக்கிறான் (1சாமு 17:40,41).

தாவீது யுத்த ஆயுதங்களை நம்பவில்லை. அவர் கர்த்தரையும் அவருடைய வல்லமையையும் நம்புகிறார். கோலியாத்தோ தன் இருதயத்தில் பெருமையோடும், ஆணவத்தோடும் இருக்கிறான். தனக்கு முன்பாக நிற்கிற தாவீதை ஏளனமாய்ப் பார்க்கிறான். கோலியாத் சுற்றிப்பார்த்து: தாவீதைக் கண்டு, அவர் இளைஞனும் சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனுமாயிருந்தபடியினால், தாவீதை அசட்டைபண்ணுகிறான் (1சாமு 17:42).

மனுஷர் முகத்தைப் பார்ப்பதுபோல, கோலியாத்தும் தாவீதின் முகத்தைப் பார்க்கிறான். தாவீது ஒரு இளைஞன். தாவீதுக்கு இன்னும் சரீர பெலன் உண்டாகவில்லை. தாவீது சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியோடிருக்கிறார். யுத்தம்பண்ணுகிறவர்கள் கொடூரமான முகத்தோடிருப்பார்கள். கோலியாத் தாவீதைப் பார்க்கும்போது, அவர் இஸ்ரவேலின் நடனமாடுகிற கன்னிப்பெண்களைப்போல, சவுந்தரிய ரூபமாயும், சிவந்த மேனியாயும் இருப்பதாக கோலியாத்தின் பார்வைக்கு தெரிகிறது. தாவீது யுத்தம்பண்ணுவதற்கு பொருத்தமானவரல்ல என்றும், அவர் கன்னிப்பெண்களோடு சேர்ந்து நடனமாடுவதற்கு பொருத்தமானவர் என்றும் கோலியாத் நினைத்து, தாவீதை அசட்டைபண்ணுகிறார். தாவீதை ஏளனம்பண்ணுகிறார்.

தாவீதின் கைகளில் யுத்த ஆயுதம் எதுவுமில்லை. அவர் ஒரு கவணை தன் கையிலே பிடித்துக்கொண்டிருக்கிறார். தாவீதின் முதுகிலே அம்பறாத்தூணி கட்டப்படவில்லை. அவருடைய இடுப்பிலே மேய்ப்பருக்குரிய அடைப்பப்பை கட்டப்பட்டிருக்கிறது. தாவீதுக்கு மார்க்கவசமோ, யுத்தவஸ்திரமோ தரிப்பிக்கவில்லை. அவர் மேய்ப்பருக்குரிய சாதாரண வஸ்திரம் தரித்திருக்கிறார்.

தாவீது தன் கையிலே ஒரு தடியைப் பிடித்துக்கொண்டு கோலியாத்திற்கு முன்னாக நடக்கிறார். கோலியாத் தாவீதைப் பார்த்து: "நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா" (1சாமு 17:43) என்று சொல்லி, அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபிக்கிறான். பின்னும் அந்தப் பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து: "என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்" (1சாமு 17:44) என்று சொல்லுகிறான்.

தாவீதின் கைகளில் யுத்த ஆயுதம் இல்லாவிட்டாலும், அவருடைய இருதயத்தில் கர்த்தர்மீது நம்பிக்கை இருக்கிறது. கர்த்தர் பெலிஸ்தருக்கு விரோதமாய் தனக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார் என்று தாவீது நம்புகிறார். கோலியாத் தாவீதை தன்னுடைய தேவர்களைக் கொண்டு சபிக்கிறான். தாவீதின் மாம்சத்தை ஆகாயத்து பறவைகளுக்கும், காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பதாக கோலியாத் சொல்லுகிறான்.

தாவீதோ கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார். அவர் கர்த்தரை நம்பி கோலியாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்திருக்கிறார். கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவர் தம்மை நம்புகிறவர்களை ஒருபோதும் கைவிடமாட்டார். தாவீது கர்த்தருடைய நாமத்தினாலே வந்திருக்கிறார்.

தாவீது கோலியாத்தை நோக்கி, "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1சாமு 17:45) என்று சொல்லுகிறார். கோலியாத் தன் பட்டயத்தையும் ஈட்டியையும் நம்பியதுபோல, தாவீது கர்த்தரை நம்புகிறார்.

கர்த்தரே ஜெயத்தைக் கொடுக்கிறவர். யுத்தம் கர்த்தருடையது. தாவீது கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணப்போகிறார். இந்த யுத்தத்தில் கர்த்தர் தனக்கு ஜெயத்தைக் கொடுப்பார் என்று தாவீது நம்பிக்கையோடிருக்கிறார்.

தாவீது கோலியாத்தை நோக்கி "இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1சாமு 17:46,47) என்று சொல்லுகிறார்.

தனக்கு ஜெயம் கிடைக்கும் என்று கோலியாத் உறுதியாயிருப்பதுபோல, தாவீதும் உறுதியாயிருக்கிறார். கோலியாத் தன்னுடைய சரீர பலத்தையும், ஆயுத பலத்தையும் நம்புகிறார். தாவீதோ கர்த்தருடைய பலத்தையும், அவருடைய கிருபையையும் நம்புகிறார். தாவீது கோலியாத்திடம் பேசும்போதே, "இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

கோலியாத் தாவீதை நோக்கி, "நான் உன் மாம்சத்தை ஆகாயத்து பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்" (1சாமு 17:43) என்று சொன்னான். தாவீதோ கோலியாத்திடம், "நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்" (1சாமு 17:46) என்று சொல்லுகிறார்.

கோலியாத் தாவீதை மாத்திரம் கொன்றால் போதும் என்று நினைக்கிறான். தாவீதோ பெலிஸ்தர் எல்லோரையும் சங்காரம் பண்ணவேண்டுமென்று கர்த்தருக்குள் தீர்மானித்திருக்கிறார். தாவீது கோலியாத்திடம் பேசும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்பதை பூலோகத்தார் எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ள தேவன் என்பதையும், அவர் மாத்திரமே மெய்யான தேவன் என்பதையும் பூலோகத்தார் எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும். விக்கிரகங்களெல்லாமே பொய்யும் மாயையுமாயிருக்கிறது என்பதையும் ஜனங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்களும் தங்களுடைய கர்த்தரை அறிந்துகொண்டு, அவரை நன்றியுள்ள இருயத்தோடு துதிக்கவேண்டும். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவரல்ல என்பதை இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் அறிந்துகொள்ளவேண்டும் (1சாமு 17:47). யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் பெலிஸ்தரை இஸ்ரவேலர் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று தாவீது விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

"அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஒயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்" (சங் 46:9).

தாவீது கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, ஒரு ஆசாரியன் கர்த்தருடைய நீதியை நிறைவேற்றுவதற்கு, பலிபீடத்திலே பலிசெலுத்தப்போவது போல போகிறார். தாவீது கோலியாத்திற்கு முன்பாக ஒரு யுத்த வீரனாக நிற்காமல், கர்த்தருக்கு முன்பாக ஒரு ஆசாரியனாக நிற்கிறார்.

இஸ்ரவேலர் பெலிஸ்தரை துரத்துகிறார்கள் 1சாமு 17:48-58

1சாமு 17:48. அப்பொழுது அந்தப் பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிராகக் கிட்டிவருகையில், தாவீது தீவிரமாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி,

1சாமு 17:49. தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான்; அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான்.

1சாமு 17:50. இவ்விதமாகத் தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்லினாலும் பெலிஸ்தனை மேற்கொண்டு, அவனை மடங்கடித்து, அவனைக் கொன்றுபோட்டான்; தாவீதின் கையில் பட்டயம் இல்லாதிருந்தது.

1சாமு 17:51. ஆகையால் தாவீது பெலிஸ்தனண்டையில் ஓடி அவன்மேல் நின்று, அவன் பட்டயத்தை எடுத்து, அதை அதின் உறையிலிருந்து உருவி, அவனைக் கொன்று, அதினாலே அவன் தலையை வெட்டிப்போட்டான்; அப்பொழுது தங்கள் வீரன் செத்துப்போனான் என்று பெலிஸ்தர் கண்டு, ஓடிப்போனார்கள்.

1சாமு 17:52. அப்பொழுது இஸ்ரவேலரும் யூதா மனுஷரும் எழும்பி, ஆர்ப்பரித்து, பள்ளத்தாக்கின் எல்லைமட்டும், எக்ரோனின் வாசல்கள்மட்டும், பெலிஸ்தரைத் துரத்தினார்கள்; சாராயீமின் வழியிலும், காத்பட்டணமட்டும், எக்ரோன் பட்டணமட்டும், பெலிஸ்தர் வெட்டுண்டு விழுந்தார்கள்.

1சாமு 17:53. இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தரை மூர்க்கமாய்த் துரத்தினபிற்பாடு, திரும்பிவந்து, அவர்களுடைய பாளயங்களைக் கொள்ளையிட்டார்கள்.

1சாமு 17:54. தாவீது பெலிஸ்தனுடைய தலையை எடுத்து, அதை எருசலேமுக்குக் கொண்டு வந்தான்; அவன் ஆயுதங்களையோ தன் கூடாரத்திலே வைத்தான்.

1சாமு 17:55. தாவீது பெலிஸ்தனுக்கு எதிராகப் புறப்பட்டுப்போகிறதைச் சவுல் கண்டபோது, அவன் சேனாபதியாகிய அப்னேரைப் பார்த்து: அப்னேரே, இந்த வாலிபன் யாருடைய மகன் என்று கேட்டான்; அதற்கு அப்னேர்: ராஜாவே, எனக்குத் தெரியாது என்று உம்முடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

1சாமு 17:56. அப்பொழுது ராஜா: அந்தப் பிள்ளையாண்டான் யாருடைய மகன் என்று விசாரி என்றான்.

1சாமு 17:57. தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்புகையில், அப்னேர் அவனைச் சவுலுக்கு முன்பாக அழைத்துக்கொண்டு போய்விட்டான்; பெலிஸ்தனுடைய தலை அவன் கையில் இருந்தது.

1சாமு 17:58. அப்பொழுது சவுல்: வாலிபனே, நீ யாருடைய மகன் என்று அவனைக் கேட்டதற்கு, தாவீது: நான் பெத்லெகேம் ஊரானாயிருக்கிற உம்முடைய அடியானாகிய ஈசாயின் மகன் என்றான்.

கோலியாத் எழும்பி தாவீதுக்கு எதிராக கிட்டி வருகிறான். தாவீதைக் கொன்றுபோடவேண்டும் என்பது அவனுடைய திட்டம். கோலியாத்தின் பார்வையில், தாவீதின் உருவம், ஒரு சிறுபிள்ளையின் உருவம் போலிருக்கிறது. கோலியாத்தோ மாம்ச மலையைப்போல இருக்கிறான். அவனுடைய சரீரம் முழுவதும் வெண்கலமும் இரும்பும் பாதுகாப்பாயிருக்கிறது. கோலியாத் தன்னுடைய ஆயுதங்களோடு தாவீதுக்கு எதிராக கிட்டி வருகிறான்.

தாவீது கோலியாத்தின் உருவத்தைப் பார்த்து பயந்து நடுங்கவில்லை. கோலியாத் தனக்கு எதிராக கிட்டி வருகையில், தாவீதும் தீவிரமாய், கோலியாத்திற்கு எதிராக ஓடுகிறார். தாவீதின் மனதில் உறுதியிருக்கிறது. தாவீதின் பார்வையில் கோலியாத் மாத்திரமே தெரிகிறார். தாவீதின் மனதில் சந்தோஷமும் இருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் கர்த்தர் கோலியாத்தை தன்னுடைய கையிலே ஒப்புக்கொடுக்கப்போகிறார் என்பதை நினைத்து தாவீது சந்தோஷப்படுகிறார்.

தாவீது கோலியாத்திற்கு எதிராக ஓடுவதை இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் எல்லோரும் ஆர்வத்தோடு பார்க்கிறார்கள். அவர்கள் எல்லோருமே தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறார்கள். கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு இதுவரையிலும் பயந்த இஸ்ரவேலருக்கு இப்போது தாவீது மூலமாய் நம்பிக்கையும், தைரியமும் வந்திருக்கிறது.

கோலியாத் தன்னுடைய சுயபலத்தை நம்பியதுபோல, இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் எல்லோரும் இதுவரையிலும் தங்கள் சுயபலத்தையே நம்பினார்கள். தாவீதோ கர்த்தரை நம்புகிறார். தான் ஆராதிக்கிற தேவன் இன்னார் என்பதை தாவீது அறிந்து வைத்திருக்கிறார். யாரிடத்தில் நம்பிக்கையாயிருக்கவேண்டும், யாருக்கு கீழ்ப்படியவேண்டும், எப்படி யுத்தம்பண்ணவேண்டும் என்பது தாவீதுக்கு தெரிந்திருக்கிறது.

கோலியாத் தாவீதுக்கு எதிராக கிட்டி வரும்போது தீவிரமாக வரவில்லை. கோலியாத்தின் மனதிலே பயமில்லை. தாவீது ஒரு இளைஞன். அவனுடைய கையிலே ஈட்டியோ வேறு யுத்த ஆயுதமோ இல்லை. தாவீதை எளிதாகக் கொன்றுபோடலாம் என்று கோலியாத் நம்புகிறான். ஆகையினால் கோலியாத்தின் நடையில் தீவிரமில்லை.

கோலியாத் தாவீதுக்கு எதிராக, சாவகாசமாக வரும்போது, தாவீதோ அவனுக்கு எதிராக தீவிரமாக ஓடிவருகிறார். கோலியாத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் முன்பு, தாவீது அவனுக்கு எதிராக வந்துவிடுகிறார். தாவீதின் சரீரத்திலே யுத்த வஸ்திரம் எதுவுமில்லை. அவர் யுத்தவீரனைப்போல மிடுக்காக நடந்து வரவுமில்லை.

தாவீது கோலியாத்தைப் பார்க்கும்போது, அவருடைய கண்களுக்கு, தன்னுடைய ஆடுகளில் ஒன்றைப் பிடித்துக்கொண்டுபோன சிங்கத்தைப்போலவும், கரடியைப்போலவும் அவன் தெரிகிறான். அந்த மிருகங்களுக்கு விரோதமாக தாவீது தீவிரமாய் ஓடி அவற்றை கொன்றுபோட்டு, தன்னுடைய ஆட்டுக்குட்டியைக் காப்பாற்றியதுபோல, இப்போது தாவீது கோலியாத்திற்கு எதிராக தீவிரமாய் ஓடுகிறார்.

தாவீது தன் கையை அடைப்பப்பையிலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிகிறார்; அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுகிறான் (1சாமு 17:49).

இஸ்ரவேல் தேசத்திலே குறிபார்த்து கவண் எறிகிறவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள் என்பது கோலியாத்திற்கு நன்றாய்த் தெரியும்.

"அந்த ஜனங்களெல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிவார்கள்" (நியா 20:16).

ஆனாலும் கோலியாத் கவனக்குறைவாயிருக்கிறான். தாவீதுக்கு எதிராக வரும்போது, கோலியாத்தின் தலையில் தலைக்கவசமோ, தலைச்சீராவோ இல்லை. அவனுடைய தலை மூடப்படாமல் பாதுகாப்பில்லாமல் இருக்கிறது. தாவீது எறிந்த கல் கோலியாத்தின் நெற்றியில் பதிகிறது. அந்தக் கல்லை தடுத்து நிறுத்துவதற்கு, கோலியாத்தின் தலையிலே தலைச்சீரா இல்லை.

தாவீதின் கையில் பட்டயம் இல்லை. ஆகையால் தாவீது பெலிஸ்தனண்டையில் ஓடி அவன்மேல் நின்று, அவன் பட்டயத்தை எடுத்து, அதை அதின் உறையிலிருந்து உருவி, அவனைக் கொன்று, அதினாலே அவன் தலையை வெட்டிப்போடுகிறார் (1சாமு 17:50,51).

தாவீதுக்கு கோலியாத் மீது கிடைத்த வெற்றி, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாத்தான்மீதும், அவனுடைய அந்தகார வல்லமைகள் மீதும் கிடைத்த வெற்றியைப்போலிருக்கிறது.

"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்" (கொலோ 2:14,15).

இவ்விதமாகத் தாவீது ஒரு கவணினாலும் ஒரு கல்லினாலும் பெலிஸ்தனை மேற்கொண்டு, அவனை மடங்கடித்து, அவனைக் கொன்றுபோடுகிறார் (1சாமு 17:50). கோலியாத் செத்துப்போனதை பெலிஸ்தருடைய சேனையிலுள்ளவர்கள் பார்க்கிறார்கள். தங்கள் வீரன் செத்துப்போனான் என்று பெலிஸ்தர் கண்டு, ஓடிப்போகிறார்கள். அப்பொழுது இஸ்ரவேலரும் யூதா மனுஷரும் எழும்பி, ஆர்ப்பரித்து, பள்ளத்தாக்கின் எல்லைமட்டும், எக்ரோனின் வாசல்கள்மட்டும், பெலிஸ்தரைத் துரத்துகிறார்கள் (1சாமு 17:51).

பெலிஸ்தர் சாராயீமின் வழியிலும், காத்பட்டணமட்டும், எக்ரோன் பட்டணமட்டும், வெட்டுண்டு விழுகிறார்கள். பெலிஸ்தர் கோலியாத்தின் பலத்தை நம்பினார்கள். அவனுடைய உருவத்தை நம்பினார்கள். தங்கள் வீரன் செத்துப்போனான் என்பதை பெலிஸ்தர் பார்த்தபோது அவர்களுக்குள் பயமுண்டாயிற்று. அவர்களால் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. அவர்கள் தங்கள் ஆயுதங்களை யுத்தக்களத்திலேயே போட்டுவிட்டு, தங்கள் ஜீவனை காத்துக்கொள்ள ஓடிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரும் பெலிஸ்தரை மூர்க்கமாய்த் துரத்துகிறார்கள். அதன் பிற்பாடு, இஸ்ரவேலர் திரும்பிவந்து, பெலிஸ்தருடைய பாளயங்களைக் கொள்ளையிடுகிறார்கள் (1சாமு 17:53). பெலிஸ்தர் தோற்று ஓடிப்போவதைப் பார்க்கும்போது, இஸ்ரவேல் புத்திரருக்கு புதிய பெலனும், புதிய தெம்பும் உண்டாயிற்று. இஸ்ரவேலர் இதுவரையிலும் கோலியாத்தைப் பார்த்து பயந்து ஓடினார்கள். இப்போதோ அவர்கள் கோலியாத் செத்துப்போனதைப் பார்த்து, பெலிஸ்தரை மூர்க்கமாய்த் துரத்துகிறார்கள்.

தாவீது கோலியாத்தின் தலையை எடுத்து, அதை எருசலேமுக்குக் கொண்டு வருகிறார்; கோலியாத்தின் ஆயுதங்களையோ தன் கூடாரத்திலே வைக்கிறார் (1சாமு 17:54). எருசலேமிலே எபூசியர்கள் வாசம்பண்ணுகிறார்கள். சீயோன் கோட்டை அவர்கள் வசமாயிருக்கிறது. தாவீது கோலியாத்தின் தலையை, எருசலேமுக்கு கொண்டு வந்து காண்பிக்கும்போது, எபூசியர்கள் அந்த தலையைப் பார்க்கிறார்கள். இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், தாங்களும் கோலியாத்தைப்போல செத்துப்போவோம் என்னும் பயம் எபூசியருக்கு உண்டாயிற்று.

தாவீது கோலியாத்தின் ஆயுதங்களை தன்னுடைய கூடாரத்தில் வைக்கிறார். கோலியாத்தின் பட்டயத்தையோ ஆசரிப்புக்கூடாரத்திலே, ஏபோத்திற்கு அருகாமையில் வைக்கிறார்.

"அதற்கு ஆசாரியன்: நீர் ஏலே பள்ளத்தாக்கிலே கொன்ற பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயம், இதோ, ஏபோத்துக்குப் பின்னாக ஒரு புடவையிலே சுருட்டி வைத்திருக்கிறது; அதை நீர் எடுக்க மனதானால் எடுத்துக்கொண்டுபோம், அதுவே அல்லாமல் வேறொன்றும் இங்கே இல்லை என்றான்; அப்பொழுது தாவீது: அதற்கு நிகரில்லை; அதை எனக்குத் தாரும் என்றான்" (1சாமு 21:9).

தாவீது கோலியாத்திற்கு எதிராக புறப்பட்டுப்போகிறதை சவுல் பார்த்தார். பொல்லாத ஆவி சவுலை கலங்கப்பண்ணினதினால், சவுலுக்கு ஞாபகமறதி உண்டாயிற்று. தாவீது சவுலுக்கு முன்பாக சுரமண்டலத்தை எடுத்து வாசித்திருக்கிறார். ஆனால் சவுலுக்கு இப்போது தாவீதைப்பற்றி தெரியவில்லை. சவுல் ஏற்கெனவே ஈசாயினிடத்தில் ஆட்களை அனுப்பி, தாவீதை தன்னிடத்தில் அனுப்புமாறு சொன்னார். இப்போது சவுலுக்கு தாவீதையும் தெரியவில்லை. ஈசாயையும் தெரியவில்லை.

சவுல் தன் சேனாபதியாகிய அப்னேரைப் பார்த்து: "அப்னேரே, இந்த வாலிபன் யாருடைய மகன்" என்று கேட்கிறார்; அதற்கு அப்னேர்: "ராஜாவே, எனக்குத் தெரியாது என்று உம்முடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று சொல்லுகிறான். அப்பொழுது ராஜா: "அந்தப் பிள்ளையாண்டான் யாருடைய மகன் என்று விசாரி" (1சாமு 17:55,56) என்று சொல்லுகிறார்.

அப்னேருக்கு தாவீதைப்பற்றித் தெரியாது. தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்புகையில், அப்னேர் தாவீதை சவுலுக்கு முன்பாக அழைத்துக்கொண்டு போய்விடுகிறான்; பெலிஸ்தனுடைய தலை தாவீதின் கையில் இருக்கிறது. அப்பொழுது சவுல்: "வாலிபனே, நீ யாருடைய மகன்" என்று தாவீதைக் கேட்கிறார். அதற்கு தாவீது "நான் பெத்லெகேம் ஊரானாயிருக்கிற உம்முடைய அடியானாகிய ஈசாயின் மகன்" (1சாமு 17:57,58) என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு சவுலின் அரண்மனையில் அதிக மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படுகிறது. கர்த்தர் தாவீதுக்காக எல்லா காரியங்களையும் வாய்க்கப்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மீது வந்து தங்கியிருக்கிறார். கர்த்தர் தாவீதை ஆசீர்வதிக்கிறார்.

18 அதிகாரம்

கர்த்தர் தாவீதை உயர்த்துகிறார். சவுல் தாவீதை தன்னிடத்தில் வைத்துக்கொள்கிறார் (1சாமு 18:2). யோனத்தான் தாவீதை சிநேகிக்கிறார். இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள் (1சாமு 18:1,3,4).

தாவீது இஸ்ரவேல் ஜனங்களின் கண்களுக்கு பிரியமாயிருக்கிறார் (1சாமு 18:5,7,16). சவுலுக்கு தாவீதின்மீது பொறாமை உண்டாயிற்று. சவுல் தாவீதை காய்மகாரமாய் பார்க்கிறார். சவுல் தாவீதை கொன்றுபோட முயற்சிபண்ணுகிறார் (1சாமு 18:8-11).

சவுல் தாவீதுக்கு பயப்படுகிறார் (1சாமு 18:12-17). சவுல் தன் குமாரத்தியாகிய மேராபை தாவீதுக்கு மனைவியாய்க் கொடுப்பதாக சொல்லி, அதன் பின்பு அவர் தாவீதை வஞ்சிக்கிறார் (1சாமு 18:19). சவுல் தன் அடுத்த குமாரத்தி மீகாளை தாவீதுக்கு மனைவியாய்க் கொடுக்கிறார். தாவீதுக்கு பெலிஸ்தர் மூலமாய் ஆபத்து வரவேண்டும் என்பது சவுலின் திட்டம் (1சாமு 18:20-25).

தாவீது சவுல் சொன்ன நிபந்தனைகளை நிறைவேற்றுகிறார். தாவீது சவுலின் குமாரத்தியாகிய மீகாளை விவாகம்பண்ணுகிறார் (1சாமு 18:26,27). கர்த்தர் தாவீதோடிருக்கிறார். தாவீதின் பெயர் மிகவும் கனம் பெறுகிறது (1சாமு 18:28-30).

தாவீதும் யோனத்தானும் 1சாமு 18:1-5

1சாமு 18:1. அவன் சவுலோடே பேசி முடித்தபின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போலச் சிநேகித்தான்.

1சாமு 18:2. சவுல் அவனை அவன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப்போக ஒட்டாமல், அன்றுமுதல் தன்னிடத்தில் வைத்துக் கொண்டான்.

1சாமு 18:3. யோனத்தான் தாவீதைத்தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

1சாமு 18:4. யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும் தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும் கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்.

1சாமு 18:5. தாவீது சவுல் தன்னை அனுப்புகிற எவ்விடத்திற்கும் போய், புத்தியாய்க் காரியத்தை நடப்பித்ததினால், சவுல் அவனை யுத்தமனுஷரின்மேல் அதிகாரியாக்கினான்; அவன் எல்லா ஜனத்தின் கண்களுக்கும், சவுலுடைய ஊழியக்காரரின் கண்களுக்கும்கூடப் பிரியமாயிருந்தான்.

சாமுவேல் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். சவுலின் சிரசின்மீது இருக்கிற கிரீடம், அவருடைய குமாரனாகிய யோனத்தானின் சிரசிற்கு வரவேண்டும். ஆனால் இஸ்ரவேலின் கிரீடம் தாவீதின் சிரசின்மேல் வரவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

இப்போது சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். அவருடைய சிரசின்மேல் கிரீடம் சூட்டப்பட்டிருக்கிறது. சவுல் தாவீதின்மீது நம்பிக்கை வைக்கிறார். சவுல் தாவீதை அவருடைய தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப்போக ஒட்டாமல், அன்றுமுதல் தன்னிடத்தில் வைத்துக் கொள்கிறார் (1சாமு 18:2).

கர்த்தர் தாவீதை இஸ்ரவேலின் சிங்காசனத்திலே வீற்றிருப்பதற்கு இப்போதே ஆயத்தம்பண்ணுகிறார். தாவீதுக்கு ஆரம்பத்தில் சவுல் மூலமாக ராஜ்யபார பயிற்சி கிடைக்கிறது. தாவீது சவுல் தன்னை அனுப்புகிற எவ்விடத்திற்கும் போய், புத்தியாய்க் காரியத்தை நடப்பிக்கிறார். இதினால், சவுல் தாவீதை யுத்தமனுஷரின்மேல் அதிகாரியாக்குகிறார்; தாவீது எல்லா ஜனத்தின் கண்களுக்கும், சவுலுடைய ஊழியக்காரரின் கண்களுக்கும்கூடப் பிரியமாயிருக்கிறார் (1சாமு 18:5).

சவுல் தாவீதை இஸ்ரவேலின் சேனைக்கு சேனாபதியாக நியமிக்கவில்லை. அந்தப் பதவியில் ஏற்கெனவே அப்னேர் நியமிக்கப்பட்டிருக்கிறார். "யுத்த மனுஷரின்மேல் அதிகாரி" என்னும் வாக்கியத்திற்கு "மெய்க்காப்பாளருக்கு தலைவர்" என்று பொருள். சவுல் தாவீதை நம்புவதினால், அவரைத் தன்னுடைய பிரதான மெய்க்காப்பாளராக நியமிக்கிறார்.

சவுல் தாவீதை தன்னுடைய அரசாங்க காரியங்களிலும் பயன்படுத்துகிறார். தாவீதும், சவுல் தன்னை அனுப்புகிற எவ்விடத்திற்கும் போகிறார். கர்த்தர் தாவீதுக்கு தெளிந்த சிந்தனையையும், நல்ல புத்தியையும் கொடுத்திருக்கிறார். தாவீது எல்லா காரியங்களையும் புத்தியாய் நடப்பிக்கிறார். தாவீது பிற்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யப்போகிறவர். மற்றவர்களை ஆளுகை செய்ய விரும்புகிறவர்கள், முதலாவதாக கீழ்ப்படிய கற்றுக்கொள்ளவேண்டும். தாவீது சவுலின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, ஒவ்வொரு காரியத்தையும் புத்தியாய் நடப்பிக்கிறார்.

யோனத்தான் சவுலின் குமாரன். சவுலுக்கு பின்பு, யோனத்தான் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக வரவேண்டும். சவுலின் சிரசிலுள்ள கிரீடம், யோனத்தானுடைய சிரசின்மேல் சூட்டப்படவேண்டும். ஆனால் யோனத்தானோ தாவீதோடு உடன்படிக்கை பண்ணுகிறார்.

யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருக்கிறது; யோனத்தான் தாவீதைத் தன் உயிரைப்போலச் சிநேகிக்கிறான். யோனத்தான் தாவீதைத்தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவர்கள் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள் (1சாமு 18:1,3).

கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே, தாவீதும் யோனத்தானும் சிநேகிதர்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் கிரீடத்திற்கு, யோனத்தான் தாவீதுக்கு போட்டியாக இருக்கிறார். ஆனால் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக, யோனத்தானும் தாவீதும் சிநேகிதர்களாயிருக்கிறார்கள்.

இவர்கள் இருவருக்கும் இடையிலுள்ள சிநேகம் சாதாரண சிநேகமல்ல. யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருக்கிறது. இவர்கள் இருவருடைய சுபாவமும் ஒன்றுபோலிருக்கிறது. சமீபத்தில் தாவீது, கர்த்தருடைய நாமத்தினாலே, பெலிஸ்தியனான கோலியாத்தை எதிர்த்து நின்று, அவனைக் கொன்றுபோட்டார். தாவீதைப்போலவே, யோனத்தானும், கர்த்தரை நம்பி பெலிஸ்தரின் பாளயத்திலிருந்தவர்களை முறியடித்தான்.

யோனத்தானும், சவுலும் யுத்த வீரராயும், பராக்கிரமசாலிகளாயும் இருக்கிறார்கள். யோனத்தானுக்கு ஒரு சத்துரு இருக்கவேண்டுமென்றால் அது தாவீதாகத்தான் இருக்கமுடியும். ஏனென்றால், யோனத்தானுக்கு வரவேண்டிய கிரீடத்திற்கு, தாவீது போட்டியாயிருக்கிறார். ஆனால் அவர்கள் இருவரும் பகைஞராயில்லாமல், நெருங்கிய சிநேகிதராயிருக்கிறார்கள்.

யோனத்தான் தாவீதுமீது வைத்திருக்கிற சிநேகம் உறுதியாயிருக்கிறது. தன்னுடைய சிநேகத்தை உறுதிபண்ணுவதற்கு, யோனத்தான் தாவீதுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறான். யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும் தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும் கூடத் தாவீதுக்குக் கொடுக்கிறான் (1சாமு 18:4).

தாவீது இதுவரையிலும், பெத்லெகேமிலே, தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு ராஜாவினுடைய அரண்மனை காரியங்களில் பழக்கமில்லை. தாவீதின் வஸ்திரங்களும் ஆடு மேய்க்கிறவர்களின் வஸ்திரங்களைப்போல சாதாரணமானதாகயிருக்கிறது. யோனத்தானோ தன்னுடைய சால்வையையும், தன்னுடைய வஸ்திரத்தையும் தாவீதுக்கு அன்பளிப்பாய்க் கொடுக்கிறார்.

தாவீது ஒரு பராக்கிரமசாலியாயிருந்தாலும், அவரிடத்தில் ஈட்டி, பட்டயம் போன்ற யுத்த ஆயுதம் எதுவுமில்லை. கவணும், கல்லுமே தாவீதின் ஆயுதம். தாவீது கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமானபோது, சவுல் தன்னுடைய வஸ்திரங்களையும், பட்டயத்தையும் தாவீதுக்கு கொடுத்தார். ஆனால் தாவீதுக்கு அவற்றில் அப்பியாசமில்லை. தாவீது அவற்றைக் கழற்றி சவுலிடத்தில் திருப்பி கொடுத்துவிட்டார்.

சவுலின் சரீர அளவும், தாவீதின் சரீர அளவும் வித்தியாசமாயிருக்கிறது. தாவீது ஒரு இளைஞன். சவுல் பெரிய மனுஷன். சரீர அளவில் இரண்டு பேருக்கும் பொருத்தமில்லை. யோனத்தானும் தாவீதும், வாலிபர்கள். அவர்கள் இருவருக்கும் ஒரே சரீர அளவே இருக்கிறது. யோனத்தான் தன்னுடைய சால்வையையும் வஸ்திரத்தையும் தாவீதுக்கு கொடுக்கிறான். தாவீது அதைப் பெற்றுக்கொள்கிறார்.

யோனத்தான் தன்னுடைய பட்டயத்தையும் வில்லையையும், தன் கச்சையையும் தாவீதுக்கு கொடுக்கிறான். தாவீது அவற்றையும் வாங்கிக்கொள்கிறார். இவையெல்லாம் யோனத்தானுக்கு சொந்தமானது. தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி யோனத்தான் தாவீதுக்கு கொடுக்கிறான். சவுலின் வஸ்திரம் தாவீதுக்கு அளவு சரியாயில்லை. ஆனால் யோனத்தானுடைய வஸ்திரம் தாவீதின் அளவுக்கு சரியாயிருக்கிறது. அவர்கள் இருவருடைய சரீர அளவு மாத்திரமல்ல, அவர்களுடைய சிந்தையும், நோக்கமும், ஆர்வமும் ஒத்திருக்கிறது.

இப்போது தாவீதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும், அவரை யோனத்தானுடைய வஸ்திரத்தில் பார்க்கிறார்கள். தாவீது யோனத்தானுடைய பிரதிபோல இருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நமக்கு தம்முடைய அன்பை இவ்வாறுதான் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் தம்மையே உரிந்து, நமக்கு வஸ்திரமாக தரிப்பிக்கிறார். நம்மை ஐசுவரிவான்களாக்குவதற்காக கிறிஸ்துவானவர் தம்மையே வெறுமையாக்கினார். அவர் நம்மை உயர்த்துவதற்காக, தம்மையே தாழ்த்தினார்.

கிறிஸ்துவானவர் யோனத்தானிலும் பெரியவர். நம்முடைய கந்தையான பாவங்களை கிறிஸ்துவானவர் தம்மீது ஏற்றுக்கொண்டார். யோனத்தான் தன்னுடைய வஸ்திரங்களை தாவீதுக்கு கொடுத்தான். ஆனால் தாவீதின் மேய்ப்பனுக்குரிய வஸ்திரங்களை யோனத்தான் தன்மீது போட்டுக்கொள்ளவில்லை. யோனத்தான் தாவீதைத்தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவர்கள் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள்.

சவுலின் அரண்மனையிலுள்ளவர்களும், தேசத்து ஜனங்களும் தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறார்கள். தாவீது எல்லா ஜனத்தின் கண்களுக்கும், சவுலுடைய ஊழியக்காரரின் கண்களுக்கும்கூடப் பிரியமாயிருக்கிறார்.

தேவனுடைய கிருபை தாவீதுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வல்லமையினால் தாவீது பெரிய காரியங்களை செய்கிறார். கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் ஜனங்கள் எல்லோரும் தாவீதை உயர்த்துகிறார்கள். தாவீதை மேன்மைப்படுத்துகிறார்கள். இந்த உயர்வும் மேன்மையும் தாவீதுக்கு திடீரென்று வந்திருக்கிறது. அதுவும் அளவில்லாமல் அதிகமாய் வருகிறது. நம்முடைய வாழ்க்கையின் அந்தஸ்தில் நாம் வேகமாக மேலே உயரும்போது, நம்முடைய இருதயமும், எண்ணமும் நன்றாயிருக்கவேண்டும். நாம் உயர உயர, கர்த்தரை நமக்கு மேலே உயர்த்தவேண்டும்.

சவுலின் காய்மகாரம்
1சாமு 18:6-11

1சாமு 18:6. தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பி வந்தபின்பு, ஜனங்கள் திரும்ப வரும்போதும், ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல்பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

1சாமு 18:7. அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்.

1சாமு 18:8. அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி,

1சாமு 18:9. அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்.

1சாமு 18:10. மறுநாளிலே தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று; அவன் வீட்டிற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தான்; அப்பொழுது தாவீது தினந்தோறும் செய்கிறபடி, தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்துக்கொண்டிருந்தான்; சவுலின் கையிலே ஈட்டியிருந்தது.

1சாமு 18:11. அப்பொழுது சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை அவன்மேல் எறிந்தான்; ஆனாலும் தாவீது விலகி இரண்டுதரம் அவனுக்குத் தப்பினான்.

தாவீது சவுலின் அரண்மனையில் உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறார். இப்போது அவருக்கு பிரச்சனைகள் வர ஆரம்பிக்கிறது. ஜனங்கள் எல்லோரும் தாவீதைப் புகழுகிறார்கள். தாவீது இப்போது கோலியாத்தைக் கொன்றுபோட்டு, பெலிஸ்தரை முறியடித்தார். இதற்கு முன்பு, சவுலும் பெலிஸ்தரை முறியடித்திருக்கிறார். இஸ்ரவேலின் பட்டணங்களிலுள்ள ஜனங்கள், சவுலை போற்றி புகழுந்ததுபோல தாவீதையும் போற்றி புகழுகிறார்கள்.

தாவீது இஸ்ரவேலின் சகல பட்டணங்களுக்கும் போகிறார். பட்டணத்து ஸ்திரீகள் எல்லோரும் தாவீதின் வீரசாகசங்களையும், பராக்கிரமங்களையும் புகழ்ந்து பாடுகிறார்கள்.

தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பி வந்தபின்பு, ஜனங்கள் திரும்ப வரும்போதும், ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல்பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வருகிறார்கள் (1சாமு 18:6).

அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடுகிறார்கள் (1சாமு 18:7). ஸ்திரீகள் சவுலை மாத்திரம் புகழ்ந்து பாடியிருந்தால், பிரச்சனை வந்திருக்காது. ஆனால் அவர்கள் சவுலையும் தாவீதையும் சேர்ந்து புகழுகிறார்கள். சவுலைவிட தாவீதை அதிகமாய்ப் புகழுகிறார்கள். "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என்று பாடுகிறார்கள். ஸ்திரீகள் சவுலைவிட தாவீதை பத்து மடங்கு அதிகமாய் உயர்த்துகிறார்கள்.

அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருக்கிறது; சவுல் மிகுந்த எரிச்சலடைந்து, "தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் தாவீதுக்குக் குறைவாயிருக்கிறது" என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்க்கிறார் (1சாமு 18:8,9).

இஸ்ரவேலின் ஸ்திரீகள் சவுலை புகழ்ந்து பாட மறக்கவில்லை. ஆனாலும் தாவீதின் புதிய வெற்றி, சவுலின் பழைய வெற்றியைவிட, அந்த ஸ்திரீகளுக்கு பெரிதாய்த் தெரிகிறது. தாவீதைவிட சவுலை குறைத்து மதிக்கவேண்டும் என்னும் எண்ணம் அவர்கள் மனதில் ஏற்படவில்லை. ஆனால் அவர்களுடைய வார்த்தை சவுலுக்கு விசனமாயிருக்கிறது.

தாவீது கோலியாத்தைக் கொன்றுபோட்டார். இதுவரையிலும் கோலித்திற்குப் பயந்த இஸ்ரவேலர், இப்போது பெலிஸ்தரை பின்தொடர்ந்துபோய் அவர்களை சங்காரம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய பாளயங்களைக் கொள்ளையிடுகிறார்கள். பெலிஸ்தரின் சேனை முழுவதையும் நிர்மூலம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமுள்ள ஸ்திரீகள் தாவீதுக்கு கொடுக்கவேண்டிய கனத்தையும், மரியாதையையும் கொடுக்கிறார்கள்.

ஸ்திரீகளின் வார்த்தை சவுலுக்கு விசனமாயிருக்கிறது. தன்னுடைய ராஜ்யபாரத்திற்கு விரோதமாக ஏதோ சதி நடக்கிறது என்று சவுல் சந்தேகப்படுகிறார். "இன்னும் ராஜாங்கம் மாத்திரம் தாவீதுக்கு குறைவாயிருக்கிறது" என்று சவுல் விசனத்தோடு பேசுகிறார்.

சவுலின் மனதில் குழப்பமுண்டாயிற்று. சவுல் ஏற்கெனவே பொல்லாத ஆவியினால் மிகவும் துன்பப்படுத்தப்பட்டவர். தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பார்; அதினாலே பொல்லாத ஆவி சவுலைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவார் (1சாமு 16:23). இதுவரையிலும் சொஸ்தமடைந்திருந்த சவுலுக்கு மறுபடியும் பிரச்சனை வருகிறது. சவுலின் மனதிலே விசனமும் காய்மகாரமும் நிரம்பியிருக்கிறது.

மறுநாளிலே தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று; சவுல் வீட்டிற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தார்; அப்பொழுது தாவீது தினந்தோறும் செய்கிறபடி, தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்துக்கொண்டிருக்கிறார்; சவுலின் கையிலே ஈட்டியிருக்கிறது. அப்பொழுது சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை தாவீதின்மேல் எறிகிறார்; ஆனாலும் தாவீது விலகி இரண்டுதரம் சவுலுக்குத் தப்பிக்கிறார் (1சாமு 18:10,11).

சவுலைப்போலவே, பொறாமைக்கு இடம் கொடுக்கிறவர்கள், பிசாசுக்கு இடம் கொடுத்து விடுகிறார்கள். அவர்களிடத்தில் ஏற்கெனவே இருந்த பிசாசு, மறுபடியும் அவர்களுக்குள்ளே திரும்பி வந்துவிடுகிறது. ஒரு பிசாசு, தன்னைவிட பொல்லாத ஏழு ஆவிகளை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறது. பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று. ஆனால் சவுலோ தன்னை தேவமனுஷன்போல காண்பித்துக்கொள்கிறார். அவர் வீட்டிற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

ஒரு தீர்க்கதரிசியின் பாவனைகளும், அங்க அசைவுகளும், வார்த்தைகளும் எப்படி இருக்குமோ, அப்படியே பொல்லாத ஆவி பிடித்திருக்கிற சவுலுக்கும் இருக்கிறது. சவுலை பொல்லாத ஆவி பிடித்திருக்கிறது என்பதை அவரைப் பார்க்கும்போது தெரியாது. அவர் தீர்க்கதரிசியைப்போல தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார். சவுல் தாவீதைக் கொன்றுபோட வேண்டுமென்று சதிபண்ணுகிறார். சவுல் தன்னை ஒரு தீர்க்கதரிசி போல காண்பிப்பதினால், சவுலின் மூலமாக தனக்கு ஆபத்து வராது என்று தாவீது நினைப்பார். அவருக்கு ஊழியம் செய்வார். தாவீது தன்னோடு கூடயிருக்கும்போது, அவரைக் கொன்றுபோடவேண்டும் என்பது சவுலின் திட்டம்.

சவுல் வீட்டிற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லி, தன்னை ஒரு ஆவிக்குரிய மனுஷன்போல காண்பித்துக்கொள்கிறார். ஆனால் அவருடைய கையில் ஒரு ஈட்டி இருக்கிறது. தீர்க்கதரிசனம் சொல்லுகிறவருக்கு ஈட்டி தேவையில்லை. அவருடைய கையில் வேதப்புஸ்தகம் இருக்கவேண்டும். சவுல் ஆவியினால் நிரப்பப்பட்டு கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

சவுலைப் பிடித்திருக்கிற பொல்லாத ஆவியைப் பார்த்து தாவீது பயப்படவில்லை. தாவீது தினந்தோறும் செய்கிறபடி, தன் கையினாலே, சவுலுக்கு முன்பாக, சுரமண்டலத்தைவாசித்துக் கொண்டிருக்கிறார். சவுல் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தன் கையிலிருக்கிற ஈட்டியை தாவீதின்மேல் எறிகிறார். இரண்டு தரம் இப்படி எறிகிறார். தாவீது இரண்டு தரமும் சவுலின் ஈட்டிக்கு விலகி தப்பித்துக்கொள்கிறார். கர்த்தருடைய கிருபை தாவீதை தப்புவிக்கப்பண்ணுகிறது.

தாவீது சவுலுக்கு நன்மை செய்கிறார். பொல்லாத ஆவி சவுலைக் கலங்கப்பண்ணும்போது, தாவீது தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்து, சவுல் சொஸ்தமாக உதவிபண்ணுகிறார். சவுலோ தனக்கு உதவி செய்கிற தாவீதுக்கு தீங்கு நினைக்கிறார். தாவீது தன் கையிலுள்ள சுரமண்டலத்தினால் சவுலுக்கு நன்மை செய்கிறார். சவுலோ தன் கையிலுள்ள ஈட்டியினால் தாவீதுக்கு தீங்கு செய்கிறார்.

கர்த்தருடைய ஜனம் மனத்தாழ்மையோடும் நீடிய பொறுமையோடும் இருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனத்தைத் துன்பப்படுத்துகிறவர்களோ கொடிய குணமுள்ளவர்களாகவும், சதிஆலோசனை நிரம்பியவர்களாகவும் இருக்கிறார்கள். சவுல் தன்மீது இரண்டுதரம் ஈட்டியை எறியும்போது, தாவீது அந்த ஈட்டிக்கு விலகி தப்பிக்கிறார். தாவீது சவுல்மீது கோபப்படவில்லை. தாவீது தன்மீது எறியப்பட்ட ஈட்டியை எடுத்து, அதினால் சவுலைக் குத்தி கொன்றுபோடவில்லை. தாவீது ஒரு கோழையல்ல. அவரிடத்தில் வீரமும் பலமும் மிகுதியாயிருக்கிறது. தன்னை பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி, தாவீது சவுலை தாக்கியிருக்கலாம். ஆனால் தாவீதோ தன்னை பாதுகாக்க மாத்திரம் செய்கிறார். சவுலை அழிக்க நினைக்கவில்லை. தாவீது தீங்குக்கு விலகுகிறார்.

ராஜாவுக்கு மருமகன்
1சாமு 18:12-30

1சாமு 18:12. கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார் என்றும் தன்னை விட்டு விலகிப்போனார் என்றும், சவுல் கண்டு, தாவீதுக்குப் பயந்து,

1சாமு 18:13. அவனைத் தன்னைவிட்டு அப்புறப்படுத்தி, அவனை ஆயிரம்பேருக்கு அதிபதியாக வைத்தான்; அப்படியே அவன் ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருந்தான்.

1சாமு 18:14. தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.

1சாமு 18:15. அவன் மகா புத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவனுக்குப் பயந்திருந்தான்.

1சாமு 18:16. இஸ்ரவேலரும் யூதா ஜனங்களுமாகிய யாவரும் தாவீதைச் சிநேகித்தார்கள்; அவர்களுக்கு முன்பாக அவன் போக்கும் வரத்துமாயிருந்தான்.

1சாமு 18:17. என் கை அல்ல, பெலிஸ்தரின் கையே அவன்மேல் விழட்டும் என்று சவுல் நினைத்துக்கொண்டு, சவுல் தாவீதை நோக்கி: இதோ, என் மூத்த குமாரத்தியாகிய மேராவை உனக்கு மனைவியாகக் கொடுப்பேன்; நீ எனக்கு நல்ல சேவகனாய்மாத்திரம் இருந்து, கர்த்தருடைய யுத்தங்களை நடத்து என்றான்.

1சாமு 18:18. அப்பொழுது தாவீது சவுலைப் பார்த்து: ராஜாவுக்கு மருமகனாகிறதற்கு நான் எம்மாத்திரம், என் ஜீவன் எம்மாத்திரம், இஸ்ரவேலிலே என் தகப்பன் வம்சமும் எம்மாத்திரம் என்றான்.

1சாமு 18:19. சவுலின் குமாரத்தியாகிய மேராப் தாவீதுக்குக் கொடுக்கப்படுங் காலம் வந்தபோது, அவள் மேகோலாத்தியனாகிய ஆதரியேலுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டாள்.

1சாமு 18:20. சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதை நேசித்தாள்; அது சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, அது அவனுக்குச் சந்தோஷமாயிருந்தது.

1சாமு 18:21. அவன் அவனுக்குக் கண்ணியாயிருக்கவும், பெலிஸ்தரின் கை அவன்மேல் விழவும், அவளை அவனுக்குக் கொடுப்பேன் என்று சவுல் எண்ணி, தாவீதை நோக்கி: நீ என்னுடைய இரண்டாம் குமாரத்தியினால் இன்று எனக்கு மருமகனாவாய் என்றான்.

1சாமு 18:22. பின்பு சவுல் தன் ஊழியக்காரரைப் பார்த்து: நீங்கள் தாவீதோடே இரகசியமாய்ப் பேசி: இதோ, ராஜா உன்மேல் பிரியமாயிருக்கிறார்; அவருடைய ஊழியக்காரர் எல்லாரும் உம்மைச் சிநேகிக்கிறார்கள்; இப்போதும் நீர் ராஜாவுக்கு மருமகனானால் நலம் என்று சொல்லுங்கள் என்று கற்பித்தான்.

1சாமு 18:23. சவுலின் ஊழியக்காரர் இந்த வார்த்தைகளைத் தாவீதின் செவிகள் கேட்கப் பேசினார்கள்; அப்பொழுது தாவீது, நான் ராஜாவுக்கு மருமகனாகிறது லேசான காரியமா? நான் எளியவனும், அற்பமாய்எண்ணப்பட்டவனுமாயிருக்கி றேன் என்றான்.

1சாமு 18:24. தாவீது இன்ன இன்னபடி சொன்னான் என்று சவுலின் ஊழியக்காரர் அவனுக்கு அறிவித்தார்கள்.

1சாமு 18:25. அப்பொழுது சவுல்: ராஜா பரிசத்தை விரும்பாமல், பெலிஸ்தரின் நூறு நுனித்தோல்களினால் ராஜாவின் சத்துருக்களிடத்தில் பழிவாங்க விருப்பமாயிருக்கிறார் என்று தாவீதுக்குச் சொல்லுங்கள் என்றான்; தாவீதை பெலிஸ்தரின் கையினால் விழப்பண்ணுவதே சவுலுடைய எண்ணமாயிருந்தது.

1சாமு 18:26. அவன் ஊழியக்காரர் தாவீதுக்கு இந்த வார்த்தைகளைச் சொன்னபோது,ராஜாவுக்கு மருமகனாகிறது தாவீதுக்குப் பிரியமாயிருந்தது.

1சாமு 18:27. அதற்குக் குறித்த நாட்கள் நிறைவேறுமுன்னே, தாவீது எழுந்து, தன் மனுஷரைக் கூட்டிக் கொண்டுபோய், பெலிஸ்தரில் இருநூறுபேரை வெட்டி, அவர்கள் நுனித்தோல்களைக் கொண்டுவந்து, தான் ராஜாவுக்கு மருமகனாகும்படிக்கு, அவைகளை ராஜாவுக்கு எண்ணிச் செலுத்தினான்; அப்பொழுது சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்.

1சாமு 18:28. கர்த்தர் தாவீதோடிருக்கிறார் என்று சவுல் கண்டறிந்துகொண்டான்; சவுலின் குமாரத்தியாகிய மீகாளும் அவனை நேசித்தாள்.

1சாமு 18:29. ஆகையால் சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து, தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்.

1சாமு 18:30. பெலிஸ்தருடைய பிரபுக்கள் புறப்படுகிறபோதெல்லாம் தாவீது சவுலுடைய ஊழியக்காரர் எல்லாரைப்பார்க்கிலும் புத்திமானாய் நடந்துகொண்டான்; அவன் பேர் மிகவும் கனம்பெற்றது.

சவுலுக்கு தாவீதின்மீது கோபம் அதிகரிக்கிறது. சவுலால் தன்னுடைய கோபத்தை அடக்கி வைக்க முடியவில்லை. சவுல் தாவீதின்மேல் இரண்டு விசை ஈட்டியை எறிந்து, தன் கோபத்தையும், பகையையும், விசனத்தையும், காய்மகாரத்தையும் வெளிப்படுத்தினார். சவுலின் கோபம் அதிகரிக்கும்போது, அவர் உடனே தாவீதுக்கு விரோதமாய்த் தீங்கு செய்கிறார்.

தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலை கலக்கிக்கொண்டிருந்தாலும், அவர் பல சமயங்களில் சொஸ்தமடைந்து, நிதானமாய் சிந்திக்கிறார். கர்த்தர் தாவீதோடே கூடயிருக்கிறார் என்பதையும், அவர் தன்னைவிட்டு விலகிப்போனார் என்பதையும் சவுல் காண்கிறார். இதன் நிமித்தமாய் சவுல் தாவீதுக்கு பயப்படுகிறார்.

ஏரோது ராஜா யோவான்ஸ்நானனுக்கு பயந்ததுபோல, சவுல் தாவீதுக்கு பயப்படுகிறார். "அதேனென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்" (மாற் 6:20).

கர்த்தர் தன்னைவிட்டு விலகிப்போனார் என்பதை சவுலால் உணர முடிகிறது. அதே வேளையில் கர்த்தர் தாவீதோடுகூட இருக்கிறார் என்பதையும் சவுல் உணருகிறார். தாவீதைப் பார்க்கும்போதெல்லாம், அவரைப்பற்றி நினைக்கும்போதெல்லாம், சவுலுக்கு பயமுண்டாகிறது.

சவுலைப்போலவே நாமும் சில வேளைகளில், ஒரு சில மனுஷரைப் பார்த்து பயப்படுகிறோம். வேறு சிலரைப் பார்த்து சந்தோஷப்படுகிறோம். நாம் யாருக்காவது தீங்கு செய்யவேண்டுமென்று நினைத்தால், நமக்குள்ளே அவர்களைக் குறித்து பயம் வந்துவிடும். நாம் யாருக்காவது நன்மை செய்யவேண்டுமென்று நினைத்தால், நமக்குள்ளே அவர்களைக் குறித்து சந்தோஷம் வந்துவிடும். ஆகையினால் நாம் மற்றவர்களிடத்தில் பழகும்போதும் அவர்களைப்பற்றி சிந்திக்கும்போதும், நன்மையான காரியங்களையே யோசிக்கவேண்டும்.

சவுல் தாவீதை தன்னைவிட்டு அப்புறப்படுத்தி, அவரை ஆயிரம்பேருக்கு அதிபதியாக வைக்கிறார்; அப்படியே தாவீது ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்கிறார் (1சாமு 18:13). இஸ்ரவேல் தேசத்திலே பல படைப்பிரிவுகள் இருக்கிறது. சவுல் தாவீதை ஆயிரம் பேர் கொண்ட ஒரு படைப்பிரிவுக்கு அதிபதியாக நியமிக்கிறார். தாவீதை அரண்மனையைவிட்டு வெளியேற்றிவிட்டால், அவருக்கு அரண்மனை காரியங்களில் பழக்கமில்லாமல் போய்விடும். தாவீதின் மனதிலே ராஜாங்கத்தைக் குறித்த சிந்தனை இருக்காது என்று சவுல் நினைக்கிறார்.

சவுல் மதியீனமாக யோசித்து, தாவீதுக்கு மதியீனமான காரியத்தை செய்கிறார். தாவீதை ஒடுக்கவேண்டுமென்பது சவுலின் திட்டம். ஆனால் அவர் தாவீதை ஒடுக்குவதற்கு பதிலாக, அவரை ஜனங்கள் மத்தியிலே வளர்த்துவிடுகிறார். தாவீது அரண்மனையில் இல்லாவிட்டாலும், இஸ்ரவேல் தேசத்து ஜனத்திற்கு முன்பாக போக்கும் வரத்துமாயிருக்கிறார்.

அரண்மனையிலுள்ள ஜனங்கள் தாவீதின்மேல் பிரியமாயிருப்பதுபோல, இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஜனங்களும் அவர்மீது பிரியமாயிருக்கிறார்கள். இஸ்ரவேலரும் யூதா ஜனங்களுமாகிய யாவரும் தாவீதைச் சிநேகிக்கிறார்கள்; அவர்களுக்கு முன்பாக தாவீது போக்கும் வரத்துமாயிருக்கிறார் (1சாமு 18:16).

தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடக்கிறார்; கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார். தாவீது மகா புத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவருக்குப் பயந்திருக்கிறார் (1சாமு 18:14,15).

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வரும்போதெல்லாம், சவுல் தாவீதை அவர்களுக்கு விரோதமாய் அனுப்புகிறார். பெலிஸ்தரின் கை தாவீதின்மேல் விழவேண்டும் என்பதும், தன் கை தாவீதின்மேல் விழக்கூடாது என்பதும் சவுலின் சதி திட்டமாயிருக்கிறது. சவுல் தாவீதை நோக்கி: "இதோ, என் மூத்த குமாரத்தியாகிய மேராவை உனக்கு மனைவியாகக் கொடுப்பேன்; நீ எனக்கு நல்ல சேவகனாய்மாத்திரம் இருந்து, கர்த்தருடைய யுத்தங்களை நடத்து" (1சாமு 18:17) என்று சொல்லுகிறார்.

தாவீது தன் ராஜாவுக்கும் நன்மை செய்யவேண்டும், கர்த்தருக்கும் சேவை செய்யவேண்டும் என்று சவுல் தாவீதை உற்சாகப்படுத்துகிறார். அப்போது தன்னுடைய மூத்த குமாரத்தியாகிய மேராவை தாவீதுக்கு மனைவியாகக் கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார். தாவீது ராஜாவின் மருமகனாவதற்கு தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

சவுல் தாவீதுக்கு தன் மகளை மனைவியாகக் கொடுக்க வாக்குப்பண்ணினாலும், தாவீது தன்னைத் தாழ்த்துகிறார். அப்பொழுது தாவீது சவுலைப் பார்த்து: "ராஜாவுக்கு மருமகனாகிறதற்கு நான் எம்மாத்திரம், என் ஜீவன் எம்மாத்திரம், இஸ்ரவேலிலே என் தகப்பன் வம்சமும் எம்மாத்திரம்" (1சாமு 18:18) என்று சொல்லுகிறார்.

சவுல் தன் மூத்த குமாரத்தியாகிய மேராவை தாவீதுக்கு மனைவியாகக் கொடுக்க வாக்குப்பண்ணினாலும், அதற்குரிய காலம் வரும்போது, சவுல் தாவீதை வஞ்சித்துவிடுகிறார். சவுலின் குமாரத்தியாகிய மேராப் தாவீதுக்குக் கொடுக்கப்படுங் காலம் வந்தபோது, அவள் மேகோலாத்தியனாகிய ஆதரியேலுக்கு மனைவியாகக் கொடுக்கப்படுகிறாள் (1சாமு 18:19).

சவுலின் வார்த்தைகளும் செய்கைகளும் நம்பக்கூடியதாயில்லை. அவருடைய பேச்சும் செயலும் வித்தியாசமாயிருக்கிறது. தாவீது சவுலின் மாறுபாட்டை பார்த்து, அவர்மீது கோபப்படவில்லை. மேரா தனக்கு மனைவியாகக் கொடுக்கப்படவில்லை என்னும் ஏமாற்றம், தாவீதின் மனதில் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த சூழ்நிலையில், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதை நேசிக்கிறாள்; அது சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, அது அவருக்குச் சந்தோஷமாயிருக்கிறது (1சாமு 18:20). சவுல் தாவீதுக்கு இன்னும் தீங்கு செய்யவேண்டும் என்று நினைக்கிறார்.

மீகாள் தாவீதுக்கு கண்ணியாயிருக்கவேண்டும். பெலிஸ்தரின் கை தாவீதின்மேல் விழவேண்டும். இதற்காக தன்னுடைய குமாரத்தியாகிய மீகாளை தாவீதுக்கு கொடுக்கவேண்டும் என்று சவுல் சதிஆலோசனை பண்ணுகிறார். சவுல் தாவீதை நோக்கி, "நீ என்னுடைய இரண்டாம் குமாரத்தியினால் இன்று எனக்கு மருமகனாவாய்" (1சாமு 18:21) என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு சவுலின் வார்த்தைகளை நம்புவதா, நம்பாமலிருப்பதா என்று தெரியவில்லை. ஆனாலும் சவுல் தன்னுடைய சதிஆலோசனைக்கு, தன்னுடைய ஊழியக்காரரை உடந்தையாயிருக்கப்பண்ணுகிறார்.

சவுல் தன் ஊழியக்காரரைப் பார்த்து: "நீங்கள் தாவீதோடே இரகசியமாய்ப் பேசி: இதோ, ராஜா உன்மேல் பிரியமாயிருக்கிறார்; அவருடைய ஊழியக்காரர் எல்லாரும் உம்மைச் சிநேகிக்கிறார்கள்; இப்போதும் நீர் ராஜாவுக்கு மருமகனானால் நலம் என்று சொல்லுங்கள்" (1சாமு 18:22) என்று கற்பிக்கிறார். சவுலின் ஊழியக்காரர் இந்த வார்த்தைகளைத் தாவீதின் செவிகள் கேட்கப் பேசுகிறார்கள்.

தாவீது இப்போதும் தன்னை மிகவும் தாழ்த்துகிறார். சவுலின் ஊழியக்காரர், தாவீதுக்கும் சவுலுக்கும் நடுவே வேவுகாரரைப்போல செயல்படுகிறார்கள். சவுல் சொல்லுவதை தாவீதிடத்திலும், தாவீது சொல்லுவதை சவுலிடத்திலும் சொல்லுகிறார்கள்.

சவுலின் ஊழியக்காரர், தாவீதிடம் மீகாளைப்பற்றிச் சொன்னபோது, தாவீது அவர்களிடம், "நான் ராஜாவுக்கு மருமகனாகிறது லேசான காரியமா? நான் எளியவனும், அற்பமாய் எண்ணப்பட்டவனுமாயிருக்கிறேன்" (1சாமு 18:23) என்று சொல்லுகிறார். "தாவீது இன்ன இன்னபடி சொன்னான்" என்று சவுலின் ஊழியக்காரர் சவுலுக்கு அறிவிக்கிறார்கள்" (1சாமு 18:24).

தாவீதை பெலிஸ்தரின் கையினால் விழப்பண்ணுவதே சவுலுடைய எண்ணமாயிருக்கிறது. பெலிஸ்தர் தாவீதைக் கொன்றுபோடவேண்டும் என்று சவுல் விரும்புகிறார். சவுலின் மனச்சாட்சி மழுங்கிப்போயிருக்கிறது. அவர் தாவீதுக்கு விரோதமாய் தொடர்ந்து தீங்கு செய்கிறார்.

சவுல் வேஷம் போடுகிறார். சவுலின் மனதில் தாவீதைக் குறித்து விசனமும், கோபமும், பொறாமையும் இருக்கிறது. ஆனால் சவுல் தாவீதின்மேல் பிரியமாயிருப்பதுபோல பாசாங்கு பண்ணுகிறார். சவுல் தன்னுடைய ஊழியக்காரரிடம், "ராஜா பரிசத்தை விரும்பாமல், பெலிஸ்தரின் நூறு நுனித்தோல்களினால் ராஜாவின் சத்துருக்களிடத்தில் பழிவாங்க விருப்பமாயிருக்கிறார் என்று தாவீதுக்குச் சொல்லுங்கள்" (1சாமு 18:25) என்று சொல்லுகிறார். "என் கையல்ல பெலிஸ்தரின் கையே தாவீதின்மேல் விழட்டும்" (1சாமு 18:17) என்பதே சவுலின் திட்டம்.

தன்னுடைய குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு கண்ணியாயிருக்கவேண்டும் என்பதும், பெலிஸ்தரின் கை தாவீதின்மேல் விழவேண்டும் என்பதும், இதற்காக தன் மகள் மீகாளை தாவீதுக்கு கொடுக்கவேண்டும் என்பதும் சவுலின் சதி திட்டமாயிருக்கிறது.

சவுல் தனக்கு விரோதமாக தொடர்ந்து தீங்கு செய்தாலும், தாவீது அவருக்கு விரோதமாய் ஒரு தீங்கும் செய்யவில்லை. தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடக்கிறார். கர்த்தர் அவரோடே கூடயிருக்கிறார். தாவீது ஒருபோதும் சவுலுக்கு விரோதமாய் முறுமுறுக்கவில்லை. அவர் சவுலுக்கு விரோதமாகக் கலகம்பண்ணவுமில்லை. இஸ்ரவேலின் சிங்காசனத்திலிருந்து சவுலை கீழே தள்ளிவிட்டு, அந்த ஸ்தானத்திலே தான் அமரவேண்டும் என்றும் தாவீது சதிபண்ணவில்லை.

சவுல் தனக்கு ஒப்படைத்த எல்லா பொறுப்புக்களையும் நேர்த்தியாய்ச் செய்கிறார். அவர் தன்னுடைய செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடக்கிறார். கர்த்தர் தாவீதோடே கூடயிருக்கிறார். ஆகையினால் தாவீதின் காரியங்களெல்லாம் நலமாய் நடைபெறுகிறது. கர்த்தர் தாவீதினுடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கிறார். தாவீது ராஜாவுக்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் சேவை செய்கிறார். கர்த்தர் தாவீதுக்கு ஜெயத்தைக் கொடுக்கிறார்.

தன்னுடைய மகளை தாவீதுக்கு மனைவியாகக் கொடுக்கப்போவதாக சவுல் இரண்டுமுறை சொன்னார். இவ்விரண்டு சம்பவங்களிலும் தாவீது தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். சவுல் இந்த சம்பவத்தை சாதாரணமாய்ச் சொன்னாலும், தாவீது தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "ராஜாவுக்கு மருமகனாகிறதற்கு நான் எம்மாத்திரம்" என்று சொல்லுகிறார்.

நாம் ஆவிக்குரிய உபதேசங்களைக் கேட்கும்போது, நம்முடைய சிந்தையிலும் வார்த்தைகளிலும் பணிவு இருக்கவேண்டும். நம்மிடத்தில் தாழ்வு மனப்பான்மை இருக்கக்கூடாது. ஆனால் நம்மிடத்தில் மனத்தாழ்மை இருக்கவேண்டும். நாம் யாரை கனம்பண்ணவேண்டுமோ, அவர்களுக்கு கனத்தையும் மரியாதையையும் செலுத்தவேண்டும்.

தாவீது ராஜாவைப்பற்றி உயர்வாய்ப் பேசுகிறார். தன்னைப்பற்றியோ மிகுந்த மனத்தாழ்மையோடு சொல்லுகிறார். "நான் எம்மாத்திரம், என் ஜீவன் எம்மாத்திரம், இஸ்ரவேலிலே என் தகப்பன் வம்சமும் எம்மாத்திரம்" (1சாமு 18:18) என்று தாவீது தன்னைப்பற்றியும் தன்னுடைய வம்சத்தைப்பற்றியும் சொல்லுகிறார். மேலும் தாவீது தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் எளியவனும், அற்பமாய் எண்ணப்பட்டவனுமாயிருக்கிறேன்" (1சாமு 18:23) என்று சொல்லுகிறார்.

தாவீதின் வார்த்தையில் காணப்படுகிற பணிவு, விசுவாசிகளாகிய நம்மிடத்திலும் காணப்படவேண்டும். கர்த்தர் நம்மை எவ்வளவுதான் உயர்த்தினாலும், நாம் நம்மைப்பற்றி நினைக்கும்போது, மிகுந்த மனத்தாழ்மையோடு நினைக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் பெருமையோ, ஆணவமோ, அகம்பாவமோ இருக்கக்கூடாது.

தாவீது சவுலின் குமாரத்தியை விவாகம்பண்ணவேண்டுமென்றால், பெலிஸ்தரின் நூறு நுனித்தோல்களை ராஜாவுக்கு செலுத்தவேண்டும். ராஜா தாவீதிடத்தில் பரிசத்தை விரும்பவில்லை. சவுலின் ஊழியக்காரர், தாவீதினிடத்தில், சவுலின் விருப்பத்தை சொல்லுகிறார்கள். அப்போது ராஜாவுக்கு மருமகனாகிறது தாவீதுக்கு பிரியமாயிருக்கிறது (1சாமு 18:26).

பெலிஸ்தருடைய கை தன்னைக் கொன்றுபோடுவதற்கு சவுல் சதிபண்ணுகிறார் என்று தாவீது நினைக்கவில்லை. அவர் சவுலை சந்தேகப்படவுமில்லை. கர்த்தர் தன்னோடு கூடயிருக்கிறார் என்பது தாவீதுக்கு நன்றாய்த் தெரியும். கர்த்தர் தன்னை வழிநடத்துவார் என்றும், தன்னை பாதுகாத்து பராமரிப்பார் என்றும் தாவீது கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கிறார். சவுல் தனக்கு விரோதமாக தீங்கு நினைத்தாலும், அது வாய்க்காதே போகும், பெலிஸ்தரால் தன் ஜீவனுக்கு சேதம் ஏற்படுத்த முடியாது என்று தாவீது நம்புகிறார். தாவீதின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

சவுல் சொன்ன அந்த குறித்த நாட்கள் நிறைவேறுமுன்னே, தாவீது எழுந்து, தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டுபோய், பெலிஸ்தரில் இருநூறுபேரை வெட்டி, அவர்கள் நுனித்தோல்களைக் கொண்டுவந்து, தான் ராஜாவுக்கு மருமகனாகும்படிக்கு, அவைகளை ராஜாவுக்கு எண்ணிச் செலுத்துகிறார். அப்பொழுது சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை தாவீதுக்கு மனைவியாகக் கொடுக்கிறார் *(1சாமு 18:27)*.

கர்த்தர் தாவீதோடிருக்கிறார் என்று சவுல் கண்டறிந்துகொள்கிறார்; சவுலின் குமாரத்தியாகிய மீகாளும் தாவீதை நேசிக்கிறாள். ஆகையால் சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து, தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருக்கிறார் *(1சாமு 18:28,29)*.

தாவீது சவுலின் குமாரத்தியாகிய மீகாளை திருமணம் செய்து கொண்ட பின்பும், தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு தொடர்ந்து நன்மை செய்கிறார். பெலிஸ்தருடைய பிரபுக்கள் புறப்படுகிறபோதெல்லாம் தாவீது சவுலுடைய ஊழியக்காரர் எல்லாரைப்பார்க்கிலும் புத்திமானாய் நடந்துகொள்கிறார்; தாவீதின் பேர் மிகவும் கனம்பெறுகிறது *(1சாமு 18:30)*.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போதெல்லாம், தாவீது அவர்களை எதிர்த்து நிற்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே திருமணமான புருஷர்கள், முதல் வருஷத்திலே யுத்தத்திற்கு போகவேண்டியதில்லை.

"ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாய் விவாகம்பண்ணியிருந்தால், அவன் யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம்; அவன்மேல் யாதொரு வேலையும் சுமத்தவேண்டாம்; அவன் ஒரு வருஷபரியந்தம் தன் வீட்டில் தன் இஷ்டப்படியிருந்து, தான் விவாகம் பண்ணின ஸ்திரீயைச் சந்தோஷப்படுத்துவானாக" *(உபா 24:5)*.

தாவீதோ, மீகாளை விவாகம் செய்துகொண்டாலும், இந்த சலுகையை பயன்படுத்தி, வீட்டிலே சும்மாயிருக்கவில்லை. பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக புறப்பட்டு வருகிறபோதெல்லாம், தாவீதும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்.

சவுலின் சதிஆலோசனையினால் தாவீதுக்கு தீமை ஏற்படாமல், நன்மையே ஏற்பட்டது. தன்னுடைய குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு கண்ணியாயிருப்பாள் என்று நினைத்து, சவுல் அவளை தாவீதுக்கு மனைவியாகக் கொடுத்தார். ஆனால் மீகாளோ சவுலுக்கு கண்ணியாயில்லை. அவள் சவுலை நேசிக்கிறாள்.

பெலிஸ்தரின் கை தாவீதின்மேல் விழவேண்டும் என்று சவுல் எதிர்பார்த்தார். இதற்காக தாவீது பெலிஸ்தரின் நூறு நுனித்தோல்களை தனக்கு செலுத்தவேண்டும் என்று சவுல் சொன்னார். இது தாவீதுக்கு ஆபத்தான வேலை. ஆனால் தாவீதோ தன்மனுஷரைக் கூட்டிக்கொண்டுபோய், பெலிஸ்தரில் இருநூறு பேரை வெட்டி, அவர்கள் நுனித்தோல்களைக் கொண்டுவந்து, தான் ராஜாவுக்கு மருமகனாகும்படிக்கு, அவைகளை ராஜாவுக்கு எண்ணிச் செலுத்துகிறார். இதனால் தாவீதின் பேர் மிகவும் கனம் பெறுகிறது.

தாவீதை கொன்றுபோடவேண்டுமென்று சவுல் சதிபண்ணினார். கர்த்தர் தாவீதோடு கூடயிருந்ததினால், தாவீது செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் அவருக்கு ஜெயம் கிடைக்கிறது, தாவீது ஒவ்வொரு நாளும் இஸ்ரவேலின் சிங்காசனத்திற்கு அருகாமையில் வந்துகொண்டிருக்கிறார். ராஜாவின் கிரீடத்தை தரித்துக்கொள்வதற்கு தாவீது ஆயத்தமாயிருக்கிறார்.

19 அதிகாரம்

தாவீது சவுலின் குமாரத்தியாகிய மீகாளை விவாகம்பண்ணுகிறார். அதன் பின்பு தாவீதுக்கு மரண ஆபத்துக்கள் வருகிறது. சவுலின் பட்டயம் தாவீதுக்கு விரோதமாய்த் திரும்பியிருக்கிறது. யோனத்தான் தாவீதுக்காக சவுலிடம் பரிந்துபேசுகிறார். இதனால், தாவீது சவுலின் கைக்கு தப்பிக்கிறார் (1சாமு 19:1-7). இரண்டாம் முறையும் சவுல் தாவீதை கொன்றுபோட முயற்சி பண்ணுகிறார். இம்முறை, தாவீது சவுலின் பட்டயத்திற்கு விலகி தப்பிக்கிறார் (1சாமு 19:8-10).

சவுல் தாவீதை கொண்டு வர தன் சேவகரை அனுப்புகிறார். இம்முறை, தாவீதின் மனைவி மீகாள், தாவீது தப்பிக்கிறதற்கு உதவிசெய்கிறாள் (1சாமு 19:11-17). நான்காம் முறையாகவும் தாவீதுக்கு சவுல் மூலமாய் ஆபத்து வருகிறது. இம்முறை சாமுவேல் சவுலைப் பாதுகாக்கிறார் (1சாமு 19:18-24).

சவுலும் யோனத்தானும்
1சாமு 19:1-7

1சாமு 19:1. தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் எல்லோரோடும் பேசினான்.

1சாமு 19:2. சவுலின் குமாரனாகிய யோனத்தானோ, தாவீதின்மேல் மிகவும் பிரியமாயிருந்தான்; அதனால் யோனத்தான் தாவீதுக்கு அதை அறிவித்து: என் தகப்பனாகிய சவுல் உம்மைக் கொன்றுபோட வகைதேடுகிறார்; இப்போதும் நாளைக்காலமே நீர் எச்சரிக்கையாயிருந்து, மறைவான இடத்தில் ஒளித்துக்கொண்டிரும்.

1சாமு 19:3. நான் புறப்பட்டுவந்து, நீர் வெளியிலிருக்கும் இடத்தில் என் தகப்பன் பக்கத்திலே நின்று, உமக்காக என் தகப்பனோடே பேசி, நடக்கும் காரியத்தைக் கண்டு, உமக்கு அறிவிப்பேன் என்றான்.

1சாமு 19:4. அப்படியே யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலோடே தாவீதுக்காக நலமாய்ப் பேசி, ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யவில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக்கிறதே.

1சாமு 19:5. அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரவேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைத் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன் என்றான்.

1சாமு 19:6. சவுல் யோனத்தானுடைய சொல்லைக்கேட்டு: அவன் கொலைசெய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டான்.

1சாமு 19:7. பின்பு யோனத்தான் தாவீதை அழைத்து, அந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்து, அவனைச் சவுலண்டையிலே கூட்டிக்கொண்டு போய்விட்டான்; அப்படியே அவன் முன்போலவே அவனுடைய சமுகத்தில் இருந்தான்.

யோனத்தான் சவுலின் குமாரன். ஆனாலும் இவ்விருவருடைய சுபாவங்களும் வித்தியாசமாயிருக்கிறது. யோனத்தான் தாவீதை சிநேகிக்கிறார். சவுலோ தாவீதைப் பகைக்கிறார். சவுல் தாவீதுக்கு விரோதமாக மூர்க்ககுணத்தோடிருக்கிறார். சவுல் தாவீதைக் கொன்றுபோட முயற்சி பண்ணுகிறார். ஆனால் அவருடைய முயற்சி சித்திக்கவில்லை.

தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் எல்லோரோடும் பேசுகிறார் (1சாமு 19:1). தாவீதுக்கு விரோதமாக சவுல் பொய்யான குற்றச்சாட்டுகளை சொல்லுகிறார். அவருக்கு விரோதமாய்த் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார். தாவீதை கொன்றுபோடுவதற்கு சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார். வாய்ப்பு கிடைக்கும்போது தாவீதைக் கொன்றுபோடு வதற்கு சவுல் ஆயத்தமாயிருக்கிறார்.

யோனத்தானும் தாவீதும் நெருங்கிய சிநேகிதர்களாயிருக்கிறார்கள் என்பது சவுலுக்கு தெரியும். சவுலோ தன் குமாரனாகிய யோனத்தானின் சிநேகிதனையே கொன்றுபோடவேண்டும் என்று கோபத்தோடிருக்கிறார். சவுலின் சுபாவம் விநோதமாயிருக்கிறது.

யோனத்தான் தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று சவுல் எதிர்பார்க்கிறார். சவுலுக்கு பின்பு, யோனத்தான் இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அமரவேண்டும். ஆனால் தாவீது யோனத்தானுக்கு போட்டியாக வந்திருக்கிறார். தனக்கு விரோதமாக எழும்பியிருக்கிற தாவீதை யோனத்தான் கொன்றுபோட வேண்டும் என்று சவுல் எதிர்பார்க்கிறார். ஆனால் யோனத்தானோ, தாவீதின்மீது விரோதமாயிராமல், அவர்மீது அன்பாயிருக்கிறார்.

தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதற்கு கர்த்தர் அவரை ஆயத்தம்பண்ணுகிறார். இதனால் சவுலுக்கு தாவீதின்மீது பொறாமை உண்டாயிற்று. தன்னைப்போலவே, யோனத்தானும் தாவீதின்மேல் பொறாமைப் படவேண்டும் என்று சவுல் எதிர்பார்க்கிறார். ஆனால் யோனத்தானுடைய இருதயத்தில், பொறாமைக்கு பதிலாக, அன்பு நிரம்பியிருக்கிறது.

யோனத்தானுக்கும் தாவீதுக்கும் இடையே உள்ள சிநேகம் நெருக்கமாயிருக்கிறது. யோனத்தான் தன் ஆத்துமாவை நேசிப்பதுபோல தாவீதை நேசிக்கிறான். தாவீது இஸ்ரவேல் தேசத்திலே உயருகிறார். அவருக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கிறது. யோனத்தானுடைய மதிப்பு குறைகிறது. ஆனாலும் யோனத்தான் தாவீதின்மேல் பொறாமைப்படாமல், கோபப்படாமல், அவனை நேசிக்கிறார்.

இஸ்ரவேலின் கிரீடம் தாவீதின் சிரசின்மீது சூட்டப்படும். இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும் தாவீதை சிநேகிக்கிறார்கள். அவர்கள் தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறார்கள். தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்திலே மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கிறது. ஆனாலும் யோனத்தான் தாவீதின்மேல் பொறாமைப்படாமல், அவர்மீது சிநேகமாயிருக்கிறார்.

சவுல் மூலமாக தாவீதுக்கு ஆபத்து வருகிறது. இது யோனத்தானுக்கும் தெரிகிறது. தனக்குப் போட்டியாகயிருக்கும் தாவீதை, சவுலின் துணையோடு கொன்றுபோடவேண்டுமென்று யோனத்தான் நினைக்கவில்லை. யோனத்தான் தாவீதைக் கொன்று போடுவதற்குப் பதிலாக, அவரை உயிரோடு காப்பதற்கு உதவிசெய்கிறார்.

சவுலின் குமாரனாகிய யோனத்தானோ, தாவீதின்மேல் மிகவும் பிரியமாயிருக்கிறான்; அதனால் யோனத்தான் தாவீதுக்கு சவுலின் சதிஆலோசனையை அறிவிக்கிறான். "என் தகப்பனாகிய சவுல் உம்மைக் கொன்றுபோட வகைதேடுகிறார்; இப்போதும் நாளைக்காலமே நீர் எச்சரிக்கையாயிருந்து, மறைவான இடத்தில் ஒளித்துக்கொண்டிரும்" (1சாமு 19:2) என்று யோனத்தான் தாவீதுக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

சவுல் தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு எல்லோரோடும் பேசிக்கொண்டிருக்கிறார். சவுலின் சதிஆலோசனைகள் யோனத்தானுக்கும் தெரிகிறது. சவுல் தாவீதுக்கு விரோதமாய் இன்னும் என்னென்ன ஆலோசனைகளைச் செய்கிறார் என்பதை அறிந்து அதை தாவீதுக்கு அறிவிப்பதாக யோனத்தான் வாக்குப்பண்ணுகிறார்.

யோனத்தான் தாவீதை நோக்கி, "நான் புறப்பட்டுவந்து, நீர் வெளியிலிருக்கும் இடத்தில் என் தகப்பன் பக்கத்திலே நின்று, உமக்காக என் தகப்பனோடே பேசி, நடக்கும் காரியத்தைக் கண்டு, உமக்கு அறிவிப்பேன்" (1சாமு 19:3) என்று சொல்லுகிறான்.

சவுல் தாவீதின்மேல் கோபமாயிருந்தாலும், அவருடைய கோபத்தை குறைப்பதற்கு யோனத்தான் முயற்சி பண்ணுகிறான். தாவீதுக்கும் சவுலுக்கும் இடையே சமாதானமும், ஒப்புரவாதலும் உண்டாவதற்கு யோனத்தான் சவுலிடம் தாவீதுக்காக பரிந்து பேசுகிறான்.

யோனத்தான் தன்னுடைய யோசனைகளை தாவீதுக்கு சொன்ன பின்பு, மறுநாள் காலையிலே, தன் தகப்பனாகிய சவுலோடே, தாவீதுக்காக நலமாய்ப் பேசுகிறான். "ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யவில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக்கிறதே" (1சாமு 19:4) என்று யோனத்தான் தாவீதைப்பற்றி சவுலுக்கு சொல்லுகிறான்.

தாவீது சவுலுக்கு இதுவரையிலும் ஒரு தீங்கும் செய்ததில்லை. அவர் இதுவரையிலும் சவுலுக்கு நன்மையே செய்திருக்கிறார். தாவீது கோலியாத்தைக் கொன்றுபோட்டது, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் பெரிய ரட்சிப்பாயிருக்கிறது. தாவீது சவுலுக்கும் இஸ்ரவேல் ஜனத்திற்கும் நன்மை செய்திருக்கும்போது, அவரைக் கொல்லுவது பாவம் என்று யோனத்தான் சவுலுக்கு சொல்லுகிறான்.

யோனத்தான் சவுலிடம், "தாவீது தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரவேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைத் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன்" (1சாமு 19:5) என்று சொல்லுகிறான்.

யோனத்தான் சவுலிடம் தாவீதுக்காக பரிந்து பேசுகிறான். யோனத்தானின் வார்த்தையில் தெளிந்த சிந்தனையும், புத்தியும், ஞானமும் இருக்கிறது. தாவீது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் அநேக நன்மைகளை செய்திருக்கிறார். அவர் சவுலுக்கும் உதவி செய்திருக்கிறார். சவுலை பொல்லாத ஆவி பிடித்தபோது, தாவீது அவருக்கு அருகில் நின்று, சுரமண்டலத்தை இசைத்து, சவுல் சொஸ்தமாவதற்கு உதவிசெய்திருக்கிறார்.

தாவீது கோலியாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவனைக் கொன்றுபோட்டதை இஸ்ரவேல் தேசத்தில் ஒருவரும் மறக்கவில்லை. தாவீதின் வீரமான செயலினால், சவுலின் ஜீவனும், இஸ்ரவேல் தேசமும் பெலிஸ்தரின் கைகளிலிருந்து இரட்சிக்கப்பட்டது.

தாவீது யாருக்கும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. அவருடைய இரத்தம் குற்றமில்லாத இரத்தம். சவுல் தாவீதைக் கொன்றுபோடவேண்டும் என்று நினைப்பதற்கு முகாந்தரம் எதுவுமில்லை. தாவீதைக் கொல்லுவது பாவம். குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாகப் பாவம் செய்தால், அதனால் தன் குடும்பத்திற்கு சாபம் வரும் என்று யோனத்தான் பயப்படுகிறார்.

யோனத்தானுடைய புத்தியுள்ள ஆலோசனை சவுலின் இருதயத்தைத் தொடுகிறது. சவுல் யோனத்தானுடைய சொல்லைக்கேட்டு: "தாவீது கொலைசெய்யப் படுவதில்லை" என்று சவுல் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறார் (1சாமு 19:6). கர்த்தர் சவுலின் இருதயத்தைத் தொடுகிறார். யோனத்தானுடைய ஆலோசனைகளைக் கேட்குமாறு, கர்த்தருடைய ஆவியானவர் சவுலை வழிநடத்துகிறார்.

தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும், தன் ஊழியக்காரர் எல்லோரோடும் இதற்கு முன்பு சொல்லியிருந்தார். இப்போதோ, சவுல் தன்னுடைய கட்டளையை திரும்பப் பெற்றுக்கொள்கிறார். "தாவீது கொலைசெய்யப்படுவதில்லை" என்று சவுல் சொல்லுகிறார். தன்னுடைய வார்த்தைகளை உறுதிபண்ணும் விதமாக, சவுல் இந்த வாக்கியத்தை, கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறார்.

சவுல் இப்போது தெளிந்த சிந்தனையிலிருக்கிறார். நல்ல மனதோடும், நல்ல புத்தியோடும் இப்படி பேசுகிறார். யோனத்தானின் வார்த்தைகள் சவுலின் மனச்சாட்சியை தொட்டிருக்கிறது. ஆனாலும் சவுலின் மனது சீக்கிரத்தில் பின்மாற்றமடைகிறது. அவருக்குள் துர்க்குணமுண்டாகிறது. அசுத்த ஆவியின் பொல்லாத கிரியைகள் சவுலை ஆளுகை செய்கிறது. சவுல் சற்று நேரத்திற்கு முன்பு, "தாவீது கொலைசெய்யப்படுவதில்லை" என்று சொன்னாலும், அவர் சீக்கிரத்தில் மனம்மாறி, தாவீதை கொலைசெய்ய முயற்சி பண்ணுகிறார்.

சவுல் இப்போது மனந்திரும்பியிருக்கிறார். தாவீது கொலை செய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறார். யோனத்தானுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. யோனத்தான் தாவீதை மறுபடியும் அரண்மனைக்கு அழைத்து வர முயற்சி பண்ணுகிறான்.

பின்பு யோனத்தான் தாவீதை அழைத்து, சவுல் சொன்ன அந்த வார்த்தைகளையெல்லாம் தாவீதுக்கு அறிவித்து, தாவீதைச் சவுலண்டையிலே கூட்டிக்கொண்டுபோய்விடுகிறான்; அப்படியே தாவீது முன்போலவே சவுலுடைய சமுகத்தில் இருக்கிறார் *(1சாமு 19:7)*. தனக்கு விரோதமாக வந்த ஆபத்து நின்றுபோயிற்று என்று தாவீது நினைக்கிறார்.

தாவீதும் சவுலும் 1சாமு 19:8-10

1சாமு 19:8. மறுபடியும் ஒரு யுத்தம் உண்டாயிற்று; அப்பொழுது தாவீது புறப்பட்டுப்போய், பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணி, அவர்களுக்குள் மகா சங்காரம்பண்ணினதினால் அவர்கள் அவனுக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள்.

1சாமு 19:9. கர்த்தரால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது; அவன் தன் வீட்டில் உட்கார்ந்து, தன் ஈட்டியைக் கையிலே பிடித்துக்கொண்டிருந்தான்; தாவீது தன் கையினாலே சுரமண்டலம் வாசித்தான்.

1சாமு 19:10. அப்பொழுது சவுல்: தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக்குத்திப்போடப் பார்த்தான்; ஆனாலும் இவன் சவுலுக்கு விலகினதினாலே, அவன் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது; தாவீதோ அன்று இராத்திரி ஓடிப்போய், தன்னைத் தப்புவித்துக்கொண்டான்.

தாவீது முன்புபோலவே இப்போதும், சவுலுக்கும் இஸ்ரவேல் தேசத்திற்கும் சேவை செய்கிறார். தாவீதின் பட்டயம் இஸ்ரவேல் புத்திரைப் பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

மறுபடியும் இஸ்ரவேல் தேசத்திலே ஒரு யுத்தம் உண்டாயிற்று; பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். அப்பொழுது தாவீது புறப்பட்டுப்போய், பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணி, அவர்களுக்குள் மகா சங்காரம்பண்ணினதினால் அவர்கள் தாவீதுக்கு முன்பாக முறிந்தோடிப்போகிறார்கள் *(1சாமு 19:8)*.

தனக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு நன்மை செய்கிறார். பெலிஸ்தர் மறுபடியும் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தபோது, தாவீதின் மதிப்பும் மரியாதையும் மறுபடியும் அதிகரிக்கிறது. தாவீது இந்த யுத்தத்திலும், தன்னுடைய வீரத்தையும், விவேகத்தையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தாவீதோடு கூடயிருக்கிறார். அவர் தாவீதை உயர்த்துகிறார்.

தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினாலும், அவர் சவுல் ராஜாவுக்கும் சேவை செய்துகொண்டிருக்கிறார். யுத்தம்பண்ணும்போது தாவீதின் கையிலே பட்டயம் இருக்கிறது. சவுலுக்கு முன்பாக நிற்கும்போது தாவீதின் கையிலே சுரமண்டலம் இருக்கிறது. தாவீது தன்னுடைய வாத்தியக்கருவியையும், இசை இசைக்கும் தாலந்தையும் ராஜாவின் பிரயோஜனத்திற்காக பயன்படுத்துகிறார்.

கர்த்தரால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வருகிறது; சவுல் தன் வீட்டில் உட்கார்ந்து, தன் ஈட்டியைக் கையிலே பிடித்துக்கொண்டிருக்கிறார்; தாவீது சவுலுக்கு முன்பாக தன் கையினாலே சுரமண்டலம் வாசிக்கிறார் (1சாமு 19:9).

தாவீது தன் ஜீவியத்தில் நல்ல சுபாவங்களை வெளிப்படுத்துகிறார். தனக்கு விரோதமாய் தீமை செய்தவர்களுக்கும், தாவீது நன்மை செய்கிறார். தாவீது தன்னுடைய கடமையை செய்யும்போது அவருக்கு பலவிதமான ஆபத்துக்கள் வருவதற்கு வாய்ப்புள்ளது. தாவீது தன்னுடைய பாதுகாப்புக்கு கர்த்தரையே நம்புகிறார்.

சவுல் ஒரு சில நாட்களுக்கு முன்பு யோனத்தானிடம் "தாவீது கொலைசெய்யப்படுவதில்லை" என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார். ஆனால் இப்போதோ சவுலின் மனதில் பின்மாற்றமுண்டாயிற்று. சவுல் யுத்தக்களத்திற்குப்போகாமல் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். அங்கே தன் ஈட்டியை கையில் பிடித்துக்கொண்டிருக்கிறார். வீட்டிற்குள் இருக்கும்போது ஈட்டி தேவைப்படாது. தாவீதின் கையில் சுரமண்டலம் இருக்கிறது. சவுலின் கையில் ஈட்டி இருக்கிறது.

சவுலுக்கு தாவீதின்மேல் கோபமும் பொறாமையும் இருக்கிறது. பொறாமை சவுலின் நல்ல குணத்தை அழித்துப்போடுகிறது. அவருக்குள்ளே பொல்லாத துர்க்குணம் உண்டாகிறது. பொறாமை குணம் சவுலைக் கலங்கப்பண்ணுகிறது. ஆகையினால் சவுல் வீட்டிலிருக்கும்போதுகூட, தன்னுடைய கையில் ஈட்டி இல்லாமல் அவரால் இருக்க முடியவில்லை.

ராஜாவின் கையில் செங்கோலும், உறையில் பட்டயமும் இருப்பது, ராஜாவின் அலங்காரம். சவுல் ஒரு வேளை தன்னுடைய கையில் ஈட்டி இருக்கவேண்டுமென்று நினைத்திருக்கலாம். இதுவே தனக்கு அழகும் அலங்காரமுமாயிருக்கிறது என்று சவுல் விவாதம்பண்ணலாம். ஆனால் சவுலின் மனதிலே தாவீதுக்கு விரோதமான பொறாமையும், தாவீதைக் கொன்றுபோடவேண்டும் என்னும் சதியுமே இருக்கிறது.

சவுல் தன் வீட்டிலே, உட்கார்ந்து தன் ஈட்டியைப் பிடித்துக்கொண்டிருக்கிறார். தாவீது சவுலுக்கு முன்பாக தன் கையினால் சுரமண்டலம் வாசிக்கிறார். அப்பொழுது சவுல்: தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக்குத்திப்போடப் பார்க்கிறார்; ஆனாலும் தாவீது சவுலுக்கு விலகினதினாலே, சவுல் எறிந்த ஈட்டி சுவரிலே படுகிறது; தாவீதோ அன்று இராத்திரி ஓடிப்போய், தன்னைத் தப்புவித்துக்கொள்கிறார் (1சாமு 19:10).

கர்த்தர் தாவீதைப் பாதுகாக்கிறார். தம்மை நம்புகிறவர்களை கர்த்தர் ஒருபோதும் கைவிடவே மாட்டார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக எழும்புகிற ஆயுதம் வாய்க்காதேபோம்.

சவுல் தன் கையிலிருக்கிற ஈட்டியை தாவீதை நோக்கி எறிகிறார். ஆனால் தாவீதோ சவுலுக்கு விலகுகிறார். இதுவும் கர்த்தருடைய கிருபை. அன்று இராத்திரியிலே தாவீது தப்பித்துக்கொள்கிறார். கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பினாலும், தெய்வீக பாதுகாப்பினாலும் தாவீது மரணத்திற்கு தப்பிக்கிறார். இந்த சம்பவத்தை தாவீது தன்னுடைய சங்கீதங்களிலே பல சமயங்களில் பக்தியோடு சொல்லுகிறார். கர்த்தரே தனக்கு கேடகமாயும் அடைக்கலமாயும் இருக்கிறார் என்றும், அவரே தன்னுடைய கன்மலையும், கோட்டையும், பலத்த துருகமுமாயிருக்கிறார் என்றும், கர்த்தரே தன்னுடைய ஆத்துமாவை மரணத்திற்கு தப்புவிக்கிறார் என்றும் சொல்லி தாவீது பயபக்தியோடு கர்த்தரைத் துதிக்கிறார்.

மீகாள்
1சாமு 19:11-17

1சாமு 19:11. தாவீதைக் காவல்பண்ணி, மறுநாள் காலமே அவனைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் அவன் வீட்டிற்குச் சேவகரை அனுப்பினான்; இதைத் தாவீதுக்கு அவன் மனைவியாகிய மீகாள் அறிவித்து: நீர் இன்று இராத்திரியில் உம்முடைய பிராணனைத் தப்புவித்துக் கொள்ளாவிட்டால், நாளைக்கு நீர் கொன்றுபோடப்படுவீர் என்று சொல்லி,

1சாமு 19:12. மீகாள் தாவீதை ஜன்னல்வழியாய் இறக்கிவிட்டாள்; அவன் தப்பி ஓடிப்போனான்.

1சாமு 19:13. மீகாளோ ஒரு சுரூபத்தை எடுத்து, கட்டிலின்மேல் வைத்து, அதின் தலைமாட்டிலே ஒரு வெள்ளாட்டுத்தோலைப்போட்டு, துப்பட்டியினால் மூடிவைத்தாள்.

1சாமு 19:14. தாவீதைக் கொண்டுவரச் சவுல் சேவகரை அனுப்பினபோது, அவர் வியாதியாயிருக்கிறார் என்றாள்.

1சாமு 19:15. அப்பொழுது தாவீதைப் பார்க்கிறதற்குச் சவுல் சேவகரை அனுப்பி, அவனைக் கொன்றுபோடும்படிக்கு, கட்டிலோடே அவனை என்னிடத்திற்கு எடுத்துக்கொண்டுவாருங்கள் என்றான்.

1சாமு 19:16. சேவகர் வந்தபோது, இதோ, சுரூபம் கட்டிலின் மேலும், வெள்ளாட்டுத்தோல் அதின் தலைமாட்டிலும் கிடக்கக் கண்டார்கள்.

1சாமு 19:17. அப்பொழுது சவுல்: நீ இப்படி என்னை ஏய்த்து, என் பகைஞனைத் தப்பவிட்டு அனுப்பினது என்ன என்று மீகாளிடத்தில் கேட்டான். மீகாள் சவுலை நோக்கி: என்னைப் போகவிடு, நான் உன்னை ஏன் கொல்லவேண்டும் என்று அவர் என்னிடத்தில் சொன்னார் என்றாள்.

சவுல் தாவீதுக்கு விரோதமாக இன்னும் தீங்கு நினைக்கிறார். சவுல் தன்னுடைய ஈட்டியினாலே தாவீதை சுவரோடே சேர்த்து உருவக்குத்திப்போட பார்த்தார். ஆனால் தாவீதோ சடுதியாய் விலகினதினால், ஈட்டிக்கு தப்பித்தார். சவுல் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது. தாவீது அன்று இராத்திரியே ஓடிப்போய் தன்னை தப்புவித்துக்கொள்கிறார்.

சவுல் தன்னுடைய சேவகரிடம், தப்பி ஓடிப்போன தாவீதைக் கொன்றுபோடுமாறு கட்டளை கொடுத்து அனுப்புகிறார். தாவீதைக் காவல்பண்ணி, மறுநாள் காலமே அவரைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தாவீதின் வீட்டிற்குச் சேவகரை அனுப்புகிறார் (1சாமு 19:11). இந்த சேவகர்கள் இரவிலே தாவீதின் வீட்டிற்குப் போகவேண்டும். விடியும் வரையிலும் அவருடைய வீட்டின் வாசலில் காத்திருக்கவேண்டும். அதிகாலையிலே தாவீது தன்னுடைய வீட்டின் கதவை திறந்து வெளியே வரும்போது, சவுலின் சேவகர் தாவீதைக் கொன்றுபோடவேண்டும். இதுவே சவுலின் சதிதிட்டம்.

தாவீது இந்த ஆபத்திலிருந்து கர்த்தருடைய கிருபையினால் தப்பித்துக்கொள்கிறார். தாவீது அற்புதமாக விடுவிக்கப்படுகிறார். தாவீதின் மனைவியாகிய மீகாள், தாவீதுக்கு உதவிசெய்கிறாள். மீகாள் தாவீதுக்கு கண்ணியாயிருப்பாள் என்று எதிர்பார்த்து, சவுல் மீகாளை தாவீதுக்கு மனைவியாகக் கொடுத்தார். ஆனால் மீகாளோ தாவீதுக்கு உதவியாயிருக்கிறாள். அவள் தாவீதைப் பாதுகாக்கிறாள்.

சவுலின் சதிஆலோசனை மீகாளுக்கு தெரிந்திருக்கிறது. சவுல் தாவீதின்மீது கோபமாயிருக்கிறார் என்பதும், அவர் தாவீதைக் கொன்றுபோட சதித்திட்டம் போடுகிறார் என்பதும் மீகாளுக்கு தெரிந்திருக்கிறது. மீகாள் சவுலையும், சவுலின் சதித்திட்டத்தையும் சந்தேகப்படுகிறாள். தாவீதைப் பாதுகாப்பதற்கு, தன்னால் முடிந்ததை செய்யவேண்டுமென்று, தீர்மானித்து, மீகாள் ஒரு சில காரியங்களை செய்கிறாள்.

சவுலின் சதித்திட்டத்தை தாவீதுக்கு அவருடைய மனைவியாகிய மீகாள் அறிவிக்கிறாள். "நீர் இன்று இராத்திரியில் உம்முடைய பிராணனைத் தப்புவித்துக்கொள்ளாவிட்டால், நாளைக்கு நீர் கொன்றுபோடப்படுவீர்" (1சாமு 19:11) என்று சொல்லுகிறாள்.

தாவீது ஒரு யுத்தவீரன். அவர் ஒரு பராக்கிரமசாலி. அவருக்கு பட்டயம் பிடித்து யுத்தம்பண்ண தெரியும். மீகாளோ தாவீதை தப்பி ஓடும்படியாக சொல்லுகிறாள். தாவீது தப்பி ஓடவேண்டிய அவசியமில்லை. தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அவருக்கு தெரியும். கோலியாத்தைக் கொன்றுபோட்ட தாவீது, சவுலின் சேவகரையும் கொன்றுபோடுவார். ஆனாலும் தாவீது தன் மனைவியின் ஆலோசனைக்கும் செவிகொடுக்கிறார்.

மீகாள் தாவீதை ஜன்னல்வழியாய் இறக்கிவிடுகிறாள்; தாவீது தப்பி ஓடிப்போகிறார் (1சாமு 19:12). சவுலின் சேவகர், தாவீதின் வீட்டிற்கு வெளியே அவருக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். மீகாளோ தாவீதை ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டு, அவர் தப்பித்து ஓட உதவிசெய்கிறாள். சவுலின் சேவகர் தன் வீட்டிற்குள்ளே பிரவேசித்து தாவீதைத் தேடுவார்கள் என்பது மீகாளுக்கு தெரியும். ஆகையினால் மீகாள் ஒரு சுரூபத்தை எடுத்து, கட்டிலின்மேல் வைத்து, அதின் தலைமாட்டிலே ஒரு வெள்ளாட்டுத்தோலைப்போட்டு, துப்பட்டியினால் மூடிவைக்கிறாள் (1சாமு 19:13).

காலைப்பொழுதிலே மீகாள் தன் வீட்டுக் கதவைத் திறக்கிறாள். வீட்டிலே தாவீது இல்லை. வீட்டிற்கு வெளியே சவுலின் சேவகர் இருக்கிறார்கள். வீட்டின் கதவு திறக்கப்பட்டபோது, சவுலின் சேவகர் தாவீதைப்பற்றிக் கேட்கிறார்கள். மீகாள் அவர்களிடம், "தாவீது வியாதியாயிருக்கிறார்" என்று சொல்லுகிறாள் (1சாமு 19:14).

சவுலின் சேவகர், தாவீது வியாதியாயிருப்பதைக் கேள்விப்பட்டு, சவுலிடத்தில் போய் இந்த விபரத்தை சொல்லுகிறார்கள். சவுலோ தன் சேவகரை தாவீதைப் பார்க்கிறதற்கு மறுபடியும் அனுப்புகிறார். "தாவீதை கொன்றுபோடும்படிக்கு, கட்டிலோடே அவரை என்னிடத்திற்கு எடுத்துக்கொண்டுவாருங்கள்" (1சாமு 19:15) என்று சவுல் தன் சேவகருக்கு சொல்லுகிறார்.

சவுலின் சேவகர் தாவீதின் வீட்டிற்குள்ளே வந்து தாவீதைத் தேடுகிறார்கள். ஆனால் அவர்களால் தாவீதைப் பார்க்க முடியவில்லை. சேவகர் வீட்டிற்கு வந்தபோது, இதோ, சுரூபம் கட்டிலின் மேலும், வெள்ளாட்டுத்தோல் அதின் தலைமாட்டிலும் கிடக்கக் காண்கிறார்கள் (1சாமு 19:16).

தாவீதின் வீட்டிலே, கட்டிலில் அவர் படுத்திருப்பதுபோல தெரிகிறது. ஆனால் அதிலே தாவீது இல்லை. மீகாள் ஒரு சுரூபத்தை கட்டிலின்மேல் வைத்து, வெள்ளாட்டுத்தோலை அதின் தலை மாட்டில் வைக்கிறாள். வெள்ளாட்டுத்தோல் தாவீதின் முடிக்கு அடையாளமாயிருக்கிறது. அதைப் பார்க்கும்போது அங்கே தாவீது படுத்திருப்பதுபோல தெரிகிறது. ஆனாலும் சவுலின் சேவகர், கட்டிலில் தாவீது படுத்திருக்கவில்லை என்பதையும், கட்டிலின்மேல் ஒரு சுரூபம் இருப்பதையும் காண்கிறார்கள். தாங்கள் கண்டதை சவுலுக்கு சொல்லுகிறார்கள்.

சவுலுக்கு தாவீதின்மேல் கோபமுண்டானதுபோல, இப்போது தன் குமாரத்தியாகிய மீகாள் மேலும் கோபமுண்டாயிற்று. சவுல் மீகாளை நோக்கி, "நீ இப்படி என்னை ஏய்த்து, என் பகைஞனை தப்பவிட்டு அனுப்பினது என்ன" (1சாமு 19:17) என்று கேட்கிறார். அதற்கு மீகாள், சவுலை நோக்கி, "என்னைப் போகவிடு, நான் உன்னை ஏன் கொல்லவேண்டும் என்று அவர் என்னிடத்தில் சொன்னார்" (1சாமு 19:17) என்று சொல்லுகிறாள்.

சாமுவேல்
1சாமு 19:18-24

1சாமு 19:18. தாவீது தப்பி, ராமாவிலிருந்த சாமுவேலிடத்திற்குப் போய், சவுல் தனக்குச் செய்தது எல்லாவற்றையும் அவனுக்கு அறிவித்தான்; பின்பு அவனும் சாமுவேலும் போய், நாயோதியிலே தங்கியிருந்தார்கள்.

1சாமு 19:19. தாவீது ராமாவுக்கடுத்த நாயோதிலே இருக்கிறான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டது.

1சாமு 19:20. அப்பொழுது சவுல்: தாவீதைக் கொண்டுவரச் சேவகரை அனுப்பினான்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தையும், சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்கிறதையும் கண்டார்கள்; அப்பொழுது சவுலினுடைய சேவகரின்மேல் தேவனுடைய ஆவி இறங்கினதினால் அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

1சாமு 19:21. இது சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் வேறே சேவகரை அனுப்பினான்;அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்; மூன்றாந்தரமும் சவுல் சேவகரை அனுப்பினான்; அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

1சாமு 19:22. அப்பொழுது அவனும் ராமாவுக்குப்போய், சேக்குவிலிருக்கிற பெரிய கிணற்றண்டையிலே வந்து, சாமுவேலும் தாவீதும் எங்கே என்று கேட்டான்; அதோ ராமாவுக்கடுத்த நாயோதிலே இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது.

1சாமு 19:23. அப்பொழுது ராமாவுக்கடுத்த நாயோதிற்குப் போனான்; அவன் மேலும் தேவனுடைய ஆவி இறங்கினதினால் அவன் ராமாவுக்கடுத்த நாயோதிலே சேருமட்டும், தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டே நடந்துவந்து,

1சாமு 19:24. தானும் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, அன்று பகல் முழுவதும் இராமுழுவதும் வஸ்திரம் இல்லாமல் விழுந்துகிடந்தான்; ஆகையினாலே சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்பார்கள்.

தாவீது அன்று இரவே தன் வீட்டிலிருந்து தப்பித்து ஓடிப்போகிறார். அவர் பெத்லெகேமிலுள்ள தன் தகப்பனாருடைய வீட்டிற்குப் போகவில்லை. அவர் சாமுவேல் இருக்கிற ராமாவுக்குப் போகிறார். தாவீது தப்பி, ராமாவிலிருந்த சாமுவேலிடத்திற்குப்போய், சவுல் தனக்குச் செய்தது எல்லாவற்றையும் அவருக்கு அறிவிக்கிறார்; பின்பு தாவீதும் சாமுவேலும் போய், நாயோதியிலே தங்கியிருக்கிறார்கள் (1சாமு 19:18).

சாமுவேல் தாவீதை அபிஷேகம்பண்ணியிருக்கிறார். தாவீதின் சிரசின்மேல் கிரீடம் சூட்டப்படும் என்று சாமுவேல் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். ஆனால் தாவீதின் ஜீவியத்தில் அதற்கு சாதகமான சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. தாவீதுக்கு அடைக்கலம் தேவைப்படுகிறது. தாவீது தன் குடும்பத்தாரிடம் அடைக்கலம் பெறுவதற்கு பதிலாக, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சாமுவேலிடம் அடைக்கலம் பெறுகிறார். சாமுவேலிடத்தில் தங்கியிருப்பது, தாவீதுக்கு கர்த்தருடைய செட்டைகளின்கீழ் மறைவாய்த் தங்கியிருப்பதுபோல தெரிகிறது. கர்த்தருடைய சமுகமே நமக்கு பாதுகாப்பான ஸ்தலம்.

தாவீது இப்போது நெருக்கத்திலும் ஆபத்திலும் இருக்கிறார். அவருக்கு நல்ல ஆலோசனைகள் தேவைப்படுகிறது. கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சாமுவேல் தாவீதுக்கு கர்த்தருடைய செய்தியை அறிவிப்பார். அவருக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுவார். இந்த சூழ்நிலையில் தாவீது என்ன செய்ய வேண்டுமென்று, அவருக்கு ஆலோசனை சொல்லி, அவரை வழிநடத்துவார்.

நாயோதியிலே தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு சாமுவேல் தலைவராகயிருக்கிறார். அவர்கள் எல்லோரும் கர்த்தரைத் துதிக்கிறார்கள். தாவீது சாமுவேலோடு சேர்ந்துகொண்டால், அவருக்கு கர்த்தரைத் துதிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். தாவீது இப்போது நெருக்கத்திலிருந்தாலும், தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து கர்த்தரைத் துதிக்கும்போது, அவருக்கு நெருக்கத்திலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் விடுதலை கிடைக்கும்.

தாவீதுக்கு சவுலின் அரண்மனையில் சந்தோஷமோ, சமாதானமோ, பாதுகாப்போ கிடைக்கவில்லை. இவையெல்லாமே சாமுவேலின் கூடாரத்தில் கிடைக்கும். ஆகையினால் தாவீது சவுலுக்கு தப்பி, ராமாவிலிருக்கிற சாமுவேலிடத்திற்குப் போகிறார். தாவீது தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் சாமுவேலுக்கு சொல்லுகிறார்.

சாமுவேல் தாவீதை பாதுகாக்க முன்வருகிறார். சாமுவேலோடு கூடயிருப்பது தாவீதுக்கு மெய்யான பாதுகாப்பு. தாவீதும் சாமுவேலும் ராமாவிலிருந்து நாயோதிலே போய்த் தங்கியிருக்கிறார்கள். தாவீது ராமாவுக்கடுத்த நாயோதிலே இருக்கிறார் என்று சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது (1சாமு 19:19). சவுலுக்கு எல்லா ஊர்களிலும் வேவுகாரர் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலரின் ஒவ்வொரு அசைவுகளையும் சவுலுக்கு சொல்லுகிறார்கள்.

தாவீது சாமுவேலோடுகூட ராமாவுக்கடுத்த நாயோதிலே இருக்கிறார் என்னும் செய்தியை கேட்டவுடன், தாவீதைக் கொண்டு வருவதற்கு சவுல் தன்னுடைய சேவகரை அனுப்புகிறார். சேவகர்கள் நாயோதிக்கு வருகிறார்கள். அவர்கள் அங்கே தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தையும், சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்கிறதையும் காண்கிறார்கள்; அப்பொழுது சவுலுடைய சேவகரின்மேல் தேவனுடைய ஆவி இறங்கினதினால் அவர்களும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (1சாமு 19:20).

சவுல் அனுப்பின சேவகர்களால் தாவீதைக் கொண்டு வரமுடியவில்லை. அவர்கள் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தோடு சேர்ந்து தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த செய்தியும் சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது சவுல் வேறே சேவகரை அனுப்புகிறார்; அவர்களும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; மூன்றாந்தரமும் சவுல் சேவகரை அனுப்புகிறார்; அவர்களும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (1சாமு 19:21).

சவுல் மூன்றுதரம் தன்னுடைய சேவகரை அனுப்பியும் அவர்களால் தாவீதைக் கொண்டு வரமுடியவில்லை. அவர்கள் நாயோதிலே போய், தீர்க்கதரிசிகளின் கூட்டத்தாரோடு தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சவுலின் சேவகர் தாங்கள் வந்த வேலையை மறந்துவிட்டு, தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

தாவீது ராமாவுக்கடுத்த நாயோதிலே சாமுவேலோடு கூடயிருக்கிறார். தாவீது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது, சிங்கமும் கரடியும், ஆடுகளில் ஒன்றை பிடிக்க வந்தது. தாவீது இப்போது சிங்கத்தால் பிடிக்கப்படப்போகிற ஆட்டுக்குட்டியைப்போல இருக்கிறார். கர்த்தர் தாவீதைப் பாதுகாக்கிறார். தாவீதைப் பிடிக்க வந்த சேவகர்கள், தங்கள் வேலையை விட்டு விட்டு தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

தாவீது சிங்கத்தையும் கரடியையும் கொன்று, ஆட்டை அவற்றின் வாய்க்கு தப்புவிக்கச் செய்தார். எலியாவின் காலத்தில் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, அவரை தப்புவிக்கச் செய்தது. இப்போதோ, நாயோதிலே மிகப்பெரிய அற்புதம் நடக்கிறது. தாவீதைப் பிடிக்க வந்த சிங்கங்கள் ஆட்டுக்குட்டிகளாக மாறுகிறது. கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. சவுலின் சேவகர்கள் சிங்கங்களைப்போல தாவீதைப் பிடிக்க வந்தார்கள். இப்போதோ அவர்கள் ஆடுகளைப்போல தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

சவுலின் சேவகர் நாயோதிக்கு வரும்போது, தாவீது தீர்க்கதரிசிகளின் கூட்டத்தாரோடு சேர்ந்து கர்த்தரைத் துதித்துக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் தீர்க்கதரிசிகள் மேல் வந்து தங்கியிருக்கிறார். அவர்கள் எல்லோரும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். சவுலின் சேவகர்களும் அங்கே வரும்போது, தேவனுடைய ஆவியானவர் அவர்கள்மேலும் வந்து இறங்குகிறார். அவர்களும் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தாரோடு சேர்ந்து கர்த்தரைத் துதித்து, தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்களால் தாவீதைப் பிடிக்க முடியவில்லை. தேவனுடைய ஆவியானவர் அவர்களைப் பிடிக்கிறார்.

கர்த்தர் தாவீதைப் பாதுகாக்கிறார். சவுலின் சேவகர்மீது தீர்க்கதரிசனத்தின் ஆவியானவர் வந்து இறங்குகிறார். அவர்கள் தாவீதைப்பற்றி நினைக்கவில்லை. தாங்கள் எதற்காக வந்தோம் என்பதும் அவர்களுக்கு தெரியவில்லை. அவர்களுக்கு கர்த்தரைத் துதிப்பதைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. சவுலின் சேவகர்கள் தாவீதைப்பற்றி பேசாமல், தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

தேவனுடைய ஆவியானவர், சவுலின் சேவகர்மீது வந்து தங்கும்போது, தாவீதுக்கு தீங்கு செய்யவேண்டும் என்னும் எண்ணம் அவர்களுடைய இருதயத்தை விட்டு நீங்கிற்று. கர்த்தரைத் துதிக்கவேண்டும் என்னும் வாஞ்சை அவர்களுக்குள் உண்டாயிற்று. அவர்கள் தீயகாரியத்திற்காக வந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லி நன்மையான காரியங்களை செய்கிறார்கள்.

சவுலின் சேவகர்கள் துன்மார்க்கராயிருந்தாலும், தீர்க்கதரிசிகளின் கூட்டத்தாரோடு சேரும்போது, அவர்களுடைய சுபாவம் மாறுகிறது. துன்மார்க்கர் பரிசுத்தவான்களோடு ஐக்கியமாயிருக்கும்போது, துன்மார்க்கரின் பாவசுபாவங்கள் அவர்களை விட்டு நீங்கிப்போகும். பரிசுத்தவான்களின் நல்ல சுபாவங்கள் அவர்களுக்குள் வரும். பரிசுத்தவான்கள் இருக்கும் இடத்தில் கர்த்தருடைய ஆவியானவர் கிரியை செய்வார். கர்த்தர் தம்முடைய வல்லமையை இங்கு வெளிப்படுத்துகிறார். தேவனுடைய ஆவியானவர் மனுஷருடைய ஆவியை ஆட்கொள்கிறார்.

தாவீதைப் பிடிப்பதற்கு சவுல் நாயோதிக்கு அனுப்பின சேவகர்கள் ஒருவரும் அவரிடத்தில் திரும்பி வரவில்லை. அவர்கள் எல்லோரும் அங்கே தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்னும் செய்தி சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்பொழுது சவுலும் ராமாவுக்குப்போகிறார். அங்கே சேக்குவிலிருக்கிற பெரிய கிணற்றண்டையிலே வந்து, "சாமுவேலும் தாவீதும் எங்கே" என்று கேட்கிறார்; "அதோ ராமாவுக்கடுத்த நாயோதிலே இருக்கிறார்கள்" என்று அவர்கள் சவுலுக்கு சொல்லுகிறார்கள்.

அப்பொழுது சவுல் ராமாவுக்கடுத்த நாயோதிக்குப் போகிறார்; சவுலின் மேலும் தேவனுடைய ஆவி இறங்கினதினால் சவுல் ராமாவுக்கடுத்த நாயோதிலே சேருமட்டும், தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டே நடந்துவருகிறார்.

சவுல் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, அன்று பகல் முழுவதும் இராமுழுவதும் வஸ்திரம் இல்லாமல் விழுந்துகிடக்கிறார் (1சாமு 19:23,24).

சவுல் தாவீதைப் பிடிப்பதற்காக நாயோதிக்குப் போனபோது, அவர் ராஜவஸ்திரம் தரித்திருக்கிறார். யுத்தத்திற்கு போவதுபோல, மார்க்கவசங்களை அணிந்திருக்கிறார். அவரிடத்தில் பட்டயம் இருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவர் கிரியை நடப்பிக்கிற இடத்திலே, ராஜவஸ்திரத்திற்கும், மார்க்கவசத்திற்கும், தலைச்சீராவுக்கும், பட்டயத்திற்கும் வேலையில்லை. கர்த்தருடைய ஆவியானவர் அந்த வஸ்திரங்களையெல்லாம் சவுலை விட்டு நீக்கிப்போடுகிறார்.

சவுல் தாவீதைப் பிடிக்க வந்தார். தேவனுடைய ஆவியானவர் சவுலைப் பிடிக்கிறார். சவுல் பகல் முழுவதும் இராமுழுவதும் வஸ்திரமில்லாமல் விழுந்துகிடக்கிறார். சவுலும், தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். ஆகையினாலே "சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ" என்று இஸ்ரவேல் ஜனத்தார் சொல்லுவது வழக்கம்.

"அவர்கள் அந்த மலைக்கு வந்தபோது, இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் சவுலுக்கு எதிராக வந்தது; அப்பொழுது தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னான். அதற்குமுன்னே அவனை அறிந்தவர்கள் எல்லாரும் அவன் தீர்க்கதரிசிகளோடிருந்து, தீர்க்கதரிசனம் சொல்லுகிறதைக் கண்டபோது: கீசின் குமாரனுக்கு வந்தது என்ன? சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? என்று அந்த ஜனங்கள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். அதற்கு அங்கே இருக்கிறவர்களில் ஒருவன்: இவர்களுக்குத் தகப்பன் யார் என்றான்; ஆதலால் சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? என்பது பழமொழியாயிற்று" (1சாமு 10:10-12).

20 அதிகாரம்

தாவீது பல சமயங்களில் சவுலின் கோபத்திற்கு தப்பிக்கிறார். இந்த சூழ்நிலையில் தாவீது தன்னைக் குறித்து ஒரு தீர்மானம்பண்ண வேண்டும். இஸ்ரவேல் தேசத்தைவிட்டே ஓடிப்போவதா அல்லது தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதா என்பதை தாவீது தீர்மானிக்கவேண்டும். தாவீது என்ன செய்தாலும், அதை யோனத்தானோடு கலந்து ஆலோசிக்காமல் செய்வதில்லை.

தாவீது தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் யோனத்தானிடம் சொல்லுகிறார் (1சாமு 20:1-8). சவுலின் மனநிலயை அறிந்து, அதை தாவீதுக்கு அறிவிப்பதாக யோனத்தான் வாக்குப்பண்ணுகிறான். யோனத்தான் தன்னுடைய சிநேகத்தை தாவீதோடு மறுபடியுமாய் உறுதிபண்ணுகிறான் (1சாமு 20:9-23).

சவுல் தாவீதுக்கு விரோதமாக கோபமாயிருப்பதும், அவர் தாவீதை கொல்லுவதற்கு திட்டமிடுகிறார் என்பதும் யோனத்தானுக்கு தெரியவருகிறது. இதனால் யோனத்தானுக்கு மிகுந்த மனவருத்தமுண்டாயிற்று (1சாமு 20:24-34). யோனத்தான் தாவீதிடம் ஏற்கெனவே சொன்ன பிரகாரம், சவுலின் மனநிலயை ஒரு அடையாளத்தின் மூலமாக, அவருக்கு தெரிவிக்கிறார் (1சாமு 20:35-42).

தாவீதும் யோனத்தானும் 1சாமு 20:1-8

1சாமு 20:1 தாவீது ராமாவுக்கடுத்த நாயோதிலிருந்து ஓடிப்போய், யோனத்தான் முன்பாக வந்து: உம்முடைய தகப்பன் என் பிராணனை வாங்கத்தேடுகிறாரே, நான் செய்தது என்ன? என் அக்கிரமம் என்ன? நான் அவருக்குச் செய்த துரோகம் என்ன? என்றான்.

1சாமு 20:2 அதற்கு அவன்: அப்படி ஒருக்காலும் வாராது; நீர் சாவதில்லை, இதோ எனக்கு அறிவிக்காமல் என் தகப்பன் பெரிய காரியமானாலும் சிறியகாரியமானாலும் ஒன்றும் செய்கிறதில்லை; இந்தக் காரியத்தை என் தகப்பன் எனக்கு மறைப்பானேன்? அப்படி இருக்கமாட்டாது என்றான்.

1சாமு 20:3 அப்பொழுது தாவீது: உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைத்தது என்று உம்முடைய தகப்பன் நன்றாய் அறிவார்; ஆகையால் யோனத்தானுக்கு மனநோவு உண்டாகாதபடிக்கு அவன் இதை அறியப்போகாது என்பார்; மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு நிச்சயமாய் சொல்லுகிறேன் என்று மறுமொழி சொல்லி ஆணையிட்டான்.

1சாமு 20:4 அப்பொழுது யோனத்தான் தாவீதைப் பார்த்து: உமது மனவிருப்பம் இன்னது என்று சொல்லும், அதின்படி உமக்குச் செய்வேன் என்றான்.

1சாமு 20:5 தாவீது யோனத்தானை நோக்கி: இதோ, நாளைக்கு அமாவாசி, நான் ராஜாவோடே பந்தியிருந்து சாப்பிடவேண்டியதாயிருக்கும்; ஆனாலும் நான் மூன்றாம் நாள் சாயங்காலமட்டும் வெளியிலே ஒளித்திருக்கும்படி எனக்கு உத்தரவு கொடும்.

1சாமு 20:6 உம்முடைய தகப்பன் என்னைக் குறித்து விசாரித்தால், தன் ஊராகிய பெத்லகேமிலே தன் குடும்பத்தார் யாவரும் வருஷத்துக்கு ஒருதரம் பலியிட வருகிறபடியால் தாவீது அவ்விடத்திற்குப் போக என்னிடத்தில் வருந்திக் கேட்டான் என்று நீர் சொல்லும்.

1சாமு 20:7 அதற்கு அவர் நல்லது என்றால், உம்முடைய அடியானுக்குச் சமாதானம் இருக்கும்; அவருக்கு எரிச்சலுண்டானால், அவராலே பொல்லாப்புத் தீர்மானப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்வீர்.

1சாமு 20:8 ஆகையால் உம்முடைய அடியானுக்குத் தயைசெய்யவேண்டும்; கர்த்தருக்கு முன்பாக உம்முடைய அடியானோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறீரே; என்னில் ஒரு அக்கிரமம் இருந்ததேயானால், நீரே என்னைக் கொன்றுபோடும்; நீர் என்னை உம்முடைய தகப்பனிடத்துக்குக் கொண்டுபோக வேண்டியது என்ன என்றான்.

சவுல் நாயோதியிலே பகல் முழுவதும் இராமுழுவதும் வஸ்திரமில்லாமல் விழுந்து கிடக்கிறார். தாவீது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, நாயோதிலிருந்து சவுலின் அரண்மனைக்குப் போகிறார். அங்கே யோனத்தானிடம் தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் சொல்லுகிறார். யோனத்தானைப்போன்ற சிநேகிதர், சவுலின் அரண்மனையிலே, தாவீதுக்கு கிடைத்திருப்பது மிகப்பெரிய சிலாக்கியம். சிங்காசனத்தில் வீற்றிருக்கிற சவுல் தாவீதைப் பகைக்கிறார். சவுலின் குமாரனாகிய யோனத்தான் தாவீதை சிநேகிக்கிறார்.

விசுவாசிகளாகிய நம்மையும் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு சிலர் பகைப்பார்கள். ஒரு சிலர் வெறுப்பார்கள். அவர்களைப் பார்த்து நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. ஒரு சிலர் நம்மைப் பகைத்தாலும், நம்மை சிநேகிப்பதற்கும் இந்த உலகத்தில் சிலர் இருப்பார்கள். ஒரு சிலர் நம்மைத் தூஷித்து அவமானப்படுத்தினாலும், நம்மை மதிப்பவர்களும் இந்த உலகத்திலிருப்பார்கள். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

தாவீது ராமாவுக்கடுத்த நாயோதிலிருந்து ஓடிப்போய், யோனத்தான் முன்பாக வந்து நிற்கிறார். தாவீது யோனத்தானை நோக்கி, "உம்முடைய தகப்பன் என் பிராணனை வாங்கத்தேடுகிறாரே, நான் செய்தது என்ன? என் அக்கிரமம் என்ன? நான் அவருக்குச் செய்த துரோகம் என்ன?" (1சாமு 20:1) என்று கேட்கிறார்.

"நான் செய்தது என்ன, என் அக்கிரமம் என்ன" என்று தாவீது கேட்கிறார். இந்தக் கேள்விக்கு தாவீதுக்கே பதில் தெரியவில்லை. தாவீது சவுலுக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆனாலும் சவுல் தாவீதின் பிராணனை வாங்கத் தேடுகிறார். தாவீது சவுலுக்கு விரோதமாக ஒரு துரோகமும் பண்ணவில்லை. ஆனாலும் சவுல் தாவீதை கொன்றுபோட முயற்சி பண்ணுகிறார்.

யோனத்தான் சவுலின் குமாரன். அவன் தன்னுடைய தகப்பனை விட்டுக்கொடுத்து பேசவில்லை. சவுலிடத்தில் தப்பிதம் இருந்தாலும், யோனத்தான் சவுலின் தப்பிதத்தை மூடி மறைக்கிறான். அதே வேளையில் தாவீது யோனத்தானுக்கு சிநேகிதர். யோனத்தான் தாவீதுக்கும் ஆதரவாகப் பேசுகிறான். யோனத்தான் சவுலுக்கும் தாவீதுக்கும் நடுவே மத்தியஸ்தராக நின்று, அவர்களுக்கிடையே சமாதானம்பண்ணி வைக்க முயற்சி பண்ணுகிறான்.

யோனத்தான் தாவீதை நோக்கி, "அப்படி ஒருக்காலும் வாராது; நீர் சாவதில்லை, இதோ எனக்கு அறிவிக்காமல் என் தகப்பன் பெரிய காரியமானாலும் சிறியகாரியமானாலும் ஒன்றும் செய்கிறதில்லை; இந்தக் காரியத்தை என் தகப்பன் எனக்கு மறைப்பானேன்? அப்படி இருக்கமாட்டாது" (1சாமு 20:2) என்று சொல்லுகிறான்.

யோனத்தான் சமாதானமான வார்த்தைகளை தாவீதிடம் பேசுகிறான். சவுல் தன்னுடைய பிராணனை வாங்கத் தேடுகிறது கற்பனையல்ல, அது மெய்யான சம்பவம் என்பதை தாவீது நிச்சயமாய்ச் சொல்லுகிறார். யோனத்தானுக்கும் தாவீதுக்கும் இடையிலுள்ள சிநேகம் சவுலுக்குத் தெரியும். ஆகையினால், சவுல் தாவீதின்மீது கோபமாயிருப்பதை, தன் மகனுக்கு வெளிப்படுத்தாமல் மறைத்துவிடுகிறார்.

சவுலின் தந்திரத்தை தாவீது யோனத்தானுக்கு சொல்லுகிறார். தாவீது யோனத்தானிடம், "உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைத்தது என்று உம்முடைய தகப்பன் நன்றாய் அறிவார்; ஆகையால் யோனத்தானுக்கு மனநோவு உண்டாகாதபடிக்கு அவன் இதை அறியப்போகாது என்பார்" (1சாமு 20:3) என்று சொல்லுகிறார்.

சவுல் மூலமாக தன்னுடைய ஜீவனுக்கு ஆபத்து வந்திருக்கிறது என்பதை தாவீது யோனத்தானுக்கு தெளிவுபடுத்துகிறார். தாவீது தன்னுடைய வார்த்தைகளை ஆணையிட்டுச் சொல்லுகிறார். அவர் யோனத்தானை நோக்கி, "மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு நிச்சயமாய் சொல்லுகிறேன்" (1சாமு 20:3) என்று மறுமொழி சொல்லி ஆணையிடுகிறார்.

யோனத்தான் தாவீதின் நிலமையைப் புரிந்துகொள்கிறான். அவன் தாவீதுக்கு உதவி செய்ய விரும்புகிறான். யோனத்தான் தாவீதை தன் ஆத்துமாவைப்போல சிநேகிக்கிறான். ஆகையினால் யோனத்தான் தாவீதைப் பார்த்து: "உமது மனவிருப்பம் இன்னது என்று சொல்லும், அதின்படி உமக்குச் செய்வேன்" (1சாமு 20:4) என்று சொல்லுகிறான்.

சவுல் உண்மையிலேயே தன்னை கொல்லவேண்டுமென்று நினைக்கிறாரா என்பது தாவீதுக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. சவுலின் மனதில் தாவீதைக் குறித்து எப்படிப்பட்ட நினைவு இருக்கிறது என்பதை தாவீது அறிந்துகொள்ள விரும்புகிறார். இதற்காக அவர் யோனத்தானுடைய உதவியை எதிர்பார்க்கிறார்.

தாவீது யோனத்தானுக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறார். அமாவாசி நாளிலே சவுல் ராஜா தன் அரண்மனையிலுள்ள பிரதானிகளோடு இரண்டு நாள் போஜனம் பண்ணுவது வழக்கம். அவர்களெல்லோரும் ஒன்றாய் பந்தியிருப்பார்கள். அமாவாசியின்போது இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷித்த பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்தி, பண்டிகை கொண்டாடுவார்கள்.

அமாவாசி நாளின்போது சவுல் தன்னுடைய முழுக்குடும்பத்தாரோடும் பந்தியிருந்து சாப்பிடுவார். சவுலின் குடும்பத்தாரோடு சேர்ந்து சாப்பிடுவதற்கு தாவீதுக்கும் அனுமதி கிடைத்திருக்கிறது. ஒருவேளை அமாவாசி நாளிலே சவுல் தன் அரண்மனையின் பிரதானிகளோடு பந்திவிருந்து சாப்பிடலாம். தாவீதும் சவுலின் அரண்மனையில் ஒரு முக்கியமான பிரதானியாயிருக்கிறார். பந்தி விருந்து இரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

அமாவாசி பந்தி விருந்திலே தாவீது அமர்ந்து சாப்பிடுவதற்கென்று ஒரு ஆசனம் போடப்பட்டிருக்கும். அதில் தாவீதை தவிர வேறு யாரும் உட்காரமாட்டார்கள். ஒவ்வொரு பிரதானியும் அவரவர்களுக்குரிய ஆசனங்களில் அமருவார்கள். தாவீது அமாவாசி பந்திவிருந்தில் சாப்பிட வரவில்லையென்றால், அவனுடைய ஆசனம் காலியாயிருக்கும். அப்போது சவுலின் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை யோனத்தான் அறிந்து, அதை தாவீதுக்கு சொல்லவேண்டும். இதுவே தாவீதின் யோசனை.

தாவீது யோனத்தானை நோக்கி: "இதோ, நாளைக்கு அமாவாசி, நான் ராஜாவோடே பந்தியிருந்து சாப்பிடவேண்டியதாயிருக்கும்; ஆனாலும் நான் மூன்றாம் நாள் சாயங்காலமட்டும் வெளியிலே ஒளித்திருக்கும்படி எனக்கு உத்தரவு கொடும். உம்முடைய தகப்பன் என்னைக் குறித்து விசாரித்தால், தன் ஊராகிய பெத்லகேமிலே தன் குடும்பத்தார் யாவரும் வருஷத்துக்கு ஒருதரம் பலியிட வருகிறபடியால் தாவீது அவ்விடத்திற்குப் போக என்னிடத்தில் வருந்திக் கேட்டான் என்று நீர் சொல்லும். அதற்கு அவர் நல்லது என்றால், உம்முடைய அடியானுக்குச் சமாதானம் இருக்கும்; அவருக்கு எரிச்சலுண்டானால், அவராலே பொல்லாப்புத் தீர்மானப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்வீர்" (1சாமு 20:5-7) என்று செலலுகிறார்.

யோனத்தான் தனக்கு இந்த தயவை செய்யவேண்டுமென்று தாவீது அவனிடத்தில் கேட்டுக்கொள்கிறார். தனக்கும் யோனத்தானுக்கும் இருக்கிற சிநேகத்தையும், உடன்படிக்கையையும் தாவீது அவனுக்கு நினைவுபடுத்துகிறார்.

தாவீது யோனத்தானிடம் "கர்த்தருக்கு முன்பாக உம்முடைய அடியானோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறீரே; என்னில் ஒரு அக்கிரமம் இருந்ததேயானால், நீரே என்னைக் கொன்றுபோடும்; நீர் என்னை உம்முடைய தகப்பனிடத்துக்குக் கொண்டுபோகவேண்டியது என்ன" (1சாமு 20:8) என்று கேட்கிறார்.

தாவீதின் இருதயத்தில் உண்மை இருக்கிறது. தன்னிடத்தில் அக்கிரமம் இருக்குமென்றால், அதற்கான தண்டனையை அனுபவிப்பதற்கும் தாவீது ஆயத்தமாயிருக்கிறார். தன்னிடத்தில் அநீதியோ அக்கிரமமோ காணப்படவில்லையென்றால், தான் அநியாயமாக தண்டிக்கப் படக்கூடாது என்று தாவீது எதிர்பார்க்கிறார்.

யோனத்தானின் உடன்படிக்கை 1சாமு 20:9-23

1சாமு 20:9 அப்பொழுது யோனத்தான்: அப்படி உமக்கு வராதிருப்பதாக; உமக்குப் பொல்லாப்புச் செய்ய என் தகப்பனாலே தீர்மானித்திருக்கிறது என்று நான் நிச்சயமாய் அறிந்தேனானால் நான் அதை உமக்கு அறிவிக்காதிருப்பேனா என்றான்.

1சாமு 20:10 தாவீது யோனத்தானை நோக்கி: உம்முடைய தகப்பன் கடினமான உத்தரம் சொன்னால் அதை யார் எனக்கு அறிவிப்பார் என்றான்.

1சாமு 20:11 அப்பொழுது யோனத்தான் தாவீதைப் பார்த்து: ஊருக்கு வெளியே போவோம் வாரும் என்றான்; இருவரும் வெளியே புறப்பட்டுப்போனார்கள்.

1சாமு 20:12 அப்பொழுது யோனத்தான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை முன்னிட்டுத் தாவீதை நோக்கி: நான் நாளையாவது மறுநாளிலாவது என் தகப்பனுடைய மனதை அறிந்துகொண்டு, அவர் தாவீதின்மேல் தயவாயிருக்கிறார் என்று கண்டும், அதை அப்போது உமது செவிகளுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, உமக்குச் சொல்லியனுப்பாதிருந்தால்,

1சாமு 20:13 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யோனத்தானுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்; ஆனாலும் உமக்குத் தீங்கு செய்ய என் தகப்பனுக்குப் பிரியமாயிருந்தால், அதை உமது செவிகளுக்கு வெளிப்படுத்தி, நீர் சமாதானத்தோடே போகும்படிக்கு உம்மை அனுப்பிவிடுவேன்; கர்த்தர் என் தகப்பனோடு இருந்ததுபோல், உம்மோடும் இருப்பாராக.

1சாமு 20:14 மேலும், நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயைசெய்யவேண்டியதும் அல்லாமல்,

1சாமு 20:15 கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் பூமியின்மேல் இராதபடிக்கு, வேர்அறுக்கும்போதும், நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடாமலும் இருக்கவேண்டும் என்றான்.

1சாமு 20:16 இப்படி யோனத்தான் தாவீதின் குடும்பத்தோடே உடன்படிக்கைபண்ணி, தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்குக் கேட்பாராக என்று சொல்லி,

1சாமு 20:17 யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால், பின்னும் அவனுக்கு ஆணையிட்டான்; தன் உயிரைச் சிநேகித்ததுபோல அவனைச் சிநேகித்தான்.

1சாமு 20:18. பின்பு யோனத்தான் தாவீதைப் பார்த்து: நாளைக்கு அமாவாசி, நீர் உட்காரவேண்டிய இடம் காலியாயிருப்பதினால் உம்மைக்குறித்து விசாரிக்கப்படும்.

1சாமு 20:19. காரியம் நடந்தபோது, மூன்றாம் நாளிலே நீர் ஒளித்திருக்கும் இடத்திற்குத் தீவிரித்து வந்து, ஏசேல் என்னும் கல்லண்டையில் உட்கார்ந்திரும்.

1சாமு 20:20. அப்பொழுது நான் குறிப்புவைத்து எய்கிறதுபோல, அதற்குப் பக்கமாக மூன்று அம்புகளை எய்து:

1சாமு 20:21. நீ போய், அந்த அம்புகளைத் தேடிவா என்று ஒரு பிள்ளையாண்டானை அனுப்புவேன்; இதோ, அம்புகள் உனக்கு இப்புறத்திலே கிடக்கிறது, அவைகளை எடுத்துக்கொண்டுவா என்று பிள்ளையாண்டானிடத்தில் நான் சொன்னால், நீர் வாரும்; அப்பொழுது ஒன்றும் இல்லை, உமக்குச் சமாதானம் இருக்கும் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

1சாமு 20:22. இதோ, அம்புகள் உனக்கு அப்புறத்திலே கிடக்கிறது என்று நான் அந்தப் பிள்ளையாண்டானிடத்தில் சொன்னால், நீர் போய்விடும்; அப்பொழுது கர்த்தர் உம்மைப் போகச்சொல்லுகிறார் என்று அறியும்.

1சாமு 20:23. நீரும் நானும் பேசிக்கொண்ட காரியத்திற்கு, இதோ, கர்த்தர் எனக்கும் உமக்கும் என்றைக்கும் நடுநிற்கும் சாட்சி என்றான்.

யோனத்தான் தாவீதை தன் உயிரைப்போல சிநேகிக்கிறான். தாவீதுக்கு துன்பமும் நெருக்கமும் வந்திருக்கிற இந்த வேளையில், யோனத்தான் அவருக்கு உதவிசெய்வதாக வாக்குப்பண்ணுகிறான். சவுலின் மனதில் தாவீதைக் குறித்து எப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது என்பதை கண்டுபிடித்து, அதை தாவீதுக்கு அறிவிப்பதாக யோனத்தான் வாக்குப்பண்ணுகிறான்.

தாவீதுக்கு சவுலின் மூலமாய் ஆபத்து வரவேண்டும் என்பது யோனத்தானின் விருப்பமல்ல. யோனத்தான் தாவீதிடம், "அப்படி உமக்கு வராதிருப்பதாக" என்று சொல்லுகிறான். மேலும் சவுலின் தீர்மானம் என்ன என்பதை அறிந்து, அதை தாவீதுக்கு அறிவிப்பதாகவும் சொல்லுகிறான். "உமக்குப் பொல்லாப்புச் செய்ய என் தகப்பனாலே தீர்மானித்திருக்கிறது என்று நான் நிச்சயமாய் அறிந்தேனானால் நான் அதை உமக்கு அறிவிக்காதிருப்பேனா" (1சாமு 20:9) என்று யோனத்தான் தாவீதுக்கு சொல்லுகிறான்.

ஒருவேளை சவுல் தாவீதின்மேல் தயவாயிருக்கலாம். யோனத்தான் சவுலின் மனதை அறிந்துகொண்டு, அவர் தாவீதின்மேல் தயவாயிருக்கிறார் என்பதை கண்டுபிடித்தால், அதையும் தாவீதின் செவிகளுக்கு வெளிப்படுத்துவதாக யோனத்தான் வாக்குப்பண்ணுகிறான் (1சாமு 20:12).

நல்ல செய்தியாக இருந்தாலும், தீயசெய்தியாக இருந்தாலும், அதை யோனத்தான் தனக்குள் மறைத்து வைத்துக்கொள்ளமாட்டான். தாவீது செத்துப்போனால், சவுலுக்கு பின்பு, தானே இஸ்ரவேலுக்கு ராஜாவாகலாம் என்னும் விருப்பம் யோனத்தானின் மனதில் இல்லை. தன்னுடைய நன்மைக்காக தாவீது செத்துப்போகவேண்டும் என்றும் யோனத்தான் விரும்பவில்லை. சவுல் தாவீதின்மேல் கோபமாகவும், விரோதமாகவும் இருப்பது யோனத்தானுக்கு பிடிக்கவில்லை. சவுலின் மனதை அறிந்துகொண்டு அதை தாவீதுக்கு அறிவிப்பதாக யோனத்தான் வாக்குப்பண்ணுகிறான்.

சவுலின் மனதைப்பற்றிய செய்தியை தனக்கு யார் அறிவிப்பார் என்னும் சந்தேகம் தாவீதின் மனதில் உண்டாயிற்று. தாவீது யோனத்தானை நோக்கி: "உம்முடைய தகப்பன் கடினமான உத்தரம் சொன்னால் அதை யார் எனக்கு அறிவிப்பார்" (1சாமு 20:10) என்று கேட்கிறார்.

தாவீதும் யோனத்தானும் இப்போது சவுலின் அரண்மனையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சவுல் அரண்மனைக்கு வந்துவிட்டால், தாவீதின் ஜீவனுக்கு ஆபத்து உண்டாகும். ஆகையினால் யோனத்தான் தாவீதைப் பார்த்து: "ஊருக்கு வெளியே போவோம் வாரும்" (1சாமு 20:11) என்று சொல்லுகிறான்; இருவரும் வெளியே புறப்பட்டுப்போகிறார்கள்.

சவுல் உண்மையிலேயே தாவீதைக் கொன்றுபோட வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறாரா அல்லது அவர் தாவீதின்மேல் தயவாயிருக்கிறாரா என்பது யோனத்தானுக்கு தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை சவுல் தன்மீது கோபமாயிருக்கிறார் என்று தாவீது தேவையில்லாமல் பயப்படுகிறாரா என்பதும் யோனத்தானுக்கு தெரியவில்லை. யோனத்தான் தாவீதுக்கு உதவிசெய்ய விரும்புகிறார். சவுலின் மனதில் இருக்கும் எண்ணத்தை அறிந்துகொண்டு, அதற்கேற்ற பிரகாரம் தாவீதுக்கு உதவிசெய்யலாம் என்று யோனத்தான் தீர்மானிக்கிறான்.

யோனத்தானின் வார்த்தைகளில் உண்மை இருக்கிறது. அவனுடைய மனதிலே கள்ளம் கபடம் எதுவுமில்லை. தாவீதை வஞ்சிக்கவேண்டும் என்னும் தீயயோசனை எதுவும் யோனத்தானிடம் காணப்படவில்லை. யோனத்தான் தன்னுடைய வார்த்தைகளை கர்த்தருக்கு முன்பாக பேசுவதாக நினைத்து, உண்மையைப் பேசுகிறான். "கர்த்தர் என் தகப்பனோடிருந்ததுபோல உம்மோடும் இருப்பாராக" என்று யோனத்தான் தாவீதிடம் சொல்லுகிறான்.

அப்பொழுது யோனத்தான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை முன்னிட்டுத் தாவீதை நோக்கி: "நான் நாளையாவது மறுநாளிலாவது என் தகப்பனுடைய மனதை அறிந்துகொண்டு, அவர் தாவீதின்மேல் தயவாயிருக்கிறார் என்று கண்டும், அதை அப்போது உமது செவிகளுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, உமக்குச் சொல்லியனுப்பாதிருந்தால், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யோனத்தானுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்; ஆனாலும் உமக்குத் தீங்கு செய்ய என் தகப்பனுக்குப் பிரியமாயிருந்தால், அதை உமது செவிகளுக்கு வெளிப்படுத்தி, நீர் சமாதானத்தோடே போகும்படிக்கு உம்மை அனுப்பிவிடுவேன்" (1சாமு 20:12,13) என்று சொல்லுகிறான்.

யோனத்தான் ஏற்கெனவே தாவீதோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். இப்போது தன்னுடைய சந்ததியோடும் தாவீது உடன்படிக்கை பண்ணவேண்டுமென்று யோனத்தான் எதிர்பார்க்கிறான். கர்த்தர் தாவீதோடு கூடயிருக்கிறார். அவரை ஆசீர்வதிக்கிறார். தாவீது கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக இஸ்ரவேலை ஆளுகை செய்வார் என்பதெல்லாம் யோனத்தானுக்கு தெரிந்திருக்கிறது.

சவுல் குற்றமில்லாத இரத்தத்தை சிந்தும்போது, அதனால் ஏற்படும் சாபம், தன்னுடைய சந்ததிக்கும் வரும் என்று யோனத்தான் பயப்படுகிறான். ஆகையினால் யோனத்தான் தாவீதிடம், "நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயைசெய்யவேண்டியதும் அல்லாமல், கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் பூமியின்மேல் இராதபடிக்கு, வேர்அறுக்கும்போதும், நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடாமலும் இருக்கவேண்டும்" (1சாமு 20:14,15) என்றும் கேட்டுக்கொள்கிறான்.

தான் செத்துப்போனபின்பு, தாவீதின் தயவு தன்னுடைய குடும்பத்திற்கு கிடைக்கவேண்டும் என்று யோனத்தான் எதிர்பார்க்கிறான். இதுவே உண்மையான சிநேகம். யோனத்தான் தாவீதை தன் ஆத்துமாவைப்போல சிநேகிக்கிறான். சவுலோ தாவீதை வெறுக்கிறார். கர்த்தர் தாவீதின் சத்துருக்களையெல்லாம் சங்காரம்பண்ணுவார். அப்போது சவுலுக்கும், சவுலின் குடும்பத்தாருக்கும் அழிவு வரும். தாவீதின் தயவு தன்னுடைய குடும்பத்தாருக்கு கிடைக்கவேண்டும் என்று யோனத்தான் எதிர்பார்க்கிறான்.

யோனத்தான் தாவீதின் குடும்பத்தோடே உடன்படிக்கைபண்ணுகிறான். "தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்குக் கேட்பாராக" என்று யோனத்தான் சொல்லுகிறான். யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால், பின்னும் அவருக்கு ஆணையிடுகிறான்; யோனத்தான் தன் உயிரைச் சிநேகிப்பதுபோல தாவீதைச் சிநேகிக்கிறான் (1சாமு 20:16,17).

இந்த உடன்படிக்கையின் பிரகாரமாக, தாவீதின் குடும்பத்தாரும் யோனத்தானுடைய குடும்பத்தாரும் ஒருவருக்கொருவர் தயவைக் காண்பிக்கவேண்டும். இந்த உடன்படிக்கையை தாவீதும் யோனத்தானும் செய்துகொண்டாலும், இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதம், அவர்களுடைய சந்ததியாருக்கும் வரும்.

யோனத்தான் இந்த தயவை மனுஷருடைய தயவு என்று சொல்லாமல், கர்த்தருடைய தயவு என்று சொல்லுகிறான். "நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்கு தயவு செய்யவேண்டும்" என்று யோனத்தான் தாவீதிடம் கேட்டுக்கொள்கிறான். இந்த தயவு மனுஷர் காண்பிக்கும் தயவைப்போல இருக்கக்கூடாது. கர்த்தர் மனுஷருக்கு காண்பிக்கும் மகா தயவைப்போல விசேஷித்த தயவாகயிருக்கவேண்டும்.

யோனத்தான் தாவீதோடு உடன்படிக்கை பண்ணி அதை கர்த்தருடைய நாமத்தினால் உறுதிபண்ணுகிறான். "கர்த்தர் கணக்கு கேட்பாராக" என்று தன்னுடைய உடன்படிக்கையில், கர்த்தரையும் சேர்த்துக்கொள்கிறான். யோனத்தான் தாவீதின் சிநேகிதன். பிற்காலத்தில் யோனத்தானுடைய சந்ததியார் தாவீதுக்கு சத்துருக்களாகயிருந்து, அவருக்கு தீங்கு செய்தால், கர்த்தர் அவர்களிடத்தில் கணக்கு கேட்பார். அதுபோலவே தாவீதின் சந்ததியார், யோனத்தானின் சந்ததியாருக்கு தீங்கு செய்தாலும், கர்த்தர் அவர்களிடத்திலும் கணக்கு கேட்பார்.

யோனத்தானும் தாவீதும் பல காரியங்களை பேசிக்கொண்டிருக்கிறார்கள். யோனத்தான் இந்த சம்பாஷணையின் முடிவிலே, தாவீதிடம், "நீரும் நானும் பேசிக்கொண்ட காரியத்திற்கு, இதோ, கர்த்தர் எனக்கும் உமக்கும் என்றைக்கும் நடுநிற்கும் சாட்சி" (1சாமு 20:23) என்று சொல்லுகிறான்.

தாவீது இந்த உடன்படிக்கையை மறக்கவில்லை. சவுலும், யோனத்தானும் செத்துப்போன பின்பு, யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத்திற்கு தாவீது தயவு காண்பிக்கிறார்.

"சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத் தாவீதினிடத்தில் வந்தபோது, முகங்குப்புற விழுந்து வணங்கினான்; அப்பொழுது தாவீது: மேவிபோசேத்தே என்றான்; அவன்: இதோ, அடியேன் என்றான். தாவீது அவனைப் பார்த்து: நீ பயப்படாதே; உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயைசெய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய் என்றான்" (2சாமு 9:6,7).

"ஆனாலும் தாவீதும் சவுலின் குமாரனாகிய யோனத்தானும் கர்த்தரைக் கொண்டு இட்ட ஆணையினிமித்தம், ராஜா சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத்தைக் தப்பவிட்டு, ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்குப் பெற்ற அவளுடைய இரண்டு குமாரராகிய அர்மோனியையும் மேவிபோசேத்தையும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மேகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய ஆதரியேலுக்குப் பெற்ற அவளுடைய ஐந்து குமாரரையும் பிடித்து, அவர்களைக் கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தான்; அவர்களைக் கர்த்தருடைய சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப்போட்டார்கள்; அப்படியே அவர்கள் ஏழுபேரும் ஒருமிக்க விழுந்தார்கள்" (2சாமு 21:7-9).

சவுலின் மனதை எவ்வாறு அறிந்துகொள்வது என்பதற்கு தாவீது ஏற்கெனவே யோனத்தானுக்கு ஒரு ஆலோசனை சொன்னார்.

தாவீது யோனத்தானை நோக்கி: "இதோ, நாளைக்கு அமாவாசி, நான் ராஜாவோடே பந்தியிருந்து சாப்பிடவேண்டியதாயிருக்கும்; ஆனாலும் நான் மூன்றாம் நாள் சாயங்காலமட்டும் வெளியிலே ஒளித்திருக்கும்படி எனக்கு உத்தரவு கொடும். உம்முடைய தகப்பன் என்னைக் குறித்து விசாரித்தால், தன் ஊராகிய பெத்லகேமிலே தன் குடும்பத்தார் யாவரும் வருஷத்துக்கு ஒருதரம் பலியிட வருகிறபடியால் தாவீது அவ்விடத்திற்குப் போக என்னிடத்தில் வருந்திக் கேட்டான் என்று நீர் சொல்லும். அதற்கு அவர் நல்லது என்றால், உம்முடைய அடியானுக்குச் சமாதானம் இருக்கும்; அவருக்கு எரிச்சலுண்டானால், அவராலே பொல்லாப்புத் தீர்மானப்பட்டிருக்கிறது என்று அறிந்து கொள்வீர்"(1சாமு 20:5-7) என்று சொன்னார்.

யோனத்தான் தாவீதின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, அதன் பிரகாரமாக தான் ஒவ்வொரு காரியத்தையும் செய்வதாக வாக்குப்பண்ணுகிறான். பின்பு யோனத்தான் தாவீதைப் பார்த்து: "நாளைக்கு அமாவாசி, நீர் உட்காரவேண்டிய இடம் காலியாயிருப்பதினால் உம்மைக்குறித்து விசாரிக்கப்படும்" (1சாமு 20:18) என்று சொல்லுகிறான்.

தாவீது ஏற்கெனவே சொன்ன பிரகாரம், அவர் மூன்றாம் நாளிலே, பெத்லெகேமிலிருந்து திரும்பி வருவார் என்னும் எதிர்பார்ப்பு சவுலுக்கு உண்டாகும். அமாவாசி போஜனம் நடைபெறும் இரண்டு நாளிலும் தாவீது சவுலின் அரண்மனையிலும் இருக்கமாட்டார். தான் சொன்ன பிரகாரம் பெத்லெகேமுக்கும் போகமாட்டார். மூன்றாம் நாள் சாயங்கால மட்டும் வெளியே ஒளித்திருப்பார்.

தாவீது தன்னுடைய திட்டத்தையெல்லாம் யோனத்தானுக்கு சொல்லி விடுகிறார். யோனத்தான் தாவீதிடம் "காரியம் நடந்தபோது, மூன்றாம் நாளிலே நீர் ஒளித்திருக்கும் இடத்திற்குத் தீவிரித்து வந்து, ஏசேல் என்னும் கல்லண்டையில் உட்கார்ந்திரும். அப்பொழுது நான் குறிப்புவைத்து எய்கிறதுபோல, அதற்குப் பக்கமாக மூன்று அம்புகளை எய்து: நீ போய், அந்த அம்புகளைத் தேடிவா என்று ஒரு பிள்ளையாண்டானை அனுப்புவேன்" (1சாமு 20:19-21) என்று சொல்லுகிறான்.

தாவீதின் மனதை அறிந்துகொண்டு, யோனத்தான் அதை தாவீதிடம் சொல்லவேண்டும். யோனத்தான் தாவீதிடம் நேரடியாக வந்து, சவுலின் மனதை அறிவிக்க முடியாது. ஆகையினால் யோனத்தான் மூன்று அம்புகளை எய்து, அதன் மூலமாய் தாவீதுக்கு, சவுலின் மனதை அறிவிக்க திட்டமிடுகிறான்.

யோனத்தான் தாவீதை நோக்கி, "இதோ, அம்புகள் உனக்கு இப்புறத்திலே கிடக்கிறது, அவைகளை எடுத்துக்கொண்டுவா என்று பிள்ளையாண்டானிடத்தில் நான் சொன்னால், நீர் வாரும்; அப்பொழுது ஒன்றும் இல்லை, உமக்குச் சமாதானம் இருக்கும் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். இதோ, அம்புகள் உனக்கு அப்புறத்திலே கிடக்கிறது என்று நான் அந்தப் பிள்ளையாண்டானிடத்தில் சொன்னால், நீர் போய்விடும்; அப்பொழுது கர்த்தர் உம்மைப் போகச்சொல்லுகிறார் என்று அறியும்" (சாமு 20:21,22) என்று தன்னுடைய திட்டத்தை சொல்லுகிறான்.

அம்புகள் தாவீதுக்கு இப்புறத்தில் கிடக்கிறதா அல்லது அப்புறத்தில் கிடக்கிறதா என்பதே அடையாளம். இப்புறத்தில் கிடந்தால் சமாதானம், அப்புறத்தில் கிடந்தால் ஆபத்து. யோனத்தான் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, இந்த வார்த்தைகளை பேசுகிறான். இது தாவீதின் ஜீவனோடு சம்பந்தப்பட்ட விஷயம். யோனத்தானுடைய மனதிலே கள்ளம் கபடம் எதுவுமில்லை. தீயயோசனை எதுவுமில்லை.

யோனத்தான் தான் சொன்ன வார்த்தைகளை கர்த்தருடைய நாமத்தினால் உறுதிபண்ணுகிறான். "நீரும் நானும் பேசிக்கொண்ட காரியத்திற்கு, இதோ, கர்த்தர் எனக்கும் உமக்கும் என்றைக்கும் நடுநிற்கும் சாட்சி" (1சாமு 20:23) என்று சொல்லுகிறான்.

அமாவாசி போஜனம் 1சாமு 20:24-34

1சாமு 20:24. அப்படியே தாவீது வெளியிலே ஒளித்துக் கொண்டிருந்தான்; அமாவாசியான போது ராஜா போஜனம்பண்ண உட்கார்ந்தான்.

1சாமு 20:25. ராஜா சுவரண்டையிலிருக்கிற தன் இடத்தில் எப்போதும்போல் உட்கார்ந்தபோது, யோனத்தான் எழுந்திருந்தான்; அப்னேரோ சவுலுடைய பக்கத்தில் உட்கார்ந்தான்; தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது.

1சாமு 20:26. ஆனாலும் அவன் தீட்டாயிருக்கிறானாக்கும், அவன் தீட்டுப்பட்டுத்தான் இருக்கவேண்டும் என்று அன்றையதினம் சவுல் ஒன்றும் சொல்லவில்லை.

1சாமு 20:27. அமாவாசிக்கு மறுநாளிலும் தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது; அப்பொழுது சவுல்: ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனது என்ன என்று தன் குமாரனாகிய யோனத்தானைக் கேட்டான்.

1சாமு 20:28. யோனத்தான் சவுலுக்குப் பிரதியுத்தரமாக: பெத்லெகேம்மட்டும்போக, தாவீது என்னிடத்தில் வருந்திக்கேட்டு,

1சாமு 20:29. அங்கே நான் போகவேண்டும்; எங்கள் குடும்பத்தார் ஊரிலே பலியிடப்போகிறார்கள்; என் தமையன் என்னை வரும்படி கட்டளையிட்டார்; உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைத்ததானால், நான் என் சகோதரரைப் பார்க்கிறதற்குப் போக எனக்கு உத்தரவு கொடும் என்றான்; இதனாலேதான் அவன் ராஜாவின் பந்திக்கு வரவில்லை என்றான்.

1சாமு 20:30. அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி, அவனைப் பார்த்து: இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ?

1சாமு 20:31. ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும் என்றான்.

1சாமு 20:32. யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான் என்றான்.

1சாமு 20:33. அப்பொழுது சவுல்: அவனைக் குத்திப்போட அவன்மேல் ஈட்டியை எறிந்தான்; ஆகையால் தாவீதைக் கொன்றுபோடத் தன் தகப்பன் தீர்மானித்திருக்கிறான் என்பதை யோனத்தான் அறிந்துகொண்டு,

1சாமு 20:34. கோபதாபமாய் பந்தியைவிட்டு எழுந்திருந்துபோய், அமாவாசியின் மறுநாளாகிய அன்றையதினம் போஜனம் பண்ணாதிருந்தான்; தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்கு மனநோவாயிருந்தது.

தாவீதும் யோனத்தானும் பேசிக்கொண்ட பிரகாரம், தாவீது வெளியிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார். அமாவாசியானபோது ராஜா போஜனம்பண்ண உட்காருகிறார். பந்தி விருந்தில் தாவீது கலந்துகொள்ளவில்லை.

அமாவாசி பந்தி விருந்திலே சவுல் சுவரண்டையிலிருக்கிற தன் இடத்தில் எப்போதும்போல் உட்கார்ந்திருக்கிறார். அப்னேரோ சவுலுடைய பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான்; தாவீது இருக்கும் இடம் காலியாயிருக்கிறது. ஆனாலும் தாவீது தீட்டாயிருக்கிறானாக்கும், அவன் தீட்டுப்பட்டுத்தான் இருக்கவேண்டும் என்று அன்றையதினம் சவுல் ஒன்றும் சொல்லவில்லை (1சாமு 20:24,25).

சவுல் ராஜாவின் மனதில் எப்போதும் தாவீதைப்பற்றிய சிந்தனை நிரம்பியிருக்கிறது. சவுல் தாவீதின்மேல் பொறாமைப்படுகிறார். அவர்மேல் கோபப்படுகிறார். சவுல் தன் இடத்தில் எப்போதும்போல உட்காரும்போது, யோனத்தான் எழுந்திருக்கிறான். யோனத்தான் சவுலுடைய குமாரன். தன்னுடைய தந்தைக்கு மதிப்பு கொடுக்கவேண்டும் என்பதற்காகவும், இஸ்ரவேலின் ராஜாவுக்கு மரியாதை கொடுக்கவேண்டும் என்பதற்காகவும், யோனத்தான் எழுந்திருக்கிறான்.

அமாவாசி பந்திவிருந்திலே ஒவ்வொருவரும் அமர்ந்திருப்பதற்கு தனித்தனியாக ஆசனம் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்குரிய ஆசனத்தில் அமர்ந்து அமாவாசி போஜனம் பண்ணுவார்கள். தாவீது உட்காரவேண்டிய ஆசனம் எது என்பது எல்லோருக்கும் தெரியும். அதில் தாவீதை தவிர வேறு யாரும் உட்காரமாட்டார்கள். தாவீது அமாவாசி போஜனம் பண்ண வராமல் வெளியே ஒளித்துக்கொண்டிருக்கிறார். தாவீது இருக்கும் இடம் காலியாயிருக்கிறது.

சவுல் தன்னுடைய ஆசனத்தில் எப்போதும்போல உட்கார்ந்தபோது, தாவீதின் இடத்தைப் பார்க்கிறார். அது காலியாயிருக்கிறது. தாவீது ஒருவேளை மார்க்க பிரகாரமாக அசுத்தமாகவோ அல்லது தீட்டாகவோ இருப்பார் என்று சவுல் நினைக்கிறார். ஆகையினால் அமாவாசியின் முதல்நாள் பந்தி விருந்தில், தாவீது வராததைக் குறித்து சவுல் பெரிதாய் நினைக்கவில்லை.

அமாவாசிக்கு மறுநாளிலும் தாவீது இருக்கும் இடம் காலியாயிருக்கிறது; அப்பொழுது சவுல்: "ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனது என்ன" (1சாமு 20:27) என்று தன் குமாரனாகிய யோனத்தானைக் கேட்கிறார். தாவீது முதல்நாள் போஜனவிருந்தில் வராததைக் குறித்து, சவுல் ஒன்றும் சொல்லவில்லை. அவர் இரண்டாம் நாளிலும் வராததினால், சவுல் தாவீதைக் குறித்து விசாரிக்க ஆரம்பித்துவிடுகிறார்.

சவுல் தன்னைப்பற்றி விசாரிப்பார் என்பது தாவீதுக்கு ஏற்கெனவே தெரியும். சவுல் விசாரிக்கும்போது, யோனத்தான் என்ன பிரதியுத்தரம் சொல்லவேண்டுமென்று, ஏற்கெனவே இருவரும் தீர்மானம் செய்திருக்கிறார்கள். யோனத்தானும் அவர்கள் பேசிக்கொண்ட பிரகாரம், சவுலின் கேள்விக்கு பதில் சொல்லுகிறான்.

யோனத்தான் சவுலுக்குப் பிரதியுத்தரமாக: "பெத்லெகேம்மட்டும் போக, தாவீது என்னிடத்தில் வருந்திக்கேட்டு, அங்கே நான் போகவேண்டும்; எங்கள் குடும்பத்தார் ஊரிலே பலியிடப்போகிறார்கள்; என் தமையன் என்னை வரும்படி கட்டளையிட்டார்; உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைத்ததானால், நான் என் சகோதரரைப் பார்க்கிறதற்குப் போக எனக்கு உத்தரவு கொடும் என்றான்; இதனாலேதான் அவன் ராஜாவின் பந்திக்கு வரவில்லை" (1சாமு 20:28,29) என்று சொல்லுகிறான்.

யோனத்தான் தாவீதுக்கு ஆதரவாகவும் சாதகமாகவும் பேசுகிறான். சவுலின் அரண்மனையிலே அமாவாசி விருந்து நடைபெறுகிறது. இதே நாளிலே பெத்லெகேமிலே தாவீதின் வீட்டிலும் ஒரு விருந்து நடைபெறுகிறது. தாவீது அந்த விருந்தில் பங்குபெறுவதற்கு போயிருக்கிறார் என்று யோனத்தான் சொல்லுகிறான். தாவீது தன்னுடைய குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும், மரியாதை காண்பிக்கும் வண்ணமாக பெத்லெகேமில் நடைபெறும் விருந்திற்குப்போயிருக்கிறார் என்று யோனத்தான் சவுலுக்கு சொல்லுகிறான்.

தாவீது யாருடைய அனுமதியுமில்லாமல் தன்னிச்சையாகப் போகவில்லை என்றும், அவர் தன்னிடத்தில் வருந்திக்கேட்டு உத்தரவு பெற்றுக்கொண்டார் என்றும் யோனத்தான் சவுலுக்கு சொல்லுகிறான். யோனத்தான் சவுலுக்கு மேலதிகாரி. தாவீது முறைப்படி யாரிடம் உத்தரவு பெறவேண்டுமோ, அவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டுதான் போயிருக்கிறார் என்று பொருள்படும் வண்ணமாக, யோனத்தான் சவுலுக்கு சொல்லுகிறான்.

தன்னுடைய வார்த்தைகளை சவுல் ஏற்றுக்கொள்வார் என்று யோனத்தான் எதிர்பார்க்கிறான். சவுல் அமைதியாயிருந்து அமாவாசி போஜனம்பண்ணுவார் என்று யோனத்தான் நினைக்கிறான்.

ஆனால் சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவராகி, அவனைப் பார்த்து: "இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும்" (1சாமு 20:30,31) என்று கோபத்தோடு சொல்லுகிறார்.

இறையைப் பறிகொடுத்த சிங்கத்திற்கு கோபமும் ஏமாற்றமும் வருவதுபோல, சவுலுக்கு கோபமும் ஏமாற்றமும் வந்திருக்கிறது. சவுலால் தாவீதைப் பிடிக்க முடியவில்லை. சவுலால் தன்னுடைய கோபத்தை தாவீதுமீதும் காண்பிக்க முடியவில்லை. ஆகையினால் சவுல் தன் கோபத்தை, யோனத்தான்மீது காண்பிக்கிறார். யோனத்தான் சவுலின் குமாரனாயிருந்தாலும், "இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே" என்று தூஷணமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இந்த வார்த்தைக்கு "வேசியின் மகனே" என்று பொருள்.

சவுல் யோனத்தான்மீது கோபப்பட்டு பேசும்போது, அவனைஒரு கலகக்காரனைப் போலவும், துரோகியைப்போலவும் பாவித்துப் பேசுகிறார். "நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும்" நடந்துகொள்கிறாய் என்று சவுல் சொல்லுகிறார்.

சவுல் யோனத்தானை "ஒரு மதியீனன்" என்று பொருள்படும் வண்ணமாக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார். "ஈசாயின் மகனை தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறாயே" என்று கேட்கிறார். தாவீது உயிரோடிருக்கும் நாள் வரையிலும், யோனத்தானால் ராஜாவாக முடியாது என்பது யோனத்தானுக்கு தெரியவில்லை என்று சவுல் கோபப்படுகிறார்.

சவுலின் கோபமான வார்த்தைகளைக் கேட்டு யோனத்தான் வேதனைப்படுகிறான். மனது வருத்தப்படுகிறான். யோனத்தானுக்கு சவுல் மீது மரியாதை இருக்கிறது. அதே வேளையில் அவன் தாவீதையும் சிநேகிக்கிறான். சவுலோ தாவீதின்மீது கோபமாயிருக்கிறார். யோனத்தான் தன் தகப்பன் இவ்வளவு கோபமாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

தாவீது யோனத்தானிடம், "உன் தகப்பன் என் பிராணனை வாங்கத் தேடுகிறாரே" என்று கேட்டபோது, யோனத்தான் தாவீதிடம், "அப்படி ஒருக்காலும் வாராது; நீர் சாவதில்லை, இதோ எனக்கு அறிவிக்காமல் என் தகப்பன் பெரிய காரியமானாலும் சிறியகாரியமானாலும் ஒன்றும் செய்கிறதில்லை; இந்தக் காரியத்தை என் தகப்பன் எனக்கு மறைப்பானேன்? அப்படி இருக்கமாட்டாது" (1சாமு 20:1,2) என்று சவுலைப்பற்றி நம்பிக்கையோடு சொன்னான்.

ஆனால் இப்போதோ சவுலின் உண்மையான சுபாவம் வெளிப்படுகிறது. சவுல் தன்னைப்பற்றித் தூஷணவார்த்தைகளைப் பேசியதை யோனத்தான் தாங்கிக்கொள்கிறான். "தாவீது சாகவேண்டும்" என்று சவுல் சொன்ன வார்த்தை, யோனத்தானுக்கு மிகவும் விசனமாயிருக்கிறது.

தாவீது சாகவேண்டும் என்று சவுல் சொன்னபோது, யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: "அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான்" (1சாமு 20:32) என்று கேட்கிறான்.

யோனத்தான் தாவீதை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. சவுலுடைய வார்த்தைக்கு எதிர்த்து பேசுகிறான். சவுலுக்கு யோனத்தான்மீது அதிக கோபம் வருகிறது. அப்பொழுது சவுல், யோனத்தானைக் குத்திப்போட, அவன்மேல் ஈட்டியை எறிகிறான் (1சாமு 20:33). யோனத்தானுக்கு சவுலின் மனநிலைமை புரிகிறது. சவுல் தாவீதைக் கொன்றுபோட தீர்மானித்திருக்கிறார் என்பதை யோனத்தான் அறிந்துகொள்கிறான்.

சவுல் தன்மீது ஈட்டியை எறிந்ததும், தாவீது சாகவேண்டுமென்று சொன்னதும் யோனத்தானுக்கு மனவேதனையாகவும், விசனமாகவும் இருக்கிறது. அப்போது யோனத்தான் கோபதாபமாய் பந்தியைவிட்டு எழுந்திருந்துபோய், அமாவாசியின் மறுநாளாகிய அன்றையதினம் போஜனம் பண்ணாதிருக்கிறான்; தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்கு மனநோவாயிருக்கிறது (1சாமு 20:34).

யோனத்தானுடைய ஆவியும் ஆத்துமாவும் சுத்தமாயிருக்கிறது. அவன் தாவீதை சுத்த இருதயத்தோடு சிநேகிக்கிறான். ஆகையினால் சவுல் தன்னைப்பற்றித் தூஷணவார்த்தைகளைச் சொன்னபோது யோனத்தான் தாங்கிக்கொள்கிறான். ஆனால் சவுல் தாவீதுக்கு விரோதமாகப் பேசியபோது, யோனத்தானால் அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

யோனத்தான் எய்த அம்புகள் 1சாமு 20:35-43

1சாமு 20:35. மறுநாள் காலமே, யோனத்தான் தாவீதுக்குக் குறித்த நேரத்திலே ஒரு சிறுபிள்ளையாண்டானைக் கூட்டிக்கொண்டு, வெளியே புறப்பட்டுப்போய்:

1சாமு 20:36. பிள்ளையாண்டானை நோக்கி: நீ ஓடி, நான் எய்கிற அம்புகளைத் தேடி எடுத்துக்கொண்டுவா என்று சொல்லி, அந்தப் பிள்ளையாண்டான் ஓடும்போது, அவனுக்கு அப்பாலே போகும்படி ஒரு அம்பை எய்தான்.

1சாமு 20:37. யோனத்தான் எய்த அம்பிருக்கும் இடமட்டும் பிள்ளையாண்டான் போனபோது, அம்பு உனக்கு இன்னும் அப்பால் இருக்கிறது அல்லவா என்று யோனத்தான் பிள்ளையாண்டானுக்குப் பிறகேயிருந்து கூப்பிட்டான்.

1சாமு 20:38. நீ தரித்துநிற்காமல் தீவிரித்துப்பொட்டெனப்போ என்றும் யோனத்தான் பிள்ளையாண்டானுக்குப் பிறகேயிருந்து கூப்பிட்டான்; அப்படியே யோனத்தானின் பிள்ளையாண்டான் அம்புகளைப் பொறுக்கி, தன் எஜமானிடத்தில் கொண்டுவந்தான்.

1சாமு 20:39. அந்தக் காரியம் யோனத்தானுக்கும் தாவீதுக்கும் தெரிந்திருந்ததேயல்லாமல், அந்தப் பிள்ளையாண்டானுக்கு ஒன்றும் தெரியாதிருந்தது.

1சாமு 20:40. அப்பொழுது யோனத்தான்: தன் ஆயுதங்களைப் பிள்ளையாண்டானிடத்தில் கொடுத்து, இவைகளைப் பட்டணத்திற்குக் கொண்டுபோ என்றான்.

1சாமு 20:41. பிள்ளையாண்டான் போனபின்பு, தாவீது தென்புறமான இடத்திலிருந்து எழுந்துவந்து, தரையிலே முகங்குப்புற விழுந்து, மூன்றுவிசை வணங்கினான்; அவர்கள் ஒருவரை ஒருவர் முத்தஞ்செய்து அழுதார்கள்; தாவீது மிகவும் அழுதான்.

1சாமு 20:42. அப்பொழுது யோனத்தான் தாவீதை நோக்கி: நீர் சமாதானத்தோடே போம், கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும், நடுநிற்கும் சாட்சி என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக்கொண்டதை நினைத்துக் கொள்ளும் என்றான்.

1சாமு 20:43. பின்பு அவன் எழுந்து புறப்பட்டுப் போனான்; யோனத்தானோ பட்டணத்திற்குப் போய்விட்டான்.

மறுநாள் காலமே, யோனத்தான் தாவீதுக்குக் குறித்தநேரத்திலே ஒரு சிறுபிள்ளையாண்டானைக் கூட்டிக்கொண்டு, வெளியே புறப்பட்டுப்போகிறான். யோனத்தான் பிள்ளையாண்டானை நோக்கி: "நீ ஓடி, நான் எய்கிற அம்புகளைத் தேடி எடுத்துக்கொண்டுவா" என்று சொல்லுகிறான். அந்தப் பிள்ளையாண்டான் ஓடும்போது, யோனத்தான் அவனுக்கு அப்பாலே போகும்படி ஒரு அம்பை எய்கிறான் (1சாமு 20:35,36).

யோனத்தான் எய்த அம்பிருக்கும் இடமட்டும் பிள்ளையாண்டான் போனபோது, "அம்பு உனக்கு இன்னும் அப்பால் இருக்கிறது அல்லவா" என்று யோனத்தான் பிள்ளையாண்டானுக்குப் பிறகேயிருந்து கூப்பிடுகிறான். "நீ தரித்துநிற்காமல் தீவிரித்துப்பொட்டெனப்போ" (1சாமு 20:37,38) என்றும் யோனத்தான் பிள்ளையாண்டானுக்குப் பிறகேயிருந்து கூப்பிடுகிறான்.

அந்தக் காரியம் யோனத்தானுக்கும் தாவீதுக்கும் தெரிந்திருந்ததேயல்லாமல், அந்தப் பிள்ளையாண்டானுக்கு ஒன்றும் தெரியாதிருக்கிறது (1சாமு 20:39). யோனத்தானும் தாவீதும் இது சம்பந்தமாக ஏற்கெனவே பேசி தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள்.

யோனத்தான் தாவீதிடம் "மூன்றாம் நாளிலே நீர் ஒளித்திருக்கும் இடத்திற்குத் தீவிரித்து வந்து, ஏசேல் என்னும் கல்லண்டையில் உட்கார்ந்திரும். அப்பொழுது நான் குறிப்புவைத்து எய்கிறதுபோல, அதற்குப் பக்கமாக மூன்று அம்புகளை எய்வேன். "நீ போய், அந்த அம்புகளைத் தேடிவா" என்று ஒரு பிள்ளையாண்டானை அனுப்புவேன்; "இதோ, அம்புகள் உனக்கு இப்புறத்திலே கிடக்கிறது, அவைகளை எடுத்துக்கொண்டுவா" என்று பிள்ளையாண்டானிடத்தில் நான் சொன்னால், நீர் வாரும்; அப்பொழுது ஒன்றும் இல்லை, உமக்குச் சமாதானம் இருக்கும் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 20:19-21) என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறான்.

மேலும், "இதோ, அம்புகள் உனக்கு அப்புறத்திலே கிடக்கிறது" என்று நான் அந்தப் பிள்ளையாண்டானிடத்தில் சொன்னால்" நீர் போய்விடும்; அப்பொழுது கர்த்தர் உம்மைப் போகச்சொல்லுகிறார் என்று அறியும்" (1சாமு 20:22) என்றும் யோனத்தான் தாவீதுக்கு சொல்லியிருக்கிறான்.

யோனத்தானும் தாவீதும் பேசியிருக்கிற காரியமெல்லாம், அந்தப் பிள்ளையாண்டானுக்குத் தெரியாது. ஆகையினால் யோனத்தான் சொன்ன பிரகாரமாகவே, அந்த பிள்ளையாண்டான் அம்புகளைப் பொறுக்கி, தன் எஜமானிடத்தில் கொண்டுவருகிறான். அப்பொழுது யோனத்தான்: தன் ஆயுதங்களைப் பிள்ளையாண்டானிடத்தில் கொடுத்து, இவைகளைப் பட்டணத்திற்குக் கொண்டுபோ என்று சொல்லுகிறான் (1சாமு 20:40).

பிள்ளையாண்டான் போனபின்பு தாவீதும் யோனத்தானும் மறுபடியும் சந்தித்து பேசிக்கொள்கிறார்கள். தாவீதுக்கு சவுல் மூலமாய் ஆபத்து உள்ளது என்பது உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. தாவீது இனிமேல் சவுலின் அரண்மனையில் இருக்கக்கூடாது. தாவீது தன் ஜீவனைக் காத்துக்கொள்ள, உடனே அந்த இடத்தை விட்டு தப்பி ஓடிப்போகவேண்டும். தாவீது ஓடிப்போவதற்கு முன்பாக, யோனத்தானை பார்க்க விரும்புகிறார். அவர்கள் இருவரும் நெருங்கிய சிநேகிதர்கள். தாவீது இதுவரையிலும் யோனத்தான் சொன்ன பிரகாரமாக ஏசேல் என்னும் கல்லண்டையில் மறைவாக உட்கார்ந்திருக்கிறார்.

பிள்ளையாண்டான் போனபின்பு, தாவீது தென்புறமான இடத்திலிருந்து எழுந்துவந்து, தரையிலே முகங்குப்புற விழுந்து, மூன்றுவிசை வணங்குகிறார்; தாவீதும் யோனத்தானும் ஒருவரை ஒருவர் முத்தஞ்செய்து அழுகிறார்கள்; தாவீது மிகவும் அழுகிறார் (1சாமு 20:41). இரண்டு சிநேகிதர்களும் பிரியப்போகிறார்கள். பிரிவு மனதிற்கு வருத்தத்தையும் வேதனையையும் கொடுக்கும். தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள தாவீது தப்பி ஓடவேண்டும். காலதாமதம் பண்ணக்கூடாது. அதற்கு முன்பு தாவீது யோனத்தானிடம் ஒரு சில வார்த்தைகள் பேசவேண்டுமென்று விரும்புகிறார்.

இந்த சம்பவம் நடைபெற்ற பின்பு தாவீதும் யோனத்தானும் ஒரு தரம் மாத்திரமே ஒரு காட்டில் சந்தித்திருக்கிறார்கள். அதன் பின்பு இவர்கள் இருவரும் சந்தித்துக்கொள்ளவில்லை.

"தன் பிராணனை வாங்கத் தேடும்படிக்கு, சவுல் புறப்பட்டான் என்று தாவீது அறிந்தபடியினாலே, தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள ஒரு காட்டிலே இருந்தான். அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி: நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டு பிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்" (1சாமு 23:15-17).

தாவீது யோனத்தானை விட்டுப் பிரிந்துபோவதற்கு முன்பாக மிகவும் அழுகிறார். அப்பொழுது யோனத்தான் தாவீதை நோக்கி: "நீர் சமாதானத்தோடே போம், கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும், நடுநிற்கும் சாட்சி என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக்கொண்டதை நினைத்துக்கொள்ளும்" (1சாமு 20:42) என்று சொல்லுகிறான்.

தாவீதும் யோனத்தானும் ஒருவரையொருவர் முத்தம் செய்கிறார்கள். இருவரும் அழுகிறார்கள். அதன் பின்பு பிரிந்துபோகிறார்கள். பின்பு தாவீது எழுந்து புறப்பட்டுப் போகிறார்; யோனத்தானோ பட்டணத்திற்குப் போகிறான் (1சாமு 20:43). இரண்டு சிநேகிதரும் பிரிந்துபோகிறார்கள். இருவருடைய மனதிலும் வருத்தமும் வேதனையும், துக்கமும் உண்டாயிற்று.

யோனத்தானோ பட்டணத்திற்குப்போகிறான். அங்கே அவனுடைய குடும்பத்தார் இருக்கிறார்கள். தாவீதுக்கோ எங்கே போகவேண்டுமென்று தெரியவில்லை. தாவீது ஒரு ஆதரவுமில்லாமல் தனிமையிலிருக்கிறார். திக்கற்றவரைப்போல இருக்கிறார். திக்கற்றவர்களுக்கு கர்த்தரே துணை.

21 அதிகாரம்

தாவீது சவுலின் அரண்மனையைவிட்டு, தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள தப்பித்து ஓடிப்போகிறார். சவுல் தாவீதை ஒரு தேசத்துரோகியைப்போல பாவிக்கிறார். சவுல் தாவீதைத் தேடி கண்டுபிடித்து கொன்றுபோடுவதற்காக, அவர் தாவீதைத் துரத்துகிறார். தாவீது ஒவ்வொரு இடமாக ஓடி ஒளிகிறார். தாவீதுக்கு மிகுந்த துக்கமும் வேதனையும், நெருக்கமும் உண்டாயிற்று. தன்னுடைய பாடுகளையும், வேதனைகளையும், மனதின் வருத்தங்களையும், தாவீது சங்கீதப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

தாவீது நோபிலிருக்கிற ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்திற்குப் போகிறார். அவரிடத்திலிருந்து சமுகத்தப்பங்களையும், கோலியாத்தின் பட்டயத்தையும் பெற்றுக்கொள்கிறார் (1சாமு 21:1-9).

அதன்பின்பு தாவீது சவுலுக்கு தப்பி ஓடி, காத்தின் ராஜாவாகிய ஆகீசிடத்தில் போகிறார். தாவீது ஆகீசுக்கு முன்பாக தன்னை பித்தங்கொண்டவன்போல காண்பித்துக்கொள்கிறார் (1சாமு 21:10-15).

அகிமெலேக்கு
1சாமு 21:1-9

1சாமு 21:1. தாவீது நோபிலிருக்கிற ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்தில் போனான்; அகிமெலேக்கு நடுக்கத்தோடே தாவீதுக்கு எதிர்கொண்டுபோய்: ஒருவரும் உம்மோடே கூடவராமல், நீர் ஒண்டியாய் வருகிறது என்ன என்று அவனைக் கேட்டான்.

1சாமு 21:2. தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்கைப் பார்த்து: ராஜா எனக்கு ஒரு காரியத்தைக் கட்டளையிட்டு, நான் உன்னை அனுப்பின காரியமும் உனக்குக் கட்டளையிட்டதும் இன்னதென்று ஒருவரும் அறியாதிருக்கவேண்டும் என்று என்னோடே சொன்னார்; இன்ன இடத்திற்கு வரவேண்டும் என்று சேவகருக்குச் சொல்லியிருக்கிறேன்.

1சாமு 21:3. இப்போதும் உம்முடைய கையில் இருக்கிறது என்ன? ஐந்து அப்பமாகிலும், என்னவாகிலும், இருக்கிறதை என்கையிலே கொடும் என்றான்.

1சாமு 21:4. ஆசாரியன் தாவீதுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த அப்பம் இருக்கிறதே ஒழிய, சாதாரண அப்பம் என் கையில் இல்லை; வாலிபர் ஸ்திரீகளோடேமாத்திரம் சேராதிருந்தால் கொடுப்பேன் என்றான்.

1சாமு 21:5. தாவீது ஆசாரியனுக்குப் பிரதியுத்தரமாக: நான் புறப்படுகிறதற்கு முன்நேற்றும் முந்தாநாளும் ஸ்திரீகள் எங்களுக்கு விலக்கமாயிருந்தார்கள்; வாலிபருடைய அசம்பிகளும் சுத்தமாயிருக்கிறது; இன்றையதினம் வேறே அப்பம் பாத்திரத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்டதினால், இது சாதாரணமாயிற்றே என்றான்.

1சாமு 21:6. அப்பொழுது கர்த்தருடைய சந்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட சமுகத்தப்பங்களைத்தவிர, வேறே அப்பம் அங்கே இராதபடியினால் ஆசாரியன் அவனுக்குப் பரிசுத்த அப்பத்தைக் கொடுத்தான்; அவைகள் எடுக்கப்படுகிற நாளிலே அதற்குப் பதிலாகச் சூடான அப்பம் வைக்கப்படும்.

1சாமு 21:7. சவுலுடைய வேலைக்காரரில் ஏதோமியனாகிய தோவேக்கு என்னும் பேருள்ள ஒருவன் அன்றையதினம் அங்கே கர்த்தருடைய சந்நிதியில் தடைப்பட்டிருந்தான்; அவன் சவுலுடைய மேய்ப்பருக்குத் தலைவனாயிருந்தான்.

1சாமு 21:8. தாவீது அகிமெலேக்கைப் பார்த்து: இங்கே உம்முடைய வசத்தில் ஒரு ஈட்டியானாலும் பட்டயமானாலும் இல்லையா? ராஜாவின் காரியம் அவசரமானபடியினால், என் பட்டயத்தையாகிலும், என் ஆயுதங்களையாகிலும், நான் எடுத்துக் கொண்டுவரவில்லை என்றான்.

1சாமு 21:9. அதற்கு ஆசாரியன்: நீர் ஏலே பள்ளத்தாக்கிலே கொன்ற பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயம், இதோ, ஏபோத்துக்குப் பின்னாக ஒரு புடவையிலே சுருட்டி வைத்திருக்கிறது; அதை நீர் எடுக்க மனதானால் எடுத்துக்கொண்டுபோம், அதுவே அல்லாமல் வேறொன்றும் இங்கே இல்லை என்றான்; அப்பொழுது தாவீது: அதற்கு நிகரில்லை; அதை எனக்குத் தாரும் என்றான்.

தாவீது இப்போது மிகுந்த நெருக்கத்திலிருக்கிறார். சவுலுக்கு தப்பி ஓடுகிறார். யோனத்தானிடமிருந்து விடைபெற்று, கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போகிறார். இக்காலத்தில் ஆசரிப்புக்கூடாரம் நோபிலிருக்கிறது. நோப் பென்யமீன் கோத்திரத்தாருடைய சுதந்தரத்திலிருக்கிற பட்டணம். ஆசரிப்புக்கூடாரம் இதுவரையிலும் சீலோவிலே இருந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றுகிறார்கள். கூடாரம் இப்போது நோபிலிருந்தாலும், கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி இன்னும் கீரியாத்யாரீமிலே இருக்கிறது.

தாவீது இதுவரையிலும் சவுலுக்கு தப்பி ஓடிக்கொண்டிருக்கிறார். சாமுவேல் தீர்க்கதரிசியால் தாவீதை சவுலிடமிருந்து பாதுகாக்க முடியவில்லை. யோனத்தான் சவுலின் குமாரனாகயிருந்தாலும், அவனாலும் தாவீதை தன்னுடைய தந்தையின் கோபத்திலிருந்து தப்பிக்க வைக்க முடியவில்லை. தாவீது சவுலுக்குப் பயந்து தன்னுடைய சொந்த ஊராகிய பெத்லெகேமுக்கும் போகவில்லை. தாவீதின் குடும்பத்தாரும் அவரைப் பாதுகாக்கவில்லை.

தாவீது கர்த்தருடைய சமுகத்திலே அடைக்கலம் தேடவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார். தனக்கு விரோதமாக எத்தனை சத்துருக்கள் எழும்பினாலும், கர்த்தரே தனக்கு ஆதரவாயும், துணையாயும், பாதுகாப்பாயும் இருப்பார் என்று தாவீது நம்புகிறார். ஆகையினால் தாவீது நோபிலிருக்கிற ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்தில் போகிறார். நோபிலே ஆசாரிப்புக்கூடாரம் இருக்கிறது.

தாவீது ஆரம்பத்தில் இஸ்ரவேல் தேசத்தைவிட்டு ஓடிப்போகவில்லை. சவுல் தாவீதை நாடுகடத்தவுமில்லை. ஆகையினால் தாவீது ஆரம்பத்திலேயே அந்நிய தேசத்திற்கு ஓடிப்போகாமல் நோபிலிருக்கிற, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு வருகிறார்.

தாவீது தன்னுடைய வருங்காலத்தை யோசித்துப் பார்க்கிறார். இஸ்ரவேல் தேசத்தை விட்டே வெளியேற வேண்டிய சூழ்நிலை தனக்கு உண்டாகும் என்பதையும் தாவீது உணருகிறார். தேசத்தைவிட்டு வெளியேறும் முன்பாக, தாவீது ஆசரிப்புக்கூடாரத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறார். மறுபடியும் தன்னால் ஆசரிப்புக்கூடாரத்தை எப்போது பார்க்க முடியும் என்பது தாவீதுக்கு தெரியவில்லை.

தாவீது இப்போது சவுலுக்கு தப்பி ஓடிக்கொண்டிருக்கிறார். தாவீதுக்கு நெருக்கமானவர்கள் யாரும், அவரைப் பாதுகாக்கவில்லை. ஒருவரும் அவருக்கு அடைக்கலம் கொடுக்கவும் முன்வரவில்லை. இந்த சூழ்நிலையில், தாவீதுக்கு எங்கே போகவேண்டும் என்றும் தெரியவில்லை. தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கலாம் என்று தீர்மானித்து, நோபிலிருக்கிற ஆசரிப்புக்கூடாரத்திற்கு வருகிறார். தான் என்ன செய்யவேண்டும் என்பதை கர்த்தரிடத்திலிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறார். கர்த்தரே தன்னுடைய ஜீவனை சவுலின் கைகளிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்று ஜெபம்பண்ணுவதற்காக, தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு வருகிறார்.

இக்காலத்தில் அகிமெலேக்கு, நோபிலிருக்கிற ஆசரிப்புக்கூடாரத்திலே ஆசாரியனாக ஊழியம் செய்கிறார். இவருக்கு தாவீதின் பிரச்சனைகளைப்பற்றி ஓரளவு தெரிந்திருக்கிறது. தாவீது இதற்கு முன்பு சவுலின் அரண்மனையிலே உயர்ந்த அந்தஸ்திலே இருந்தவர். இப்போதோ சவுல் தாவீதைப் பகைக்கிறார். தாவீது சவுலின் கோபத்திற்கு தப்பித்து ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறார் என்பது அகிமெலேக்குக்கு தெரிந்திருக்கிறது.

தன்னிடத்தில் தாவீது வருவதைப் பார்த்து அகிமெலேக்கு கலங்குகிறார். அவர் சவுலுக்குப் பயப்படுகிறார். தாவீது தன்னிடத்தில் ஏன் வருகிறார் என்பது அகிமெலேக்குக்குத் தெரியவில்லை. அகிமெலேக்கு நடுக்கத்தோடே தாவீதுக்கு எதிர்கொண்டுபோகிறார். அவர் தாவீதைப் பார்த்து, "ஒருவரும் உம்மோடே கூடவராமல், நீர் ஒண்டியாய் வருகிறது என்ன" (1சாமு 21:1) என்று கேட்கிறார்.

அகிமெலேக்குக்கு சவுலின் கோபத்தைப்பற்றித் தெரியும். அகிமெலேக்கு தாவீதுக்கு அடைக்கலம் கொடுத்தால், சவுல் அகிமெலேக்கின்மீதும் கோபமாயிருப்பார். அகிமெலேக்கால் சவுலின் கோபத்தை தாங்கிக்கொள்ள முடியாது. ஆகையினால் அவர் மிகுந்த நடுக்கத்தோடு தாவீதுக்கு எதிர்கொண்டு போகிறார். "நீர் ஒண்டியாய் வருகிறது என்ன" என்று கேட்கிறார்.

அகிமெலேக்குக்கு தாவீதின் சரித்திரம் தெரியும். தாவீது ஒரு காலத்திலே பெத்லெகேமிலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். அதன்பின்பு தாவீது சவுலின் அரண்மனையில் உத்தியோகம் பார்த்தார். சவுல் தாவீதை யுத்த அதிகாரியாக உயர்த்தினார். தாவீதைச் சுற்றிலும் எப்போதும் வீரர்கள் நிற்பார்கள். ஆனால் இப்போதோ தாவீது அகிமெலேக்கினிடத்தில் ஒண்டியாய் வருகிறார்.

தாவீது அகிமெலேக்கினிடத்தில் உண்மையைப் பேசாமல், அதை மறைத்துவிடுகிறார். தான் இன்னும் ராஜாங்க உத்தியோகத்திலிருப்பதுபோலவும், தான் சவுல் ராஜாவின் கட்டளை பிரகாரமே இங்கு வந்திருப்பதாகவும் தாவீது பொய் சொல்லுகிறார்.

தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்கைப் பார்த்து: "ராஜா எனக்கு ஒரு காரியத்தைக் கட்டளையிட்டு, நான் உன்னை அனுப்பின காரியமும் உனக்குக் கட்டளையிட்டதும் இன்னதென்று ஒருவரும் அறியாதிருக்கவேண்டும் என்று என்னோடே சொன்னார்; இன்ன இடத்திற்கு வரவேண்டும் என்று சேவகருக்குச் சொல்லியிருக்கிறேன்" (1சாமு 21:2) என்று தான் வந்ததற்கான காரணத்தை சொல்லுகிறார். இது உண்மையான காரணமல்ல. தாவீது அகிமெலேக்கினிடத்தில் பொய் சொல்லுகிறார்.

தாவீது நீண்ட தூரம் பிரயாணம் பண்ணி வந்திருக்கவேண்டும். அவர் பிரயாணக்களைப்பிலிருக்கிறார். அவருக்கு பசியும் தாகமும் உண்டாயிற்று. தாவீதுக்கு போஜனம் கிடைக்கவில்லை. தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்தில், "இப்போதும் உம்முடைய கையில் இருக்கிறது என்ன? ஐந்து அப்பமாகிலும், என்னவாகிலும், இருக்கிறதை என்கையிலே கொடும்" (1சாமு 21:3) என்று கேட்கிறார்.

பொய்சொல்லுவது தாவீதின் சுபாவமல்ல. ஆனாலும் தாவீது சவுலுக்கு பயந்து தப்பித்து ஓடும்போது, அவருடைய சுபாவம் மாறியிருக்கிறது. கோலியாத்தை எதிர்த்து நின்ற தாவீது, இப்போது சவுலுக்கு பயப்படுகிறார். மனுஷருக்கு பயப்படுவது தாவீதின் சுபாவமல்ல. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஆனால் இப்போது தாவீதின் சுபாவம் மாறியிருக்கிறது.

தான் இரகசிய வேலையாக வந்திருப்பதாக தாவீது சொல்லுகிறார். சவுலே தன்னை அனுப்பியிருப்பதாகவும் தாவீது சொல்லுகிறார். தன்னை சந்திப்பதற்கு சேவகர்கள் வருவார்கள் என்றும் தாவீது சொல்லுகிறார். இதில் சிறிதும் உண்மையில்லை. தாவீது இங்கு பேசுவது எல்லாமே பொய் வார்த்தைகள்.

தாவீது தன்னுடைய பொய் வார்த்தைகளினால் ஆசாரியனாகிய அகிமெலேக்கை ஏமாற்றுகிறார். அகிமெலேக்கும் ஏமாற்றப்படுகிறார். வஞ்சிக்கப்படுகிறார். இதனால் அகிமெலேக்குக்கு தீயவிளைவுகள் உண்டாயிற்று. அவர் மரிக்க வேண்டியதாயிற்று. அகிமெலேக்கு மாத்திரமல்ல, அவரோடுகூட அநேக ஆசாரியர்களும் மரிக்க வேண்டியதாயிற்று. பிற்காலத்தில் ஆசாரியர்கள் மரித்துப்போனதை நினைத்து, தாவீது மிகவும் மனவேதனைப்படுகிறார்.

"சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்றுபோட்ட செய்தியை தாவீதுக்கு அறிவித்தான். அப்பொழுது தாவீது அபியத்தாரைப் பார்த்து: ஏதோமியனாகிய தோவேக்கு அங்கே இருந்தபடியினாலே, அவன் எவ்விதத்திலும் சவுலுக்கு அதை அறிவிப்பான் என்று அன்றையதினமே அறிந்திருந்தேன்; உன் தகப்பன் வீட்டாராகிய எல்லாருடைய மரணத்துக்கும் காரணம் நானே" *(1சாமு 22:21,22)*.

தாவீது கர்த்தரை நம்புகிறவர். அவர் ஒரு யுத்தவீரர். தாவீது ஒரு பராக்கிரமசாலி. ஆனால் இப்போதோ தாவீதிடம் விசுவாசமுமில்லை வீரமுமில்லை. தாவீதின் இருதயத்தில் பயமும், கோழைத்தனமும் நிரம்பியிருக்கிறது. அவருடைய விசுவாசம் பலவீனமாயிற்று. இதனால் தாவீது அகிமெலேக்கினிடத்தில் பொய்சொல்லுகிறார். அவரை வஞ்சிக்கிறார். தாவீதுக்கு அப்பமும் பட்டயமும் தேவைப்படுகிறது.

தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்தில், "இப்போதும் உம்முடைய கையில் இருக்கிறது என்ன? ஐந்து அப்பமாகிலும், என்னவாகிலும், இருக்கிறதை என்கையிலே கொடும்" என்று கேட்கிறார். ஆசாரியன் தாவீதுக்குப் பிரதியுத்தரமாக: "பரிசுத்த அப்பம் இருக்கிறதே ஒழிய, சாதாரண அப்பம் என் கையில் இல்லை; வாலிபர் ஸ்திரீகளோடே மாத்திரம் சேராதிருந்தால் கொடுப்பேன்" *(1சாமு 21:3,4)* என்று சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள, பொன்மேஜையின்மீது ஆசாரியர் பரிசுத்த அப்பத்தை கர்த்தருக்கு படைப்பார். இந்த அப்பம் மேஜையின்மீது ஏழுநாட்களாக வைக்கப்பட்டிருக்கும். அதன் பின்பு ஆசாரியர் அந்த அப்பத்தை எடுத்து, அங்கே பரிசுத்தமான புதிய அப்பங்களை வைப்பார். பழைய அப்பங்களை ஆசாரியரும் அவருடைய குடும்பத்தாரும் புசிப்பார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருக்கு படைக்கப்பட்ட பரிசுத்த அப்பம் மாத்திரமே இருக்கிறது. அகிமெலேக்கினிடத்தில் சாதாரண அப்பம் எதுவுமில்லை. பரிசுத்த அப்பத்தை ஆசாரியரும் அவருடைய குடும்பத்தாரும் புசிக்கலாம். மற்றவர்கள் புசிக்கவேண்டுமென்றால், ஒரு சில கட்டுப்பாடுகள் உள்ளது. வாலிபர் ஸ்திரீகளோடே சேரதிருந்தால் மாத்திரமே அவர்கள் பரிசுத்த அப்பத்தைப் புசிக்கலாம். இது தாவீதுக்கும் தெரியும். அகிமெலேக்கு, பரிசுத்த அப்பத்தைப் புசிப்பதற்கான நிபந்தனைகளை தாவீதுக்கு சொல்லுகிறார்.

தாவீது பசியோடிருக்கிறார். அவருக்கு போஜனம் பண்ண அப்பம் வேண்டும். தாவீது முதலில் ஐந்து அப்பங்களைக் கேட்டார். அதன்பின்பு "என்னவாகிலும் இருக்கிறதை என் கையிலே கொடும்" என்று கேட்டார். அகிமெலேக்கோ தாவீதுக்கு அப்பத்தைக் கொடுக்காமல், நிபந்தனைகளைக் கொடுக்கிறார்.

தாவீது ஆசாரியனுக்குப் பிரதியுத்தரமாக: "நான் புறப்படுகிறதற்கு முன்நேற்றும் முந்தாநாளும் ஸ்திரீகள் எங்களுக்கு விலக்கமாயிருந்தார்கள்; வாலிபருடைய அசம்பிகளும் சுத்தமாயிருக்கிறது; இன்றையதினம் வேறே அப்பம் பாத்திரத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்டதினால், இது சாதாரணமாயிற்றே" *(1சாமு 21:5)* என்று சொல்லுகிறார்.

தாவீது அகிமெலேக்குக்கு முன்பாக தனியாக நின்றுகொண்டிருக்கிறார். ஆனால் அவர் தன்னோடுகூட அரண்மனையின் சேவகர்களாகிய வாலிபர்களும் இருப்பதுபோல, மாய்மாலம்பண்ணுகிறார். பரிசுத்த அப்பத்தை புசிப்பதற்கு தானும், தன்னோடு கூடயிருக்கிற வாலிபர்களும் சுத்தமாயிருப்பதாக தாவீது சொல்லுகிறார். "வாலிபருடைய அசம்பிகள்" என்னும் வார்த்தைக்கு, "வாலிபருடைய சரீரங்கள்" என்று பொருள். தானும் பரிசுத்தமாயிருப்பதாகவும், தன்னோடு கூடயிருக்கிற வாலிபரும் பரிசுத்தமாயிருப்பதாகவும் தாவீது சொல்லுகிறார்.

மேலும் தாவீது ஆசரிப்புக்கூடாரத்திலிருக்கிற பரிசுத்த அப்பத்தைப்பற்றி தன்னுடைய வியாக்கியானத்தையும் சொல்லுகிறார். அகிமெலேக்கு வைத்திருப்பது பரிசுத்த அப்பமல்ல என்றும், அது சாதாரண அப்பம் என்றும் தாவீது விளக்கம் சொல்லுகிறார். "இன்றையதினம் வேறே அப்பம் பாத்திரத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்டதினால், இது சாதாரணமாயிற்றே" என்று தாவீது அப்பத்திற்கு விளக்கம் சொல்லுகிறார். ஆகையினால் தானும், தன்னோடு கூடயிருக்கிற வாலிபர்களும், இந்த அப்பத்தைப் புசிப்பதற்கு தடையேதுமில்லை என்று தாவீது விவாதம்பண்ணுகிறார்.

அப்பொழுது கர்த்தருடைய சந்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட சமுகத்தப்பங்களைத்தவிர, வேறே அப்பம் அங்கே இராதபடியினால் ஆசாரியன் தாவீதுக்குப் பரிசுத்த அப்பத்தைக் கொடுக்கிறார்; அவைகள் எடுக்கப்படுகிற நாளிலே அதற்குப் பதிலாகச் சூடான அப்பம் வைக்கப்படும் (1சாமு 21:6).

தாவீது பரிசுத்த அப்பத்திற்கு கொடுத்த வியாக்கியானத்தை, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் அங்கீகரிக்கிறார். பலிசெலுத்தும்போது இரக்கமும் காண்பிக்கவேண்டும். பாரம்பரிய பழக்க வழக்கங்களைவிட, நீதியும் நியாயமுமே முக்கியமானது. இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஓய்வுநாளிலே, வயல்வெளி வழியாகப் போகும்போது, ஒரு சில கதிர்களைக் கொய்து, அவற்றை கசக்கி தின்றார்கள். பரிசேயர்கள் சீஷர்களைக் குற்றப்படுத்தினார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களின் செய்கைளை நியாயப்படுத்துகிறார்.

"அக்காலத்திலே, இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள். பரிசேயர் அதைக்கண்டு, அவரை நோக்கி: இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்றார்கள். அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே" (மத் 12:1-4).

ஆசாரியனாகிய அகிமெலேக்கு தாவீதுக்கு பரிசுத்த அப்பத்தைக் கொடுக்கிறார். பரிசுத்த அப்பத்திலே மொத்தம் பன்னிரண்டு அப்பங்கள் இருக்கும். தாவீது ஐந்து அப்பங்களைக் கேட்டார். அகிமெலேக்கு அந்த பன்னிரண்டு அப்பங்களில், ஐந்தை தாவீதுக்குக் கொடுக்கிறார். ஆசாரிப்புக்கூடாரத்திலே வேறு அப்பம் எதுவுமில்லை. ஆசாரியன் தாவீதுக்கு கொடுத்த ஐந்து அப்பத்திற்கு பதிலாக, மேஜையிலே வேறு ஐந்து சூடான அப்பங்களை வைக்கவேண்டும். ஆனால் அங்கே வேறு அப்பம் இல்லை. ஆசாரியனாகிய அகிமெலேக்கு கர்த்தருடைய பராமரிப்பை நம்பி, தாவீதுக்கு பரிசுத்த அப்பத்திலே ஐந்து அப்பத்தைக் கொடுக்கிறார்.

தாவீதுக்கு ஒரு பட்டயம் தேவைப்படுகிறது. தாவீது அகிமெலேக்கைப் பார்த்து: "இங்கே உம்முடைய வசத்தில் ஒரு ஈட்டியானாலும் பட்டயமானாலும் இல்லையா? ராஜாவின் காரியம் அவசரமானபடியினால், என் பட்டயத்தையாகிலும், என் ஆயுதங்களையாகிலும், நான் எடுத்துக் கொண்டுவரவில்லை" (1சாமு 21:8) என்று சொல்லுகிறார். தன்னிடத்தில் பட்டயம் இருந்ததாகவும், அவசரமாகப் புறப்பட்டு வந்த படியினால், தான் பட்டயத்தை எடுத்துக்கொண்டு வரவில்லை என்றும் தாவீது பொய்சொல்லுகிறார்.

பொதுவாக ஆசரிப்புக்கூடாரத்திலே யாரும் பட்டயத்தைப்பற்றி பேசவும் மாட்டார்கள். அங்கே பட்டயத்தைத் தேடவும் மாட்டார்கள். ஆனால் இங்கே ஒரு பட்டயம் இருக்கிறது என்று தாவீதுக்கு தெரியும். தாவீதுதான், கோலியாத்தின் பட்டயத்தை, இங்கே ஏபோத்திற்கு பின்னாலே வைத்துவிட்டுப்போனார். தாவீது அகிமெலேக்கினிடத்தில், பட்டயத்தைப்பற்றிக் கேட்கும்போது, அவர் கோலியாத்தின் பட்டயத்தை மனதில் வைத்துதான் கேட்டிருக்கவேண்டும். அந்தப் பட்டயத்தை அகிமெலேக்கு தனக்கு எடுத்துக் கொடுப்பார் என்று தாவீது நம்புகிறார்.

அகிமெலேக்கும் தாவீதிடம் கோலியாத்தின் பட்டயத்தைப்பற்றி சொல்லுகிறார். "நீர் ஏலே பள்ளத்தாக்கிலே கொன்ற பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயம், இதோ, ஏபோத்துக்குப் பின்னாக ஒரு புடவையிலே சுருட்டி வைத்திருக்கிறது; அதை நீர் எடுக்க மனதானால் எடுத்துக்கொண்டுபோம், அதுவே அல்லாமல் வேறொன்றும் இங்கே இல்லை" (1சாமு 21:9) என்று அகிமெலேக்கு சொல்லுகிறார்.

தாவீதுக்கு கோலியாத்தின் பட்டயம் இங்கே இருக்கிறது என்பது தெரியும். ஆனாலும் அது பற்றி தனக்குத் தெரியும் என்பதை தாவீது வெளிப்படுத்தவில்லை. அவர் அகிமெலேக்கிடம், "அதற்கு நிரகரில்லை, அதை எனக்குத் தாரும்" என்று சொல்லுகிறார்.

கோலியாத்தின் பட்டயம் தாவீதுக்கு ஒரு விசேஷித்த பட்டயமாயிருக்கும். தாவீது இந்தப் பட்டயத்தைப் பார்க்கும்போதெல்லாம். அவருடைய விசுவாசம் வர்த்திக்கும். அவருடைய இருதயத்தில் உற்சாகமும், பலமும், தெம்பும் உண்டாகும். கோலியாத்தை ஜெயிப்பதற்கு கர்த்தர் தாவீதுக்கு உதவிசெய்தார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பும் பாதுகாப்பும் தாவீதுக்கு கிடைத்தது. தாவீது கோலியாத்தின் பட்டயத்தைப் பார்க்கும்போது இதையெல்லாம் நினைத்துப் பார்த்து உற்சாகப்படுவார்.

தாவீது கோலியாத்தைக் கொன்றபின்பு, அவர் கோலியாத்தின் பட்டயத்தை ஆசரிப்புக்கூடாரத்திலே கொண்டு வந்து வைத்தார். கர்த்தருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுப்பதற்கு அடையாளமாக, தாவீது அந்தப் பட்டயத்தை, கர்த்தருடைய சமுகத்திலே பிரதிஷ்டைபண்ணினார். தாவீது ஸ்தோத்திரத்தோடே கர்த்தருடைய சமுகத்தில் படைத்தது, இப்போது அவருக்கு உதவியாயிருக்கிறது.

தாவீது சவுலுக்கு தப்பித்து நோபிலிருக்கிற அகிமெலேக்கிடத்தில் வந்தபோது, அவருக்கு அப்பமும், பட்டயமும் தேவைப்பட்டது. கர்த்தருடைய கிருபையினால் தாவீதுக்கு இவ்விரண்டுமே கிடைக்கிறது.

ஆனாலும், தாவீது ஆசரிப்புக்கூடாரத்திலே, அகிமெலேக்கோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அங்கே ஒரு துயர சம்பவமும் நடைபெறுகிறது. சவுலுடைய வேலைக்காரரில் ஏதோமியனாகிய தோவேக்கு என்னும் பேருள்ள ஒருவன் அன்றையதினம் அங்கே கர்த்தருடைய சந்நிதியில் தடைப்பட்டிருக்கிறான்; அவன் சவுலுடைய மேய்ப்பருக்குத் தலைவனாயிருக்கிறான் (1சாமு 21:7).

தோவேக்கு பிறப்பினால் ஒரு ஏதோமியன். இவன் சவுலின் காலத்தில், யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டு, யூதமார்க்கத்தமைந்தவனானான். ஏதோமுக்கும் இஸ்ரவேலுக்கும் பூர்வ பகையிருக்கிறது. தோவேக்கு கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே ஆசாரியனுக்கு உதவியாக பணிவிடை செய்துகொண்டிருந்தாலும், அவனுடைய மனதிலே, இஸ்ரவேலுக்கு விரோதமான பூர்வ பகை இருக்கிறது.

தோவேக்கு சவுலின் ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பாகளுக்கு தலைவனாயிருக்கிறான். இப்போது ஆசரிப்புக்கூடாரத்திலே, ஆசாரிய ஊழியம் செய்கிற அகிமெலேக்குக்கு உதவி செய்கிற பொறுப்பு தோவேக்குக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இவன் தாவீது ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்த நாளிலே, ஆடுகளை மேய்க்கப்போகாமல், கர்த்தருடைய சந்நிதியில் தடைபட்டிருக்கிறான்.

தோவேக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் வேறு ஏதாவது ஒரு பகுதியில் இருந்திருந்தால், அவனுக்கு தாவீது அங்கே வந்தது தெரிந்திருக்காது. ஆனால் தோவேக்கோ கர்த்தருடைய சந்நிதியில் இருக்கிறான். தாவீதுக்கும், அகிமெலேக்குக்கும் இடையிலே நடைபெறுகிற சம்பாஷணையையெல்லாம் தோவேக்கு செவிகொடுத்து கேட்கிறான். அவன் தாவீதுக்கு தீங்கு செய்ய நினைக்கிறான்.

சவுலுடைய மேய்ப்பருக்கு தலைவனாயிருந்த தோவேக்குக்கு, அகிமெலேக்கு தீங்கு செய்தார். அந்த உத்தியோகத்திலிருந்து தோவேக்கை விலக்கி, ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைக்கு அழைத்து வந்திருக்கிறார். இதன் நிமித்தம் தோவேக்கு அகிமெலேக்கை பழிவாங்குவதற்கு சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் இப்போது வந்திருக்கிறது. கர்த்தருடைய சந்நிதியில் தன்னை தடைபண்ணின, அகிமெலேக்கை பழிவாங்குவதற்கு, இந்த சந்தர்ப்பத்தை தோவேக்கு பயன்படுத்துகிறான்.

காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் 1சாமு 21:10-15

1சாமு 21:10. அன்றையதினம் தாவீது எழுந்து சவுலுக்குத் தப்பியோடி, காத்தின் ராஜாவாகிய ஆகீசிடத்தில் போனான்.

1சாமு 21:11. ஆகீசின் ஊழியக்காரர் அவனைப் பார்த்து: தேசத்து ராஜாவாகிய தாவீது இவன் அல்லவோ? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இவனைக்குறித்ததல்லவோ ஆடல் பாடலோடே கொண்டாடினார்கள் என்றார்கள்.

1சாமு 21:12. இந்த வார்த்தைகளைத் தாவீது தன் மனதிலே வைத்துக்கொண்டு, காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு மிகவும் பயப்பட்டு,

1சாமு 21:13. அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி, அவர்களிடத்தில் பித்தங்கொண்டவன்போலக் காண்பித்து, வாசற்கதவுகளிலே கீறிக்கொண்டிருந்து, தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக் கொண்டிருந்தான்.

1சாமு 21:14. அப்பொழுது ஆகீஸ் தன் ஊழியக்காரரை நோக்கி: இதோ, இந்த மனுஷன் பித்தங்கொண்டவன் என்று காண்கிறீர்களே; இவனை நீங்கள் என்னிடத்தில் கொண்டுவந்தது என்ன?

1சாமு 21:15. எனக்கு முன்பாகப் பயித்தியசேஷ்டை செய்ய, நீங்கள் இவனைக் கொண்டுவருகிறதற்கு, பயித்தியக்காரர் எனக்குக் குறைவாயிருக்கிறார்களோ, இவன் என் வீட்டிலே வரலாமா என்றான்.

சாமுவேல் தாவீதை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணினான். கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட தாவீது ராஜா, இப்போது நாடு கடத்தப்பட்டு, ஒவ்வொரு இடமாக சுற்றி அலைந்து கொண்டிருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் நன்றாயிருக்கிறது. ஆனால் தாவீதின் ஜீவியத்தில் நடைபெறுகிற சம்பவங்கள் நன்றாயில்லை.

இதுபோலவே நம்முடைய ஜீவியங்களிலும், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய பராமரிப்புக்களும், சில சமயங்களில் ஒத்துப்போகாமல் வித்தியாசமாயிருக்கும். ஆனாலும் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் நிச்சயம் நிறைவேறும். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். வாக்குத்தத்தங்களெல்லாம், இயேசுகிறிஸ்துவுக்குள்ளே, ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது.

தாவீது அன்றையதினம் சவுலுக்குத் தப்பியோடி, காத்தின் ராஜாவாகிய ஆகீசிடத்தில் போகிறார் (1சாமு 21:10). தாவீது இஸ்ரவேல் தேசத்திலிருந்து பெலிஸ்தருடைய தேசத்திற்குப் போகிறார். காத்தின் ராஜாவாகிய ஆகீசின் பாளயத்தில் தங்கியிருந்தால், சவுலால் தன்னை கண்டுபிடிக்க முடியாது என்று தாவீது நினைக்கிறார்.

"ஆகையால் தாவீது தன்னோடிருந்த அறுநூறுபேரோடுங்கூட எழுந்திருந்து, மாயோகின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே தாவீதும், அவன் மனுஷரும், அவரவர் வீட்டாரும், தாவீதோடேகூட அவன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளாகிய அகினோகாமும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளாகிய அபிகாயிலும், காத்பட்டணத்தில் ஆகீசிடத்தில் தங்கியிருந்தார்கள்" (1சாமு 27:2,3).

தாவீதுக்கும் காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கும் ஏற்கெனவே சிநேகம் இருந்திருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தாவீது வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிற மனுஷனாயிருக்கிறார். தாவீது கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர். தாவீது கஷ்டங்களை அனுபவித்தபோது, இஸ்ரவேல் ஜனத்தாரைவிட, பெலிஸ்தரே அவருக்கு அதிக உதவியாயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்கள் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, விசுவாசிகளைவிட, புறஜாதி ஜனங்களே அவர்களுக்கு அதிகமாய் உதவிசெய்கிறார்கள்.

தாவீதுக்கு யூதருடைய கூடாரத்திலே கிடைத்த ஆதரவை விட, புறஜாதியாருடைய கூடாரங்களிலே அதிகமாய் ஆதரவு கிடைக்கிறது. யூதாவின் ராஜா எரேமியாவைக் கைதுபண்ணி சிறையிலடைந்தான். பாபிலோன் ராஜாவோ, சிறையிலிருந்த எரேமியாவை விடுதலை பண்ணினான்.

ஆகீசின் ஊழியக்காரர் தாவீதைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு தாவீதின் பூர்வ சரித்திரம் தெரிகிறது. தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணியது எல்லாமே தெரிகிறது. ஆகையினால் அவர்கள் தங்கள் ராஜாவாகிய அகீசிடம் போய் தாவீதுக்கு விரோதமாக குற்றம் சொல்லுகிறார்கள்.

ஆகீசின் ஊழியக்காரர் தாவீதைப் பார்த்து: "தேசத்து ராஜாவாகிய தாவீது இவன் அல்லவோ? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இவனைக்குறித்ததல்லவோ ஆடல் பாடலோடே கொண்டாடினார்கள்" (1சாமு 21:11) என்று சொல்லுகிறார்கள்.

ஆகீசின் ஊழியக்காரருடைய பார்வையிலே, தாவீது பெலிஸ்தருக்கு சத்துருவாகத் தெரிகிறார். தங்களை வேவுபார்ப்பதற்காக தாவீது வந்திருக்கிறாரோ என்னும் சந்தேகம் ஆகீசின் ஊழியக்காரருக்கு உண்டாயிற்று. பெலிஸ்தருடைய தேசத்திற்கு சத்துருவாயிருக்கிற தாவீதை தங்களோடு வைத்திருக்கலாமா என்று ஆகீசின் ஊழியக்காரர் நினைக்கிறார்கள். தாவீதைப் பாதுகாக்கவேண்டுமா என்றும், அவரைப் பராமரிக்க வேண்டுமா என்றும் ஆகீசின் மனுஷர் சந்தேகப்படுகிறார்கள்.

ஆகீஸ் ஒரு ராஜதந்திரி. அவனுக்கு தாவீதைப்பற்றியும், தாவீதின் பிரச்சனைகளைப்பற்றியும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. தாவீது சவுலுக்கு சத்துருவாயிருக்கிறார். சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. சவுலின் சத்துருவுக்கு தான் ஆதரவு கொடுக்கவேண்டுமென்று ஆகீஸ் நினைக்கிறான். இதனால் சவுலுக்கு சத்துருவாயிருக்கிற தாவீது, ஆகீசுக்கு சிநேகிதராயிருப்பார்.

பூர்வகாலங்களில் நாடு கடத்தப்பட்டவர்களை, அந்நிய தேசத்தார், அதிலும் விசேஷமாய், அந்த தேசங்களுக்கு விரோதிகளாயிருக்கிறவர்கள், தங்கள் தேசத்திலே அடைக்கலம் கொடுத்து தங்கவைப்பார்கள். பிற்காலத்தில் இவர்களைக்கொண்டு, இவர்களுடைய தேசத்திலே குழப்பங்களை ஏற்படுத்துவார்கள். இவர்களுடைய ஆதரவினால், இவர்களுடைய தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவார்கள்.

தாவீது ஆகீசை நம்புகிறார். ஆகீஸ் தனக்கு உதவியாயிருப்பார் என்று நினைக்கிறார். ஆனால் ஆகீசின் ஊழியக்காரர் தாவீதுக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள். இந்த வார்த்தைகளைத் தாவீது தன் மனதிலே வைத்துக்கொண்டு, காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு மிகவும் பயப்படுகிறார் (1சாமு 21:12).

ஒருவேளை ஆகீசின் ஊழியக்காரர், தாவீதின்மேல் பொறாமைப்பட்டு அவருக்கு விரோதமான வார்த்தைகளைப் பேசியிருக்கலாம் ஆகீஸ் தனக்கு அடைக்கலம் கொடுக்காமல், தன்னை காத் தேசத்தை விட்டு துரத்திவிடுவானோ என்னும் பயம் தாவீதுக்கு உண்டாயிற்று. ஆகீசின் அனுதாபத்தைப் பெறுவதற்காக, தாவீது பித்தங்கொண்டவர்போல் நடிக்கிறார்.

தாவீது ஆகீசினுடைய ஊழியக்காரருடைய கண்களுக்கு முன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி, அவர்களிடத்தில் பித்தங்கொண்டவன்போலக் காண்பிக்கிறார். தாவீது தன்னை வாசற்கதவுகளிலே கீறிக்கொண்டிருந்து, தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக் கொண்டிருக்கிறார் (1சாமு 21:13).

தாவீது தன்னுடைய ஜீவனை காத்துக்கொள்வதற்காகவே இவ்வளவு கஷ்டப்படுகிறார். வேஷம் போடுகிறார். தாவீதின் கிரியைகள் விநோதமாயிருந்தாலும், இதுவும் ஒரு யுத்த தந்திரம்போல இருக்கிறது. சத்துருக்கள் மத்தியிலே வாசம்பண்ணுவது எளிதான காரியமல்ல. தாவீது எப்படியாவது சவுலுக்கு தப்பிக்க வேண்டும். அதற்காக அவர் தன்னை பித்தங்கொண்டவர் போல காண்பிக்கிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவர், பெலிஸ்தருடைய தேசத்திலே, தன்னுடைய மதிப்பையும், மரியாதையையும், கண்ணியத்தையும் இழந்து, பித்தங்கொண்டவனைப்போல நிற்கிறார்.

காத் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதைப் பார்க்கிறான். தாவீது தன் வாயிலிருந்து நுரையை தன் தாடியில் விழப்பண்ணிக்கொண்டிருக்கிறார்.

அப்பொழுது ஆகீஸ்: தன் ஊழியக்காரரை நோக்கி: "இதோ, இந்த மனுஷன் பித்தங்கொண்டவன் என்று காண்கிறீர்களே; இவனை நீங்கள் என்னிடத்தில் கொண்டுவந்தது என்ன? எனக்கு முன்பாகப் பயித்தியசேஷ்டை செய்ய, நீங்கள் இவனைக் கொண்டுவருகிறதற்கு, பயித்தியக்காரர் எனக்குக் குறைவாயிருக்கிறார்களோ, இவன் என் வீட்டிலே வரலாமா" (1சாமு 21:14,15) என்று கேட்கிறான்.

தாவீதின் திட்டம் சித்திக்கிறது. தாவீதுக்கு உண்மையிலேயே பித்தம் பிடிக்கவில்லை என்றும், அவர் பித்தம் பிடித்தவரைப்போல நடிக்கிறார் என்றும் காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு தெரிந்திருக்கிறது என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆகீஸ் தாவீதை எப்படியாவது பாதுகாக்கவேண்டுமென்று முடிவு பண்ணியிருக்கிறார்.

இந்த சம்பவத்திற்கு பின்பு ஆகீஸ் தாவீதின்மீது அன்பாயிருந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. பெலிஸ்தரின் பிரபுக்கள் தாவீதை நேசிக்கவில்லை. அந்த சூழ்நிலையிலும், காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதை நேசிக்கிறார்.

"அந்நாட்களிலே பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண, தங்கள் சேனைகளைப் போருக்குக் கூட்டினார்கள்; அப்பொழுது ஆகீஸ் தாவீதை நோக்கி: நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடேகூட யுத்தத்துக்கு வரவேண்டும் என்று அறியக்கடவாய் என்றான். தாவீது ஆகீசைப் பார்த்து: உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர் என்றான்; அப்பொழுது ஆகீஸ் தாவீதை நோக்கி: இதற்காக உன்னை எந்நாளும் எனக்கு மெய்காவலனாக வைப்பேன் என்றான்" (1சாமு 28:1,2).

"அப்பொழுது ஆகீஸ் தாவீதை அழைத்து: நீ உத்தமன் என்றும், நீ பாளயத்தில் என்னோடே போக்கும் வரத்துமாயிருக்கிறது என் பார்வைக்கு நல்லது என்றும், கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீ என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள்முதல் இன்றையவரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை; ஆகிலும் பிரபுக்களின் பார்வைக்கு நீ பிரியமானவன் அல்ல. ஆகையால் பெலிஸ்தருடைய பிரபுக்கள் உன்மேல் தாங்கல் அடையாதபடிக்கு, இப்போது சமாதானத்தோடே திரும்பிப் போய்விடு என்றான்" *(1சாமு 29:6,7)*.

34-ஆவது சங்கீதத்தின் தலைப்பில், "தாவீது அபிமெலேக்கு முன்பாக வேஷமாறினபோது அவனால் துரத்திவிடப்படுகையில் பாடின சங்கீதம்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

22 அதிகாரம்

காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதை துரத்துகிறார். தாவீது அதுல்லாம் என்னும் கெபிக்குப்போகிறார். தாவீது மறுபடியும் இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வருகிறார். சவுல் தாவீதைக் கொன்றுபோட அவரைத் துரத்துகிறார்.

தாவீது அதுல்லாம் என்னும் கெபியிலிருக்கும்போது, அவருடைய வீட்டார் அனைவரும் அவரிடத்திற்கு அங்கே வருகிறார்கள் (1சாமு 22:1). தாவீது தனக்கு ஒரு சேனையை ஆயத்தம்பண்ணுகிறார். அதில் ஏறக்குறைய நானூறு பேர் இருக்கிறார்கள் (1சாமு 22:2). தாவீது தன்னுடைய தகப்பனாரையும் தாயையும் மோவாபின் ராஜா வசமாக, பாதுகாப்பாக தங்க வைக்கிறார் (1சாமு 22:3,4). தாவீது யூதாதேசத்திற்கு திரும்பி வரவேண்டுமென்று காத் என்னும் தீர்க்கதரிசி சொல்லுகிறார் (1சாமு 22:5).

சவுல் தாவீதை பின்தொடர்ந்து போய், அவரைக் கொன்றுபோடவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார். பென்யமீன் புத்திரர் தனக்கு விரோதமாய் துரோகம்பண்ணியதாக சவுல் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார். யோனத்தானும் தனக்கு விரோதமாய் சதிபண்ணினான் என்று சவுல் சொல்லுகிறார் (1சாமு 22:6-8).

ஆசாரியனாகிய அகிமெலேக்கு தாவீதுக்கு அப்பமும் பட்டயமும் கொடுத்ததை, தோவேக்கு சவுலிடத்தில் சொல்லுகிறான். சவுல் ஆசாரியரையெல்லாம் தன்னிடத்தில் வரவழைக்கிறார். சவுலின் கட்டளைப் பிரகாரமாக தோவேக்கு எண்பத்தைந்து ஆசாரியரைக் கொன்றுபோடுகிறான். தோவேக்கு நோபிலுள்ள புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், மிருகங்களையும் கொன்றுபோடுகிறான் (1சாமு 22:9-19).

அகிமெலேக்கின் குமாரரில் ஒருவனாகிய அபியத்தார் என்பவன் தப்பித்து, தாவீது இருக்கும் இடத்திற்கு வருகிறான் (1சாமு 22:20-23).

அதுல்லாம் என்னும் கெபி
1சாமு 22:1-5

1சாமு 22:1. தாவீது அவ்விடத்தைவிட்டுத் தப்பி, அதுல்லாம் என்னும் கெபிக்குப் போனான்; அதை அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்டார் அனைவரும் கேட்டு, அங்கே அவனிடத்துக்குப் போனார்கள்.

1சாமு 22:2. ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் அவனோடே கூடிக்கொண்டார்கள்; அவன் அவர்களுக்குத் தலைவனானான்; இந்தப்பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் அவனோடிருந்தார்கள்.

1சாமு 22:3. தாவீது அவ்விடத்தைவிட்டு மோவாபியரைச் சேர்ந்த மிஸ்பேக்குப் போய், மோவாபின் ராஜாவைப் பார்த்து: தேவன் என்னை எப்படி நடத்துவார் என்று நான் அறியுமட்டும், என் தகப்பனும் என் தாயும் உங்களிடத்திலே தங்கியிருக்கும்படி தயவுசெய்யும் என்று சொல்லி,

1சாமு 22:4. அவர்களை மோவாபின் ராஜாவினிடத்தில் அழைத்துக்கொண்டுபோய்விட்டான்; தாவீது அரணில் இருந்த நாளெல்லாம் அவர்கள்அங்கே அவனோடிருந்தார்கள்.

1சாமு 22:5. பின்பு காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்த்து: நீர் அரணில் இராமல் யூதாதேசத்திற்குப் புறப்பட்டுவாரும் என்றான்; அப்பொழுது தாவீது புறப்பட்டு ஆரேத் என்னும் காட்டிலே போனான்.

தாவீது அதுல்லாம் என்னும் கெபியில் தங்கியிருக்கிறார். இது இயற்கையான கெபியா அல்லது செயற்கையாக கட்டப்பட்டதா என்பது தெரியவில்லை. அதுல்லாம் கெபிக்கு எளிதாகப் போகமுடியாது. அந்த இடத்திற்கு போக சரியான பாதையில்லை. அப்படிப்பட்ட கெபியை தாவீது தெரிந்தெடுத்து, அங்கே போய் தங்குகிறார். தன்னுடைய சத்துருக்கள் அதுல்லாம் கெபிக்கு எளிதாக வரமுடியாது என்றும், தான் அங்கே பாதுகாப்பாக தங்கயிருக்கலாம் என்றும் தாவீது நினைக்கிறார்.

அதுல்லாம் கெபிக்கு எளிதாக போகமுடியாவிட்டாலும், தாவீது அங்கே போய்விடுகிறார். தாவீதின் கையில் கோலியாத்தின் பட்டயம் இருக்கிறது. சவுலின் சேவகர்கள் தாவீதை பிடிப்பதற்காக, அங்கே வந்தால், தாவீது கோலியாத்தின் பட்டயத்தினால் அவர்களோடு யுத்தம்பண்ணுவார்.

தாவீது அதுல்லாம் கெபியில் தங்கியிருந்து, கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறார். கர்த்தர் தன்னை எப்படி நடத்துவார் என்று தாவீதுக்கு இன்னும் தெளிவாக தெரியவில்லை. ஆனாலும் கர்த்தர் தன்னை நடத்துவார் என்பதில் தாவீது உறுதியாயிருக்கிறார்.

சாமுவேல் தாவீதை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணி வைத்திருக்கிறார். இஸ்ரவேல் ராஜ்யம் தாவீதுக்கு கொடுக்கப்படும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம். தாவீது கர்த்தருடைய வார்த்தையை நம்பவேண்டும். தன்னுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுவதற்காக, தாவீது விசுவாசத்தோடு காத்திருக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் வாக்குத்தத்தமும் முக்கியம். வாக்குத்தத்திற்கு நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டியதும் முக்கியம்.

தாவீது தன்னுடைய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். தன்னை எப்படியெல்லாம் காத்துக்கொள்ள முடியுமோ அப்படியெல்லாம் காத்துக்கொள்ள முயற்சி பண்ணுகிறார். இதன் நிமித்தமாகவே அவர் சவுலுக்கு தப்பி ஒவ்வொரு இடமாக ஓடிக்கொண்டிருக்கிறார். தன்னைக் காத்துக்கொள்ளவே தாவீது அதுல்லாம் கெபிக்கு வந்திருக்கிறார்.

தாவீது தன்னைக் காத்துக்கொள்ளாமல், தன் ஜீவியத்தைக் குறித்து அசட்டையாயிருக்கக்கூடாது. அசட்டையாயிருப்பது கர்த்தரை சோதிப்பதற்கு சமம். தாவீது சவுலை அழித்துப்போட ஒரு முயற்சியும் பண்ணவில்லை. அது அவருடைய நோக்கமுமல்ல. ஆனாலும் தாவீது சவுலின் கைக்கு தப்பித்து, தன்னை காத்துக்கொள்ள எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார்.

தாவீது அதுல்லாம் கெபிலிருந்தபோது 142-ஆவது சங்கீதத்தை எழுதினார். இந்த சங்கீதத்திற்கு, "தாவீது கெபியிலிருக்கும் போது, பண்ணின விண்ணப்பமாகிய மஸ்கீல்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாவீது ஆகீசைவிட்டு தப்பி, அதுல்லாம் என்னும் கெபிக்குப்போகிறார். அதை தாவீதின் சகோதரரும், அவருடைய தகப்பன் வீட்டார் அனைவரும் கேள்விப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் அதுல்லாம் கெபிக்கு, தாவீதினிடத்திற்குப் போகிறார்கள் (1சாமு 22:1). அவர்கள் தாவீதுக்கு உதவிசெய்ய வந்திருக்கிறார்கள். தாவீது தங்களைப் பாதுகாப்பார் என்னும் நம்பிக்கை அவர்களிடத்தில் இருக்கிறது. தங்கள் சுதந்தரத்தை அவர்கள் தாவீதோடு தெரிந்துகொள்கிறார்கள்.

யோவாப், அபிசாய், மேலும் தாவீதின் உறவினர்களில் அநேகர், அதுல்லாம் கெபிக்கு வருகிறார்கள். அங்கே அவர்கள் தாவீதோடு கூடயிருக்கிறார்கள். தாவீது தன்னுடைய பாதுகாப்பைப் பலப்படுத்துகிறார். தனக்கு ஒரு சேனையை ஏற்படுத்துகிறார்.

தாவீது இதுவரையிலும் சவுலுக்கு தப்பி ஒவ்வொரு இடமாக ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறார். இனிமேலும் ஓடுவதினால் தாவீதுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. தாவீதின் ஜீவனைப் பாதுகாக்கவேண்டுமென்றால், அவர் சவுலுக்கு பயந்து ஓடக்கூடாது. சவுல் தன்னைப் பிடிக்க வந்தால் அவருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். சவுல் தனியாக வரமாட்டார். அவரோடுகூட அவருடைய சேவகரும் வருவார்கள். அவர்களை எதிர்ப்பதற்கு தாவீதிற்கும் ஒரு சேனை தேவைப்படுகிறது. தாவீது இதையெல்லாம் மனதில் கொண்டு, தனக்கு ஒரு சேனையை ஏற்படுத்துகிறார்.

ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் தாவீதோடே கூடிக்கொள்கிறார்கள்; தாவீது அவர்களுக்குத் தலைவராகிறார்; இந்தப்பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் தாவீதோடிருக்கிறார்கள் (1சாமு 22:2).

தாவீதின் சேனை சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகவில்லை. அவர்கள் சவுலுக்கோ அல்லது அவருடைய ராஜ்யத்திற்கோ தீங்கு செய்யவில்லை. தாவீதின் சேனையிலுள்ளவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே சமாதானத்தைக் குலைத்துப்போட்டு, அங்கே குழப்பத்தை ஏற்படுத்தவில்லை. தாவீதின் சேனையிலுள்ளவர்கள் சவுலின் பிரபுக்களை கொன்றுபோடவுமில்லை. தாவீதின் சேனை, அவருக்கு பாதுகாப்பாயிருக்கிறது. தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே தாவீது இந்த சேனையை ஏற்படுத்தியிருக்கிறார்.

தாவீதின் சேனையில் பலசாலிகளோ, பராக்கிரமசாலிகளோ, ஐசுவரியவான்களோ, பிரபுக்களோ ஒருவருமில்லை. தாவீதின் சேனையிலுள்ளவர்கள் பிரபல்யமானவர்களோ, நற்குணசாலிகளோ யாருமில்லை. அவர்கள் எல்லோரும் ஒடுக்கப்பட்டவர்களாயும், கடன்பட்டவர்களாயும், முறுமுறுக்கிறவர்களாயும் இருக்கிறார்கள்.

தாவீதின் சேனையிலுள்ளவர்களுக்கு சமுதாயத்திலே உயர்ந்த அந்தஸ்து இல்லை. அவர்களிடத்தில் தெளிந்த சிந்தனையுமில்லை. தங்கள் ஜீவியத்தை வளப்படுத்திக்கொள்ள தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பது அவர்களுக்கு தெரியாது. அவர்கள் ஒரு வேலையும் செய்யத் தெரியாத சோம்பேறிகளாயிருக்கிறார்கள். எந்த வேலையை செய்தாலும் அதை உருப்படியாய்ச் செய்யமாட்டார்கள். எந்த வேலையிலும் நிலைத்திருக்கவுமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் தாவீதோடுகூட கூடிக்கொள்கிறார்கள்.

தாவீது அதுல்லாம் கெபியிலே தங்கியிருக்கிறார். இந்த கெபியே தாவீதுக்கு தலைமை ஸ்தாபனம் போல இருக்கிறது. ஒடுக்கப்பட்டவர்களும், கடன்பட்டவர்களும் தாவீதோடே கூடிக்கொள்கிறார்கள். அவர்கள் தாவீதின் சேனையில் சேர்ந்துகொள்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய நானூறு பேராயிருக்கிறது.

தாவீது அதுல்லாம் கெபியில் தங்கியிருக்கும்போது, அவருடைய சகோதரரும், தகப்பன் வீட்டார் அனைவரும் அங்கே வருகிறார்கள். தாவீதின் பெற்றோர் வயதுமுதிர்ந்தவர்கள். அவர்கள் சவுலுக்கு பயந்து தாவீதிடம் வந்திருக்கலாம். ஒருவேளை சவுலும், தாவீதின் பெற்றோரைத் துன்பப்படுத்தியிருக்கலாம். தாவீதின் பெற்றோருக்கு பாதுகாப்பான இடம் வேண்டும்.

இஸ்ரவேல் தேசத்திலே தாவீதின் குடும்பத்தாருக்கு பாதுகாப்பான இடமில்லை. சவுல் தாவீதுக்கு விரோதமாக கோபமாயிருக்கும்போது, அவருடைய வீட்டார்மீதும் கோபமாயிருக்கிறார். சவுல் தாவீதின் நிமித்தமாக அவருடைய குடும்பத்தாரையும் பகைக்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் இருப்பதைவிட, தாவீதோடு கூடயிருப்பது தங்களுக்கு நல்லது, பாதுகாப்பானது என்று நினைத்து, தாவீதின் குடும்பத்தார் அதுல்லாம் கெபிக்கு வருகிறார்கள்.

தாவீது தன் பெற்றோரை மோவாபின் ராஜாவிடத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கிறார். தாவீது அவ்விடத்தைவிட்டு மோவாபியரைச் சேர்ந்த மிஸ்பேக்குப் போகிறார். தாவீது மோவாபின் ராஜாவைப் பார்த்து: "தேவன் என்னை எப்படி நடத்துவார் என்று நான் அறியுமட்டும், என் தகப்பனும் என் தாயும் உங்களிடத்திலே தங்கியிருக்கும்படி தயவுசெய்யும்" *(1சாமு 22:3)* என்று கேட்டுக்கொள்கிறார். மோவாபின் ராஜாவும் தாவீதின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். தாவீதின் பெற்றோர் தன்னோடுகூட பாதுகாப்பாயிருப்பதற்கு சம்மதம் தெரிவிக்கிறார்.

தாவீது தன் பெற்றோரை மோவாபின் ராஜாவிடத்தில் அழைத்துக்கொண்டுபோய்விடுகிறார்; தாவீது அரணில் இருந்த நாளெல்லாம் அவர்கள் அங்கே மோவாபின் ராஜாவோடு இருக்கிறார்கள் *(1சாமு 22:4)*. தனக்கு என்ன நேர்ந்தாலும், தன்னுடைய பெற்றோருக்கு ஆபத்து வரக்கூடாது என்று தாவீது அவர்கள்மீது கரிசனையாயிருக்கிறார்.

தாவீது அதுல்லாம் கெபியிலிருந்தாலும் கர்த்தரை நம்புகிறார். இப்போது அவர் நெருக்கத்திலும், வேதனையிலும், பாடுகளிலும் இருக்கிறார். தேவன் தன்னை எப்படி நடத்துவார் என்று தாவீதுக்கு இன்னும் தெரியவில்லை. அதுவரையிலும் தன்னுடைய பெற்றோர், மோவாபின் ராஜாவிடத்தில் பாதுகாப்பாயிருக்கவேண்டுமென்று தாவீது விரும்புகிறார்.

தாவீது அதுல்லாம் கெபியிலிருக்கும்போது, காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்க்க வருகிறார். இவர் தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவராக இருக்கலாம். சாமுவேல் இவர்களுக்கு தலைவர். சாமுவேல் ஒருவேளை காத் என்னும் இந்த தீர்க்கதரிசியை தாவீதிடம் அனுப்பியிருப்பதற்கு வாய்ப்புள்ளது. தாவீது அதுல்லாம் கெபியிலிருக்கும் காலத்தில், காத் அவருக்கு கர்த்தருடைய வார்த்தைகளையும், ஆவிக்குரிய ஆலோசனைகளையும் சொல்லுவதற்கு வந்திருக்கிறார்.

காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்த்து: "நீர் அரணில் இராமல் யூதாதேசத்திற்குப் புறப்பட்டுவாரும்" (1சாமு 22:5) என்று சொல்லுகிறார்; அப்பொழுது தாவீது புறப்பட்டு ஆரேத் என்னும் காட்டிலே போகிறார்.

தாவீது அந்நிய தேசத்தில் இருக்காமல், யூதாதேசத்திற்கு வரவேண்டும். சவுல் தாவீதைக் கொல்ல முயற்சி பண்ணுகிறார். ஆனால் தாவீது சவுலுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. தாவீது கர்த்தருக்கு முன்பாக சுத்தமனச்சாட்சியோடிருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பு தனக்கு கிடைக்கும் என்று தாவீது உறுதியாய் நம்பவேண்டும். தாவீது கர்த்தருடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும், வழிநடத்துதலையும் நாடவேண்டும்.

தாவீது இப்போது இக்கட்டான சூழ்நிலையிலிருந்தாலும், அவர் அநேக நெருக்கங்களையும், பாடுகளையும் அனுபவித்தாலும், அவர் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும். தாவீது தன்னால் முடிந்த வரையிலும், தன்னுடைய யூதாகோத்திரத்திற்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் சேவை செய்யவேண்டும். கர்த்தருடைய வார்த்தை காத் மூலமாய் வெளிப்படுகிறது. தாவீது அதுல்லாம் கெபியில் தங்கியிருக்காமல், யூதாதேசத்திற்கு புறப்பட்டு வரவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

ஆசாரியர்களின் சங்காரம் 1சாமு 22:6-19

1சாமு 22:6. தாவீதும் அவனோடிருந்த மனுஷரும் காணப்பட்ட செய்தியைச் சவுல் கேள்விப்பட்டான்; சவுல் கிபியாவைச் சேர்ந்த ராமாவில் ஒரு தோப்பிலே உட்கார்ந்து, தன்னுடைய ஊழியக்காரர் எல்லாரும் தன்னைச் சூழ்ந்துநிற்க, தன் ஈட்டியைத் தன் கையிலே பிடித்துக் கொண்டிருக்கும் போது,

1சாமு 22:7. சவுல் தன்னண்டையில் நிற்கிற தன் ஊழியக்காரரைப் பார்த்து: பென்யமீன் புத்திரரே கேளுங்கள்; ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் கொடுப்பானோ? உங்களெல்லாரையும் ஆயிரத்துக்கு அதிபதிகளும் நூற்றுக்கு அதிபதிகளுமாக வைப்பானோ?

1சாமு 22:8. நீங்களெல்லாரும் எனக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டது என்ன? ஈசாயின் மகனுடனே என் குமாரன் உடன்படிக்கைபண்ணும்போது, என் செவிக்கு அதை ஒருவனும் வெளிப்படுத்தவில்லை; எனக்காகப் பரிதாபப்பட்டு, என் செவிக்கு அதை வெளிப்படுத்த உங்களில் ஒருவனாகிலும் இல்லையா? இந்நாளில் இருக்கிறபடி எனக்குச் சதிபண்ண, என் குமாரன் என் வேலைக்காரனை எனக்கு விரோதமாக எடுத்துவிட்டானே என்றான்.

1சாமு 22:9. அப்பொழுது சவுலின் ஊழியக்காரரோடே நின்ற ஏதோமியனாகிய தோவேக்கு பிரதியுத்தரமாக: ஈசாயின் மகனை நோபிலிருக்கிற அகித்தூபின் குமாரனாகிய அகிமெலேக்கிடத்தில் வரக்கண்டேன்.

1சாமு 22:10. இவன் அவனுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரித்து, அவனுக்கு வழிக்கு போஜனத்தைக் கொடுத்து, பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்தான் என்றான்.

1சாமு 22:11. அப்பொழுது ராஜா: அகித்தூபின் குமாரனாகிய அகிமெலேக் என்னும் ஆசாரியனையும், நோபிலிருக்கிற அவன் தகப்பன் வீட்டாராகிய எல்லா ஆசாரியரையும் அழைப்பித்தான்; அவர்களெல்லாரும் ராஜாவினிடத்தில் வந்தார்கள்.

1சாமு 22:12. அப்பொழுது சவுல்: அகித்தூபின் குமாரனே கேள் என்று சொல்ல, அவன்: இதோ, இருக்கிறேன் என் ஆண்டவனே என்றான்.

1சாமு 22:13. அப்பொழுது சவுல் அவனை நோக்கி: நீயும் ஈசாயின் மகனும் எனக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, இந்நாளில் இருக்கிறபடி எனக்குச் சதிபண்ண அவன் எனக்கு விரோதமாக எழும்பும்படிக்கு, நீ அவனுக்கு அப்பமும் பட்டயமும் கொடுத்து, தேவசந்நிதியில் அவனுக்காக விசாரித்தது என்ன என்றான்.

1சாமு 22:14. அகிமெலேக் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: உம்முடைய எல்லா ஊழியக்காரரிலும் தாவீதைப்போல, ராஜாவுக்கு மருமகனும், உம்முடைய கட்டளைகளின்படி செய்துவருகிறவனும், உம்முடைய வீட்டிலே கனமுள்ளவனுமாயிருக்கிற உண்மையுள்ளவன் யார்?

1சாமு 22:15. இன்றையதினம் அவனுக்காக தேவசந்நிதியில் விசாரிக்கத் தொடங்கினேனோ? அது எனக்குத் தூரமாயிருப்பதாக; ராஜா தம்முடைய அடியானாகிய என்மேலாகிலும் என் தகப்பன் வீட்டாரில் எவன்மேலாகிலும் குற்றம் சுமத்த வேண்டாம்; உம்முடைய அடியான் இவைகளிலெல்லாம் ஒரு சிறிய காரியமாகிலும் பெரிய காரியமாகிலும் அறிந்திருந்ததில்லை என்றான்.

1சாமு 22:16. ராஜாவோ: அகிமெலேக்கே, நீயும் உன் தகப்பன் வீட்டார் அனைவரும் சாகவே சாகவேண்டும் என்றான்.

1சாமு 22:17. பின்பு ராஜா தன்னண்டையிலே நிற்கிற சேவகரை நோக்கி: நீங்கள் போய், கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லுங்கள்; அவர்கள் கையும் தாவீதோடே இருக்கிறது; அவன் ஓடிப்போகிறதை அவர்கள் அறிந்திருந்தும், அதை எனக்கு வெளிப்படுத்தவில்லை என்றான்; ராஜாவின் வேலைக்காரரோ, கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லத் தங்கள் கைகளை நீட்ட சம்மதிக்கவில்லை.

1சாமு 22:18. அப்பொழுது ராஜா தோவேக்கை நோக்கி: நீ போய் ஆசாரியர்களைக் கொன்றுபோடு என்றான்; ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்மேல் விழுந்து, சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கும் எண்பத்தைந்துபேரை அன்றையதினம் கொன்றான்.

1சாமு 22:19. ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபிலுமுள்ள புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், கழுதைகளையும், ஆடுகளையும் பட்டயக்கருக்கினால் வெட்டிப்போட்டான்.

சவுலின் துன்மார்க்கம் அதிகரிக்கிறது. சவுல் இஸ்ரவேல் தேசத்தின் சிங்காசனத்தில் அமர்ந்திருந்து, இஸ்ரவேல் ஜனங்களின் நன்மைகளை விசாரிக்கவேண்டும். தேசத்தை பாதுகாத்து பராமரிக்கவேண்டும். ஜனங்களை நீதியாய் ஆளுகை செய்யவேண்டும். சவுல் ராஜரீக காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஆனால் சவுலோ, தன்னுடைய ராஜங்க வேலைகளையெல்லாம் விட்டு விட்டு, தாவீதைப் பின்தொடர்ந்துபோய், அவரைப் பிடிப்பதிலேயே முழுக்கவனமாயிருக்கிறார்.

சவுல் தேசத்தின் நன்மைகளை விசாரிக்கவில்லை. அதற்கு பதிலாக அவர் தாவீது எங்கே இருக்கிறார் என்றும், அவர் எங்கே போகிறார் என்றும், அவர் எங்கே தங்கியிருக்கிறார் என்றும் விசாரித்துக்கொண்டிருக்கிறார். ஒருநாள் தாவீதும் அவரோடிருக்கிற மனுஷரும் காணப்பட்ட செய்தியை சவுல் கேள்விப்படுகிறார் (1சாமு 22:6).

சவுல் தன்னுடைய ஊழியக்காரர் எல்லோரையும் ராமாவிலே உள்ள ஒரு தோப்பிலே கூட்டிச்சேர்க்கிறார். இந்த தோப்பு கிபியாவிலே இருக்கிறது. சவுல் ஒரு மரத்தடியிலோ அல்லது தோப்பின் நிழலிலோ உட்கார்ந்திருக்கவேண்டும். சவுலின் ஊழியக்காரர்கள் எல்லோரும் அவரைச் சூழ்ந்து நிற்கிறார்கள். சவுல் தன் கையிலே ஈட்டியைப் பிடித்துக்கொண்டிருக்கிறார் (1சாமு 22:6).

சவுலின் கையில் ஈட்டி இருப்பது அவருடைய கோபத்திற்கு அடையாளம். தன்னுடைய வழியில் யார் குறுக்கே வந்தாலும், சவுல் அவர்களைக் கொன்றுபோட ஆயத்தமாயிருக்கிறார். சவுலின் மனதில் தெளிந்த சிந்தனையில்லை. அவர் குழப்பத்திலிருக்கிறார். குற்றமில்லாத இரத்தத்தை சிந்துவதற்கு தீவிரித்துக்கொண்டிருக்கிறார். சவுல் தன்னுடைய அரண்மனையில், சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டியவர். அவரோ இப்போது, ஒரு தோப்பிலே, ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருக்கிறார். சவுல் தன் கையிலே செங்கோலைப் பிடித்திருக்கவேண்டியவர். ஆனால் அவர் ஒரு ஈட்டியைப் பிடித்திருக்கிறார்.

சவுலின் மனதில் தன்னுடைய ஊழியக்காரரைக் குறித்து சந்தேகம் வந்திருக்கிறது. சவுல் தன்னண்டையில் நிற்கிற தன் ஊழியக்காரரைப் பார்த்து: "பென்யமீன் புத்திரரே கேளுங்கள்; ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் கொடுப்பானோ? உங்களெல்லாரையும் ஆயிரத்துக்கு அதிபதிகளும் நூற்றுக்கு அதிபதிகளுமாக வைப்பானோ?" (1சாமு 22:7) என்று கேட்கிறார்.

தன்னுடைய ஊழியக்காரர் எல்லோரும் தனக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணியிருக்கிறார்களோ என்று சவுல் சந்தேகப்படுகிறார். யோனத்தான் தாவீதோடு பண்ணின உடன்படிக்கை சவுலின் ஊழியக்காரர் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனால் அவர்கள் இதைப்பற்றி சவுலுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

சவுல் தன் ஊழியக்காரரைப் பார்த்து, "நீங்களெல்லாரும் எனக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டது என்ன? ஈசாயின் மகனுடனே என் குமாரன் உடன்படிக்கைபண்ணும்போது, என் செவிக்கு அதை ஒருவனும் வெளிப்படுத்தவில்லை; எனக்காகப் பரிதாபப்பட்டு, என் செவிக்கு அதை வெளிப்படுத்த உங்களில் ஒருவனாகிலும் இல்லையா?" (1சாமு 22:8) என்று கேட்கிறார்.

சவுல் யோனத்தான்மீதும் குற்றம் சொல்லுகிறார். சவுல் தன் ஊழியக்காரரிடம், "இந்நாளில் இருக்கிறபடி எனக்குச் சதிபண்ண, என் குமாரன் என் வேலைக்காரனை எனக்கு விரோதமாக எடுத்துவிட்டானே" (1சாமு 22:8) என்று சொல்லுகிறார்.

தாவீது சவுலின் வேலைக்காரர். தாவீது தனக்கு விரோதமாக சதிபண்ணுகிறார் என்று சவுல் குற்றம் சொல்லுகிறார். தன்னைக் கொன்றுபோடுவதற்கு தாவீது சதிபண்ணுவதாக சவுல் தன் ஊழியக்காரரிடம் சொல்லுகிறார். இது பொய்யான குற்றச்சாட்டு. தாவீது சதிபண்ணவில்லை. சவுலே தாவீதைக் கொன்றுபோட சதிபண்ணுகிறார்.

தன்னுடைய குமாரனாகிய யோனத்தான், தாவீதை தனக்கு விரோதமாகத் தூண்டிவிடுகிறார் என்று சவுல் தன் ஊழியக்காரரிடம் குற்றம் சொல்லுகிறார். ராஜாவைக் கொன்றுபோடுவதற்கு, தன் மகனும், தாவீதும் கூட்டாய்ச் சேர்ந்து சதிபண்ணுகிறார்கள் என்று சவுல் சொல்லுகிறார். சவுலின் வார்த்தையில் உண்மையில்லை.

சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். அவருடைய சிரசின்மேல் கிரீடம் சூட்டப்பட்டிருக்கிறது. தேசத்திலே சவுலுக்கு ராஜாவுக்குரிய மதிப்பும், மரியாதையும் கொடுக்கப்படுகிறது. ஆனால் சவுல் தன் ஊழியக்காரர்மீது திருப்தியாயில்லை. அவர்கள் தனக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணிக்கொண்டு, உண்மையை மறைக்கிறார்கள் என்று சவுல் சந்தேகப்படுகிறார். யோனத்தானைப்பற்றிய செய்தியும், தாவீதைப்பற்றிய செய்தியும் தன்னுடைய ஊழியக்காரருக்கு தெரிந்திருக்கிறது என்றும், ஆனால் அவர்கள் அதை தனக்கு சொல்லாமல் மறைத்துவிட்டார்கள் என்றும் சவுல் தன் ஊழியக்காரர்மீது குற்றம் சொல்லுகிறார்.

தான் பென்யமீன் புத்திரருக்கு அநேக நன்மைகளை செய்திருப்பதாகவும், தாவீது இவ்வளவு நன்மைகளை அவர்களுக்கு செய்யமாட்டார் என்றும் சவுல் தன் ஊழியக்காரருக்கு சொல்லுகிறார். "ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் கொடுப்பானோ? உங்களெல்லாரையும் ஆயிரத்துக்கு அதிபதிகளும் நூற்றுக்கு அதிபதிகளுமாக வைப்பானோ?" (1சாமு 22:7) என்று சவுல் தன் ஊழியக்காரரிடத்தில் கேட்கிறார்.

தன் ஊழியக்காரர் தன்மீது அன்பாயில்லை என்றும் அவர்கள் தனக்கு விரோதமாக சதிபண்ணுகிறார்கள் என்றும் சவுல் சொல்லுகிறார். "எனக்காக பரிதாபப்பட்டு, என் செவிக்கு அதை வெளிப்படுத்த உங்களில் ஒருவனாகிலும் இல்லையா" (1சாமு 22:8) என்று சவுல் தன் ஊழியக்காரரிடத்தில் கேட்கிறார்.

சவுல் தன்னுடைய ஊழியக்காரரிடம் நயமாகப் பேசி பார்க்கிறார். ஆனால் அவர்களில் ஒருவர்கூட தாவீதுக்கு விரோதமாகவோ அல்லது யோனத்தானுக்கு விரோதமாகவோ சவுலுக்கு செய்தி சொல்லவில்லை. அவர்களைப்பற்றிய சங்கதி எதையும் அவர்கள் சவுலுக்கு அறிவிக்கவில்லை. சவுலின் ஊழியக்காரரோடேகூட ஏதோமியனாகிய தோவேக்கு அங்கு நின்றுகொண்டிருக்கிறான்.

தோவேக்கு சவுலுக்கு பிரதியுத்தரமாக, "ஈசாயின் மகனை நோபிலிருக்கிற அகிதூபின் குமாரனாகிய அகிமெலேக்கிடத்தில் வரக்கண்டேன். இவன் அவனுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரித்து, அவனுக்கு வழிக்கு போஜனத்தைக் கொடுத்து, பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்தான்" (1சாமு 22:9,10) என்று சொல்லுகிறான்.

தாவீது நோபிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்தபோது அங்கே ஆசாரியனாகிய அகிமெலேக்கு இருந்தார். அங்கே ஏதோமியனாகிய தோவேக்கும் அவர்களோடு கூடயிருந்தான். தோவேக்கு ஆசரிப்புக்கூடாரத்திலே தாவீதுக்கு விரோதமாகவோ அல்லது அகிமெலேக்குக்கு விரோதமாகவோ ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஆனால் தோவேக்கு இப்போது சவுலிடம், அகிமெலேக்குக்கு விரோதமாகப் பேசுகிறான்.

தாவீது நோபுக்கு வந்தபோது, அகிமெலேக்கு தாவீதுக்காக கர்த்தரிடத்தில் விசாரித்தார். இது ஆசாரியரின் ஊழியம். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்காக ஆசாரியடத்தில் வருவார்கள். ஆசாரியர்கள் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரிப்பார்கள். ஆனால் அகிமெலேக்கோ, தாவீதுக்கு அப்பமும் பட்டயமும் கொடுத்தான் என்று தோவேக்கு சொல்லுகிறான்.

தோவேக்கு சொல்லுகிற வார்த்தைகள் உண்மையானவை. ஆனால் அவன் உண்மையை மொத்தமாய்ச் சொல்லாமல், கொஞ்சம் உண்மையை மறைத்துவிடுகிறான். அகிமெலேக்கினிடத்தில் குற்றம் ஒன்றுமில்லை. தான் ராஜாவின் காரியமாக இங்கே வந்திருப்பதாக தாவீது அகிமெலேக்குக்குச் சொன்னார். அதை அகிமெலேக்கு நம்பிவிட்டார். தாவீது சொன்னதை தோவேக்கும் கேட்டான். ஆனால் தோவேக்கு இப்போது சவுலிடம், தாவீது சொன்ன இந்தக் காரியத்தை மறைத்துவிடுகிறான்.

தாவீது சவுலைப்பற்றி நல்ல வார்த்தைகளைச் சொன்னார். தோவேக்கு அந்த வார்த்தைகளை இப்போது சவுலுக்கு சொன்னால், சவுலுக்கு இன்னும் அதிக மரியாதை கிடைக்கும். அகிமெலேக்கும் குற்றம் சாட்டப்படாதபடிக்கு தப்பித்துக்கொள்வார். ஆனால் அகிமெலேக்கை பழிவாங்கவேண்டும் என்னும் தீயஎண்ணம் தோவேக்கின் மனதிலிருக்கிறது. இதற்காக தோவேக்கு அகிமெலேக்கைப்பற்றி சவுலிடம் போட்டுக்கொடுக்கிறான்.

அப்பொழுது சவுல் ராஜா: அகிதூபின் குமாரனாகிய அகிமெலேக் என்னும் ஆசாரியனையும், நோபிலிருக்கிற அவன் தகப்பன் வீட்டாராகிய எல்லா ஆசாரியரையும் அழைப்பிக்கிறார்; அவர்களெல்லாரும் சவுல் ராஜாவினிடத்தில் வருகிறார்கள் (1சாமு 22:11).

தாவீது ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்தபோது அகிமெலேக்கு மாத்திரமே அங்கே இருந்தார். ஆனால் சவுலோ அகிமெலேக்கையும், அவருடைய தகப்பன் வீட்டாராகிய எல்லா ஆசாரியரையும் தன்னிடத்தில் அழைத்துக்கொண்டு வருமாறு கட்டளையிடுகிறார். இவர்கள் எல்லோரும் ஆசரிப்புக்கூடாரத்திலே ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள். இவர்கள் எல்லோரும் கூட்டாய்ச் சேர்ந்து தாவீதுக்கு உதவி செய்திருக்கவேண்டுமென்று சவுல் சந்தேகப்படுகிறார். ஆகையினால் சவுல் எல்லா ஆசாரியரையும் தன்னிடத்தில் அழைப்பிக்கிறார்.

எல்லா ஆசாரியரும் தன்னிடத்தில் வந்தபோது, சவுல் அகிமெலேக்கினிடத்தில் கோபத்தோடு பேசுகிறார். சவுல் அகிமெலேக்கை பெயரைச் சொல்லி கூப்பிடவில்லை. அந்த அளவுக்கு சவுலுக்கு அவர்மீது கோபம் இருக்கிறது. சவுல் அவரைப் பார்த்து, "அகிதூபின் குமாரனே" என்றே அழைக்கிறார். அகிமெலேக்கைக் கூப்பிடும்போது, "ஆசாரியனாகிய அகிமெலேக்கே" என்று கூப்பிட்டால், அவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். ஆனால் சவுலோ அகிமெலேக்கின் பெயரையும் சொல்லவில்லை, அவரை ஆசாரியர் என்றும் அங்கீகரிக்கவில்லை.

அகிமெலேக்கு சவுலுக்கு சுருக்கமாக பிரதியுத்தரம் சொல்லுகிறார். ராஜாவுக்கு முன்பாக அதிகமான வார்த்தைகளைப் பேசினால், அதனால் தனக்கு தீங்கு வரும் என்பது அகிமெலேக்குக்கு தெரிந்திருக்கிறது. சவுல், "அகிதூபின் குமாரனே கேள்" என்று சொன்னபோது, அகிதூப் சவுலிடம், "இதோ இருக்கிறேன், என் ஆண்டவனே" (1சாமு 22:12) என்று சுருக்கமாக பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

அகிமெலேக்கு தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளைக் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். தான் ஒரு தப்பிதமும் செய்யவில்லை என்னும் நிச்சயம் அவருடைய மனதில் இருக்கிறது. அப்பொழுது சவுல் அகிமெலேக்கை நோக்கி: "நீயும் ஈசாயின் மகனும் எனக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, இந்நாளில் இருக்கிறபடி எனக்குச் சதிபண்ண அவன் எனக்கு விரோதமாக எழும்பும்படிக்கு, நீ அவனுக்கு அப்பமும் பட்டயமும் கொடுத்து, தேவசந்நிதியில் அவனுக்காக விசாரித்தது என்ன" (1சாமு 22:13) என்று கேட்கிறார்.

தன்னைக் கொலைபண்ணும்படி, அகிமெலேக்கும் தாவீதும் கூட்டாய்ச் சேர்ந்திருக்கிறார்கள் என்பது சவுலின் குற்றச்சாட்டு. தாவீது தனக்கு சதிபண்ணுவதற்காக, தனக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார் என்று சவுல் தாவீதின்மேல் குற்றம் சொல்லுகிறார். தாவீது பண்ணுகிற சதிக்கு, அகிமெலேக்கு உடந்தையாயிருக்கிறார் என்று சவுல் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்.

அகிமெலேக்கு ஒரு தப்பிதமும் செய்யவில்லை. துன்மார்க்கர் ஆட்சி புரியும்போது, சாதாரண ஜனங்களுக்கு தீமைகள் வரும். அங்கே நீதிக்கு இடம் இருக்காது. ஜனங்களுக்கு பாதுகாப்பு இருக்காது. சவுல் கொடுங்கோல் ஆட்சி செய்கிறார். சவுலுக்கு உண்மை எது என்பது தெரியவில்லை. அவர் அகிமெலேக்கின்மீது தப்பிதமாய் குற்றம் சொல்லுகிறார்.

நம்முடைய தேசத்தில் நல்ல ஆளுகையும், நல்ல அரசாங்கமும், நல்ல சட்டங்களும் இருக்கவேண்டுமென்று நாம் ஜெபம்பண்ணவேண்டும். நம்மை ஆளுகை செய்கிற தலைவர்கள் கர்த்தருக்கு பயந்து, நம்மை நீதியாய் ஆளுகை செய்யவேண்டும். அவர்கள் ஜனங்களுடைய நன்மைகளை விசாரிக்கவேண்டும். தேசத்தின் நன்மைக்காக சேவை செய்யவேண்டும்.

தன்னிடத்தில் ஒரு குற்றமும் இல்லையென்று அகிமெலேக்கு சவுலுக்கு சொல்லுகிறார். அகிமெலேக் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: "உம்முடைய எல்லா ஊழியக்காரரிலும் தாவீதைப்போல, ராஜாவுக்கு மருமகனும், உம்முடைய கட்டளைகளின்படி செய்துவருகிறவனும், உம்முடைய வீட்டிலே கனமுள்ளவனுமாயிருக்கிற உண்மையுள்ளவன் யார்? இன்றையதினம் அவனுக்காக தேவசந்நிதியில் விசாரிக்கத் தொடங்கினேனோ? அது எனக்குத் தூரமாயிருப்பதாக; ராஜா தம்முடைய அடியானாகிய என்மேலாகிலும் என் தகப்பன் வீட்டாரில் எவன்மேலாகிலும் குற்றம் சுமத்த வேண்டாம்; உம்முடைய அடியான் இவைகளிலெல்லாம் ஒரு சிறிய காரியமாகிலும் பெரிய காரியமாகிலும் அறிந்திருந்ததில்லை" (1சாமு 22:14,15) என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு அப்பத்தையும் பட்டயத்தையும் கொடுத்ததை அகிமெலேக்கு ஒத்துக்கொள்கிறார். ஆனால் தான் சவுலுக்கு விரோதமாக சதிபண்ணியதாக சொல்லப்படும் குற்றச்சாட்டை அகிமெலேக்கு மறுக்கிறார். சவுல் தன்னை அனுப்பியதாக தாவீது சொன்னார். அதன் நிமித்தமாகவே அகிமெலேக்கு தாவீதுக்காக தேவனுடைய சந்நிதியில் விசாரித்தார். சவுலுக்கும் தாவீதுக்கும் இடையிலுள்ள பிரச்சனை அகிமெலேக்குக்கு தெரியாது.

ஆகையினால் "ராஜா தம்முடைய அடியானாகிய என்மேலாகிலும் என் தகப்பன் வீட்டாரில் எவன்மேலாகிலும் குற்றம் சுமத்த வேண்டாம்; உம்முடைய அடியான் இவைகளிலெல்லாம் ஒரு சிறிய காரியமாகிலும் பெரிய காரியமாகிலும் அறிந்திருந்ததில்லை" (1சாமு 22:15) என்று அகிமெலேக்கு சவுலுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

சவுலோ அகிமெலேக்கின் விவாதத்தை செவிகொடுத்து கேட்கவில்லை. அகிமெலேக்கின் காரியங்களைக் குறித்து நீதிவிசாரணை ஒன்றும் செய்யவில்லை. சவுல் உடனே தீர்ப்பு சொல்லிவிடுகிறார். "அகிமெலேக்கே நீயும், உன் தகப்பன் வீட்டார் அனைவரும் சாகவே சாகவேண்டும்" (1சாமு 22:16) என்று சவுல் தன்னுடைய அவசரமான தீர்ப்பைச் சொல்லுகிறார்.

சவுலிடத்தில் நீதியில்லை. சவுல் வழக்கை விசாரிக்காமல், தன் இஷ்டம்போல தீர்ப்பு சொல்லக்கூடாது. அகிமெலேக்கு சொன்ன விவாதங்களை செவிகொடுத்து கேட்கவேண்டும். அவரிடத்தில் நியாயம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். சவுலோ நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னுடைய கோபத்திற்கும், சுயவிருப்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். அகிமெலேக்கின் விவாதங்களுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்.

சவுல் அவசரப்பட்டு தீர்ப்பு சொல்லுகிறார். சவுல் அகிமெலேக்குக்கு மாத்திரம் தீர்ப்பு சொல்லாமல், அவருடைய தகப்பன் வீட்டார் அனைவரும் சேர்ந்து தீர்ப்பு சொல்லுகிறார். அவர்கள் எல்லோரும் சாகவேண்டும் என்பது சவுலின் தீர்ப்பு. தோவேக்கு அகிமெலேக்கின்மீது மாத்திரம்தான் குற்றம் சொன்னான். சவுலோ அகிமெலேக்கின் வீட்டார் எல்லோரையும் குற்றப்படுத்துகிறார். அவர்களெல்லோருக்கும் தண்டனை கொடுக்கிறார்.

சவுல் சொன்ன தீர்ப்புக்கு நீதியான ஆதாரமில்லை. தன்னுடைய கோபத்தைக் காண்பிப்பதற்காக சவுல் இதுபோல தீர்ப்பு சொல்லுகிறார். சவுலின் மனதில் தெளிந்த சிந்தனையில்லை. தாவீதை இன்னும் கொல்ல முடியவில்லையே என்னும் ஏமாற்றம் அவருடைய மனதிலிருக்கிறது. தனக்கு விரோதமாக எல்லோரும் சதிபண்ணுகிறார்கள் என்னும் சந்தேகம் சவுலின் மனதில் உண்டாயிற்று.

தான் சொன்ன தீர்ப்பு உடனே நிறைவேற்றப்படவேண்டும் என்றும் சவுல் உத்தரவிடுகிறார். சவுல் தன்னுடைய தீர்ப்பைச் சொன்ன பின்பு, தன்னண்டையிலே நிற்கிற சேவகரை நோக்கி: "நீங்கள் போய், கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லுங்கள்; அவர்கள் கையும் தாவீதோடே இருக்கிறது; அவன் ஓடிப்போகிறதை அவர்கள் அறிந்திருந்தும், அதை எனக்கு வெளிப்படுத்தவில்லை" (1சாமு 22:17) என்று சொல்லுகிறார். ராஜாவின் வேலைக்காரரோ, கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லத் தங்கள் கைகளை நீட்ட சம்மதிக்கவில்லை.

ஒரு தேசத்தின் ராஜா, நியாயமில்லாமல் கட்டளை கொடுக்கக்கூடாது. வழக்கை விசாரிக்காமல், "நீங்கள் போய் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லுங்கள்" என்று சொல்லுவது அநீதியான தீர்ப்பு. ஆசாரியர்கள் செத்துப்போனால் சவுலுக்கு சந்தோஷமாயிருக்கும். தனக்கு விரோதமாக சதிபண்ணினவர்களை, தான் பழிவாங்கி விட்டதாக சவுல் நினைப்பார். சவுலால் கர்த்தருடைய ஆசாரியர்களைத்தான் தண்டிக்க முடியும். அவனால் கர்த்தரை ஒன்றும் செய்ய முடியாது. சவுலால் கர்த்தருக்கு அருகாமையில்கூட வரமுடியாது. கர்த்தர் எப்போதோ சவுலை விட்டு விலகிப்போய்விட்டார்.

ஒரு ராஜா கட்டளையிடும்போது, அவருடைய சேவகர்கள், ராஜாவின் கட்டளையை உடனே நிறைவேற்றுவது வழக்கம். ராஜாவின் வார்த்தைக்கு யாரும் எதிர்த்து பேசமாட்டார்கள். ஆனால் இங்கோ ராஜாவின் வேலைக்காரர், சவுலின் வார்த்தைகளைக் கேட்டு, கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்ல தங்கள் கைகளை நீட்ட சம்மதிக்கவில்லை. ராஜாவின் கட்டளையும் விநோதமாயிருக்கிறது. ராஜாவின் கட்டளைக்கு அவருடைய சேவகர்கள் கீழ்ப்படிய மறுப்பதும் விநோதமாயிருக்கிறது.

சவுல் தெளிந்த சிந்தனையில்லாமல் குழப்பத்திலிருக்கிறார். அவர் எல்லோரையும் பகைக்கிறார். யார் தன்னுடைய சிநேகிதர், யார் தன்னுடைய பகைஞர் என்று சவுலால் வேறுபிரித்து பார்க்க முடியவில்லை. சவுலின் கண்களுக்கு எல்லோரும் சத்துருக்களாக தெரிகிறார்கள். எல்லோரும் தனக்கு விரோதமாக சதிபண்ணுகிறார்கள் என்று சவுல் சந்தேகப்படுகிறார்.

ராஜாவைவிட அவருடைய சேவகர்கள் மனிதாபமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் நீதியும் நியாயமும் இருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கும், கர்த்தருடைய ஊழியத்திற்கும், அவருடைய ஊழியக்காரர்களுக்கும் மதிப்பு கொடுக்கிறார்கள். கர்த்தருடைய ஆசாரியர்களை காரணமில்லாமல் கொல்லுவது பாவம் என்னும் சிந்தனை அவர்களுடைய மனதில் இருக்கிறது.

தன்னுடைய வேலைக்காரர், தன்னுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமலிருப்பதைப் பார்த்து சவுல் அதிர்ச்சியடையவில்லை. ஆச்சரியப்படவில்லை. தன்னுடைய கட்டளையை எப்படியும் நிறைவேற்றவேண்டுமென்று சவுல் துடித்துக்கொண்டிருக்கிறார். அப்பொழுது ராஜா தோவேக்கை நோக்கி: "நீ போய் ஆசாரியர்களைக் கொன்றுபோடு" (1சாமு 22:18) என்று சொல்லுகிறார்; ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்மேல் விழுந்து, சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கும் எண்பத்தைந்துபேரை அன்றையதினம் கொன்றுபோடுகிறான்.

துன்மார்க்கருக்கு துன்மார்க்கர் துணை போவார்கள். சவுலைப்போலவே தோவேக்கும் துன்மார்க்கனாயிருக்கிறான். அவன் ராஜாவின் கட்டளைக்கு உடனே கீழ்ப்படிகிறான். ஆசாரியர்களைக் கொல்லும் வேலையை மனப்பூர்வமாய்ச் செய்கிறான். தோவேக்கு ஆசாரியர்களைக் கொன்றபோது, ஆசாரியர்கள் தங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ள எதிர்த்து போராடவில்லை. அவர்கள் ஆசாரியர்கள். சணல்நூல் ஏபோத்தை தரித்திருக்கிறவர்கள். அவர்களிடத்தில் யுத்த ஆயுதங்களோ, கேடயமோ இல்லை. ஆகையினால் தோவேக்கு, எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், எண்பத்தைந்து ஆசாரியர்களை, உடனே கொன்றுபோடுகிறான்.

ஆசாரியர்கள் எல்லோரும் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள். இஸ்ரவேல் புத்திரரில், ஆசாரியராயிருக்கிறவர்களில், இருபது வயதுமுதல் ஐம்பது வயதிற்குட்பட்ட புருஷர்கள் சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருப்பார்கள். இந்த ஆசாரியர்கள் ராஜாவுக்கு முன்பாக சணல்நூல் ஏபோத்து தரித்து நிற்கவேண்டும். அந்த வழக்கத்தின் பிரகாரம் அவர்கள் சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கிறார்கள். தோவேக்கோ, சணல்நூல் ஏபோத்தை தரித்திருக்கும் எண்பத்தைந்து ஆசாரியரையும் கொன்றுபோடுகிறான்.

தோவேக்கு இவர்களைக் கொன்றபின்பு, ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபுக்குப் போகிறான். நோபிலுள்ள புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், கழுதைகளையும், ஆடுகளையும் பட்டயக்கருக்கினால் வெட்டிப்போடுகிறான் (1சாமு 22:19). இந்தக் கட்டளையையும் சவுலே தோவேக்குக்கு கொடுத்திருக்கவேண்டும்.

சவுலின் காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே, மார்க்க ஆராதனை சீர்கெட்டுப்போயிருக்கிறது. ஆசாரியருக்கும் அவர்கள் செய்கிற ஊழியங்களுக்கும் மதிப்பு இல்லை. ஆசாரியரும், அவருடைய சந்ததியாரும் சவுலின் காலத்தில் செத்துப்போகிறார்கள். ஆசாரியரின் பட்டணமாகிய நோப்பை சவுல் நிர்மூலம்பண்ணுகிறார். கர்த்தருடைய பலிபீடத்திலே ஊழியம் செய்வதற்கு, இஸ்ரவேல் தேசத்திலே ஆசாரியர் இல்லை. சவுலின் மூர்க்ககுணத்தினால், இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆராதனை சீர்கெட்டுப்போயிற்று.

ஒரு ராஜாவின் மதியீனத்தினால் ஆசாரியர்களும், அவர்களுடைய குடும்பத்தாரும் செத்துப்போகிறார்கள். சாமுவேல் இதையெல்லாம் முன்னறிந்து, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ராஜா வேண்டாம் என்று சொன்னார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று பிடிவாதமாயிருந்தார்கள். அவர்கள் விரும்பிய பிரகாரம் கர்த்தர் அவர்களுக்கு சவுலை ராஜாவாகக் கொடுத்தார். சவுலோ ஆசாரியரின் வம்சத்தையே அழித்துப்போடுகிறார்.

அபியத்தார்
1சாமு 22:20-23

1சாமு 22:20. அகிதூபின் குமாரனாகிய அகிமெலேக்கின் குமாரரில் அபியத்தார் என்னும் பேருள்ள ஒருவன் தப்பி, தாவீது இருக்கும் புறமாக ஓடிப்போய்,

1சாமு 22:21. சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்றுபோட்ட செய்தியை தாவீதுக்கு அறிவித்தான்.

1சாமு 22:22. அப்பொழுது தாவீது அபியத்தாரைப் பார்த்து: ஏதோமியனாகிய தோவேக்கு அங்கே இருந்தபடியினாலே, அவன் எவ்விதத்திலும் சவுலுக்கு அதை அறிவிப்பான் என்று அன்றையதினமே அறிந்திருந்தேன்; உன் தகப்பன் வீட்டாராகிய எல்லாருடைய மரணத்துக்கும் காரணம் நானே.

1சாமு 22:23. நீ என்னிடத்தில் இரு, பயப்பட வேண்டாம்; என் பிராணனை வாங்கத் தேடுகிறவனே உன் பிராணனையும் வாங்கத்தேடுகிறான்; நீ என் ஆதரவிலே இரு என்றான்.

தோவேக்கு ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபிலுள்ள, புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும் வெட்டிக்கொன்று போட்டபோது, அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்பவன் தோவேக்கின் பட்டயத்திற்கு தப்பிக்கிறான். அகிமெலேக்கு சவுலைப் பார்க்க போயிருந்தபோது, அபியத்தார் ஒருவேளை ஆசரிப்புக்கூடாரத்திலே, கர்த்தருடைய பலிபீடத்திலே, ஆசாரிய ஊழியம் செய்திருக்கவேண்டும்.

ஆகையினால் அபியத்தார், தன் தகப்பனார் அகிமெலேக்கோடுகூட சவுலைப் பார்க்க கிபியாவைச் சேர்ந்த ராமாவுக்குப் போகவில்லை. இதனால் தோவேக்கு எண்பத்தைந்து ஆசாரியரைக் கொன்றபோது, அபியத்தார் தோவேக்கின் பட்டயத்திற்கு தப்பித்துக்கொள்கிறான்.

தோவேக்கு ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபுக்கு வருவதற்கு முன்பாக, அவன் எண்பத்தைந்து ஆசாரியர்களைக் கொன்ற செய்தியை, அபியத்தார் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கவேண்டும். அவன் இப்போது நோபுக்கு வருகிறான் என்னும் செய்தியையும் அபியத்தார் அறிந்திருக்கவேண்டும். ஆகையினால் அபியத்தார் தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்வதற்காக, தோவேக்கு நோபுக்கு வருவதற்கு முன்பாகவே, அபியத்தார் நோபை விட்டு தப்பித்து ஓடிப்போய்விடுகிறான்.

அகிதூபின் குமாரனாகிய அகிமெலேக்கின் குமாரரில் அபியத்தார் என்னும் பேருள்ள ஒருவன் தப்பி, தாவீது இருக்கும் புறமாக ஓடிப்போய், சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்றுபோட்ட செய்தியை தாவீதுக்கு அறிவிக்கிறான் (1சாமு 22:20,21).

ஆசாரியர்கள் கொலைசெய்யப்பட்ட செய்தியைக் கேட்டு தாவீது மிகவும் துக்கப்படுகிறார். அப்பொழுது தாவீது அபியத்தாரைப் பார்த்து: "ஏதோமியனாகிய தோவேக்கு அங்கே இருந்தபடியினாலே, அவன் எவ்விதத்திலும் சவுலுக்கு அதை அறிவிப்பான் என்று அன்றையதினமே அறிந்திருந்தேன்; உன் தகப்பன் வீட்டாராகிய எல்லாருடைய மரணத்துக்கும் காரணம் நானே" (1சாமு 22:22) என்று சொல்லுகிறார்.

தாவீது அபியத்தாரை தன்னிடமாகச் சேர்த்துக்கொள்கிறார். தாவீது அவனுக்கு பாதுகாப்பு கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். தாவீது அபியத்தாரிடம், "நீ என்னிடத்தில் இரு, பயப்பட வேண்டாம்; என் பிராணனை வாங்கத் தேடுகிறவனே உன் பிராணனையும் வாங்கத்தேடுகிறான்; நீ என் ஆதரவிலே இரு" (1சாமு 22:23) என்று சொல்லுகிறார்.

தாவீது ஒரு ஆசாரியரைப்போலவும், ஒரு தீர்க்கதரிசியைப்போலவும் அபியத்தாரைப் பார்த்து, "பயப்பட வேண்டாம்" என்று ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். பிரதான ஆசாரியர்கள் ஜனங்களை ஆசீர்வதிப்பார். தாவீதும், பிரதான ஆசாரியரைப்போல, அபியத்தாரை ஆசீர்வதிக்கிறார்.

இக்காலத்தில் சவுலுக்கும் ஒரு பிரதான ஆசாரியன் இருக்கிறான். சாதோக்கின் தகப்பனாகிய அகிதூப் என்பவன் சவுலின் ஆசாரியன். இவன் எலெயாசாரின் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

"சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்தரவு அருளவில்லை" (1சாமு 28:6). "அகிதூப் சாதோக்கைப் பெற்றான்; சாதோக் அகிமாசைப் பெற்றான்" (1நாளா 6:8).

சவுல் கர்த்தரையும் நம்பவில்லை. அவருடைய வல்லமையையும் நம்பவில்லை. சவுலிடத்தில் தெய்வபக்தியுமில்லை. ஆனாலும் சவுல் தெய்வபக்தியின் வேஷத்தைத் தரித்து, தனக்கு பிரதான ஆசாரியரை நியமித்திருக்கிறார்.

23 அதிகாரம்

சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்று, குற்றமில்லாதவர்களின் இரத்தத்தை சிந்துகிறார். சவுலுக்கு தாவீதின்மேல் உள்ள கோபம் இன்னும் குறையவில்லை. சவுல் தாவீதைக் கொன்றுபோடுவதற்காக அவரைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கும், தன்னுடைய ராஜாவாகிய சவுலுக்கும் நன்மை செய்கிறார். பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணுகிறார்கள். தாவீது பெலிஸ்தரை முறியடித்து கேகிலாவை இரட்சிக்கிறார் (1சாமு 23:1-6).

தாவீதுக்கு மறுபடியும் சவுலின் மூலமாய் ஆபத்து வருகிறது. கேகிலா பட்டணத்தார் தன்னையும் தன் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று கர்த்தருடைய வார்த்தை தாவீதுக்கு உண்டாயிற்று. தாவீது கர்த்தரால் எச்சரிக்கப்பட்டு தப்பித்துக்கொள்கிறார் (1சாமு 23:7-13).

தாவீது சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருக்கிறார். அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவருடைய கையைத் திடப்படுத்துகிறார் (1சாமு 23:14-18).

சீப் ஊரார் தாவீதைப்பற்றிய செய்தியை சவுலுக்கு அறிவிக்கிறார்கள். சவுல் தாவீதைப்பிடிக்க தன் சேவகரோடு புறப்பட்டுப்போகிறார் (1சாமு 23:19-25). அந்த சமயத்தில் பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்னும் செய்தி சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது. ஆகையினால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டு, பெலிஸ்தரை எதிர்க்கும்படி போகிறார். தாவீது சவுலுக்கு தப்பித்துக்கொள்கிறார் (1சாமு 23:26-29).

கேகிலா
1சாமு 23:1-5

1சாமு 23:1. இதோ, பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி, களஞ்சியங்களைக் கொள்ளையிடுகிறார்கள் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது.

1சாமு 23:2. அப்பொழுது தாவீது: நான் போய், அந்தப் பெலிஸ்தரை முறிய அடிக்கலாமா என்று கர்த்தரிடத்தில் விசாரித்தற்கு, கர்த்தர்: நீ போ; பெலிஸ்தரை முறிய அடித்து, கேகிலாவை ரட்சிப்பாயாக என்று தாவீதுக்குச் சொன்னார்.

1சாமு 23:3. ஆனாலும் தாவீதின் மனுஷர் அவனை நோக்கி; இதோ, நாங்கள் இங்கே யூதாவிலே இருக்கும்போதே பயப்படுகிறோம்; நாங்கள் பெலிஸ்தருடைய சேனைகளை எதிர்க்கிறதற்கு கேகிலாவுக்கு போனால் எவ்வளவு அதிகம் என்றார்கள்.

1சாமு 23:4. அப்பொழுது தாவீது திரும்பவும் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர் அவனுக்கு உத்தரமாக: நீ எழும்பி, கேகிலாவுக்குப் போ; நான் பெலிஸ்தரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்.

1சாமு 23:5. அப்படியே தாவீது தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, கேகிலாவுக்குப் போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, அவர்களில் அநேகம்பேரை வெட்டி, அவர்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு போனான்; இவ்விதமாய் கேகிலாவின் குடிகளை ரட்சித்தான்.

காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்த்து, "நீர் யூதாதேசத்திற்கு புறப்பட்டு வாரும்" (1சாமு 22:5) என்று சொன்னார். சவுல் இஸ்ரவேலின் ராஜாவாயிருந்தாலும், அவர் ராஜாங்க காரியங்களை சரியாக நிர்வாகம்பண்ணவில்லை. தாவீதைப் பிடித்து அவரைக் கொன்றுபோடவேண்டும் என்பதே சவுலின் நோக்கமாயிருக்கிறது. சவுல் எப்போதுமே தாவீதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார். ராஜாங்கமும் நிர்வாகமும் தேசத்தில் சரியாய் நடைபெறவில்லை.

சவுல் இஸ்ரவேல் தேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தவில்லை. அதன் எல்லைகளில் யுத்தவீரர்களை நிறுத்தி, எல்லை வீரர்களையும் பாதுகாக்கவில்லை. இக்காலத்தில் பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி, அவர்களுடைய களஞ்சியங்களைக் கொள்ளையிடுகிறார்கள். இந்தச் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது.

கர்த்தருடைய சபை அமைதியாயிருக்கும்போது, தேசமும் அமைதியாயிருக்கும். சபையில் குழப்பம் வந்துவிட்டால், தேசத்திலும் குழப்பம் வந்துவிடும். சவுல் கர்த்தருடைய ஆசாரியரைக் கொன்றுபோட்டார். சவுல் தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று தீர்மானித்து, அவரைத் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறார். சவுல் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களைத் துரத்திவிட்டு, கேகிலாவை இரட்சிக்கவேண்டும் என்னும் எண்ணம் சவுலிடத்தில் இல்லை. சவுல் தேசத்தைக் கவனிக்காமல், தாவீதையே கவனித்துக்கொண்டிருக்கிறார்.

பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி, அவர்களுடைய களஞ்சியங்களைக் கொள்ளையிடுகிறார்கள் என்று தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, கேகிலாவை இரட்சிக்க முன்வருகிறார்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தின்மீது பிரியமாயிருக்கிறார். அவர் அந்த தேசத்தின் நன்மையை கரிசனையோடு விசாரிக்கிறார். இஸ்ரவேல் தேசம் தாவீதின் தேசம். பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி, அவர்களுடைய களஞ்சியங்களைக் கொள்ளையிடும்போது, தாவீதால் அந்தச் செய்தியைக் கேட்டு சும்மாயிருக்க முடியவில்லை. தாவீது தன் தேசத்தைப் பாதுகாக்க ஒன்றும் செய்யாமல் சும்மா அமர்ந்திருக்கவில்லை.

இஸ்ரவேல் தேசத்தைப் பாதுகாக்க வேண்டியது சவுலின் கடமை. அவர்தான் எல்லைகளைப் பலப்படுத்த வேண்டும். சவுலும் அவருடைய சேனையும் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும். ஆனால் அவர்களோ தாவீதைப் பிடிப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். தங்கள் தேசத்தைப் பாதுகாப்பதில் கொஞ்சம்கூட கவனம் செலுத்தவில்லை.

தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டுமென்று விரும்பினாலும், அவர் கர்த்தருடைய சித்தத்தையும் அறிந்துகொள்ள விரும்புகிறார். தாவீது, காத் தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்.

அப்பொழுது தாவீது: "நான் போய், அந்தப் பெலிஸ்தரை முறிய அடிக்கலாமா" என்று கர்த்தரிடத்தில் விசாரித்தற்கு, கர்த்தர்: "நீ போ; பெலிஸ்தரை முறிய அடித்து, கேகிலாவை ரட்சிப்பாயாக" என்று தாவீதுக்குச் சொல்லுகிறார் *(1சாமு 23:2)*.

தாவீதின் கூடயிருக்கிற மனுஷர்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. தாவீது பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போவதை அவர்கள் தடைபண்ண முயற்சி பண்ணுகிறார்கள். தாவீதின் மனுஷர் அவரை நோக்கி; "இதோ, நாங்கள் இங்கே யூதாவிலே இருக்கும்போதே பயப்படுகிறோம்; நாங்கள் பெலிஸ்தருடைய சேனைகளை எதிர்க்கிறதற்கு கேகிலாவுக்கு போனால் எவ்வளவு அதிகம்" *(1சாமு 23:3)* என்று சொல்லுகிறார்கள்.

தாவீது கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார். தாவீதின் மனுஷரும் அவரோடு கூட போகவேண்டும். அப்போதுதான் தாவீதால் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியும். தாவீதின் மனுஷர், பெலிஸ்தருக்கு விரோதமாக, அவரோடு கூடப்போகவேண்டுமென்றால், அவர்கள் முழுமனதோடும், உற்சாகமாயும் போகவேண்டும். தாவீது அவர்களை திருப்திபடுத்த விரும்புகிறார். தாவீது தன்னுடைய மனுஷருக்காக கர்த்தரிடத்தில் மறுபடியும் விசாரிக்கிறார்.

தாவீது திரும்பவும் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர் அவருக்கு உத்தரமாக: "நீ எழும்பி, கேகிலாவுக்குப் போ; நான் பெலிஸ்தரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்" (சாமு 23:4) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இரண்டு விசையும், தாவீதை பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகச்சொல்லுகிறார். கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் முதலில் "நீ போ, பெலிஸ்தரை முறியடித்து கேகிலாவை ரட்சிப்பாயாக" என்று தாவீதுக்கு சொன்னார். இப்போது கர்த்தர் இரண்டாம் விசை, "நீ எழும்பி கேகிலாவுக்குப் போ, நான் பெலிஸ்தரை உன் கையிலே ஒப்புக்கொடுப்பேன்" என்று தாவீதுக்கு சொல்லுகிறார்.

யுத்தம் கர்த்தருடையது. இந்த யுத்தத்தில், தாவீதுக்கு பெலிஸ்தர்மீது வெற்றி கிடைக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். தாவீதும் அவருடைய மனுஷரும் கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார்கள். அப்படியே தாவீது தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, கேகிலாவுக்குப் போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, அவர்களில் அநேகம்பேரை வெட்டி, அவர்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டுபோகிறார்; இவ்விதமாய் தாவீது கேகிலாவின் குடிகளை ரட்சிக்கிறார் (சாமு 23:5).

பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி அவர்களுடைய களஞ்சியங்களைக் கொள்ளையிட்டார்கள். தாவீதோ பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, அவர்களுடைய ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறார். அவர்கள் கொள்ளையிட்ட களஞ்சியங்களையும் இரட்சிக்கிறார்.

ஏபோத்து
1சாமு 23:6-13

1சாமு 23:6. அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் கேகிலாவில் இருக்கிற தாவீதினிடத்தில் தப்பியோடுகிறபோது, அவனிடத்தில் ஒரு ஏபோத்து இருந்தது.

1சாமு 23:7. தாவீது கேகிலாவுக்கு வந்தான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, தேவன் அவனை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவன் கதவுகளும் தாழ்ப்பாள்களுமுள்ள பட்டணத்திற்குள் பிரவேசித்ததினால், அடைபட்டிருக்கிறான் என்று சவுல் சொல்லி,

1சாமு 23:8. தாவீதையும் அவன் மனுஷரையும் முற்றிக்கை போடும்படிக்கு, கேகிலாவுக்குப் போக, எல்லா ஜனத்தையும் யுத்தத்திற்கு அழைப்பித்தான்.

1சாமு 23:9. தனக்குப் பொல்லாப்புச் செய்யச் சவுல் எத்தனம்பண்ணுகிறான் என்று தாவீது அறிந்துகொண்டபோது, ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: ஏபோத்தை இங்கே கொண்டுவா என்றான்.

1சாமு 23:10. அப்பொழுது தாவீது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சவுல் கேகிலாவுக்கு வந்து, என்னிமித்தம் பட்டணத்தை அழிக்க வகைதேடுகிறான் என்று உமது அடியானாகிய நான் நிச்சயமாய்க் கேள்விப்பட்டேன்.

1சாமு 23:11. கேகிலா பட்டணத்தார் என்னை அவன் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ, உம்முடைய அடியான் கேள்விப்பட்டபடி சவுல் வருவானோ, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இதை உம்முடைய அடியானுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றான். அதற்குக் கர்த்தர்: அவன் வருவான் என்றார்.

1சாமு 23:12. கேகிலாபட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ என்று தாவீது கேட்டதற்கு, கர்த்தர்: ஒப்புக்கொடுப்பார்கள் என்றார்.

1சாமு 23:13. ஆகையால் தாவீதும் ஏறக்குறைய அறுநூறுபேராகிய அவன் மனுஷரும் எழும்பி, கேகிலாவை விட்டுப் புறப்பட்டு, போகக்கூடிய இடத்திற்குப் போனார்கள்; தாவீது கேகிலாவிலிருந்து தப்பிப்போனான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, தான் புறப்படுகிறதை நிறுத்திவிட்டான்.

சவுல் தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று ஒரே குறியாயிருக்கிறார். தாவீது சமீபத்தில்தான் பெலிஸ்தரை முறியடித்து கேகிலாவை இரட்சித்தார். இந்தச் செய்தி சவுலுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும். கேகிலாவை இரட்சிக்கவேண்டியது சவுலின் வேலை. சவுல் செய்ய வேண்டிய வேலையை தாவீது செய்திருக்கிறார். இதற்காக சவுல் தாவீதைக் கனம்பண்ணவேண்டும். ஆனால் சவுலோ தாவீதை எப்படியாவது கொன்றுபோட வேண்டுமென்று நினைவாயிருக்கிறார்.

தாவீது எங்கே போகிறார், எங்கே வருகிறார் என்று சவுல் தன்னுடைய வேவுகாரர் மூலமாய் விசாரிக்கிறார். தாவீது கேகிலாவுக்கு வந்தார் என்று சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது. சவுலோ, தேவன் தாவீதை தன் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லுகிறார். சவுல் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்கிறார். இஸ்ரவேலுக்கு நன்மை செய்த தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று சவுல் நினைக்கிறார். தாவீது செத்துப்போகவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. இது சவுலின் விருப்பம். ஆனாலும் தன்னுடைய ஆசைக்கு கர்த்தர் துணையாயிருக்கிறார் என்று சவுல் நினைக்கிறார்.

கர்த்தர் ஒருபோதும் அநீதிக்கு துணைபோகமாட்டார். கர்த்தர் துன்மார்க்கருக்கு எதிர்த்து நிற்கிறவர். தாவீது கேகிலாவுக்கு வந்தார் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, "தேவன் தாவீதை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; தாவீது கதவுகளும் தாழ்ப்பாள்களுமுள்ள பட்டணத்திற்குள் பிரவேசித்ததினால், அடைபட்டிருக்கிறார்" (1சாமு 23:7) என்று சவுல் சொல்லுகிறார்.

சவுல் இஸ்ரவேலின் தேவனைத் தூஷிக்கிறார். சவுல் கர்த்தரை சர்வவல்லமையுள்ள தேவனாகப் பார்க்காமல், தன்னுடைய துன்மார்க்கமான இச்சையை நிறைவேற்றுகிற ஊழியக்காரராக பார்க்கிறார். சவுலின் மனதிலே தாவீதுக்கு விரோதமான கோபமும் பொறாமையும் இருக்கிறது. இது கர்த்தரால் உண்டாகவில்லை. இந்தப் பொறாமை சவுலின் துன்மார்க்கத்தினால் உண்டாயிற்று.

தாவீதையும், அவருடைய மனுஷரையும் முற்றிக்கைப்போடவேண்டுமென்று சவுல் தீர்மானம்பண்ணுகிறார். இதற்காக கேகிலாவுக்குப் போக, சவுல் எல்லா ஜனத்தையும் யுத்தத்திற்கு அழைப்பிக்கிறார். பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போவதுபோல சவுல் இஸ்ரவேல் ஜனங்களைக் கூட்டிச்சேர்க்கிறார். ஆனால் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது சவுலின் நோக்கமல்ல. தாவீதையும் அவருடைய மனுஷரையும் முற்றிக்கைப்போடவேண்டும் என்பதே சவுலின் நோக்கம்.

அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் கேகிலாவில் இருக்கிற தாவீதினிடத்தில் தப்பியோடுகிறபோது, அவனிடத்தில் ஒரு ஏபோத்து இருக்கிறது (1சாமு 23:6). சவுல் தனக்கு பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணுகிறார் என்பதை தாவீது அறிந்துகொள்கிறார். இது சம்பந்தமாக தான் என்ன செய்யவேண்டும் என்பதை தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்க விரும்புகிறார். இதற்காக தாவீது ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: "ஏபோத்தை இங்கே கொண்டுவா" (1சாமு 23:9) என்று சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தாவீதுக்கு ஏபோத்து இருந்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்முடைய கரங்களிலே பரிசுத்த வேதாகமம் இருக்கிறது. இதிலே ஜீவனுள்ள வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு தேவையான ஆலோசனைகளை பரிசுத்த வேதாகமத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய சித்தத்தைப்பற்றி நமக்கு எப்பொழுதெல்லாம் சந்தேகம் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்து, கர்த்தருடைய சித்தத்தை தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்.

தாவீது கேட்டுக்கொண்ட பிரகாரம், ஏபோத்து அவரிடத்தில் கொண்டு வரப்படுகிறது. அப்பொழுது தாவீது: "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சவுல் கேகிலாவுக்கு வந்து, என்னிமித்தம் பட்டணத்தை அழிக்க வகைதேடுகிறான் என்று உமது அடியானாகிய நான் நிச்சயமாய்க் கேள்விப்பட்டேன். கேகிலா பட்டணத்தார் என்னை அவன் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ, உம்முடைய அடியான் கேள்விப்பட்டபடி சவுல் வருவானோ, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இதை உம்முடைய அடியானுக்குத் தெரிவிக்கவேண்டும்" (1சாமு 23:10,11) என்று கேட்கிறார். அதற்குக் கர்த்தர்: "அவன் வருவான்" என்று சொல்லுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தரை, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே" என்று சொல்லுகிறார். கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "உம்முடைய அடியான்" என்று சொல்லுகிறார்.

தாவீது தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, கேகிலாவுக்குப் போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, அவர்களில் அநேகம்பேரை வெட்டி, அவர்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டுபோனார்; இவ்விதமாய் கேகிலாவின் குடிகளை ரட்சித்தார் (1சாமு 23:5). தாவீது கேகிலாவின் மனுஷருக்கு நன்மை செய்திருக்கிறார். கேகிலா பட்டணத்தார் தனக்கு நன்மை செய்வார்களா, தனக்கு ஆதரவாயிருப்பார்களா அல்லது தன்னையும் தன்னுடைய மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களா என்பது தாவீதுக்கு தெரியவில்லை. தாவீது இதையும் கர்த்தரிடத்தில் விசாரித்து அறிந்து கொள்ள விரும்புகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில், "கேகிலாபட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ" என்று கேட்டதற்கு, கர்த்தர்: "ஒப்புக்கொடுப்பார்கள்" (1சாமு 23:12) என்று சொல்லுகிறார். தாவீதுக்கு கேகிலா பட்டணத்தாரின் உண்மையான மனதும், அவர்களுடைய எண்ணமும் தெரியவில்லை. கர்த்தருக்குத் தெரியாத இரகசியம் எதுவுமில்லை. மனுஷன் முகத்தைப் பார்க்கும்போது, கர்த்தர் மனுஷருடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார். அவர் கேகிலா பட்டணத்தாரின் இருதயங்களையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார்.

தாவீது கேகிலா பட்டணத்தாருக்கு நன்மை செய்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் தாவீதுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஆனால் அவர்களோ தாவீதுக்கு துரோகம்பண்ணுகிறார்கள். கேகிலா பட்டணத்தார் பலவீனராயிருக்கிறார்கள். அவர்களால் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியவில்லை. சவுல் இப்போது கேகிலா பட்டணத்தை முற்றிக்கைப்போட்டிருக்கிறார். கேகிலா பட்டணத்து மனுஷரால் சவுலுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவும் முடியாது.

கேகிலா பட்டணத்தார் தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுத்தால், சவுல் இவர்களை தண்டியாமல் விட்டுவிடுவார். தாவீதைப் பிடித்துக்கொள்வார். அவர்கள் தாவீதை பாதுகாக்கவேண்டும் என்று விரும்பி, தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், சவுலின் கோபம் கேகிலா பட்டணத்தார்மீது வரும். சவுல் ஒரு துன்மார்க்கன். சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்றுபோட்டதுபோல, தங்களையும் கொன்றுபோடுவார் என்று கேகிலா பட்டணத்தார் பயப்படுகிறார்கள். பட்டணம் முழுவதும் அழிந்துபோவதற்கு பதிலாக, தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுத்து, தாங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்று கேகிலா பட்டணத்தார் நினைக்கிறார்கள்.

கர்த்தர் கேகிலா பட்டணத்தாருடைய நினைவை அறிந்திருக்கிறார். ஆகையினால் கேகிலாபட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ என்று தாவீது கேட்டதற்கு, கர்த்தர்: "ஒப்புக்கொடுப்பார்கள்" என்று சொல்லுகிறார்.

கேகிலா பட்டணத்தார் தனக்கு துரோகம்பண்ண தீர்மானித்திருப்பதற்காக, தாவீது அவர்கள்மீது கோபப்படவில்லை. அவர்களை சங்காரம்பண்ணிவிடவில்லை. தானும் தன்னுடைய மனுஷரும் சவுலின் கைக்கு எவ்வாறு தப்பிப்பது என்பதைப்பற்றி தாவீது யோசிக்கிறார். கேகிலா பட்டணத்தார், தாவீதுக்கு விரோதமாகத் திரும்பியிருப்பதினால், தாவீதும் ஏறக்குறைய அறுநூறுபேராகிய அவருடைய மனுஷரும் எழும்பி, கேகிலாவை விட்டுப் புறப்பட்டு, போகக்கூடிய இடத்திற்குப் போகிறார்கள்; தாவீது கேகிலாவிலிருந்து தப்பிப்போனார் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, தான் புறப்படுகிறதை சவுல் நிறுத்திவிடுகிறார் (1சாமு 23:13).

தாவீது எங்கேதியிலுள்ள கெபியிலிருந்தபோது அவரோடுகூட ஏறக்குறைய நானூர்பேர் மாத்திரமே இருந்தார்கள். இப்போது அவரோடுகூட ஏறக்குறைய அறுநூறு பேர் இருக்கிறார்கள். தாவீதினுடைய சேனையிலுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. தாவீது கேகிலாவை விட்டு புறப்பட்டுப்போகிறார். ஆனால் எங்கே போகவேண்டும் என்று அவருக்கு தெரியவில்லை. தாவீது கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிந்து புறப்பட்டுப்போகிறார். தாவீதோடு கூடயிருக்கிற அறுநூறு பேரும், அவர் எங்கே போகிறாரோ அங்கே அவரோடு கூடப்போகிறார்கள்.

தாவீது தப்பித்துப்போனதினால் சவுலுக்கு மிகுந்த ஏமாற்றமாயிற்று. தாவீது கேகிலாவுக்கு வந்தார் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, தேவன் தாவீதை தன் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சவுல் நினைத்தார். கர்த்தர் தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. கர்த்தர் தாவீதை சவுலின் கைக்கு விலக்கி மீட்டுக்கொண்டார். சவுல் தாவீதுக்கு கண்ணியாகயிருந்தாலும், தாவீது கர்த்தருடைய கிருபையினால் சவுலின் கண்ணிக்கு தப்பிக்கிறார்.

தாவீதும் யோனத்தானும் 1சாமு 23:14-18

1சாமு 23:14. தாவீது வனாந்தரத்திலுள்ள அரணான ஸ்தலங்களிலே தங்கி, சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருந்தான்; சவுல் அநுதினமும் அவனைத் தேடியும், தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை.

1சாமு 23:15. தன் பிராணனை வாங்கத் தேடும்படிக்கு, சவுல் புறப்பட்டான் என்று தாவீது அறிந்தபடியினாலே, தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள ஒரு காட்டிலே இருந்தான்.

1சாமு 23:16. அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி:

1சாமு 23:17. நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டு பிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்.

1சாமு 23:18. அவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணின பின்பு, தாவீது காட்டில் இருந்துவிட்டான்; யோனத்தானோ தன் வீட்டிற்குப் போனான்.

தாவீது வனாந்தரத்திலுள்ள அரணான ஸ்தலங்களிலே தங்கி, சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருக்கிறார்; சவுல் அநுதினமும் தாவீதைத் தேடியும், தேவன் தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தன் பிராணனை வாங்கத் தேடும்படிக்கு, சவுல் புறப்பட்டார் என்று தாவீது அறிந்தபடியினாலே, தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள ஒரு காட்டிலே இருக்கிறார் (1சாமு 23:14,15).

தாவீது சவுலுக்கு தப்பி வனாந்தரத்திலும், மலையிலும், காட்டிலும் அலைந்துகொண்டிருக்கிறார். தாவீதோடுகூட அறுநூறு பேர் இருந்தாலும், தாவீது சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முயற்சி பண்ணவில்லை. சவுல் எதிர்பாராத வேளையிலே, தாவீது அவர்மீது திடீரென்று தாக்குதல் நடத்தி, அவரைக் கொன்றுபோட முயற்சி பண்ணவில்லை. சவுல் செத்துப்போனால் தாவீதின் பிரச்சனையும் முடிந்துபோகும். ஆனால் தாவீதோ, சவுலின் கைக்கு தன்னை தப்பிவித்துக்கொள்வதற்குத்தான் முயற்சிபண்ணுகிறாரேயல்லாமல், சவுலைக் கொன்றுபோட எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. சவுல் செத்துப்போனால் தாவீதின் பிரச்சனைக்கும் முடிவு வரும். இஸ்ரவேல் தேசத்திலே நடைபெறுகிற கொடுங்கோல் ஆட்சிக்கும் முடிவு வரும்.

தாவீதோ சவுலைக் கொன்றுபோடும் வேலையை தன்னுடைய கையில் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிகிறார். கர்த்தருடைய சித்தமான வேளைக்காக காத்திருக்கிறார். தான் தங்கியிருக்கிற இடம் வனாந்தரமாயிருந்தாலும், காடாயிருந்தாலும், அந்த இடமே கர்த்தருக்கு சித்தமான இடம் என்று தீர்மானித்து, முறுமுறுக்காமல், கர்த்தருடைய செட்டைகளின்கீழ் பாதுகாப்பாய்த் தங்கியிருக்கிறார்.

தாவீது வனாந்தரத்திலும் காட்டிலும் தனிமையாயிருந்தாலும் கர்த்தர் அவரோடு கூடயிருக்கிறார். கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திற்குள் வருவதற்கு தாவீதுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் உலகப்பிரகாரமான வேலைகளை செய்தாலும், கர்த்தரோடு தனித்திருப்பதற்கு நேரம் ஒதுக்கவேண்டும். கர்த்தரோடு தனிமையிலே பேசவேண்டும். நாம் கர்த்தரோடு தனிமையிலிருக்கும்போது, அவருடைய மகிமையையும், பரிசுத்தத்தையும் நம்மால் உணரமுடியும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நம்மால் தியானித்துப் பார்க்க முடியும்.

சவுல் அனுதினமும் தாவீதைத் தேடுகிறார். தாவீது சவுலின் பார்வையில் மிகப்பெரிய சத்துருவாகவும், தேசத்துரோகியாகவும் இருக்கிறார். ஆனால் தாவீது சவுலுக்கு விரோதமாக ஒரு தப்பிதமும் செய்யவில்லை. சவுல் அனுதினமும் தாவீதைத் தேடியும், தேவன் தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. சவுலும் தன்னுடைய முயற்சியை கைவிடவில்லை. சவுலுக்கு கர்த்தருடைய சித்தத்தைப்பற்றி கவலையில்லை. கர்த்தருடைய சித்தம் எதுவாயிருந்தாலும், சவுல் தன்னுடைய சித்தம் நிறைவேறவேண்டுமென்று ஆசைப்படுகிறார்.

கர்த்தர் தாவீதைப் பாதுகாக்கிறார். கர்த்தரே தாவீதுக்கு அடைக்கலமாகவும், பலத்த கோட்டையாகவும், துருகமாகவும், அரணாகவும் இருக்கிறார். சவுல் எதிர்பார்த்த பிரகாரம் கர்த்தர் தாவீதை அவருடைய கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தேவன் தாவீதை தன் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சவுல் நினைத்தார். ஆனால் சவுலின் விருப்பத்தை கர்த்தர் நிறைவேற்றவில்லை. தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பது கர்த்தருக்கு சித்தமாயில்லை.

தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள ஒரு காட்டிலே இருக்கிறார். அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் தாவீதின் கையைத் திடப்படுத்துகிறான். யோனத்தான் தாவீதிடம், "நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டு பிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார்" (1சாமு 23:16,17) என்று சொல்லுகிறான்.

யோனத்தான் தாவீதுக்கு உண்மையுள்ள சிநேகிதனாயிருக்கிறான். சவுல் தாவீதை பகைத்தாலும், யோனத்தான் தாவீதை சிநேகிக்கிறான். யோனத்தான் தாவீதை சிநேகிப்பது மாறவில்லை. அவன் முன்பு தாவீதை எப்படி சிநேகித்தானோ அப்படியே இப்போதும் சிநேகிக்கிறான். உண்மையான சிநேகம் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. ஆபத்துக்கள் வந்தாலும், பிரச்சனைகள் வந்தாலும், பாடுகளும் வேதனைகளும் வந்தாலும் உண்மையான சிநேகம் அழிந்துபோகாது. அது நிலைத்திருக்கும்.

தாவீது சவுலின் அரண்மனையில் இருந்தபோதும், அவர் வனாந்தரத்திலும் காட்டிலும் இருக்கிறபோதும், யோனத்தான் தாவீதின்மீது சிநேகமாகவே இருக்கிறான். யோனத்தான் தாவீதைப் பார்ப்பதற்கு காட்டிற்கே வந்துவிடுகிறான். அவன் தாவீதின் கையை தேவனுக்குள் திடப்படுத்துகிறான். தாவீது நல்ல விசுவாசியாயிருந்தாலும், அவருக்கும் உதவி தேவைப்படுகிறது. தாவீதின் விசுவாசத்தில் சில குறைகள் காணப்படலாம். அந்தக் குறைகளையெல்லாம் சீர்படுத்தி, தாவீதை விசுவாசத்திலே திடப்படுத்துவதற்கு, அவருக்கு யோனத்தானைப்போல ஆவிக்குரிய சிநேகிதர்கள் தேவைப்படுகிறார்கள்.

தாவீதைப்போலவே விசுவாசிகளாகிய நமக்கும், ஆவிக்குரிய சிநேகிதர்கள் தேவைப்படுகிறார்கள். நாம் சோர்ந்துபோயிருக்கும் போது அவர்கள் நம்மை கர்த்தருக்குள் திடப்படுத்துவார்கள். நமக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். அவர்கள் நமக்கு கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்துவார்கள்.

யோனத்தான் தன்னுடைய சுயபலத்தினால் தாவீதுக்கு ஒரு உதவியும் செய்யமுடியாது. தாவீதை சவுலின் கைக்கு தப்புவிக்கச் செய்ய யோத்தானால் இயலாது. ஆனாலும் யோனத்தான் தன்னால் முடிந்ததை செய்கிறான். அவன் தாவீதின் கையை தேவனுக்குள் திடப்படுத்துகிறான். கர்த்தர் தாவீதைக் கைவிடமாட்டார் என்றும், தாவீது பயப்பட வேண்டாம் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உதவி செய்வார் என்றும் யோனத்தான் தாவீதுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

யோனத்தான் சுயநலத்தை விரும்பாத நல்ல சிநேகிதன். கர்த்தர் தாவீதை ஆசீர்வதிக்கிறார் என்பது யோனத்தானுக்கு தெரிந்திருக்கிறது. "நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்" என்று யோனத்தான் தாவீதிடம் சொல்லுகிறான். சவுலுக்கு பின்பு, அவருடைய குமாரனாகிய யோனத்தானே, இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருக்கவேண்டும். ஆனாலும் தாவீது இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பதை யோனத்தான் அங்கீகரிக்கிறான். தாவீது இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருக்கும்போது, "நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்" என்று யோனத்தான் சொல்லுகிறான்.

யோனத்தானுடைய மனதிலே தாவீதின்மேல் கோபமோ, பொறாமையோ இல்லை. தாவீதும் யோனத்தானும் ஏற்கெனவே தங்கள் சிநேகத்தை உடன்படிக்கைபண்ணி உறுதிபண்ணிக்கொண்டார்கள். இப்போது அவர்கள் இருவரும், மறுபடியும் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அதன் பின்பு தாவீது காட்டிலே இருந்துவிடுகிறார். யோனத்தானோ தன் வீட்டிற்குபோகிறான் (1சாமு 23:18).

உண்மையான சிநேகத்தை நாம் அவ்வப்போது புதுப்பித்துக்கொள்ளவேண்டும். நாம் கர்த்தரோடு உடன்படிக்கைபண்ணியிருக்கிறோம். நாம் கர்த்தரை நேசிக்கிறோம். நம்முடைய உடன்படிக்கையையும், நேசத்தையும், கர்த்தருக்குள் அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் கர்த்தருக்கும் நமக்கும் இடையிலுள்ள ஐக்கியம் உறுதியாயிருக்கும். தாவீதும் யோனத்தானும் இப்போது பிரிந்து போகிறார்கள். இதன் பின்பு அவர்கள் இருவரும் இந்தப் பூமியிலே ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. இதுவே அவர்களுக்கு கடைசி சந்திப்பு.

சீப் ஊரார்
1சாமு 23:19-29

1சாமு 23:19. பின்பு சீப் ஊரார் கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து: தாவீது எங்களிடத்தில் எஷிமோனுக்குத் தெற்கே ஆகிலா என்னும் மலைக்காட்டிலுள்ள அரணிப்பான இடங்களில் ஒளித்துக் கொண்டிருக்கிறான் அல்லவா?

1சாமு 23:20. இப்போதும் ராஜாவே, நீர் உம்முடைய மனவிருப்பத்தின்படி இறங்கி வாரும்; அவனை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்க, எங்களால் ஆகும் என்றார்கள்.

1சாமு 23:21. அதற்கு சவுல்: நீங்கள் என்மேல் தயை வைத்ததினாலே, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்களாக.

1சாமு 23:22. நீங்கள் போய், அவன் கால் நடமாடுகிற இடத்தைப் பார்த்து, அங்கே அவனைக் கண்டவன் யார் என்பதையும் இன்னும் நன்றாய் விசாரித்து அறியுங்கள்; அவன் மகா தந்திரவாதி என்று எனக்குத் தெரியவந்தது.

1சாமு 23:23. அவன் ஒளித்துக் கொண்டிருக்கும் எல்லா மறைவிடங்களையும் பார்த்தறிந்து கொண்டு, நிச்சய செய்தி எனக்குக் கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் உங்களோடே கூடவந்து, அவன் தேசத்தில் இருந்தால், யூதாவிலிருக்கிற சகல ஆயிரங்களுக்குள்ளும் அவனைத் தேடிப் போவேன் என்றான்.

1சாமு 23:24. அப்பொழுது அவர்கள் எழுந்து, சவுலுக்கு முன்னாலே சீப் ஊருக்குப் போனார்கள்; தாவீதும் அவன் மனுஷரும் எஷிமோனுக்குத் தெற்கான அந்தர வெளியாகிய மாகோன் வனாந்தரத்தில் இருந்தார்கள்.

1சாமு 23:25. சவுலும் அவன் மனுஷரும் தாவீதைத் தேடவருகிறார்கள் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் கன்மலையிலிருந்து இறங்கி, மாகோன் வனாந்தரத்திலே தங்கினான்; அதைச் சவுல் கேள்விப்பட்டு, மாகோன் வனாந்தரத்திலே தாவீதைப் பின்தொடர்ந்தான்.

1சாமு 23:26. சவுல் மலையின் இந்தப்பக்கத்திலும், தாவீதும் அவன் மனுஷரும் மலையின் அந்தப்பக்கத்திலும் நடந்தார்கள்; சவுலுக்குத் தப்பிப்போக, தாவீது தீவிரித்தபோது சவுலும் அவன் மனுஷரும் தாவீதையும் அவன் மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய் அவர்களை வளைந்துகொண்டார்கள்.

1சாமு 23:27. அந்தச் சமயத்தில் ஒரு ஆள் சவுலிடத்தில் வந்து: நீர் சீக்கிரமாய் வாரும்; பெலிஸ்தர் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்றான்.

1சாமு 23:28. அதனால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டுத் திரும்பி, பெலிஸ்தரை எதிர்க்கும்படி போனான்; ஆதலால் அவ்விடத்திற்குச் சேலா அம்மாலிகோத் என்று பேரிட்டார்கள்.

1சாமு 23:29. தாவீது அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, என்கேதியிலுள்ள அரணிப்பான இடங்களில் தங்கினான்.

தாவீதைக் காட்டிக்கொடுப்பதாக சீப் ஊரார் சவுலுக்கு சொல்லுகிறார்கள். அவர்கள் தாவீதுக்கு துரோகம்பண்ணுகிறார்கள். தாவீது சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருக்கிறார். சவுல் தன்னுடைய பிராணனை வாங்க தேடும்படிக்கு புறப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து தாவீது சீப் வனாந்தரத்திலுள்ள ஒரு காட்டிலே இருக்கிறார்.

தாவீது யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். சீப் ஊராரும் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தன்னுடைய கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதினால், அவர்கள் தனக்கு ஆதரவாயும், உதவியாயும் இருப்பார்கள் என்று தாவீது நினைக்கிறார். தாவீது தன்னுடைய நம்பிக்கையை சீப் ஊரார்மீது வைக்கிறார். ஆனால் சீப் ஊராரோ தாவீதுக்கு துரோகம்பண்ணுகிறார்கள். சவுல் தாவீதைப் பிடிப்பதற்கு சீப் ஊரார் சவுலுக்கு உதவிசெய்வதாக சொல்லுகிறார்கள்.

பின்பு சீப் ஊரார் கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து: "தாவீது எங்களிடத்தில் எஷிமோனுக்குத் தெற்கே ஆகிலா என்னும் மலைக்காட்டிலுள்ள அரணிப்பான இடங்களில் ஒளித்துக்கொண்டிருக்கிறான் அல்லவா? இப்போதும் ராஜாவே, நீர் உம்முடைய மனவிருப்பத்தின்படி இறங்கி வாரும்; அவனை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்க, எங்களால் ஆகும்" (1சாமு 23:19,20) என்று சொல்லுகிறார்கள். சவுல் தங்கள் ஊருக்கு வந்தால், தாவீதைப் பிடித்து, சவுலின் கையில் கொடுப்பதாகவும் சீப் ஊரார் வாக்குப்பண்ணுகிறார்கள்.

சீப் ஊரார் சொன்ன செய்தியை சவுல் அங்கீகரிக்கிறார். மிகவும் சந்தோஷப்படுகிறார். சவுல் சீப் ஊராரிடம், "நீங்கள் என்மேல் தயை வைத்ததினாலே, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்களாக" (1சாமு 23:21) என்று சொல்லுகிறார். சவுலுக்கே கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. ஆனால் சவுல் சீப் ஊராரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார்.

சீப் வனாந்தரத்திலே தாவீதைப் பிடிப்பதற்கு சவுல் திட்டமிடுகிறார். ஜனங்கள் தனக்கு சிறிய உதவிசெய்தாலும், சவுல் அதை மிகைப்படுத்தி பெரிதாக சொல்லுவார். சீப் ஊரார் சவுலுக்கு தாவீதின் இருப்பிடத்தை சொன்னார்கள். தாவீதைப் பிடிப்பதற்கு உதவி செய்வதாக சொன்னார்கள். சவுல் உடனே அவர்களிடம், "நீங்கள் என்மேல் தயை வைத்தீர்கள்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "மற்றவர்கள் யாரும் என்மீது தயை வைக்கவில்லை" என்றும், "நீங்கள் மாத்திரமே என்மீது தயை வைத்தீர்கள்" என்றும் பொருள்.

சீப் ஊரார் தன்னிடத்தில் தாவீதைப் பற்றிச் சொன்னவுடனே, சவுல் உடனே சீப் வனாந்தரதிற்கு புறப்பட்டுப்போகவில்லை. இது சற்று விநோதமாயிருக்கிறது. சவுல் எப்போதுமே அவசரப்பட்டு காரியங்களை செய்யக்கூடியவர். ஆனால் இப்போதோ சவுல் நிதானமாயிருக்கிறார்.

சவுல் சீப் ஊராரிடத்தில், "நீங்கள் போய், அவன் கால் நடமாடுகிற இடத்தைப் பார்த்து, அங்கே அவனைக் கண்டவன் யார் என்பதையும் இன்னும் நன்றாய் விசாரித்து அறியுங்கள்; அவன் மகா தந்திரவாதி என்று எனக்குத் தெரியவந்தது. அவன் ஒளித்துக் கொண்டிருக்கும் எல்லா மறைவிடங்களையும் பார்த்தறிந்து கொண்டு, நிச்சய செய்தி எனக்குக் கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் உங்களோடே கூடவந்து, அவன் தேசத்தில் இருந்தால், யூதாவிலிருக்கிற சகல ஆயிரங்களுக்குள்ளும் அவனைத் தேடிப் போவேன்" (1சாமு 23:22,23) என்று சொல்லுகிறார்.

சீப் ஊரார் சவுலின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்கிறார்கள். அப்பொழுது அவர்கள் எழுந்து, சவுலுக்கு முன்னாலே சீப் ஊருக்குப் போகிறார்கள்; தாவீதும் அவருடைய மனுஷரும் எஷிமோனுக்குத் தெற்கான அந்தர வெளியாகிய மாகோன் வனாந்தரத்தில் இருக்கிறார்கள் (1சாமு 23:24).

சவுலுக்கு வேவுகாரர் இருப்பதுபோல, தாவீதுக்கும் வேவுகாரர் இருக்கிறார்கள். சவுலும் அவன் மனுஷரும் தாவீதைத் தேடவருகிறார்கள் என்று தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது தாவீது கன்மலையிலிருந்து இறங்கி, மாகோன் வனாந்தரத்திலே தங்குகிறார்; அதைச் சவுல் கேள்விப்பட்டு, மாகோன் வனாந்தரத்திலே தாவீதைப் பின்தொடருகிறார் (1சாமு 23:25).

தாவீது இந்த சூழ்நிலையில் 54-ஆவது சங்கீதத்தை எழுதுகிறார். இந்த சங்கீதத்தின் தலைப்பில், "தாவீது தங்களிடத்தில் ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்று சீப்புரார் வந்து சவுலுக்குச் சொன்னபோது, நெகினோத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மஸ்கீல் என்னும் சங்கீதம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. தாவீது இந்த சங்கீதத்தில் சீப் ஊராரை, "அந்நியர்" என்று சொல்லுகிறார் (சங் 54:3). சீப் ஊரார் இஸ்ரவேல் புத்திரராயிருந்தாலும், அவர்கள் அந்நியரைப்போல தாவீதுக்கு தீங்கு செய்கிறார்கள்.

தாவீது தன்னுடைய சுயபலத்தையோ, சுயபராக்கிரமத்தையோ நம்பவில்லை. அவர் கர்த்தருடைய பாதுகாப்பையும் பராமரிப்பையும் நம்புகிறார். சவுல் தாவீதுக்கு நெருக்கமாக வந்துவிடுகிறார். சவுல் மலையின் இந்தப்பக்கத்திலும், தாவீதும் அவருடைய மனுஷரும் மலையின் அந்தப்பக்கத்திலும் நடக்கிறார்கள்; சவுலுக்குத் தப்பிப்போக, தாவீது தீ விரித்தபோது சவுலும் அவருடைய மனுஷரும் தாவீதையும் அவருடைய மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய் அவர்களை வளைந்துகொள்கிறார்கள் (1சாமு 23:26).

இந்த மலை தேவனுடைய பராமரிப்புக்கு அடையாளமாயிருக்கிறது. இது சவுலுக்கும் தாவீதுக்கும் நடுவிலிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வனாந்தரத்தின் வழியாய்ப் புறப்பட்டுப்போனார்கள். எகிப்தியர்கள் இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்து வந்தார்கள். அப்போது கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பம், இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் நடுவில் வந்து நின்றது. அதுபோலவே இப்போது மாகோன் வனாந்தரத்திலுள்ள மலை சவுலுக்கும் தாவீதுக்கும் நடுவிலிருக்கிறது.

சவுலோடுகூட ஏராளமான மனுஷர் இருக்கிறார்கள். இந்த முறை தாவீதை எளிதாகப் பிடித்துவிடலாம் என்று சவுல் நம்பிக்கையோடிருக்கிறார். சவுலும் அவருடைய மனுஷரும், தாவீதையும் அவருடைய மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய் அவர்களை வளைந்துகொள்கிறார்கள். ஆனால் சவுலின் திட்டம் நிறைவேறவில்லை. கர்த்தர் தாவீதை இந்த மலையிலே சவுலின் கைக்கு அற்புதமாய் தப்புவிக்கச் செய்து பாதுகாக்கிறார். ஆதலால் தாவீதும், அவருடைய மனுஷரும் இந்த மலைக்கு "சேலாஅம்மாலிகோத்" என்று பேரிடுகிறார்கள். இந்தப்பெயருக்கு "பிரிக்கும் மலை" என்று பொருள். ஏனென்றால் இந்த மலை சவுலையும் தாவீதையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது.

சவுலும் அவருடைய மனுஷரும், தாவீதையும் அவருடைய மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய், அவர்களுக்கு அருகாமையில் வந்துவிடுகிறார்கள். அவர்களை வளைந்து கொள்கிறார்கள். கர்த்தரோ தாவீதுக்கு அற்புதமாய் உதவி செய்கிறார். அந்தச் சமயத்தில் ஒரு ஆள் சவுலிடத்தில் வந்து: "நீர் சீக்கிரமாய் வாரும்; பெலிஸ்தர் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள்" (1சாமு 23:27) என்று சொல்லுகிறான். அதனால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டுத் திரும்பி, பெலிஸ்தரை எதிர்க்கும்படி போகிறார் (1சாமு 23:28).

சவுலுக்கு அந்த இடத்தைவிட்டு உடனே போவதைத் தவிர வேறு வழியில்லை. உடனே போகவில்லையென்றால் பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்தைப் பிடித்துக்கொள்வார்கள். சவுலுக்கு இஸ்ரவேல் ராஜ்யம் கிடைக்காது. பெலிஸ்தர் சவுலைப் பிடித்து கொன்றுபோடுவார்கள். இப்போது சவுலுக்கு தாவீதின் ஜீவனைவிட, தன்னுடைய ஜீவனும், தன்னுடைய ராஜ்யமும் பெரிதாய்த் தெரிகிறது. ஆகையினால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டுவிடுகிறார். பெலிஸ்தரை எதிர்க்கும்படி அவ்விடத்திலிருந்து திரும்பிப்போகிறார். தாவீது சவுலின் கைக்கு தப்பிக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டு திரும்பிப்போனார். ஆனால் அவருடைய மனம் மாறவில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்து சவுலோ கர்த்தருடைய பரிசுத்தவான்களை பிடிப்பதற்காக போனார். ஆனால் இந்த சவுல் மனந்திரும்பினார்.

"சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்" (அப் 9:1,2).

தாவீது சவுலின் கைக்கு தப்பித்துக்கொள்கிறார். அதன்பின்பு அவர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, என்கேதியிலுள்ள அரணிப்பான இடங்களில் தங்குகிறார் (1சாமு 23:29).

24 அதிகாரம்

சவுலை அழித்துப்போட தாவீதுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் தாவீதோ சவுலை அழித்துப்போடாமல் தன்னுடைய நற்குணத்தை வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபை தாவீதின்மேல் தங்கியிருக்கிறது. சவுல் தாவீதை அழித்துப்போட வகை தேடுகிறார். தாவீதோ தன்னுடைய பாதுகாப்புக்கும் பராமரிக்கும் கர்த்தரையே நம்புகிறார்.

சவுல் தாவீதையும் அவருடைய மனுஷரையும் தேடிப்போகிறார். தாவீதைக் கொன்றுபோடவேண்டும் என்பதே சவுலின் திட்டம் (1சாமு 24:1,2). சவுலைக் கொன்றுபோட தாவீதுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் தாவீதுக்கு சவுலைக் கொன்றுபோட மனதில்லை. தாவீது சவுலின் சால்வை தொங்கலை அறுத்துக்கொள்கிறார் (1சாமு 24:3-8).

தாவீது சவுலோடு கனிவான வார்த்தைகளைப் பேசுகிறார் (1சாமு 24:9-15). சவுலும் இந்த சூழ்நிலையில் தாவீதோடு சமாதானமான வார்த்தைகளைப் பேசுகிறார் (1சாமு 24:16-22).

சவுலும் தாவீதும்
1சாமு 24:1-8

1சாமு 24:1. சவுல் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்து திரும்பிவந்தபோது, இதோ, தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.

1சாமு 24:2. அப்பொழுது சவுல்: இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவன் மனுஷரையும் வரையாடுகளுள்ள கன்மலைகளின்மேல் தேடப்போனான்.

1சாமு 24:3. வழியோரத்திலிருக்கிற ஆட்டுத் தொழுவங்களிடத்தில் அவன் வந்தபோது, அங்கே ஒரு கெபி இருந்தது; அதிலே சவுல் மலஜலாதிக்குப் போனான்; தாவீதும் அவன் மனுஷரும் அந்தக் கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருந்தார்கள்.

1சாமு 24:4. அப்பொழுது தாவீதின் மனுஷர் அவனை நோக்கி: இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே என்றார்கள்; தாவீது எழுந்திருந்துபோய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான்.

1சாமு 24:5. தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக்கொண்டிருந்தது.

1சாமு 24:6. அவன் தன் மனுஷரைப் பார்த்து: கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று சொல்லி,

1சாமு 24:7. தன் மனுஷரைச் சவுலின்மேல் எழும்பவொட்டாமல், இவ்வார்த்தைகளினால் அவர்களைத் தடைபண்ணினான்; சவுல் எழுந்திருந்து, கெபியைவிட்டு, வழியே நடந்துபோனான்.

1சாமு 24:8. அப்பொழுது தாவீதும் எழுந்து, கெபியிலிருந்து புறப்பட்டு, சவுலுக்குப் பின்னாகப் போய்: ராஜாவாகிய என் ஆண்டவனே என்று கூப்பிட்டான்; சவுல் திரும்பிப்பார்த்தபோது, தாவீது தரைமட்டும் முகங்குனித்து வணங்கி,

சவுல் தாவீதைத் தொடர்ந்துபோய் அவரை பிடிக்கும் முயற்சியை புதுப்பிக்கிறார். தாவீது மாகோன் வனாந்தரத்தின் மலையிலிருந்தபோது, சவுலும் அவருடைய மனுஷரும், தாவீதையும் அவருடைய மனுஷரையும் பிடிக்கத்தாய் வளைந்து கொண்டார்கள். அந்த சமயத்தில் பெலிஸ்தர் இஸ்ரவேல் தேசத்தின்மேல் படையெடுத்து வந்தார்கள். இதன் நிமித்தம் சவுல் தாவீதைப் பிடிக்காமல் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோனார். பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். சவுல் பெலிஸ்தரை இஸ்ரவேல் தேசத்திலிருந்து துரத்திவிட்டு, தன்னுடைய ஊருக்கு திரும்பி வருகிறார்.

சவுல் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினாலும், தாவீதைப் பிடிக்கவேண்டும் என்னும் எண்ணமே அவருடைய மனதில் பிரதானமாயிருக்கிறது. இதற்காக சவுல் அங்கங்கே வேவுகாரரை வைத்திருக்கிறார். தாவீது என்கேதியின் வனாந்தரத்திலிருக்கிறார் என்று, சவுலின் வேவுகாரர் அவருக்கு அறிவிக்கிறார்கள் (1சாமு 24:1).

அப்பொழுது சவுல் இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவருடைய மனுஷரையும் வரையாடுகளுள்ள கன்மலைகளின்மேல் தேடப்போகிறார் (1சாமு 24:2).

சவுல் வழியோரத்திலிருக்கிற ஆட்டுத் தொழுவங்களிடத்தில் வந்தபோது, அங்கே ஒரு கெபி இருக்கிறது; அதிலே சவுல் மலஜலாதிக்குப் போகிறார்; தாவீதும் அவருடைய மனுஷரும் அந்தக் கெபியின் பக்கங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள் (1சாமு 24:3).

தாவீதும் அவருடைய மனுஷரும் எந்தக் கெபியில் ஒளிந்திருக்கிறார்களோ, அந்தக் கெபிக்கு சவுலும் போகிறார். அவர் தனியாகப் போகிறார். இதுவும் தேவனுடைய வழிநடத்துதலாயிருக்கிறது. இக்காலத்தில் என்கேதியிலுள்ள பகுதியிலே இதைப்போன்ற பெரிய கெபிகள் ஏராளமாயிருந்தது. இவை மலைகளுக்குள்ளும், கற்பாறைகளுக்குள்ளும் இயற்கையாக அமைந்திருக்கிறது. அந்த தேசத்து ஜனங்கள், இயற்கையான இந்தக் கெபியிலே சில கட்டுமான வேலைகளை செய்து, ஆடுகள் தங்குவதற்கும், மேய்ப்பர்கள் தங்குவதற்கும் இதை பயன்படுத்திக்கொள்வார்கள்.

என்கேதியின் வனாந்தரம் பாலைவனம் போல இருக்கும். அங்கே சூரிய உஷ்ணம் மிகவும் அதிகமாயிருக்கும். மேய்ப்பருக்கும் ஆடுகளுக்கும் வெயிலுக்கு ஒதுங்க நிழல் வேண்டும். அவர்கள் நிழலுக்காக இந்தப் கெபிகளைப் பயன்படுத்திக்கொள்வார்கள். அப்படிப்பட்ட ஒரு கெபியிலே, தாவீதும் அவருடைய மனுஷரும் தங்களை ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தாவீதும் அவருடைய மனுஷரும் இருந்த அதே கெபிக்கு சவுலும் போகிறார். அவர் மலஜலாதிக்குப்போகிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது. "மலஜலாதி" என்னும் வார்த்தைக்கு "காலை மூடுதல் அல்லது பாதத்தை மூடுதல்" என்று பொருள். இந்த வார்த்தைக்கு, "சற்று நேரம் படுத்து உறங்குதல்" அல்லது "சற்று நேரம் உட்கார்ந்துகொண்டே உறங்கி இளைப்பாறுதல்" என்றும் பொருள் சொல்லலாம். சவுல் இந்தக் கெபியிலே தனியாக தூங்கிக்கொண்டிருக்கிறார். இதே கெபியில் தாவீதும் அவருடைய மனுஷரும் இதே கெபியிலே தங்களை ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சவுல் இந்த கெபிக்கு வந்ததையும், அவர் இந்தக் கெபிக்குள்ளே படுத்து உறங்குவதையும் தாவீதின் மனுஷர் பார்க்கிறார்கள். அப்பொழுது தாவீதின் மனுஷர் அவரை நோக்கி: "இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே" (1சாமு 24:4) என்று சொல்லுகிறார்கள்.

தாவீதின் மனுஷர் சவுலைக் கொன்றுபோடுமாறு தாவீதுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். ஆனால் தாவீதோ சவுலைக் கொன்றுபோடவில்லை. சவுலைக் கொல்லவேண்டும் என்பது தாவீதின் விருப்பமல்ல. சவுல் தன்னைக் கொல்லக்கூடாது என்பதும், அவர் தன்னைக் கொல்ல வந்தால், அவருடைய கைக்கு தப்பித்துக்கொள்ளவேண்டும் என்பதுமே தாவீதின் விருப்பமாயிருக்கிறது.

தாவீது எழுந்திருந்துபோய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொள்கிறார். தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவருடைய மனது அடித்துக்கொண்டிருக்கிறது (1சாமு 24:4,5).

சவுல் என்கேதியிலுள்ள குகையிலே தனியாக இருக்கும்போது, அவருடைய ஜீவன் தாவீதின் கையிலிருக்கிறது. தாவீது விரும்பினால் சவுலை எளிதாக கொன்றுபோட முடியும். தாவீதின் மனுஷரும், சவுலைக் கொன்றுபோடுமாறு, அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். அவர்கள் தாவீதிடம் பேசும்போது, "இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே" (1சாமு 24:4) சொல்லுகிறார்கள்.

கர்த்தர் ஒருபோதும் சவுலை தாவீதின் கையில் ஒப்புக்கொடுப்பதாக வாக்குப்பண்ணவில்லை. தாவீதின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தையை தப்பிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். கர்த்தர் தாவீதை அவருடைய சத்துருவின் கைக்கு விடுவிப்பதாகத்தான் வாக்குப்பண்ணினார். ஆனால் தாவீதின் மனுஷரோ சவுலைக் கொன்றுபோடுமாறு தாவீதுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

சவுல் என்கேதியிலுள்ள குகையிலே தனிமையிலிருக்கிறார். தாவீதோ, தன் மனுஷரோடு அதே குகையில் உட்கார்ந்திருக்கிறார். இந்த சூழ்நிலையில் தாவீது சவுலை எளிதாகக் கொன்றுபோடலாம். தாவீதிடம் சவுலைக் கொன்றுபோடக்கூடிய வல்லமையும் இருக்கிறது. ஆகையினால், தாவீது இப்போது, சவுலைக் கொன்றுபோடுவது நியாயமான செயல் என்று, தாவீதின் மனுஷர் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

சவுலைக் கொல்லவேண்டுமா அல்லது கொல்லக்கூடாதா என்று தாவீதுக்கு குழப்பம் வருகிறது. சவுலைக் கொன்றுபோடுமாறு தாவீதின் மனுஷரும் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். ஆனால் தாவீதுக்கோ சவுலைக் கொன்றுபோட மனதில்லை. தாவீது எழுந்திருந்துபோய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெல்ல அறுத்துக்கொள்கிறார். சவுல் இப்போது உறங்கிக்கொண்டிருக்கிறார். தாவீது அங்கே வந்ததும், அவர் சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்டதும் சவுலுக்கு தெரியவில்லை.

சவுலுடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்ட தாவீதால், சவுலைக் கொன்றுபோடவும் முடியும். ஆனால் சவுலைக் கொல்லுவது கர்த்தருடைய சித்தமல்ல என்று தாவீது தன்னுடைய இருதயத்திலே உணருகிறார். சவுலுடைய சால்வை அவருடைய ராஜரீகத்திற்கும், கண்ணியத்திற்கும், ராஜமரியாதைக்கும் அடையாளமாயிருக்கிறது. தாவீது சவுலுடைய சால்வையின் தொங்கலை அறுத்தது, சவுலுடைய கண்ணியத்தையும், ராஜமரியாதையையும் அறுத்துக்கொண்டதற்கு சமம்.

தாவீது தன் மனுஷரைப் பார்த்து: "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" (1சாமு 24:6) என்று சொல்லுகிறார்.

தாவீது சவுலைக் கொல்லாவிட்டாலும், அவருடைய மனுஷரால் சும்மாயிருக்க முடியவில்லை. தாவீதின் மனுஷர் சவுலைக் கொன்றுபோட எழும்புகிறார்கள். தாவீதோ தன் மனுஷரைச் சவுலின்மேல் எழும்பஒட்டாமல், தன்னுடைய வார்த்தைகளினால் அவர்களைத் தடைபண்ணுகிறார் (1சாமு 24:7).

சவுலைக் கொல்லக்கூடாது என்பதில் தாவீது உறுதியாயிருக்கிறார். கர்த்தர் அபிஷேகம்பண்ணின மனுஷனை கொல்லக்கூடாது என்பது தாவீதின் தீர்மானம். தாவீது சவுலைப் பார்க்கும்போது, அவரைத் தன்னுடைய சத்துருவாகப் பார்க்கவில்லை. தாவீது சவுலை கர்த்தரால் அபிஷேகம்பண்ணின மனுஷராகப் பார்க்கிறார். சவுல் உயிரோடிருக்கும் வரையிலும் அவர் இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யவேண்டும். இது தேவனுடைய தீர்மானம்.

சாமுவேல் கர்த்தருடைய நாமத்தினால், சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும், தேவனுடைய தெய்வீக சித்தத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிந்து, தங்கள் ராஜாவைப் பாதுகாக்கவேண்டும். கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்ட ராஜாவைக் கொன்றுபோடக்கூடாது.

தாவீது கர்த்தருடைய தீர்மானத்தையும், கர்த்தர் சவுலை ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருப்பதையும், தன்னுடைய மனுஷருக்கு எடுத்துச் சொல்லுகிறார். தேவனுடைய தெய்வீக கட்டளைக்கு தாங்கள் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும் என்று தாவீது தன் மனுஷருக்கு உபதேசம் பண்ணுகிறார். தாவீதின் மனுஷர் சவுலைக் கொன்றுபோட எழும்பினாலும், தாவீது அவர்களை சவுலின்மேல் எழும்ப ஒட்டாமல் தடைபண்ணுகிறார். தாவீது தன் மனுஷர்மீது தன்னுடைய பலத்தையோ, அதிகாரத்தையோ பயன்படுத்தாமல், தன்னுடைய வார்த்தைகளினால் அவர்களை சவுலின்மேல் எழும்ப ஒட்டாமல் தடைபண்ணுகிறார் (1சாமு 24:7).

தாவீது தனக்கு விரோதமாகத் தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்கு இப்படிப்பட்ட வார்த்தைகளையே உபதேசம்பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிற தாவீது, கிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்படிகிறார். தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களையும், தன்னைக் கொல்ல வகைதேடுகிறவர்களையும் தாவீது நேசிக்கிறார், அவர்களுடைய ஜீவனைப் பாதுகாக்கிறார். தாவீதின் இந்த நல்ல சுபாவம், விசுவாசிகளாகிய நம் எல்லோருக்கும், நல்ல எடுத்துக்காட்டாகவும், நல்ல முன்மாதிரியாகவும் இருக்கிறது.

சவுல் எழுந்திருந்து, கெபியைவிட்டு, வழியே நடந்துபோகிறார். அப்பொழுது தாவீதும் எழுந்து, கெபியிலிருந்து புறப்பட்டு, சவுலுக்குப் பின்னாகப் போகிறார் (1சாமு 24:7,8). சவுலைக் கொன்றுபோட தனக்கு வாய்ப்பு கிடைத்தாலும், தாவீது அதைப் பயன்படுத்தவில்லை. ஆனாலும் சவுலுக்கு தன்மீதுள்ள கோபத்தையும் விரோதத்தையும், பொறாமையையும் அழித்துப்போட வேண்டுமென்று தாவீது விரும்புகிறார். அதற்கான வாய்ப்பை பயன்படுத்துகிறார்.

தாவீது சவுலுக்குப் பின்னாகப் போய், "ராஜாவாகிய என் ஆண்டவனே" என்று கூப்பிடுகிறார். தாவீதின் சத்தத்தைக் கேட்டு சவுல் திரும்பிப் பார்க்கிறார். அப்போது தாவீது சவுலுக்கு முன்பாக தரைமட்டும் முகங்குனிந்து அவரை வணங்குகிறார். சவுலுக்கு தன்மீதுள்ள பகையை நீக்கிப்போடவேண்டும் என்பதற்காக தாவீது ஞானமுள்ள காரியங்களை செய்கிறார். சவுலைக் கொன்றுபோடுவது தன்னுடைய நோக்கமல்ல என்பதை தாவீது அவருக்கு உணர்த்துகிறார்.

தாவீது சவுல்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார். அவர் சவுலுக்கு பின்னாகப்போய், அவரைக் கூப்பிடும்போது, "ராஜாவாகிய என் ஆண்டவனே" என்று மரியாதையோடு கூப்பிடுகிறார். தாவீதின் வார்த்தையில் சவுல்மீது மதிப்பும், மரியாதையும் இருப்பதுபோல, அவருடைய செய்கையிலும் மரியாதை இருக்கிறது. தாவீது சவுலுக்கு தரைமட்டும் முகங்குனிந்து அவரை வணங்குகிறார். தன்னுடைய ராஜாவுக்கு கொடுக்க வேண்டிய பரிபூரணமான மரியாதையை, தாவீது சவுலுக்கு கொடுக்கிறார்.

தாவீதின் கனிவான வார்த்தைகள்

1சாமு 24:9-15

1சாமு 24:9. சவுலை நோக்கி: தாவீது உமக்குப் பொல்லாப்புச் செய்யப்பார்க்கிறான் என்று சொல்லுகிற மனுஷருடைய வார்த்தைகளை ஏன் கேட்கிறீர்?

1சாமு 24:10. இதோ, கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை இன்றையதினம் உம்முடைய கண்கள் கண்டதே, உம்மைக் கொன்றுபோடவேண்டும் என்று சிலர் சொன்னார்கள்; ஆனாலும் என் கை உம்மைத் தப்பவிட்டது; என் ஆண்டவன் மேல் என் கையைப் போடேன்; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவராமே என்றேன்.

1சாமு 24:11. என் தகப்பனே பாரும்; என் கையிலிருக்கிற உம்முடைய சால்வையின் தொங்கலைப் பாரும்; உம்மைக் கொன்றுபோடாமல், உம்முடைய சால்வையின் தொங்கலை அறுத்துக் கொண்டேன்; என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும், உமக்கு நான் குற்றம் செய்யவில்லை என்றும் அறிந்துகொள்ளும்; நீரோ என் பிராணனை வாங்க, அதை வேட்டையாடுகிறீர்.

1சாமு 24:12. கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக; உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை.

1சாமு 24:13. முதியோர் மொழிப்படியே, ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும்; ஆகையால் உம்முடையபேரில் நான் கை போடுவதில்லை.

1சாமு 24:14. இஸ்ரவேலின் ராஜா யாரைத் தேடப்புறப்பட்டார்? ஒரு செத்த நாயையா, ஒரு தெள்ளுப்பூச்சியையா, நீர் யாரைப் பின்தொடருகிறீர்?

1சாமு 24:15. கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து, எனக்காக வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை விடுவிப்பாராக என்றான்.

தாவீது சவுலோடு மரியாதையான வார்த்தைகளையும், பணிவான வார்த்தைகளையும் பேசுகிறார். சவுல் தன்மீது கோபப்படுகிறார் என்பதும், பொறாமைப்படுகிறார் என்பதும் தாவீதுக்கு தெரியும். தாவீது சவுலோடு ஒப்புரவாக விரும்புகிறார்.

சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். தாவீதின் பார்வையிலே சவுல் ஒரு ராஜாவாக மாத்திரமல்ல அவர் ஒரு தகப்பனைப்போலவும் இருக்கிறார். "ராஜாவாகிய என் ஆண்டவனே" என்னும் வார்த்தைக்கு, "ராஜாவாகிய என் தகப்பனே" என்றும் பொருள் சொல்லலாம். தாவீது சவுலின் மருமகன். ஆனால் இப்போது தாவீதின் பார்வைக்கு, சவுல் அவருடைய தகப்பனாகத் தெரிகிறார். தன்னுடைய தேசத்திற்கு சவுல் தகப்பனாராயிருக்கிறார் என்பதை தாவீது அங்கீகரிக்கிறார்.

ராஜாவுக்கு ஆலோசனை சொல்ல ஆலோசனைக்காரர்கள் இருப்பார்கள். அவர்கள் ராஜாவுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லவேண்டும். ஆனால் சவுலின் ஆலோசனைக்காரரோ பொல்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சவுலுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லாமல், துராலோசனைகளைச் சொல்லுகிறார்கள். சவுல் அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்கிறார்.

தாவீது "சவுலுக்கு பொல்லாப்பு செய்ய பார்க்கிறார்" என்று சவுலின் ஆலோசனைக்காரர் அவருக்கு சொல்லுகிறார்கள். தாவீது சவுலை நோக்கி, "தாவீது உமக்குப் பொல்லாப்புச் செய்யப்பார்க்கிறான் என்று சொல்லுகிற மனுஷருடைய வார்த்தைகளை ஏன் கேட்கிறீர்?" *(1சாமு 24:9)* என்று கேட்கிறார்.

தாவீது சவுலிடம் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை" (1சாமு 24:11) என்று தெளிவாகச் சொல்லுகிறார். தாவீது இதுவரையிலும் சவுலுக்கு ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆனாலும் "தாவீது உமக்கு பொல்லாப்பு செய்ய பார்க்கிறார்" என்று சவுலின் மனுஷர் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். சவுலும் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு தாவீதின்மீது கோபமும் பொறாமையும் படுகிறார். தாவீதைக் கொல்லுவதற்கு முயற்சி செய்கிறார்.

தாவீது இந்த சூழ்நிலையில் ஏழாவது சங்கீதத்தை எழுதியிருக்கவேண்டும். இந்த சங்கீதத்திற்கு "பென்யமீனியனாகிய கூஷ் என்பவனுடைய வார்த்தைகளினிமித்தம் தாவீது கர்த்தரை நோக்கிப்பாடின சிகாயோன் என்னும் சங்கீதம்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த தலைப்பில், "பென்யமீனியனாகிய கூஷ்" என்னும் வாக்கியம் சவுலைக் குறிக்கும்.

சவுல் தப்பிதமான ஆதாரத்தின் பேரில், தாவீதின்மேல் கோபமாயிருக்கிறார். சவுலுக்கு பொல்லாப்பு செய்யவேண்டும் என்னும் எண்ணம் தாவீதினிடத்தில் சிறிதுமில்லை. தன்னுடைய வார்த்தையை தாவீது சவுலுக்கு உறுதிபண்ணுகிறார்.

தாவீது சவுலை நோக்கி "இதோ, கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை இன்றையதினம் உம்முடைய கண்கள் கண்டதே, உம்மைக் கொன்றுபோடவேண்டும் என்று சிலர் சொன்னார்கள்; ஆனாலும் என் கை உம்மைத் தப்பவிட்டது; என் ஆண்டவன் மேல் என் கையைப் போடேன்; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவராமே என்றேன்" (1சாமு 24:10) என்று சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய வார்த்தையை உறுதிபண்ணும்விதமாக, சவுலுடைய சால்வையின் தொங்கலை அவருக்கு காண்பிக்கிறார். தாவீது சவுலை நோக்கி, "என் தகப்பனே பாரும்; என் கையிலிருக்கிற உம்முடைய சால்வையின் தொங்கலைப் பாரும்; உம்மைக் கொன்றுபோடாமல், உம்முடைய சால்வையின் தொங்கலை அறுத்துக் கொண்டேன்" (1சாமு 24:11) என்று சொல்லுகிறார்.

இன்றையதினம் சவுலின் ஜீவன் தாவீதின் கையிலிருக்கிறது. "கர்த்தர் இன்று கெபியில் சவுலை தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்தார்" என்று தாவீதின் மனுஷர் அவருக்கு சொன்னார்கள். ஆனால் தாவீதோ சவுலைக் கொன்றுபோட மறுத்துவிட்டார். தாவீதின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். தாவீது கர்த்தருக்குப் பயப்படுகிறவர்.

சவுலைக் கொன்றுபோடுவதற்கு தாவீதுக்கு வாய்ப்பு கிடைத்தாலும், தாவீது அந்த வாய்ப்பை பயன்படுத்தவில்லை. தாவீது சவுலைக் கொன்றுபோட மறுத்துவிடுகிறார். தாவீதின் மனதிலே கர்த்தருடைய வார்த்தை இருக்கிறது. தாவீது தன் ஜீவனைவிட கர்த்தருடைய கட்டளைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். சவுல் தாவீதைக் கொன்றுபோட முயற்சி செய்தாலும், சவுலைக் கொன்றுபோடவேண்டும் என்பது தாவீதின் நோக்கமல்ல.

தாவீது சவுலிடம் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும், உமக்கு நான் குற்றம் செய்யவில்லை என்றும் அறிந்துகொள்ளும்" (1சாமு 24:11) என்று சொல்லுகிறார். ஆனாலும் சவுல் தன்னுடைய பிராணனை வாங்கத் தேடுகிறார் என்பதை தாவீது அவருக்கு உணர்த்துகிறார். தாவீது சவுலை நோக்கி "நீரோ என் பிராணனை வாங்க, அதை வேட்டையாடுகிறீர்" என்று சொல்லுகிறார்.

தாவீது சவுலை இப்போது கொன்றுபோடாமல் தப்பவிட்டதுபோல, எப்போதுமே அவரை கொன்றுபோடப்போவதில்லை என்று, தாவீது சவுலுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறார். "உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை" (1சாமு 24:12) என்று தாவீது தன்னுடைய வார்த்தையை கர்த்தருடைய நாமத்தினால் சாட்சியாய்ச் சொல்லுகிறார். "கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக" (1சாமு 24:12) என்றும் தாவீது சவுலிடம் கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்.

துன்மார்க்கர் பொல்லாத காரியங்களை செய்வார்கள். அவர்களுடைய மனதில் பொல்லாப்பு நிரம்பியிருக்கும். ஆகையினால் அவர்களுடைய சிந்தனையும், செயலும் பொல்லாததாயிருக்கிறது. தாவீது ஒரு நீதிமான். அவர் சவுலுக்கு இதுவரையிலும் ஒரு பொல்லாப்பும் செய்ததில்லை. தான் இனிமேல் அவருக்கு பொல்லாப்பு செய்யப்போவதில்லை என்றும் தாவீது உறுதியாய்ச் சொல்லுகிறார்.

தாவீது நீதிமானாயிருந்தாலும், சவுல் துன்மார்க்கனாயிருக்கிறார். சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். ஆனால் இப்போது கர்த்தருடைய அபிஷேகம் சவுலை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சவுல் கர்த்தரைவிட்டு விலகிப்போனார். கர்த்தரும் சவுலை விட்டு விலகிப்போய்விடுகிறார்.

தாவீதின் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை. ஆகையினால் "உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை" (1சாமு 24:12) என்று தாவீது சவுலுக்கு சொல்லுகிறார். இதே வாக்கியத்தை தாவீது சவுலுக்கு திரும்பவும் சொல்லி, தன்னுடைய வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார். "முதியோர் மொழிப்படியே, ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும்; ஆகையால் உம்முடையபேரில் நான் கை போடுவதில்லை" (1சாமு 24:13) என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது சவுலின் பேரில் கைபோடுவதில்லை என்று உறுதியாய்ச் சொன்னாலும், சவுலோ தாவீதின் பிராணனை வாங்க, அதை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார். சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. தாவீதோ இஸ்ரவேல் தேசத்தில் ஒரு சாதாரண மனுஷன். ஆனாலும் சவுல் தாவீதின் பிராணனை வாங்க தேடுகிறார்.

தாவீதைக் கொல்ல நினைப்பது, சவுல் ராஜாவின் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றதல்ல. ஒரு தேசத்தின் ராஜாவாயிருக்கிறவர், இதுபோன்ற சாதாரண காரியத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது. தாவீது சவுலின் தப்பிதத்தை அவருக்கு உணர்த்துகிறார். இஸ்ரவேலின் ராஜா யாரைத் தேடப்புறப்பட்டார்? ஒரு செத்த நாயையா, ஒரு தெள்ளுப்பூச்சியையா, நீர் யாரைப் பின்தொடருகிறீர்? (1சாமு 24:14) என்று தாவீது சவுலிடம் கேட்கிறார்.

சவுலோடுகூடஇஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேர் இருக்கிறார்கள் (1சாமு 24:2). இவர்கள் எல்லோருமே சேர்ந்து, ஒரு அந்நிய தேசத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகலாம். ஆனால் இவர்களோ தாவீது என்னும் ஒரு மனுஷனை தேடுகிறார்கள். தாவீது தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னை ஒரு செத்தநாய் என்றும், ஒரு தெள்ளுப்பூச்சி என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாகிய சவுலும், என்கேதியின் வனாந்தரத்தில் தன் ஜீவனைக் காத்துக்கொள்ள ஒளிந்திருக்கும் தாவீதும் சரிசமமானவர்களல்ல. தாவீது சவுலின் வேலைக்காரர். அவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தவர். இப்போது தன் உயிரைக் காத்துக்கொள்ள என்கேதியின் வனாந்தரத்திலிருக்கிறார். தாவீதால் சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. சவுலிடத்தில் இருப்பதுபோல, தாவீதிடத்தில் பெரிய சேனை இல்லை. சவுலைக் கொல்லவேண்டும் என்னும் எண்ணமும் தாவீதிடத்தில் இல்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், சவுல் தாவீதைப் பின்தொடருவது, இஸ்ரவேலின் ராஜா ஒரு செத்த நாயையோ அல்லது ஒரு தெள்ளுப்பூச்சியையோ பின்தொடருவதற்கு சமமாயிருக்கிறது. ஒரு தெள்ளுப்பூச்சியை பின்தொடர்ந்து பிடிப்பதினால், சவுலுக்கு ஒரு மேன்மையும் உண்டாகப்போவதில்லை. ஒரு செத்தநாயை தேடி கண்டுபிடித்து, அதை மறுபடியும் கொல்லுவதினால், சவுலுக்கு ஒரு மகிமையும் உண்டாகப்போவதில்லை. ஒரு செத்தநாயைப் பின்தொடருவதும், ஒரு தெள்ளுப்பூச்சியைப் பின்தொடருவதும் ஒரு தேசத்தின் ராஜாவுக்கு மேன்மையாயிருக்காது.

தாவீது சவுலிடம் பேசும்போது, "கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக" (1சாமு 24:12) என்று சொன்னார். இப்போது மறுபடியுமாக கர்த்தரே தன்னுடைய வழக்கை நியாயந்தீர்க்கவேண்டும் என்று தாவீது சொல்லுகிறார். தாவீது சவுலை நோக்கி, "கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து, எனக்காக வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை விடுவிப்பாராக" (1சாமு 24:15) என்று சொல்லுகிறார்.

தாவீது கர்த்தரை நம்புகிறார். கர்த்தர் தாமே தன்னுடைய வழக்கில், சவுலுக்கு நீதியைச் சரிக்கட்டுவார் என்றும், அவரே தனக்காக வழக்காடி, தனக்கும் சவுலுக்கும் நியாயந்தீர்ப்பார் என்றும் தாவீது கர்த்தரை நம்புகிறார். கர்த்தர் தன்னை சவுலின் கைக்கு தப்புவிப்பார் என்றும், விடுவிப்பார் என்றும் தாவீது கர்த்தர்மீது முழுநம்பிக்கையோடிருக்கிறார்.

சவுலின் பணிவான வார்த்தைகள் 1சாமு 24:16-22

1சாமு 24:16. தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லி முடித்தபின்பு, சவுல்: என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா என்று சொல்லி, சத்தமிட்டு அழுது,

1சாமு 24:17. தாவீதைப் பார்த்து: நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமைசெய்தேன்.

1சாமு 24:18. நீ எனக்கு நன்மைசெய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்றுபோடவில்லை.

1சாமு 24:19. ஒருவன் தன் மாற்றானைக் கண்டுபிடித்தால், அவனைச் சுகமே போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காகக் கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக.

1சாமு 24:20. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்.

1சாமு 24:21. இப்போதும் நீ எனக்குப் பின்னிருக்கும் என் சந்ததியை வேரறுப்பதில்லை என்றும், என் தகப்பன் வீட்டாரில் என் பெயரை அழித்துப்போடுவதில்லை என்றும் கர்த்தர்மேல் எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்.

1சாமு 24:22. அப்பொழுது தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான்; பின்பு, சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப்போனான்; தாவீதும் அவன் மனுஷரும் அரணிப்பான இடத்திற்கு ஏறிப்போனார்கள்.

தாவீது இதுவரையிலும் சொன்ன வார்த்தைகளை சவுல் செவிகொடுத்து கேட்டுக்கொண்டிருக்கிறார். தாவீதின் வார்த்தைகளில் பணிவும், அன்பும், ஆதரவும் இருக்கிறது. தாவீது தன்னுடைய வார்த்தைகளினாலும், செய்கைகளினாலும் சவுலுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார். தாவீதின் கனிவான வார்த்தைகளையும், அவருடைய பணிவான செய்கைகளையும் கேட்டு, பார்த்து, சவுல் கண்ணீர் விட்டு அழுகிறார்.

தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லி முடித்தபின்பு, சவுல் தாவீதை பார்த்து, "என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா" (1சாமு 24:16) என்று சொல்லி, சத்தமிட்டு அழுகிறார். தாவீதின் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்பது சவுலுக்கு தெரிகிறது. தாவீது தனக்கு ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதையும் சவுல் அறிந்திருக்கிறார். தாவீது இதுவரையிலும் சவுலின் பேரில் கைபோடவில்லை. சவுலைக் கொல்ல தாவீதுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. தாவீதின் மனுஷரும் சவுலைக் கொன்றுபோடுமாறு, தாவீதுக்கு ஆலோசனை சொன்னார்கள். ஆனால் தாவீதோ சவுலை கொல்லவில்லை. சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று சொல்லி, தாவீது அவரைக் கொல்லாமல் விட்டுவிடுகிறார்.

தாவீதின் மனதிலே தீங்கு இல்லை என்பதை சவுல் உணர்ந்துகொள்கிறார். சவுல் தாவீதைப் பார்த்து, "நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமைசெய்தேன். நீ எனக்கு நன்மைசெய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்றுபோடவில்லை" (1சாமு 24:17,18) என்று சொல்லுகிறார்.

சவுல் தாவீதைப்பற்றிச் சொல்லுகிற வார்த்தைகள், தாவீதின் நல்ல சுபாவத்திற்கு சாட்சியாயிருக்கிறது. தாவீதின் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்பதை சவுல் அங்கீகரிக்கிறார். தாவீது சவுலிடம், "கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து, எனக்காக வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை விடுவிப்பாராக" (1சாமு 24:15) என்று சொன்னார்.

இப்போது சவுலே நியாயாதிபதியாகயிருந்து, "நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்" (1சாமு 24:17) என்று தாவீதுக்கு சாதகமாகத் தீர்ப்பு சொல்லுகிறார். சவுலின் வார்த்தைகள் தாவீதின் நல்ல சுபாவத்திற்கு சாட்சி கொடுத்தாலும், சவுல் தன்னுடைய பாவத்திற்கு உண்மையாகவே மனந்திரும்பியிருக்கிறார் என்பது நிரூபணமாகவில்லை. சவுல் தாவீதைப்பற்றி நல்ல வார்த்தைகளைச் சொல்லுகிறார். ஆனால் சவுல் இன்னும் தன் பாவத்திற்கு மனந்திரும்பவில்லை.

சவுல் தாவீதை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். "ஒருவன் தன் மாற்றானைக் கண்டுபிடித்தால், அவனைச் சுகமே போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காகக் கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக" (1சாமு 24:19) என்று சவுல் சொல்லுகிறார். கர்த்தர் சவுலை விட்டு விலகிப்போனாலும், சவுல் இன்னும் பழைய ஞாபகத்தில், கர்த்தருடைய நாமத்தை அவ்வப்போது பயன்படுத்துகிறார்.

சவுல் தாவீதை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிப்பது மாத்திரமல்ல, அவர் தாவீதுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளையும் சொல்லுகிறார். சவுல் தாவீதை நோக்கி, "நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்" (1சாமு 24:20) என்றும் சொல்லுகிறார்.

சாமுவேலுடைய வார்த்தையின் மூலமாய், தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருப்பார் என்பதை சவுல் ஏற்கெனவே அறிந்திருக்கிறார். தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றதாயிருக்கிறது. ஆனால் சவுலோ தாவீதின்மீது பொறாமைப்பட்டு, அவரைக் கொன்றுபோட வகைதேடுகிறார்.

சவுல் தாவீதைப் பார்த்து, "நீ நிச்சயமாய் ராஜாவாயிருப்பாய்" என்றும், "இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையிலே நிலைவரப்படும்" என்றும் சொல்லுகிற வார்த்தைகள் தாவீதுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது. சவுலின் வார்த்தைகள் தாவீதின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறது.

சவுல் தாவீதோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறார். "இப்போதும் நீ எனக்குப் பின்னிருக்கும் என் சந்ததியை வேரறுப்பதில்லை என்றும், என் தகப்பன் வீட்டாரில் என் பெயரை அழித்துப்போடுவதில்லை என்றும் கர்த்தர்மேல் எனக்கு ஆணையிட்டுக்கொடு" (1சாமு 24:21) என்று சொல்லுகிறார்.

தாவீது இப்போது சவுலுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார். தாவீதின் மரியாதை சவுலுக்கு பிரத்தியட்சமாய்த் தெரிகிறது. தாவீது, இப்போது தனக்கு காண்பிக்கிற மதிப்பையும் மரியாதையையும், தன்னுடைய பின்சந்ததியாருக்கும் காண்பிக்கவேண்டும் என்று சவுல் விரும்புகிறார். இதை ஒரு உடன்படிக்கையின் மூலமாக தாவீதோடு உறுதிபண்ணிக்கொள்ள வேண்டும் என்றும் சவுல் எதிர்பார்க்கிறார். சவுல் தாவீதைப் பார்த்து "கர்த்தர் மேல் எனக்கு ஆணையிட்டுக்கொடு" என்று சொல்லுகிறார். அப்பொழுது தாவீது, சவுல் சொன்ன பிரகாரம், அவருக்கு ஆணையிட்டுக்கொடுக்கிறார்.

தாவீது பிற்காலத்திலே, தான் சவுலுக்கு ஆணையிட்டுக்கொடுத்ததற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். தாவீது மேவிபோசேத்தை ஆதரிக்கிறார். இஸ்போசேத்தைக் கொன்றுபோட்டவர்களை தாவீது பழிவாங்குகிறார். தாவீது சவுலின் குடும்பத்தாருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

இதன் பின்பு, சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப்போகிறார்; தாவீதும் அவருடைய மனுஷரும் அரணிப்பான இடத்திற்கு ஏறிப்போகிறார்கள் (1சாமு 24:22). சவுல் தன்னுடைய தப்பிதத்தை உணருகிறார். ஆனால் அவர் இன்னும் தன்னுடைய தப்பிதத்திற்கு மனந்திரும்பவில்லை.

சவுலின் மனதிலே தாவீதின்மேல் கோபமும் பொறாமையும் இன்னும் இருக்கிறது. தாவீதை அழித்துப்போடவேண்டும் என்னும் எண்ணம் சவுலுடைய இருதயத்தின் ஆழத்திலே பதிந்திருக்கிறது.

சவுலின் தீயஎண்ணம் தாவீதுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் தாவீதும் அவருடைய மனுஷரும், தங்களுடைய பாதுகாப்புக்காக, அரணிப்பான இடத்திற்கு ஏறிப்போகிறார்கள்.

25 அதிகாரம்

தாவீதுக்கு மேலும் சில பிரச்சனைகள் வருகிறது. சாமுவேல் மரணமடைகிறார். சாமுவேலின் மரணச்செய்தி தாவீதுக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுக்கிறது (1சாமு 25:1).

தாவீது என்கேதி வனாந்தரத்திலிருந்தபோது, நாபால் என்னும் மனுஷனுக்கு அதிகமான உதவிகளை செய்திருக்கிறார். அவனுடைய உடமைகளைப் பாதுகாத்திருக்கிறார். ஆனால் நாபால் தாவீதுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை. இந்த அதிகாரத்தில் நாபலைப்பற்றிய சம்பவம் அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது.

நாபாலின் சுபாவம் (1சாமு 25:2,3). தாவீது தன் வாலிபர் மூலமாய் நாபாலுக்கு அனுப்பின பணிவான விண்ணப்பம் (1சாமு 25:4-9). நாபாலின் திமிரான பேச்சு (1சாமு 25:10-12). நாபாலின்மீது தாவீதின் கோபம் (1சாமு 25:13,21,22).

நாபாலின் மனைவி அபிகாயில் ஞானமுள்ளவள். தன் குடும்பத்திற்கு வரப்போகும் ஆபத்தை தன்னுடைய சாமர்த்தியத்தினால் தவிர்த்துவிடுகிறாள் (1சாமு 25:14-20). அபிகாயில் தாவீதின் கோபத்தைத் தணிப்பதற்கு மிருதுவான பிரதியுத்தரம்சொல்லுகிறாள் (1சாமு 25:23-31).

தாவீது அபிகாயிலின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறார் (1சாமு 25:32-35). நாபாலின் மரணம் (1சாமு 25:36-38). அபிகாயில் தாவீதுக்கு மனைவியாகிறாள் (1சாமு 25:39-44).

சாமுவேலின் மரணம்
1சாமு 25:1

1சாமு 25:1. சாமுவேல் மரணமடைந்தான். இஸ்ரவேலர் எல்லாரும் கூடிவந்து, அவனுக்காகத் துக்கங்கொண்டாடி, ராமாவிலிருக்கிற அவனுடைய வளவிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்; தாவீது எழுந்து, பாரான் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

சாமுவேலின் மரணத்தைப்பற்றியும், அவரை அடக்கம்பண்ணியதுபற்றியும் இந்த வசனத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி. இஸ்ரவேல் தேசத்தின் நியாயாதிபதி. ஆனாலும் அவருடைய கடைசி காலத்திலே, இஸ்ரவேல் ஜனத்தார் அவரைத் தள்ளிவிட்டார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர், இஸ்ரவேல் ஜனத்தை தம்முடைய நீதியினால் தண்டித்தார்.

சாமுவேல் தாவீதை அதிகமாய் சிநேகித்தார். சவுலோ தாவீதை விரோதித்தார். ஆனாலும் சவுலின் ராஜ்யபார காலத்தில், சாமுவேல் எந்தவித பிரச்சனையுமில்லாமல், அமைதியாக மரணமடைகிறார்.

சவுல் சாமுவேலை சிநேகிக்கவில்லை. ஆனாலும் அவர் சாமுவேலுக்கு பயப்பட்டார். ஏரோது ராஜா யோவான்ஸ்நானனுக்கும் ஜனங்களுக்கும் பயந்ததுபோல, சவுல் சாமுவேலுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் பயப்படுகிறார். ஏனென்னறால், சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று அறியப்பட்டிருக்கிறார்.

சாமுவேல் மரணமடைந்தபோது, இஸ்ரவேலர் எல்லாரும் கூடிவந்து, அவருக்காக துக்கங்கொண்டாடுகிறார்கள். சாமுவேல் மரித்துப்போனாலும், இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே அவர் செய்த ஊழியங்களை நினைத்து, அவரைக் கனம்பண்ணுகிறார்கள். சாமுவேல் உயிரோடிருந்த நாட்களில், இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார். ஜனங்கள் மத்தியிலே சாமுவேலுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. சாமுவேல் மரணமடைந்தபோது, ஜனங்கள் அவருக்கு தங்கள் நன்றியையும், மரியாதையையும் தெரியப்படுத்துகிறார்கள்.

சாமுவேல் தீர்க்கதரிசிகளுக்கென்று ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். சாமுவேலே தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு தலைவர். தங்களுடைய பாடசாலையை ஸ்தாபித்த சாமுவேல் மரித்துப்போனதை நினைத்து தீர்க்கதரிசிகள் துக்கப்படுகிறார்கள். சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம், இஸ்ரவேலுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார்.

"நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" *(1சாமு 12:23).*

சாமுவேல் மரணமடைந்ததினால், இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய நெருங்கிய சிநேகிதரை இழந்துவிடுகிறார்கள். தீர்க்கதரிசிகளின் புத்திரர் நாயோதியிலே இருக்கிறார்கள். சாமுவேல் மரணமடைந்தபோது, அவருடைய சரீரத்தை நாயோதியிலே அடக்கம்பண்ணவில்லை. சாமுவேலை ராமாவிலிருக்கிற அவருடைய வளவிலே அடக்கம்பண்ணுகிறார்கள். சாமுவேல் ராமாவிலே பிறந்தவர்.

தாவீது பாரான் வனாந்தரத்திற்கு புறப்பட்டுப்போகிறார். ஒருவேளை சாமுவேலின் மரணச்செய்தியைக் கேட்டு, துக்கங்கொண்டாடுவதற்காக, தாவீது இந்த வனாந்தரத்திற்குப் போயிருக்கலாம். சாமுவேல் தாவீதுக்கு நெருங்கிய சிநேகிதர். தன்னுடைய சிநேகிதர் மரணமடைந்த செய்தி தாவீதுக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுக்கிறது.

சாமுவேல் மரணமடைந்ததினால், தாவீதுக்கு சவுலின் மூலமாய் வந்த ஆபத்து அதிகரிக்கிறது. ஒரு வேளை இதன் நிமித்தமாக தாவீது, பாரான் வனாந்தரத்திற்கு புறப்பட்டுப்போயிருக்க வேண்டும். பாரான் வனாந்தரம் இஸ்ரவேல் தேசத்தின் எல்லைக்கு வெளியே இருக்கிறது. தாவீது இங்கு கேதாரின் கூடாரங்களண்டையில் குடியிருக்கிறார்.

"ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்!" *(சங் 120:5).*

நாபால்
1சாமு 25:2-11

1சாமு 25:2. மாகோனிலே ஒரு மனுஷன் இருந்தான்; அவனுடைய தொழில் துறை கர்மேலில் இருந்தது; அந்த மனுஷன் மகா பாரிக் குடித்தனக் காரனாயிருந்தான்; அவனுக்கு மூவாயிரம் ஆடும், ஆயிரம் வெள்ளாடும் இருந்தது; அவன் அப்பொழுது கர்மேலில் தன் ஆடுகளை மயிர் கத்தரித்துக்கொண்டிருந்தான்.

1சாமு 25:3. அந்த மனுஷனுக்கு நாபால் என்றும், அவன் மனைவிக்கு அபிகாயில் என்றும் பெயர்; அந்தஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள்; அந்தப் புருஷனோ முரடனும் துராகிருதனுமாயிருந்தான்; அவன் காலேபுடைய சந்ததியான்.

1சாமு 25:4. நாபால் தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிற செய்தியை வனாந்தரத்தில் இருக்கிற தாவீது கேட்டபோது,

1சாமு 25:5. தாவீது பத்து வாலிபரை அழைத்து: நீங்கள் கர்மேலுக்குப் போய், நாபாலிடத்தில் சென்று, என் பேரைச்சொல்லி, அவன் சுகசெய்தியை விசாரித்து,

1சாமு 25:6. அவனை நோக்கி: நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும், உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக என்று அவனை வாழ்த்தி,

1சாமு 25:7. இப்பொழுது ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்கள் உம்மிடத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்; உம்முடைய மேய்ப்பர் எங்களோடேகூட இருந்தார்கள்; அவர்கள் கர்மேலில் இருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை; அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமற்போனதும் இல்லை. வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக என்று அவனை வாழ்த்தி,

1சாமு 25:8. உம்முடைய வேலைக்காரரைக் கேளும்; அவர்கள் உமக்குச் சொல்லுவார்கள்; ஆதலால் இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்கவேண்டும்; நல்ல நாளில் வந்தோம்; உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான்.

1சாமு 25:9. தாவீதின் வாலிபர் போய், இந்த வார்த்தைகளையெல்லாம் தாவீதின் நாமத்தினாலே நாபாலிடத்தில் சொல்லி, பின்னொன்றும் பேசாதிருந்தார்கள்.

1சாமு 25:10. நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக: தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு.

1சாமு 25:11. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணுவித்ததையும் எடுத்து, இன்ன இடத்தார் என்று நான் அறியாத மனுஷருக்குக்கு கொடுப்பேனோ என்றான்.

இந்த அதிகாரத்தில் நாபாலைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்திலே, இந்த மனுஷனைப்பற்றி வேறு எங்கும் சொல்லப்படவில்லை. நாபால் என்னும் பெயருக்கு, "மதியீனன்" என்று பொருள். இவன் காலேபுடைய சந்ததியைச் சேர்ந்தவன். இவன் மாகோன் என்னும் ஊரிலே இருக்கிறான். இது எபிரேனுக்கு அருகிலுள்ள கர்மேலிலுள்ளது. இந்தப் பகுதி காலேபுக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது.

"உம்தா, எபிரோனாகிய கீரியாத் அர்பா, சீயோர்; இந்தப் பட்டணங்களும் அவைகளுடைய கிராமங்களுமுட்பட ஒன்பது. மாகோன், கர்மேல், சீப், யுத்தா" (யோசு 15:54,55).

"ஆதலால் கேனாசியனான எப்புன்னேயின் குமாரனாகிய காலேப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், இந்நாள்மட்டும் இருக்கிறபடி, எபிரோன் அவனுக்குச் சுதந்தரமாயிற்று" (யோசு 14:14).

நாபாலின் தொழில் துறை கர்மேலில் இருக்கிறது; அந்த மனுஷன் மகா பாரிக் குடித்தனக்காரனாயிருக்கிறான்; அவனுக்கு மூவாயிரம் ஆடும், ஆயிரம் வெள்ளாடும் இருக்கிறது. நாபால் முரடனும் துராகிருதனுமாயிருக்கிறான்; அவன் காலேபுடைய சந்ததியான். ஆனாலும் காலேபின் நல்ல சுபாவம் நாபாலிடத்தில் காணப்படவில்லை.

உலகத்தின் பார்வைக்கு நாபால் பெரியவனாயிருக்கிறான். அவனுக்கு மூவாயிரம் ஆடும், ஆயிரம் வெள்ளாடும் இருக்கிறது. ஆகையினால் அவன் மகாபாரி குடித்தனக்காரனாயிருக்கிறான். இவனிடத்தில் ஐசுவரியம் இருக்கிறது. ஆனால் நற்குணமில்லை. இவன் ஒரு முரடன்.

நாபாலின் மனைவிக்கு அபிகாயில் என்று பெயர். இந்த ஸ்திரீ மகாபுத்திசாலியும், ரூபவதியுமாயிருக்கிறாள். அபிகாயில் என்னும் பெயருக்கு "அவளுடைய தகப்பனாரின் சந்தோஷம்" என்று பொருள். அபிகாயிலுடைய தகப்பனார், அவளை நாபாலுக்கு மனைவியாக விவாகம் செய்து வைக்கிறார். இதனால் அபிகாயிலினுடைய தகப்பனாரின் சந்தோஷம் கெட்டுப்போயிற்று. அவளுடைய தகப்பனார் நாபாலின் ஐசுவரியத்தைப் பார்த்தார். அவனுடைய குணத்தைப் பார்க்கவில்லை. அபிகாயில் என்னும் பெயருக்கு, "தந்தையின் சந்தோஷம்" என்று அர்த்தம் இருந்தாலும், நாபால் அந்த சந்தோஷத்தையெல்லாம் கெடுத்துப்போடுகிறான்.

இக்காலத்திலும் சிலபெற்றோர் தங்களுடைய மகள்களுக்கு திருமணம் செய்து வைக்கும்போது, மாப்பிள்ளை வீட்டாரின் பணத்தையும், பதவியையும், அந்தஸ்தையும் பார்க்கிறார்கள். மாப்பிள்ளையின் குணத்தைப் பார்ப்பதில்லை. இதனால் சீக்கிரத்தில் பெண்வீட்டாரின் சந்தோஷம் துக்கமாய் மாறுகிறது. பெற்றோரின் பேராசையினாலும், தப்பிதமான தீர்மானங்களினாலும், இக்காலத்திலும் ஏராளமான அபிகாயில்கள், நாபாலைப் போன்றவர்களுக்கு மனைவிகளாகக் கொடுக்கப்படுகிறார்கள். மொத்தமாக வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

நாபாலிடத்தில் உண்மையுமில்லை கண்ணியமுமில்லை. அவன் துராக்கிருதனாயிருக்கிறான். அவனிடத்திலிருக்கிற ஐசுவரியத்திற்காக, ஒரு சிலர் அவனோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். இதை தவிர மாகோனிலே நாபாலுக்கு மதிப்பும் இல்லை. மரியாதையும் இல்லை. நாபாலும் சந்தோஷமாயிருக்கமாட்டான். தன்னுடைய மனைவி அபிகாயிலையும் சந்தோஷமாய் வைத்திருக்கமாட்டான். அவனுடைய செய்கைகள் எல்லாமே முரட்டுத்தனமாயும், மூடத்தனமாயும் இருக்கிறது.

தாவீது தன்னுடைய வாலிபரில் பத்துபேரை நாபாலிடத்திற்கு அனுப்புகிறார். நாபாலுடைய சுகசெய்தியை விசாரிக்குமாறு தாவீது தன்னுடைய வாலிபருக்கு கட்டளை கொடுக்கிறார். தாவீதுடைய மனுஷர் நாபாலுடைய மேய்ப்பருக்கு செய்த உதவிகளை தன்னுடைய வாலிபர் மூலமாய் நினைவுபடுத்துகிறார்.

நாபால் தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிற செய்தியை வனாந்தரத்தில் இருக்கிற தாவீது கேள்விப்படுகிறார். அப்போது தாவீது பத்து வாலிபரை அழைத்து: "நீங்கள் கர்மேலுக்குப் போய், நாபாலிடத்தில் சென்று, என் பேரைச் சொல்லி, அவன் சுகசெய்தியை விசாரியுங்கள்" என்று சொல்லுகிறார்.

மேலும் தாவீதின் வாலிபர் நாபாலை நோக்கி, "நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும், உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக" என்று வாழ்த்தவேண்டும்.

தாவீதின் வாலிபர் நாபாலிடம், தாவீது சொன்ன செய்திகளை அறிவிக்கவேண்டும். தாவீது நாபாலுக்கு சொல்லியனுப்பின செய்தியாவது :

"இப்பொழுது ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்கள் உம்மிடத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்; உம்முடைய மேய்ப்பர் எங்களோடேகூட இருந்தார்கள்; அவர்கள் கர்மேலில் இருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை; அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமற்போனதும் இல்லை. உம்முடைய வேலைக்காரரைக் கேளும்; அவர்கள் உமக்குச் சொல்லுவார்கள்; ஆதலால் இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்கவேண்டும்; நல்ல நாளில் வந்தோம்; உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டுகிறேன்" (1சாமு 25:7,8) என்று தாவீது தன்னுடைய வாலிபர் மூலமாய் நாபாலுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்.

தாவீது இப்போது மிகவும் நெருக்கத்திலிருக்கிறார். அவரும் அவருடைய மனுஷரும் அநேக பாடுகளை அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு புசிப்பதற்குக்கூட போதுமான அளவு போஜனம் இல்லை. இந்த சூழ்நிலையில் நாபாலைப் பார்த்து, அவனிடமிருந்து தங்களுக்கு கொஞ்சம் போஜனம் பெற்றுக்கொள்ளலாம் என்று தாவீது நினைக்கிறார். தாவீதும் அவருடைய மனுஷரும் நாபாலின் மேய்ப்பருக்கு ஏற்கெனவே உதவி செய்திருக்கிறார்கள். தாங்கள் செய்த உதவிக்கு கைமாறாக, நாபால் தங்களுக்கு போஜனங்களைக் கொடுப்பான் என்று தாவீது எதிர்பார்க்கிறார்.

தாவீது நாபாலை அடிக்கடி தொந்தரவு பண்ணவில்லை. நாபால் இப்பொழுது தன்னுடைய ஆடுகளை மயிர்க்கத்தரித்துக் கொண்டிருக்கிறான். இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு, ஆடுகளை மயிர்க்கத்தரிப்பது, ஒரு பண்டிகை காலம் போல இருக்கும். விவசாயிகளுக்கு அறுவடை காலம் ஆசீர்வாதமாயிருப்பதுபோல, மேய்ப்பருக்கு ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிற காலம் ஆசீர்வாதமாயிருக்கும்.

அப்சலோம் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிற நாளை, ஒரு பண்டிகை நாளைப்போல கொண்டாடினான். "இரண்டு வருஷம் சென்றபின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்குச் சமீபமான பாலாத்சோரிலே ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்கத்தரிக்கிற வேலையில் இருந்தான்; அங்கே ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைத்தான். அவன் ராஜாவினிடத்தில் போய், ஆட்களை வைத்து ஆடுகளை மயிர்கத்தரிக்கிறேன்; ராஜாவும் அவருடைய ஊழியக்காரரும் உமது அடியானோடே வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்" (2சாமு 13:23,24).

நாபால் ஆடுகளை மயிர்கத்தரிக்கிற நாளில், தாவீது தன்னுடைய வாலிபரில் பத்துபேரை நாபாலிடத்தில் அனுப்புகிறார். நாபால் மயிர்கத்தரிக்கிறவர்களுக்கு போஜனம் கொடுக்கவேண்டும். இந்தக் காலத்தில் நாபால் தன் வேலையாட்களோடு சந்தோஷமாயிருப்பான். சந்தோஷமான இந்தக் காலத்தில், தாவீது நாபாலிடத்தில் தன்னுடைய வாலிபரை அனுப்புகிறார். தாவீது தன்னுடைய வாலிபரிடம், "நல்ல நாளில் வந்தோம்" என்று நாபாலிடம் சொல்லச் சொல்லுகிறார்.

தாவீதின் வாலிபர்கள் நாபாலைப் பார்த்து, அவனை தாவீதின் நாமத்தினால் வாழ்த்தவேண்டும். அவர்கள் நாபாலை, "நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும், உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானமும் உண்டாவதாக" (1சாமு 25:6) என்று சொல்லி வாழ்த்தவேண்டும்.

தாவீது தன்னைப்பற்றி, தன் வாலிபர் மூலமாய், நாபாலுக்கு செய்தி சொல்லியனுப்பும்போது, அவர் தன்னை "உம்முடைய குமாரனாகிய தாவீது" என்று சொல்லுகிறார். தாவீது நாபாலை தன்னுடைய தகப்பனைப்போல கனம்பண்ணுகிறார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் கர்மேலிலிருந்தபோது, நாபாலுடைய மேய்ப்பர் அவர்களோடு கூடயிருந்தார்கள். தாவீதின் மனுஷர் அவர்களை வருத்தப்படுத்தவில்லை. தாவீது நாபாலின் மேய்ப்பரையும், அவருடைய மந்தையையும் பாதுகாத்தார். நாபாலுக்கும் மூவாயிரம் ஆடும் ஆயிரம் வெள்ளாடும் இருந்தது. நாபாலின் மேய்ப்பர் இவற்றையெல்லாம் கர்மேலில் மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது தாவீதும் அவருடைய மனுஷரும் அவர்களுக்கு பாதுகாப்பாயிருந்தார்கள். அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமல் போகவில்லை.

தாவீதின் மனுஷர் நாபாலின் மந்தையிலுள்ள ஆடுகளை திருடவில்லை. அந்த மந்தையை சேதப்படுத்தவில்லை. தாவீதும் அவருடைய மனுஷரும் கர்மேலிலிருந்த காலத்தில், மிகுந்த பாடுகளையும் நெருக்கங்களையும் அனுபவித்தார்கள். அவர்களுக்கு போதுமான அளவு போஜனமில்லை. ஆனாலும் அக்காலத்தில் அவர்கள் நாபாலின் ஆடுகளை திருடியதில்லை. பிறருடைய சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்னும் எண்ணம் தாவீதுக்கும், அவருடைய மனுஷருக்கும் வரவில்லை.

தாவீதின் மனுஷர் நாபாலின் ஆடுகளை திருடாமலிருந்தது மாத்திரமல்ல, அவர்கள் நாபாலின் ஆடுகளை பாதுகாக்கவும் செய்தார்கள். தாவீதின் மனுஷர் தங்களுக்கு செய்த உபகாரங்களைப்பற்றி, நாபாலின் மேய்ப்பர் நாபாலின் மனைவிக்கும் சாட்சியாய்ச் சொல்லுகிறார்கள்.

நாபாலின் மேய்ப்பர், நாபாலின் மனைவியாகிய அபிகாயிலை நோக்கி, "அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப் படுத்தினதுமில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள்" (1சாமு 25:15,16) என்று தாவீதையும், அவருடைய மனுஷரையும் குறித்து சாட்சியாய்ச் சொல்லுகிறார்கள்.

நாபாலின் மேய்ப்பர் கர்மேலிலிருந்த நாட்களில், பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண வந்தார்கள். அவர்கள் கேகிலாவின்மேல் யுத்தம்பண்ணி களஞ்சியங்களைக் கொள்ளையிட்டார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேலரின் களஞ்சியங்களைக் கொள்ளையிட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, கர்மேலிலுள்ள நாபாலின் ஆடுகளையும், வெள்ளாடுகளையும் கொள்ளையிட்டிருக்க முடியும். ஆனால் தாவீதும் அவருடைய மனுஷரும் நாபாலின் மேய்ப்பருக்கும், அவருடைய மந்தைக்கும் பாதுகாப்பாயிருந்ததினால், பெலிஸ்தரால் அவற்றை கொள்ளையிட முடியவில்லை.

தாவீது இந்த சம்பவங்களையெல்லாம் தன்னுடைய வாலிபர் மூலமாய் நாபாலுக்கு சொல்லியனுப்புகிறார். இதற்கு சாட்சியாக நாபாலின் வேலைக்காரரை நியமிக்கிறார். "உம்முடைய வேலைக்காரரைக் கேளும், அவர்கள் உமக்கு சொல்லுவார்கள்" என்று தாவீது தன்னுடைய வாலிபரை நாபாலிடம் சொல்லச் சொல்லுகிறார்.

தாவீது நாபாலின் மந்தையைக் கொள்ளையிட வரவில்லை. நாபாலின் மந்தையை பாதுகாத்ததற்காக அதிகமான கூலியை அநியாயமாய்க் கேட்கவில்லை. தாவீது நாபாலுக்கு மிகவும் பணிவான, கண்ணியமான விண்ணப்பத்தை சொல்லியனுப்புகிறார். "இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்க வேண்டும்; நல்ல நாளில் வந்தோம்; உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டுகிறேன்" (1சாமு 25:8) என்று தாவீது, தன்னுடைய வாலிபர் மூலமாய் நாபாலுக்கு சொல்லுகிறார்.

ஒரு ராஜா எதிரி தேசத்தின்மேல் யுத்தம்பண்ணி, அந்த தேசத்தை ஜெயிக்கும்போது, அந்த தேசத்தின் ராஜாவை தனக்கு பகுதி அல்லது கப்பம் கட்டச்சொல்லுவது வழக்கம். தாவீது அதுபோல, நாபால் தனக்கு கப்பம் கட்டவேண்டும் என்று சொல்லவில்லை. படைத்தளபதிகள் ஒரு தேசத்தைக் கொள்ளையிடும்போது, அந்த தேசத்திலுள்ள ஐசுவரியங்களையெல்லாம் கொள்ளைப்பொருளாக எடுத்து செல்வார்கள். தாவீது அதுபோல, நாபாலின் மந்தைகளை கொள்ளைப்பொருளாக எடுத்துக்கொண்டு போகவில்லை.

தாவீது நாபாலுக்கு சிநேக வார்த்தைகளை சொல்லுகிறார். தாவீது தன்னுடைய மனுஷரைப்பற்றி நாபாலுக்கு சொல்லும்போது, அவர்களை "உம்முடைய ஊழியக்காரர்" என்று சொல்லுகிறார். தாவீதும் அவருடைய மனுஷரும், நாபாலுக்கு ஊழியக்காரரைப்போல உதவி செய்திருக்கிறார்கள்.

தாவீதின் வாலிபர் போய், இந்த வார்த்தைகளையெல்லாம் தாவீதின் நாமத்தினாலே நாபாலிடத்தில் சொல்லி, பின்னொன்றும் பேசாதிருக்கிறார்கள் (1சாமு 25:9).

நாபாலோ தாவீதின் ஊழியக்காரர்மேல் கோபப்படுகிறான். நாபால் ஒரு முரடன். அவன் ஒரு துராகிருதன். அவனிடத்தில் ஐசுவரியம் அதிகமாயிருப்பதுபோல, புத்தியும் ஞானமும் அதிகமாயில்லை. நாபாலிடத்தில் நிதானமில்லை. தாவீதின் விண்ணப்பத்தை நாபால் உடனே மறுத்துவிடுகிறான். ஆணவமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக: "தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணுவித்ததையும் எடுத்து, இன்ன இடத்தார் என்று நான் அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோ" (1சாமு 25:10,11) என்று சொல்லுகிறான்.

ஒரு ராஜா எதிரி தேசத்தின்மேல் யுத்தம்பண்ணி, அந்த தேசத்தை ஜெயிக்கும்போது, அந்த தேசத்தின் ராஜாவை தனக்கு பகுதி அல்லது கப்பம் கட்டச்சொல்லுவது வழக்கம். தாவீது அதுபோல, நாபால் தனக்கு கப்பம் கட்டவேண்டும் என்று சொல்லவில்லை. படைத்தளபதிகள் ஒரு தேசத்தைக் கொள்ளையிடும்போது, அந்த தேசத்திலுள்ள ஐசுவரியங்களையெல்லாம் கொள்ளைப்பொருளாக எடுத்து செல்வார்கள். தாவீது அதுபோல, நாபாலின் மந்தைகளை கொள்ளைப்பொருளாக எடுத்துக்கொண்டு போகவில்லை.

தாவீது நாபாலுக்கு சிநேக வார்த்தைகளை சொல்லுகிறார். தாவீது தன்னுடைய மனுஷரைப்பற்றி நாபாலுக்கு சொல்லும்போது, அவர்களை "உம்முடைய ஊழியக்காரர்" என்று சொல்லுகிறார். தாவீதும் அவருடைய மனுஷரும், நாபாலுக்கு ஊழியக்காரைப்போல உதவி செய்திருக்கிறார்கள்.

தாவீதின் வாலிபர் போய், இந்த வார்த்தைகளையெல்லாம் தாவீதின் நாமத்தினாலே நாபாலிடத்தில் சொல்லி, பின்னொன்றும் பேசாதிருக்கிறார்கள் (1சாமு 25:9).

நாபாலோ தாவீதின் ஊழியக்காரர்மேல் கோபப்படுகிறான். நாபால் ஒரு முரடன். அவன் ஒரு துராகிருதன். அவனிடத்தில் ஐசுவரியம் அதிகமாயிருப்பதுபோல, புத்தியும் ஞானமும் அதிகமாயில்லை. நாபாலிடத்தில் நிதானமில்லை. தாவீதின் விண்ணப்பத்தை நாபால் உடனே மறுத்துவிடுகிறான். ஆணவமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக: "தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகர் உண்டு. நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணுவித்ததையும் எடுத்து, இன்ன இடத்தார் என்று நான் அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோ" (1சாமு 25:10,11) என்று சொல்லுகிறான்.

நாபால் தாவீதை அறியாதவன் போல பேசுகிறான். தாவீதின் மகிமை அந்நிய தேசத்தாராகிய பெலிஸ்தருக்கு தெரிந்திருக்கிறது. அவர்கள் தாவீதைப்பற்றிச் சொல்லும்போது "தேசத்து ராஜாவாகிய தாவீது இவன் அல்லவோ? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இவனைக்குறித்ததல்லவோ ஆடல் பாடலோடே கொண்டாடினார்கள்" (1சாமு 21:11) என்று சொன்னார்கள். ஆனால் நாபாலோ, "தாவீது என்பவன் யார்" என்று தாவீதைத் தெரியாதவன்போல ஆணவமாய்ப் பேசுகிறான்.

நாபாலும் தாவீதும் அருகாமையிலிருக்கிறார்கள். தாவீது யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். நாபாலும் இதே கோத்திரத்தைச் சேர்ந்தவர். யூதாகோத்திரத்திலே தாவீதை தெரியாதவர்கள் ஒருவருமில்லை. தாவீது அந்த அளவுக்கு பிரசித்திப்பெற்றவர். தாவீது கோலியாத்தைக் கொன்றதினால், தாவீதின் பெருமை எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. யூதாகோத்திரத்தார் தாவீதைப்பற்றி பெருமையாய்ப் பேசுவது வழக்கம். ஆனால் நாபாலோ, "தாவீது என்பவன் யார்?, ஈசாயின் குமாரன் யார்?" என்று தாவீதைப்பற்றியும், அவருடைய குடும்பத்தைப்பற்றியும் தெரியாதவனைப்போல பேசுகிறான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தில், விசேஷமாக யூதாகோத்திரத்தில் மிகவும் முக்கியமானவர். அவர் பிரபல்யமானவர். ஆனால் அவர் இப்போது வனாந்தரத்திலே பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார். சவுல் தாவீதைப் பகைத்து, அவரைக் கொன்றுபோடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார். நாபால் தாவீதின் தற்போதைய நிலமையைப் பார்க்கிறான். அவனுடைய பார்வையிலே தாவீது ஒரு துஷ்டமனிதன் போல் தெரிகிறான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்து அரண்மனையிலிராமல், சவுலுக்கு சேவை செய்யாமல், வனாந்தரத்திலே தன் மனுஷரோடு தங்கியிருப்பதினால், நாபால் தாவீதைப் பார்த்து, "தங்கள் எஜமான்களைவிட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாட்களில் அநேகர் உண்டு" (1சாமு 25:10) என்று ஏளனமாய் சொல்லுகிறான்.

நாபால் தாவீதை அறியாதவன் போல பேசுகிறான். தாவீதின் மகிமை அந்நிய தேசத்தாராகிய பெலிஸ்தருக்கு தெரிந்திருக்கிறது. அவர்கள் தாவீதைப்பற்றிச் சொல்லும்போது "தேசத்து ராஜாவாகிய தாவீது இவன் அல்லவோ? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இவனைக்குறித்ததல்லவோ ஆடல் பாடலோடே கொண்டாடினார்கள்" (சாமு 21:11) என்று சொன்னார்கள். ஆனால் நாபாலோ, "தாவீது என்பவன் யார்" என்று தாவீதைத் தெரியாதவன்போல ஆணவமாய்ப் பேசுகிறான்.

நாபாலும் தாவீதும் அருகாமையிலிருக்கிறார்கள். தாவீது யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். நாபாலும் இதே கோத்திரத்தைச் சேர்ந்தவர். யூதாகோத்திரத்திலே தாவீதை தெரியாதவர்கள் ஒருவருமில்லை. தாவீது அந்த அளவுக்கு பிரசித்திப்பெற்றவர். தாவீது கோலியாத்தைக் கொன்றதினால், தாவீதின் பெருமை எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. யூதாகோத்திரத்தார் தாவீதைப்பற்றி பெருமையாய்ப் பேசுவது வழக்கம். ஆனால் நாபாலோ, "தாவீது என்பவன் யார்?, ஈசாயின் குமாரன் யார்?" என்று தாவீதைப்பற்றியும், அவருடைய குடும்பத்தைப்பற்றியும் தெரியாதவனைப்போல பேசுகிறான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தில், விசேஷமாக யூதாகோத்திரத்தில் மிகவும் முக்கியமானவர். அவர் பிரபல்யமானவர். ஆனால் அவர் இப்போது வனாந்தரத்திலே பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார். சவுல் தாவீதைப் பகைத்து, அவரைக் கொன்றுபோடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார். நாபால் தாவீதின் தற்போதைய நிலமையைப் பார்க்கிறான். அவனுடைய பார்வையிலே தாவீது ஒரு துஷ்டமனிதன் போல் தெரிகிறான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்து அரண்மனையிலிராமல், சவுலுக்கு சேவை செய்யாமல், வனாந்தரத்திலே தன் மனுஷரோடு தங்கியிருப்பதினால், நாபால் தாவீதைப் பார்த்து, "தங்கள் எஜமான்களைவிட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் இந்நாட்களில் அநேகர் உண்டு" (சாமு 25:10) என்று ஏளனமாய் சொல்லுகிறான்.

தனக்கும் தன்னுடைய மனுஷருக்கும் நாபால் ஏதாவது உதவி செய்வான் என்று எதிர்பார்த்து, தாவீது தன்னுடைய வாலிபரில் பத்துபேரை அவனிடத்தில் அனுப்பினார். ஆனால் நாபாலோ, தாவீதின் வாலிபரிடத்தில் ஆணவமாகவும், அகம்பாவமாகவும் பேசுகிறான். தாவீதைப்பற்றி தூஷண வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் தாவீதை உயர்த்தியிருக்கிறார். தாவீதின் மனதிலே சவுலுக்கு விரோதமான அக்கிரம சிந்தை ஏதுவுமில்லை. சவுலைக் கொல்லவேண்டும் என்னும் எண்ணமும் தாவீதிடத்தில் இல்லை. தாவீது சவுலுக்கு தப்பி ஓடுகிறார். தாவீது தன்னுடைய ஜீவனைப் பாதுகாத்துக்கொள்வதற்காக கெபிகளிலும், மலைகளிலும், வனாந்தரங்களிலும் தங்கியிருக்கிறார். ஆனால் நாபாலோ, தாவீதை ஒரு துன்மார்க்கனைப்போல பாவித்துப் பேசுகிறான்.

நாபாலிடம் திரளான ஐசுவரியம் இருக்கிறது. அவன் மகாபாரி குடித்தனக்காரனாயிருக்கிறான். அவனிடத்தில் மூவாயிரம் ஆடும் ஆயிரம் வெள்ளாடுகளும் இருக்கிறது. நாபால் இப்போது தன் ஆடுகளை மயிர்கத்தரித்துக்கொண்டிருக்கிறான். இந்தக் காலம் நாபாலுக்கு ஒரு பண்டிகை காலம் போல இருக்கிறது. நாபாலிடத்தில் திரளான சம்பத்தும், போஜனமும், ஆடுகளும் இருந்தாலும், அவையெல்லாம் தனக்கு மாத்திரமே உரியது என்று அவன் நினைக்கிறான். தன்னுடைய சம்பத்தில் மற்றவர்களுக்கு பங்குமில்லை, பாத்தியமுமில்லை என்று தீர்மானித்திருக்கிறான். எல்லாமே தன்னுடையது என்று நாபால் சுயநலக்காரனாயிருக்கிறான்.

நாபால் தன்னுடைய போஜனங்களை தாவீதுக்கு கொடுக்க மறுத்துவிடுகிறான். நாபால் தாவீதின் வாலிபரிடத்தில், "நான் என் அப்பத்தையும், என் தண்ணீரையும், என் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல் பண்ணுவித்ததையும் எடுத்து, இன்ன இடத்தார் என்று நான் அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோ" (சாமு 25:11) என்று சொல்லுகிறான்.

நாபாலைப்போலவே நாமும் சிலவேளைகளில் தவறு செய்கிறோம். நம்முடைய ஆஸ்திக்கும், ஐசுவரியத்திற்கும், உடமைக்கும் நாமே சொந்தக்காரர் என்று நினைக்கிறோம். நம்முடைய ஆஸ்தியை நமக்கு இஷ்டமான பிரகாரம் நாம் செலவு பண்ணலாம் என்று நினைத்து, நம்முடைய சுயஆசைகளையும், சுயஇச்சைகளையும் நிறைவேற்றுகிறோம். நம்முடைய ஆஸ்தி நமக்குரியதல்ல. இது கர்த்தருக்குரியது. கர்த்தர் நம்முடைய ஆஸ்திக்கு நம்மை உக்கிராணக்காரராய் நியமித்திருக்கிறார். நம்முடைய ஆஸ்திக்கும், அதை எப்படி செலவு பண்ணுகிறோம் என்பதற்கும், நாம் கர்த்தரிடத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நம்முடைய ஆஸ்தியை, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக செலவு பண்ணவேண்டும். நாம் கர்த்தருக்கு உண்மையுள்ள உக்கிராணக்காரராயிருக்க வேண்டும்.

தாவீது
1சாமு 25:12-17

1சாமு 25:12. தாவீதின் வாலிபர் தங்கள் வழியே திரும்பி, மறுபடியும் தாவீதினிடத்தில் வந்து, இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்தார்கள்.

1சாமு 25:13. அப்பொழுது தாவீது தன் மனுஷரைப் பார்த்து: நீங்கள் அவரவர் உங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொள்ளுங்கள் என்றான்; அவரவர் தங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொண்டார்கள்; தாவீதும் தன் பட்டயத்தைக் கட்டிக்கொண்டான்; ஏறக்குறைய நானூறுபேர் தாவீதுக்குப் பின்சென்று புறப்பட்டுப்போனார்கள்; இருநூறுபேர் ரஸ்துக்கள் அண்டையில் இருந்துவிட்டார்கள்.

1சாமு 25:14. அப்பொழுது வேலைக்காரரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலை நோக்கி: இதோ, நம்முடைய எஜமானுடைய சுகசெய்தி விசாரிக்க தாவீது வனாந்தரதிலிருந்து ஆட்களை அனுப்பினான்; அவர்கள்பேரில் அவர் சீறினார்.

1சாமு 25:15. அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினதுமில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை.

1சாமு 25:16. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள்.

1சாமு 25:17. இப்போதும் நீர் செய்யவேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான்மேலும், அவருடைய வீட்டார் யாவர்மேலும், நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது; இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலி யாளின் மகனாயிருக்கிறார் என்றான்.

தாவீதின் வாலிபர், நாபாலிடத்தில் போய், தாவீது தங்களுக்கு சொன்ன வார்த்தைகளையெல்லாம், அவருடைய நாமத்தினாலே நாபாலிடத்தில் சொல்லுகிறார்கள். அதன் பின்பு ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள். நாபால் தாவீதின் வாலிபருக்கு சாதகமான செய்தியை சொல்லவில்லை. நாபால் அவர்களுடைய விண்ணப்பத்தை மறுத்துவிடுகிறான். தாவீதைக் குறித்து தூஷணவார்த்தைகளைச் சொல்லுகிறான்.

தாவீதின் வாலிபர் நாபால் சொன்ன வார்த்தைகளை அமைதியாகவும், பொறுமையாகவும் கேட்கிறார்கள். அதன் பின்பு அந்த வாலிபர் தங்கள் வழியே திரும்பி, மறுபடியும் தாவீதினிடத்தில் வருகிறார்கள். அவர்கள் நாபால் தங்களுக்கு சொன்ன வார்த்தைகளையெல்லாம் தாவீதுக்கு அறிவிக்கிறார்கள் (1சாமு 25:12).

நாபால் தாவீதின் வாலிபரிடம் ஒரு முரடனைப்போலவும், ஒரு துஷ்டனைப்போலவும், ஒரு துராகிருதனைப்போலவும் பேசுகிறான். அவன் பேசுவதை தாவீதின் மனுஷரால் பொறுமையாய்க் கேட்கமுடியவில்லை. அவர்கள் நாபாலுக்கு பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. நாபால் பேசிக்கொண்டிருக்கும்போதே, தாவீதின் வாலிபர், தங்கள் வழியே திரும்பி விடுகிறார்கள். நாபாலின் வார்த்தைகளை தாவீதுக்கு அறிவிப்பதற்காக அவ்விடத்தைவிட்டு உடனே திரும்புகிறார்கள்.

விசுவாசிகளாகிய நம்மையும் ஒரு சிலர் நாபாலைப்போல தூஷிக்கலாம். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு இதுபோன்ற சம்பவம் அநேகம் வரும். மற்றவர்கள் நம்மை காரணமில்லாமல் தூஷிக்கும்போது, நாம் அவர்களோடு வழக்காடக்கூடாது. அவர்களைப்போல நாமும் அவர்களுக்கு விரோதமாய்ப் பேசக்கூடாது. தாவீதின் வாலிபர் நாபாலின் தூஷணமான பேச்சைக்கேட்டு, தங்கள் வழியே திரும்பி வந்தார்கள். தாவீதினிடத்தில் அந்த வார்த்தைகளை அறிவித்தார்கள். அவர்களைப்போலவே, நமக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகள் பேசப்படும்போது, நாமும் தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் திரும்பி வரவேண்டும். அந்த தூஷணவார்த்தைகளையெல்லாம் கிறிஸ்துவின் சமுகத்திலே அறிவிக்கவேண்டும். கர்த்தர் நமக்காக வழக்காடுவார். பழிவாங்குதல் கர்த்தருக்குரியது.

தன்னுடைய வாலிபர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு தாவீது சும்மாயிருக்கவில்லை. அப்பொழுது தாவீது தன் மனுஷரைப் பார்த்து: "நீங்கள் அவரவர் உங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார்; அவரவர் தங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொள்கிறார்கள்; தாவீதும் தன் பட்டயத்தைக் கட்டிக்கொள்கிறார். ஏறக்குறைய நானூறுபேர் தாவீதுக்குப் பின்சென்று புறப்பட்டுப்போகிறார்கள்; இரு நூறுபேர் ரஸ்துக்கள் அண்டையில் இருந்துவிடுகிறார்கள் (1சாமு 25:13).

தாவீது நாபாலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார். தாவீது நாபாலின் மேய்ப்பருக்கு செய்த நன்மைகளெல்லாம் வீணாய்ப்போயிற்று. அவர் அதை நினைத்து வேதனைப்படுகிறார். கோபப்படுகிறார்.

தாவீது தன் ஜனங்களை நோக்கி: "அவனுக்கு வனாந்தரத்தில் இருக்கிறதையெல்லாம் வீணாகவே காப்பாற்றினேன்; அவனுக்கு உண்டானதிலெல்லாம் ஒன்றும் காணாமற்போனதில்லை; என்றாலும் நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமைசெய்தான். அவனுக்கு உண்டான எல்லாவற்றிலும் சுவரில் நீர்விடும் ஒரு நாயை முதலாய் பொழுதுவிடியுமட்டும் நான் உயிரோடே வைத்தால், தேவன் தாவீதின் சத்துருக்களுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" (1சாமு 25:21,22) என்று சொல்லுகிறார்.

நாபாலையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போட வேண்டுமென்று தாவீது தீர்மானமாயிருக்கிறார். தாவீது இவ்வாறு பேசுவதும், இவ்வாறு தீர்மானம்பண்ணுவதும், தாவீதின் இயல்பான சுபாவம்போல இல்லை. நாபாலின் வீட்டிலுள்ள எல்லோரையும் கொன்றுபோடவேண்டுமென்று தாவீது தீர்மானமாயிருக்கிறார். தாவீதின் தீர்மானத்தில் உறுதியிருக்கிறது. தாவீது நாபாலின் வீட்டாரை அழிக்கவேண்டுமென்று தீர்மானித்து, தன்னுடைய தீர்மானத்தைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்களை நான் உயிரோடே வைத்தால், தேவன் தாவீதின் சத்துருக்களுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" (1சாமு 25:22) என்று சொல்லுகிறார்.

சில நாட்களுக்கு முன்பு தாவீது என்கேதியின் வனாந்தரத்திலுள்ள ஒரு குகையில், சவுலைப் பார்த்தபோது, தாவீது அவரைக் கொன்றுபோடவில்லை. தாவீது சவுலோடு அன்பாக பேசினார். அவரிடத்தில் பணிவான வார்த்தைகளை சொன்னார். ஆனால் இப்போதோ நாபாலையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போடவேண்டுமென்று தாவீது கோபமான வார்த்தைகளைப் பேசுகிறார்.

தாவீது இவ்வளவு கடினமான வார்த்தைகளை பேசினாலும், அவர் இன்னும் நாபாலை முகத்திற்கு முகமாக, நேருக்கு நேராக பார்க்கவில்லை. தாவீதின் வாலிபர் நாபாலைப் பார்த்தார்கள். நாபால் தாவீதின் வாலிபரிடத்தில் ஆணவமாகப் பேசினான். தன்னுடைய வாலிபர், தன்னிடத்தில் நாபாலைக் குறித்து சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, தாவீது இவ்வளவு கோபப்படுகிறார்.

மற்ற சமயங்களில் அமைதியான சுபாவத்தோடு இருக்கிற தாவீது, இப்போது மிகவும் கோபமாயிருக்கிறார். நாபாலின் பாவத்திற்கு நிவாரணமாக, அவனுடைய குடும்பத்தாரின் மொத்த இரத்தமும் சிந்தப்படவேண்டுமென்று தாவீது தீர்மானிக்கிறார். கர்த்தர் இப்போது தாவீதை ஆளுகை செய்யவில்லை. தாவீது கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்காமல், சுயமாய்ச் சிந்தித்து, இப்படிப்பட்ட கோபவார்த்தைகளைப் பேசுகிறார்.

நாம் எப்போதுமே கர்த்தருடைய ஆளுகையிலிருக்கவேண்டும். கர்த்தர் நம்மை ஆட்கொள்ளவேண்டும். நாம் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும், நீதிமான்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருந்தாலும், நாம் கர்த்தருடைய ஆளுகையைவிட்டு விலகிப்போய்விட்டால், நம்மை சுயம் ஆளுகை செய்யும். நம்முடைய ஜீவியத்தில் ஆவியின் கனி வெளிப்படாது. நம்முடைய பாவசுபாவம் வெளிப்படும்.

தாவீது நாபாலிடம் தயவு எதிர்பார்த்தார். நன்மையான உதவிகளை எதிர்பார்த்தார். தாவீது எதிர்பார்த்த நன்மையான ஈவுகள் அவருக்கு நாபாலிடத்திலிருந்து கிடைக்கவில்லை. நாபாலின் வார்த்தைகள் தாவீதுக்கு எதிர்பாராத வார்த்தைகளாகவும், அதிர்ச்சியான வார்த்தைகளாகவும் இருக்கிறது. தாவீதும் நாபாலுக்கு எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுக்கவேண்டுமென்று திட்டமிடுகிறார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் நாபாலுக்கு விரோதமாக புறப்பட்டுப்போய், அவரையும், அவருக்குண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைக்காமல் கொன்றுபோடவேண்டும் என்பது தாவீதின் திட்டம். இப்படிப்பட்ட சோதனைகளிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றால், "கர்த்தாவே, சோதனைகளுக்குள்ளே எங்களை வழிநடத்தாதிரும்" என்று பணிவோடு ஜெபம்பண்ணவேண்டும்.

நாபாலைப்போலவே நாபாலின் வேலைக்காரரும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். ஆனாலும் அந்த வேலைக்காரரில் ஒருவன் நல்லவனாயிருக்கிறான். அவன் நாபால் ஆடுகளை மயிர்கத்தரிக்கிற இடத்தில் நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் கவனித்துக்கொண்டிருக்கிறான். தாவீதின் வாலிபர் சொன்ன வார்த்தைகளையும், நாபால் அவர்களுக்கு சொன்ன கோபமான பிரதியுத்தரத்தையும் இந்த வேலைக்காரன் கவனித்துக்கொண்டிருக்கிறான். தாவீது மூலமாய் தங்களுக்கு ஆபத்து வரும் என்பதை இவன் உணருகிறான்.

நாபால் ஒரு முரடன். அவன் ஒரு துராகிருதன். அவனுடைய மனைவி அபிகாயிலோ மகாபுத்திசாலி. இங்கு நடைபெற்ற சம்பவங்களை நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலிடம் சொன்னால், தாவீது மூலமாக வரும் ஆபத்தை தவிர்த்துவிடலாம் என்று வேலைக்காரன் நினைக்கிறான்.

அப்பொழுது வேலைக்காரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலை நோக்கி: "இதோ, நம்முடைய எஜமானுடைய சுகசெய்தி விசாரிக்க தாவீது வனாந்தரதிலிருந்து ஆட்களை அனுப்பினான்; அவர்கள்பேரில் அவர் சீறினார்" (1சாமு 25:14) என்று சொல்லுகிறான்.

அந்த வேலைக்காரன் அபிகாயிலிடம், தாவீதையும், தாவீதின் மனுஷரையும் குறித்து நல்ல வார்த்தைகளை சாட்சியாய்ச் சொல்லுகிறான். வேலைக்காரன் அபிகாயிலை நோக்கி, "அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினதுமில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள்" (1சாமு 25:15,16) என்று சொல்லுகிறான்.

வேலைக்காரன் நாபாலிடம் தன்னுடைய ஆலோசனைகளைச் சொல்லியிருக்கவேண்டும். இவன் நாபாலிடம் தாவீதின் மனுஷரைப்பற்றி நல்ல வார்த்தைகளை சாட்சியாக அறிவித்திருக்கவேண்டும். ஆனால் நாபாலோ இந்த வேலைக்காரனுடைய பேச்சை செவிகொடுத்து கேட்கவில்லை. ஆகையினால் இந்த வேலைக்காரன் அபிகாயிலிடம், நாபாலைக் குறித்து, "இவரோ ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு பேலியாளின் மகனாயிருக்கிறார்" (1சாமு 25:17) என்று சொல்லுகிறான்.

தாவீதின் கோபம் தணியவேண்டும். அப்போதுதான் நாபாலுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் தாவீதின் மூலமாய் வருகிற ஆபத்து குறையும். நாபால் யாருடைய புத்திமதியையும், ஆலோசனையையும் கேட்பதாகயில்லை. நாபாலின் மனைவி அபிகாயில் மகாபுத்திசாலியாயிருக்கிறாள். தன்னுடைய ஆலோசனைகளை நாபால் கேட்காவிட்டாலும், அவனுடைய மனைவி கேட்டு, புத்திசாலித்தனமாக, ஏதாவது நன்மையான காரியங்களை செய்வாள் என்று அந்த வேலைக்காரன் எதிர்பார்க்கிறான்.

வேலைக்காரன் அபிகாயிலிடம், "இப்போதும் நீர் செய்யவேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான்மேலும், அவருடைய வீட்டார் யாவர்மேலும், நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது" (1சாமு 25:17) என்று சொல்லுகிறான். தாவீதின் கோபத்தை தணிக்க ஏதாவது செய்யப்படவேண்டும். அதை அபிகாயிலால்தான் செய்ய முடியும் என்னும் சூழ்நிலை உண்டாயிற்று.

அபிகாயில்
1சாமு 25:18-31

1சாமு 25:18. அப்பொழுது அபிகாயில் தீவிரமாய் இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக்குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் எடுத்து, கழுதைகள்மேல் ஏற்றி,

1சாமு 25:19. தன் வேலைக்காரரைப் பார்த்து: நீங்கள் எனக்கு முன்னே போங்கள்; இதோ, நான் உங்கள் பின்னே வருகிறேன் என்று சொல்லி அனுப்பினாள்; தன் புருஷனாகிய நாபாலுக்கு அதை அறிவிக்கவில்லை.

1சாமு 25:20. அவள் ஒரு கழுதையின்மேல் ஏறி, மலையின் மறைவில் இறங்கிவருகையில், இதோ, தாவீதும் அவன் மனுஷரும் அவளுக்கு எதிராக இறங்கிவந்தார்கள்; அவர்களைச் சந்தித்தாள்.

1சாமு 25:21. தாவீது தன் ஜனங்களை நோக்கி: அவனுக்கு வனாந்தரத்தில் இருக்கிறதையெல்லாம் வீணாகவே காப்பாற்றினேன்; அவனுக்கு உண்டானதிலெல்லாம் ஒன்றும் காணாமற்போனதில்லை; என்றாலும் நன்மைக்குப் பதிலாக அவன் எனக்குத் தீமைசெய்தான்.

1சாமு 25:22. அவனுக்கு உண்டான எல்லாவற்றிலும் சுவரில் நீர்விடும் ஒரு நாயை முதலாய் பொழுதுவிடியுமட்டும் நான் உயிரோடே வைத்தால், தேவன் தாவீதின் சத்துருக்களுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்று சொல்லியிருந்தான்.

1சாமு 25:23. அபிகாயில் தாவீதைக் காண்கையில், தீவிரமாய்க் கழுதையை விட்டு இறங்கி, தாவீதுக்கு நேராகத் தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்து,

1சாமு 25:24. அவன் பாதத்திலே விழுந்து: என் ஆண்டவனே, இந்தப் பாதகம் என்மேல் சுமரட்டும்; உம்முடைய அடியாளுடைய வார்த்தைகளை நீர் கேட்கும்பொருட்டாக உம்முடைய அடியாள் உமது செவிகேட்கப் பேசவேண்டும்.

1சாமு 25:25. என் ஆண்டவனாகிய நீர் நாபால் என்னும் இந்தப் பேலியாளின் மனுஷனை ஒரு பொருட்டாக எண்ணவேண்டாம்; அவன் பெயர் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான்; அவன் பெயர் நாபால், அவனுக்குப் பயித்தியமும் இருக்கிறது; உம்முடைய அடியாளாகிய நானோ, என் ஆண்டவன் அனுப்பின வாலிபரைக் காணவில்லை.

1சாமு 25:26. இப்போது என் ஆண்டவனே, நீர் இரத்தம் சிந்த வரவும், உம்முடைய கை நீதியைச் சரிக்கட்டவும், கர்த்தர் உமக்கு இடங்கொடுக்கவில்லை என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டும், உம்முடைய ஜீவனைக்கொண்டும் சொல்லுகிறேன்; இப்போதும் உம்முடைய சத்துருக்களும், என் ஆண்டவனுக்கு விரோதமாகப் பொல்லாப்புத் தேடுகிறவர்களும், நாபாலைப்போல ஆகக்கடவர்கள்.

1சாமு 25:27. இப்போதும் உமது அடியாள் என் ஆண்டவனுக்குக் கொண்டுவந்த காணிக்கையை ஏற்றுக்கொண்டு, என் ஆண்டவனைப் பின்பற்றுகிற வாலிபருக்குக் கொடுப்பீராக.

1சாமு 25:28. உமது அடியாளின் பாதகத்தை மன்னியும், கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார்; என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே; நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக.

1சாமு 25:29. உம்மைத் துன்பப்படுத்தவும், உம்முடைய பிராணனை வாங்க வகைதேடவும், ஒரு மனுஷன் எழும்பினாலும் என் ஆண்டவனுடைய ஆத்துமா உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிற ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும்; உம்முடைய சத்துருக்களின் ஆத்துமாக்களோ கவணில் வைத்து எறிந்தாற்போல எறியப்பட்டுப்போம்.

1சாமு 25:30. கர்த்தர் உம்மைக்குறித்துச் சொன்ன நன்மையின்படி எல்லாம் இனி என் ஆண்டவனுக்குச் செய்து, இஸ்ரவேலுக்கு அதிபதியாக உம்மை நேமிக்கும்போது,

1சாமு 25:31. நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், என் ஆண்டவனாகிய நீர் பழிவாங்காமலும் இருந்ததுண்டானால், அப்பொழுது என் ஆண்டவனாகிய உமக்குத் துக்கமும் இராது, மன இடறலும் இராது; கர்த்தர் என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும்போது, உம்முடைய அடியாளை நினைப்பீராக என்றாள்.

தாவீது நாபாலையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போட தன்னுடைய மனுஷரோடு வருகிறார். அபிகாயில் மகாபுத்தியுள்ள ஸ்திரீ. தாவீதின் கோபத்தை தணிப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதும், அவரோடு எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசவேண்டும் என்பதும் அபிகாயிலுக்கு தெரிந்திருக்கிறது. நாபாலோ பேலியாளின் மகனாயிருக்கிறான். தாவீதின் வாலிபர் அவனிடத்தில் பேசவந்தபோது, நாபால் அவர்கள்மேல் சீறினான். அபிகாயிலோ தாவீதோடு ஞானமான வார்த்தைகளைப் பேசுவதற்கு ஆயத்தமாயிருக்கிறாள்.

யுத்த ஆயுதங்களை விட ஞானமுள்ள வார்த்தைகளே அதிக பலமுள்ளவை. அபிகாயில் வேலைக்காரன் மூலமாக, நடைபெற்ற சம்பவங்களை அறிந்துகொள்கிறாள். அவள் மகா புத்தியுள்ள ஸ்திரீ. அவள் சிறிதும் காலதாமதம் பண்ணாமல், உடனே சிந்தித்து செயல்படுகிறாள். ஒரு சிலரிடத்தில் புத்தி இருக்கும். ஆனால் அந்தப் புத்தியைப் பயன்பத்தமாட்டார்கள். சோம்பேறியாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு, புத்தி இருந்தும் ஒரு நன்மையும் உண்டாகாது.

ஒரு இரும்பை அடித்து வளைக்க வேண்டுமென்றால், அது சூடாகயிருக்கும் போதே அதை வளைத்துவிடவேண்டும். சூடு குறைந்துவிட்டால் இரும்பை வளைக்க முடியாது. நமக்கு விரோதமாக யாராவது சத்துரு எழும்பினால், அவரோடு சமாதானம் பண்ணுவதற்கு வாய்ப்பிருக்கும்போதே சமாதானம் பண்ணிவிடவேண்டும். சண்டையை முற்றவிடக்கூடாது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் இந்த சத்தியத்தை நமக்கு உபதேசமாய்ச் சொல்லுகிறார். "அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனைபண்ணாமலிருப்பானோ? கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும்போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக்கொள்வானே" (லூக் 14:31,32).

அபிகாயில் மகாபுத்திசாலி. அவள் சூழ்நிலைகளை புரிந்துகொள்கிறாள். நாபாலிடத்தில் இவள் ஆலோசனை கேட்கவில்லை. அபிகாயில் சுயமாக சிந்தித்து செயல்படுகிறாள். தேவையில்லாமல் பிறரிடத்தில் ஆலோசனை கேட்கக்கூடாது. அநேகரிடத்தில் ஆலோசனை கேட்டால், சகலமும் குழப்பமாகிவிடும்.

நாபால் தாவீதுக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறான். நாபாலின் வார்த்தைகளில் துணிகரமும், அக்கிரமமும், அகந்தையும் இருக்கிறது. நாபாலின் பாவத்திற்கு நிவாரணம் தேடவேண்டும். அபிகாயில் தன் புருஷனுடைய பாவத்திற்கு நிவாரணம் தேட ஆயத்தமாயிருக்கிறாள்.

தாவீது நாபாலிடத்தில் எதையெல்லாம் எதிர்பார்த்தாரோ, அதையெல்லாம் மொத்தமாய்க் கொடுப்பதற்கு அபிகாயில் ஆயத்தமாயிருக்கிறாள். அபிகாயில் தீவிரமாய் இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக்குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் எடுத்து, கழுதைகள்மேல் ஏற்றுகிறாள் (1சாமு 25:18).

அபிகாயில் தாவீதுக்கு ஏராளமான வெகுமதிகளை ஆயத்தம்பண்ணுகிறாள். வெகுமதிகளை தாராளமாயும் கொடுக்கிறாள். நாபால் தாவீதின் வாலிபரிடத்தில் "என் அப்பத்தையும், என் தண்ணீரையும் கொடுக்கமாட்டேன்" (1சாமு 25:11) என்று சொன்னான். அபிகாயிலோ அப்பங்களையும், திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஆடுகளையும், மேலும் ஏராளமான வெகுமதிகளையும் தாவீதுக்கு கொடுப்பதற்காக கழுதைகளின்மேல் ஏற்றுகிறாள்.

அபிகாயில் தன் வேலைக்காரரைப் பார்த்து: "நீங்கள் எனக்கு முன்னே போங்கள்; இதோ, நான் உங்கள் பின்னே வருகிறேன்" (1சாமு 25:19) என்று சொல்லி அனுப்புகிறாள்; அவள் தன் புருஷனாகிய நாபாலுக்கு அதை அறிவிக்கவில்லை. நாபாலை பாதுகாப்பதற்குதான் அபிகாயில் இத்தனை வெகுமதிகளையும் தாவீதுக்கு கொடுக்கப்போகிறாள். நாபாலை மாத்திரமல்ல, நாபாலின் வீட்டாரையும் பாதுகாக்கவேண்டுமென்றால், தாவீதின் கோபம் குறையவேண்டும். இல்லையென்றால் தாவீதும் அவருடைய மனுஷரும், நாபாலையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போடுவார்கள்.

ஒரே குடும்பத்திலிருக்கிற புருஷனும் மனைவியும், ஒருவருக்கொருவர் கருத்து ஒருமித்திருக்கவேண்டும். தங்களுடைய குடும்பத்தின் நன்மைகளை விசாரிக்கவேண்டும். குடும்பத்தின் சொத்திற்கு புருஷனும் மனைவியும் சொந்தக்காரர்கள். குடும்பத்தின் சொத்தை ஒருவரும் வீணாக்கக்கூடாது. புருஷனோ அல்லது மனைவியோ, குடும்பத்தின் பொதுவான சொத்தை ஆடம்பரமாகவோ, தாறுமாறாகவோ செலவு செய்து வீணாக்கிவிடக்கூடாது. இவ்வாறு குடும்ப சொத்தை அழிப்பது, புருஷனும் மனைவியும், ஒருவரையொருவர் கொள்ளையிடுவதற்கு சமம்.

அபிகாயில் தன் புருஷனாகிய நாபாலுக்கு அறிவிக்காமல், தாவீதுக்கு ஏராளமான வெகுமதிகளை கொண்டு போகிறாள். அவள் தன்னுடைய புருஷனின் சொத்துக்களை அழிக்கவில்லை. அபிகாயில் தன் புருஷனையும், அவனுக்குண்டான யாவற்றையும் பாதுகாப்பதற்காகவே, இந்த வெகுதிகளை தாவீதுக்கு கொண்டுபோகிறாள். நாபாலின் பாவங்களுக்கு நிவாரணமாக அபிகாயில் இந்தக் காணிக்கைகளை தாவீதுக்கு செலுத்தப்போகிறாள்.

அபிகாயில் ஒரு கழுதையின்மேல் ஏறி, மலையின் மறைவில் இறங்கிவருகிறாள் அப்போது, இதோ, தாவீதும் அவருடைய மனுஷரும் அவளுக்கு எதிராக இறங்கிவருகிறார்கள்; அபிகாயில் அவர்களைச் சந்திக்கிறாள் (1சாமு 25:20).

அபிகாயில் தாவீதைக் காண்கையில், தீவிரமாய்க் கழுதையை விட்டு இறங்கி, தாவீதுக்கு நேராகத் தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்து கொள்கிறாள். அபிகாயில் தாவீதின் பாதத்திலே விழுந்து: "என் ஆண்டவனே, இந்தப் பாதகம் என்மேல் சுமரட்டும்; உம்முடைய அடியாளுடைய வார்த்தைகளை நீர் கேட்கும்பொருட்டாக உம்முடைய அடியாள் உமது செவிகேட்கப் பேசவேண்டும்" (1சாமு 25:23,24) என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறாள்.

அபிகாயில் தாவீதிடம் பணிவான வார்த்தைகளைப் பேசுகிறாள். அந்த வார்த்தைகளை புத்தியோடும் ஞானத்தோடும் சொல்லுகிறாள். நாபால் தாவீதின் வாலிபரிடத்தில் சீறினான். கோபமான வார்த்தைகளைப் பேசினான். நாபாலின் பாவமான வார்த்தைகளுக்கு பரிகாரமாக, அபிகாயில் ஞானமான வார்த்தைகளைப் பேசுகிறாள்.

அபிகாயில் தாவீதுக்கும் நாபாலுக்கும் நடுவே மத்தியஸ்தம்பண்ணுகிற ஸ்திரீயைப்போல செயல்படுகிறாள். இதற்காகவே அபிகாயில் தாவீதை சந்திக்க வருகிறாள். நாபால் அழிந்துபோகக்கூடாது. தாவீதின் கண்களில் நாபாலுக்கு தயவு கிடைக்கவேண்டும். தாவீது நாபாலின் கண்களில் தயவு எதிர்பார்த்தார். ஆனால் நாபாலோ, தாவீதுக்கு தயவு காண்பிக்காமல், தாவீதின் வாலிபரிடத்தில் "தாவீது யார்" என்று ஆணவமாகக் கேட்டான். இப்போதோ நாபாலின் மனைவியாகிய அபிகாயில், தாவீதின் கண்களில் தயவை எதிர்பார்த்து, அவரிடத்தில் வந்திருக்கிறாள்.

அபிகாயில் தாவீதிடம் மரியாதைக்குரிய வார்த்தைகளைப் பேசுகிறாள். தன்னுடைய குடும்பத்தை தாவீதின் கோபத்திற்கு பாதுகாக்கவேண்டும் என்னும் அக்கரை அபிகாயிலிடத்தில் இருக்கிறது. தாவீதும் அவருடைய மனுஷரும் நாபாலுக்கு விரோதமாக கோபத்தோடு வருகிறார்கள். அவர்கள் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். தாவீதின் கோபம் குறையவேண்டும். இதற்கு எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசவேண்டும் என்று மகாபுத்திசாலியான அபிகாயில், ஞானமாய்ச் சிந்தித்து, புத்தியுள்ள வார்த்தைகளைப் பேசுகிறாள்.

அபிகாயில் தாவீதை பார்த்தவுடனே, அவரோடுபேச ஆரம்பித்துவிடவில்லை. அபிகாயில் தாவீதைக் காண்கையில், தீவிரமாய்க் கழுதையை விட்டு இறங்கி, தாவீதுக்கு நேராகத் தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்து, அவருடைய பாதத்திலே விழுகிறாள்.

அபிகாயில் எல்லா தப்பிதங்களையும் தன்மீது ஏற்றுக்கொள்கிறாள். "இந்தப் பாதகம் என்மேல் சுமரட்டும்" என்று அபிகாயில் தாவீதிடம் பணிவோடு சொல்லுகிறாள். நாபாலிடத்தில் குற்றம் இருக்கிறது. ஆனாலும் நாபால் அபிகாயிலின் புருஷன். நாபால் துன்மார்க்கனாயிருந்தாலும், அபிகாயில் தன் புருஷன் மேல் பிரியமாயிருக்கிறாள். தன்னுடைய குடும்ப காரியங்களில் கவனமும் அக்கரையும் செலுத்துகிறாள். தாவீதின் கோபத்தினால் தன்னுடைய குடும்பம் அழிந்துவிடக்கூடாது என்பதை அபிகாயில் நினைவில் வைத்திருக்கிறாள்.

அபிகாயில் தாவீதிடம் தன் புருஷனைப்பற்றிச் சொல்லும்போது, அவனுடைய தீயகுணங்களை எடுத்துச் சொல்லி, அவனை மன்னித்துவிடுமாறு தாவீதிடம் கெஞ்சுகிறாள். அபிகாயில் தாவீதை நோக்கி, "என் ஆண்டவனாகிய நீர் நாபால் என்னும் இந்தப் பேலியாளின் மனுஷனை ஒரு பொருட்டாக எண்ணவேண்டாம்; அவன் பெயர் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான்; அவன் பெயர் நாபால், அவனுக்குப் பயித்தியமும் இருக்கிறது" (1சாமு 25:25) என்று சொல்லுகிறாள். நாபால் என்ன செய்கிறான் என்பது அவனுக்கே தெரியவில்லை. அவனுக்கு பயித்தியமும் இருக்கிறது. ஆகையினால் அவனை தயவாய் மன்னிக்குமாறு அபிகாயில் தாவீதிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறாள்.

தாவீது நாபாலின்மீது கோபமாயிருக்கிறார். இந்தக் கோபத்திற்கு தான் காரணமல்ல என்றும், தனக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது என்றும் அபிகாயில் தாவீதிடத்தில் சொல்லுகிறாள். "உம்முடைய அடியாளாகிய நானோ என் ஆண்டவன் அனுப்பின வாலிபரைக் காணவில்லை" என்றும் அபிகாயில் தாவீதிடத்தில் சொல்லுகிறாள். தாவீது தன் வாலிபரை, நாபாலிடத்தில் அனுப்பினபோது, அபிகாயில் ஒருவேளை அவர்களைப் பார்த்திருந்தால், அப்போதே அவர்கள் மூலமாய் அவள் தாவீதுக்கு சமாதான வார்த்தைகளை சொல்லியிருந்திருப்பாள்.

தாவீது கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறவர். தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றதாயிருக்கிறது. தாவீது ஒருபோதும் குற்றமற்றவர்களுடைய இரத்தத்தை சிந்துவதில்லை. அபிகாயில் தாவீதிடத்தில், "இப்போது என் ஆண்டவனே, நீர் இரத்தம் சிந்த வரவும், உம்முடைய கை நீதியைச் சரிக்கட்டவும், கர்த்தர் உமக்கு இடங்கொடுக்கவில்லை என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டும், உம்முடைய ஜீவனைக்கொண்டும் சொல்லுகிறேன்" (1சாமு 25:26) என்றும் சொல்லுகிறாள்.

தாவீது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர். "என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே" (1சாமு 25:28) என்று அபிகாயில் தாவீதைக் குறித்து சொல்லுகிறாள். தாவீது இஸ்ரவேல் தேசத்தை பாதுகாக்கிறவர். இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்கிறவர். இஸ்ரவேல் தேசத்தாரின் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்.

அபிகாயில் தாவீதிடம் மிகவும் பணிவாகப் பேசுகிறாள். "உமது அடியாளின் பாதகத்தை மன்னியும், கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார்; என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே; நீர்உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக" (1சாமு 25:28) என்று சொல்லுகிறாள்.

தாவீது இப்போது நெருக்கத்திலிருக்கிறார். சவுல் தாவீதின் ஜீவனை பறிக்க வகைதேடிக்கொண்டிருக்கிறார். தாவீதுக்கோ ஒரு பொல்லாப்பும் வராது என்று அபிகாயில் சொல்லுகிறாள். தாவீதுக்கு விரோதமாக எத்தனை சத்துருக்கள் வந்தாலும், அவர்கள் அழிந்துபோவார்கள் என்றும் அபிகாயில் சொல்லுகிறாள். "இப்போதும் உம்முடைய சத்துருக்களும், என் ஆண்டவனுக்கு விரோதமாகப் பொல்லாப்புத் தேடுகிறவர்களும், நாபாலைப்போல ஆகக்கடவர்கள்" (1சாமு 25:26) என்றும் அபிகாயில் தாவீதுக்கு சொல்லுகிறாள்.

கர்த்தர் தாவீதைப் பாதுகாப்பார். தாவீதின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. அபிகாயில் தாவீதின் ஜீவனைப்பற்றிச் சொல்லும்போது, "உம்மைத் துன்பப்படுத்தவும், உம்முடைய பிராணனை வாங்க வகைதேடவும், ஒரு மனுஷன் எழும்பினாலும் என் ஆண்டவனுடைய ஆத்துமா உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிற ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும்" (1சாமு 25:29) என்று சொல்லுகிறாள்.

"அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்" (சங் 66:9).

அபிகாயில் தாவீதிடம், "ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும்" என்று சொல்லுகிற வார்த்தை யூதர்கள் மத்தியிலே பொதுவாக வழங்கப்படுகிற வாக்கியம். அபிகாயில் தாவீதிடம், "என் ஆண்டவனுடைய ஆத்துமா உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிற ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும்" என்று சொல்லுகிறாள். இந்த வாக்கியம், இக்காலத்து ஜீவியத்தையும், இனிமேல் வரப்போகிற பரலோக ஜீவியத்தையும் குறிக்கிறது.

யூதர்கள் மரித்தோர்களை அடக்கம்பண்ணும்போது, அவர்களுடைய கல்லறைகளில், "இந்த ஆத்துமா நம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவிலிருக்கிற ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கிறது" என்று எழுதுவது வழக்கம். யூதர்கள் மரித்தோரின் சரீரத்தை அடக்கம்பண்ணுகிறார்கள். மரித்துப்போனவர்களின் ஆத்துமாக்களோ, தேவனாகிய கர்த்தரோடு, ஜீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கிறது.

கர்த்தரே தாவீதுக்கு அவருடைய சத்துருக்கள்மீது வெற்றியைக் கொடுப்பார். அபிகாயில் இதுபற்றிச் சொல்லும்போது, "உம்முடைய சத்துருக்களின் ஆத்துமாக்களோ கவணில் வைத்து எறிந்தாற்போல எறியப்பட்டுப்போம்" (1சாமு 25:29) என்று சொல்லுகிறாள்.

அபிகாயில் தாவீதிடம் மிகுந்த பணிவோடு பேசுகிறாள். அவள் தன்னுடைய வார்த்தைகளினால் தாவீதை ஆசீர்வதிக்கிறாள். "உமது அடியாளின் பாதகத்தை மன்னியும், கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார்; என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே; நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக" (1சாமு 25:28) என்று சொல்லுகிறாள்.

கர்த்தர் மெய்யாகவே தாவீதை ஆசீர்வதிப்பார் என்றும், அவர் தாவீதை இஸ்ரவேலுக்கு அதிபதியாக நியமிப்பார் என்றும் அபிகாயில் விசுவாசத்தோடு சொல்லுகிறாள். "கர்த்தர் உம்மைக்குறித்துச் சொன்ன நன்மையின்படி எல்லாம் இனி என் ஆண்டவனுக்குச் செய்து, இஸ்ரவேலுக்கு அதிபதியாக உம்மை நேமிக்கும்போது, நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், என் ஆண்டவனாகிய நீர் பழிவாங்காமலும் இருந்ததுண்டானால், அப்பொழுது என் ஆண்டவனாகிய உமக்குத் துக்கமும் இராது, மன இடறலும் இராது; கர்த்தர் என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும்போது, உம்முடைய அடியாளை நினைப்பீராக" (1சாமு 25:30,31) என்று அபிகாயில் தாவீதுக்கு சொல்லுகிறாள்.

தாவீது இப்போது நாபாலுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் தீங்கு செய்தால், பிற்காலத்தில் தாவீது இதைபற்றி நினைத்து மனது வேதனைப்பட வேண்டியது வரும். கர்த்தர் தாவீதை அதிகமாய் ஆசீர்வதிக்கப்போகிறார். பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. கர்த்தரைப் பழிவாங்குவதற்கு அனுமதியாமல், தாவீதே பழிவாங்கினால், பிற்காலத்தில் தாவீதுக்கு துக்கம் வரும். ஆகையினால் தாவீது விருதாவாய் இரத்தம் சிந்தக்கூடாது. அபிகாயில் இதுபோன்ற ஞானமுள்ள வார்த்தைகளையும், புத்தியுள்ள வார்த்தைகளையும் தாவீதுக்கு சொல்லுகிறாள். தாவீதின் கோபம் குறைகிறது. அபிகாயிலின் வார்த்தைகள் தாவீதின் இருதயத்தைத் தொடுகிறது. தாவீது அபிகாயில் சொன்ன வார்த்தைகளை சிந்தித்துப் பார்க்கிறார்.

அபிகாயில் தாவீதைப் பார்க்க வந்தபோது இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக்குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் எடுத்து, கழுதைகள்மேல் ஏற்றி கொண்டு வந்திருக்கிறாள் (1சாமு 25:18).

அபிகாயில் தாவீதிடம் "இப்போதும் உமது அடியாள் என் ஆண்டவனுக்குக் கொண்டுவந்த காணிக்கையை ஏற்றுக்கொண்டு, என் ஆண்டவனைப் பின்பற்றுகிற வாலிபருக்குக் கொடுப்பீராக" (1சாமு 25:27) என்று சொல்லுகிறாள். நாபாலின் பாவத்திற்கு, அபிகாயில் பாவநிவாரண காணிக்கைகளை தாவீதுக்கு செலுத்துகிறாள். தாவீதும் அபிகாயில் தனக்கு கொண்டு வந்ததை அவள் கையிலே வாங்கிக்கொள்கிறார் (1சாமு 25:35).

தாவீது
1சாமு 25:32-35

1சாமு 25:32. அப்பொழுது தாவீது அபிகாயிலை நோக்கி: உன்னை இன்றையதினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

1சாமு 25:33. நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழிவாங்காதபடிக்கும், நீ இன்றையதினம் எனக்குத் தடைபண்ணினபடியினால், நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக.

1சாமு 25:34. நீ தீவிரமாய் என்னைச் சந்திக்க வராமல் இருந்தாயானால், பொழுது விடியுமட்டும் நாபாலுக்கு ஒரு நாயும் உயிரோடே வைக்கப்படுவதில்லை என்று, உனக்குப் பொல்லாப்புச் செய்ய எனக்கு இடங்கொடாதிருக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக் கொண்டு மெய்யாய்ச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

1சாமு 25:35. அவள் தனக்குக் கொண்டுவந்ததைத் தாவீது அவள் கையிலே வாங்கிக்கொண்டு, அவளைப் பார்த்து: நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப் போ; இதோ, நான் உன் சொல்லைக்கேட்டு, உன் முகத்தைப் பார்த்து, இப்படிச் செய்தேன் என்றான்.

தாவீதும் அவருடைய மனுஷரும் நாபாலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகிறார்கள். தாவீதின் மனதிலே நாபால்மீது கோபம் இருக்கிறது. நாபாலையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போடவேண்டுமென்று தாவீது புறப்பட்டுப்போகிறார். அப்போது நாபாலின் மனைவியாகிய அபிகாயில் தாவீதைப் பார்த்து, அவருக்கு புத்தியுள்ள ஆலோசனைகளைச் சொல்லுகிறாள். தாவீது நாபாலின் இரத்தத்தை சிந்தப்போவதற்காக, அபிகாயில் தாவீதை மென்மையான வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறாள்.

"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம். கேட்கிற செவிக்கு, ஞானமாய்க் கடிந்துகொண்டு புத்திசொல்லுகிறவன், பொற்கடுக்கனுக்கும் அபரஞ்சிப் பூஷணத்திற்கும் சரி" (நீதி 25:11,12).

அபிகாயில் தாவீதை ஞானமாய்க் கடிந்துகொண்டு புத்திசொல்லுகிறாள். தாவீதும் அபிகாயிலின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறார். தாவீதின் செவிகள் கேட்கிற செவிகளாகயிருக்கிறது. அவை அடைக்கப்பட்ட செவிகளாயில்லை. இது தாவீதின் சுபாவம்.

"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்" (சங் 141:5).

அபிகாயில் தன்னிடத்தில் வந்து, தனக்கு யோசனை சொன்னது, தனக்கு மிகுந்த நன்மையாயிருக்கிறது என்பதை தாவீது உணர்ந்துகொள்கிறார். அபிகாயில் தன்னிடத்தில் வந்ததற்காகவும், தனக்கு யோசனை சொன்னதற்காகவும் தாவீது அவளை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார்.

அப்பொழுது தாவீது அபிகாயிலை நோக்கி: "உன்னை இன்றையதினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழிவாங்காதபடிக்கும், நீ இன்றையதினம் எனக்குத் தடைபண்ணினபடியினால், நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக" (1சாமு 25:32,33) என்று சொல்லுகிறார்.

தாவீது பாவத்தின் பாதையிலே நடந்தபோது, அவரை அந்த வழியில் போகவிடாதவாறு தடுப்பதற்கு, கர்த்தர் அபிகாயிலை அனுப்பியிருக்கிறார். இதற்காக தாவீது கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறார். அபிகாயில் தாவீதுக்கு ஆலோசனை சொன்னதுபோல, நம்முடைய ஜீவியத்திலும் நம்முடைய சிநேகிதர்கள் நமக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். கர்த்தரே இவர்களை நம்மிடத்தில் ஆலோசனை சொல்லுவதற்கு அனுப்பியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு, நாமும் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

அபிகாயில் ஏற்ற வேளையிலே தாவீதைப் பார்க்க வந்திருக்கிறாள். அவருக்கு தேவையான ஆலோசனைகளை சொல்லியிருக்கிறாள். தாவீது அபிகாயிலுக்கும் நன்றி சொல்லுகிறார். "நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக" என்றும், "நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக" என்றும் தாவீது அபிகாயிலுக்கு சொல்லுகிறார்.

அபிகாயில் தாவீதை சந்திக்க வராவிட்டால், தாவீது நாபாலுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் பொல்லாப்பு செய்திருப்பார். தாவீது கர்த்தருக்கு விரோதமாகவும், மனுஷருக்கு விரோதமாகவும் பாவம் செய்திருப்பார். தான் பாவம் செய்யப்போகிறோம் என்பது தெரியாமலேயே, தாவீது நாபாலுக்கு விரோதமாக புறப்பட்டுப்போகிறார். அபிகாயில் தாவீதை சந்தித்து, அவருடைய பாவத்தையும், பாவத்தின்பின் விளைவுகளையும் தாவீதுக்கு உணர்த்துகிறாள்.

அபிகாயில் தனக்கு செய்த உதவியை தாவீதும் தன்னுடைய வார்த்தைகளினால் அங்கீகரிக்கிறார். தாவீது அபிகாயிலை நோக்கி, "நீ தீவிரமாய் என்னைச் சந்திக்க வராமல் இருந்தாயானால், பொழுது விடியுமட்டும் நாபாலுக்கு ஒரு நாயும் உயிரோடே வைக்கப்படுவதில்லை என்று, உனக்குப் பொல்லாப்புச் செய்ய எனக்கு இடங்கொடாதிருக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக் கொண்டு மெய்யாய்ச் சொல்லுகிறேன்" (1சாமு 25:34) என்று சொல்லுகிறாள்.

தாவீதின் வார்த்தைகள் அபிகாயிலுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. தான் கொண்டு வந்த காணிக்கைகளை அபிகாயில் தாவீதுக்கு கொடுக்கிறாள். தாவீதும் அந்தக் காணிக்கைகளை அவளுடைய கையிலே வாங்கிக்கொள்கிறார். தாவீது அபிகாயிலைப் பார்த்து "நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப் போ; இதோ, நான் உன் சொல்லைக்கேட்டு, உன் முகத்தைப் பார்த்து, இப்படிச் செய்தேன்" (1சாமு 25:35) என்று சொல்லி, அவளை சமாதானத்தோடு அனுப்புகிறார்.

நாபால்
1சாமு 25:36-38

1சாமு 25:36. அபிகாயில் நாபாலிடத்தில் வந்தபோது, இதோ, ராஜவிருந்துக்கு ஒப்பான விருந்து அவன் வீட்டிலே நடந்தது; அவன் இருதயம் களித்திருந்தது; அவன் மிகவும் வெறித்துமிருந்தான்; ஆகையால் பொழுது விடியுமட்டும் சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும், ஒன்றையும் அவனுக்கு அறிவிக்கவில்லை.

1சாமு 25:37. பொழுது விடிந்து, நாபாலின் வெறிதெளிந்தபின்பு, அவன் மனைவி இந்த வர்த்தமானங்களை அவனுக்கு அறிவித்தாள்; அப்பொழுது அவன் இருதயம் அவனுக்குள்ளே செத்து, அவன் கல்லைப்போலானான்.

1சாமு 25:38. கர்த்தர் நாபாலை வாதித்ததினால், ஏறக்குறையப் பத்துநாளுக்குப்பின்பு, அவன் செத்தான்.

அபிகாயில் தாவீதை சந்தித்துவிட்டு தன்னுடைய வீட்டிற்கு திரும்பி வருகிறாள். அப்போது, அவளுடைய வீட்டில் மிகப்பெரிய விருந்து நடைபெறுகிறது. இது ராஜவிருந்துக்கு ஒப்பாயிருக்கிறது. நாபால் குடித்து வெறித்திருக்கிறான். அவனுடைய இருதயம் களித்திருக்கிறது.

தான் தாவீதோடு பேசின வார்த்தைகளை, அபிகாயில் நாபாலுக்கு சொல்ல வேண்டுமென்று விரும்புகிறாள். ஆனால் நாபாலின் செவிகள் கேட்கக்கூடிய நிலமையில் இல்லை. அவன் குடித்து வெறித்திருக்கிறான். ஆகையால் அபிகாயில் பொழுது விடியுமட்டும் சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும், ஒன்றையும் நாபாலுக்கு அறிவிக்கவில்லை *(1சாமு 25:36)*.

நாபாலின் வீட்டில் ராஜவிருந்துக்கு ஒப்பான விருந்து நடைபெறும்போது, அபிகாயில் அவனோடுகூட வீட்டில் இல்லை. நாபால் அதைப்பற்றி கவலைப்பட்டதுபோல தெரியவில்லை.

அது மாத்திரமல்ல, அபிகாயில் தாவீதைப் பார்க்க புறப்பட்டுப்போனபோது, இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக்குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் தன்னோடுகூட எடுத்துக்கொண்டு போனாள். நாபால் அதைப்பற்றியும் கவலைப்பட்டதாக தெரியவில்லை. தன்னுடைய மனைவி தன் வீட்டிலிருக்கிறாளா, இல்லையா என்பதுகூட நாபாலுக்கு தெரியவில்லை. அவன் அந்த அளவுக்கு குடித்து வெறித்திருக்கிறான்.

நாபாலுக்கு திரளான ஐசுவரியம் இருக்கிறது. ஆனால் அந்த ஐசுவரியத்தை தீட்டுப்படுத்தாமல், பரிசுத்தமாய் அனுபவிப்பது எப்படி என்பது அவனுக்கு தெரியவில்லை. கர்த்தருக்கு பிரியமான வழியில், நாபால் தன்னுடைய வீட்டிலே விருந்து கொண்டாடலாம். ஆனால் நாபாலோ முரடனாகவும், துராகிருதனாகவும் இருக்கிறான். அவன் குடித்து வெறித்து, தன்னுடைய சரீரத்தைக் கெடுத்துப்போடுகிறான். தன்னுடைய சிநேகிதருக்கு சந்தோஷமுண்டாகவேண்டும் என்பதற்காக, அவன் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறான்.

நாபால் என்னும் பெயருக்கு மதியீனன் அல்லது பயித்தியம் என்று பொருள். அவன் தன்னுடைய பெயருக்கு தக்க பிரகாரம், மதியீனமாய் நடந்துகொள்கிறான். அதிகமாக குடிக்கிறான். தன்னுடைய சரீர ஆரோக்கியத்தைக் கெடுக்கிறான். நாபாலின் ஐசுவரியம் அவனுக்கு ஆசீர்வாதமாயில்லை. அதுவே அவனுக்கு சாபமாயிருக்கிறது. அதிகமாக குடித்து வெறிக்கிறவர்கள், தங்களுடைய சரீர ஆரோக்கியத்தை கெடுத்துப்போடுகிறார்கள். குடிகாரர்கள் தங்களுடைய ஐசுவரியத்தை அனுபவிக்க முடியாதவாறு சீக்கிரத்தில் செத்துப்போகிறார்கள்.

நாபால் இதுவரையிலும் ஒருவனுக்கும் நன்மை செய்ததில்லை. தன்னுடைய மேய்ப்பரையும், மந்தையையும் பாதுகாத்த தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும், நியாயமாய்க் கொடுக்க வேண்டிய கூலியைக்கூட நாபால் கொடுக்கவில்லை. நாபால் தன்னிடத்தில் வேலை பார்க்கிறவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல், தனக்கு ஐசுவரியத்தை சேமித்து வைக்கிறான். தன்னுடைய விருந்திலே அந்த ஐசுவரியத்தை ஆடம்பரமாக செலவு பண்ணுகிறான்.

விடியற்காலத்திலே நாபாலின் வெறி தெளிகிறது. அப்போது அபிகாயில், தான் தாவீதோடு பேசின வர்த்தமானங்களை, நாபாலுக்கு அறிவிக்கிறாள். அப்பொழுது நாபாலின் இருதயம் அவனுக்குள்ளே செத்துப்போகிறது. அவன் கல்லைப்போல் ஆகிறான். விடியற்காலத்தில் நாபாலுக்கு சுயநினைவு திரும்புகிறது. அவனுடைய குடிவெறி குறைகிறது. இப்போது அபிகாயில் சொல்லுகிற செய்தி நாபாலுக்கு அதிர்ச்சியாயிருக்கிறது.

நாபால் முரடனாயிருந்தாலும், அபிகாயிலின் வார்த்தைகள் அவனை வேதனைப்படுத்துகிறது. அவன் தன் மதியீனத்தை நினைத்து வெட்கப்படுகிறான். தன்னுடைய முரட்டுக்குணத்தினாலும், மதியீனத்தினாலும், நாபால் தனக்கும், தன்னுடைய குடும்பத்தாருக்கும் அழிவை வரவழைத்துக்கொண்டான். அந்த அழிவை அபிகாயில் தன்னுடைய புத்தியுள்ள வார்த்தைகளினாலும், ஞானமுள்ள யோசனைகளினாலும் தவிர்த்துவிடுகிறாள். இந்த வர்த்தமானங்களை கேட்டபோது, நாபாலின் இருதயம் அவனுக்குள்ளே செத்துப்போகிறது. அவன் கல்லைப்போல் ஆகிறான். கர்த்தரும் நாபாலை வாதிக்கிறார். ஏறக்குறைய பத்துநாளைக்குப் பின்பு நாபால் செத்துப்போகிறான்.

அபிகாயில்
1சாமு 25:39-42

1சாமு 25:39. நாபால் செத்துப்போனான் என்று தாவீது கேள்விப்பட்டபோது: என் நிந்தையின் வழக்கை நாபாலின் கையில் விசாரித்து, தம்முடைய அடியானைப் பொல்லாப்புச் செய்யாதபடிக்குத் தடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; கர்த்தர் தாமே நாபாலின் பொல்லாப்பை அவன் தலையின்மேல் திரும்பப்பண்ணினார் என்று சொல்லி, அபிகாயிலை விவாகம்பண்ணுகிறதற்காக அவளோடே பேச, தாவீது ஆட்களை அனுப்பினான்.

1சாமு 25:40. தாவீதின் ஊழியக்காரர் கர்மேலில் இருக்கிற அபிகாயிலண்டைக்கு வந்து, தாவீது உன்னை விவாகம்பண்ண மனதாய், எங்களை உன்னிடத்தில் அனுப்பினார் என்று அவளோடே சொல்லுகிறபோது,

1சாமு 25:41. அவள் எழுந்திருந்து, தரைமட்டும் முகங்குனிந்து, இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள் என்றாள்.

1சாமு 25:42. பின்பு அபிகாயில் தீவிரித்து எழுந்து, ஒரு கழுதையின்மேல் ஏறி, ஐந்து தாதிப்பெண்களைக் கூட்டிக்கொண்டு, தாவீதின் ஸ்தானாபதிகளுக்குப் பின்சென்று போய், அவனுக்கு மனைவியானாள்.

தாவீது அபிகாயிலையும், அவளுடைய யோசனையையும் நேசிக்கிறார். தாவீது ஏற்கெனவே அபிகாயிலைப் பார்த்து, "நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக" என்றும், "நீயும் ஆசீர்வதிப்படுவாயாக" என்றும் சொன்னார். இப்போது "அபிகாயிலின் புருஷன் நாபால் செத்துப்போனான்" என்னும் செய்தியை தாவீது கேள்விப்படுகிறார்.

தாவீதுக்கு நாபாலின்மேல் பிரியமில்லை. ஆனால் அவர் அபிகாயிலின் புத்தியுள்ள ஆலோசனைகள்மீது பிரியமாயிருக்கிறார். நாபால் செத்துப்போனதற்கு அவனுடைய பாவமே காரணம். "கர்த்தர் தாமே நாபாலின் பொல்லாப்பை அவன் தலையின்மேல் திரும்பப்பண்ணினார்" (1சாமு 25:39) என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது அபிகாயிலை ஆசீர்வதிக்கிறார். என் நிந்தையின் வழக்கை நாபாலின் கையில் விசாரித்து, தம்முடைய அடியானைப் பொல்லாப்புச் செய்யாதபடிக்குத் தடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் (1சாமு 25:39) என்று சொல்லி தாவீது அபிகாயிலை ஆசீர்வதிக்கிறார். அபிகாயிலுக்காகவும், அவளுடைய ஆலோசனைகளுக்காகவும் தாவீது கர்த்தரைத் துதிக்கிறார்.

தாவீது அபிகாயிலை விவாகம்பண்ணலாம் என்று தீர்மானிக்கிறார். அபிகாயிலை விவாகம்பண்ணுகிறதற்காக, அவளோடேபேச, தாவீது ஆட்களை அனுப்புகிறார். தாவீதின் ஊழியக்காரர் கர்மேலில் இருக்கிற அபிகாயிலண்டைக்கு வந்து, "தாவீது உன்னை விவாகம்பண்ண மனதாய், எங்களை உன்னிடத்தில் அனுப்பினார்" (1சாமு 25:40) என்று அவளோடே சொல்லுகிறார்கள்.

தாவீது தன்னை விவாகம்பண்ண மனதாயிருக்கிறார் என்னும் வார்த்தை அபிகாயிலுக்கு சந்தோஷமாயிருக்கிறது. தாவீதுக்கு மனைவியாக தான் தகுதியானவளல்ல என்று அபிகாயில் தன்னைத் தாழ்த்துகிறாள். தாவீதின் ஊழியக்காரர் தன்னிடத்தில் விவாக சம்பந்தமான காரியங்களை பேசிக்கொண்டிருக்கும்போதே, அபிகாயில் எழுந்திருந்து தரைமட்டும் முகங்குனிந்து, "இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்" (1சாமு 25:41) என்று சொல்லுகிறாள்.

பின்பு அபிகாயில் தீவிரித்து எழுந்து, ஒரு கழுதையின்மேல் ஏறி, ஐந்து தாதிப்பெண்களைக் கூட்டிக்கொண்டு, தாவீதின் ஸ்தானாபதிகளுக்குப் பின்சென்று போய், தாவீதுக்கு மனைவியாகிறாள் (1சாமு 25:42).

தாவீதுக்கு இப்போது சொந்தமாக வீடு இல்லை. அவர் காடுகளிலும், வனாந்தரத்திலும் சுற்றி அலைந்துகொண்டிருக்கிறார். அபிகாயில் தாவீதுக்கு விசுவாசத்தோடு மனைவியாகிறாள். தாவீதுக்கு இப்போது ஒன்றுமில்லாவிட்டாலும், கர்த்தருடைய வாக்குத்தத்தம் அவருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும் என்று அபிகாயில் நம்புகிறாள்.

அபிகாயில் தாவீதிடம், அவரைப்பற்றி ஒன்றும் விசாரிக்கவில்லை. தாவீதின் பழைய வாழ்க்கையைப்பற்றி அபிகாயிலுக்கு ஒன்றும் தெரியாது. தாவீது ஏற்கெனவே திருமணமானவர். தாவீது சவுலின் குமாரத்தியாகிய மீகாளை ஏற்கெனவே விவாகம்பண்ணியிருக்கிறார். அபிகாயில் இதுபற்றி ஒன்றும் கேட்காமல், அவள் தாவீதுக்கு மனைவியாகிறாள்.

தாவீதின் மனைவிகள் 1சாமு 25:43,44

1சாமு 25:43. யெஸ்ரயேல் ஊரானாகிய அகினோவாமையும் தாவீது விவாகம்பண்ணினான்; அவர்கள் இருவரும் அவனுக்கு மனைவிகளானார்கள்.

1சாமு 25:44. சவுல் தாவீதின் மனைவியாகிய மீகாள் என்னும் தன் குமாரத்தியைக் காலீம் ஊரானாகிய லாயீசின் குமாரனான பல்த்திக்குக் கொடுத்திருந்தான்.

இந்த வசனப்பகுதியில் தாவீதின் மனைவிகளைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது அபிகாயிலை விவாகம்பண்ணுவதற்கு முன்பாகவே, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை விவாகம்பண்ணியிருக்கிறார். மீகாள் தாவீதுக்கு, அவருடைய வாலிபகாலத்தில் மனைவியானவள். ஆனால் சவுல் தாவீதின் மனைவியாகிய மீகாள் என்னும் தன் குமாரத்தியைக் காலீம் ஊரானாகிய லாயீசின் குமாரனான பல்த்திக்குக் கொடுத்துவிடுகிறார் (1சாமு 25:44).

சவுலுக்கு தாவீதின்மேல் கோபமுண்டாயிற்று. ஆகையினால் தாவீதின் மனைவியாகிய மீகாளை, அவர் வேறொருவனுக்கு மனைவியாகக் கொடுக்கிறார். சவுல் இப்போது தாவீதுக்கு மாமனாரல்ல. ஒருவேளை மீகாள் இப்போது தனக்கு மனைவியல்ல என்று நினைத்து, தாவீது அபிகாயிலை விவாகம்பண்ண மனதாயிருந்திருக்கலாம்.

அபிகாயிலைத் தவிர தாவீதுக்கு வேறொரு மனைவியும் இருக்கிறாள். யெஸ்ரயேல் ஊரானாகிய அகினோவாமையும் தாவீது விவாகம்பண்ணுகிறார்; அவர்கள் இருவரும் தாவீதுக்கு மனைவிகளாகிறார்கள் (1சாமு 25:43). தாவீது அபிகாயிலை விவாகம்பண்ணுவதற்கு முன்பாகவே, அவர் அகினோவாமை விவாகம்பண்ணியிருக்க வேண்டும். அகினோவாமின் பெயர், அபிகாயிலின் பெயருக்கு முன்னாக சொல்லப்பட்டிருக்கிறது.

"அங்கே தாவீதும், அவன் மனுஷரும், அவரவர் வீட்டாரும், தாவீதோடேகூட அவன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊரானாகிய அகினோவாமும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊரானாகிய அபிகாயிலும், காத்பட்டணத்தில் ஆகீசிடத்தில் தங்கியிருந்தார்கள்" (1சாமு 27:3).

தாவீதின் காலத்தில், இஸ்ரவேல் தேசத்தார் மத்தியிலே, புருஷர், பல மனைவிகளை விவாகம்பண்ணும் பழக்கம் இருக்கிறது. தாவீது அந்தப் பழக்கத்தை பின்பற்றி பல மனைவிகளை விவாகம்பண்ணுகிறார். சவுல் தன்னை வஞ்சித்துவிட்டார் என்பதற்காக, தாவீது இரண்டாம் மனைவியை விவாகம் செய்திருக்கலாம். ஆனாலும் மற்றவர்கள் நமக்கு தீங்கு செய்கிறார்கள் என்பதற்காக, நாமும் தீங்கு செய்யலாம் என்று தீர்மானம்பண்ணக்கூடாது. மற்றவர்கள் நம்மை வஞ்சிக்கிறார்கள் என்பதற்காக, நாம் மற்றவர்களை வஞ்சிக்கக்கூடாது.

26 அதிகாரம்

சவுல் மறுபடியுமாய் தாவீதைக் கொன்றுபோட முயற்சி மேற்கொள்கிறார். தாவீது ஆகிலா மேட்டிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார் என்று சீப் ஊரார் சவுலுக்கு சொல்லுகிறார்கள் (1சாமு 26:1). சவுல் தாவீதைத் தேடும்படிக்கு சீப் வனாந்தரத்திற்கு புறப்பட்டுப்போகிறார் (1சாமு 26:2,3).

சவுல் தன்னைப் பிடிக்க வருகிறார் என்பதை, தாவீது தன்னுடைய வேவுகாரர் மூலமாய் அறிந்துகொள்கிறார் (1சாமு 26:4). சவுல் பாளயமிறங்கியிருக்கிற இடத்தை தாவீது பார்க்கிறார் (1சாமு 26:5). தாவீதும், அபிசாயும், சவுல் தங்கியிருக்கிற பாளயத்திற்கு போகிறார்கள். அங்கே சவுலும் அவருடைய ஜனங்களும் படுத்துக்கொண்டிருக்கிறார்கள் (1சாமு 26:6,7).

சவுலைக் கொன்றுபோடட்டுமா என்று அபிசாய் தாவீதைப் பார்த்து கேட்கும்போது, தாவீது அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. தாவீது சவுலின் தலைமாட்டிலிருக்கிற ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொள்கிறார் (1சாமு 26:8-12).

சவுலைக் கொன்றுபோடுவதற்கு, தனக்கு வாய்ப்பு கிடைத்தபோதிலும், தாவீது அதைப் பயன்படுத்தி அவரைக் கொன்றுபோடவில்லை. தாவீது இதை உறுதிபண்ணுவதற்காக, சவுலின் ஈட்டியை அவருக்கு அடையாளமாய்க் காண்பிக்கிறார் (1சாமு 26:13-20).

சவுல் தன்னுடைய தப்பிதத்தை உணருகிறார். தான் இனிமேல் தாவீதை துன்பப்படுத்தப்போவதில்லை என்று சவுல் வாக்குப்பண்ணுகிறார் (1சாமு 26:21-25).

சவுல்
1சாமு 26:1-5

1சாமு 26:1. பின்பு சீப்ஊரார் கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து: தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளித்துக்கொண்டிருக்கிறான்.

1சாமு 26:2. அப்பொழுது சவுல்: சீப்வனாந்தரத்திலே தாவீதைத் தேடும்படி எழுந்து, இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேரோடுங்கூட, சீப்வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போனான்.

1சாமு 26:3. சவுல் எஷிமோனுக்கு எதிரே வழியண்டையிலிருக்கிற ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினான்; தாவீது வனாந்தரத்தில் தங்கி, சவுல் தன்னைத் தொடர்ந்து வனாந்தரத்திற்கு வருகிறதைக் கண்டு,

1சாமு 26:4. தாவீது வேவுகாரரை அனுப்பி, சவுல் வந்தது நிச்சயம் என்று அறிந்துகொண்டான்.

1சாமு 26:5. பின்பு தாவீது எழுந்து, சவுல் பாளயமிறங்கின இடத்திற்குப்போய், சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேர் என்னும் அவன் படைத்தலைவனும் படுத்துக்கொண்டிருக்கிற இடத்தைப் பார்த்தான்; சவுல் இரதங்களிருக்கிற இடத்திலே படுத்துக்கொண்டிருந்தான்; ஜனங்கள் அவனைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருந்தார்கள்.

தாவீது எங்கே வருகிறார், எங்கே போகிறார், எங்கே தங்கியிருக்கிறார் என்பதை சொல்லுவதற்கு சவுலுக்கு வேவுகாரர் இருக்கிறார்கள். சவுல் இப்போது கிபியாவிலிருக்கிறார். அப்போது சீப் ஊரார் சவுலிடத்தில் வருகிறார்கள். அவர்கள் சவுலைப் பார்த்து, "தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளித்துக்கொண்டிருக்கிறார்" (1சாமு 26:1) என்று சொல்லுகிறார்கள்.

தாவீது இதற்கு முன்பு இருந்த அதே இடத்திலே, இப்போதும் இருக்கிறார். சீப் ஊரார் தாவீதை வஞ்சிக்கிறார்கள். "பின்பு சீப் ஊரார் கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து: தாவீது எங்களிடத்தில் எஷிமோனுக்குத் தெற்கே ஆகிலா என்னும் மலைக்காட்டிலுள்ள அரணிப்பான இடங்களில் ஒளித்துக்கொண்டிருக்கிறான் அல்லவா?" (1சாமு 23:19) என்று ஏற்கனவே சொன்னார்கள்.

சவுல் இதற்கு முன்பு தாவீதை பிடிக்கப்போனபோது அவரால் தாவீதைப் பிடிக்க முடியவில்லை. தாவீது சவுலுடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்டு, சவுலைக் கொல்லாமல் விட்டுவிட்டார். அப்போது சவுல் தாவீதைக் குறித்து நல்ல வார்த்தைகளைச் சொன்னார்.

"தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லி முடிந்தபின்பு, சவுல்: என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா என்று சொல்லி, சத்தமிட்டு அழுது, தாவீதைப் பார்த்து: நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமைசெய்தேன். நீ எனக்கு நன்மைசெய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்றுபோடவில்லை" (1சாமு 24:16-18).

சவுல் தாவீதைக் குறித்து நல்ல வார்த்தைகளைச் சொன்னாலும், அவர் இன்னும் மனந்திரும்பவில்லை. சவுலின் பாவங்கள் அவருடைய இருதயத்திற்குள் வேர்பற்றியிருக்கிறது. இப்போது மறுபடியும், சவுலின் மனதிலே, தாவீதைப் பிடித்து கொன்றுபோடவேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆனாலும் சவுல் இதுவரையிலும், தாவீதைப் பிடிக்க ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அவர் கிபியாவிலே தன்னுடைய வேலைகளை கவனித்துக்கொண்டிருக்கிறார்.

அப்போது, சீப் ஊரார், கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து தாவீதைப்பற்றிய செய்தியை சொல்லுகிறார்கள். சீப் ஊரார் சவுலைப் பார்த்து, தாவீதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையென்றால், சவுல் தாவீதைப் பிடிக்க போகமாட்டார். சவுல் தன்னுடைய ராஜாங்க வேலைகளை கவனித்துக்கொண்டிருப்பார். சீப் ஊராரோ, சவுலுக்கு நன்மை செய்வதாக நினைத்து, அவரை பாவத்தின் பாதையிலே வழிநடத்துகிறார்கள்.

சீப் ஊரார் சவுலிடத்தில் தாவீதைப்பற்றிச் சொன்னபோது, சவுலின் மனதிலே தாவீதைப் பிடிக்க வேண்டும் என்னும் எண்ணம் மறுபடியும் உண்டாயிற்று. அப்பொழுது சவுல்: சீப்வனாந்தரத்திலே தாவீதைத் தேடும்படி எழுந்து, இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேரோடுங்கூட, சீப்வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போகிறார் (1சாமு 26:2).

சவுலும் அவருடைய மனுஷரும் சீப் வனாந்தரத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை தாவீது, தன்னுடைய வேவுகாரர் மூலமாய் அறிந்துகொள்கிறார். தாவீது எங்கே போகிறார், எங்கே வருகிறார் என்பதை, சவுல் தன்னுடைய வேவுகாரர் மூலமாய் விசாரிப்பதுபோல, தாவீதும், தன்னுடைய வேவுகாரர் மூலமாய், சவுலின் போக்கையும் வரத்தையும் விசாரித்து அறிந்துகொள்கிறார்.

சவுல் எஷிமோனுக்கு எதிரே வழியண்டையிலிருக்கிற ஆகிலா மேட்டிலே பாளயமிறங்கியிருக்கிறார். தாவீது வனாந்தரத்தில் தங்கி, சவுல் தன்னைத் தொடர்ந்து வனாந்தரத்திற்கு வருகிறதைக் காண்கிறார். தாவீது வேவுகாரரை அனுப்பி, சவுல் வந்தது நிச்சயம் என்று அறிந்துகொள்கிறார் (1சாமு 26:3,4).

தாவீது தன்னுடைய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். சவுலைக் கொன்றுபோடவேண்டும் என்பது தாவீதின் நோக்கமல்ல. தாவீது தனக்கு பாதுகாப்பான வனாந்தரத்திலே தங்கியிருக்கிறார். தாவீது சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், வனாந்தரத்திலே அமைதியாகவும் பாதுகாப்பாகவும் தங்கியிருக்கிறார். சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், பாதுகாப்பான இடத்திலே அமைதியாக தங்கியிருப்பதற்கு அதிகமான தைரியம் வேண்டும். வீரமும் விவேகமும் வேண்டும்.

தாவீது வனாந்தரத்திலே, அமைதியாக தங்கியிருந்தாலும், தனக்கு வரும் ஆபத்துக்களை அறிந்துகொள்ள, அவர் வேவுகாரரை நியமித்திருக்கிறார். தாவீதின் வேவுகாரர், சவுலின் போக்கையும் வரத்தையும் தாவீதுக்கு அறிவிக்கிறார்கள். சவுலும், அவருடைய மனுஷரும் ஆகிலா மேட்டிலே பாளயமிறங்கியிருப்பதை தாவீது அறிந்துகொள்கிறார்.

சவுல் தனக்கு விரோதமாக வருவதை தாவீதால் நம்பமுடியவில்லை. தாவீது ஏற்கெனவே சவுலைக் கொன்றுபோடாமல் அவரை தப்பவிட்டிருக்கிறார். சவுலும் தாவீதிடம் அன்பான வார்த்தைகளை பேசினார். ஆகையினால் சவுல் மனந்திரும்பியிருப்பார் என்றும், அவர் மறுபடியும் தனக்கு விரோதமாய் வரமாட்டார் என்றும் தாவீது நிச்சயமாய் நம்புகிறார். ஆனால் இப்போதோ சவுலும், அவருடைய மனுஷரும் தனக்கு விரோதமாக வருகிறதைக் காண்கிறார்.

தாவீது சவுல்மீது வைத்திருந்த நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. தாவீது சவுலை நம்பினார். ஆனால் சவுலோ தாவீதைப் பிடிக்க வந்துகொண்டிருக்கிறார். சவுல் மெய்யாகவே தனக்கு விரோதமாக வருகிறாரா அல்லது, அது வதந்தியா, கற்பனையா என்பதை உறுதிபண்ணிக்கொள்ள தாவீது விரும்புகிறார். இதற்காக தாவீது தன் வேவுகாரரை அனுப்புகிறார். சவுல் வந்தது நிச்சயம் என்பதை தாவீது தன் வேவுகாரர் மூலமாய் அறிந்துகொள்கிறார்.

பின்பு தாவீது எழுந்து, சவுல் பாளயமிறங்கியிருக்கிற இடத்திற்குப் போகிறார். சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேர் என்னும் அவருடைய படைத்தலைவனும் படுத்துக்கொண்டிருக்கிற இடத்தை தாவீது தன் கண்களால் பிரத்தியட்சமாகப் பார்க்கிறார். சவுல் இரதங்களிருக்கிற இடத்திலே படுத்துக்கொண்டிருக்கிறார்; ஜனங்கள் சவுலைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள் (1சாமு 26:5).

தாவீதும் அபிசாயும் 1சாமு 26:6-12

1சாமு 26:6. தாவீது ஏத்தியனாகிய அகிமெலேக்கையும், செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமாகிய அபிசாயையும் பார்த்து: என்னோடே கூடச் சவுலிடத்திற்குப் பாளயத்தில் இறங்கிவருகிறவன் யார் என்றதற்கு, அபிசாய்: நான் உம்மோடே கூட வருகிறேன் என்றான்.

1சாமு 26:7. அப்படியே தாவீதும் அபிசாயும் இராத்திரியிலே அந்த ஜனங்களுக்குள்ளே வந்தார்கள்; இதோ, சவுல் இரதங்களிருக்கிற இடத்திலே படுத்து நித்திரைபண்ணினான்; அவன் தலைமாட்டில் அவனுடைய ஈட்டி நிலத்திலே குத்தியிருந்தது; அவனைச் சுற்றிலும் அப்னேரும் ஜனங்களும் படுத்துக்கொண்டிருந்தார்கள்.

1சாமு 26:8. அப்பொழுது அபிசாய் தாவீதைப் பார்த்து: இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாகக் குத்தாமல், ஒரே குத்தாக நிலத்தில் உருவக் குத்தட்டுமா என்றான்.

1சாமு 26:9. தாவீது அபிசாயைப் பார்த்து: அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர்மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற்போகிறவன் யார்? என்று சொன்னான்.

1சாமு 26:10. பின்னும் தாவீது: கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்குப்போய் மாண்டாலொழிய,

1சாமு 26:11. நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இப்போதும் அவர் தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டு போவோம் என்றான்.

1சாமு 26:12. தாவீது சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும், தண்ணீர்ச்செம்பையும் எடுத்துக்கொண்டபின்பு, புறப்பட்டுப் போனார்கள்; அதை ஒருவரும் காணவில்லை, அறியவுமில்லை, ஒருவரும் விழித்துக்கொள்ளவுமில்லை; கர்த்தர் அவர்களுக்கு அயர்ந்த நித்திரை வருவித்ததினால் அவர்களெல்லாரும் தூங்கினார்கள்.

தாவீது இரவுவேளையிலே, சவுல் பாளயமிறங்கியிருக்கிற இடத்திற்குப் போகவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அகிமெலேக்கும், அபிசாயும் தாவீதுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். தாவீது ஏத்தியனாகிய அகிமெலேக்கையும், செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமாகிய அபிசாயையும் பார்த்து: "என்னோடேகூடச் சவுலிடத்திற்குப் பாளயத்தில் இறங்கிவருகிறவன் யார்" என்று கேட்கிறார். அதற்கு, அபிசாய்: "நான் உம்மோடே கூட வருகிறேன்" என்று சொல்லுகிறான் (1சாமு 26:6).

அபிசாய் தாவீதுக்கு உறவினன். தாவீதுக்கு கர்த்தர் துணையாயிருக்கிறார். சவுலோடுகூட இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேர் இருக்கிறார்கள். ஆனாலும் தாவீது கர்த்தரை நம்பி சவுலின் பாளயத்திற்குப் போகிறார். கிதியோன் சத்துருவின் பாளயத்திற்கு கர்த்தரை நம்பி போனதுபோல, தாவீதும் கர்த்தரை நம்பி சவுலின் பாளயத்திற்குப் போகிறார்.

அப்படியே தாவீதும் அபிசாயும் இராத்திரியிலே அந்த ஜனங்களுக்குள்ளே வருகிறார்கள்; இதோ, சவுல் இரதங்களிருக்கிற இடத்திலே படுத்து நித்திரைபண்ணுகிறார்; அவருடைய தலைமாட்டில் அவருடைய ஈட்டி நிலத்திலே குத்தியிருக்கிறது; சவுலைச் சுற்றிலும் அப்னேரும் ஜனங்களும் படுத்துக்கொண்டிருக்கிறார்கள் (1சாமு 26:7).

சவுலின் வீரர்கள் அவரைப் பாதுகாக்கவேண்டும். அவர்கள் நித்திரை பண்ணக்கூடாது. ஆனால் அவர்கள் தங்கள் கடமையை மறந்து, சவுலைப் பாதுகாக்காமல் நித்திரைபண்ணுகிறார்கள். ஒருவரும் விழித்துக்கொள்ளவில்லை. கர்த்தர் அவர்களுக்கு அயர்ந்த நித்திரை வருவித்ததினால், அவர்கள் எல்லோரும் தூங்குகிறார்கள் (1சாமு 26:12).

சவுலும், அவருடைய மனுஷரும், கர்த்தருடைய சித்தத்தினால் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தூங்குவது தாவீதுக்கு சாதகமாயிருக்கிறது. அந்த இராத்திரியிலே, தாவீதும் அபிசாயும், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், சவுலின் ஜனங்களுக்குள்ளே வருகிறார்கள். இருவரும் நடக்கிறார்கள், பேசுகிறார்கள். ஆனாலும் சவுலோ அல்லது அவருடைய மனுஷரோ ஒருவரும் விழித்துக்கொள்ளவில்லை. அவர்கள் எல்லோரும் தூங்குகிறார்கள்.

சவுலிடத்தில் ஆயுதமில்லை. அவருடைய ஈட்டி, அவருடைய தலைமாட்டில் நிலத்திலே குத்தியிருக்கிறது. சவுலும் தூங்குகிறார். அவரைப் பாதுகாக்கவேண்டிய அப்னேரும், சவுலின் மனுஷரும் தூங்குகிறார்கள். சவுலுக்கும் அவருடைய மனுஷருக்கும் பாதுகாப்புமில்லை, உதவியுமில்லை. கர்த்தர் ஒரு மனுஷனை பாதுகாக்கவில்லையென்றால், அவனுக்கு மெய்யான பாதுகாப்பு ஒன்றுமே இல்லை.

தாவீதும் அபிசாயும், எல்லோரும் தூங்குவதைப் பார்க்கிறார்கள். அப்பொழுது அபிசாய் தாவீதைப் பார்த்து: "இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாகக் குத்தாமல், ஒரே குத்தாக நிலத்தில் உருவக் குத்தட்டுமா" (1சாமு 26:8) என்று கேட்கிறான்.

சவுல் தூங்குவது கர்த்தருடைய சித்தம் என்று அபிசாய் நினைக்கிறான். சவுலைக் கொன்றுபோடுவதற்கு சூழ்நிலை சாதகமாகயிருப்பதினால், இந்த சூழ்நிலையை தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று அபிசாய் நினைக்கிறான். ஆனாலும் தாவீதின் அனுமதியில்லாமல் அபிசாய் எதையும் செய்ய துணியவில்லை. அபிசாய் சவுலைக் கொன்றுபோடுவதற்கு தாவீதின் அனுமதியைக் கேட்கிறான்.

தாவீது, சவுலைக் கொன்றுபோட அபிசாயிக்கு அனுமதி கொடுக்கவில்லை. தாவீது அபிசாயைப் பார்த்து: "அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர்மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற்போகிறவன் யார்?" (1சாமு 26:9) என்று சொல்லுகிறார்.

சவுலைக் கொல்லுகிறவன்மேல் குற்றம் வரும். தாவீது தன்னுடைய மனச்சாட்சிக்கு பயப்படுகிறார். சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். சவுலைக் கொல்லுவது பாவம். சவுலைக் கொன்ற குற்றவுணர்வு தாவீதின் மனதை வருத்தப்பட வைக்கும். ஆகையினால் சவுலைக் கொல்லக்கூடாது என்று தாவீது அபிசாயிக்கு கட்டளைகொடுக்கிறார். தாவீது தன்னுடைய பாதுகாப்பைவிட, தன்னுடைய சத்துரு அழிந்துபோகவேண்டும் என்பதைவிட, தன்னுடைய மனச்சாட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். தன்னுடைய மனதில் ஏற்படும் குற்றவுணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

தாவீது சவுலைக் கொன்றுபோடாவிட்டாலும், சவுல் செத்துப்போவது கர்த்தருக்கு சித்தமானால், கர்த்தரே சவுலைக் கொன்றுபோடுவார். அது மாத்திரமல்ல, இந்தப் பூமியில் பிறந்த எல்லா மனுஷரும், அவரவர்களுக்குரிய காலம் வரும்போது, அவர்கள் மரிக்க வேண்டும். அதன் பிரகாரம் சவுலும் ஒருநாள் மரித்துப்போவார். அப்படிப்பட்ட மரணமே சவுலுக்கு வரவேண்டும் என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது அபிசாயைப் பார்த்து, சவுலின் மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்குப்போய் மாண்டாலொழிய, நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 26:10,11) என்று சொல்லுகிறார்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. கர்த்தர் தமக்கு ஏற்றவேளையிலே, தமக்கு சித்தமான பிரகாரம், தம்முடைய சத்துருக்களை பழிவாங்குவார். அதுவரையிலும் நாமும் பொருத்துக்கொள்ளவேண்டும். கர்த்தருக்கு சித்தமான காலத்திற்காக நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நம்முடைய பொறுமை நீடிய பொறுமையாயிருக்கவேண்டும்.

சவுலைக் கொன்றுபோட தாவீது அபிசாயிக்கு அனுமதி கொடுக்கவில்லை. சவுலைக் கொன்றுபோடுவது தாவீதின் நோக்கமுமல்ல. தன்னுடைய மனதை சவுலுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று தாவீது விரும்புகிறார். இதற்காக தாவீதும் அபிசாயும், சவுலின் தலைமாட்டிலிருக்கிற ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்டு போகிறார்கள். இது சவுலுக்கோ, அவருடைய மனுஷருக்கோ தெரியாது. அவர்கள் எல்லோரும் நித்திரையாயிருக்கிறார்கள்.

தாவீது சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும், தண்ணீர்ச்செம்பையும் எடுத்துக்கொண்டபின்பு, புறப்பட்டுப் போகிறார்கள்; அதை ஒருவரும் காணவில்லை, அறியவுமில்லை, ஒருவரும் விழித்துக்கொள்ளவுமில்லை; கர்த்தர் அவர்களுக்கு அயர்ந்த நித்திரை வருவித்ததினால் அவர்களெல்லாரும் தூங்குகிறார்கள் (1சாமு 26:12).

தாவீதும் சவுலும்
1சாமு 26:13-20

1சாமு 26:13. தாவீது கடந்து, அந்தப் பக்கத்திற்குப்போய், தங்களுக்கும் அவர்களுக்கும் நடுவே போந்த இடமுண்டாக, தூரத்திலிருக்கிற மலையின் கொடுமுடியிலே,

1சாமு 26:14. ஜனங்களுக்கும் நேரின் குமாரனாகிய அப்னேருக்கும் நேராக நின்று கூப்பிட்டு: அப்னேரே, உத்தரவு சொல்லமாட்டீரா என்றான்; அதற்கு அப்னேர்: ராஜாவுக்கு நேராகக் கூக்குரலிடுகிற நீ யார் என்றான்.

1சாமு 26:15. அப்பொழுது தாவீது அப்னேரை நோக்கி: நீர் வீரன் அல்லவா? இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் யார்? பின்னை நீர் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் காக்காமற்போனதென்ன? ஜனத்தில் ஒருவன் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே.

1சாமு 26:16. நீர் செய்த இந்தக் காரியம் நல்லதல்ல; கர்த்தர் அபிஷேகம் பண்ணின உங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற்போனபடியினால், நீங்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள்; இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும் என்றான்.

1சாமு 26:17. அப்பொழுது சவுல்: தாவீதின் சத்தத்தை அறிந்து, என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்லவா என்றான். அதற்குத் தாவீது: ராஜாவாகிய என் ஆண்டவனே, இது என் சத்தந்தான் என்று சொல்லி,

1சாமு 26:18. பின்னும்: என் ஆண்டவனாகிய நீர் உம்முடைய அடியானை இப்படிப் பின்தொடருகிறது என்ன? நான் என்னசெய்தேன்? என்னிடத்தில் என்னபொல்லாப்பு இருக்கிறது?

1சாமு 26:19. இப்பொழுது ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக; கர்த்தர் உம்மை எனக்கு விரோதமாக எடுத்துவிட்டதுண்டானால், அதற்கு அவர்காணிக்கையை ஏற்றுக் கொள்வாராக; மனுப்புத்திரர் அதைச் செய்தார்களேயாகில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்படக் கடவர்கள்; அவர்கள்: நீ போய்; அந்நிய தேவர்களைச் சேவி என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு, துரத்திவிட்டார்களே.

1சாமு 26:20. இப்போதும் கர்த்தருடைய சமுகத்தில் என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக; மலைகளில் ஒரு கவுதாரியை வேட்டையாடுகிறது போல, இஸ்ரவேலின் ராஜா ஒரு தெள்ளுப்பூச்சியைத் தேடவந்தாரோ என்றான்.

தாவீதும் அபிசாயும் சவுலின் தலைமாட்டிலிருந்த ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் எடுத்துக்கொண்ட பின்பு, புறப்பட்டுப்போகிறார்கள். சவுலும் அவருடைய மனுஷரும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். சவுலோ அல்லது அவருடைய மனுஷரோ விழித்துக்கொண்டால், தாவீதைப் பிடித்து கொன்றுபோடுவார்கள். ஆனாலும் தாவீது சவுலோடு பேசவேண்டுமென்று விரும்புகிறார்.

சவுல் விழித்துக்கொண்ட பின்பு, தன்னை அவரால் பிடிக்க முடியாதபடி, தாவீது பாதுகாப்பான இடத்திற்குப்போகிறார். அந்த இடம் சவுல் பாளயமிறங்கியிருக்கிற இடத்திற்கு அருகாமையிலிருக்கிறது. இருவரும் பேசிக்கொள்வது அவர்களுடைய செவிகளுக்கு கேட்கவேண்டும். ஆகையினால் தாவீது அதிக தூரத்திற்கும் போகக்கூடாது. மிகவும் அருகாமையிலும் இருக்கக்கூடாது. தாவீது தனக்கு பாதுகாப்பான இடத்தைத் தேடுகிறார்.

சவுல் பாளயமிறங்கியிருக்கிற மலையிலே ஒரு கொடுமுடி இருக்கிறது. தாவீது, சவுல் தூங்குகிற இடத்தைக் கடந்து, அந்தப் பக்கத்திற்குப்போய், தனக்கும் அவர்களுக்கும் நடுவே போந்த இடமுண்டாக, தூரத்திலிருக்கிற மலையின் கொடுமுடியிலே போயிருக்கிறார். தாவீது அங்கே இருந்து ஜனங்களுக்கும் நேரின் குமாரனாகிய அப்னேருக்கும் நேராக நின்று கூப்பிட்டு: "அப்னேரே, உத்தரவு சொல்லமாட்டீரா" என்று கேட்கிறார்; அதற்கு அப்னேர்: "ராஜாவுக்கு நேராகக் கூக்குரலிடுகிற நீ யார்" (1சாமு 26:13,14) என்று கேட்கிறான்.

சவுலும் அவருடைய மனுஷரும் தாவீதின் வார்த்தைகளைக் கேட்க மாத்திரமே முடியும். அவர்களால் தாவீதைப் பிடிக்ககூடாதபடிக்கு, தாவீது தூரத்திலிருக்கிற மலையின் கொடுமுடியிலே ஏறி நிற்கிறார். தாவீது உயரத்திலிருந்து, சவுலின் படைத்தளபதியாகிய அப்னேரைக் கூப்பிடுகிறார். சவுலின் பாளயத்தில் நடைபெற்ற சம்பவத்தை தாவீது அப்னேருக்கு சொல்லுகிறார்.

தாவீது முதலில் சவுலை எழுப்பாமல், அப்னேரை எழுப்புகிறார். அப்னேர் சவுலின் படைத்தளபதி. சவுலைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அப்னேருக்கு உள்ளது. ஆனால் அப்னேரோ சவுலைப் பாதுகாக்காமல் தூங்கிவிட்டார். அப்னேர் தூங்கியதைப் பார்த்து, சவுலைப் பாதுகாக்கவேண்டிய அவருடைய மனுஷரும் தூங்கிவிட்டார்கள். ஆகையினால் அப்பனேரின் தப்பிதத்தை உணர்த்துவதற்காக தாவீது முதலில் அப்னேரைக் கூப்பிடுகிறார்.

தாவீது அப்னேருக்கு நேராக, "அப்னேரே உத்தரவு சொல்லமாட்டீரா" என்று கேட்கிறார். தன்னுடைய பெயரை சொல்லி கூப்பிடுவது யார் என்பது அப்னேருக்கு தெரியவில்லை. ராஜா தூங்கிக்கொண்டிருக்கும்போது, இதுபோல யார் சத்தமிட்டுக்கூப்பிட்டாலும், ராஜாவின் தூக்கம் கலைந்துபோகும். சவுலின் உயிரைப்பற்றி அப்னேருக்கு கவலையில்லை. ஆனால் சவுலின் தூக்கத்தைப்பற்றி அப்னேருக்கு அக்கரையிருக்கிறது.

தாவீது அப்னேரை நோக்கிக் கூப்பிட்டவுடன், அப்னேர், "ராஜாவுக்கு நேராக கூக்குரலிடுகிற நீ யார்" என்று கேட்கிறான். தாவீதின் வார்த்தைகள், அப்னேருக்கு கூக்குரலிடுவதுபோல தெரிகிறது.

அப்பொழுது தாவீது அப்னேரை நோக்கி: "நீர் வீரன் அல்லவா? இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் யார்? பின்னை நீர் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் காக்காமற்போனதென்ன? ஜனத்தில் ஒருவன் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே. நீர் செய்த இந்தக் காரியம் நல்லதல்ல; கர்த்தர் அபிஷேகம் பண்ணின உங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற்போனபடியினால், நீங்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள்; இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும்" (1சாமு 26:15,16) என்று சொல்லுகிறார்.

அப்னேர் சவுலுக்கு படைத்தளபதியாயிருக்கிறார். சவுலின் ஜீவனை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அப்னேருக்கு உள்ளது. இஸ்ரவேலிலே அப்னேருக்கு சமமான வீரன் ஒருவனுமில்லை. ஆனாலும் அப்னேர் தன் ராஜாவாகிய சவுலைப் பாதுகாக்காமல் தூங்கிவிட்டார். அப்னேரின் மதிப்பும், மரியாதையும், கண்ணியமும்அவரோடுகூட தூங்கிவிடுகிறது.

கர்த்தர் சவுலை அபிஷேகம்பண்ணியிருக்கிறார். ராஜாவைப் பாதுகாக்கவேண்டியது அவருடைய மனுஷரின் கடமை. ஆனால் அவர்களோ ராஜாவைப் பாதுகாக்காமல் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் மரணத்திற்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள் என்று தாவீது சொல்லுகிறார். சவுலின் மனுஷர் மரிப்பதற்கு முன்பாக, அப்னேர் மரிக்கவேண்டும். அப்னேரே சவுலின் படைத்தளபதி. சவுல் அப்னேரையும், தன்னுடைய மனுஷரையும் நம்பி தூங்கிக்கொண்டிருந்தார். அவர்களுக்கு நடுவில் தூங்கினார். ஆனால் சவுலின் மனுஷரோ சவுலோடுகூட, தூங்கிவிட்டார்கள்.

சவுலும் அவருடைய மனுஷரும் தூங்கிக்கொண்டிருந்தபோது தாவீது அங்கே வந்தார். தாவீது வந்ததை அவர்கள் ஒருவரும் காணவில்லை. ஒருவரும் அறியவுமில்லை. ஒருவரும் விழித்துக்கொள்ளவுமில்லை. தாவீது தங்கள் மத்தியிலே வந்தார் என்பதை அவர்களால் நம்பவும் முடியவில்லை. தான் அவர்கள் மத்தியிலே வந்ததற்கு தாவீது அப்னேருக்கு ஒரு அடையாளம் சொல்லுகிறார். "இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும்" (1சாமு 26:16) என்று தாவீது அப்னேரிடம் சொல்லுகிறார்.

சவுல் தாவீதை தன்னுடைய சத்துருவாகப் பாவிக்கிறார். ஆனால் சவுலின் ஈட்டியோ இப்போது தாவீதின் கையிலிருக்கிறது. தாவீது நினைத்திருந்தால், சவுலின் ஈட்டியிருக்கிற தாவீதின் கையிலே, சவுலின் தலையிருக்கும். சவுலின் ஈட்டியை எடுத்துக்கொண்டு வந்த தாவீதால், அவருடைய தலையை எளிதாக எடுத்துக்கொண்டு வந்திருக்க முடியும்.

சவுல் அப்னேரையும், தன்னுடைய மனுஷரையும் நம்புகிறார். அவர்களே தன்னுடைய சிநேகிதர் என்று நினைக்கிறார். இப்போது தனக்கு உண்மையான சிநேகிதர் யார் என்பதை சவுலும் அறிந்துகொள்ள வேண்டும். அதை சவுலோடு கூடயிருக்கிற மனுஷரும் அறிந்துகொள்ளவேண்டும். அப்னேர் சவுலைப் பாதுகாக்காமல் தூங்கிவிட்டார். தாவீது சவுலைக் கொன்றுபோடாமல் அவரை ஜீவனோடு விட்டுவிட்டார். சவுலுக்கு உண்மையான சிநேகிதன் யார் என்பதை ஜனங்கள் தீர்மானம்பண்ணவேண்டும். சவுலை காக்காமல்போன அப்னேரா அல்லது சவுலைக் கொல்லாமல் உயிரோடு விட்டுவிட்ட தாவீதா, இவர்கள் இருவரில் சவுலுக்கு மெய்யான சிநேகிதர் யார் என்பதை ஜனங்கள் தீர்மானம்பண்ணவேண்டும்.

தாவீது அப்னேரோடு பேச ஆரம்பித்தபோது சவுல் தூங்கிக்கொண்டிருந்தார். தாவீதின் வார்த்தைகளைக் கேட்டு அப்னேர், தன் தூக்கத்தைவிட்டு எழுந்திருந்ததைப்போல, சவுலும் தன் தூக்கத்தைவிட்டு எழும்புகிறார். அப்னேருக்கு தாவீதின் சத்தம் தெரியாது. ஆகையினால் தாவீது அப்னேரைக் கூப்பிட்டபோது, "ராஜாவுக்கு நேராக கூக்குரலிடுகிற நீ யார்" என்று அப்னேர், கேட்டார். சவுலுக்கு தாவீதின் சத்தம் நன்றாய்த் தெரியும். அவர் தாவீதின் சத்தத்தை நன்றாய் அறிந்திருக்கிறார்.

தாவீது அப்னேரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, சவுல் தாவீதின் சத்தத்தை அறிந்து, "என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்லவா" என்று கேட்கிறார். அதற்குத் தாவீது: "ராஜாவாகிய என் ஆண்டவனே, இது என் சத்தந்தான்" (1சாமு 26:17) என்று சொல்லுகிறார்.

சவுல் தாவீதை, "என் மருமகனாகிய தாவீதே" என்று சொல்லவேண்டும். ஆனால் சவுலோ தன் மகள் மீகாளை வேறொருவனுக்கு மனைவியாகக் கொடுத்துவிட்டார். ஆகையினால் சவுல் தாவீதை "மருமகனே" என்று கூப்பிடாமல், "என் குமாரனாகிய தாவீதே" என்று கூப்பிடுகிறார்.

சவுல் தாவீதைக் கொன்றுபோட தீர்மானித்திருக்கிறார். தாவீதைப் பிடித்து கொல்லுவதற்காகவே சவுல் இந்த வனாந்தரத்திற்கு வந்திருக்கிறார். ஆனாலும் தாவீதின் சத்தத்தை அறிந்தபோது சவுலின் இருதயத்தில் சந்தோஷமுண்டாயிற்று. தாவீது தன்னுடைய நற்குணத்தினால் சவுலின் மனதையும், அவருடைய மனச்சாட்சியையும் தொடுகிறார்.

தாவீது சவுலை நோக்கி, "என் ஆண்டவனாகிய நீர் உம்முடைய அடியானை இப்படிப் பின்தொடருகிறது என்ன? நான் என்னசெய்தேன்? என்னிடத்தில் என்ன பொல்லாப்பு இருக்கிறது?" (1சாமு 26:18) என்று கேட்கிறார். தாவீதிடத்தில் ஒரு பொல்லாப்பும் இல்லை. சவுலிடத்தில்தான் பொல்லாப்பு இருக்கிறது. சவுல் தாவீதைக் கொல்ல முயற்சி பண்ணுகிறார். தாவீதோ தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்வதற்காக முயற்சி பண்ணுகிறார். சவுலைக் கொல்லவேண்டும் என்னும் எண்ணம் தாவீதின் மனதில் இல்லை.

தாவீது இப்போது வேதனைகளையும், நெருக்கங்களையும் அனுபவித்து வருகிறார். சவுல் தாவீதைப் பகைப்பதினால், தாவீதுக்கு பல பிரச்சனைகள் வந்திருக்கிறது. அவற்றில் இரண்டு பிரச்சனைகளை மாத்திரம் தாவீது இங்கு சொல்லுகிறார். தாவீது இப்போது அந்நிய தேவர்களை சேவிக்கிறவர்களின் மத்தியிலிருக்கிறார். தான் கர்த்தரைவிட்டு தூரத்திவிடப்பட்டவர்போல தாவீது வேதனைப்படுகிறார். இது தாவீதின் மனதில் ஏற்பட்டிருக்கிற முதலாவது வேதனை.

தாவீது சவுலுக்கு வேலையாளாகவும், அடியானாகவும் இருக்கிறார். ஆனால் சவுலோ தாவீதை தன்னுடைய சத்துருவாகப் பாவிக்கிறார். தாவீது சவுலை நேசித்தாலும், சவுல் தாவீதைப் பகைக்கிறார். இது தாவீதின் மனதில் ஏற்பட்டிருக்கிற இரண்டாவது வேதனை.

தாவீது தன்னுடைய மனதில் ஏற்பட்டிருக்கும் இவ்விரண்டு வேதனைகளையும் சவுலுக்கு தெளிவாகச் சொல்லுகிறார். தாவீது சவுலை நோக்கி, "இப்பொழுது ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக; கர்த்தர் உம்மை எனக்கு விரோதமாக எடுத்துவிட்டதுண்டானால், அதற்கு அவர்காணிக்கையை ஏற்றுக்கொள்வாராக; மனுப்புத்திரர் அதைச் செய்தார்களேயாகில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்படக்கடவர்கள்; அவர்கள்: நீ போய்; அந்நிய தேவர்களைச் சேவி என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு, துரத்திவிட்டார்களே" (1சாமு 26:19) என்று சொல்லுகிறார்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திலிருந்தபோது, அவர் கர்த்தரை ஆராதிக்கிறவர்களோடு கூடயிருந்தார். இப்போதோ தாவீது அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறவர்கள் மத்தியிலே இருக்கிறார். அவர்களெல்லோரும் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்களோடு சேர்ந்து தாவீதும் விக்கிரகாராதனையில் ஈடுபடுமாறு சோதிக்கப்படுகிறார். கர்த்தருடைய கிருபையும் அநுக்கிரகமும் தாவீதுக்கு இருப்பதினால், தாவீது அந்நிய ஜனத்தாருடைய விக்கிரகாராதனைக்கு விலகி ஜீவிக்கிறார்.

தாவீது கர்த்தரை நம்புகிறார். அவருடைய வார்த்தைகளை உறுதியாய்ப் பற்றிக்கொள்கிறார். கர்த்தரை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தார் தாவீதை தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிட்டார்கள். தாவீது இஸ்ரவேல் தேசத்திலே இருந்திருந்தால், கர்த்தரை ஆராதிக்கிற ஜனங்களோடு சேர்ந்து, அவரும் கர்த்தரைத் துதித்து, ஆராதனை செய்வார். ஆனால் தாவீதுக்கு கர்த்தருடைய பரிசுத்தவான்களோடு சேர்ந்து, கர்த்தரை ஆராதிக்கும் சிலாக்கியம் கிடைக்கவில்லை.

சவுல் தாவீதைத் துரத்திவிட்டதினால், தாவீது இப்போது விக்கிரகாராதனைக்காரர் மத்தியிலே இருக்கிறார். அவர்களோடுகூட ஐக்கியமாயிருக்கிறார். தாவீதுக்கு கர்த்தருடைய பரிசுத்தவான்களோடு ஐக்கியமில்லை. விக்கிரகாராதனைக்காரரோடு ஐக்கியம் உண்டாயிருக்கிறது. தாவீது இதை நினைத்து மிகவும் வேதனைப்பட்டு, தன்னுடைய மனதின் வேதனைகளை சவுலுக்கு சொல்லுகிறார். இந்த வேதனையை அனுபவிப்பதற்கு, "நான் என்ன செய்தேன்? என்னிடத்தில் என்ன பொல்லாப்பு இருக்கிறது?" என்று தாவீது சவுலிடத்தில் கேட்கிறார்.

தன்னிடத்தில் ஒரு தப்பிதமும் இல்லை என்பதையும், ஒரு பொல்லாப்பும் இல்லை என்பதையும் தாவீது சவுலுக்கு தெளிவுபடுத்துகிறார். சவுல் தாவீதைப் பின்தொடர்ந்து வருகிறார். இதில் நீதியான காரணம் எதுவுமில்லை என்றும் தாவீது சவுலுக்குச் சொல்லுகிறார். சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. தாவீதோ தன் உயிரைக் காத்துக்கொள்ள, மலைகளிலும், கெபிகளிலும், காடுகளிலும், வனாந்தரங்களிலும் சுற்றி அலைந்துகொண்டிருக்கிறவர்.

தாவீது சவுலிடத்தில் தன்னைப்பற்றிப் பேசும்போது தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். தான் மலைகளில் ஒரு கவுதாரியைப்போல இருப்பதாகவும், சவுலோ அந்தக் கவுதாரியை வேட்டையாடுகிற வேட்டைக்காரரைப்போல இருப்பதாகவும், தாவீது தன்னையும் சவுலையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார்.

தான் ஒரு தெள்ளுப்பூச்சியைப்போல இருப்பதாகவும், சவுலோ இஸ்ரவேலின் ராஜாவாகயிருப்பதாகவும், இஸ்ரவேலின் ராஜா ஒரு தெள்ளுப்பூச்சியை தேடவந்ததுபோல, தன்னைத் தேடி பின்தொடர்ந்து வருகிறார் என்றும் தாவீது சொல்லுகிறார். தாவீது தன்னுடைய பரிதாபமான நிலமையை சவுலிடத்தில் சொல்லிவிட்டு, "இப்போதும் கர்த்தருடைய சமுகத்தில் என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக" (1சாமு 26:20) என்றும் சொல்லுகிறார்.

தெள்ளுப்பூச்சியைப் பிடிக்கப்போனால், அந்தப் பூச்சி பயந்து ஓடும். தன்னை பிடிக்கிறவர்களை எதிர்த்து நின்று தாக்கும் வல்லமை தெள்ளுப்பூச்சிக்கு இல்லை. தான் அப்படிப்பட்ட தெள்ளுப்பூச்சியைப்போல இருப்பதாக தாவீது தன்னைத் தாழ்த்தி பேசுகிறார்.

தாவீது சவுலோடு சமாதானமாயிருக்கவே விரும்புகிறார். அவர் சவுலோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவும் விரும்புகிறார். விசுவாசிகளாகிய நாம் கர்த்தரோடு சமாதானமாயிருக்கவேண்டும். கர்த்தருக்கும் நமக்கும் நடுவிலே பிரச்சனைகள் இருக்குமென்றால், நாம் கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக, தம்முடைய சொந்த இரத்தத்தையே, மீட்பின் கிரயமாய்ச் செலுத்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. நாம் பிதாவாகிய தேவனோடு, இயேசுகிறிஸ்துவின் மூலமாய், ஒப்புரவாகவேண்டும். தேவனோடு சமாதானமாயிருக்கவேண்டும்.

தேவனோடு ஒப்புரவாவதற்கு முன்பாக, அவரோடு சிநேகமாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவினுடைய கிருபாதார பலியின் மூலமாய், நாம் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். அப்போது நமக்கும் தேவனுக்கும் இடையே இருக்கிற பகையாகிய நடுச்சுவர் இடிந்து விழும்.

"எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (எபே 2:14-16).

"ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்" (நீதி 16:7).

தாவீதுக்கு சவுல்மீது பகையில்லை. ஆனால் சவுலின் மனுஷர், அவருக்கு தீயஆலோசனகளைச் சொல்லுகிறார்கள். சவுல் அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு, தாவீதின்மீது கோபப்படுகிறார், பொறாமைப்படுகிறார். தனக்கு விரோதமாக சவுலுக்கு தீயஆலோசனைகளை சொல்லுகிறவர்கள், கர்த்தருக்கு முன்பாக சபிக்கப்பட்டவர்கள் என்று தாவீது சொல்லுகிறார்.

சவுலின் மனமாற்றம் 1சாமு 26:21-25

1சாமு 26:21. அப்பொழுது சவுல்: நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ்செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன் என்றான்.

1சாமு 26:22. அதற்குத் தாவீது: இதோ, ராஜாவின் ஈட்டி இங்கே இருக்கிறது; வாலிபரில் ஒருவன் இப்புறம் வந்து, அதை வாங்கிக் கொண்டுபோகட்டும்.

1சாமு 26:23. கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக; இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், கர்த்தர் அபிஷேகம்பண்ணினவர்மேல், என் கையை நீட்ட மனதில்லாதிருந்தேன்.

1சாமு 26:24. இதோ, உம்முடைய ஜீவன் இன்றையதினம் என் பார்வைக்கு எப்படி அருமையாயிருந்ததோ, அப்படியே என் ஜீவனும் கர்த்தரின் பார்வைக்கு அருமையாயிருப்பதினால், அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக என்றான்.

1சாமு 26:25. அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்; அப்படியே தாவீது தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத்திற்குத் திரும்பினான்.

சவுல் தன்னுடைய தப்பிதத்தையும் மதியீனத்தையும் உணருகிறார். சவுல் தாவீதை நோக்கி, "நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ்செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன்" *(1சாமு 26:21)* என்று சொல்லுகிறார்.

சவுல் தன்னுடைய பாவத்தையும் அறிக்கை பண்ணுகிறார். அவர் இனிமேல் தாவீதுக்கு பொல்லாப்பு செய்யப்போவதில்லை என்றும் வாக்குப்பண்ணுகிறார். "நான் பாவஞ்செய்தேன்" என்னும் வாக்கியத்திற்கு, "நான் தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாக கிரியை செய்தேன்" என்றும் பொருள் சொல்லலாம்.

சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னுடைய சுயவிருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, தாவீதுக்கு பொல்லாப்பு செய்ய வகைதேடினார். தாவீது சவுலின் நெருங்கிய சிநேகிதர்களில் ஒருவர். அவர் சவுலுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆனாலும் சவுல் தாவீதைக் கொன்றுபோட அவரை பின்தொடர்ந்தார். சவுல் புத்தியுள்ளவராக இருந்திருப்பாரென்றால், அவர் தாவீதுக்கு நன்மை செய்து, அவரை தன் பக்கத்தில் வைத்திருந்திருப்பார். தாவீது சவுலுக்கு இன்னும் ஏராளமான நன்மைகளைச் செய்திருப்பார்.

சவுல் தாவீதிடம், "என் குமாரனாகிய தாவீதே, திரும்பி வா" *(1சாமு 26:21)* என்று சொல்லுகிறார். சவுல் இதுவரையிலும் தாவீதுக்கு பொல்லாப்பு செய்ய வகைதேடினார். சவுல் இப்போது "இனி உனக்கு ஒரு பொல்லாப்பும் செய்யேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். சவுல் தாவீதுக்கு பொல்லாப்பு செய்யாமல், இனிமேல் அவரைப் பாதுகாப்பார்.

சவுலின் மனமாற்றமும், பாவஅறிக்கையும் தாவீதுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. சவுலின் ஈட்டி இப்போது தாவீதின் கையிலிருக்கிறது. சவுல் இனிமேல் தனக்கு பொல்லாப்பு செய்யமாட்டார் என்று தாவீது நம்புகிறார். தன்னுடைய நம்பிக்கையை உறுதிபண்ணும் வண்ணமாக, தாவீது தன் கையிலுள்ள சவுலின் ஈட்டியை, அவரிடத்தில் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று தீர்மானிக்கிறார். தாவீது சவுலை நோக்கி, "இதோ, ராஜாவின் ஈட்டி இங்கே இருக்கிறது; வாலிபரில் ஒருவன் இப்புறம் வந்து, அதை வாங்கிக் கொண்டுபோகட்டும்" *(1சாமு 26:22)* என்று சொல்லுகிறார்.

சவுலைக் கொல்லவேண்டும் என்னும் எண்ணம் தாவீதின் மனதில் எப்போதும் இருந்ததில்லை. தாவீது கர்த்தருக்குப் பயப்படுகிறார். சவுல் தன்னைக் கொல்லுவதற்கு வகைதேடினாலும், கர்த்தர் தன்னைப் பாதுகாப்பார் என்று, தாவீது கர்த்தர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார். தாவீது சவுலை நோக்கி, "கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக; இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், கர்த்தர் அபிஷேகம்பண்ணினவர்மேல், என் கையை நீட்ட மனதில்லாதிருந்தேன்" *(1சாமு 26:23)* என்று சொல்லுகிறார்.

கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. அவர் தம்முடைய நீதியின் பிரகாரமும், நியாயத்தின் பிரகாரமும், மனுஷருடைய வழக்குகளை விசாரித்து தீர்த்து வைக்கிறவர். கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாக பலனளிப்பவர். கர்த்தர் தனக்கும் சவுலுக்கும் இடையே உள்ள வழக்கை விசாரித்து நியாயந்தீர்ப்பாராக என்று சொல்லி, தாவீது தன்னுடைய வழக்கை கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.

சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர். தாவீது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும், இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறவர். கர்த்தர் அபிஷேகம்பண்ணின சவுலின்மேல் தன் கையை நீட்ட தாவீதுக்கு மனதில்லை. தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கும், இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட சவுலுக்கும் மதிப்பு கொடுக்கிறார்.

கர்த்தருடைய அபிஷேக எண்ணெயே சவுலுக்கு இதுவரையிலும் பாதுகாப்பாகயிருந்திருக்கிறது. கர்த்தர் சவுலை தாவீதின் கையிலே ஒப்புக்கொடுத்தார். ஆனாலும் தாவீது சவுலின்மேல் தன் கையை நீட்ட மனதில்லாதிருந்தார். கர்த்தருடைய அபிஷேகமே சவுலை பாதுகாத்தது. ஆகையினால் சவுல் கர்த்தருக்கு நன்றியுள்ளவராய் ஜீவிக்கவேண்டும்.

சவுல் தாவீதைப் பார்த்து, "இனி உனக்கு ஒரு பொல்லாப்பும் செய்யேன்" (1சாமு 26:21) என்று வாக்குப்பண்ணினார். ஆனால் தாவீதோ சவுலின் வார்த்தையைவிட, கர்த்தருடைய கிருபைக்கும், பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். தாவீதின் ஜீவியம் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தரே தாவீதைப் பாதுகாக்கிறார். சவுலின் ஜீவியம் அவருக்கு அருமையாயிருக்கிறது. தாவீதின் ஜீவியமோ கர்த்தருக்கு அருமையாயிருக்கிறது.

தன்னுடைய பாதுகாப்பு கர்த்தருடைய கரத்திலிருக்கிறது என்பதை தாவீது சவுலுக்கு தெளிவுபடுத்துகிறார். தாவீது சவுலை நோக்கி "இதோ, உம்முடைய ஜீவன் இன்றையதினம் என் பார்வைக்கு எப்படி அருமையாயிருந்ததோ, அப்படியே என் ஜீவனும் கர்த்தரின் பார்வைக்கு அருமையாயிருப்பதினால், அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக" (1சாமு 26:24) என்று சொல்லுகிறார்.

தாவீதின் வார்த்தைகள் சவுலின் மனதை தொடுகிறது. கர்த்தர் தாவீதை மென்மேலும் ஆசீர்வதிப்பார் என்று, சவுல் தாவீதுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். சவுல் தாவீதை நோக்கி: "என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய்" (1சாமு 26:25) என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு இன்னும் ஏராளமான வெற்றி கிடைக்கும் என்றும், அவர் பெரிய காரியங்களை செய்வார் என்றும், அவர் உயர்த்தப்படுவார் என்றும் சவுல் தாவீதுக்கு முன்னறிவிக்கிறார். தாவீதின் நற்குணம் பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டிருக்கிறது. கர்த்தர் சவுலை தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், தாவீது சவுல்மேல் தன் கையை நீட்ட மனதில்லாதிருந்தார்.

சவுலும் அப்னேரும் தாவீதைப் பிடிப்பதற்காக வந்திருந்தாலும், அப்னேர் சவுலைப் பாதுகாக்காமல் தூங்கிக்கொண்டிருந்ததினிமித்தமாக, தாவீது அப்னேரைக் கடிந்துகொண்டார். இஸ்ரவேலின் ராஜா பாதுகாப்பாயிருக்கவேண்டும் என்னும் அக்கரை, அப்னேருக்கு இருப்பதைவிட, தாவீதுக்கு அதிகமாயிருக்கிறது.

தாவீது இஸ்ரவேல் தேசத்தின் பொதுவான நன்மைகளை நாடுகிறார். சவுலுக்கு பயந்து தாவீது வனாந்தரத்திலும், காடுகளிலும், கெபிகளிலும், அந்நிய தேசங்களிலும் சுற்றி அலைந்துகொண்டிருந்தாலும், அவருக்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது கரிசனையும் அக்கரையும் இருக்கிறது.

தேவனுடைய பிரசன்னம் தாவீதோடு கூடயிருக்கிறது என்பதை சவுல் அங்கீகரிக்கிறார். சவுல் இப்போது இஸ்ரவேல் தேசத்தின்மேல் ராஜாவாயிருந்தாலும், தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மீது அமர்ந்து, இஸ்ரவேலை ஆட்சி செய்வார் என்பதை சவுல் அறிந்துகொள்கிறார்.

சவுல் இதுவரையிலும் தாவீதைப் பகைத்தார். அவர்மீது பொறாமை குணத்தோடிருந்தார். அவருடைய மனதின் காயத்திற்கு தாவீது மருந்து போட்டிருக்கிறார். இப்போது சவுலின் மனக்காயம் ஆறியிருக்கிறது. பொறாமையும் கோபமும் அவரை விட்டு நீங்குகிறது. சவுல் தாவீதை தன்னுடைய பகைவனாகப் பாவித்து, அவரைக் கொன்றுபோட வந்தார். இப்போதோ சவுலின் மனதில் மாற்றமுண்டாயிற்று.

சவுல் தாவீதை தன்னுடைய சிநேகிதனாகப் பாவிக்கிறார். சவுலும் தாவீதும் சிநேகத்தோடு பிரிகிறார்கள். சவுல் கிபியாவுக்கு திரும்பிப்போகிறார். தாவீது தன் வழியே போகிறார்.

சவுலும் தாவீதும் இப்போது பிரிந்துபோகிற சம்பவத்தைப்பற்றி இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதன்பின்பு அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. இதுவே அவர்களுடைய கடைசி சந்திப்பாயிற்று.

27 அதிகாரம்

தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இருதயமாயிருக்கிறது. ஆனாலும் தாவீதின் ஜீவியத்திலும் ஒரு சில தப்பிதங்கள் காணப்படுகிறது. தாவீதின் தப்பிதத்தை நாம் படித்து பார்த்து, நம்முடைய ஜீவியத்தில் அவற்றை பின்பற்றக்கூடாது. தாவீது செய்த தப்பிதத்தைப்போல, நாமும் செய்யாதபடிக்கு எச்சரிப்போடிருக்கவேண்டும்.

தாவீது தன்னுடைய பாதுகாப்பையும் தன் குடும்பத்தாருடைய பாதுகாப்பையும் உறுதிபண்ணுகிறார் (1சாமு 27:2-4). இஸ்ரவேல் புத்திரர் கானானியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும். தாவீது அந்நிய தேசத்திலிருந்தாலும் கானானியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் (1சாமு 27:8-9).

தன்னுடைய ஜீவன் கர்த்தருடைய பார்வைக்கு அருமையாயிருக்கிறது என்றும் கர்த்தர் தன்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கிவிடுவார் என்றும் தாவீது விசுவாசத்தோடு சவுலுக்கு சொன்னார். ஆனால் தான் சொன்ன வார்த்தைகளை தாவீது முழுவதுமாய் நம்பவில்லை.

தான் சவுலின் கையினால் மடிந்துபோவோம் என்னும் சந்தேகம் தாவீதுக்கு உண்டாயிற்று (1சாமு 27:1,2). தாவீது தன்னுடைய சொந்த தேசமாகிய இஸ்ரவேல் தேசத்தை விட்டுவிலகி, பெலிஸ்தருடைய தேசத்தில் வாசம்பண்ணப்போகிறார் (1சாமு 27:1,5-7). தாவீது கானானியர்மீது யுத்தம்பண்ணுகிறார். ஆனால் காத்தின் ராஜாவாகிய ஆகீசிடத்தில், தன்னுடைய செய்கைகளை மறைத்துவிடுகிறார். தாவீது ஆகிசிடம் பொய் சொல்லுகிறார் (1சாமு 27:10-12).

தாவீதும் காத்தின் ராஜாவும் 1சாமு 27:1-7

1சாமு 27:1. பின்பு தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப்பார்க்கிலும் நல்மான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்.

1சாமு 27:2. ஆகையால் தாவீது தன்னோடிருந்த அறுநூறுபேரோடுங்கூட எழுந்திருந்து, மாயோகின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்தில் போய்ச் சேர்ந்தான்.

1சாமு 27:3. அங்கே தாவீதும், அவன் மனுஷரும், அவரவர் வீட்டாரும், தாவீதோடேகூட அவன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளாகிய அகினோகாமும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளாகிய அபிகாயிலும், காத்பட்டணத்தில் ஆகீசிடத்தில் தங்கியிருந்தார்கள்.

1சாமு 27:4. தாவீது காத்பட்டணத்திற்கு ஓடிப்போனான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் அப்புறம் அவனைத் தேடவில்லை.

1சாமு 27:5. தாவீது ஆகீசை நோக்கி: உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்குமானால், நான் வாசம்பண்ணும்படி நாட்டிலுள்ள ஊர்களிலே ஒன்றில் எனக்கு இடந்தாரும்; உம்முடைய அடியான் உம்மோடேகூட ராஜதானி பட்டணத்திலே வாசமாயிருப்பானேன் என்றான்.

1சாமு 27:6. அப்பொழுது ஆகீஸ்: அன்றைய தினம் சிக்லாகை அவனுக்குக் கொடுத்தான்; அதினிமித்தம் சிக்லாக் இந்நாள் வரைக்கும் யூதாவின் ராஜாக்களைச் சேர்ந்திருக்கிறது.

1சாமு 27:7. தாவீது பெலிஸ்தரின் நாட்டிலே ஒரு வருஷமும் நாலு மாதமும் குடியிருந்தான்.

தாவீது சவுலுக்கு பயப்படுகிறார். தாவீது கர்த்தர்மீது வைத்திருக்கிற விசுவாசம் பலவீனமாயிற்று. இதனால் தாவீதின் மனதிலே குழப்பமும் பயமும் உண்டாயிற்று. "நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்" (1சாமு 27:1) என்று நினைத்து தாவீது தனக்குள்ளே பயப்படுகிறார்.

தாவீது தன்னுடைய ஜீவனை கர்த்தருடைய கரத்திலே ஒப்புக்கொடுப்பதற்கு பதிலாக, காத்தின் ராஜாவாகிய ஆகீசின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தர் தன்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் என்று நம்புவதற்கு பதிலாக, தாவீது தன்னுடைய விடுதலைக்கும், பாதுகாப்புக்கும் ஆகீசை நம்புகிறார்.

சவுல் தாவீதிடம், "நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ்செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன்" (1சாமு 26:21) என்று சொன்னார். தாவீது சவுலின் வார்த்தையை நம்பவேண்டும் என்னும் அவசியமில்லை. ஆனாலும் தாவீது கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய வாக்குத்தத்தையும் நம்பவேண்டும். ஆனால் தாவீதோ சவுலின் வார்த்தையையும் நம்பவில்லை, கர்த்தருடைய வார்த்தையையும் நம்பவில்லை.

அவிசுவாசம் கர்த்தருக்கு விரோதமான பாவம். நமக்குள் அவிசுவாசம் பிரவேசித்துவிட்டால், நம்முடைய சந்தோஷமும், சமாதானமும், நற்குணமும் நம்மைவிட்டு நீங்கிப்போகும். அவிசுவாசிகளின் நடைகளில் உறுதியிருக்காது. அவர்களுடைய சிந்தனைகளில் தெளிவு இருக்காது. கர்த்தரை நம்பாதவர்கள் மனுஷருக்கு பயப்படுவார்கள். ஆகையினால் நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "கர்த்தாவே, எங்கள் அவிசுவாசத்தை எங்களைவிட்டு நீக்கும்" என்றும், "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்" என்றும் ஜெபம்பண்ணவேண்டும்.

தாவீது சவுலுக்கு பயந்து, பெலிஸ்தருடைய தேசத்திற்குப் போகவேண்டுமென்று யோசிக்கிறார். தாவீது தன் இருதயத்திலே, "நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை" (1சாமு 27:1) என்று யோசிக்கிறார்.

சவுல் தன்னுடைய பாவத்தை உணர்ந்து, தாவீதுக்கு முன்பாக தன் பாவத்தை அறிக்கை செய்து, தாவீதை தன் வாயினால் ஆசீர்வதித்து, அதன் பின்பு அவர் கிபியாவுக்கு போய்விடுகிறார். கிபியாவுக்கு போன சவுல், மறுபடியும் தன்னை பிடிக்க வருவார் என்று தாவீது சந்தேகப்படுகிறார். இஸ்ரவேலின் தேசத்திலிருக்கும் வரையிலும் சவுலின் மூலமாய் தனக்கு ஆபத்து வரும் என்றும், தனக்கு பாதுகாப்பு இல்லை என்றும் தாவீது யோசிக்கிறார். தன்னுடைய பாதுகாப்பை உறுதிபண்ணுவதற்கு, தாவீது பெலிஸ்தரின் தேசத்திற்குப்போய் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்.

அவிசுவாசம் கர்த்தருக்கு விரோதமான பாவம். நமக்குள் அவிசுவாசம் பிரவேசித்துவிட்டால், நம்முடைய சந்தோஷமும், சமாதானமும், நற்குணமும் நம்மைவிட்டு நீங்கிப்போகும். அவிசுவாசிகளின் நடைகளில் உறுதியிருக்காது. அவர்களுடைய சிந்தனைகளில் தெளிவு இருக்காது. கர்த்தரை நம்பாதவர்கள் மனுஷருக்கு பயப்படுவார்கள். ஆகையினால் நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "கர்த்தாவே, எங்கள் அவிசுவாசத்தை எங்களைவிட்டு நீக்கும்" என்றும், "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்" என்றும் ஜெபம்பண்ணவேண்டும்.

தாவீது சவுலுக்கு பயந்து, பெலிஸ்தருடைய தேசத்திற்குப் போகவேண்டுமென்று யோசிக்கிறார். தாவீது தன் இருதயத்திலே, "நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை" (1சாமு 27:1) என்று யோசிக்கிறார்.

சவுல் தன்னுடைய பாவத்தை உணர்ந்து, தாவீதுக்கு முன்பாக தன் பாவத்தை அறிக்கை செய்து, தாவீதை தன் வாயினால் ஆசீர்வதித்து, அதன் பின்பு அவர் கிபியாவுக்கு போய்விடுகிறார். கிபியாவுக்கு போன சவுல், மறுபடியும் தன்னை பிடிக்க வருவார் என்று தாவீது சந்தேகப்படுகிறார். இஸ்ரவேலின் தேசத்திலிருக்கும் வரையிலும் சவுலின் மூலமாய் தனக்கு ஆபத்து வரும் என்றும், தனக்கு பாதுகாப்பு இல்லை என்றும் தாவீது யோசிக்கிறார். தன்னுடைய பாதுகாப்பை உறுதிபண்ணுவதற்கு, தாவீது பெலிஸ்தரின் தேசத்திற்குப்போய் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்.

பெலிஸ்தருடைய தேசம் அந்நிய தேசம். சவுல் அந்த தேசத்திற்கு வரமாட்டார் என்று தாவீது நிச்சயமாய் நம்புகிறார். தாவீதின் மனதிலே நம்பிக்கையில்லை. அவர் தன்னையும் நம்பவில்லை, கர்த்தரையும் நம்பவில்லை. கர்த்தர் தாவீதை தம்முடைய தீர்க்கதரிசி மூலமாய், இஸ்ரவேல் தேசத்திற்கு வருமாறு அழைத்தார்.

"பின்பு காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்த்து: நீர் அரணில் இராமல் யூதாதேசத்திற்குப் புறப்பட்டுவாரும் என்றான்; அப்பொழுது தாவீது புறப்பட்டு ஆரேத் என்னும் காட்டிலே போனான்" (1சாமு 22:5).

தாவீது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, யூதாதேசத்திலேயே தங்கியிருக்கவேண்டும். யூதாதேசம் கர்த்தருடைய காணியாட்சிக்குட்பட்ட தேசம். இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் கர்த்தருடைய பாதுகாப்பு இருக்கிறது. தாவீது இஸ்ரவேல் தேசத்தின் எல்லையைத் தாண்டிப்போகும்போது, கர்த்தருடைய பாதுகாப்பை எதிர்பார்க்க முடியாது. தாவீதின் மனதிலே கர்த்தர்மீது விசுவாசமில்லை. தாவீது கர்த்தரை நம்பாமல், பெலிஸ்தரின் ராஜாவாகிய ஆகீசை நம்புகிறார்.

தான் இஸ்ரவேலின் எல்லைகளில் இருக்கும் வரையிலும், சவுல் தன்னைக் கண்டுபிடித்து கொன்றுபோடுவார் என்று தாவீது பயப்படுகிறார். பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய்விட்டால், தான் அங்கே சவுலின் கைக்கு நீங்கலாயிருக்க முடியும் என்றும், அந்த தேசத்திலே சவுலின் கைக்கு தப்பித்துக்கொள்ளலாம் என்றும் தாவீது தன் இருதயத்தில் யோசிக்கிறார்.

தாவீது தன்னோடிருந்த அறுநூறுபேரோடுங்கூட எழுந்திருந்து, மாயோகின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்தில் போய்ச் சேருகிறார் (1சாமு 27:2). காத்தின் ராஜா தாவீதையும், அவருடைய மனுஷரையும் தன்னுடைய தேசத்திலே ஏற்றுக்கொள்கிறான். அவனுக்கு தாவீதைப்பற்றி ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. தாவீது மகாபராக்கிரமசாலி. அவர் ஒரு யுத்தவீரர். அப்படிப்பட்ட மாவீரன், தன்னுடைய தேசத்திலே வந்து தங்குவது, காத்தின் ராஜாவுக்கு பெருமையாயிருக்கிறது.

பெலிஸ்தர்கள் அந்நிய தேசத்தாரையும் தங்கள் தேசத்திலே தங்கவைப்பார்கள். இது அவர்களுடைய யுத்த வியூகம். பெலிஸ்தர்கள் அந்நிய தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, தங்கள் தேசத்திலே வந்து தங்கியிருக்கும் அந்நிய தேசத்தாரையும், தங்கள் சேனையில் பயன்படுத்திக்கொள்வார்கள். இது பெலிஸ்தருடைய யுத்த தந்திரம்.

காத்தின் ராஜாவாகிய ஆகீஸ், தாவீதுக்கு தன் தேசத்திலே தங்க இடம் கொடுத்ததை இஸ்ரவேல் தேசத்தார் பார்ப்பார்கள். இஸ்ரவேல் தேசத்திலே சவுலைப் பிடிக்காதவர்கள், சவுலுக்கு விரோதமானவர்கள் ஏராளமானோர் இருப்பார்கள். அவர்களெல்லோரும் தாவீதைப் பின்பற்றி, தங்கள் தேசத்தில் வந்து தங்க வருவார்கள் என்று பெலிஸ்தர் நினைக்கிறார்கள். திரளான ஜனங்கள் இஸ்ரவேல் தேசத்திலிருந்து காத் தேசத்திற்கு வரும்போது, இஸ்ரவேல் தேசமே காலியாய்ப்போகும். இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ணுவது பெலிஸ்தருக்கு எளிதாயிருக்கும்.

காத்தின் ராஜாவாகிய ஆகீஸ், தன்னுடைய தேசத்தின் நன்மைகளை நினைத்துப் பார்த்து, தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும், தன்னுடைய தேசத்தில் தங்க அனுமதி கொடுக்கிறார். தாவீதைப் பாதுகாப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார். தாவீது சவுலின் வார்த்தைகளை நம்பவில்லை. ஆனால் அவர் ஆகீசின் வார்த்தைகளை நம்புகிறார்.

காத் தேசத்திலே தாவீதும், அவருடைய மனுஷரும், அவரவர் வீட்டாரும், தாவீதோடேகூட அவருடைய இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளாகிய அகினோகாமும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளாகிய அபிகாயிலும், காத்பட்டணத்தில் ஆகீசிடத்தில் தங்கியிருக்கிறார்கள் (1சாமு 27:3).

தாவீது காத்பட்டணத்திற்கு ஓடிப்போனார் என்று சவுலுக்கு அறிவிக்கப்படுகிறது, சவுல் அப்புறம் தாவீதைத் தேடவில்லை (1சாமு 27:4).

காத் பட்டணம், காத் தேசத்தின் ராஜதானி பட்டணமாயிருக்கிறது. இந்தப் பட்டணத்திலே காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் தங்கியிருக்கிறார். தாவீதும் அவருடைய மனுஷரும், காத் பட்டணத்திலிருக்கும் வரையிலும், காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு தெரியாமல் ஒன்றும் செய்யமுடியாது. காத் பட்டணத்திலே, பெலிஸ்தருடைய பிரபுக்களும், அவர்களுடைய யுத்தவீரர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள். தாவீது இவர்களைவிட்டு விலகி, வேறு ஏதாவது ஒரு ஊரிலே தங்கவேண்டுமென்று விரும்புகிறார். இதன் மூலமாக ஆகீசின் நேரடி மேற்பார்வைக்கு விலகியிருக்கலாம் என்றும், தனக்கு இஷ்டமான காரியங்களை, ராஜாவுக்கு மறைவாக செய்யலாம் என்றும் தாவீது யோசிக்கிறார்.

தாவீது தன்னுடைய மனதின் விருப்பத்தை காத்தின் ராஜாவாகிய ஆகீசிடத்தில் சொல்லுகிறார். தாவீது ஆகீசை நோக்கி: "உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்குமானால், நான் வாசம்பண்ணும்படி நாட்டிலுள்ள ஊர்களிலே ஒன்றில் எனக்கு இடந்தாரும்; உம்முடைய அடியான் உம்மோடேகூட ராஜதானி பட்டணத்திலே வாசமாயிருப்பானேன்" (1சாமு 27:5) என்று கேட்கிறார்.

ஆகீசும் தாவீதின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். அன்றைய தினம் ஆகீஸ் சிக்லாகை தாவீதுக்குக் கொடுக்கிறான்; அதினிமித்தம் சிக்லாக் இந்நாள் வரைக்கும் யூதாவின் ராஜாக்களைச் சேர்ந்திருக்கிறது. தாவீது பெலிஸ்தரின் நாட்டிலே ஒரு வருஷமும் நாலு மாதமும் குடியிருக்கிறார். தாவீதின் மனுஷரும் அவரோடுகூட சிக்லாகிலே குடியிருக்கிறார்கள் (1சாமு 27:6,7).

சிக்லாக் பூர்வத்திலே இஸ்ரவேல் தேசத்திற்கு சொந்தமானது. இது யூதாகோத்திரத்தாரின் சுதந்தரத்தில் இருந்தது.

"கடையாந்தரத் தென்புறமான ஏதோமின் எல்லைக்கு நேராய், யூதா புத்திரரின் கோத்திரத்திற்குக் கிடைத்த பட்டணங்களாவன: கப்செயேல், ஏதேர், யாகூர்,.......... சிக்லாக், மத்மன்னா, சன்சன்னா" (யோசு 15:21,31).

யூதாகோத்திரத்தின் சுதந்தரவீதமான பட்டணங்களில் சில, பிற்காலத்தில் சிமியோன் கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்டது.

"இரண்டாம் சீட்டு சிமியோனுக்கு விழுந்தது; சிமியோன் புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படி கிடைத்த சுதந்தரம், யூதா புத்திரருடைய சுதந்தரத்தின் நடுவே இருக்கிறது. அவர்களுக்குச் சுதந்தரமாகக் கிடைத்த பட்டணங்களாவன: பெயெர்செபா, சேபா, மொலாதா......... சிக்லாக், பெத்மார்காபோத், ஆத்சார்சூசா" *(யோசு 19:1,2,5)*.

யூதாகோத்திரத்தாரோ அல்லது சிமியோன் கோத்திரத்தாரோ சிக்லாக் பட்டணத்தை சுதந்தரிக்கவில்லை. யோசுவா சிக்லாக்கை யூதாகோத்திரத்தாருக்கும் அதன்பின்பு சிமியோன் கோத்திரத்தாருக்கும் பங்குவீதமாகப் பிரித்துக்கொடுத்தபோது, சிக்லாகிலே கானானியர் குடியிருந்தார்கள். அல்லது அப்போது இங்கே பெலிஸ்தர்கள் குடியிருந்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது. பெலிஸ்தர்கள் சிக்லாகை கைப்பற்றி, அதை தங்களுக்கு சொந்த பட்டணமாக வைத்துக் கொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரால் சிக்லாக்கை சுதந்தரிக்க முடியவில்லை.

காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் சிக்லாகை தாவீதுக்கு கொடுக்கிறான். அதன் நிமித்தம் சிக்லாக் யூதாவின் ராஜாக்களை சேர்ந்திருக்கிறது. இஸ்ரவேல் கோத்திரத்தாரால் யுத்தம்பண்ணி சுதந்தரிக்க முடியாத சிக்லாக்கை, தாவீது காத்தின் ராஜாவிடமிருந்து சமாதானமாக பெற்றுக்கொள்கிறார். சிக்லாக் காத் பட்டணத்தைவிட்டு தூரத்திலிருந்தாலும், இது இஸ்ரவேலின் எல்லைக்கு அருகாமையிலிருக்கிறது.

தாவீதோடுகூட, அவருடைய சேனையில் அறுநூறு பேர் இருக்கிறார்கள். ஆனாலும், இஸ்ரவேல் தேசத்திலே, சவுல் ராஜாவாகயிருந்த வரையிலும், தாவீது சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகவில்லை. சிக்லாக் இஸ்ரவேலின் எல்லைக்கு அருகாமையிலிருந்தாலும், தாவீதின் மூலமாக சவுலுக்கோ, இஸ்ரவேல் ஜனங்களுக்கோ ஒரு பிரச்சனையும் ஏற்படவில்லை. சவுல் மரித்த பின்பு தாவீது இஸ்ரவேலரில் அநேகரை தனக்கு சிநேகிதராக்கி கொள்கிறார்.

தாவீதின் ரகசிய யுத்தம் 1சாமு 27:8-12

1சாமு 27:8. அங்கேயிருந்து தாவீதும் அவன் மனுஷரும் கெசூரியர்மேலும் கெஸ்ரியர் மேலும் அமலேக்கியர்மேலும் படையெடுத்துப்போனார்கள்; சூருக்குப் போகிற எல்லைதுவக்கி எகிப்துதேசமட்டும் இருக்கிற நாட்டிலே பூர்வகாலம் துவக்கிக் குடியிருந்தவர்கள் இவர்களே.

1சாமு 27:9. தாவீது அந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறபோது, புருஷர்களையும் ஸ்திரீகளையும் உயிரோடே வைக்காமல், ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு, ஆகீசிடத்துக்குத் திரும்பிவருவான்.

1சாமு 27:10. இன்று எத்திசையில் போய்க் கொள்ளையடித்தீர்கள் என்று ஆகீஸ் கேட்கும்போது, தாவீது: யூதாவுடைய தென் திசையிலும் யெராமியேலருடைய தென் திசையிலும் கேனியருடைய தென்திசையிலும் என்பான்.

1சாமு 27:11. இன்ன இன்னபடி தாவீது செய்தான் என்று தங்களுக்கு விரோதமான செய்தியை அறிவிக்கத்தக்க ஒருவரையும் தாவீது காத்பட்டணத்திற்குக் கொண்டு வராதபடிக்கு, ஒரு புருஷனையாகிலும் ஸ்திரீயையாகிலும் உயிரோடே வைக்காதிருப்பான்; அவன் பெலிஸ்தரின் நாட்டுப்புறத்திலே குடியிருக்கிற நாளெல்லாம் இவ்வண்ணம் செய்துகொண்டுவந்தான்.

1சாமு 27:12. ஆகீஸ் தாவீதை நம்பி: அவன் இஸ்ரவேலராகிய தன்னுடைய ஜனங்கள் தன்னை வெறுக்கும்படி செய்கிறான்; என்றைக்கும் அவன் என் ஊழியக்காரனாயிருப்பான் என்றான்.

தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகிலே குடியிருக்கிறார்கள். இது பெலிஸ்தருடைய தேசத்திலிருக்கிறது. தாவீது சிக்லாகிலிருந்து கானானியர்மீது யுத்தம்பண்ணப்போகிறார். தாவீதுக்கு யுத்தத்திலே ஜெயமுண்டாயிற்று.

சிக்லாகிலிருந்து தாவீதும் அவருடைய மனுஷரும் கெசூரியர்மேலும் கெஸ்ரியர் மேலும் அமலேக்கியர்மேலும் படையெடுத்துப்போகிறார்கள்; சூருக்குப் போகிற எல்லைதுவக்கி எகிப்துதேசமட்டும் இருக்கிற நாட்டிலே பூர்வகாலம் துவக்கிக் குடியிருந்தவர்கள் இவர்களே (1சாமு 27:8).

தாவீது அந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறபோது, புருஷர்களையும் ஸ்திரீகளையும் உயிரோடே வைக்காமல், ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு, ஆகீசிடத்துக்குத் திரும்பிவருவார் (1சாமு 27:9).

தாவீது தான் மேற்கொண்ட யுத்தங்களைப்பற்றி ஆகீசுக்கு சொல்லவேண்டும். ஆனால் தாவீது இந்த யுத்தங்களை இரகசியமாக நடத்துகிறார். ஆகீஸ் தாவீதிடம், "இன்று எத்திசையில் போய் கொள்ளையடித்தீர்கள்" என்று கேட்பான். தாவீதோ ஆகீசுக்கு உண்மையைச் சொல்லமாட்டார். தாவீதும் அவருடைய மனுஷரும் கானானியர்மீது யுத்தம்பண்ணி அவர்களைக் கொள்ளையிடுவார்கள். ஆனாலும் தாவீது ஆகீசிடம், "யூதாவுடைய தென் திசையிலும் யெராமியேலருடைய தென் திசையிலும் கேனியருடைய தென்திசையிலும் போய் கொள்ளையடித்தோம்" (1சாமு 27:10) என்று சொல்லுவார்.

தாவீது ஆகீசிடம் உண்மை பேசாமல் பொய்பேசுகிறார். அமலேக்கியரை அழிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். சவுல் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றவில்லை. கெசூரியர், கெஸ்ரியர் ஆகியோர் அமலேக்கியரின் பிரிவைச் சேர்ந்தவர்கள். தாவீது அமலேக்கியரை முற்றிலுமாய் அழிக்காமல் போனாலும், தாவீது கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அமலேக்கியரை சங்காரம்பண்ணுகிறார். ஆகையினால் தாவீது ஆகீசிடம் பொய்சொன்னாலும், இதில் தப்பிதம் ஒன்றுமில்லை என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

தாவீது உண்மையை மறைக்கிறார். அவர் ஆகீசிடம் வேண்டுமென்றே பொய்சொல்லுகிறார். தான் பொய்சொல்லுவது ஆகீசுக்கு தெரிந்துவிடும் என்று நினைத்து, தாவீது எந்த நாட்டை கொள்ளையிடுகிறாரோ, அந்த நாட்டிலுள்ள புருஷர்களையும் ஸ்திரீகளையும் உயிரோடே வைக்காமல் அவர்களைக் கொன்றுபோடுகிறார். அவர்கள் உயிரோடிருந்தால், தாவீது அமலேக்கியரை கொள்ளையிட்டார் என்பது ஆகீசுக்கு தெரியவரும். ஆகையினால் தாவீது அங்கே உள்ள மனுஷரையெல்லாம் கொன்றுபோட்டு, அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு வருவார்.

தாவீது இன்ன இன்னபடி செய்தார் என்று தங்களுக்கு விரோதமான செய்தியை அறிவிக்கத்தக்க ஒருவரையும் தாவீது காத்பட்டணத்திற்குக் கொண்டு வராதபடிக்கு, ஒரு புருஷனையாகிலும் ஸ்திரீயையாகிலும் உயிரோடே வைக்காதிருப்பார்; தாவீது பெலிஸ்தரின் நாட்டுப்புறத்திலே குடியிருக்கிற நாளெல்லாம் இவ்வண்ணம் செய்துகொண்டுவருகிறார் (1சாமு 27:11).

கெசூரியர்மேலும், கெஸ்ரியர்மேலும், அமலேக்கியர்மேலும் படையெடுத்து, அவர்களைக் கொள்ளையிட்டதற்காக தாவீது வெட்கப்படவில்லை. ஜனங்களை உயிரோடு வைக்காமல் அவர்களைக் கொன்றுபோட்டதும், அவர்களுடைய ஆடுமாடுகளையும், கழுதைகளையும், ஒட்டகங்களையும், வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு வந்ததும் பாவமான செயல் என்று நினைத்து தாவீது அதை ஆகீசுக்கு சொல்லாமல் மறைக்கவில்லை.

பெலிஸ்தரும் அமலேக்கியரும் சிநேகிதர்கள். அவர்களுக்கு இடையே சமாதான உடன்படிக்கை இருக்கிறது. தாவீது அமலேக்கியருக்கு விரோதமாக படையெடுத்து யுத்தம்பண்ணியது, பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியதற்கு சமம். இந்த சம்பவம் பெலிஸ்தருக்கு தெரியவந்தால், தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும் ஆபத்து வரும். பெலிஸ்தர் தாவீதைக் கொன்றுபோடுவார்கள் அல்லது அவரையும் அவருடைய மனுஷரையும் சிக்லாக்கை விட்டு துரத்திவிடுவார்கள். தாவீது இப்போது பெலிஸ்தரின் ஆதரவிலிருக்கிறார். தாவீது அமலேக்கியரைக் கொள்ளையிட்டார் என்னும் செய்தி பெலிஸ்தருக்கு தெரியக்கூடாது என்பதற்காக, தாவீது அமலேக்கியரை உயிரோடே வைக்காமல் கொன்றுபோடுகிறார்.

தாவீது அமலேக்கியரைக் கொன்றுபோட்டு, அந்த சம்பவத்தை ஆகீசுக்கு சொல்லாமல் மறைப்பது மாத்திரமல்ல, அவர் ஆகீசிடம் பொய்யும் சொல்லுகிறார். தானும் தன்னுடைய மனுஷரும் யூதாதேசத்திலே கொள்ளையிட்டதாக தாவீது பொய்சொல்லுகிறார். யூதாதேசத்திற்கும் பெலிஸ்தருடைய தேசத்திற்கும் பகை இருக்கிறது. தாவீது யூதாதேசத்தை கொள்ளையிட்டதினால், யூதாதேசத்தார் தாவீதைப் பகைப்பார்கள் என்று நினைத்து ஆகீசும் சந்தோஷப்படுகிறார். யூதாதேசத்தாருக்கும் தாவீதுக்கும் இடையே உள்ள பகை அதிகரிப்பது பெலிஸ்தருக்கு நல்லது என்று ஆகீஸ் நினைக்கிறார்.

தாவீது ஆகீசிடம் சொல்லும்போது, தானும் தன்னுடைய மனுஷரும், "யூதாவுடைய தென் திசையிலும் யெராமியேலருடைய தென் திசையிலும் கேனியருடைய தென்திசையிலும் போய் கொள்ளையிட்டோம்" என்று சொல்லுகிறார். இது ஓரளவு உண்மையான வாக்கியம். அவர் யூதாதேசத்தின் தென்திசையிலுள்ள தேசங்களைக் கொள்ளையிட்டார்.

ஆனால் தாவீது தனக்கு சொன்ன வார்த்தையை, ஆகீஸ் தப்பிதமாகப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்புள்ளது. தாவீதும் அவருடைய மனுஷரும், யூதாதேசத்தின் தென்பகுதியில் கொள்ளையிட்டதாக ஆகீஸ் நினைக்கிறான். யூதாதேசத்தின் தென்பகுதியில் சீப் ஊரார் இருக்கிறார்கள். தாவீது சீப் ஊராரை கொள்ளையிட்டிருப்பார் என்று ஆகீஸ் நினைக்கிறான். சீப் ஊரார் இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் தாவீதோ, யூதாதேசத்தின் தென்பகுதியில், யூதாதேசத்தாரைக் கொள்ளையிடவில்லை. அதற்கு பதிலாக, தாவீதும் அவருடைய மனுஷரும், யூதாவுடைய தென்திசையிலுள்ள, கெசூரியரையும், கெஸ்ரியரையும், அமலேக்கியரையும் கொள்ளையிட்டார்கள்.

அதுபோலவே தாவீது "யெராமியேலருடைய தென் திசையிலும் கேனியருடைய தென்திசையிலும்" கொள்ளையிட்டோம் என்று சொல்லுகிற வாக்கியம், அவர்களுக்கு தென்திசையிலுள்ள யூதாதேசத்தாரை குறிக்கவில்லை. தாவீது சொல்லுவது, அவர்களுக்கு தென்திசையிலுள்ள கானானியரைக் குறிக்கிறது. தாவீது பாதி உண்மையை மறைக்கிறார். காத்தின் ராஜாவாகிய ஆகீஸ், தாவீது சொல்லுவதை தப்பிதமாகப் புரிந்துகொள்கிறார்.

ஆகீஸ் தாவீதை நம்புகிறார். தாவீது இஸ்ரவேலராகிய தன்னுடைய ஜனங்கள் தன்னை வெறுக்கும்படி செய்கிறார் என்று ஆகீஸ் நினைக்கிறான். தாவீதும் அவருடைய மனுஷரும் யூதாதேசத்தாரைக் கொள்ளையிட்டால், அவர்கள் தாவீதை வெறுப்பார்கள். ஆகையினால், தாவீது என்றென்றைக்கும் தன்னுடைய ஊழியக்காரனாயிருப்பார் என்று ஆகீஸ் சொல்லுகிறான் (1சாமு 27:12). ஆனால் தாவீதோ யூதாதேசத்தரை கொள்ளையிடவில்லை. தாவீது கெசூரியரையும், கெஸ்ரியரையும், அமலேக்கியரையும் கொள்ளையிடுகிறார்.

28 அதிகாரம்

பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள். இந்த யுத்தத்திலே சவுலின் ஜீவனும், அவருடைய ராஜ்யபாரமும் முடிந்துபோகிறது. தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வந்து அமருவதற்கு வாசல் திறக்கப்படுகிறது.

பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண புறப்பட்டு வருகிறார்கள். ராஜாவாகிய ஆகீஸ், பெலிஸ்தரின் சேனைகளை வழிநடத்துகிறார். தாவீதும் அவருடைய மனுஷரும் யுத்தத்திற்கு வரவேண்டுமென்று ஆகீஸ் சொல்லுகிறார் (1சாமு 28:1,2). இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள்.

சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவருக்கு மறுஉத்தரவு அருளவில்லை. சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை நாடிப்போகிறார். சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயப்படுகிறார் (1சாமு 28:3-6).

சாமுவேல் மரித்துப்போனார். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, தனக்கு குறிசொல்லி, சாமுவேலை எழும்பி வரப்பண்ண வேண்டுமென்று சவுல் சொல்லுகிறார் (1சாமு 28:7-14). சாமுவேலுக்கும் சவுலுக்கும் இடையே நடைபெறும் சம்பாஷணை (1சாமு 28:15-19). சவுல் தரையில் விழுந்து கிடக்கிறார் (1சாமு 28:20-25).

கர்த்தர் சவுலுக்கு மறுஉத்தரவு அருளவில்லை
1சாமு 28:1-6

1சாமு 28:1. அந்நாட்களிலே பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண, தங்கள் சேனைகளைப் போருக்குக் கூட்டினார்கள்; அப்பொழுது ஆகீஸ் தாவீதை நோக்கி: நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடேகூட யுத்தத்துக்கு வரவேண்டும் என்று அறியக்கடவாய் என்றான்.

1சாமு 28:2. தாவீது ஆகீசைப் பார்த்து: உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர் என்றான்; அப்பொழுது ஆகீஸ் தாவீதை நோக்கி: இதற்காக உன்னை எந்நாளும் எனக்கு மெய்காவலனாக வைப்பேன் என்றான்.

1சாமு 28:3. சாமுவேல் இதற்கு முன்னமே மரித்துப்போனான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குத் துக்கங்கொண்டாடி, அவன் ஊராகிய ராமாவிலே அவனை அடக்கம் பண்ணினார்கள். சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் தேசத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டான்.

1சாமு 28:4. பெலிஸ்தர் கூடிவந்து, சூநேமிலே பாளயமிறங்கினார்கள்; சவுலும் இஸ்ரவேலர் எல்லாரையும் கூட்டினான்; அவர்கள் கில்போவாவிலே பாளயமிறங்கினார்கள்.

1சாமு 28:5. சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயந்தான்; அவன் இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது.

1சாமு 28:6. சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்தரவு அருளவில்லை.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண திட்டமிடுகிறார்கள். இதற்காக அவர்கள் தங்கள் சேனைகளை போருக்கு கூட்டுகிறார்கள். காத் ராஜாவாகிய ஆகீஸ், பெலிஸ்தரின் சேனைகளுக்கு தலைவராயிருக்கிறான். இஸ்ரவேலருக்கு விரோதமாக நடைபெறும் இந்த யுத்தத்தில் தாவீதும் அவருடைய மனுஷரும் தன்னோடுகூட வரவேண்டும் என்று ஆகீஸ் விரும்புகிறான். ஆகீஸ் தாவீதை நோக்கி: "நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடேகூட யுத்தத்துக்கு வரவேண்டும் என்று அறியக்கடவாய்" (1சாமு 28:1) என்று சொல்லுகிறான். ஆகீஸ் தாவீதைப் பாதுகாக்கிறான். அதற்கு ஈடாக, தாவீதும் அவருடைய மனுஷரும், தனக்கு சேவை செய்யவேண்டும் என்று ஆகீஸ் எதிர்பார்க்கிறான்.

தாவீது ஒரு யுத்தவீரர். அவர் ஒரு பராக்கிரமசாலி. தாவீதைப்போல பராக்கிரமசாலி, தன்னோடுகூட, பெலிஸ்தரின் சேனைகளிலிருப்பது தனக்கு மிகுந்த பலமாகயிருக்கும் என்று ஆகீஸ் தீர்மானிக்கிறான்.

தாவீது ஆகீசுக்கு தெளிவான பிரதியுத்தரம் சொல்லவில்லை. அவர் மனதில் ஒன்றை வைத்து வெளியில் ஒன்றை பேசுகிறார். தாவீதின் வார்த்தைகளெல்லாமே உண்மையை மூடி மறைக்கும் வண்ணமாக இருக்கிறது. தாவீது ஆகீசைப் பார்த்து: "உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர்" (1சாமு 28:2) என்று சொல்லுகிறார்.

தாவீது ஆகீசோடுகூட யுத்தத்திற்கு வருவதாகவும் சொல்லவில்லை, வரவில்லை என்றும் சொல்லவில்லை. "உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர்" என்று தாவீது ஆகீசிடம் பொதுவாக சொல்லுகிறார். தாவீதின் வார்த்தைகளைக் கேட்டு, அவரும் அவருடைய மனுஷரும், தன்னோடுகூட யுத்தத்திற்கு வருவார்கள் என்று ஆகீஸ் நம்புகிறான். ஆனால் தாவீதோ, ஆகீசோடுகூட யுத்தத்திற்கு வருவதாக வாக்குப்பண்ணவில்லை.

தாவீது தன்னோடேகூட யுத்தத்திற்கு வருவார் என்று எதிர்பார்த்து, ஆகீஸ் தாவீதை நோக்கி, "இதற்காக உன்னை எந்நாளும் எனக்கு மெய்காவலனாக வைப்பேன்" (1சாமு 28:2) என்று சொல்லுகிறான். தாவீது ஆகீசோடுகூட யுத்தத்திற்கு வருவதற்கு முன்பாகவே ஆகீஸ் தாவீதுக்கு, மிகப்பெரிய வெகுமதியைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறான்.

பெலிஸ்தர் கூடிவந்து, சூநேமிலே பாளயமிறங்குகிறார்கள்; சவுலும் இஸ்ரவேலர் எல்லாரையும் கூட்டுகிறார்; அவர்கள் கில்போவாவிலே பாளயமிறங்குகிறார்கள் (1சாமு 28:4). பெலிஸ்தரும் இஸ்ரவேலரும் யுத்தக்களத்திலே அணிவகுத்து நிற்கிறார்கள். சூநேம் இசக்கார் கோத்திரத்தின் சுதந்தரவீதத்திலிருக்கிறது. இது பெலிஸ்தரின் தேசத்திற்கு வடக்கே வெகுதூரத்திலிருக்கிறது.

சூநேமுக்கு அருகாமையிலே கில்போவா மலை பிரதேசமுள்ளது. சவுல் இஸ்ரவேலர் எல்லோரையும் கூட்டுகிறார். அவர்கள் கில்போவா மலைப்பகுதியிலே பாளயமிறங்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள்.

சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயப்படுகிறார்; அவருடைய இருதயம் மிகவும் தத்தளித்துக் கொண்டிருக்கிறது (1சாமு 28:5). பெலிஸ்தரின் சேனைகளில் திரளான எண்ணிக்கையில் யுத்த வீரர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே பலமுள்ள ஆயுதங்களை ஏந்தியிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக துணிந்து நிற்கிறார்கள். யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துணிச்சலும், வீரமும், ஆயத்தமும் சவுலிடத்திலோ, இஸ்ரவேலரிடத்திலோ காணப்படவில்லை. ஆகையினால் சவுல் பெலிஸ்தரின் பாளயத்தை கண்டபோது பயப்படுகிறார். அவருடைய இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். சவுலோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார். கர்த்தரும் சவுலை விட்டு விலகிப்போய்விட்டார். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் சவுலுக்கு கிடைக்கவில்லை. சவுல் இன்னும் பெலிஸ்தர்மீது யுத்தம்பண்ண ஆரம்பிக்கவில்லை. யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவே, சவுல் பெலிஸ்தரின் பாளயத்தை கண்ட மாத்திரத்திலேயே பயப்படுகிறார்.

சவுலின் இருதயம் பலவீனமாயிருக்கிறது. சவுல் பெலிஸ்தரின் பாளயத்தை பார்த்து பயப்படும்போது, இஸ்ரவேலரும் பயப்படுகிறார்கள். ராஜா வீரத்தோடிருந்தால்தான், அவருடைய சேனையிலுள்ளவர்களுக்கும் வீரம் வரும். ராஜாவின் வீரத்தைப் பார்த்து, அவருடைய சேனையிலுள்ளவர்கள், தங்கள் மனதை திடப்படுத்திக்கொள்வார்கள். இங்கோ சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைப் பார்த்து பயப்படுகிறார். அவருடைய இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. சவுலின் தத்தளிப்பைப் பார்த்து, இஸ்ரவேலின் இருதயங்களும் தத்தளிக்கிறது.

சவுலுக்கு பயம் வந்தபோது, அவர் தன்னுடைய ஜீவியத்தில் நடைபெற்ற பழைய சம்பவங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கிறார். அமலேக்கியரை முற்றிலுமாய் அழிக்கவேண்டுமென்று கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக சவுலுக்கு கட்டளை கொடுத்திருந்தார். சவுலோ அமலேக்கியரை மொத்தமாய் அழித்துப்போடாமல் அவர்களை தப்பவிட்டார். சவுல் இதை நினைத்துப் பார்க்கிறார். சவுலின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது.

சவுல் குற்றமில்லாத ஆசாரியர்களின் இரத்தத்தை சிந்தினார். அவர்களுடைய மனைவிகளையும், பிள்ளைகளையும் கொன்றுபோட்டார். சவுல் இந்த சம்பவத்தையும் நினைத்துப் பார்க்கிறார். சவுலின் மனச்சாட்சி அவரை வேதனைப்படுத்துகிறது. அவருடைய இருதயம் மிகவும் தத்தளிக்கிறது. சவுலின் பாவங்களெல்லாம் அவருடைய கண்களுக்கு முன்பாகத் தெரிகிறது. சவுலால் கர்த்தரைப் பார்க்க முடியவில்லை. சவுலின் பாவங்கள் அவருடைய மனக்கண்களை மங்கம் செய்கிறது.

சவுல் தான் செய்த பாவங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கிறார். அவருடைய நம்பிக்கையும், தைரியமும் அவரை விட்டு விலகிப்போய்விடுகிறது. சவுலின் இருதயத்திற்குள் பயம் பிரவேசிக்கிறது. அவருடைய இருதயம் தத்தளிக்கிறது.

சவுலின் இருதயம் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது, அவர் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். அவருக்கு கர்த்தர்மீது உண்மையான பக்தியில்லை. அவருக்கு கர்த்தரிடத்தில் விசுவாசமுமில்லை. சவுல் உண்மையான இருதயத்தோடு கர்த்தரிடத்தில் விசாரிக்கவில்லை. சவுல் தன்னுடைய பயத்திலும், இருதயத்தின் தத்தளிப்பிலும் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். சவுல் கர்த்தரைத் தேடாமலேயே, கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும் என்று நினைக்கிறார்.

"அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான்" (1நாளா 10:13).

சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவருக்கு மறுஉத்தரவு அருளவில்லையென்றால், அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்தில் விசாரிக்கலாம் என்னும் எண்ணம் சவுலின் மனதில் இருக்கிறது. கர்த்தரிடத்தில் விசாரிப்பதும், பிசாசுகளிடத்தில் விசாரிப்பதும் சவுலின் பார்வைக்கு ஒன்றுபோலிருக்கிறது.

சவுல் விசுவாசமில்லாமலேயே கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தர் சவுலுக்கு சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்தரவு அருளவில்லை (1சாமு 28:6). சவுல் இருமனமுள்ளவராக கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். சவுலின் மனதிலே தெளிந்த சிந்தனையில்லை.

சவுல் சாமுவேலையும் தாவீதையும் துன்பப்படுத்தினார். அவர்கள் இருவருமே கர்த்தருடைய தீர்க்கதரிசிகள். தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்தின சவுலுக்கு, தீர்க்கதரிசிகள் மூலமாக மறுஉத்தரவு வருவதற்கு வாய்ப்பில்லை. சவுல் பிரதான ஆசாரியரையும் கொன்றுபோட்டார். ஆகையினால் கர்த்தர் ஊரீமின் மூலமாயும் சவுலுக்கு மறுஉத்தரவு அருளுவதற்கு வாய்ப்பில்லை.

சவுல் கிருபையின் ஆவியானவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தார். அவர் கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போனார். ஆகையினால் கர்த்தர் சொப்பனங்கள் மூலமாகவும் சவுலுக்கு மறுஉத்தரவு அருளவில்லை. கர்த்தர் தனக்கு மறுஉத்தரவு அருளுவார் என்னும் நம்பிக்கையும் சவுலின் மனதில் இல்லை. சவுல் கர்த்தரை நம்பாமலேயே, கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்.

சவுல் கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்கு முன்னமே, சாமுவேல் மரித்துப்போனார். இஸ்ரவேலர் எல்லாரும் அவருக்குத் துக்கங்கொண்டாடி, அவருடைய ஊராகிய ராமாவிலே அவரை அடக்கம்பண்ணினார்கள் (1சாமு 28:3). சாமுவேல் மரித்துப்போனது பெலிஸ்தருக்கும் தெரியும். ஆகையினால் பெலிஸ்தர் மிகவும் தைரியங்கொண்டு இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். இப்போது சாமுவேல் சவுலோடுகூட இல்லை. ஆகையினால் சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயப்படுகிறார். அவருடைய இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் இஸ்ரவேல் தேசத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டார் (1சாமு 28:3). "சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம்" (யாத் 22:18). சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களை எப்பொழுது துரத்திவிட்டார் என்பது தெளிவாக தெரியவில்லை. ஒருவேளை சவுல் சாமுவேலுக்கு கீழ்ப்படிந்து ஆட்சி செய்த ஆரம்பகாலத்தில், சவுல் இவர்களை இஸ்ரவேல் தேசத்திலிராதபடிக்கு துரத்திவிட்டிருக்கலாம். இக்காலத்தில் சாமுவேல் சவுலுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம்பண்ணினார். சவுலும் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தார்.

சவுலுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்தில், கர்த்தரால் விடப்பட்ட பொல்லாதஆவி, சவுலை அலைக்களித்தது. அஞ்சனம் பார்க்கிறவர்களும், குறிசொல்லுகிறவர்களும், தனக்கு விரோதமாக பொல்லாத ஆவிகளை அனுப்புகிறார்கள் என்று சவுல் சந்தேகப்பட்டு, அவர்களை இஸ்ரவேல் தேசத்திலிராதபடிக்கு துரத்திவிட்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

சவுலைப்போலவே, இக்காலத்திலும் ஒரு சிலர், பாவத்தை வெறுக்கிறார்கள். ஆனால் இந்த வெறுப்பு கொஞ்சகாலத்திற்கு மாத்திரமே இருக்கிறது. சவுலுக்கு அஞ்சனம் பார்க்கிறவர்கள் மூலமாகவும், குறிசொல்லுகிறவர்கள் மூலமாகவும் தீங்கு வந்தபோது, சவுல் அஞ்சனம் பார்ப்பதையும், குறிசொல்லுவதையும் வெறுத்தார். அதன்பின்பு சவுல் இப்போது அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடிப்போகிறார். சவுலைப்போலவே சிலர், பாவத்தினால் தங்களுக்கு பாதிப்பு வரும்போது, அந்தப் பாவத்தை வெறுக்கிறார்கள். பாதிப்பு குறைந்தவுடன், மறுபடியும் தாங்கள் வெறுத்த அந்தப் பாவத்தை, சிநேகிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

பாவத்தை முற்றிலுமாய் வெறுக்கவேண்டும் என்னும் எண்ணமோ, அல்லது பரிசுத்த ஜீவியம் செய்து கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்னும் ஆர்வமோ பாவிகளிடத்தில் இருப்பதில்லை. இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக பாவம் செய்கிறார்கள். அதே சுயநலத்திற்காகவே பாவத்தை வெறுக்கிறார்கள். சுயநலத்தை நேசிக்கிறவர்கள், கர்த்தருடைய சித்தத்தையும், அவருடைய விருப்பத்தையும் நேசிக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கமாட்டார்கள்.

அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ 1சாமு 28:7-14

1சாமு 28:7. அப்பொழுது சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி: அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீயைத் தேடுங்கள்; நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன் என்றான்; அதற்கு அவனுடைய ஊழியக்காரர்: இதோ, எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீ இருக்கிறாள் என்றார்கள்.

1சாமு 28:8. அப்பொழுது சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு, அவனும் அவனோடே கூட இரண்டுபேரும் இராத்திரியிலே அந்த ஸ்திரீயினிடத்தில் போய்ச் சேர்ந்தார்கள்; அவளை அவன் நோக்கி: நீ அஞ்சனம்பார்த்து எனக்குக் குறிசொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பிவரச்செய் என்றான்.

1சாமு 28:9. அதற்கு அந்த ஸ்திரீ: சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே; என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன என்றாள்.

1சாமு 28:10. அப்பொழுது சவுல்: இந்தக் காரியத்திற்காக உனக்குப் பொல்லாப்பு வராது என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று அவளுக்குக் கர்த்தர்மேல் ஆணையிட்டான்.

1சாமு 28:11. அப்பொழுது அந்த ஸ்திரீ: உமக்கு நான் யாரை எழும்பிவரப் பண்ண வேண்டும் என்றதற்கு, அவன்: சாமுவேலை எழும்பிவரப்பண்ணவேண்டும் என்றான்.

1சாமு 28:12. அந்த ஸ்திரீ சாமுவேலைக் கண்டமாத்திரத்தில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, சவுலை நோக்கி: ஏன் என்னை மோசம்போக்கினீர்? நீர்தான் சவுலாச்சுதே என்றாள்.

1சாமு 28:13. ராஜா அவளைப் பார்த்து: நீ பயப்படாதே; நீ காண்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ: தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறிவருகிறதைக் காண்கிறேன் என்று சவுலுக்குச் சொன்னாள்.

1சாமு 28:14. அவருடைய ரூபம் என்ன என்று அவளைக் கேட்டான். அதற்கு அவள்: சால்வையைப் போர்த்துக் கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பிவருகிறான் என்றாள்; அதினாலே சவுல் அவன் சாமுவேல் என்று அறிந்து கொண்டு, தரைமட்டும் முகங்குனிந்து வணங்கினான்.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடுகிறார். கர்த்தர் சவுலுக்கு மறுஉத்தரவு அருளவில்லை. சவுல் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் ஒருவேளை அவருக்கு மறுஉத்தரவு அருளியிருப்பார். ஆனால் சவுலோ இருமனதோடிருக்கிறார். கர்த்தர் தனக்கு மறுஉத்தரவு அருளவில்லையென்றால், அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்தில் போய் குறிகேட்கலாம் என்று சவுல் நினைக்கிறார்.

"அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும் போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டிய தல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. இடுக்கண் அடைந்தவர்களாயும் பட்டினியாயும் தேசத்தைக் கடந்து போவார்கள்; அவர்கள் பட்டினியாயிருக்கும்போது, மூர்க்கவெறி கொண்டு, தங்கள் ராஜாவையும் தங்கள் தேவனையும் தூஷிப்பார்கள். அவர்கள் அண்ணாந்துபார்ப்பார்கள், பூமியையும் நோக்கிப்பார்ப்பார்கள்; ஆனாலும் இதோ, இக்கட்டும் அந்தகாரமும் இருக்கும்; இடுக்கத்தால் இருளடைந்து, அந்தகாரத்திலே தள்ளுண்டு அலைவார்கள்" (ஏசா 8:19-22).

இருமனமுள்ளவர்கள் பரலோகத்தையும் நேசிப்பார்கள். பூலோகத்தையும் நேசிப்பார்கள். அவர்கள் கர்த்தரிடத்திலும் பேசுவார்கள். பிசாசிடத்திலும் பேசுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கும் ஆராதனை செய்வார்கள். விக்கிரகங்களுக்கும் ஆராதனை செய்வார்கள். கர்த்தர் இவர்களுக்கு பதில் கொடுக்கமாட்டார். பிசாசுகளும் இவர்களை வஞ்சித்துவிடும். இவர்களுக்கு கர்த்தரிடத்திலிருந்தும் ஆசீர்வாதம் வராது. பிசாசுகளிடத்திலிருந்தும் ஆசீர்வாதம் வராது.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் பாவத்தை வெறுக்கவேண்டும். ஒருவன் கர்த்தரை தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, பாவம் செய்யும்போது, அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்தும். அவனுக்கு அந்தப் பாவத்தினால் சந்தோஷம் கிடைக்காது. அவன் பாவம் செய்வதினால், கர்த்தரிடத்திலிருந்தும் அவனுக்கு ஆசீர்வாதம் கிடைக்காது. இப்படிப்பட்டவனுடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கும். பரலோகமும் இவனை கைவிட்டுவிடும். பூலோகமும் இவனை கைவிட்டுவிடும்.

சவுல் கர்த்தரிடத்தில் விசாரித்தார். பரலோகத்தின் கதவுகளைத் தட்டினார். கர்த்தர் சவுலுக்கு மறுஉத்தரவு அருளவில்லை. பரலோகத்தின் கதவுகள் சவுலுக்கு திறக்கப்படவில்லை. ஆகையினால் சவுல் இப்போது பாதாளத்தின் கதவுகளை தட்டுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். பிசாசுகளிடத்தில் விசாரிக்கலாம் என்று சவுல் துணிகரமாய் தீர்மானிக்கிறார்.

கர்த்தர் தன்னை நேசிக்காவிட்டால், பிசாசுகள் தன்னை நேசிக்கும் என்றும், அவை தனக்கு ஆலோசனையும், மறுஉத்தரவும் அருளும் என்றும் சவுல் எதிர்பார்க்கிறார். இதற்காக சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி, "அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயை தேடுங்கள், நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன்" (1சாமு 28:7) என்று சொல்லுகிறார்.

சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் இஸ்ரவேல் தேசத்தில் இராதபடிக்கு துரத்திவிட்டாலும், அவர்கள் இன்னும் தேசத்திலிருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது சவுலின் ஊழியக்காரருக்கு தெரிந்திருக்கிறது. சவுலின் ஊழியக்காரர் அவரிடத்தில், "இதோ, எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீ இருக்கிறாள்" (1சாமு 28:7) என்று சொல்லுகிறார்கள்.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடி கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார். சவுல் கர்த்தரை தேடாமல், அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடுவது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நிந்திக்கும் செயலாகும். சவுல் தனக்குத்தானே முரண்பட்டு காணப்படுகிறார். அவருடைய மனதில் தெளிந்த சிந்தனையில்லை. அவருடைய தீர்மானத்தில் உறுதியில்லை. இஸ்ரவேல் தேசத்தில் அஞ்சனம் பார்க்கிறவர்களும், குறிசொல்லுகிறவர்களும் இருக்கக்கூடாது என்று, சவுல்தான் அவர்களை, இஸ்ரவேல் தேசத்தை விட்டு துரத்திவிட்டார். இப்போது அதே சவுல் அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயை தேடிப்போகிறார்.

சவுல் சிறிதும் காலதாமதம் பண்ணாமல் உடனே அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடிப்போகிறார். சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு, அவரும் அவரோடே கூட இரண்டுபேரும் இராத்திரியிலே அந்த ஸ்திரீயினிடத்தில் போய்ச் சேருகிறார்கள் (1சாமு 28:8). அவர்கள் யாருக்கும் தெரியாமல் இரவு வேளையில் போகிறார்கள். சவுல் தன்னை யாருக்கும் வெளிப்படுத்தாமல் வேஷம்மாறி, வேறு வஸ்திரம் தரித்திருக்கிறார். அவர்கள் குதிரைகள்மேல் ஏறிப்போகாமல், ஒருவேளை கால்நடையாகவே எந்தோரிலுள்ள, அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயினிடத்தில் போய்சேர்ந்திருக்கவேண்டும்.

சாத்தான் சவுலை ஆளுகை செய்கிறான். அவனே சவுலை வழிநடத்துகிறான். தனக்கு அடிமைப்பட்டவர்களை சாத்தான் ஆட்டி வதைப்பான். அவர்களால் சுயமாய் சிந்திக்க முடியாது. சவுல் இதற்கு முன்பு, இதுபோல யாருக்கும் தெரியாமல், இரவுவேளையிலே, வேஷம்மாறி, அஞ்சனம் பார்க்க போனதில்லை. தன்னுடைய வருங்காலம் எப்படியிருக்கும் என்பதை அறிந்துகொள்ளும் ஆசை சவுலுக்கு இப்போது வந்திருக்கிறது. சவுல் கர்த்தரை நம்பவில்லை. விசுவாசிகளின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

ஆனால் சவுலோ குழப்பத்திலிருக்கிறார். தன்னுடைய காலங்களும், தன்னுடைய ஜீவனும் யாருடைய கரத்திலிருக்கிறது என்பதுகூட சவுலுக்கு தெரியவில்லை. சவுல் தன்னைத்தானே அவமானப்படுத்துகிறார். கர்த்தருடைய சமுகத்திற்கு போகவேண்டிய சவுல், இரவு வேளையிலே யாருக்கும் தெரியாமல் சாத்தானைத் தேடிப்போகிறார்.

சவுலை பாவம் ஆளுகை செய்கிறது. அவருடைய மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது. அவரை வேதனைப்படுத்துகிறது. அவர் பாவம் செய்ய ஆசைப்படுகிறார். ஆனால் அந்தப் பாவத்தை அவரால் வெளிப்படையாக செய்ய முடியவில்லை. ஒருவருக்கும் தெரியாமல், இரவுவேளையிலே, வேஷம் மாறி, பாவம் செய்யப்போகிறார். வெட்கத்தோடும் அவமானத்தோடும் போகிறார். பாவம் செய்கிறவர்களுக்கு சமாதானமோ, சந்தோஷமோ இல்லை. அவர்களுக்கு வெட்கமும், வேதனையும், அவமானமும் உண்டாகும்.

சவுல் எந்தோரிலே, அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை நோக்கி, "நீ அஞ்சனம்பார்த்து எனக்குக் குறிசொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பிவரச்செய்" (1சாமு 28:8) என்று சொல்லுகிறார்.

அந்த ஸ்திரீயோ அஞ்சனம் பார்க்க பயப்படுகிறாள். அவள் தன்னுடைய பிராணனை நேசிப்பதினால், சவுல் ஏற்கெனவே சொன்ன கட்டளையை நினைத்து பயப்படுகிறாள். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, சவுலை நோக்கி, "சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், தேசத்தில் இராதபடிக்கு நீர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே; என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன" (1சாமு 28:9) என்று கேட்கிறாள். தன்னோடு பேசுவது சவுல் என்பதுகூட அந்த ஸ்திரீக்கு தெரியவில்லை.

மரித்துப்போனவர்களை எழும்பி வரச்செய்து, அவர்களோடு பேசுவதை "அஞ்சனம் பார்ப்பது" என்று புறஜாதியார் அழைக்கிறார்கள். இது மரித்துப்போனவர்கள் மூலமாக குறிகேட்பதற்கு சமம். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் அஞ்சனம் பார்ப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது.

"தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்" (உபா 18:10-12).

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை நோக்கி, "நீ அஞ்சனம்பார்த்து எனக்குக் குறிசொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பிவரச்செய்" என்று சொல்லுகிறார். மரணத்திற்கு பின்பு, மரித்துப்போனவர்களின் ஆத்துமா உயிரோடிருக்கும் என்று புறஜாதியாரும் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையில் அவர்கள் அஞ்சனம் பார்த்து குறிசொல்லுகிறார்கள். சரீரத்தைவிட்டு பிரிந்துபோன ஆத்துமாவுக்கு, குறிசொல்லக்கூடிய விசேஷித்த முன்னறிவும், ஞானமும் இருக்கும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை.

அஞ்சனம் பார்ப்பதும், குறிசொல்லுவதும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாயிருக்கிறது. நல்ல ஆத்துமாக்கள், பொல்லாத ஆவிகளாக வெளியே வரும் என்று வேதத்தில் சொல்லப்படவில்லை. இது பிசாசுகளின் தந்திரம். அஞ்சனம் பார்ப்பதன் மூலமாகவும், குறிசொல்லுவதன் மூலமாகவும் பிசாசுகள் மனுஷரை வஞ்சிக்கின்றன.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துவதற்கு, அவர் பிசாசுகளின் உதவிகளை எதிர்பார்ப்பதில்லை. மரித்துப்போனவர்களுடைய ஆவிகள் மூலமாகத்தான் பேசமுடியும் என்னும் நிர்ப்பந்தமும் கர்த்தருக்கு இல்லை. கர்த்தர் ஜீவனுள்ளவர். அவர் தம்முடைய எழுதப்பட்ட வார்த்தைகள் மூலமாகவும், உயிரோடிருக்கிற தம்முடைய ஊழியக்காரர் மூலமாகவும் பேசுகிறார். அஞ்சனம் பார்ப்பதும், குறிசொல்லுவதும் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமான செயல். ஆகையினால் கர்த்தர் இதை தம்முடைய பிரமாணத்தில் தடைபண்ணியிருக்கிறார்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கு கர்த்தருடைய பிரமாணம் தெரியவில்லை. ஆனால் இஸ்ரவேல் தேசத்திலே சவுல் ஏற்படுத்தின பிரமாணம் தெரிந்திருக்கிறது. சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் தேசத்திலே இராதபடிக்கு நிர்மூலமாக்கினார் என்னும் செய்தியை இந்த ஸ்திரீ அறிந்திருக்கிறாள்.

சவுலும் அவரோடுகூட இரண்டுபேரும் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடி வந்திருக்கிறார்கள். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ அவர்களைப் பார்த்து சந்தேகப்படுகிறாள். அவள் சவுலைப் பார்த்து, "என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன" (1சாமு 28:9) என்று கேட்கிறாள்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ தன்னுடைய பிராணனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள். சவுலின் பிரமாணத்தினால் தன்னுடைய பிராணனுக்கு வந்திருக்கும் ஆபத்தை அவள் அறிந்திருக்கிறாள். தன்னுடைய பிராணனைக் காத்துக்கொள்ள அவள் மிகவும் எச்சரிக்கையாயிருக்கிறாள். ஆனால் அவளுக்கு கர்த்தருடைய பிரமாணம் தெரியவில்லை. சவுலின் பிரமாணத்தை மீறுவதைவிட, கர்த்தருடைய பிரமாணத்தை மீறுவது மிகப்பெரிய பாவம் என்பதை அந்த ஸ்திரீ அறியாதிருக்கிறாள். சவுலின் கோபத்தைவிட, கர்த்தருடைய கோபம் மகாபயங்கரமானது என்பதையும் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ அறியாதவளாயிருக்கிறாள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாவிட்டால், தேவனுடைய கோபம் தன்மேல் வரும் என்பது அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கு தெரியவில்லை.

அஞ்சனம் பார்ப்பதற்கும், குறிசொல்லுவதற்கும் விரோதமாக சவுல் என்ன செய்திருக்கிறார் என்பது அந்த ஸ்திரீக்கு தெரிந்திருக்கிறது. சாத்தானுடைய இந்தக் கிரியைகளுக்கு விரோதமாக கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதும், என்ன செய்திருக்கிறார் என்பதும் இந்த ஸ்திரீக்கு தெரியவில்லை. அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, "நீர் என் பிராணனுக்கு கண்ணி வைக்கிறது என்ன" என்று கேட்கிறாள். அஞ்சனம் பார்ப்பதன் மூலமாய், தன்னுடைய ஆத்துமாவுக்கு அவள் கண்ணி வைக்கிறாள் என்பது அவளுக்குத் தெரியவில்லை. பிராணனுக்கு வைக்கப்படும் கண்ணியைவிட, ஆத்துமாவுக்கு வைக்கப்படும் கண்ணி மிகவும் ஆபத்தானது.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை காட்டிக்கொடுப்பதில்லை என்று வாக்குப்பண்ணுகிறார். சவுல் அந்த ஸ்திரீயை பார்த்து, "இந்தக் காரியத்திற்காக உனக்குப் பொல்லாப்பு வராது என்பதைக் கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 28:10) என்று அவளுக்குக் கர்த்தர்மேல் ஆணையிடுகிறார்.

சவுல் தன்னால் நிறைவேற்ற முடியாத காரியத்தை அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கு ஆணையிட்டுச் சொல்லுகிறார். "இந்தக் காரியத்திற்காக உனக்கு பொல்லாப்பு வராது" என்று சவுல் சொல்லுகிறார். ஆனால் அந்த ஸ்திரீக்கு அஞ்சனம் பார்ப்பதினால் பொல்லாப்பு நிச்சயம் வரும். அந்தப் பொல்லாப்பை சவுலால் தடைபண்ண முடியாது.

சவுலால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. அவர் இப்போது அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை காப்பாற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். தேவனுடைய கோபம் பாவிகள்மேல் வரும். அந்தக் கோபத்திற்கு, யாராலும் தப்பிக்கவும் முடியாது. யாராலும் தப்பிக்க வைக்கவும் முடியாது. கர்த்தருடைய கோபம் சவுலின்மீது வந்திருக்கிறது. சவுல் அதை அறிந்துகொள்ளாமல், அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கு பொல்லாப்பு வராது என்று சொல்லுகிறார். சவுல் தன்னுடைய வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்காக, "கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" என்று சொல்லி, அவளுக்கு கர்த்தர்மேல் ஆணையிடுகிறார்.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயிடம், "நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பி வரச்செய்" (1சாமு 28:8) என்று சொன்னார். அப்பொழுது அந்த ஸ்திரீ: "உமக்கு நான் யாரை எழும்பிவரப் பண்ண வேண்டும்" என்றதற்கு, சவுல்: "சாமுவேலை எழும்பிவரப்பண்ணவேண்டும்" (1சாமு 28:11) என்று சொல்லுகிறார்.

சாமுவேல் இதற்கு முன்னமே மரித்துப்போனார். சவுலோ சாமுவேலிடம் பேசவேண்டுமென்று விரும்புகிறார். சாமுவேல் சவுலை இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். ஆரம்பத்தில் சாமுவேலும் சவுலும் சிநேகிதர்களாயிருந்தார்கள். சாமுவேல் சவுலுக்கு ஆலோசனைக்காரராயிருந்தார்.

சாமுவேல் உயிரோடிருந்த நாட்களில் ராமாவிலே இருந்தார். சவுலுக்கு கிபியா சொந்த ஊர். கிபியாவும் ராமாவும் அருகாமையிலுள்ள பட்டணங்கள். சாமுவேல் ராமாவிலே தங்கியிருந்து, தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு தலைவராயிருந்தார். சவுல் ராமாவுக்கு அருகாமையிலிருந்தாலும், அவர் ஒரு தரம்கூட கிபியாவிலிருந்து ராமாவுக்கு போய், அங்கே சாமுவேலைப் பார்க்கவில்லை. சவுல் சாமுவேலிடத்தில் ஒருபோதும் விசாரிக்கவுமில்லை. சவுல் ராமாவுக்குப்போய் சாமுவேலிடத்தில் விசாரித்திருந்தாரென்றால், சவுலுக்கு இவ்வளவு பிரச்சனை வந்திருக்காது.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயிடம், "சாமுவேலை எழும்பி வரப்பண்ணவேண்டும்" என்று சொல்லுகிறார். சவுல் இந்த வார்த்தைகளை சொன்னபோது, அடுத்த வாக்கியமாக, "அந்த ஸ்திரீ சாமுவேலை கண்ட மாத்திரத்திலே" (1சாமு 28:12) என்று எழுதப்பட்டிருக்கிறது. அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கு, தன்னோடு கூடயிருப்பது சவுல் என்பது தெரியவருகிறது.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ சாமுவேலைக் கண்டமாத்திரத்தில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, சவுலை நோக்கி: "ஏன் என்னை மோசம்போக்கினீர்? நீர்தான் சவுலாச்சுதே" (1சாமு 28:12) என்று சொல்லுகிறாள்.

சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்து, அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயினிடத்தில் வந்திருக்கிறார். அவர் அந்த ஸ்திரீயை வஞ்சிக்கிறார். தன்னை சவுல் என்று அவர் அந்த ஸ்திரீக்கு வெளிப்படுத்தவில்லை. அந்த ஸ்திரீயும் சவுலுக்கு பயப்படுகிறாள்.

அஞ்சனம் பார்க்கிற "ஸ்திரீ சாமுவேலைக் கண்ட மாத்திரத்திலே" என்று எழுதப்பட்டிருக்கிறது. அவள் உண்மையில் சாமுவேலைப் பார்க்கவில்லை. அவள் சாமுவேலைப் பார்த்திருந்தால், அவள் மெய்யாகவே சாமுவேலுக்கு பயப்பட்டிருப்பாள். சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசியாயிருந்தவர். அந்த ஸ்திரீக்கு சவுலைவிட சாமுவேலைப் பார்த்து அதிக பயம் வந்திருக்கும்.

ஆனால் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயோ சவுலைப் பார்த்து பயப்படுகிறாள். சாமுவேல் நல்ல தீர்க்கதரிசி. சவுலோ துன்மார்க்கமான ராஜா. அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, மகாசத்தமாய்க் கூப்பிட்டு, "ஏன் என்னை மோசம்போக்கினீர், நீர்தான் சவுலாச்சுதே" என்று சொல்லுகிறாள். சவுலோ அந்த ஸ்திரீக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். தன்னைப் பார்த்து அவள் பயப்படவேண்டாம் என்று அவளுக்கு தைரியமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை பார்த்து: "நீ பயப்படாதே; நீ காண்கிறது என்ன" என்று கேட்கிறார். அதற்கு அந்த ஸ்திரீ: "தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறிவருகிறதைக் காண்கிறேன்" (1சாமு 28:13) என்று சவுலுக்குச் சொல்லுகிறாள்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ புறஜாதியாரின் பாஷையைப் பேசுகிறாள். அந்த ஸ்திரீ "தேவர்கள்" என்று சொல்லும் வார்த்தைக்கு, "ஆவிகள்" என்று பொருள். சவுல் சாமுவேலோடு பேசவேண்டும் என்று விரும்பினால், அவர் ராமாவிலே சாமுவேலை அடக்கம்பண்ணின இடத்திற்கு போகவேண்டும். சாமுவேலின் கல்லறையை நோக்கி கூப்பிடவேண்டும். சவுல் விரும்பினால் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை எந்தோரிலிருந்து, ராமாவுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

சவுலோ சாமுவேலுடைய செத்துப்போன சரீரத்தோடு பேசவிரும்பவில்லை. அவர் சாமுவேலின் ஆத்துமாவைக் குறித்து அக்கரையோடிருக்கிறார். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, சாமுவேலின் ஆத்துமாவை அவருடைய சரீரத்தோடு எழுப்புவாள் என்று சவுல் எதிர்பார்க்கிறார். பிசாசுகள் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயையும் வஞ்சிக்கிறது. சவுலையும் வஞ்சிக்கிறது. கர்த்தர் இந்தப் பிசாசுகளுக்கு அனுமதி கொடுத்ததினால், அவை மனுஷரை வஞ்சிக்கிறது.

சத்தியத்தை நேசிக்காதவர்கள், சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள், பொய்களை நேசிப்பார்கள். அந்தப் பொய்கள் அவர்களை வஞ்சித்துவிடும். சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை பார்த்து, "நீ காண்கிறது என்ன" என்று கேட்கிறார். அந்த ஸ்திரீ பார்ப்பதை, சவுலால் பார்க்க முடியவில்லை. சவுல் அந்த ஸ்திரீயிடம், "அவருடைய ரூபம் என்ன" என்று கேட்கிறார். அதற்கு அவள், "சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகிறான்" என்று சொல்லுகிறாள். சவுல் இப்போதும் அந்த மனுஷனைப் பார்க்கவில்லை.

ஒருவேளை அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிற தேவர்களை பார்ப்பதற்கு, சவுலுக்கு அனுமதி கொடுக்காமலிருந்திருக்கலாம். ஆகையினால் சவுல் ஒன்றையும் பார்க்காமலேயே, அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயின் வார்த்தைகளை நம்புகிறார். அந்த ஸ்திரீ சவுலிடம், "சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன்" என்று சொன்னவுடன், அந்த மனுஷன் சாமுவேலாக இருக்கவேண்டும் என்று சவுல் அறிந்துகொள்கிறார்.

சால்வையைப் போர்த்துக் கொண்டிருப்பது தீர்க்கதரிசிகளுக்கு அடையாளம். சாமுவேல் பல சமயங்களில் சால்வையைப் போர்த்துக்கொண்டிருந்தார். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, தான் பார்க்கிற மனுஷனைப்பற்றிச் சொல்லும்போது, அது சாமுவேலாக இருக்கவேண்டும் என்று சவுல் அறிந்துகொள்கிறார். உடனே சவுல் தரைமட்டும் முகங்குனிந்து வணங்குகிறார்.

சவுல் சாமுவேலைப் பார்க்கவில்லை. ஆனாலும் அவர் சாமுவேலுக்கு மரியாதை காண்பிக்கும் வண்ணமாக, "தரைமட்டும் முகங்குனிந்து வணங்குகிறார்" (1சாமு 28:14).

சவுலுக்கு சாபம்
1சாமு 28:15-19

1சாமு 28:15. சாமுவேல் சவுலை நோக்கி: நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்குச் சவுல்: நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்; அவர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன் என்றான்.

1சாமு 28:16. அதற்குச் சாமுவேல்: கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்?

1சாமு 28:17. கர்த்தர் என்னைக்கொண்டு சொன்னபடியே செய்து முடித்து, ராஜ்யத்தை உன் கையிலிருந்து பறித்து, அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்துவிட்டார்.

1சாமு 28:18. நீ கர்த்தருடைய சொற்கேளாமலும், அமலேக்கின்மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரத்தைத் தீர்க்காமலும் போனபடியினால், கர்த்தர் இன்றைய தினம் உனக்கு இந்தப் பிரகாரமாகச் செய்தார்.

1சாமு 28:19. கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள். இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்.

சவுல் வேஷம் மாறி அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை பார்க்க வந்திருக்கிறார். ஆனால் சாத்தான் சவுலைக் கண்டுபிடிக்கிறான் (1சாமு 28:12). இப்போது சாத்தான் வேஷம் மாறி வந்திருக்கிறான். அவன் சாமுவேலின் சால்வையைப் போர்த்துக்கொண்டு, ஒரு முதிர்ந்த வயதான மனுஷனாக எழும்பி வருகிறான். ஆனால் சவுலால் சாத்தான் போடுகிற வேஷத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தன்னோடு பேசுவது சாமுவேல் அல்ல, அது சாத்தான் என்பது சவுலுக்கு தெரியவில்லை. சவுல் சாமுவேலுக்கு மரியாதை செலுத்துவதாக நினைத்து, சாத்தானை தரைமட்டும் முகங்குனிந்து வணங்குகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடு நமக்கு யுத்தமுண்டு. பிசாசுகள் வேஷம்மாறி நம்மோடு யுத்தம்பண்ணும். பிசாசுகள் நம்மை அறிந்து வைத்திருக்கிறது. நாமோ பிசாசுகளின் தந்திரங்களை அறியாதிருக்கிறோம். சவுல் வேஷம் மாறி வந்தாலும், சாத்தான் அவரை அறிந்திருக்கிறான். சாத்தான் வேஷம் மாறி வரும்போது, சவுலால் அவனை அறிந்து கொள்ள முடியவில்லை.

சவுலுக்கும் சாமுவேலின் ரூபத்தில் வந்திருக்கிற சாத்தானுக்கும் சம்பாஷணை நடைபெறுகிறது. சாமுவேலின் ரூபத்திலிருக்கிற சாத்தான் சவுலை நோக்கி: "நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன" என்று கேட்கிறான். அதற்குச் சவுல்: "நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்; அவர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன்" (1சாமு 28:15) என்று சொல்லுகிறார். சவுல் சாமுவேலிடம் பேசுவதாக நினைத்து, சாத்தானிடம் பேசுகிறார்.

தன்னோடு பேசுவது சாமுவேல் என்று சவுல் தப்பிதமாக நினைக்கிறார். தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம், சாமுவேலாக வேஷம் மாறி வந்திருக்கிற சாத்தானிடம் சவுல் சொல்லுகிறார். சவுல் சாத்தானிடம் சொல்லும்போது, "நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்" என்று சொல்லுகிறார்.

சவுல் கர்த்தருடைய நீதியை அங்கீகரிக்கவில்லை. சவுல் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. சவுல் கர்த்தரைவிட்டு விலகிப்போனார். கர்த்தரும் சவுலை விட்டு விலகிப்போய்விட்டார். கர்த்தர் சவுலை கைவிட்டுவிட்டார். கர்த்தர் தன்னைக் கைவிட்டதினால், தான் சாமுவேலை கூப்பிடுவதாக, சவுல் சாமுவேலின் ரூபத்திலிருக்கிற சாத்தானுக்கு சொல்லுகிறார். "கர்த்தர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன்" (1சாமு 28:15) என்று சவுல் சொல்லுகிறார்.

சவுலுக்கு கர்த்தரைப்பற்றியும் தெரியவில்லை, கர்த்தருடைய ஊழியக்காரரைப்பற்றியும் தெரியவில்லை. கர்த்தர் சவுலை கைவிட்டுவிட்டாரென்றால், கர்த்தருடைய ஊழியக்காரரால் சவுலுக்கு உதவி செய்ய முடியாது. கர்த்தருடைய சித்தத்தை மீறி, அவருடைய ஊழியக்காரரால், ஒன்றும் செய்யமுடியாது. சாமுவேல் மரித்துப்போன தீர்க்கதரிசி. சவுலோ உயிரோடிருக்கிற தீர்க்கதரிசிகளைவிட, மரித்துப்போன தீர்க்கதரிசி தனக்கு உதவிசெய்வார் என்று எதிர்பார்க்கிறார். "நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படி உம்மை அழைப்பித்தேன்" என்று சவுல், சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தானிடம் சொல்லுகிறார்.

சவுலோடு பேசுவது உண்மையிலேயே சாமுவேலாக இருப்பாரென்றால், சவுல் தன் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்று அவர் சொல்லியிருப்பார். சவுல் தேவனோடு சமாதானமாயிருக்கவேண்டுமென்று சாமுவேல் அவருக்கு ஆலோசனை சொல்லியிருப்பார். சவுல் தாவீதை கொல்ல முயற்சி பண்ணக்கூடாது என்றும், தேவனுடைய சமுகத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான காரியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்றும், சாமுவேல் சவுலுக்கு ஆலோசனை சொல்லியிருப்பார்.

ஆனால் சவுலோ இங்கே சாமுவேலிடம் பேசவில்லை. சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தானிடம் பேசுகிறார். சாத்தான் சவுலுக்கு தீங்கு செய்ய வந்திருக்கிறான். சாத்தான் மனுக்குலத்திற்கு சத்துருவாயிருக்கிறவன். மனுக்குலத்தை கொல்லுவதும், அழிப்பதுமே அவனுடைய வேலை. சாத்தான் மனுஷர்களை தவிக்க விடுவான். மனுஷரை அலைக்கழிப்பான். அவர்களுடைய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அவர்களைவிட்டு எடுத்துப்போடுவான்.

சவுல் தன்னுடைய பிரச்சனைகளை சாத்தானிடம் சொல்லுகிறார். சவுல் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறார் என்பது சாத்தானுக்கு தெரியும். ஆனால் சாத்தானால் சவுலுக்கு உதவிசெய்ய முடியாது. அவனால் சவுலுக்கு நம்பிக்கையை கொடுக்கவும் முடியாது. சாத்தான் மனுஷரை சோதிக்கிறவன்.

யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவனாயிருந்தான். சாத்தான் யூதாசுக்குள்ளே புகுந்தான். முதலில் அவனை சோதித்தான். அதன் பின்பு யூதாஸ் நான்று கொண்டு செத்துப்போனான். சாத்தான் யூதாசை முதலில் சோதித்து, அதன் பின்பு வஞ்சித்தான். யூதாஸ்காரியோத்து பிசாசுக்கு கீழ்ப்படிந்து, இயேசுகிறிஸ்துவை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு காட்டிக்கொடுத்தான். அதன் பின்பு, பிசாசின் வழிநடத்துதலினால், யூதாஸ் நான்றுகொண்டு செத்துப்போனான்.

சாத்தான் தன்னை சவுலுக்கு சாமுவேலைப் போல காண்பித்துக்கொள்கிறான். சவுல் இப்போது மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறார். சாத்தான் சவுலின் வேதனைகளை அவருக்கு நினைவுபடுத்துகிறான். சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தான், சவுலை நோக்கி, "கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்?" (1சாமு 28:16) என்று சொல்லுகிறான்.

தன்னோடு பேசுவது சாமுவேல் என்று சவுல் நம்பவேண்டும். இதற்காக சாமுவேல் உயிரோடிருந்தபோது சவுலுக்கு சொன்ன வார்த்தைகளை, இப்போது சாத்தான் அவருக்கு நினைவுபடுத்துகிறான். "கர்த்தர் என்னைக்கொண்டு சொன்னபடியே செய்து முடித்து, ராஜ்யத்தை உன் கையிலிருந்து பறித்து, அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்துவிட்டார்" (1சாமு 28:17) என்று சாமுவேலின் வேஷத்தை தரித்திருக்கிற சாத்தான் சவுலுக்கு சொல்லுகிறான்.

சாத்தானுக்கு எப்படி பேசவேண்டும் என்று தெரியும். அவன் சாதுரிய வார்த்தைகளைப்பேசி மனுஷரை வஞ்சிக்கிறவன். சாத்தான் தன்னுடைய பேச்சில் உண்மையிருப்பதுபோல பேசுவான். ஆனால் அவன் உண்மையை மொத்தமாய்ச் சொல்லமாட்டான். பாதி உண்மையை சொல்லிவிட்டு, மீதி உண்மையை மறைத்துவிடுவான். இக்காலத்திலும் கள்ள அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைப் போல பேசுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஆவிக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்துவதுபோல, கள்ளஊழியக்காரர்களும் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தகிறார்கள்.

சாமுவேலின் வேஷம் தரித்திருக்கிற சாத்தான், சவுலை நோக்கி, "நீ கர்த்தருடைய சொற்கேளாமலும், அமலேக்கின்மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரத்தைத் தீர்க்காமலும் போனபடியினால், கர்த்தர் இன்றைய தினம் உனக்கு இந்தப் பிரகாரமாகச் செய்தார்" (1சாமு 28:18) என்று சொல்லுகிறான்.

சவுல் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருந்தாலும், சாமுவேல் சவுலை மனந்திரும்புவதற்கு வழிநடத்தினார். சவுல் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பித்துக்கொள்ளும் வழியை சாமுவேல் அவருக்கு உபதேசம்பண்ணினார். சவுல் தன் பாவத்தை உணர்ந்து, மனந்திரும்பி, கர்த்தருடைய சமுகத்திலே தன்னை தாழ்த்தினால், அவர் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும், பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தானோ, சவுலை இப்போது வஞ்சிக்கிறான். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் சவுலுக்கு கிடைக்காது என்று சொல்லுகிறான். "நீ கர்த்தருடைய சொற்கேளாமலும், அமலேக்கின்மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரத்தைத் தீர்க்காமலும் போனபடியினால், கர்த்தர் இன்றைய தினம் உனக்கு இந்தப் பிரகாரமாகச் செய்தார்" என்று சாத்தான் சவுலுக்கு சொல்லுவதினால், கர்த்தருடைய உக்கிரகோபம் சவுலைவிட்டு நீங்கவில்லை என்றும், கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் சவுலால் மறுபடியும் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் சொல்லுகிறான். சவுல் கர்த்தரிடத்தில் வராதவாறு சாத்தான் அவரை தடுத்து நிறுத்துகிறான்.

சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தான், சவுலின் மனதை கொஞ்சம் கொஞ்சமாக கெடுத்துப் போடுகிறான். முடிவிலே சாத்தான் சவுலுக்கு சாபமான வார்த்தைகளைச் சொல்லுகிறான். "கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள். இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1சாமு 28:19) என்று சாத்தான் சவுலுக்கு சொல்லுகிறான். பெலிஸ்தரோடு நடைபெறுகிற யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரர் தோற்றுப்போவார்கள். "நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "நாளைக்கு உங்களுடைய சரீரமும் ஆவியும் பிரிந்துவிடும்" என்று பொருள்.

சவுல் தரையிலே விழுகிறார்
1சாமு 28:20-25

1சாமு 28:20. அந்தக்ஷணமே சவுல் நெடிதாங்கிடையாய்த் தரையிலே விழுந்து, சாமுவேலின் வார்த்தைகளினாலே மிகவும் பயப்பட்டான்; அவன் இராப்பகல் முழுதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தபடியினால், அவன் பலவீனமாயிருந்தான்.

1சாமு 28:21. அப்பொழுது அந்த ஸ்திரீ சவுலிடத்தில் வந்து, அவன் மிகவும் கலங்கியிருக்கிறதைக் கண்டு, அவனை நோக்கி: இதோ, உம்முடைய அடியாளாகிய நான் உம்முடைய சொற்கேட்டு, என் பிராணனை என் கையிலே பிடித்துக்கொண்டு, நீர் எனக்குச் சொன்ன உம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தேன்.

1சாமு 28:22. இப்பொழுது நீர் உம்முடைய அடியாளுடைய சொல்லைக் கேளும், நான் உமக்கு முன்பாகக் கொஞ்சம் அப்பம் வைக்கிறேன், அதைப் புசிப்பீராக; அப்பொழுது நீர் வழிநடந்து போகத்தக்க பெலன் உமக்குள் இருக்கும் என்றாள்.

1சாமு 28:23. அவனோ தட்டுதல்பண்ணி, நான் புசிக்கமாட்டேன் என்றான்; ஆனாலும் அவனுடைய ஊழியக்காரரும் அந்த ஸ்திரீயும் அவனை மிகவும் வருந்திக்கொண்டதினால், அவன் அவர்கள் சொற்கேட்டு, தரையிலிருந்து எழுந்திருந்து கட்டிலின் மேல் உட்கார்ந்தான்.

1சாமு 28:24. அந்த ஸ்திரீயினிடத்தில் கொழுத்த கன்றுக்குட்டி ஒன்று வீட்டில் இருந்தது; அதைத் தீவிரமாய் அடித்து, மா எடுத்துப் பிசைந்து, அதைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டு,

1சாமு 28:25. சவுலுக்கும் அவன் ஊழியக்காரருக்கும் முன்பாகக் கொண்டுவந்து வைத்தாள்; அவர்கள் புசித்து எழுந்திருந்து, அந்த இராத்திரியிலேயே புறப்பட்டுப் போனார்கள்.

சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயிடம் குறிகேட்கப்போனார். தான் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்துகொள்வதற்காக சவுல் குறிகேட்கப் போனார். சாத்தான் சாமுவேலின் வேஷத்தில் சவுலோடு பேசினான். சவுல் என்ன செய்யவேண்டுமென்று சாத்தான் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. சவுல் என்ன செய்யவில்லை என்பதையும், சவுலுக்கு என்ன செய்யப்படும் என்பதையும் சாத்தான் சொல்லுகிறான்.

அந்தக்ஷணமே சவுல் நெடிதாங்கிடையாய்த் தரையிலே விழுந்து, சாமுவேலின் வார்த்தைகளினாலே மிகவும் பயப்படுகிறார்; தன்னோடு பேசியது சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தான் என்பது சவுலுக்கு தெரியவில்லை. சவுல் இராப்பகல் முழுதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தபடியினால், அவர் பலவீனமாயிருக்கிறார் (1சாமு 28:20). சவுல் பாளயத்திலிருந்து அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயினிடத்தில் வரும்போதே, உபவாசத்தோடு வந்திருக்கிறார். அந்த ஸ்திரீ அஞ்சனம் பார்த்து குறிசொல்லும்போது சவுல் தொடர்ந்து உபவாசத்திலிருக்கிறார்.

சவுலுக்கு போதுமான அளவு போஜனம் இருக்கிறது. ஆனால் அவருக்கு போஜனம் பண்ண மனதில்லை. அவர் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டு பயந்துபோயிருக்கிறார். அவருடைய இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. பயமும் தத்தளிப்பும் சவுலை நெருக்குவதினால், அவரால் போஜனம் பண்ண முடியவில்லை.

சவுல் ஒன்றும் சாப்பிடாதிருந்ததினால், அவருடைய சரீரம் பலவீனமாயிருக்கிறது. இந்தப் பலவீனத்தோடு, சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தானுடைய வார்த்தைகளும், சவுலை பலவீனப்படுத்துகிறது.

ஆகையினால் சவுல் அந்தக்ஷணமே நெடிதாங்கிடையாய்த் தரையிலே விழுந்து விடுகிறார். பெலிஸ்தருடைய அம்பு சவுலின்மேல் ஏற்கெனவே பாய்ந்ததுபோல, அவர் கீழே விழுந்து கிடக்கிறார். சாமுவேலின் வேஷத்திலிருக்கிற சாத்தானுடைய கடின வார்த்தைகளை சவுலால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தன்னுடைய பயமும், தத்தளிப்பும் நீங்கும் என்று எதிர்பார்த்து, சவுல் அஞ்சனம் பார்க்கப்போனார். ஆனால் இப்போது சவுலின் பயமும் தத்தளிப்பும் அதிகரித்திருக்கிறது. அவரால் நிற்ககூடிய முடியவில்லை. சற்று நேரத்திற்கு முன்பு, அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, "சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகிறான்" என்று சொன்னாள். அந்த மனுஷன் சாமுவேல் என்று அறிந்து, சவுல் தரைமட்டும் முகங்குனிந்து வணங்கினார். சவுலுக்கு அப்போது சரீர பெலம் இருந்தது. சாத்தான் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட பின்பு, சவுலின் பெலம் அவரைவிட்டு நீங்கிப்போயிற்று. இப்போது சவுல் நெடிதாங்கிடையாய் தரையிலே விழுந்து கிடக்கிறார். பிசாசுகளை நம்புகிறவர்களுக்கும், பிசாசுகளிடத்தில் ஆலோசனை கேட்கிறவர்களுக்கும் என்ன நேரிடும் என்பதற்கு, சவுல் இங்கே, ஒரு எடுத்துக்காட்டாக, கீழே விழுந்து கிடக்கிறார்.

பெலிஸ்தர் சூநேமிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கில்போவாவிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் யுத்தம்பண்ண ஆயத்தமாக அணிவகுத்து நிற்கிறார்கள். சவுலோ, எந்தோரிலே, நெடிதாங்கிடையாய் தரையிலே விழுந்து கிடக்கிறார். சவுலை எப்படியாவது இஸ்ரவேலரின் பாளயத்திற்கு கூட்டிக்கொண்டு போகவேண்டும். அவர் கில்போவாவிலே அணிவகுத்து நிற்கிற இஸ்ரவேலரோடு கூடயிருந்தால்தான், இஸ்ரவேல் புத்திரருக்கு, தெம்பும் திடநம்பிக்கையும் வரும்.

சவுல் நெடிதாங்கிடையாய் தரையிலே விழுந்து கிடப்பதைப் பார்த்து அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ அதிர்ச்சியடைகிறாள். சவுல் அந்த ஸ்திரீயின் வீட்டின் தரையிலே கீழே விழுந்து கிடக்கிறார். அவர் செத்துப்போனவர்போல நெடிதாங்கிடையாய் தரையிலே கிடக்கிறார். சவுல் அந்த ஸ்திரீயின் வீட்டில் செத்துப்போனால், சவுலைக் கொன்றுபோட்ட குற்றம் அந்த ஸ்திரீயின்மீது சுமத்தப்படும். இஸ்ரவேலின் ராஜாவைக் கொன்றுபோட்ட குற்றத்திற்காக, அந்த ஸ்திரீக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படும். அவள் ஒரு தேசத்துரோகி என்று அவள்மீது குற்றம் சுமத்தப்படும்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ தனக்கு வரும் ஆபத்தை நினைத்துப் பயப்படுகிறாள். சவுல் தன்னுடைய வீட்டிலே செத்துப்போகாமல், உயிர் பிழைக்கவேண்டுமென்று விரும்புகிறாள். சவுல் இராப்பகல் முழுவதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தபடியினால், அவர் பலவீனமாயிருக்கிறார் என்பதை அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ அறிந்துகொள்கிறாள். சவுல் கொஞ்சம் போஜனம் பண்ணினால், அவருடைய பலவீனம் நீங்கும் என்றும், அவருக்கு மறுபடியும் புதிய பலன் கிடைக்கும் என்றும் அந்த ஸ்திரீ எதிர்பார்க்கிறாள். சவுலை எப்படியாவது போஜனம் பண்ண வைக்கவேண்டும் என்று அந்த ஸ்திரீ பிரயாசப்படுகிறாள்.

அப்பொழுது அந்த ஸ்திரீ சவுலிடத்தில் வந்து, அவர் மிகவும் கலங்கியிருக்கிறதைக் கண்டு, அவரை நோக்கி: "இதோ, உம்முடைய அடியாளாகிய நான் உம்முடைய சொற்கேட்டு, என் பிராணனை என் கையிலே பிடித்துக்கொண்டு, நீர் எனக்குச் சொன்ன உம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தேன். இப்பொழுது நீர் உம்முடைய அடியாளுடைய சொல்லைக் கேளும், நான் உமக்கு முன்பாகக் கொஞ்சம் அப்பம் வைக்கிறேன், அதைப் புசிப்பீராக; அப்பொழுது நீர் வழிநடந்து போகத்தக்க பெலன் உமக்குள் இருக்கும்" (1சாமு 28:21,22) என்று சொல்லுகிறாள்.

சவுலோ தட்டுதல்பண்ணி, "நான் புசிக்கமாட்டேன்" என்று சொல்லுகிறார். ஆனாலும் அவருடைய ஊழியக்காரரும் அந்த ஸ்திரீயும் அவரை மிகவும் வருந்திக்கொண்டதினால், அவர் அவர்கள் சொற்கேட்டு, தரையிலிருந்து எழுந்திருந்து கட்டிலின் மேல் உட்காருகிறார் (1சாமு 28:23).

அந்த ஸ்திரீயினிடத்தில் கொழுத்த கன்றுக்குட்டி ஒன்று வீட்டில் இருக்கிறது; அவள் அதை அதைத் தீவிரமாய் அடித்து, மா எடுத்துப் பிசைந்து, அதைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டுகிறாள். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, அந்தப்போஜனத்தை, சவுலுக்கும் அவருடைய ஊழியக்காரருக்கும் முன்பாகக் கொண்டுவந்து வைக்கிறாள்; அவர்கள் புசித்து எழுந்திருந்து, அந்த இராத்திரியிலேயே தங்கள் பாளயத்திற்கு புறப்பட்டுப் போகிறார்கள் (1சாமு 28:24,25).

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயினிடத்தில் கொழுத்த கன்றுக்குட்டி ஒன்று இருக்கிறது. இது அடித்து புசிப்பதற்கு பயன்படுத்தப்படும் கன்றுக்குட்டியல்ல. தானியத்தைப் போரடிப்பதற்காக வீட்டிலே வளர்க்கப்படும் கொழுத்த கன்றுக்குட்டி. இந்தக் கன்றுக்குட்டி அந்த ஸ்திரீக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது. இந்தக் கன்றுகுட்டியை கொன்றுபோட்டால், அவளால் தானியத்தை போரடிக்க முடியாது. இது அடிக்கப்படுவதற்கான கன்றுக்குட்டியல்ல. விவசாய வேலையில் பயன்படுத்துவதற்கான கன்றுக்குட்டி. இது அவருடைய சொத்து.

ஆனாலும் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, தனக்கு வரப்போகும் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக, தானியத்தைப் போரடிப்பதற்கு பயன்படுத்தப்படும் கொழுத்த கன்றுக்குட்டியை அடித்து, சவுலுக்கு போஜனத்தை உண்டுபண்ணுகிறாள். அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கு ஆரம்பத்திலிருந்தே, அவளுடைய பிராணன் அவளுக்கு முக்கியமானதாயிருக்கிறது. அவள் ஆரம்பத்தில் சவுலைப் பார்த்து, "என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்கு கண்ணி வைக்கிறது என்ன" (1சாமு 28:9) என்று கேட்டாள். இப்போது தன்னுடைய பிராணனை ஆபத்திலிருந்து தப்புவிப்பதற்காக, தன்னுடைய வீட்டிலிருக்கிற கொழுத்த கன்றுக்குட்டியை அடித்து, சவுலுக்கு போஜனம் செய்கிறாள்.

சவுலும் அவருடைய ஊழியக்காரரும் போஜனம்பண்ணுகிறார்கள். பலவீனமாயிருந்த சவுல் இப்போது ஓரளவு பலப்படுகிறார். சவுலும் அவருடைய ஊழியக்காரரும், புசித்து எழுந்திருந்து, அந்த இராத்திரியிலே தங்கள் பாளயத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள். அவர்கள் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள்.

சாமுவேலின் வேஷத்திலிருந்த சாத்தான், சவுலுக்கு சாபமான வார்த்தைகளைச் சொன்னான். "கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள். இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1சாமு 28:19) என்று சாத்தான் சவுலுக்கு சொன்னான். பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேலர் தோற்றுப்போவார்கள் என்பதும், இந்த யுத்தத்திலே தானும் தன்னுடைய குமாரரும் செத்துப்போவோம் என்பதும், சவுலுக்கு தெரிந்திருந்தும், சவுல் அந்த இராத்திரியிலே புறப்பட்டு கில்போவாவிலே இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருக்கிற இடத்திற்கு போகிறார். சவுல் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்.

29 அதிகாரம்

பெலிஸ்தர் தங்கள் சேனைகளையெல்லாம் ஆப்பெக்கிலே கூடிவரச் செய்கிறார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும் ஆகீசோடே பின்தண்டிலே போகிறார்கள். தாவீது கர்த்தருக்கு பயப்படுகிறவர். அவர் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். தாவீது தன்னுடைய சொந்த ஜனத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணக்கூடாது. பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு சத்துருக்கள். தாவீதோ பெலிஸ்தருடைய சேனையிலிருக்கிறார். கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையினால், தாவீதையும் அவருடைய மனுஷரையும், பெலிஸ்தருடைய சேனையிலிருந்து விடுவித்து காத்துக்கொள்கிறார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் பெலிஸ்தருடைய சேனையிலே ஆகீசோடே பின்தண்டிலே போகிறார்கள் (1சாமு 29:1,2). தாவீது தங்களோடு கூட வருவது பெலிஸ்தரின் பிரபுக்களுக்கு பிடிக்கவில்லை (1சாமு 29:3-5). ஆகீஸ் தாவீதை பெலிஸ்தரின் சேனையிலிருந்து விடுவித்து, சிக்லாகுக்கு அனுப்பிவிடுகிறார் (1சாமு 29:6-11). தாவீதும் அவருடைய மனுஷரும் இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணாமல் விடுவிக்கப்படுகிறார்கள்.

பெலிஸ்தரின் சேனைகளில் தாவீது 1சாமு 29:1-5

1சாமு 29:1. பெலிஸ்தர் தங்கள் சேனைகளையெல்லாம் ஆப்பெக்கிலே கூடிவரச்செய்தார்கள்; இஸ்ரவேலர் யெஸ்ரயேலிலிருக்கிற துரவண்டையிலே பாளயமிறங்கினார்கள்.

1சாமு 29:2. அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் நூறும் ஆயிரமுமான சேர்வைகளோடே போனார்கள்; தாவீதும் அவன் மனுஷரும் ஆகீசோடே பின்தண்டிலே போனார்கள்.

1சாமு 29:3. அப்பொழுது பெலிஸ்தரின் பிரபுக்கள்: இந்த எபிரெயர் என்னத்திற்கு என்றார்கள்; ஆகீஸ் அவர்களைப் பார்த்து: இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலின் ஊழியக்காரனாயிருந்த இந்தத் தாவீது இத்தனை நாட்களும் இத்தனை வருஷங்களும் என்னோடு இருக்கவில்லையா? இவன் என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் ஒரு குற்றமும் நான் இவனில் கண்டுபிடிக்கவில்லை என்றான்.

1சாமு 29:4. அதனால் பெலிஸ்தரின் பிரபுக்கள் அவன்மேல் கடுங்கோபமாகி, அவனைப் பார்த்து: இந்த மனுஷன் நீர் குறித்த தன் இடத்திற்குத் திரும்பிப்போகும்படிக்கு, அங்கே அவனை மறுபடியும் அனுப்பிவிடும்; யுத்தத்தில் இவன் நமக்குச் சத்துருவாயிராதபடிக்கு, இவன் நம்மோடே கூட யுத்தத்திற்கு வரவேண்டியதில்லை; இவன் எதினாலே தன் ஆண்டவனோடே ஒப்புரவாவான்? இந்த மனுஷருடைய தலைகளினால் அல்லவா?

1சாமு 29:5. சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இந்தத் தாவீதைக்குறித்து அல்லவோ ஆடிப்பாடிச் சொன்னார்கள் என்றார்கள்.

பெலிஸ்தரும் இஸ்ரவேலரும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். பெலிஸ்தர் தங்கள் சேனைகளையெல்லாம் ஆப்பெக்கிலே கூடிவரச்செய்கிறார்கள்; இஸ்ரவேலர் யெஸ்ரயேலிலிருக்கிற துரவண்டையிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள் (1சாமு 29:1).

தாவீதோ மிகுந்த நெருக்கத்திலிருக்கிறார். காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதுக்கு சிநேகிதராயிருக்கிறார். தாவீதும் அவருடைய மனுஷரும், தன்னோடுகூட யுத்தத்திற்கு வரவேண்டும் என்று ஆகீஸ் சொல்லுகிறான். ஆகீஸ் தாவீதின்மீது அன்பாயிருக்கிறான். தாவீதும் ஆகீசின் அழைப்பை ஏற்று அவரோடுகூட யுத்தத்திற்கு போகிறார்.

பெலிஸ்தரின் அதிபதிகள் நூறும் ஆயிரமுமான சேர்வைகளோடே போகிறார்கள்; தாவீதும் அவருடைய மனுஷரும் ஆகீசோடே பின்தண்டிலே போகிறார்கள். பெலிஸ்தருடைய சேனைகளில், பின்தண்டிலே போகுமாறு, தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்தவர். கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். தாவீது இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணக்கூடாது. அது தன்னைத்தானே அழித்துக்கொள்வதற்கு சமம். தாவீதால் பெலிஸ்தரோடு சேர்ந்துகொள்ளாமலிருக்க முடியவில்லை. ஆகீஸ் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆகையினால் ஆகீசின் அழைப்பை தாவீதால் மறுக்க முடியவில்லை. ஆகீசோடு யுத்தத்திற்கு போகவில்லையென்றால், ஆகீஸ் தாவீதை ஒரு கோழை என்றும், நன்றியில்லாதவர் என்றும் சொல்லுவார்.

தாவீது ஆகீசின்மீது அன்பாயிருப்பதினால், அவருடைய அழைப்பை மறுக்க முடியாமல், தாவீதும் அவருடைய மனுஷரும் ஆகீசோடே, பெலிஸ்தருடைய பின்தண்டிலே போகிறார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். தாவீது பெலிஸ்தரோடு கூடயிருக்கிறார். அவரும் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண, பெலிஸ்தரோடு கூடப்போகிறார்.

தாவீது இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு சத்துருவாகயிருப்பார். தன்னுடைய சொந்த தேசமாகிய இஸ்ரவேல் தேசத்திற்கு தாவீது துரோகியாகவும் கருதப்படுவார். தாவீது இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், இஸ்ரவேலர் தாவீதை வெறுப்பார்கள். தாவீதின் சிரசிலே இஸ்ரவேல் தேசத்து ராஜ்யபாரத்தின் கிரீடம் சூட்டப்படுவதை எதிர்ப்பார்கள்.

இஸ்ரவேலருக்கு விரோதமாக பெலிஸ்தர் யுத்தம்பண்ணும்போது, இந்த யுத்தத்திலே சவுல் செத்துப்போனால், சவுலின் இரத்தப்பழி தாவீதின்மீது சுமத்தப்படும். தாவீதுதான் சவுலைக் கொன்றுபோட்டார் என்னும் பழி அவர்மீது சுமத்தப்படும். பாவம் தாவீதின் வாசற்படியில் படுத்திருக்கும்.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் தாவீதுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஒரு பக்கம் பாவம். மற்றொரு பக்கம் துரோகம். தாவீது இவ்விரண்டில் ஒன்றை தெரிந்தெடுக்கவேண்டும். ஆனால் எதை தெரிந்தெடுப்பது என்று தாவீதுக்கு தெரியவில்லை. தாவீது மிகப்பெரிய குழப்பத்திலும், நெருக்கத்திலும் இருக்கிறார்.

தாவீது தன்னுடைய மதியீனத்தினால் யூதாதேசத்தைவிட்டு, பெலிஸ்தருடைய தேசத்திற்கு வந்தார். தன்னுடைய பாதுகாப்புக்கு தாவீது கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், காத்தின் ராஜாவாகிய ஆகீசை நோக்கிப் பார்த்தார். தாவீது கர்த்தருடைய கரத்திலே அடைக்கலம் பெறுவதற்கு பதிலாக, பெலிஸ்தியனாகிய ஆகீசின் கரத்திலே அடைக்கலம் பெற்றார். தான் செய்த தப்பிதத்திற்கு தாவீது இப்போது வேதனைகளை அனுபவிக்கிறார்.

தாவீதின் மதியீனத்திற்காக கர்த்தர் இப்போது அவரை சிட்சிக்கிறார். ஆனாலும் தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இருதயமாயிருக்கிறது. கர்த்தர் தாவீதை சோதித்தாலும், அவரை ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் சோதிக்கவில்லை.

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1கொரி 10:13).

தாவீதும் அவருடைய மனுஷரும் இப்போது பெலிஸ்தருடைய சேனைகளில், ஆகீசோடே பின்தண்டிலே போகிறார்கள். தாவீது தன்னுடைய மனச்சாட்சியில் நெருக்கப்படுகிறார். இந்த நெருக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு, கர்த்தர் ஒரு வாசலைத் திறக்கிறார். கர்த்தர் பெலிஸ்தருடைய பிரபுக்களின் இருதயங்களில் பேசுகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, பெலிஸ்தரின் பிரபுக்கள் தாவீதை வெறுக்கிறார்கள்.

அப்பொழுது பெலிஸ்தரின் பிரபுக்கள், ஆகீசைப் பார்த்து, "இந்த எபிரெயர் என்னத்திற்கு" (1சாமு 29:3) என்று சொல்லுகிறார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும், இஸ்ரவேலருக்கு விரோதமான இந்த யுத்தத்திலே, தங்களோடு கூட வரக்கூடாது என்று பெலிஸ்தரின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் தாவீதைப் பகைக்கிறார்கள். தாவீதையும் அவருடைய மனுஷரையும் தங்கள் சேனைகளிலிருந்து வெளியேற்றிவிடவேண்டும் என்று பெலிஸ்தரின் பிரபுக்கள் பிடிவாதமாயிருக்கிறார்கள்.

பெலிஸ்தரின் பிரபுக்கள் மிகவும் நியாயமான கேள்வியைக் கேட்கிறார்கள். "இந்த எபிரெயர் என்னத்திற்கு" என்று அவர்கள் ஆகீசிடம் கேட்கிறார்கள். ஆகீஸ் தாவீதை நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார். ஆகீசும் பெலிஸ்தரில் ஒரு பிரபு. மற்ற பிரபுக்களைவிட ஆகீஸ் பெரியவர். அவர் பிரபுக்களுக்கு தலைவராயிருக்கிறார்.

பெலிஸ்தரின் பிரபுக்கள் தாவீதுக்கு விரோதமாகப் பேசினாலும், ஆகீஸ் தாவீதுக்கு ஆதரவாகப் பேசுகிறார். தாவீதைக் குறித்து நற்சாட்சி கொடுக்கிறார். ஆகீஸ் அவர்களைப் பார்த்து: "இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலின் ஊழியக்காரனாயிருந்த இந்தத் தாவீது இத்தனை நாட்களும் இத்தனை வருஷங்களும் என்னோடு இருக்கவில்லையா? இவன் என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் ஒரு குற்றமும் நான் இவனில் கண்டுபிடிக்கவில்லை" (1சாமு 29:3) என்று சொல்லுகிறான்.

ஆகீசின் பார்வையில், தாவீது அந்நிய தேசத்திலிருந்து தன்னுடைய தேசத்திற்கு அடைக்கலம் தேடி வந்தவராயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தார் தாவீதின்மீது தேவையில்லாமல் வீணாகப் பழி சுமத்தி, அவரைத் துன்பப்படுத்தினார்கள் என்று ஆகீஸ் தாவீதைப்பற்றிச் சொல்லுகிறார். தாவீது இந்நாள் வரைக்கும் தன்னோடு கூடயிருப்பதாகவும், அவரிடத்தில் தான் ஒரு குற்றமும் கண்டுபிடிக்கவில்லை என்றும் ஆகீஸ் சொல்லுகிறான். ஆகையினால் தாவீதைப் பாதுகாப்பது தன்னுடைய கடமை என்றும், அதுவே தனக்கு நீதியானது என்றும் ஆகீஸ் விவாதம்பண்ணுகிறான்.

ஆனால் பெலிஸ்தரின் பிரபுக்களோ தங்கள் கோரிக்கையில் பிடிவாதமாயிருக்கிறார்கள். தாவீது தங்களோடு வரக்கூடாது என்றும், தாவீதையும் அவருடைய மனுஷரையும் பெலிஸ்தருடைய சேனைகளிலிருந்து விலக்கி, அவர்கள் தங்கியிருக்கிற இடத்திற்கு அனுப்பிவிடவேண்டும் என்றும் பிரபுக்கள் சொல்லுகிறார்கள்.

ஆகீஸ் தாவீதுக்கு சாதகமாகப் பேசுவது பெலிஸ்தருக்கு பிடிக்கவில்லை. பிரபுக்கள் ஆகீசின்மீது கோபப்படுகிறார்கள். பெலிஸ்தரின் பிரபுக்கள், ஆகீசின்மேல் கடுங்கோபமாகி, அவனைப் பார்த்து, "இந்த மனுஷன் நீர் குறித்த தன் இடத்திற்குத் திரும்பிப்போகும்படிக்கு, அங்கே அவனை மறுபடியும் அனுப்பிவிடும்; யுத்தத்தில் இவன் நமக்குச் சத்துருவாயிராதபடிக்கு, இவன் நம்மோடே கூட யுத்தத்திற்கு வரவேண்டியதில்லை; இவன் எதினாலே தன் ஆண்டவனோடே ஒப்புரவாவான்? இந்த மனுஷருடைய தலைகளினால் அல்லவா? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இந்தத் தாவீதைக்குறித்து அல்லவோ ஆடிப்பாடிச் சொன்னார்கள்" (1சாமு 29:4,5) என்று சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தரின் பிரபுக்கள் சொல்லுகிற வார்த்தையிலும் நியாயம் இருக்கிறது. ஏனென்றால் தாவீது பூர்வகாலமாகவே பெலிஸ்தருக்கு சத்துருவாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தாவீதைப் புகழ்ந்து ஆடிப்பாடி சொன்ன வார்த்தைகள், தாவீது பெலிஸ்தருக்கு சத்துருவாயிருக்கிறார் என்பதை உறுதிபண்ணுகிறது.

தாவீது பெலிஸ்தருக்கு பயங்கரமான சத்துருவாயிருக்கிறார். பெலிஸ்தருக்கு தாவீதின் மூலமாய் எப்போதும் பெரிய ஆபத்து வரலாம். சவுலின் சேனைகள் எல்லோருமாக சேர்ந்து பெலிஸ்தருக்கு தீங்கு செய்வதைவிட, தாவீதும் அவருடைய மனுஷரும் பெலிஸ்தருக்கு அதிகமான தீங்குகளை செய்வார்கள் என்று பெலிஸ்தரின் பிரபுக்கள் பயப்படுகிறார்கள்.

தாவீதும் அவருடைய மனுஷரும் யுத்தத்திலே பெலிஸ்தருக்கு சத்துருவாயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. தாவீது பெலிஸ்தருடைய பின்தண்டிலே போகிறார். பெலிஸ்தர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, தாவீதும் அவருடைய மனுஷரும் பெலிஸ்தருடைய பின்தண்டை சேதப்படுத்தி அழித்துப்போடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் தாவீதும் அவருடைய மனுஷரும் தங்களோடுகூட பெலிஸ்தரின் சேனைகளில் வரக்கூடாது என்றும், அவர்களை தங்கள் சேனைகளைவிட்டு திருப்பி அனுப்பிவிடவேண்டும் என்றும் பெலிஸ்தரின் பிரபுக்கள் ஆகீசிடம் சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தரின் பிரபுக்கள் 1சாமு 29:6-11

1சாமு 29:6. அப்பொழுது ஆகீஸ் தாவீதை அழைத்து: நீ உத்தமன் என்றும், நீ பாளயத்தில் என்னோடே போக்கும் வரத்துமாயிருக்கிறது என் பார்வைக்கு நல்லது என்றும், கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீ என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள்முதல் இன்றையவரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை; ஆகிலும் பிரபுக்களின் பார்வைக்கு நீ பிரியமானவன் அல்ல.

1சாமு 29:7. ஆகையால் பெலிஸ்தருடைய பிரபுக்கள் உன்மேல் தாங்கல் அடையாதபடிக்கு, இப்போது சமாதானத்தோடே திரும்பிப் போய்விடு என்றான்.

1சாமு 29:8. தாவீது ஆகீசை நோக்கி: ஏன்? நான் செய்தது என்ன? நான் வந்து, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களோடே யுத்தம்பண்ணாதபடிக்கு, நான் உம்மிடத்தில் வந்த நாள்முதற்கொண்டு இன்றையவரைக்கும் உமது அடியேனிடத்தில் கண்டுபிடித்தது என்ன என்றான்.

1சாமு 29:9. ஆகீஸ் தாவீதுக்குப் பிரதியுத்தரமாக: அதை அறிவேன்; நீ தேவனுடைய தூதனைப்போல என் பார்வைக்குப் பிரியமானவன்; ஆனாலும் இவன் எங்களோடேகூட யுத்தத்திற்கு வரக்கூடாது என்று பெலிஸ்தரின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள்.

1சாமு 29:10. இப்போதும் நீ நாளை அதிகாலையில் உன்னோடே வந்த உன் ஆண்டவனுடைய வேலைக்காரரைக் கூட்டிக்கொண்டு, விடியற்காலத்திலே வெளிச்சமாகிறபோது, புறப்பட்டுப்போ என்றான்.

1சாமு 29:11. அப்படியே தாவீது அதிகாலையில் தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, பொழுதுவிடிகிற நேரத்திலே, பெலிஸ்தரின் தேசத்திற்குத் திரும்பிப்போகப் புறப்பட்டான்; பெலிஸ்தரோவெனில் யெஸ்ரயேலுக்குப் போனார்கள்.

பெலிஸ்தருக்கு மொத்தம் ஐந்து பிரபுக்கள் இருக்கிறார்கள். ஆகீஸ் ஐந்து பிரபுக்களில் ஒருவராகயிருந்தாலும் அவர் பிரபுக்களுக்கு தலைவராகயிருக்கிறார். ஆகீஸ் மாத்திரமே ராஜா என்று அழைக்கப்படுகிறார். ஆகீசை தவிர மற்ற நாலு பிரபுக்களும் தாவீதுக்கு விரோமாகப் பேசுகிறார்கள். தாவீதுக்கு விரோதமாகப் பேசுகிற பிரபுக்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதினால், ஆகீஸ் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று.

ஆகீஸ் தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறான். அவன் இந்நாள் வரைக்கும் தாவீதின்மேல் ஒரு குற்றமும் கண்டுபிடிக்கவில்லை. ஆனாலும் மற்ற பிரபுக்களின் கோரிக்கைகளை ஏற்று, பெலிஸ்தருடைய சேனைகளிலிருந்து தாவீதையும் அவருடைய மனுஷரையும் வெளியேற்றுவது என்று ஆகீஸ் தீர்மானம்பண்ணுகிறான்.

ஆகீஸ் தாவீதுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து பேசுகிறான். தாவீதும் அவருடைய மனுஷரும் தன்னோடுகூட யுத்தத்திற்கு வரவேண்டுமென்று ஆகீஸ் தான் அழைத்தான். இப்போது அதே ஆகீஸ் தாவீதை பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து வெளியே அனுப்புகிறான். இவ்விரண்டுமே கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

ஆகீஸ் தாவீதை பெலிஸ்தருடைய சேனையிலிருந்து திருப்பி அனுப்பும்போது, மிகவும் மரியாதையான வார்த்தைகளைச் சொல்லி அனுப்புகிறான். அப்பொழுது ஆகீஸ் தாவீதை அழைத்து: "நீ உத்தமன் என்றும், நீ பாளயத்தில் என்னோடே போக்கும் வரத்துமாயிருக்கிறது என் பார்வைக்கு நல்லது என்றும், கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீ என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள்முதல் இன்றையவரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை; ஆகிலும் பிரபுக்களின் பார்வைக்கு நீ பிரியமானவன் அல்ல. ஆகையால் பெலிஸ்தருடைய பிரபுக்கள் உன்மேல் தாங்கல் அடையாதபடிக்கு, இப்போது சமாதானத்தோடே திரும்பிப் போய்விடு" *(1சாமு 29:6,7)* என்று சொல்லுகிறான்.

ஆகீஸ் தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறான். ஆகீசின் மனதிலே தாவீதைப்பற்றி சந்தேகம் எதுவுமில்லை. ஆகீஸ் தாவீதைப் பார்த்து, "நீ உத்தமன், உன்னில் ஒரு பொல்லாப்பும் காணவில்லை, நீ தேவனுடைய தூதனைப்போல் என் பார்வைக்கு பிரியமானவன்" என்று நல்ல வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

ஆகீஸ் தாவீதை தன்னுடைய மனவிருப்பத்தின் பிரகாரமாக, பெலிஸ்தருடைய சேனையிலிருந்து வெளியேற்றவில்லை. தாவீதை வெளியேற்றுவதற்கு பெலிஸ்தரின் பிரபுக்களே காரணம். பெலிஸ்தருடைய பிரபுக்கள் தாவீதின்மேல் தாங்கலடையக்கூடாது. அவர்கள் இப்போது ஆகீஸ் மீதுதான் கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் தாவீதின்மேல் கோபப்படுவதற்கு முன்பாக, தாவீது பெலிஸ்தருடைய சேனையைவிட்டு விலகிப்போய்விடவேண்டும்.

ஆகீசின் வார்த்தைகள் தாவீதின் மனதிலே சந்தோஷத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகாதபடிக்கு, கர்த்தர் தாவீதை தடுத்து நிறுத்தியிருக்கிறார். ஆனாலும் தாவீது தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தவில்லை. தன்னிடத்தில் குற்றம் எதுவுமில்லை என்பதை தாவீது ஆகீசுக்கு உறுதிபண்ணுகிறார்.

தாவீது ஆகீசை நோக்கி: "ஏன்? நான் செய்தது என்ன? நான் வந்து, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களோடே யுத்தம்பண்ணாதபடிக்கு, நான் உம்மிடத்தில் வந்த நாள்முதற்கொண்டு இன்றையவரைக்கும் உமது அடியேனிடத்தில் கண்டுபிடித்தது என்ன" *(1சாமு 29:8)* என்று கேட்கிறார்.

மெய்யாகவே தாவீதிடத்தில் ஒரு குற்றமும் ஒரு பொல்லாப்பும் இல்லை. இது ஆகீசுக்கும் தெரியும். தாவீதின் நற்குணத்திற்கு ஆகீஸ் மறுபடியுமாய் சாட்சி சொல்லுகிறான்.

ஆகீஸ் தாவீதுக்குப் பிரதியுத்தரமாக: "அதை அறிவேன்; நீ தேவனுடைய தூதனைப்போல என் பார்வைக்குப் பிரியமானவன்; ஆனாலும் இவன் எங்களோடே கூட யுத்தத்திற்கு வரக்கூடாது என்று பெலிஸ்தரின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள். இப்போதும் நீ நாளை அதிகாலையில் உன்னோடே வந்த உன் ஆண்டவனுடைய வேலைக்காரரைக் கூட்டிக்கொண்டு, விடியற்காலத்திலே வெளிச்சமாகிறபோது, புறப்பட்டுப்போ" *(1சாமு 29:9,10)* என்று சொல்லுகிறான்.

தாவீது ஆகீசுக்கு உதவி செய்ய விரும்புகிறார். அதே வேளையில் அவர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு யுத்தம்பண்ணுவதை தவிர்க்கவும் விரும்புகிறார். ஆகீஸ் தன்னிடத்தில் விரும்பி சொல்லுகிற வார்த்தைகளை தாவீது ஏற்றுக்கொள்கிறார்.

ஆகீசுடைய வார்த்தையின் பிரகாரம் தாவீது அதிகாலையில் தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, பொழுதுவிடிகிற நேரத்திலே, பெலிஸ்தரின் தேசத்திற்குத் திரும்பிப்போகப் புறப்படுகிறார். பெலிஸ்தரோவெனில் யெஸ்ரயேலுக்குப் போகிறார்கள் (1சாமு 29:11).

கர்த்தருடைய வழிநடத்துதல் மிகவும் அற்புதமானது. கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் ஞானத்தினாலும் தாவீதை வழிநடத்துகிறார். தாவீதுக்கு மறைவாக வைக்கப்பட்ட கண்ணி அகற்றப்படுகிறது. பெலிஸ்தரின் பிரபுக்கள் தாவீதின்மீது அதிருப்தியாயிருந்தாலும், அதுவும் தாவீதின் நன்மைக்கேதுவாயிருக்கிறது. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறும்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மையும் வழிநடத்துகிறார். பல சமயங்களில் கர்த்தருடைய சித்தமும், அவருடைய திட்டமும் நமக்கு உடனே தெரிவதில்லை. ஆனாலும் கர்த்தர் தமக்கு சித்தமான வேளையிலே, தம்முடைய சித்தத்தையும் திட்டத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். கர்த்தர் நம்மை கரம்பிடித்து வழிநடத்தும்போது, நாம் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்லவேண்டும்.

30 அதிகாரம்

தாவீது பெலிஸ்தரின் சேனைகளிலிருந்து வெளியேற்றப்படுகிறார். அவர் தன் மனுஷரோடுகூட இஸ்ரவேலரின் பாளயத்திற்கு போகவில்லை. சவுல் ஏற்கெனவே தாவீதை வெளியேற்றிவிட்டார். தாவீது பெலிஸ்தரோடும் இல்லாமல், இஸ்ரவேலரோடும் இல்லாமல், தன்னுடைய பட்டணமான சிக்லாகுக்கு அமைதியாக திரும்பிப்போகிறார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகுக்கு வந்தபோது, அந்தப் பட்டணமே சின்னாபின்னமாகயிருக்கிறது. அமலேக்கியர் சிக்லாகைக் கொள்ளையடித்து அதை அக்கினியினால் சுட்டெரித்துப் போடுகிறார்கள். அமலேக்கியர் அதிலிருந்த சிறியோர்களையும் பெரியோர்களையும், ஸ்திரீகளையும் புருஷரையும் சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள். இதைப் பார்த்து தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும் பெரிய அதிர்ச்சியாயிருக்கிறது (1சாமு 30:1-6).

தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் தாவீதும் அவருடைய மனுஷரும் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள் (1சாமு 30:7-10). ஒரு எகிப்தியன் மூலமாக அமலேக்கியர் இருக்கும் இடம் தாவீதுக்கு தெரியவருகிறது (1சாமு 30:11-17).

தாவீதும் அவருடைய மனுஷரும் அமலேக்கியரை முறியடித்து அவர்களுடைய பொக்கிஷங்களைக் கொள்ளையிடுகிறார்கள். அமலேக்கியர் பிடித்துக்கொண்டுபோன தங்களுடைய புருஷரையும் ஸ்திரீகளையும் தாவீதும் அவருடைய மனுஷரும் திரும்பக்கொண்டு வருகிறார்கள் (1சாமு30:18-20). தாவீது அமலேக்கியரிடத்தில் கொள்ளையிட்ட பொருட்களை இஸ்ரவேல் புத்திரருக்கு பங்கிட்டுக் கொடுக்கிறார் (1சாமு 30:21-31)

சிக்லாகிலே சோகம்
1சாமு 30:1-6

1சாமு 30:1. தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே, சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சிக்லாகின் மேலும் விழுந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து,

1சாமு 30:2. அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக் கொண்டு, தங்கள் வழியே போய்விட்டார்கள்.

1சாமு 30:3. தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்தபோது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள்.

1சாமு 30:4. அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்.

1சாமு 30:5. தாவீதின் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமும், கர்மேல் ஊராளான நாபாலின் மனைவியாயிருந்த அபிகாயிலும், சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள்.

1சாமு 30:6. தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்.

தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகை விட்டு, பெலிஸ்தரோடுகூட யுத்தத்திற்குப்போனார்கள். இவர்கள் சிக்லாகில் இல்லாத வேளையிலே அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சிக்லாகின் மேலும் விழுந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்துப் போடுகிறார்கள். மேலும் அமலேக்கியர், சிக்லாகிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக் கொண்டு, தங்கள் வழியே போய்விடுகிறார்கள் (1சாமு 30:1,2).

அமலேக்கியர் தாவீதையும் அவருடைய மனுஷரையும், அவர்களுடைய குடும்பத்தையும் பழிவாங்குகிறார்கள். தாவீது ஏற்கெனவே அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். "அங்கேயிருந்து தாவீதும் அவன் மனுஷரும் கெசூரியர்மேலும் கெஸ்ரியர் மேலும் அமலேக்கியர்மேலும் படையெடுத்துப்போனார்கள். தாவீது அந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறபோது, புருஷர்களையும் ஸ்திரீகளையும் உயிரோடே வைக்காமல், ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு, ஆகீசிடத்துக்குத் திரும்பிவருவார்" (1சாமு 27:8,9).

அமலேக்கியர் தாவீதைப் பழிவாங்குவதற்காக சிக்லாகை கொள்ளையடிக்கிறார்கள். அவர்கள் சிக்லாகை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டாலும், சிக்லாகிலுள்ள ஒருவரையும் அவர்கள் கொன்றுபோடவில்லை. அமலேக்கியர் சிக்லாகிலுள்ள ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களை சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள்.

இந்த சம்பவம் மூன்று நாட்களில் நடைபெற்ற முடிந்து விடுகிறது. தாவீதும் அவருடைய மனுஷரும் மூன்றாம் நாளிலே சிக்லாகுக்கு வந்து சேருகிறார்கள். அதற்குள்ளே அமலேக்கியர் சிக்லாகை அழித்துப்போடுகிறார்கள்.

தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகுக்கு வந்தபோது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் என்றும் கண்கிறார்கள். அப்பொழுது தாவீதும் அவரோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுகிறார்கள் (1சாமு 30:3,4).

பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து சிக்லாகுக்கு நடந்து வர மூன்று நாட்களாகும். தாவீதும் அவருடைய மனுஷரும் மூன்று நாட்களாக நடந்து வந்து களைப்பாயிருக்கிறார்கள். தங்களுடைய வீடுகளில் ஓய்வெடுக்கவேண்டுமென்று எதிர்பார்த்து வேகமாய் வருகிறார்கள். தங்கள் குடும்பத்தாரோடு சந்தோஷமாகவும், ஐக்கியமாகவும் இருக்கவேண்டுமென்று ஆசையாய் வருகிறார்கள். ஆனால் அவர்கள் சிக்லாகுக்கு வரும்போது அங்கே அவர்களுடைய வீடுகளும் இல்லை. அவர்களுடைய குடும்பத்தாரும் இல்லை.

அமலேக்கியர் சிக்லாகின்மேல் விழுந்து, அதைக் கொள்ளையடித்து, அதை அக்கினியினால் சுட்டெரித்துப் போடுகிறார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும் சிக்லாகுக்கு வந்து பார்க்கும்போது, அவர்களுடைய குடும்பத்தாரும் அங்கே இல்லை. அமலேக்கியர் அவர்களுடைய மனைவிகளையும், குமாரரையும், குமாரத்திகளையும் சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள்.

தாவீதும் அவருடைய மனுஷரும் யுத்தவீரர்கள். ஆனால் சிக்லாகு அழிந்துபோனதையும், தங்களுடைய குடும்பத்தாரை அமலேக்கியர் சிறைப்பிடித்து கொண்டுபோனதையும் பார்த்து அழுகிறார்கள். அவர்கள் யுத்தவீரராயிருந்தாலும், கண்ணீர்விட்டு அழுகிறார்கள். தாவீதும் அவரோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுகிறார்கள் (1சாமு 30:4).

அமலேக்கியர் சிக்லாகிலே ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. தாவீதின் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமையும், கர்மேல் ஊராளான நாபாலின் மனைவியாயிருந்த அபிகாயிலையும், அமலேக்கியர் சிறைபிடித்துக் கொண்டுபோய்விடுகிறார்கள் *(1சாமு 30:5).*

தாவீதின் மனுஷர் அவருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். தாவீது மிகவும் நெருக்கப்படுகிறார்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், தாவீதைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறார் *(1சாமு 30:6).*

தாவீதின் மனுஷருக்கு பேரிழப்பு உண்டானதுபோல, தாவீதுக்கும் பேரிழப்பு உண்டாயிருக்கிறது. இப்போது தாவீதின் குடும்பத்திலே ஒருவருமில்லை. அமலேக்கியர் தாவீதின் இரண்டு மனைவிகளையும் சிறைப்பிடித்துக் கொண்டுபோய்விடுகிறார்கள். தாவீது மிகவும் வேதனைப்படுகிறார். தாவீதின் மனுஷரோ அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். தாவீதை கல்லெறியவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தாவீது மிகவும் நெருக்கப்படுகிறார்.

அமலேக்கியர் சிக்லாகின்மீது வந்து, சிக்லாகை அழித்துப்போட்டதற்கும், தங்களுடைய குடும்பத்தாரை சிறைப்பிடித்து கொண்டுபோனதற்கும் தாவீதே காரணம் என்று அவருடைய மனுஷர் நினைக்கிறார்கள். தாவீது பெலிஸ்தரின் சேனையோடு யுத்தத்திற்குப்போனபோது, சிக்லாகிலே தன்னுடைய யுத்தவீரர் ஒருவரையும் பாதுகாப்புக்கு நிறுத்தவில்லை. அமலேக்கியர் இதை வேவுகாரர் மூலமாய் அறிந்துகொள்கிறார்கள்.

அமலேக்கியரை எதிர்ப்பதற்கு சிக்லாகிலே ஒருவருமில்லை. அமலேக்கியர் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், சிக்லாகுக்கு விரோதமாக வந்து அதை அழித்துப்போடுகிறார்கள். இந்த அழிவுக்கு தாவீதே காரணம் என்று தாவீதின் மனுஷர் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

தாவீதின் மனுஷர் அவரோடு கூடயிருப்பதற்காக இதுவரையிலும் சந்தோஷப்பட்டார்கள். தாவீதைப் பின்பற்றுவதினால் தங்களுக்கு செழிப்பான வாழ்க்கை கிடைக்கும் என்று நம்பிக்கையோடிருந்தார்கள். எல்லோருமே பிரபுக்களாகிவிடலாம் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இப்போதோ, தாவீதின் மனுஷர் எல்லோருமே பிச்சைக்காரர்களைப்போல இருக்கிறார்கள்.

சவுல் தாவீதை இஸ்ரவேல் தேசத்தைவிட்டு துரத்திவிட்டார். பெலிஸ்தர் தாவீதையும் அவருடைய மனுஷரையும் தங்கள் பாளயத்தை விட்டே துரத்திவிட்டார்கள். அமலேக்கியரோ சிக்லாகின்மேல் விழுந்து, அதைக் கொள்ளையடித்து அதை சுட்டெரித்து, அதிலிருந்த புருஷரையும் ஸ்திரீகளையும் சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள்.

தாவீது சிக்லாகுக்கு வந்த அழிவைப் பார்த்து வேதனைப்படுகிறார். அமலேக்கியர் தாவீதின் இரண்டு மனைவிகளையும் சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள். தாவீதின் நம்பிக்கைக்கு பாத்திரமாக, அவரோடு கூடயிருக்கிற மனுஷர் எல்லோரும் தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். தாவீது இவர்களை நம்பினார். இவர்களுக்கு தங்க இடம் கொடுத்தார். இவர்கள் தாவீதின் அப்பத்தை சாப்பிட்டவர்கள்.

தாவீது மிகவும் நெருக்கப்படும்போது, அவருடைய மனுஷர் அவருக்கு ஆதரவாயிருக்கவேண்டும். அவருடைய குடும்பத்தில் ஏற்பட்டிருக்கிற நஷ்டத்திற்காக, அவரோடுகூட பரிதாபப்படவேண்டும். ஆனால் தாவீதின் மனுஷரோ அவருக்கு விரோதமாக தங்கள் குதிங்கால்களைத் தூக்குகிறார்கள். தாவீதை கல்லெறிய வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

தாவீதின் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. தாவீதைப்போலவே நம்முடைய குடும்பத்திலும், சபையிலும் பிரச்சனைகள் வரலாம். நாம் நம்புகிறவர்கள் நமக்கு விரோதமாக எழும்பலாம். கர்த்தர் தம்முடைய கிருபையினால் குழப்பத்தை சரிப்படுத்துவார். அதுவரையிலும் நமக்கு நெருக்கமும் வேதனையும் உண்டாகும்.

தாவீது மிகவும் நெருக்கப்பட்டாலும், அவர் தன்னுடைய சமாதானத்திற்கும் ஆறுதலுக்கும் கர்த்தரையே நம்புகிறார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பும், அவருடைய கிருபையும், தனக்கு ஆறுதலைத் தரும் என்று தாவீது நம்புகிறார். தாவீது மிகவும் நெருக்கப்பட்டாலும் அவர் தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறார்.

தாவீதின் மனுஷர் தங்களுடைய நஷ்டங்களை மாத்திரமே பார்க்கிறார்கள். தங்களைப்போலவே தாவீதுக்கும் குடும்பத்திலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் உணரவில்லை. தாவீதின் மனுஷர் மனக்கிலேசத்திலிருக்கிறார்கள். அவர்களுடைய ஆத்துமா கசப்பாகயிருக்கிறது. அவர்களிடத்தில் பொறுமையில்லை. அவர்களுடைய மனக்கிலேசமும், கோபமும், பொறுமையின்மையும், தாவீதின் துக்கத்தை அதிகரிக்கச் செய்கிறது. தாவீது மிகவும் நெருக்கப்படுகிறார்.

தாவீதின் மனுஷரைவிட அவருக்கு அதிக துக்கம் இருக்கிறது. மற்றவர்கள் அழுவதைவிட தாவீது அதிகமாய் அழவேண்டும். ஆனாலும் தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னை திடப்படுத்திக்கொள்கிறார். கர்த்தருடைய கிருபை கிரியை செய்யவேண்டும் என்று தாவீது எதிர்பார்க்கிறார்.

தாவீதின் மனுஷர் ஒருவருக்கொருவர் மனக்கிலேசத்தோடிருக்கும்போது, தாவீதோ தன் மனதை கர்த்தருக்குள் சமாதானப்படுத்துகிறார். தாவீதுக்கு கர்த்தருக்குள்ளே அமைதியும் ஆறுதலும் உண்டாகிறது. கர்த்தரை நம்புகிறவர்கள் கலங்கமாட்டார்கள். தாவீதின் குடும்பத்திலே நஷ்டம் ஏற்பட்டாலும், அவருடைய விசுவாசத்தில் நஷ்டம் ஏற்படவில்லை. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

தாவீது அமலேக்கியரை முறியடிக்கிறார்
1சாமு 30:7-20

1சாமு 30:7. தாவீது அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்னும் ஆசாரியனை நோக்கி: ஏபோத்தை என்னிடத்தில் கொண்டுவா என்றான்; அபியத்தார் ஏபோத்தைத் தாவீதினிடத்தில் கொண்டு வந்தான்.

1சாமு 30:8. தாவீது கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின்தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா? என்று கேட்டான். அதற்கு அவர்: அதைப் பின் தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார்.

1சாமு 30:9. அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த அறுநூறுபேரும் போனார்கள்; அவர்கள் பேசோர் ஆற்றண்டைக்கு வந்தபோது அங்கே சிலர் நின்றுபோனார்கள்.

1சாமு 30:10. தாவீதோ, நானூறுபேரோடுங்கூடத் தொடர்ந்து போனான்; இருநூறுபேர் விடாய்த்துப்போனபடியினால் பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டாமல் நின்றுபோனார்கள்.

1சாமு 30:11. ஒரு எகிப்தியனை வெளியில் அவர்கள் கண்டு, அவனைத் தாவீதினிடத்தில் கொண்டுவந்து, புசிக்க அவனுக்கு அப்பமும் குடிக்கத் தண்ணீரும் கொடுத்து,

1சாமு 30:12. அத்திப்பழ அடையின் ஒரு துண்டையும், வற்றலான இரண்டு திராட்சப்பழக் குலைகளையும் அவனுக்குக் கொடுத்தார்கள்; அதை அவன் சாப்பிட்ட பின்பு, அவனுடைய உயிர் திரும்ப அவனுக்குள் வந்தது. அவன் இராப்பகல் மூன்றுநாளாய் அப்பம் சாப்பிடாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தான்.

1சாமு 30:13. தாவீது அவனை நோக்கி: நீ யாருடையவன்? நீ எவ்விடத்தான் என்று கேட்டதற்கு, அவன்: நான் ஒரு அமலேக்கியனுடைய வேலைக்காரனாகிய எகிப்து தேசத்துப் பிள்ளையாண்டான்; மூன்று நாளைக்குமுன் நான் வியாதிப்பட்டபோது, என் எஜமான் என்னைக் கைவிட்டான்.

1சாமு 30:14. நாங்கள் கிரேத்தியருடைய தென்புறத்தின் மேலும், யூதாவுக்கடுத்த எல்லையின்மேலும், காலேபுடைய தென்புறத்தின்மேலும், படையெடுத்துப் போய் சிக்லாகை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டோம் என்றான்.

1சாமு 30:15. தாவீது அவனை நோக்கி: நீ என்னை அந்தத் தண்டினிடத்துக்குக் கொண்டு போவாயா என்று கேட்டதற்கு: அவன், நீர் என்னைக் கொன்றுபோடுவதுமில்லை என்னை என் எஜமான் கையில் ஒப்புக்கொடுப்பதுமில்லை என்று தேவன்மேல் ஆணையிடுவீரானால், உம்மை அந்தத் தண்டினிடத்துக்குக் கூட்டிக்கொண்டு போவேன் என்றான்.

1சாமு 30:16. இவன் அவனைக்கொண்டுபோய் விட்டபோது, இதோ, அவர்கள் வெளியெங்கும் பரவி, புசித்துக் குடித்து, தாங்கள் பெலிஸ்தர் தேசத்திலும் யூதாதேசத்திலும் கொள்ளையிட்டுவந்த மகா பெரிதான அந்த எல்லாக் கொள்ளைக்காகவும் ஆடிப்பாடிக் கொண்டிருந்தார்கள்.

1சாமு 30:17. அவர்களைத் தாவீது அன்று சாயங்கால்ந்தொடங்கி மறுநாள் சாயங்கால் மட்டும் முறிய அடித்தான்; ஒட்டகங்கள் மேல் ஏறி ஓடிப்போன நாலூறு வாலிபர் தவிர, அவர்களில் வேறொருவரும் தப்பவில்லை.

1சாமு 30:18. அமலேக்கியர் பிடித்துக்கொண்டு போன எல்லாவற்றையும், தன்னுடைய இரண்டு மனைவிகளையும், தாவீது விடுவித்தான்.

1சாமு 30:19. அவர்கள் கொள்ளையாடிக்கொண்டு போன எல்லாவற்றிலும், சிறியதிலும் பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான்.

1சாமு 30:20. எல்லா ஆடுமாடுகளையும் தாவீது பிடித்துக்கொண்டான்; அவைகளைத் தங்கள் மிருகஜீவன்களுக்கு முன்னாலே ஓட்டி, இது தாவீதின் கொள்ளை என்றார்கள்.

தாவீது மிகவும் நெருக்கப்படுகிறார். தாவீதின் மனுஷர் அவர்மேல் கல்லெறியவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தாவீதோ தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறார். இந்த சூழ்நிலையில் தான் என்ன செய்யவேண்டும் என்பதையும், அதை செய்யும்போது என்ன நடைபெறும் என்பதையும் தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்க விரும்புகிறார்.

ஆசாரியரிடம் ஏபோத்து இருக்கும். இக்காலத்தில் அபியத்தார் ஆசாரியராயிருக்கிறார். இவர் அகிமெலேக்கின் குமாரன். சவுல் அகிமெலேக்கையும், ஆசாரியரையும், ஆசாரியரின் குடும்பத்தாரையும் கொன்றுபோட்டார். அபியத்தார் சவுலின் கைக்கு தப்பி தாவீதோடு கூடயிருக்கிறார்.

தாவீது அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்னும் ஆசாரியனை நோக்கி: "ஏபோத்தை என்னிடத்தில் கொண்டுவா" என்று சொல்லுகிறார்; அபியத்தார் ஏபோத்தைத் தாவீதினிடத்தில் கொண்டு வருகிறான் (1சாமு 30:7).

தாவீது கர்த்தரிடத்தில் இரண்டு காரியங்களை விசாரிக்கிறார். அவையாவன: 1. நான் அந்தத் தண்டைப் பின்தொடர வேண்டுமா? 2. அதைப் பிடிப்பேனா? கர்த்தர் தாவீது விசாரிக்கிற இரண்டு காரியங்களுக்கும் பதில் சொல்லுகிறார். கர்த்தர் தாவீதுக்கு சொன்ன பிரதியுத்தரமாவது 1. அதைப் பின் தொடர்; 2. அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் (1சாமு 30:8).

தாவீது கர்த்தரிடத்தில் தான் செய்ய வேண்டிய கடமையையும் விசாரிக்கிறார். தான் போகும் காரியம் நிறைவேறுமா என்றும் விசாரிக்கிறார். தாவீது தெளிந்த சிந்தனையோடிருக்கிறார். அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது நீதியான யுத்தம். அமலேக்கியர் சிக்லாகின்மேல் விழுந்து, அதைக் கொள்ளையடித்து, அதை அக்கியினால் சுட்டெரித்துப்போட்டார்கள்.

அமலேக்கியர் சிக்லாகை சுட்டெரித்துப் போட்டது மாத்திரமல்ல, அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக் கொண்டு, தங்கள் வழியே போய்விட்டார்கள் *(1சாமு 30:2)*.

தாவீது தான் இழந்துபோனதை மீட்டுக்கொள்ளவேண்டும். அவர் கர்த்தரிடத்தில் விசாரிக்காமலேயே அமலேக்கியரை பின்தொடர்ந்து போகலாம். தாவீதின் பக்கத்திலே நீதியும் நியாயமும் இருக்கிறது. ஆனாலும் தாவீது கர்த்தரிடத்தில் விசாரியாமல் எதையும் செய்ய துணியவில்லை. தாவீது எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை நம்புகிறார். அவர் எப்போதும் கர்த்தரையே சார்ந்திருக்கிறார். தாவீது கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்த பின்பு, கர்த்தருடைய அனுமதியோடு, அவரும் அவரோடுகூட அறுநூறுபேரும் அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகிறார்கள். சற்று நேரத்திற்கு முன்பு, தாவீதின் மனுஷர் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். சகல ஜனங்களும், தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசத்தினால், தாவீதை கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள். இப்போதோ அவர்களெல்லோரும் தாவீதோடுகூட அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகிறார்கள்.

தாவீதின் மனுஷர் அவரைக் கல்லெறியவேண்டும் என்று சொன்னபோது, தாவீது அமைதியாயிருந்தார். அவர் தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னை திடப்படுத்திக்கொண்டார். தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணியவர்களை உடனே தண்டிக்கவேண்டும் என்று தாவீது தீர்மானம்பண்ணவில்லை. கலகக்காரரைக் கொன்றுபோடவில்லை. கலகத்திற்கு தலைமை தாங்கிய தலைவர்களை தாவீது அழித்துப்போடவுமில்லை. தாவீது இதை செய்திருக்க முடியும். ஆனால் அவர் தன்னுடைய மனுஷரைத் தண்டியாமல் பொறுமையோடிருந்தார். அவர் கர்த்தரை நம்பி, கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் இப்போது இக்கட்டான சூழ்நிலையிலிருக்கிறார்கள். சிக்லாக் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டிருக்கிறது. அமலேக்கியர் அவர்களுடைய குடும்பத்தாரை சிறைப்பிடித்து கொண்டுபோய் விட்டார்கள். அவர்களுடைய உடமைகளையும் தங்களோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். தாவீதின் மனுஷரும் அவரை கல்லெறிய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தாவீது மிகவும் நெருக்கப்படுகிறார். அங்கே நெருக்கமான சூழ்நிலையும், குழப்பமான சூழ்நிலையும் காணப்படுகிறது. இந்த சூழ்நிலையில் தாவீது பதட்டப்படாமல், அமைதியாயிருக்கிறார்.

தாவீது கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்துபோகவேண்டும் என்று தீர்மானிக்கிறார். அப்போது தாவீதின் அறுநூறு மனுஷரும் அவரோடு கூடப்போகிறார்கள். சற்று நேரத்திற்கு முன்பு இவர்கள் எல்லோரும், தாவீதை கல்லெறியவேண்டும் என்று சொன்னவர்கள். ஆனால் இப்போதோ அவர்கள் எல்லோருமே தாவீதோடு கூடப்போகிறார்கள்.

தாவீதுக்கு அவருடைய மனுஷரின் உதவியும், ஒத்தாசையும் வேண்டும். தாவீது அமலேக்கியரோடு தனியாக நின்று யுத்தம்பண்ண முடியாது. தாவீதின் மனுஷர் அவருக்கு தேவை. தாவீது தன்னுடைய மனுஷரை இழந்துபோக விரும்பவில்லை. ஆகையினால் அவர்கள், தங்கள் மனக்கிலேசத்தில், தன்னைக் கல்லெறியவேண்டும் என்று சொன்னபோது, தாவீது கர்த்தருக்குள் அமைதியாயிருந்தார். அவர் பதட்டப்படாமல், கோபப்படாமல், தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டார்.

தாவீதும் அவரோடுகூட போகிற அறுநூறுபேரும் பேசோர் ஆற்றண்டைக்கு வருகிறார்கள். அங்கே சிலர் நின்று போகிறார்கள். தாவீதின் அறுநூறு மனுஷரில் இருநூறு பேர் விடாய்த்துப்போனபடியினால் பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டாமல் நின்றுபோகிறார்கள். தாவீதோ, நானூறு பேரோடுங்கூட அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்துபோகிறார் (1சாமு 30:9,10).

தாவீதும் அவருடைய மனுஷரும் ஆகீசோடுகூட பெலிஸ்தரின் சேனையிலே யுத்தத்திற்குப் போனார்கள். காத்தின் ராஜாவாகிய ஆகீஸ் தாவீதையும் அவருடைய மனுஷரையும் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து அனுப்பிவிடுகிறான். தாவீது தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, சிக்லாகுக்கு வருகிறார். அவர்கள் மூன்றுநாள் கால்நடையாய் நடந்து வருகிறார்கள். அதனால் அவர்களுக்கு சரீர களைப்பு உண்டாயிருக்கிறது. அவர்கள் எல்லோருமே களைப்படைந்து விடாய்த்துப்போயிருக்கிறார்கள். அவர்கள் சிக்லாகுக்கு வந்தபோது, சிக்லாகு சீரழிந்து கிடக்கிறது. அவர்களுடைய குடும்பத்தார் எல்லோரையும் அமலேக்கியர் சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள். இதனால் அவர்களெல்லோரும் மனக்கிலேசத்திலிருக்கிறார்கள்.

தாவீதும் அவரோடிருக்கிற மனுஷரும் பேசோர் ஆற்றண்டைக்கு வந்தபோது, தாவீதின் மனுஷரில் இருநூறு பேர் விடாய்த்துப்போயிருக்கிறார்கள். அவர்களால் பேசோர் ஆற்றைக் கடக்க முடியவில்லை. தாவீதின் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. கர்த்தர் தாவீதிடம், "அதைப் பின்தொடர், அதை நீ பிடித்து சகலத்தையும் திருப்பிக்கொள்வாய்" என்று சொல்லியிருக்கிறார். தாவீது கர்த்தருடைய வார்த்தையை நம்பி அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகிறார்.

ஆனால் வழியிலே அவரோடுகூட இருக்கிற மனுஷரில் இருநூறு பேர், பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டால் நின்றுபோகிறார்கள். தாவீது தன்னுடைய மனதிலே சோர்ந்துபோகிறார். கர்த்தருடைய வார்த்தையை நம்பி, அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போவதா அல்லது பேசோர் ஆற்றண்டையிலே ஓய்வெடுத்துவிட்டு, சிக்லாகுக்கு திரும்பிப்போவதா என்று யோசிக்கிறார். தாவீதின் மனுஷரில், மூன்றில் ஒரு பங்கு மனுஷர், தாவீதோடு கூடப்போக ஆயத்தமாயில்லை.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்திலும், நமக்கு சோர்வுகளும், ஏமாற்றங்களும் வரும். நாம் எதிர்பார்த்த காரியங்கள், நாம் எதிர்பார்த்த பிரகாரம் நடைபெறாது. அந்த சூழ்நிலையில்கூட, கர்த்தர்மீது நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை மறுபடியும் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். கர்த்தருடைய தெய்வீக வல்லமையை நம்பி கர்த்தருடைய வார்த்தைக்கு விசுவாசத்தோடு கீழ்ப்படியவேண்டும். கர்த்தரை நம்பி, சந்தோஷமாகவும், மனஉற்சாகமாகவும், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். இதன் மூலமாக நாம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

தாவீது ஒரு பராக்கிரமசாலி. அவர் நல்ல யுத்தவீரர். தாவீதோடுகூட அறுநூறு பேர் இருக்கிறார்கள். தாவீது தன் மனுஷர்மீது அன்பாயும் கரிசனையாயும் இருக்கிறார். அவர்களுடைய பலமும் பலவீனமும் தாவீதுக்கு தெரியும். அவர்களுடைய திராணிக்கு அதிகமாக, தாவீது அவர்களிடத்தில் வேலை வாங்க விரும்பவில்லை. அவர்களால் முடியாததை, அவர்கள் செய்தே ஆகவேண்டும் என்று தாவீது அவர்களை கட்டாயப்படுத்தவுமில்லை.

தாவீதும் அவருடைய மனுஷரும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகவேண்டும். வழியிலேயே நின்றுவிட்டால், தாங்கள் இழந்துபோனதை, தாவீதின் மனுஷரால் திரும்ப மீட்டுக்கொள்ள முடியாது. ஆனாலும் தாவீது தன்னுடைய மனுஷர்மீது, இந்த சூழ்நிலையிலும் கரிசனையைக் காண்பிக்கிறார். விடாய்த்துப்போயிருக்கிற இருநூறு பேரை, பேசோர் ஆற்றண்டையிலே தங்கவைக்கிறார். தாவீது மீதமுள்ள நானூறு பேரை கூட்டிக்கொண்டு, பேசோர் ஆற்றைக்கடந்து, அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்துபோகிறார்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தாவீதைவிட பெரியவர். கிறிஸ்துவானவர்இரக்கத்திலும், கிருபையிலும், அன்பிலும், மனதுருக்கத்திலும் ஐசுவரியமுள்ளவர். கர்த்தரைப் பின்பற்றுகிற விசுவாசிகள் எல்லோரும் ஒன்றுபோலிருப்பதில்லை. எல்லோருடைய விசுவாசமும் ஒன்றுபோலிருக்காது. ஒரு சிலர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலே பலமுள்ளவர்களாயிருப்பார்கள். வேறு சிலரோ பலவீனராயிருப்பார்கள். விசுவாசிகளில் சிலர் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்பார்கள். மற்றவர்களின் விசுவாசம் பலமில்லாமலிருக்கும். அவர்களுடைய விசுவாசம் உறுதியில்லாமலிருக்கும். கர்த்தரோ தம்முடைய பிள்ளைகளின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்திருக்கிறார்.

நாம் பலவீனராயிருந்தாலும், நம்முடைய கர்த்தர் பலமுள்ளவர். நமக்கு வரும் போராட்டங்களையும், பிரச்சனைகளையும் நம்மால் தாங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், அவற்றை நம்மால் மேற்கொள்ள முடியாவிட்டாலும், நம்முடைய கர்த்தர் நம்மைப் பலப்படுத்துகிறவர் நமக்காக யுத்தம்பண்ணி நமக்கு ஜெயத்தைக் கொடுக்கிறவர்.

"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2கொரி 12:9,10).

தாவீது பேசோர் ஆற்றண்டையிலே, தன்னுடைய மனுஷரில் இருநூறு பேரை விட்டு விட்டு, மீதமுள்ள நானூறு பேரோடு, பேசோர் ஆற்றக்கடந்து, அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகிறார். கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய கிருபையும், வழிநடத்தலும் தாவீதோடு கூடப்போகிறது. கர்த்தருடைய கிருபையினாலே தாவீதுக்கு பரத்திலிருந்து உதவி கிடைக்கிறது.

அமலேக்கியர் எங்கே இருக்கிறார்கள் என்பதும், அவர்கள் எங்கே போனார்கள் என்பதும் தாவீக்கு தெரியாது.

தாவீது அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகவேண்டுமென்றால், எந்த வழியாகப் போகவேண்டும் என்றும், எங்கே போகவேண்டும் என்றும் தாவீதுக்கு தெரிந்திருக்கவேண்டும். தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர் தாவீதிடம், "அதைப் பின்தொடர், அதை நீ பிடித்து சகலத்தையும் திருப்பிக்கொள்வாய்" என்று சொன்னார். வாக்குப்பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் வாக்குமாறாதவர்.

கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், வழிநடத்துதலினாலும், தாவீதும் அவருடைய மனுஷரும், ஒரு எகிப்தியனை சந்திக்குமாறு வழிநடத்துகிறார். இவன் இராப்பகல் மூன்று நாளாய் அப்பம் சாப்பிடாமலும், தண்ணீர் குடியாமலும் இருந்தவன். அவன் மரணதருவாயிலிருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு எகிப்தியனை தாவீதின் மனுஷர், தாங்கள் போகும் வழியிலே காண்கிறார்கள். அவர்கள் அந்த எகிப்தியனைத் தாவீதினிடத்தில் கொண்டுவந்து, புசிக்க அவனுக்கு அப்பமும் குடிக்கத் தண்ணீரும் கொடுத்து, அத்திப்பழ அடையின் ஒரு துண்டையும், வற்றலான இரண்டு திராட்சப்பழக் குலைகளையும் அவனுக்குக் கொடுக்கிறார்கள் (1சாமு 30:11,12).

அந்த எகிப்தியன் பசியும் பட்டினியுமாகயிருந்தது மரணதருவாயிலிருந்தவன். தாவீதின் மனுஷர் அவனுக்கு கொடுத்த போஜனத்தை சாப்பிட்ட பின்பு, அவனுடைய உயிர் திரும்ப அவனுக்குள் வருகிறது.

தாவீது அந்த எகிப்தியனை நோக்கி "நீ யாருடையவன்? நீ எவ்விடத்தான்" என்று கேட்கிறார். அதற்கு, அந்த எகிப்தியன், "நான் ஒரு அமலேக்கியனுடைய வேலைக்காரனாகிய எகிப்து தேசத்துப் பிள்ளையாண்டான்; மூன்று நாளைக்குமுன் நான் வியாதிப்பட்டபோது, என் எஜமான் என்னைக் கைவிட்டான். நாங்கள் கிரேத்தியருடைய தென்புறத்தின்மேலும், யூதாவுக்கடுத்த எல்லையின்மேலும், காலேபுடைய தென்புறத்தின்மேலும், படையெடுத்துப்போய் சிக்லாகை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டோம்" (1சாமு 30:13,14) என்று சொல்லுகிறான்.

அமலேக்கியன் இந்த எகிப்தியனை அதிகமாக வேலை வாங்கியிருக்கிறான். எகிப்தியன் நல்ல சரீர ஆரோக்கியத் தோடிருந்தபோது, அமலேக்கியனுக்கு அதிகமாய் வேலை செய்து உதவி செய்திருக்கிறான். எகிப்தியனுக்கு வியாதி வந்தபோது, அவனால் தன் எஜமானனுக்கு வேலை செய்ய முடியவில்லை. இந்த எகிப்தியனால் இனிமேல் தனக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது என்பதை அறிந்து, அவனுடைய எஜமான் அவனைக் கைவிட்டுவிடுகிறான்.

எகிப்தியனுடைய எஜமான் அவனைக் கைவிட்டாலும், கர்த்தருடைய கிருபையும் வழிநடத்துதலும் அவனைக் கைவிடவில்லை. எகிப்தியன் தனக்கு உதவியாயிருக்கமாட்டான் என்று நினைத்து அவனுடைய எஜமான் அவனை கைவிட்டான். அதே எகிப்தியன் இப்போது தாவீதுக்கு உதவியாயிருக்கிறான். அமலேக்கியரின் அழிவுக்கு இந்த எகிப்தியனும் காரணமாயிருக்கிறான்.

தாவீது இந்த எகிப்தியன்மீது அன்பும் கரிசனையும் காண்பிக்கிறார். அவன்மீது மனதுருக்கமாயிருக்கிறார். சிக்லாகின்மேல் விழுந்து, அதைக் கொள்ளையடித்து, அதை அக்கினியினால் சுட்டெரித்து, அதிலிருந்த ஜனங்களை சிறைப்பிடித்துக் கொண்டுபோன அமலேக்கியருக்கு, இந்த எகிப்தியனும் உதவியாயிருந்தவன். சிக்லாகின் அழிவுக்கு இவனும் ஒரு காரணம். ஆனாலும் அந்த எகிப்தியன் பசியினாலும், தாகத்தினாலும் வருத்தப்பட்டு, தன் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும்போது, தாவீது அவனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அவனுக்கு புசிக்க அப்பமும், குடிக்க தண்ணீரும் கொடுக்கிறார். அப்பம் மாத்திரமல்ல அத்திப்பழ அடையையும் திராட்சக்குலைகளையும் அவனுக்கு கொடுக்கிறார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்து போகிறார்கள். வேகமாகப் போனால்தான் அவர்களைப் பிடிக்க முடியும். தாவீதும் அவருடைய மனுஷரும் அவசரத்திலிருக்கிறார்கள். அவர்களிடத்தில் தண்ணீரும் போஜனமும் தாராளமாயில்லை. அவர்கள் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து மூன்றுநாள் பிரயாணமாய் வந்திருக்கிறார்கள். சிக்லாகும் அழிந்து கிடக்கிறது. சிக்லாகிலுள்ளது எல்லாவற்றையும் அமலேக்கியர் கொள்ளையடித்து கொண்டுபோய் விடுகிறார்கள்.

தாவீதிடத்திலோ, அவருடைய மனுஷரிடத்திலோ போதுமான அளவு போஜனம் இல்லை. ஆனாலும் அந்த எகிப்தியனுக்கு தண்ணீரும் போஜனம் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்னும் இரக்க குணம் தாவீதிடத்தில் தாராளமாயிருக்கிறது. தாவீதும் அவருடைய மனுஷரும் அந்த எகிப்தியனுக்கு உதவி செய்கிறார்கள். அவனுடைய உயிர் அவனுக்குள் திரும்பவும் வருகிறது.

"மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ?" (நீதி 24:11,12).

எகிப்தியனுக்கு அவனுடைய உயிர் திரும்ப அவனுக்குள் வந்த பின்பு அவன் பேச ஆரம்பிக்கிறான். அவன் தாவீதையும் அவருடைய மனுஷரையும் பார்த்து பயப்படுகிறான். தாவீது அவனோடு அன்போடும், கரிசனையோடும் பேசி அவனை விசாரிக்கிறார். அந்த எகிப்தியன் அமலேக்கியரோடு கூடயிருந்தவன். அமலேக்கியர் என்ன செய்தார்கள் என்பதை இந்த எகிப்தியன் தாவீதுக்கு சொல்லுகிறான்.

எகிப்தியன் தாவீதிடம் "நாங்கள் கிரேத்தியருடைய தென்புறத்தின்மேலும், யூதாவுக்கடுத்த எல்லையின்மேலும், காலேபுடைய தென்புறத்தின்மேலும், படையெடுத்துப்போய் சிக்லாகை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டோம்" (1சாமு 30:14) என்று சொல்லுகிறான்.

அமலேக்கியர் எந்த வழியாய்ப் போனார்கள் என்பது இந்த எகிப்தியனுக்கு தெரியும். தாவீது இந்த எகிப்தியனிடம் அமலேக்கியரைப்பற்றி விசாரிக்கிறார். தாவீது அந்த எகிப்தியனை நோக்கி: "நீ என்னை அந்தத் தண்டினிடத்துக்குக் கொண்டு போவாயா" என்று கேட்கிறார் அதற்கு அந்த எகிப்தியன் "நீர் என்னைக் கொன்றுபோடுவதுமில்லை என்னை என் எஜமான் கையில் ஒப்புக்கொடுப்பதுமில்லை என்று தேவன்மேல் ஆணையிடுவீரானால், உம்மை அந்தத் தண்டினிடத்துக்குக் கூட்டிக்கொண்டு போவேன்" (1சாமு 30:15) என்று சொல்லுகிறான்.

எகிப்தியன் தாவீதுக்கு பயப்படுகிறான். அமலேக்கியரோடு இந்த எகிப்தியனும் சேர்ந்து வந்து, சிக்லாகை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டவன். தாவீது தன்மேல் கோபப்பட்டு, தன்னைக் கொன்றுபோடுவார் என்று எகிப்தியன் பயப்படுகிறான். ஒருவேளை தாவீது இவனைக் கொன்று போடாவிட்டாலும், இவன், தன்னுடைய எஜமான் கையில் அகப்பட்டுக்கொண்டால், அவன் இந்த எகிப்தியனைக் கொன்றுபோடுவான். எகிப்தியன் தன்னுடைய பிரச்சனைகளை உணர்ந்து, தாவீதும் தன்னைக் கொன்றுபோடக்கூடாது என்றும், தன் எஜமான் கையில் தன்னை ஒப்புக்கொடுக்கவும்கூடாது என்றும் தாவீதிடம் கேட்கிறான்.

எகிப்தியன் தன்னுடைய விருப்பத்தை தாவீதிடம் சொல்லும்போது, "தேவன்மேல் ஆணையிடுவீரானால்" என்று கேட்கிறான். தாவீது எகிப்தியருடைய தெய்வங்களின் பேரிலோ அல்லது அமலேக்கியருடைய தெய்வங்களின் பேரிலோ ஆணையிடக் கூடாது. தாவீது இஸ்ரவேலின் தேவனாகிய, சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடவேண்டும். தாவீதுக்கும், அந்த எகிப்தியனுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமாக முடிவு பெறுகிறது.

எகிப்தியன் தாவீதையும் அவருடைய மனுஷரையும், அமலேக்கியரின் தண்டு இருக்கும் இடத்திற்கு கொண்டுபோகிறான். அங்கே அமலேக்கியர் வெளியெங்கும் பரவி, புசித்துக் குடித்து, தாங்கள் பெலிஸ்தர் தேசத்திலும் யூதாதேசத்திலும் கொள்ளையிட்டுவந்த மகா பெரிதான அந்த எல்லாக் கொள்ளைக்காகவும் ஆடிப்பாடிக் கொண்டிருக்கிறார்கள் (1சாமு 30:16).

சிக்லாகிலே அமலேக்கியர் கொள்ளையிட்ட எல்லா பொருட்களும் அங்கே இருக்கிறது. அமலேக்கியர் சிறைப்பிடித்துக்கொண்டுபோன புருஷரும் ஸ்திரீகளும், குமாரரும் குமாரத்திகளும் அங்கே இருக்கிறார்கள். அமலேக்கியர் தாங்கள் கொள்ளையிட்டு வந்த மகாபெரிதான எல்லா கொள்ளைக்காகவும் ஆடிப்பாடி சந்தோஷமாயிருக்கிறார்கள்.

அப்போது, அமலேக்கியர் எதிர்பாராத வேளையிலே, தாவீதும் அவருடைய மனுஷரும் அமலேக்கியர்மேல் விழுகிறார்கள். தாவீது அன்று சாயங்காலந்தொடங்கி மறுநாள் சாயங்கால மட்டும் அமலேக்கியரை முறிய அடிக்கிறார். ஒட்டகங்கள் மேல் ஏறி ஓடிப்போன நானூறு வாலிபர் தவிர, அமலேக்கியரில் வேறொருவரும் தப்பவில்லை (1சாமு 30:17).

அமலேக்கியர் பிடித்துக்கொண்டு போன எல்லாவற்றையும், தன்னுடைய இரண்டு மனைவிகளையும், தாவீது விடுவிக்கிறார். அவர்கள் கொள்ளையாடிக்கொண்டு போன எல்லாவற்றிலும், சிறியதிலும் பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொள்கிறார் (1சாமு 30:18,19).

தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர் தாவீதிடம், "அதை பின்தொடர், அதை நீ பிடித்து சகலத்தையும் திருப்பிக்கொள்வாய்" (1சாமு 30:8) என்று சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக தாவீது அமலேக்கியரைப் பின்தொடர்ந்து போனார். அமலேக்கியர் கொள்ளையிட்டு கொண்டுபோனதில் ஒன்று குறைவுபடாமல், தாவீது எல்லாவற்றையும் திருப்பிக்கொள்கிறார்.

தாவீது இரண்டு மனைவிகளையும் விடுவித்தார் என்று இங்கு விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அமலேக்கியர் சிறைப்பிடித்துக் கொண்டுபோன எல்லா ஸ்திரீகளையும், சிறியவர்களையும், பெரியவர்களையும் தாவீது விடுவித்தார். அமலேக்கியர் சிக்லாகிலிருந்து கொள்ளையாடிக்கொண்டுபோன எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டதோடு, அமலேக்கியரின் எல்லா மாடுகளையும் தாவீது பிடித்துக்கொள்கிறார். அமலேக்கியரின் எல்லா உடமைகளையும் கொள்ளையிடுகிறார். தாவீதின் மனுஷர் அவைகளைத் தங்கள் மிருகஜீவன்களுக்கு முன்னாலே ஓட்டி, "இது தாவீதின் கொள்ளை" (1சாமு 30:20) என்று சொல்லுகிறார்கள்.

தாவீதின் மனுஷர் சிக்லாகிலிருந்தபோது, அவர்கள் தாவீதைக் கல்லெறியவேண்டும் என்று சொன்னார்கள். தங்கள் குமாரர், குமாரத்திகளினிமித்தம், அவர்கள் மனக்கிலேசமானதினால், அவர்கள் தாவீதை கல்லெறியவேண்டும் என்று சொன்னார்கள். இப்போதோ அவர்கள் இழந்து போன எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக்கொள்கிறார்கள். இழந்துபோனது மாத்திரமல்ல, அமலேக்கியரின் உடமைகளையும் கொள்ளையிட்டு, சிக்லாகுக்கு கொண்டு வருகிறார்கள். தாவீதைக் கல்லெறியவேண்டும் என்று சொன்னவர்கள், இப்போது கொள்ளைப்பொருளைப் பார்த்து, "இது தாவீதின் கொள்ளை" என்று சந்தோஷமாய்ச் சொல்லுகிறார்கள். உலகப்பிரகாரமான ஜனங்கள், உலகப்பிரகாரமான பொருட்களினால் ஆளுகை செய்யப்படுகிறார்கள்.

தாவீது கொள்ளையைப் பங்கிடுகிறார் 1சாமு 30:21-31

1சாமு 30:21. விடாய்த்துப் போனதினாலே தாவீதுக்குப் பின்செல்லாமல், பேசோர் ஆற்றண்டையிலே தங்கியிருந்த இருநூறுபேரிடத்துக்குத் தாவீது வருகிறபோது, இவர்கள் தாவீதுக்கும் அவனோடிருந்த ஜனத்திற்கும் எதிர்கொண்டு வந்தார்கள்; தாவீது அந்த ஜனத்தினிடத்தில் சேர்ந்து, அவர்கள் சுகசெய்தியை விசாரித்தான்

1சாமு 30:22. அப்பொழுது தாவீதோடே நடந்து வந்த மனுஷரில் பொல்லாதவர்களும் பேலியாளின் மக்களுமான எல்லாரும்: அவர்கள் எங்களோடே வராதபடியினால் நாங்கள் திருப்பிக்கொண்ட கொள்ளையுடைமைகளில் அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை; அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் மனைவியையும் தன் தன் பிள்ளைகளையுமே அழைத்துக்கொண்டு போகட்டும் என்றார்கள்.

1சாமு 30:23. அதற்குத் தாவீது: என் சகோதரரே, கர்த்தர் நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்யவேண்டாம்; கர்த்தர் நம்மைக் காப்பாற்றி, நமக்கு விரோதமாய் வந்திருந்த அந்தத் தண்டை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்.

1சாமு 30:24. இந்தக் காரியத்தில் உங்கள் சொற் கேட்க யார் சம்மதிப்பான்? யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்கவேண்டும்; சரிபங்காகப் பங்கிடுவார்களாக என்றான்.

1சாமு 30:25. அப்படியே அந்நாள் முதற்கொண்டு நடந்துவருகிறது; அதை இஸ்ரவேலிலே இந்நாள்வரைக்கும் இருக்கும் கட்டளையும் பிரமாணமுமாக ஏற்படுத்தினான்.

1சாமு 30:26. தாவீது சிக்லாகுக்கு வந்தபோது, அவன் கொள்ளையாடினவைகளிலே தன் சிநேகிதராகிய யூதாவின் மூப்பருக்குச் சிலவற்றை அனுப்பி: இதோ, கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளையில் உங்களுக்கு உண்டாயிருக்கும் ஆசீர்வாத பாகம் என்று சொல்லச்சொன்னான்.

1சாமு 30:27. யார்யாருக்கு அனுப்பினானென்றால், பெத்தேலில் இருக்கிறவர்களுக்கும், தெற்கான ராமோத்தில் இருக்கிறவர்களுக்கும், யாத்தீரில் இருக்கிறவர்களுக்கும்,

1சாமு 30:28. ஆரோவேரில் இருக்கிறவர்களுக்கும், சிப்மோத்தில் இருக்கிறவர்களுக்கும், எஸ்தேமோகாவில் இருக்கிறவர்களுக்கும்,

1சாமு 30:29. ராக்காலில் இருக்கிறவர்களுக்கும், யெராமியேலியரின் பட்டணங்களில் இருக்கிறவர்களுக்கும், கேனியரின் பட்டணங்களில் இருக்கிறவர்களுக்கும்,

1சாமு 30:30. ஓர்மாவில் இருக்கிறவர்களுக்கும், கொராசானில் இருக்கிறவர்களுக்கும், ஆற்றாகில் இருக்கிறவர்களுக்கும்,

1சாமு 30:31. எப்ரோனில் இருக்கிறவர்களுக்கும், தாவீதும் அவன் மனுஷரும் நடமாடின எல்லா இடங்களில் இருக்கிறவர்களுக்கும் அனுப்பினான்.

அமலேக்கியரிடமிருந்து கொள்ளையிட்ட கொள்ளைப்பொருட்களை பங்கிட்டு கொடுக்கும் சம்பவம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது எல்லா காரியங்களையும் நீதியாய் செய்கிறவர். அவரிடத்தில் தாராள குணமும் இருக்கிறது. கர்த்தர் நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில், பொருளாதார ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்போது, அவற்றை கர்த்தருடைய சித்தத்தின்படி ஆளுகை செய்யவேண்டும். அதை கர்த்தருக்கு பிரியமானபடி பயன்படுத்தவும் வேண்டும்.

தாவீது அமலேக்கியரின் தண்டை பின்தொடர்ந்துபோனபோது அவருடைய மனுஷரில் இருநூறுபேர் விடாய்த்துப்போய், பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டாமல் அங்கேயே நின்று விடுகிறார்கள். அவர்கள் தாவீதோடுகூட, அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. தாவீதோடு மீதமுள்ள நானூறு பேர் மாத்திரமே இருந்தார்கள். அவர்கள் அமலேக்கியரைக் கொள்ளையிடுகிறார்கள். தாவீது அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வராமல், பேசோர் ஆற்றண்டையிலே தங்கியிருந்த இருநூறு பேருக்கும் கொள்ளையிலே பங்குகொடுக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

தாவீதும் அவரோடுகூட நானூறுபேரும் அமலேக்கியரைக் கொள்ளையிட்டு, கொள்ளைப் பொருட்களோடு, பேசோர் ஆற்றண்டைக்கு திரும்பி வருகிறார்கள். அமலேக்கியர் சிக்லாகிலே சிறைப்பிடித்துக் கொண்டுபோன ஸ்திரீகளும், புருஷரும், குமாரரும், குமாரத்திகளும் தாவீதோடுகூட திரும்பி வருகிறார்கள்.

அப்போது விடாய்த்துப்போனதினாலே தாவீதுக்குப் பின்செல்லாமல், பேசோர் ஆற்றண்டையிலே தங்கியிருந்த இருநூறுபேரிடத்துக்குத் தாவீது வருகிறபோது, இவர்கள் தாவீதுக்கும் அவரோடிருந்த ஜனத்திற்கும் எதிர்கொண்டு வருகிறார்கள்; தாவீது அந்த ஜனத்தினிடத்தில் சேர்ந்து, அவர்கள் சுகசெய்தியை விசாரிக்கிறார் (1சாமு 30:21).

தாவீதின் கூடயிருக்கிறவர்கள் எல்லோருமே நல்லவர்கள் என்று சொல்லமுடியாது. அவர்களில் சிலர் பொல்லாதவர்களாயும் பேலியாளின் மக்களுமாயிருக்கிறார்கள். அப்பொழுது தாவீதோடே நடந்து வந்த நானூறு மனுஷரில் பொல்லாதவர்களும் பேலியாளின் மக்களுமான எல்லாரும்: "அவர்கள் எங்களோடே வராதபடியினால் நாங்கள் திருப்பிக்கொண்ட கொள்ளையுடைமைகளில் அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் மனைவியையும் தன்தன் பிள்ளைகளையுமே அழைத்துக்கொண்டு போகட்டும்" (1சாமு 30:22) என்று சொல்லுகிறார்கள்.

பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டாமல், விடாய்த்துப்போய், அங்கேயே தங்கிவிட்ட இருநூறு பேருக்கு கொள்ளையிலே பங்கு கொடுக்கக்கூடாது என்றும், அவர்கள் தங்களுடைய மனைவிகளையும், பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு போகலாம் என்றும், தாவீதோடு போன நானூறு பேரில் சிலர் சொல்லுகிறார்கள். பேசோர் ஆற்றண்டையிலே தங்கியிருந்த இருநூறு பேருக்கு, தாவீதின் கொள்ளையிலே பொருளாதார ஆசீர்வாதம் கொடுக்கக்கூடாது என்றும், அவர்களுக்கு குடும்ப ஆசீர்வாதம் கொடுக்கலாம் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

இவர்கள் சொல்லுகிற ஆலோசனை தாவீதுக்குப் பிடிக்கவில்லை. இது தாவீதின் பார்வைக்கு பொல்லாத ஆலோசனையாயிருக்கிறது. இவர்கள் அமலேக்கியருக்கு விரோதமாக, தாவீதோடுகூட யுத்தம்பண்ண வந்திருந்தாலும், இவர்கள் பொல்லாதவர்களாயும், பேலியாளின் மக்களாயும் இருக்கிறார்கள். தாவீது இவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

தாவீது தனக்கு பொல்லாத ஆலோசனை சொன்னவர்களைப் பார்த்து, "என் சகோதரரே, கர்த்தர் நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்யவேண்டாம்; கர்த்தர் நம்மைக் காப்பாற்றி, நமக்கு விரோதமாய் வந்திருந்த அந்தத் தண்டை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். இந்தக் காரியத்தில் உங்கள் சொற் கேட்க யார் சம்மதிப்பான்? யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்கவேண்டும்; சரிபங்காகப் பங்கிடுவார்களாக" (1சாமு 30:23,24) என்று சொல்லுகிறார்.

பேசோர் ஆற்றண்டையில் இருந்த இருநூறு பேரும் அங்கே சும்மாயிருக்கவில்லை. அவர்கள் ரஸ்துக்களண்டையில் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தாவீதின் உடமைகளையும், தாவீதோடுகூட யுத்தத்திற்குப்போன நானூறு பேரின் உடமைகளையும் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். யுத்தத்திற்கு போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்கவேண்டுமென்றும், கொள்ளையிலே சரிபங்காக பங்கிடவேண்டும் என்றும் தாவீது சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிருபையினாலேயே தாவீதுக்கு அமலேக்கியர்மீது ஜெயம் கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய உதவியில்லாமல் தாவீதின் மனுஷரால் அமலேக்கியரை சங்காரம்பண்ணவும் முடியாது, அவர்களுடைய பொருட்களை கொள்ளையிடவும் முடியாது. கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பிறருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டவர்கள், மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும்.

தாவீதின் மனுஷரில் இருநூறு பேர் பேசோர் ஆற்றண்டையிலே நின்றுபோனது மெய்தான். அவர்களுக்கு தாவீதின்மீது கோபமோ வெறுப்போ இல்லை. தாவீது அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணக்கூடாது என்றும் இவர்கள் நினைக்கவில்லை. ஆனாலும் தாவீதோடுகூடப்போய், அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண அவர்களுடைய சரீரத்தில் பெலனில்லை. அவர்களால் பேசோர் ஆற்றைக் கடக்க முடியவில்லை. அவர்கள் விடாய்த்திருந்தார்கள். அவர்களுடைய சரீரத்தில் தெம்பும், பெலமும் இருந்திருந்தால், அவர்களும் தாவீதோடுகூட, பேசோர் ஆற்றைக்கடந்து, அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியிருப்பார்கள்.

தாவீதின் மனுஷரில் இருநூறுபேர் பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டாமல், ஆற்றண்டையிலே நின்றுபோனாலும், அவர்கள் அங்கே சும்மாயிருக்கவில்லை. அவர்கள் தாவீதுக்கும் அவருடைய மனுஷருக்கும் உதவிசெய்தார்கள். அவர்களுடைய உடமைகளைப் பாதுகாத்தார்கள். தாவீதின் மனுஷர் தங்களுடைய உடமைகளை பேசோர் ஆற்றண்டையிலே அப்படியே போட்டுவிட்டு, எங்கும் போகமுடியாது. அதை ஒருவரும் பாதுகாக்காவிட்டால், அவர்களுடைய உடமைகளை யாராவது திருடிக்கொண்டு போய்விடுவார்கள். தாவீதோடு கூடயிருந்த நானூறு பேரும், அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களுடைய பொருட்களை கொள்ளையிட்டார்கள். பேசோர் ஆற்றண்டையிலிருந்த இருநூறு பேருமோ, அவர்களுடைய உடமைகளைப் பாதுகாத்தார்கள்.

யுத்தத்திற்குப்போகிறவர்கள் எல்லோரும் ஒன்றுபோல யுத்தம்பண்ணுவதில்லை. யுத்தவீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பொறுப்பு கொடுக்கப்படும். அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்படும் பொறுப்பை கவனமாய் நிறைவேற்ற வேண்டும். அதுபோலவே கர்த்தருடைய ஊழியத்திலும் வெவ்வேறு பகுதிகள் உள்ளது. எல்லாமே கர்த்தருடைய ஊழியம்தான். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பிரயோஜனமுண்டாகவேண்டும் என்பதும், கர்த்தருடைய ராஜ்யம் இந்தப் பூமியிலே கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதும், ஊழியக்காரருடைய பிரதான நோக்கமாயிருக்கவேண்டும்.

ஒரு சிலர் தங்கள் ஊழியத்தின் மூலமாய், மனுஷர் மத்தியிலே பிரபல்யமாயிருப்பார்கள். வேறு சில ஊழியக்காரர்களையோ, யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள். மனுஷர் நம்மைக் கனம்பண்ணுகிறார்களா என்பது முக்கியமல்ல. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை நாம் உண்மையாய்ச் செய்கிறோமா என்பதுதான் முக்கியம்.

தாவீதின் பார்வையில், தன்னோடு கூடவந்த நானூறு பேரும் எப்படி முக்கியமானவர்களாயிருக்கிறார்களோ அப்படியே, பேசோர் ஆற்றண்டையிலே தங்களுடைய ரஸ்துக்களை காவல் காத்துக்கொண்டிருந்த இருநூறுபேரும் முக்கியமானவர்களாயிருக்கிறார்கள். ஆகையினால் தாவீது, "யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்க வேண்டும்; சரிபங்காகப் பங்கிடுவார்களாக" (1சாமு 30:24) என்று சொல்லுகிறார்.

தாவீது ஒவ்வொரு காரியத்தையும் நீதியாக செய்கிறவர். அவருடைய தீர்ப்பை அவரோடுகூடயிருக்கிற அறுநூறு பேரும் அங்கீகரிக்கிறார்கள். தாவீது சொன்ன பிரகாரம், அப்படியே அந்நாள்முதற்கொண்டு நடந்துவருகிறது; தாவீது அதை இஸ்ரவேலிலே இந்நாள்வரைக்கும் இருக்கும் கட்டளையும் பிரமாணமுமாக ஏற்படுத்தினார் (1சாமு 30:25).

தாவீது தன்னுடைய சிநேகிதர்கள் எல்லோர்மீதும் அன்பாயிருக்கிறார். அமலேக்கியரின் கொள்ளையிலே அவர்களுக்கும் தாராளமாகக் கொடுக்கிறார். அமலேக்கியரின் பாளயத்திலே தாவீதுக்கு ஏராளமான கொள்ளைப்பொருட்கள் கிடைத்திருக்கவேண்டும். அமலேக்கியர் பல ஜாதியார்மீது கொள்ளையிட்டு, அந்தக் கொள்ளைப் பொருட்களையெல்லாம் தங்களிடத்தில் சேர்த்து வைத்திருந்தார்கள். தாவீதும் அவருடைய மனுஷரும், அமலேக்கியரின் கொள்ளைப்பொருட்களை கொள்ளையிட்டு, சிக்லாகுக்கு கொண்டு வருகிறார்கள். அமலேக்கியரிடத்தில் பொன்னும் வெள்ளியும் திரளாயிருந்தது.

"பின்பு கிதியோன் அவர்களை நோக்கி: உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன்; நீங்கள் அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். அவர்கள் இஸ்மவேலராயிருந்தபடியினால் அவர்களிடத்தில் பொன்கடுக்கன்கள் இருந்தது. இஸ்ரவேலர்: சந்தோஷமாய்க் கொடுப்போம் என்று சொல்லி, ஒரு வஸ்திரத்தை விரித்து, அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை அதிலே போட்டார்கள். பிறைச் சிந்தாக்குகளும், ஆரங்களும், மீதியானியரின் ராஜாக்கள் போர்த்துக் கொண்டிருந்த இரத்தாம்பரங்களும், அவர்களுடைய ஒட்டகங்களின் கழுத்துக்களிலிருந்த சரப்பணிகளும் அல்லாமல், அவன் கேட்டு வாங்கின பொன்கடுக்கன்களின் நிறை ஆயிரத்து எழுநூறு பொன்சேக்கலின் நிறையாயிருந்தது" (நியா 8:24-26).

தாவீது சிக்லாகுக்கு வந்தபோது, தான் கொள்ளையாடினவைகளிலே தன் சிநேகிதராகிய யூதாவின் மூப்பருக்குச் சிலவற்றை அனுப்பி வைக்கிறார். "இதோ, கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளையில் உங்களுக்கு உண்டாயிருக்கும் ஆசீர்வாத பாகம்" (1சாமு 30:26) என்று தாவீது தன்னுடைய சிநேகிதராகிய யூதாவின் மூப்பருக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்.

தாவீது அமலேக்கியரின் கொள்ளைப்பொருளை யார் யாருக்கெல்லாம் அனுப்பினார் என்று இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது முதலாவதாக பெத்தேலிலிருக்கிறவர்களுக்கு அனுப்புகிறார். அங்கே இருக்கிறவர்கள் தாவீதுக்கு விசேஷமானவர்கள். தாவீது பெத்தேலிலிருக்கிறவர்களுக்கு, கொள்ளையிலே முதல் தரமான பொருட்களை அனுப்புகிறார்.

தாவீது "யார்யாருக்கு அனுப்பினானென்றால், பெத்தேலில் இருக்கிறவர்களுக்கும், தெற்கான ராமோத்தில் இருக்கிறவர்களுக்கும், யாத்தீரில் இருக்கிறவர்களுக்கும், ஆரோவேரில் இருக்கிறவர்களுக்கும், சிப்மோத்தில் இருக்கிறவர்களுக்கும், எஸ்தேமோகாவில் இருக்கிறவர்களுக்கும், ராக்காலில் இருக்கிறவர்களுக்கும், யெராமியேலியரின் பட்டணங்களில் இருக்கிறவர்களுக்கும், கேனியரின் பட்டணங்களில் இருக்கிறவர்களுக்கும், ஓர்மாவில் இருக்கிறவர்களுக்கும், கொராசானில் இருக்கிறவர்களுக்கும், ஆற்றாகில் இருக்கிறவர்களுக்கும், எப்ரோனில் இருக்கிறவர்களுக்கும், தாவீதும் அவன் மனுஷரும் நடமாடின எல்லா இடங்களில் இருக்கிறவர்களுக்கும் அனுப்பினார்" (1சாமு 30:27-31).

தாவீது கடைசியாக எப்ரோனிலிருக்கிறவர்களுக்கு கொள்ளைப்பொருளை அனுப்பினார். எப்ரோன் கடைசியாக சொல்லப்பட்டாலும், அவர்களுக்கு கொள்ளையிலே பெரும்பகுதி அனுப்பப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் தாவீது எப்ரோனை தன்னுடைய தலைமை ஸ்தானமாக ஆக்கினார். இதை மனதில் கொண்டு, தாவீது எப்ரோனிலிருக்கிறவர்களுக்கு, கொள்ளையிலே பெரும்பகுதியை அனுப்பியிருக்கவேண்டும்.

"பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: போ என்றார்; எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார். அப்படியே தாவீது தன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமோடும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலோடும் கூட அவ்விடத்திற்குப் போனான்" (2சாமு 2:1,2).

தாவீது அமலேக்கியரைக் கொள்ளையிட்டபோது, அவரோடு கூடயிருந்தவர்கள் அந்தக் கொள்ளையை "தாவீதின் கொள்ளை" (1சாமு 30:20) என்று சொன்னார்கள். தாவீதோ அந்தக் கொள்ளைப்பொருட்களை, "கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளை" (1சாமு 30:26) என்று சொல்லுகிறார்.

தாவீது கொள்ளைப்பொருளை பங்கிடும்போது, அவருடைய நல்ல சுபாவம் வெளிப்படுகிறது. அவர் எல்லாவற்றையும் தானே வைத்துக்கொள்ளவேண்டும் என்று பேராசைப்படவில்லை. தான் மாத்திரம் ஐசுவரியவானாகயிருக்கவேண்டுமென்று தாவீது ஆசைப்படவுமில்லை. அவர் இஸ்ரவேல் தேசத்திற்கு சேவை செய்ய விரும்புகிறார். அவருடைய ஆத்துமா செழித்திருக்கிறது. தாவீது இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் கொள்ளையிலே தாராளமாய்ப் பங்கிட்டுக்கொடுக்கிறார்.

தாவீதும் அவருடைய மனுஷரும் எந்தெந்த இடங்களிலெல்லாம் நடமாடினார்களோ, அந்தந்த இடங்களில் இருக்கிறவர்கள் எல்லோருக்கும், தாவீது கொள்ளையிலே பங்கு அனுப்புகிறார். தனக்கு உதவிசெய்தவர்களை தாவீது கவனிக்காமல் விட்டுவிடவில்லை. தனக்கு ஆதரவாகயிருந்தவர்களுக்கும், தனக்காக வேவுபார்த்தவர்களுக்கும், தாவீது கொள்ளையிலே பங்குகொடுக்கிறார். தாவீதின் இருதயம் நன்றியுள்ள இருதயமாயிருக்கிறது. தனக்கு உதவிசெய்த எல்லோருக்கும் தாவீது நன்றியுள்ளவராயிருக்கிறார்.

தாவீதின் இருதயம் கர்த்தரை நம்புகிறது. கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கிறது. தாவீது அமலேக்கியரைக் கொள்ளையிட்டு, அந்தக் கொள்ளைப்பொருளை பங்கிட்டுக் கொடுக்கும்போது, அதை "உங்களுக்கு உண்டாயிருக்கும் ஆசீர்வாத பாகம்" (1சாமு 30:26) என்று சொல்லுகிறார்.

நாம் ஒருவருக்கு வெகுமதி கொடுக்கும்போது, அதை கர்த்தருடைய ஆசீர்வாதமாகப் பாவித்து அவருக்கு கொடுக்கவேண்டும். தாவீது கொள்ளையிலே பங்கு கொடுக்கும்போது, அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். ஜெபம்பண்ணாமல் கொடுக்கப்படும் பங்குவீதம், சாதாரண பொருளாகவே இருக்கும். அதை ஜெபம்பண்ணிக்கொடுக்கும்போது, அது கர்த்தருடைய ஆசீர்வாத பாகமாயிருக்கும்.

சாமுவேல் தாவீதை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். தாவீதோ இதுவரையிலும் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமரவில்லை. அவர் சவுலுக்கு தப்பி, காடுகளிலும், வனாந்தரங்களிலும், கெபிகளிலும் ஒளிந்திருந்தார். இப்போதோ தாவீது இஸ்ரவேலுடைய சிங்காசனத்தில் தான் அமரும் காலம் சமீபித்திருக்கிறது என்பதை உணருகிறார்.

இதற்காக இஸ்ரவேலின் எல்லா பிரதான பட்டணங்களிலும் இருக்கிற ஜனங்களுக்கு, கொள்ளையிலே ஆசீர்வாத பாகத்தை அனுப்பி, அவர்களோடு சிநேகமாயிருக்கிறார். அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றுக்கொள்கிறார்.

தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாகவேண்டுமென்றால், அவருக்கு இஸ்ரவேல் ஜனத்தாருடைய அன்பும் ஆதரவும் வேண்டும். இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களில் இடம் பிடிப்பதற்கு, தாவீது அமலேக்கியரிடத்தில் கொள்ளையிட்ட கொள்ளைப்பொருளை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளை, இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாத பாகமாயிருப்பதுபோல, அது தாவீதுக்கும் ஆசீர்வாத பாகமாயிருக்கிறது.

31 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சவுலின் மரணத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் சவுலை விட்டு விலகிப்போனதினால், சவுலுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்கவில்லை. தாவீது அமலேக்கியரை முறியடித்த அதே நாளில், பெலிஸ்தர் சவுலையும் இஸ்ரவேல் ஜனத்தாரையும் முறியடிக்கிறார்கள்.

தாவீது கர்த்தரை நம்புகிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். சவுல் கர்த்தரை நம்பாமல் அஞ்சனம் பார்ப்பதையும், குறிசொல்லுவதையும் நம்பினார். சவுல் அழிந்துபோனார்.

சவுல் பெலிஸ்தரின் சேனையைப் பார்த்து பயப்பட்டார். அவருடைய இருதயம் கலங்கிற்று. சவுல் பரலோகத்திலிருந்து வந்த கர்த்தருடைய செய்திக்கு செவிகொடுக்கவில்லை. ஆனால் பாதாளத்திலிருந்து சாத்தான் சொல்லும் செய்தியைக் கேட்கவேண்டும் என்பதற்காக, சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயை தேடிப்போனார்.

பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறார்கள். இந்த யுத்தத்தில் இஸ்ரவேலருக்கு தோல்வி உண்டாயிற்று. இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்து ஓடுகிறார்கள் (1சாமு 31:1). பெலிஸ்தர் சவுலின் குமாரர் மூன்று பேரையும் வெட்டிப்போடுகிறார்கள் (1சாமு 31:2). சவுலும் வில்வீரரால் மிகவும் காயப்படுகிறார் (1சாமு 31:3). சவுல் தன்னுடைய பட்டயத்தை நட்டு, அதின் மேல் விழுந்து செத்துப்போகிறார் (1சாமு 31:4).

சவுலின் ஆயுததாரியும் சவுலின் எல்லா மனுஷரும் ஒருமித்து செத்துப்போகிறார்கள் (1சாமு 31:5,6). பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பட்டணங்களிலே வந்து குடியிருக்கிறார்கள் (1சாமு 31:7). பெலிஸ்தர் இஸ்ரவேலரின் பாளயத்தைக் கொள்ளை இடுகிறார்கள். சவுலும் அவருடைய மூன்று குமாரரும் கில்போவா மலையிலே செத்து விழுந்துகிடக்கிறார்கள் (1சாமு 31:8).

பெலிஸ்தர் சவுலின் தலையை வெட்டி, அதை தங்கள் விக்கிரகங்களின் கோவிலிலும், அவருடைய ஆயுதங்களை அஸ்தரோத் தேவனுடைய கோவிலிலும், அவருடைய உடலை பெத்சானின் அலங்கத்திலும் தூக்கிப்போடுகிறார்கள் (1சாமு 31:9,10).

கீலேயாத் தேசத்து யாபேஸ் பட்டணத்து மனுஷர் பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலை உடலையும், அவருடைய குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேசுக்கு கொண்டு வந்து, அவைகளை அங்கே தகனம்பண்ணுகிறார்கள் (1சாமு 31:11-13). கர்த்தரால் தள்ளிவிடப்பட்ட சவுல் கில்போவா மலையிலே செத்து விழுந்து கிடக்கிறார்.

சவுலின் மரணம்
1சாமு 31:1-7

1சாமு 31:1. பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள்.

1சாமு 31:2. பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூவாவையும் வெட்டிப்போட்டார்கள்.

1சாமு 31:3. சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு,

1சாமு 31:4. தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்.

1சாமு 31:5. சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவனோடே கூடச் செத்துப்போனான்.

1சாமு 31:6. அப்படியே அன்றைதினம் சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் ஆயுததாரியும், அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போனார்கள்.

1சாமு 31:7. இஸ்ரவேலர் முறிந்தோடினார்கள் என்றும், சவுலும் அவன் குமாரரும் செத்துப் போனார்கள் என்றும், பள்ளத்தாக்குக்கு இப்பாலும் யோர்தானுக்கு இப்பாலும் இருந்த இஸ்ரவேலர் கண்டபோது, அவர்கள் பட்டணங்களை விட்டு ஓடிப்போனார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் வந்து, அவைகளிலே குடியிருந்தார்கள்.

கர்த்தர் சவுலை நியாயம் விசாரிக்கும் நாள் வருகிறது. கர்த்தர் சவுலின் பாவங்களை விசாரித்து, சவுலுக்கு தம்முடைய நீதியான தீர்ப்பை சொல்லுகிறார். சவுல் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, அங்கே செத்துப்போகிறார். தாவீது சொன்ன பிரகாரம், கர்த்தர் சவுலை அடிக்கும் காலம் வந்திருக்கிறது.

பின்னும் தாவீது: "கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்குப்போய் மாண்டாலொழிய, நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 26:10,11) என்று சொன்னார்.

பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணுகிறார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுகிறார்கள் (1சாமு 31:1). இஸ்ரவேல் மனுஷர் வெட்டுண்டு விழுவதையும், பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்து ஓடுவதையும் சவுல் பார்க்கிறார். இஸ்ரவேலரின் சேனையில் ஏராளமானோர் செத்துப்போகிறார்கள்.

பெலிஸ்தருக்கு விரோதமாக நடைபெறும் இந்த யுத்தத்திலே, சவுலின் மூன்று குமாரரும் யுத்தக்களத்திலே இருக்கிறார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூவாவையும் வெட்டிப்போடுகிறார்கள் (1சாமு 31:2). தன்னுடைய மூன்று குமாரரும், தன்னுடைய கண்களுக்கு முன்பாக செத்துப்போவதை சவுல் பார்க்கிறார்.

சவுலின் குமாரர் யுத்தக்களத்திலே அவருக்கு அருகாமையிலிருந்தார்கள். யோனத்தான் அதிக ஞானமுள்ளவன். அவன் ஒரு பராக்கிரமசாலி. அவன் நற்குணமுள்ளவன். சவுல் தாவீதுக்கு சத்துருவாயிருந்தார். யோனத்தானோ தாவீதுக்கு சிநேகிதனாயிருந்தான். யோனத்தான் நல்லவனாகயிருந்தாலும், இந்த யுத்தத்திலே பெலிஸ்தர் அவனையும் வெட்டிப்போடுகிறார்கள். யோனத்தான் யுத்தக்களத்திலே செத்துப்போகிறான்.

பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்நடைபெறும்போது யோனத்தான் அரண்மனையில் ஓய்வெடுக்கவில்லை. தன்னுடைய தகப்பனாருக்கு உதவிசெய்வதற்காகவும், அவருக்கு யுத்தத்திலே பாதுகாப்பாயிருப்பதற்காகவும் யோனத்தான் யுத்தக்களத்திற்கு வந்திருக்கிறான். ஆனால் பெலிஸ்தரோ சவுலின் குமாரரை நெருங்கி தொடர்ந்து, அவர்களை வெட்டிப்போடுகிறார்கள்.

சவுலின் குடும்பத்தார் அழியும்போது, அவர்களோடு சேர்ந்து யோனத்தானும் அழிந்துபோகிறான். இஸ்ரவேல் தேசத்தின் சிங்காசனம் காலியாயிருக்கிறது. யோனத்தான் செத்துப்போனதினால், தாவீதின் சிரசில் கிரீடம் சூட்டப்படுவதற்கு தடையேதுமில்லை. சகலமும் தாவீதின் ராஜ்யபாரத்திற்கு சாதகமாயிருக்கிறது.

யோனத்தான் உயிரோடிருந்திருந்தால், சவுலுக்கு பின்பு, அவருடைய குமாரனாகிய யோனத்தான், இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணவேண்டுமென்று, இஸ்ரவேல் ஜனங்கள் சொல்லுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் யோனத்தான் கிரீடத்தை தன் சிரசின்மீது சூட்டிக்கொள்ள விரும்பவில்லை. இஸ்ரவேல் தேசத்திற்கு தாவீதே ராஜாவாயிருக்கவேண்டுமென்று யோனத்தான் விரும்பினான். யோனத்தான் தாவீதை விரும்பினாலும், இஸ்ரவேல் ஜனங்கள் யோனத்தானை விரும்புவதற்கு வாய்ப்புள்ளது. சவுலின் வீட்டாரில் ஒருவன் தங்களுக்கு ராஜாவாயிருக்க வேண்டுமென்று இஸ்ரவேல் ஜனத்தார் சொல்லுவார்கள்.

சவுலின் குடும்பத்தில் இஸ்போசேத் என்பவன் மாத்திரம் உயிரோடு தப்பிக்கிறான். இஸ்போசேத் யுத்தக்களத்திற்கு வரவில்லை. அவன் பெலிஸ்தரின் கைக்கு தப்புகிறான். இஸ்ரவேல் ஜனங்கள் யோனத்தானை விரும்பியதைபோல இஸ்போசேத்தை விரும்பவில்லை. யோனத்தான் உயிரோடிருந்திருந்தால், இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதுக்கு போட்டியாக, யோனத்தான் தங்களுக்கு ராஜாவாயிருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்வதற்கும், கிரீடத்தை தாவீதின் சிரசிலே சூட்டிக்கொள்வதற்கும், தடையாகயிருக்கும் எல்லா காரியங்களையும் கர்த்தர் நீக்கிப்போடுகிறார். பெலிஸ்தர் யோனத்தானை வெட்டிக்கொன்றுபோடுகிறார்கள். தாவீது ராஜாவாவதற்கு இருந்த தடை, யோனத்தானின் மரணத்தோடு, நீங்கிவிடுகிறது.

சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலக்கிறது; வில்வீரர் சவுலைக் கண்டு நெருங்குகிறார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்படுகிறார் (1சாமு 31:3).

பெலிஸ்தர் சவுலின் குமாரரை நெருங்கி தொடர்ந்தபோது, அவர்கள் சவுலையும் நெருங்கி தொடர்ந்தார்கள். அவர்கள் சவுலின் குமாரரை வெட்டிப்போட்டபோது, சவுலுக்கும் காயம் ஏற்பட்டிருக்கவேண்டும். இப்போது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டிருக்கிறார். அவரால் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவும் முடியவில்லை. தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள தப்பித்து ஓடவும் முடியவில்லை. பெலிஸ்தர் சவுலைப் பிடித்துக்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை உண்டாயிற்று.

பெலிஸ்தர் தன்னைக் கொன்றுபோடக்கூடாது என்றும், தன்னை உயிரோடுபிடித்து அவமானப்படுத்தக்கூடாது என்றும் சவுல் விரும்புகிறார். பெலிஸ்தருடைய கையினால் செத்துப்போவதைவிட தன்னுடைய ஆயுததாரியின் கையினால் செத்துப்போகலாம் என்று சவுல் நினைக்கிறார்.

சவுல் தன் ஆயுததாரியை நோக்கி: "அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு" (1சாமு 31:4) என்று சொல்லுகிறார்.

பெலிஸ்தர் சிம்சோனை உயிரோடு பிடித்து, அவரை இலச்சையாய் நடத்தினார்கள். சிம்சோனுடைய கண்களைப் பிடுங்கி சிறைச்சாலையிலே அடைத்து, அவரை மாவரைக்க வைத்தார்கள். பெலிஸ்தர் சிம்சோனை ஒரு வேடிக்கை பொருளாகப் பாவித்து, தங்களுக்கு முன்பாக விளையாட்டு காண்பிக்கச் சொன்னார்கள். பெலிஸ்தர் தன்னையும் உயிரோடு பிடித்து, சிம்சோனைப்போல இலச்சையாய் நடத்துவார்கள் என்று சவுல் நினைக்கிறார்.

சவுல் பெலிஸ்தரின் கையினால் சாகக்கூடாது என்றும், தன்னுடைய ஆயுததாரியே தன்னைக் கொன்றுபோட வேண்டும் என்றும் விரும்புகிறார். சவுல் உயிரோடிருந்த நாள் வரையிலும் பெருமையுள்ளவராகவும், வைராக்கியமுள்ளவராகவும் இருந்தார். இப்போது அவர் செத்துப்போகும்போதுகூட, பெருமையோடும், வைராக்கியத்தோடும் செத்துப்போக விரும்புகிறார். சவுல் தனக்கும், தன்னைச் சுற்றிலும் இருக்கிற எல்லோருக்கும் பயங்கரமானவர்.

சவுல் தன் ஆயுததாரியைப் பார்த்து, "நீ உன் பட்டயத்தை உருவி என்னைக் குத்திப்போடு" என்று சொல்லுகிறார். சவுலின் ஆயுததாரியோ, அவருடைய வார்த்தைகளைக் கேட்டு மிகவும் பயப்படுகிறான். ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். தன்னுடைய ஆயுததாரி தன்னைக் கொல்லமாட்டான் என்பது சவுலுக்கு தெரிந்தவுடன், சவுல் தன்னுடைய பட்டயத்தை நட்டு, அதின்மேல் விழுந்து செத்துப்போகிறார்.

சவுல் செத்துப்போனதை அவருடைய ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவரோடே கூடச் செத்துப்போகிறான் (1சாமு 31:5). சவுலின் ஆயுததாரி தோவேக்காக இருக்கவேண்டுமென்று யூதர்களுடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது.

அப்படியே அன்றைதினம் சவுலும், அவருடைய மூன்று குமாரரும், அவருடைய ஆயுததாரியும், அவருடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போகிறார்கள் (1சாமு 13:6).

சவுலும் அவருடைய குமாரரும் செத்துப்போனார்கள் என்னும் செய்தியைக் கேட்டு, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கலங்குகிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே, ஜனங்கள் மத்தியிலே குழப்பமும், பயங்கரமும் உண்டாயிற்று.

இஸ்ரவேலர் முறிந்தோடினார்கள் என்றும், சவுலும் அவருடைய குமாரரும் செத்துப் போனார்கள் என்றும், பள்ளத்தாக்குக்கு இப்பாலும் யோர்தானுக்கு இப்பாலும் இருந்த இஸ்ரவேலர் கண்டபோது, அவர்கள் தங்கள் பட்டணங்களை விட்டு ஓடிப்போகிறார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் வந்து, அவைகளிலே குடியிருக்கிறார்கள் (1சாமு 31:7).

சவுலின் சரீரம்
1சாமு 31:8-13

1சாமு 31:8. வெட்டுண்டவர்களை உரிந்துகொள்ள, பெலிஸ்தர் மறுநாள் வந்தபோது, அவர்கள், சவுலும் அவன் மூன்று குமாரரும் கில்போவா மலையிலே விழுந்துகிடக்கிறதைக் கண்டு,

1சாமு 31:9. அவன் தலையை வெட்டி, அவன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரகங்களின் கோவில்களிலும் ஜனங்களுக்குள்ளும் செய்தியைப் பிரசித்தப்படுத்தும்படி, அவைகளைப் பெலிஸ்தர் தேசத்திலே சுற்றிலும் அனுப்பி,

1சாமு 31:10. அவன் ஆயுதங்களை அஸ்தரோத் தேவனுடைய கோவிலிலே வைத்து, அவன் உடலைப் பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள்.

1சாமு 31:11. பெலிஸ்தர் சவுலுக்குச் செய்ததைக் கீலேயாத்தேசத்து யாபேஸ் பட்டணத்தார் கேட்டபோது,

1சாமு 31:12. அவர்களிலே பலசாலிகள் எல்லாரும் எழுந்து இராமுழுதும் நடந்து போய், பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேசுக்குக் கொண்டுவந்து, அவைகளை அங்கே தகனம்பண்ணி,

1சாமு 31:13. அவர்களுடைய எலும்புகளை எடுத்து, யாபேசிலிருக்கிற தோப்பிலே அடக்கம்பண்ணி, ஏழுநாள் உபவாசம் பண்ணினார்கள்.

இந்த வசனப்பகுதியில் சவுலின் சரீரத்தைப்பற்றியும், அவருடைய குமாரரின் சரீரத்தைப்பற்றியும் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாக்களைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

வெட்டுண்டவர்களை உரிந்துகொள்ள, பெலிஸ்தர் மறுநாள் வந்தபோது, அவர்கள், சவுலும் அவருடைய மூன்று குமாரரும் கில்போவா மலையிலே விழுந்துகிடக்கிறதைக் காண்கிறார்கள் (1சாமு 31:8).

சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டார். அப்போது அவர் செத்துப்போகவில்லை. சவுல் முயற்சி செய்திருந்தால், தப்பித்துப்போயிருக்கலாம். வெட்டுண்டவர்களை உரிந்துகொள்ள வருகிறவர்கள் மறுநாள்தான் வருகிறார்கள். அதற்குள் சவுல் தன் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள தப்பித்துப்போயிருக்க முடியும். ஆனால் சவுலோ, விருத்தசேதனமில்லாதவர்கள் உடனே வந்து, தன்னைக் குத்திப்போட்டு, தன்னை அவமானப்படுத்துவார்கள் என்று பயந்தார். சவுல் அவசரப்பட்டு தன் பட்டயத்தை நட்டு, அதின்மேல் விழுந்து மரித்துப்போனார்.

பெலிஸ்தர் சவுலின் தலையை வெட்டி, அவருடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரங்களின் கோவில்களிலும் ஜனங்களுக்குள்ளும் செய்தியைப் பிரசித்தப்படுத்தும்படி, அவைகளைப் பெலிஸ்தர் தேசத்திலே சுற்றிலும் அனுப்புகிறார்கள் (1சாமு 31:8).

இஸ்ரவேலுக்கு நிந்தையும் அவமானமும் வரப்பண்ணவேண்டும் என்பதே பெலிஸ்தருடைய நோக்கம். தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்றும், அவர் யுத்தங்களை நடத்தவேண்டும் என்றும் இஸ்ரவேல் புத்திரர் விரும்பினார்கள். கிரீடம் சூட்டப்பட்ட ராஜா, பெலிஸ்தரின் கைகளிலிருந்து தங்களைப் பாதுகாப்பார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நம்பினார்கள்.

சவுல் இஸ்ரவேல் தேசத்திலுள்ள எல்லோரையும்விட உயரமானவர். அவர்களெல்லோரும் சவுலின் தோள் உயரத்திற்குத்தான் இருப்பார்கள். சவுலின் தலை இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் மேலாக உயரமாயிருக்கும். சவுலின் உயரம் அவருக்கு அழகாகவும், கவுரவமாகவும் இருந்தது. அது அவருக்கு மதிப்பையும் மரியாதையையும் கொடுத்தது. பெலிஸ்தரோ சவுலின் உயரத்தைக் குறைத்து, அவருக்கு நிந்தையும் அவனமானமும் வரப்பண்ணவேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். பெலிஸ்தர் சவுலின் தலையை வெட்டி, அவருடைய உயரத்தைக் குறைத்துப்போடுகிறார்கள்.

பெலிஸ்தர் சவுலின் ஆயுதங்களையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் சவுலின் ஆயுதங்களையும் எடுத்துக்கொள்கிறார்கள். அந்த ஆயுதங்களை அஸ்தரோத் தேவனுடைய கோவிலிலே வைக்கிறார்கள். அஸ்தரோத் பெலிஸ்தருடைய பெண் தெய்வம். அஸ்தரோத் தெய்வம் பெலிஸ்தருக்கு இஸ்ரவேல் ஜனத்தார்மீது ஜெயத்தைத் தேடி கொடுத்திருக்கிறது என்பதற்கு அடையாளமாக, பெலிஸ்தர் சவுலின் ஆயுதங்களை அஸ்தரோத் தேவனுடைய கோவிலிலே வைக்கிறார்கள்.

"வெட்டுண்டவர்களின் வஸ்திரங்களை உரிந்துகொள்ளப் பெலிஸ்தர் மறுநாளில் வந்தபோது, அவர்கள் சவுலையும் அவன் குமாரரையும் கில்போவா மலையிலே விழுந்துகிடக்கக் கண்டு, அவன் வஸ்திரங்களை உரிந்து, அவன் தலையையும் அவன் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரகங்களுக்கும் ஜனங்களுக்கும் அதைப் பிரசித்தப்படுத்தும்படி பெலிஸ்தருடைய தேசத்திலே சுற்றிலும் செய்தி அனுப்பி, அவன் ஆயுதங்களைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே வைத்து, அவன் தலையைத் தாகோன் கோவிலிலே தூக்கிவைத்தார்கள்" (1நாளா 10:8-10).

பெலிஸ்தர் சவுலின் உடலை பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போடுகிறார்கள். அவருடைய தலையை தாகோன் கோவிலிலே தூக்கி வைக்கிறார்கள்.

சவுலும் அவருடைய குமாரரும் செத்துப்போன செய்தியை பெலிஸ்தர் தங்கள் தேசம் முழுவதும் பிரசித்தப்படுத்துகிறார்கள். பெலிஸ்தர் எல்லோருமே இஸ்ரவேல் புத்திரர்மீது கிடைத்த வெற்றிக்காக அதிகமாய் சந்தோஷப்படுகிறார்கள். இதற்காக தங்களுடைய விக்கிரகக்கோவில்களிலே விசேஷித்த பூஜைகளை செய்கிறார்கள்.

பெலிஸ்தர் சவுலின் தலையையும், அவருடைய குமாரர்களின் தலைகளையும் பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போடுகிறார்கள். பெத்சான் கில்போவாவுக்கு அருகிலுள்ளது. இது யோர்தான் நதிக்கும் அருகாமையிலுள்ளது. பெத்சானின் அலங்கத்திலே இந்த சரீரங்களை சங்கிலிகளினால் கட்டி வைத்து தூக்கி நிறுத்துகிறார்கள். சவுலின் சரீரமும், அவருடைய குமாரரின் சரீரங்களும் ஆகாயத்துப் பறவைகளுக்கு இரையாக இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

பெலிஸ்தர் சவுலுக்குச் செய்ததைக் கீலேயாத்தேசத்து யாபேஸ் பட்டணத்தார் கேள்விப்படுகிறார்கள் (1சாமு 31:11). கீலேயாத் தேசம் யோர்தானுக்கு அப்புறத்திலிருக்கிறது. யோர்தான் பெத்சானுக்கும், கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்டணத்திற்கும் நடுவிலே இருக்கிறது. யோர்தான் நதி பிரவாகித்து ஓடுகிறது.

கீலேயாத் தேசத்து யாபேஸ் பட்டணத்திலுள்ள பலசாலிகள் எல்லாரும் எழுந்து இராமுழுதும் நடந்து போய், பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலின் உடலையும், அவருடைய குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேசுக்குக் கொண்டுவந்து, அவைகளை அங்கே தகனம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய எலும்புகளை எடுத்து, யாபேசிலிருக்கிற தோப்பிலே அடக்கம்பண்ணி, ஏழுநாள் உபவாசம் பண்ணுகிறார்கள் (1சாமு 31:12,13).

யாபேஸ் பட்டணத்தின் பலசாலிகள் யோர்தானைக் கடந்து, பெத்சானுக்குப் போகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தின்மீது அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. தங்களுடைய ராஜாவை பெலிஸ்தர்கள் அவமானப்படுத்தக்கூடாது என்றும், நிந்திக்கக்கூடாது என்றும் யாபேஸ் பட்டணத்தார் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தவர். பெலிஸ்தரோ விருத்தசேதனமில்லாதவர்கள். பெலிஸ்தர்கள் தங்களையும், தங்கள் ராஜாவையும் நிந்திப்பதை யாபேஸ் பட்டணத்தார் விரும்பவில்லை.

யாபேஸ் பட்டணத்தார் சவுலுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறார்கள். சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட ஆரம்ப காலத்திலே, அம்மோன் புத்திரர் கீலேயாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். அப்போது சவுல் அம்மோன் புத்திரரை சங்காரம்பண்ணி, கீலேயாத்தின் மனுஷரை இரட்சித்தார். சவுல் தங்களுக்கு செய்த உதவியை மறக்காமல், கீலேயாத் தேசத்து யாபேஸ் பட்டணத்தார், சவுலின் உடலையும், அவருடைய குமாரரின் உடல்களை பெத்சானின் அலங்கத்திலிருந்து எடுத்து வந்து, தங்கள் பட்டணத்திலே தகனம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய எலும்புகளை தங்கள் பட்டணத்திலுள்ள தோப்பிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

யாபேஸ் பட்டணத்தார் சவுலுக்காகவும், அவருடைய குமாரருக்காகவும் மூன்றுநாள் உபவாசம்பண்ணுகிறார்கள். ஒருவேளை இவர்கள் சவுலுக்காக துக்கங் கொண்டாடியிருக்கலாம். இஸ்ரவேல் தேசம் எல்லாம் இப்போது குழப்பத்திலிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தார் தங்கள் பட்டணங்களை விட்டு ஓடிப்போய்விட்டார்கள். அந்தப் பட்டணங்களில் இப்போது பெலிஸ்தர்கள் வந்து குடியிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் யாபேஸ் பட்டணத்தார் கர்த்தருடைய சமுகத்திலே உபவாசம்பண்ணி ஜெபம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தாமே தம்முடைய கிருபையினால், இஸ்ரவேல் தேசத்தை மறுபடியும் கட்டி எழுப்பவேண்டும் என்பது இவர்களுடைய உபவாச ஜெபவிண்ணப்பமாயிருக்கலாம்.

சாமுவேல் தீர்க்கதரிசியின் முதலாம் புஸ்தகம், சாமுவேல் பிறந்த செய்தியோடு ஆரம்பமாயிற்று. இந்தப் புஸ்தகம் சவுல் மரித்துப்போன செய்தியோடு முடிவு பெறுகிறது. இந்தப் புஸ்தகத்திலிருந்து நாம் ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். நாம் கர்த்தரைக் கனம்பண்ணினால் கர்த்தரும் நம்மைக் கனம்பண்ணுவார். நாம் கர்த்தரை கனம்பண்ணாமல், அவரை அசட்டைபண்ணினால் கர்த்தர் நம்மை கனஈனம்பண்ணுவார். நமக்கு மெய்யான ஆசீர்வாதம் கர்த்தரிடமிருந்தே வருகிறது. உலகப்பிரகாரமான நன்மைகள் மெய்யான ஆசீர்வாதமல்ல. நம்முடைய ஜீவியத்தில் நாம் கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நாம் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.